வெளியீடு—29—11—1971]
Issued—29—11—1971]

3877

# தமிழ்நாடு சட்டப் பேரவை நடவடிக்கைகள்

## TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY DEBATES

# பணித்துறை வெளியீடு

## OFFICIAL REPORT

வெள்ளிக்கிழமை 1971 சூன் 25

Friday 25th June 1971

தொகுதி IV—எண் 1

Volume IV—No. 1

தமிழ் நாடு அரசு
1971

GOVERNMENT OF TAMIL NADU
1971

சட்டப் பேரவைத் துறை
சென்னை-9

Legislative Assembly Department
Fort St. George, Madras-9.

விலை 50 காசுகள்]
Price 50 Paise]

D
V2l1,31 N71
31 N71.432
61511
3897

# INDEX TO TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY DEBATES.

## SECOND SESSION OF THE FIFTH LEGISLATIVE ASSEMBLY UNDER THE CONSTITUTION OF INDIA.

(*25th and 26th June* 1971 *and 28th June to 30th June* 1971.)

*VOLUME IV* (*Nos.* 1 *to* 5).

## TABLE OF CONTENTS.

*Friday, 25th June* 1971.


| | PAGES. |
|---|---|
| Personnel of the Government of Tamil Nadu ... | i-iv |
| Principal Officers of the Tamil Nadu Legislative Assembly ... ... ... ... ... | v |
| List of Members of the Tamil Nadu Legislative Assembly with their Constituencies ... ... | vi–xii |
| 1. Questions and answers ... ... ... | 1–29 |
| 2. Calling Attention— | |
| (1) Prevalence of eye disease in epidemic form in Madras City and some districts ... ... | 29–30 |
| (2) Non-availability of Insulin essential for diabetic patients and consequent hardship caused to them ... ... ... ... | 31–32 |
| 3. Announcement— | |
| Business of the House ... ... ... | 32–33 |
| 4. Government Bill— | |
| Occupants of Kudiyiruppu (Protection from Eviction) Amendment Bill, 1971 ... ... | 34 |
| 5. Revised Budget for the year 1971-72—General discussion—cont. ... ... ... ... | 34–90 |
| 6. Papers laid on the Table of the House ... ... | 91–92 |

PAGES.

*Saturday, 26th June 1971.*

1. Questions and Answers ... ... ... 93–115
2. Announcement—
   Election to Madras University Senate ... ... 116
3. Revised Budget for the year 1971–72—General discussion—cont. ... ... ... ... 116–181
4. Papers laid on the Table of the House ... ... 182

*Monday, 28th June 1971.*

1. Questions and Answers ... ... ... 183–198
2. Adjournment Motion—
   Police firing in Vaniambadi ... ... ... 198–201
3. Point of order—
   Consideration of General Sales Tax (Second Amendment) Bill, 1971 before a decision is taken on the additional taxation proposals in the Budget Speech ... ... ... ... 201–205
4. Government Bills—
   (1) General Sales Tax (Second Amendment) Bill 1971 (L.A. Bill No. 9 of 1971) ... ... ... 205–225
   (2) Occupants of Kudiyiruppu (Protection from Eviction) Amendment Bill, 1971 (L.A. Bill No. 11 of 1971) ... ... ... ... 226–238
   (3) Madurai City Municipal Corporation Bill, 1971 (L.A. Bill No. 10 of 1971) ... ... 238–273
5. Announcements—
   (1) Occupants of Kudiyiruppu (Protection from Eviction) Amendment Bill, 1971 ... ... 225
   (2) Madurai City Municipal Corporation Bill, 1971 ... ... ... ... ... 238
6. Papers laid on the Table of the House ... ... 274–275

*Tuesday, 29th June 1971.*

1. Obituary Reference—
   Thiru H. B. Ari Gowder, former M.L.A. ... 227
2. Questions and Answers ... ... ... 277–306
3. Calling Attention—
   Closure of Senthamil College, Madurai ... ... 306–308





PAGES.

*Tuesday, 29th June 1971*—cont.

4. Government Bills—
   (1) Holdings (Stay of Execution Proceedings) (Tamil Nadu Amendment) Bill, 1971 ... ... 308
   (2) Madras City Civil Court (Amendment) Bill, 1971 ... ... ... ... ... 308
5. Revised Budget for the year 1971–72—General discussion—cont. ... ... ... ... 309–363
6. Papers laid on the Table of the House ... ... 363–364

*Wednesday, 30th June 1971.*

1. Questions and Answers ... ... ... 365–377
2. Adjournment Motion—
   Refusal by Standard Motor Company to take back workers and consequent threat of direct action by workers ... ... ... ... 377–380
3. Calling Attention—
   (1) Textile Mill Workers' proposed picketing to insist on the Government to reopen closed textile mills in Coimbatore district ... ... 380–382
   (2) Closure of Mills like Somasundaram, Kaliswara and Pankaja Mills in Coimbatore and consequent hardship to workers ... ... 382–384
4. Announcement—
   Election to Madurai University Senate ... 384
5. Voting on Demands for Grants for the year 1971–72—
   Demand No. 29—Industries.
   Demand No. 40—Capital outlay on Industrial Development ... ... ... ... ... 385–459
6. Papers laid on the Table of the House ... ... 459–460

9. **மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் (கூட்டுறவுத்துறை அமைச்சர்):** கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—கூட்டுறவு, துறைமுகங்கள், வேளாண்மை மறுநிதி உதவி, மண்வளப் பாதுகாப்பு திட்டங்கள் நீங்கலாக வேளாண்மை இயக்கத்தின் வேளாண்மைப் பொறியியற் பிரிவு, கதர் கிராமத் தொழில்கள், கிராமத் தொழில்கள் திட்டம்.

10. **மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (வேளாண்மைத்துறை அமைச்சர்) :** கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—வேளாண்மை, உணவு உற்பத்தி.

11 **மாண்புமிகு திரு. க. இராசாராம் (பின்தங்கிய வகுப்பினர் நலத் துறை அமைசச்ர்) :** கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :— பின்தங்கிய வகுப்பினர் நலன், சுற்றுலா, வீட்டு வசதி இட வசதிக் கட்டுப்பாடு.

12. **மாண்புமிகு திரு. ஒ. பி. இராமன் (மின்சாரத் துறை அமைச்சர்** கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—மின்சாரம், கடன் கொடுத்தல் (கிராமவாசிகள் கடன்பட்டிருத்தல்) குறித்த சட்டம், சீட்டுகள் குறித்த சட்டம், காடுகள், சின்கோனா.

13. **மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் (போக்குவரத்துத் துறை அமைச்சர்) :** கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—போக்குவரத்து, நாட்டுடமையாக்கப்பட்ட போக்குவரத்து, மோட்டார் வண்டிகள் வரி.

14. **மாண்புமிகு திரு. எம். கண்ணப்பன் (அறநிலையத் துறை அமைச்சர்) :** கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—அறக்கட்டளைகள், பால் வழங்கு துறை, முன்னாள் இராணுவ வீரர்கள், பூதான், கிராமதான இயக்கங்கள்.

# PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU.

## GOVERNOR OF TAMIL NADU

## THIRU KODARDAS KALIDAS SHAH

---

THE HON. THIRU M. KARUNANIDHI (Chief Minister) : Minister in-charge of Public, Finance, Planning, General Administration, Matters relating to I.C.S. and I.A.S. Officers, District Revenue Officers, Police, Elections, Prohibition, Information and Publicity, Cinematograph Act, Passport, Newsprints Control, Prices and supplies of goods Act, Tamil Nadu Drainage and Water Board and Slum Clearance Board.

2. THE HON. THIRU V. R. NEDUNCHEZHIYAN (Minister for Education and Local Administration) : Minister in-charge of Education including Technical Education, Official Language, Municipal Administration, Community Development, Panchayats and Panchayat Unions and Legislature.

3. THE HON. THIRU K. ANBAZHAGAN (Miister for Public Health) : Minister in-charge of Public Health, Medicine and Animal Husbandry.

4. THE HON. THIRU N. V. NATARAJAN (Miister for Labour) : Minister in-charge of Labour, Stationery and Printing, Government Press, Prosperity Brigade, Legislation on Weights and Measures, Statistical and Registration.

5. THE HON. THIRU DR. (THIRUMATHI) SATYAVANIMUTHU (Minister for Harijan Welfare) : Minister in-charge of Harijan Welfare, Women's and Children's Welfare, Fisheries, Beggar's Home, Orphanages, Approved Schools and Vigilance Services, Indians Overseas, Refugees and Evacuees.

6. THE HON. THIRU P. U. SHANMUGAM (Minister for Food and Revenue) : Minister in-charge of Food, Commercial Taxes, Revenue, Board of Revenue, District Revenue Establishment and Deputy Collectors.

7. THE HON. THIRU S. MADHAVAN (Minister for Industries) : Minister in-charge of Industries, Textiles, Yarn, Handloom, Mines and Minerals, Iron and Steel Control, Employment and Training, Companies, Law, Courts and Prisons.

8. THE HON. THIRU S. J. SADIQ PASHA (Minister for Public Works) : Minister in-charge of Public Works, Minor Irrigation including Special Minor Irrigation Programme Works, Highways and Waqfs.

9. THE HON. THIRU Si. PA. ADITANAR (Minister for Co-operation) : Minister in-charge of Co-operation, Ports, Agricultural Refinance, Agricultural Engineering Wing of the Directorate of Agriculture except Soil Conservation Schemes, Khadi and Village Industries and Rural Industries Project.

10. THE HON. THIRU A. P. DHARMALINGAM (Minister for Agriculture) : Minister in-charge of Agriculture and Food Production.

11. THE HON. THIRU K. RAJARAM (Minister for Backward Classes) : Minister in-charge of Backward Classes, Tourism, Housing and Accommodation Control.

12. THE HON. THIRU O.P. RAMAN (Minister for Electricity) : Minister in-charge of Electricity, Legislation on Money Lending Rural Indebtedness. Legislation on Chits, Forests and Cinchona.

13. THE HON. THIRU S. RAMACHANDRAN (Minister for Transport) : Minster in-charge of Transport, Nationalised Transport and Motor Vehicles Tax.

14. THE HON. THIRU M. KANNAPPAN (Minister for Religious Endowments). Minister in-charge of Religious Endowments, Milk, Ex-Servicemen, Bhoodan and Gramdan.



**தமிழ்நாடு சட்டப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்**

**பேரவைத் தலைவர் :**

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்.**

**பேரவைத் துணைத்தலைவர் :**

**மாண்புமிகு திரு. பெ. சீனிவாசன்.**

**மாற்றுத் தலைவர்கள் பட்டியல்**

திரு. மா. வெ. கரிவேங்கடம்.
திருமதி ஜோதி வெங்கடாசலம்.
திரு. நா. வீராசாமி.
திரு. அன்புச்செழியன்.
திரு. என். கே. பழனிசாமி.
திரு. எம். ஏ. லத்தீப்.

**சட்டப் பேரவைச் செயலாளர்.**

திரு. கா. து. நடராசன், எம்.ஏ., பி.எல்.

**துணைச் செயலாளர்:**

திரு. கு. புஜங்கராவ், பி.ஏ., எல். எல்.பி.

**உதவிச் செயலாளர்:**

திரு. த. இராதாகிருஷ்ணன், (எஸ்டேட் அதிகாரி).
திரு. கோ. இராகவன்.
திரு. சி. கே. இராமசாமி, பி.ஏ., பி.எல்.
திரு. ஆர். மாணிக்கம், பி.எஸ்ஸி., பி.எல்.

## தமிழ் நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும்.

### தமிழ் நாடு ஆளுநர்

### திரு. கோதர்தாஸ் காளிதாஸ் ஷா.

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. **மாண்புமிகு திரு. மு. கருணாநிதி (முதலமைச்சர்) :** கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—பொதுத்துறை, நிதி, திட்டம், பொது நிர்வாகம், இந்திய சிவில் பணியாளர் தொகுதி (ஐ.சி.எஸ்.), இந்திய ஆட்சிப் பணியாளர் தொகுதி (ஐ.ஏ.எஸ்) அதிகாரிகள், மாவட்ட வருவாய்த்துறை அதிகாரிகள், காவல் துறை, தேர்தல்கள், மதுவிலக்கு, செய்தி, விளம்பரம், திரைப்படச் சட்டம், பயண அனுமதிச் சீட்டுகள், பத்திரிகைக் காகிதக் கட்டுப்பாடு, சரக்குகளின் விலைகள்-வழங்கல் குறித்த சட்டம், தமிழ்நாடு கழிவுநீர்-குடிநீர் வாரியம், குடிசை மாற்று வாரியம்.

2. **மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் (கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர்) :** கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—தொழில் நுட்பக் கல்வி உட்பட கல்வி, ஆட்சி மொழி, நகராட்சி நிர்வாகம் சமுதாய நல வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், சட்ட மன்றம்.

3. **மாண்புமிகு திரு. க. அன்பழகன் (மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்) :** கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—பொதுச் சுகாதாரம், மருத்துவம், கால்நடை வளர்ப்பு.

4. **மாண்புமிகு திரு. என். வி. நடராசன் (தொழிலாளர் நலத் துறை அமைச்சர்) :** கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—தொழிலாளர், எழுது பொருள், அச்சுத்துறை, அரசு அச்சகம், சீரணி, எடைகள்-அளவைகள் குறித்த சட்டம், புள்ளி விவரம், பத்திரப்பதிவு.

5. **மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து (அரிசன நலத் துறை அமைச்சர் :** கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—அரிசன நலம், மகளிர்-சிறுவர் நலம், மீனளம், இரவலர்கள் விடுதி, அனாதை இல்லங்கள், சீர்திருத்தப் பள்ளிகள், கண்காணிப்புப் பணிகள், வெளி நாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள், இடம் பெயர்ந்த வர்கள்.

6. **மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் (உணவு-வருவாய்த்துறை அமைச்சர்) :** கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—உணவு, வாணிக வரிகள், வருவாய், வருவாய்த்துறை வாரியம், மாவட்ட வருவாய் நிறுவனங்கள், மாவட்ட துணை ஆட்சித் தலைவர்கள்.

7. **மாண்புமிகு திரு. செ. மாதவன் (தொழில்துறை அமைச்சர்) :** கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—தொழில்கள், ஆலைத் துணிகள், நூல், கைத்தறி, சுரங்கங்கள், கனிப்பொருள்கள், இரும்பு உருக்குக் கட்டுப்பாடு, வேலை வாய்ப்பும், பயிற்சியளித்தலும், கம்பெனிகள், சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள்.

8. **மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா (பொதுப்பணித்துறை அமைச்சர்) :** கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—பொதுப் பணிகள், சிறு பாசனச் சிறப்புத் திட்டங்கள் உள்பட சிறுபாசனம், நெடுஞ் சாலைகள், முகம்மதியர் அறக்கட்டளைகள்.

## தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டப் பேரவை உறுப்பினர்களின் (அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பட்டியல்.

| தொடர் எண்ணும், உறுப்பினர்கள் பெயரும். (1) | தொகுதி (2) |
|---|---|
| 1 அண்ணாமலை, திரு. சி. வி. எம். | காஞ்சிபுரம். |
| 2 அபுசாலி, திரு. எம். ஏ. | புவனகிரி. |
| 3 அப்துல் ஜப்பார், திரு. வா. மை. | அரவக்குறிச்சி. |
| 4 அரங்கண்ணல், திரு. இராம. | எழும்பூர். |
| 5 அழகமுத்து, திரு. து. ப. (அரசாங்க தலைமை கொறடா). | உப்பிலியப்புரம். |
| 6 அழகர்சாமி, திரு. சோ. | கோவில்பட்டி. |
| 7 அழகுத் தேவர், திரு. எஸ். | சாத்தூர். |
| 8 அனந்தநாயகி, திருமதி த. ந. | மயிலாப்பூர். |
| 9 அன்பழகன், மாண்புமிகு திரு. க. (அமைச்சர்) | புரசைவாக்கம். |
| 10 அன்புச்செழியன், திரு. | பெரியகுளம். |
| 11 ஆண்டி என்ற குருசாமி, திரு. கு. | ஸ்ரீவில்லிபுத்தூர். செ. வ. |
| 12 ஆதித்தனர், மாண்புமிகு திரு. சி. பா. (அமைச்சர்). | ஸ்ரீவைகுண்டம். |
| 13 ஆலடி அருணா, திரு. வி. | ஆலங்குளம். |
| 14 ஆல்டா, எம். பௌலர், திருமதி | நியமன உறுப்பினர். |
| 15 ஆறுமுகம், திரு. அ. | எடப்பாடி. |
| 16 ஆறுமுகம், திரு. எஸ். | வீரபாண்டி. |
| 17 ஆறுமுகம், திரு. சி. | மதுராந்தகம். |
| 18 இரத்தினசபாபதி, திரு. மு. | விளாத்திகுளம். |
| 19 இராசகோபால், திரு. க. மு. | உத்திரமேரூர். |
| 20 இராசகோபால், திரு. வீ. | வந்தவாசி. செ. வ. |
| 21 இராசமாணிக்கம், திரு. அ. | நாகப்பட்டினம். |
| 22 இராசமாணிக்கம், திரு. கு. | ஆடுதுறை. |
| 23 இராசரத்தினம், திரு. டி. | ஸ்ரீபெரும்புதூர். |
| 24 இராசாராம், மாண்புமிகு திரு. க. (அமைச்சர்). | சேலம்-II. |
| 25 இராசு, திரு. ஜே. எஸ். | பெரம்பலூர். செ. வ. |
| 26 இராதாகிருட்டிணன், திரு. எம். | தண்டராம்பட்டு. |
| 27 இராமச்சந்திரன், திரு. எம். ஜி. | பரங்கிமலை. |
| 28 இராமச்சந்திரன், மாண்புமிகு திரு. ச. (அமைச்சர்). | பண்ருட்டி. |
| 29 இராமநாதன், திரு. சி. | அறந்தாங்கி. |
| 30 இராமலிங்கம், திரு. இரா. | தூத்துக்குடி. |
| 31 இராமலிங்கம், திரு. செ. | கடலாடி. செ. வ. |
| 32 இராமன், மாண்புமிகு திரு. ஓ. பி. (அமைச்சர்). | மேலூர் தெற்கு. செ. வ. |
| 33 இராமன், திரு. மு. | கண்டமங்கலம். செ. வ. |
| 34 இராஜாங்கம், திரு. என். | குறிஞ்சிப்பாடி. செ. வ. |
| 35 இராஜாப்பிள்ளை, திரு. வி. கே. | கன்னியாகுமரி. |



| தொடர் எண்ணும், உறுப்பினர்கள் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 36 இளங்கோவன், திரு. கோ. | திருவையாறு. |
| 37 இளஞ்செழியன், திரு. வீ. சா. | விராலிமலை. |
| 38 எட்டியப்பன், திரு. பூ. | பேரணமல்லூர். |
| 39 எட்மண்ட், திரு. க. உரொ. | திருச்செந்தூர். |
| 40 கணபதி, திரு. என். | பாபநாசம். |
| 41 கணபதி, திரு. டி. | நாங்குனேரி. |
| 42 கணேசன், திரு. எல். | ஒரத்தநாடு. |
| 43 கணேசன், திரு. சி. | குற்றாலம். |
| 44 கண்ணப்பன், மாண்புமிகு திரு. மு. (அமைச்சர்). | இணைத்துக்கடவு. |
| 45 கண்ணன், திரு. எம். ஆர். | பேஸின்பிரிட்ஜ். |
| 46 கதிரவன், திரு. கா. மு. | தென்காசி. |
| 47 கந்தசாமி, திரு. கே. பி. | சாத்தான்குளம் |
| 48 கந்தசாமி, திரு. எம். | குளித்தலை. |
| 49 கந்தப்பன், திரு. செ. | திருச்செங்கோடு. |
| 50 கரிவேங்கடம், திரு. மா. வெ. | பாலக்கோடு. |
| 51 கருணாநிதி, மாண்புமிகு திரு. மு. (முதல் அமைச்சர்). | சைதாப்பேட்டை |
| 52 கருணாநிதி, திரு. தாழை. மு. | திருவாரூர். [செ. வ.] |
| 53 கருணைநாதன், திரு. சோ. | கூனூர். |
| 54 கருப்பையா, திரு. ஆ. | கங்கைகொண்டான் (செ.வ.). |
| 55 காசிராமன், திரு. நா. | கும்பகோணம். |
| 56 காதர் பாஷா என்ற வெள்ளைச்சாமி | முதுகளத்தூர். |
| 57 காமாட்சி, திரு. கு. | திருவரம்பூர். |
| 58 கார்த்திகேசன், திரு. வீ. | இராதாபுரம். |
| 59 காவேரி மணியம், திரு. சொ. | திருப்பரங்குன்றம். |
| 60 காளிமுத்து, திரு. கா. | சிவகாசி. |
| 61 கிட்டப்பா, திரு. என். | மாயூரம். |
| 62 கிருட்டிணன், திரு. நா. | பேரணம்பட்டு. [செ. வ.] |
| 63 கிருஷ்ணமூர்த்தி, திரு. வி. | நெல்லிக்குப்பம். |
| 64 கிருஷ்ணமூர்த்தி, திரு. வ. | திருச்சிராப்பள்ளி-1. |
| 65 கிருஷ்ணன், திரு. கே. ஆர். | ஊத்தங்கரை. |
| 66 குப்பல், ராமகிருஷ்ணன், திரு. கே. எஸ். | மதுரை (கிழக்கு). |
| 67 குமாரசாமி, திரு. அ. சே. | திருக்கோயிலூர். |
| 68 குமாரசாமி, திரு. கே. என். | பல்லடம். |
| 69 குருசாமி, திரு. நா. வெ. | ஆண்டிப்பட்டி. |
| 70 கேசவலு, திரு. தே. | கள்ளக்குறிச்சி. |
| 71 கோதண்டராமய்யா, திரு. கே. எஸ். | உதனப்பள்ளி. |
| 72 கோபால், திரு. எம். | குன்னத்தூர். [செ.வ.] |
| 73 கோபால், திரு. கே. பி. | கம்பம். |
| 74 கோபால், திரு. பி. | கோயம்புத்தூர் மேற்கு. |

| தொடர் எண்ணும், உறுப்பினர்கள் பெயரும். | தொகுதி. |
|---|---|
| (1) | (2) |
| 230 வேலப்பன், திரு. சி. வே. .. .. | கபிலமலை. |
| 231 வேழவேந்தன், திரு. கா. .. .. | கும்மிடிபூண்டி. |
| 232 ஜேம்ஸ், திரு. ஜே. .. .. | திருவட்டார். |
| 233 ஜோதி வெங்கடாசலம், திருமதி .. | ஸ்ரீரங்கம் (செ.வ.). |
| 234 ஹாண்டே, டாக்டர் எச். வி. .. .. | பார்க் டவுன் (சென்னை நகரம்). |
| 235 வெற்றிடம் .. .. .. .. | உசிலம்பட்டி. |

**பேரவை நடவடிக்கைகளில் பங்கு கொள்ள உரிமை பெற்றவர்கள்.**

தொடர் எண்ணும், பெயரும்.

| | |
|---|---|
| 1 மாண்புமிகு திரு. என். வி. நடராசன் .. | அமைச்சர். |
| 2 திரு. கோவிந்த சுவாமிநாதன் .. | தலைமை வழக்கறிஞர். |

## தமிழ் நாடு சட்டப் பேரவை

வெள்ளிக்கிழமை, 1971 ஜூன் 25.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர், திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினுக்கள்—விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினுக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வி எண்கள் 46-ம் 47-ம் பிறகு எடுத்துக்கொள்ளப்படும். கேள்வி எண் 48 இப்பொழுது எடுத்துக்கொள்ளப்படும்.

*Promotion of sports and games*

* 48 *Q.*—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) the steps taken by the Government to improve games like Cricket, Football, Hockey, etc., in the State; and

(*b*) the details of the same?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ) :** பல்வேறு விளையாட்டுக்கள், உடற்பயிற்சிக் கல்வி ஆகியவற்றின் முன்னேற்றத்திற்காக தமிழக அரசு மாநில, மாவட்ட விளையாட்டுக் குழுக்களை ஏற்படுத்தி அவற்றின் நடவடிக்கைகளுக்கு மானியமும் வழங்கி வருகிறது. அந்த விளையாட்டுக் குழுக்கள் மாநில, மாவட்ட விளையாட்டுச் சங்கங்களுக்கு விளையாட்டுப் பந்தயங்கள் நடத்தவும் அவற்றில் பங்கு கொள்ளவும் மானியங்கள் அளித்து வருகின்றன. அரசு கொடுக்கும் தனி மானியத் தொகையில் பொங்கல் வார விளையாட்டு விழா மாநிலம் முழுதும் நடத்தப்படுகின்றன. விளையாட்டு அரங்கு கட்ட ஒவ்வொரு மாவட்ட விளையாட்டுக் குழுவுக்கும் அரசு ஒரு லட்ச ரூபாய் மானியம் அளித்து வருகிறது. விளையாட்டுக்களில் சிறந்த மாணவர்களுக்கு மாநில விளையாட்டுக் குழு உபகாரச் சம்பளம் அளித்து வருகிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி : இம்மாநில அமைக்கப்பட்டுள்ள விளையாட்டுக் குழுவில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இடம் பெற்றிருக்கிறார்கள். அம்மாதிரியாக நமது குழுவில் எத்தனை சட்டமன்ற, பேரவை உறுப்பினர்கள் இருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, உறுப்பினர்கள் பற்றிய விவரக்குறிப்பு இல்லை. ஆனால், ஆங்காங்கு விளையாட்டில் ஆர்வம் உடைய சட்டமன்ற, பேரவை உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் அதிலே இடம் பெறலாம். ஆனால், அவர்கள் குழுவில் இருக்கக் கூடாது என்பதல்ல. விளையாட்டுக்களில் ஆர்வம் படைத்தவர்களும், மற்றவர்களும், விளையாட்டுக்

| தொடர் எண்ணும், உறுப்பினர்கள் பெயரும். | தொகுதி. |
|---|---|
| (1) | (2) |
| 75 கோவிந்தசாமி, திரு. வி. செ. | காவேரிப்பட்டினம். |
| 76 கோவிந்தராசன், திரு. ஆர். | கடலூர். |
| 77 கோவிந்தராசன் துரை, திரு. | கந்தர்வகோட்டை. |
| 78 கோவிந்தன், புலவர் கா. | செய்யாறு. |
| 79 கோவை செழியன், திரு. | காங்கேயம். |
| 80 சகாதேவன், திரு. எஸ். | செஞ்சி. |
| 81 சங்கமுத்து தேவர், திரு. ச. | அம்பாசமுத்திரம். |
| 82 சதாசிவம், திரு. சே. | ஆண்டிமடம். |
| 83 சண்முகசுந்தரம், திரு. அ. ப. | பொள்ளாச்சி. |
| 84 சண்முகம், மாண்புமிகு திரு. ப. உ. (அமைச்சர்). | திருவண்ணுமலை. |
| 85 சண்முகம், திரு. பெரி. | திருவாடானை. |
| 86 சண்முகம், திரு. மு. | விழுப்புரம். |
| 87 சத்தியமூர்த்தி, திரு. மு. | புதுக்கோட்டை. |
| 88 சத்தியவாணிமுத்து, மாண்புமிகு டாக்டர் (திருமதி) (அமைச்சர்). | பெரம்பூர் (செ.வ.) |
| 89 சத்தியேந்திரன், திரு. எம். எஸ். கே. | இராமநாதபுரம். |
| 90 சம்பத், திரு. டி. வி. | செம்பனுர்கோயில். |
| 91 சாதிக்பாட்சா, மாண்புமிகு திரு. எஸ். ஜே. (அமைச்சர்) | உடுமலைப்பேட்டை. |
| 92 சாரதி, திரு. மா. பா. | வேலூர். |
| 93 சிதம்பரம், திரு. சித. | காரைக்குடி. |
| 94 சிவப்பிரகாசம், திரு. தி. சி. ஆ. | சேரன்மகாதேவி. |
| 95 சிவபெருமாள், திரு. கோ. | அரியலூர். |
| 96 சிறைமீட்டான், திரு. தொ. க. | பரமக்குடி. [செ. வ.] |
| 97 சீனிவாசன், திரு. பெ. (பேரவைத் துணைத் தலைவர்). | விருதுநகர். |
| 98 சீனிவாசன், திரு. தொ. ப. | போளூர். |
| 99 சின்னசாமி, திரு. அ. | செயங்கொண்டன் (செ.வ.) |
| 100 சின்னசாமி, திரு. ஆர். | தர்மபுரி. |
| 101 சின்னசாமி, திரு. மு. | மொடக்குறிச்சி. |
| 102 சின்னசாமி, திரு. வ. | ஏற்காடு (ஆ.வா.). |
| 103 சின்னராசு, டாக்டர் ச. அ. | ஹரூர் (செ.வ.). |
| 104 சின்ன வெள்ளையன், திரு. சி. | சேந்தமங்கலம் (ஆ.வா.). |
| 105 சுந்தரம், திரு. ஒ. என். | திண்டுக்கல். |
| 106 சுப்ரமணியம், திரு. எஸ். கே. | சத்யமங்கலம். |
| 107 சுப்பிரமணியம், திரு. கே. எம். | தியாகராயநகர். |
| 108 சுப்பிரமணியன், திரு. மா. | ஈரோடு. |
| 109 சுப்பு, திரு. க. | ராஜபாளையம். |
| 110 சுப்பையா, திரு. ஆ. கு. | கோட்டூர் (செ.வ.). |
| 111 சுப்பையா, திரு. கே. வி. | ஆலங்குடி. |
| 112 சுப்பையா, திரு. ச. | சங்கரன்கோயில் (செ.வ.). |



| தொடர் எண்ணும், உறுப்பினர்கள் பெயரும். | தொகுதி. |
|---|---|
| (1) | (2) |
| 113 சுப்பையா, திரு. எ. ஆர். | கடயநல்லூர். |
| 114 சுப்பிரமணியம், திரு. எ. | சிங்கநல்லூர். |
| 115 சுப்பிரமணியன், திரு. வி. | உளுந்தூர்பேட்டை. |
| 116 சுருளிவேல், திரு. மு. | போடிநாயக்கனூர். |
| 117 சுரேந்திரன், திரு. எம். | மேட்டூர். |
| 118 சுவாமிதாஸ், திரு. எ. | பத்மநாபபுரம். |
| 119 செபமாலை, திரு. கோ. | மங்களூர் (செ.வ.). |
| 120 செயராமன், திரு. கி. | சேலம்-1. |
| 121 செல்லதுரை, திரு. வீ. | ஓமலூர் (செ.வ.). |
| 122 செல்லையா, திரு. குழ. | பேராவூரணி. |
| 123 செல்வராஜ், திரு. எம். | விருத்தாசலம், |
| 124 சேதுராமன், திரு. சி. | சிவகங்கை. |
| 125 சோணையா, திரு. த. | மானுமதுரை. |
| 126 சோமசுந்தரம், திரு. ந. | வலங்கைமான் (செ.வ.) |
| 127 சௌடி சுந்தரபாரதி, திரு. | அருப்புக்கோட்டை. |
| 128 சௌந்திரபாண்டியன், திரு. பெ. | கிருஷ்ணராயபுரம் (செ.வ.) |
| 129 டென்னிஸ், திரு. என். | கிள்ளியூர். |
| 130 தங்கமணி, திரு. கே. டி. கே. | மதுரை (மேற்கு.) |
| 131 தர்மலிங்கம், மாண்புமிகு திரு. அ. பெ. (அமைச்சர்) | திருச்சிராப்பள்ளி-2. |
| 132 தருமலிங்கம், திரு. ந. | ரிஷிவந்தியம் (செ.வ.). |
| 133 தவமணித் தேவர், திரு. வி. | சேடப்பட்டி. |
| 134 திம்மராயக் கவுண்டர், திரு. டி. சி. | நாட்ரம்பள்ளி. |
| 135 தியாகராசன், திரு. அ. | திருமயம். |
| 136 தியாகராசன், திரு. இ. எஸ். | திருத்தணி. |
| 137 திருப்பதி, திரு. கு. | மதுரை (சென்ட்ரல்). |
| 138 துரைசாமி, திரு. எ. க. | குடியாத்தம். |
| 139 துரைசாமி, திரு. சு. | திருப்பூர். |
| 140 துரைமுருகன், திரு. | காட்பாடி. |
| 141 துரைராஜ், திரு. சு. ம. | திருவள்ளூர் (செ.வ.). |
| 142 தூயமணி, திரு. மே. சி. | மேட்டுப்பாளையம். |
| 143 தேவராசன், திரு. எம். | உதகமண்டலம். |
| 144 தேவேந்திரன், திரு. அ. | நன்னிலம் (செ.வ.). |
| 145 தோப்பூர் திருவேங்கிடம், திரு. | கணியம்பாடி. |
| 146 நடராசன், திரு. ஈ. எம். | அந்தியூர். |
| 147 நடராசன், திரு. எஸ். | தஞ்சாவூர். |
| 148 நரசிம்மன், திரு. எ. சி. | ஆரணி. |
| 149 நல்லசாமி, திரு. எஸ். | கரூர். |
| 150 நாகராஜன், திரு. க. | வடமதுரை. |
| 151 நாகலிங்கம், திரு. பா. | பொன்னேரி (செ.வ.) |
| 152 நாச்சிமுத்து, திரு. நா. | ஒட்டஞ்சத்திரம், |
| 153 நாச்சியப்பன், திரு. எ. எம். டி. | ஆத்தூர். |

| தொடர் எண்ணும், உறுப்பினர்கள் பெயரும். | | தொகுதி. |
|---|---|---|
| | (1) | (2) |
| 154 | நாச்சியப்பன், திரு. ந. .. .. .. | சங்கராபுரம். |
| 155 | நாராயணசாமி, திரு. மா. வே. .. | திருவொற்றியூர். |
| 156 | நெடுஞ்செழியன், மாண்புமிகு திரு. இரா. (அமைச்சர்). | திருவல்லிக்கேணி. |
| 157 | நைனுமலே, திரு. இரா. .. .. | ராசிபுரம். |
| 158 | பத்மநாபன், திரு. பொ. .. .. | திருநெல்வேலி. |
| 159 | பத்மாவதி, திருமதி எ. கோ. .. .. | முகையூர். |
| 160 | பரந்தாமன், திரு. ஆ. .. .. .. | கடம்பத்தூர். |
| 161 | பரமசிவம், திரு. எம். .. .. .. | தாரமங்கலம். |
| 162 | பலராமன், திரு. என். எஸ். .. .. | அரக்கோணம். |
| 163 | பழனிசாமி, திரு. நா. .. .. .. | பொங்கலூர். |
| 164 | பழனிசாமி, திரு. என். கே. .. .. | பெருந்துரை. |
| 165 | பழனிசாமி, திரு. மு. .. .. .. | வெள்ளக்கோயில். |
| 166 | பழனிச்சாமி, புலவர் சி. .. .. | பழனி (செ.வ.). |
| 167 | பழனியப்பன், டாக்டர், ச. மு. .. .. | கோபிசெட்டிபாளையம். |
| 168 | பழனியம்மாள், திருமதி வி. ப. .. | தாராபுரம். |
| 169 | பழனிவேலன், திரு. க. .. .. .. | வர்சூர். |
| 170 | பழனிவேலன், திரு. மு. .. .. | நாமக்கல். |
| 171 | பழனிவேலு, திரு. வி. .. .. .. | ஆத்தூர். |
| 172 | பழனிவேல் ராஜன், திரு. .. .. | தேனி. |
| 173 | பன்னீர்செல்வம், திரு. எம். .. .. | ஆம்பூர் (செ.வ.). |
| 174 | பாண்டுரங்கம், திரு. சி. .. .. | செங்கம் (செ.வ.). |
| 175 | பாலகிருட்டிணன், திரு. கு. .. .. | மன்னார்குடி. |
| 176 | பாலசுந்தரம், திரு. வை. .. .. | அச்சரபாக்கம் (செ.வ.). |
| 177 | பாலேயா, திரு. எ. .. .. .. | கொளச்சல். |
| 178 | பெரியசாமி, திரு. கு. .. .. .. | கொடவாசல். |
| 179 | பெரியசாமி, திரு. தி. ஓ. .. .. | அவினாசி. |
| 180 | பெருமாள், திரு. செ. .. .. .. | காட்டுமன்னார்கோயில். |
| 181 | பெருமாள், திரு. ஏ. ஆர். .. .. | காரியப்பட்டி. |
| 182 | பொம்மன், திரு. கு. அ. .. .. | கூடலூர் (செ.வ.). |
| 183 | பொன்சொக்கலிங்கம், திரு. பி. .. .. | சிதம்பரம். |
| 184 | பொன்னப்ப நாடார், திரு. ஆர். .. | விளவங்கோடு. |
| 185 | பொன்னுமலே, திரு. தி. .. .. | பனைமரத்துப்பட்டி. |
| 186 | பொன்னுரங்கம், திரு. ஏ. எம். .. | சோளிங்கபுரம். |
| 187 | மணலி கந்தசாமி, திரு. சி. .. .. | திருத்துறைப்பூண்டி. |
| 188 | மணியன், திரு. பி. எஸ். .. .. | சோழவந்தான். |
| 189 | மதியழகன், மாண்புமிகு திரு. கே. ஏ. (பேரவைத் தலைவர்). | ஆயிரம் விளக்கு. |
| 190 | மருதாசலம், திரு. என். .. .. | பேரூர் (செ.வ.). |
| 191 | மலேக்கண்ணன், திரு. வீ. .. .. | இளையாங்குடி. |
| 192 | மலேச்சாமி, திரு. பெ. .. .. .. | மேலூர் வடக்கு. |
| 193 | மன்னியப்பன், திரு. சி. .. .. .. | கிருஷ்ணகிரி. |



| தொடர் எண்ணும், உறுப்பினர்கள் பெயரும். | | தொகுதி. |
|---|---|---|
| | (1) | (2) |
| 194 | மாணிக்கம், திரு. என். .. .. | பென்னரகம். |
| 195 | மாணிக்கவாசகம், திரு. இரா. .. .. | தொண்டாமுத்தூர். |
| 196 | மாதவன், மாண்புமிகு திரு. செ. (அமைச்சர்). | திருப்பத்தூர். |
| 197 | மாரிமுத்து, திரு. ஏ. ஆர். .. .. | பட்டுக்கோட்டை. |
| 198 | மாரிமுத்து, திரு. மூ. .. .. .. | தலைவாசல் (செ.வ.). |
| 199 | மீனுட்சிசுந்தரம், திரு. மா. .. .. | வேதாரண்யம். |
| 200 | முகமது காதர் முகைதீன், திரு. எஸ். .. | மேலப்பாளையம். |
| 201 | முத்தமிழ்ச் செல்வன், திரு. வெ. ந. .. | லால்குடி. |
| 202 | முத்து, திரு. வ. .. .. .. | சங்கரி (செ.வ.). |
| 203 | முத்துசாமி, திரு. ப. .. .. .. | வேடசந்தூர். |
| 204 | முத்துச் செல்வன், திரு. பு. செ. .. | முசிறி. |
| 205 | முத்துவேல், திரு. ந. .. .. .. | வானூர் (செ.வ.). |
| 206 | முத்தையா, திரு. கே. கே. .. .. | கடலூர். |
| 207 | முத்தையா, திரு. எம். .. .. .. | ஒட்டப்பிடாரம் (செ.வ.). |
| 208 | முருகையன், திரு. எஸ். .. .. | கலசப்பாக்கம். |
| 209 | முனியாண்டி திரு. ஆ. .. .. .. | நிலக்கோட்டை (செ.வ.) |
| 210 | முனு ஆதி திரு. மு. .. .. .. | திருப்போரூர். |
| 211 | முனுசாமி, திரு. ரா. ரா. .. .. | மேல்மலையனூர். |
| 212 | மொய்தீன், திரு. திருப்பூர் ஏ. எம். .. | துறைமுகம் (சென்னை நகரம்). |
| 213 | மோசஸ், திரு. ம. .. .. .. | நாகர்கோவில். |
| 214 | ரங்கநாதன், திரு. கே. .. .. .. | கோயம்புத்தூர் (கிழக்கு |
| 215 | ராமசாமி, திரு. இ. .. .. .. | வால்பாறை. |
| 216 | ராமசாமி, திரு. ஜி. .. .. .. | திருப்பத்தூர். |
| 217 | ராமராசன், திரு. வ. க. .. .. | பவானிசாகர் (செ.வ.). |
| 218 | இராஜா திரு. ஏ. எம். .. .. .. | பவானி. |
| 219 | ராஜாராம், திரு. ஜி. .. .. .. | திண்டிவனம். |
| 220 | ரெத்தினசாமித் தேவர், திரு. மு. சி. ஆ. | திருமங்கலம். |
| 221 | லத்தீப், திரு. எம். ஏ. .. .. .. | வாணியம்பாடி. |
| 222 | வகாப், திரு. கே. ஏ. .. .. .. | ராணிப்பேட்டை. |
| 223 | வடிவேலு, திரு. சி. க. .. .. .. | தோட்டியம். |
| 224 | வடிவேல், திரு. எஸ். .. .. .. | சீர்காழி (செ.வ.). |
| 225 | விசுவநாதன், திரு. செ. கோ. .. | செங்கல்பட்டு. |
| 226 | வீராசாமி, திரு. நா. .. .. .. | ஆற்காடு. |
| 227 | வெங்கடசாமி, திரு. பி. .. .. | ஹோசூர். |
| 228 | வெள்ளத்துரை, திரு. அ. .. .. | வாசுதேவநல்லூர். |
| 229 | வேதாசலம், திரு. மு. .. .. .. | வண்ணாரப்பேட்டை (சென்னை நகரம்). |

குழுவில் சேர்த்துக்கொள்ளப்படுகிறார்கள். ஆனால், இதிலே எத்தனை பேர் சட்டமன்ற, பேரவை உறுப்பினர்கள் இடம் பெறுகிறார்கள் என்ற தகவல் இல்லை. தனிக் கேள்வி போட்டால் தகவல் சேகரித்துத் தரலாம்.

திரு. எ. சுவாமிநாஸ்: விளையாட்டுக் குழு உறுப்பினர்களை அரசு தெரிந்தெடுக்கும்போது எந்தத் தகுதி அடிப்படையில் தெரிந்தெடுக்கிறார்கள்?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சிக் குழுவிற்கு அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர், தலைவராக இருக்கிறார். மாவட்ட ஆட்சித் தலைவர் பரிந்துரை செய்கிறார். மாநில விளையாட்டுக் குழுப் பொதுச் செயலாளருடைய பரிந்துரையும் அரசுக்கு வந்து, பிறகு அரசு உறுப்பினர்களை நியமிக்கிறது. பரிந்துரை செய்கிறவர்கள், மாவட்ட ஆட்சித் தலைவரும் மாநில விளையாட்டுக் குழுவின் பொதுச் செயலாளரும் ஆவார்கள்.

திரு. நா. வீராசாமி: தலைவர் அவர்களே, விளையாட்டுக் குழுவுக்கு நம்முடைய அரசு எல்லாவிதமான உதவிகளும் செய்து வருகிறது என்று சொன்னார்கள். சென்னை மாநகரம் தமிழ் நாட்டின் தலைநகரமாக இருக்கிறது. கிரிக்கெட் அஸோஸியேஷனுக் கென்று தனியாக இடம் எல்லா வசதிகளுடன் இருக்கின்றது. ஆனால், தமிழ் நாட்டில் இப்பொழுது அதிகமாக விரும்பி விளையாடுகின்ற கால் பந்து விளையாட்டுக்கு வேண்டிய வசதிகள் சென்னை மாநகரத்தில் இல்லை. ஆகவே, கால் பந்து அசோஸியேஷனுக்கோ அல்லது அரசாங்கத்தின் சார்பிலோ தனியாக அப்படிப்பட்ட ஒரு திடல் ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் முன்வருமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, கால் பந்து விளையாட்டுக்கு ஒரு குழு இருந்து கொண்டு வருகிறது. அவர்கள் அது பற்றிய கோரிக்கையை வைத்துக்கொண்டு வருகிறார்கள். அதற்கான இட வசதி மற்றவைகளைப் பொறுத்து மாநில விளையாட்டுக் குழுவின் பரிசீலனைக்கு வைக்கப்படுமே யானால், அதற்குப் பிறகு ஆலோசித்து தக்க நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. எஸ். ஆறுமுகம்: தலைவர் அவர்களே, நல்ல திடகாத்திரத்தோடும் ஆரோக்கியத்தோடும் இருப்பதற்காகத்தான் விளையாட்டுக்கு ஊக்கம் தரப்படுகிறது. இந்த விளையாட்டுகளில் எந்த விளையாட்டு நல்ல உடல் ஆரோக்கியத்தைத் தரும் என்று அமைச்சர் அறிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, எல்லா விளையாட்டுக்களும் உடல் வலிவும் நலமும் தருகின்றவை தான். அவரவருடைய ஆர்வத்தையும், திறமையையும், தன்மையையும், உடல் கூறுபாட்டையும் பொறுத்து விளையாட்டுக்கள் அமைகின்றன.



திரு. சு. துரைசாமி: ஆண்டுதோறும் பொங்கல் விளையாட்டுப் போட்டியை அரசு நடத்துகிறது. அப்படி நடத்தும் பொங்கல் விளையாட்டுப் போட்டியை மாவட்டத் தலைநகரங்களில் ஜனவரி மாதத்தில் பொங்கல் நாளன்று நடத்திக் கொண்டுவந்தது இப்பொழுது விளையாட்டுக் குழுவால் மறுக்கப்பட்டிருக்கிறது. இனிமேல் ஆண்டுதோறும் நடத்தும் பொங்கல் விளையாட்டை மாவட்டத் தலைநகரங்களிலும் அவ்வப்போது நடத்தினால் பலரும் பங்குகொள்ள வாய்ப்பு ஏற்படும். அதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்ய முன்வருமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, சென்ற இரண்டாண்டுக் காலமாக சென்னை மாநகரில் பொங்கல் வார விளையாட்டுப் பந்தயம் நடைபெற்று வந்தது. இனிமேல் மாவட்ட விளையாட்டுக் குழு மாவட்டத் தலைநகரிலும் நடத்தலாம் என்கிற கொள்கை ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. மாநில விளையாட்டுக் குழுவின் அடுத்த கூட்டத்தில், எந்த மாவட்டத் தலைநகரில் வருகிற ஆண்டில் விளையாட்டுப் பந்தயத்தை வைத்துக் கொள்ளலாம் என்பது முடிவு செய்யப்படும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவர் அவர்களே, இந்த விளையாட்டு அரங்கங்களுக்கு ஒரு இலட்ச ரூபாய் வீதம் உதவித் தொகையாகக் கொடுப்பதாக அமைச்சரவர்கள் கூறினார்கள். இந்த ஒரு இலட்ச ரூபாயிலே மாவட்ட விளையாட்டு அரங்கங்களை சரியான முறையில் நிறுவுவதற்குக் கஷ்டமாக இருப்பதால், இந்த உதவித் தொகையை அதிகப்படுத்துவதற்கு அரசாங்கத்திடம் ஏதாவது குறிப்பு இருக்கின்றதா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும் விளையாட்டு அரங்கம் இருக்க வேண்டும் என்ற கொள்கை ஏற்றுக்கொள்ளப்பட்டு, அரசாங்கத்தினுடைய பங்காக ஒரு இலட்சம் ரூபாய் கொடுக்கப் பட்டு வருகிறது. ஆனால், அந்தந்த மாவட்டத்தினுடைய விளையாட்டுக் குழுவினர் அதற்கான நிதி திரட்டுகிறார்கள். மாவட்ட விளையாட்டுக் குழுவின் தலைவராக, மாவட்ட ஆட்சித் தலைவர் இருப்பதாலும், அதனுடைய செயலாளராக மாவட்ட காவல் துறை அதிகாரி இருப்பதாலும், அந்தக் குழுவினர் மேற்கொண்டு நிதி திரட்டுகிறார்கள். சில மாவட்டங்களில் ஏழு இலட்சம், பத்து இலட்சம், ஐந்து இலட்சம் ரூபாய் அளவுக்குத் திட்டம் போடுகிறார்கள். ஆனால், மாநில விளையாட்டுக் குழுவிற்கு இருக்கும் நிதி வசதியை வைத்துக்கொண்டு, முதலில் ஒரு இலட்சம் ரூபாய் வீதம் இந்த ஆண்டு இரண்டு இலட்சம் ரூபாய் இரண்டு இடங்களுக்குத் தர வகை செய்யப்பட்டிருக்கிறது. ஆனால், திருச்சி, வடார்க்காடு, நீலகிரி, சேலம், மதுரை, தென்னார்க்காடு, ஆகிய மாவட்டங்களுக்கு ஒவ்வொரு இலட்ச ரூபாய் வீதம் வழங்கப்பட்டிருக்கிறது. சில இடங்களில் அரங்கம் கட்டப்பட்டு வருகிறது. சில இடங்களில் கட்டி முடிக்கப்பட்டிருக் கின்றன. மற்ற மாவட்டங்களுக்கு இந்த ஆண்டு இரண்டு இலட்சம் ரூபாய் தரலாம் என்று முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது.

நிதி வசதி பெருகினால், அதிகமாக ஆக்கலாம். இப்பொழுதிருக்கும் நிதி வசதியில் ஒரு இலட்சம் ரூபாய் தான் தர முடியும். எங்கெங்கே நிதி திரட்டுகிறார்களோ அங்கே வாய்ப்பு அளிக்கப்படுகிறது. மாவட்ட ஆட்சித் தலைவர்கள் போதுமான அளவுக்கு அங்கங்கே நிதி திரட்டிக்கொள்கிறார்கள்

**திரு. ஏ. சுப்பிரமணியம் :** தலைவர் அவர்களே, மாணவர்களுடைய உடற்கட்டை அதிகப்படுத்தும் முறையில் ஒவ்வொரு உயர்நிலைப்பள்ளியிலும் உடற்பயிற்சி நிலையங்களை அமைப்பதற்கும் அங்கே உடற்பயிற்சி ஆசிரியர்களை நியமித்து மாணவர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்கும், விளையாட்டில் சிறந்து விளங்கும் மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்குவதற்கும் அரசு உதவித் தொகை அளித்து, மாணவர்களை விளையாட்டில் ஊக்கமுள்ளவர்களாக்கும் காரியங்களை அரசு செய்ய முன்வருமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, எல்லாப் பள்ளிகளிலும் உடற்பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன. உடற்பயிற்சித் திட்டங்களெல்லாம் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. உடற்பயிற்சி ஆசிரியர்களும் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால், இதற்குப் பரீட்சை ஏதும் இல்லாததால் மாணவர்கள் அதிலே அக்கறை செலுத்துவதில்லை. பயிற்சி பெறுவதற்குப் பயிற்சியாளர்கள் சில முக்கியமான நகரங்களுக்கு அனுப்பப்படுகிறார்கள். பாட்டியாலா சென்று பயிற்சி பெற்றவர்களை வைத்துத் தனிப் பயிற்சி கொடுக்க பிற நகரங்களிலும் பயிற்சியாளர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

விளையாட்டில் சிறந்து விளங்கும் மாணவர்களுக்கு ஆண்டுதோறும் பத்தாயிரம் ரூபாய் அளவிற்கு உதவித் தொகை அளிக்கப்பட்டு வருகிறது. மாணவர்களாக இல்லாதிருப்பவர்களுக்கும், ஆண்கள் பத்து பேருக்கும் பெண்கள் பத்து பேருக்கும்—அவர்கள் விளையாட்டில் சிறந்து விளங்குவார்களானால் உதவியாக இருக்கும் பொருட்டு 300 ரூபாய் உதவித்தொகை அளிக்கும் திட்டமும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. முதன்முதலாக 10,000 ரூபாய் மாணவர்களுக்கு உதவித்தொகை அளிக்கும் திட்டம் இருந்து வருகிறது.

**திரு. ரா. ரா. முனுசாமி :** விளையாட்டு அரங்கங்கள் சில மாவட்டங்களில் கட்டப்பட்டு சில மாவட்டங்களில் விடப்பட்டிருக்கின்றன. குறிப்பாக, தென்னார்க்காடு மாவட்டத்தில் விளையாட்டு அரங்கம் இல்லை என்பது அரசுக்குத் தெரியுமா? விடுபட்டுப்போன மாவட்டங்களில் விளையாட்டு அரங்கம் உடனடியாக கட்ட நம்முடைய அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, தென்னார்க்காடு மாவட்டத்தில் முயற்சி எடுத்துக்கொள்ளப்பட்டு வருகிறது. ஒரு இலட்ச ரூபாய் அதற்கு நிதி வழங்கியிருக்கிறது. அதற்கான முயற்சிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். கடலூரில் அதற்கான முயற்சி நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது





**திரு. எம். சுரேந்திரன் :** சார், விளையாட்டுக்களெல்லாம் வாலிபர்களுக்கு ஏற்றவாறு அமைந்திருக்கின்றன. ஐம்பது வயதுக்கு மேற்பட்டவர்கள் சர்க்கரை வியாதியினாலும் இரத்தக் கொதிப்பினாலும் சிரமப்படுகிறார்கள். அப்பேர்பட்ட 'வாலிபர்களுக்கு' ஏதாவது விளையாட்டுக்களை ஏற்பாடு செய்து அவர்களுடைய நோயையும் போக்க இந்த அரசு ஏதாவது வகை செய்யுமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, ஐம்பது வயதுக்கு மேற்பட்டவர்களும் இப்பொழுது சாதாரணமாக விளையாட்டுக்களில் ஈடுபட்டிருக்கிறார்கள். கனம் உறுப்பினர் கூறுவது போன்று நோய்வாய்ப்பட்டவர்களுக்கு என்ன விளையாட்டுக்கள் கொடுக்கலாம் என்பதை டாக்டர்கள் பரிந்துரை செய்தால் அப்படிப்பட்ட முதியவர்களுக்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கு முயற்சிகளை எடுத்துக்கொள்ளலாம்.

**திரு. நா. வீராசாமி :** தலைவர் அவர்களே, இங்கு க்ரிக்கெட், புட்பால், ஹாக்கி போன்ற விளையாட்டுக்களைத்தான் குறிப்பிட்டிருக்கிறார்கள். சடுகுடு தமிழர்களின் விளையாட்டு என்று சொல்லப்படுகிறதே, அதை ஊக்குவிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** சடுகுடு செலவில்லாமல் நடைபெறுகிற விளையாட்டு—வீதிகளிலும், வேறுபல இடங்களிலும் நடத்தலாம். பணம் செலவாகக்கூடிய, பயிற்சி அளிக்கப்படவேண்டிய விளையாட்டுகள் சம்பந்தமாகத்தான் அரசு தனியாக உதவி செய்தாக வேண்டிய நிலை இருக்கிறது.

**திரு. கே. என். குமாரசாமி :** தமிழர்களின் பண்டைய விளையாட்டாகிய தடியடி, மல்யுத்தம் போன்றவற்றில் பயிற்சி அளித்து வருகிறவர்களுக்கு அரசு மானியம் வழங்கி வருகிறதா என்று அறிய விரும்புகிறேன்,

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தற்போது அப்படிப்பட்ட குறிப்பு எதுவும் இல்லை.

**திரு. ஏ. சுவாமிதாஸ் :** தற்போதிருக்கிற முறைப்படி ஒவ்வொரு மாவட்டத்திலும் அந்த விளையாட்டுக் குழுவின் செயலாளராக மாவட்ட கல்வி அதிகாரி இருக்கிறார். இப்போதே அவர்களுக்கு வேலைப்பளு அதிகமாக இருப்பதனால் இதுபற்றியும் கவனிப்பதில் பல சிரமங்கள் இருக்கின்றன. ஆகவே, இதற்கென்றே தனியாக ஒரு முழுநேர செயலாளரை நியமிக்க அரசு முன்வருமா என்று அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** போதிய நிதி வசதி இல்லாத காரணத்தினால் இதற்கென்றே தனியாக முழுநேர செயலாளர் போட வேண்டிய அவசியம் இல்லை என்று அரசாங்கம் கருதி இந்தப் பொறுப்பை மாவட்ட கல்வி அதிகாரிகளிடத்தில் ஒப்படைத்திருக்கிறது. இதற்கென்று அவர்கள் அதிகமான நேரம் செலவழிக்க வேண்டிய அவசியமும் இருக்கவில்லை. நிதி வசதி ஏற்படுகிறபோது இதைப் பரிசீலிக்கலாம்.

திரு. கே. டி. கே. தங்கமணி: தலைவர் அவர்களே, சமீபகாலமாக சடுகுடு விளையாட்டு செல்வாக்குப் பெற்று வருகிறது. ஆகவே, இந்தக் குழு சடுகுடு விளையாட்டிற்கும் ஆதரவு அளிக்குமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: இந்தக் குழுவின் ஆதரவைப் பெற்றுத்தான் இந்த விளையாட்டு நடைபெறவேண்டும் என்பதில்லை. நான் ஏற்கனவே சொன்னபடி இதற்கு செலவு இல்லாத காரணத்தினால் ஆங்காங்கே தனிப்பட்ட முறையில் சிறப்பாக நடைபெற வசதி இருக்கிறது.

திரு. ஆ. துரையரசன்: தலைவர் அவர்களே, மற்ற புட்பால், கிரிக்கெட், ஹாக்கி போன்றவற்றை ஊக்குவித்து பயிற்சி அளிப்பது போலவே இந்த சடுகுடு விளையாட்டிற்கும் மாவட்ட விளையாட்டுக் கழகங்கள் ஆதரவு காட்டிவருகின்றன என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: மாவட்ட அளவில் இருந்துவரலாம். மாநில அளவில் எதுவும் செய்யப்படவில்லை.

## தனியார் பள்ளிகள்

* 49 வினா—திரு. பி. எஸ். மணியன், திரு. என். கிட்டப்பா, மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா?

தமிழகத்தில் தனியார் பள்ளிகளை அரசு ஏற்று நடத்துவது குறித்து பரிசீலனை ஏதேனும் செய்யப்படுகிறதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: இல்லை.

திரு. என். கிட்டப்பா: சில தனியார் பள்ளிக்கூடங்களில் இன்னமும் சொல்லப்படுகிற சம்பளம் ஒன்றாகவும், கொடுக்கப்படுகிற சம்பளம் ஒன்றாகவும் தான் இருக்கிறது. மேலும் ஆசிரியர்களுக்கு அரசாங்கம் கொடுக்கிற நியாயமான, உரிய சலுகைகளைக் கூட கொடுப்பதில்லை என்கிற புகார்களும் வருகின்றன. ஆகவே, தனியார் பள்ளிகள் எல்லாவற்றையும் ஏற்று நடத்த அரசாங்கம் முன்வருமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: உறுப்பினர் குறிப்பிட்டது போன்ற பிரச்சினைகள் எங்கெங்கு எழுகின்றனவோ அங்கெல்லாம் அவை கவனிக்கப்பட்டு அவற்றை அகற்ற தனியான முறையில் நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்படுகின்றன. அரசியல் சட்டப் பிரகாரம் தனியார் பள்ளிக்கூடங்கள் எல்லாவற்றையும் எடுத்துக்கொள்வதற்குக் கூட முடியாது. அரசியல் சட்டத்தின் அடிப்படையில் சிறுபான்மையினர் தாங்களே கல்வி வசதியை ஏற்படுத்திக்கொள்வதற்கு வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. ஆயினும் அவற்றில் குறைபாடுகள் வராமல் இருப்பதற்கும், வந்தால் அவற்றை அகற்றுவதற்கும் தக்க நடவடிக்கைகளை நாம் எடுத்துக்கொள்ள முடியும். ஆகவேதான் இதுபற்றி ஆராய்ந்து டாக்டர் பால் அவர்கள் சில பரிந்துரைகளை அளித்திருக்கிறார்கள். அது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது. அதன் அடிப்படையில் வேண்டுமென்றால் ஒரு மசோதாவை கொண்டுவரலாம். அதைத் தவிர எல்லா தனியார் பள்ளிக்கூடங்களையும் எடுத்துக்கொள்வது என்பது முடியாத காரியம்.



திரு. பி. எஸ். மணியன்: தனியார் நடத்தும் தொடக்கப்பள்ளியில் அரசு கொடுக்கக்கூடிய உதவித்தொகை கூட சரிவர செலவு செய்யப்படவில்லை என்பதும், பலவகையான வேறுவித ஊழல்களும் அங்கே நடைபெறுகின்றன என்பதும் அரசாங்கத்திற்குத் தெரியுமா? ஆகவே ஆங்காங்கே உள்ள தனியார் தொடக்கப் பள்ளிகளையாவது உடனடியாக ஊராட்சி ஒன்றியங்களோடு இணைக்க அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தனியார் பள்ளிகளில், நான் ஏற்கனவே குறிப்பிட்டதுபோல ஊழல்கள் இருக்கின்றன என்றால் அவற்றைக் களைய அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுத்து வருகிறது. சரியான முறையில் ஆசிரியர்களுக்குச் சம்பளம் வழங்கப்படவில்லை என்றால் அரசாங்கமே மாவட்ட கல்வி அதிகாரிகளின் மூலம் சம்பளம் தருவதற்கும் ஏற்பாடு செய்கிறது. சட்டரீதியாக அவற்றை எடுத்துக்கொள்வது என்பது முடியாத காரியம் என்றுதான் முன்பே சொன்னேன்.

திரு. பெ. மலைச்சாமி: அரசினர் பள்ளிகளைவிட தனியார் பள்ளிகளின் தரம் உயர்வாக இருக்கிறது என்று கூறப்படுகிறதே, இதைப்பற்றி அரசினரின் கருத்து என்ன?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: அப்படி பொதுப்படையாகச் சொல்வதற்கில்லை. அரசினர் பள்ளி, மாவட்ட வாரியப் பள்ளி, மாநகராட்சி நடத்துகின்ற பள்ளி ஆகியவற்றில் கூட 95 சத விகிதம், 98 சத விகிதம், இன்னமும் சென்டம் ரிசல்ட் வருகிற நிலையைக்கூடப் பார்க்கிறோம். தனியார் பள்ளிகள் என்றால் அவர்கள் மாணவர்களைப் பொறுக்கி எடுத்துக்கொள்கிற நிலை இருக்கிறது. அரசினர் பள்ளிகளில் அப்படியின்றி வருகிற விண்ணப்பங்களைப் பார்த்து மாணவர்களைச் சேர்த்துக்கொள்கிறோம். தனியார் பள்ளிகள் என்றால் ஒரு ஆசிரியர் அங்கே 30, 35 ஆண்டு தொடர்ந்து இருந்து செம்மையாகப் பணியாற்ற முடிகிறது. ஆனால் அரசினர் பள்ளிகளில் அப்படி ஒரு ஆசிரியர் தொடர்ந்து ஒரு பள்ளியில் இருக்க முடியாது. உத்தியோக உயர்வு, பள்ளியின் தர உயர்வு இவற்றுக்குத் தகுந்தாற்போல மாற்றப்படுகிற நிலையும் இருக்கிறது. குறிப்பாகச் சொன்னால் திறமை வாய்ந்த மாணவர்களையே பொறுக்கிக்கொண்டு ரிசல்ட் காட்டுவதைவிட அறிவுத்துறையில் பல நிலையில் உள்ள மாணவர்களையும் சேர்த்துக்கொண்டு நல்ல ரிசல்ட் காட்டுகிற நிலையில்தான் பள்ளியின் தரத்தை மதிப்பிட முடியும். அந்தவகையில் சில பல மாநகராட்சிப் பள்ளிகள், அரசினர் பள்ளிகள் எந்தவகையிலும் குறைந்திருக்கவில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: சில தனியார் பள்ளிகளில் இலாக்காக்களில் இருந்து நியாயமான உத்தரவுகள் பிறப்பித்தும் அமுலாக்காமல் வேண்டுமென்றே தாமதப்படுத்துகிறார்கள். அந்த மாதிரியான பள்ளிக்கூடங்களுக்கு கிராண்டுகள் போன்றவற்றைக் கொடுக்காமல் நிறுத்த தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளப் படுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: இருக்கக்கூடிய விதி முறைகளின்படி அந்தமாதிரியான பள்ளிக்கூடங்களுக்கு அளிக்கப் பட்டுள்ள அங்கீகாரத்தை ரத்து செய்யலாம். மற்றொன்று அவர் களுக்கு அளிக்கப்பட்டு வருகிற மானியத்தை கொடுக்காமல் இருக்கலாம். ஆனால் நாம் எந்த நடவடிக்கை எடுத்துக்கொள்வது என்றாலும் அங்கே படிக்கிற நானூறு, ஐநூறு மாணவர்களின் நிலை, பத்துப் பதினைந்து ஆசிரியர்களின் நிலை ஆகியவற்றையும் நாம் கவனிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். ஆகவே தான், இவைபற்றி எல்லாம் எப்படி நடந்துகொள்வது என்பதைப்பற்றி பரிசீலிக்க டாக்டர் பால் அவர்கள் நியமிக்கப்பட்டு, அவர்கள் 1971-ம் வருடம் பிப்ரவரி மாதம் 23-ம் தேதி அன்று ஒரு அறிக்கை சமர்ப்பித்திருக்கிறார்கள். அது பரிசீலனையில் இருக்கிறது. அதில் தனியார் பள்ளிக்கூடங்களில் சில குறைகள் காணப்படுகிறபோதே அந்தக் குறைகளுக்குக் காரணமானவர்களை மட்டும் அந்தப் பள்ளியில் இருந்து அகற்றி—எப்படி அந்தப் பள்ளி நிர்வாகத்தைச் செம்மைப்படுத்தலாம் என்பதுபற்றியும் பரிசீலிக்கப்படுகிறது. ஆகவே தனியார் பள்ளிகளிலும் குற்றங்குறைகள் இல்லாமல் இருக்க வழிவகை காணுகிற முறையில்தான் அரசாங்கம் ஈடுபட்டிருக்கிறது.

திரு. என். இராஜாங்கம்: தலைவர் அவர்களே, தனியார் பள்ளி களில் படிக்கின்றவர்கள் 100க்கு 75 மார்க்குகள் வாங்குகிறார்கள் என்றும், அவர்கள் கெட்டிக்காரர்களாக இருக்கிறார்கள் என்றும், அரசாங்கப் பள்ளிகளில் படிக்கின்றவர்கள் 100க்கு 25 சதவீத மார்க்குகள்தான் வாங்குகிறார்கள் என்றும் சொல்லப்படுகின்ற கருத்து நாட்டிலே நிலவுகிறது. அம்மாதிரியான கருத்து பொதுப் படையாகச் சொல்லப்படுகிறது என்று அமைச்சர் அவர்களும் விளக்கம் கொடுத்தார்கள். ஆகவே, தனியார் துறைப் பள்ளிகளில் தரத்தை உயர்த்த என்ன என்ன முறைகளைக் கையாளுகிறார்களோ, அந்த முறைகளை அரசாங்கமும் கையாண்டு அவைகளை அமுல் படுத்தி தரத்தை உயர்த்த சட்டம் இயற்றுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, தனியார் துறைப் பள்ளிகளில் நிர்வாகிகள் குறிப்பிட்டவர்களைச் சேர்த்துக் கொண்டு மற்றவர்களுக்கு இடம் இல்லை என்று சொல்லி விடுகிறார்கள். அரசாங்கப் பள்ளிகளில் நாம் அப்படிச் சொல்லிவிட முடியாது. யார் வந்தாலும் அவர்களுக்கு இடம் தருகின்ற பொறுப்பில் அரசாங்கம் இருக்கிறது. இப்போதுகூட லயோலா கல்லூரியில் 400 மார்க் பெற்றவர்களைத்தான் சேர்த்துக்கொள் கிறார்கள். அவர்கள் 400 மார்க்கிலிருந்து இன்னும் இறங்கவில்லை.



வேறு சில இடங்களில் 450 மார்க் என்று வைத்திருக்கிறார்கள். அரசாங்கப் பள்ளிகளில் எல்லோருக்கும் வாய்ப்பு அளிக்க வேண்டு மென்ற நிலையில் எல்லோருக்கும் வாய்ப்பு அளிக்கிறோம், தனிப் பட்டோர் பள்ளிகளில் அந்த நிலைமை இல்லை.

திரு. க. சுப்பு: தலைவர் அவர்களே, எதிர்காலத்திலாவது தனியார் பள்ளிகளைத் தொடங்காமல் இருக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, சாதாரணமாக தனியார் பள்ளிகள் அனைத்துமே மோசமாக நடந்து கொள்கின்றன என்று சொல்ல முடியாது. 1970-ம் வருடம் ஆகஸ்டு மாதம் 1-ம் நாள் வரையில் கணக்கெடுத்துப் பார்த்ததில் நம்முடைய மாநிலத்தில் 31,881 தொடக்கப் பள்ளிகள் இருக்கின்றன. அவற்றில் தனியார் பள்ளிகள் 7,359 தான். கிட்டத் தட்ட 23 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பள்ளிகள் அரசினரால்தான் நடத்தப்படுகின்றன. உயர்நிலைப்பள்ளிகளை எடுத்துக்கொண்டால் 2,635 என்ற அளவில் இருக்கின்றன. அவற்றில் 782 பள்ளிகள் தான் தனியார் பள்ளிகளாக இருந்து வருகின்றன. தனியார் பள்ளிகள் பல நல்ல முறையில் நடக்கின்றன. தனியார் பள்ளி களில் லட்சக்கணக்கான அளவுக்கு பணத்தைப் போட்டு, தேவை யான கட்டிடங்களைக் கட்டி, தேவையான வசதிகளோடு செய்கிறார்கள் என்பதை நாம் மறுக்க முடியாது. 5 லட்சம் ரூபாய், 10 லட்சம் ரூபாய் என்ற அளவில் பணத்தைச் செல வழித்து உயர்நிலைப் பள்ளிகளுக்கான கட்டிடங்கள், பிற வசதி களைச் செய்கிறார்கள். 40 லட்சம், 50 லட்சம் என்ற அளவில் பணத்தைச் செலவு செய்து தனியார் கல்லூரிகள் நடத்தப்படு கின்றன. எங்கு தவறு நடக்கிறதோ அதைக் கண்டுபிடித்து, அப்படிப்பட்ட தவறுகள் ஏற்படாமல் நடவடிக்கை எடுத்து வருகிறோம். மீண்டும் மீண்டும் தவறுகள் ஏற்பட்டால் அந்தப் பள்ளியை அரசாங்கமே எடுத்துக்கொள்வதுபற்றி கவனம் செலுத்தும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. அ. இராசமாணிக்கம்: தலைவர் அவர்களே, தனியாரால் நடத்தப்படுகின்ற பள்ளிகளை திடீர் திடீர் என்று மூடி விடுகிறார்கள் அப்படி மூடிவிடும்போது அதை ஏற்று நடத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, பள்ளிகள் திடீர் என்று மூடப்படுகின்ற சூழ்நிலை ஏற்படும்போது ஆசிரியர்களுக்கு மாற்று வேலை தருவதும், மாணவ மாணவிகளை வேறு பள்ளிகளில் சேர்க்கும் முயற்சியும் எடுத்துக்கொண்டு, அவர்களுக்குக் கஷ்டங்கள் ஏற்படாமல் அரசாங்கம் பார்த்துக் கொள்கிறது.

திரு. மு. சத்தியமூர்த்தி: தலைவர் அவர்களே, இப்போது பேசியவர்கள் எல்லாம் உள்ளாட்சித் துறையில் நடக்கின்ற பள்ளிகளில் தரம் நல்ல வகையில் இல்லை என்று சொன்னார்கள். இந்தத் தரத்தை உயர்த்துவதற்கு, சோதனை செய்வதற்கு

எஜுகேஷன் டிபார்ட்மெண்டிலே டெப்டி இன்ஸ்பெக்டர் ஆஃப் ஸ்கூல்ஸ் என்பவர்கள் இருக்கிறார்கள். அதைப் போலவே பஞ்சாயத்து யூனியனிலே இருக்கக்கூடிய பள்ளிகளைச் சோதனை செய்வதற்கு இ.ஓ. (இ) என்பவரை உபயோகப்படுத்திக் கொள்ளலாமா என்பதை அரசு ஆலோசனை செய்யுமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, தரத்தை உயர்த்துவதற்கான முயற்சிகள் பல்வேறு வகைகளில் எடுக்கப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய கருத்து பொருந்தி வருமா என்று ஆலோசித்துப் பார்க்க வேண்டும்.

THIRU K. S. KOTHANDARAMIAH : There are a number of private schools which are doing efficient work in our State. The very fact that students flock to private schools at the time of admissions shows that they are doing good work. Therefore, may I expect the Hon. Minister for Education to consider this and think of giving more grants to efficient schools and encourage them?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, இப்போது போதுமான அளவுக்கு அவர்களுக்கு மானியங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. பல்வேறு பராமரிப்புச் செலவுகள் இருக்கின்றன. சென்ற ஆண்டு கூட 5 ரூபாய் பராமரிப்புச் செலவுக்கு எடுத்துக்கொள்ளலாம் என்று வசதி செய்யப் பட்டிருக்கிறது. அவர்களுக்கு எவ்வளவு தேவையோ அவ்வளவு வழங்கப்படுகின்ற நிலைதான் இருந்து வருகின்றது.

**திரு. சோ. அழகர்சாமி :** தலைவர் அவர்களே, இப்போது தற்காலிகமாக அப்ரென்டிஸ் டீச்சர்ஸ் என்ற வகையில் 6,500 ஆசிரியர்கள் நியமிக்கப்படவேண்டும் என்று அரசு தெரிவித்திருக் கிறது. ஆனால் சில தனியார் பள்ளிகளில் இன்னும் 3,100 ஆசிரியர்களை நியமிக்காமல் இருக்கிறார்கள் என்று சொல்லப் படுகிறது. ஆகவே, அந்தப் பள்ளிகளின் அங்கீகாரத்தை அரசு ரத்து செய்யுமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அந்தப் பட்டியலிலிருந்துதான் ஆசிரியர்களை நியமிக்க வேண்டு மென்று அரசு சொல்லி வருகிறது. அந்தப் பட்டியலுக்கு அப்பாலிருந்தும் எடுக்க வேண்டுமென்று சிலர் சொல்கிறார்கள். அப்ரென்டிஸ் டீச்சருக்கு நிரந்தரமான வேலை அங்கேயே ஏற்படு மானால், அவர்களை அந்த வேலையில் நியமித்துக் கொள்ளலாம்.

**திரு. மு. சுருளிவேல் :** தலைவர் அவர்களே, தனியார் பள்ளிகளை அரசு மேற்கொள்கின்றபொழுது, அந்தப் பள்ளிகளில் பணியாற்று கின்ற ஆசிரியர்களின் நிலை என்ன?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அப்படி அரசு பள்ளிகளை ஏற்றுக்கொள்கின்றபொழுது ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் இருக்கும் ஆசிரியர்களை அரசாங்கப் பள்ளிகளில் சேர்த்துக்கொள்கிறார்கள். ஆசிரியர் விருப்பத்திற்கு விடப்படும். ஆசிரியர்கள் வேறு இடத்திற்கு வேண்டுமானாலும் போகலாம். பள்ளிகள் மூடப்படுகின்ற சமயங்களில், அங்குள்ள ஆசிரியர்களுக்கு அரசாங்கமே வேறு இடங்களில் வேலைவாய்ப்பு தருகிறது. அவர்களை அரசாங்கப் பள்ளிகளில் சேர்த்துக்கொள் கிறார்கள்.





THIRU K. M. SUBRAMANIAM : Mr. Speaker, Sir, is the Hon. Minister aware that there is a pupil-teacher ratio of about 1–60 in Corporation schools and there are many unemployed teachers? There are also a number of trained teachers in the City seeking employment. When there is this defect, when will the Government be able to help the Corporation to remove this defect?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, இந்தக் குறைபாட்டைப் போக்க வேண்டுமென்றால், அதிகமான நிதிவசதி தேவைப்படுகின்றது. அதிகமான நிதி வசதி ஏற்பட்டால் இதைப் போக்கிவிடலாம். இல்லாவிட்டால் ஒரு ஆசிரியருக்கு 30 மாணவர்களுக்கு அதிகமான மாணவர்களைச் சேர்க்காமல் இருக்கும் கட்டம் ஏற்படும். இந்த ஆண்டுக்கு 82 கோடி ரூபாய் கல்விக்காகச் செலவழிக்க முடியும் என்றால், அதை வைத்துக் கொண்டுதான் நாம் விளையாட முடிகிறது. படிக்க வருகின்ற அத்தனை மாணவர்களுக்கும் நாம் வசதி செய்து கொடுத்தாக வேண்டும். இல்லாவிட்டால் மாணவர்களின் எண்ணிக்கையைக் குறைக்க வேண்டியிருக்கிறது. சில பல ஆண்டுகளில் பள்ளிகளை விரிவுபடுத்தும் முயற்சிகளில் ஈடுபட்டு, தேவையான நிதிவசதி பெற்று, தேவையான ஆசிரியர்களை நியமித்துவிட்டால் இந்தப் பிரச்சினை தீர்ந்துவிடும். அந்த இடைக்காலத்திற்குள் ஏற்படக் கூடிய சிரமங்களைத் தாங்கிக்கொள்ள வேண்டியிருக்கிறது. பட்ஜெட்டில் கல்விக்காக ஒதுக்குகின்ற நிதி அதிகமானால் கூடுதலான ஆசிரியர்களை நியமிக்கின்ற வசதியும் வாய்ப்பும் ஏற்படும். நிதிவசதி ஏற்பட, ஏற்பட இந்தச் சிரமங்களைப் போக்கி விடலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ஏ. எம். இராஜா :** தலைவர் அவர்களே, பல தனிப்பட்டோர் பள்ளிகளில் ஆசிரியர்களை நியமிக்கும்போதும், மாணவர்களை எடுக்கும்போதும் அரசு குறிப்பிட்ட பிற்பட்ட வகுப்பினர், தாழ்த்தப்பட்ட வகுப்பினர்களுக்குள்ள விகிதாசார அடிப்படையில் ஆசிரியர்களை நியமிப்பதும் இல்லை, மாணவர்களை எடுப்பதும் இல்லை. ஆகவே, இதுபற்றி அரசு அந்தப் பள்ளிகள் மீது தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளுமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அரசு குறிப்பிட்டுள்ள விகிதாசாரப்படிதான் எடுக்க வேண்டு மென்று ஆணையிடப்பட்டிருக்கிறது. ஏதாவது ஒரு குறிப்பிட்ட இடத்தில் அப்படிப்பட்ட சம்பவம் நடந்திருக்கிறது என்று குறிப்பிட்டுச் சொன்னால் தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளப் படும்.

[1971 ஜூன் 25

திருமதி த. ந. அனந்தநாயகி : தலைவர் அவர்களே, பிரைவேட் ஸ்கூல்களுக்கு ரெக்னிஷன் கொடுப்பதில் காலதாமதம் ஏற்படுகிறது என்பது குறித்து அரசாங்கத்திற்குப் புகார்கள் வந்திருக்கின்றனவா? அப்படி காலதாமதம் ஏற்படுவதனால் ஆசிரியர்களுக்கு ஒழுங்காக சம்பளம் கொடுக்க முடியாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா? ஆகவே அப்படிப்பட்ட ஸ்கூல்களுக்கு ரெகக்னிஷன் கொடுப்பதிலுள்ள காலதாமதத்தைத் தவிர்க்க என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இந்தப் பள்ளிகளுக்கு அங்கீகாரம் அளிப்பதற்கு அவர்கள் நிறை வேற்ற வேண்டிய நிபந்தனைகளைச் சரியாக நிறைவேற்றியிருக் கிறார்களா என்று பார்த்து அங்கீகாரம் அளிக்கப்பட வேண்டும். அவர்கள் காலாகாலத்தில் விண்ணப்பித்தால் அங்கீகாரத்தையும்
மு.ப. 9–30 காலாகாலத்தில் பெறுவதற்கு வழியேற்பட்க்கூடும். ஆசிரியர் களுக்குச் சம்பளம் சரிவரக் கொடுக்கப்படவில்லையென்றால் அதற்கு என்ன காரணங்கள் என்று பார்க்க வேண்டும். தொடர்ந்து நிர்வாகத்தினர் தவறு செய்து கொண்டிருந்தால் அவர்கள் பட்டு வாடா செய்வதை நிறுத்தி வைத்து அதிகாரிகளுக்கு கொஞ்ச நாளைக்குப் பொறுப்பை தருகிறோம். நிலைமை சீர்திருந்தியவுடன் பிறகு அவர்களிடம் கொடுக்கப்படும்.

திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, தனிப்பட்ட நிர்வாகத் திலுள்ள மதுரை செந்தமிழ்க் கல்லூரியை மூடப்போவதாக அந்த நிர்வாகம் அறிவித்திருப்பது அரசுக்குத் தெரியுமா? அதனை அரசு ஏற்று நடத்துமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, விண்ணப்பம் தந்திருக்கிறார்கள், அது பரிசீலனையில் இருந்து வருகிறது.

விளநகர் திரு. கணேசன் : தலைவரவர்களே, தனியார்கள் நடத்தும் பள்ளிகளில் ஆசிரியர்கள், வேறு பணியாளர்கள், இவர்களை நியமிக்கும் நேரத்தில் ஒரு சில இடங்களில் மாவட்டக் கல்வி அதிகாரியின் குறுக்கீடு இருக்கிறது என்ற புகார் அரசுக்கு வந்திருக்கிறதா? அப்படியானால் அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அப்படிப்பட்ட புகார் எதுவும் வரவில்லை.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, தனியார் பள்ளிகள் ஆரம்பிக்க செக்யூரிட்டி டெபாசிட்டாக ஒரு இலட்சம் ரூபாய், உயர்நிலைப்பள்ளி அமைப்பதற்குக் கட்ட வேண்டியிருக்கிறது. அதனால் சாதாரணமாக நல்ல நிர்வாகத்தில் இருப்பவர்கள்கூட உயர்நிலைப்பள்ளி ஆரம்பிப்பதற்குச் சிரமமாக இருக்கிறது. ஆகவே, அதைத் தயவு செய்து முன்பிருந்த செக்யூரிட்டி தொகை கட்டினால் போதும் என்று உத்தரவிடுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.



1971 ஜூன் 25]

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இப்பொழுது பல உறுப்பினர்கள் எழுப்பிய பிரச்னைகளிலேயிருந்து நன்கு அறியலாம். பல இடங்களில் சம்பளம் கொடுக்காமல் இரண்டு மூன்று மாதம் என்று கடத்திவிடுகிறார்கள். அதுபோன்ற நிலைமைகள் சில பல பள்ளிகளில் ஏற்படுவதால் செக்யூரிட்டி டெப்பாசிட் கட்ட வேண்டுமென்ற வரைமுறை சென்ற இரண்டு ஆண்டுகளாக ஏற்பட்டது. ஒரு இலட்சம் ரூபாய் கட்ட வேண்டு மென்று வற்புறுத்துகிறோம். முக்கிய பொறுப்புள்ளவர்கள், கல்வியிலே நாட்டம் உள்ளவர்கள் அதற்கென்று வைப்பு நிதி வைத்துச் செய்பவர்களுக்கு அது இயலும். சாதாரணமாக வியாபாரம் என்று கருதுபவர்களுக்கு இது கடினமாக இருக் கிறது. கல்வியின் நோக்கத்தைச் சரிவர நிறைவேற்ற வேண்டும் என்பவர்களுக்குச் சிரமம் இல்லை கார்பரேட் பாடியாக ... ஐந்தாறு பள்ளிகள் என்று நடத்துபவர்கள் பாதி கட்டினால் போதும் என்று விதியைத் தளர்த்தி வைத்திருக்கிறோம். அவர் கள் ஒரு இலட்சம் கட்ட வேண்டியதில்லை. ஐந்தாறு பள்ளிகள் நடத்துபவர்கள், கார்பரேட் பாடி ஆக இருப்பவர்கள். அவர்கள் பாதி கட்டினால் போதும் என்று வைத்திருக்கிறோம்.

திரு. எம். சுரேந்திரன் : தலைவரவர்களே, தனியார் பள்ளி களிலே ஆசிரியர்களுக்குச் சரியாக சம்பளம் தருவதில்லை என்ற புகார், பல பஞ்சாயத்து யூனியன் பள்ளிகளிலேயிருந்து புகார்கள் வந்திருக்கிறதா? குறிப்பாக திருச்செந்தூர் பகுதியிலே உடன்குடி, சாத்தான்குளம், ஆழ்வார் திருநகரி போன்ற பள்ளிகளிலே பல மாதங்களாக சரியாகச் சம்பளம் தருவதில்லை என்ற புகார்கள் அரசுக்கு வந்திருக்கிறதா? அப்படியென்றால், அரசாங்கமே எடுத்துக்கொண்டு நேரடியாக அவர்களுக்குச் சம்பளம் தர ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளைப் பொறுத்தவரையில் 85 சதவிகிதம் சம்பளத்திற்கான தொகை அரசாங்கம் தருகிறது. 15 சதவிகிதம் ஊராட்சி மன்றத்தினர் தரவேண்டும். இந்த 15 சதவிகிதத்தைக் கூடத் தர முடியாத நிலையில் சில ஊராட்சி ஒன்றியங்களில் பற்றுக் குறை ஏற்பட்டுத் தகராறுகள் ஏற்படுகின்றன. முன் அட்வான்ஸ் போன்றவைகள் கொடுத்து ஓரளவிற்குச் சரிக்கட்டும் முயற்சியை மேற்கொண்டிருக்கிறது. உறுப்பினர் கூறியதுபோல் திருச் செந்தூர் பகுதிகளில் சில ஒன்றியங்களில் அப்படிப்பட்ட சூழ் நிலைகள் இருக்கின்றன. அவைகளைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. க. உரொ. எட்மண்ட் : தலைவரவர்களே, இந்த ஊராட்சி ஒன்றியத்தினுடைய பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு அரசாங்கத்திலிருந்து ஒதுக்கப்படும் சம்பளத்தை ஊராட்சி ஒன்றியத்தை நடத்துபவர்கள் வேறு வகைகளில் செலவழித்து விடுவதால் ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டிய சம்பளம்

கொடுக்கப்படாமல் இருக்கிறது. ஆகவே, நேரடியாகக் கல்வித் துறை மூலம் அந்தச் சம்பளம் கிடைக்க அரசு வழிவகை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, ஏற்கனவே கல்வி மானியத்தொகை என்று கொடுத்து வந்தோம். அவைகளை வேறு பலவகைகளில் திருப்பிக்கொண்டிருக்கிறார்கள் என்று சென்ற ஆண்டு திட்டவட்டமாக கல்விக்குத்தான் செலவழிக்கப்பட வேண்டும், கல்வித் தலைப்பில்தான் செலவழிக்கப்பட வேண்டும், வேறு எந்தத் துறையிலும் திருப்பி விடக்கூடாது என்ற உத்தரவு சென்ற ஆண்டு இடப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையிலே சில பல ஒன்றியங்களிலே தகராறுகள் வராமல் இருப்பதற்கு அந்தத் தலைப்பைத் தவிர வேறு தலைப்புக்குத் திருப்பி விடக்கூடாது என்று உத்தரவு போட்டதுதான் காரணம்.

திரு. ப. முத்துசாமி: தலைவரவர்களே, சில தனியார் பள்ளிகளில் திறமை மிக்க மாணவர்களை மட்டுமே சேர்த்துக்கொள்வதாகத் தெரிகிறது. ஆகவே, சாதாரண மாணவர்கள் சேருவதற்குச் சிரமப்படுகிறார்கள். ஆகவே, அரசாங்கம் அத்தகைய சூழ்நிலைகளைத் தவிர்க்கக்கூடிய நடவடிக்கை ஏதேனும் எடுக்குமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, இப்படிப்பட்ட நிலைமைகளை வைத்துச் சமாளிக்க வேண்டித்தான் இருக்கிறது. வேறு உரிய முறைகளைச் செய்வதன் மூலம் அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொண்டுதான் வருகிறது.

திரு. வ. சின்னசாமி: தலைவரவர்களே, பஞ்சாயத்து யூனியனில் பணியாற்றும் ஆரம்பப்பள்ளி ஆசிரியர்கள் தேவையில்லாமல் மாற்றப்படுகிறார்கள். எனவே, அப்படி மாற்றுகின்ற அதிகாரத்தைப் பஞ்சாயத்து யூனியனிலிருந்து எடுத்துவிட அரசு ஆலோசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, இதுபற்றிய குறிப்பு எதுவும் அரசாங்கத்திற்கு வரவில்லை. மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் கூறிய அந்த யோசனையைப் பற்றி எனக்கும் அந்த எண்ணம் உண்டு. மாண்புமிகு உறுப்பினர்கள் அதை ஆதரித்தால் அதை நடைமுறைக்குக் கொண்டுவர எண்ணமிருக்கிறது. கல்வி மானியக் கோரிக்கை வரும்பொழுது மன்ற உறுப்பினர்கள் கருத்தைத் தெரிவிக்கலாம். மற்றத் துறையிலே மாற்றம் செய்யும்பொழுது இலாக்கா செய்கிறது. ஆசிரியர்களைப் பொறுத்த வரையில், பால் குழு அமைந்திருப்பதால் சங்கடங்கள் ஏற்படுகின்றன. அங்கத்தினர்கள் கல்வி மானியக் கோரிக்கை வரும்பொழுது கருத்தைத் தெரிவித்தால் அதன்மீது நடவடிக்கை எடுக்க ஆயத்தமாக இருக்கிறேன்.

புலவர் சி. பழனிச்சாமி: தலைவரவர்களே, ஆசிரியர்கள் ஏராள மானவர்கள் இந்த நாட்டிலே வேலையில்லாமல் இருக்கிறார்கள். ஆகவே, அவர்களுக்கு வேலை கிடைக்கும் வரையில் ஆசிரியர்களை



மேலும் உற்பத்தி செய்யாவண்ணம் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளைச் சில ஆண்டுகளுக்காவது மூடுவதற்கு அரசுக்கு எண்ணமுண்டா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, அந்தக் கருத்தை மனத்தில் வைத்துக்கொண்டுதான் ஓரளவிற்கு ஆசிரியர்களை உருவாக்குகிற செக்ஷன்களை, பிரிவுகளைக் குறைத்துக் கொண்டு வருகிறோம். இந்த ஆண்டு ஓரளவிற்குக் குறைத்திருக்கிறோம்.

THIRU M. A. LATHEEF: Mr. Speaker, Sir, there has been a serious complaint against the teaching staff working in the hilly areas particularly those who are working in the schools run by the Panchayat Unions. For example, in my constituency, Javadu Hills—which I had toured recently in a village known as Malai Thirapattur a school is run by the Panchayat Union. The school has consistently remained closed for about two years and the whereabouts of the teacher is known to the officials only and not to the villagers and the people there. But regular payment of salary is made to the teacher. The record shows that the teacher is receiving salary regularly every month but the school remains closed. At the same time in the case of the schools run by the Forest Department in the hilly areas . . . .

MR. SPEAKER: The hon. Member should put a question. Q. No. 50.

தனியார் பள்ளி ஆசிரியர்களின் பணிப் பாதுகாப்பு.

* வினா—திரு. க. சுப்பு: மாண்புமிகு கல்வி—உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தனியார் தொடக்கப்பள்ளி ஆசிரியர்களின் பணிப்பாதுகாப்புக்காக அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தனியார் தொடக்கப் பள்ளி ஆசிரியர்களின் பணிப்பாதுகாப்பு சம்பந்தமாக ஆரம்பப் பள்ளிகளுக்கான விதிகளில் தேவையான பாதுகாப்பு வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன.

திரு. கே. டி. கே. தங்கமணி: சார், தனியார் பள்ளிகளில் இருக்கும் ஆசிரியர்கள் காரணமில்லாமல் டெர்மினேட் செய்யப்படுகிறார்கள். இன்றைக்கு அவர்கள் அப்பீல் செய்தாலும்கூட அந்த உத்தரவு மதிக்கப்படுவதில்லை. ஆகவே, மாவட்ட கலெக்டர் போன்றவர்கள்

"This department must be armed with suitable powers to have effective control over the aided institutions to enforce the orders passed by the concerned authority."

என்பதுபோன்ற ஆலோசனைகளைக் கொடுத்திருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :* தலைவரவர்களே, இந்த ஆசிரியர்களுடைய பணிப் பாதுகாப்புக்குத் தேவையானவற்றை அளிக்க சிபாரிசுகளை டாக்டர் பால் குழுவினர் தந்திருக்கிறார்கள். அரசு அதைப் பரிசீலித்துக்கொண்டு வருகிறது. பரிசீலனை முடிந்தபிறகு, நடவடிக்கைகளை மேற்கொள்ளும்பொழுது மேலும் தக்க பாதுகாப்பு ஏற்படுவதற்கு வழிவகை பிறக்கும். ...

*திரு. ஜே. ஜேம்ஸ் :* தலைவரவர்களே, கன்னியாகுமரி ஜில்லாவில் ஆரம்பப் பள்ளிகளை அரசாங்கம் நடத்தி வருகிறது. இப்பொழுது படிப்படியாக உயர்நிலைப் பள்ளிகளாக உயர்த்தி வருகிறோம். இந்த அரசாங்கம் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக மாற்றும்பொழுது பக்கத்திலுள்ள தனியார் உயர்நிலைப் பள்ளிகளில் 10 ஆண்டுகள், 15 ஆண்டுகள் பணியாற்றிய ஆசிரியர்கள் பாதிக்கப்படுகிறார்கள். அவர்களுக்கு வேலை இழப்பு ஏற்படுகிறது. ஆகவே, அம்மாதிரி வேலை இழப்பு ஏற்படும்பொழுது அந்த ஆசிரியர்களை அரசாங்கப் பள்ளிகளில் நியமித்து அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :* தலைவரவர்களே, அனுமதி வழங்கும்பொழுது கூடுமான வரையில் பக்கத்திலிருக்கும் பள்ளிகளில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கையோ, ஆசிரியர்களோ பாதிக்கப்படாமல் இருக்க வேண்டுமென்றுதான் அனுமதி வழங்கப்படாமல் சிலவிடங்களில் மறுக்கப்படுகிறது. ஏனென்றால் பக்கத்துப் பள்ளிகளைப் பாதிக்கும் என்ற காரணத்தால். சிலவிடங்களில் எதிர்பாராத வகையில் ஏற்பட்டு, ஏற்கனவே உள்ள பள்ளிகளில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கை குறைந்து ஆசிரியர்களின் எண்ணிக்கை குறையும் நிலை ஏற்பட்டால் மாவட்ட கல்வி அதிகாரியின் கவனத்திற்கு அது கொண்டு வரப்பட்டால் அவர்களுக்கு மாற்று வேலை தந்து அவர்களை ஏற்றுக்கொள்ள வழிவகைகளைச் செய்யலாம்.

DR. H. V. HANDE : It has been brought to the notice of Government that in several instances in spite of the Government passing orders rescinding the orders of management, the management had not obeyed those orders. I had myself brought to the notice of the Hon. Minister some instances. Because of this anamolous situation, will the Hon. Minister tell us how exactly he is going to tackle such sort of flouting of orders of Government and what is the machinery by which he would see that orders passed by Government regarding security of teachers is invariably obeyed at the management level ?

*மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :* தலைவர் அவர்களே கல்வி அதிகாரிகளுடைய ஆணைகளைத் தனியார் பள்ளி நிர்வாகிகள் ஏற்றுக் கொள்ளாமல் இருப்பார்களானால் நான் முதலில் சொன்னபடி அவர்களை வற்புறுத்துகிறோம். அப்படியும் அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்றால் அரசாங்கம் இன்று செய்யக் கூடியது அவர்களுக்கு மானியத்தை ரத்து செய்வது அல்லது





அங்கீகாரத்தை ரத்து செய்வது என்பதுதான் முடியும். அவர்கள் ஏற்றுக்கொண்டுதான் ஆக வேண்டுமென்று சட்டத்தில் இல்லை. இதைப்பற்றியெல்லாம் ஆராய்ந்த குழுவின் பரிந்துரைகள் பரிசீலனையில் உள்ளன. அதற்குச் சட்ட வடிவம் கொடுத்த பிறகு தீவிரமாகவும், வலிவோடும் பிரச்சினைகளைத் தீர்க்கலாம். இப்போதுள்ள சட்டப்படி எந்த அளவுக்கு நீதி வழங்க முடியுமோ, அந்த அளவுக்கு வழங்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

*திரு. ஆர். பொன்னப்ப நாடார் :* இப்போதிருக்கிற விதிமுறைகளின்படி ஆசிரியர்களின் பாதுகாப்புக்கு உகந்ததாக இல்லையென்ற புகார் இருக்கிறது. ஆகையால் இந்த விதிமுறைகளை மாற்றியமைத்து ஆசிரியர்களை ஒரு சில குறிப்பிட்ட காரணங்களுக்காகத்தான் மாற்றுவதற்குத் தனியார் பள்ளிகளுக்கு உரிமையுண்டு என்று ஆணை பிறப்பிக்கப்படுமா?

*மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :* நான் முதலிலேயே சொன்னபடி பல்வேறு அதிகாரப் பற்றற்றவர்களும், கல்வித் துறையில் நல்ல ஆர்வம் கொண்டவர்களும் கொண்ட குழு இதைப் பற்றி எல்லாம் ஆராய்ந்து நல்ல பரிந்துரைகளைச் செய்திருக்கிறார்கள். அதனை அரசாங்கம் பரிசீலித்துக்கொண்டு வருகிறது. சட்டவடிவம் கொடுத்த பிறகு நிறைவேற்றப்பட்டு நடைமுறைப் படுத்தப்படும்.

### *Survey on incidence of Cancer in Kanyakumari District*

*51 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Public Health be pleased to state whether any door-to-door survey on incidence of Cancer is to be undertaken in Kanyakumari District?

*மாண்புமிகு திரு. க. அன்பழகன் :* கன்னியாகுமரி மாவட்டத்தில் புற்றுநோய் பரவியுள்ளது குறித்து அரசு ஆய்வு எதுவும் மேற்கொள்ளப்படுவதற்கு இல்லை. ஆனால், கன்னியாகுமரி மாவட்டம் நெய்யூரில் உள்ள தனியார் மருத்துவ நிறுவனமாகிய 'அனைத்து நாடுகள் புற்றுநோய் நிலையம்' ஓர் ஆய்வை மேற்கொண்டுள்ளது.

*திரு. என். டென்னிஸ் :* நெய்யூரில் செயல்பட்டுக்கொண்டிருக்கும் இன்டர்நேஷனல் கான்சர் சென்டரின் சேவை இன்று பயன்பட்டுக் கொண்டு வருகிறதா?

*மாண்புமிகு திரு. க. அன்பழகன் :* அதனுடைய சேவை ஓரளவுக்கு உட்பட்டதாக இருக்கிறது. மாவட்டம் முழுவதும் சேவை செய்யத்தக்க அளவுக்கு வசதி வாய்ப்பு இருக்குமென்று அரசாங்கம் கருதவில்லை.

DR. H. V. HANDE : Is it not a fact that recently this Institute was to have conducted a similar survey even in Kancheepuram? Are the Government aware of the fact that more

persons may be given substantial relief if proper assessment is made at the pre-cancerous stage itself? Will the Government come forward to tell this Institute or some other organisation that they should conduct some sort of random or door-to-door survey to detect pre-cancerous cases. Because it is not treated at the pre-cancerous stage, the patient comes to treatment at a late stage, wastes his property and by the time the patient is dead, the whole property is also lost. Will the Government give some indication as to how exactly they are going to combat this disease at the pre-cancerous stage?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, அங்கத்தினர் அவர்கள் நல்வாழ்வுத் துறை மானியத்தின் மீது பேசப்பட வேண்டிய கருத்துக்களை இந்தக் கேள்வியின்போது எழுப்பி இருக்கிறார்கள். அந்த மானியத்தின் மீது பேசுவார்கள் என்றும் எதிர்பார்க்கிறேன். காஞ்சிபுரத்தில் நடைபெறுவது அந்த வட்டார மக்கள் புற்று நோய்க்கு ஆளாகிற நிலைமைகளை ஆராய்ந்து அறிகிற பரிசோதனைக் கட்டத்தில்தான் நடைபெறுகிறது. அதைப்பற்றி ஆராய்ந்தால் மட்டும் போதாது, நோய் இருக்கிற அறிகுறியைக் கண்டு தெரிவித்தால் மட்டும் போதாது, அதற்கு சிகிச்சை அளிக்கப்பட வேண்டுமென்ற ஆலோசனையும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. சிகிச்சைக்கான வசதிகளைப் பெருஞ் செலவில் மேற்கொள்ள வேண்டியதாக இருக்கிறது. நெய்யூரில் இயங்குகின்ற நிலையம் அரசாங்க மேற்பார்வையில் இயங்குவது அல்ல.

திரு. ஜே. ஜேம்ஸ்: கன்னியாகுமரி ஜில்லாவிலுள்ள நெய்யூரில் செயல்பட்டு வருகிற இண்டர்நேஷனல் கான்சர் நிலையத்திற்கு நமது அரசாங்கம் ஏதாவது கிராண்ட் கொடுக்கிறதா? இல்லையென்றால் இனிமேலாவது கிராண்ட் கொடுத்து உதவ அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: இந்தக் கேள்விக்கு விடை இப்போது குறிப்பில் இல்லை. ஆனால் பல்வேறு தனியார் நிறுவனங்கள் அவர்களுக்குக் கிடைக்கிற நல்ல நன்கொடைகளைக் கொண்டுதான் இந்தக் கடமைகளைச் செய்கின்றன. மேலும் தனியார் நிறுவனங்கள் இதுபோன்ற நன்கொடைகளைப் பெற்று சுகாதாரத் துறையில் பணியாற்ற முன்வருமானால் இந்த அரசாங்கம் வரவேற்கக் காத்திருக்கிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி: புற்றுநோய் முற்றிய பிறகுதான் பல பேருக்கு தெரிகிறது. ஆரம்ப காலத்திலேயே நோயைக் கண்டுபிடித்து சிகிச்சை தருவதற்கு மாவட்ட ஆஸ்பத்திரிகளில் வசதிகள் செய்து கொடுக்க அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தமிழக அரசு பல்வேறு துறைகளில் பரவலாக ஏற்பட்டு வருகிற பல்வேறு நோய்களைப் பற்றி வெவ்வேறு கட்டத்தில் ஆராய்ந்து தடுப்பதிலே தன்னுடைய கடமைகளை நிறைவேற்றி வருகிறது. புற்று நோய் வருவதைத் தடுப்பதற்கு எதனை மேற்கொள்வது என்பது பற்றி இது வரை எந்தவிதமான கருத்தோ, ஆலோசனையோ உலகத்தின் எந்தப் பகுதியில் இருந்தும் கிடைக்கவில்லை. புற்று நோய் ஏற்பட்டால் அதற்கான மருத்துவம் அளிக்க பெரிய சாதனங்கள், விஞ்ஞானக் கருவிகள் ஆகியவற்றை பெரும் முதலீடு காரணமாகவும் வெளிநாட்டு செலாவணி தேவையினாலும் வாங்க முடியாத நிலை இருக்கிறது.



திரு. ஆர். பொன்னப்ப நாடார்: கன்னியாகுமரி ஜில்லாவில் நகரத் தலைமை மருத்துவ மனையில் இந்தப் புற்று நோய் சிகிச்சைக்கு வேண்டிய ஏற்பாடுகள் இதுகாறும் இல்லை. இனியாவது துவங்க அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: இது கன்னியாகுமரி ஜில்லாவில் மட்டுமல்லாது தமிழகத்தின் மாவட்ட மருத்துவ மனைகள் பலவற்றில் இல்லை. அதற்கான உயர்ந்த கருவிகளை வெளிநாட்டுச் செலாவணி மூலம்தான் தமிழகத்திற்குக் கொண்டு வரமுடியும். இதற்கு பெருநிதி செலவாகிறது என்பதோடு மட்டுமல்லாமல் வெளிநாட்டுச் செலாவணிக்கு மத்திய அரசின் அனுமதி தேவையாக இருக்கிறது.

திரு. நா. வீராசாமி: கன்னியாகுமரி ஜில்லாவில் இருக்கக் கூடிய புற்று நோய் ஆராய்ச்சி நிலையமானாலும் சரி, அல்லது காஞ்சிபுரத்தில் உள்ள ஆராய்ச்சி நிலையமானாலும் சரி, புற்று நோய் எதனால் வருகிறது என்று ஏதாவது ஆராய்ச்சி செய்து அரசாங்கத்திற்கு அறிவித்திருக்கிறார்களா? சிலபேர் பீடி பிடித்தால் வருகிறது, சில பேர் புகையிலை போட்டால் வருகிறது என்று கூறிக்கொண்டிருக்கிறார்கள். இதைப் பற்றி ஆராய்ந்து அறிக்கை கொடுத்திருக்கிறார்களா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: திட்டவட்டமாக அறிக்கை இல்லை. உடம்புக்கு எரிச்சல் தருகிற பல்வேறு காரியங்கள், எரிச்சல் காரணமாக புண்களாகி பின்னால் புற்று நோயாக வளர வாய்ப்பு இருக்கிறது என்று கருதப்படுகிறது.

திரு. ஏ. ஆர். சுப்பையா: சித்த வைத்தியத்தில் இதற்குப் பரிகாரம் இருப்பதாக தெரிகிறது. அதுபற்றி ஆராய்ச்சி செய்யப்பட்டு வருகிறதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: சித்த மருத்துவத்தில் இதற்கான மருந்துகள் இருக்கின்றன என்று அழுத்தமாக நம்பப்படுகிறது. ஆனால் தக்க பரிசோதனை இதுகாறும் நடைபெறவில்லை.

திரு. கோவை செழியன்: புற்று நோய் உடலில் ஆரம்பித்து 20 நாட்களுக்குள் உடலில் புற்று நோய் இருக்கிறதா இல்லையா என்று கண்டுபிடிக்கக்கூடிய கருவி பூனாவில் ஒரு தனிப்பட்ட

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவரவர்களே, இந்தக் கேள்விக்கு விடை மிக தீவிரமாக பரிசீலிக்கப்படவேண்டிய ஒன்றாகும். ஏனெனில் அது ஏற்கெனவே எடுக்கப்பட்ட முடிவு. ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் ஒன்றுதான் என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. அந்த முறையில் பெரும் அளவுக்கு நிறைவேற்றப்பட்டிருக்கிறது. இன்னும் முழு அளவு நிறைவேற்றப்படவில்லை. இதை முழு அளவில் நிறைவேற்ற ஆகும் செலவை கணக்கிட்டுப் பார்க்கிற போது ஒரு ஒன்றியத்திற்கு ஒன்று அமைப்பதே கடினமாக இருக்கிறது. இரண்டு அமைக்கப்பட வேண்டுமென்று சொன்னால், அதற்காக வேண்டி தனியார் யாராவது ஏறத்தாழ 1 லட்சம் அளவுக்கு பணம் கொடுக்க முன்வருவார்களேயானால், அதைப் பற்றி யோசித்து அரசாங்கம் முயற்சி எடுத்துக்கொள்ளும்.

*Mobile Courts*

* 53 Q.—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) the places in the State where Mobile Courts have been constituted; and

(b) whether there is any proposal to extend the scheme to other places in the State?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:**

(அ) சென்னையிலும் மதுரையிலும் அமைந்துள்ளன.

(இ) கோயம்புத்தூரில் போக்குவரத்துத் தனி இயல் ஊர்தி நீதி மன்றம் ஒன்று அமைப்பதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையிலுள்ளது.

THIRUMATHI: T. N. ANANDANAYAKI: Mr. Speaker, Sir, will the Hon. Minister tell us whether there is any benefit by these mobile courts as the fines are collected on the spot and whether the amount is higher than that collected in the Courts?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தலைவரவர்களே, அது மக்களின் சௌகரியத்தைக் கருதி அமைக்கப்பட்டிருக்கிறது. இதிலே லாப நஷ்டக் கணக்கு பார்ப்பதற்கு இல்லை.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** சார், மொபைல் கோர்ட்டைப் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். மதுரையில் மொபைல் கோர்ட் இருக்கிறது. அதே போல், மதுரையிலும் ஹைகோர்ட்டின் விசேஷப் பகுதி ஆரம்பிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** அது பற்றி அரசாங்கம் உயர்நீதி மன்றத்தோடு பரிசீலித்து வருகிறது.

**திரு. என். கணபதி:** தலைவரவர்களே, இந்த நடமாடும் நீதி மன்றங்கள் போக்குவரத்து நெருக்கடியான சாலையில் நிறுத்தப்படுகிறபடியால், போக்குவரத்துக்கு இடைஞ்சல் ஏற்படுகிறது.





ஆகவே, இந்த நடமாடும் நீதிமன்றங்களை போக்குவரத்துக்கு பாதகம் இல்லாவகையில் நிறுத்துவதற்கு அரசாங்கம் உத்தரவிடுமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** வழக்கறிஞர்களுக்கு இடைஞ்சல் இருக்காது என்று கருதுகிறேன்.

**திரு. பெ. மலைச்சாமி:** தலைவரவர்களே, இவை எந்த வழக்குகளை முடிவு செய்கின்றன என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** ஒவ்வொரு நீதி மன்றத்திற்கும் ஜூரிஸ்டிக்ஷன் பிரித்துக் கொடுத்து இருக்கிறோம். பொதுவாக டிராபிக் அஃபென்சுகள் அதிகமாக வருகின்றன. சொசைட்டி ஃபார் தி பிரிவென்ஷன் ஆப் க்ருயல்டி டு அனிமல்ஸ் அண்டு பேர்ட்ஸ் கண்டுபிடித்து கொண்டு வரும் இது போன்ற குற்றங்கள் இதிலே வருகின்றன.

DR. H. V. HANDE: Mr. Speaker, Sir, is the Hon. Minister aware of the fact that in several instances because these mobile courts have been stationed in a particular place, they feel that they will have to have willy nilly some cases mercilessly some cases just to fill up cases-of course the Hon. Minister say 'no'-and will the Hon. Minister assure us that he will consider the problem which I have posed sympathetically and have it investicated?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** இதற்கும் நீதிமன்றத்திற்கும் சம்பந்தம் இல்லை. ஆனால், அங்கே வருபவர்களை குற்றவாளிகளாக்க முன் வருவார்களானால், அதைக் காவல் துறையினரைக் கேட்கவேண்டும்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** தலைவரவர்களே, அமைச்சரவர்கள் பதில் கூறும் போது மதுரையிலும் உயர்நீதி மன்றத்தின் ஒரு அங்கம் துவக்க ஏற்பாடாகி இருக்கிறது என்று சொன்னார்கள். அது சம்பந்தமாக ஹைக்கோர்ட்டிலிருந்து ஏதாவது அபிப்பிராயம் தெரிவித்து இருக்கிறார்களா, அப்படி இருந்தால் அதை தெளிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** ஏற்பாடாகிறது என்று நான் சொல்லவில்லை. அரசாங்கம் உயர்நீதி மன்றத்தோடு பரிசீலித்து வருகிறது என்று தான் சொன்னேன். உயர்நீதி மன்றத்தினுடைய கருத்து தொடர்ந்து இந்த ஆண்டு மட்டுமல்ல, பல ஆண்டுகளாக தெரிவித்து வருகிறார்கள். ஒரு இடத்தில் இல்லாமல் பல இடத்தில் உயர்நீதி மன்றம் இருக்குமானால் சௌகரியப்படாது என்று சொல்கிறார்கள். அதோடு, வழக்கறிஞர்கள், சிறப்பான வழக்கறிஞர்கள் சென்னையில் இருப்பது போல் மற்ற இடங்களில் இல்லை என்று சொல்கிறார்கள். அதோடு லைப்ரரி ஃபெசிலிடீஸ் போதுமான அளவுக்கு உருவாக்குவது கஷ்டம் என்று சொல்கிறார்கள். இவைகள் எல்லாம் சாதாரண கஷ்டம் என்று அரசாங்கம் கருதுகிறது. மக்கள் நலன் கருதி உயர் நீதிமன்றம் வேறு இடங்களில்

செயல்படுவதற்கும் ஒரு வழி வகுக்க வேண்டுமென்று அரசாங்கம் கருதுகிறது. ஆனால் உயர்நீதி மன்றத்தின் கருத்தின் அடிப்படையில் தான் அந்தத் திட்டம் உருவாக்கப்படும்.

திரு. நா. வீராசாமி : தலைவரவர்களே, இந்த நடமாடும் நீதி மன்றங்கள் இருப்பதால் இப்போது குற்றவாளிகள் குறைந்து வருகிறார்கள். எனவே ஒவ்வொரு மாவட்டத்திலும் இப்படி ஒரு நடமாடும் நீதி மன்றம் உருவாக்கித் தர இந்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அரசாங்கத்தைப் பாராட்டிப் பேசியதற்கு நன்றி.

THIRU M.A. LATHEEF : Mr. Speaker, Sir, the old Tirupathur taluk in North Arcot District has been bifurcated into Vaniambadi and Tirupathur taluks. In view of the new taluk of Vaniambadi will the Hon. Minister for Law consider starting of a District Munsif Court at Vaniambadi?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : புதிய நீதிமன்றங்கள் அமைப்பதற்காக ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே கனம் உறுப்பினர் அவர்கள் தெரிவித்த கருத்தை அந்தக் குழுவுக்கு எழுதி அனுப்புவார்களேயானால்; அவர்கள் பரிந்துரை செய்வதற்கு வாய்ப்பாக இருக்கும்.

* 54 *Q.*—THIRU S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minister for Industries be pleased to state whether Mobile Courts have been set up in Madras City to try cases under Prevention of Cruelty to Animals Act?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஆம்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Is the Government aware of the fact that the fines imposed by the Mobile Court are harsh and excessive and the concerned persons have to pay them at once and because of that, many of them are put to a lot of trouble?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அப்படியெல்லாம் இல்லாமல் பார்த்துக் கொள்ளத்தான் அங்கத்தினர் போன்ற வழக்குரைஞர்கள் உதவி செய்ய வேண்டும்.

THIRU K. M. SUBRAMANIAM : Is it a fact that many poor astrologers using parrots have been prosecuted recently by the S.P.C.A. in the City of Madras and whether that has been brought to the notice of the Government?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, அது பற்றிய விவரம் என்னிடத்தில் இல்லை பட்சிகளுக்காக வாதாடிய அங்கத்தினருடைய கருத்து நீதிபதிகளுக்குத் தெரிவதும் நல்லது என்று கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியோடு [illegible]



### *Buckingham Canal Scheme*

* 55 *Q.*—THIRU N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Public Works be pleased to state the present stage of **the Buckingham Canal excavation scheme?**

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இத் திட்டம் மத்திய அரசின் ஒப்புதலுக்கு வைக்கப்பட்டிருக்கிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி : இந்த பக்கிங்காம் கால்வாய்த் திட்டமானது பத்தாண்டுக் காலமாக தாமதப்பட்டு, சட்ட மன்றத்திலே விவாதிக்கப்பட்டு வருகிறது. இப்பொழுது மத்திய சர்க்காருக்கு அனுப்பியிருப்பது எவ்வளவு நாளில் பதில் வர வேண்டும் என்று எழுதியிருக்கிறது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இந்தப் பிரச்சினை பல ஆண்டு காலமாக தாமதப்பட்டிருப்பது என்பது உண்மை தான். 1958-ல் அமைக்கப்பட்ட உயர் அதிகாரத் தொழில் நுட்பக் குழு, கால்வாயைப் பெரிய அளவில் அகலப்படுத்தி, ஆழப்படுத்த 470 லட்சம் ரூபாயில் ஒரு திட்டம் வகுக்கப்பட்டு இந்திய சர்க்காருக்கு அதன் இசைவுக்கு அனுப்பப்பட்டது. ஆனால் அதற்கு இசைவு கொடுக்கவில்லை. அவர்கள் காஸ்ட் பெனிபிட் ரேஷியோ ஸ்டடி செய்து ஒரு அறிக்கை கொடுக்க வேண்டும் என்று சொல்லிற்று. அதன்படி பார்த்ததில் செலவும் பயனும் 1:2:46 என்ற அளவில் இருந்தது, மறுபடியும் ஆந்திரா பக்கிங்காம் கால்வாயையும், தமிழ்நாடு கால்வாயையும் ஒருங்கிணைந்த திட்டமாகச் செய்ய வேண்டும் என்று வற்புறுத்தப்பட்டது. 1968-ல் இந்திய அரசு நியமித்த உள்நாட்டு நீர்வழிப் போக்குவரத்துக் குழு தனது அறிக்கையை அனுப்பியது. தமிழ் நாடு, ஆந்திர மாநிலங்களைச் சேர்ந்த பிரதிநிதிகளைக் கொண்ட ஆய்வுக் குழு ஒன்று அமைக்கப்படுவதற்கு இக் குழு தனது அறிக்கையில் பரிந்துரை செய்துள்ளது. தற்போது ஆய்வுக் குழுவில் சேர்ப்பதற்காக இவ்வரசின் பிரதிநிதி ஒருவரைத் தெரிவிக்குமாறு இந்திய அரசு இந்த அரசைக் கேட்டுக் கொண்டுள்ளது. நம்முடைய பொதுப்பணித் துறைச் செயலாளரையோ அல்லது மேற்பார்வை பொறியாளரையோ நியமிப்பது அரசின் ஆய்வில் உள்ளது.

திரு. எம். ஆர். கண்ணன் : சார், இந்தக் கால்வாயின் போக்குவரத்தைப் பொருத்து கட்டை விலை உயர்வு கூட இருக்கிறது. மழை காலங்களில் நகரத்தை அடுத்துப் பலவிடங்களில் கரைகள் இல்லாததால் கால்வாய் தண்ணீர் தேங்கி, ஸ்லம்களில் போக்குவரத்து பாதிக்கப்பட்டு மக்கள் அவதிப்படும் நிலை இருக்கிறது. ஆகவே, இதற்கு உடனடியாக கரை அமைக்க உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டுள்ள குறைபாடுகளைத் தவிர்க்கத்தான் 67-ல் 40 லட்ச ரூபாயில் வேலைகளுக்கு அனுமதி கொடுக்கப்பட்டது. 44 லட்ச ரூபாய் அளவில் வேலைகள் முடிந்த பிறகு, அந்தக் கால்வாயின் ஆழத்தை இன்னும் இரண்டு அடி அதிகப்படுத்த மத்திய சர்க்கார் அனுமதிக்காக அனுப்பப்பட்டிருக்கிறது மத்திய சர்க்காரிடமிருந்து அனுமதி வந்தவுடன் வேலை துவங்கப்படும்.

**திரு. கே. ஏ. வகாப் :** தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் இந்தத் திட்டம் செயல்பட காலதாமதம் ஆகிறது என்று சொன்னார்கள். அதிலேயிருந்து வரும் துர்நாற்றம் சுகாதாரக் கேடாக இருப்பதால், துர்நாற்றத்தை முதலில் அகற்றுவதற்கு ஆன முயற்சிகளைச் செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** அது பற்றி விளக்கம் பெறத்தான் ஆய்வுக் குழு ஒன்று அமைப்பதும், பரிசீலனை செய்வதும், மத்திய சர்க்கார் அனுமதி பெற்றவுடன் மேற்கொண்டு வேலைகள் செய்யலாம்.

**திரு. ஏ. எம். இராஜா :** தலைவர் அவர்களே, இந்த பக்கிங்காம் கால்வாய் திட்டத்திற்காக மத்திய சர்க்காரிடம் பல ஆண்டுகளாக நாம் வேண்டிக் கொண்டிருக்கிறோம். அண்டை மாநிலமாகிய மைசூர் மாநிலத்தில் மத்திய சர்க்காருடைய ஒப்புதலையில்லாமல், ஒரு அணைக்கட்டையே கட்டும்போது, நாம் மத்திய சர்க்காரின் ஒப்புதலை எதிர்பாராமலோ அல்லது ஒப்புதல் கிடைக்கும் என்று எதிர்பார்த்தோ, இந்தத் திட்டத்தை நிறைவேற்ற ஏன் ஏற்பாடு செய்யக் கூடாது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** நான் ஏற்கனவே குறிப்பிட்டதுபோல, இந்தத் திட்டத்தை நிறைவேற்ற 1958-லேயே கேட்கப்பட்டது. ரூ. 470 இலட்சம் செலவில் திட்டம் இருந்தது. புள்ளி விவரங்கள் படி இப்பொழுது எவ்வளவு ஆகுமோ, இது நிதி பற்றிய பிரச்சினை. அதிகாரம் பற்றியது அல்ல. மத்திய சர்க்காரிடமிருந்து நாம் நிதி பெற வேண்டியிருக்கிறது.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** சார், இது ஒரு முக்கியமான திட்டம். விலைகள் கூட இதனால் குறைகிறது. ஆகவே இதை அடுத்த ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்க முயற்சி செய்யப் படுமா? அந்த வகையில் காலதாமதம் தவிர்க்கப்படுமா? அவர்களிடமிருந்து பதில் வரவில்லை என்றால், வற்புறுத்தி பதிலைப் பெறுகின்ற வழியைத் தேடுவார்களா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** பல கட்டங்களில் பல விளக்கங்களைக் கேட்டார்கள். மத்திய சர்க்காரின் நல்லெண்ணத்தை அடிப்படையாகக் கொண்டு செய்ய நம் அரசு வற்புறுத்தி வருகிறது. இப்பொழுது நம் அரசாங்கத்தின் பிரதிநிதி ஒருவரை நியமிக்க வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். விரைவில் முடிவு ஏற்படும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

### *State Civil List*

* 46 Q.—THIRU A. SWAMIDHAS:
THIRU N. DENNIS: Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) when the last Civil List for the State was published; and

(b) the steps taken to publish a new list?



**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :**

(அ) தமிழ்நாடு அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரிகளின் காலாண்டுப் பட்டியல் கடைசியாக 1969-இல் வெளியிடப்பட்டது.

(இ) 1—4—1970 வரைக்கும் திருத்தப்பட்ட அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரிகளின் காலாண்டுப் பட்டியலும், 1—1—1968 வரைக்கும் திருத்தப்பட்ட ஆண்டு நாட்டியல் பட்டியலும் (Civil list) தொகுக்கப்பட்டு அச்சிடப்பட்டு வருகின்றன.

**திரு. ஏ. சுவாமிதாஸ் :** தலைவர் அவர்களே, கெஜடெட் பதவிகளுக்கு உயர்வு அளிக்கும்போது சீனியாரிடிபடியே கொடுக்கப் படுகிறதா ? தகுதி திறமை என்று வைத்துக் கொண்டு அளிக்கப் படுகிறதா? தகுதி திறமை என்றால் அதிலே பல ஊழல்கள் நடைபெறக் காரணமாக இருப்பதால், சீனியாரிடியையே கணக்கில் வைத்துக் கொண்டு உயர்வு கொடுக்கப் படும் என்று முடிவு செய்வார்களா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** சிவில் லிஸ்ட் எப்பொழுது வெளியிடப்பட்டது என்பது பிரதானக் கேள்வி. லிஸ்ட் அச்சு செய்வதில் இது போன்ற விஷயங்கள் பார்க்கப் படுவதில்லை.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** அச்சடிக்கப்பட்ட சிவில் லிஸ்ட் அங்கத்தினர்களுக்கு வினியோகம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அதைச் செய்யலாமா என்று யோசிக்க வேண்டும்.

**திரு. பெ. மலைச்சாமி :** தலைவர் அவர்களே, சம்பளத்தில் மட்டும் வேறுபாடு வைத்துக் கொண்டு, எல்லா வேலைகளும் அரசிதழ் பதிவு பெற்ற வேலைகளாகக் கொள்ளப்படுமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இதுவும் யோசிக்க வேண்டிய விஷயங்களில் ஒன்று.

**திரு. எம். சுரேந்திரன் :** சார், கெஜடெட் பதவியாளர்கள், அல்லாதவர்கள் என்று இரு பிரிவினைகள் ஏற்படுத்தப்பட்டது வெகு காலத்திற்கு முன்னால். இப்பொழுது இருக்கும் நிலையில் அவரவர்கள் கடமைகளை உணர்ந்து காரியம் செய்து விடுவது நல்லதல்லவா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** மாண்புமிகு உறுப்பினர் க்ளாஸிபிகேஷன், முறையைப் பற்றிச் சொல்லுகிறார்கள். யோசிக்கலாம் என்று ஏற்கனவே சொன்னேன்.

### *Police Mobile Laboratory in City*

* 47 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether any Police Mobile Laboratory has been set up in Madras City; and

(b) if so, the details thereof?

of raw materials which are essential for production of Proetmin Zinc Insulin and Insulin Lent, and also even plan plain insulim which require the raw materials from foreign countries.

## 3. அறிவிப்பு

### பேரவை அலுவல் குறித்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** 1971-ம் வருடம் ஜூன் மாதம் 23-ம் நாளன்று அலுவல் ஆய்வுக்குழு எடுத்த முடிவிற்கிணங்க சட்டப்பேரவையின் நடப்புக் கூட்டத் தொடரின் மேற்கொண்ட நிகழ்ச்சி விவரமும், 1971-72-ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பிற்காக ஒதுக்கப்பட்ட நாட்களின் விவரம் பின்வருமாறு :



| | | |
|---|---|---|
| 30—6—1971 புதன் | 2 | தொழில்கள் |
| | 40 | தொழில் வளர்ச்சிக்கான மூலதனச் செலவு |
| 1—7—1971 வியாழன் | 26 | பாசனம் |
| | 27 | பொதுப்பணிகள்—பணிகள் |
| | 28 | பொதுப்பணிகள்—பணியாளரும், கருவிகளும் இயந்திர சாதனங்களும். |
| 2—7—1971 வெள்ளி | 41 | பாசன மூலதனச் செலவு |
| | 42 | பொதுப் பணிகள் மூலதனச் செலவு |
| 3—7—1971 சனி | 14 | மருத்துவம் |
| | 15 | பொதுச் சுகாதாரம் |
| | 38 | பொதுச் சுகாதார மூலதனச்செலவு |
| 4—7—1971 ஞாயிறு | | விடுமுறை |
| 5—7—1971 திங்கள் | 23 | சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் முதலியன |
| | 29 | பொதுப்பணிகள் உதவி மானியங்கள் |
| 6—7—1971 செவ்வாய் | 9 | மாவட்ட நிர்வாகமும், பல்வகையும் |
| | 31 | பஞ்சத்தணிப்பு |
| | 32 | ஓய்வூதியங்கள் |
| | 36 | ஏனைய பல்வகை இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும். |
| 7—7—1971 புதன் | 37 | ஜமீன்தார்களுக்கு இழப்பீடு |
| | 45 | ஓய்வூதியத் தொகையில் ஒரு பகுதியை மொத்தமாக்கிக் கொடுத்தல். |
| | 47 | மாநில அரசு வழங்கும் கடன்களும், முன்பணங்களும். |
| | 1 | நிலவரித்துறை. |
| | 4 | முத்திரைத்தாள்கள்—நிர்வாகம். |
| 8—7—1971 வியாழன் | | காவிரி நீர் பிரச்சினை மீதான தனித் தீர்மானம். |
| 9—7—1971 வெள்ளி, 10—7—1971 சனி | 13 | கல்வி |
| 11—7—1971 ஞாயிறு | | விடுமுறை. |
| 12—7—1971 திங்கள், 13—7—1971 செவ்வாய் | | அரசினர் சட்டமுன்வடிவுகளும், தீர்மானங்களும். |
| 14—7—1971 புதன் | 25 | பழங்குடி மக்கள், அரிசனங்கள், முதலியோர் நலன். |
| 15—7—1971 வியாழன் | 25-A | பின்தங்கிய வகுப்பினர் நலன் முதலியன |
| | 10 | நீதிநிர்வாகம். |
| | 11 | சிறைச்சாலைகள். |
| 16—7—1971 வெள்ளி | 7 | தேர்தல்கள். |
| | 8 | மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள். |
| | 33 | பல்வகை |
| | 6 | மாநிலச் சட்டமன்றம். |
| 17—7—1971 சனி | 12 | காவல் துறை |
| 18—7—1971 ஞாயிறு | | விடுமுறை. |
| 19—7—1971 திங்கள் | 12 | காவல்துறை (தொடர்ச்சி) |
| | 18 | கால்நடை வளர்ப்பு |
| 20—7—1971 செவ்வாய் | 19 | கூட்டுறவு |
| | 22 | கதர் |
| 21—7—1971 புதன் | 2 | மோட்டார் வண்டிகள் சட்டங்கள்—நிர்வாகம். |
| | 30 | சாலைப் போக்குவரத்துத் திட்டங்கள். |
| | 43 | சாலைப் போக்குவரத்துத் திட்டங்களுக்கான மூலதனச் செலவு. |
| 22—7—1971 வியாழன் | 24 | தொழிற்சாலைகள் உட்பட தொழிலாளர். |
| 23—7—1971 வெள்ளி | 17 | மீன்வளம் |
| | 21 | சின்கோனா |
| | 35 | காட்டுவளத்துறை |
| | 44 | காட்டுவள மூலதனச்செலவு |
| 24—7—1971 சனி | 16 | வேளாண்மை |
| | 39 | வேளாண்மை மூலதனச் செலவு |
| 25—7—1971 ஞாயிறு | | விடுமுறை |
| 26—7—1971 திங்கள் | 3 | பொது விற்பனை வரிகளும், ஏனைய வரிகளும் தீர்வைகளும், நிர்வாகம் |
| | 5 | பத்திரப் பதிவுத்துறை |
| | 34 | எழுதுபொருள்—அச்சுத்துறை |
| 27—7—1971 செவ்வாய் | 8 A | பால் வழங்குத் திட்டங்கள் |
| | 9 A | 1959-ம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக் கட்டளைகள் சட்டத்தின் நிர்வாகம். |
| | | விவாதம் இன்றி வாக்களிப்புக்கு விடப்பட வேண்டிய மானியக் கோரிக்கை. |
| | 46 | அரசு வணிகத் திட்டங்களுக்கான மூலதனச் செலவு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவை அறிமுகம் செய்தல். |
| 28—7—1971 புதன் | | நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவை ஆய்வுக்கு எடுத்தலும் நிறைவேற்றலும். |
| 29—7—1971 வியாழன் | | அரசினர் சட்டமுன்வடிவுகளும், தீர்மானங்களும். |

பேரவை வழக்கம் போல் 9 மணிக்குக் கூடும்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :

(அ) வலம் வரும் சட்டம் சார்ந்த அறிவியல் ஆய்வுக் கூடமொன்று 1970-ம் வருடம் மே மாதம் 1-ம் தேதி முதல் செயல்பட்டு வருகிறது.

(இ) இந்த வலம் வரும் சட்டம் சார்ந்த அறிவியல் ஆய்வுக் கூடம், ஆய்வுக்கூடத்தில் சோதனைகள் செய்வதற்குப் பதிலாக, குற்றம் நிகழ்ந்த இடத்திலேயே தொடக்க நிலைச் சோதனைகளைச் செய்து குற்றங்களைத் துப்பு துலக்குவதில் காவல்துறை அதிகாரிகளுக்குத் துணை புரிவதற்காகவுள்ளது. வலம் வரும் சட்டம் சார்ந்த இந்த அறிவியல் ஆய்வுக் கூடத்தில், நிழற்படங்களை எடுக்கவும், அவற்றைக் கழுவிப் பார்க்கவும், விரல் ரேகைகள், அடிச்சுவடுகள், கருவிகளைக் கையாண்ட அடையாளங்கள் முதலியவற்றைப் படமெடுக்கவும். அவற்றைப் பாதுகாக்கவும் உரிய கருவிகள் உள்ளன.

திரு. என். டென்னிஸ்: சார், மாநிலத்திலுள்ள முக்கிய நகரங்களுக்கு இந்த வசதி விஸ்தரிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: எல்லா மாவட்டங்களிலும் இந்த வசதியை விரிவு படுத்துவது என்பதை அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி: எல்லா மாவட்டங்களிலும் இந்த வசதியை விஸ்தரிப்பதைப் பற்றி நினைவுப்படுத்திக் கொண்டிருக்கிற முதலமைச்சர் அவர்கள், குற்றங்கள் அதிகமாக இருக்கும் மாவட்டங்களில் இம் முறையை உடனடியாக விஸ்தரிக்க ஏற்பாடு செய்வாரா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: எல்லா மாவட்டங்களிலும் இந்த வசதியை விரிவுபடுத்துவது என்ற கட்டத்தில், அம்மையார் அவர்கள் கூறியது போல, குற்றங்கள் அதிகமாக இருக்கக் கூடிய மாவட்டங்கள் என்ற நிலை வரும்போது, இந்த வசதி விரிவு படுத்துவது முன்னிலைப்படுத்தப்படும்.

திரு. நா. வீராசாமி: இவ்வண்டி காவல் துறையில் வாங்கப்பட்டு ஓர் ஆண்டுகாலம் ஆகிறது. இதுவரையிலே எத்தனை குற்றங்கள் கண்டுபிடிக்கப் பட்டிருக்கின்றன ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : குற்றக் களங்களில் கிடைத்த தடையப் பொருள்களை அறியத்தான் இவ்வண்டிகள் பயன்படுகின்றன. இதுவரையில் 65 இடங்களில் இந்த வண்டி பயன்படுத்தப்பட்டிருக்கிறது. சென்னை நகரிலே 47 இடங்களிலும் செங்கல்பட்டு மாவட்டத்தில் 21 இடங்களிலும் இந்த வண்டிகள் சென்றிருக்கின்றன.

திருமதி த. ந. அனந்தநாயகி: சார், இதிலே துப்பறியும் நாய்களைக் கொண்டு போகிறார்களா?





மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தேவைப்பட்டால் கொண்டு போகலாம். வேறு வசதிகள் இல்லாவிட்டால் கொண்டு போகலாம். ஆனால் இதிலே, தடையம் கண்டுபிடிக்க வசதியுள்ள கருவிகள், புகைப் படக் கருவிகள், நுண்ணோக்காடி. கையக வண்ணப் பட்டை நிழற்பதிவுக் கருவி, ஊதா கதிரியல் ஒளி விளக்கு, நிழற்பட ஒளி பாய்ச்சும் விளக்கு, விரல் ரேகை பதிவு செய்யப்படும் கருவி, அதற்கான பதிவுத்தாள், அடிச்சுவடுகளை அச்செடுத்துக் கொள்வதற்கான சாதனங்கள், உருப்பெருக்கிக் கண்ணாடிகள், மற்றுமுள்ள உப கருவிகள், அளவிடும் கருவிகள், கண்ணாடிப் பொருட்களும் மற்றும் தேவைப்படுகிற இரசாயனப் பொருட்களும் கொண்டு செல்லப் படுகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்--விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பட்டது என்பதைக் குறிக்கும்]

## (2) கவன ஈர்ப்பு.

### (அ) கண் நோய் தொற்று நோயாக சென்னை மாநகரிலும் சில மாவட்டங்களிலும் பரவி வருவது குறித்து.

திரு. துரைமுருகன் : சட்டப் பேரவையின் 41-வது விதியின் கீழ், சென்னை மாநகரிலும், சில மாவட்டங்களிலும் கண் நோய் தொற்று நோயாகப் பரவி வருவது குறித்தும், இதற்கு உடனடியாகத் தடுப்பு நடவடிக்கைகள் எடுக்க வேண்டிய அவசியம் பற்றிய அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் பெருவாரியான மக்கள் 1971 மே திங்களில் தொற்றும் தன்மையுள்ள ஒரு வகைக் கண் நோயினால் (conjurctivitis) பாதிக்கப்பட்டனர்.

1971-மே மாதத் தொடக்கத்தில் இந்நோய் பரவுவதாக அறிவிக்கப்பட்டது. இது விரைவில் தொற்று நோயாகப் பரவத் தொடங்கி மே மாத மூன்றும் வாரத்தில் உச்ச நிலையை அடைந்தது. அப்போது இந் நோயினால் பாதிக்கப்பட்ட 70 முதல் 80 சதவீத நோயாளிகள் மருத்துவமனைகளில் வெளி நோயாளிகளாகச் சிகிச்சையளிக்கப்பட்டனர். இத் தொற்று நோய் முதற்கண் ஒரு கண்ணில் பற்றி விரைவாக மற்றொரு கண்ணுக்குப் பரவுகிறது. இதனால் இமைப் புருவங்கள் பெரிதும் வீங்கிக் கொண்டு, கண்ணிலே உறுத்தல் அதிகமாகிறது. பலருக்கு இமைகளில் ரத்தப்போக்கு காணப்படுவதுடன் இமையும் வீங்கி

விடுகிறது. சிலருக்கு விழி வெண்படலத்தில் மேலெழுந்த வாரியாகப் புள்ளிகள் தோன்றி, அதனால் கண் பார்வை மங்கி விடுகிறது. இந்நோய் கண்டுள்ளவர்களுக்கு காதுக்கு முன்னேயுள்ள சுரப்பி வீங்கி விடுகிறது. இந்நோய் ஐந்து முதல் ஏழு நாட்கள் வரை நீடிக்கிறது.

இந்நோய்க்கு 'குளோரம்பெனிகால்' நீர் மருந்தும் 'சொப்ராமைசின்' நீர்ம மருந்தும் சிறந்தவையாகும். காதுக்கு முன்னே இருக்கின்ற சுரப்பி வீங்கியுள்ள நோயாளிகள் 'சல்பானிலமைடு' மாத்திரைகளும் டெட்ரா-சைகிளினும் உட்கொள்வது நல்லது.

கார்டிகாஸ்ட்ராய்டு தயாரிப்புகள் தவிர்க்கப்படுவது நல்லது. கண்ணில் பென்சிலின் களிம்பை அளவில்லாமல் போடுவதன் விளைவாக கண்ணுக்குக் கேடு விளையலாம். 1971-ம் திங்களில் அரசு கண்நோய் மருத்துவமனையில் புறநிலை நோயாளிகளின் மொத்தம் 10,974 பேருக்குச் சிகிச்சையளிக்கப்பட்டது; மாவட்டங்களிலுள்ள அரசு மருத்துவ மனைகளில் 4,998 பேருக்குச் சிகிச்சையளிக்கப்பட்டது.

இந்நோய் வாலாயமாக கிருமி நோயால் இமைப்படலத்தில் ஏற்படும் கண் நோயல்ல. ஆனால் காற்றின் மூலம் வந்த நச்சுக் கிருமிகளினால் பரவிய நோயாகும், என்று ஆய்வின் மூலம் தெரிய வந்துள்ளது. மாதிரிகள் குன்னூரிலுள்ள பாஸ்டர் நிலையத்திற்கும் கிண்டியிலுள்ள தடுப்பு மருந்து கிங் ஆய்வு நிலையத்திற்கும் அனுப்பப்பட்டுள்ளன. ஆய்வுக்கூடச் சோதனை பற்றிய அறிக்கைகள் எதிர்பார்க்கப்படுகின்றன. மருத்துவ மனைகளில் புறநிலை நோயாளிகளுக்கு சில்வர் சால்ட் (ஆர்கிரால் 20 சதவீதம்), சொப்ராமைசின் நீர்ம மருந்து ஆகியவற்றைக் கொண்டு சிகிச்சையளிக்கப்பட்டது. அவசியமான போது சல்பானிலமைடு, டெட்ராசைகிளின் ஆகியவையும் கொடுக்கப்பட்டன. கண் நோயால் வருந்தியவர்களை மருத்துவ மனையில் சேர்த்து சிகிச்சை அளிக்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை. இந்நோயால் பாதிக்கப்பட்டவர்களின் கைக்குட்டைகளையும், துண்டுகளையும் தொட வேண்டாமென்றும், நீச்சல் குளங்களில் நீராட வேண்டாமென்றும் மக்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டது.

இந்நோய் பரவி வருவது குறித்து மாவட்ட மருத்துவ அதிகாரிகள், மாவட்ட நல அதிகாரிகள், வட்ட மருத்துவமனை மருத்துவ அதிகாரிகள் ஆகியோருக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டது. இந்நோய்க்குச் சிகிச்சையளிக்கப்பட வேண்டிய முறை, மேற்கொள்ள வேண்டிய தடுப்பு நடவடிக்கைகள் குறித்து அவர்களுக்கு விரிவான கட்டளைகள் அனுப்பப்பட்டன.

இந்நோய் பரவுதல் தற்போது குறைந்து வருகிறது. சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு வருபவர் ஒரு சிலரே என்று அறிவிக்கப்படுகிறது.



(ஆ) நீரிழிவு நோய்க்கு இன்றியமையாத இன்சுலின் கிடைக்காமையும். நீரிழிவு நோயாளிகளின் இன்னலும் குறித்து.

DR. H. V. HANDE: Sir, I wish to call the attention of the Hon. Minister for Public Health to a matter of urgent public Importance, namely the non-availability of various brands of insulin which is an essential drug and the consequent hardships caused to countless number of diabetic patients and the necessity to take immediate action in this regard.

THE HON. THIRU K. ANBAZHAGAN: Among the various brands of Insulin that are being used for treatment only PZ Insulin was not freely available for sometime in the market. However, Hospitals under the control of the Director of Medical Education have certain amount of stocks of all the varieties of Insulin for the treatment of patients coming to the Government Hospitals. Various brands of Insulin are available in the Government Institutions under the control of the Director of Medical Education. The general shortage of various brands of Insulin is due to the manufacturers not being able to cope up with the great demand for this drug in our country and the serious restrictions imposed by the Government of India on import of such essential drugs for the use of diabetic patients whose number is increasing day by day. Our State Drugs Controller has sent a monthly report of drugs which are in short supply including Insulin to the Drugs Controller (India), New Delhi requesting him to make necessary arrangements for improving the supply position. The State Drugs Controller has also requested the Drugs Controller (India), New Delhi to permit manufacturers of Insulin Lente to import the raw materials from abroad as the same is allowed for import as per Red Book for April–March, 71, so that the acute shortage of Insulin may be eased to a great extent. The position has also much eased now.

The Government is also watching the situation and necessary action will continue to be pursued in the matter.

DR. H. V. HANDE: In the answer given by the Hon. Minister, he has stated that only in Zinc insulin only, there is shortage. But in insulin lente and plain insulin also there is shortage. Most of the patients do not go to hospital. They themselves take it 8 hourly or once a day. They take it themselves or go to private doctors. In view of that, will the Hon. Minister give us some indication as to how exactly he is going to combat this shortage. Will he see that sufficient stocks are available with all chemists and druggists?

THE HON. THIRU K. ANBAZHAGAN: The shortage is not due to the inadvertence of the medical department of this State. It is due to the non-production of such insulin by the respective production companies because they are not able to get the necessary raw material, especially the raw material that has to be imported from foreign countries. Our State Drugs Controller has informed the Central Drugs Controller to see that such imports

### (4) அரசினர் சட்ட முன்வடிவு.

**தமிழ்நாடு 1971-ம் ஆண்டு குடியிருப்பு அனுபோகதாரர்கள் (வெளியேற்றப்படுவதிலிருந்து பாதுகாத்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு.**

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவரவர்களே, தமிழ்நாடு 1971-ம் ஆண்டு குடியிருப்பு அனுபோகதாரர்கள் (வெளியேற்றப்படுவதிலிருந்து பாதுகாத்தல்) திருத்தச் சட்டமுன்வடிவை இந்த மன்றத்தின் முன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** இச்சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்தச் சட்டமுன்வடிவு அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது.

### (5) 1971-72-ம் ஆண்டுக்கான திருத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின்மீது பொது விவாதம்—தொடர்ச்சி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, 1971-72-ஆம் ஆண்டிற்கான திருத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் மீதான 5-ஆம் நாள் விவாதம்.

***திரு. துரைமுருகன்:** மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, 1971-72-ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையை இம்மாமன்றத்திலே வைத்த நம்முடைய முதல்வருக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்து, அந்த அறிக்கையின் மீது என்னுடைய சில கருத்துக்களைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

வறண்டு போன புள்ளி விவரங்களை மட்டும் உள்ளடக்கிய வட்டிக்கடைக்காரன் புத்தகம் போல் இல்லாமல், கன்னித் தமிழும் பக்கத்திற்குப் பக்கம் சோஷலிச கொள்கைகளைக் கொண்டு சோஷலிச முத்திரை பெற்றிருக்கின்ற ஒரு வரவு செலவுத் திட்டத்தை இந்த அவையிலே அவர் வைத்துப்பேசியதை நான் பாராட்டுகிறேன். இந்த அளவுக்கு நல்ல அம்சங்களைக் கொண்ட இந்த நிதி நிலை அறிக்கையைப் பாராட்டுவதற்கு இந்த இடத்திலே இருக்கும் சிலருக்கு மனம் வரவில்லை என்பதை நான் வருத்தத்துடன் குறிப்பிட்டே ஆகவேண்டும். வடக்கே இருக்கின்ற பலரும், வடக்கே இருந்து வருகின்ற பல பத்திரிகைகளும் இன்றைய தினம் நம்முடைய முதலமைச்சரின் இந்த நிதி நிலை அறிக்கையை எடுத்து பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். நான் இதைப் பாராட்டினால் கூட, "இது என்ன உங்களுடைய பட்ஜெட், அதைப் பாராட்டாமல் இருப்பீர்களா, நீங்கள் அந்தக் கட்சிக்காரர்; இப்படிப் பாராட்டுவதிலே ஒன்றும் ஆச்சரியம் இல்லை" என்று தான் சொல்வார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு, தலைவர்களின் அனுமதியுடன் ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். 1971-ம் ஆண்டு ஜூன் மாதம் 22-ம் தேதி வடக்கே இருந்து



வருகின்ற "ஹிந்துஸ்தான் டைம்ஸ்" என்ற பத்திரிகையிலே இப்படி நம்முடைய நிதி நிலை அறிக்கை பற்றிப் புகழ்ந்து கூறப்பட்டிருக்கிறது.

"The Tamil Nadu Budget presented by Mr. Karunanidhi last week is a far more interesting exercise than those of many States that preceded it."

எனவே, மற்ற எந்த மாநிலத்திலேயும் வைக்கப்பட்ட நிதி நிலை அறிக்கைகளைவிட, தமிழகத்திலே வைக்கப்பட்ட நிதி நிலை அறிக்கை முற்போக்கானது மட்டுமல்ல, மிகச் சிறந்ததாக இருக்கிறது என்பதைத் தெளிவாக காட்டியிருக்கிறார்கள். இப்படி வட நாட்டிலே இருக்கின்ற பத்திரிகைகளும், வடக்கே இருப்பவர்களும் பாராட்டுகின்ற இந்த நிதி நிலை அறிக்கையை இங்கே இருக்கின்ற [**]கட்சிக்கு பாராட்ட மனம் வரவில்லை என்பதை நான் மெத்த வருத்தத்துடன் குறிப்பிட்டுக்கொள்ளுகிறேன்.

*     *     *     *     *     *

இங்கே பேசியவர்களில் சிலர் எல்லா நன்மைகளையும் தள்ளிவிட்டு, 'மதுவிலக்கை மட்டும் இந்த அரசாங்கம் எடுத்துவிட்டார்கள், இதனால் ஏழைகள் எல்லாம் பாதிக்கப்பட்டு விட்டார்கள், பெண்கள் எல்லாம் இதனால் கஷ்டப்படுகிறார்கள்' என்று சொன்னார்கள். அந்த விஷயத்திற்கு நான் பின்னாலே வரவிருப்பதால், இப்பொழுது அதை விட்டுவிடுகிறேன். தி. மு. கழகத்தினிடம் மக்கள் தொடர்பு கொண்டு இருப்பதற்குக் காரணம். தி. மு. கழகம் மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றி, சொன்னதைச் செய்யும் என்பதால் தான்.

இந்த இடத்திலே எங்களுடைய தேர்தல் அறிக்கையை நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். மைதானத்திலே தீர்மானம் போட்டார் கலைஞர் அவர்கள். அந்தத் தீர்மானத்தை இந்த மன்றத்தில் நிறைவேற்றும் வகையிலே சட்டம் ஆக்கிய பெருமையும் கலைஞர் அவர்களைத் தான் சாரும். எங்களுடைய தேர்தல் அறிக்கை 1971-ஆம் ஆண்டு தேர்தலின் போது வெளியிடப்பட்டதாகும். இந்தத் தேர்தல் அறிக்கையை மிகச் சாதாரணமாகச் சொல்லலாம். அப்பொழுது நம்முடைய கலைஞர் அவர்கள் சொன்னார்கள், வேர்வையைக் கொட்டி பாடுபடும் விவசாயிகள், தொழிலாளர்கள், முடிதிருத்துவோர், சலவையாளர்கள் ஆகிய சமுதாயத்திலே பின் தங்கியவர்களுக்கும், படிப்படியாக வசதிகளை செய்து கொடுக்க கழகம் சபதம் ஏற்றுக் கொண்டிருக்கிறது என்று அன்றைக்கும் படித்துக் காட்டினார்கள். ஆட்சிக்கு கழகம் வந்ததும், மைதானத்திலே போட்ட தீர்மானம் . மைதானத்தோடு போய் விடட்டும் என்றில்லாமல் கோட்டைக்கு வந்ததும், அந்தத் திட்டங்களை எல்லாம் நிறைவேற்றுகிறது.

---

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

[திரு. துரைமுருகன்] [1971 ஜூன் 25

அது எப்படி இருக்கிறது என்றால் லெனின் அவர்கள், கிரெம்ளின் மாளிகையிலே உட்கார்ந்திருந்தாலும் என்னுடைய எண்ணம் எல்லாம் சைபீரியாவிலே இருக்கின்ற பாலைவன மக்களிடம் தான் இருக்கிறது என்று சொல்லி செயல்பட்டது போல், நமது கலைஞர் அவர்கள் மக்களின் நலனுக்காகப் போடப்பட்ட திட்டத்தை நிறைவேற்றுகின்ற அளவிலே தான் செய்து காட்டியிருக்கிறார். அந்த தேர்தல் அறிக்கையிலே அவர் சொன்னதைப் போல் தான் இவ்வாண்டு பாடுபடுகின்ற விவசாயிகளுக்கு நீண்டகாலக் கடன்களின் தொகை 3 கோடியிலிருந்து 21 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டிருக்கிறது, குறுகிய காலக் கடன் ரூ. 61.5 கோடியளவுக்கு உயர்த்தப்பட்டிருக்கிறது. அப்படியே தான், அந்த விவசாயிகள் பயன் அடையும் விதத்தில் 9 புதிய நீர்ப் பாசனத் திட்டங்களுக்கு ரூ. 235 இலட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. 1967 முதல் 1971-க்குள் 2,02,246 நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு நிலம் தரப்பட்டிருக்கிறது. மேலும், காடுகள் என்ற பெயரால் உள்ள சாகுபடிக்கேற்ற 50,000 ஏக்கர் காட்டு நிலங்கள் விவசாயிகளுக்குத் தரப்பட்டிருக்கிறது.

இப்படி பல்வேறு திட்டங்களை இந்த நிதி நிலை அறிக்கையிலே செய்திருப்பது மட்டுமல்லாமல், முடி திருத்துபவர்களுக்கும், சலவைத் தொழிலாளர்களுக்கும் கருவிகள் வழங்க மாவட்டத்திற்கு 100 வீதம் ஆண்டு ஒன்றுக்கு 1,000 பேருக்கு வழங்க நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்த இடத்திலே ஒன்றை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன், எந்த மாநிலத்திலேயும் இதுவரை சமுதாயத்திலே இருக்கின்ற சலவைத் தொழிலாளர்களுக்கும், முடி திருத்துபவர்களுக்கும் நன்மை செய்ய வேண்டும் என்று தீர்மானம் போட்டது கிடையாது. அதைத் தொடர்ந்து நிதி நிலை அறிக்கையிலே அவர்களுக்குச் சலுகைகள் வழங்கப்பட்டதும் கிடையாது.

[திரு. எம் ஏ. லத்தீப் தலைமை]

அப்படி வழங்கிய முதல் அரசு இந்தக் கழக அரசுதான் என்பதை நான் நினைக்கிறபோது பெருமைப்படுகிறோம், பூரிப்
10-30 மு.ப. படைகிறோம் என்பதையும் நான் மெத்த மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல் கலைஞர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள் தொழிலாளருக்கு 'தொழிலாளர் நல நிதி திட்டம்' 'தொழிலாளர் அரசு பாதுகாப்பு திட்டம்' தொழில் துறையில் இருக்கின்ற இளைஞர்களுக்கு ஆண்டுக்கு ரூ. 1,000 உதவி, இப்படிப்பட்ட திட்டங்களை அவர் நிதிநிலை அறிக்கையில் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். அதைப்போன்று சமுதாயத்தின் அடித்தளத்திலே இருக்கின்றவர்களுக்கு பல வசதிகள் கொடுக்கப்பட்டிருக்கிறது இந்த நிதிநிலை அறிக்கையிலே.

இன்னும் ஒன்றையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். 'யூத் கோர்' "Youth Corps" ஒன்றை ஏற்படுத்தியிருக்கிறார்கள். 2,000 இளைஞர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். அவர்களுக்கு மாதம்



1971 ஜூன் 25] [திரு. துரைமுருகன்]

ஒன்றுக்கு ரூ. 175 செலவுக்கு தரப்படுகிறது. இந்த இளைஞர்கள் கிராமத்துக்குச் செல்லவேண்டும். அங்கேயிருக்கிற விவசாயிகளோடு பழகவேண்டும், அவர்களுக்குச் சுகாதாரத்தைக் கற்றுத் தரவேண்டும். கல்வி போதிக்க வேண்டும். விவசாயத்தை நவீன முறைப்படி கற்றுத்தர வேண்டும். அது ஒரு பெரிய திட்டம் ஆகும். இந்த நாட்டில் நெடுங்காலமாக படித்தவன் படிக்காதவன், கிராமத்துக்காரன் இவன் நகரத்துக்காரன் இவன் சில்க் சட்டைக்காரன், அவன் அழுக்கு வேட்டிக்காரன் என்ற பேதம் இருந்தது. கிராமத்திற்குப் போ என்று சொன்னால் எவரும் மறுத்து வந்தார்கள். டாக்டர் பட்டம் பெற்றவர்கள் கிராமங்களுக்குச் செல்ல மறுத்து வந்தார்கள், அப்படியே சென்றாலும் வேறு நகரத்திற்குச் செல்ல மாற்றல் ஆவதற்கு பாடுபட்டு வந்தார்கள். அவர்களைப் பிடித்து கிராமங்களுக்குச் சென்று அங்குள்ள மக்களுக்கு சேவை செய்ய கலைஞர் அவர்கள் ஒரு அருமையான ஏற்பாட்டைச் செய்திருக்கிறார்கள். அதைத்தான் ஹிந்துஸ்தான் டைம்ஸ் பத்திரிகை தன்னுடைய தலையங்கத்தில் குறிப்பிடுகிறது.

" It makes a modest attempt at tackling the problem of educated unemployment and at the same time breaking the familiar urban resistance to moving into rural areas. "

என்று அழகாகக் கூறப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட ஒரு திட்டத்தை கலைஞர் அவர்கள் செய்திருப்பதை பாராட்டுகிறேன்.

இவற்றுக்கு எல்லாம் பணம் தேவைப்படுகிறது. அந்தப் பணத்தைப் பரிசுத் திட்டத்திலிருந்து எடுத்துக்கொள்வதென்று நிதிநிலை அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது. இங்கே குறிப்பிட்டார்கள் பரிசுச் சீட்டு நடத்துவது சூதாட்டம் நடத்துகிற மாதிரி அது பலபேருடைய வாழ்க்கையைப் பாதிக்கிறது என்று எல்லாம் சொன்னார்கள். அப்படிப்பட்ட பணத்தை இனி நல்ல காரியத்திற்காகப் பயன்படுத்தும் முதலமைச்சரவர்களை நான் பாராட்டுகிறேன்.

அடுத்துச் சொன்னால் நம்முடைய தமிழ்நாட்டிலே தான் 100-க்கு 100 கிராமங்களுக் கெல்லாம் மின்சார வசதி கிடைத்திருக்கிறது. 1972-73-க்குள்ளாக எல்லாக் கிராமங்களுக்கும் மின்சாரம் கொடுத்து விட முடியுமென்று இந்த அரசு சொல்லுகிறது. இம்மாதிரி மின்சாரத்திலே முன்னேற்றம் அடைந்த மாநிலம் எங்கேயும் கிடையாது. . . .

THIRUMATHI T. N. ANANDANAYAKI : On a point of order, Sir. . .

THIRU DURAI MURUGAN : I am not yielding.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : If it is a point of order the hon. member has to yield. Only a Minister may say that he is not yielding for a point of order. But other Members must yield whenever a point of order is raised, as far as I know. Let me await the ruling of the Chair. I want to stress the fact. . .

[திரு. இரா. மாணிக்கவாசகம்] [1971 ஜூன் 25

அறிக்கையை பார்க்கிற பொழுது, இது நிதிநிலை அறிக்கையாக மட்டுமல்லாமல், 4 கோடி தமிழ் மக்களின் வாழ்க்கைச் சாசனமாக, உரிமைச் சாசனமாக இதைக் கருதுகிறேன். காரணம், வாழ் விழந்த சமுதாயத்தை, திராவிடக் குடிமகன் உண்மையான மனிதனாக வாழ வேண்டும் என்பதற்காக, அரிசன மக்களானாலும் சரி, தாழ்த்தப்பட்ட மக்களானாலும் சரி, மாணவர்களானாலும் சரி, விவசாய மக்களானாலும் சரி, அவர்களுடைய வாழ்க்கைத் தரம் உயர்ந்தாக வேண்டுமென்று அந்த ஓர் எண்ணத்தின் விளைவாகத் தான் இந்த நிதிநிலை அறிக்கையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே தந்திருக்கிறார்கள். அப்படித் தருகிற நேரத்தில், இன்னும் செய்வதற்கு முன் நிதிநிலை அறிக்கையைத் தந்த அரசாக, இதற்கு முன்பிருந்த அரசுக்கும் உள்ள வேறுபாட்டை பல்வேறு கட்சி உறுப்பினர்கள் சுட்டிக் காண்பித்தார்கள். ஆனால், இந்த நிதிநிலை அறிக்கையைப் பற்றிப் பேசுகிற பொழுது, மாற்றுக் கட்சி நண்பர்கள் இது குறையுடையது, இன்னின்ன குறை ஏற்பட்டிருக்கிறது என்று சொல்ல முடியவில்லை. காரணம், அப்படிக் குறைவு நேரா வண்ணம் தங்கள் மெய் வருத்தம் பாராது, கண் துஞ்சாது. . . . என்று எடுத்த கருமத்தை முடிக்கும் வகையில் தங்களைத் தாங்களே உள்ளாக்கிக் கொண்டு இந்த நிதிநிலை அறிக்கையைத் தந்து இருக்கிறார்கள்.

இந்த நிதிநிலை அறிக்கையைப் பார்க்கிற பொழுது, பல பத்திரிகைகள் பாராட்டிப் புகழ்ந்தும் இருக்கின்றன. அப்படிப் புகழ்ந்த நேரத்தில், அண்ணா அவர்களைப் பாராட்டுகின்ற அத்தனை பேர்களும், ஏனைய தாய்மார்களும் வரவேற்கும் காட்சியை என் கண் முன்னால் காண்கிறேன். அவர்கள் பாராட்டுக்களை என் காதுகளால் கேட்க முடிகிறது. காரணம், தங்களுடைய மகன் படித்து விட்டு ஊரில் சுற்றிக் கொண்டிருக்கிறானே, வேலை கிடைக்கவில்லையே, அவனுக்குச் செலவழிக்கப்பட்ட பணம் வீணாகப் போயிற்றே என்று ஏக்கமுற்று இருந்த பொழுது, இன்று ஓரளவுக்கு குடும்பத்தில் சம்பாதிக்கும் நிலைமையை அரசு ஏற்படுத்தித் தந்திருக்கிறது. அப்படிப்பட்ட அரசு வாழ வேண்டும், நல்ல முறையில் செழிப்பாக இருக்க வேண்டும் என்று ஒரு வாழ்த்தைத் தெரிவித்து நான் பாராட்டுகிறேன்.

அதே நேரத்தில், இங்கே குறிப்பிட்டார்கள். மது விலக்குப் பிரச்சனையைப் பற்றி பெரு மதிப்பிற்குரிய அம்மையார் அவர்கள் குறிப்பிட்டார்கள். இங்கே தாய்மார்கள் சாபமிடுகிறார்கள் என்று. நான் உண்மையில் பணிவன்புடன் வேண்டிக் கேட்டுக் கொள்ளுகிறேன். என் தொகுதிக்கு நீங்கள் ஒரு முறை வந்து பாருங்கள். அங்கேயுள்ள தாய்மார்களும், தொழிலாளர்களும் எந்த அளவுக்கு வரவேற்றிருக்கிறார்கள். அந்த இன்முகத்தை நீங்கள் பார்த்தால் புரிந்து கொள்ளுவீர்கள். அந்தத் தாய்மார்கள் தான் கலைஞர் கொண்டு வந்த விலக்குத் தள்ளி வைப்பு பிரேரணையை "ஒளி படைத்த கண்ணினாய் வா, வா, வா," என்று பாடி இசைக்கும் இசை எங்கள் செவிகளில் வந்து விழுகிறது. அந்தக் காரியத்தைச்



1971 ஜூன் 25] [திரு. இரா. மாணிக்கவாசகம்]

செய்தவர்கள் நீங்கள். நீங்கள் இன்னும் பல நல்ல யோசனைகளைக் கூற வேண்டுமேயல்லாது வேறல்ல. அதைச் செய்தால் நிச்சயமாகப் பெருமைப் படுவோம். ஆனால், பெண்கள் சாபமிடுகிறார்கள் என்று சொன்னால், அதைக் கேட்கும் பொழுது உண்மையில் வேதனை ஏற்படுகிறது. காரணம், ஒரு வருஷமாக 3½ லட்சம் மக்களுக்கு மேல் சேரியில் வாழ்கிற தொழிலாளர்களும், ஏழை விவசாயிகளும், அந்தக் குடும்பத்தைச் சேர்ந்த தாய்மார்களும் அதற்கு விதி விலக்குக் கொடுத்து விட்டு, நல்ல காலம் பிறந்து விட்டது, தங்கள் குடும்பங்களில் இருந்து துயரங்களும், துன்பங்களும், இடர்ப்பாடுகளும் நீங்கும் வழி பிறந்து விட்டது என்று மனமாற பாராட்டுகிறார்கள். அந்தப் பாராட்டுதலுக்கு உரிய இந்த நிதிநிலை அறிக்கையை நாங்கள் வரவேற்கிறோம்.

வரவேற்கிற நேரத்தில் இன்னொன்றையும் நான் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். விவசாயிகளுக்கு முன்பெல்லாம் 3 கோடி ரூபாய் தான் பணம் கொடுக்க வேண்டி வந்தது. ஆனால், இந்த நிதிநிலை அறிக்கையில் 21 கோடிக்கு மேல் நீண்ட காலக் கடனும், 61 கோடிக்கு மேல் குறுகிய காலக் கடனும் கொடுப்பது மூலமாக விவசாயிகளின் வாழ்வை வளமாக்க வேண்டும். கடன் தொல்லையிலிருந்தும், அதிகமாக வட்டிக்குக் கடன் வாங்கி சொத்துக்களை இழக்கும் நிலைமையிலிருந்தும் மீள வேண்டுமென்று இந்த அரசு சீரிய முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறது.

அதே போன்று, கூட்டுறவு நீர்ப்பாசனம் என்பதை கூட்டுறவு அமைச்சர் ஏற்படுத்திய காரணத்தால் 1,2,3 ஏக்கர் இருக்கிற சிறு விவசாயிகளுக்கு நல்ல நிலைமை ஏற்படுவதற்கு, அவர்கள் வாழ்வில் ஒளி பெறக்கூடிய வகையில் திருத்தப் பட்டிருக்கின்றன. ஆனால், நிலவள வங்கி ஏற்படுத்துவது மூலமாக, பல்வேறு உறுப்பினர்களும், மாற்று கட்சிகளிலிருப்பவர்களும் முணு முணுத்தார்கள். சிலர் ஆர்ப்பரித்தார்கள். ஆனால் இந்த மன்றத்தில் சிலர் பாராட்டும் தெரிவித்தார்கள். எங்கள் பகுதிக்கு இந்தத் திட்டம் தேவை என்று கேட்கிற பொழுது, உள்ளபடியே அந்த வங்கிகள் எந்த அளவுக்கு விவசாயிகளுக்குப் பயன்பட்டிருக்கின்றன என்பதை அறிந்திருப்பீர்கள். அப்படிப்பட்ட சீரிய பணிகள் உருவாகிய நேரத்தில், என்னுடைய தொகுதி பற்றி சில கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

என்னுடைய தொகுதி 10 பஞ்சாலைகளை, 15-க்கு மேல் கன ரகத் தொழில், சிறு ரகத் தொழில் நிரம்பிய இடமான பெரியநாயக்கன் பாளையம், நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் நிறைந்திருக்கிறார்கள். அந்தப் பகுதியில் ஒரு மருத்துவ மனை, ஈ.எஸ்.ஐ. ஆஸ்பிடல் நிச்சயமாக உருவாக்கித் தர வேண்டுமென்று நான் பணிவுடன் கேட்டுக் கொள்ளுகிறேன். காரணம், இன்னும் சிங்காநல்லூர் ஆஸ்பிடலுக்கு வர 15 மைல் ஆவதால் மருத்துவ வசதி பயன் தரவில்லை என்று சொல்லும் சூழ்நிலை இருக்கிறது.

அதே போன்று, காட்டு நிலங்களை ஏழை விவசாயிகளுக்கும் மலைவாசி மக்களுக்கும் வழங்க அரசு திட்டமிட்டிருக்கிறது. என் பகுதியில் மலையில் காடுகள் இருக்கின்றன. உழைப்பாளிகள் இருக்கிறார்கள். ஆகவே, அப்படிப்பட்ட பகுதிகளில் நீங்கள் விவசாயிகளுக்கு நிலம் கொடுக்க வேண்டுமென்றும் கேட்டு கொள்ளுகிறேன்.

அதே போல ஆதிவாசி மக்களுக்கு, அவர்களுடைய சுகாதாரத்திற்காக ஒரு நடமாடும் மருத்துவ வண்டியை (மொபைல் வேன்) ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

என்னுடைய பகுதி, சிறுவாணிப் பகுதி. அந்தப் பகுதியை மாற்றி, இங்கே வருகிற, வெளிநாட்டிலிருந்து வருகிறவர்கள் அந்தப் பகுதியில் தங்குவதற்கான வாய்ப்பும் வசதியும் ஏற்படுத்தித் தர வேண்டும். மலைவளம் நிறைந்த பகுதியை சுற்றுலாப் பகுதியாக மாற்றியமைக்கும் நல்ல செய்கைகளைப் பாராட்டுகிறோம்.

அதே போன்று பாசன வசதிக்காக ஜம்முபூண்டி பள்ளத்தாக்கில் 8 லட்சம் ரூபாய் செலவில் அணைக்கட்டுத் திட்டம் உருவாக்கப் படுவதாக இருந்தது. என்ன காரணமோ தெரியவில்லை—அது இந்த நிதிநிலை அறிக்கையில் வரவில்லை. அந்த அணைக்கட்டுத் திட்டத்தை உருவாக்கித்தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதை உருவாக்கிக் கொடுத்தால் தடாகம் போன்ற பகுதிகள் எல்லாம் ஒரு போகம் அல்ல 3 போகம் விளைவிக்கக் கூடிய நல்ல நிலங்கள் இருக்கின்றன, அவற்றில் நல்ல முறையில் உணவு உற்பத்தியைப் பெருக்கவும் முடியும்.

அதேபோன்று எங்கள் தொண்டாமுத்தூர் தொகுதியில் 30 ஆண்டுகளுக்கு முன்னர் ஒரு மருத்துவ மனை இருந்தது. அதே சூழ்நிலையில்தான் அந்த மருத்துவ மனை இன்னமும் இருக்கிறது. அருள் கூர்ந்து சுகாதார அமைச்சர் அவர்கள் எங்கள் பகுதி மருத்துவ மனையை விஸ்தரித்துக் கொடுக்க வேண்டும் என்பதாகக் கேட்டுக் கொள்கிறேன். அதற்கு வேண்டிய மூலதனத்திற்கு நாங்கள் நன்கொடை வசூலித்துத் தருகின்ற பொறுப்பினை ஏற்றுக் கொள்ளத் தயாராய் இருக்கிறோம் என்று இந்த நேரத்தில் உறுதி அளிக்க விரும்புகிறோம்.

கைம்பெண், கை இழந்த பெண் ஆகியவர்களுக்காக தஞ்சாவூர், மதுரை போன்ற பகுதியில் தொழிலகம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதே போன்று கோவையில் ஒரு தொழில் நிலையம் ஏற்படுத்தி வாழ்வு இழந்த பெண்களுக்கு புனர்வாழ்வு அளிக்க முன்வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து கோவையில் பல கல்லூரிகள் இருக்கின்றன. அங்கே ஒரு பல்கலைக் கழகத்தை நிறுவித் தருமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன். அதை அவசர, அவசியமாகச் செய்துதர





வேண்டும். மேலும் என்னுடைய தொகுதி சம்பந்தப்பட்ட பல கோரிக்கைகள் இருக்கின்றன. அவற்றை நான் அந்த அந்தத் துறை அமைச்சர்களிடம்—நேரம் இல்லாத காரணத்தினால் கொடுக்கிறேன். அவற்றையும் நிறைவேற்றித்தரவேண்டுமென்று கேட்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* திரு. ஏ. எம். இராஜா: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே 1971-72-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் மீது என் கருத்துக்கள் சிலவற்றைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் 1971-72-ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையைத் தயாரித்து அதில் சோஷலிச சமுதாயத்தை உருவாக்குவதற்கு எந்தத் தடைகள் ஏற்பட்டாலும் இடர்பாடுகள் ஏற்பட்டாலும் அவற்றை உடைத்தெறிந்து சோஷலிச சமுதாயத்தை இந்த நாட்டில் ஏற்படுத்துவோம் என்கிற சூளுரையை ஏற்றுக்கொண்டு வேறு எந்த மாநிலத்திலும், எந்த நிதி அமைச்சரும் செய்யாத முடிவைச் செய்திருக்கிறார்கள். அந்த முடிவினை இன்று இந்த நாடே பாராட்டுகிறது. மற்றொன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். பொதுவாக நிதிநிலை அறிக்கை என்றாலே—ட்ரை சப்ஜெக்ட் என்று சொல்வார்கள்—புள்ளி விவரங்களைக் கொடுத்துப் புரியாத ஒன்றாக அமைக்காது, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் அதை ஒரு சிறந்த இலக்கியமாகவே ஆக்கித் தந்திருக்கிறார்கள். இவ்வாண்டு நிதி நிலை அறிக்கை ஒரு நல்ல இலக்கியமாக அமைந்திருக்கிறது—அந்த முறையில் முதல்வர் அவர்களைப் பாராட்டுகிறேன்.

நம்முடைய நிதிநிலை அறிக்கையிலே வேளாண்மைக்காக அரசு நல்ல முறையிலே நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறது. நீண்டகாலக் கடன் தொகை 3 கோடியாக இருந்ததை 21 கோடியாகவும், குறுகிய காலக் கடன் தொகையை 61 கோடியாகவும் உயர்த்தி இருக்கிறார்கள். இப்படி நமது அரசு விவசாயத் துறையில் நல்லபல காரியங்களைச் செய்வதனால் மழை குறைந்திருந்தாலும் விவசாயப் பெருங்குடி மக்கள் உணவு உற்பத்தியைப் பெருக்கிக் காட்டி இருக்கிறார்கள். அந்த முறையில் விவசாயப் பெருங்குடி மக்களுக்கு நல்ல பல காரியங்களைச் செய்து வருகிற இந்த அரசைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த நேரத்தில் ஒன்றை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இந்த நீண்ட காலக் கடன், குறுகிய காலக் கடன்களை விவசாயிகளுக்குக் கொடுக்கும்போது நிலவள வங்கிகள், பஞ்சாயத்து யூனியன்கள் போன்றவை விவசாயிகளிடம் இருந்து நிலத்திற்கு வேண்டிய சிட்டா, அடங்கல், நகல் முதலியவற்றை மணியக்காரர், கணக்குப் பிள்ளை ஆகியவர்களிடம் இருந்து பெற்றுத்தர வேண்டுமென்று நிர்ப்பந்தப்படுத்தப்படுகிறார்கள். சிட்டா. அடங்கல், நகல் ஆகியவற்றை அவர்களே அதிகாரிகளிடம் இருந்து பெற்று விவசாயிகளுக்கு கடன் வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும். நிலவள வங்கிகளே அந்த சிட்டா, அடங்கல், நகல் பெற்று கடன் வழங்கத்

தக்க வழிமுறைகளை ஏற்படுத்தித்தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதே போன்று ஊராட்சி ஒன்றியங்களில் அதன் காப்பிகளை வைப்பதற்கு மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல இந்த அரசு கல்விக்காக 53.56 கோடி ரூபாய் 1967-68 இல் ஒதுக்கியிருக்க இந்த ஆண்டு 81.84 கோடி ரூபாய் உயர்த்தி ஒதுக்கியிருப்பது பாராட்டத்தக்கதாகும். இதில் இருந்தே கல்வித் துறையில் இந்த அரசு எவ்வளவு நாட்டம் கொண்டிருக்கிறது என்பது புலனாகிறது.

அதேபோல மருத்துவத்திற்கு 17.89 கோடி ரூபாய் முன்பு ஒதுக்கியிருக்க தற்போது அதை 33.2 கோடியாக உயர்த்தியிருக்கிறார்கள். அது பாராட்டத்தக்கது—வரவேற்கத்தக்கது.

இந்த நேரத்தில் மற்றொன்றையும் குறிப்பிட விரும்புகிறேன். இன்று நாட்டில் இருக்கிற ஜனத்தொகைக்கும், டாக்டர்களுக்கும் இருக்கிற ரேஷியோ மிக மிகக் குறைவு. சுமார் ஐந்தாயிரம் மக்களுக்கு ஒரு டாக்டர் என்ற நிலை இருக்கிறது. இந்த நிலை மாற்றப்பட வேண்டும். சமுதாயத்தின் அடித்தட்டில் இருக்கிற சாதாரண மக்களுக்கும் மருத்துவ வசதி எளிதில் கிடைக்க வேண்டுமென்று சொன்னால் ஆயிரம் பேர்களுக்கு ஒரு டாக்டர் என்ற நிலை உருவாக வேண்டும். அதற்கு ஏற்றபடி மருத்துவக் கல்லூரி அதிகப்படவேண்டும்... மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். மருத்துவக் கல்லூரியை அதிகப்படுத்துவதில் சிரமங்கள் இருக்கின்றன. கல்லூரி மாணவர்களுக்கு—படுக்கை வசதி இல்லாத காரணத்தினால் நல்லமுறையில் செயல்படுவதில்லை. ஆகவே இடத்தைக் குறைக்கிறோம் என்று இந்த ஆண்டு குறைத்திருப்பதாகக் குறிப்பிட்டார்கள். அந்த நிலையை மாற்ற மருத்துவ மனைகளில் படுக்கை வசதிகளை அதிகப்படுத்தி புதிய மருத்துவக் கல்லூரி ஒன்றினையும் நம் மாநிலத்தில் ஏற்படுத்த வேண்டும். நான்காம் ஐந்தாண்டுத் திட்டத்தில் இந்திய பேரரசு 10 புதிய மருத்துவக் கல்லூரிகளை ஏற்படுத்த திட்டமிட்டிருந்தும் நம் மாநிலத்தில் புதியதாக ஒரு மருத்துவக் கல்லூரியை ஏற்படுத்த முன்வராதது குறித்து வருந்துகிறேன். மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் முயற்சி செய்து நம் மாநிலத்தில் புதியதாக ஒரு மருத்துவக் கல்லூரியைத் தொடங்குவதற்கு விரைவில் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல மின்சாரத் துறையிலே நம்முடைய நாடு மற்ற எந்த நாட்டையும்விட மிகவும் முன்னேறி வருகிறது. இந்த நாட்டில் இருக்கிற அனைத்துக் கிராமங்களுக்கும் மின்வசதி அளிக்கத் திட்டம் செயல்பட்டு வருகிறது. நம் நாட்டில் 57,678 / கிராமங்கள் இருக்கின்றன என்றால் 1966-67 இல் 25,149 கிராமங்களுக்கு மின்வசதி அளிக்கப்பட்டது. 1967-இல் இருந்தது 71-க்குள் 14,100



கிராமங்களுக்கு மின்வசதி அளிக்கப்பட்டுவிட்டது. 1971-72 இல் 9,000 கிராமங்களுக்கு மின்சார வசதி அளிக்கத் திட்டமிட்டிருக்கிறார்கள். மிச்சமிருப்பது 6,449 கிராமங்கள் தான். 1972 ஆம் ஆண்டு முடிவிற்குள்ளாக நிச்சயமாக நம் மாநிலத்தில் உள்ள எல்லாக் கிராமங்களுக்கும் மின்வசதி அளிக்கப்பட்டுவிடும் என்பது பாராட்டப்பட வேண்டிய ஒன்றாகும்.

அதேநேரத்தில் விவசாயத்திற்கு நம்முடைய நாட்டில் சுமார் 10 லட்சம் விவசாயக் கிணறுகள் இருக்கின்றன. இதுவரை 5.3 லட்சம் கிணறுகளுக்கே மின்வசதி அளிக்கப்பட்டிருக்கிறது. இன்னும் 5 லட்சம் கிணறுகள் இருக்கின்றன. புதியதாக வெட்டப்படுகிற கிணறுகள் இருக்கின்றன. ஆண்டு ஒன்றுக்கு 60 ஆயிரம் கிணறுகள் என்ற அளவில் சென்றால் எல்லாக் கிணறுகளுக்கும் மின்வசதி அளிக்க 10 ஆண்டுக்கு மேலாகலாம். ஆகவே ஆண்டு ஒன்றுக்கு 1 லட்சம் கிணறுகளுக்கு மின்வசதி அளிப்பது என்கிற அளவில் இந்தத் திட்டத்தை விரைவுபடுத்த வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் நம்மிடம் அதற்குத் தேவையான நிதிவசதி இல்லையென்று குறிப்பிட்டால், வசதி இருக்கின்றவர்களிடம் பணத்தைப் பெற்று செய்து கொடுக்கலாம். ஒரு கிணற்றுக்கு மின் இணைப்புத் தர 3 ஆயிரம் ரூபாய் ஆகும் என்று பொறியாளர் மதிப்பிட்டுச் சொல்கிறார்கள். அந்த 3 ஆயிரம் ரூபாயை வசதியுள்ளவர்களிடம் முன்பணமாகப் பெற்றுக் கொண்டு, மின்வசதி செய்து தருவதற்கு வேண்டிய ஒரு சட்டத்தை உடனடியாக கொண்டு வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த நேரத்தில் என்னுடைய தொகுதியைப் பற்றி ஒருசில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். என்னுடைய தொகுதியில் சுமார் 20 ஆயிரம் கிணறுகள் இருக்கின்றன. அதில் சுமார் 3 ஆயிரம் கிணறுகளுக்குத்தான் மின்வசதி செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது. இன்னும் 17 ஆயிரம் கிணறுகளுக்கு மின்வசதி செய்து தர வேண்டியிருக்கிறது. ஆண்டு ஒன்றுக்கு 250 கிணறுகளுக்குத்தான் மின்வசதி செய்து கொடுக்கின்ற நிலைமை இருந்து வருகிறது. இப்படிச் செய்தால் நீண்ட நாட்கள் ஆகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, ஆண்டு ஒன்றுக்குக் குறைந்தது 2 ஆயிரம் கிணறுகளுக்காவது மின்வசதியைச் செய்து கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நம்முடைய அரசு புதிதாக வேலைவாய்ப்புத் திட்டங்களை உருவாக்கியிருக்கிறது. இந்தத் திட்டத்தால் 50 ஆயிரம் பேர்களுக்கு வேலை கிடைக்கின்ற வாய்ப்பை உருவாக்கியிருக்கின்ற அரசைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். கிராமப்புறங்களிலுள்ள வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்கு இந்தியப் பேரரசு 50 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறது அந்தத் திட்டத்தின்கீழ் நம்முடைய மாநிலத்திற்குக் கிடைப்பது

[திரு. ஜி. ராமசாமி] [1971 ஜூன் 25

பட்டப் படிப்போ படித்துவிட்டு வெளியே வருகின்ற மாணவன் தானாகவே ஏதாவது தொழிலை மேற்கொண்டு வாழக்கூடிய நிலையில் மாணவர்களைப் பக்குவப்படுத்தி அனுப்ப வேண்டுமென்றும், அதற்கேற்றபடி கல்விமுறையை மாற்ற வேண்டுமென்றும் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, குடிசை மாற்று வாரியம் நகர்ப் புறங்களில் மட்டுமல்லாது, கிராமாந்திரப் பகுதிகளில் இருக்கக்கூடியவர்களுக்கும் பயன் கிடைக்கக்கூடிய வகையில் இந்த வாரியத்தை விரிவுபடுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கிராமப்பகுதிகளில் வேலைவாய்ப்பு அதிகரிப்பதற்காக மத்திய அரசின் மூலமாக 15 ஆயிரம் பேருக்கும், மாநில அரசின் மூலமாக 15 ஆயிரம் பேருக்கும் திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது. ஆக மொத்தம் 30 ஆயிரம் பேருக்கு வேலை கிடைக்க வழி செய்யப்பட்டிருக்கிறது. என்னுடைய தொகுதியாகிய திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியம் 70 ஊராட்சிகளைக் கொண்டது. தமிழகத்திலேயே மிகப் பெரியது திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியம். ஆகவே, அன்புகூர்ந்து இந்த வேலைவாய்ப்புத் திட்டத்தில் திருப்பத்தூர் ஒன்றியத்தையும் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கிராம வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் 30,000 பேருக்கும், 6,500 ஆசிரியர்களுக்கும், 2,400 பொறியாளர்களுக்கும், 50 உதவி மருத்துவர்களுக்கும், 100 மருத்துவர்களுக்கும், 205 செவிலியர்களுக்கும், 2,000 முதல்நிலை காவலர்களுக்கும் வேலைவாய்ப்பு கிடைக்க தமிழக அரசு வகை செய்திருப்பதைக் கண்டு நான் உள்ளபடியே மகிழ்ச்சியடைகிறேன். இந்த நிதிநிலை அறிக்கையை வரவேற்கிறேன்.

தமிழகத்தில் ஏறக்குறைய 12 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஊராட்சி மன்றங்கள் உள்ளன. அவைகளுக்கு உண்டான வீட்டு வரி, வாகன வரி போன்ற வரி வசூல்கள் கிராம மணியக்காரர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அவர்கள் ஒழுங்காக வசூலிப்பது இல்லை. அவர்களுக்கும் அதற்கென்று தனியாகச் சம்பளம் கொடுக்கப்படுகிறது. ஆகவே, வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கவும், வேலையற்ற படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புக் கொடுக்கும் விதத்தில் இரண்டு அல்லது மூன்று பஞ்சாயத்துக்களுக்கு ஒரு எழுத்தர் வீதம் போட்டால் தலைவர்களுக்கும் உதவியாக இருக்கும், ஓரளவுக்கு வேலையில்லாத பிரச்சனையும் நீங்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்கு உண்டான நிதி பஞ்சாயத்து நிதியிலிருந்தும் மணியக்காரர்களுக்குக் கொடுக்கும் அலவன்ஸை நிறுத்தி எழுத்தர்களுக்குக் கொடுக்கலாம் என்பதை மிகப் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இதன்மூலம் 5 ஆயிரம் பேர்களுக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்தலாம். இதை அரசு கவனத்திற்கொண்டு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



1971 ஜூன் 25] [திரு. ஜி. ராமசாமி]

மது விலக்கு ரத்து செய்வதைப்பற்றி எடுத்துக்கொண்டால் அதனால் கிராமாந்திரப் பகுதிகளுக்கு நல்ல வேலைவாய்ப்பு ஏற்படும். மரம் ஏறுபவர்களுக்கும், கள்ளை சேகரிப்பவர்களுக்கும், மற்ற வகைகளிலேயும் கிராமப் பகுதிகளில் நல்ல வேலைவாய்ப்பு ஏற்படுகிறது. கிராமப் பகுதிகளில் தீய வழிகளில் சாராயம் காய்ச்சி அதைக் குடிப்பதால் உடல் நலம் பாதிக்கப்பட்டு உயிருக்கு ஆபத்து ஏற்படக்கூடிய நிலைமையும் ஏற்படுகிறது. இவைகளைப் போக்குவதற்கு இந்த மதுவிலக்கை ரத்து செய்வது நல்லது என்றே நான் கருதுகிறேன்.

அடுத்தபடியாக என்னுடைய தொகுதியைப்பற்றிச் சில தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டுமென்று கேட்க விரும்புகிறேன். அந்தத் தேவைகளை நமது அமைச்சரவர்கள் பூர்த்தி செய்ய வேண்டுமென்று மிகப் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன். திருப்பத்தூரில் பெண்கள் கல்லூரி ஒன்றும், ஆண்கள் கல்லூரி ஒன்றும் மிகவும் அவசியம். ஏனென்றால் திருப்பத்தூரில் இருக்கக்கூடிய ஏழை எளிய குடும்பத்தைச் சேர்ந்த பெண்கள் படிக்க வேண்டுமென்றால் சேலத்திற்கோ அல்லது காட்பாடிக்கோ செல்ல வேண்டும். அது வெகு தூரத்திலே இருக்கிறது. ஏற்கனவே திருப்பத்தூரில் இருக்கும் ஆண்கள் கல்லூரியில் கிறிஸ்தவ மாணவர்களுக்கும் வாணியம்பாடி ஆம்பூரில் இருக்கும் இரு கல்லூரிகளிலும் முஸ்லீம் மாணவர்களுக்கும் முதலிடம் கொடுக்கப்படுகிறது. ஆகையால் திருப்பத்தூருக்கு ஆண்கள் கல்லூரி மிக மிக அவசியம் தேவை. ஆகவே, கல்வியமைச்சரவர்கள் இதைக் கவனித்து ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஜவ்வாது மலையில் உற்பத்தியாகும் பாம்பாற்றில் ஆண்டியப்பனூர் என்ற இடத்திற்கு அருகே அணை கட்டினால் பாசன வசதி ஏற்படும், பல ஏரிகள் நிரம்புவதற்கு வழிவகைகள் இருக்கின்றன. அந்த அணையைக் கட்டுவதால் திருப்பத்தூர் தாலுக்காவிலுள்ள பல விவசாயிகளுக்கு நலமாக இருக்கும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

ஜவ்வாது மலைப் பகுதியில் சந்தனக் கட்டைகள் கிடைக்கின்றன. அங்கே சந்தன அத்தர் தொழிற்சாலை ஏற்படுத்தினால் பல தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படும். சந்தனக் கட்டையால் பல கலைப்பொருள்களைச் செய்யக் கூடிய தொழிற்சாலையை ஆரம்பித்தால் அதனால் பல பேருக்கு வேலை வாய்ப்பு ஏற்படும் என்று கேட்டுக் கொண்டு, தொழில் அமைச்சரவர்கள் இதைச் செய்து முடிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

திருப்பத்தூர் வட்டாரத்தில் மைகா போன்ற உலோகப் பொருட்கள் இருக்கின்றன. அவைகளை எடுப்பதற்கு முயற்சி செய்கிறார்கள். ஆனால் தீவிர முயற்சி எடுக்கப்படவில்லை. எனவே

பட்டப் படிப்போ படித்துவிட்டு வெளியே வருகின்ற மாணவன் தானாகவே ஏதாவது தொழிலை மேற்கொண்டு வாழக்கூடிய நிலையில் மாணவர்களைப் பக்குவப்படுத்தி அனுப்ப வேண்டுமென்றும், அதற்கேற்றபடி கல்விமுறையை மாற்ற வேண்டுமென்றும் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, குடிசை மாற்று வாரியம் நகர்ப் புறங்களில் மட்டுமல்லாது, கிராமாந்திரப் பகுதிகளில் இருக்கக்கூடியவர்களுக்கும் பயன் கிடைக்கக்கூடிய வகையில் இந்த வாரியத்தை விரிவுபடுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கிராமப்பகுதிகளில் வேலைவாய்ப்பு அதிகரிப்பதற்காக மத்திய அரசின் மூலமாக 15 ஆயிரம் பேருக்கும், மாநில அரசின் மூலமாக 15 ஆயிரம் பேருக்கும் திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது. ஆக மொத்தம் 30 ஆயிரம் பேருக்கு வேலை கிடைக்க வழி செய்யப்பட்டிருக்கிறது. என்னுடைய தொகுதியாகிய திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியம் 70 ஊராட்சிகளைக் கொண்டது. தமிழகத்திலேயே மிகப் பெரியது திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியம். ஆகவே, அன்புகூர்ந்து இந்த வேலைவாய்ப்புத் திட்டத்தில் திருப்பத்தூர் ஒன்றியத்தையும் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கிராம வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் 30,000 பேருக்கும்; 6,500 ஆசிரியர்களுக்கும், 2,400 பொறியாளர்களுக்கும், 50 உதவி மருத்துவர்களுக்கும், 100 மருத்துவர்களுக்கும், 205 செவிலியர்களுக்கும், 2,000 முதல்நிலை காவலர்களுக்கும் வேலைவாய்ப்பு கிடைக்க தமிழக அரசு வகை செய்திருப்பதைக் கண்டு நான் உள்ளபடியே மகிழ்ச்சியடைகிறேன். இந்த நிதிநிலை அறிக்கையை வரவேற்கிறேன்.

தமிழகத்தில் ஏறக்குறைய 12 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஊராட்சி மன்றங்கள் உள்ளன. அவைகளுக்கு உண்டான வீட்டு வரி, வாகன வரி போன்ற வரி வருவல்கள் கிராம மணியக்காரர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அவர்கள் ஒழுங்காக வசூலிப்பது இல்லை. அவர்களுக்கும் அதற்கென்று தனியாகச் சம்பளம் கொடுக்கப்படுகிறது. ஆகவே, வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கவும், வேலையற்ற படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புக் கொடுக்கும் விதத்தில் இரண்டு அல்லது மூன்று பஞ்சாயத்துக்களுக்கு ஒரு எழுத்தர் வீதம் போட்டால் தலைவர்களுக்கும் உதவியாக இருக்கும், ஓரளவுக்கு வேலையில்லாத பிரச்சனையும் நீங்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதற்கு உண்டான நிதி பஞ்சாயத்து நிதியிலிருந்தும் மணியக்காரர்களுக்குக் கொடுக்கும் அலவன்ஸை நிறுத்தி எழுத்தர்களுக்குக் கொடுக்கலாம் என்பதை மிகப் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இதன்மூலம் 5 ஆயிரம் பேர்களுக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்தலாம். இதை அரசு கவனத்திற்கொண்டு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



மது விலக்கு ரத்து செய்வதைப்பற்றி எடுத்துக்கொண்டால் அதனால் கிராமாந்திரப் பகுதிகளுக்கு நல்ல வேலைவாய்ப்பு ஏற்படும். மரம் ஏறுபவர்களுக்கும், கள்ளை சேகரிப்பவர்களுக்கும், மற்ற வகைகளிலேயும் கிராமப் பகுதிகளில் நல்ல வேலைவாய்ப்பு ஏற்படுகிறது. கிராமப் பகுதிகளில் தீய வழிகளில் சாராயம் காய்ச்சி அதைக் குடிப்பதால் உடல் நலம் பாதிக்கப்பட்டு உயிருக்கு ஆபத்து ஏற்படக்கூடிய நிலைமையும் ஏற்படுகிறது. இவைகளைப் போக்குவதற்கு இந்த மதுவிலக்கை ரத்து செய்வது நல்லது என்றே நான் கருதுகிறேன்.

அடுத்தபடியாக என்னுடைய தொகுதியைப்பற்றிச் சில தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டுமென்று கேட்க விரும்புகிறேன். அந்தத் தேவைகளை நமது அமைச்சரவர்கள் பூர்த்தி செய்ய வேண்டுமென்று மிகப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். திருப்பத்தூரில் பெண்கள் கல்லூரி ஒன்றும், ஆண்கள் கல்லூரி ஒன்றும் மிகவும் அவசியம். ஏனென்றால் திருப்பத்தூரில் இருக்கக்கூடிய ஏழை எளிய குடும்பத்தைச் சேர்ந்த பெண்கள் படிக்க வேண்டுமென்றால் சேலத்திற்கோ அல்லது காட்பாடிக்கோ செல்ல வேண்டும். அது வெகு தூரத்திலே இருக்கிறது. ஏற்கனவே திருப்பத்தூரில் இருக்கும் ஆண்கள் கல்லூரியில் கிறிஸ்தவ மாணவர்களுக்கும் வாணியம்பாடி ஆம்பூரில் இருக்கும் இரு கல்லூரிகளிலும் முஸ்லீம் மாணவர்களுக்கும் முதலிடம் கொடுக்கப்படுகிறது. ஆகையால் திருப்பத்தூருக்கு ஆண்கள் கல்லூரி மிக மிக அவசியம் தேவை. ஆகவே, கல்வியமைச்சரவர்கள் இதைக் கவனித்து ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஜவ்வாது மலையில் உற்பத்தியாகும் பாம்பாற்றில் ஆண்டியப்பனூர் என்ற இடத்திற்கு அருகே அணை கட்டினால் பாசன வசதி ஏற்படும், பல ஏரிகள் நிரம்புவதற்கு வழிவகைகள் இருக்கின்றன. அந்த அணையைக் கட்டுவதால் திருப்பத்தூர் தாலுக்காவிலுள்ள பல விவசாயிகளுக்கு நலமாக இருக்கும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

ஜவ்வாது மலைப் பகுதியில் சந்தனக் கட்டைகள் கிடைக்கின்றன. அங்கே சந்தன அத்தர் தொழிற்சாலை ஏற்படுத்தினால் பல தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படும். சந்தனக் கட்டையால் பல கலைப்பொருள்களைச் செய்யக் கூடிய தொழிற்சாலையை ஆரம்பித்தால் அதனால் பல பேருக்கு வேலை வாய்ப்பு ஏற்படும் என்று கேட்டுக் கொண்டு, தொழில் அமைச்சரவர்கள் இதைச் செய்து முடிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

திருப்பத்தூர் வட்டாரத்தில் மைகா போன்ற உலோகப் பொருட்கள் இருக்கின்றன. அவைகளை எடுப்பதற்கு முயற்சி செய்கிறார்கள். ஆனால் தீவிர முயற்சி எடுக்கப்படவில்லை. எனவே

[திரு. ஜி. ராமசாமி] [1971 ஜூன் 25

அதற்கும் அங்கே ஒரு தொழிற்சாலை துவங்க முயற்சி எடுக்க வேண்டுமென்று மாண்புமிகு தொழில் அமைச்சரவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

திருப்பத்தூர் அரசாங்க மருத்துவ மனை பழைய கட்டிடமாக இருக்கிறது. ஒரு நாளைக்கு ஆயிரத்திற்கு மேற்பட்டவர்கள் சிகிச்சை பெறுகிறார்கள். 100-க்கு மேற்பட்ட படுக்கைகள் இருக்கின்றனவென்றாலும் அங்கு வசதி குறைவாகயிருக்கிறது. எனவே, இதற்கு ஒரு கட்டிட வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு சுகாதார அமைச்சரவர்களை வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கின்றேன்.

அடுத்தபடியாக, ஜோலார்பேட்டை ஜங்ஷனில், நாட்றாம் பள்ளியையும் ஜோலார்பேட்டையையும் இணைப்பதற்கு மேம்பாலம் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அந்தப் பகுதியில் கிட்டத்தட்ட 25 கிராமங்களுக்கு அது வசதியாக இருக்கும். நேற்று இரயில்வே ஜெனரல் மேனேஜரைச் சந்தித்த பொழுது அவர்கள் அரசாங்கம் உதவி செய்தால் செய்யலாம் என்று கூறியிருக்கிறார்கள். மாண்புமிகு முதல்வரவர்கள் இதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, மாண்புமிகு முதல் அமைச்சரவர்களால் அளிக்கப்பட்ட இந்த அறிக்கையானது சோஷலிச சமுதாயத்தை உருவாக்கும் முறையில் அமைந்திருக்கின்ற காரணத்தால் இதை வரவேற்று பாராட்டி என் உரையை முடிக்கிறேன். வணக்கம்.

* திரு. பொன். சொக்கலிங்கம்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய முதலமைச்சரவர்களால் 1971-72-ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கை கொண்டு வரப்பட்டு இந்த மாமன்றத்தில் இந்த நிதி நிலை அறிக்கையின் மீது பேசுகின்ற ஒரு வாய்ப்பு பெற்றமைக்காக நான் மிகவும் பெருமையடைகிறேன். இந்த நிதிநிலை அறிக்கையில் ஏழை எளியவர்களுக்கு குறிப்பாக விவசாயப் பெருங்குடி மக்களுக்கு உழவர் பெருங்குடி மக்களுக்கு நல்ல வழிவகைகள் செய்து தரப்பட்டிருப்பது கண்டு உழவர் சமுதாயம் தமிழக அரசையும், பேரறிஞர் அண்ணா அவர்களால் உருவாக்கப்பட்ட நம்முடைய கலைஞர் அவர்களையும் மிகவும் பாராட்டுகிறார்கள். அதோடு மட்டுமல்லாமல், பொருளாதாரத் துறையில் தாழ்ந்த நிலையில் இருக்கும் சமுதாயத்தில் இருக்கும் மக்களுக்கு, ஆதிக்க வெறியில் சிக்கிச் சீரழியும் மக்களின் மேம்பாட்டிற்கு நல்ல வழிவகைகள் செய்யப்பட்டிருப்பது கண்டு மக்கள் மிகவும் மனமகிழ்ச்சியடைகிறார்கள்.

இந்த நேரத்தில் உழவர் பெருங்குடி மக்களுக்கு உண்டாகும் மகிழ்ச்சியை இங்கே சொல்லும் நேரத்தில் ஐ.எம்.எஸ். லோன் என்ற பெயரால் உழவர்களுக்கு வழங்கப்படுகின்ற கடன்களை அவர்கள் கட்ட வேண்டிய காலத்தில், உரிய காலத்தில் கட்டத் தவறினால்



1971 ஜூன் 25] [திரு. பொன். சொக்கலிங்கம்]

ஒரு ஆண்டுக் காலத்திற்குரிய கட்டணத்தை பெனல்ட்டி வட்டியாக வசூலிக்கிறார்கள். அதைத் தவிர்க்க வேண்டுமென்று இந்த மாமன்றத்திலிருக்கும் தலைவர் மூலமாக நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இந்த இடத்தில் உழவர் பெருங்குடி மக்கள் தங்களுக்கு அந்தச் சலுகைகளை அளிக்க அரசாங்கம் முன்வந்தால் மிக மகிழ்ச்சியோடு உற்பத்தித் துறையில் கவனம் செலுத்தி நாட்டில் அதிக உற்பத்தியைச் செய்வார்கள் என்று இந்த நேரத்தில் நானும் உழவர் பெருங்குடிச் சமுதாயத்தைச் சேர்ந்த ஒருவன் என்பதால் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கூட்டுறவுத் துறையில் மிகுந்த கவனம் செலுத்தி மக்களுக்குப் பல்வேறு வழிகளில் இங்கே சலுகைகள் செய்யப்பட்டிருப்பதை இந்த அறிக்கையில் காண்கிறேன். என்றாலும்கூட, கூட்டுறவுத் துறையில் கடந்த காலத்தில் நில அடமான பாங்காக இருந்தது இப்பொழுது நிலவள வங்கியாக மாற்றப்பட்டிருக்கிறது. இந்த நிலவள வங்கிகள் பழைய கடன்தாரர்களுக்கு முன்பு வசதி செய்ததுபோல மீண்டும் இப்போது வசதி செய்து தர வேண்டுமென்று இந்த நேரத்தில் இங்கே இல்லாததை நான் காண்கிறேன். அப்படி ஒரு நிலையை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று நான் இந்த மாமன்றத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பாசன வசதிகள் குறிப்பாக சிதம்பரம் வட்டாரத்தில் வீராணம் ஏரியிலிருந்து வருவதைப்பற்றி கடந்த கூட்டத்தின்பொழுது கூட நான் குறிப்பிட்டேன். வீராணம் ஏரியிலிருந்து சென்னைக்குக் குடிநீர் கொண்டு வர ஒரு சிறப்பான திட்டத்தை இந்த அரசு உருவாக்கிக் கொண்டிருக்கிறது. வேலையும் துவங்கி நடக்கிறது. இந்த வீராணம் ஏரி மிகவும் மோசமான நிலையில் தூர்ந்து கொண்டிருக்கிறது. அந்த ஏரியைச் சீர்படுத்தி செம்மையுறச் செய்ய வேண்டுமென்று நம்முடைய வாரியத் தலைவரவர்களையும், மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சரவர்களையும் அழைத்துக்கொண்டு போய்க் காட்டினோம். ஆகையால் அந்த ஏரியைச் சீர் செய்வதற்குரிய திட்டத்தை நம்முடைய முதல்வரவர்கள் செய்து முடித்துத் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். காரணம் என்னவென்றால், அந்தப் பகுதியிலுள்ள மக்கள், வீராணம் ஏரியிலிருக்கும் தண்ணீரை சென்னைக்குக் கொண்டு வந்துவிட்டால் அங்கேயுள்ள விவசாயத்திற்குப் பாதகமாக இருக்குமென்ற அச்சத்தோடு இருக்கிறார்கள் அந்த அச்சத்தைப்போக்கும் முறையில் வீராணம் ஏரியைச் சீர் செய்து அது செம்மையுற இருக்க வேண்டுமென்று நான் நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக, சிதம்பரம் வட்டாரத்தைப் பொறுத்த வரையிலும் போக்குவரத்துச் சாலைகள் மிகவும் மோசமாக இருக்கிறது என்பதை இங்கே கவனத்திற்குக் கொண்டு வருவது சாலப்பொருத்தமாக இருக்கும். அங்கேயிருக்கும் போக்குவரத்துச் சாலைகள்

நீர் தாழ்ந்த பூமியாக இருப்பதால் அந்தச் சாலைகள் சீராக்கி செப்பனிடப்படாமல் இருக்கின்றன. அது செம்மையுற செப்பனிடப் பட்டால்தான் விவசாயிகளுக்கு உற்ற துணையாக இருக்கும் என்று கூறிக்கொள்ளுகிறேன். குறிப்பாக, கண்ணங்குடி, ஓரத்தூர் வழியாக வீராணம் செல்லும் சுமார் 10 மைல் பாதையில் மக்கள் செல்ல முடியாமல் கஷ்டப்படுகிறார்கள். அதைச் செப்பனிட்டுத் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திருமுட்டம் பகுதியில் பத்து மைல் தூர பாதை ஒன்று இருக்கிறது. அந்தப் பாதை சுமார் 50, 60 கிராமங்களுக்குப் பயன் படும். ஆனால் அங்கு சாலைப் போக்குவரத்து வசதியில்லாமல் மக்கள் பெரிதும் கஷ்டப்படுகிறார்கள். முடிகண்ட நல்லூரிலிருந்து ஆனந்தக்குடி வழியாக விருத்தாசலம் வரையில் செல்லும் பாதை இருக்கிறது. அதையும் செப்பனிட்டுத் தர வேண்டுமென்று வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, மதுவிலக்குக் கொள்கையை ரத்து செய்வதால் பொதுமக்கள் நோய் நொடியின்றி வாழச் செய்ய முடியுமென்பதை இங்கே நான் நினைவுபடுத்தலாம் என்று கருதுகிறேன். இதற்கு முன்பு பேசிய மன்றத்திலுள்ள உறுப்பினர்களில் மதுவிலக்கை ரத்து செய்யக்கூடாது என்று சில தோழர்களும், மதுவிலக்கை ரத்து செய்ய வேண்டுமென்று பெரும்பான்மையினரும் சொன்னார்கள். மதுவிலக்கை ரத்து செய்வதால்; குறிப்பாக கள் குடித்தால் உழவர் பெருங்குடி மக்கள் நல்ல முறையில் விவசாயத்தில் ஈடுபட்டு வேலை செய்வார்கள். அதுமட்டுமின்றி, நோயின்றி வாழ வழிவகைகள் செய்தவர்கள் ஆவோம். இங்கே பேசப்பட்டது, காலையிலே கேள்வி நேரத்திலேகூட புற்று நோய் பற்றிப் பேசப்பட்டது. கள் குடித்தால் புற்று நோய் கூட வராமல் தடுக்க மிகவும் வசதியாக இருக்கும் என்பதை இந்த நேரத்தில் நினைவிலே கொள்ள வேண்டும். கள் குடிப்பதால் மக்களை இன்னும் பலவிதமான நோய்களிலிருந்து தவிர்த்து நல்ல முறையிலே வாழ வழி செய்தவர்களாவோம் என்று இந்த நேரத்தில் நினைவு படுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஒரு மாதத்துக் கள்ளை ஒரு மனிதன் 48 நாட்கள் சாப்பிடுவானேயானால் உள்ளபடியே மிகத் திடகாத்திரத்தோடு விவசாயம் செய்வதோடுமட்டுமல்லாமல் நல்ல நீரோட்டமுள்ள மனிதனாகவும் இருப்பான் என்று இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன் முன்பெல்லாம் கள் குடித்ததால் எவ்வளவோ பேர்கள் வீரமாக வாழ்ந்து வந்தார்கள். இப்போது பல பேர் நடப்பதற்குக் கூடத் தடுக்கிக் கொண்டிருக்கும் நிலையிலே உள்ளவர்கள் கள் குடித்தால் திடமுள்ளவர்களாக, நெஞ்சை நிமிர்த்தி நடக்கக்கூடியவர்களாக இருப்பார்கள். நம்முடைய முஸ்லீம் லீக் தோழர்கள் கள் கூடாது என்று இங்கே சொல்லுகிறார்கள்; ஆனால் அவர்களிலே எவ்வளவு பேர்கள் காரைக்காலிலும் பாண்டிச்சேரியிலும் கள் குடித்துக் கொண்டிருக்கிறார்கள்





என்பதை அவர்களே உணர்வார்கள். கள் குடிப்பதன் மூலம் நாம் குடும்பக் கட்டுப்பாட்டுக்குக் கூட அதிகமான பணத்தைச் செலவு செய்ய வேண்டிய அவசியம் இருக்காது. கள்ளைக் குடித்துவிட்டு வீட்டு திண்ணையிலே பேசாமல் தூங்கிக் கொண்டிருப்பான். இதனால் மக்கள் தொகைப் பெருக்கம் குறையும். இதனை முதலமைச்சர் அவர்கள் உடனடியாகக் கொண்டு வரவில்லையே என்பது தான் வருத்தம். உடனடியாக இந்த மதுவிலக்கை ரத்து செய்ய வேண்டிய நிலையை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, அன்மையில் அடிப்படைச் சுகாதாரப் பணியாளர்களில் எஸ்.எஸ்.எல்.சி. வரை படித்தவர்களை நிரந்தர ஊழியர்களாக ஆக்கியிருக்கிறார்கள். எஸ்.எஸ்.எல்.சி. வரை படிக்காதவர்கள் நாலாயிரத்துக்கும் அதிகமாக இருக்கிறார்கள். அவர்களையும் நிரந்தரமாக்கினால் சிறப்பாக இருக்கும்.

புவனகிரி வட்டாரத்தில் இரண்டு விவசாயப் பண்ணைகள் இருக்கின்றன. அவை சிறப்பாகப் பணிபுரியாமல் இருக்கின்றன. அவற்றிலிருந்து நல்ல பொறுக்கு விதைகளைத் தந்தால் சிதம்பரம் வட்டாரத்தில் உள்ள விதை குறைபாடுகளைப் போக்க உறுதுணையாக இருக்கும். கீரப்பாளையம் வழியாக விருத்தாசலம் செல்லும் பகுதியில் கோனூற்று மூலை என்ற இடத்தில் வெள்ளாற்றின் கரை அபாயகரமான நிலையில் இருக்கிறது. அதைச் சீர்செய்து செம்மையாக்கித் தர வேண்டுமென்று கேட்டுக் கொண்டு பேச வாய்ப்புத் தந்தமைக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* திரு. என். மருதாசலம்: கனம், துணைச் சபாநாயகர் அவர்களே, 1971-72-ஆம் ஆண்டு திருத்தப்பட்ட நிதி நிலை அறிக்கையில் கிராமப் பகுதி மக்களுக்குத் தொழில் வாய்ப்புத் தரவும், புதிய புதிய தொழில்களைத் தொடங்குவதற்கும் சோஷலிச சமுதாயத் திட்டங்களைக் கொண்டதாக அமைந்திருக்கிறது.

அதே சமயத்தில் தொழில் வளம் நிறைந்த கோவை நகரத்தில் ஐந்து மில்கள் மூடப்பட்டிருக்கின்றன. பங்கஜா மில், முருகன் மில். காளீஸ்வரா மில். சோமசுந்தர மில், ஸ்டேன்ஸ் மில்லில் ஏ பி சி மூன்று ஆகியவை மூடப்பட்டுக் கிடக்கின்றன. சுமார் 7,000 தொழிலாளர்களுக்கு மேல் வேலையில்லாமல் அவதிப்படுகிறார்கள். அந்தத் தொழிலாளர்களுடைய நிலைமையைப் பற்றி இந்த வரவு செலவுத் திட்டத்திலே குறிப்பிடாதது வருந்தத்தக்கது. அந்தத் தொழிலாளர்கள் இன்று அந்தப் பகுதியிலே பிச்சை எடுத்து உண்ணும் நிலைமையில் இருக்கிறார்கள். பிச்சையெடுத்துக் கொண்டிருக்கும் தொழிலாளர்களுக்கு வாழ்வளிக்கும் வகையில் அரசாங்கம் அந்த ஐந்து மில்களையும் டெக்ஸ்டைல் கார்ப்பரேஷன் மூலமாக எடுத்து நடத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. எம். கந்தசாமி : பேரவைத் துணைத் தலைவரவர்களே. மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களால் கொண்டு வரப்பட்ட 1971-72 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை ஆதரித்து என்னுடைய கருத்துக்களை நான் தெரிவித்துக் கொள்ள முன் வருகின்றேன். ஆண்டாண்டு தோறும் பிப்ரவரி, மார்ச்சு மாத இறுதியில் நிதி நிலை அறிக்கை அளிக்கப்படும். இந்த ஆண்டு வழக்கத்திற்கு மாருக ஜூன் மாதத்தில் நிதி நிலை அறிக்கை இருப்பது உள்ளபடியே காலம் தாழ்ந்து சட்ட மன்ற நிகழ்ச்சியிலே ஒரு புதுமையைக் காண வேண்டுமென்ற நோக்கத்தோடு, சட்ட மன்றத்தைக் கலைத்து விட்டு, மறுபடியும் திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தலில் பெரும் வெற்றி வாகை சூடி, கலைஞர் அவர்களே மறுபடியும் முதலமைச்சராக வந்து இந்த நிதிநிலை அறிக்கையை எல்லாத் துறையினரும் நல்ல முறையில் முன்னேற வேண்டுமென்ற அடிப்படையில், அது தாழ்த்தப்பட்டவர்களாக இருந்தாலும் சரி, பிற்பட்ட வகுப்பினராக இருந்தாலும் சரி, விவசாயப் பெருங்குடி மக்களாக இருந்தாலும் சரி, எல்லோரும் வாழவேண்டுமென்று கருத்திலே ஒவ்வொரு பாராவாக, பிரித்து ஒவ்வொரு துறையில் இருப்பவர்களையும் அவர்களுக்கு செய்து இருக்கும் நன்மைகள் பற்றியும் மிக விளக்கமாக, புள்ளி விவரத்தோடு இந்த அறிக்கையிலே தந்திருக்கிறார்கள்.

முதலாவதாக, விவசாயத்துறையை எடுத்துக்கொண்டால், கூட்டுறவுத் துறையை எடுத்துக்கொண்டால், மின்சாரத் துறையை எடுத்துக்கொண்டால், அவற்றின் பணி நல்ல முறையில் இருந்ததன் காரணமாக மழை பெய்யாவிட்டாலும், வேளாண்மைத் துறையில் கடந்த நான்காண்டு காலமாகத் தமிழகம் முன்னேறி வந்து இருப்பது கண்டு உள்ளபடியே நாம் பாராட்ட வேண்டும். அது மட்டுமின்றி 4 ஆண்டு காலமாகத் தமிழ் நாடு உணவுத் துறையிலே தன்னிறைவு பெற்று இருக்கிறது.

குறிப்பாக, விவசாயிகள் எல்லாம் தமிழக அரசு கொடுத்த கடன் வசதிகளை அவ்வப்போது பயன்படுத்தியதன் காரணமாகவும், விவசாயிகளுக்கு அரசும் உடனுக்குடன் கடன் கொடுத்ததாலும், மின்சாரத் துறையிலே பம்பு செட்டுகளுக்கு எல்லாம் உடனே இணைப்பு கொடுத்ததாலும், இன்று உணவுப் பிரச்னை தீர்ந்து இருக்கிறது. விவசாயிகளும் இதனால் நல்ல உற்சாகத்தோடு உழைத்து வருகிறார்கள். இந்தக் காலத்தை உழவர்களின் பொற்காலம் என்று சொல்லலாம். உழவர்களின் வாழ்வில் நல்ல மறுமலர்ச்சி ஏற்பட்டு இருப்பதன் காரணமாக, கிராமத்தில், நகரத்தில் இருப்பவர்கள் கூட விவசாயத்திலே பங்கு பெறவேண்டுமென்ற நல்ல குறிக்கோளோடு இன்று இந்தஅரசாங்கம் தரும் கடன் வசதிகளைப் பயன்படுத்திக் கொண்டு, வேளாண்மைத் துறையிலே முன்னேறி வருகிறார்கள்.

என்னுடைய மாவட்டத்தைப் பொறுத்தவரையில் மருத்துவக் கல்லூரி வேண்டுமென்று சொல்லி, அதற்காகப் பணத்தைச் சேர்த்து கடைசியில் மருத்துவக் கல்லூரி இல்லை என்று ஆகி, விவசாயக்





கல்லூரி நிச்சயம் வரும் என்று இந்த அரசாங்கம் உறுதி தந்து இருக்கிறது. என்னுடைய மாவட்டத்தைச் சேர்ந்தவரே வேளாண்மைத் துறை அமைச்சராக இருப்பதால திருச்சி மாவட்டத்தில் நிச்சயமாக ஒரு விவசாயக் கல்லூரி அடுத்த ஆண்டிலே தொடங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மது விலக்கைப் பொறுத்தவரையில் பலர் பலவிதமாகச் சொன்னார்கள். மேலவையிலே கூட சாதிக் அலி காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவர்கள் சிலர் துணிவோடு வரவேற்று இருக்கிறார்கள். நமது முதலமைச்சர் அவர்கள் நான்காண்டு காலமாக சிந்தித்து, சிந்தித்து இதை எடுப்பதா வேண்டாமா, நாட்டு மக்கள் என்ன கருதுகிறார்கள், உள்ளபடியே காந்தியக் கொள்கை ஆயிற்றே, பேரறிஞர் அண்ணா அவர்கள் வலியுறுத்திய கொள்கை ஆயிற்றே என்று சிந்தித்து இதை எடுத்துத் தீர வேண்டுமென்ற நிலைமைக்கு வரக்கூடாது என்பதற்காக மத்திய அரசின் மூலமாக நிதி உதவி கேட்டும், நடைமுறைப்படுத்துவதில் ஏற்படும் கஷ்ட நஷ்டங்களைக் கருத்தில் கொண்டும், மத்திய அரசின் உதவி கிடைக்காது என்று தெரிந்து விட்ட பிறகு, மிகுந்த மன வருத்தத்தோடு மது விலக்கை ரத்து செய்கிறேன் என்று கூட சொல்லவில்லை, ஒத்தி வைக்கிறேன் என்று தான் அறிவித்து இருக்கிறார்கள்.

இந்த ஆண்டின் நிதிநிலை அறிக்கை இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, முதல் பகுதி இரண்டாம் பகுதி தனித்தனியே சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டது. முதல் பகுதி வழங்கப்பட்ட நேரத்திலே, சட்ட மன்ற உறுப்பினர்களுக்கே கூட மது விலக்கு ரத்து செய்யப்படுமா என்று தெரியாது. நாங்கள் எல்லாம் கூட நினைத்தோம், தேர்தல் காலத்தில் மக்கள் இடத்தில் மதுவிலக்கை ரத்து செய்வதை யோசித்து முதலமைச்சர் முடிவெடுப்பார் என்று சொன்னோமே என்று நினைத்தோம். இன்று நல்ல முறையில் அதை ஒத்தி வைத்ததற்கு நாங்களெல்லாம் மிகவும் வரவேற்கிறோம். இந்த நாட்டில் இருப்பவர்கள் எல்லோரும் குடிப்பவர்கள் அல்ல. குடிப்பவர்களும் குடிக்காதவர்களும் இதை உள்ளபடியே வரவேற்கிறார்கள்.

காந்தீயக் கொள்கையான, அஹிம்சை, மதுவிலக்கு ஆகிய இரண்டு கொள்கைகளும் ஒரு சேர எல்லா மாநிலங்களும் பின்பற்றப்பட்டிருக்குமானால், நிச்சயமாக நன்றாக இருந்திருக்கும். இன்று உள்ளபடியே முதல்வர் அவர்கள் விரும்பி மதுவிலக்கை ஒத்தி வைக்கவில்லை என்பதை நாம் தெரிந்து கொண்டிருக்கிறோம் இருந்தாலும் மிகத் துணிவோடு எது வந்தாலும் வரட்டும் என்று தமிழகத்தின் மக்களின் வாழ்வை எண்ணி இதை துணிந்து எடுத்ததற்காக அவர்களை உள்ளபடியே நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். காந்தியார் அவர்கள் கூட உள்ளபடியே அஹிம்சை வழியில் வந்தாலும் அவர்கள் கூட நோய்வாய்ப் பட்டிருந்த கன்றுக்குட்டி இறந்து போகிற நிலைமையில் இருக்கும்போது, கொன்றுவிட வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அது போல

[திரு. என். மருதாசலம்] [1971 ஜூன் 25

தொழிற் தகராறு சட்டத்தை அரசாங்கம் கொண்டு வந்திருக்கிறது. இன்று தொழில் கோர்ட்டிலே தொழிலாளர்களின் பேரில் கேஸ்கள் நடக்கின்றன. ஐந்தாறு வருஷங்கள் தொடர்ந்து கேஸ்கள் நடக்கும் நிலை இருக்கிறது. 1968-ம் ஆண்டு கோவை ஆஸ்பெஸ்டாஸ் தொழிற்சாலை தொழிலாளர் 11 பேரை நிறுத்தினார்கள். அவர்கள் பேரில் இன்னும் கேஸ் நடந்து கொண்டிருக்கிறது. இந்த கேஸ்களை இரண்டு மூன்று மாதத்திற்குள்ளாக முடிக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும். அப்படி நீடித்து கேஸை நடத்தினால் மில் முதலாளிகளிடமிருந்து அந்தத் தொழிலாளர்களுக்குப் பாதிச் சம்பளத்தையாவது கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்படி இருந்தால் மில் முதலாளிகள் கேஸைத் துரிதமாக நடத்தி முடிக்க முற்படுவார்கள். இந்த முறையில் அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று தாழ்மையோடு கேட்டுக் கொள்கிறேன்.

அரிசனங்கள் சம்பந்தப்பட்ட வரையில் இந்த அரசு 16 சதவிகிதமாக அவர்களுக்கென்று ஒதுக்கியிருந்ததை 18 சதவிகிதமாக உயர்த்தியிருக்கிறார்கள். அது வரவேற்கத்தக்க விஷயம். அதே நேரத்தில் பின் தங்கிய வகுப்பினருக்கு 25 சதவிகிதம் என்று இருந்ததை 31 சதவிகிதம் என்று உயர்த்தியிருக்கிறார்கள். ஆறு சதவிகிதம் உயர்த்தியிருக்கிறார்கள். அதே போன்று அரிசனங்களுக்கும் 20 சதவிகிதமாக உயர்த்த வேண்டும். கிராமப் பகுதிகளில் உள்ள பஞ்சாயத்து யூனியன்களிலும் அரசாங்க அலுவல்களிலும் காலி ஸ்தானங்கள் இருப்பதை நிரப்ப அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த பிற்பட்ட தாழ்த்தப்பட்ட மக்களுக்கு தகுதி இல்லை, திறமை இல்லை என்று கூறி, தட்டிக் கழித்து விடுகிறார்கள். இதிலே அரசு நடவடிக்கை எடுத்து ஒதுக்கப்பட்ட ஸ்தானங்களைப் பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அரிசன நல இலாகாவில் மாநில அளவிலானாலும், மாவட்ட அளவிலானாலும் சரி, தாழ்த்தப்பட்ட மக்களுடைய நலனைப் பாதுகாக்கும் வகையில் தாழ்த்தப்பட்ட மக்களே தலைமைப் பதவி வகிப்பவர்களாக இருந்தால்தான் அவர்களுக்கு நன்மை செய்ய முடியும். கோவையிலும் அரிசன வெல்பேர் ஆபீசர் தாழ்த்தப்பட்டவராக இருந்தால் உண்மையாக வேலை செய்ய முடியும். இது பற்றியும் சர்க்கார் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஸ்காலர்ஷிப் கொடுக்கும்போது உயர்தரப் பள்ளியில் படிப்பவர்களுக்கு 23 ரூபாய் கொடுக்கப்படுகிறது. அது போன மாதத்தில் 10 ரூபாய்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவ்வாறு குறைவாகக் கொடுப்பதற்கு என்ன காரணம் என்று அரசு பரிசீலனை செய்ய வேண்டும். தவறாக அவ்வாறு கொடுப்பவர்கள் மேல் நடவடிக்கை எடுக்க அரசாங்கம் முற்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



1971 ஜூன் 25] [திரு. என். மருதாசலம்]

கோவையில் சுகாதார அடிப்படையில் ஒரு ஆஸ்பத்திரி இருக்கிறது. சர்ஜிகல் வார்டில் 50 படுக்கைகள் இருக்கின்றன. அதைத் தவிர பாயிலும் படுத்துக் கொண்டிருக்கிறார்கள். 100 பேர் படுத்துக் கொண்டிருக்கும் இடத்தில் 29 போர்வைதான் இருக்கிறது, படுக்கப் பாய் கிடையாது. தலையணை இல்லை, படுக்கைகளுக்கு மறுதுணி போட வழி இல்லை. ஆஸ்பத்திரியைச் சுகாதாரமாக வைத்திருக்கும் முறையில் டாக்டர்களும் நல்ல முறையில் வேலை செய்ய வேண்டும். அப்படி இருந்தால்தான் நோய் சீக்கிரம் போகும். அரசாங்க ஆஸ்பத்திரியில் உள்ள இந்த நிலைகளைப் போக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும்.

அதேமாதிரி இன்று நில வள வங்கிகள் இருக்கின்றன. நில வள மு.ப. 11-30
வங்கியில் இருக்கும் நிலைமைகளைப் பற்றி எனக்கு முன்னாலே பேசிய சுப்பு அவர்கள் சொன்னார்கள். நில வள வங்கியில் நாமினேஷன் மெம்பர்கள் போடுகிறார்கள். அதிலே ஆளும் கட்சியைச் சார்ந்தவர்களைத் தான் போடுகிறார்கள். தாழ்த்தப்பட்டவர்களைக் கூட எடுப்பது இல்லை. அது மாத்திரம் அல்ல, இன்று கோவில்களில் டிரஸ்டி நியமனத்தின் போதும் தாழ்த்தப்பட்டவர்களைப் போடுவது இல்லை. ஆளும் கட்சியைச் சார்ந்தவர்களைத் தான் போடுகிறார்கள். இப்படி எந்தக் கட்சியையும் பயன்படுத்தாமல் செய்து கொண்டு வருவது சரியல்ல. இன்று சோஷலிச சமுதாயத்தின் அடிப்படையில் பார்க்கும் போது அந்த அடிப்படையில் எல்லோரையும் சமமாக போட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியைப் பொறுத்த வரையில் சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். என்னுடைய தொகுதி கோவையிலே இருந்து கேரளா எல்லை வரையிலும் இருக்கிறது. அப்படி வருகிற ஒவ்வொரு கிராமத்திலும் குடிப்பதற்குத் தண்ணீர் கிடையாது. ஒரு பஞ்சாயத்திலும் கிணறு தோண்டப் பணம் கிடையாது. ஆகவே, அரசாங்கம் ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு குழாய்க் கிணறு வெட்டி மக்களுக்குப் பயன் உள்ள வகையில் கொடுப்பதற்கு தண்ணீர் விநியோகம் செய்வதற்குப் பொறுப்பு ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அந்த முறையில் செய்தால் தான் அந்தப் பகுதியில் இருக்கும் மக்கள் முன்னேறுவார்கள் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

தொழிலாளர்கள் அரசு என்று சொல்கிறோம். தொழிலாளர்கள் நல்ல முறையில் இருப்பதற்கு அவர்களுக்கு என்னென்ன வேண்டுமோ அவற்றைச் செய்து தர வேண்டும். மூடிய மில்களைத் திறப்பதற்கு அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுத்து அதைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது).

[திரு. எஸ். ஆறுமுகம்] [1971 ஜூன் 25

நம்முடைய கழகத் தலைவர் மாண்புமிகு முதல்வர் அவர்கள் மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். சேலம் இரும்பாலை இங்கே துவக்கப்படக் கூடிய நிலைமை பற்றி தெளிவாகச் சொன்னார்கள். அதே நேரத்தில் காவிரி தண்ணீர் பிரச்சினை, ஹேமாவதி அணைக்கட்டு கட்டுவதால் தமிழகத்திற்கு ஏற்படும் பெரு அபாயம் இவற்றைப்பற்றியும் தெளிவாக எடுத்துச்சொல்லியிருக்கிறார்கள். இந்த நேரத்தில் எதிர் கட்சியில் இருக்கும் சிண்டிகேட் கட்சியினரை நான் ஒன்று கேட்டுக்கொள்கிறேன். சேலம் இரும்பாலை கொடுக்க மத்திய அரசு காலதாமதம் செய்து வருகிறது, ஆகவே உடனடியாக அந்தத் திட்டத்திற்கு அனுமதி அளிக்க வேண்டுமென்று மத்திய அரசை வற்புறுத்துவதற்காக பேரறிஞர் அண்ணா அவர்கள் எழுச்சி நாள் கொண்டாட வேண்டுமென்று சொன்ன நேரத்தில் அவர்களுடைய கட்சியைச் சார்ந்தவர்கள் கூடாது, எழுச்சி நாள் வேண்டாம் போய் தூங்குங்கள் என்று சொன்னார்கள். அதே போல் இந்த காவிரி தண்ணீர் பிரச்னை நடுவர் தீர்ப்பிற்கு விட வேண்டுமென்று மத்திய அரசை வலியுறுத்திக் கேட்பதற்காகவும், இந்தப் பிரச்சினையில் உடனடியாக தீர்வு காண வழி காண வேண்டுமென்பதற்காகவும், எழுச்சி நாள் வரக்கூடிய நேரத்தில் அவர்களுடைய கட்சியின் கொள்கை எந்த அளவுக்கு இருக்கப் போகிறது என்பதை நாம் பார்க்கவேண்டும். அல்லது, சேலம் இரும்பாலைக்கு எழுச்சி நாள் கொண்டாடவேண்டுமென்று சொன்னபோது, போய் தூங்குங்கள் என்று சொன்னது போல் இதற்கும் அவர்கள் கட்சித் தலைவர் தூங்கச் சொல்கிறாரா என்பது நமக்குப் புரியாமல் இருக்கிறது.

இன்று தமிழ் நாட்டில் பெரிய பாசன திட்டங்கள் நிறைவேற்ற முடியாவிட்டாலும், சிறிய பாசன திட்டங்கள் ஆங்காங்கு ஏற்படுத்தப்படும் என்கிற அளவில், இந்த நிதிநிலை அறிக்கையில் முதல்வர் அவர்கள், சின்னாறு, பரப்பலாறு, பாலாறு-பொரந்தலாறு, தண்டரை, நந்தன் கால்வாய், கருப்பா நதி, பொன்னணியாறு, பிளவுக்கல், பாலியாறு என்று 9 சிறிய பாசன திட்டங்களை உருவாக்கித் தந்து இருக்கிறார்கள். ஆங்காங்கு கிடைக்கும் தண்ணீர் வாய்ப்புகளை, விவசாயத்திற்கு பயன்படுத்தவேண்டுமென்று நல்ல நோக்கத்தோடுதான் இந்த திட்டங்கள் உருவாக்கப்பட்டிருக்கிறது.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** தலைவரவர்களே. காவிரி நதி நீர் பிரச்சனை பற்றி எங்கள் தலைவர் திரு. காமராஜ் அவர்களுக்கு களங்கம் கற்பிக்கும் முறையில் கருத்து கூறப்படுகிறது. சர்வ கட்சிக் கூட்டத்தில் நாங்களும் கலந்து கொள்ள வேண்டும் என்று என்னை அழைத்து பணித்திருக்கும் அன்றைக்கு, இம்மாதிரியான பிரச்னைகளில் சர்வ கட்சிகளும் ஒத்துழைக்க வேண்டும் எங்கும் போது, குற்றங்கள் இல்லாமல் பேசுவதுதான் பொருத்தமாக இருக்கும் என்பதைத் தெரிவிக்கிறேன்.



1971 ஜூன் 25]

**திரு. எஸ். ஆறுமுகம்:** தலைவர் அவர்களே, அவர்கள் அத்தகைய ஆலோசனைகள் தந்திருக்கிறார்கள் என்றால் நான் வரவேற்கக் கடமைப் பட்டிருக்கிறேன்.

இன்றைக்குத் தமிழ் நாட்டில் சிறு தொழில்கள் பரவவேண்டும் என்று எடுத்துக் கொண்ட தமிழக அரசின் முயற்சிகள் காரணமாக, இன்றைக்கு சிறு தொழில்கள் மேம்பாட்டுக் கழகம் என்று மாவட்டம் தோறும் அமைந்து கிராமங்கள் தோறும் தொழில் வளர்ச்சியைக் காணவேண்டும் என்பது பற்றியும் இந்த நிதிநிலை அறிக்கையில் கொடுத்திருக்கிறார்கள். நம் தமிழகத்தில் தொழில்கள் ஆரம்பிக்கப்படாமல் இருப்பது பற்றிக் குறிப்பிடும் போது, இப்படிப்பட்ட நல்ல காரியங்களை எடுத்துச் சொல்லும் போது, முக்கியமான பிரச்சினை வருகிறது. மாநில அரசுக்கு இருக்கும் அதிகாரங்கள் போதுமான அளவில் இல்லாததால், எதற்கெடுத்தாலும் டெல்லியை நோக்கிச் சென்று, அவர்களைக் கேட்கும் நிலைதான் இருக்கிறது. ஆகவேதான் நாங்கள் சொல்லுகிறோம், மத்தியில் கூட்டாட்சி, மாநிலங்களில் சுயாட்சி என்று சொல்லுகிறோம். அப்படிச் சொல்லும்போது, மன்றத்திலேயும் வெளியிலேயும் சொல்லுகிறார்கள், எதற்கெடுத்தாலும் டெல்லிக்கு காவடி எடுக்கிறீர்கள் என்று. நான் கேட்கிறேன், இவர்கள் 20 ஆண்டு ஆட்சிக் காலத்தில் காவடி தூக்கித் தூக்கி அலுத்துப் போனது மட்டுமல்லாமல், தமிழ் நாட்டில் சரியான தொழில் வளத்தையும் ஆக்கபூர்வமாகச் செய்ய முடியவில்லை. அதனால் தான் இவர்கள் தமிழக ஆட்சிப் பொறுப்பிலிருந்து அகற்றப் பட்டார்கள். நாங்கள் ஆட்சிப் பொறுப்பு ஏற்றதும் அதற்காகவே. ஆகவே இந்தப் பிரச்னையை ஆராய்ந்து பார்க்கும் போது, நமக்கு அதிகாரம் இல்லாமல் இருக்கக் கூடிய நேரத்தில், தொழில்கள் ஆரம்பிக்கப் படாமல் இருக்கிறது. ஆகவே, மாநிலத்திற்கு அதிக அதிகாரம் வேண்டும் என்று கூறுகிறோம்.

மாநிலங்களுக்கு கடன் சுமை அதிகமாக ஏற்பட்டிருக்கிறது. 1951-52-ல் மத்திய சர்க்காருக்கு 100 கோடி ரூபாய் கடன் என்றால், இன்றைக்கு அதுவே 6,500 கோடி என்ற அளவிற்கு எல்லா மாநிலங்களுக்கும் கொடுக்க வேண்டும் என்று ஏற்பட்டிருக்கிறது. அதைத்தான் வேதனையோடு முதல்வர் அவர்கள் நிதிநிலை அறிக்கையில் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். கடன்களுக்கு வட்டி செலுத்தவும் மத்திய சர்க்காரிடம் கடன் வாங்கியே கணக்கு ஏற்றப்படுகிறது என்பதைச் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். ஆகவே நான் சொல்லுகிறோம் மத்திய சர்க்கார் மாநிலங்களுக்கு கொடுத்திருக்கும் கடன்களையெல்லாம் ரத்து செய்து விட்டு, அதோடு வட்டியும் கேட்கக் கூடாது என்று செய்ய வேண்டும். அந்த நிலையில்தான் மாநிலத்திற்கு அதிகமான அதிகாரம் வேண்டும் என்பதை வலியுறுத்த வேண்டியிருக்கிறது. அப்படி அதிகமான அதிகாரங்கள் கொடுத்தால். மத்திய சர்க்கார் வசூல்

[திரு. எஸ். ஆறுமுகம்] [1971 ஜூன் 25

செய்யக் கூடிய வரி இனங்களிலிருந்து தமிழகத்திற்கு நியாயமாகக் கிடைக்கக் கூடிய பங்கு கிடைக்கும். அப்படிக் கிடைத்தால், தொழில்களையும், திட்டங்களையும் நிறைவேற்ற நமக்கு வாய்ப்புக்கள் ஏற்படும். அந்த வகையில் ராஜமன்னார் தலைமையில் குழு அமைத்து, அவர்கள் அறிக்கையும் கொடுத்து, அது அவையில் விவாதிக்க இருக்கிறது. அதில் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள்.

1971-72-ல் திட்டத்திற்காக நமக்கு ஒதுக்கீடு செய்யப் பட்டது ரூ. 44 கோடிதான். ஆனால் நாம் கேட்டது 60 கோடி. அதே நேரத்தில், உத்திர பிரதேசத்திற்கு 109 கோடி கொடுத்திருக்கிறார்கள்; அவர்கள் கேட்டதும் 109 கேர்டிதான். அதேபோல மாராட்டிய மாநிலத்திற்கு, அவர்கள் 75 கோடி கேட்டார்கள், மத்திய சர்க்கார் 75 கோடி கொடுத்திருக்கிறார்கள். இதில் தான் சந்தேகம் வருகிறது. மத்திய சர்க்கார் நிதி அமைச்சர் மாராட்டிய மாநிலத்தைச் சேர்ந்தவர் என்பதால்தானா? அந்த மாநிலங்களெல்லாம் வடபுலத்தில் இருப்பவை, அவர்களுக்கு அவ்வளவு தொகை கொடுத்திருக்கிறார்கள். கேட்டதைக் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் நாம் கேட்ட 60 கோடிக்குப் பதிலாக, 44 கோடிதான் கொடுத்தார்கள். இதிலேயும் நாம் இழப்பை அடைந்திருக்கிறோம். ஒன்பது மாநிலங்களுக்கு சிறப்பு நிதி ஒதுக்கியதில், தமிழ் நாட்டிற்கு போதுமான அளவில் உதவியை வழங்கவில்லை. இதனால்தான் இன்றையதினம் கேட்கிறோம், இந்திய நாடு என்று ஒத்துக்கொண்டால் மாநிலங்களுக்கு சமமான பங்கு எல்லா வகையிலும் கொடுக்கப் படவேண்டும். எந்த மாநிலமும் புறக்கணிக்கப் படக்கூடாது. ஆகவே இந்த நிலையில் மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் இருக்க வேண்டும் என்பதை ஒத்துக்கொண்டு, அது நியாயமானது என்பதை ஒத்துக் கொண்டு, மாநிலத்திற்கு சுயாட்சி தரவேண்டும் என்பது நியாயமானது என்பதையும் ஒத்துக் கொண்டு மாநில சுயாட்சி பெறுவதற்கு, காங்கிரஸ்காரர்களும் வரவேண்டும், தூங்க வேண்டாம் என்று கேட்டுக் கொண்டு, இந்த வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி முடிக்கிறேன், வணக்கம்.

DR. H. V. HANDE : Hon. Mr. Speaker Sir, on behalf of the Swathanthra party I wish to offer a few remarks in connection with the current Budget. At the very outset I have to state that I am very sorry and I have also to express my disappointment and disapproval at the ill-conceived, ill-drafted, ill-planned and inflationary budget. I will, in the course of my speech, briefly demonstrate how it has been very, very badly drafted and how even basic rudimentary knowledge of economics has not gone into the making of the budget. The budget of course has shown the beautiful and excellent command of the lovely language that our Hon. Chief Minister possesses. His language is good, but has he shown any basic knowledge of economics? No. The answer is simple.



1971 ஜூன் 25] [Dr. H. V. Hande]

The budget shows an overall deficit of Rs. 59 crores. A part of it is sought to be covered through additional taxation proposals for Rs. 12 crores. The effective gap will be thus Rs. 47 crores. The deficit of Rs. 59 crores is made up of Rs. 15.87 crores in the revenue account, a little over Rs. 20 crores in the capital budget and a negative opening balance of Rs. 23.23 crores. In other words, there has been mismanagement as far as the State account and budget is concerned to that extent. In spite of all these things, this is the ultimate state of affairs. And then where are we?

We are now confronted with severe taxation proposals. The taxation proposals include graduated increase in the urban land tax, an increase in the general sales tax from 3 to 3.5 per cent which will definitely shoot up the prices a 10 per cent surcharge on sales tax in Madras City and certain changes in the agricultural income tax. The urban land tax is going to be extended to Madurai, Coimbatore, Tiruchirappalli and Salem. In other words, even in those cities the situation is going to be very bad because the cost of land, the cost of construction and everything will ultimately go up in all spheres. We find that there has been a plethora of details to prove that the budget is an inflationary budget.

Then again there was a novel method adopted by the Hon. Chief Minister in the matter of presentation. He conveniently divided his budget speech into two parts, Part A and part B. Part A is something like blowing one's own trumpet. I agree this is enlightening. Part A in short, blows the trumpet of the State Government. But Part B, the dismal part of it, is the part which he was even afraid to bring before the House. I do not know what made him to divide his speech into two parts. Even we do not know exactly what are the dismal things. No doubt the lovely language and the beautiful epithets he was trying to harp on himself gave us a soothing feeling so that we may not know the tragic feelings later on. Part A is a comedy and finally it has ended in a tragedy with Part B. Second part was brought in later on. The first part was so soothing and made us lull into a false sense of security for about short 15 minutes. Subsequently the second part was brought in with a list of commissions and omissions of the policies of the Government and of the policies of the various departments including the Finance Department.

So we are confronted with this confusion. Then, again there is another important point. I shall try to prove how it is an inflationary budget. A friend of mine in my absence had told that it was an anti-inflationary budget. But my point is that it is simply an inflationary budget. An inflationary budget means any budget that pushes up the cost of living and the inherent value of the rupee is considerably lost. This is the simple truth which can be put in the common man's language. We have been confronted with two Budgets, one the Central Budget and another the State Budget. I have been saying from time immemorial that the State Government should take the Central Budget into consideration and see whether their own budget fits into the

[Dr. H. V. Hande] [1971 ஜூன் 25

Central Budget, for ultimately it is the same common man who is going to be affected, whether it is the Central Budget or the State Budget. He has not recovered from the shock of the savage and vexatious taxation of the Central Budget.

Economic experts are trying to find out the exact increase in the cost of living index. According to the cost of living index there is an increase to the tune of 25 to 30 points due to the Central Budget. In other words there is an increase of 3 to 4 per cent in inflation and the House must be really serious about it. Let us not for a moment indulge in beautiful rhetoric language in expressing appreciation for the speech of the Hon. Chief Minister. I also take my hats off for that speech but that will not solve the economic problem or open a new industry. This 3 to 4 per cent inflation has been pushed up by the Central Budget.

Then the State Government have come out with a worse Budget. It is doing a lot of havoc and it has again pushed up the cost of living by 15 points. I have worked it out and it would add to the inflation by another 2 to 3 per cent. Thus, in this dismal year the inflation will be increased by 5 to 6 per cent. Inflation is a very serious thing. But in this whole Budget there is not even a single incentive for production. We have been pressing time and again that there should be incentives for increasing production. But there is absolutely no incentive for increasing production. There is incentive for inflation. The fundamental principles of budget technique have been cast to the winds.

I have been pointing out again and again that the ultimate goal of budgeting is to increase the economic growth. The objective of the Central Planning Commission and the State Planning Commission which the Hon. Chief Minister had recently appointed, is only to increase economic growth. Whatever be our ideologies and whatever be the tonnes and tonnes of thought that we might put before the mind of the public, the only solution is to increase the economic growth. What is the increase obtained in Japan? What is the increase in Pakistan and what is the increase in Ceylon and what is the corresponding increase in India? We must consider that. In this country there is an increase of 3 to 4 per cent but our target should be a minimum of 6 to 8 per cent. On the other hand in our country the inflation has increased by 5 to 6 per cent.

Then I come to taxation measures. In this connection I wish to refer to prohibition. The sales tax was originally levied to make up for the loss sustained by the introduction of prohibition. Now what do we see? On the one hand we are going to scrap prohibition and on the other hand we are going to increase the sales tax and in spite of that we have been presented with a



1971 ஜூன் 25] [Dr. H. V. Hande]

deficit Budget. In the circumstances, how can the people praise the Budget? How can they say that it is a brilliant budget unless they suffer from anaesthesia or chloroform?

The rate of sales tax should not be increased as the prohibition law is going to be scrapped. The Hon. Chief Minister who is a very intelligent person has cleverly stated that it is going to be suspended in the hope that the Centre will come to his rescue later on. But he knows that the Central Government are not going to come to his help. Sir, by the levy of increased rate of sales tax, we are going to get a little more money. But the most important thing is that every year we are increasing the rate of sales tax.

Then we have completely removed motor transport from the private people. You destroy them, or do anything like that. But what is the result on the public? We have seen the manner in which the State Transport Department are running their buses in the Madras City. Don't we have the commonsense to see it? The Government have an ambitious programme to extend nationalisation to other places but the ultimate result is that the public will be put to more hardships. The Hon. Minister might be assuming that the problem will be there for a few days and 'letters to the Editor' column would be full for some days and afterwards the people would get disillusioned and feel that it is not worth the paper on which they are written. But I want the Government to understand that whatever extra money that we may get after scrapping prohibition would have to be diverted to cover the loss which would occur after the take-over of private motor transport. The persons who are going to operate the private buses do not know their mechanism. Do they know where the carburettor is? The person at the helm of affairs in the Transport Department may be a brilliant I.A.S. officer but how can you ask him to do a thing in which he has not been trained? He is meant for administration. How can he handle an organisation which even the experts cannot handle easily? This monstrous organisation must be placed in the hands of a person who is fully qualified for the job. I am not concerned with the person who is at present holding it. But I want the Government to consider seriously the matter and see that the State Transport organisation does not incur any loss on account of their policy of nationalisation.

As regards N.G.O.s, what the Government have given to them is very good. I appreciate and welcome it. But we must at the same time consider the impact of the inefficient and ill-conceived budgets of the Central and State Governments on them. They have pushed up the cost of living index. What we have given by the right hand has been taken away by the left hand. Whatever marginal benefits they have got has been lost by the taxation measures propósed in these Budgets as the value of the rupee has gone down.

I now come again to another important point, viz., our State relation with Centre. In spite of the D.M.K. sending ten Ruling Congress M.Ps. to Delhi, to Lok Sabha, this Government is being treated with indifference, with scant respect, with something bordering on contempt. I shall illustrate this by giving four clear examples. Central assistance to our State plans has come down from Rs. 67 crores to Rs. 40 crores. So it had been cut down by Rs. 27 crores. But in spite of all these, the Hon. Chief Minister is saying that he had put up his case before the Centre admirably well; he shouts so from housetops that he had done his job well, that he had stressed all the points. I concede that he had stressed the point but what has happened? While certain States are getting more, how is it we are getting less? How is it we are getting Rs. 27 crores less, in spite of the fact that the Hon. Chief Minister has been so gracious enough to send 10 Ruling Congress members to Lok Sabha from Tamil Nadu?

There are so many other things I want to talk but due to paucity of time, I am pinpointing only some points. The Chief Minister knows that there are lot of pinpricks and we are getting only lesser amount from Centre. But what is it that we are doing to get our due share? For everything, there is the panacea of மாநில சுயாட்சி. For 20 years to come this will go on, I mean this cry of மாநில சுயாட்சி. For everything you raise this slogan. If there is trouble in hospital admission, you say if we have மாநில சுயாட்சி we will have more hospitals and there would be no difficulty. You have a wonderful propaganda machinery. If there is trouble in college admission, you again bring in this slogan.

THE HON. THIRU K. ANBAZHAGAN: On the arguments of Mr. Hande that the Central Government is not caring for the demands of the State Government, what remedy Mr. Hande is suggesting to this Government?

DR. H. V. HANDE: I have already told you. My submission is that our case has not been put forward effectively. The only way in which you can get what you want is this. I have already told the Hon. Chief Minister. 'Suspend your support to Central Government'. If you take that definite stand, at least your self-respect may be there. Now they don't bother about you.

THE HON. THIRU K. ANBAZHAGAN: Mr. Hande's argument leads to the point that the State should not co-operate with the Centre. That is another way to put the autonomy of the State before the Central Government, so that with our own right we will be able to meet our demands.

DR. H. V. HANDE: Perfectly right. You use your strength in Parliament and fight. I have no objection.........

THE HON. THIRU P. U. SHANMUGHAM: Of course the Hon. Member has no objection. But what is the Hon. Member's suggestion?



DR. H. V. HANDE: Is it on a point of Order? I have already given my suggestion 120 seconds ago. If the Hon. Minister had been here and cautiously listened to my speech, he would have known my suggestion.

THE HON. THIRU P. U. SHANMUGHAM: Mention it once more.

DR. H. V. HANDE: I am not here to obey. You are not my boss. You cannot order me. If you have not listened, I will give you a copy of my speech tomorrow.

THE HON. THIRU P. U. SHANMUGHAM: It is an insinuation against me.........

பரவாயில்லை, ஹாண்டேயின் திறமையான வாதத்தைக் கண்டு நானே மிகவும் மெய் மறந்துவிட்டேன். அவர்கள் கடினமான வார்த்தையை நான் புரிந்துக் கொள்ள சக்தியற்றவன் என்ற அளவிலே பேசியிருக்கிறார்கள். அதன் அடிப்படை தத்துவம் தெரியவில்லை என்று நினைக்கிறேன். அவரே பார்த்துக் கொள்வார். நானும் பதில் கொடுக்க வேண்டுமல்லவா? கடைசியிலே "புரிந்து கொள்ள முடியாவிட்டால்" என்று சொன்னாரே, அதுபோல் புரிந்து கொள்ளக் கூடிய சக்தி இல்லை என்று தெரிந்து கொள்கிறேன் அவர் மூலமாக. சர்க்கார் ஊழியர்களுக்கு ஒரு கையாலே கொடுத்துவிட்டு, மறு கையாலே வாங்குகிறோம் என்று சொன்னார்கள். சில டாக்டர்கள் கூட மருந்தை ஒரு கையாலே கொடுத்துவிட்டு, பணத்தை இன்னொரு கையாலே பறிக்கிறார்கள்.

DR. H. V. HANDE: In his anger, he has insinuated all doctors. I have nothing to do with it. He has cast aspersion against all doctors. That is all right. But we feel that there are good doctors, doing honest work and doing public service. That is different point.

This is not a 'pattimanram' to discuss whether doctors are taking money. That is an entirely different point.

மாண்புமிகு திரு. மு.கருணாநிதி: தலைவரவர்களே, எதற்கெடுத்தாலும் மாநில சுய.ஆட்சி, மாநில சுய ஆட்சி என்று சொல்லி மக்களிடம் தப்பித்துக் கொள்கிறோம் என்று தெளிவுபட ஹாண்டே அவர்கள் இங்கே பேசினார்கள். ஹாண்டே அவர்கள் எந்த அடிப்படையிலே இந்தக் கருத்தைப் பேசுகிறார்கள், சுதந்திராக் கட்சியின் அடிப்படையிலா அல்லது சுயராஜ்யா பத்திரிக்கை அடிப்படையிலா என்பதை அறிய விரும்புகிறேன்.

DR. H. V. HANDE: My point has not been understood. I am asking this Government not to use this. மாநில சுயாட்சி for all omissions and commissions. That is the important point. When a problem arises, don't immediately confuse that with your manthra of மாநில சுயாட்சி.

[திரு. எம். கந்தசாமி] [1971 ஜூன் 25

மதுவிலக்குக் கொள்கை தோல்வி அடைந்தது மட்டுமல்ல, அது சரிவர அமுல் படுத்தப்படமுடியவில்லையாதலால், அதை எடுத்து விடுவது மேல் என்று கருதி காந்தி வழி வந்த அறிஞர் அண்ணா அவர்கள் வழி வந்த கலைஞர் அவர்கள் செய்து இருப்பதை உள்ள படியே நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் நான் இந்தச் சட்ட மன்றத்தில் பல முறை பேசியிருக்கிறேன். குளித்தலை-முசிரி இடையே காவிரியின் மேம்பாலம் கட்ட வேண்டுமென்று, மாண்புமிகு கலைஞர் அவர்கள் பொதுப்பணித் துறை அமைச்சராக இருந்த போது போட்டது. இப்போது முதலமைச்சராக அவர்களே வந்திருக்கிறார்கள், தொடங்கப்பட்டு உடனடியாக வேலை தொடங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குளித்தலை நகருக்கு 13 லட்ச் ரூபாயில் அரசு குடிநீர் திட்டம் தந்து இருக்கிறது. குளித்தலை காவிரி ஆற்றிலிருந்து மணப்பாறைக்கு தண்ணீர் எடுத்துச் செல்ல 72 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் திட்டம் தீட்டி இப்போது அரசாங்கத்தின் ஆய்வில் இருக்கிறது. அதை உடனடியாக நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

குளித்தலையில் சிறிய மருத்துவ மனை இருக்கிறது. 20, 30 பெட்கள் தான் இருக்கின்றன. இதை விரிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இதை 50 பெட்கள் கொண்ட மருத்துவ மனையாக ஆக்க வேண்டுமென்று அப்போது அமைச்சராக இருந்த மாண்புமிகு சாதிக் பாட்சா அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, 50 பெட்கள் கொண்டு குளித்தலை அரசினர் மருத்துவ மனை அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இப்போதுள்ள மருத்துவ மனையில் ஒரே ஒரு ஆண் டாக்டர் தான் இருக்கிறார். இன்னொரு பெண் டாக்டர் அவசியம் போட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மணப்பாறையில் நீண்ட நெடுங்காலமாக கல்லூரி இல்லை. இப்போது அது நகராட்சியாக மாற்றப்பட்டிருக்கிறது. நகராட்சி மூலமாக தீர்மானம் போட்டு அனுப்பியிருக்கிறார்கள். அடுத்த ஆண்டு நிச்சயமாக அங்கே ஒரு கல்லூரி அமைக்க வேண்டுமென்றும் அந்த முயற்சியில் அரசு ஈடுபட வேண்டுமென்றும், இந்த சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

பொதுவாக, இந்த நிதிநிலை அறிக்கை இந்திய நாட்டிலே உள்ள அத்தனை மாநிலங்களுக்கும் ஒரு வழிகாட்டியாக, ஒரு நிலைக் கண்ணாடியாக, இந்த நிதிநிலை அறிக்கையை வைத்துத் தான் மற்ற மாநிலங்கள் பின்பற்றக் கூடிய வகையில் எல்லாத் தரப்பினருக்கும் திருப்தியளிக்கக்கூடிய வகையில் இருக்கிறது. இதை தயாரித்து அளித்த முதலமைச்சர் அவர்களுக்கு என் பாராட்டைத் தெரிவித்து, பேச வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றி சொல்லி இந்த அளவில் விடைபெறுகிறேன். வணக்கம்.



1971 ஜூன் 25]

(மாண்புமிகு பேரவைத்தலைவர் தலைமை.)

* திரு. எஸ். ஆறுமுகம் : பேரவைத் தலைவரவர்களே, 1971-72 ஆண்டு நிதி நிலை அறிக்கை இன்றைய தினம் தமிழக மக்களின் பேராதரவினை பெறக்கூடிய வகையில் அமைந்திருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்து, அதற்காக முதல்வர் அவர்களை பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். நம்முடைய தமிழகத்தின் முதலமைச்சர் வைத்து இருக்கும் இந்த நிதி நிலை அறிக்கையானது ஒரு கொள்கையின் அடிப்படையில் வைக்கப்பட்ட நிதி நிலை அறிக்கையாகும். பொதுவாக நிதி நிலை அறிக்கை மன்றத்திலே வைக்கும்பொழுது தான் அந்தக் கட்சியின் கொள்கை எந்த அளவுக்கு நிறைவேற்றப்படாமல் இருக்கிறது என்பதை நாட்டு மக்கள் எண்ணிப்பார்க்கக்கூடிய அளவுக்கு இருக்க வேண்டிய நிலைமை இருக்கிறது. நம்முடைய நிதிநிலை அறிக்கையில் சோசலிச கருத்துக்களை தெளிவாக இங்கே எடுத்து வைத்து இருக்கிறார்கள்.

1971-ம் ஆண்டு பொதுத்தேர்தலில் சிண்டிகேட் கூட்டணி நாட்டு மக்களிடத்திலே பிரச்சாரம் செய்தது, "முதலமைச்சர் அவர்கள் இந்த நாட்டின் கஜானாவைக் காலி செய்து விட்டுத் தேர்தலில் நிற்கிறார்கள். வெற்றி பெற்று ஆட்சிக்கு வந்தாலும் அவர்களால் ஒரு சீரான நிதிநிலை அறிக்கையைத் தர முடியாது என்று இந்த நாட்டு மக்களிடத்திலே பேசினார்கள். ஆனால் அவர்களின் பிரசாரத்திற்கு மாறாக இன்று திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தல் நேரத்தில் நாட்டு மக்களிடத்திலே அளித்த வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில் இந்த நிதி நிலை அறிக்கையை சமர்ப்பித்து இருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தேர்தல் அறிக்கையில் தெளிவாக கழகத் தலைவர்கள் சொன்னார்கள். ஏற்றத் தாழ்வற்ற சமுதாயத்தை உருவாக்குவோம் என்று சொன்னார்கள். ஜாதி மத பேதமற்ற கொள்கை உருவாக்கவும், மாநில சுயாட்சி பெறவும், தமிழ் மொழி வளரவும், இன்னும் ஏழை எளிய மக்களின் வாழ்வில் வளம் காணவும் பாடுபடுவோம் என்றும், ஆகவே எங்களுக்கு நல்ஆதரவு தரவேண்டுமென்றும் சொல்லி தங்களுடைய கொள்கையை வைத்தார்கள். ஆனால் சிண்டிகேட் கட்சியினர் தமிழ் நாட்டிலே ஒரு கூட்டணி அமைத்தார்கள். ஜனநாயக சோசலிஷம் பேசினார்கள். ஆனால் ஜனநாயக சோசலிஷம் பேசியவர்கள், ராஜாஜியோடு சேர்ந்த பிறகு சோஷலிசத்திற்கு குழி தோண்டிப் புதைத்து விட்டு ஜனநாயகம் பேசினார்கள். கொள்கையை விட்டு விட்டு தேர்தலில் நின்ற காரணத்தால் மக்கள் வாக்களிக்கவில்லை. ஆனால் கொள்கையின் அடிப்படையில் வாக்கு கேட்ட திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு பெருவாரியான ஆதரவினைத் தந்தார்கள். இந்த நிதி நிலை அறிக்கை ஒரு சமதர்மக் கொள்கையை உருவாக்க கூடிய வகையில் அமைந்து இருக்கிறது.

[1971 ஜூன் 25

MR. SPEAKER: What remedial 'manthra' would you suggest?

DR. H. V. HANDE: Honest and straightforward speech telling the people what exactly you are going to do. Don't confuse them with tall promises and saying that if you have only மாநில சுயாட்சி you can have all this. Tell them the honest truth.

Now I come to point No. 2. In spite of sending 10 Ruling Congress M.Ps. what is it that has happened? What about Salem Steel Plant? Yesterday we heard the Hon. Minister for Industries gallantly saying that there has been no letting down and everything was going on well as far as Salem Steel Plant was concerned. That was what he told this House. I refer to a paragraph in the Chief Minister's budget speech, viz.:—

> "While I commend the heartwarming enthusiasm of the Union Minister for Steel in taking steps to expedite the Salem Steel Project, I would like to take this opportunity to impress on the Centre the fact that the final decision on the product-mix of the Plant has already been delayed. I would urge that there be no further delay and that the long delayed works may be commenced with the utmost expedition."

Our Hon. Minister was making a gallant effort. He admits that there has been delay. He says 'let there be no *further* delay'. When he says that, it means that there has been delay beforehand.

THE HON. THIRU K. ANBAZHAGAN: On the argument that the Hon. Chief Minister has expressed, viz., that the product-mix is not yet settled, what is the contention of the Hon. Member? It is delayed because the product-mix is not yet decided by Government.

DR. H. V. HANDE: I shall read what the Hon. Chief Minister has said, viz., 'I would urge that there be no further delay'. That means that there has been delay before. That is a fact. Is there any difference of opinion between the Hon. Minister for Health and the Hon. Chief Minister on this 'delay'. You say there is 'no delay'. But the Hon. Chief Minister has said that there has been delay. What can I do?

THE HON. THIRU K. ANBAZHAGAN: The delay has been there for the last fifteen years. It is only last year that the actual implementation has started. I would like to say that product-mix is a highly technical matter, which has to be decided after reaching an understanding with so many other departments.

DR. H. V. HANDE: The Health Minister says 'there is no delay'. It is very good. There is what the Hon. Chief Minister has stated. We have to take one of the two things. I thought at least inside Cabinet, there was unanimity.



1971 ஜூன் 25] [Dr. H. V. Hande]

So far as the Cauvery water is concerned, we have lost the first round of the battle. Let me be allowed to complete my speech, because there is shortage of time.

MR. SPEAKER: Your time is up.

DR. H. V. HANDE: Because of the intransigent attitude of the Centre, this has happended. Yesterday I saw a news item. Our new Planning Minister has made a statement on the Cauvery waters. He has said that the Cauvery problem will be tackled or the appointment of tribunal will be considered (in black and white what he had stated had appeared in the papers) only after Mysore elections are over, and that till then nothing will be done. Even in the all-party meeting, I remember how the Hon. Chief Minister agreed that the political situation in that State was doubtful. But we now find our own Central Minister saying that it will all have to be postponed. We have all agreed with our Chief Minister that on the 27th we have to conduct protest meetings. In the wake of all this, comes this statement, and that too from our Minister of Planning, hailing from Tamil Nadu. He says that it will all be done only after elections are over in Mysore. This is something shocking. I earnestly appeal to the Hon. Chief Minister. This Cauvery problem will not be easily solved. One method by which you can adopt is to ask the Centre to take a decision on this question before the Krishnagiri election. Let us also be tactful. Otherwise you can rest assured no decision will be taken. Be tactful. (The Hon. Thiru K. Anbazhagan: What is your stand ?). We have a Parliamentary Board. We will discuss it, whatever it is, before Krishnagiri electon is over. We will have to discuss and decide before the Krishnagiri election. Once that election is over, we will be nowhere. Even before the Krishnagiri election these statements are coming. We do not know what our position will be afterwards. The Central Minister has invited our Ministers to go there. It is all the proverbial and accepted method of delaying tactics. I can tell you now itself. When the Hon. Minister for Public Works and the Hon. Minister for Industries go to Delhi as messengers or ambassadors of our Hon. Chief Minister, they will be simply given some confusing things and they will come back with nothing.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: தலைவரவர்களே, நிபந்தனைகளைப் போடவேண்டுமென்று ஹாண்டே அவர்கள் சொல்லுகிறார்களே, கடந்த பொதுதேர்தலில் சுதந்திரா கட்சி சாதிக் அலி காங்கிரசோடு, அன்றைய நிஜலிங்கப்பா காங்கிரசோடு, தமிழ் நாட்டைப் பொறுத்தவரை காமராஜ் காங்கிரசோடு கூட்டு சேர்ந்ததே, அப்போது இது போன்ற ஏதாவது நிபந்தனைகளைப் போட்டு அவர்களோடு தேர்தலில் நின்றார்களா?

டாக்டர் எச். வி. ஹாண்டே: நாங்கள் தான் தோற்றுப் போய் விட்டோமே. நாங்கள் ஏன் அதைச் சொல்லுகிறோம்? I am only suggesting that you should try to exploit the situation.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** இது பாராட்டு அல்ல. இது ஆளைத் திசை திருப்பிவிடுகின்ற வேலை. எங்களுக்குத் தெரியும். சுப்பிரமணியம் மக்களவைக்கு போகாமல் இருந்துவிட வேண்டும் என்று உங்கள் எண்ணமாக இருக்கலாம். ஆனால் ஹேமாவதியை வைத்துக்கொண்டு ஒரு தமிழரை மத்திய சர்க்காரிலிருந்து விலக்குவதை தமிழகம் விரும்பாது.

**டாக்டர் எச். வி. ஹண்டே:** தாராளமாகச் செய்யுங்கள். நான் **ஒன்றும் வேண்டாமென்று சொல்லவில்லை. நான் ரொம்ப** சாதாரணமான ஆள்தான். என்னுடைய மனதிலே உள்ளதைச் சொன்னேன். பிறகு உங்களுக்குத்தான் அன்றைக்கே ஹாண்டே சொன்னாரே, கேட்டிருக்கக்கூடாதா என்ற நிலைமை ஏற்படும். It is up to you to take it up now.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** எனக்கு எப்போதும் ஹண்டே சொன்னதைக் கேட்டிருக்கக்கூடாதா என்ற நிலைமை ஏற்பட்டதும் இல்லை. இனிமேலும் ஏற்படாது.

DR. H. V. HANDE: This is an undemocratic way. In democracy we are here to give suggestions and you should keep your mind open. Supposing I give you some good points and new points.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** அவர்களும் அவர்களுடைய குருநாதரும்தான் கருணாநிதி சொன்னதைக் கேட்டிருக்கக் கூடாதா என்று இப்போது நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

DR. H. V. HANDE: This is exactly a typical instance of the manner in which a person who does not believe in democracy functions. My point was, in a democratic set up we are here to give you ideas and it is up to you to take them or not. If you say 'whatever somebody says, I am not going to listen to it and I shall keep my mind shut', it is perfectly all right and people will realise that it is not a democratic approach at all.

MR. SPEAKER: You have already taken 25 minutes.

DR. H. V. HANDE: I want at least 10 more minutes.

Then I come to the question of Hindi where the Centre has let us down very badly—Hindi business. Everywhere we find insidiously they are going on spreading Hindi. My submission is this. You want that our boys should not learn Hindi. But they have beautifully developed it and spread it subtly and ultimately people of other States are forced to adopt Hindi and after some time we will be in a position where we can do nothing. That is one point.

Then I come to the most important point with regard to Prohibition. Sir, I have heard with rapt attention the speech of the Hon. Chief Minister. While he was speaking he said, 



**வருத்தத்தோடு** that he was suspending prohibition. The automatic-response was a thumping by the other side. I heard it. Then the Chief Minister realised and said **வருத்தத்தோடு என்று சொன்னேன்'** The Chief Minister said **வருத்தத்தோடு** He stressed it. Then there was a silence. It is good. But for the past 4 or 5 days the speeches which we hear are shocking. Even today an hour ago an Hon. Member was going on eloquently explaining the advantages of liquor. The Hon. Chief Minister was not here. But the Hon. Minister for Food was feeling very paniful. Beautifully he was developing and it was like a pattimanram on 'whether we want prohibition or whether we do not want prohibition'. It was going on like that. That is not the question at all. My question is who asked you and on what authority have you scrapped prohibition? On one side you say we are following the footsteps of Anna'. On one side you say 'Anna is our Leader'.

**மாண்புமிகு திரு மு.கருணாநிதி:** எந்த ஆதாரத்திலே மது விலக்கை ரத்து செய்கிறீர்கள் என்று கேட்கிறார்கள். ஆதாரம் **எவருக்கும் நான் தரவேண்டிய அவசியமில்லை. சுதந்திரா** கட்சியிலே பலபேர் பர்மிட் வாங்கிக்கொண்டிருக்கிறார்கள் என்று **பார்க்கும்போது, இந்த ஆதாரம் ஒன்றே போதும் என்றுதான் இந்த முடிவுக்கு நான் வந்தேன்.**

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** தி.மு.க. எம்எல்.ஏ-க்களிலே பல பேர் பர்மிட் வாங்கியிருக்கிறார்களோ, அவர்களுக்குப் பின்னாலே தான் சுதந்திரா கட்சி எம்.எல்.ஏ.-க்கள் வாங்கியிருக்கிறார்களோ, என்னவோ ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: பழைய காங்கிரஸ்காரர்களும்** வாங்கியிருக்கிறார்கள். வேண்டுமானால் பட்டியலைத் தருகிறேன். பதில் கொடுக்கிற அன்றைக்கு சொல்லுகிறேன். சுதந்திரா கட்சியிலே எவ்வளவு பேர்கள் வாங்கியிருக்கிறார்கள் என்பதையும் அறிவிக்கிறேன்.

DR. H. V. HANDE: My only submission is this. This is not a discussion on whether prohibition is good or whether prohibition is not good. That was not the point. I would request the Chief Minister on what right.......

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** என்ன ஆதாரம்? என்ன உரிமை என்று கேட்கிறார்கள். இந்த நாட்டிலே இருக்கிற ஏழை மக்கள், நாடுத்தர மக்கள் போதமான கள்ளை, பட்டைச் சாராயத்தைக் காய்ச்சி சாகவேண்டுமா. பெரிய மனிதர்கள் எல்லாம், சுதந்திரா கட்சிக்காரர்கள் போன்றவர்களெல்லாம் பர்மிட் வாங்கிக் கொண்டிருக்கவேண்டுமே என்ற ஆதாரம் ஒன்றே எனக்கும் போதும்.

DR. H. V. HANDE: I definitely concede that D.M.K. members alone must not drink liquor, but poor people also must drink.

[1971 ஜூன் 25

திரு. நா. வீராசாமி : ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். தலைவர வர்களே, உறுப்பினர் டாக்டர் ஹண்டே அவர்கள் பேசும்போது 'ஆளும் கட்சி உறுப்பினர்கள் இங்கே மது விலக்கைப்பற்றி பட்டி மன்றம் போல பேசுகிறார்கள். அப்படிப் பேசலாமா ?. என்பது மாதிரி பேசுகிறார்கள். இங்கே உறுப்பினர்கள் பேசுவது அவர்களுடைய உரிமை. ஒரு உறுப்பினர் பேசுவதை இன்னொரு உறுப்பினர் கேள்வி கேட்பதற்கு இந்த மன்றத்திலே உரிமை இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

Dr. H. V. HANDE : Sir, with the permission of the Hon. Speaker, I shall read the speech of revered Anna in this House on 24th August 1968. He was answering a question put by Hon. Member Mr. Balasubramanian. This was the answer he gave :

" ஆனால் அண்மையிலே இந்தியாவினுடைய நிதி அமைச்சர், மது விலக்கு செய்வதன் மூலம் எந்த அரசுக்காவது நஷ்டம் ஏற்படுமானால் அந்த நஷ்டத்திலே ஒரு அளவுக்கு நாங்கள் ஈடு கொடுக்க இருக்கிறோம் என்று அறிவித்தார்கள். அது சென்னைக்கும் பொருந்துமா என்று கேட்டதற்கு சென்னைக்கு அது பொருந்தாது, இப்பொழுது மதுவிலக்கு செய்து அந்த மது விலக்கினாலே ஏதாவது நஷ்டம் வந்தால் அதற்கு ஈடு கொடுக்கப்படும் என்றார்கள். அவர் சொன்னதிலே இருந்து நான் இப்பொழுது செப்டம்பர் மாதத்திலே மது விலக்கை ரத்து செய்து விட்டு, கள்ளுக் கடைகளைத் திறந்துவிட்டு அதற்குப் பிறகு மறுபடியும் அக்டோபர் மாதத்திலே மது விலக்கை கொண்டுவந்து, செப்டம்பர் மாதத்திலே இவ்வளவு இலாபம் வந்தது; அக்டோபரிலே மது விலக்கை கொண்டு வந்ததால் நஷ்டம் வந்தது என்று சொன்னால் ஒரு சமயம் அவர்கள் கவனிப்பார்கள் போல இருக்கிறது. நான், அந்த இரண்டு மாத பாவத்தைக் கூட செய்யத் தயாராக இல்லை என்பதாலே அந்த முறையைப் பின்பற்றவில்லை". இது அண்ணா சொன்னது.

The question was whether the Central Government are going to give any extra payment for this State which continues the prohibition policy.

Lastly there is an important and significant statement of Thiru Anna. I want the Hon. Chief Minister also to listen to this.

" நான் அந்த இரண்டு மாத பாவத்தையும் கூட செய்யத் தயாராக இல்லை என்பதாலே அந்த முறையைப் பின்பற்றவில்லை." இது அண்ணா சொன்னது.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அண்ணா சொன்னதைக் கேட்கவில்லை என்பதற்காக இதைப் படித்துக்காட்டுகிறார்கள். ராஜாஜி இதைவிடக் கடுமையாகச் சொல்லி அவரே முதன் முதலிலே இந்தியாவிலே தமிழகத்திலே இதைக்கொண்டு வந்தார்கள். அவர் சொன்னதை அவர் கட்சியைச் சேர்ந்த ஒரிஸ்ஸாவின் முதலமைச்சர் சிங்தேவ் பின்பற்றினாரா ?



1971 ஜூன் 25]

டாக்டர் எச். வி. ஹாண்டே : அதற்கு நான் 'ஆன்ஸர்' கொடுக்கப்போகிறேன். I will answer it after finishing. There is a specific and very interesting answer. You can be watchful.

'I asked the question " does this Government really feel that it is necessary to ask money from the Centre to enforce its prohibition policy because of the fact that the prohibition policy has not met with the success which we all wanted it to meet with " Anna said :

" Sir, shortcomings in the implementation of the prohibition policy is no argument for abolishing prohibition. I admit that there are shortcomings not only in regard to the implementation of the prohibition policy but also in regard to so many other things. Our aim should be to perfect its implementation and not to give up prohibition because of short-comings."

Finally, Anna says in reply to a question from Hon. Minister Ramachandran when he was a member.

அண்ணா சொல்லுகிறார். 'அதனால் எவ்வளவு பொருள் பி.ப. 12-30
இழக்கிறோம் என்ற கணக்கு கூட எனக்கு அவ்வளவு முக்கியமாகத் தெரியவில்லை. அதனால் எவ்வளவு பண்பாட்டை வளர்த்துக் கொண்டிருக்கிறோம் என்பதுதான் முக்கியமாகத் தெரிகிறது. நாமெல்லாம் வாலிபர்களாக இருந்தபொழுது, சிறுவர்களாக இருந்தபொழுது, வீதி முழுவதிலும், வீடு முழுவதிலும் குடித்து விட்டவர்கள் செய்யும் அமளிக்கும், குளறுபடிகளும் குடும்பங்களை சிதைக்க வைக்கும்படியான நிலைமை இருந்தது. இன்றையதினம் அந்த நிலைமை நீக்கப்பட்டிருப்பது பொளாதாரத் துறையில் எத்தனை ரூபாய் என்று கணக்கு எடுத்தால் தெரியாது. மக்களுக்கு அதனால் கிடைத்த மனநிம்மதிக்கு கோடானுகோடி என்று கணக்குச் சொல்லலாம்."

After hearing such a fine speech of Anna, I want to ask, Are you following Anna. If you say, 'No' I can appreciate it. I am not going into the merits or demerits of prohibition. But the point is, you have been saying that you are following Anna. I want to ask, whether you are followinig him now. The Hon. Chief Minister referred to Mr. Singh Deo. Definitely Mr. Singh Deo and Rajaji differ on many issues. I also differ from revered Rajaji on an issue like Family Planning and I told him like that. He accepted it because he is a democrat. I do not say that I agree with Rajaji 100 per cent. But you say that you are following Anna. I want to know whether you are following Anna on such a vital issue ?.........

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : நாங்கள் இராஜாஜியைப் பின்பற்றவில்லை. இராஜாஜியின் பாலோயர் அல்ல என்பதை ஒப்புக்கொள்ளுகிறீர்களா ?

டாக்டர் எச். வி. ஹண்டே : மது விலக்கை ரத்து செய்து ஊரை ஏமாற்றுகிறீர்கள். அண்ணாவின் பாலோயர் என்று சொல்லிக் கொள்ளுகிறீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: யாரை ஏமாற்றுகிறீர்கள் என்பதை . . .

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: கனம் அங்கத்தினர் அவர்கள் சொல்ல வேண்டியதைச் சொல்லி முடிக்கட்டும்.

டாக்டர் எச்.வி. ஹண்டே: மது விலக்கை ரத்து செய்ய அண்ணாவைப் பின்பற்றுகிறேன் என்று சொல்லிக் கொள்ளுகிறீர்கள். இராஜாஜி இது விஷயத்தில் சில கருத்து வேறுபாடுகளுக்கு இடம் கொடுக்கிறார்கள். அவர் கருத்தை மதிப்பிற்குரிய ஹெல்த் மினிஸ்டர் ஏற்க வேண்டியதில்லை. கருத்து வேற்றுமை என்றால் என்ன?

That is my contention. The whole thing is, that you have been trying to build up a personality cult. You are trying to tell the people that you are a follower of Anna. I am making a serious charge that you are trying to create a fear in the minds of the people. You are such a person ...... (Interruption)

அண்ணா இப்படிச் சொன்னார், இப்படி நடக்கிறதே, நீங்களே சொல்லுங்கள் என்று சொல்லும் அளவுக்கு இந்த மன்றத்தில் அண்ணாவைப்பற்றி பேசப்படுகிற நேரத்தில் எனக்கு எவ்வளவு இடையூறுகள் தகராறுகள்? அண்ணா பேச்சைப் படிக்கக் கூட எனக்கு இந்த மன்றத்தில் உரிமை இல்லையா? அந்த அளவுக்கு உங்களுக்கு பர்சனலிடி கல்ட் டெவலப் செய்கிறீர்களா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அண்ணாவைப் பற்றி ஹண்டே அவர்கள் அவ்வளவு மரியாதையாகப் பேசியதற்கு நன்றி. அண்ணாவைப் பற்றி புத்தகத்தில் போட்டார்கள் என்பதற்காக கண்டனக் கூட்டம் போட்டார்கள். அது மட்டுமல்ல. அண்ணாவைப் பற்றிக் குறிப்பிடுகிறபொழுது, அகால மரணம் அடைந்தார் என்று அவதூறாகப் பேசினார்கள். அது தெரியாமலில்லை. அதை மறந்து விடவும் இல்லை. அண்ணாவைப் பற்றிப் பேச உங்களுக்கு தகுதி இல்லை.

டாக்டர் எச். வி. ஹண்டே: ஆனால் உங்களுக்குத் தகுதி இல்லை என்று நான் சொல்லுகிறேன்.

(The Hon. Thiru K. Anbazhagan rose.)

DR. H. V. HANDE : At least you could have objected to it.

THE HON. THIRU K. ANBAZHAGAN : Sir, on a point of order. The hon. Member Dr. Hande refers to the speech made by Anna in 1968 in this House. Reference is all right but Anna had expressed his opinion not only in this House but also on so many other occassions outside the House. He has stated that when a law fails in its proper implementation it is better to scrap that law than to have that law in the land. (Applause).

டாக்டர் எச். வி. ஹண்டே: தெரியாமல் கை தட்டுகிறார்கள்.





மாண்புமிகு பேரவைத் தலைவர்: தெரியாமல் கை தட்டினர் என்பதை மாண்புமிகு உறுப்பினர் திருப்பிப் பெறவேண்டும். உங்களுக்கு உரிமை இருப்பது போல மற்றவர்களுக்கும் உரிமை இருக்கிறது. அதை ஹாண்டே அவர்கள் திரும்பப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

DR. H. V. HANDE : Sir, I withdraw it. My intention is not to hurt the feelings of any one.

The answer for the point raised by the Hon. Minister is that shortcomings in the implementation of the prohibition policy is no argument for abolishing prohibiton.

THE HON. THIRU K. ANBAZHAGAN : In 1968 there were shortcomings. Now it is an utter failure.

DR. H. V. HANDE : After two years of D.M.K. regime which followed the death of Anna, it has become an utter failure.

THE HON. THIRU K. ANBAZHAGAN : That is because the people are always more powerful than any administration on earth.

DR. H. V. HANDE : In spite of your huge majority, you are absolutely powerless and you are not able to control it.

This is all due to the tremendous personality cult that is being developed in the State. I request the Hon. Chief Minister as a lover of democracy not to indulge in such things. In this connection, I will give a concrete example. Here is a book on Centre-State Relations. This has been prepared with the sole idea of educating the people properly, as to what should be the relationship between the State and the Centre. In the first page itself, reference has been made to the Hon. Chief Minister and that shows that personality cult is being developed. This personality cult is going deep into the roots of democracy. This Report has been prepared by distinguished experts but still in the first page such a reference has been made. The job of the officials is just to submit a report. But here personality cult is developed. When Shri Jawaharlal Nehru was alive such a fear of personality cult had been felt, and the present Chief Minister also referred to that. Now we find such a personality cult being advertised in cinemas, posters, etc. If one-tenth of the amount spent on such things is spent on the Cauvery problem, it would be useful to the people.

Then I come to another matter. As regards the inauguration of the projects undertaken by the Slum Improvement Board, no Opposition members have been invited. In this connection, I wish to point out that the other day even the Hon. Chief Minister complained that he had not been invited to a function organised by C.S.I.R. I request that so far as our State is concerned Opposition Members should be invited to such functions.

[Dr. H. V. Hande] [1971 ஜூன் 25

Then I wish to emphasise with all the emphasis at my command, that for Heaven's sake the Hon. Chief Minister should put a stop to such a personality cult being built up. That would be doing a grievous injury to the development of democracy.

(The Hon. Thiru P. U. Shanmugam rose.)

Dr. H. V. HANDE : Sir, I am not yielding unless it is a point of order. Is the Hon. Minister raising a point of order ?

(No reply)

Mr. SPEAKER : Let the hon. Member finish his speech.

Dr. H. V. HANDE : Sir, first of all I asked the Hon. Minister whether he is going to raise a point of order. He refused to answer it. This is not the way to function in this House. I have been completely disturbed and I have not been allowed to make my speech continuously without any interruption. After all, the strength of the Opposition Parties is not large and I request the Hon. Chief Minister not to give encouragement to such things so that democracy can survive in this State.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, ஒரு உறுப்பினர் பேசுகிற பொழுதும் எதிர்க் கட்சித் தலைவர் பேசுகிற நேரத்திலும் அமைச்சர்கள் எழுந்து குறுக்கிட்டுப் பேசலாம் என்ற உரிமை இந்த மன்றத்தில் நீண்ட நாட்களாக அளிக்கப் பட்டிருக்கிறது. பல முறை அண்ணா அவர்கள் இருந்த பொழுதும், நாவலர் தலைமையில் இருந்த பொழுதும் எதிர்க் கட்சித் தலைவர் கட்சி ஆட்சியில் இருந்த காலத்திலும் அந்த உரிமை இருந்தது. நான் பேசுகிற பொழுது எல்லா அமைச்சர்களும் பதில் சொல்லி இருக்கிறார்கள். ஆகவே, அந்த உரிமை பாதுகாக்கப்பட வேண்டும். பாயின்ட் ஆப் ஆர்டர், இல்லை என்றால் அமைச்சர்கள் எழுந்திருக்கக் கூடாதென்று சொல்லுவது சரியல்ல.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் பேசும்பொழுது மாண்புமிகு அமைச்சர்களுக்கு குறுக்கிட்டு விளக்கம் தெரிவிக்க உரிமை உண்டு. ஆகவே, பாயின்ட் ஆப் ஆர்டர் என்று எழுந்து பேசினால்தான் அமைச்சர்கள் குறுக்கிட்டுப் பேசலாம் என்பதை மறுபடியும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டது போல கடைப் பிடிக்கப்போவதில்லை. 100, 200 பேர் பங்கேற்கும் விவாதத்தில் அமைச்சர்கள் முழுவதும் பதில் சொல்லும் நிலை இருக்காது. அவர்களுக்கு முதலமைச்சர் கடைசியாக பதில் அளிக்கும்பொழுது கொஞ்சம்தான் சொல்ல முடியும். அந்த அளவில் முடியவில்லை என்றால், அவ்வப்பொழுது குறுக்கிட்டு விளக்கம் தந்து பிரச்சினைகளை சமாளிக்க வேண்டுமே தவிர மறுப்பைத் தெரிவிப்பது நல்லதல்ல. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர்களும், மற்றவர்களும் அமைச்சர்கள் குறுக்கிடும் பொழுது தெளிவுபடுத்த, விவாதத்திற்கு உதவி செய்யத்தான் குறுக்கிடுகிறார்கள் என்று ஏற்றுக் கொள்ள வேண்டும்.

Dr. H. V. HANDE : I accept I am sorry for that.



1971 ஜூன் 25]

* **திரு. சி. வே. வேலப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1971-72-ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையை ஆதரித்து என்னுடைய கருத்தை வழங்க விழைகிறேன். எனக்கு முன்பு, இந்த நிதி நிலை அறிக்கையை ஆதரித்துப் பேசிய அத்தனை கட்சி உறுப்பினர்களும் சிறப்பாகப் பேசி இருக்கிறார்கள். ஆனால், அதே நேரத்தில் அதற்குப்பிறகு அதனை மறுத்துச் சொல்லும் அளவில் சில கருத்தைச் சொன்னார்கள், எனக்கு முன் பேசிய டாக்டர் ஹாண்டே அவர்கள். அப்படிச் சொல்லி வருகின்ற நேரத்தில் நம்முடைய முதல்வர் அவர்களைப் பார்த்து நாங்கள் சொல்லுகின்ற கருத்துக்களை ஏற்றுக்கொள்ளா விட்டால் இரண்டாண்டு காலத்திற்குப் பிறகு கஷ்டத்தை அனு பவிப்பீர்கள் என்ற குற்றச்சாட்டினை வைக்கிறபோது அவர் களுடைய அரசியல் தெளிவைக் காட்டிக்கொண்டார்கள். கடந்த பொதுத்தேர்தலில் நம்முடைய முதல்வர் சொன்ன கருத்தை கேட்காத நிலையில் விட்டில் பூச்சியாக, தேர்தலுக்குப் பிறகு கிடைத்த அனுபவமும், நெருப்பில் விழுந்த புழுப்போல் அவர் களது உள்ளம் துடிக்கிற வேதனையையும் எடுத்துச் சொன்னார்கள். நம்முடைய முதல்வர் அவர்கள் எடுத்துச்சொல்கிற கருத்துக்கு ஏற்ப சொல்கின்ற சான்றோர்கள் இல்லை—உலகமே பார்த்து அதை வியக்கிறது—உலக நாடுகளே கூட நம்முடைய முதல்வர் அவர் களது வழியைப் பின்பற்றுகிறது. அதை கடந்த நாட்களில் பார்த்தோம். கிழக்கு வங்காளத்தில் குமுறல் ஏற்பட்ட உடனே உலக நாடுகளும், இந்தியப் பேரரசும் எந்த நிலையை மேற்கொள் வது என்று தெரியாது தவித்த நேரத்தில்—யாரை ஆதரிப்பது, என்ன கருத்தை வெளியிடுவது என்று தெரியாது தத்தளித்துக் கொண்டிருந்த நேரத்தில் நமது முதல்வர் அவர்கள் இங்கே முஜ்பூர் ரஹீமான் அவர்களை குறிப்பிட்டு, ஆதரித்து நமது முதல்வர் அவர்கள் பேசிய பிறகு இந்திரா காந்தி அம்மையாரும், உலக நாடுகளும் கூடச் சொல்ல முன்வந்தன. அப்படிப்பட்ட நம் முடைய மாபெரும் தலைவர்—முதல்வர் அவர்களைப் பார்த்து நான் சொல்கிற கருத்தை ஏற்றுக்கொள்ளாவிட்டால் இரண்டாண்டுகளில் வருந்த நேரிடும் என்பது, சிறு கிணற்றில் விளையாடுகிற பிள்ளை, கடலிலே சென்று மீன் பிடித்து வருகிற மீனவருக்கு நீச்சல் கற்றுக்கொடுத்த தன்மையாகத்தான் இருக்கிறது.

திராவிட முன்னேற்றக் கழகம் அரசியல் பொறுப்பை ஏற்றுக் கொண்ட பிறகு ஒவ்வொரு ஆண்டும் தயாரித்து அளிக்கப்பட்டு வருகிற நிதிநிலை அறிக்கையை ஊன்றி கவனித்துப் பார்க்க வேண்டும். பேரறிஞர் அண்ணா அவர்களால் துவக்கி வைக்கப் பட்ட இந்த அரசு சோஷலிச சமுதாயத்தை அமைக்க வேண்டு மென்ற தன்மையில் படிப்படியாக, தீவிரமாக எடுத்துக் கொண்டு வருகிற காரியங்களைப் பார்க்கிறபோது இதைப் பாராட்டாமல் இருக்க முடியாது. உண்மையில் சோஷலிச சமுதாயத்தை அமைக்க வேண்டுமென்று பாடுபட்டுக் கொண்டி ருக்கிற திராவிட முன்னேற்றக் கழக கொள்கையை அடிப்படையாக வைத்து இவ்வாண்டு நிதிநிலை அறிக்கையை முதல்வர் அவர்கள்

[திரு. பி. வே. வேலப்பன்] [1971 ஜூன் 25

கொண்டுவந்திருக்கிறார்கள். எழுத்தில் வல்லமை உடையவர்கள்—பேச்சில் வன்மை உடையவர்கள் என்று எங்களைப்பற்றி எடுத்துச் சொல்லலாம். கடந்த நான்காண்டுகால ஆட்சியில் நடந்து வந்திருக்கிற ஒவ்வொரு துறை சம்பந்தப்பட்ட காரியங்களையும் கவனித்துப் பார்த்திருக்கவேண்டும்.

வேளாண்மைத்துறையை எடுத்துப் பார்த்தால் திராவிட முன்னேற்றக் கழக அரசு அமைந்த பிறகு, அத்துறையில் ஆற்றியிருக்கிற பணிகள் கொஞ்சநஞ்சமல்ல. 1967-68-இல் 13.4 கோடி ரூபாய் அத்துறைக்கு வழங்கப்பட்டது என்றால், இப்போது தற்போதைய நிலையில் அது 18 கோடியாக உயர்த்தப்பட்டிருக்கிறது. பல்வேறுவகையில் விவசாயிகளுக்குக் கடன் உதவி அளிக்கப்பட்டு வந்திருக்கிறது. கூட்டுறவுத் துறையின் மூலமாக கடன் வழங்குகிற நிலையில் 1967-68-இல் 37 கோடி கொடுக்கப்பட்டது என்றால், இப்போது நடைமுறையில் 61.65 கோடி அளவுக்கு உயர்த்திக் கொடுக்கிற அளவில் திட்டங்கள் தீட்டப்பட்டிருக்கின்றன. 1967-இல் இருந்து தொடர்ந்து கூட்டுறவுத்துறையில் ஏராளமான கடன்களை அளித்துக்கொண்டு வந்திருக்கிறது.

அதுமட்டுமல்ல—நிலவள வங்கியை அதிகமாக ஏற்படுத்தி நூற்றுக்கும் மேற்பட்ட வங்கிகளின் மூலம் விவசாயப் பெருங்குடி மக்களுக்கு பெரிதும் உதவி வருகிறது இந்த அரசு. 1967-க்கு முன் மக்கள் பஞ்சம், பசி, பட்டினி என்று தவித்துக்கொண்டிருந்தார்கள் என்றால், 1967-68-இல் மட்டும் 57.72 லட்சம் டன் அதிகமாக உற்பத்திசெய்து உணவுப் பற்றாக்குறையை நீக்கியிருக்கிறது. உணவு உற்பத்தியை 1970-71 இல் 70.30 லட்சம் டன்னாக உயர்த்தியிருக்கிறது. 1971-72-இல் இன்னும் கூடுதலாக உற்பத்தி செய்ய திட்டமிட்டிருக்கிறது. அவர்கள் சொல்லலாம்—காக்காய் உட்கார பழம் விழுந்ததுபோல என்பதாக. திராவிட முன்னேற்றக் கழகம் பொறுப்பேற்றவுடன் அதிக மழை பெய்தது, உணவுப் பொருள் விளைந்தது என்றில்லை. இதற்கு முன் நான்காண்டுகளில் பெய்த மழை அளவை விட இவ்வாண்டுகளில் மழை குறைவாகத்தான் பெய்திருக்கிறது. ஆயினும் உணவு உற்பத்தி பெருகியிருக்கிறது என்றால் அது இந்த அரசு அத்துறையில் காட்டி வருகிற அக்கறை—போட்டிருக்கிற திட்டங்கள்தான் என்பதை நாம் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும்.

மின்சாரத்துறையை எடுத்துக்கொண்டு பார்த்தாலும் கூட சுதந்திரம் பெற்ற காலத்தில் இருந்து 1967 வரை மின்சார இணைப்புக் கொடுக்கப்பட்ட கிராமங்கள் 25,129 தான். ஆனால் 1967-க்குப் பிறகு இந்த நான்காண்டு காலத்தில் 17,100 கிராமங்களுக்கு மின்சாரம் அளிக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டில் மட்டும் 9 ஆயிரம் கிராமங்களுக்கு அளிக்க திட்டமிடப்பட்டிருக்கிறது.

தொழில்துறையை எடுத்துப் பார்ப்போமானால் எனக்கு முன்பு பேசிய உறுப்பினர்கள் கெட்டுவிட்டது என்று சொன்னார்கள். சிறு தொழில்களைக் கவனித்துப் பார்த்தாலும் கூட 1967-68-இல் இருந்த நிலையைவிட 1970-71 இல் கிட்டத்தட்ட ஏழாயிரத்திற்கும் மேற்பட்ட



1971 ஜூன் 25] [திரு. பி. வே. வேலப்பன்]

சிறுதொழில்கள் வந்திருக்கின்றன. அதேபோல மாநில அரசின் கோரிக்கையையும் பெற்றுத்தருகிற அளவில்தான் பெரிய தொழில்கள் துவங்கப்படுகின்ற நிலையில் தாத்துக்குடி உரத் தொழிற்சாலை, சேலம் இரும்பு உருக்காலையைப் பெற்றிருக்கிறோம்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை)

நாங்கள் அப்போதே, சேலம் இரும்பாலை பெற வேண்டுமென்பதற்காக 'எழுச்சி நாள்' கொண்டாட வேண்டுமென்று, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்போது நீங்கள் என்ன சொன்னீர்கள் என்பதை நினைவுபடுத்திக் கொள்ளுங்கள். அடுத்து நாளைக்கு காவேரி நீர் பங்கீடு பிரச்சினை வரப்போகிறது. அதற்குத் கண்டனக் கூட்டம், சர்வ கட்சியினரும் எடுத்துப் பேச இருக்கிறோம்.

கிழக்கு வங்காளத்தில் நடைபெறுகின்ற உரிமைப் போராட்டத்தைப்பற்றி இந்திரா காந்தியம்மையார் என்ன நினைக்கிறார்கள்? மற்றவர்களுடைய உரிமைகளை மதித்து நடக்க வேண்டும் என்பதே அவர்கள் தெரிந்துகொண்ட உண்மையாகும். கிழக்கு வங்காள போராட்டத்தில் அவர்களின் உரிமைகளை மதித்து அந்தப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவிக்கிறோமோ அதேபோல ! எதிர் காலத்திலும் நம்முடைய மாநில சுயாட்சிக்கு இந்திரா காந்தியம்மையார் அவர்கள் மதிப்பு கொடுத்துத்தான் ஆக வேண்டும். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அரசியல் தந்திரத்தை உபயோகப்படுத்தி, நம்முடைய மாநிலங்களுக்கு வேண்டிய பல நல்ல காரியங்களைச் செய்து வருகிறார். நம்முடைய முதல்வர் எந்தத் திட்டத்தைக் கொண்டுவந்தாலும் அது பாராட்டக்கூடிய அளவிலே சிறந்து விளங்குகிறது. நம்முடைய முதல்வர் அரசியல் குருவாக இருந்து பல நல்ல காரியங்களைச் செய்து வருகிறார்.

நம்முடைய காவேரி நீர் பங்கீடு பிரச்சினைக்குத் தடை ஏற்படுமானால், நம்முடைய மாநில சுயாட்சிக்குத் தடை ஏற்படுமானால், "திருமதி இந்திராகாந்தியம்மையார் அவர்களே, கடந்த காலத்தை நீங்கள் எண்ணிப் பாருங்கள், வங்காளத்தில் நடைபெற்ற உரிமைப் போராட்டத்திற்கு ஆதரவு அளித்தீர்களே, அதேபோன்ற உரிமைப் போராட்டம்தான் எங்களுடையது" என்று எடுத்துச் சொல்ல எங்களால் முடியும் என்பதை எடுத்துச் சொல்கிறேன். நம்முடைய முதலமைச்சர் அவர்களைப்பற்றி யாராவது புரிந்துகொள்ளவில்லையானால், புரிந்துகொள்ளாமலிருந்தால் அவர்கள் நன்றாகப் புரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகவே இதனைக் கூறுகிறேன். யாராவது அரசியலைப் புதிதாகக் கற்றுக்கொள்ள வேண்டுமானால், அவர்கள் முதல்வர் அவர்களுடைய அரசியலை நன்றாகப் புரிந்துகொள்ள வேண்டும்.

அடுத்தபடியாக, கல்விக்காகவும், சாலை பராமரிப்புக்காகவும், மருத்துவத்திற்காகவும், குடிநீர் வசதிக்காவும் பல திட்டங்களைப் போட்டிருக்கிறோம். 1967-க்கு முன்பு போடப்பட்ட திட்டங்களை

விட அதிகமான அளவில் திட்டங்களைப்போட்டு, அதிகமான நிதி ஒதுக்கீடுகளைச் செய்து, காரியங்களைச் செவ்வனே செய்துகொண்டு வருகிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, என்னுடைய தொகுதியைப்பற்றிய முக்கியமான பிரச்சினைகளைக் குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களிடத்திலும் முறையீடுகள் செய்து கொண்டிருக்கிறோம். நாங்கள் கொடுத்திருக்கும் திட்டங்கள் நூற்றுக்கு தொண்ணூறு மக்களுக்குப் பயன்படும் திட்டங்களாகும். மாண்புமிகு அமைச்சர்கள் அதைச் சீர்தூக்கிப் பார்த்து, நிறைவேறச் செய்தாக வேண்டும். அப்படிச் செய்தால் அந்தப் பகுதி மக்களுக்கு நல்லதொரு பயன் கிட்டும், மக்களுடைய ஆதரவு மேலும் பெருகும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு, எனக்குப் பேச சந்தர்ப்பம் அளித்தமைக்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு விடை பெறுகிறேன். வணக்கம்.

* திரு. என். டென்னிஸ்: மதிப்பிற்குரிய துணைத் தலைவர் அவர்களே, இந்த நிதி நிலை அறிக்கையின்மீது சில கருத்துக்களைச் சொல்லலாம் என்று நினைக்கிறேன்.

இந்த நிதி நிலை அறிக்கையில் மக்களை வளமாக வாழவைக்கும் பல அம்சங்கள் இருக்குமென்று எதிர்பார்க்கப்பட்டது. அதற்கு மாறாக, மதுவிலக்கு ரத்து, புது வரிச்சுமைகள் ஆகிய மக்களை பாதிக்கக்கூடிய புது அம்சங்கள் காணப்படுகின்றன. மதுவிலக்கை ரத்து செய்துவிட்டு, புதிய வரிகளையும் புகுத்தியிருப்பது மக்களின் பொருளாதாரத்தை சீர்குலைப்பதாகத்தான் இருக்கிறது.

கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாக உயர்ந்த லட்சியத்தோடு செயல்பட்டுவந்த மதுவிலக்குக் கொள்கையானது இப்போது ரத்து செய்யும் நிலையில் இருக்கிறது. மது அருந்துகின்றவர்களை இன்று அரசாங்கம் தண்டிக்கின்றது. மது அருந்துகிறவர்களை சமூகம் வெறுக்கிறது. ஆனால் மதுவிலக்குக் கொள்கையை ரத்து செய்வதன் மூலம் சட்டம் குடிப்பவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கின்றது. இதனுடைய விளைவு என்னவென்பதைப் பார்க்க வேண்டும். இதன் காரணமாக, சமூகப் பண்புகள் சீர்குலைந்து போகும். கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாகக் குடிப்பழக்கம் இல்லாத இளைஞர்களின் வாழ்க்கை சீர்குலைந்து விடும், பெண்களின் வாழ்க்கையானது கண்ணீரும் கம்பலையுமாக அலைய வேண்டிய நிலைமை ஏற்பட்டு விடும் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

வருவாய்க்காக மதுவிலக்கை ரத்து செய்கிறோம் என்று சொல்லப்படுகிறது. கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாக வருவாய் குறைந்திருந்தபோதும்கூட முந்தைய அரசுகள் மதுவிலக்கை ரத்து செய்யவில்லை. நான் இந்தச் சந்தர்ப்பத்தில் மகாத்மா காந்தியடிகள் கூறிய கருத்தைக் கூற விரும்புகிறேன். "கலால்





வருமானம் அதர்மமான வழியில் கிடைக்கும் வருமானம். இந்த வருமானத்தைக் கொண்டு நமது குழந்தைகள் கல்வி கற்பிக்கப்படுவது நமக்குப் பெருமையளிக்கும் விஷயம் அல்ல". நாம் மற்ற மாநிலங்களை இந்த விஷயத்தில் முன்மாதிரியாகக் கொள்ளாமல், நாம் மற்ற மாநிலங்களுக்கு முன்மாதிரியாக நடந்து காட்ட வேண்டும் என்றுதான் சொல்ல விரும்புகிறேன்.

நிதி நிலை அறிக்கையில் புதிதாக வரிகள் இருக்காது என்று முதலில் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் நிதிநிலை அறிக்கையின் மூலம் புதிய வரிகள் போடப்பட்டிருக்கின்றன. ஏற்கெனவே யூனியன் பட்ஜெட்டினால் ஏற்பட்ட வரிச்சுமைகளிலிருந்து மீள முடியாமல் மக்கள் தவித்துக்கொண்டிருக்கிறார்கள். அப்படியிருக்கும்போது ஸ்டேட் பட்ஜெட்டில் புதிய வரிகள் விதித்திருப்பது மக்களை இன்னும் பாதிக்கக்கூடியதாகவே இருக்கின்றது. மதுவிலக்கினால் ஏற்படக்கூடிய நஷ்டத்தை ஈடு செய்ய விற்பனை வரி போன்றவை போடப்பட்டது. மதுவிலக்கையும் ரத்து செய்துவிட்டு, விற்பனை வரியையும் உயர்த்தியிருப்பது மக்களை மேலும் பாதிக்கக்கூடியதாக இருக்கிறது. சோஷலிச லட்சியத்தை மனதிற்கொண்டு வரி விதித்திருப்பதாகத் தெரியவில்லை. அத்தியாவசியப் பொருள்களுக்கும் அதேநேரத்தில் ஆடம்பரப் பொருள்களுக்கும் வித்தியாசமில்லாமல் ஒரே அளவில் விற்பனை வரி உயர்வு விதிக்கப்பட்டிருக்கிறது. ஆடம்பரப் பொருள்களுக்கு வரி விதிப்பது சோஷலிச சமுதாயத்தை உண்டாக்க அப்படிச் செய்வதாக இருந்திருக்கும். ஆனால் மக்களின் அன்றாட அத்தியாவசியப் பொருள்களுக்கு வரி விதிப்பது என்ன நியாயம் என்பதைக் கேட்கிறேன். இதன் காரணமாக ஏழைகள் மிகவும் பாதிக்கப்படுவார்கள் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன். அத்தியாவசியப் பொருள்களின் விலை உயர்ந்துவிடும். ஏழை மக்கள் இதனால் பாதிக்கப்படுவார்கள்.

அடுத்தபடியாக, தொழில் துறையில் மூலப்பொருள்களுக்கும் கூட விற்பனை வரி விதிக்கப்படுகின்ற காரணத்தால் உற்பத்திப் பொருள்களின் விலை உயரும். இதனால் பொதுமக்கள் பாதிக்கப்படுவார்கள். மேலும் விற்பனை வரியோடு மேலும் 10 சதமானம் சர்சார்ஜ் சென்னை நகருக்கு விதிக்கப்பட்டிருக்கிறது. சென்னை போன்ற நகரங்களில் இது விதிக்கப்பட்டிருந்தாலும் இந்த மாநிலத்திலுள்ள மக்கள் எல்லோருமேதான் பாதிக்கப்படுவார்கள். ஒரு தேசத்தில் பொருளாதாரத்தில் ஏற்படக்கூடிய வித்தியாசமானது மற்ற தேசங்களில் உள்ள பொருளாதாரத்தைக்கூட பாதிக்கக்கூடியதாக இருக்கிறது என்பதைக் கூறிக்கொள்கிறேன். நாட்டின் தலைநகராக இருக்கின்ற சென்னை போன்றவற்றில் சர்சார்ஜ் போடுவதன் மூலமாக மாநிலத்தின் எல்லா மக்களுமே பாதிக்கப்படுவார்கள். வரி உயர்வால் பொருள்களின் விலை உயரும். இன்னும் அதிகமான சம்பளம் வேண்டுமென்றுதான் ஊழியர்கள் கேட்பார்கள். அதன் மூலம் தொழில் துறையில் அமைதியின்மை ஏற்படும்.

[திரு. என். டென்னிஸ்] [1971 ஜூன் 25

அடுத்தப்படியாக விவசாயத்தை எடுத்துக்கொண்டால், விவசாயத் துறையில் ஏழை விவசாயிகள் கடன் பெறுவதற்கும், உரம் பெறுவதற்கும் பலவிதமான சிரமங்கள் இருக்கின்றன. அந்தக் கஷ்டங்களையெல்லாம் நிவர்த்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பட்ஜெட்டில் 1967-68-ம் ஆண்டைவிட 1971-72-ஆம் ஆண்டில்
பி.ப. 5.44 கோடி ரூபாய் கூடுதல் இருப்பதாகக் குறிப்பிடப்பட்டிருக்
1 00 கிறது. இது ஒருதரப்பான செய்தி என்பதை நான் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். கடந்த ஆண்டுகளிலுள்ள வரவு-செலவுத் திட்டத்தைப் பார்த்தால் ஆண்டுக்காண்டு வரவும் செலவும் கூடிக்கொண்டே வருகிறது என்பதை அறியலாம். 1967-68-இல் உள்ள வருமானத்தையும் ஜனத்தொகையையும், 1971-72-ஆம் ஆண்டிலுள்ள வருமான உயர்வையும், ஜனத்தொகை உயர்வையும் தாரதம்மியப்படுத்திப்பார்த்தால் விகிதாசாரப்படி விவசாயத்திற்குக் கூடுதல் பணம் உயர்த்தப்பட்டதாகக் கருத முடியாது. இன்னும் பார்க்கும்பொழுது, நிலச்சீர்திருத்தம்பற்றி இந்த நிதி நிலை அறிக்கையில் ஒன்றும் குறிப்பிடவில்லை. கன்னியாகுமரி மாவட்டத்தில் தென்னை சாகுபடித் திட்டம் வசதியான திட்டமாக இருக்கும். எனவே, தென்னை சாகுபடி திட்டத்தைக் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு விஸ்தரித்து நடைமுறைக்குக் கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மின் இணைப்பு கொடுப்பதில் கிராமங்களில் காலதாமதம் ஏற்படுகிறது. பல்புகள் சப்ளையானால் செம்மைப்படுத்துவதற்கு அநேக மாதங்களாகின்றன. பல்பு ஸ்டாக் இல்லை என்று அதிகாரிகள் கூறுகிறார்கள். அம்மாதிரியான கஷ்டங்களைப் போக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

தொழில் துறையில் பொருளாதார முன்னேற்றத்தைக் குறித்து இந்த பட்ஜெட்டிலே ஒன்றும் குறிப்பிடவில்லை. இந்த மாநிலத்தில் தற்போதைய தொழில் நிலைமையைப்பற்றியும் இந்த பட்ஜெட்டில் ஒன்றும் குறிப்பிடவில்லை.

நீண்ட நிலையான வேலைவாய்ப்பளிக்கக்கூடிய பெரிய தொழிற்சாலைகளையும், சிறிய தொழிற்சாலைகளையும் ஏற்படுத்தினால்தான் நிலையான வேலைவாய்ப்பு அளிக்கச் சந்தர்ப்பமிருக்கும். அம்மாதிரியான பெரிய தொழிற்சாலைகளையும், சிறிய தொழிற்சாலைகளையும் ஏற்படுத்த வழிவகை செய்ய வேண்டும். கன்னியாகுமரிக்கு ஒரு ரப்பர் தொழிற்சாலை ஏற்படுத்த வேண்டும்.

கல்வியை எடுத்துக்கொண்டால், கன்னியாகுமரி மாவட்டத்தில் பள்ளிக்கூட கட்டடங்கள் மிகவும் மோசமாக இருக்கின்றன. பல பிரைமரி ஸ்கூல்கள் கட்டடங்கள் இல்லாமல் ஷெட்டில் நடக்கின்றன. அவைகளையும் மாற்ற ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1971 ஜூன் 25] [திரு. என். டென்னிஸ்]

மருத்துவத்துறையை எடுத்துக்கொண்டால், இப்பொழுது பிரைமரி ஹெல்த் சென்டர்கள், ஹாஸ்பிடல் பலவற்றுள் மருந்துகள் உடனடியாகக் கிடைக்காத சந்தர்ப்பமிருக்கிறது. அந்தக் குறைகளையும் நீக்க வேண்டும். கருங்கல் பிரைமரி ஹெல்த் சென்டரை ஒரு ஹாஸ்பிடலாகவும், குழித்துறை தேங்காய்ப்பட்டணம் ஹாஸ்பிடல் போன்றவைகளுக்குப் புதிய கட்டடங்கள் கட்டியும் விருத்தி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பஸ்களைத் தேசியமாக்கியிருப்பது வரவேற்கத்தக்கதுதான். ஆனால் இப்பொழுது பஸ்கள் சரியாகச் செயல்படவில்லை, மக்களுக்குப் பிரயோசனம் அளிக்கும் விதத்தில் செயல்படவில்லை. ஆதலால் தேசியத்தின் நோக்கம் நிறைவேற வேண்டுமானால் அவைகளைச் சரியாக இயங்க வைக்க வேண்டும்.

பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொண்டு உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. ப. முத்துசாமி: துணைத் தலைவரவர்களே, இந்த நிதி நிலை அறிக்கையை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். குறிப்பாக, இந்த நிதி நிலை அறிக்கையைப் பொறுத்தமட்டில் இங்கேயிருக்கும் அதிகாரத்தை எந்த அளவிற்கு, எவ்வளவு தூரம் இருக்கிறதோ அதைப்பொறுத்து மக்களின் வாழ்க்கைத்தரம், குறிப்பாக ஏழை எளியவர்கள், சமுதாயத்தின் அடிமட்டத்திலிருப்பவர்கள் ஆகியவர்களுக்கு எந்த அளவிற்கு இந்த நிதி நிலை அறிக்கையிலே முன்னேற்றத்திற்கு இடம் தர வேண்டுமோ அவைகளையெல்லாம் கருத்திலேகொண்டு மிகவும் சிந்தித்து, ஆற அமர யோசித்து இந்த அறிக்கையை நம்முடைய முதலமைச்சரவர்கள் இங்கே செய்திருக்கிறார்கள் என்பதை நிச்சயமாக அத்தனைபேரும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

குறிப்பாக, இந்த நிதி நிலை அறிக்கை தாக்கல் செய்யப்படுவதற்கு முன்பு இந்த மன்றத்திலேகூட பலபேர் இங்கே வரி எந்த அளவிற்கு இருக்குமோ, எப்படியெல்லாம் இருக்குமோ என்று பேசக்கூடிய பேச்சு காணப்பட்டது. அதிகமாகச் சம்பளத்தை உயர்த்திக் கொடுத்திருக்கிறார்கள், அதற்கு என்ன செய்யப்போகிறார்கள் என்று பேசப்பட்டது. ஆனால், இந்த அறிக்கை தாக்கல் செய்யப்பட்ட பிறகு, இங்கே எதிர்த்தரப்பிலே இருப்பவர்கள் மட்டுமல்லாமல், பத்திரிகையிலேயும் பலபேர் குறைகூறிச் சுட்டிக்காட்டி நியாயமான குறைகளைக் கூற முடியாமல் நல்ல நிதி நிலை அறிக்கையாக, அமைந்திருக்கிறது.

விவசாயத்தைப் பொறுத்தவரையில் இந்த நிதி நிலை அறிக்கையில் அதிக உற்பத்திக்கு அதிகமான வாய்ப்பிருக்கிறது என்று நிச்சயமாகச் சொல்ல முடியும். காரணம் என்னவென்றால், அதிகமான லாங் டெர்ம் லோன்களுக்கும், அதேபோல் ஸ்மால் இர்ரிகேஷனுக்கும், அதேபோல் எலக்ட்ரிசிட்டி கரண்ட் சப்ளை

[திரு. ப. முத்துசாமி] [1971 ஜூன் 25

கிணறுகளுக்குக் கிடைக்கவும் வாய்ப்பிருப்பதால் நிச்சயமாக விவசாயத்தில் அதிக உற்பத்திக்கு வாய்ப்பு இருக்கிறது என்பதைத் திட்டவட்டமாகக் கூற முடியும்.

அதற்கும் மேலாக இன்னொன்றைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இந்த நிதி நிலை அறிக்கையைப் பார்த்தால் இன்னொன்றும் அறியலாம். கிராமப்புறத்தில் உடல் உழைப்பைத் தரும் ஏழைகள், சேரிகளில் இருக்கும் மக்கள், படிக்காதவர்கள் இருக்கிறார்கள். ஒவ்வொரு தொகுதியிலேயும் தேர்தல் நேரத்திலேயும் சரி, இன்றைக்கும் சரி வேலை தேடிக்கொண்டு ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரிடத்திலேயும் அல்லது அமைச்சரிடத்திலேயும் மனுக்கொடுப்பதைத் தினம்தினம் பார்க்கிறோம். அப்படிப்பட்டவர்களை மனத்திற்கொண்டு ஏழைகள், படிப்பறியாதவர்களுக்கு 30,000 பேர்களுக்கு வேலைவாய்ப்பைக் கொடுத்திருக்கிறார்கள். நிச்சயமாக 30,000 பேர்களுக்கு வேலை கொடுத்தால் அது 30,000 குடும்பங்களுக்கு வாழ்வு அளித்ததாக அமையும். இது ஓரளவு போதாததாக இருக்கலாம். ஆனால் நம்மிடம் இருக்கும் வாய்ப்பையும் நிதி நிலையையும் வைத்து நல்ல காரியத்தைச் செய்திருக்கிறார்கள் என்பதை உள்ளபடியே வரவேற்க வேண்டும்.

அடுத்து, கள்ளுக்கடைப் பிரச்னையை எடுத்துக்கொண்டால் இங்கே பலதரப்பிலும் பல்வகையான கருத்துக்கள். கூறப்பட்டன. சட்டத்தின் மூலம் கள்ளுக்கடைகளைத் திறந்துவிடுவதால் இதுவரை குடிக்காதவர்கள் யாரையும் குடிக்க வேண்டுமென்று சொல்லவில்லை. எற்கனவே குடித்துக்கொண்டிருப்பவர்கள் சட்டம் இருப்பதனால் குடிக்காமல் இருப்பதில்லை. இதுதான் இன்றுள்ள உண்மையான நிலைமை. சட்டத்தைக் கொண்டுவந்தாலும்கூட, சமுதாயத்தில் குடிப்பது தவறு, கள்ளுக் குடிப்பவனை ஒருமாதிரியாகப் பார்ப்பார்கள் என்று கருதுபவர்கள் நிச்சயமாக இந்தச் சட்டத்தின் மூலம் குடிக்கலாம் என்று சொன்னாலும்கூட குடிக்க வேண்டுமென்ற ஆசை சாதாரணமாக அவர்களுக்கு ஏற்பட்டுவிட முடியாது. ஆகையால் அதைப்பற்றி யாரும் அச்சப்பட வேண்டியதில்லை. கிராமத்தில் இருப்பவர்கள் இன்றைக்குச் சட்டமிருந்தாலும்கூட ஓரளவிற்கு இந்தக் குடிப்பழக்கத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் பலர் இருக்கிறார்கள் என்று நிச்சயமாகச் சொல்லலாம். கிரிமினல் கோர்ட்டில் வழக்கறிஞராக நான் பணியாற்றியிருக்கிறேன். பலபேர்கள் சாராயம் காய்ச்சியதற்காக அவர்களுக்கு 6 மாதங்கள் தண்டனை கொடுத்தாலும், ஜெயிலிலேயிருந்து வெளியே வந்தவுடன் உடனடியாக பீப்பாய் பீப்பாய்களாகக் காய்ச்சி ஒரு வட்டாரத்திற்கே சப்ளை செய்யும் அளவில் மீண்டும் அந்தத் தொழிலில் ஈடுபடுகிறார்களே தவிர, சட்டத்திலே தண்டித்து விட்டார்கள் என்பதற்காகப் பயந்துகொண்டிருப்பதில்லை. ஆகவே, சட்டம் இருப்பதால் மட்டும் ஒழுக்கத்தை நிலைநிறுத்த முடியுமென்று கூறுவது நிச்சயமாக முடியாது. சட்டத்தைத் தளர்த்தி விட்டதால் மட்டும் ஒழுக்கம் கெட்டு விடும் என்று சொல்வது, ஒருசிலர் தங்களிடமே நம்பிக்கையில்லாத காரணத்



1971 ஜூன் 25] [திரு. ப. முத்துசாமி]

தால் கூறுவதாக ஆகுமேதவிர நிச்சயமாக மதுவிலக்கை எடுத்துவிட்டதால் நாம் புதிதாக ஒருவரை இந்தப் பழக்கத்திற்கு ஈடுபடுத்துகிறோம் என்று அச்சம் கொள்ள வேண்டியதில்லை. ஆகையால் இந்த மதுவிலக்குக் கொள்கையை எடுத்துவிடுவதை நிச்சயமாக உளமார வரவேற்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையில் இன்னும் ஏராளமானவற்றைக் குறிப்பிட முடியும். வேலையில்லாத் திண்டாட்டத்தைக் குறைக்க, படித்தவர்களுக்கும், பல இன்ஜினியர்களுக்கும், டாக்டர்களுக்கும் இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதேபோல் இந்த நிதிநிலை அறிக்கையில் உள்ள பல நல்ல அம்சங்களைப்பற்றி இங்கே சட்டமன்றத்தில் பலபேர் எடுத்துக் கூறினார்கள். ஆகையால் இந்த நிதிநிலை அறிக்கையை நிச்சயமாகப் பாரபட்சமற்ற முறையில் நடுநிலையிலேயிருந்து பார்ப்பவர்கள் வரவேற்பார்கள். அந்த வகையிலே வரவேற்று என்னுடைய தொகுதியிலே உள்ள சில காரியங்களைப்பற்றி, பொதுப்படையான காரியங்களைக் குறிப்பிட விரும்புகிறேன்.

குறிப்பாக இங்கே பேசிய பல உறுப்பினர்கள் தங்கள் தொகுதி மிகவும் வறண்ட தொகுதி என்றும், எல்லாத் தொகுதியையும் விட வறண்ட தொகுதி என்றெல்லாம் கூறினார்கள். என்னைப்பொறுத்தவரையில் நடந்த நிகழ்ச்சி ஒன்றை நினைவுபடுத்தினால் இருக்கும் நிலையைத் தெளிவுபடுத்த முடியுமென்று கருதுகிறேன். ஒரு மாதத்திற்கு முன்பு ரெவின்யூ போர்ட் மெம்பரும், மாவட்ட கலெக்டரும் என்னுடைய தொகுதிக்கு வந்திருந்தார்கள். அந்த நேரத்தில் அவர்களுக்கு அங்கே இளநீர் கொடுத்தார்கள். எப்படி இங்கே இளநீர் கிடைத்தது என்று போர்ட் மெம்பரும், கலெக்டரும் கேட்டார்கள் என்றால் அது எந்த அளவிற்கு வறண்ட பகுதி என்பது விளங்கும்.

இன்னும் சொல்லப்போனால் எங்கள் தொகுதியில் லிஸ்ட் ஒன்று அனுப்பியிருந்தார்கள். நிலநீர் வல்லுநர்கள் நிலத்திற்கு அடியில் கிணற்றிலே தண்ணீர் எவ்வளவு டெபாசிட் இருக்கிறது என்று அறிவதற்காக அரசாங்கத்தில், ரிசர்வ் பேங்கிலிருந்தும் நம்முடைய அரசிலேயிருந்தும் அனுப்பியிருக்கிறார்கள். அந்த வல்லுநர்கள் இங்கே 100 அடி 120 அடிக்குக் கீழே, கோயம்புத்தூர் பகுதிகளிலே உள்ளதுபோல் இரண்டு மோட்டார்கள் வைத்து ஓட்டிக்கொண்டிருக்கிறார்கள், அவ்வளவு ஆழம். இந்த நிலையில் இனிமேல் புதிதாகக் கிணறுகள் வெட்டினால் எற்கனவே உள்ள கிணறுகளில் இருக்கிற தண்ணீரும் வற்றிவிடும், எனவே, புதிதாகக் கிணறுகள் வெட்டுவதற்கு லோன் தரக்கூடாது, அடி வெட்டுக்கும் தரக்கூடாது, பம்பு செட்டுகளுக்கு மாத்திரம் கொடுக்க வேண்டுமென்றும் சொல்லியிருக்கிறார்கள். அந்த அளவிற்கு வறட்சியிருக்கிறது. ஆகவே, தமிழக அரசு சிறு சிறு நீர்த்தேக்கங்களைக் கட்ட வேண்டும்.

[திரு. மு. சத்தியமூர்த்தி] [1971 ஜூன் 25

விரும்புகிறேன். ஒரு இடத்தில், ஒரு விவசாயக் குடும்பத்தில் வரி போட்டார்கள். அந்த வரியில் அவன் வீட்டில் தென்னை மரங்கள் இருப்பதாகச் சொல்லப்பட்டிருந்தது. ஆனால் அந்த இடத்தில் பார்த்தால் ஒரே ஒரு தென்னை மரம்தான் இருந்தது. அதுவும் காய்க்கக் கூட இல்லை. இந்த மாதிரி மரங்களுக்கு வரி போடுகிறார்கள். ஆகவே, எங்களைப் போன்று புதுக்கோட்டை வறட்சிப் பகுதியில் இருக்கும் மக்களுக்கு, பெரும்பாலான விவசாய மக்களுக்கு பாதகம் இல்லாமல் செய்ய வேண்டும் என்று இந்த மன்றத்திலே சொல்ல விரும்புகிறேன். ஆகவே, வரி விதிப்பை மறுபரிசிலனை செய்து தக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மதுவிலக்கு பற்றி கூறப்பட்டது. எந்த விதத்தில் விலக்கப்படுகிறது என்பதை முதல்வர் அவர்கள் கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள். மது விலக்கை வருமானத்திற்காகவும், அதே நேரத்தில், மது விலக்குச் சட்டத்தை நல்ல முறையில் நடத்த முடியாமல் இருப்பதாலும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. மதுவிலக்கை நல்ல முறையில் நடத்த முடியவில்லை என்றால், நிர்வாகத்தை நல்ல முறையாக நடத்த முடியுமா என்று ஜனங்கள் கேட்கமாட்டார்களா? ஒரு திட்டத்தைக் கொண்டு வந்து அதை நல்ல முறையில் நடத்த முடியவில்லை என்றால் அதை ரத்து செய்துவிடுவதா என்பதைச் சிந்திக்க வேண்டும். இப்பொழுது எத்தனையோ திட்டங்களைக் கொண்டு வருகிறோம். ஆனால் திட்டங்கள் எல்லாம் நல்ல முறையாக நடக்கின்றன என்று சொல்ல முடியாது. அதற்காகத் திட்டத்தை விட்டு விடுவது என்பது உகந்ததல்ல. நல்ல முறையில் சிந்தித்து, அதைச் செம்மையாக நடத்த முயற்சி செய்ய வேண்டும். நாங்கள் ரேஷன் கொண்டு வந்தோம். அதற்குக் கிராமங்களில் தாய்மார்களிடம் எதிர்ப்பு வந்து, தாய்மார்கள் எங்களைச் சபித்தார்கள். பட்டணத்தில் உள்ள தாய்மார்களும் சபித்தார்கள். அதன் காரணமாக நாங்கள் 50 பேர்களாக வந்து, இன்றைக்கு 15 பேர்களாக இருக்கிறோம். நான் உங்களுக்குச் சொல்ல விரும்புவது, கிராமத்திலுள்ள தாய்மார்கள், பட்டணங்களிலுள்ள தாய்மார்கள் மதுவிலக்கை ரத்து செய்வதால் பாதிக்கப்படும்போது, உங்களையும் சபிக்கத்தான் போகிறார்கள், நீங்களும் அதற்கு ஆளாகத்தான் போகிறீர்கள் என்று கூறி என் சிற்றுரையை முடிக்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அடுத்து திரு. சகாதேவன். அவர் தன் இருக்கையில் இல்லை.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இந்த அளவோடு முடிவுற்று, நாளைக் காலை 9 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும். வணக்கம்.

*பின்னர் பேரவை ஒத்திவைக்கப்பட்டது.*



1971 ஜூன் 25]

## (6) பேரவையின்முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. Statutory Rules and Orders.

100. Notification issued with G.O. No. 155, Agriculture, dated the 18th January 1971, in regard to an amendment to the Tamil Nadu Agricultural Produce Markets Rules, 1962. [Laid on the Table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).]

101. Notification issued with G.O. No. 2046, Rural Development and Local Administration, dated the 16th October 1970, in regard to division of wards and reservation of seats in Aruppukottai Municipal Council. [Laid on the Table of the House under section 301 (d) of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920).]

102. Notification issued with Roc. No. 184474/69-E3, dated the 5th January 1970, in regard to extension of certain provisions of the Tamil Nadu District Municipalities Act, 1920 in the areas within the jurisdiction of the Suramangalam Town Panchayat in Salem district. [Laid on the Table of the House under section 179 (4) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

103. Notification issued with Roc. No. 102918/70-E5, dated the 10th October 1970, in regard to extension of certain provisions of the Tamil Nadu District Municipalities Act, 1920 in the entire area of Balacola Town Panchayat in the Nilgiris district. [Laid on the Table of the House under section 179 (4) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

104. Notification issued with Roc. No. 70497/69-P2, Rural Development, dated the 26th February 1970, in regard to exclusion of Nainarpathu area from the existing Seerkatchi Panchayat in Tiruchendur taluk of Tirunelveli district for the constitution of a separate Panchayat and re-adjustment of the area of other Panchayats. [Laid on the Table of the House under section 179 (4) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

105. Notification issued with Roc. No. 196270/69-P2, dated the 9th February 1970, in regard to inclusion of certain areas covered by the Central Government properties lying adjacent to concerned panchayats in Ramanathapuram district. [Laid on the Table of the House under section 179 (4) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

106. Notification issued with G.O. Ms. No. 974, Agriculture, dated the 23rd March 1971, in regard to certain amendments to the Tamil Nadu Agricultural Produce Markets Rules, 1962. [Laid on the Table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).]

[திரு. என். இராஜாங்கம்] [1971 ஜூன் 25

30 ரூபாய் கட்டிவிட்டால் சிறைக்கு வரவேண்டியதில்லையே என்று கேட்டேன். அதற்கு அவர்கள் இங்கே 90 நாளைக்குச் சாப்பாடு போடுகிறார்கள். மீண்டும் வெளியே சென்று குடித்துவிட்டு உள்ளே வந்து சாப்பிட்டுக் கொண்டிருக்கலாம் என்றார்கள். இந்த நிலைமைகளை எல்லாம் உணர்ந்த பிறகுதான் இப்போது அதனை ரத்து செய்ய வேண்டிய முடிவுக்கு வந்திருக்கிறோம். உள்ளபடியே எடுத்தது வருத்தப்படக்கூடிய ஒன்றாக இருந்தாலும் நாட்டில் 75 சதவிகித மக்களின் எண்ணத்திற்கு மாறாக நடக்கக் கூடாது என்ற எண்ணத்தோடு மதுவிலக்கு ரத்து செய்யப்பட்டிருக்கிறது.

இந்த நிதிநிலை அறிக்கை முழுக்க முழுக்க சமதர்மத் திட்டத்தைச் செயல்படுத்தும் அளவிலே அமைந்திருக்கிறது. ஒரு காலத்தில் சோஷலிசம் என்று சொன்னவர்கள் எல்லாம் இன்று சோஷலிசத்தை எதிர்க்கின்ற நிலைமையில் இருக்கிறார்கள். இதை விட அதிசயிக்கத்தக்க நிலைமை வேறு ஒன்றும் இல்லை. சோஷலிசம் என்று எங்களைக் கூட நம்ப வைத்தவர்கள், இன்று எதிர்க்கிறார்கள். அன்று யார் ஆட்சி செய்தாலும் சோஷலிசத் தத்துவம் வெற்றி பெற்றால் போதும் என்று நாங்களும் நம்பி பேசாது இருந்தோம். அன்று தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு அவர்களுடைய வாழ்க்கையை உயர்த்த, பொருளாதாரத்தில் அவர்கள் மேம்பாடு அடைய, தொழில்களில் அவர்களுக்கு அதிகச் சலுகை தரப் பாடுபடுவோம் என்று மக்களிடத்திலே எடுத்துச் சொல்லி சட்டசபைக்கு வந்தவர்கள் இன்று அந்தக் கொள்கையை எதிர்க்கிறார்கள். யார் என்று நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்பவில்லை.

சோஷலிசம் எங்கே இருக்கிறது என்று கேட்டார்கள். ஓரே ஒரு அம்சத்தை நான்சுட்டிக் காட்ட விரும்புகிறேன். எங்கள், பகுதியிலே இன்றும் குழந்தை பிறந்தால் கூலி வேலை செய்கின்றவர்கள் தங்களுடைய குழந்தையை வயற்காட்டிற்கு எடுத்துச் சென்று மாக்கிளையில் கயிறு கட்டி குழந்தையைப் போட்டுவிட்டு வேலை செய்துவிட்டு கூலி வாங்கிச் செல்லுவார்கள். அத்தகைய குடும்பங்கள்தான் நாட்டிலே பெரும்பகுதியினராக இருக்கிறார்கள். நூற்றுக்கு 95 பேராக இருக்கும் அந்தத் தாழ்த்தப்பட்ட குடும்பங்களின் நலனில்தான் சோஷலிசமே அடங்கியிருக்கிறது. அப்படிப்பட்ட குடும்பங்களுக்கு இந்தச் சர்க்கார் என்ன செய்திருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். குழந்தைகளுக்கு ஊட்டச் சத்துக் கொடுப்பது என்று ஆரம்பித்தார்கள். அடுத்து கல்வி வசதிகளைக் கொடுத்திருக்கிறார்கள். படித்த வாலிபனுக்கு உத்தியோகம் கொடுக்குந் தக்க திட்டத்தைக் கொடுத்திருக்கிறார்கள். அதற்கும் மேலே, வயதாகி நோயுற்றால், தொழு நோய், இன்னும் மற்ற நோய்களுக்கு உதவியளிக்கத் திட்டம் போட்டிருக்கிறார்கள். மனிதன் எந்த வகையிலும் முடியாமல் போய் பிச்சை கேட்கும் நிலைக்கு வந்தானேயானால், அப்படிப்பட்டவர்களையும் வாழவைக்கத் திட்டம் போட்டார்கள். அப்படி மனிதன்



1971 ஜூன் 25] [திரு. என். இராஜாங்கம்]

பிறந்தது முதல் சாகிற வரையில் சோஷலிச தர்மத்தைக் கடைப்பிடித்து, வரிசைக் கிரமமாக, இந்த நிதிநிலை அறிக்கையில் அவர்களுக்குச் செய்யப்படும் உதவிகள் பற்றிப் பெரிய விபரங்களைக் கொடுத்திருப்பதிலிருந்து, இதை சோஷலிச தத்துவத்தை அடங்கியதாகச் செய்திருக்கிறார்கள். யார் என்ன நினைத்தாலும், மகாத்மா காந்தியும், அறிஞர் அண்ணாவும் எழுதி எழுதிச் சொல்லி வந்த தத்துவத்தை முன்னேற்றக் கழகம் கடைப்பிடித்து வருகிறது என்பதை யாரும் மறுக்கமுடியாது. அதைக் காட்டுகிறது இந்த நிதிநிலை அறிக்கை. இப்படிச் சிறந்த நிதிநிலை அறிக்கையைக் கொடுத்திருக்கும் முதல்வர் அவர்களையும், இந்த அமைச்சரவையையும், அரசு ஊழியர்களையும் பாராட்டி அவர்களுக்கு நன்றி செலுத்தி முடிக்கிறேன், வணக்கம்.

*திரு. மு. சத்தியமூர்த்தி: மதிப்பிற்குரிய உதவித் தலைவர் அவர்களே, 1971-72-ம் ஆண்டு நிதி நிலை அறிக்கை மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல முன் வருகிறேன்.

ஒரு பக்கத்திலே பசுமைப் புரட்சி என்ற வகையில் விவசாய வளர்ச்சிக்கு எத்தனையோ உதவிகள் செய்கிறோம். அதைப் போல மற்றொரு பக்கத்தில் 'விவசாய வருமான வரி' என்ற முறையில், இதுவரையில் வசூலித்து வந்திருக்கிறது, இந்த அரசாங்கம். 1971-72-வது வருஷ நிதிநிலை அறிக்கையில் விவசாய வரி செலுத்துகிறவர்கள் பணப்பயிர்கள் செய்தால், அதற்கும் வரி செலுத்த வேண்டும் என்று சொல்லுகிறார்கள். அப்படி 'விவசாய வருமான வரி செலுத்துவதைப் பார்த்தால், எத்தனையோ விவசாயக் குடும்பங்கள் வரி செலுத்த முடியாமல் அல்லல்களுக்கு ஆளாகிறார்கள். கிராமத்தில் இருக்கக் கூடிய என்னைப் போன்றவர்களுக்குத்தான் அது தெரியும். ஏனென்றால், விவசாயத்தில் ஒரு பழமொழி சொல்வார்கள், 'விவசாயம் எண்ணாமல் செய்ய வேண்டும். வியாபாரம் எண்ணிச் செய்ய வேண்டும்' என்று. அது போல, விவசாயத்தில் ஒரு வரி என்று சொல்லும்போது. அங்கே இருக்கின்ற கிராம அதிகாரிகளை பொறுத்து இருக்கிறது. அவர் நல்லவராக இருந்தால் விவசாயிகளுக்கு எந்தவிதமான கெடுதலும் உண்டாகாது. ஆனால் அதே நேரத்தில் கிராம அதிகாரிகள் நல்லவிதமாக இல்லை என்றால், அவர்களுக்கு மிராசுதார் பணியாவிட்டால், அவர்களுக்கு எவ்வளவோ தொந்தரவு கொடுப்பார்கள். அதுதான் சட்டத்தின் போக்கு. வருமான வரி அந்த முறையில்தான் வழங்கப்படுகிறது. அவர்கள் நினைத்தால் ஒரு விவசாயிக்கு குறைவாகப் போடலாம், அதிகமாகவும் விதிக்கலாம். அந்த முறையில்தான் நடக்கிறது. கிராம அதிகாரிகள் கொடுக்கும் கணக்கை வைத்துத்தான் அந்த வரி விதிக்கப்படுகிறது. அதே நேரத்தில் ஒரு விவசாயிக்கு இருக்கும் வேறு கஷ்டங்களைப் பாராமல் மேல்வாரியாக விதிக்கப்படுகிறது. அதற்காகத்தான் சொல்லுகிறேன், என்னுடைய அனுபவத்தில் பார்த்திருக்கிறேன், ஒரு உதாரணத்தைச் சொல்ல

[திரு. ப. முத்துசாமி] [1971 ஜூன் 25

பாண்ட் ஸ்கிமை பழனி வட்டத்திலும் வேடசந்தூர் வட்டத்திலும் நிறைவேற்ற வேண்டுமென்று அறிக்கை விட்டிருக்கிறார்கள். அங்கு நிறைய ஓடைகள் ஓடுகின்றன. அந்தத் திட்டத்தை நல்ல முறையில் நிறைவேற்றிக் கொடுப்பதன் மூலம் எங்கள் பகுதியில் இருப்பவர்கள் குடிப்பதற்குக்கூடத் தண்ணீர் இல்லாது கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் நிலை போகும்.

ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் இருக்கும் டிராக்டர்களை ரிப்பேர் செய்ய வட்ட அளவில் ரிப்பேர் சாதனங்கள் இருக்க வேண்டும். 40,000, 50,000 முதலீடு செய்து வாங்கிய டிராக்டர்களை ரிப்பேருக்காக நீண்ட தொலைவு எடுத்துச் செல்லுவது என்றால் வேலைகள் தடைப்படும் நிலை ஏற்படுகிறது.

குடிநீர்த் திட்டம்பற்றி நீண்ட நாட்களாகப் பேசப்பட்டு வருகிறது. வேடசந்தூர் பகுதிக்கு அதைவிட்டால் வேறு வழி இல்லை. வேடசந்தூருக்குப் பயன்படும் வகையில் குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்றித் தரவேண்டும். நூற்பாலை ஒன்றையும் ஏற்படுத்தித் தரவேண்டும். எ.ஆர்.சி. ஸ்கீமில் கண்டிஷன் போட்டதன் காரணமாக நிலவள வங்கியில் ஒரு ஐட்டத்திற்கு மட்டுந்தான் லோன் தருகிறார்கள். இந்த நிலையை மாற்ற வழி செய்யவேண்டும்.

அரிசன மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள் வாழ்க்கை வசதிக்காக சிறு சிறு தொழில்களை ஆக்கித் தரவேண்டும்.

அங்கு அரசாங்க மருத்துவமனை இல்லை, பிரைமரி ஹெல்த் சென்டர் மட்டுந்தான் இருக்கிறது. அரசாங்க மருத்துவமனை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். (மணி அடிக்கப்பட்டது) எரியேட்டில் பிரைமரி ஹெல்த் சென்டர் ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

**திரு. என். இராஜாங்கம்** : சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1971-72-ம் ஆண்டுக்கான திருத்தப்பட்ட நிதிநிலை அறிக்கை மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கை நமது நாட்டில் சமுதாய மறுமலர்ச்சிக்கும், பொருளாதார வளர்ச்சிக்கும், தொழில்துறை முன்னேற்றத்திற்கும், தொழிலாளர் நலத்திற்கும், தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட மக்களின் முன்னேற்றத்திற்கும் வழிவகை காணுகின்ற வகையில் அமைந்திருக்கிறது. இவற்றையெல்லாம் கோட்டிட்டுக் காட்டும் விதத்தில் சமதர்மத் திட்டங்களை நம்முடைய முதல்வர் அவர்கள் சாமர்த்தியமாக இந்த அறிக்கையிலே சேர்த்திருக்கிறார்கள். அந்தக் காலத்தில் சொல்லுவார்கள்—அஷ்டாவதானம், தசாவதானம் என்று ஒரே சமயத்தில் பலவற்றைக் கவனிக்கும் சாமர்த்தியத்தைப்பற்றி அவ்வாறு குறிப்பிடுவார்கள். அம்மாதிரி திறமையுடைய நம்முடைய முதல்வர் அவர்கள் நாட்டிலுள்ள அத்தனை குறைகளையும் தீர்க்க முயற்சி எடுத்துள்ளார்கள். அந்த முயற்சியின் வடிவம்தான் இந்த நிதி நிலை அறிக்கை.



1971 ஜூன் 25] [திரு. என். இராஜாங்கம்]

எதிர்க்கட்சியில் இருப்பவர்கள் இந்த அறிக்கையில் ஒன்றுமே இல்லை என்று சொன்னார்கள். அவ்வாறு சொல்லுவது அவர்கள் வழக்கம்தான். ஆனால் சொல்லுவதை முறையாகச் சொல்ல வேண்டும். சுதந்திராக் கட்சியின் தலைவர், நாங்கள் எல்லாம் மதிக்கின்ற அளவுக்கு உள்ளவர்கள், ராஜாஜிக்கு அடுத்த முறையில் இருப்பார்கள் என்று எண்ணத்தக்க நிலையிலே இருக்கின்ற அவர்கள் கொஞ்சம் அவசரப்படுகிறார்கள். கடந்த பதினைந்து இருபது ஆண்டுக் காலத்திலே நாட்டு மக்கள் நலனை மனத்தில் கொண்டு, நாட்டு மக்கள் நிலைக்குத் தகுந்தவாறு, நாட்டு மக்கள் விரும்புகிற அளவுக்கு இதுபோன்ற ஒரு அறிக்கை அமைந்திருக்கிறதா என்பதை அவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அவர்கள் கொஞ்சம் அவசரப்பட்டு விட்டார்கள்.

மதுவிலக்கை ரத்து செய்வதைப் பற்றிக் கூறும்போது மக்களை ஏமாற்றுவதற்காக என்ற வார்த்தையைச் சொன்னார்கள். தலைவர் அவர்கள் அந்த வார்த்தையை எடுத்து விட வேண்டுமென்று சொன்ன போது முதலமைச்சர் அவர்கள் அதை எடுக்க வேண்டாம் என்று சொன்னார்கள். ஏமாற்றுவது யார் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். மதுவிலக்குச் சட்டம் உருவாக்கப்பட்ட அந்தக் காலத்திலிருந்து இந்தக் காலம்வரை மதுவிலக்கை ஆதரித்தவர்கள் திருட்டுத்தனமாகக் குடித்ததை இந்த நாடு சந்தித்துக் கொண்டுதான் இருக்கிறது. அப்படிச் சாப்பிட்டவர்கள் ஏமாற்றுவது உண்மை. ஒரு சட்டம் இருக்கிறது என்றால் அதை நாடு மதிக்க வேண்டும். சட்டத்தை வைத்துக் கொண்டு சட்டத்தை ஏமாற்றுகின்றவர்களையும் வைத்திருக்கக்கூடிய சங்கடத்தைத் தீர்க்க வேண்டுமென்றுதான் வருத்தத்தோடு இதனை ரத்துச் செய்திருக்கிறார்கள். காந்திஜியின் கொள்கைக்கு, அண்ணாவின் எண்ணத்திற்குப் புறம்பாகப் போகிறோமே என்று வருத்தத்தோடு சொன்னார்கள். இதைக்கூட ஏமாற்று என்று அவர்கள் சொன்னார்கள். ஒரு மனிதனுக்கு சந்தோஷம் ஏற்படும் போது ஆங்கிலத்திலே 'ஐயாம் கிளாடு' என்று சொல்லுவார்கள். வருத்தமாக இருக்கும்போது 'ஐ ரிக்ரெட்' என்று சொல்லுவார்கள். உள்ளபடியே வருத்தமாக இருக்கும்போது வருத்தப்படுகிறேன் என்று சொன்னால் அதை ஏமாற்று வார்த்தை என்று சொல்லுவது சரியல்ல. தமிழில் அப்படிப்பட்ட வார்த்தையைச் சட்டசபையில் இப்போதுதான் பார்க்கிறோம்.

மனப்பூர்வமாக முதலமைச்சர் அவர்களுக்கோ, திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களுக்கோ மதுவிலக்கை ரத்து செய்ய வேண்டுமென்ற எண்ணம் கொஞ்சமும் கிடையாது. நாட்டிலுள்ள சூழ்நிலைதான் இந்த நிலைக்குத் தூண்டியிருக்கிறது. ஏழைகளை மதுவிலக்குக் குற்றத்திற்காகச் சிறைக்கு அனுப்பிக் கொண்டிருக்கிறோம். வசதி படைத்தவர்கள் கூட சிறைக்குச் செல்லுகிறார்கள். நான் ஒருமுறை மத்திய சிறையில் இருந்த போது இந்த மாதிரிக் குற்றவாளிகளைப் பார்த்துக் கேட்டேன்,

*B. Reports, Notifications and Other Papers.*

64. Notification issued with Roc. No. 147301/69-E3 dated the **14th February 1970**, in regard to erratum issued to the Notification Rc. No. 51211/68-E3, dated the 26th July 1969, and published in page 314 of Part II—Section 2 of the *Tamil Nadu Government Gazette*, dated the 1st October 1969.

## தமிழ் நாடு சட்டப் பேரவை

---

**சனிக்கிழமை, 1971 ஜூன் 26.**

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள்—விடைகள்.

**வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வி எண்கள் 56-ம், 57-ம் பின்னர் எடுத்துக்கொள்ளப்படும். இப்பொழுது கேள்வி எண்கள் 58-ம், 59-ம் சேர்ந்தார்போல் எடுத்துக்கொள்ளப்படுகின்றன.

*Panchayat Administration*

* 58 *Q.*—THIRU N. K. PALANISAMI: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state whether there is any proposal to reorganise the Panchayat Administration?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, தற்பொழுது ஊராட்சி வளர்ச்சித் துறையை மாவட்ட அளவிலும் கோட்ட அளவிலும் திருத்தியமைக்கும் செயற்குறிப்புதான் அரசின் பரிசீலனையிலுள்ளது. நிர்வாக சீர்திருத்தக் குழு, ஊராட்சி வளர்ச்சித்துறையைத் திருத்தி அமைப்பதற்கான பரிந்துரைகளைச் செய்யத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

* 59 *Q.*—THIRU T. GANAPATHY: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state the stage at which the question of formation of a separate Department for the Panchayat Development wing stands?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** இப்பிரச்சனை நிர்வாக சீர்திருத்த குழுவின் கருத்திற்கு வைக்கப்படுகிறது.

**திரு. எஸ். ஆறுமுகம்:** தலைவர் அவர்களே, உள்ளாட்சி நிர்வாகம், மாநில அளவில் எப்படி வருவாய்த் துறை அலுவலகம், பொதுச் சுகாதாரத் துறை அலுவலகம் ஆகிய துறைகள் தனித் தனியாக இயங்குகின்றனவோ அதைப்போல உள்ளாட்சி நிர்வாகம் தனியாக இயங்கவேண்டும் என்று நீண்ட நாட்களாகக் கேட்கப்பட்டு அதற்கென்று திரு. முருகேச முதலியார் குழு ஒன்று அமைத்தோம். அக்குழுவின் அறிக்கை சர்க்காருக்குக் கிடைத்தும் இன்னும் இந்த இலாகாவைத் தனியாகப் பிரிக்காமலிருப்பதற்குக் காரணம் என்ன?

[1971 ஜூன் 26

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, உள்ளாட்சியை ஒரு தனி நிர்வாகத் துறையாக்க வேண்டும் என்ற கோரிக்கை பலரிடமிருந்தும் வந்துகொண்டிருக்கிறது. குறிப்பாக, அந்தத் துறையில் பணியாற்றுகிற அலுவலர்களிடமிருந்தும் வந்து கொண்டிருக்கிறது. மற்ற துறைகளுக்கும் இந்தத் துறைக்கும் வேறுபாடு இருக்கிறது. ஆகவேதான், இது பரிசீலிக்கப்படவேண்டிய கட்டத்தில் இருக்கிறது. மற்ற துறைகள் தனித்தியங்கக் கூடிய துறைகளாக இயங்குகின்றன. ஆனால் ஊராட்சி ஒன்றியத் துறையானது, எல்லாத் துறைகளும் வந்து அதில் ஒடுங்கும் துறையாக இருக்கிறது. எல்லாத் துறைகளோடும் சேர்ந்து பணியாற்றுகிற முறையில் ஊராட்சி ஒன்றியம் இருக்குமே தவிர, தனித்தியங்கக்கூடிய தன்மையில் இல்லை. வேளாண்மைத் துறை, பொது நலத் துறை, கல்வித் துறை ஆகிய பல்வேறு துறைகள் வந்து இதிலே ஒடுங்குகின்ற துறையாக இருக்கிறது. ஆகவே, இதனுடைய நிர்வாகத்தைச் சீர்திருத்தியமைக்க வேண்டுமா என்பதைப் பரிசீலித்து முடிவு எடுக்க வேண்டிய கட்டத்தில் இருக்கிறோம். என்றாலும், தனித் துறையாக ஆக்க இயலுமா என்றால், ஆக்கலாம். ஆனால், அதிலே சங்கடங்கள் ஏற்படுமானால், அவற்றை எப்படி நீக்குவது என்பதை யோசிக்க வேண்டியிருக்கிறது. ஆகவேதான், பொதுவாக நிர்வாக சீர்திருத்தத்திற்காக ஒரு குழு அமைக்கப்பட்டிருப்பதால், இந்தப் பிரச்சினைகளையெல்லாம் அந்தக் குழுவினிடத்தில் வைத்து, அவர்கள் தீர ஆலோசித்ததற்குப் பிறகு—அவர்கள் கூறுகிற பரிந்துரையின்பேரில் தக்க நடவடிக்கை எடுக்கலாம் என்ற முறையில் இந்தப் பிரச்சினையும் அந்தக் குழுவினுடைய பரிசீலனைக்கு விடப்பட்டிருக்கிறது.

**திரு. வா. மை. அப்துல் ஜப்பார்:** தலைவர் அவர்களே, பேரூராட்சி மன்றங்களில் உள்ள நிர்வாக அதிகாரிக்கும் சானிடரி இன்ஸ்பெக்டருக்கும் எப்போதுமே ஒற்றுமைக் குறைவு இருப்பதோடு ஒருவரையொருவர் மதிக்காத நிலையில் பல இடைஞ்சல்கள் ஏற்பட்டு, அதனால் பேரூராட்சி பாதிக்கப்படுகிறது என்பதை இந்த அரசு அறியுமா? சானிடரி இன்ஸ்பெக்டர்கள் மீது நடவடிக்கை எடுக்க நிர்வாக அதிகாரிக்கு அதிகாரம் அளிக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, பொறுப்புகளைப்பொருத்து தகராறு ஏற்படுவதில்லை. அதிலே வந்து அமரும் ஆட்களைப் பொருத்துத்தான் சிலபல இடங்களில் தகராறுகள் ஏற்படுகின்றன. இந்தத் துறையில் மட்டுமல்ல; அதிலே ஈடுபட்டிருக்கின்ற பல்வேறு துறைகளில் பல்வேறு இடங்களில் காழ்ப்பு உணர்ச்சியும் தகராறுகளும் ஏற்பட்டுவிடுகின்றன. ஆகவே, நிர்வாக சீர்திருத்தக் குழுவிற்கு இது விடப்பட்டிருக்கிறது. ஊராட்சி ஒன்றியங்களெல்லாம் அமைந்து கிட்டத்தட்ட 12, 13 ஆண்டுக்காலம் ஆகிறது. ஆகவே, அதனைப் பார்த்து அதிலேயிருக்கும் குறைபாடுகளை ஏற்றுக் கொண்டு



1971 ஜூன் 26]

குறைபாடுகளை நீக்கி, எப்படிச் சீர்திருத்தி மாற்றியமைத்தால் அதன் மூலம் எதிர்பார்க்கப்படும் பலன்கள் அந்தந்த ஊராட்சி ஒன்றியங்களுக்குச் சென்று அமையும் என்பதைக் குறித்து ஆராயும் பொறுப்பு நிர்வாகச் சீர்திருத்தக் குழுவினிடம் விடப்பட்டிருக்கிறது. அவர்களிடத்தில் இந்தப் பிரச்சனைகளெல்லாம் எடுத்து வைக்கப்படும். ஆகவே, எப்படிச் சீர்திருத்தினால் அந்தத் துறை சிறப்பாக இயங்கும் என்பதற்கான முடிவுகளை நிர்வாகச் சீர்திருத்தக் குழு பரிந்துரை செய்யும்.

**திரு. என். இராஜாங்கம்:** தலைவர் அவர்களே, உள்ளாட்சியைச் சீரமைப்பதுபற்றி நிர்வாக சீர்திருத்தக் குழுவினிடம் ஆலோசனைக்கு விட்டதுபோல், பஞ்சாயத்து ஒன்றியங்களில் ஒரு ஒன்றியத்திற்கு 30, ஒரு ஒன்றியத்திற்கு 64, ஒரு ஒன்றியத்திற்கு 70 பஞ்சாயத்து மன்றங்கள் இருக்கின்றன. அம்மாதிரி இருப்பதால் ஏற்றத்தாழ்வுகள் இருப்பதோடு செலவினங்களும் வேறுபடுகின்றன. இருக்கும் அபிவிருத்திகளும் குறைகின்றன. ஆகவே, அதைச் சமப்படுத்துவதற்கு சீர்திருத்தக் குழுவிடம் அரசாங்கம் ஆலோசனை கூறுமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, ஏற்கனவே இதைப் பிரித்த காலத்தில், மக்கள் எண்ணிக்கை அடிப்படையில் வரவேண்டும் என்ற முறையில் ஓரளவுக்குப் பிரித்திருக்கிறார்கள். நிர்வாகச் சீர்திருத்தக் குழுவினிடத்தில் இப்படிப்பட்ட பிரச்சனைகளெல்லாம் வைக்கப்படும். அவர்கள் பரிந்துரை செய்வார்களானால் அதற்குப் பிறகு தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. தி. பொன்னுமலை:** தற்போது ஓய்வு நேர எழுத்தர்தான் ஊராட்சியின் கணக்குகளை எழுதிக்கொண்டு வருகிறார்கள். ஆகவே, நான்கு அல்லது ஐந்து பஞ்சாயத்துக்களை இணைத்து, எஸ். எஸ். எல். சி. படித்த ஒருவரைச் சர்க்கார் செலவிலே கிளார்க்காக நியமித்து பஞ்சாயத்து நிர்வாகத்தை நடத்த அரசு வழி செய்யுமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் கூறுகின்ற கருத்து தனியாகப் பரிசீலிக்கப் படவேண்டிய ஒன்று.

**திரு. ஏ. எம். இராஜா:** தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியத்திற்கு ஆணையராக ரெவின்யூ இலாகாவிலிருந்து நியமிக்கிறார்கள். இந்த முறையை மாற்றி கிராமங்களில் விவசாயம் தான் பெரியதொரு தொழிலாக இருப்பதால், விவசாயப் பட்டதாரிகளை ஊராட்சி ஒன்றிய ஆணையராக நியமிப்பது பற்றி அரசு ஆலோசனை செய்யுமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட பிரச்சனைகளெல்லாம் நிர்வாக சீர்திருத்தக்

குழுவின் பரிசீலனைக்குக் கொண்டுவரப்படும். அவர்கள் ஆய்ந்து தக்க முடிவுகளை கூறுவார்கள்.

**திரு. சோ. அழகர்சாமி:** சமூக நலப் பணிகள் சீராகவும் துரிதமாகவும் நடைபெற, மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சித் தலைவருடைய நிர்வாகத்திலிருந்து பிரிந்து, ஊராட்சி ஒன்றிய நிர்வாகங்களை தனியாக மாவட்ட அபிவிருத்தி அதிகாரியின் தலைமையில் அமைக்க வேண்டுமென்ற ஒரு ஆலோசனை முன்பு இருந்ததே அது இப்போது அரசின் பரிசீலனையில் இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, நான் முதலில் அது பற்றிக் குறிப்பிட்டேன். தனித் துறையாக இயங்கவேண்டும் என்ற கருத்து சொல்லப்பட்டு வருகிறது. அதிலே சில சங்கடங்கள் இருக்கின்றன. ஆகவேதான், நிர்வாக சீர்திருத்தக் குழுவிடம் விடுவோமானால் அந்தத் துறையில் உள்ள பல்வேறு அதிகாரிகள், ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் ஆகியவர்களையெல்லாம் அவர்கள் கேட்டு, அறிந்து, அவர்களுடைய ஆலோசனைகளையெல்லாம் கருத்திற்கொண்டு அதற்குப் பிறகு அவர்கள் அளிக்கும் பரிந்துரையின் பேரில் அரசு தக்க நடவடிக்கை எடுக்கலாம்.

**திரு. எம். சுரேந்திரன்:** ஊராட்சிகளை பிரிக்கின்றபோது, ஜனத்தொகையை அடிப்படையாகக் கொண்டு பிரிக்கப்படுகின்றதா? அப்படிப் பிரிக்கின்ற சமயத்தில் ஜனத்தொகை கணக்காக இருந்தாலும், அதனுடைய வருமானம் குறைந்திருந்து, பல நகரப் பஞ்சாயத்துக்கள் நன்கு இயங்க முடியாமல் தத்தளிக்கின்றன. அப்படியிருக்கும் பஞ்சாயத்துக்களைக் குறித்து மீண்டும் புனர் பரிசீலனை செய்து கிராமப் பஞ்சாயத்தாக மாற்றுவதற்கான வழி வகைகளை இந்த அரசு காணுமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, நிர்வாக சீர்திருத்தக் குழுவினர் அப்படிப்பட்ட பிரச்சனைகளையும் ஆராய்வார்கள் என்று நாம் எதிர்பார்க்கலாம். ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்தையும் சீராகவும் செம்மையாகவும் இயங்க வைக்க அவற்றை என்ன என்ன அடிப்படையில் அமைக்க வேண்டும் என்ற கருத்துரைகளை அவர்கள் வழங்கக்கூடும். ஊராட்சி ஒன்றியங்களின் வருவாயினைப் பெருக்கும் தன்மைகளையும் அவர்கள் எடுத்துச் சொல்லக்கூடும். இந்தப் பிரச்சனை நிர்வாக சீர்திருத்தக் குழுவினிடம் விடப்பட்டிருக்கிறது. ஆகவே, முக்கியமாகக் கவனிக்கவேண்டும் என்றும் அவர்களிடத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** தலைவர் அவர்கள் கூறும்போது நிர்வாகச் சீர்திருத்தக் குழு அமைத்திருப்பதாகச் சொன்னார்கள். அந்தக் குழுவில் யார் யார் அங்கத்தினர்களாக இருக்கிறார்கள். அந்தக் குழுவின் அறிக்கை அரசாங்கத்திற்கு எப்போது கிடைக்கும் என்று சொல்ல முடியுமா?



**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** அந்தக் குழுவில் இருக்கிற உறுப்பினர்களின் பெயர் பட்டியல் என்னிடத்தில் இல்லை. அரசாங்கத்தின் எல்லாத் துறைகளையும் சேர்ந்தவர்கள் நிர்வாகச் சீர்திருத்தக் குழுவில் இருக்கும்படி அமைக்கப்பட்டிருக்கிறது. அந்த அந்தத் துறையைச் சேர்ந்தவர்கள் அதைப் பற்றி கவனிப்பார்கள். தனியாகக் கேள்வி போட்டால் உறுப்பினர்களுடைய பெயர்களை அளிக்கிறேன்.

**திரு. பெ. மலைச்சாமி:** ஊராட்சி ஒன்றியங்கள் நேரிடையாக வளர்ச்சிப் பணிகளில் ஈடுபட வேண்டியிருக்கிற காரணத்தினால் ஊராட்சி ஒன்றியங்களின் பொறுப்பில் உள்ள தொடக்கப் பள்ளிகளை அரசாங்கமே ஏற்று நடத்த முன்வருமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** அந்தக் குழுவின் பரிந்துரை கிடைத்த பின்புதான் அதுபற்றி முடிவு எடுக்கப்பட வேண்டும்.

THIRU K. S. KOTHANDARAMIAH: Panchayat Union Councils are doing more or less the work of old district boards. Considering the present democratic set-up of administration in States, will the Hon. Minister for Education consider to have that instead of official Presidents and they are brought under the Chairmanship of non-official Chairman?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தனியாக பரிசீலிக்கப்பட வேண்டிய ஒன்று அது.

**திரு. காதர் பாஷா என்ற வெள்ளைச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதி பற்றாக்குறையாக இருக்கிற ஊராட்சி ஒன்றியங்களுக்கு அரசு விசேஷ மானியம் வழங்க உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** இப்போது கொடுக்கப்பட்டு வருகிற தொகையைத்தான் வழங்கிவருகிறது. அதுபற்றி நிர்வாகச் சீர்திருத்தக் கமிஷன் பரிந்துரை கிடைத்த பிறகுதான் முடிவு எடுக்கப்பட வேண்டும்.

**திரு. கே. என். குமாரசுவாமி:** ஊராட்சி ஒன்றியங்களின் நிர்வாகச் செலவு அதிகமாகப் போய்கொண்டிருப்பதன் காரணமாக வரி வசூல் செய்வதற்குத் தனியாக பில் கலெக்டர்களைப் போடாது, கர்ணம், கிராம முன்சீப் இவர்களைக் கொண்டே வசூலிக்க கன்னியாகுமரி மாவட்டத்தில் அனுமதித்திருப்பது போல் மற்ற மாவட்டங்களுக்கும் அந்த முறையை விஸ்தரிக்க அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, இப்போது செஸ் வரி போன்றவற்றைத்தான் கிராம முன்சீப் போன்றவர்கள் வசூலிக்கிறார்கள். இதுபற்றி எல்லாம் நிர்வாகச் சீர்திருத்தக் கமிஷன் பரிந்துரை வந்த பிறகு நல்ல முறையில் ஆராய்ந்து முடிவு எடுக்க முடியும்.

[1971 ஜூன் 26

திரு. ஏ. எம். டி. நாச்சியப்பன்: ஊராட்சி மன்றங்கள், ஊராட்சி ஒன்றியங்கள் ஆகியவற்றில் பணிபுரிகிற சிப்பந்திகள் பல ஆண்டுகளாக ஒரே இடத்தில் இருப்பதனால் அவர்களை மாற்றுவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அதிகாரம் அளிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: இதுபற்றி எல்லாம் நிர்வாகச் சீர்திருத்தக் குழுவின் பரிந்துரை வந்த பிறகுதான் எவ்வித முடிவை எடுக்கலாம் என்பது பரிசீலிக்கப்படும். தற்போது யார் நியமனம் செய்கிற அதிகாரியோ அவருக்குத்தான் மாற்ற, வைக்க உரிமை உண்டு. ஊராட்சி ஒன்றியங்கள், ஊராட்சிகள் ஆகியவற்றின் சிப்பந்திகளை நியமிக்கும் அதிகாரத்தை இப்போது அவர்களேதான் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே மாற்றுகிற அதிகாரத்தை மாவட்ட ஆட்சியாளர் எடுத்துக்கொள்ள முடியாது. இதில் இருக்கிற சங்கடங்கள் எல்லாம் குழுவின் பரிந்துரை வந்த பிறகு பரிசீலிக்கப்படும்.

* 60 *Q*.—DR. H. V. HANDE: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether there is any proposal to change the designation of Personal Assistants to Collectors in charge of Panchayat Development in the Districts;

(*b*) if so, the proposed designation; and

(*c*) the reasons therefor?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) & (இ) 1970-ம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் மாவட்ட ஆட்சியரின் ஊராட்சி வளர்ச்சிக்கான நேர் உதவி அலுவலர்களின் பதவிப் பெயரை மாவட்ட வளர்ச்சி அலுவலர் என்று மாற்றி ஆணை பிறப்பிக்கப்பட்டது.

(உ) ஊராட்சி வளர்ச்சிக்கான நேர் உதவி அலுவலர்கள் தங்களது பதவிப் பெயருக்கேற்ப ஊராட்சி வளர்ச்சியில் அன்றாடம் வேலைகளைக் கவனிக்க மாவட்ட ஆட்சியாருக்கு உதவுகிறார்கள். இப்பணிகளோடு அவர்கள் வட்டாரங்களின் ஆய்வு அலுவலர்களாகவும் மாவட்ட அபிவிருத்தி மன்றங்களின் செயலாளராகவும் பணிபுரிகின்றனர். இந்தக் கூடுதலான பொறுப்புகளினால் மாவட்ட ஆட்சியரின் ஊராட்சி வளர்ச்சிக்கான நேர் உதவி அலுவலர்களின் பதவிப் பெயரை மாவட்ட வளர்ச்சி அலுவலர்கள் என மாற்றுவது தகும் என கருதப்பட்டது.

DR. H. V. HANDE: These District Development Officers give their decision. May I know whether their orders have again to be passed by the District Revenue Officer and then again by the Collector? May I know whether Government propose to revise the number of tiers so that there will be quicker uow of orders from bottom to top level and vice-versa?



1971 ஜூன் 26]

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, இப்போது பெயர்மாற்றம்தான் செய்யப்பட்டிருக்கிறதே தவிர அதிகார மாற்றம் செய்யப்படவில்லை. நிர்வாகச் சீர்திருத்தக் குழுவின் அறிக்கை வந்தபிறகு இதுபற்றி முடிவு எடுக்கப்படும்.

திரு. எஸ். ஆறுமுகம்: மாவட்ட நேர் உதவியாளர்களின் பெயரை மாவட்ட வளர்ச்சி அலுவலர் என்று மாற்றியிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்த க்ரேடில் மாவட்டத்தில் பல மாவட்ட அதிகாரிகள் இருப்பதனால் மாவட்ட வளர்ச்சி அலுவலர் என்ற பெயரில் ஒரு மரியாதை இல்லாமல் இருக்கிறது. ஆகவே, முன்பு இருந்ததைப்போலவே மாவட்ட ஆட்சியரின் நேர் உதவியாளர் என்ற பெயரையே வைக்க பரிசீலிக்க முன்வருவார்களா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: மாவட்ட ஆட்சியரின் நேர் உதவி அலுவலர் என்றால் அவருக்கே உதவி செய்யக்கூடிய வரைப்போல இருக்கிறது. இவர்களிடம் இப்போது தனிப் பொறுப்புகளும் கொடுக்கப்பட்டிருக்கிற காரணத்தினால் அவர்களுடைய கோரிக்கையின் பேரிலேயே இந்தப் பெயர் மாற்றம் செய்யப்பட்டிருக்கிறது.

திரு. ப. முத்துசாமி: தலைவர் அவர்களே, மாவட்ட அளவில் மாவட்ட வளர்ச்சி அலுவலர் என்று பெயரை மாற்றியிருப்பது போல, கோட்ட அளவில் டி. டி. ஓ. என்று பெயர் மாற்ற உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: இப்போது அப்படிப்பட்ட செயற்குறிப்பு இல்லை.

### அமராவதி நீர்த்தேக்கத் திட்டப்பகுதியில் கிணறுகளும் விசை ஏற்றங்களும்

* 61 வினா.—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேளாண்மை மறுகடன் உதவிக் கழகத்திடமிருந்து உதவி பெற்று கோவை மாவட்டத்தில் அமராவதி நீர்த் தேக்கத் திட்டப் பகுதியில் 2,000 கிணறுகளும், 2,000 விசையேற்றங்களும் அமைக்கும் வேலை எப்பொழுது துவக்கப்படும்?

(இ) மேற்படி வேலை எந்தத் தேதியில் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: (அ) வினாவில் குறிப்பிட்ட ஒன்று ஏற்கனவே 30-9-1969 இல் தொடங்கப்பட்டுவிட்டது.

(இ) இந்தத் திட்டம் 30-6-73 இல் நிறைவு பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**திரு. சு. துரைசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டாயிரம் கிணறுகளும், 2,000 விசையேற்றங்களும் 73-க்குள் அமைக்கப்படும் என்று சொன்னார்கள். 69-இல் துவங்கப்பட்டது என்றாலும் இதுவரை எவ்வளவு நிறைவேற்றப்பட்டிருக்கிறது ? 73-க்குள் முடிக்க என்ன என்ன ஏற்பாடுகள் மேற்கொள்ளப் பட்டிருக்கின்றன ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** ஏப்ரல் 30-ஆம் தேதி வரை மூன்றில் ஒரு பங்கு முடிந்திருக்கிறது. அதாவது 635 முடிந்துவிட்டது. வேலை விரைவாக நடைபெறும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

**திரு. அ. ப. சண்முகசுந்தரம் :** கிணறுகள் தோண்டுவதற்கு நாம் திட்டம் வைத்திருப்பதனால் அமராவதி சர்க்கரை ஆலைக்கு கரும்பு அனுப்பும் விவசாயிகளுக்கு முதலிடம் தரப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** அதற்கான விடை தயாராக இல்லை. தனிக்கேள்வி போட்டால் பதில் சொல்கிறேன்.

**திரு. எஸ். ஆறுமுகம் :** தலைவர் அவர்களே, அமராவதி நீர்த் தேக்கத் திட்டப் பகுதியில் எடுக்கப்படும் இரண்டாயிரம் கிணறுகளின் மூலமாக எத்தனை ஆயிரம் ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தலைவர் அவர்களே, ஏறத்தாழ இத்தனை கிணறுகள் என்ற அளவில்தான் விவரங்கள் இருக்கின்றன. எத்தனை ஏக்கர் பரப்புள்ள நிலங்களுக்குப் பாசனம் தரும் என்பதைப்பற்றிய புள்ளிவிவரம் தற்போது என்னிடத்தில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஒரு கிணறுக்கு மூன்று ஏக்கர் என்ற அளவு இருக்கிறது.

**திரு. சு. துரைசாமி :** தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்தில் வேளாண்மை மறுகடன் உதவிக் கழகத்திடமிருந்து உதவி பெற்று அமராவதி நீர்த்தேக்கத் திட்டப் பகுதியில் 2,000 கிணறுகளும், 2,000 விசையேற்றங்களும் அமைத்துக்கொடுக்கும் திட்டம் இருக்கிறது. இம்மாதிரி திட்டம் வேறு ஏதாகிலும் இருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** விவசாய மறுகடன் உதவிக் கழகத்திடமிருந்து கடன் உதவியைப்பெற்று, பல திட்டங்கள் செய்யப்படுகின்றன. பொள்ளாச்சி போன்ற பகுதியிலும் இப்படிப்பட்ட திட்டம் இருக்கிறது.

**திரு. காதர் பாஷா என்ற வெள்ளைச்சாமி :** தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் வைகைப் பகுதியிலே விஸ்தரிக்கப்படுமா ?



V211,3) N71
31.N71-4-2

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இந்தக் கேள்வியை அனுமதிப் பதற்கு மறுக்கிறேன். மூலக் கேள்வி அமராவதி நீர்த்தேக்கத் திட்டப்பகுதியைப் பொறுத்ததே அல்லாமல் வைகையைப் பற்றியது அல்ல.

**திரு. கே. என். குமாரசாமி :** தலைவர் அவர்களே, இம்மாதிரியான திட்டத்தை வறட்சிப் பகுதிகளிலே அமலாக்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தலைவர் அவர்களே, கிணறுகள் வெட்டி, பம்பு செட்டுகள் வைத்துக்கொடுக்கும்படியான திட்டங்கள் வறட்சிப் பகுதிகளுக்குக்கூட இருக்கின்றன. ஆனால், அந்த இடங்களில் முதலில் பரீட்சார்த்தமாக துரவுக் கிணறுகளை அமைத்துப் பார்த்து, தகுந்த அளவில் தண்ணீர் கிடைக்கிறதா என்பதை ஆராய்ந்து பார்த்த பிறகுதான், அந்தப் பகுதிகளுக்குக் கடன் வழங்குவதற்கும், மற்ற வேலைகள் செய்வதற்கும் திட்டம் செய்ய வேண்டும்.

61511

THIRU K. S. KOTHANDARAMAIAH : Sir, apart from Udumalpet taluk in Coimbatore district, may I know from the Hon. Minister for Co-operation the other places where this scheme has been introduced with the assistance of Agricultural Refinance Corporation ?

THE HON. THIRU SI. PA. ADITANAR : Sir, practically we have schemes covering the entire State. Already we have introduced the scheme in Coimbatore, Thanjavur, parts of Tiruchirappalli, parts of Tirunelveli and many other districts. The Scheme is supported by the Agricultural Refinance Corporation, that is, money is received from the Agricultural Refinance Corporation and is distributed to the ryots and cultivators for the purpose of wells and pumpsets.

### கடலூர் துறைமுகம்

*62 வினா.—**திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடலூர் துறைமுக அபிவிருத்தி தற்போது எந்த அளவு நிறைவேற்றப்பட்டுள்ளது ?

(இ) எந்த ஆண்டில் முழு வேலையும் முடிவு பெறும் ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** (அ) (1) துறைமுகத்தையொட்டிய உப்பனாறு, பரவனாறு ஆகிய ஆறுகளின் படுகைகளை திருத்தியமைக்கின்ற அந்தப் பணி முடிந்துவிட்டது. (2) மொத்தம் 800 அடி நீளம் தோணித்துறை (Jetty) 413 அடி நீளம் கட்டி முடிக்கப்பட்டிருக்கிறது. (3) தெற்குப் பகுதியில் அலைத்தடுப்பு சுவர் 340 அடி கட்டி முடிந்துவிட்டது.

(இ) அந்தப் பகுதியில் இருக்கப்பட்ட வேலைகள் எல்லாம் இன்னும் 6 மாதத்தில், அதாவது ஜனவரி 1972-ல், முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

DR. H. V. HANDE : A couple of years ago in this House a promise was given that the idea of having a launch service between Madras Port and Cuddalore would be sympathetically considered and action taken on that. May I know from the Hon. Minister whether any progress has been made in this direction, so that considerable traffic can also be routed through the sea and also it can be a tourist attraction? In view of these nice points involved in this, will the Hon. Minister come forward and give us some sort of indication as to whether proposals are under way with regard to making it a minor port and running a launch service between Madras Port and Cuddalore Port?

THE HON. THIRU SI. PA. ADITANAR : There is no proposal to have a launch service between Madras and any other minor port. You can call it a small steamer if it runs by power and if it runs on diesel you may call it a launch. Anyway there is no proposal now to start any such launch service, as it is not expected to be popular because of the high waves round about Madras up to Vedaranyam, which is a cyclone-prone area. Hence, we do not expect that it will be possible to run any launch service near about the coast.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Has any survey been made in Tamil Nadu as to what places can be improved as minor ports apart from Cuddalore ?

THE HON. THIRU SI. PA. ADITANAR : We have got a number of minor ports Kilakarai, Kolachel and all these are minor ports. As the hon. Member is aware, Tuticorin has been converted into a major port and minor port improvement work is nearing completion in Cuddalore. There are proposals to carry out improvements in Kolachel.

THIRU R. PONNAPPA NADAR : May I know from the Hon. Minister whether any concrete stepts have been taken for the improvement of the Kolachel minor port?

THE HON. THIRU SI. PA. ADITANAR : What is now being done regarding Kolachel is to construct a road to carry iliminate sand which is being exported through the Kolachel port. Apart from that, I know very well that the deep sea is closeby, close to the share. But unfortunately it is a cyclone-prone area and there is no possibility of developing it into a major port. Some jetty facilities may be improved, but at the moment a road is under construction.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, கடலூர் துறைமுகத்திற்கும் கொளச்சல் துறைமுகத்திற்கும் இடையே லீபுரம் துறைமுகம் இருக்கிறது. அதை அபிவிருத்தி செய்ய அரசாங்கம் ஆவன செய்யுமா ?





THE HON. THIRU SI. PA. ADITANAR : I have no statistics or facts with me to answer the question abiut Leepuram.

## திரைப்பட அரங்குகளை தேசிய மயமாக்கல்

*56 வினா.—திரு. பி. எஸ். மணியன் : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

சினிமா தியேட்டர்களை தேசிய மயமாக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இப்போது இல்லை.

திரு. பெ. மலைச்சாமி : தலைவர் அவர்களே, மது விலக்கை ஒத்தி போடப்படுவதால் தமிழகத்தில் திரைப்படத் தொழில் பாதிக்கப்படும் என்று சொல்லுகிறார்கள். இதைப்பற்றி அரசு என்ன கருதுகிறது? அப்படி சினிமாத் தொழில் பாதிக்கப்படுமானால் நடிகர்களையெல்லாம் தேசிய மயமாக்க அரசு முன்வருமா ? (சிரிப்பு)

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, நடிகர்களை தேசிய மயமாக்குவது எப்படி என்று எனக்குத் தெரியவில்லை. (சிரிப்பு) ஆனால் மதுவிலக்கை ஒத்தி வைக்கப்படுவதால் சினிமா வசூல் குறையுமா என்ற சந்தேகத்திற்கு நான் அளிக்கின்ற ஒரே பதில், மதுவிலக்கை ரத்து செய்யப்பட்டுள்ள எந்த மாநிலத்திலும் சினிமா வசூல் குறைந்ததாகத் தெரியவில்லை.

திரு. க. சுப்பு : தலைவர் அவர்களே, சில இடங்களில் ஒரே முதலாளிக்குச் சொந்தமாக பல சினிமாக் கொட்டகைகள் இருப்பதால் தாங்கள் நினைக்கும் அளவிற்குக் கட்டணத்தை உயர்த்துகிறார்கள். ஒருவருக்கு இத்தனை சினிமாக் கொட்டகைதான் இருக்க வேண்டுமென்று அரசு உத்தரவிடுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் கூறுவது சினிமாத் தியேட்டர்களுக்கான உச்ச வரம்பு ஆகும். சினிமாக் கொட்டகைகளை தேசியமயமாக்குவதுபற்றி அரசு எந்த முடிவும் எடுக்கவில்லை. ஆனால் ஒரு காலகட்டத்தில் இப்படிப்பட்ட முடிவுக்கு அரசு வர இருக்கும்.

திருமதி த. ந. அனந்தநாயகி : தலைவர் அவர்களே, சினிமாத் தொழிலை தேசிய மயமாக்குவதில் அல்லது சினிமாத் தியேட்டர்களுக்கு உச்ச வரம்பு வைப்பதில் அரசு காலதாமதம் செய்வதற்கு என்ன காரணம்? ஒருவேளை அந்தத்துறையில் அவர்களுக்குத் தனி அக்கறை இருப்பதால் அப்படிச் செய்கிறார்களா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அப்படி ஒன்றும் இல்லை. அப்படித் திட்டம் ஏதாவது இருந்தால் அதில் 'சாந்தி' தியேட்டரும் சேரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1971 ஜூன் 26

**திரு. கோவை செழியன் :** பேரவைத் தலைவரவர்களே, செமி பர்மனெண்ட் தியேட்டர்கள் நடைமுறையிலே எந்த அளவிலே வரவேற்பு பெற்றிருக்கிறது ? அதைத் தமிழகத்தின் எல்லாப் பகுதிகளுக்கும் விஸ்தரிக்கும் எண்ணம் உண்டா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** செமி-பர்மனெண்ட் தியேட்டர்களைப் பொறுத்தவரையில் அரசு எடுத்துள்ள முடிவுகளின்படி இப்பொழுது சில இடங்களிலே அந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. தமிழகத்தில் எல்லா இடங்களிலும் விரிவாக்கப்படலாம் என்ற உத்தேசம் அரசுக்கு இருக்கிறது.

**திரு. கே. என். குமாரசாமி :** தலைவரவர்களே, சினிமாத் தொழில்களை கார்ப்பரேஷனோ அல்லது நகரசபைகளோ நடத்தக் கூடிய வாய்ப்பை அரசாங்கம் பரிசீலிக்குமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இப்பொழுது இதுபற்றிய பரிசீலனை இல்லை என்று ஏற்கனவே சொன்னேன்.

**திரு. எஸ். ஆறுமுகம் :** தலைவரவர்களே, இந்த செமி-பர்மனெண்ட் தியேட்டர்களை கட்ட அரசில் ஏதாவது மானியம் அல்லது உதவித் தொகை கடனாகக் கொடுக்கப்படுகிறதா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அது சம்பந்தமாக தியேட்டர் கார்ப்பரேஷன் என்பதுபோல் ஒன்று வைத்து செமி-பர்மனெண்ட் தியேட்டர்கள் பரவலாக ஏற்பட உதவி அளிக்க முடியுமா என்று அரசு பரிசீலித்து வருகிறது.

**திரு. வா. மை. அப்துல் ஜப்பார் :** பேரவைத் தலைவரவர்களே, சினிமாத்தொழிலினால் மாணவர்களின் ஒழுக்கம் கெடுவது அதிகமாகப் பரவுகின்ற காரணத்தால் சினிமாத்தொழிலை நீக்குவதற்கோ அல்லது ஓரளவு கட்டுப்படுத்துவதற்கோ இந்த அரசு முன் வருமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** சினிமாத் தொழிலினால் மாணவர்களின் ஒழுக்கம் குறைகிறது என்பதை நான் ஒத்துக் கொள்ளத் தயாராக இல்லை.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, the present time appears to be an era of nationalisation at the Central and State levels. If we go on nationalising everything, what about the private sector? Private capital will not flow into industries, as also private intelligence and technical knowledge, will have no outlet.

MR. SPEAKER : What is the question?

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, Nationalisation of private enterprise . . .

MR. SPEAKER : Let the hon. Member put the question in an interrogative form.



1971 ஜூன் 26]

THIRU K. S. KOTHANDARAMIAH : May I know from the Hon. Chief Minister whether in rying to nationalise everything the Government will take all the issues which I have stated just now into consideration and then come to a final decision?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தேசிய மயமாக்குவது என்பது ஒரு கொள்கை. அப்படிப்பட்ட கொள்கையை நிறைவு படுத்த வேண்டுமென்று எண்ணுகிற காலத்தில் எல்லாவிதமான வாய்ப்புக்கூறுகளும் யோசிக்கப்படும்.

**திரு. நா. வீராசாமி :** தலைவரவர்களே, பொதுவாக சினிமாத் தியேட்டர்களில் வரி ஏய்ப்பு அதிகமாக இருக்கிறது. அதிலும் ஃப்ரீ பாஸ்கள் என்ற முறையிலே வரியை சினிமாக்கொட்டகை சொந்தக்காரர்கள் ஏமாற்றுகிறார்கள். இதைத் தடுக்க ப்ரீ பாஸ்களுக்கும் தமாஷா வரி கட்ட வேண்டுமென்று நடவடிக்கை எடுக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அதுபற்றி அரசு யோசித்து வருகிறது.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** சார், கள்ளுக்கடைகளைத் திறந்து விட்டால் சினிமாவுக்கு வருமானம் வெகுவாகப் பாதிக்கப்படும். ஆதலால் என்டர்டெயின்மென்ட் டாக்ஸ், ஷோ டாக்ஸ்களைக் குறைக்கத் திட்டம் இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** மதுவிலக்கு ஒற்றிவைக்கப் படுவதால் சினிமாவிற்கு வருமானம் குறையும் என்பதை நான் ஏற்றுக்கொள்ள முடியாது என்று ஏற்கனவே சொன்னேன். பெங்களூர், பாண்டிச்சேரியிலே யெல்லாம் சினிமாத் தியேட்டர்களில் நல்ல வசூல் ஆகிக் கொண்டுதான் இருக்கிறது.

**திரு. எல். கணேசன் :** தலைவரவர்களே, நடிகர்களைத் தேசிய மயமாக்குவது எப்படி என்பது தெரியவில்லை என்று சொன்னார்கள். நடிகர்கள் இவ்வளவுதான் அதிக பட்சப் பணம் வாங்க வேண்டுமென்று அதற்கு உச்சவரம்பு நிர்ணயிக்க அரசுக்கு எண்ணமுண்டா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அப்படி உச்சவரம்பு நிர்ணயித்தால் ஒருவர் ஒரு படத்தை இத்தனை முறை தான் பார்க்க வேண்டுமென்றும் உச்சவரம்பு நிர்ணயிக்க வேண்டி வரலாம்.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** தலைவரவர்களே, சினிமாத் தொழிலில் அதிகமாக பிளாக் மணி, கள்ளப்பணம் தேங்கியிருப்பதாகக் கூறப் படுகிறது. ஆகவே, நாட்டுவளர்ச்சி வெகுவாகப் பாதிக்கப் படுகிறது. ஆகவே, இந்த சினிமாத் தொழிலைத் தேசிய மயமாக்குவதற்குத் தீவிரமாக ஆலோசிக்குமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** கள்ளப்பணம் என்பது சினிமாத்தொழிலில் மாத்திரம் புழக்கத்திலே இருப்பது என்று அல்ல . . . .

திருமதி த. ந. அனந்தநாயகி : அதிகமாக . . .

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : எனக்குத் தெரியாது. தங்
களுக்குத் தெரிந்திருக்கலாம். திருமதி அனந்தநாயகி அம்மையார்
அவர்கள் சொல்கிறார்கள், சினிமாத்தொழிலில் அதிகமாகக் கள்ளப்
பணம் இருப்பதாக.

திருமதி த. ந. அனந்தநாயகி : அதிகமாக இருக்கிறது என்று
அங்கத்தினர் சொல்கிறார் என்ற முறையில் அவருடைய உதவிக்
காகத்தான் சொன்னேன். நான் சொல்லவில்லை.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : உதவிக்குச் சென்றாலே
அதோடு ஒத்துழைப்பதாகத்தான் அர்த்தம்.

பொதுவாக இப்படிப் பொருளாதாரத்துறையிலே தேக்கத்தை
உருவாக்கும் எதையும் அரசு கண்காணிக்க வேண்டுமென்பதற்காக
தான் இது போன்ற நல்ல பொதுவுடைமைக் கொள்கையை அரசு
ஏற்க வேண்டுமென்ற கருத்து நிலவி வருகிறது.

திரு. அ. இராசமாணிக்கம் : தலைவரவர்களே, வருமானம்
குறைவாக இருக்கும் நகராட்சி மன்றங்கள் சினிமாத் தொழிலை
எடுத்து நடத்த அனுமதிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அதைத்தான் அந்தந்த நிலை
களைப்பற்றி ஆலோசிக்க வேண்டுமென்று நான் ஏற்கனவே சொன்
னேன்.

திரு. பெ. மலைச்சாமி : தலைவரவர்களே, அரசாங்கம் தற்போது
வேளாண்மைத்துறை, தொழில்துறை போன்றவைகளுக்குக் கடன்
உதவி அளிக்கிறது. அதைப்போல திரைப்படத் தொழிலுக்கும்
இப்படிப்பட்ட முறையில் கடன் அளித்து அதன் வளர்ச்சியை
அதிகப்படுத்த முயற்சியெடுக்குமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : வேறு சில மாநிலங்களில்
இந்தச் சினிமாத் தொழில் அதிகமாக வளர்ச்சியடையாத
காரணத்தால், கர்நாடகம் போன்ற மாநிலங்களில் படம் எடுக்கும்
தொழிலுக்கு முதலிலே ஒரு உதவி அளித்து வந்தார்கள். ஆனால்
நம்முடைய மாநிலத்தில் இந்தத் தொழிலில் நல்ல வளர்ச்சி
யிருப்பதால் அப்படி உதவி எதுவும் அளிக்க வேண்டிய அவசியம்
இல்லை என்று தான் கருதுகிறேன்.

திரு. எம். சுரேந்திரன் : சார், பொதுவுடைமை வழியை
ஏற்படுத்த வேண்டுமென்று விரும்பும் அரசு தனி நபர்களுடைய
வருமானத்தைக் கட்டுப்படுத்தும் நிலை ஏற்பட சினிமா நடிகர்
களின் வருமானத்தைக் கட்டுப் படுத்த நடவடிக்கை எடுத்துக்
கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : சினிமா நடிகர்களுடைய ஒப்
பந்தப் பத்திரங்களைப் பார்க்கும் நேரத்தில் அவர்கள் ஒரு குறிட
பிட்ட வருமானத்தைத்தான் பெறுகிறார்கள் என்று தெரிய



வருகிறது. இதற்குமேலும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றால்
மத்திய அரசின் அளவில் யார் யார் எவ்வளவு சம்பளம் பெற வேண்
டுமென்ற நடவடிக்கைகளை அவர்கள் தான் எடுக்க வேண்டும்.
இப்பொழுதே தென்னிந்திய ஃபிலிம் வர்த்தக சங்கத்தினரும் நடி
கர்களும் கூடிப்பேசி ஒரு வரைமுறை ஏற்படுத்த வேண்டுமென்ற
அளவில் அவர்களுக்குள்ளேயே நல்ல ஏற்பாடு செய்யப்பட்டிருப்
பதாக நான் அறிகிறேன்.

திரு. துரை முருகன் : தலைவரவர்களே, இப்பொழுது செய்தித்
துறையின் மூலமாக நம்முடைய அரசாங்க செய்திப்படங்கள்
எடுக்கப் படுவதைப்போல சர்க்காரே நல்ல படங்களை எடுத்து
சர்க்காரே வெளியிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : நல்ல யோசனை. ஆனால்
அதில் நடிப்பதற்கு திரு. துரைமுருகன் அவர்களுக்கு வாய்ப்பிருக்
காது.

திரு. கோவை செழியன் : பேரவைத் தலைவரவர்களே, இந்திய
அரசாங்கம் பிலிம் பைனான்ஸ் கார்ப்பரேஷன் என்ற நிறுவனத்தை
பம்பாயிலே அமைத்திருக்கிறார்கள். இந்த நிறுவனத்தின் மூலம்
தமிழகத்தைச் சேர்ந்த எந்தப் பட முதலாளிக்கும் அது பயன்
படவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா? அதைத் தனித்தனியாக
ஒவ்வொரு மாநிலத்திற்கும் பிரித்து அளிக்குமாறு மத்திய அரசை
நமது அரசு வற்புறுத்துமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இது சினிமா தியேட்டர்களைப்
பற்றிய கேள்வி. அதைப்பற்றிய விவரங்களை அறிய மாண்புமிகு
உறுப்பினரவர்கள் ஒரு தனிக் கேள்வி போட வேண்டுகின்றேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி : சார், அணைக்கட்டு பகுதிகளில்
ஷூட்டிங்கிற்கான கட்டணத்தைக் குறைத்திருக்கிறார்கள். மேலும்
அதை உயர்த்துவதற்கு ஏதாவது திட்டமிருக்கிறதா? அப்படி
அதிகமாகப் பல லட்சம் ரூபாய்கள் போட்டு தொழில் செய்பவர்கள்
அரசாங்கத்திற்குக் கட்டணத்தைக் கூட்டிக்கொடுப்பதால்
அதனால் அவர்கள் தொழில் நசுங்கிவிடாது என்று எண்ணு
கின்றேன். எனவே மீண்டும் உயர்த்த எண்ணமுண்டா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அதன் மூலமாக ஆண்டு
தோறும் வருமானம் வருவது மிகக் குறைவாக இருப்பதாலும்,
தென்னிந்திய பட வர்த்தக சங்கத்தினர் விடுத்த வேண்டுகோளை
முன்னிட்டும் அந்தப் பகுதிகளுக்கு நாம் வாங்கிய வாடகை ஓரள
விற்குக் குறைக்கப்பட்டிருக்கிறது. இது ஒன்றும் பெரும்
அளவிற்குக் குறைக்கப்படவில்லை. இது வேறு சில மாநிலங்
களில் அந்தந்த மொழிப்படங்களை எடுக்கும் நேரத்தில், இனாமாகக்
இனமாகக் கூட அளிக்கப்படுகின்றன. அதை ஒப்பிட்டுப்
பார்க்கும் நேரத்தில் நாம் குறைத்தது ஒன்றும் அதிகம் இல்லை.

[1971 ஜூன் 26

**திரு. நா. வீராசாமி :** தலைவரவர்களே, ஷூட்டிங் எடுக்க Dams இப்படிப்பட்ட இடங்களிலே ஷூட்டிங் கட்டணத்தைக் குறைத்திருப்பதால் நிறைய சினிமா முதலாளிகள் அப்படிப்பட்ட இடங்களைப் பயன்படுத்திக்கொள்கிறார்கள் என்பதும், அதனால் நமது அரசாங்கத்திற்கு நிறைய வருமானம் வருகிறது என்பதும் உண்மையா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** ஓரளவிற்கு அது சுற்றுலாவிற்குப் பயன்படலாம்.

## கோவை சுற்றுப்புற நகர ஊழியர்களுக்கு வீட்டு வாடகைப்படி

* 57. வினா.—**திரு. என். மருதாசலம் :** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் நகராட்சி மன்றம், சிங்காநல்லூர் நகராட்சி மன்றம், பேரூர் ஊராட்சி ஒன்றியம் ஆகிய பகுதிகளை கோயம்புத்தூர் 'பி' பிரிவு நகரமாக அறிவித்து, அப்பகுதிகளில் அரசு ஊழியர்களுக்கு வீட்டு வாடகைப்படி கொடுக்க அரசுக்கு உத்தேசமுண்டா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இது குறித்து அரசு பரிசீலனை செய்து வருகிறது.

**திரு. என். மருதாசலம் :** கோவை நகராட்சி, சிங்காநல்லூர் நகராட்சி பேரூராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த பி பிரிவு நகரமாக ஆக்கி இருப்பதால் அந்த நகராட்சியிலுள்ள சிப்பந்திகளுக்கு வீட்டு வாடகைப்படியை உயர்த்திக் கொடுக்க அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இந்த வீட்டு வாடகைப் படி விதங்களை எவ்வாறு அனுமதிப்பது என்பது குறித்து அரசின் பரிசீலனையில் இருக்கிறது. இதற்கு எவ்வளவு செலவாகும் என்ற விஷயத்தில் மாவட்ட ஆட்சித் தலைவரின் விவரம் கேட்கப்பட்டு, அவருடைய பதில் எதிர்பார்க்கப்படுகிறது.

**திரு. சு. துரைசாமி :** இப்போது கோவை நகரம் இரண்டாம் நிலை நகராட்சியாக அறிவிக்கப்பட்டிருப்பதால் அதிகப்படியாக வீட்டு வாடகைப் படியை வழங்குகின்றபோது கோவையைச் சுற்றி ஐந்து மைல் உள்ள பெல்ட் ஏரியாவையும் கணக்கில் எடுத்துக்கொண்டு அரசாங்கம் வீட்டு வாடகைப் படியை வழங்குமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** எல்லா விவரங்களுக்கும் மாவட்ட ஆட்சித் தலைவரின் அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது என்று சொன்னேன்.



1971 ஜூன் 26]

## *Wild Life Sanctuaries*

* 63 *Q.*—THIRU N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) whether there is any proposal to start a new Wild Life Sanctuary in the State during 1970–71 ; and

(*b*) if so, the details of the same?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** (அ) & (இ) இம் மாநிலத்தில் சென்ற 1970-71-ம் ஆண்டில் புதிய வன விலங்குகள் உய்விடம் ஒன்று ஆரம்பிக்கும் செயற்குறிப்பு எதுவும் அரசிடம் இல்லை.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** இருக்கின்ற வன விலங்குகளுக்கு உய்விடம் அமைப்பதோடு முதுமலையில் அதிகமாக மக்கள் போய்ப் பார்க்கும் வகையில் ஏற்ற இடமாக அமைக்க திட்டம் உண்டா?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** சமீபத்தில் ஒரு குழு இதைப் பற்றி ஆய்வு செய்தது. மத்திய அரசு அதற்கான உதவி செய்வதாக உறுதி அளித்திருக்கிறார்கள். அந்தத் தொகை வந்த பிறகு மேலும் பல வசதிகள் செய்யப்படும்

**திரு. அ. ப. சண்முகசுந்தரம் :** பொள்ளாச்சி வட்டத்தில் 'டாப் ஸ்லிப்' பகுதியில் நிறைய யானைகள் உள்ளன. சென்ற ஆண்டு பரம்பிக்குளம் அணையில் இருந்து வருகிற காண்டூர் கால்வாயில் ஒரு யானை விழுந்து அதை மேலே எடுக்க காலதாமதம் ஆனதன் காரணமாக இறந்து விட்டது. ஆகவே, ஏராளமான யானைகள் உள்ள அந்த இடத்தில் அவற்றுக்கு ஒரு உய்விடம் ஏற்படுத்த உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** யானைகளுக்கு என்று தனியாக உய்விடம் அமைக்க உத்தேசம் இல்லை. எற்கனவே மிருகங்களுக்கு என்று இருக்கிற உய்விடங்களில் யானைகளும் கூட்டமாக இருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உறுப்பினர் அவர்கள் 64-வது கேள்வியையே துணைக் கேள்வியாகக் கேட்டிருக்கிறார். 64-வது கேள்விக்கும் அமைச்சர் அவர்கள் பதில் அளித்ததாக எடுத்துக் கொள்ளலாம்.

**திரு. பெ. மலைச்சாமி :** ஒவ்வொரு நாட்டுக்கும் தேசியப் பறவை இருப்பதுபோல் தமிழ் நாட்டுக்கும் தேசியப் பறவை ஏற்படுத்த அரசு முன் வருமா?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** அது கனம் அங்கத்தினர் அவர்களுடைய யோசனை.

**திரு. எம். ஏ. லத்தீப் :** ஜவ்வாது மலைப் பகுதியில் சின்ன வட்டானூர் கம்பக்குடி பகுதிகளில் நிறைய காட்டு மிருகங்கள் வசிக்கின்றன. அவைகளைப் பாதுகாக்க அரசு நடவடிக்கை

எடுத்துக் கொள்ளுமா? அந்த இடங்களுக்கு பிரயாணிகள் சென்று பார்க்க வசதி செய்து கொடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** காட்டு மிருகங்களைப் பாதுகாக்க இப்போதே சட்டங்கள் இருக்கின்றன. அதன்படி இப்போது பாதுகாத்துக் கொண்டுதான் வருகிறார்கள்.

THIRU K. S. KOTHANDARAMIAH: May I know from the Hon. Minister for Electricity the probable total number of wild elephants living in our forests and also the places where large number of elephants live?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** இப்போதுதான் அது பற்றி தனியாக சர்வே செய்யத் திட்டமிடப்பட்டிருக்கிறது. சர்வே முடிந்த பிறகு எண்ணிக்கையைப் பற்றிச் சொல்ல முடியும்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: There is a bird sanctuary at Vedanthangal. Has the Hon. Minister any attractive scheme to make it more popular and more attractive to the tourists?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** வேடந்தாங்கலுக்குப் பலவிதமான பறவைகள் வருகின்றன; வெளிநாடுகளில் இருந்து கூட வருகின்றன. மக்கள் சென்று பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அதனை விஸ்தரிக்க வேண்டுமென்ற செயற்குறிப்பு இருக்கிறது.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** சமீபத்தில் முதுமலையில் ஒரு யானை இரண்டு குட்டிகள் போட்டிருக்கிறது. அது சரித்திரத்திலேயே அபூர்வமான நிகழ்ச்சி என்று கூறப்படுகிறது. அதை அதிகமான மக்கள் பார்வையிடும் வகையில் சென்னையில் இருக்கும் மிருகக் காட்சி சாலையில் வைக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** அதைப் புகைப்படமாக எடுத்து விளம்பரம் செய்ய உத்தேசம் இருக்கிறது.

**திரு. தொ. பா. சீனிவாசன்:** ஜவ்வாது மலைப் பகுதியில் அதிகமாகக் காடுகள் பரவலாக இருப்பதால் ஏராளமான மிருகங்கள் இருக்கின்றன. அந்தப் பகுதியில் மிருகக் காட்சி சாலை அமைப்பதாக ஏற்கனவே ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதைத் துரிதமாக நிறுவ அரசு நடவடிக்கை எடுக்க முற்படுமா?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** ஜவ்வாது மலைப் பகுதியில் ஒரு மிருகக் காட்சி சாலை ஏற்படுத்துவதாகச் செயற்குறிப்பு இல்லை. ஏற்கனவே இருக்கும் ஐந்து உய்விடங்களை விரிவுபடுத்தும் திட்டம் இருக்கிறது.

**திரு. கே. எ. வகாப்:** தமிழ் நாட்டுக் காடுகளில் சிங்கம், புலி வாழ்கின்ற இடங்கள் இருக்கின்றனவா? அப்படி இருந்தால் அவற்றுக்குப் பாதுகாப்பு இடங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றனவா? இல்லையென்றால் வெளிநாடுகளில் இருந்து சிங்கம், புலிகளைக் கொண்டு வந்து அபிவிருத்தி செய்ய அரசுக்கு எண்ணம் உண்டா?





**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** நம்முடைய காட்டில் சிங்கம் இல்லை. புலிகள் திருநெல்வேலி மாவட்டத்தில் முண்டந்துறையில் இருக்கின்றன. அது சரணாலயமாகப் பாதுகாக்கப்படுகிறது.

* 64 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(a) whether there are elephant sanctuaries in the State; and

(b) the steps taken to improve them?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** (அ) யானைகளுக்கென்று தனியாக உய்விடம் ஏதும் இம் மாநிலத்தில் இல்லை. ஆனால், மற்ற வனவிலங்குகளுடன் அதிக எண்ணிக்கையில் யானைகள் முதுமலை வன விலங்கு உய்விடத்தில் காணப்படுகின்றன.

(இ) தமிழ் நாடு முழுவதும் யானைகளைச் சுடுவது தடை செய்யப்பட்டுள்ளது. ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் வரும் "இயற்கைப் பாதுகாப்பு—வன விலங்குகளின் பாதுகாப்பு" திட்டத்தின் மூலமாக ஒவ்வொரு ஆண்டும், சாலைகள் போடுதல், பயணிகளுக்கு விடுதிகள் கட்டுதல், விலங்குகளுக்குத் தண்ணீர் வசதி முதலியவை செய்து தரப்படுகின்றன.

**திரு. அ. ப. சண்முகசுந்தரம்:** சென்ற ஆண்டு பரம்பிக்குளம் அணையிலிருந்து வரும் காண்டூர் கால்வாயில் யானை ஒன்று விழுந்து இறந்து விட்டது. அதை வெளியே எடுப்பதிலே காலதாமதம் ஏற்பட்டதால்தான் அது இறந்துவிட்டது. அப்படி இனிமேல் காலதாமதம் செய்யாமல் இருப்பதற்கும், யானைகள் அவ்வாறு விழுந்து விடுவதில் இருந்து பாதுகாப்பதற்கான ஏற்பாடுகள் செய்வதற்கும் அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** ஆள் சஞ்சாரம் இல்லாத இடத்தில் விழுந்துவிட்டால் தகவல் வந்த உடன் நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படுகிறது.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** வன விலங்குகளைப் பாதுகாக்க வேண்டுமென்று அக்கறை செலுத்தும் இந்த அரசாங்கம் கார்ப்பரேஷனால் நடத்தப்படும் மிருகக் கண்காட்சி சாலையை நல்ல சூழ்நிலைக்கு மாற்றும் திட்டம் வைத்திருக்கிறதா? எப்போது அந்தத் திட்டம் நடைமுறைக்கு வரும்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வி யானைகளைப் பற்றியது.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** எப்போது என்று சொல்ல முடியாது; பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது.

*Appointment of Legal Adviser for State Transport Department*

* 65 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Transport be pleased to state—

(a) whether any Legal Adviser has been appointed to the State Transport Department; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** (அ) ஆம்.

(இ) விபத்துக்கள், இழப்பீடுகள் குறித்து நீதி மன்றங்களில் தாக்கலாகும் வழக்குகளில், துறை சார்பில் வழக்காடவும் சட்டம் தொடர்பானவற்றில் அறிவுரை வழங்கவும் ரூ. 525-25-600-30-690-35-900 சம்பள வீதத்தில் சட்ட ஆலோசகர் பதவி ஒன்று தமிழ் நாடு அரசு போக்குவரத்துத் துறையில் உள்ளது. இப் பதவிக்கான ஒப்பளிப்பு 1961-ல் வழங்கப்பட்டது. இந்தப் பதவிக்கான நியமனம் ஒப்பந்த அடிப்படையில் செய்யப்பட்டு வருகிறது.

**திரு. கோவை செழியன் :** சென்னை நகரத்தில் டாக்சிகளின் எண்ணிக்கை குறைவாக இருப்பதால் பிரயாணிகளுக்கு மிகவும் கஷ்டமாக இருக்கிறது. கோவை நகரத்தைப் போல் சென்னையிலும் ஆட்டோ ரிக்ஷாக்களை அதிகமாக்கும் எண்ணம் அரசுக்கு உண்டா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி சட்ட ஆலோசகரை நியமிப்பது பற்றியது. ஆகவே உறுப்பினர் அவர்கள் இது பற்றித் தனிக் கேள்வி போடவும்.

**திரு. துரைமுருகன் :** இந்த மன்றத்தில் இருக்கும் வழக்கறிஞர்கள் இத்தகைய சட்ட ஆலோசகர்களாக ஊதியமின்றிப் பணியாற்ற முன்வருவார்களேயானால் அரசு அவர்களை ஏற்றுக் கொள்ளுமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** சட்ட ஆலோசகர்களை நியமிப்பது வெறும் சம்பளத்தின் அடிப்படையில் மட்டும் அல்ல; திறமையின் அடிப்படையிலும் நியமிக்கப்படுகிறார்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். திறமையோடு கூடிய வழக்கறிஞர்கள் சம்பளமின்றிப் பணியாற்ற வருவார்களேயானால் இந்த அரசு உவகையோடு வரவேற்கும்.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** போக்குவரத்துத் துறையில் சென்னையில் ஒரு லீகல் அட்வைசர் நியமித்திருப்பதாகக் கூறினார்கள். அது போன்று கன்னியாகுமரி டிவிஷனுக்கும் லீகல் அட்வைசர் நியமிக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, போக்குவரத்துத் துறையை நாட்டுடைமையாக்கும் கொள்கை காரணமாக இப்போது முதலாளிகள் நிறைய வம்புகளையும், வழக்குகளையும் தொடர்ந்து கொண்டிருப்பதால் "பானல் ஆஃப் லீகல் அட்வைசர்ஸ்" வைத்துக் கொள்ளலாமா என்பது யோசனையில் இருக்கிறது.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Is it a fact that a lawyer has been appointed to appear before the State Transport Appellate Tribunal and aprat from that, are the Government aware o fthe fact that the sad lawyer is a relation of an Hon. Minister here?



**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, இருப்பதே பாவம் இல்லை. ஒரு அமைச்சருக்கு உறவினர்கள் இருக்கிறார். அவர் எந்த அமைச்சருக்கும் உறவினர் அல்ல. அவர் கன்னியாகுமரி ஜில்லா நேசமணி அவர்களுடைய மருமகன் என்று கேள்விப்படுகிறேன்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : That is about State Transport Department. I am referring to a lawyer who appears before the State Transport Appellate Tribunal and I have been given to understand that he is a relation of Hon. Ministed Madhavan.

**திரு. நா. வீராசாமி :** பாயிண்ட் ஆப் ஆர்டர், சார், தலைவர் அவர்களே, பொதுவாக அமைச்சர்கள் கொடுக்கும் விடைகளை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பது மன்றத்தின் மரபு. அமைச்சர் கொடுத்த விடையை எதிர்த்து, நம்முடைய பேரவைத் தலைவருடைய அனுமதியே கூட இல்லாமல், அங்கத்தினர் பேசுவது முறையா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு அங்கத்தினர் கூறுவது புதுமையாக இருக்கிறது. வழக்குரைஞர்கள் எந்த அளவுக்கு வாதாடலாம் என்றால், எந்த நீதி மன்றத்திலும் வாதாடலாம். அதற்கு சட்டத் தடுப்பு ஒன்றும் கிடையாது. எனக்கு உறவினர் ஒருவரை அரசாங்கம் போட்டிருப்பதாகத் தெரியாது. என்னைப் பொறுத்த வரையில், ஒரே ஒரு லாயரைத்தான் ட்ரான்ஸ்போர்ட் துறைக்காக நியமித்திருக்கிறார்கள். இப்பொழுதுதான் ஒரு பேனல் வைத்துக் கொள்ளலாமா என்று யோசித்து வருகிறார்கள். யாரோ ஒரு உறவினரைப் போட்டிருப்பதாகச் சொல்வது வேடிக்கையாக இருக்கிறது. இப்படிப்பட்ட அவதூறு கூறாமல் இருப்பது சரியாக இருக்கும். எனக்குத் தெரிந்த வரையில், என்னுடைய உறவினர் யாரும் இல்லை. என்னுடைய குடும்பத்தில் நான் ஒரே ஒரு பிள்ளை. வேறு யாராவது இருப்பார்களேயானால், அவர்களைப் போடாமல் பார்த்துக் கொள்ளலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பொதுவாக உறுப்பினர்கள் யாவருக்கும் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். அம்மையார் கேள்வி கேட்டார்கள், ஸ்டேட் ட்ரான்ஸ்போர்ட் அப்பலேட் ட்ரைப்யூனலில் ஆஜராகக் கூடிய வக்கீல் ஒரு அமைச்சருக்கு உறவினரா என்று கேட்டார்கள். எந்த அமைச்சர் என்று கூட முதலில் சொல்லவில்லை. அமைச்சர்களுக்கு உறவினராக இப்பதே பாவம் இல்லை. ஒரு அமைச்சருக்கு உறவினர்கள் இருக்கிறார்கள், அப்படிப்பட்டவர் அமைச்சராக வருகிறார்கள் என்ற காரணத்தாலேயே, உறவினர்களை அமைக்கக் கூடாது என்பதல்ல. உறவினர்களாக இருப்பவர்கள் அதற்கான தகுதி பெற்றிருந்தால் அவர்களை நியமிப்பது குற்றமில்லை. அல்லாமல் தவறாக ஃபேவரிடசம் காட்டி, காரணம் இல்லாமல் இருந்தால், அப்படிப்

பட்டதைக் குற்றச்சாட்டாக மன்றத்திலே கூறலாம். ஆனால், பொதுவாக போகிற போக்கில், பத்திரிக்கைகளில் வரவேண்டும் என்று, ஒரு அமைச்சருக்கு உறவினர் என்று மயக்கம் வரும் வகையில் கேள்விகள் கேட்பதை உறுப்பினர்கள் தவிர்க்க வேண்டும். அரசாங்கத்தின் மேல் குற்றம் சாட்டு சாட்ட உறுப்பினர்களுக்கு உரிமை இருக்கிறது. ஆனால், அந்த உரிமையை அரசாங்கத்தின் மீது ஆதாரமில்லாதவற்றைச் சொல்லி, அவதூறு கிளப்பும் வகையில் கேள்விகள் அமையக் கூடாது மின்கிற பொதுவான கருத்தைத் தெரிவிக்கிறேன்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : On a personal explanation, Mr. Speaker, Sir. I would be the last person to sling any mud on anybody. That is why I came out with the name of the Hon. Minister. I was given to understand that it had happened. I wanted to bring it to the notice of the Government. If it is not the intention of the Government to show favouritism to any of the relations of the Minister, it is all right. I also feel that I am a responsible member and I should not make a reference to rumours here to invite Press publicity in this matter. If the Hon. Minister wants some more information, I shall try to collec and give it.

THE HON. THIRU S. MADHAVAN : The hon. Member cannot make this allegation. She must verify it. If she is a responsible member she must first verify it. If it is true, we will look into it and we will examine it.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நான் சொல்வதும் அதுதான். I was given to understand என்று சொல்லக் கூடாது. மாண்புமிகு அமைச்சருடைய உறவினர் என்றால், அதில் ஃபேவரிடிசம் ஏதாவது இருக்கிறதா, முறைகேடாக நியமனம் நடந்திருக்கிறதா என்று பார்த்து, அப்படியிருந்தால் குற்றம் சாட்டலாம். அப்படியில்லாமல், உறவினர், கட்சிக்காரர் என்று பொதுப்படையான குற்றச்சாட்டுக்குப் பதிலாக, மன்றம் ஏற்றுக் கொள்ளும் வகையில் குற்றச்சாட்டாக இருந்து, அது சரியானதாக இருந்தால், கூறலாம். ஆனால் அம்மையார் போட்ட கேள்வி அந்த வகையில் அமையவில்லை.

THE HON. THIRU S. MADHAVAN : I would like to explain this. As the Law Minister myself and the Chief Minister are appointing the Law Officers : Now I have verified with our colleagues also, namely, Thiru Sadiq Pasha, Thiru Si. Pa. Aditanar and Thiru S. Ramachandran. They tell me that nobody has been appointed like that. It is an utter lie. It will carry tales outside. It is a very dangerous thing. We should not give room to all these things in this House.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Only in the interests of the public we elicit such information. If the Government comes out with a categorical answer that they have not done so, the





public would definitely know that and understand it. That does not mean you can curb the members' privilege for asking the question in the interests of the public.

MR. SPEAKER : That does not mean you must ask without any responsibility. You must also be responsible. Your question must be categorical.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Mine is categorical.

THE HOb. THIRU SI. PA. ADITANAR : On a point of order, Mr. Speaker. The Hon. Minister has answered that no Advocate has been appointed. Having heard that categorical answer, then to stand up and say that somebody who is a relative of the Minister has been appointed is wholly abusing the proceedings of this House. I submit that it is fair that all portions subsequent to his answer, namely, that no person has been appointed, be expunged from the proceedings of the Assembly under Rule 235 of the Assembly Rules.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, எப்படி மன்றம் நடைபெறுகிறது என்று மக்கள் தெரிந்துக் கொள்ள வேண்டும் என்பதால், அவையெல்லாம் நடவடிக்கைக் குறிப்பிலிருந்து எடுக்க வேண்டிய அவசியம் இல்லை என்று தெரிவிக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு முதல் அமைச்சர் கூறிய படியே இருக்கட்டும்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, அரசுப் போக்குவரத்துத் துறையைப் பொறுத்தவரையில், ஒரே ஒரு வழக்குரைஞர்தான் இருக்கிறார், அவரும் சிண்டிகேட் காங்கிரசைச் சேர்ந்தவர். திரு. நேசமணி அவர்களின் மருமகன். அவர்தான் 67-லிருந்து சட்ட ஆலோசகராக இருந்து வருகிறார்.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர், சார். காலஞ்சென்ற நேசமணியவர்கள் காங்கிரஸ் சிண்டிகேட், இண்டிகேட் என்று பிளவுபடுவதற்கு முன்னாலேயே காலமாகிவிட்டார். ஆகவே, சிண்டிகேட், இண்டிகேட் விவகாரமே கிடையாது. அது தவறு என்பதை அமைச்சர் உணருகிறார்களா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** சிண்டிகேட் இல்லை. பொதுவாக, யாருடைய உறவினரோ என்று அரசாங்கத்தின் மேல் குற்றம் சாட்டி, உரிமையைத் துஷ்பிரயோகம் செய்வது சரியில்லை. குற்றச்சாட்டிற்கு உரியதா என்று பார்த்துத்தான் சொல்ல வேண்டும். அமைச்சருக்கு உறவினராகவோ அல்லது கட்சிக்காரராகவோ இருப்பது ஒன்றும் பாவம் இல்லை. அது அவர்களாக ஏற்படுத்திக் கொண்டது இல்லை.

வினாக்கள் விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உடையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்]

## 2. அறிவிப்பு.

### சென்னைப் பல்கலைக் கழக ஆட்சிக் குழுவிற்கு தேர்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவைக்கு ஒரு அறிவிப்பு. சென்னைப் பல்கலைக்கழகத்தின் ஆட்சிக் குழுவில் (Senate) இப்பேரவையின் சார்பில் உறுப்பினர்களாக இருந்த திரு. கே. எம். இராமசாமி கவுண்டர் இயற்கை எய்தியதாலும், திரு. ஆர். என். அரங்கநாதன், திரு. க. இராமமூர்த்தி, திரு. கொ. இரா. ஞானசம்பந்தன் ஆகிய மூவரும் இப்பேரவையின் உறுப்பினர்களாக இல்லாத காரணத்தாலும் பல்கலைக்கழகத்தின் ஆட்சிக் குழுவில் 21—3—1973 வரை ஏற்பட்டுள்ள நான்கு வெற்றிடங்களுக்கு தமிழ்நாடு சட்டப்பேரவை உறுப்பினர்கள் தங்களிலிருந்து நால்வரை தேர்ந்தெடுக்க ஏற்பாடு செய்யுமாறு சென்னை பல்கலைக் கழகம் கோரியுள்ளது. பல்கலைக் கழகத்தின் விதிமுறைப்படி, ஒற்றை மாற்றுவாக்கு மூலம் இத்தேர்வு நடைபெறும்.

எனவே, வேட்பாளர்கள் நியமனத் தாள்களை 30—6—1971 புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்குள் பேரவைச் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். நியமனத்தாள்கள் வேண்டுவோர் செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

நியமனத்தாள்கள் 1—7—1971 வியாழக்கிழமை காலை 11 மணிக்கு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

விலகிக் கொள்ள விரும்புகிற வேட்பாளர்கள் 2—7—1971 வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்குள் விலகிக் கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு அதாவது நான்கிற்கு மேற்படுமாயின் 5—7—1971 திங்கட்கிழமை காலை 9 மணிக்கும் பிற்பகல் 1 மணிக்கும் இடையே சென்னை கோட்டையிலுள்ள உறுப்பினர்கள் ஓய்வறையில் வாக்கெடுப்பு நடைபெறும்.

## 3. 1971-72-ம் ஆண்டுக்கான திருத்தப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தின்மீது பொது விவாதம் தொடர்ச்சி.

* **திருப்பூர் திரு. ஏ. எம். மொய்தீன் :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிதி நிலை அறிக்கையை இறைவனுடைய திருநாமத்தைக் கொண்டு நான் பேசத் தொடங்குகிறேன். இந்த நிதி நிலை அறிக்கையின் உள்ளே நுழைந்து சில வார்த்தைகளைக் கூறுவதற்கு முன், இந்த அவைக்கு ஒரு உண்மையான விண்ணப்பத்தைச் செய்து கொள்ள விரும்புகிறேன். இந்த நிதிநிலை அறிக்கையை நான் ஆராய்வது, தோழமை உணர்ச்சியோடும், நாம் தொன்மையாகக் கொண்டிருக்கும் உறவோடும் ஆகும். அந்தப் பண்பையும், நல்லெண்ண உணர்ச்சியையும் அடிப்படையாகக் கொண்டு, இதை அணுகுகிறேன், தொடங்குகிறேன். அதற்கு ஒரு உதாரணம் கூற விரும்புகிறேன்.



திராட்சைப்பழத்தைச் சுவைக்கிற போது ஏற்படுகிற உணர்வு முதலமைச்சர் அவர்களுடைய நிதிநிலை அறிக்கையை படிக்கிற போது ஏற்படுகிறது என்று சொல்லி நான் என் உரையை ஆரம்பிக்கிறேன். அவர்கள் கடைசியில் குறிப்பிட்டார்களே, அது போல், அந்த திராட்சை வேறு ரூபமாக மாறி வேறு பலன் அளிக்கும்போது ஏற்படுகிற உணர்வு ஏற்படுகிறது என்ற வேதனையோடு என்னுடைய முடிவுரையை முடிக்க இருக்கிறேன் என்று கூறிக்கொண்டு என் சிற்றுரையை தொடங்குகிறேன்.

நம் முன்பு சமர்பிக்கப்பட்டுள்ள நிதி நிலை அறிக்கையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடங்கிய விதமே மிக அழகாக இருக்கிறது. அவர்கள் கூறுகிறார்கள், "ஏற்றத்தாழ்வற்றதும், விஞ்ஞானயுகத்திற்கு ஏற்றதுமான சமதர்மச் சமுதாயத்தை உருவாக்கிட வேண்டுமென உறுதி பூண்டு, தமிழ்ப்பெருங்குடி மக்களின் அன்பும், பரிவும் மிக்க ஆதரவைப் பெற்றுள்ள இந்த அரசு, கொண்ட கொள்கைக்கென கொற்றம் அமைத்திடத் தடைக்கற்கள் உண்டென்றாலும், தடந்தோள் உண்டு எனத் துணிந்து நடைபோடும் என்பதை இந்த நிதிநிலை அறிக்கையின் முன்னுரையாகவும், எனது சூளுரையாகவும், வெளியிடுவதில் பெருமையடைகிறேன்" என்று மிகவும் சுருக்கமாகவும் நெஞ்சழுத்தத்தோடும் துணிவோடும் கூறியிருக்கிறார்கள். எந்த நோக்கத்தோடு மக்களுக்கு வாக்களிக்கப்பட்டதோ, எந்த எண்ணத்தோடு மக்கள் நமக்கு வாக்களித்தார்களோ, எந்த நம்பிக்கை கொண்டு மக்கள் இருக்கிறார்களோ, அந்த அடிப்படையை மனதில் கொண்டு தான் அவர்கள் இந்த பட்ஜெட்டை தயாரித்து இருக்கிறார்கள் என்று எண்ணி நான் என்னுடைய வரவேற்பையும் பாராட்டையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, "புதிய சோசலிசச் சமுதாயத்தின் சமூகப் பொருளாதாரக் கொள்கைகளை வலியுறுத்தும் வகையில், இந்த அரசு தன் பணிகளை மேற்கொள்ளும் என்கிற நம்பிக்கை உடையவர்களாக இம்மாநிலத்து மக்கள் இருக்கின்றார்கள் என்பதை இந்த நிதி நிலை அறிக்கையைத் தயாரிக்கும் போது நான் கிஞ்சிற்றும் மறந்தேன் இல்லை" என்று சொல்வது நன்றிக்கு உரிய சொல்லாகும். மக்களிடம் கொடுத்த வாக்கை நினைவில் வைத்து இது உருவாக்கப்பட்டதாகும். இது ஒரு சோசலிஷ சர்க்கார் என்ற எண்ணத்தை பரவலாக மக்கள் அறிவதற்கும் அந்த நம்பிக்கைக்கு அவர்களுக்கு வலியுறுத்துவதற்காகவும் இந்த நிதிநிலையின் இரண்டாவது பாரா தொடங்குகிறது. அதற்காக நான் பூரிப்பு அடைகிறேன்.

இந்த நாட்டில் சோசலிஷ சமுதாயத்தை உருவாக்குவதற்கு குவிந்து கிடக்கும் அதிகாரங்களை பகிர்ந்து அளிப்பது ஏற்றதொரு வழியாகும், இல்லையேல் அதிகாரக் குவியலும், அதைச் சார்ந்துள்ள அதிகார வர்க்கமும், சோசலிஷத்தை பொருளற்றதாக ஆக்கிவிடும் என்று முன்னெச்சரிக்கையாக இதைக் குறிப்பிட்டு இருக்கிறார்கள் என்று கருதி நான் இதைப் பாராட்டுகிறேன்.

உரிமைக்கு குரல் கொடுப்போம், மாநில அரசின், உறவுக்கு கைக் கொடுப்போர் மத்திய அரசிலும் இருந்திடும் இந்தக்காலத்திலேயே தமிழகத்தின் முறையீடுகள் பல தட்டிக் கழிக்கப்படுகின்றன என்பது உண்மைதான். தோழமை என்கிற உணர்வு இருக்கிறது என்பது உண்மைதான். ஆனால் அது இலந்தைப் பழக்கதை போன்று இருக்கிறது. இரண்டு பேர் சேர்ந்து இலந்தைப் பழம் பறிப்பதற்குச் சென்றார்கள். ஒருவன் வளர்ந்தவன் கொஞ்சம் மேலே ஏறி உலுக்கி விட்டான். இன்னொருவன் பொறுக்கி எடுத்தான். மேலே ஏறி மரத்தை உலுக்கி விட்டவன், கீழே வந்து, கூடையைத் தூக்கிக்கொண்டு, பொறுக்கி எடுத்தவனிடம், "நீ போய் வரலாம். பொறுக்கித்தானே எடுத்தாய்" என்று கூறினானாம். அதுபோல் மத்திய சர்க்கார் நம்மிடமிருந்து வரிகளை எல்லாம் வசூலித்துப் பெற்றுக்கொண்ட பிறகு, இலந்தைப் பழம் பொறுக்கியவனுக்குச் சொன்ன பதில் போல், நமக்குச் சொல்லி வருகிறது. இதைத் துணிவோடு எடுத்துக் காட்டியதற்கு என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வேளாண்மைத் துறையில் மிகு பயன் தரும் விதை வகைகளைத் தந்தும், பல போகப் பயிர்த் திட்டத்தை உருவாக்கியும் கூட்டுறவுத் துறையில் உழவர்களுக்கு அளித்த கடன் வசதிகளுக்கு நான் பாராட்டுதல்களை தெரிவித்துக்கொள்கிறேன். பாசனத்தின் மேம்பாடு கருதி சின்னாறு, பரப்பலாறு, பாலாறு-பொரந்தலாறு தண்டரை, நந்தன் கால்வாய், கருப்பா நதி, பொன்னனியாறு, பிளவுக்கல் பாலியாறு ஆகிய திட்டங்களுக்காக 1971-72-ம் நிதிநிலை அறிக்கையிலே ரூ. 2.35 கோடி ரூபாய்க்கு வகை செய்யப்பட்டுள்ளதை அறிந்து வேளாண்மைத் துறையில் இந்த சர்க்கார் கொண்டு இருக்கிற நல்ல நோக்கத்தை நான் பாராட்டுகிறேன். அதை இன்னும் கொஞ்சம் விரிவுபடுத்தினால் நன்றாக இருக்கும் என்று சொல்லிக் கொள்கிறேன். நகர்புறத்தில் உள்ள வசதி வாய்ப்புகளை, கிராமப் புறத்து மக்கள், ஒரு கால கட்டத்திற்குள் பெற்றிட வேண்டுமென்னும் குன்றா ஆர்வத்துடன் செயல்படும் இந்த அரசு வெகு விரைவில் எல்லாக் கிராமங்களுக்கும் மின்னொளியும், மின் வசதியும் கிடைத்திட முயற்சிகள் மேற்கொண்டிருப்பதையும் நான் பாராட்டுகிறேன். தொழிற்சாலைகளைப் பரவலாக ஏற்படுத்துவதை ஊக்குவிக்கும் வகையிலும், தொழிற்துறையில் பின்தங்கிய பகுதிகளை வளர்ச்சியுறச் செய்யவும் இந்த அரசு எடுத்துள்ள பல்வேறு முடிவுகளை நான் பாராட்டுகிறேன். வரவேற்கிறேன். தொழில் வளமும், வேளான்மை வளர்ச்சியும் தொடர்புகளும் விரிவடைந்திட, சாலைப்போக்குவரத்துக்களின் இன்றியமையாமையை உணர்ந்து இந்த அரசு திட்டங்களை தீட்டி இருக்கிறது என்று இந்த நிதிநிலை அறிக்கையில் குறிப்பிட்டு இருப்பது நமக்கு நம்பிக்கையையும் மகிழ்ச்சியையும் அளிக்கிறது.

சமூக, பொருளாதார ஏற்றத்தாழ்வுகளைக் களைந்து, மூட நம்பிக்கை, பழங்கால வழக்கங்கள் அகன்று, அறிவொளி பாய்ச்சிட வல்லது கல்வி வாய்ப்பேயாகும் என்று கருதி, அந்த அடிப்





படையில், கல்விக்காக 1967-68-ல் ரூ. 53.56 கோடியளவில் இருந்த நிதி ஒதுக்கீட்டை 1971-72-ல் ரூ. 81.84 கோடியாக உயர்ந்தப்பட்டுள்ளதை அறிந்து நான் பெருமைப்படுகிறேன். அதற்காக பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். இம்மாநிலத்தில் மருத்துவ வசதிகள் தொடர்ந்து மேம்பட்டு வருகிற நிலைக்கு அவர்களுடைய கவனத்தைப் புகுத்தியிருப்பது பாராட்டத் தகுந்த அம்சமாகும். தொழில் தகராறுகளைப் பொறுத்தவரையில், அத்தகராறுகளை தீர்த்து வைக்க வசதி செய்வதே தொடர்ந்து அரசின் கொள்கையாய் இருந்து வருகிறது. அது வாஸ்தவத்திலேயே கவனிக்க வேண்டிய ஒன்றாகும்.

தொழில் துறையில் தொழில் நடத்துபவர்களுக்கும் தொழிலாளர்களுக்கும் இடையே இணக்கமான நல்லுறவுகள் நிலவிட, கடமையைச் செய்பவர்களுக்கு உரிமையைப் பெற்றுத் தருவதிலும், உரிமை கேட்பவர்களுக்கு கடமையை உணர்த்துவதிலும் இந்த சர்க்கார் முனைந்து இருப்பது பாராட்டுக்குரியதாகும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அரசு அமைத்திட்ட பின்தங்கியோர் நலக்குழுவின் பரிந்துரைகளை, நமது நிதி நிலைமை ஒட்டி படிப்படியாக ஆய்ந்து நிறைவேற்றுவதில் நாம் தீவிரம் காட்டி வருகிறோம் என்று குறிப்பிட்டு இருப்பது அரசு எந்த அளவுக்கு பின்தங்கியோர் நலனில் அக்கறை கொண்டிருக்கிறது என்பதை உணர்ந்து, பின்தங்கியோர் நலனில் அக்கறை கொண்டோர் அனைவரும் பாராட்டாமல் இருக்க முடியாது.

நகர்புறங்கள் மட்டுமின்றி, கிராமப்பகுதிகளிலும் ஏழை மக்களுக்கு வீட்டுமனைகள் ஒப்படை செய்வதில் இந்த அரசு கண்ணும் கருத்துமாக இருந்து வருகிறது என்று குறிப்பிடப்பட்டிருப்பது வரவேற்கத் தக்கதாகும்.

வேலைவாய்ப்பு வசதிகளைப் பெருக்குவதில் மேலும் ஒரு கட்டமாக, தமிழ்நாடு காவலர் படையில் 'முதல் நிலைக் காவலர்' என்கிற புதிய பதவி ஒன்றினை ஏற்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது வரவேற்கத்தக்கதாகும். அதில் சிறுபான்மையோருக்கும் பிரதிநிதித்துவம் கொடுக்கவேண்டுமென்று இந்த சந்தர்ப்பத்தில் நான் சர்க்காரைக் கேட்டுக்கொள்ளுகிறேன். அது போலவே, மற்றத் துறைகளிலும் பிரதிநிதித்துவம் அளிக்க வேண்டுமென்று விண்ணப்பித்துக் கொள்கிறேன்.

தொழில் நுணுக்கப் பள்ளிகளில் பயின்று, தேர்வு பெற்று, வேலையின்றியிருக்கும் தகுதியுள்ள இளைஞர்கள் 3,000 பேர்களுக்கு, ஒவ்வொருவருக்கும் ரூபாய் 1,000 வீதம் கடன் உதவி அளிக்க இத் திட்டம் வகை செய்கிறது என்ற நிதி நிலை அறிக்கையில் இருப்பதை நான் பாராட்டுகிறேன். என்றாலும் அவர்களுக்கு அந்தத் தொகையை ரூபாயாகக் கொடுப்பதை விட அந்தந்தத்

துறையில் பாண்டித்தியம் உள்ளவர்களுக்கு அதற்குரிய சாதனங்களாக வாங்கிக் கொடுப்பது அவர்களை வளப்படுத்த பெரிதும் உதவியாக இருக்கும் என்பது என்னுடைய கருத்தாகும்.

வேலையற்றோர், வாழ்க்கதியற்றோர், பாதுகாக்கும் பண்பற்ற குடும்பத்தால் கைவிடப்பட்டோர், இரந்து உயிர் வாழ்கின்ற இழி நிலையை நீக்கிட, பிச்சைக்காரர் மறுவாழ்வுத் திட்டமொன்றை நமது மாநில அரசு தாயரித்துள்ளது என்று இந்த அறிக்கையில் கண்டுள்ளது எனக்கு மிக்க பெருமையையும், பூரிப்பையும் தருகிறது. ஒரு நாடு சீர்பட வேண்டுமானால் தொழில் துறையில் மட்டுமல்ல, விவசாயத் துறையில் மட்டுமல்ல, விஞ்ஞானத் துறையில் மட்டுமல்ல, கல்வித் துறையில் மட்டுமல்ல, ஏழ்மையை அகற்றும் துறையிலும் அது கவனம் செலுத்த வேண்டுமென்பது தான் பூரணத்துவம் ஆனதாகும். அந்த நல்ல நோக்கத்தோடு இந்தத் திட்டம் ஆராயப்பட்டு இருப்பது கண்டு ஏழைகளின் சார்பில், திக்கற்றவர்கள் சார்பில், கை நீட்டி பிச்சை எடுப்பவர்களின் சார்பில் நான் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பொருளாதார அடிப்படையில் முதல்வர் அவர்கள் சுட்டிக் காட்டியிருப்பது போல மத்திய சர்க்கார் கையில் அதிகாரக் குவியல்களும் நம்மிடைய அதிகாரக் குறைவும் இருப்பதைக் காண்கிறோம். அது கண்டு நான் என்னுடைய வேதனையைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நிதிநிலை அறிக்கையில் இரண்டாம் பகுதியில் முதல்வர் அவர்கள் மிகவும் வேதனையுடன் குறிப்பிடுவதைப் போன்று, நானும் மிக வேதனையுடன் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். "மது விலக்கைக் கை விட வேண்டிய சூழ்நிலை நமக்கு ஏற்பட்டிருக்கிறது. தமிழரசுக் கட்சி, முஸ்லிம் லீக் கட்சி இவர்கள் இது குறித்து வருத்தப்படுகிறார்கள். அவர்களுக்கு உள்ளது போன்ற சங்கடம் எனக்கும் உண்டு. ஆனால் என்ன செய்வது" என்று கேட்டிருக்கிறார். எங்களுக்கும் இதில் சங்கடம் இருக்கிறது என்பதை முதல்வர் அவர்கள் குறிப்பிட்டிருப்பது கண்டு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். தன்னுடைய திட்டத்திற்குப் பீடிகையை மிக நன்றாகத்தான் போட்டு ஆரம்பித்திருக்கிறார்கள். "கொழுந்து விட்டு எரியும் நெருப்பு வளையத்திற்குள் கொளுத்தப்படாத கற்பூரமாக தமிழ்நாடு எத்தனை நாளைக்குத் தன்னைப் பாதுகாத்துக் கொள்ள முடியும்?" கற்பூரமாக நாம் ஏன் கருதிக் கொள்ள வேண்டும். அதை கோபுரமாக, தீப்பிடிக்காத கோபுரமாகக் கருதி இருக்கலாமே? கற்பூரம் என்று அவர் குறிப்பிடுவதால், அவருக்கு அச்ச உணர்வு இருப்பதால் அத்தகைய கருத்து தோன்றியதாக நான் கருதிக் கொள்கிறேன்.





தமிழகத்தில் மட்டும் மதுவிலக்குச் சட்டத்தைத் தீவிரப் படுத்துவதால் மதுவிலக்கின் வாயிலாக நாம் காப்பாற்ற விரும்பும் ஒழுக்கம், நாணயம், நேர்மை இவைகளையே பாதுகாக்க வாய்ப்பில்லாமல் போகிறது என்று அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

கொள்கையை அமுல்படுத்துவதிலும் வெற்றி காண முடியாத அளவிற்கு புறச் சூழ்நிலைகள் உருவாகி, சிறைகள் வழிந்திடவும், கொடிய நோய்கள் பெருகிடவும் இந்தச் சட்டம் காரணமாக இருந்ததேயன்றி உற்ற பயன் ஒரு சிறிதும் விளையவில்லை என்பதை ஒத்துக் கொள்வதில் நாம் வெட்கப்படத் தேவையில்லை என்று குறிப்பிடுகிறார். உண்மைதான். எந்த நோக்கத்தோடு மதுவிலக்கு கொண்டுவரப்பட்டதோ அதற்கு நேரமாறான பலன் ஏற்பட்டிருப்பதும் உண்மைதான். ஆனால் அதைக் காரணமாகக் கொண்டு மதுவிலக்கை நீக்குவது வருந்தத்தக்கதாகும்.

ஆனால் கடைசியாக நான் ஒன்றை மட்டும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். "எனவே உயர்தனிக் கொள்கையான மதுவிலக்கில் இந்த அரசு தொடர்ந்து நம்பிக்கை வைத்திருக்கிறதெனினும் இந்திய நாடு முழுவதற்குமாக இந்தக் கொள்கையை அமுல்படுத்த மத்திய அரசு பொறுப்பேற்றுக் கொள்ளும் வரையில் தமிழகத்தில் மதுவிலக்குச் சட்டம் செயல்படுவதை ஆகஸ்ட் மாதம் 30-ஆம் நாளில் இருந்து ஒத்திவைக்க இந்த அரசு முடிவு செய்கிறது என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்" என்று முதல்வர் அவர்கள் கூறி இருப்பது கொஞ்சம் எனக்கு நம்பிக்கை அளித்திருக்கிறது. இதை, அந்த 30-ம் தேதி என்று இல்லாமல் நீண்ட நாள் ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நான் ஒன்றை வேதனையோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். என்னை மன்னிக்கவேண்டும்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** மதுவிலக்கு பற்றி மாண்புமிகு முஸ்லிம் லீக் கட்சியின் உறுப்பினர் மொய்தீன் அவர்கள் மதத்தின் அடிப்படையில் கூறப்படுகிற கருத்துக்களைக் கூறுகிறார்களா அல்லது கட்சியின் அடிப்படையில் கூறப்படும் கருத்துக்களைக் கூறுகிறார்களா ?

**திருப்பூர் திரு. ஏ. எம். மொய்தீன் :** முஸ்லிம்லீகைப் பொறுத்த வரையில், மதத்தின் அடிப்படையும் அரசியல் கட்சியின் அடிப்படையும் வேறு என்பது அல்ல.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அப்படியானால் முஸ்லீம் நாடுகளான தெற்கு சிரியா, கிழக்கு பாகிஸ்தான், மலேசியா, இந்தோனேசியா ஆகிய நாடுகளில் மதுவிலக்கு அமுல்படுத்தப்படவில்லையே அதற்கு என்ன காரணம்?

**திருப்பூர் திரு. ஏ. எம். மொய்தீன் :** 1,400 வருடங்களுக்கு முன்பே மதுவிலக்கு அமுலில் இருந்தது. எப்படியோ எப்படி சுற்றுப்புறச் சூழ்நிலைகளினால் இங்கே அமுலாக்க முடியவில்லை என்று முதல்வர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்களோ அது போலவே சுற்றுச் சூழ்நிலை காரணமாக அவர்களால் அதை நீடிக்க முடியவில்லை (சிரிப்பு). ஆனாலும் சூழ்நிலை காரணமாக விட்டு விடுவது என்பது தவறு என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** அங்கே என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் ?

**திருப்பூர் திரு. ஏ. எம். மொய்தீன் :** அங்கே இருக்கிறவர்கள் சொல்கிறார்கள், வேண்டாமென்று. நம் முதல்வர் அவர்கள் குறிப்பிட்டது போல், மத்திய கிழக்கு நாடுகளுக்கு நான் சென்றிருக்கிறேன். ஒன்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஒரு நண்பர். அவர் பெயர் சொல்ல நான் விரும்பவில்லை. 24 மணி நேரமும் குடிப்பவர். அவருடன் கூடவே நான் இருந்தேன். ஆனால் நான் அதைத் தீண்டியதே இல்லை. மார்க்க உணர்ச்சியினால்தான் நான் அதைத் தொடவில்லை. நிச்சயம் இது வரப்போகிறது என்பது எனக்குத் தெரியும். ஆனாலும் கொஞ்ச நாள் கூடவே அதை ஒத்திப் போடுங்கள் என்றுதான் கேட்டுக்கொள்கிறேன்.

அண்ணா அவர்களின் கருத்தை இப்பொழுது குறிப்பிட விரும்புகிறேன். ஒன்றைச் சொல்லும்பொழுது என்னை நீங்கள் மன்னிக்க வேண்டும். உங்களுக்கெல்லாம் முதலிலே எனக்கு அறிஞர் அண்ணா அவர்களிடம் தொடர்பு உண்டு. அப்படிச் சொல்லுவதிலே நான் பெருமைப்படுகிறேன். அவர் பள்ளி மாணவராக இருந்தபொழுதே நான் அவரோடு தோழமை கொண்டவன். அவருடைய கருத்தை நான் மதிக்கிறேன். நீங்கள் அவருடைய தொண்டர்களாக இருக்கிறீர்கள், நான் அவருடைய தோழனாக இருக்கிறேன். அவர் பேசியதை எடுத்துக் காட்டுவது பொருத்தம் என்று கருதுகிறேன். அவர் சொல்லுகிறார், "மதுவிலக்குக் கொள்கையை அமுல் செய்வதினால் இருக்கும் குறைபாடுகள் மதுவிலக்கை ரத்து செய்வதற்குக் காரணமாக முடியாது. மதுவிலக்கு அமுல் செய்யப்படுவதில் மட்டுமல்ல; மற்ற பல விஷயங்களிலும் குறைபாடுகள் இருக்கின்றன என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். மதுவிலக்கை அமுல் செய்வதை சீராக்க வேண்டுமே என்பதுதான் நமது குறிக்கோளாக இருக்கவேண்டும். எனவே, அதைத் தீவிரப்படுத்துவதில் நாம் முனைந்திருக்கிறோம்" என்று கூறினார் அவர். இப்பொழுது அமைச்சராக இருக்கின்ற மாண்புமிக்க திரு. ராமச்சந்திரன் அவர்கள் ஒரு கேள்வியை அப்பொழுது கேட்டிருக்கிறார்கள். அது என்னவென்றால், "நமது நாட்டில் மதுவிலக்குக் கொள்கையைப் பூரணமாக அமுல்படுத்துவதிலே எவ்வளவு வருவாயை இழக்கிறோம் என்பதை முதலமைச்



சர் தெரிவிப்பாரா?" என்று கேட்டார். அதற்கு பேரறிஞர் அண்ணா அவர்கள் பதில் சொல்லுகிறார், "அதனால் எவ்வளவு பொருள் இழக்கிறோம் என்ற கணக்குக் கூட எனக்கு அவ்வளவு முக்கியமானதாகத் தெரியவில்லை. அதனால் எவ்வளவு பண்பாட்டை வளர்த்துக் கொண்டிருக்கிறோம் என்பதைத்தான் நான் முக்கியமாகக் கருதுகிறேன்" என்று கூறுகிறார். நாம் வாலிபர்களாக இருந்த காலத்திலே உங்களுக்கு எல்லாம் நன்றாகத் தெரியும். அண்ணா அவர்கள் தன்னுடைய தோழர்களை எப்படி எல்லாம் இந்தக் குடிப் பழக்கத்திலிருந்து திருத்துவதற்கு பாடுபட்டார் என்பது தெரியும். இதை எல்லாம் இந்த அவையிலே சொல்லுவதற்கு நான் விரும்பவில்லை. ஆனால், நீங்கள் விரும்பினால், இதை எல்லாம் புள்ளிவிவரத்தோடு சொல்லத் தயாராக இருக்கிறேன். கடைசியிலே முடிக்கும்பொழுது அண்ணா அவர்கள் சொல்லுகிறார், "நாமெல்லாம் வாலிபர்களாக இருந்தபோது, சிறுவர்களாக இருந்தபோது, வீதி முழுவதும் வீடு முழுவதும் குடித்துவிட்டு அவர்கள் செய்யும் அமளிகளும், குளறுபடிகளும், குடும்பங்களைச் சிதைக்க வைக்கும் நிலைமையும் இருந்து வந்தது. இன்றைய தினம் அந்த நிலைமை நீக்கப்பட்டிருப்பது பொருளாதாரத் துறையில் எத்தனை ரூபாய் என்று கணக்கு எடுத்தால் தெரியாது. மக்களுக்கு அதனால் கிடைத்த மன நிம்மதி கோடானு கோடி என்று கணக்குச் சொல்லலாம்" என்று கூறிய அவருடைய அந்தப் பொன்மொழியை மட்டும் இங்கே நினைவு கூற விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உறுப்பினர் அவர்களுக்கு அரைமணி நேரம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. எனவே, அவர்கள் இன்னும் ஐந்து நிமிடத்திலே முடித்துவிட வேண்டும்.

**திருப்பூர் திரு. ஏ. எம். மொய்தீன்:** இந்தக் கருத்தை நான் சொல்லவில்லை. முதல்வர் அவர்கள் இதை முடிக்கும்பொழுது அவருக்கு இருந்த பயம் வேறு. நான் முடிக்கும்பொழுது எனக்கிருக்கும் பயம் வேறு. அவர்களுக்கு இருந்த பயம் எதுவோ எனக்குத் தெரியாது. இதை நான் அச்சத்தோடு முடிக்கிறேன் என்று அவர்கள் சொன்னார்கள். எனக்கிருக்கும் பயம் நம்முடைய தோழமைக்கு எங்கே தீங்கு நேர்ந்துவிடுமோ என்ற பயம்தான். அதே நேரத்தில் 1,400 வருடங்களுக்கு முன்பே உலகத்திலே மதுவிலக்கை அமுல் நடத்த வேண்டும் என்று நியாயத்தின் பாரம்பரியத்தின் வழி வந்த நபிகள் நாயகம், அவர் பிறந்த மண் ஆன மெக்காவிலும், அவர் வாழ்ந்த மண் ஆன மதீனாவிலும் மது இல்லை. அங்கே மதுவிலக்கு கடந்த 1,400 வருடங்களாக அமுலில் இருந்து வருகிறது. ஆனால், முதலமைச்சர் அவர்கள் கூறியபடி பல முஸ்லிம் நாடுகளிலே மதுவிலக்கு இல்லை என்றால் அது எங்கள் மதத்தின் அடிப்படையால் இல்லை; சூழ்நிலைகளின் தவறுகளினால்தான் அப்படி இருக்கிறது. எனவே, அந்த நாடுகளை அடிப்படையாக வைத்துக் கொண்டு எங்கள் கருத்தை நான் வெளியிடவில்லை.

ஆகையால், அன்பிற்குரிய முதல்வர் அவர்கள் இதை துரிதமாகச் சிந்தித்து ஒரு முடிவுக்கு வருவார் என்று நம்புகிறேன். நான் பேசிய பேச்சை அமைச்சர்களும், என் அருமை நண்பர்களும் கேட்டுக் கொண்டிருந்ததற்கு என் நன்றியைத் தெரிவித்து முடித்துக் கொள்ளுகிறேன்.

**திரு. வா. மை. அப்துல் ஜப்பார் :** தலைவரவர்களே, ஒரு விளக்க உரை. முதல்வர் அவர்கள் இங்கே இடைமறித்துக் கூறும் பொழுது மதுவிலக்கு அமுலில் இல்லாத சில முஸ்லிம் நாடுகளைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். இதிலே நான் ஒன்றைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். நபிகள் நாயகம் பிறந்த மண்ணிலே அமைந்துள்ள நடு நாயகமான சவுதி அரேபியாவிலே முழுக்க முழுக்க மதுவிலக்கு அமுலில் இருக்கிறது என்று சொல்லிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அதை அவர்களே சொல்லி விட்டார்கள். அதையே திருப்பிச் சொல்லி, அந்தக் கருத்து வற்புறுத்தப்பட்டது என்பது எனக்கு நன்றாகத் தெரியும். நான் சொல்லுவது எல்லாம், நபிகள் நாயகம் பிறந்த இடம் அந்த கொள்கையை ஏற்றுக் கொண்டிருக்கும் பொழுது, அவருடைய கொள்கையைப் பின்பற்றி நடக்கும் துருக்கி போன்ற முஸ்லீம் நாடுகள் எல்லாம் புறச் சூழ்நிலைகளின் காரணமாக மதுவிலக்கை அமுல் செய்யவில்லை. ஆகையால், இந்த லீக் கட்சியின் சார்பாகப் பேசியவர்கள் எல்லாம் இந்தக் கொள்கையைப்பற்றிக் குறிப்பிடும் பொழுது முஸ்லீம் மதத்தின் சார்பாக குறிப்பிடுகிறார்களா என்ற கேள்வி தோன்றுகிறது. அதை கனம் உறுப்பினர் அவர்கள் ஒத்துக் கொண்டதற்குப் பிறகு அதைப் பற்றிய சர்ச்சைக்கு இடமில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இன்றைய நிதி நிலை அறிக்கையின் மீதான விவாதத்தின் கடைசி நாள் வருகிற செவ்வாய்க் கிழமை. அன்று எதிர்க் கட்சியிலே இருக்கிற தலைவர்கள் எல்லாம் பேசுவார்கள்.

**திருமதி. த. ந. அனந்தநாயகி :** Monday is the last day for general discussion on the Budget.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திங்கட்கிழமை அரசினர் மசோதாக்களுக்காக ஒதுக்கப்பட்ட நாள். அம்மையார் அவர்கள் அடுத்த நாளும் இருக்கிறது என்று கருதிக் கொண்டிருக்கிறார்கள். அப்படி யாரும் கருதக் கூடாது என்பதற்காகத் தான் இதைக் கூறுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் மொய்தீன் அவர்களுக்கு அரை மணி நேரம் ஒதுக்கி இருந்தும் அவர் 25 நிமிடத்திலே தன்னுடைய உரையை முடித்ததற்காக நான் அவருக்கு எனது பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைக்கு மாத்திரம் 20, 22 பேர்கள் இந்த விவாதத்திலே கலந்து கொள்ள வேண்டுமென்று பெயர் கொடுத்திருக்கிறார்கள். அதிலே கட்சித் தலைவர்





களும் பேச வேண்டியிருக்கிறது. கனம் திரு. பெருமாள் அவர்கள் பார்வார்டு பிளாக் கட்சியின் சார்பிலே பேச இருக்கிறார்கள். ஒவ்வொருவரும், 6 அல்லது 7 நிமிடங்கள் கூடப் பேச முடியாத நிலைமை இருக்கிறது. எந்த உறுப்பினராவது இரண்டு நிமிடம் அதிகமாகப் பேசுகிறார் என்றால், இன்னொரு உறுப்பினருக்குப் பேசுகிற வாய்ப்புத் தவிர்க்கப்படுகிற நிலைமை இருக்கிறது. எனவே, உறுப்பினர்கள் சுருக்கமாகப் பேசவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். மூன்றே நிமிடங்களிலே கூட நல்ல கருத்துக்களை ஒருவர் சொல்ல வாய்ப்பிருக்கிறது. எத்தனை நிமிடம் பேசுவது என்பதில்லை முக்கியம், எவ்வளவு கருத்துக்களை பேசுவது என்ற வகையிலே உறுப்பினர்கள் எல்லாம் ஒத்துழைக்க வேண்டும். இன்றைக்குக் கடைசி நாள் விவாதம்; நாளைக்கு மறுநாள் சிண்டிகேட் காங்கிரஸ் கட்சியின் தலைவர் திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் பேசுவார். எனவே, இன்றைக்குக் கலந்து கொள்ள வேண்டுமென்று கருதுபவர்கள் எல்லோரும் சுருக்கமாகப் பேச வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். மானியக் கோரிக்கையின் போது நிறையப் பேசிக் கொள்ளலாம் என்று சொல்லிக் கொள்ளுகிறேன்.

* **திரு. நா. வீராசாமி :** பேரவைத் தலைவரவர்களே, 1971-72-ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையின் மீது என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல வாய்ப்பு அளித்தமைக்காக எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இவ்வாண்டு நிதி நிலை அறிக்கையை நமது முதல்வர் அவர்கள் இந்த மன்றத்திற்கு அளித்திருக்கிறார்கள் என்றால், ஏழைகளை வாழவைக்கக் கூடிய, ஏழைகளுக்காக நல்ல பல திட்டங்களைச் சமைக்கக் கூடிய நிதி நிலை அறிக்கை என்று சொன்னால், அதன் பொருள் சிலருக்குப் புரியாது. பொதுவாக, ஆகாயத்திலே பறக்கின்ற கழுகுகளுக்கு பூமியிலே இருக்கும் பூந்தோட்டமும், பழத்தோட்டமும் தெரிவதில்லை; அப்படிப்பட்டதைப் போல் சிலர் இந்த நிதி நிலை அறிக்கையிலே எங்கெங்கேயாவது அப்படிப்பட்ட குறைபாடுகள், நிலைமைகள் இருக்குமா என்று ஆராய்ச்சி செய்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் நான் ஒரு காரணத்தைத்தான் சொல்ல விரும்புகிறேன்.

குறிப்பாக சுதந்திரா கட்சியின் உறுப்பினர் டாக்டர் ஹாண்டே அவர்கள் இந்த மன்றத்திலே உள்ளபடியே அவர்களுக்கே உரிய நிலையிலே பேசினார்கள். அவர்கள் பேசிய பேச்சு எல்லாம் இந்த மன்றத்திலே எப்படி அமைந்திருந்தது என்பது உங்களுக்குத் தெரியும். அவர்கள் சொன்னார்கள் இந்த நிதி நிலை அறிக்கையைப் பற்றி,

"His language is good, but has he shown any basic knowledge of Economics ?"

எப்பொழுது டாக்டர் ஹாண்டே அவர்கள் எகானமிக்ஸ் படித்தார்கள் என்பது எனக்குத் தெரியாது. ஆனால், அப்படிப்பட்ட

[திரு. நா. வீராசாமி] [1971 ஜூன் 26

எகானமிக்ஸ் ஆராய்ச்சியாளர்கள் அதைப்பற்றிச் சொல்லிச் சென்ற கருத்தை நான் இங்கே சொல்ல விரும்புகிறேன். ஆடம் ஸ்மித் என்பவரும், ரிகார்டோ மில் என்பவரும் அதைப் பற்றிச் சொன்னார்கள்.

" They defined economics as the Science of wealth or the science relating to the laws of production, distribution and export of wealth. "

அந்த அடிப்படையிலேதான் நம்முடைய முதலமைச்சரவர்கள் இந்த நிதி நிலை அறிக்கையைத் தயாரிக்கின்ற நேரத்தில் " பொருளாதாரத் துறையில் நடவடிக்கை எடுக்க சிறகடித்துப் பறக்கும் நமது ஆர்வம், சமுதாயத் துறையில் கீழ்த்தட்டில் கிடக்கும் பெரும்பாலான மக்களைக் கைதூக்கி விடுவதிலும் காட்டப்பட்டாக வேண்டும். சோஷலிசம், பொருள் பொதிந்த ஒன்றாக அமைய வேண்டுமென்றால், சமூக அமைப்பில் தாழ்வுற்றோரின் நிலையை உயர்த்தும் திட்டங்களை அது தன்னகத்தே கொண்டதாகத் திகழ வேண்டும்" என்று தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார் இதை விட பொருளாதாரத் துறையில் வேறு என்ன சொல்ல முடியும் என்பது உள்ளபடி எனக்குப் புரியவில்லை.

அதுமட்டுமல்ல இந்த நிதி நிலை அறிக்கையைப் பற்றிப் பேசும் போது, அதைக் குறை கூறி,

Part ' A ' is a comedy and finally it has ended in a tragedy with Part ' B '.

என்று சொல்லுகிறார்கள். சுதந்திரா கட்சியினுடைய உறுப்பினர்களுக்கு முதல் பாகம் காமெடியாகத் தெரிகிறது. இந்த அரசு நிலம் அற்ற ஏழைகளுக்கு 230,000 பேர்களுக்குப் பட்டா வழங்கியிருக்கிறதே, இது காமெடியாகத் தெரிகிறதா ? கல்விக் கண்ணைத் திறப்பதற்கு ரூ. 84,00,000 ஒதுக்கியிருக்கிறதே இது காமெடியாகத் தெரிகிறதா என்று கேட்க விரும்புகிறேன். வாரியத்தை அமைத்திருக்கிறார்கள். இதெல்லாம் அவர்களுக்குக் காமெடியாகத் தெரிகிறதா ? தாழ்த்தப்பட்ட மக்களுக்கு தனிச் சலுகைகள் வேலையற்ற பிற்படுத்தப்பட்ட மக்களுக்கென்று தனிச் சலுகைகள் வேலையற்றவர்களாக இருப்பவர்களுக்குத் தனிச் சலுகை. இதெல்லாம் இருப்பது பார்ட் ஏ. இது அவர்களுக்குக் காமெடியாகத் தெரிகிறது.

அப்படியே பார்ட் ' பி ' ட்ராஜெடியாகத் தெரிகிறது என்று சொல்லுகிறார்களே, அது என்ன என்று பார்த்தால் தனியார் பஸ்களைத் தேசியமாக்கியதைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். உள்ளபடியே டாக்டர் ஹண்டே அவர்களுக்கு ட்ராஜெடியாக இருக்கலாம். ஏழைகளை வாழவைப்பதற்கு அதை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறோம். அது மட்டுமல்ல திரு. ஹாண்டே அவர்கள் இது பற்றிக் குறைகூறிவிட்டு அதற்கு ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரி வேண்டுமா என்று குறிப்பிட்டுவிட்டு " He is meant for administration "



1971 ஜூன் 26] [திரு. நா. வீராசாமி]

என்றுகூடச் சொன்னார்கள். ஏதோ ஐ.ஏ.எஸ். அதிகாரியை கண்டக்டரைப்போல வேலை செய் என்று சொல்வது போலவும், கர்டரைக் கட்டிப் பார் என்று சொல்வது போலவும் சொன்னார்கள். எல்லா இடங்களிலும் அதிகாரிகள் இருப்பதைப் போன்று அங்கேயும் இருக்கிறார்கள். ஏதோ இந்த அரசாங்கத்திற்கு ஐ.ஏ.எஸ்., அதிகாரிகளை எங்கே நியமிப்பது என்று தெரியாதது போல டாக்டர் ஹாண்டே சொல்லி வந்தது உண்மையிலேயே வேதனையாக இருக்கிறது.

அதுமட்டுமல்ல, மத்திய-மாநில உறவைப் பற்றிச் சொன்னார்கள்.

' Suspend your support to Central Government. If you take that definite stand at least your self-respect may be there.'

உள்ளபடியே, நம்முடைய முதல்வர் அவர்கள் மத்திய அரசாங்கத்திடம் கொஞ்சம் உறவோடு பழகுகிறார்கள் என்று சொன்னால் இந்த நாட்டிலே உள்ள ஏழை எளிய மக்களைக் காப்பாற்ற, இந்த நாட்டு மக்களின் வாழ்வை உயர்த்துவதற்குப் பணம் தாருங்கள் என்று போராடி வருகிறார்களே தவிர, மாநில அமைச்சர்களுக்கோ அவருடைய சுய நலத்திற்காகவோ மத்திய அரசாங்கத்தை ஆதரிக்கவில்லை. முதல்வரவர்கள் விளக்கமாகச் சொல்லியிருக்கிறார்கள் " உறவுக்குக் கை கொடுப்போம்; உரிமைக்குக் குரல் கொடுப்போம்" .என்று சொல்லியிருக்கிறார்கள். இவ்வளவுக்குப் பிறகும் இந்த அரசாங்கம் மத்திய அரசாங்கத்தோடு நல்ல உறவோடு இருப்பதை, எப்படி திசை மாற்றலாம் என்று ஹாண்டே அவர்கள் நினைப்பார்களேயானால் நிச்சயம் அவர்கள் ஏமாறுவார்கள் என்று நான் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

இறுதியாக ஒன்றைச் சொன்னார்கள். அதிலே குறிப்பாக மதுவிலக்கைப்பற்றிச் சொன்னார்கள். அதிலே சொல்லும்போது மிகக் கடுமையான வார்த்தைகளைக்கூடப் பயன்படுத்தினார்கள்.

" My question is, who asked you and on what authority have you scrapped prohibition ?" என்று சொல்லியிருக்கிறார்கள். நம்முடைய அந்த நிதி நிலை அறிக்கையிலே கூடத் தள்ளி வைக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்களே தவிர எடுத்துவிட்டோம் என்ற வார்த்தைகளைக்கூடப் பயன்படுத்தவில்லை. அந்த வாசகங்களை எழுதும்போது கூட எவ்வளவு வருத்தத்தோடு அடக்கத்தோடு சொல்ல முடியுமோ அப்படிச் சொல்லியிருக்கிறார்கள். அதைப்புரிந்து கொள்ளாமல் திரு ஹாண்டே அவர்கள் பேசியிருக்கிறார்கள். நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். இதையெல்லாம் கேட்பதற்கு அவர்களுக்கு என்ன உரிமை இருக்கிறது? எனக்குத் தெரியவில்லை. அவர்கள் ஆட்சிக்கு வந்து இப்படிப்பட்ட நிலைமைகளை ரத்து செய்தால்கூட நாங்கள் பாராட்டத் தயாராக இருக்கிறோம். இந்த அரசாங்கத்தைப் பார்த்து 184 சட்டமன்ற உறுப்பினர்களை இந்தக் கட்சியின் சார்பாக வைத்திருக்கும் ஆட்சியைப்பார்த்து " Who are you?" என்று கேட்பது நாகரிகம் தானா? நான்

ஒன்றைத் தெளிவாகச் சொல்லுகிறேன். உலகத்திலே எந்த நாடாவது ஒரு தனி மனிதனின் பிரச்சினையிலே சட்டம் போட்டு வெற்றி கண்டிருக்கிறார்களா? ஒரு மனிதன் இன்னதுதான் சாப்பிடவேண்டும்—இப்படித்தான் உடுக்க வேண்டும் என்று ஒரு அரசாங்கம் சட்டம் போட்டு வெற்றி கண்டதாகத் தெரியவில்லை. இது தேவையில்லாத பிரச்சினை என்று தமிழகத்திலே ஒரு நிலைமை ஏற்பட்டது. அதற்காக அண்ணாவின் கருத்துக்களை யெல்லாம் சொன்னார்கள்.

நான் அவர்களைக் கேட்கிறேன் அண்ணா அவர்கள் சொன்னது அத்தனையும் ஏற்றுக்கொள்கிறீர்களா? மது விலக்கை மட்டும் தனக்குச் சாதகமாக இருக்கிறது என்று சொல்லி அண்ணாவின் வழியிலே இருந்து வேறு வழியில் செல்லுகிறீர்களே என்று அவர்கள் சொன்னார்கள். அண்ணா திராவிட நாடு திராவிடருக்கே என்று சொன்னார்கள். கிடைக்குமா? எங்கே இருக்கிறது? இப்படியெல்லாம் பேசலாமா என்று எல்லாம் சொன்னார்கள். கால கட்டத்திலே மக்கள் அதற்குத் தயாராக இல்லை என்று புரிந்து கொண்ட உடனே அண்ணா அவர்களே அதைத் தள்ளி வைத்தார்கள், திராவிட நாடு கேட்டோம். அதைப் பெறுவது பிறப்புரிமை என்று சொன்னோம். மக்கள் அதற்குத் தயாராக இல்லை என்று தெரிந்து அண்ணா அவர்களே அதை விட்டு விட்டார்கள்.

சென்னைக் கடற்கரையிலே அண்ணா அவர்கள் என்ன சொன்னார்கள் என்பதையும் நான் இந்த மன்றத்தின் நினைவுக்குக் கொண்டு வர விரும்புகிறேன். அண்ணா அவர்கள் அமெரிக்கா சென்று திரும்பியதும் சென்னைக் கடற்கரையில் லட்சக்கணக்கான மக்கள் கூடிய கூட்டத்தில் நான் கண்டதையும் களித்ததையும் சொன்னார்கள். அண்ணா அவர்கள் ஒரு விருந்திலே கலந்து கொண்ட நேரத்தில் மது கொடுத்தார்களாம். அதைச் சாப்பிடுவதில்லை என்று ஒதுக்கி விட்டாராம் அண்ணா. அமெரிக்கர்கள் அது தவறா என்று கேட்டிருக்கிறார்கள். அண்ணா சொன்னார்கள் குடிக்கலாம், ஆனால் குடிகாரனாக ஆகக் கூடாதென்று சொன்னார்கள். குடிப்பதே தவறு என்று சொல்லவில்லை. குடிக்கலாம் ஆனால் குடிகாரனாக ஆகிவிடக் கூடாது என்றுதான் சொல்லியிருக்கிறார்கள். ஒரு நாட்டிலே ஒரு தலைவர் ஒரு கருத்து அல்லது கொள்கையைச் சொல்வது நல்ல எண்ணத்தோடு நாட்டுக்காகத்தான். ஆனால் காலத்தின் மாற்றத்தால் மக்களே அந்த கொள்கையை ஏற்றுக்கொள்ளாதபோது அதைத் திருத்திக் கொள்வது தவறா என்று எனக்குப் புரியவில்லை. ராஜாஜி அவர்கள் கூட இந்த நாட்டை ஆண்ட நேரத்தில் இந்த நாட்டிலே இந்தியைப் புகுத்தினார்கள். ஆனால் இப்போது என்ன சொல்கிறார்கள். இந்தியை எதிர்க்கிறார்கள். ஒரு நேரத்தில் புகுத்தினார்கள். இப்போது அவர்களே எதிர்க்கிறார்கள், என்று சொன்னால் ராஜாஜியைப்பற்றி அவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்று எனக்குப் புரியவில்லை.



அது மட்டுமல்ல பர்சனாலிடி கல்ட்டைப் பற்றி சொன்னார்கள். நான் நினைக்கிறேன் இந்த வார்த்தையேகூட ரஷிய நாட்டிலே ஸ்டாலினைப் பற்றி பேசப்பட்ட வார்த்தை. டாக்டர் ஹாண்டே அவர்களுக்கு கம்யூனிஸ்டுகளைத் தாக்குவது என்றாலே அவருக்கு ருசி. அப்படிப்பட்ட வார்த்தையைப் பயன்படுத்தினார்கள். பர்சனாலிடி கல்ட் என்பது நம்முடைய முதல்வர் முதலமைச்சரானவுடனே அறிக்கைகளிலே என்னுடைய படத்தைப் போடுங்கள், சுவரொட்டிகளிலே என்னுடைய படத்தைப் போடுங்கள் என்று உத்திரவு போட்டு அப்படிப்பட்ட நிலைமையை உருவாக்கியதைப் போல ஒரு எண்ணத்தை நேற்றைய தினம் இங்கே உருவாக்கினார்கள்.

தலைவரவர்களே உங்களுடைய அனுமதியோடு சொல்லுகிறேன். என்னிடம் மெட்ராஸ் இன்பர்மேஷன் என்கின்ற புத்தகங்கள் பல இருக்கின்றன. இவை தி.மு. கழகம் ஆட்சிக்கு வந்ததற்குப் பின்னாலே அச்சடிக்கப்பட்டவையல்ல. இதற்கு முன்னாலே ஆட்சியிலே இருந்தவர்கள் இந்த நூல்களை வெளியிட்டிருக்கிறார்கள். அதிலே பார்த்தால் பக்கத்திற்குப்பக்கம் அந்த நேரத்திலே முதலமைச்சராக இருந்தவர்கள் ஆட்சியிலே இருந்தவர்கள் மத்திய அரசிலே இருந்தவர்கள் நேருவை காமராசரைப் போன்றவர்களுடைய படங்களெல்லாம் பக்கம் பக்கமாக அரசாங்க பணத்திலே அச்சடிக்கப்பட்டு இருக்கிறது. ஏதோ இந்த ஆட்சியிலேதான் நடைபெறுகிற மாதிரி கற்பனை செய்து சொல்லுவது முறைதானா என்பதை எண்ணிப்பார்க்கவேண்டும்.

திருமதி த. ந. அனந்தநாயகி : சார், பாயின்ட் ஆப் ஆர்டர். பழைய அமைச்சர்கள் தங்கள் படங்களையும் போட்டுக்கொண்டார்கள் என்று சொன்னார். அரசாங்க நிகழ்ச்சியில் கலந்து கொண்டபோது எடுக்கப்பட்ட படங்களாக அவை இருக்குமே தவிர அவர்கள் ஒன்றும் தங்கள் படங்களைப் போடச் சொல்லிக் கொள்ளவில்லை.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இது எப்படி பாயின்ட் ஆப் ஆர்டர் ஆகும்? மதிப்பிற்குரிய அம்மையாரைப் போன்ற வழக்கறிஞர்களுக்கே இது தெரியாமல் இருப்பது எப்படி என்று தெரியவில்லை.

திருமதி த. ந. அனந்தநாயகி : இது பாயின்ட் ஆப் ஆர்டரா, இல்லையா என்பதை முடிவு செய்யவேண்டியவர் பேரவைத் தலைவர் தான் என்பதை முதல் அமைச்சர் அவர்கள் புரிந்துகொள்ளாமல் இருப்பது வருந்தத்தக்கது.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : ஒரு உறுப்பினர் பேசுகின்ற நேரத்தில் குறுக்கிடுவதற்கு அமைச்சர் அவர்களுக்கு உரிமை இருக்கிறது. ஆனால் அங்கத்தினர்களுக்கு உரிமையில்லை. பேசுகின்ற அங்கத்தினர் தம் பேச்சிடையே ஒரு உறுப்பினர்

குறுக்கிடுவதற்கு ஒப்புதல் தராவிட்டால் எப்படியாவது குறுக்கிட்டுப் பேசவேண்டும் என்பதற்காக பாயின்ட் ஆப் ஆர்டர் என்ற பாதுகாப்பில் எழுந்து, குறுக்கிட்டு பேசிவிட விரும்புகிறார்கள். இதுபோல் பாயின்ட் ஆப் ஆர்டர் என்ற பாதுகாப்பில் உறுப்பினர்கள் குறுக்கிடாதிருக்க பேரவைத் தலைவர் கண்காணிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் பேசும்போது குறுக்கிட்டு ஏதாவது பேசவேண்டுமென்றால் பாயின்ட் ஆப் ஆர்டர் என்று சொல்லிக்கொண்டு குறுக்கிடுவது சரியல்ல. மாண்புமிகு உறுப்பினர் திருமதி அனந்தநாயகி அவர்கள் நல்ல அனுபவம் பெற்ற உறுப்பினர்—வழக்கறிஞர். அவர்கள் இப்படி குறுக்கிடுவது சரியல்ல. இப்படி ஒழுங்குப் பிரச்சினை இல்லாததைக் கூட ஒழுங்குப் பிரச்சினை என்ற பெயரால் இந்த மன்றத்தில் எழுப்பப்படுவது தவிர்க்கப்படவேண்டும். அப்படி எழுந்து பாயின்ட் ஆப் ஆர்டர் என்று குறுக்கிட்டு சொல்ல வேண்டியதைச் சொல்லிவிடுவது கெட்டிக்காரத்தனம் அல்ல—அது இந்த மன்றத்தையே அவமதித்ததற்கும், பேரவையின் மரபுகளுக்கு விரோதமாக நடந்ததற்கும் ஒப்பாகும் என்பது தெளிவாக இருக்கிறது. பாயின்ட் ஆப் ஆர்டர் என்றால் மேலெழுந்தவாரியாகவாவது அதுபோல தோற்றக்கூடியதைச் சொன்னால் பரவாயில்லை. அப்படியின்றி பாயின்ட் ஆப் ஆர்டரே இல்லாத ஒன்றை அந்தத் தலைப்பில் எழுந்து சொல்வது என்பது நல்ல அனுபவம் மிக்க—வழக்கறிஞர்—திருமதி அம்மையார் அவர்களுக்குச் சரியானதல்ல.

**திரு. நா. வீராசாமி:** அவர்கள் பர்சனாலிடி கல்ட் என்பது பற்றி குறிப்பிட்டதனால் நான் இதைப்பற்றிக் குறிப்பிட முன் வந்தேன். திரு. காமராஜ் அவர்கள் முதல் அமைச்சராக இருந்த போது என்ன என்ன மாதிரியாக வருணிக்கப்பட்டார் என்பது தெரியாதது அல்ல. காமராஜை ஜனநாயகப் பிதா, சோஷலிசப் பிதா என்று எழுதப்பட்டது. சேலத்தில் தேர்தல் நேரத்தில் காமராஜ் வருகிறார் என்று எழுதவில்லை. ஜனநாயக சோஷலிசப் பிதா என்று கூட எழுதவில்லை. முதலமைச்சர் வருகிறார் என்று எழுதவில்லை—கடவுளே வருகிறார் என்று எழுதினார்கள். அப்படிப் பட்டவர்களோடு கூட்டுறவு சேர்ந்துகொண்டு எதற்கெடுத்தாலும்—இவர்கள் இவ்வளவு தூரம் வளர்ந்து வருகிறார்களே, ஒரு சாதாரணமானவன் இந்த இடத்திற்கு வந்துவிட்டாரே என்கிற பொறாமையில் இப்படிச் பேசினார்களே தவிர வேறு ஒன்றும் இல்லை.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** தலைவர் அவர்களே, 'பொறாமை' என்பது அன்பார்லிமென்டரி வேர்ட்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது அன்பார்லிமென்டரி அல்ல.





**திரு. நா. வீராசாமி:** நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் இப்படிப்பட்ட நிலைக்கு வந்திருக்கிறார்கள் என்றால் தியாகம் செய்ய வேண்டியதைச் செய்து, இழக்க வேண்டியதை இழந்து லட்சோபலட்சம் ஏழை மக்களின் இதயங்களில் இடம் பெற்ற காரணத்தினால்தான் இந்த நிலைக்கு வந்திருக்கிறார்களே தவிர வேறு ஒன்றும் இல்லை. அப்படிப்பட்டவரை தாக்குவதினால் தனக்கு ஒரு விளம்பரம் கிடைக்காதா என்கிற எண்ணத்தில் உயர்மட்டத்தில் உள்ளவரை தங்களுக்கு ஒரு விளம்பரம் தேடித் தாக்குவது அரசியலில் வேடிக்கையாக இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு உறுப்பினர் பேசும் போது இன்னொரு உறுப்பினர் தம் கருத்தை வெளியிட்டது தனக்கு ஒரு விளம்பரம் தேட என்பதாகக் குறிப்பிடுவதைத் தவிர்க்கவேண்டும்.

**திரு. நா. வீராசாமி:** இந்திய பிரதமராக இருந்த நேருவைப் பற்றி அவர்களுடைய அரசியல் குருவாகிய ராஜாஜி அவர்கள் முதல் அமைச்சராக இருந்த நேரத்தில் சட்டமன்றத்திலேயே என்ன சொல்லியிருக்கிறார்கள் என்பதைக் குறிப்பிடுவதற்கு வந்தேன்.

'He has great influence but that influence is born out of his gentleness, dignity, peculiar amiability and his own personality.'

என்பதாகத்தான் சொல்லியிருக்கிறாரே தவிர வேறுவிதமாக திரு. ஹாண்டே அவர்களைப்போலச் சொல்லவில்லை. எதற்காக இவற்றைச் சொல்கிறேன் என்றால் ஆளும் கட்சியினர் எதைச் செய்தாலும் எதிர்க்க வேண்டும் என்கிற அடிப்படை மனப்பான்மை மாறவேண்டும்.

மதுவிலக்கு ஒத்திவைக்கப்படுவதைச் சொல்லும்போது என்ன என்னவோ சொன்னார்கள். மதுவிலக்குச் சட்டத்தினால் ஏற்பட்ட குற்றங்களை பார்த்தால் 1954-இல் 53 ஆயிரம் பேர் தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள். 57-இல் 82 ஆயிரம் பேர் தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள். 62-இல் காங்கிரஸ்காரர்களே இந்தத் திட்டத்தை தீவிரமாக செயல்படுத்திக்கொண்டிருந்த நேரத்தில் 1 லட்சத்து பத்தாயிரம் பேர்கள் தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப்பொறுப்பை ஏற்றுக்கொண்ட பிறகு இவர்களுக்கு இந்த திட்டத்தில் அக்கறை இல்லை என்று சொன்னாலும்—இவை வெற்றிகரமாக செயல்படுத்தவேண்டும் என்ற அடிப்படையில் எடுத்துக்கொண்ட நடவடிக்கையின் காரணமாக 3 லட்சத்து 19 ஆயிரம் வழக்குகள் தொடரப்பட்டிருக்கின்றன. இப்படி சட்டத்தின் மூலம் தனி மனிதனின் ஒழுக்கம் கட்டிக்காக்கப்பட முடியவில்லை. இதனால் வழக்குகள் பெருகுகின்றன. வருமானம் இழக்கப்படுகிறது என்கிற நிலையில்தான் முதல் அமைச்சர் அவர்கள் இந்தச் சட்டத்தை ஒத்திவைக்கலாமா என்பதாக வருத்தத்தோடு சிந்திக்கலானார்கள்.

அடுத்து காவேரி நதி தண்ணீர் சம்பந்தமாக (மணியடிக்கப் பட்டது).

*திருமதி ஜோதி வெங்கடாசலம்: மதிப்பிற்குரிய சபா நாயகர் அவர்களே, 1971-72-ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தை மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்ததன் பேரில் சில யோசனைகளைக் கூறவிரும்புகிறேன். முக்கியமாக கல்வித் துறைக்கு ஒதுக்கப்பட்டிருக்கிற பணம் வரவேற்கத்தக்கதாக இருக்கிறது. அதிலே ஹாஸ்டல்கள், மாணவர்கள் ஆகியவர்களுக்குக் கொடுக்கக்கூடிய பணங்களும் அடங்கியிருக்கின்றன. இருந்தாலும் ஹாண்டிகாப்டு—கை இழந்தவர்கள், கால் இழந்தவர்கள், ஊமை, குருடு, செவிடு—போன்றோர்களுக்காக ஒதுக்கப்பட்டிருக்கிற பணம் எவ்வளவு என்று தனியாகக் குறிப்பிடவில்லை. அதை அரசாங்கம் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பேருந்துகளை தேசியமாக்குவது பற்றி குறிப்பிடப்பட்டிருக்கிறது. அது மிகவும் முக்கியமான அம்சம் வரவு-செலவுத் திட்டத்தில். என்றாலும் பத்து ரூட் வைத்திருக்கிறவர்களை விட்டுவிடுகிறோம். பத்தில் இருந்து 49 வரை ரூட் வைத்திருப்பவர்கள் பத்து ரூட்டை வைத்துக்கொண்டு மற்றவற்றை அவர்களே சரண்டர் செய்ய அனுமதி அளித்திருக்கிறோம். 50, 50-க்குமேல் ரூட் உள்ளவர்களது பஸ்களை தேசியமாக்குகிறோம். இதில் கூட நில உச்சவரம்புச் சட்டத்தில் உள்ளதுபோல இவர்களுக்கும் 10 ரூட்கள் ஒதுக்கிவிட்டு மற்றவற்றை தேசியமாக்குவது சரியானதாக இருக்கும். அவர்களும் நேர்மையாக, நாணயமாக, விதிகளுக்கு உட்பட்டுத்தான் அவற்றை வைத்திருக்கிறார்கள். இன்றைக்கு இருக்கக்கூடிய நிலையில் 50 பஸ்கள் வைத்திருப்பவர்களும், 50 பஸ்களுக்கு மேற்பட்டு வைத்திருப்பவர்களும் உள்ளங் கையளவிற்குத்தான் தமிழ் நாட்டிலே இருக்கிறார்கள். சிலர் கூட்டுச் சேர்ந்து பஸ் தொழிலை நடத்திக்கொண்டு வருபவர்களாக இருக்கிறார்கள். குடும்பத்திலே இருக்கின்ற சகோதரர்கள் ஒன்று சேர்ந்து நடத்துகின்ற பஸ்களும் இருக்கின்றன. அவர்களுக்குத் தனிப்பட்ட முறையில் வசதி செய்து கொடுக்க வேண்டும். ஒரு நபருக்கு ஒன்றோ அல்லது இரண்டோ என்று பஸ்களைக் கொடுத்து, ஒரு குடும்பத்திற்கு பத்து அல்லது பதினைந்து பஸ்களை வைத்து பர்மிட்டுகளை வைத்து நடத்துவதற்கு வேண்டிய வாய்ப்பு அளிக்க வேண்டும். அரசாங்கம் பஸ்களை தேசிய மயமாக்குவதால் இப்போது பஸ் போக்குவரத்தை நடத்திக் கொண்டிருப்பவர்களுக்கும் தக்க வசதி செய்துகொடுக்க வேண்டும். அவர்களுக்கு வேறு தொழிலுக்கான வாய்ப்பை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மதுவிலக்கைப்பற்றிக் குறிப்பிடாமல் இருக்க முடியாது. அரசாங்கம் ஆராய்ந்து பார்த்துத்தான் மதுவிலக்கை ரத்து செய்கிறது என்று சொல்கிறார்கள். மதிப்பிற்குரிய





முதலமைச்சர் அவர்கள் மிகவும் வருத்தத்தோடு ஆகஸ்ட் 30-ம் தேதி வரையிலும் இதை ஒத்திப் போட்டிருக்கிறார்கள். அதை இன்னும் சிலகாலம் ஒத்திப்போடலாம் என்ற குறிக்கோள் இருக்கிறது. அதை ஒத்திப்போட இயலும். ஒத்திப்போட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மதிப்பிற்குரிய சில அங்கத்தினர்கள் பேசுகையில், "கள் குடிப்பது உடம்புக்கு நல்லது, உடம்பு நன்றாக இருந்தால் மனைவி ரொம்ப சந்தோஷப்படுவார்கள்" என்று சொன்னார்கள். ஆனால் ஆண்கள் கள் குடிப்பது பெண்களைப் பாதிக்கக்கூடிய அளவிலே இருக்கிறதென்ற உண்மையை ஒத்துக்கொள்ள வேண்டும். மதுவிலக்குத் திட்டத்தினால் இன்றையதினம் பல கிராமங்களிலுள்ள குடும்பங்கள் நன்றாக இருக்கின்றன. இந்தச் சட்டத்தை சிலர் மீறினாலும் கூட இப்போதைக்குப் பல குடும்பங்கள் நல்லபடியாக இருக்கின்றன. பணவசதி படைத்தவர்கள், பர்மிட் வைத்திருப்பவர்கள் குடிக்கும்போது ஏழைகள் மட்டும் ஏன் குடிக்கக் கூடாது என்கிறார்கள். அவர்கள் அப்படிச் சொல்வது சரியல்ல. மேலும், இந்தியாவிலுள்ள எல்லா மாநிலங்களும், குஜராத் மாநிலத்தைத் தவிர, மதுவிலக்கை ரத்து செய்துவிட்ட நிலையில் நாம் மட்டும் ஏன் மதுவிலக்கை அமல் நடத்த வேண்டும் என்று கேட்கிறார்கள்? மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்கள் முன்பு இந்தியாவிலுள்ள 12 மாநிலங்கள் மும்மொழித் திட்டத்தைக் கொண்டுவந்தபோது, "மற்ற மாநிலங்களில் மும்மொழித் திட்டம் கொண்டு வந்தாலும் சரி, நம்முடைய மாநிலத்திலே அந்தத் திட்டம் செல்லாது" என்று சொன்னார்கள். அப்படிச் சொன்னவர் இன்றைக்கு மற்ற மாநிலங்கள் மதுவிலக்கை ரத்து செய்த நிலையில் நாம் மட்டும் ஏன் வைத்து இருக்கவேண்டும் என்று சொல்வது சரியல்ல, அதை மீண்டும் பரிசீலனை செய்ய வேண்டும்.

நேற்றையதினம் பேசும்போது ஒரு அங்கத்தினர், "கள் குடிப்பதால் பெண்கள் மிகவும் சந்தோஷப்படுவார்கள்" என்று சொன்னார்கள். பெண்கள் வேதனைப்படுவார்களே தவிர சந்தோஷப்பட மாட்டார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். வள்ளுவர் அவர்கள்கூட இதைப்பற்றி வெகு அழகாக எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அதாவது,

"நாணென்னும் நல்லாள் புறங்கொடுக்கும் கள்ளென்னும்
பேணாப் பெருங்குற்றத் தார்க்கு"

என்று கூறியிருக்கிறார் வள்ளுவர். குடிப்பவர்களை அவள் திரும்பிப் பார்க்க மாட்டாள் என்ற கருத்து தெற்றென விளங்குகிறது. பணக்காரர்கள் குடிக்கிறார்கள் என்றால் அவர்களைப்பற்றி நாம் ஏன் கவலைப்பட வேண்டும்? அவர்கள் குடித்துக் கெட்டுப் போகட்டும். அவர்களுடைய உடல்நலம் கெட்டாலும் பணத்தைச் செலவு செய்து உடம்பைக் கவனித்துக்கொள்ள அவர்களுக்கு வாய்ப்பு இருக்கிறது. ஆனால் ஏழைக் குடிமகனுக்கும் அவனுடைய குடும்பத்தாருக்கும் அந்த வசதி இருக்கிறதா என்பதைப் பார்க்க வேண்டும்.

"உண்ணற்க கள்ளை உணில்உண்க சான்றோரான்
எண்ணப் படவேண்டா தார்"

என்று வள்ளுவர் கூறியிருக்கிறார். கள்ளை உண்ணக்கூடாது. சான்றோரால் நன்கு எண்ணப்படுவதை விரும்பாதவர் கள்ளை உண்ண வேண்டுமானால் உண்ணலாம் என்பது அதன் பொருள். நல்லவர்கள் நன்மதிப்பைப் பெறவிரும்பாதவர் எல்லாம் குடிக்கட்டும், குடித்துக் கெட்டுப் போகட்டும் என்று வள்ளுவர் மிக அழகாகச் சொல்லியிருக்கிறார். மதுவிலக்குக் கொள்கையை நல்ல வகையிலே அமல்படுத்தி, அதிலே தோல்வியைக் காணாமல் வெற்றியைக் காண வேண்டும். அப்படி வெற்றியைக் காண முடியாத காரணத்தினாலேதான் மதுவிலக்கை ரத்து செய்கிறேன் என்று சொல்லுகிறார்களோ என்னவோ ஒன்றும் விளங்கவில்லை.

1958-ம் ஆண்டிலே ப்ரோகிபிஷன் அமெண்ட்மெண்ட் ஆக்ட், எல்.ஏ.பில் 2, கொண்டுவந்தபோது மதிப்பிற்குரிய அண்ணா அவர்கள் இந்தச் சட்டசபையிலே, மதுவிலக்கை ரத்து செய்யக்கூடாது. மதுவிலக்குக் கொள்கையை அமலாக்க வேண்டும், என்றைக்கு 100-க்கு 60 சதவிகித மக்களுடைய வாழ்க்கைத்தரம், கல்வித்தரம், அடித்தளத்தில் இருக்கின்ற மக்களின் வாழ்க்கைப் பிரச்சினைகள் முன்னேற்றம் அடைகின்றனவோ அன்றைக்கு மதுவிலக்கை ரத்து செய்வதுபற்றி யோசிக்கலாம்? என்று கூறினார்கள். டிரிங்குக்கும் டிராங்கர்டுக்கும் வித்தியாசம் இருக்கிறது. மதுவிலக்கை ரத்து செய்துவிட்டால் ஒவ்வொருவரும் குடிகாரனாகத்தான் மாற வேண்டும். எதற்கோ, என்றைக்கோ ஒருநாளைக்கு பொழுது போக்கிற்காகக் குடிப்பவனை யாரும் இருக்க மாட்டான். அன்றும் நாம் பார்க்கின்ற நிலைமை தங்கிவிடும். புதிய குடிகாரக் கூட்டத்தை உற்பத்தி செய்கின்ற அளவிலே வந்துவிடும். குடிப்பவர்கள், குடித்துக்கொண்டிருக்கின்றவர்கள் இருக்கட்டும், ஆனால் புதிய குடிகாரர்களை இன்னும் அதிகப்படியாக ஆக்க வேண்டாம் என்பதுதான் என்னுடைய வேண்டுகோள்.

அடுத்தபடியாக, பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி செய்து கொடுப்பதற்கு அரசாங்கம் முன்வந்திருப்பதை வரவேற்கிறேன். 1,770 கிராமக் கிணறுகளை யூனிசெப் மூலம் ரூ. 55 லட்சம் செலவிலே செய்வதாகக் கூறியிருக்கிறார்கள். இதையெல்லாம் நல்ல முறையிலே நடத்த வேண்டும்.

அடுத்தபடியாக, விவசாய முன்னேற்றத்திற்குப் பல திட்டங்கள் இருக்கின்றன. உணவுப் பொருள்கள் நமக்கு அவசியம். விவசாய முன்னேற்றத் திட்டங்களை அமலுக்குக் கொண்டுவரும்போது நல்லமுறையில் அமல் நடக்க வேண்டும்.

அடுத்தபடியாக, பிச்சைக்காரர்களுக்கு மறுவாழ்வு அளிக்க வேண்டுமென்ற நல்ல திட்டம் குறிப்பிடப்பட்டிருக்கிறது. பிச்சைக்காரர்களுக்கு மறுவாழ்வு அளிக்க வேண்டுமென்று நினைத்தால்கூட, அவர்கள் நம்மோடு ஒத்துழைப்பார்களா என்பதைப்





பார்க்க வேண்டும். நேற்றுக்கூட பத்திரிக்கையில் ஒரு செய்தியைப் பார்த்தேன். பிச்சைக்காரர் ஒருவன் போலீஸ் வண்டியில் ஏற்றிச் செல்லப்பட்டபோது, அவன் போலீஸார்களிடமிருந்து தப்புவதற்காக வண்டியிலிருந்து குதித்ததனால் காயம் அடைந்து, அதன்காரணமாக உயிர் இழக்க நேரிட்டது என்ற செய்தி பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. பிச்சைக்காரர்கள் எல்லாம் பாதுகாப்பு இல்லங்களில் இருப்பதற்கு விரும்ப மாட்டார்கள். அவர்கள் வெளியில் பிச்சையெடுத்து சுற்றுவதையே விரும்புகிறார்கள். பிச்சைக்காரர்களுடைய மறுவாழ்வு இலாகாவானது நான் அமைச்சராக இருந்தபோது என்னிடத்தில் இருந்தது. அந்தக் காரணத்தினால் அவர்களுடைய போக்குகள் தெரியக்கூடிய நிலைமை ஏற்பட்டது. பிச்சைக்காரர்களைப் பிடித்து ஆவடியிலுள்ள பாதுகாப்பு இல்லத்தில் கொண்டுபோய் விட்டால் அவர்கள் எப்படியாவது போலீஸ் பாதுகாப்பிலிருந்து தப்புவதற்குத்தான் முயற்சி செய்கிறார்கள். ஆகவே, பிச்சைக்காரர்களை நன்கு கண்காணித்து அவர்களை மாற்ற வேண்டும்.

மேலும், வயதான பிச்சைக்காரர்களைவிட குழந்தைகள் இன்றையதினம் பிச்சையெடுக்கிறார்களே அதைத் தடுக்க வேண்டும். குழந்தைப் பிச்சைக்காரர்களைக் கொண்டுபோய் அவர்களுக்கு நல்ல பாதுகாப்பைக் கொடுத்து முன்னேற்றுவிக்க வேண்டும். குழந்தைகளுக்கென தனியான இல்லத்தை ஏற்படுத்த வேண்டும். அல்லது குழந்தைப் பிச்சைக்காரர்களைப் பாதுகாக்கும் பொறுப்பை சமூக சேவையில் ஈடுபட்ட தனிப்பட்டவர்களிடம் கொடுத்தாவது நல்லபடியாக அந்தச் சிறுவர்களை சீர்திருத்தம் செய்ய வேண்டும். பிச்சைக்காரர் கூட்டம் மேலும் வளராமல் இருக்க தக்க நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டும்.

அடுத்தபடியாக, கிராமப்புறங்களில் மக்களின் முன்னேற்றத்திற்காகப் பாடுபடக்கூடிய 'இளைஞர் அணி' ஏற்படுத்துவதை வரவேற்கத்தக்கது. கிராம மக்களின் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்துக்கும் ஆக்கபூர்வமான காரியங்களில் அவர்கள் ஈடுபடலாம். முக்கியமாக அவர்கள் பல வேலையில் ஈடுபடலாம். மதுவிலக்கு ரத்து ஆகஸ்டு 30-ம் தேதிக்குப் பிறகு வந்தாலும், அயல் நாடுகளில் இருப்பதைப்போல நம் நாட்டிலும் 'டெம்பரன்ஸ் சொசைட்டி'களைக் கிராமப் பகுதிகளில் ஏற்படுத்தி மக்களை நல்ல வழிகளில் கொண்டு செலுத்த உதவி செய்வதற்கு இந்த இளைஞர் அணி பாடுபடவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, அரிசன முன்னேற்றத்தைப் பொறுத்தவரையில் 16 பர்சென்டாக இருந்தது reservations இப்போது 18 பர்சென்ட் என்ற அளவில் உயர்த்தப்பட்டிருக்கிறது. நல்ல முயற்சிதான். மத்திய அரசாங்கமானாலும் சரி, மாநில அரசாங்கமானாலும் சரி, அரிசனங்களுக்கென்று விகிதாசார அடிப்படையில் அவர்களுக்கு உத்தியோகங்கள், பதவி உயர்வுகள் கொடுக்கப்படுவதில்லை. இதைப்பற்றிப் பல புகார்கள் வந்திருக்கின்றன. நாங்கள் மத்திய

[திருமதி ஜோதி வெங்கடாசலம்] [1971 ஜுன் 26

அரசாங்கத்திற்கும் மாநில அரசாங்கத்திற்கும் இதைப்பற்றி எடுத்துச் சொல்லியிருக்கிறோம். அரிசனங்கள் ஏதோ முன்னேறி விட்டார்கள் என்று சொன்னாலும்கூட இன்னும் கிராமப்புறங்களில் அவர்களுடைய நிலை மிகவும் பிற்பட்டதாகவே இருந்து வருகிறது. அரிசன மக்களுக்குச் செய்யக்கூடிய காரியங்களையெல்லாம் நல்ல முறையிலே செய்வதற்கு அரசாங்கமும், அரசாங்க ஊழியர்களும் ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நிலங்கள் பட்டா செய்துகொடுக்கப்பட்டிருக்கிறது என்று கூறுகிறார்கள். நமது மாநிலத்தில் 374 பஞ்சாயத்து யூனியன்கள் இருக்கின்றன. எந்தெந்த பஞ்சாயத்துக்களில், எந்தெந்த கிராமங்களில் எத்தனை பேருக்குப் பட்டாக்கள் வழங்கப்பட்டிருக்கின்றன என்ற பட்டியலை சபை முன் வைத்தால் மிகவும் நலமாக இருக்கும். நிலப்பட்டா, வீட்டுமனைகளுக்குப் பட்டா என்று சொல்கிறார்கள். வீட்டு மனைகள் வழங்கிய இடங்களில் கூட பட்டா செய்துகொடுக்காத காரணத்தால் அவர்களுக்குக் கடன் கிடைப்பதில்லை. இதன்காரணமாக, அரிசனங்களுக்குக் கூட்டுறவுத் துறை மூலமாகக் கடன் கிடைக்க முடியாத நிலை இருக்கிறது. சொஸைட்டிக்கு முன்பணம் கட்ட வேண்டி இருக்கிறது. அதைக் கட்ட இயலாதவர்கள் பலர் அவர்களுக்கு எல்லாம், இந்த முன் தொகையை, அவர்கள் (Share) கட்ட வேண்டிய, அவர்களை கோ-ஆப்பரேடிவோ அரசாங்கமே கடன் கொடுத்து அவர்களுக்கு வீடுகளைக் கட்டிக்கொடுக்க வாய்ப்பை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஹாஸ்பிடல்களையும், பிரைமரி ஹெல்த் சென்டர்களையும் எடுத்துக்கொண்டால், சுகாதாரத் துறையிலே அசிஸ்டெண்ட் சர்ஜன்கள் போடுவதாகவும் அவர்களுக்கு 250 ரூபாய் மாதத்திற்குக் கொடுப்பதாகவும் 100 மெடிகல் கிராஜுவேட்டுகளை எடுப்பதாகவும் கூறியிருக்கிறார்கள். அது வரவேற்கத் தக்கதுதான். ஆனால் மெடிகல் அட்மிஷனிலே சீட்டுகள் குறைக்கப்பட்டிருப்பதைக்கண்டு மிகவும் வருத்தப்படுகிறேன். காரணம், இன்றைக்கு புரொஃபஷனல் காலேஜிலும் மற்ற காலேஜ்களைவிட அதிகப்படியாக மருத்துவத்துறையிலேயும், எஞ்சினியரிங் துறையிலேயும் சேர முன்வரும் பொழுது ஏற்கனவே உயர்த்தப்பட்ட சீட்டுகளைக் குறைப்பது நல்லதாக இல்லை. தமிழ் நாடு மெடிகல் கவுன்சிலுடைய அறிக்கையைப் பத்திரிக்கையில் பார்த்தேன். அவர்கள் 3,000 பேர்களுக்கு ஒரு டாக்டர் வேண்டுமென்ற நிலை ஏற்பட்டுவிடும் என்று கூறியிருக்கிறார்கள். ஏற்பட்டு விட்டது என்று கூறவில்லை. அந்த நிலையிலே தேர்ச்சிபெறுபவருக்கும் டாக்டர்களுக்கும் மற்றபடி இன்ஜினியர்களுக்கும் அத்தனைபேருக்கும் வேலைவாய்ப்பு கொடுக்க இயலாத நிலையிருந்தாலும் இவைகளெல்லாம் புரொஃபஷனல் டிகிரியாக இருப்பதால் அவர்கள் தனிப்பட்ட டாக்டர்களாகப் போகவோ இன்ஜினியர்களாகப் போகவோ வாய்ப்பிருக்கிறது. அந்த வாய்ப்பைக்குறைக்காமல் ஏற்கனவே உள்ளதைப்போல,



1971 ஜுன் 26] [திருமதி ஜோதி வெங்கடாசலம்]

இந்தச் சீட்டுகளைக் குறைக்காமல் இருக்கும்படி, இந்த ஆண்டு மெடிகல் காலேஜ் அட்மிஷனைக் குறைக்க வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மதுவிலக்கு வந்தபொழுது மதுவிலக்கில் வரக்கூடிய, ரெவின்யூவை காம்பன்சேட் செய்ய Sales tax கொண்டுவந்தோம். தம்பிடி அளவில் ஏற்பட்ட சேல்ஸ்டாக்ஸ் இன்றைக்கு எந்த அளவில் உயர்ந்திருக்கிறது என்பது இந்த வரவு செலவுத் திட்டத்தில் இருக்கிறது. ஆனாலும் இதிலும் மற்ற மாகாணங்கள் Octroi levy போடுவதால் நம் சேல்ஸ்டாக்ஸ் சர்சார்ஜை சென்னைக்கு 10 சதவீதம் ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது. Direct Surcharge **on sales tax** இது அவ்வளவு வரவேற்கத் தக்கதாக இல்லை. இதை அரசாங்கம் யோசனை செய்து 10 சத விகிதத்திலிருந்து ஏதாகிலும் குறைக்க முன்வர வேண்டுமென்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். காரணம் என்னவென்றால், இதுபோல வியாபாரம் செய்யக்கூடியவர்களெல்லாம் இதனால் பாதிக்கப்படுவார்கள் என்பதால்.

Water and Drainage Board அமைந்திருப்பதாகத் தெரிகிறது. அந்த Water and Drainage Board இதனுடைய ரிப்போர்ட்டை இந்தச் சபைமுன் சமர்ப்பித்தால் அங்கத்தினர்கள் எல்லோருக்கும் நல்லதொரு இன்ஃபர்மேஷன் கிடைக்கும் அளவில் இருக்கும்.

இந்த அளவிலே, சமயம் கொஞ்சமாக இருப்பதால் மற்ற அங்கத்தினர்களெல்லாம் பேச வேண்டுமென்ற காரணத்தால், நான் சொன்ன இந்த யோசனைகளை அரசாங்கம் ஆலோசித்து என்ன ஆவன செய்ய வேண்டுமென்பதை முதலமைச்சரவர்கள் அவருடைய உரையில் கூற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன், வணக்கம்.

**திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவரவர்களே, நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் அளித்துள்ள இந்த நடப்பு ஆண்டின் வரவு-செலவுத் திட்டத்தின் மீது என்னுடைய சில கருத்துக்களைக் கூற வேண்டுமென்று விரும்புகிறேன்.

தமிழகத்தின் வரலாற்றில் மற்றொரு திருப்பத்தை ஏற்படுத்துகின்ற அளவிற்கு இந்த வரவு-செலவுத்திட்டம் இங்கே அளிக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு அளிக்கப்பட்டிருக்கிற இந்த வரவு-செலவுத்திட்டம் மூன்று சிறப்பான காரணங்களால் எல்லோராலும் வியப்புடன் பாராட்டப்படக் கூடிய அளவில் அமைந்திருக்கிறது. முதலாவது காரணம், இந்த வரவு செலவுத் திட்டத்தைப் படிக்கிற அல்லது ஆராய்கிற எதிர்க்கட்சிக்காரர்கள் யாராக இருந்தாலும் இதிலே ஒரு பெரிய குறையைத் தேடியெடுத்துச் சொல்ல முடியாமல் தவித்துக்கொண்டிருக்கிறார்கள். இரண்டாவதாக, இந்த வரவு செலவுத்திட்டம் தமிழ்நாட்டிலே அழுத்தப்பட்டிருக்கிற, அடிமட்டத்திலே இருக்கிற, ஏங்கிக்

[திரு. கா. வேழவேந்தன்] [1971 ஜுன் 26

கொண்டிருக்கிற ஏழை மக்களுக்காக நல்ல பல திட்டங்களோடு அமைந்திருக்கிறது. மூன்றாவது காரணம், மற்ற மாநிலங்களிலேயிருக்கும் பத்திரிக்கைகளெல்லாம் மற்ற மாகாணத்திலே இருப்பவர்களெல்லாம் இந்த வரவு செலவுத் திட்டத்தை முன்மாதிரியாக ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று பாராட்டுகின்ற சூழ்நிலையை இந்த வரவு செலவுத் திட்டம் இன்றைக்குப் பெற்றிருக்கிறது. எனவே இவ்வளவு சிறப்புகளைப் பெற்றிருக்கும் இந்த வரவு செலவுத் திட்டம் அழகான ரோஜா மலராகயிருக்கும் நேரத்தில் எதிர்க்கட்சியிலேயுள்ள சிலர் மட்டும் தங்களுடைய மூக்கை இழுத்து மூடிக்கொண்டிருப்பதால் இது ரோஜா மலரே அல்ல என்று யாரும் சொல்லிவிட முடியாது.

'ஹிந்துஸ்தான் டைம்ஸ்', 'டைம்ஸ் ஆப் இந்தியா' போன்ற பத்திரிகைகள் இந்த வரவு செலவுத்திட்டத்தைப்பற்றி தங்கள் தலையங்கங்களிலே குறிப்பிட்டுக் காட்டி பாராட்டியிருக்கும் காட்சிகளை நாம் இந்த மன்றத்திலே நினைவு கூர்ந்தேயாக வேண்டும். மொத்தத்தில் இப்படிச் சில ஆக்கபூர்வமான திட்டங்களை நிறைவேற்றுகின்ற காரணத்தால்தான் இந்த ஆட்சி தொடர்ந்து நல்ல பெயரோடு நடைபெற்றுக்கொண்டு இருக்கிறது. நேற்றிருப்பார் இன்றிருப்பார் என்று என்னவோ இடம் இல்லை காண் என்று சொல்வதைப்போல, மற்ற மாநிலங்களிலே கட்சிகளெல்லாம் கவிழ்கின்றன, அரசாங்கம் கவிழ்கின்றது. நேற்றிருந்த மேற்கு வங்க தேச அரசாங்கம் இன்றைக்கு இல்லை. ஆனால் தமிழ் நாட்டிலே அப்படிப்பட்ட சூழ்நிலையில்லாமல் சில ஆக்கப்பூர்வமான திட்டங்களை மிகத் திண்மையோடும் தெளிவோடும் நிறைவேற்றிக் கொண்டிருப்பதால் தமிழக மக்கள் இந்த ஆட்சிக்கு நிரந்தரமான ஆதரவை இன்றைக்குத் தந்துகொண்டிருக்கிறார்கள். ஆட்சிப் பொறுப்பை ஏற்ற காலத்திலிருந்து, நாட்டிலேயிருக்கும் பசி நோயைத் தீர்க்க வேண்டுமென்று அதிலே வெற்றி கண்டிருக்கிறோம். இப்பொழுது இல்லாமை நோயைப் போக்க வேண்டுமென்று ஆக்கப்பூர்வமான திட்டங்களை வெளியிட்டிருக்கிறோம். கல்லாமை நோயைப்போக்க இந்த வரவு-செலவுத் திட்டத்திலே, சென்ற ஆட்சிக்குச் சொந்தக்காரர்கள் ஒரு ஆண்டுக்கு 44 கோடி ரூபாய் ஒதுக்கினார்கள் என்றால், இந்த ஆண்டு மட்டும் கணிசமான, நாமெல்லாம் நினைத்துப் பாராத அளவிற்கு 82 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். ஏறத்தாழ 38 கோடி ரூபாய், நாட்டிலேயிருக்கின்ற மக்கள் கல்வியறிவுடைய ஆற்றலை எய்துவதற்கு இந்த ஆண்டு அதிகமாக ஒதுக்கப்பட்டிருக்கிறது.

இதற்குமேலே நாட்டிலேயுள்ள உழைப்பாளிகள் சிலர் தங்களுடைய மனநோயாக, கள் வர வேண்டுமென்று சொல்லிக் கொண்டிருந்தார்கள். அவர்களுடைய நோயும் இந்த வரவு செலவுத்திட்டத்தில் போக்கப்பட்டிருக்கிறது. எனக்கு முன்பு பேசிய முஸ்லீம் லீக் தலைவரவர்கள் மிகவும் உருக்கத்தோடு சில கருத்துக்களைச் சொன்னார்கள். ஆனால் வள்ளுவரும், மற்ற



1971 ஜுன் 26] [திரு. கா. வேழவேந்தன்]

வர்களும், நபிகள் நாயகமும் அவற்றையெல்லாம் வற்புறுத்தினார்கள் என்பதை மறப்பதற்கில்லை. ஆனால் நடைமுறை என்னவாகயிருக்கிறது என்பதை ஆராய வேண்டும். பேசுகின்ற நம்மில் பலர் அதை விரும்பவில்லை என்பது வெளிப்படை. ஆனாலும் இன்றைக்கு என்ன நிலைமை இருக்கிறது? நான் ஆந்திர எல்லையிலுள்ள கும்மிடிப்பூண்டித் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறேன். என் தொகுதியின் எல்லையோரத்தில் சில பரிதாபக் காட்சிகளை நான் பார்த்ததுண்டு. ஒரு வரப்பைத் தாண்டினால் ஆந்திரம். அந்த வரப்பைத் தாண்டினால் அங்கே 'தித்திப்புக் கள்ளுக்கடை' என்று தெலுங்கிலே அல்ல, தமிழிலேயே பெயர்ப்பலகை போட்டிருக்கிறார்கள். இங்கேயுள்ள உழைப்பாளிகள், மீனவர்கள் அதற்காக ஏங்கிக் கொண்டிருப்பார்கள். ஏமாந்த நேரத்தில் வரப்பைத்தாண்டிச் சென்று குடித்துவிடுவார்கள். குடித்த பின்பு அவர்களுக்கு நிலை தெரியாது. மயங்கிய சூழ்நிலையில் வரப்பைக் கடந்து இந்தப் பக்கத்திற்கு வருவார்கள். இவ்வளவுக்கும் ஒரு வரப்புதான் இருக்கும். இந்தப் பக்கத்திலுள்ள போலீசார் கண்காணிப்புடனிருந்து குடித்துவிட்டு வந்து அவர்களைப் பிடித்துக்கொண்டு அவர்கள்மேல் வழக்குப் போடுவார்கள். இப்படித் திண்டாடிக்கொண்டிருந்த ஏழை எளிய மக்கள் இன்றைக்கு இந்த அரசாங்கத்தை எங்கள் அயர்தீர்க் கொஞ்சம் இனிப்புக் கள்ளைக் குடிக்க அனுமதிக்கப்போகும் இந்த அரசைப் பாராட்டுகிறோம் என்று சொல்வதை மறுப்பதற்கில்லை.

இது மட்டுமல்ல, பல்வேறு காரணங்களைச் சொல்லலாம். தலை சிறந்த ஒரு ஏடு, பம்பாயிலிருந்து வரக்கூடிய ஏடு, டைம்ஸ் ஆப் இந்தியா மிகத் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறது. இன்றைக்கு குஜராத் மாநிலம் மட்டும்தான் இந்தக் கொள்கையிலே இருக்கிறது என்று சொல்லி அந்த குஜராத் மாநிலத்திற்கே அறிவுரை வழங்குகிறது.

"The suspension of prohibition was a clear sign that economic and social realities were compelling it to take a fresh look at the dry law. That process has now been carried to its logical conclusion. Tamil Nadu's experience with prohibition should serve as a warning to Gujarat which alone continues to insist on enforcing a law which every other State has found it wiser to relax or to scrap altogether."

என்று சொல்லி அந்த மாநிலங்களிலே வளர்ந்து வரும் பொருளாதார அடிப்படையிலே புத்திசாலித்தனத்தோடு இந்தக் கொள்கையை நீக்கிவிட வேண்டுமென்று நினைக்கும் சமயத்தில் குஜராத் மட்டும் ஏன் பிடிவாதமாகப் பிடித்துக் கொண்டிருக்க வேண்டுமென்று நம்முடைய உதாரணத்தை 'டைம்ஸ் ஆப் இந்தியா' என்ற பத்திரிக்கை, மராட்டிய மாநிலத்திலேயிருந்து வரும் பத்திரிகை குஜராத் மாநிலத்திற்கு அறிவுரை வழங்குகின்ற அந்த அளவிற்கு இருக்கிறது. நாம் இன்றைக்குச் செய்திருக்கும் காரியம் பெரிய அபத்தமான காரியம் அல்ல

[திரு. கா. வேழவேந்தன்] [1971 ஜூன் 26

என்பதை மற்ற ஏடுகள் சொல்லி இந்த வாதங்களை எடுத்துச் சொல்ல முன் வந்திருக்கும் அளவிற்கு இன்றைக்கு நாம் வெளியிட்டிருக்கும் இந்த வரவு செலவுத்திட்டம் புரட்சிகரமான திட்டமாக அமைந்திருக்கிறது.

50-க்கு மேற்பட்ட பேருந்துகளை தேசிய மயமாக்க வேண்டுமென்பது மட்டுமல்ல, பத்துக்கு மேற்பட்ட வழித்தடங்களில் ஓடும் பஸ்களுக்கான பர்மிட்டுகளை எடுத்துவிடுவதாகவும் இருக்கிறது. இதன்மூலம் பெரு முதலாளிகள் வளரமாட்டார்கள். இரண்டாவதாக, இந்த அரசாங்கம் அப்படி எடுத்திருக்கும் பஸ்களை ஓட்டுவதால் நிச்சயமாக நல்ல லாபக் கணக்கிலே ஓட்ட இருக்கிறது.

தமிழ்நாட்டிலே தான் இன்றைக்கு ஓடுகின்ற பஸ்களில் 50 சதவிகிதம் பஸ்கள் நகர்ப் புறத்திலே ஓடிக் கொண்டிருக்கின்றன. நகர்ப் புற பஸ்கள் நஷ்டத்தில் ஓடிக் கொண்டிருக்கின்றன. வெளியூர் பஸ்களில் லாபம் வந்து கொண்டிருக்கிறது. இனிமேல் நிச்சயமாக லாபக் கணக்கைப் போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் காட்டுவார்கள். டி.வி.எஸ். கம்பெனிக்கு 281 பஸ்கள் சொந்தமாக இருக்கின்றன. அவற்றில் 50 பஸ்கள்தான் நகர்ப்புறங்களில் ஓடிக் கொண்டிருக்கின்றன. அவர்கள் இந்தத் துறையினை லாபகரமாக நடத்தக் காரணம் அவர்கள் நீண்டதூர பஸ்களை அதிகமாக வைத்துக் கொண்டிருப்பதுதான். அந்தத் தனியார் பஸ்களை எல்லாம் எடுத்துக்கொண்டதன்மூலம் தமிழக அரசு ஒரு முக்கியமான புத்திசாலித்தனமான காரியத்தை நிறைவேற்றி இருக்கிறது என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இவ்வாறு பல நல்ல காரியங்களைச் செய்துகொண்டுவரும் தமிழக அரசு எல்லாக் கிராமங்களுக்கும் இணைப்புச் சாலைகளைப் போடுவதன்மூலம் இன்னும் நல்ல பெயரைத் தேடிக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, நான் என்னுடைய தொகுதியின் சார்பிலே சிலவற்றை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். கும்மிடிப்பூண்டியில் அன்னப்ப நாயக்கன் குப்பம் அணைக்கட்டுத் திட்டத்தை 12½ லட்சம் ரூபாயிலே நிறைவேற்றியிருக்கிறார்கள். புதிய மின் நிலையங்களை நிறுவி இருக்கிறார்கள். என்னுடைய தொகுதியில்தான் நடமாடும் மருத்துவ நிலையம் இயங்குகிறது. மருத்துவ மனை உருவாக்கப்பட்டு எல்லாவிதமான எக்ஸ்பர்ட்களும் வந்து நோயினைக் களைந்து கொண்டிருக்கிறார்கள். இந்தப் பணிகளைச் செய்து கொடுத்தமைக்காக தொகுதியின் சார்பாக அரசுக்கு நன்றி கூறுகிறேன்.

என்னுடைய தொகுதியில் பல்வேறு கிராமங்களுக்கு இணைப்புச் சாலை இல்லை. மாதர்பாக்கம், பாதிரிவேடு போன்ற கிராமங்களில் நெசவாளப் பெருமக்கள் இருக்கிறார்கள். அவர்கள் அமெரிக்க துணியை ஏற்றுமதி செய்து கொண்டிருந்தார்கள். அவர்களுக்காகச் சாயத் தொழிற்சாலை ஒன்றை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆரணி ஆற்றின் குறுக்கே



1971 ஜூன் 26] [திரு. கா. வேழவேந்தன்]

புதுப்பாளையத்தின் பக்கத்திலும் பாலவாக்கம் பக்கத்திலும் தரைப் பாலம் ஏற்படுத்தித் தரவேண்டுமென்ற கோரிக்கையைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அவற்றை நிறைவேற்ற வேண்டும்.

இந்த வரவு செலவுத் திட்டம் பொதுவாக நல்ல பல திட்டங்களைக் கொண்டிருக்கிறது. தஞ்சை மாவட்டத்திலுள்ள ஏழை எளிய விவசாயக் கூலிகள் நிலச்சுவான்தார்களிடமிருந்து பெற்ற நிலங்களைச் சொந்தமாக்கிக் கொள்வதுபற்றிய அறிவிப்பை மாண்புமிகு கலைஞர் அவர்கள் வெளியிட்டிருக்கிறார்கள். அதே போன்று மற்ற மாவட்டங்களிலும் தனியார் நிலங்களில் வீடு கட்டிக் கொண்டிருக்கும், பொருளாதாரத்தில் தாழ்ந்திருக்கும் மக்களுக்கு அந்த நிலங்களை விலைக்கு வாங்கி அவர்களுக்கே பட்டா செய்து கொடுக்கும் அறிவிப்பையும் முதலமைச்சர் செய்ய வேண்டும்.

இவ்வளவு புரட்சிகரமான திட்டங்களை நிறைவேற்றியிருக்கும் கலைஞர் அவர்களுக்கு ஒன்றை எடுத்துக் கூற விரும்புகிறேன். கலைஞர் அவர்கள் நல்ல எழுத்தாளர். இந்த அமைச்சரவையே எழுத்தாளர் அமைச்சரவை. இந்த அவையிலே உள்ள பல்வேறு மாண்புமிகு உறுப்பினர்களும் நல்ல எழுத்தாளர்கள். கேரளா போன்ற பிற மாநிலங்களில் சிந்தனையூரும் நல்ல புத்தக அபிவிருத்தியை ஏற்படுத்தியிருக்கிறார்கள். என்ன காரணத்தாலோ இங்கு புத்தகத் தொழில் முழுக்க முழுக்க வியாபாரமாக ஆகியிருக்கிறது. அது தக்க தொழிலாக மாற சிறந்த சிந்தனையாளர்களின் புதிய கருத்துக்களை அரசாங்கமே பெற்றுச் சிறந்த நூல்களை வெளியிட முன்வரவேண்டும். அதற்கு ஒரு அமைப்பை கூட்டுறவிலோ மற்ற வேறு வகையிலோ உருவாக்க வேண்டும். அதற்கு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் எழுத்தாளர் என்ற முறையில் பாடுபடவேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த வரவு-செலவுத் திட்டத்தை அனைவருடன் சேர்ந்து நானும் வரவேற்கிறேன் என்று கூறி அமைகிறேன். வணக்கம்.

* திரு. எம். சுரேந்திரன் : தலைவர் அவர்களே, பொருளும், புலமையும் வெளிப்படுகின்ற வகையில் நல்ல உதாரணங்களைத் தந்து இனிமையான தமிழிலே அமைந்த இந்தச் சபையிலே வைக்கப்பட்டிருக்கும் 1971-72-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையை, அதன் உரையைப் படித்தபோது எனக்குச் சில நினைவுகள் தோன்றின.

திராவிட முன்னேற்றக் கழகம் திராவிட நாடு லட்சியத்தைக் கைவிட்டது என்று அறிவித்தபோது மதுரையிலே பிரஜா சோஷலிஸ்டுக் கட்சியின் மாநிலக்குழுக் கூட்டம் நடந்து கொண்டிருந்தது. அந்த நேரத்திலே அந்த அறிவிப்பை வரவேற்று சோஷலிசத்தை இனித் திராவிட முன்னேற்றக் கழகம் தன்னுடைய லட்சியமாகக் கொள்ள வேண்டுமென்ற ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. சோஷலிசம் என்று சொல்லுகிறபோது அது ஒரு மாவட்டத்திலோ அல்லது மாநிலத்திலோ மட்டும் உருவாக்கி

[திரு. எம். சுரேந்திரன்] [1971 ஜூன் 26

நிலைநிறுத்தி நடத்த முடியாது என்ற காரணத்தால் 1967-ம் ஆண்டு தேர்தல் நடந்து அதிலே வெற்றி கண்ட பிறகு, மறைந்த மாமேதை அண்ணா அவர்கள் மேட்டூருக்கு வந்து பொதுக் கூட்டத்தில் பேசுகிறபோது நான் அந்தக் கூட்டத்தில் கூறினேன்—ஏழை எளியவர்களுக்கு எளிய முறையில் உணவுப் பண்டங்கள் கிடைக்க வேண்டுமென்ற முறையில் நல்ல திட்டங்கள் கொண்டுவந்த அண்ணா அவர்கள் இந்த நல்ல திட்டங்கள் தேசம் முழுவதும் பரவ திராவிட முன்னேற்றக் கழகத்தை மாநிலக் கட்சி என்ற நிலையில் இருந்து மாற்றி அகில இந்தியக் கட்சியாக ஆக்கவேண்டுமென்ற விருப்பத்தைக் கூறினேன்.

அதற்குப் பிறகு இரண்டொரு வருடங்களுக்கு முன்னால் இந்த மன்றத்திலே நிதிநிலை அறிக்கையின்மீது பேசுகின்றபோது திராவிட முன்னேற்றக் கழகம் சோஷலிச லட்சியத்தை நோக்கி முன்னேற வேண்டும் என்று குறிப்பிட்டேன். அப்போது மாண்புமிகு அமைச்சர் முத்துச்சாமி அவர்கள் குறுக்கிட்டு 'இப்போது திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு சோஷலிசக் கருத்து இல்லையா ? என்று கேட்டார்கள். நான் அப்போது கூறினேன்—கருத்து இருக்கிறதா, இல்லையா என்பது விவாதம் அல்ல, சோஷலிசப் பாதையை நோக்கி முன்னேற வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது என்று கூறினேன்.

இப்போது இந்த நிதிநிலை அறிக்கையைப் பார்க்கிறபோது நிறைய இடங்களில் சோஷலிசம் என்ற வார்த்தை அதிலே உபயோகப்படுத்தப்பட்டிருக்கிறது. அப்படி உபயோகித்திருப்பதோடு மட்டுமல்லாமல் குறிப்பிட்டிருக்கும் சில வார்த்தைகள் மிகவும் பொருள் படைத்தவையாக அமைந்திருக்கின்றன என்று சொல்ல விரும்புகிறேன். "சோஷலிசம், பொருள் பொதிந்த ஒன்றாக அமைய வேண்டுமென்றால், சமூக அமைப்பில் தாழ்வுற்றோரின் நிலை உயர்த்தும் திட்டங்களை, அது தன்னகத்தே கொண்டதாகத் திகழ வேண்டும். பொட்டுப் பூச்சிகளாய், புன்மைத் தேரைகளாய் இருக்கின்ற மக்கள், புதியதோர் உலகு காண, அவர்தம் வாழ்வில் புத்தொளி பரவிட, பொருளாதார முன்னேற்றமும், சாதிபேதமற்ற சமத்துவ நிலையும், மூட நம்பிக்கைகளைக் கருவியாகக்கொண்டு அவர்களை அடிமைப்படுத்தும் அதிர்கச் சக்திகளிடமிருந்து விடுதலையும் கிடைத்தாக வேண்டும். அந்தச் சமூக அமைப்பில் எல்லா வகையிலும் தாழ்வுற்றுக் கிடப்போரின் வேதனை தீர்க்கும் திட்டங்களை விரைவிலே நிறைவேற்றியாக வேண்டும்" என்று ஓரிடத்திலே குறிப்பிட்டிருக்கிறார்கள். சோஷலிசம் என்பதற்கு இது ஒரு நல்ல விளக்கமாகும்.

சோஷலிசம் வேண்டுமென்று சொல்லுகிறபோது நம்முடைய நாட்டினுடைய முறைகளை நாம் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும். நம்முடைய நாட்டு பொருளாதாரக் கட்டுக்கோப்பும், சமுதாய அமைப்பும் குடி அமைப்பும் விவசாயத்தை மையமாகக் கொண்டு அமைந்திருக்கிறது. நம்முடைய நாட்டின் விவசாய நில



1971 ஜூன் 26] [திரு. எம். சுரேந்திரன்]

உரிமைகளை மாற்றியமைப்பதன்மூலந்தான் மேற்படி குறிக்கோளை அடைய முடியுமேதவிர, வேறு முறைகளில் துவங்குவோமானால் தும்பை விட்டு வாலைப் பிடிக்கும் காரியமாக ஆகிவிடும்.

நில அமைப்பில் மாற்றம் செய்வதற்கான விரிவான சட்டத்தைக் கொண்டுவரப் போவதாக மாண்புமிகு சபாநாயகர் அவர்கள் ரெவின்யூ அமைச்சராக இருந்தபோது இந்த மன்றத்திலே கூறினார்கள். ஆனால் அதற்குப் பிறகு ஒரு சிறு திருத்தம்மட்டும் உச்சவரம்புச் சட்டத்திற்குக் கொண்டுவந்தார்கள். அதுகூட மேலே பார்க்கிறபோது தீவிரமாகத் தோன்றினாலும் உள்ளடக்கத்திலே மிகவும் பின்னடைந்ததாக இருந்தது என்பதை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இதனை அன்றே சுட்டிக்காட்டி அந்தத் திருத்தச் சட்டம் நிறைவேறுகிறபோது என்னுடைய கட்சியைச் சேர்ந்தவர்களும், கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்தவர்களும் இந்தச் சபையிலிருந்து வெளிநடப்புச் செய்தோம் என்பதை இந்த நேரத்தில் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

சோஷலிசத்தைப்பற்றி அதிகமாகப் பேசுகின்ற இந்த நேரத்தில் நிலச்சுவான்தார்களின் உரிமைகளை மாற்றும் முயற்சிக்கு எதுவும் இந்த உரையிலே காணப்படவில்லை என்பது பெரும் ஏமாற்றமாக இருக்கிறது. நிலத்தின் உரிமையில் மாற்றம் செய்யாத வரையில் சமுதாய ஏற்றத் தாழ்வும், அதன் காரணமாகப் போட்டி பொறாமை இவைகளும் போக்கப்படுவதற்கு வழி கிடையாது. இந்தக் காரியத்தைச் செய்வதற்கு இந்த அரசு ஏன் தயக்கம் காட்ட வேண்டுமென்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை.

இந்த அரசு எல்லாவிதமான வகையிலும் பலமான அரசாக இருக்கிறது. சட்ட மன்றத்தில் எடுத்துக்கொண்டாலும்சரி வெளியே எடுத்துக்கொண்டாலும்சரி எல்லா விதமான மக்களின் ஆதரவைப் பெற்ற நிலையான அரசாக இருக்கிறது. இந்த அரசு சோசலிசத்தை முறையாகக் கொண்டுவர விரும்பினால், இது ஆரம்பத்தில் எடுக்க வேண்டிய நடவடிக்கைகளைத் திட்டவட்டமாக உறுதியாக எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நில உரிமைகளை மாற்றுவதன்மூலம் மக்கள் உழைப்பதற்கு ஊக்கம் ஏற்படும். அதோடு மட்டுமல்ல, நில உரிமைகளை மாற்றுவதன்மூலம் நிலப் பிரபுத்துவம் மறைந்து விடும். வேலை வாய்ப்புகளும் பெருகும். தொழில்கள் நாட்டில் வளர்வதற்கான சூழ்நிலை உருவாகும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தாற்போல் பார்க்கிறபோது, நகரத்தில் இருக்கும் சொத்துக்களுக்கு உச்ச வரம்பு கட்டவேண்டுமென்று பரவலாகப் பேசப்படுகிறது. மத்திய அரசிலிருந்தும் அதற்கான அறிவிப்புகள் வந்து கொண்டிருக்கின்றன. இந்த உரையில் அந்த மாதிரி

யான காரியங்கள் இல்லாமல் இருப்பது பெரும் ஏமாற்றமாக இருக்கிறது. அதற்கு பதிலாக ஏதோ நகரத்தில் இருக்கும் வீட்டுமனைகளுக்கு சிறிது அதிகமாக வரி போட்டு இருக்கிறார்கள். 10 மனைகளுக்கு 1 சதவீதம் வரி போட்டு இருக்கிறார்கள். சென்னை நகரத்தை எடுத்துக் கொண்டால் ஒரு மனையின் விலை ரூ. 25,000, ரூ. 30,000 என்று சொல்கிறார்கள். 10 மனை என்று சொல்வது ஒரு பெரிய செல்வாக்கு உள்ளவர்கள்தான் வைத்துக்கொள்ளமுடியும். அவர்களுக்கு இன்னும் ஏன் அதிகமாக வரி போடக்கூடாது என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

நகர சொத்துக்களுக்கு வரம்பு கட்டுவதற்கு வழிகாட்டியாக இந்த வரி விதிப்பு இருக்கும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. எப்படிப் பார்த்தாலும் இது நகரச் சொத்துக்களை நிர்ணயம் செய்வதற்கு எப்படி ஆதாரமாக இருக்கும் என்று புரிந்து கொள்ள முடியவில்லை. இவைகளெல்லாம் பார்க்கிறபோது, சோசலிசத்தைப் பேசிவிட்டு, சோசலிசத்தை அமுல் நடத்துவதில் கஷ்டம் இருக்கிறது என்று தெரிகிறது. மேல்நாடுகளில் அரசியல்வாதிகள் உருவாக்கித் தருகிற சோசலிச சிறையை நம் நாட்டில் இருக்கும் விஞ்ஞானிகளும் செயலாக்க வேண்டும். அவர்கள் தான் இதை நடைமுறைக்கு கொண்டுவரமுடியும்.

இங்கே இருக்கும் விஞ்ஞானிகளுக்கும், நிர்வாகிகளுக்கும் நல்ல சம்பளம் இல்லை, அதனால் வெளிநாடுகளுக்கு சென்று விடுகிறார்கள் என்று சொல்லப்படுகிறது. அங்கே அதிகச் சம்பளம் கொடுக்கிறார்கள் என்று கூறப்படுகிறது. நம்முடைய பொருளாதாரம் 100-க்கு 70 சதவிகிதம் விவசாயப் பொருளாதாரம். இந்த விவசாயப்பொருளாதாரத்தைக் கொண்டு நாட்டில் இன்னும் அதிகமான சம்பளத்தைக் கொடுக்க முடியாது. இதனால் நிர்வாகிகளையும் விஞ்ஞானிகளையும் விலைக்கு வாங்க முடிகிறது. நாட்டின் செல்வம் ஒரு சிலரிடம் குவிந்து கிடக்கிறது, இந்த நிலைமை மாற வேண்டும். இவர்கள் ஒருபக்கம் சாயாமலிருக்க இந்தக் காரியங்களைச் செய்ய வேண்டும். எல்லோருக்கும் நீதி வழங்கும் நிலைக்கு அவர்கள் வரவேண்டும். ஆகவே, மேல் நாடுகளில் அதிக சம்பளம் கொடுக்கிறார்கள் என்றால் அதிகமாக செல்வந்தர்கள் அங்கே இருக்கிறார்கள். அவர்கள் இவர்களைத் தங்களின் பக்கம் இழுக்க இவர்களுக்கு அதிகமான சம்பளம் கொடுக்கிறார்கள். நம்முடைய நாட்டில் நிர்வாகம் சீராக நடைபெறுவதற்காக, அதை மாற்றி அமைக்க, நிர்வாக சீர்திருத்தக் குழு போடப்பட்டிருக்கிறது. நாம் என்ன எதிர்பார்க்கிறோம் என்று முதலமைச்சர் அவர்கள் கூறி இருக்கிறார்கள். நம்முடைய வேலைகளை துரிதப்படுத்த அது உதவியாக இருக்கும் என்று கூறி இருக்கிறார்கள். நான் கேட்டுக் கொள்கிறேன், நம்முடைய வேலையை துரிதப்படுத்தும் நோக்கம் மட்டும் இருக்கக்கூடாது. புதிய முறைகளை நடத்திவைப்பதற்கும் உதவியாக இருக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





இப்போது எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு வேழவேந்தன் அவர்கள் பஸ் அரசுடைமை ஆக்குவது பற்றி கூறினார்கள். பஸ் உடைமையை எடுத்துக்கொள்வதன் மூலம் நமக்கு லாபம் அதிகமாக வரும், இனிமேல் போக்குவரத்து அமைச்சர் நஷ்டம் காட்ட மாட்டார்கள் என்றும் கூறினார்கள். நான் அப்படி எண்ணவில்லை. நம்முடைய அனுபவத்தைப் பார்க்கிறபோது ஆங்காங்கு எடுத்து இருக்கும் ஒவ்வொரு பஸ் உடைமையிலும் நஷ்டம் தான் வருகிறது. இன்னும் சொல்லப்போனால், ஆங்காங்கு தேசீயமயும் ஆக்கப்பட்ட தடங்களில் தனியார் பேருந்துகளும் இருப்பதால் சில சமயங்களில் நல்ல முறையில் பணியாற்ற முடிவதில்லை. ஆங்காங்கு புகார்கள் வருகின்றன. நம்முடைய பஸ் பிரிவில் இருக்கும் தொழிலாளர்கள் உறுப்புக்களைக் கழற்றி விற்று விடுகிறார்கள். ½ பட்டன் தேய்ந்து போய் இருக்கும் டயர்களை எடுத்து விற்று விடுகிறார்கள் என்று சொல்கிறார்கள். அந்தத் தொழிலாளர்கள் தவறு செய்கிறார்களா, அவர்கள் என்ன திருடர்களா? அவர்கள் பேரில் குற்றம் சொல்வதில் பலன் இல்லை. அவர்களை அப்படிச் செய்யச் சொல்லி தனிப்பட்ட துறையில் உள்ளோர் தூண்டுகிறார்கள். உனக்கு அதிக சம்பளம் வாங்கித் தருகிறேன், பணம் வாங்கித் தருகிறேன் என்றெல்லாம் சொல்கிறார்கள். ஆகவே, இந்த பஸ் தேசீயமயமாக்கப்படும் போது. எல்லாத் தடங்களையும் அரசுடைமையாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இப்படிச் செய்தால் தான் இந்த திட்டம் வெற்றி பெற முடியும் என்று இந்த நேரத்தில் சொல்லிக் கொள்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையில் பல நல்ல காரியங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. ஒரு க்ஷேம நல அரசு என்னென்ன காரியங்களைச் செய்யுமோ, அவற்றைச் செய்து இருக்கிறது, இந்த அரசு. மற்ற மானியங்களின் நிதிநிலை அறிக்கையை ஒப்பிட்டுப் பார்த்தால் இந்த அரசின் க்ஷேம நலக் காரியங்கள் அதிகமாக இருக்கிறது என்று சொல்லலாம். அதற்காக நான் பாராட்டுகிறேன். அதே நேரத்தில் இந்த விற்பனை வரி, சர்ச்சார்ஜ் என்று போட்டு இருக்கிறார்கள். அது தேவை இல்லை. நம்முடைய வருவாய்க் கணக்கைப் பார்க்கிறபோது, இது தேவையில்லாதது என்று தோன்றுகிறது. இதைப் போடத் தேவையில்லை என்று கருதுகிறேன். (மணியடிக்கப்பட்டது)

இதை க்ஷேம நல அரசாங்கத்தின் பட்ஜெட்டாகக் கொள்ளலாம். ஒரு சோசலிச பட்ஜெட்டாக கொள்ள முடியாது. வேண்டுமானால் சோசலிசத்தை அடைய வழித்தடத்தைக் காட்டும் தட்டுப் பலகையாக, ஒரு பலகையாக இருக்கிறது என்று கூறலாம். ஆனால் அதில் குறிக்கப்பட்டிருக்கும் தூரம் அதிகம் என்று கூறி முடிக்கிறேன்.

* திரு. ஏ. ஆர். பெருமாள்: தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட நிதிநிலை அறிக்கையை மகிழ்ச்சி பொங்க வரவேற்று என்னுடைய உரையை

[திரு. ஏ. ஆர். பெருமாள்] [1971 ஜூன் 26

தொடங்குகிறேன். உண்மையிலேயே நாம் மிகப்பெரிய தேர்தலுக்குப் பின்னாலே மக்கள் மீண்டும் கலைஞர் அரசுக்கு ஆதரவு தந்து பெருவாரியான வகையிலே மகத்தான வெற்றியைத் தந்து இருக்கிறார்கள். அந்தப் பெருவாரியான வாக்களித்த மக்கள் மீண்டும் கலைஞரின் ஆட்சி வருமானால், எத்தகைய திட்டங்கள் எல்லாம் நிறைவேற்றப்படும் என்று எண்ணினார்களோ அந்தந்த திட்டங்கள் எல்லாம் நிறைவேற்றப்படும் என்று நம்பிக்கை அளிக்கும் வகையில் இந்த நிதிநிலை அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கிறது. மக்களுடைய எண்ணங்களைப் பிரதிபலிக்கும் முறையில் இருப்பதால், நான் ஆரம்பத்திலேயே சொன்னபடி இதை மகிழ்ச்சி பொங்க வரவேற்கிறேன், என்றேன்.

நிதிநிலை அறிக்கையில் முதலாவதாக விவசாயத்தைப் பற்றித் தொடங்கியிருக்கிறார்கள். இந்த நாட்டில், பொதுவாக தமிழகத்தில் கிராம மக்கள். பெரும்பாலான மக்கள் உழவர் பெருமக்கள். அந்த கிராம மக்கள்தான் பெருவாரியாக நமக்கு வாக்களித்திருக்கிறார்கள். ஆகவே தான் இந்த உரை விவசாயத் துறை பற்றி முதலில் தொடங்குகிறது. தமிழகத்தில் மட்டுமின்றி, இந்தியா நாடு ரபூராவிலுமே, விடுதலைக்குப் பிறகு, ஆடுவோமே, பள்ளுப் பாடுவோமே என்று, திருநாளாம், விடுதலைத் திருநாள் கொண்டாடிய நாள் முதலாக 20 ஆண்டுகாலம் வரையில் இன்றுதான் நம்முடைய ஆட்சி வந்தபிறகுதான், உணவு உற்பத்தியில் வெற்றி கண்டதோடு அல்லாமல், உணவில் தன்னிறைவு கண்டதோடு அல்லாமல், பிற மாநிலங்களுக்கும் கொடுத்து உதவக் கூடிய அளவில் உணவுப் பெருக்கம் அடைந்தோம். அந்த நிலை எய்தும்போது, நமக்கு ஏற்பட்ட தொல்லைகள் எவ்வளவோ, பருவ மழை தவறியது. இருந்தும், இன்றைக்கு தன்னிறைவு அடைந்ததோடு அல்லாமல், பிறருக்கும் உதவும் நிலையில் இருக்கிறோம் என்பது பெரு மகிழ்ச்சிக்கு உரிய ஒன்று.

மின்சார வசதியை எடுத்துக் கொண்டால், கிராமப்புறங்களில் செல்லும் போது, மின் வசதியற்ற கிராமங்கள் பல இருந்தன. 1972-க்குள் தமிழகத்தில் எல்லாக் கிராமங்களுக்கும் மின் வசதி என்று திட்டமிட்டு, வேலைகள் நடையச் செய்து 14 மாவட்டங்களில், 8-க்கு இணைப்புக் கொடுத்திருக்கிறது. 51,000 கிராமங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பது மகிழ்ச்சியான விஷயம்.

அடுத்தபடியாக, நம்முடைய அரசு தமிழ் மொழி மீது பற்றுக் கொண்டது என்பதை செயல்படுத்தும் வகையில், தமிழ் மொழியைப் பாடமொழியாகக் கொண்ட மாணவர்களுக்கு புகுமுக வகுப்பில் ரூ. 50 என்றும் பட்டப் படிப்புக்கு ரூ. 180 என்றும் வழங்க முன் வந்திருக்கிறது என்பது தமிழ் மொழி மீது நம் அரசு கொண்டிருக்கும் பற்றை தனியாக எடுத்துக் காட்டுகிறது.



1971 ஜூன் 26] [திரு. ஏ. ஆர். பெருமாள்]

கிராமங்களில் நாம் போகும்போதெல்லாம் சந்திக்கும் மக்களெல்லாம் கோரும் ஒரே பிரச்சினை குடிநீர்ப் பிரச்சினைதான். அப்படிக் குடி நீர் வழங்க என்று ஒரு வாரியத்தை அமைத்து, வறட்சி நிவாரணத்தையும் சேர்த்து கிட்டத்தட்ட 900 லட்சம் ரூபாய் செலவழிக்க இருக்கிறது என்பது சாதாரண மக்கள் விஷயத்தில் இந்த அரசு எவ்வளவு அக்கறை கொண்டிருக்கிறது என்பதைக் காட்டுகிறது.

நம்முடைய முதல் அமைச்சர் அடிக்கடி சொல்லுவார்கள், தான் பிற்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவன் என்பதால் அவர்களுடைய முன்னேற்றத்திற்காக உயிரையும் பணயம் வைத்துச் செயல்படுவேன் என்று. தான் பிற்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவன் என்பதைச் சொல்லும்போது, மிக, மிக மிக எவ்வளவு 'மிக' வேண்டுமானாலும் போட்டுக் கொள்ளலாம், அவ்வளவு பிற்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவன் நான் என்று சொல்லிக் கொள்வார்கள். ஆகவே, அந்த சமுதாயத்தில் பிறந்த காரணத்தால் அவர்கள் விஷயத்தில் மிகுந்த அக்கறை காட்டி 25% என்று இருந்ததை, 31% என்று செய்திருப்பது, தமிழ் மக்கள் உள்ளங்களிலெல்லாம் உவகையை ஏற்படுத்தியிருக்கிறது. உயிரையும் பணயம் வைப்பேன் என்று சொல்லிவிட்டு, அவர்கள் விஷயத்தில் அக்கறை காட்டாமல் இல்லாமல், மிகுந்த அக்கறை காட்டி செயல் படும் வகையில் இந்த நிதிநிலை அறிக்கையில் நடவடிக்கைகள் கோடிட்டுக் காட்டப்பட்டிருக்கின்றன. அவற்றை நான் மனப்பூர்வமாக வரவேற்கிறேன்.

காவிரி நீர் தகராறு பற்றிச் சொல்லும்போது, ஏற்கனவே சர்வ கட்சிகளும் கூடி, மத்திய சர்க்காருக்கும் மாநில சர்க்காருக்கும் நடந்த பேச்சுவார்த்தைகள் பற்றியும், மைசூர் மாநிலத்தோடு நடந்த பேச்சு வார்த்தை இவற்றை பற்றியெல்லாம் ஆலோசிக்கப்பட்டு, விரிவாக விவாதிக்கப்பட்டு, வருகின்ற 2[illegible]-ம் தேதி, நாளைக்கு, சர்வ கட்சிகளும் கண்டன நாள் நடத்தப் போகிறார்கள். இதில் நாம் கவனிக்க வேண்டியது எல்லாம், காவிரி நீரைத் தேக்கி ஏமாவதி அணை கட்டுவதால் பெரிய பாதகம் ஏற்படும் தமிழ்நாட்டிற்கு என்பதை யாரும் மறுக்க முடியாது. இப்படிப்பட்ட அணைக்கட்டு மத்திய சர்க்காரால் அனுமதிக்கப்பட்டால், நிச்சயமாக முதல்வர் பிறந்த தஞ்சை மாவட்டம். நான் பிறந்த இராமநாதபுரம் மாவட்டம் போல் காட்சி அளிக்கும் நிலை ஏற்படும். ஆகவே, உறுப்பினர்கள் அத்தனை பேரும் இதை ஒரு பொதுப் பிரச்சினையாகக் கருதி, அணை கட்டுவதைத் தடை செய்யக் கோரவேண்டும். முறைகள் சட்டப்படியாக இருக்க வேண்டும். ஆனால் அதே நேரத்தில் தமிழகம் மிகப் பெரிய பஞ்சத்தையும் வறட்சியையும் எதிர் நோக்கியிருப்பதை, அப்படிப்பட்ட அபாயம் இருப்பதை ஒத்துக் கொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்த விரும்புகிறேன்.

[திரு. ஏ. ஆர். பெருமாள்] [1971 ஜூன் 26

மாண்புமிகு முதல்வர் அவர்கள் பிச்சைக்காரர் மறுவாழ்வுக்காக திட்டமிட்டு, அதைத் தன்னுடைய பிறந்த நாளோடு இணைத்துக் கொண்டார்கள். தமிழகத்தில், பஸ் ஸ்டாண்டில், ரெயில்வே ஸ்டேஷன்களில். இன்னும் எல்லாவிடங்களிலும் பிச்சைக்காரர்கள் தொல்லையைப் பார்க்கிறோம். அப்படிப்பட்ட காட்சிகளை பார்த்துப் பார்த்து மனம் வெதும்பி, தான் எழுதிய 'பராசக்தி' நாடகத்தில், குணசேகரன் கப்பலைவிட்டு இறங்கி வந்தவுடனே, அவனை ஒருவன் 'ஐயா, 'பிச்சை' என்று கேட்டான். அவன், தமிழ் நாட்டிலே தொடக்கமே பிச்சை எடுப்பதுதானு என்று எழுதியவர், அதைக் கதையாக. வசனமாக, நாடகமாக அன்று எழுதியவர், அதோடு விட்டுவிடாமல், அந்தப் பிச்சைக்காரர்களை 5. 6 ஆண்டு காலத்தில் இல்லாமல் செய்துவிடவேண்டும் என்று கடற்கரையில் கொண்டாடப்பட்ட தன்னுடைய பிறந்த நாள் கூட்டத்தில் ஒரு சூளுரைத்து, 5, 6. ஆண்டுகளில் பிச்சைக்காரர்களே இல்லாமல் செய்துவிடுவோம் என்று அக்கறை கொண்டிருப்பது, ஒரு மகத்தான முயற்சி. அதற்கு நாம் எல்லோரும் ஒத்துழைப்புதரவேண்டும் என்று மனப்பூர்வமாக நாம் ஏற்றுக் கொண்டு, உரிய பணிகளைச் செய்வோம் என்று கூறிக் கொள்ளுகிறேன்.

பஸ்களை நாட்டுடமை ஆக்குவது என்பது பெரிய புறட்சிகரமான திட்டம். 10 பஸ்களுக்கு மேல் வைத்திருக்கக் கூடாது என்று அரசு செய்திருப்பதை எல்லோரும் வரவேற்பார்கள் என்பதில் ஐயப்பாடு கிடையாது. அதில் பல சிக்கல்கள் எற்படும் என்று கருதப்படுகிறது. இப்படி 10 பஸ்களுக்கு மேல் வைத்திருப்பவர்கள், இப்படி உச்சவரம்பு கொண்டு வருவதற்கு முன்பாகவே, தனித் தனியாக வேண்டியவர்கள் பெயர்களில் எழுதிவைத்து விட்டார்கள். நில உடைமைக்கு உச்சவரம்பு வருவதற்கு முன்னால் பெரு நிலச் சுவாந்தார்கள் தங்கள் தங்கள் மகன், மகள், இன்னும் சொந்தக்காரர்கள் பெயரிலெல்லாம் எழுதிவைத்தது போல, பஸ் முதலாளிகளும் எழுதிவைத்து விட்டார்கள். இருந்தாலும், 10 பஸ்ஸுக்கு மேல் வைத்திருக்கக் கூடாது என்று நம்முடைய அரசு உச்சவரம்பு கொண்டு வந்திருப்பது, நம் அரசு ஒரு சோஷலிச அரசு, சமதர்மக் கொள்கைகளைக் கடைப்பிடிக்கிறது என்பதை எடுத்துக் காட்டுகிறது என்பதால் அதை நான் இதய பூர்வமாக வரவேற்கிறேன்.

இராமநாதபுரம் மாவட்டத்தில். கிழக்கு இராமநாதபுரம் மேற்கு இராமநாதபுரம் என்று இரண்டு பகுதியாக நிர்வாகம் நடைபெறுகிறது. அருப்புக்கோட்டை தாலுகா, காரியாபட்டி சட்டமன்றத் தொகுதி, திருச்சுழி துணை வட்டம் மிக மிக பின்தங்கிய பகுதி. அது மேற்கு இராமநாதபுரத்தோடு இணைக்கப்பட்டிருப்பதால், பல சலுகைகள் கிடைக்காமல் இருக்கிறது. மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கூட தொகுதிக்கு வந்தபோது, தெளிவாக எடுத்துக் காட்டினார்கள். கிழக்கு இராமநாத



1971 ஜூன் 26] [திரு. ஏ. ஆர். பெருமாள்]

புரத்தோடு இருக்கவேண்டும் என்பதை அவர்களும் ஒத்துக் கொண்டார்கள். ஆகவே, முதல் அமைச்சரவர்கள் சீக்கிரமாகவே அதைச் செயல் படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். உலக சரித்திரத்திலேயே எங்கும் இல்லாத பழக்கம் நம் சென்னை மாகாணத்தில் மட்டும் இருந்து வந்திருக்கிறது. நதியை ஆக்கிரமித்து, எங்கள் மாவட்டத்தில் அந்த இடத்தில் பங்களாக்கள் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களை அப்புறப்படுத்தினால் 50 ஆயிரம் ஏக்கர் நீர்ப் பாசனத்திற்கு வரும் என்பதை இங்கே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சர் இதில் தீவிர முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, மதுவிலக்கு பற்றிய என்னுடைய கட்சியின் கருத்தை இங்கே தெரிவித்துக் கொள்கிறேன். சோமசுந்தர பாரதி அவர்கள் மதுவிலக்கு பற்றி கூறிய கருத்துகளைக் கேட்டபிறகு பல்வேறு கட்சியைச் சார்ந்தவர்கள், பத்திரிக்கைகாரர்கள் என்னிடத்தில் வந்து உங்களுடைய கட்சியின் கருத்து அதுதானா என்று கேட்கிறார்கள். இங்கே நான் தெளிவாகக் கூறிக் கொள்ள விரும்புகிறேன். அது அவருடைய சொந்தக் கருத்தே தவிர எங்கள் கட்சியின் கருத்து அல்ல. எந்த நோக்கத்தோடு இந்த மதுவிலக்கு கொண்டு வரப்பட்டதோ அது அமுல்படுகிற நேரத்தில் யாரும் பொருளாதார அபிவிருத்தி கண்டதாகத் தெரியவில்லை. இந்த 30, 32 ஆண்டு காலத்தில் அமல் செய்யப்படாமல் இருந்த காலத்தில் எவது 8 அணா 10 அணா கொடுத்துவிட்டு நல்ல கள்ளைப் பெற்று நிம்மதியாக இருப்பார்கள். ஆனால் இப்போது ரூபாய் 5 சம்பாதித்தாலும் அதில் ரூபாய் 3 இதற்குச் செலவாவதுடன் உடல் நலத்தையும் கெடுக்கும் பொருள்தான் கிடைக்கிறது. கள் குடிப்பது தவறு என்று கருதுவதால்தான் மதுவிலக்கு அமல்நடத்த மத்திய சர்க்காரிடம் பணம் கேட்டோம். அதால் நடத்துவதில் பாதிச் செலவையாவது ஒப்புக் கொள்ள மத்திய சர்க்கார் முன் வந்திருந்தால் நம்முடைய முதல்வர் அவர்கள் மதுவிலக்கை அமுல் நடத்த முடிந்திருக்கும். எனவே, பார்வர்டு பிளாக் கட்சியைப் பொறுத்த வரையில், மதுவிலக்கை ஒத்தி வைப்பதை மனப்பூர்வமாக வரவேற்கிறது என்று கூறி சட்ட மன்றத் தலைவருக்கு என் நன்றியைக் கூறி, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

* திரு. ஏ. ஆர். சுப்பையா : 1971-72-ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையைப் பொறுத்த வரையில் ஒரு சில வார்த்தைகளைக் கூற விரும்புகிறேன். இந்த அறிக்கை இனிமையும், பொருள் பொலிவும் உள்ளதாய் இருக்கிறது. அந்த நிலையில் ஆங்கில மொழி பெயர்ப்பு இல்லை. இதிலே பல முற்போக்குத் திட்டங்கள் இருப்பது கண்டு நான் மகிழ்ச்சி அடைகிறேன். மேற்கு மலைத் தொடரிலே விழுகிற நீரை ஒருங்கிணைப்பு திட்டம் மூலம் பயன் படுத்த வேண்டுமென்று அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதை நான் வரவேற்கிறேன். அதை இந்த ஆண்டிலேயே ஆரம்பிக்க வேண்டு

[திரு. ஏ. ஆர். சுப்பையா] [1971 ஜூன் 26

மென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். கேரளாவில் West Flowing river அச்சன் கோவில் ஆற்றுத் தண்ணீர் விரயம் ஆகாமல் இந்த அரசு இந்த ஆண்டு ஆரம்பத்திலேயே ஒரு வழி வகுத்து ஏற்பாடுகள் செய்தால் பயனுள்ளதாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

காவிரி நீர் சம்பந்தமாக ஒரு தனி நாள் பேசுவதற்காக ஒதுக்கப்பட்டு இருக்கிறது. அதற்கு மத்தியில் மத்திய அரசுவிடம் பேச 2 அமைச்சர்கள் போகிறார்கள். அவர்களுக்கு நான் ஒரு விஷயம் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இன்று விரைவாக அணைக்கட்டுத் திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிறதென்றால், ஓவர் டிராப்ட் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டதிலிருந்து ஒப்புதல் இல்லாத திட்டங்களை நிறைவேற்ற அந்தத் தொகையை அவர்கள் செலவழித்து வருகிறார்கள் என்ற விஷயத்தை எடுத்துச் சொல்லி, அதைக் கட்டுப்படுத்தினால் அணைக்கட்டுத் திட்டம் கொஞ்சமாவது நிற்க வழி உண்டு. தேர்தல் கண்ணோட்டத்துடன் தான் இந்தத் திட்டம் செயல்பட்டு வருகிறது என்றால், சூசகமான அபிப்பிராயம் அப்படி இருக்கும்போது, அது வரையில் இந்த அணைகளைக் கட்டுவதை நிறுத்துவதற்கு வாய்ப்பு இல்லாமல் இருக்கும் வழி தான் ஓவர் டிராப்ட் நிறுத்துவது.

தஞ்சை மாவட்டத்திற்கு ஒரு காம்பிரஹென்சிவ் ஸ்கீம் போட்டிருக்கிறார்கள். Modernising Irrigation Channels in Thanjavur District க்கு உலக பாங்கி ஒப்புதல் கிடைத்திருக்கிறது. ஆனால் அது நிறைவேற காலதாமதம் ஏற்படக் காரணம் என்ன என்று தெரியவில்லை. சேதுசமுத்திரத் திட்டம், நெய்வேலி இரண்டாவது சுரங்கப்பணித் திட்டம், தூத்துக்குடி எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை போன்ற திட்டங்கள் விரைவிலேயே நடைபெற மத்திய அரசு ஒப்புதலை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

குடிநீர் வழங்கும் திட்டத்திற்கான செலவுகளை இந்த அறிக்கையில் பார்த்தேன். அவை சுமார் 1¾ கோடி ரூபாய் அளவில் இருக்கிறது.

வேலை வாய்ப்பு வசதிகளைப் பெருக்குவதில் ஒரு கட்டமாக தமிழ்நாடு காவலர் படையில் முதல் நிலை காவலர் என்கிற புதிய பதவி ஒன்றினை ஏற்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. இது தவிர பாதுகாப்பு பட்டம் பெற்ற 2,000 பேருக்கு வேலைவாய்ப்புக்களுக்கான திட்டங்கள், அவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூபாய் 175 என்று வழங்கப்படும் திட்டம் ஆகிய இத்தகைய திட்டங்களை நான் வரவேற்கிறேன். இதைவிட தொழில் வளர்ச்சிக்காக பல திட்டங்கள் போடப்பட்டிருக்கின்றன. இந்த அரசைப் பற்றி நாம் போற்றிச் சொல்ல வேண்டியது இருக்கிறது ... வேண்டும். அதை விட்டு விட்டு குறைகளை மட்டும் சொல்லிக் கொண்டிருக்கக் கூடிய எதிர்க்கட்சியினர் இருப்பதை நினைக்கும் பொழுது எனக்கு வருத்தமாக இருக்கிறது.



1971 ஜூன் 26] [திரு. ஏ. ஆர். சுப்பையா]

கிட்டத்தட்ட 96½ கோடி ரூபாய்க்கு திட்டங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. 62 கோடி ரூபாய்க்கு கூட்டுத் துறையில் ஒரு உரத் தொழிற்சாலை ஏற்படுத்தவிருக்கிறது. 20 கோடி ரூபாய்க்கு கன நீர்த் தொழிற்சாலை நிறுவுவதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. 4 கோடி ரூபாய்க்கு தொழிற்சாலை நிறுவப்படவிருக்கிறது. நைலான் இழையைத் தயாரிக்க 8½ கோடி ரூபாய் செலவில் ஒரு தொழிற்சாலை நிறுவப்படவிருக்கிறது. 2 கோடி ரூபாய் கார்பன் பிளாக் தயாரிப்பதற்காக ஒரு திட்டம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அது போக, சேலம் உருக்காலைத் திட்டம் உருவாகிக்கொண்டிருக்கிறது. 80 கோடி ரூபாயிலே பெட்ரோ கெமிகல் தொழிற்சாலையை ஏற்படுத்தும் திட்டமும் இருக்கிறது. இவ்வளவு தொழிற்சாலைகளும் நம் நாட்டிற்கு வந்து விட்டால், நம்மைப் பார்த்து மற்ற மாநிலங்கள் பின்பற்றக்கூடிய நிலைமை ஏற்படும்.

இதுபோக, முக்கியமாக பிச்சைக்காரர் மறுவாழ்வுத் திட்டத்தை நான் வரவேற்கிறேன். எங்கே பார்த்தாலும் அதற்கு நல்ல முக்கியத்துவம் இருந்து கொண்டிருக்கிறது. ஆனால், அதிலே ஒரு குறைபாடு இருக்கிறது. இன்றைக்கு அரசாங்க அதிகாரிகள் பிச்சைக்காரர்கள் மறுவாழ்விற்காக கார்டுகளை கொடுக்கிறார்கள். 10 ரூபாய், 5 ரூபாய் என்று வசூல் செய்கிறார்கள். அதற்கு உடனடியாக ரசீது கொடுப்பது கிடையாது. அதிலே கொஞ்சம் நிதி தவறுதல் ஏற்பட்டுக் கொண்டிருப்பது பற்றி இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். எந்த ரூபாயை கொடுத்தாலும் அதற்கு ரசீது கொடுக்க வேண்டும் என்ற அளவிலே ஒரு விதிமுறையை இந்த அரசாங்கம் வைக்கவேண்டும்.

குழந்தைகளுக்கு புரதச் சத்தை அளிப்பதற்காக பணம் ஒதுக்கியிருக்கிறார்கள். வரவேற்கிறேன். ஒரு நேஷனல் அளவிலே National water plan என்ற திட்டம் வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அடுத்து, இன்றைக்கு Public Holidays 21 நாட்கள் கொடுக்கப்பட்டிருக்கிறது. "பெஸ்டிவல் ஹாலிடேஸ்" என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. அது போக இரண்டாவது சனிக்கிழமை, ஞாயிற்றுக் கிழமைகள் எல்லாம் விடுமுறை என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதோடு, ஒவ்வொரு மாதமும் அமாவாசை போன்ற நாட்களுக்கு 1½ மணி நேரம் கொடுக்கப்படுகிறது. இவைகளைப் போன்றவைகளுக்கு நேரம் எல்லாம் ஒதுக்கப்படுகிற நிலைமை இருந்தால், அதற்கு என்று நான்கு நாட்கள் போகிறது. மற்றும் ரம்ஜான் போன்ற பண்டிகைகளுக்கு கூட 1½ மணி நேரம் ஒதுக்கப்படுகிறது. இவை எல்லாம் குறைக்கப்பட வேண்டும். இருக்கக்கூடிய நேரத்தை சரியாக நாம் உபயோகிக்க வேண்டும். அமாவாசை போன்ற நாட்களுக்கு எல்லாம் நேரத்தை ஒதுக்குவது நல்லதல்ல என்று சொல்லிக் கொள்கிறேன்.

பல்கலைக் சம்பந்தப்பட்ட நிதி நிலை அறிக்கையை வரவேற்று என்னுடைய பேச்சை இத்துடன் முடித்துக் கொள்கிறேன்.

* திரு. கா. காளிமுத்து : மாண்புமிக்க பேரவைத் துணைத் தலைவரவர்களே, 1971-72-ம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையின் மீது என்னுடைய சில கருத்தைச் சொல்ல விரும்புகிறேன்.

சோஷலிசத்தை உதட்டிலே மட்டுமில்லாமல் உள்ளத்திலேயும் தேக்கி வைத்திருக்கின்றவர்களும் புருவத்தை உயர்த்தும் வகையிலே பல நல்ல திட்டங்களைக் கொண்டு எல்லாத் தரப்பு மக்களையும் சோஷலிசத்தை நோக்கி அழைத்துச் செல்லும் அளவிலே இந்த நிதி நிலை அறிக்கை அமைந்திருக்கிறது. கால்கள் கட்டப்பட்டிருக்கும் நிலையிலே ஓட்டப் பந்தயத்திலே ஈடுபட்டு வெற்றி பெற முயலும் ஒரு இளைஞரைப் போல். இம் மாநிலத்தின் குறைந்த அதிகாரத்தை வைத்துக் கொண்டு சோஷலிசத்தை நோக்கி ஓடும் பந்தயக் குதிரையைப் போல் இந்த அரசு ஓடுகிறது என்பதை இந்த நிதி நிலை அறிக்கையின் மூலம் அனைவரும் உணருவார்கள். விவசாயிகள், தொழிலாளர்கள், ஹரிஜன சமூகத்தினர், பின் தங்கிய மக்கள், முடிதிருத்துவோர்கள், சலவைத் தொழிலாளர்கள் இப்படிப்பட்ட புறக்கணிக்கப்பட்ட படிகளிலே உள்ள சமூகத்தினரும், பிச்சைக்காரர்களும்கூட நினைந்து ஆனந்தக் கண்ணீர் விடுகின்ற அளவுக்கு இந்த நிதி நிலை அறிக்கை சிறப்பாக உருவாக்கப்பட்டிருக்கிறது. அதுவும், தமிழகத்தினுடைய பொருளாதார அடித்தளமாக இருக்கிற விவசாயத் துறையிலே அதிகமான கவனம் இந்த நிதிநிலை அறிக்கையிலே செலுத்தப்பட்டிருக்கிறது. இது பெருமைப்படக்கூடிய ஒரு அம்சமாகும்.

மற்றும், 9 நீர்ப்பாசன திட்டங்கள் பசுமைப் புரட்சியின் படைக்கலன்களாக படைக்கப்பட்டிருக்கிறது. அந்த திட்டத்திலே ஒன்றான பிளவுக்கல் திட்டம் என்பது. அது என்னுடைய வட்டாரத்திலே அமைந்திருக்கும் திட்டம் என்ற அளவிலே அதை நான் வரவேற்கிறேன், பாராட்டுகிறேன். திருவில்லிப்புத்தூர் வட்டத்தையும், சாத்தூர் வட்டத்தையும் செழிக்க வைக்கும் வகையிலே, வாகை பேயன் ஆறு திட்டம் அல்லது அடிகால்வாய்த் திட்டம் என்ற ஒன்றை நிறைவேற்றும் வகையிலே அடிப்படை வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன. இந்த அரசு போட்ட அந்தத் திட்டம் நிறைவேறுமானால், பாலைவனமாக இருக்கும் அந்தப் பகுதிகள் மருத நிலமாக மாற்றப்படும். அந்த அளவிலே இந்தத் திட்டத்தைத் துரிதமாக நிறைவேற்றும் வகையிலே அரசு காரியங்களைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

வானத்தை அண்ணாந்து பார்த்து எரிச்சலோடு இருக்கின்ற அந்த விவசாயிகளின் விழிகள் இந்த அரசாங்கத்தை தன் னம்பிக்கை ஒளியோடு எதிர் நோக்கிக் கொண்டிருக்கின்றன என்பதை தெரிவிக்க கடமைப்பட்டிருக்கிறேன். அதே நேரத்தில் அந்த வரட்சிப் பகுதியிலே பஞ்ச நிவாரண வேலைகள் நடந்து, ஆலங்குளம் சிமின்ட் தொழிற்சாலை போன்றவை இருப்பதால் தான் அங்கிருக்கும் மக்கள் வாழக் கூடிய நிலைமை இருக்கிறது.



இல்லை என்றால், அந்த வட்டாரத்தை விட்டு அம்மக்கள் குடி பெயர்ந்து போகும் நிலைமை இருக்கிறது என்பதை இந்த அரசு உணரும்.

சிவகாசியிலே தீப்பெட்டித் தொழிற்சாலைகள் இருக்கின்றன. நம் நாட்டின் தீப்பெட்டியின் தேவையிலே பாதியை உற்பத்தி செய்கின்ற இடமாக சிவகாசி இருக்கிறது. ஆனால் அந்த தொழிற்சாலைக்குத் தேவையான மூலப் பொருட்களான ஊதா நிறக் காகிதம், மெழுகு போன்றவை எல்லாம் வெளி மாநிலங்களிலே இருந்து பெறக் கூடிய நிலைமை இருக்கிறது. அது எல்லாம் இங்கே கிடைக்கக் கூடிய நிலைமையைச் செய்ய வேண்டும். அதே நேரத்திலே, தீப்பெட்டித் தொழிற்சாலைகளிலே வேலை செய்கின்ற தொழிலாளர்களுக்கு என்று வரையறுக்கப்பட்ட வேலை நிர்ணயங்களும், அவர்களுககென்று தொழிற் சங்கங்களும் இல்லாத காரணத்தினால் அங்கிருக்கும் முதலாளிகள் தங்களுடைய விருப்பம் போல் வேலை வாங்குகிறார்கள். ஐந்து வருஷம், 10 வருஷம் என்று தீப்பெட்டித் தொழிற்சாலைகளிலே உழைக்கக்கூடிய தொழிலாளர்களைக்கூட எரிந்த தீக் குச்சிகளை விட்டெறிவதுபோல் அவர்களை வேலையிலிருந்து நீக்குகிறார்கள். அத்துடன், அங்கிருக்கும் பட்டாசு தொழிலிலே ஈடுபட்டிருக்கும் சாதாரண தொழிலாளர்கள் திடீரென்று ஏற்படும் தீ விபத்துக்களின் காரணமாக சாவோடு ஒவ்வொரு நாளும் விளையாடிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு 8 மணி நேரம் வேலை என்று நிர்ணயித்திருந்தாலும் அங்கே இருக்கின்ற முதலாளிகள் 11 அல்லது 12 மணிநேரம் வேலை வாங்குகிறார்கள். கேரளப் பகுதியிலே இருந்து முதலாளிக்குச் சொந்தமான ஆட்களை பேருந்துகளிலே கொண்டு வந்து, இரவு நெடுநேரம் வரை வேலை வாங்குகிறார்கள். அதை எல்லாம் மாற்றி அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அதே நேரத்திலே, மாணவ சமுதாயத்தின் சார்பிலே, இந்த அரசு தமிழைப் பயிற்சி மொழியாகக் கொண்ட மாணவர்களுக்கு உதவித் தொகை வழங்கும் திட்டத்தை மேற்கொண்டிருப்பதற்கு எனது பாராட்டுதலை தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே மாண்புமிக்க உறுப்பினர் ஒருவர் பேசும்பொழுது குறிப்பிட்டார், தமிழ் பயிற்சி மொழியாகக் கொண்டிருக்கும் மாணவர்களுக்கு மட்டுமா உதவித் தொகை, ஆங்கிலம் படிக்கும் மாணவர்களுக்கு உதவித் தொகை இல்லையா என்று கேட்டார். அவர் அப்படிச் சொல்லும் பொழுது ஏழை மாணவர்கள் மீது அக்கறை கொண்டிருந்தாரா, அல்லது ஆங்கிலம் மீது அக்கறை கொண்டிருந்தாரா, அல்லது தமிழ் பயிற்சி மொழியாக வளரக் கூடாது என்பதிலே அக்கறை கொண்டிருந்தாரா என்பது தெளிவாக தெரியவில்லை. ஆங்கிலம் என்பது செவிலித் தாய் தான்; சிம்மாசனத்திலே வீற்றிருக்கப் போகிறவள் தமிழ் அன்னை தான். ஆங்கிலத்தை ஒரு நடை வண்டியாகத் தான் கருதுகிறதே தவிர, தமிழ் பயிற்சி மொழியாக வளர வேண்டும் என்பதிலே இந்த அரசு

அக்கறை எடுத்திருக்கிறது என்பதை இந்த திட்டம் எடுத்துக் காட்டுகிறது. ஆனால் இந்த மாநிலத்தின் இந்த திட்டத்தைக் கூட லஞ்சம் கொடுப்பதாக உடம்பு எல்லாம் மூளை படைத்தவர்கள் சிலர் சொல்லிக் கொண்டிருந்தாலும், தமிழர்கள் நம் அன்னைத் தமிழுக்குக் கொடுக்கப்பட்ட பெருமையாக இந்தத் திட்டத்தை உணர்ந்து கொண்டிருக்கிறார்கள்.

சோஷலிச இலட்சியத்தை நோக்கி வேகமாக நடை போடுகின்ற இந்த அரசு மாநில சுய ஆட்சி கிடைக்கப் பெற்றால், அந்த இலட்சியத்தை விரைவிலேயே எட்டிப்பிடிக்க முடியும் என்று முதல்வர் அவர்கள் கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள். அந்த மாநில சுய ஆட்சிக்குத் திட்டம் உருவாகியிருக்கிறது. ராஜமன்னார் அறிக்கை அதற்கான தத்துவ அடித் தளத்தை அமைத்திருக்கிறது. அதற்கான போராட்ட களம் எப்பொழுது துவங்கும் என்பதுதான் தமிழ் நாட்டு இளைஞர்களின் எண்ணமாக இருக்கிறது என்று சொல்லி எனது பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

*திரு. செ. பெருமாள்: தலைவரவர்களே, 1971-72-ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையானது பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை செயல்படுத்தும் நிலையில் உள்ளது. சமதர்ம சமுதாயத்தை உருவாக்கிட வேண்டுமென்று இந்த அரசு முற்படும் நிலைமையிலேயும், முற்போக்கு கொள்கைகளைச் செயல்படுத்தும் நிலைமையிலேயும், மாண்புமிக்க முதல்வர் அவர்கள் கொடுத்த இந்த நிதி நிலை அறிக்கையை நான் பாராட்டுகிறேன். இந்த நாட்டின் முதுகெலும்பு என்று சொல்லப்படுகின்ற ஏழை உழவர்களுக்கும், விவசாயப் பெருங்குடி மக்களுக்கும் கடன் வசதிகளை உயர்த்தியிருக்கிறது இந்த அரசு. நீர்ப் பாசனத் திட்டங்களுக்கும், மின் வசதிகளுக்கும் அதிக அளவிலே பணம் ஒதுக்குகின்ற நிலைமையை உருவாக்கியிருக்கிறது. இந்த அறிக்கை நிலம் இல்லாதவர்களுக்கு நிலம் வழங்கவிருக்கிறது; வீடு இல்லாதவர்களுக்கு வீட்டு வசதி பெருக்கி கொடுக்கிறது. ஹரிஜனப் பெருங்குடி மக்களுக்கும் கூடிய அளவிலே வீட்டு வசதிகளைப் பெருக்கிக் கொடுத்திருக்கிறது. கல்வி வளர்ச்சிக்கும், மருந்துவ வளர்ச்சிக்கும், ஹரிஜன நலத் திட்டத்திற்கும், பின் தங்கியோர் நலனுக்கும் அதிகமான நிதி ஒதுக்கீடு தரப்பட்டிருக்கிறது. கிராமப் புறங்களிலே வேலை வாய்ப்பை அதிகரித்திருக்கிறது. வேலையற்ற ஆசிரியர்களுக்கு வேலை வாய்ப்பினைக் கொடுத்திருக்கிறது. அடுத்து காவல் துறையிலே பணியாற்றுவதற்காகப் பள்ளி இறுதி வகுப்பு முடித்தவர்களை நேரடியாகத் தேர்ந்தெடுப்பதற்காக, அதிலே வாய்ப்புத் தந்திருக்கிறது. மருத்துவ உதவியாளர்களை அங்கங்கே அமைப்பதற்குரிய வாய்ப்பை இந்த அரசு தந்திருக்கின்றது.

அடுத்து மருத்துவப் பயிற்சி பெற்ற அதிகாரிகளுக்கு வேலை வாய்ப்பு அற்றவர்களுக்கு உதவித் தொகையாக அளிக்க முன் வந்துள்ளது. இதுபோன்ற பல சீரிய முயற்சிகளில் இந்த அரசு மிக்க அக்கறை கொண்டிருக்கிறது.



பேருந்துகளையும் நிலத்தையும் உச்ச வரம்புக்கு உட்படுத்தக் கூடிய திட்டத்தை வகுத்துள்ளது.

எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் "பிச்சைக்காரர் மறு வாழ்வுத் திட்டம்" ஒன்றை வகுத்துள்ளது. இன்று நல்ல முறையிலே பிச்சைக்காரர்களுக்கு மறு வாழ்வு அளிக்கப்படும் என்ற நம்பிக்கை இருக்கிறது. இதுபோன்ற பல நல்ல அம்சங்களை, திட்டங்களை இந்த அரசு சொல் அளவில் இல்லாமல் செயல் அளவிலே செய்து வருகின்றது என்று பெருமைப்படுகிறேன்.

அடுத்து, என்னுடைய தொகுதியைப் பற்றிச் சில வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன். காட்டுமன்னார்குடியில் பஞ்சாயத்து யூனியன் மருத்துவமனை இருக்கிறது. அதற்கு நல்ல கட்டடம் கிடையாது. படுக்கை வசதிகள் கிடையாது. பிரசவ விடுதியும் கிடையாது. 30.000 மக்கள் வாழ்கின்ற அந்தத் தொகுதியில் மருத்துவ விடுதியை அரசு ஏற்று நடத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து எங்கள் தொகுதி. அருகிலே வடவார் ஆறு இருக்கிறது. அதற்குப் பக்கத்திலே வேளம்பூண்டி இருக்கிறது. அதிலே ஒரு பாலம் கட்டித்தந்தால் விவசாயிகளுக்கு உதவியாக இருக்கும். ஆகவே, அதைக்கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்தாற்போல் எங்கள் தொகுதிக்கு மேல்புரம் ஜெயங்கொண்டம் தொகுதி இருக்கிறது. அங்கே ஒரு ஏரி இருக்கிறது. அதிலிருந்து முப்பது கிராமங்களுக்குத் தண்ணீர் பாய்கிறது. அதற்குப் பக்கத்திலே செங்கல் ஓடை என்று ஒரு ஓடை இருக்கிறது. அது வீராணம் ஏரியோடு சேருகிறது. அதைத் தூர் எடுத்தால் தண்ணீர் எல்லாம் வீராணம் ஏரியில் போய்ச் சேரும். அந்த வீராணம் ஏரியைத் தூர் எடுத்து ஆழப்படுத்தினால், மழை காலத்திலே நிறைய நீர் தேங்கி விவசாயிகளுக்கு உதவியாக இருக்கும். அது குடிநீர்த் திட்டத்திற்கும் உதவியாக இருக்கும். ஆகவே அதைச் செய்யவேண்டுமென்று இந்த அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து சிதம்பரத்திலிருந்து காட்டுமன்னார்குடி செல்லும் அரசுப் போக்குவரத்துப் பாதையானது நல்ல முறையில் இல்லாமல் குறுகி இருப்பதால் அதை அகலப்படுத்தினால் அடிக்கடி ஆபத்துகள் நடப்பதற்கு ஒரு வாய்ப்பு இல்லாமலிருக்குமென்று சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்து வைப்பூர் கண்டியாமேடு பாசனக் கால்வாய் முன்பு இருந்த காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலேயே ஆரம்பிக்கப்பட்டு அப்படியே நிற்கிறது. ரூ. 30,000 செலவிடப்பட்டு அந்தத் திட்டம் அப்படியே நிற்கிறது. அதை முடிக்கவேண்டுமாய் இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. கோ. செயபாலே] [1971 ஜூன் 26

வருஷா வருஷம் பாதி மகசூல் கிடைக்கக் கூடிய காலத்திலேயே பாதிக்கப்பட்ட மக்கள் இப்போது விளைச்சலே இல்லாத போது மேலும் பாதிக்கப் படுகிறார்கள். இருந்தாலும், அரசாங்கம் தயவு செய்து அந்த ஏழை எளிய மக்களுக்காக புஞ்சை நிலமாக இருந்ததை நஞ்சையாக ஆக்கியது, தண்ணீர்ப் பற்றாக்குறையிலும், இப்படிக் கஷ்டப்படுகிற நேரத்தில், அவர்களுக்கு இந்த வரியை ரூ. 6.20 இருந்து ரூ. 15 ஆக உயர்த்தி இருப்பதை இந்த அரசாங்கம் கவனிக்க வேண்டுமென்றும், அந்த ஏழைகளுக்கு ஆதரவு கொடுக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொள்ளுகிறேன். மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கும், ஏனைய உயர்தர அதிகாரிகளுக்கும் மகஜர் அனுப்பப்பட்டிருக்கிறது. அதைப் பரிசீலித்து ஆவன செய்ய வேண்டுமென்றும், வெள்ளிங்கடன் சிசர்வாயரை உயர்த்தி, அகலப்படுத்தவும் வழி வகை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

மேலும், திட்டக்குடியிலிருந்து திருச்சிக்கு அருகாமையில் வாகூர் தொகுதி இருக்கிறது. அத்தொகுதிக்கும் என் தொகுதிக்கும் இடையே ஓடுகிற ஆற்றில் அடிக்கடி தண்ணீர் வருவதால் அரியலூரிலிருக்கும் சந்தைக்குச் சோளம் போன்ற பொருள்களை எடுத்துச் செல்லும் மக்கள் மிகக் கஷ்டப்படுகிறார்கள். ஆதலால், அந்த ஆற்றுக்கு ஒரு பாலம் கட்டித் தர வேண்டுமென்று இந்த அரசை நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

மங்களூரிலிருந்து திட்டக்குடி, தொழுதூர் செல்லும் சாலைகள் எல்லாம் யூனியனில் உள்ளது. அந்த யூனியனுக்குச் சர்க்கார் அலுவலர்கள் போக போகிய பஸ் வசதி இல்லாத காரணத்தால் அவதிப்படுகிறார்கள். எனவே, திட்டக்குடியிலிருந்து, தொழுதூர், மங்களூர் வழியாக ஒரு பஸ் போகுல் பணி புரிகிற யூனியன் அலுவலர்களுக்கும் அதிகாரிகளுக்கும் சௌகரியமாக இருக்குமென்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அந்த யூனியன் இப்பொழுதுதான் மூன்று ஆண்டுகளாகத் திட்டக்குடியிலிருந்து மங்களூருக்கு வந்து செயல்பட்டு வருகிறது. மூன்றாண்டுகளாக, கட்டிடத்தை பொதுமக்கள் இலவசமாகக் கொடுத்தார். அந்த அலுவலகம் நடைபெறுகிறது. அந்த அலுவலகம் நடைபெறுகிறதைப் பார்த்தால் அந்தப் பகுதி தமிழ் நாட்டிலேயே ஒரு பிற்போக்கான பகுதி என்று நீங்கள் கருதுவீர்கள். அங்கே தண்ணீரையே பார்க்க முடியாது. கிணற்றிலிருந்து தான் இறைக்க முடியும். மழைத் தண்ணீரைத் தவிர வேறெந்தத் தண்ணீரையும் பார்க்க முடியாது. அந்தப் பகுதியில் மக்கள் நல்ல சாலைகள், மின்சார வசதிகள், யூனியன் அலுவலகம் போன்றவைகள் வேண்டுமென்று தமிழக அரசைக் கேட்டிருக்கிறார்கள். அவைகளுக்கு அரசு நல்ல வழி வகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, பேச வாய்ப்பளித்த பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கிறேன். வணக்கம்.



1971 ஜூன் 26]

***திரு. கு. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அளித்த 1972-க்கான நிதி நிலை அறிக்கையை என் தொகுதி மக்கள் சார்பாக வரவேற்கிறேன். குறிப்பாக, தஞ்சை மாவட்ட விவசாயிகளுக்கு நமது முதலமைச்சர் அவர்கள் இரண்டாண்டுகளுக்கு முன் கூலி நிர்ணயம் செய்து தந்தார்கள். ஆனால், இந்த ஆண்டு இந்த நிதிநிலை அறிக்கையில் விவசாயிகள் வாழுகின்ற மனைகளைப்பட்டா செய்தும், உழுகிற நிலத்திலிருந்து வெளியேற்றப்படாமலும் பாதுகாக்க முன் வந்திருப்பதற்காக இந்த அரசை நான் பாராட்டுகிறேன்.

அடுத்து, இந்தக் கல்வி ஆண்டிலிருந்து மன்னார்குடியில் ஒரு கலைக் கல்லூரியை துவக்க இருப்பதற்காக இந்த அரசுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அடுத்து, மன்னார்குடித் தொகுதியில் வடவார் விஸ்தரிப்பு வாய்க்கால்கள் ஓடுகின்றன. மூனூர் நல்லூர் வாய்க்காலில் முத்துநல்லூர் கிராமத்திற்குத் தண்ணீர் போவதில்லை. வேறு பல பரவாக் கோட்டை, உள்ளிக்கோட்டை, திருமக்கோட்டை கிராமங்களுக்கும் தண்ணீர் போவதில்லை. வாய்க்காலை அகலப்படுத்தி, ஆழப்படுத்தித் தர வேண்டுமென்று இந்த அரசை நான் வேண்டுகிறேன்.

அடுத்து, காவிரி நதி மீது மைசூர் அரசு கட்டும் அணையினால் தஞ்சை மாவட்ட மக்கள் மிகப் பாதிக்கப்படுவார்கள். அங்கேயுள்ள மக்கள் யாவரும் விவசாயத்தை நம்பி வாழ்கிறார்கள். எனவே, இதைத் தடுத்து நிறுத்தாவிட்டால் கிழக்கு வங்க அகதிகள் நிலை தஞ்சை மாவட்ட மக்களுக்கு ஏற்படும். எனவே, இந்த அரசு தீவிர நடவடிக்கை எடுத்து, இதற்கு நல்ல ஒரு முடிவிற்கு வர வேண்டுமென்று கேட்டுக் கொண்டு அமர்கிறேன்.

***திரு. விளநகர் எஸ். கணேசன்:** தலைவர் அவர்களே, 1971-72-க்கான நிதி நிலை அறிக்கை மீது என்னுடைய சில கருத்துக்களை சொல்ல முற்படுகிறேன். சோஷலிசம், ஜனநாயக சோஷலிசம் என்ற கருத்துக்களை நம் நாட்டில் நீண்ட பல ஆண்டுகளாகப் பேசிக் கொண்டு இருந்தார்கள். ஆனால், உண்மையான சோஷலிசம் உருவாவதற்கு வழி வகை காண்பது நாங்கள் தான் என்று சொல்லிக் கொண்டிருந்தவர்கள், தங்கள் பயணத்தில் சிறிதளவது நடந்திருக்கிறார்களா என்றால், நிச்சயமாக இல்லை என்ற பதில் தான் கிடைக்கும். மக்களைத் தங்கள் பக்கம் இழுக்கத் தான் அப்படிப்பட்ட கருத்துக்களைச் சொல்லிக் கொண்டிருந்தார்கள் என்பதை கடந்த கால, அவர்கள் ஆட்சியும் நடந்த முடிந்த தேர்தலில் மக்கள் அளித்த தீர்ப்பிலிருந்தும் தெளிவாகக் காண முடிகிறது.

அந்த நிலைமாறி சமுதாய சோஷலிச சமுதாயத்தைப்பற்றிப் பேசுவது மட்டுமல்ல, அதை உருவாக்குவதற்கு எப்படிப்பட்ட இடர்பாடுகள் குறுக்கிட்டாலும், நிதி வசதிக் குறைவு இருந்தாலும்

[திரு. விளநகர் எஸ். கணேசன்] [1971 ஜூன் 26

நிச்சயமாக அதைச் செயல்படுத்திக் காட்டுவோம் என்பதற்கான முன்னோடியாக நிதி நிலை அறிக்கையில் முதல் அமைச்சர் கலைஞர் அவர்கள் இன்றைய நிதி நிலை அறிக்கையில் சமர்ப்பித்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட அருமையான நிதிநிலை அறிக்கையைச் சமர்ப்பித்துள்ள கலைஞர் அவர்களை எவ்வளவு பாராட்டினாலும் தகும் என்று இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள ஆசைப் படுகிறேன்.

ஆனால் எதிர்க்கட்சி வரிசையில் இருக்கிற மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் இதுவரையிலும் இல்லாத வகையில் முன்னோடியாக அமைத்துத் தந்திருக்கிற நிதிநிலை அறிக்கையை மனம் திறந்து பாராட்ட முன்வந்திருக்கிறார்களா என்று பார்த்தால் நிச்சயமாக கிடையாது. உண்மையில் எதிர்க்கட்சியாக இருக்கிறோம் என்பதற்காக ஆளும் கட்சியினர் செய்கிற காரியங்களில் குறை காணவேண்டுமென்ற காரணத்தால் சில பல குறை பாடுகளை ஆங்காங்கே எடுத்துச்சொன்னார்களே தவிர அவை உண்மையான குறைபாடுகளா என்றால் அதுவும் கிடையாது.

நம்முடைய நிதிநிலை அறிக்கையில் உழவர் பெருங்குடி மக்களின் நலனுக்காக அளித்துள்ள கடன் வசதி 67-68-இல் 37.26 கோடி என்றால் 71?-72-இல் இது 61.5 கோடியாக உயர்த்தப் பட்டிருக்கிறது என்றால் உள்ளபடியே இதை நாம் வரவேற்க வேண்டும். பருவமழை 67-க்குப் பிறகு சராசரி அளவுக்கு குறைவாகவே இருந்து இருக்கிறது என்றாலும் நம்முடைய மாநிலம் உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெற்று, பிற மாநிலங்களுக்கும் உணவுப்பொருளை ஏற்றுமதி செய்கிற அளவுக்கு வேளாண்மைத் துறையில் வளர்ந்திருக்கிறது என்றால் அது நம்முடைய அரசு வேளாண்மைத் துறையில் காட்டி வருகிற மிகத் தீவிரமான ஈடுபாட்டைத்தான் காட்டுவதாக ஆகும்.

இன்னும் ஒன்று, கிராமப் பகுதிகளில் வாழ்கின்ற ஏழை எளிய மக்களுக்கு வீட்டுமனைகள் வழங்குவதில் தீவிர கவனம் செலுத்தி இதுவரை 2,30,000 பேர்களுக்கு வீட்டுமனைகள் சொந்தமாக்கப்பட்டிருக்கின்றன என்கிறபோது இதைப் பாராட்டாமல் இருக்க முடியாது. அதுவும் குறிப்பாக தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்த வரையில் பல லட்சக்கணக்கான விவசாயத் தொழிலாளர்கள் மிராசுதாரர்களுக்குச் சொந்தமான இடங்களில் இருந்துகொண்டு—நில உடைமையாளர்களின் இடர்ப் பாடுகளுக்கு ஆளாகி அடிமைப்பணி புரிந்து வருகின்ற நிலை இருந்தது. அந்த நிலைமையை மாற்றி அவர்கள் தற்போது குடியிருந்துவரும் மனையிடங்களிலிருந்து அல்லது குடிமனை களிலிருந்து வெளியேற்றுவதைத் தடுக்கவும், அந்த இடங்களை அவர்களுக்கே சட்டபூர்வமாகச் சொந்தமாக்கவும் இந்த அரசு முடிவு செய்துள்ளது என்றால் தஞ்சை மாவட்ட மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில்



1971 ஜூன் 26] [திரு. விளநகர் எஸ். கணேசன்]

நான் அதை வரவேற்கக் கடமைப் பட்டிருக்கிறேன். தஞ்சை மாவட்ட ஏழை எளிய விவசாயப் பெருங்குடி மக்களின் சார்பில் நம்முடைய முதல்வருக்கு—கலைஞருக்கு எங்களுடைய பாராட்டையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, தாழ்த்தப்பட்டவர்களுடைய நலனுக்காக 1961-62-இல் ரூ. 267 லட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டது என்றால் இந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையில் ரூ. 700 லட்சம் ஒதுக்கியிருப்பது ஏழை அரிசனங்களின்பால் இந்த அரசு கொண்டிருக்கக்கூடிய அக்கறையைத்தான் எடுத்துக்காட்டுவதாக அமைந்திருக்கிறது.

அதே போல பின் தங்கியவர்களின் நலனுக்காக 61-62-இல் ரூ. 97 லட்சம் ஒதுக்கப்பட்டது என்றால் 71-72-இல் ரூ. 442 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதில் இருந்து பின்தங்கியவர்களின் வாழ்வில் இந்த அரசு காட்டி வருகிற அக்கறையை நாம் நினைத்துப் பார்க்காமல் இருக்க முடியாது.

பிச்சைக்காரர்களின் மறுவாழ்வுத் திட்டம் என்பது உலகத்தோர் அத்தனை பேரும் வரவேற்கின்ற திட்டமாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதற்கு குறிப்பிட்ட சில உறுப்பினர்கள் திருத்தங்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆயினும் உலகோர் அனைவராலும் ஒருமனதாகப் பாராட்டப்பெறுகிற இந்த அருமையான—பிச்சைக்காரர்கள் மறுவாழ்வு திட்டத்தை உருவாக்கி தந்திருக்கிற கலைஞர் அவர்களை நான் மனமாரப் பாராட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, கல்வி வளர்ச்சிக்காக 1967-68-இல் ரூ. 53-56 கோடி ஒதுக்கப்பட்டிருந்தது என்றால் 1971-72-இல் அது 81.84 கோடியாக உயர்த்தப்பட்டிருக்கிறது. இதில் இன்னும் ஒரு குறை—இவ்வளவு ஆண்டுகளாக கல்வியில் கவனம் செலுத்தப்பட்டு வந்திருப்பினும் இன்னும் ஆங்காங்கே துவக்கப்பள்ளிகளுக்கு நிரந்தரமான கட்டிட வசதி இல்லாதிருப்பதாகும். இதை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். அதைப்போக்க துவக்கப்பள்ளிகளுக்காவது நம்முடைய மாநிலத்தில் அடுத்து 5 ஆண்டுகளுக்குள்ளாவது நிரந்தரமான கட்டிட வசதியைச் செய்து கொடுப்பது என்கிற ஒரு கொள்கையை வரையறுத்துக்கொண்டு செயல்பட—எல்லாத் தொடக்கப் பள்ளிகளுக்கும் கட்டிடம் அமைத்திட ஒருங்கிணைந்த திட்டம் ஒன்றை இந்த அரசு வகுத்திட முன்வந்திருப்பதை நாம் எல்லோரும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

இன்னும் ஒரு குறைபாடு—நாடு விடுதலை அடைந்து 23 ஆண்டுகள் கழிந்த பிறகும் அங்கங்கே கிராமங்களை இணைக்கிற சாலை வசதிகள் அமையாதிருப்பதாகும். இந்த 71-72-ஆம் ஆண்டுக்கு 110 லட்சத்திற்கு புதிய திட்டங்கள் மேற்கொள்ளப்பட இருக்கின்றன என்றாலும்—எப்படி நம் அரசாங்கமானது 1972-க்குள் மின் ஒளி இல்லாத கிராமமே இல்லாதிருக்கும்படி செய்யவேண்டு மென்ற ஒரு கொள்கையை வரையறுத்துக்கொண்டு செயல்பட்டு

வருகிறதோ அதுபோல் 72-க்குள் இல்லாவிட்டாலும் மேலும் ஒரு நான்காண்டுகளுக்குள்ளாகவாவது சாலை வசதி இல்லாத கிராமமே இல்லை என்று சொல்லும்படியாக சாலை வசதிகளை அளிக்க ஒரு கொள்கையை வரையறுத்துக்கொண்டு செயல்பட வேண்டும் என்றுக் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, பேருந்துத் தடங்கள் நாட்டுடமை ஆக்கப்பட்டதை எல்லா உறுப்பினர்களும் பாராட்டிப் பேசினார்கள். அது ஒரு புரட்சிகரமான திட்டம், உண்மையில் ஏழை எளியவர்கள் எல்லாம் வரவேற்கக்கூடிய திட்டமாகும். நம்முடைய அரசு சோஷலிச சமுதாயத்தை நோக்கி வேகமாகச் செயல்பட்டு வருகிறது என்பதற்கு எடுத்துக்காட்டாக அமைந்து இருக்கிறது.

இங்கு பேசிய எதிர்க்கட்சி உறுப்பினர்கள் மதுவிலக்கைப்பற்றி காரசாரமாகப் பேசியிருக்கிறார்கள். அதுவும் நம்முடைய மதிப்பிற்குரிய திரு. ஹாண்டே அவர்கள் நேற்றைய தினம் மிகவும் காரமாகப் பேசினார்கள். அவர்கள் ஏழை எளிய மக்களின்பால் மிகுந்த அன்புடையவர்கள் என்பதாக நான் கேள்விப் பட்டிருக்கிறேன். இன்றைய தினம் அவர்கள் நகர்ப்புறங்களை மட்டும் பார்க்காது—என்னுடைய கிராமப்புறங்களுக்கும் வந்தால் இந்தச் சட்டத்தினால் அங்குள்ள ஏழை எளிய மக்கள் எவ்வாறு பல வகையிலும் பாதிக்கப்பட்டு வருகிறார்கள் என்பதை நிரூபித்துக் காட்டமுடியும். கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்த வரையிலும் அரிஷ்டம் உற்பத்தியாளர்கள் என்ற பெயரால் பல பெரியவர்கள் அரசியல் நடத்திக்கொண்டிருக்கிறார்கள் என்பதை திரு. ஹாண்டே அவர்கள் நன்கு அறிந்திருக்க முடியும். அங்கு நடந்த ஒரு இடைத்தேர்தலின் போது அவர்கள் எங்கள் பக்கம் இருந்த காரணத்தினால் இதைப் பார்த்திருப்பார்கள்.

மதுவிலக்குக் கொள்கை என்பது, ஏழை எளியவர்களுக்கு எல்லாம் மிகுந்த துன்பம் அளிக்கக்கூடிய ஒன்றாக மாறிவிட்ட நிலையில் அதை ஒத்திவைக்கப் போவதாக முதல்வர் அவர்களின் அறிவிப்பு ஏழை மக்கள் வரவேற்கக்கூடியதுதான். தேனென இனிக்கிற நிதிநிலை அறிக்கையை அளித்திட்ட கலைஞர் அவர்களை 4½ கோடி தமிழ் மக்கள் பாராட்டுகிறார்கள், வாழ்த்துகிறார்கள். அவர்களில் ஒருவனாக நானும்—நான் தேர்ந்தெடுக்கப்பட்ட குற்றாலம் தொகுதி மக்களின் சார்பாக நம்முடைய தமிழக முதல்வர்—கலைஞர் அவர்களை வாழ்த்துகிறேன், பாராட்டுகிறேன், வணங்குகிறேன். நன்றி வணக்கம்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** பேரவைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் கிளாரிப்பிகேசன்—உறுப்பினர் தொற்பொழிவாற்றும்போது கன்னியாகுமரி மாவட்டத்தில் அரிஷ்டம் என்ற பெயரால் அரசியல் நடத்திக்கொண்டிருக்கிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். அதை விளக்கக் கோருகிறேன்.



***திரு. நா.வெ. குருசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே (திரு. நா. வீராசாமி தலைமை) 1971-72-ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கைமீது எனது கருத்துக்களைக் கூறலாம் என்று ஆசைப்படுகிறேன். பட்ஜெட்டில் பல விஷயங்களை நான் ஆதரித்த போதிலும் ஒன்றிரண்டை எதிர்க்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது.

குறிப்பாக மதுவிலக்கை எடுத்துக்கொண்டால் அந்தச் சட்டத்தை ரத்துசெய்வது ஏழைகளைப் பாதிக்கும். மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் அதை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, விற்பனை வரியை 3% இல் இருந்து 3½% ஆக உயர்த்தியிருப்பதும் ஏழைகளுக்கு அதிக துன்பத்தை அளிக்கக் கூடியதாக இருக்கும். ஆகவே முதல் அமைச்சர் அவர்கள் இதையும் பரிசீலனை செய்யவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

நான் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்திருக்கும் ஆண்டிப்பட்டித் தொகுதியில் அரசாங்க மருத்துவ வசதி கிடையாது. பலமுறை சட்டமன்றத்திலும், அமைச்சரிடத்திலும் கூறப்பட்டிருக்கிறது. ஹரிஜன நலத்துறை அமைச்சரும், மராமத்திலாக்கா அமைச்சரும் அங்கே அரசாங்கம் மருத்துவமனை ஏற்படுத்தப்படவேண்டும் என்பதை விசிடர் புக்கில் எழுதியிருக்கிறார்கள். அதை ஏற்படுத்த இந்த அரசு முன்வராததை நான் மிக்க வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனது தொகுதியில் குடிதண்ணீர் பிரச்சினை மிகவும் மோசமாக இருக்கிறது. ஆதலால் வைகை அணையிலிருந்து குழாய்கள் மூலம் தண்ணீர் கொண்டுவந்து, என்னுடைய தொகுதி முழுவதிலும் உள்ள குடிதண்ணீர் பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வைகை நதியின் குறுக்கே கண்டமனூர் என்ற இடத்திலும், அம்மைச்சாபுரம் என்ற இடத்திலும் இரண்டு பாலங்களைக் கட்டினால் தேனி. சின்னமனூர் போன்ற பெரிய நகரங்களுக்கு மக்கள் சென்றுவர வசதியாக இருக்கும். அந்தப் பகுதி மக்களின் போக்குவரத்துக்கு இந்த இரண்டு பாலங்களும் அவசியம். ஆகவே, இந்த இரண்டு பாலங்களையும் கட்டித்தர வேண்டுமென்று பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு நிலம் வழங்குவது குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் எனது தொகுதியான வருஷ நாடு மலைப்பகுதிகளில் ஏழை விவசாயிகளுக்கு நிலப்பட்டாக்கள் வழங்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நிலப்பட்டா வழங்காத காரணத்தினால் அவர்கள் கூட்டுறவு சொசைடிகளின் மூலமாகக் கடன் பெற

முடியாத நிலையில் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, அவர்களுக்கு உடனடியாகப் பட்டா வழங்க வேண்டுமென்று பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஆண்டிப்பட்டி பஞ்சாயத்து யூனியன் பெரிய பஞ்சாயத்து யூனியனாக இருப்பதால், அதை இரண்டாகப் பிரித்து, இரண்டு யூனியன்களாக ஆக்கினால் மிகவும் நலமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, நிதிநிலை அறிக்கையில் 6,500 ஆசிரியர்களுக்கு வேலை கொடுக்கப்பட்டிருப்பதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. 1966-67-ல் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் வேலை கிடைக்காமல் வீதியிலே சுற்றிக்கொண்டு வருகிறார்கள். இதுவரையில் அவர்களுடைய குறையைப் போக்கியதாகத் தெரியவில்லை. அரசாங்கம் முழுமுயற்சி செய்து அவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க வேண்டுமென்று கூறிக்கொண்டு, எனக்குப்பேச சந்தர்ப்பம் அளித்தமைக்கு நன்றிகூறி விடைபெறுகிறேன்.

திரு. கு. பெரியசாமி: பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, 1971-72-ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின் மீது, எனக்குப் பேசுவதற்குச் சந்தர்ப்பம் அளித்தமைக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். சமதர்மக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட நிதிநிலை அறிக்கை அல்ல, க்ஷேமநல நிதிநிலை அறிக்கையாக வேண்டுமானால் இருக்கலாமே தவிர சோஷலிச அடிப்படையில் தயாரிக்கப்படவில்லை' என்ற குற்றச்சாட்டுகளை நாம் இப்போது கேட்டோம். இருபது ஆண்டுகளாக, ஏன் அதற்கு மேலாகவும்கூட, கொள்கையளவில் மட்டும் சோஷலிசம் என்று பேசிக்கொண்டிருப்பவர்களுக்குக்கூட ஆச்சரியத்தை அளிக்கக்கூடிய வகையில் இந்த நிதிநிலை அறிக்கை அமைந்திருக்கிறது. அடிமட்டத்தில் இருக்கின்ற மக்களின் வாழ்க்கையை உயர்த்துவதற்கு சட்டபூர்வமாக என்னென்ன வழிகளைச் செய்ய முடியும் என்பதை ஆராய்ச்சி செய்து, செயல் முறையில் சோஷலிசத்தை நடத்திக் காட்டியிருக்கிறது, தமிழக அரசு. அடிமட்டத்தில் இருப்பவர்களின் வாழ்க்கைத்தரம் உயர வேண்டுமானால் மேல்மட்டத்தில் இருப்பவர்கள் விட்டுக்கொடுக்காத நிலை ஏற்பட்டபொழுது அரசு பங்கெடுத்துக்கொண்டு, சட்ட மூலமாக நிறைவேற்றி வழிவகுத்துத் தந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பஸ்கள் இன்றைய தினம் தேசியமயமாக்கப்பட்டிருப்பதும் சோஷலிசக் கொள்கையின் அடிப்படையில்தான். 100 பஸ்கள், 200 பஸ்கள் என்ற நிலையில் உரிமையாளராக இருந்தவர்களிடமிருந்து பஸ்களின் எண்ணிக்கையைக் குறைத்து இருப்பது வரவேற்கத்தக்க அம்சம்.



அடுத்து, நகர்ப்புற சொத்துக்களுக்கு வரம்பு கட்டுவதற்கு முன்னோடியாக அதற்கு வரி விதிக்கப்பட்டிருப்பது பாராட்டத் தக்கது. ஒரு கிரவுண்டும் அதற்குக் குறைந்த அளவுள்ள மனையும் வைத்திருப்பவர்களுக்கு வரியிலிருந்து விலக்களித்து இருப்பது நடுத்தர, கீழ்த்தர மக்களுக்கு அளிக்கப்பட்டிருக்கும் பேருதவியாக இருக்கிறது.

அடுத்து, விற்பனை வரியில் அரை சதவீதம் உயர்த்தப் பட்டிருக்கிறது. முற்போக்குக் கொள்கையை அமல்படுத்த வேண்டுமென்பதற்காக இந்த வரியை சகித்துக்கொள்ள வேண்டும். இந்தப் பட்ஜெட்டானது, குறிப்பாக தாக்கிப் பேசுவதற்கோ, இழித்துப் பேசுவதற்கோ ஒருவித சந்தர்ப்பமும் அளிக்காமல் இருப்பதைக் கண்டு எதிர்க்கட்சிக்காரர்கள் எந்த அம்சமாவது தாக்கிப் பேசுவதற்குக் கிடைக்காதா என்று ஏங்கிக் கிடக்கின்ற நிலையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தயாரித்திருக்கிறார்கள். இதைப் பாராட்டாமல் இருக்க முடியாது. சமுதாயத்தின் அடிமட்டத்தில் இருப்பவர்களின்மீது எவ்வளவு அக்கறையை இந்த அரசு கொண்டிருக்கிறது என்பதை எடுத்துக்காட்டும் வகையில் அமைந்திருக்கிறது.

அடுத்தது, பிச்சைக்காரர்களின் மறுவாழ்வு மீது நமது கலைஞர் அவர்கள் எவ்வளவு அக்கறை கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த நிதிநிலை அறிக்கை எடுத்துக் காட்டுகிறது. பிச்சையெடுப்பவர்களையெல்லாம் சாதாரணமானவர்களாக எண்ணாமல் நமது பெற்றோர்களாகவும், நமது உடன் பிறந்தவர்களாகவும் எண்ணினால் அவர்களுடைய பிரச்சினை தீர்ந்துவிடும். பிச்சைக்காரர்களின்பால் எவ்வளவு அக்கறை கொண்டு இந்த அரிய திட்டத்தைத் தயாரித்திருக்கிறார்கள் என்பதைக் கண்டு, அதனை வரவேற்று கலைஞர் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, கமலா இணைப்புச் சாலையானது மாட்டு வண்டிகூட போக லாயக்கில்லாமல் இருக்கிறது. அரசு கவனித்து அந்தச் சாலையை சீர்ப்படுத்தித் தர வேண்டும். பஞ்சாயத்து ரோடுகள் எல்லாம் வசதியின்றியிருக்கின்றன. ஆற்றில் வெள்ளம் வரும் போது போய்வர வசதியில்லை. நல்ல பாலம் ஒன்றைக் கட்டி சாலை வசதிகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, உரையை முடித்துக்கொள்கிறேன்.

* திரு. டி. வி. சம்பத்: பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, 1971-72-ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின் மீது பேசுகின்ற வாய்ப்பு அளித்தமைக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். திராவிட முன்னேற்றக் கழகக் கொள்கையின் அடிப்படையில் முற்போக்குத் திட்டங்களைக் கொண்ட இந்த நிதிநிலை அறிக்கையைச் சமர்ப்பித்த மாண்புமிகு கலைஞர் அவர்களுக்கு என்னுடைய தொகுதியின் சார்பில் நன்றியையும் பாராட்டுதலையும் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகத்திலுடைய முற்போக்குத் திட்டங்களில் ஒன்றான பிச்சைக்காரர் மறுவாழ்வுத் திட்டத்தை கலைஞர் அவர்கள் இந்த நிதிநிலை அறிக்கையில் சமர்ப்பித்தாலும் கூட, இந்தத் திட்டம் ஏறத்தாழ 15 ஆண்டுகளுக்கு முன்னால் கொண்டுவரப்பட்டது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். பிச்சைக்காரர்களுடைய பிரச்சினையைப்பற்றி திரைக்கதை மூலம், ஆலமரத்தடியின் கீழ் நடத்துகின்ற மாநாட்டைக் காட்டி, திரையுலகின் மூலம் மக்களுக்கு எடுத்துச் சொன்னார்கள். அப்போது திராவிட முன்னேற்றக் கழகம் பிச்சைக்காரர்களின் மாநாட்டைக் கூட்டிக் கொண்டிருக்கிறார்கள் என்று கிண்டலும் கேலியும் கலந்த தொனியில் நம்மைப்பற்றிப் பேசப்பட்டது. இன்றையதினம் சட்டமன்றத்தில் பிச்சைக்காரர் மறுவாழ்வு திட்டம் எடுத்துப் பேசப்பட்டு வருகிறது. அன்றைய தினம் கலைஞர் அவர்கள் திரைக்கதையிலே, "பிச்சைக்காரர்களின் குரல், அரகரா மஹாதேவா என்ற குரல் ஆண்டவனுக்கு எட்டிப் பயன் இல்லை, அந்தக் குரல் அரசாங்கத்திற்கு எட்ட வேண்டும்" என்று சொன்னதுதான் இன்றைய தினம் அரசாங்கத்திற்கு எட்டி, அவர்களைப்பற்றிப் பேசப்பட்டு வருகிறது. அன்றைய தினம் இந்தக் கருத்தைக் கிண்டல் பேசியவர்கள் எல்லாம் வரவேற்கும் அளவுக்கு நமது கலைஞர் அவர்கள் இந்தத் திட்டத்தைத் தீட்டியிருப்பதற்கு மனமகிழ்ச்சியோடு கலைஞர் அவர்களைப் பாராட்டுகிறேன்.

அடுத்து, என்னுடைய தொகுதியிலும் பல குறைபாடுகள் இருப்பதை எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

குறிப்பாக, தரங்கம்பாடி பேரூராட்சி மன்றப் பகுதியிலேயும் சுற்றுப் புறங்களிலேயும் உள்ள மக்கள் நல்ல குடிதண்ணீர் வசதியில்லாமல் நீண்ட நாட்களாக அவதிக்குள்ளாக்கப்படுகிறார்கள். அந்தப்பகுதியிலுள்ள வசதி படைத்தவர்களுக்கு மாயவரத்திலிருந்து இரயில் மூலம் சிலருக்குத் தண்ணீர் சப்ளை செய்யப்படுகிறது. ஆனால் ஏழை மக்கள் நல்ல குடிதண்ணீர் இல்லாமல் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே அந்தப் பகுதியிலே வாழும் மக்களுக்கு நல்ல குடிதண்ணீர் கிடைக்க நம்முடைய குடிதண்ணீர் வாரியத் திட்டத்தோடு இணைத்து விரைவிலே அந்தப் பகுதி மக்களுக்கு குடிதண்ணீர் கிடைக்க ஆவன செய்ய வேண்டுமென்று மாண்புமிகு கலைஞர் அவர்களை வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாகக் கொள்ளிடப் பகுதியில் காட்டிலாக்காவிற்கு, இன்றைக்கு விவசாயம் செய்யக் கூடிய அளவில் ஏறத்தாழ 200 ஏக்கர் நிலம் இருக்கிறது. அது காட்டிலாக்காவால் பயிர் செய்யப்பட்டு வருவதால் ஏழை விவசாயிகள் சிரமத்திற்குள்ளாக்கப்படுகிறார்கள். அந்தப் பகுதியில் ஏதாவது தப்பித் தவறி விவசாயிகள் மாடுகளை விட்டு விட்டால் அவர்களே மாடுகளைப் பிடித்து வைத்துக் கொண்டு அதனால் விவசாயிகள் பல



தொல்லைகளுக்கு ஆளாக்கப்படுகிறார்கள். அது நல்ல நிலமாக இருப்பதால் கொள்ளிடப் பகுதியில் உள்ள அந்த 200 ஏக்கர் நிலங்களையும் அந்தப் பகுதியிலேயுள்ள ஏழை விவசாயிகளுக்கு, நிலமற்றவர்களுக்குப் பட்டா செய்து தராவிட்டாலும், சாகுபடிக்குத் தருவதற்காவது இந்த அரசு முன் வரவேண்டுமென்று வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தாலுக்காவின் தலைநகரமாகிய சீர்காழியில் உள்ள மருத்துவ மனையில் 20-க்குக் குறைவாகப் படுக்கை வசதிகள் உள்ளன. அந்த மருத்துவமனையில் மேலும் அதிகப்படியாகப் படுக்கை வசதிகளை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அண்மையில் வருகைதந்த மாண்புமிகு நல்வாழ்வுத்துறை அமைச்சர் பேராசிரியர் அவர்களை அழைத்துச் சென்று பார்வையிடச் செய்தோம். அந்த மருத்துவமனைக்கு நல்ல படுக்கை வசதிகளை அதிகப்படுத்தித் தர வேண்டும். அதே நேரத்திலே அந்த மருத்துவமனையில் நல்ல உயர்ந்த சாதனங்கள் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அங்கு ஏதாவது நிலைமை கவலைக்கிடமான கேஸ்களைக் கொண்டுவந்தால் அங்கே வசதியில்லாத காரணத்தால் நாகப்பட்டணத்திற்கோ அல்லது தஞ்சைக்கோ கொண்டு போக வேண்டிய நிலையிருக்கிறது. வசதி படைத்தவர்களாகயிருந்தால் விரைவிலே கொண்டு செல்ல வசதியிருக்கிறது. ஆனால் ஏழைகள் அவ்வாறு எடுத்துச் செல்ல முடியவில்லை. ஆகவே அந்த மருத்துவமனைக்கு நல்ல வசதியோடு சாதனங்களையும் அளிப்பதற்கும் அந்த மருத்துவமனையை விரிவுபடுத்துவதற்கும் ஆவன செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

தஞ்சை மாவட்டத்தில் கிழக்குத்தஞ்சை பகுதியில் உள்ள ஏழை எளிய விவசாயிகள் ஆண்டுதோறும் ஏற்படும் மழையால் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். அந்த விவசாயிகள் அளிக்க வேண்டிய நெல் 100 கலம் என்றால் சுமத்தப்பட்டிருக்கிற பாக்கி 200 கலம், 300 கலம் என்று இருக்கிறது. குறிப்பாக, அந்த நிலங்கள், மடங்கள், கோயில்களுக்குச் சொந்தமானவையாக இருக்கின்றன. அந்த நிலங்களிலிருந்து அவர்கள் இப்பொழுதிருக்கும் நிலைமைகளை உடனடியாக ஈடு செய்ய முடியாமல் இருப்பதால் அந்தப் பழைய குத்தகை பாக்கியில் 75 விகிதத்தைத் தள்ளுபடி செய்தும் 25 விகிதத்தைத் தவணை முறையில் கட்டவும் ஆவன செய்ய வேண்டுமென்று வேண்டி விரும்பிக் கேட்டுக்கொண்டு, எனக்குப் பேச வாய்ப்பளித்தமைக்காக தலைவரவர்களுக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன், வணக்கம்.

* திரு. சொ. காவேரிமணியம்: தலைவரவர்களே, இம்மாதம் 19-ஆம் தேதி நம்முடைய முதல்வரவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட நிதிநிலை அறிக்கையைப் பெருமகிழ்ச்சியோடு வரவேற்கிறேன். எனக்கு முன் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் மிக நல்ல நிலை

[திரு. சொ. காவேரி மணியம்] [1971 ஜூன் 26

யிலே அருமையான கருத்துக்களை இந்த மாமன்றத்தில் பல காரணங்களைச் சுட்டிக்காட்டி வரவேற்றிருக்கிறார்கள். என்னைப் பொறுத்தவரையில் இந்த நேரத்தில், இந்தச் சூழ்நிலையில் இதை விடச் சிறந்ததொரு நிதிநிலை அறிக்கையைச் சமர்ப்பித்துவிட முடியுமென்று என்றால் நம்ப முடியவில்லை. ஆனால் இதிலே யிருக்கும் சுவைகளையெல்லாம் பல மாண்புமிகு உறுப்பினர்கள் கூறிவிட்டார்கள். இருந்தாலும், இலக்கியச் செறிவும், உவமை நயங்களும் பின்னிக்கிடக்கும் இந்த அருமையான நிதிநிலை அறிக்கையை மனப்பூர்வமாக மீண்டும் நான் வரவேற்கிறேன்.

நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையிலே கிராமங்கள் அதிகம் இருக்கும் பகுதியாகும். அதிலும் கிராமத்திலேயிருப்பவர்கள் உழவுத்தொழிலை மேம்பாடாகக் கருதிக்கொண்டிருப்பதால் உழவர் பெருமக்களுக்கு அதிகமான சலுகைகள் காட்டப்பட்டிருக்கின்றன என்பது நாம் வரவேற்கத்தக்க ஒரு அம்சமாகும். குறிப்பாகச் சொல்லப் போனால் நீண்ட காலக் கடன் திட்டம், பொறுக்கு விதைகள், கூட்டுறவு ஸ்தாபனங்களின் மூலம் கடன் வழங்கல் போன்ற திட்டங்கள் பாராட்டத் தகுந்த ஒரு அம்சம். அதைக் காட்டிலும் மிகச் சிறந்த வரவேற்கத்தக்க அம்சம் என்ன வென்றால் இங்கேயிருக்கும் நிலமற்ற விவசாயிகளுக்கு அவர்கள் குடியிருக்கும் பகுதிகளை அவர்களுக்கே உரிமையாக்கித் தருவதாகும். நிலமற்ற ஏழைகளுக்கு அவர்களுக்கே நிலம் அமைத்துக் கொடுத்தல் அல்லது நிலத்தைப் பகிர்ந்து கொடுத்தல் போன்ற திட்டங்களை நாம் மனப்பூர்வமாக வரவேற்றேயாக வேண்டுமென்று மிகப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, "கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு புண்ணுடையர் கல்லா தவர்" என்ற குறளையொட்டி கல்விக்காக அதிகச் சலுகை காட்டப்பட்டிருக்கிறது. சுகாதாரத்திற்கும் நல்ல நிதிநிலை ஒதுக்கப்பட்டிருக்கிறது. குடிநீர் வாரியம், மற்றும் சில வாரியங்கள் அமைத்துத் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினரை உயர்த்துவதற்குப் பல திட்டங்கள் இங்கே சுட்டிக்காட்டப் பட்டிருக்கின்றன. ஆகவே, இந்தத் திட்டங்கள் அத்தனையையும் மனப்பூர்வமாக வரவேற்று இறுதியாக மதுவிலக்குக் கொள்கையைப் பற்றி இங்கே காரசாரமாக விவாதம் நடை பெற்றது. அந்த வாதங்களைப்பற்றி நான் எதுவும் சொல்ல வேண்டியதில்லை. நம்முடைய முதல்வரவர்கள் மிகத் தெளிவாக "விடைந்து தொழில் கேட்கும் ஞாலம் நிரந்தினது சொல்லுதல் வல்லார்ப் பெறின்" என்று சொன்னால், விரைந்து தொழில் கேட்கும் ஞாலம் என்று கூறும் அளவிற்கு மிக அருமையாகத் தன்னுடைய வாதத் திறமையை நிதிநிலை அறிக்கையிலே வைத்திருக்கிறார்கள். ஆகவே, அவருடைய வாதத் திறமையை ஒத்துக்கொண்டு யாராலும் மறுப்புப் பேச முடியாமல் ஏதோ ஒரு சில காரணங்களை மட்டும் சுட்டிக்காட்டியிருக்கிறேன்.



1971 ஜூன் 26] [திரு. சொ. காவேரிமணியம்]

ஆகவே, இந்தச் சூழ்நிலையில் நம்முடைய மதுவிலக்குக் கொள்கையைத் தள்ளி வைத்திருப்பதை மனப்பூர்வமாக வரவேற்று அதற்கு வரவேற்பு கொடுக்க நான் தயாராக இருக்கிறேன்.

அதேபோன்று பல முறைகளிலே, பல கோணங்களிலே இந்த நிதிநிலை அறிக்கையை வரவேற்று இறுதியாக, பல அங்கத்தினர்கள் கூறியதைப்போல் என்னுடைய தொகுதியிலேயுள்ள குறைகளில் ஒரு சிலவற்றைக் கூறி என்னுடைய உரையை முடிக்கலாம் என்று கருதுகிறேன்.

திருப்பரங்குன்றத்தை அறியாதவர்கள் இருக்க முடியாது. திராவிட முன்னேற்றக் கழகத்தின் மூன்றாவது பெரு மாநாடு அங்கேதான் நடந்தது. அரசியலின் மாறுபாடுகளும் இன்னும் அரசியல் முக்கியத்துவமும் பெற்றது திருப்பரங்குன்றம் என்பது அனைவருக்கும் தெரியும். அதைக்காட்டிலும் நக்கீரராலும், சரித்திரப் புகல், இலக்கியப் புகலால் பாடப்பெற்ற சிறப்புகள் பெற்று. ஆறு படை வீடுகளிலே ஒன்றாக விளங்குவது திருப்பரங்குன்றம். இந்தத் திருப்பரங்குன்றம் மதுரைக்குப் பக்கத்திலே இருக்கக் கூடியதாகும். மதுரையில் இருக்கும் கல்லூரிகளிலே எவ்வாறு மாணவர்கள் அட்மிட் செய்யப்படுகிறார்கள் என்பது இங்கே யிருக்கும் பெருமை மிக்க உறுப்பினர்கள் அத்தனைபேருக்கும் நன்றாகத் தெரியும். ஜாதியின் அடிப்படையிலே, மதத்தின் அடிப் படையிலே அங்கே அட்மிஷன் நடக்கிறது என்பது நான் கண்ணாலே பார்த்த உண்மையாகும். இவைகளையெல்லாம் போக்க வேண்டுமானால் திருப்பரங்குன்றத்திலேயாவது அல்லது மதுரை யிலேயாவது ஒரு ஆர்ட்ஸ் காலேஜ் ஏற்படுத்த வேண்டுமென்று நான் மிகப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னும் ஒன்றைச் சுட்டிக்காட்டிவிட்டு என்னுடைய உரையை முடிக்கலாம் என்று கருதுகிறேன். எந்தப் பகுதியிலேயிருந்து மதுரை மாநகருக்கு வந்தாலும் என்னுடைய தொகுதியிலே வந்து தான் ஆக வேண்டும். ஆகாய விமானத்திலே வந்தாலும் விமான நிலையம் இருக்கக்கூடியது என்னுடைய தொகுதி. அந்த விமான நிலையத்தைச் சுற்றியிருக்கும் பகுதிகள் வறண்ட பகுதிகளை, வற்றிய குளங்களை, திறந்த வெளிகளை உள்ளடக்கிய பகுதியாகும். அந்த நிலைமைகளையெல்லாம் மாற்ற வேண்டுமானால் நிலையூர் சேனல் என்ற புகழ்பெற்ற சேனலை விரிவுபடுத்தினால் நல்ல வாய்ப் பிருக்கும் என்று முதல்வர் அவர்களை மிகப் பணிவன்போடு கேட்டுக்கொண்டு, இந்த அளவிற்குப் பேச வாய்ப்பு கொடுத்தமைக்காக நன்றிகூறி, என்னுடைய உரையை முடிக்கின்றேன், வணக்கம்.

* **திரு. மு. பழனிசாமி:** மாண்புமிகு சட்டப்பேரவை மாற்றுத் தலைவரவர்களே, 1971-72-ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின்மீது சட்டப்பேரவையிலே பேசுகின்ற நல்வாய்ப்பு பெற்றமைக்காக என்னுடைய சார்பிலேயும், என்னுடைய வெள்ளக்கோயில்

தொகுதி பொதுமக்களின் சார்பிலேயும் நன்றி கலந்த வணக்கத்தைக் கூறிக்கொண்டு என்னுடைய முதல்பேச்சைத் தொடங்குகின்றேன்.

இந்த நிதிநிலை அறிக்கையைப்பற்றி இந்த மாமன்றத்திலே மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் மிக விளக்கமாகவும், விரிவாகவும் அதனுடைய சிறப்பியல்புகளைப்பற்றிக் கூறியிருக்கிறார்கள். நானும் அந்த நிதிநிலை அறிக்கையைப்பற்றி ஒருசில வார்த்தைகள் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையானது கடந்த பல ஆண்டுகளில் அளிக்கப்பட்ட நிதிநிலை அறிக்கையைப்போன்றில்லாமல் இங்கே தமிழகத்திலே வாழும் அத்தனை மக்களும் நலம்பெறும் விதத்திலே, முன்னேறும் விதத்திலே, அடித்தளத்தில் நசுங்கிக்கிடக்கும் தாழ்த்தப்பட்ட மக்களெல்லாம் எதிர்காலத்தில் நம்பிக்கையோடு வாழ வழி செய்யக்கூடிய முறையிலே, சமதர்மக் கொள்கையோடு இங்கே நமது மாண்புமிகு முதலமைச்சரவர்கள் நல்லதொரு நிதிநிலை அறிக்கையை தந்திருக்கிறார்கள். இந்த நிதிநிலை அறிக்கையிலே தமிழ்நாட்டுக்கு வேண்டிய நல்ல திட்டங்களைத் தொடங்குகின்ற வகையிலே தந்திருக்கிறார்கள் என்ற அளவிலே வரவேற்றுப் பாராட்டுகிறேன்.

இந்தச் சந்தர்ப்பத்திலே எனது தொகுதி பற்றிய சில காரியங்களைக் கூற விரும்புகிறேன். வெள்ளக்கோயில் தொகுதியானது மிக வறண்ட, பின்தங்கிய தொகுதி என்பது இந்த மாமன்றத்தில் இருக்கும் அநேக மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரியும். குடிப்பதற்குக்கூட நீர் இல்லையென்ற அளவில் மிகக் கஷ்டமான நிலையில் அந்த மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையைப் போக்க பரம்பிக்குளம் வாய்க்கால் திட்டத்தை வெள்ளக்கோயில் பகுதிக்கு விஸ்தரிப்பு செய்து அந்தப் பகுதி விவசாயப் பெருமக்களுக்கும் நல்வாழ்வுக்கு வழிசெய்து தர வேண்டுமென்று பணிவோடு முதலமைச்சர் அவர்களையும் மற்ற அமைச்சர் பெருமக்களையும் வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

வெள்ளக்கோயில் தொகுதியில் கூடலூர் வட்டாரம் மிகவும் பின்தங்கிய பகுதி. அங்குள்ள மக்களுக்குப் பாசன வசதி செய்து கொடுக்கும் திட்டம் இல்லை என்ற அளவில் அது பாலைவனம் போன்று காட்சியளிக்கிறது. அமராவதி ஆற்றில் கண்ணாடிப்புதூரில் அணைக்கட்டு கட்டி பாசன வசதி செய்துகொடுக்க வேண்டுமென்று மக்கள் கடந்த பல ஆண்டுகளாகக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்தத் திட்டத்திற்கு அதிகச் செலவாகும், அதற்கேற்ற அளவுக்குப் பாசனம் கிடைக்காது என்ற அளவில் கைவிடப்பட்ட நிலைமையில் இருந்து கொண்டிருக்கிறது. செலவு அதிகமாக ஏற்பட்டாலும்கூட கவலைப்படாமல் அந்த வட்டார மக்களுக்கு நன்மை செய்ய வேண்டுமென்ற பெருநோக்கத்தோடு அந்தத் திட்டத்தை நிறைவேற்ற முன்வர



வேண்டும். அந்தப் பகுதிக்கு நிரந்தரமாகப் பாசன வசதி செய்து தர முடியாவிட்டாலும்கூட அந்தப் பகுதியிலுள்ள குளம் குட்டைகளுக்கு நீர் தேக்க வழி செய்து தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வெள்ளக்கோயில் தொகுதியைப் பொறுத்தவரை பின்தங்கிய பகுதி என்று எற்கனவே எடுத்துக் கூறியிருக்கிறேன். அந்தப் பகுதியில் சிறு தொழிற்பேட்டை ஒன்றை ஏற்படுத்தி அங்கிருப்பவர்களுக்குத் தொழில் கிடைக்கும் ஏற்பாட்டைச் செய்து தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தாராபுரம் வட்டத்தில் உத்தியூர் மலை என்று இருக்கிறது. அங்கு சிமெண்ட் செய்வதற்குப் போதுமான கற்கள் கிடைக்கின்றன. இதுபற்றிப் பொள்ளாச்சியில் நடைபெற்ற கழக மாநாட்டில் கூடத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. அந்தப் பகுதி மிகவும் பின்தங்கிய பகுதி. அங்கு சிமெண்ட் தொழிற்சாலை ஒன்றை ஏற்படுத்தி அந்தப் பகுதி மக்களுக்கு வேலை வாய்ப்புக்கு வழி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வெள்ளக்கோயில் தொகுதியில் அமராவதி ஆறு ஓடுகிறது. அதிலிருந்து விவசாயப் பெருமக்கள் தண்ணீர் இறைத்தும்கூட அவர்களுக்குப் பர்மிட் வழங்கப்படவில்லை. இந்த ஆண்டும். சென்ற ஆண்டும் 20 மடங்கு தண்டத் தீர்வை விதித்திருக்கிறார்கள். அதையெல்லாம் நீக்கிவிட்டு இப்போது வைத்திருக்கும் அந்தப் பம்பு செட்டுகளுக்கு அந்த விவசாயிகளுக்கு பர்மிட் வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, பேசச் சந்தர்ப்பம் அளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

*திரு. எம். பன்னீர்ச்செல்வம் : சட்டப் பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, 1971-72-ம் ஆண்டு திருத்தப்பட்ட நிதிநிலை அறிக்கையை தொகுதி மக்கள் சார்பாக வரவேற்று என்னுடைய கருத்துக்களைச் சொல்ல முன்வருகிறேன்.

தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் புரட்சிகரமான நிதிநிலை அறிக்கையை இந்தியத் துணைக் கண்டமே பாராட்டும் அளவுக்கும், எந்த மாநிலமும் இதைவிடத் துணிகரமாக நிதிநிலை அறிக்கையைச் சமர்ப்பிக்க முடியாத நிலைமையிலும் தமிழக முதல்வர் அவர்கள் இதனை சோஷலிச அறிக்கையாகச் சமர்ப்பித்திருக்கிறார்கள்.

இந்த மன்றத்திலே பேசிய எதிர்க்கட்சி உறுப்பினர்கள் மதுவிலக்கு ரத்து செய்ததை எதிர்த்துப் பேசினார்கள். பெருமதிப்பிற்குரிய ஹாண்டே அவர்கள் தேர்தலில் நீங்கள் தப்பித்துக் கொள்ளுவதற்காக செய்கின்ற காரியமா என்று கேட்டார்கள். நடந்து முடிந்த தேர்தலின்போது நடந்த நிகழ்ச்சிகளைப் பற்றி நான் உள்ளபடியே கூற விரும்புகிறேன். தேர்தலின்போது எங்

களுடைய பகுதியில் 16 முஸ்லிம் பெருமக்களின் கடைகளைச் சுக்கு நூறாக்கியது மட்டுமல்ல, அந்த வீடுகளுக்கு நெருப்பு வைத்தார்கள்.

இன்று இந்த நிதிநிலை அறிக்கை சமதர்ம அடிப்படையில் ஏழை எளியவர்களுக்கும், பின்தங்கிய, தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் நன்மைகளைச் செய்யும் வகையில் சமர்பிக்கப்பட்டிருக்கிறது. ஒரு மனிதன் வாழவேண்டுமென்றால் அதற்கு குடிநீர், மருத்துவம், கல்வி ஆகிய மூன்றும் இருக்க வேண்டும். அந்த வகையிலே இந்த மூன்றுக்கும் பெரும்பகுதியான பணத்தை இந்த அரசு ஒதுக்கி இருக்கிறது. தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட மக்களின் முன்னேற்றத்திற்காகவும் பெரும் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. சமுதாயத்தின் அடித்தளத்திலே இருக்கக்கூடிய மக்களின் வாழ்க்கை முன்னேற வேண்டுமென்பதற்காகப் பல திட்டங்களைத் தீட்டியிருக்கிறார்கள்.

தேர்தல் நேரத்தில் எதிர்க்கட்சியினர் பேசும்போது 'படி அரிசி எங்கே' என்று கேட்டு பானையைக் கட்டி வைத்தார்கள். ஆனால் நாம் இன்று மற்ற மாநிலங்களுக்கு அரிசி அனுப்பும் அளவிற்கு தன்னிறைவு பெற்றிருப்பதை பாராட்டாததோடு மட்டுமல்லாமல் இந்த அரசைப் பற்றிக் குறைகூறிக் கொண்டிருக்கிறார்கள். வாதத்திற்காகப் பேசுகிறோம் என்ற அளவிலேயே அவர்கள் இந்த மன்றத்திலே பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

நேற்றையதினம் பேசிய அருமை நண்பர் துரைமுருகன் அவர்கள் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த பெண்மணிகள் எல்லாம் மதுவிலக்கு ரத்து செய்யப்பட்டதை வரவேற்கிறார்கள் என்று சொன்னார்கள். கடந்த 19-ம் தேதி முதலமைச்சர் அவர்கள் மது விலக்குத் திட்டத்தை ஒத்தி வைக்கிறேன் என்று அறிவித்த போது என்னுடைய தொகுதியில் உள்ள தாழ்த்தப்பட்ட மக்கள் விழா எடுத்துக் கொண்டாடி இருக்கிறார்கள். பெருமதிப்பிற்குரிய ஹாண்டே அவர்கள் கிராமத்திற்கு வந்து பார்த்தால் நிலைமை தெரியும். தாழ்த்தப்பட்ட சமுதாயத்திலுள்ள அனைவரும், பெண்கள் உட்பட என்னை வரவேற்கிறார்கள். இதற்காக நான் முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் 1962-ம் வருஷத் தேர்தலில் வெற்றி பெற்று துணைத் தலைவராக இருந்தபோது என்னுடைய தொகுதிக்கு வந்திருந்தார்கள். நாங்கள் அவரை வரவேற்கும் நேரத்தில் ஒடுகத்தூரில் இருந்து ஆம்பூர் செல்லுகின்ற மேம்பாலத்தைக் கட்டித்தர வழிவகைகள் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டோம். கலைஞர் அவர்கள் நன்றி தெரிவித்துப் பேசும்போது 'நான் தமிழகத்திற்கு அமைச்சராக வரும் நேரத்தில் அதனைக் கட்டித் தருகிறேன்' என்று கூறினார்கள். இப்போது மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் அதற்கான மதிப்பீடுகளைத் தயார் செய்து அனுப்பும்படி அதிகாரி





களுக்கு உத்தரவிட்டிருக்கிறார்கள். அதை உடனடியாகக் கட்டித்தர அரசு நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். என்னுடைய ஆம்பூர் தொகுதியிலே இருக்கும் பீடித் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பீடித் தொழிலாளர்களுக்கு சட்டபூர்வமான பாதுகாப்புக்கொடுக்க மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்தவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

பள்ளிகொண்டாவைப் பொறுத்தவரையில் ஏறத்தாழ 10,000 பேர் வசிக்கிறார்கள். அந்தப் பகுதியில் முஸ்லிம் சமுதாயத்தினர் தான் அதிகம். அங்கே ஒரு மருத்துவ நிலையம் ஊராட்சி ஒன்றியத்தால் நடத்தப்படுகிறது. அதற்கு மருத்துவர் இல்லை. அங்கே வாழும் மக்கள் மருத்துவ வசதிக்காக வேலூருக்கோ அல்லது ஆம்பூருக்கோ தான் செல்ல வேண்டும். கிட்டத்தட்ட அவர்கள் 16 மைல் மருத்துவ வசதி பெறுவதற்காகச் செல்ல வேண்டிய நிலை இருக்கிறது. இந்த நிலைமையைப் போக்குகிற வகையில், அரசு உடனடியாக அந்த ஊராட்சி ஒன்றிய மருத்துவ நிலையத்திற்கு ஒரு மருத்துவரைப் போட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆசிரியர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் திட்டத்தைப் பற்றி இந்த நிதிநிலை அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. 1969-70 ஆண்டிலே பயிற்சி பெற்றவர்கள் இன்னும் வேலையில்லாமல் இருக்கிறார்கள். உடனடியாக அவர்களுக்கு வேலை அளிக்க அரசு உத்திரவிடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். விவசாயப் பெருங்குடி மக்களுக்கு நீண்ட காலக்கடனும், குறுகிய காலக் கடனும் அளிக்கும் வகையில் ரூ. 4 கோடியை ஒதுக்கியிருக்கிறது, இந்த அரசு. இதைப் பார்க்கிறபோது இந்த அரசு உணவுத் துறையில் எத்தகைய கவனம் செலுத்தி வருகிறது என்பது தெரிகிறது. இந்த அரசு வந்த பிறகு தான் தமிழ்நாடு உணவுப் பிரச்னையில் தன்னிறைவு அடைந்து இருக்கிறது. விவசாயப் பெருங்குடி மக்களும் நல்ல முறையில் விவசாயம் செய்வதற்கும், உணவு உற்பத்தி செய்வதற்கும் உற்சாகமாக வருகிறார்கள். உணவு மற்ற மாநிலங்களுக்கு அனுப்பப்படுகிற அளவுக்கு இப்போது உணவு உற்பத்தி அதிகமாகி இருக்கிறது. ஆகவே விவசாயிகளுக்கு (மணியடிக்கப்பட்டது) . . . . பேசுவதற்கு வாய்ப்பளித்ததற்கு நன்றி கூறி முடிக்கிறேன்.

* **திரு. நா. கிருட்டிணன் :** சட்டப்பேரவை மாற்றுத் தலைவரவர்களே, என்னைப்போன்ற சாதாரண மக்களை இந்த மாமன்றத்திற்கு அனுப்பி, இப்படிப்பட்ட ஒரு நல்ல நிதிநிலை அறிக்கையை சமர்ப்பிக்கவும், அதன் மீது பேசுவதற்கு வாய்ப்பளித்த மறைந்த மாமேதை அறிஞர் அண்ணா அவர்களின் காலடியில் என் வணக்கத்தை செலுத்தி, என் முதற்பேச்சை ஆரம்பிக்கிறேன்.

[திரு. நா. கிருட்டிணன்] [1971 ஜூன் 26

தமிழக முதல்வர் அவர்கள் 1971-72-ம் ஆண்டுக்காக சமர்ப்பித்துள்ள நிதிநிலை அறிக்கையைப் பார்க்கிறபோது, இந்த நிதி நிலை அறிக்கை இதற்கு முன்னால் இந்த மாமன்றத்திலே சமர்ப்பிக்கப்படாத அளவுக்கு முற்போக்கு கொள்கையை உடையது என்று நான் கூறிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். இப்படிப்பட்ட ஒரு நிதிநிலை அறிக்கையை சமர்ப்பித்த கழகத் தலைவர் கலைஞர் அவர்களுக்கு என் தொகுதி மக்களின் வாழ்த்துதலையும், பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையில் ஏழை எளிய மக்கள் வாழ்வு உயரவும், விவசாயிகளின் வாழ்க்கைத் தரம் உயர்வதற்கும் பல திட்டங்களைக் கூறி இருக்கிறார்கள். இந்த நாட்டிலுள்ள ஏழைகள் வாழவேண்டுமென்பதற்காக நல்ல நோக்கத்தோடு 50,000 ஏக்கர் காட்டு நிலங்கள் அவர்களுக்குப் பகிர்ந்தளிக்க வகை செய்யப்பட்டிருக்கிறது. கல்விக்காகவும், ஏழை விவசாயிகளின் கடன் வசதிக்காகவும் பல கோடி ரூபாய்களை வாரிவழங்க திட்டம் தீட்டி உள்ளார்கள். இதற்காக எங்கள் தொகுதியின் சார்பில் நன்றி கூறிக்கொண்டு என்னுடைய தொகுதியிலுள்ள சில முக்கியமான பிரச்சனைகள் குறித்து சில வார்த்தைகள் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

என்னுடைய தொகுதி தஞ்சை மாவட்டத்தை மிஞ்சுகிற அளவுக்கு விவசாயத்தில் நல்ல வளம் பெற்றுள்ள தொகுதி என்று ஒப்புக்கொள்கிறார்கள். இந்த 20 ஆண்டு காலமாக என்னுடைய தொகுதி மக்களுக்கென்று ஆக்கப் பணிகள் திட்டம் எதுவுமே தீட்டப்படாமல் புறக்கணிக்கப்பட்டிருக்கிறது. என்னுடைய தொகுதியில் மோர்தானா, பத்தராப்பள்ளி அணைகள் கட்டவேண்டுமென்ற கோரிக்கை விடப்பட்டு ஆண்டுகள் பல ஆகியும் நிறைவேற்றப்படாமல் இருக்கிறது. அந்த அணைகள் கட்டப்பட்டால் மேட்டுப்பாங்கான நிலம் விவசாயத்திற்குப் பயன்படும். தஞ்சையைவிட பல மடங்கு உணவு உற்பத்தி செய்து தரமுடியும். இந்த அரசு அந்த அணைகளை கட்டித்தரவேண்டுமென்று மிகவும் பணிவாகக் கேட்டுக்கொள்கிறேன். இந்த அணைகளைக் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் நேரில் வந்து பார்த்தபோது சொன்னார்கள். அதை அவர்கள் கவனத்திற்கு மீண்டும் கொண்டு வர விரும்புகிறேன்.

அதே போன்று என்னுடைய தொகுதியிலே, குடியாத்தத்திலிருந்து, ஆம்பூர் செல்லும் வழியில் பாலாறு குறுக்கிடுகிறது. அதில் வருஷத்தில் 6 மாதகாலம் தண்ணீர் போவதால் மக்கள் போக்குவரத்து தடைபடுகிறது. அந்த வழியாகத்தான் அந்நிய நாட்டுச் செலவாணி பெற்றுத் தரக்கூடிய தோல், வட ஆற்காடு மாவட்ட கூட்டுறவு சர்க்கரை ஆலைக்குச் செல்லும் கரும்பு ஆகியவை செல்லவேண்டும். இப்படி 6 மாதகாலம் போக்குவரத்து தடைப்படுவதால் மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள்.



1971 ஜூன் 26]

ஆகவே, இதன் மீது ஒரு மேம்பாலம் கட்டித்தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று, குடியேற்றம், ஆம்பூர், செல்லும் வழியில், நரியம்பட்டுக்கு அருகில் அங்கேயுள்ள மலட்டாற்றில் ஒரு தரைப்பாலம் கட்டிக்கொடுக்க வேண்டும். குடியேற்றம்-ஆம்பூர் இடையே நரியம்பட்டு அருகில் தரைப்பாலம் கட்டவேண்டுமென்று அமைச்சர் அவர்களை நேரில் அழைத்துச் சென்றபோது ஒப்புதல் அளித்தும், இன்னும் அது நிறைவேற்றப்படாமல் இருக்கிறது. இந்த மலட்டாற்றில் உடனடியாக தரைப்பாலம் கட்டவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதற்கு செலவு பணமாக ரூ. 50,000-ஐ கொடுக்க வட ஆர்க்காடு கூட்டுறவுச் சங்கம் முன்வந்திருக்கிறது. அரசாங்கம் அதைப்பயன்படுத்தி அங்கு உடனடியாக ஒரு தரைப்பாலம் கட்டவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன், என்று கூறி, பேச வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றி கூறி அமர்கிறேன், வணக்கம்.

* **திரு. தாழை. மு. கருணாநிதி :** மதிப்பிற்குரிய மாற்றுத் தலைவரவர்களே, ஏழைகளின் இதய தெய்வமாக விளங்கும் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த இந்த நிதிநிலை அறிக்கை உண்மையிலேயே ஒரு சமதர்ம சமுதாயத்தை இந்த நாட்டிலே உருவாக்குகிற ஒரு நல்ல அறிக்கையாக இருப்பதைக் கண்டு நான் என்னுடைய தொகுதி மக்களின் சார்பாக வரவேற்கிறேன், வாழ்த்துகிறேன். அடித்தளத்து மக்களின் அன்பின் கண்போன்ற நம் கலைஞர் அவர்கள், ஏழைகளின் வாழ்வில் ஏற்றம் காணக்கூடிய வகையில் இந்த நிதிநிலை அறிக்கையை அளித்து இருக்கிறார். அதிலும் குறிப்பாக தஞ்சை மாவட்ட ஹரிஜன விவசாயிகளுக்கு அவர்கள் குடியிருக்கிற மனைகள் எல்லாம் அவர்களுக்கே பட்டா செய்து தரப்படும் என்ற சிறப்பான செய்தியைத் தெரிவித்து இருக்கிறார்கள். அங்கே வாழ்கிற ஆதித்திராவிட பெருங்குடி மக்கள் எல்லாம் நிலப்பிரபுக்களால் அடக்கப்பட்டு, ஒடுக்கப்பட்டு அங்கே மிக வறுமையில் வாழ்ந்து கொண்டு இருப்பவர்கள் இந்த அறிக்கையைப் பார்க்கிறபோது, இந்தச் சட்டத்தை பார்க்கிறபோது, நம்முடைய கலைஞர் அவர்களை பாராட்டுவார்கள் என்று சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, இப்போது வேலை வாய்ப்புகளில் 16 சதவிகிதம் ஒதுக்கியுள்ளதை, 18 சதவிகிதமாக மாற்றியதற்கு ஏழை ஆதித்திராவிட மக்களின் சார்பாக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். குறிப்பாக முன்பெல்லாம் மின்சார வசதிகள் வசதியுள்ளோர் வசிக்கும் பகுதியில் தான் செய்யப்பட்டது. அல்லது உயர்ந்த குடியினர் வசிக்கும் பகுதியில் தான் செய்யப்பட்டது. இப்போது, நம்முடைய தமிழக அரசு அந்த வாய்ப்பினை ஏழை எளிய ஹரிஜன மக்கள் வாழும் பகுதிகளில் செய்து வருகிறது. இப்படி ஏழை

மக்கள் வசிக்கும் பகுதிகளுக்கு மின்சாரம் வழங்கும் திட்டத்தை தீட்டிய தமிழக அரசை ஹரிஜன, ஆதித்திராவிட பெருங்குடி மக்களின் சார்பாக நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(திரு. நா. வீராசாமி தலைமை)

அடுத்து, சமுதாயத்தில் ஒதுக்கப்பட்ட தொழில்களைச் செய்யும் சலவைத் தொழிலாளிகள், சவரத் தொழிலாளிகள் போன்றவர்களுக்கு ஆயிரம் பேர்கள் அளவில் இலவசமாகக் கருவிகள் வழங்கப்படுகிறது என்று திட்டத்தை உருவாக்கிய கலைஞர் அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து பிச்சைக்காரர்கள் மறுவாழ்வுத் திட்டம், இந்தியத் துணைக் கண்டத்திலேயே எந்த மாநிலத்திலும் கொண்டுவர இயலாத திட்டமாக இருந்த ஒன்றை துணிச்சலாக கலைஞர் அவர்கள் தான் பிறந்த தினத்திலேயே சிறப்பான முறையில் செயல்படுத்த முன்வந்திருப்பதை நாம் பாராட்டுவதோடு, நாமெல்லாம் அதற்கு உறுதுணையாக இருந்து திட்டத்தைச் சிறப்புறச் செய்ய ஆவன செய்யவேண்டும் என்று கோருகிறேன்.

குடிசையில் வாழ்கிறவர்கள் குடிசையில்தான் வாழவேண்டும் என்ற நிலையை மாற்றி, குடிசை வாழ்பவர்கள் , கோபுரத்திலும் வாழலாம் என்ற நிலையை உருவாக்கிய நம்முடைய கலைஞரை, அதற்காக நாலு கோடி ரூபாயை திட்டத்திலே ஒதுக்கியிருப்பதற்காகப் பாராட்டுகிறேன். இப்படி உயர்ந்த சமதர்மதிட்டத்தை உருவாக்கியிருக்கும் கலைஞரை, அவருடைய ஆட்சியைப் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறோம். வாயளவில் சோஷலிசம் பேசிக் கொண்டு இருந்தவர்கள் எல்லாம் சோஷலிசத்தை உருவாக்க முடியாத நிலையில், உண்மையான சமதர்ம வாதியாகிய நம்முடைய கலைஞர் சோஷலிச வழியை உருவாக்க முடியும் என்பதை நிரூபித்திருப்பதற்காக பாராட்டவேண்டும். பஸ்கள் தேசீயமயமாக்கப்பட்டிருக்கின்றன. அதற்காக கலைஞரைப் பாராட்ட வேண்டும். மத்திய சர்க்காரில் ரெயில்வே பட்ஜெட் தனியாகச் சமர்ப்பித்து, அதிலே இருக்கின்ற குறைபாடுகளைத் தீர்த்திருக்கிறார்கள். அதே போன்று நம்முடைய போக்குவரத்துத் துறைக்கும் தனியாக பட்ஜெட் தாக்கல் செய்து, அதிலிருக்கும் குறைபாடுகளை நீக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எங்களுடைய திருவாரூர் தொகுதியில் ஒரு மகளிர் கல்லூரி அமைக்க வேண்டும். அப்படி அமைத்தால், நிச்சயமாக அங்கு வாழும் பெண்களுக்கு வசதியும் வாய்ப்புமாக இருக்கும். தஞ்சை மாவட்டத்தில் எங்கள் பகுதி நடுவில் அமைந்திருக்கிறது. திருவாரூர் அப்படி நடுவில் இருப்பதால் அங்கே ஒரு விவசாயக் கல்லூரியை அமைத்தல், அங்கு வாழும் விவசாயிகளுக்கு மிகச் சிறப்பான முறையில் திட்டங்களைத் தீட்டிக் கொடுக்கவும், ஆராய்ச்சி உண்மைகளைப் புரிந்து கொள்ளச் செய்யவும் சாதகமாக இருக்கும்.





அங்கே உள்ள வேலை வாய்ப்பற்ற தன்மையை மாற்றி அமைக்க, அங்கே தொழிற்சாலை அமைக்க வேண்டும் என்று மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களை கேட்டுக் கொள்கிறேன். அங்கே உள்ள வெட்டாற்றுக்கு பாலம் அமைக்க வேண்டும் என்றும், அதற்கான சிறப்பான திட்டத்தை உருவாக்கித் தந்து இருக்கின்ற கலைஞர் அவர்களைப் பாராட்டி, போற்றி விடை பெறுகிறேன், வணக்கம்.

* திரு. கோ. இளங்கோவன் : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, 1971-72-ம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையினை படித்தளித்த மாண்புமிகு முதல்வர் அவர்களை நான் பாராட்டுகிறேன். அவருடைய நிதி நிலை அறிக்கை எளிய, இனிய தமிழில் இருந்தது என்று பலரும் பாராட்டிப் பேசியிருக்கிறார்கள். அதே போன்று நானும் சொல்ல விரும்புகின்ற போது, பாவேந்தன் பாரதி சொன்னது போல்,

தமிழால் கலைஞர் தகுதி பெற்றதும்
தமிழ் கலைஞரால் தகுதி பெற்றதும்
என்னென்று சொல்வேன், என்னென்று சொல்வேன்

என்றுதான் சொல்லத் தோன்றுகிறது. அந்த அளவுக்கு இனிய தமிழில் படித்து அளிக்கப்பட்டது இந்த நிதி நிலை அறிக்கை; இந்த அறிக்கை நடையில் நடையில் மட்டுமல்லாமல், கவித்துச் செறிவிலும் சிறந்து விளங்குவது பாராட்டத்தக்கது. உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இடம் மனிதனுக்கு அவசியமாகிறது. இருக்க இடம், விடுதலை பெற்ற நாளிலிருந்து 1967-ம் ஆண்டு வரை, ஏறத்தாழ நலாயிரத்துச் சில்லரை இருப்பிடங்கள் ஏழை எளியவர்களுக்குத் தரப்பட்டிருக்கின்றன. ஆனால் அதே நேரத்தில் 1967-க்குப் பிறகு, 1971-க்குள்ளாக, ஏறத்தாழ 7,700-க்கு மேற்பட்ட ஏழை எளியவர்களுக்குக் கட்டித்தரப்பட்டிருக்கிறது என்றால், இந்த அரசு எந்த அளவுக்கு ஏழை எளியவர்களுக்காக கவலைப்படுகிறது என்பது தெள்ளத் தெளிவாக தெரிகிறது. அது மட்டும், நடப்பாண்டில் ஏறத்தாழ 10,000 இருப்பிடங்களைக் கட்டித்தர முன் வந்திருக்கிறது என்றால், சமதர்ம சமுதாயத்தை விரும்புகிற ஒருவன் இந்த அறிக்கையைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

அடுத்து, மனைக்கட்டுகள் நகர் புறங்களிலும் வழங்கப்படுவதோடு மட்டுமல்லாமல்

திரு. ஜே. ஜேம்ஸ் : சார், பாயிண்ட் ஆப் ஆர்டர். இப்பொழுது சபையில் கோரம் இல்லாமல் இருப்பதால், தொடர்ந்து நடத்துவது சரியில்லை. இது பற்றி தலைவர் அவர்கள் முடிவு செய்ய வேண்டும்.

மாண்புமிகு மாற்றுத்தலைவர் (திரு. நா. வீராசாமி) : 'கோரம்' மணி அடிக்கப்படும்.

(கோரம் மணியடிக்கப்பட்டு, போதுமான உறுப்பினர்கள் வந்த பிறகு அவையின் நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடந்தது.) .

திரு. கோ. இளங்கோவன்: கடந்த ஒன்றரை ஆண்டுக் காலமாக ஏறத்தாழ 2,30,000 மனைக்கட்டுகள் நாட்டுப்புறத்தில் உள்ளவர்களுக்கு வழங்கப்பட்டிருப்பதாக சொல்லப்பட்டிருக்கிறது. இது பாராட்டத்தக்கது. அது மட்டுமல்லாமல், குறிப்பாக தஞ்சை மாவட்டத்தில் ஏழை விவசாயிகள் குடிசை போட்டிருந்தது, அந்தக் குடிசைக்கு அவர்கள் சொந்தக்காரர்களாக இல்லாதிருந்தால், அவர்களுக்கு அந்த மனைக்கட்டுகள் சொந்தமாக்கப்படும் என்று திட்டமிட்டிருப்பது வரவேற்கத்தக்கது. உழைப்பவனுக்கு நிலம் சொந்தம் என்ற கருத்துப் பாராட்டப்படும் கருத்து. ஆனாலும் அது கொள்கை அளவில் கோஷ அளவில் தான் இருந்து வந்தது. சில பல ஆண்டுகளுக்குள் உழுபவனுக்கு பட்டா செய்து கொடுக்க முன்வந்திருக்கிறது இந்த அரசு. இரண்டு லட்சத்திற்கு மேற்பட்டவர்களுக்கு பட்டா வழங்கியிருப்பதைப் பாராட்டுகிறேன்.

அடுத்து காட்டு நிலம் என்ற பெயரால் காலி நிலங்கள் இருந்தன. அவைகளையெல்லாம் முறையாக உழுபவனுக்கு விடப்படுகிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. அந்த வகையில் ஏறத்தாழ 50,000 ஏக்கர் பட்டா செய்திருப்பதாக சொல்லப்பட்டிருக்கிறது. வரவேற்கிறேன், பாராட்டுகிறேன். ஆனால் அதே நேரத்தில் என்னுடைய தொகுதியில் மாண்புமிகு உறுப்பினர் சம்பத்து சொன்னது போல், சம்பனூர்கோவில் தொகுதியில் ஒரு பகுதி விடப்பட்டிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டுகிறேன்.

அடுத்தபடியாக, பிச்சைக்காரர்களுக்கு மறுவாழ்வு என்கிற திட்டத்தை பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். பல்லாண்டுக் காலமாக இதுபற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. குறளில், "ஈதல் இசைபட வாழ்தல் . . . ." என்றும் "பசி என்று வந்தால், ஒரு பிடி சோறு புசி என்று தந்து பாராப்பா, பசையற்ற உன் நெஞ்சில் இன்பம் உண்டாகும்', என்றும், 'பாருக்கு உழைப்பதே மேலான யோகம்' என்று பாரதிதாசனும் சொல்லியிருக்கிறார்கள். கம்பர், 'வண்மையில்லை ஓர் வறுமை இன்மையால்'. "அங்கே கொடுப்பார் இல்லை. ஏனென்றால், இரப்போர் இல்லை அங்கே" என்றும் சொல்லியிருக்கிறார். அந்த நிலை அவருடைய கற்பனை உலகத்தில் இருந்திருக்கலாம். அதை நனவாக்க வேண்டும் என்று நம்முடைய கலைஞர் புரட்சிகரமான திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

அடுத்தபடியாக, பேருந்துகளில் ஒருவர் 10-க்கு மேல் உரிமங்கள் பெற்றிருந்தால் அவை அரசுடைமை ஆக்கப்படும் என்ற புரட்சிகரமான திட்டத்தை நான் பாராட்டுகிறேன். அது போல, பயணிகள் பேருந்து நிறுவனங்கள் 50-க்கு மேல் உரிமங்கள் பெற்று இருந்தால், அவை அரசுடமை ஆக்கப்படும் என்று புரட்சிகரமான திட்டத்தை வரவேற்கிறேன்.

பேருந்துகள் நிலை பற்றி குறிப்பிடாமலிருக்க முடியவில்லை. என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில், நகராட்சிகள் இல்லை. பேரூராட்சிகள் தான் இருக்கின்றன. நகராட்சி





இருக்கிற பகுதியில் நகரப் பேருந்துகள் போகின்றன. அதனால், மக்கள் வசதி பெறுகிறார்கள். பேரூராட்சி இருக்கிற இடத்திலும் நகரப் பேருந்துகள் விட உரிமம் வழங்கப்பட்டால் வரவேற்பேன்.

மதுவிலக்கு பற்றிச் சொல்லி முடிக்க விரும்புகிறேன். மதுவிலக்கு திட்டத்தை ஒத்திப் போட்டிருக்கிறார்களே என்று பேசுகிற பொழுது, மாண்புமிகு உறுப்பினர் வள்ளுவரைப் பற்றிச் சொன்னார்கள். நான் புறநானூற்றைப்பற்றி சொல்ல ஆசைப்படுகிறேன். பறம்ப நாடு வளப்பம் பொருந்திய நாடு என்று சொல்லி வந்த கபிலர், பெருமையாகச் சொல்லுகிறார்

"மட்டு வாய் திறப்பவும் மைவிடை வீழ்ப்பவும்
அட்டான்றானைக் கொழுந்துவை ஊன் சோறும்
பெட்டால் கியும் பெருவளம் பழுனி" என்று

மது இருந்த ஜாடி திறந்தபடியே கிடக்குமாம். கரிய ஆட்டுக்கிடாய்கள் வெட்டி வீழ்த்தப்பட்டுக் கொண்டே இருக்குமாம். அப்படிப்பட்ட வளப்பம் பொருந்திய பறம்பு நாடு என்று. மது சங்க காலத்திலேயே இருந்திருக்கிறது. மதுவிலக்கு, கொள்கை அளவில் நல்ல திட்டம் என்றாலும், அவசியம் குறித்து ஒத்திப் போடுவதை வரவேற்கிறேன் என்று கூறி விடை பெறுகிறேன், வணக்கம்.

* திரு. ந. தர்மலிங்கம்: சட்டப் பேரவைத் மாற்றுத் தலைவர் அவர்களுக்கும் மற்றைய அமைச்சர்களுக்கும் எனது நன்றியைக் கூறி, குறிப்பாக என்னை வழிகாட்டி நடத்திய தெய்வம் பேரறிஞர் அண்ணா அவர்களுக்குத் திசை நோக்கி நன்றி தெரிவித்துக் கொள்ளுகிறேன். என்னுடைய வாழ்நாளில், இந்த மன்றத்துள் நுழைவதற்கு வழிகாட்டியாக இருந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் நன்றியைக் கூறி, 1971-72-ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை வரவேற்கிறேன். என்னுடைய தொகுதியிலுள்ள சில விஷயங்களை எடுத்துச் சொல்ல முன் வருகிறேன்.

பொதுவாக, தென்னார்க்காடு மாவட்டத்தில் மிகப் பின்தங்கிய பகுதியான என்னுடைய ரிஷிவந்தியம் தொகுதி மழை காலத்தில் தீவு போல காட்சியளிக்கிறது. பொதுவாக, நதிகள் வாழ வைக்கும் என்பார்கள். என் தொகுதியில் மயூரா நதி, மணிமுத்தா நதி என் தொகுதியைப் பிரித்து வைத்திருக்கிறது. அந்த இரண்டு நதிகளுக்கும், நமது தமிழக அரசு இந்த நிதி ஆண்டில், அந்த இரண்டு நதிகளுக்கும் இரண்டு பாலங்களை அமைத்துக் கொடுக்குமென்று மிக்க நம்பிக்கையுடன் இருக்கிறேன். என்னுடைய பகுதி மிகப் பின்தங்கிய காரணத்தால் இது வரை அரசினரால் எந்த விதமான அலுவலகமோ தொழிற்சாலையோ ஏற்படுத்தப்படவில்லை. கிராமப் பகுதிகள் மிகப் பின்தங்கி இருக்கிற காரணத்தால், தேர்தல் காலங்களில் தொகுதியைச் சுற்றிப் பார்க்கிற வகையில் அங்குள்ள சாலைகள் சீர் கேடான நிலையில் இருப்பதைக் கண்டேன். ஆகவே, தமிழக அரசு தகுந்த

[திரு. ந. தர்மலிங்கம்] [1971 ஜூன் 26

நடவடிக்கை எடுத்து சீர்கேடான நிலையில் இந்தச் சாலைகள் இராவண்ணம், இந்த நிதி ஆண்டிலேயே போதிய நிதியை ஒதுக்கி, என்னுடைய தொகுதியின் எல்லா பகுதிகளுக்கும் சாலை அமைத்துக் கொடுக்க வேண்டுகிறேன்.

என்னுடைய தொகுதியில் காணுங்காடு என்ற இடத்தில் சிறுமலை இருக்கிறது. அந்த மலையில் செம்புக் கனிகள் கிடைக்கின்றன. அது மத்திய சர்க்காரால் பரிசீலிக்கப்பட்டு வருகிறது. அந்தச் செம்பை மேலும் பரிசீலனைக்கு நமது தமிழக அரசு எடுத்துக் கொண்டு, மத்திய சர்க்கார் உதவியுடன் என்னுடைய தொகுதிக்கு ஒரு கனி வள செம்பு எடுக்கும் தொழிற்சாலையை அமைத்துத் தர வேண்டுமென்று நமது அரசை கேட்டுக் கொள்ளுகிறேன். சங்கராபுரத்திலிருக்கும் மணிமுத்தா நதியின் குறுக்கே ஒரு அணையைக் கட்டினால் பாண்டலம், அரியலூர், மருர் ஆகிய இடங்களில் நீர்ப்பாசனத்திற்கு வழி செய்து, சுமார் 50,000 ஏக்கர் புஞ்சை நிலத்தை சாகுபடிக்குக் கொண்டு வர முடியும். அதைச் செய்து தர வேண்டும் என்று தமிழக அரசை வேண்டிக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

***திரு. ஆ. பரந்தாமன் :** மாண்புமிகு சட்டப் பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, 1971-72-க்கான திருத்தப்பட்ட நிதி நிலை அறிக்கை மீது நடைபெறுகிற விவாதத்தில் நான் கலந்து கொண்டு பேசுவதற்கு வாய்ப்பளித்ததற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

மாண்புமிகு கலைஞர் அவர்கள், இன்றைய தினம் நிதி நிலை அறிக்கையை இந்த மாமன்றத்தில் சமர்ப்பித்து இருக்கிறார்கள். இந்த நிதி நிலை அறிக்கையை பொருளாதார கண்ணோட்டத்தில் பார்க்கிற நேரத்தில் இரண்டு அம்சங்கள் பூர்த்தி செய்யப்பட்டு இருக்கின்றன என்பதை நாம் பார்த்தாக வேண்டும். இந்த மாநிலத்திற்கு வருகிற வருவாய், அந்த வருவாயை வைத்துக் கொண்டு எப்படி நிதி ஒதுக்கப்படுவது என்பதுதான் இந்த இரண்டு அம்சங்களை நிதிநிலை அறிக்கை தன்னில் கொண்டு அமைந்திருப்பதைக் கண்டு நான் மிகவும் பெருமைப் படுகிறேன். என்னுடைய நன்றியை கலைஞர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இன்றைய தினம், இங்கே நிதிநிலை அறிக்கையின் மீது பல தோழர்கள் பல கருத்துக்களைத் தெரிவித்தார்கள், என்றாலும், கடைசியாக, என்னைப் பொறுத்த வரையில், பிச்சைக்காரர்கள் மறுவாழ்வு நிதிக்காக அமைக்கப்பட்ட அந்தத் திட்டத்திற்கு, ஒரு யோசனையாக தெரிவித்துக் கொள்ள விரும்புவது, அண்ணா அவர்களுடைய சமாதிக்கு அருகாமையில், நுழைவு வாயிலில் ஒரு உண்டியல் அமைத்து அதன் மூலமாக நிதி திரட்ட வேண்டுமென்று நான் என்னுடைய யோசனையை மிக மிகப் பணிவாக தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.



1971 ஜூன் 26] [திரு. ஆ. பரந்தாமன்]

அது மட்டுமல்ல. இன்னும், பொதுப்பணித் துறையினருக்கு நான் தெரிவித்துக் கொள்ள விரும்புவதெல்லாம் தோட்டங்களில் இருக்கிற பாதைகள் செப்பனிடப்படுவதை நெடுஞ்சாலை ஏற்க வேண்டுமென்று பார்க்கிற நேரத்தில், மாவட்ட வளர்ச்சி மன்றங்களில் இந்த தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டனவா என்று பார்க்கிறோம். மாவட்ட வளர்ச்சி மன்றங்கள் அந்தத் தீர்மானத்தை முடிவு செய்து அரசாங்கத்திற்கு அனுப்புகிற நேரத்திலே பல ஊராட்சித் தடங்கள் போதிய சலுகைகளைப் பெற முடியாத நிலைக்கு ஆளாக்கப்படுகிறது. ஆகவே, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுவது, நீங்கள் ஒரு குறிப்பிட்ட தொகையை இந்த ஆண்டுக்குச் செலவு செய்யப் போகிறோம், நெடுஞ்சாலைத் துறையில் பார்க்கிற பொழுது, எல்லா தடங்களும் வருகிறது. ஒன்றிரண்டு அமுலாகி இருந்தாலும், அனைத்து ஊராட்சித் தடங்களும் இந்தச் சலுகையைப் பெற வேண்டுமென்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

கூட்டுறவுத் துறையினருக்குப் பணிவாகத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். கலைஞர் அவர்களின் நிதிநிலை அறிக்கை, கூட்டுறவுத் துறையில் வேளாண்மைக்கு அன்று அவர்கள் பசுமைப் புரட்சி நடக்க வேண்டுமென்று எவ்வளவோ திட்டங்களைத் தீட்டினார். விவசாயி கடன் பெறுகிற நேரத்தில், கூட்டுறவு நில்வள வங்கி மூலம் பெறுகிறார்கள். அந்த நேரத்தில் கொடுக்கப் படுகிற கடன் 3 அல்லது 2 தவணைகளாகக் கொடுக்கப்படுகிறது. கடைசி தவணையைப் பெறுகிற நேரத்தில், விவசாயி வெள்ளாமை செய்திருக்கிறானா என்று பார்க்கிற பொழுது, அங்கே இருக்கிற கூட்டுறவுப் பதிவாளர் அவர்கள் நற்சான்று தரவேண்டும். அப்படித் தர 10, 15 நாட்கள் ஆகி விடுகிறது. கால தாமதம் ஏற்படுகிறது. ஆகவே, தகுதிகளை, பாப்பைப் பெற்றிருக்கிற நில வள வங்கி மேலாளர் அவர்களுக்கு அத்தகைய வாய்ப்பை அளிக்க வேண்டும். வழங்கும் வாய்ப்பைப் பெற வேண்டுமென்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

என்னுடைய தொகுதியைப் பொறுத்தரையில், குடியலாற்றுக்கு ஒரு கல்லணை அமைக்க வேண்டுமென்பதற்காக, பல ஆண்டுகளாக ஒரு யோசனை இருந்து வருகிறது. அதற்கு சென்னை மாநகராட்சி ஒப்புதல் அளிக்கிறதா என்று கேட்ட நேரத்தில் அவர்கள் சென்ற மாதத்தில் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி மணலூருக்கு அருகாமையில் கல்லணை ஒன்றைக் கட்டலாமென்று சொல்லி இருக்கிறார்கள். அதற்கான காரியங்களில் மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் நிச்சயமாக கருணை கூர்ந்து செயல்படுவார் என்று நம்புகிறேன். இந்த நிதி நிலை அறிக்கையை மனமார வரவேற்று விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி) :** பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, பேரவை மீண்டும் திங்கட் கிழமை (28 ஜூன் 1971) காலை 9 மணி அளவில் கூடும்.

**பின்னர் பேரவை ஒத்தி வைக்கப்பட்டது.**

A. Statutory Rules and Orders.

107. Notification issued with Roc. No. 175420/69-E3, dated the 19th January 1970, in regard to extension of certain provisions of the Tamil Nadu District Municipalities Act, 1920 in the entire area of Illuppur Town Panchayat, Tiruchirappalli district. [Laid on the Table of the House under section 179 (4) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

108. Notification issued with Roc. No. 179515/69-P1, dated the 7th February 1970 in regard to exclusion of certain areas from the existing Andiyur Town Panchayat in Bhavani taluk of Coimbatore district for constitution into separate panchayats by name "Chinnathambipalayam" and "Michelpalayam". [Laid on the Table of the House under section 179 (4) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

109. Notification issued with Roc. No. 159539/68-E3, dated the 5th December 1968 in regard to extension of certain provisions of the Tamil Nadu District Municipalities Act, 1920 in the entire area of Pammal Town Panchayat in Chingleput district. [Laid on the Table of the House under section 179(4) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

110. Notification issued with Roc. No. 184105/68-E3, dated the 24th December 1968, in regard to extension of certain provisions of the Tamil Nadu District Municipalities Act, 1920 in the entire area of Karumathampatti Town Panchayat in Coimbatore District. [Laid on the Table of the House under section 179 (4) of the Tamil Nadu Panchayats Act 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

111. Notification issued with Roc. No. 17683/70-E3, dated the 26th March 1970 in regard to extension of certain provisions of the Tamil Nadu District Municipalities Act, 1920 in the entire area of Mallapuram Town Panchayat in Dharmapuri district. [Laid on the Table of the House under section 179 (4) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

112. Notification issued with Roc. No. 89715/69-P2, dated the 4th February 1970, in regard to exclusion of A. Vadakkur area from Vanjinipatti Panchayat and its inclusion in the A Thekkur Panchayat. [Laid on the Table of the House under section 179 (4) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

113. Notification issued with G.O. Ms. No. 752, Home, dated the 15th March 1971 in regard to certain amendments to the Tamil Nadu Cinemas (Regulation) Rules, 1957. [Laid on the Table of the House under section 10 (3) of the Tamil Nadu Cinemas (Regulation) Act, 1955 (Tamil Nadu Act IX of 1955).]

B. Reports, Notifications and Other Papers.

*Nil*

## தமிழ் நாடு சட்டப் பேரவை

---

திங்கட்கிழமை, 1971 ஜூன் 28.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர், திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள்—விடைகள்.

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

*Fisheries Research Station at Mandapam*

* 66 Q.—THIRU K. T. K. THANGAMANI,
THIRU K. SUPPU
THIRU P. MALAICHAMY : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(a) whether the Government of India propose to shift the Fisheries Research Station at Mandapam to another State;

(b) if so, the steps proposed by the Government; and

(c) the number of representations received by the Government from representatives of Ramanathapuram District in this regard?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** (அ) இந்திய அரசு, மத்திய ஆழ்கடல் மீனள ஆராய்ச்சி நிலையத்தின் தலைமையிடத்தை மட்டும் மண்டபத்திலிருந்து கொச்சிக்கு மாற்ற முடிவு செய்துள்ளதே தவிர ஆராய்ச்சி நிலையத்தை மாற்றுவதற்கு அல்ல.

(இ) தமிழ்நாடு அரசு, மத்திய ஆழ்கடல் மீனள ஆராய்ச்சி நிலையத்தின் தலைமையிடத்தை வேறு இடத்துக்கு மாற்றுவதைப் பற்றி இந்திய அரசிடம் கடுமையாக எதிர்ப்புத் தெரிவித்துள்ளது. மத்திய அரசின் அந்நாள் உணவு. வேளாண்மைத் துறை அமைச்சர் திரு. ஜகஜீவன்ராம் அவர்கட்கும் அந்நாள் உணவு வேளாண்மைத் துறை மாநில அமைச்சர் திரு. அன்னாசாகிப், பி. ஷிந்தேக்கும் நேர்முகக் கடிதங்கள் கூட அனுப்பப்பட்டன. நம்முடைய முதலமைச்சர் அவர்களும், மத்திய ஆழ்கடல் மீனள ஆராய்ச்சி நிலையத்தின் தலைமையிடத்தை மண்டபத்திலிருந்து கொச்சிக்கு மாற்ற வேண்டுமென்னும் இந்திய அரசின் முடிவை நிறுத்திவைக்குமாறு இந்தியப் பிரதமருக்கு எழுதியுள்ளார். பிரதமரின் பதில் எதிர்பார்க்கப்படுகிறது.

(உ) இராமநாதபுரம் மாவட்ட பிரதிநிதிகளிடமிருந்து ஏறத்தாழ 12 முறையீடுகள் வந்துள்ளன.

திரு. கே. டி. கே. தங்கமணி : இராமநாதபுரம் மாவட்டம் பின் தங்கிய ஒரு மாவட்டமாக இருக்கும் நிலையில், மண்டபத்தில் உள்ள மீன்வள ஆராய்ச்சி நிலையத் தலைமையலுவலகத்தைக் கொச்சிக்கு மாற்றியதன் காரணத்தினால், அங்கிருக்கக்கூடிய பல தொழிலாளர்கள் குறைக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதையும். அட்மினிஸ்ட்ரேஷன் ஆபீசர் உட்பட தொழிலாளர்கள் பலர் மாற்றப்பட்டிருக்கிறார்கள் என்பதையும் அரசு அறியுமா?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** பல பேர் அங்கிருந்து மாற்றப்படவில்லை. இயக்குநர் அவர்களும், அவர்களுக்குத் துணையாக இருக்கக்கூடிய நான்கு எழுத்தர்களும்தான் மண்டபத்திலிருந்து கொச்சிக்கு மாற்றப்பட்டிருக்கிறார்கள்.

திரு. பெ. மலைச்சாமி : மீனள ஆராய்ச்சி நிலையம் எந்த ஆண்டிலிருந்து அங்கே இயங்கி வருகிறது? அதை அங்கிருந்து மாற்ற வேண்டும் என்று எந்தக் காரணத்தைக் கொண்டு மத்திய அரசு முடிவு செய்தது?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** 1949-ஆம் ஆண்டில் மண்டபத்தில் இந்த ஆராய்ச்சி நிலையம் துவக்கப்பட்டது. ஆனால், அதுகுறித்து, மத்திய அரசின் சார்பில் வந்த எஸ்டிமேட் கமிட்டியினர் இந்த நிலையத்தை வேறு இடத்திற்கு மாற்றவேண்டும் என்று கோரினார்கள். சென்னை, தூத்துக்குடி, கொச்சி, ஆகிய மூன்று இடங்களில் ஏதாவதொரு இடத்தில் மாற்றவேண்டும் என்று அவர்கள் கூறியிருக்கிறார்கள். இந்த நிலையத்தில் இயக்குநராக இருந்தவரும் இன்னபிற அதிகாரிகளும், இந்த நிலையத்தை மாற்ற வேண்டும் என்று எஸ்டிமேட் குழுவினரிடம் கோரிக்கையொன்றை முன்வைத்தார்கள். அதன்மீதுதான் குழுவினர் இந்த சிபாரிசைச் செய்திருக்கிறார்கள். அதற்குப்பிறகு அவர்கள் ஒரு தனிக் குழுவை அமைத்து, அந்தக் குழு மீண்டும் பரிசீலனை செய்தது. அந்த குழுவில் நமது அரசாங்கத்தின் மாநில மீனளத் துறை இயக்குநர் அவர்களும் அங்கம் பெறுகிறார்கள். அந்தக் குழு பரிசீலனை செய்து. இது மண்டபத்திலிருந்து கொச்சிக்கு மாற்றப்பட வேண்டும் என்று முடிவு கூறியிருக்கிறது. அப்பொழுது நமது மாநில மீனள இயக்குநர் அவர்கள் அதற்கு எதிர்ப்புக் குறிப்பை எழுதி வைத்திருக்கிறார்கள். இருந்தாலும் அது மாற்றப்பட வேண்டும் என்று அந்த குழுவினர் முடிவு எடுத்த காரணத்தினால், இயக்குநர் அவர்களும். அவர்களுக்குத் துணையாக இருந்த இரண்டு பேர்கள் மாத்திரம் அங்கே மாற்றப்பட்டிருக்கிறார்கள். நிலையம் மண்டபத்தில் இருக்கின்றது. ஹெட்க்வார்ட்டர்ஸ் என்று சொல்லப்படும் தலைமைப்பீடம் தான் கொச்சிக்கு மாற்றப்பட்டிருக்கிறது.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** அமைச்சரவர்கள் பதில் கூறும்போது, மத்திய அமைச்சருக்கு நமது அரசின் சார்பில் கடிதம் அனுப்பப்பட்டிருக்கிறது என்று கூறினார்கள். கடிதம் அனுப்பி எவ்வளவு நாள் ஆகிறது ? எத்தனை கடிதங்கள் அனுப்பப்பட்டிருக்கின்றன?





**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** கடிதங்கள் அனுப்பிய தேதி பற்றிய விவரம் இங்கே தற்சமயம் நான் சொல்வதற்கில்லை. ஆனால், கடந்த ஆண்டே இதுகுறித்து பிரதமருக்கு கடிதம் எழுதப்பட்டிருக்கிறது. இதற்கு முன்பு நானும் மின்சாரத் துறை அமைச்சரும் டில்லி சென்றிருந்தபோது மத்திய அரசின் அந்நாள் உணவு வேளாண்மைத் துறை அமைச்சர் திரு. ஜகஜீவன் ராம் அவர்களிடமும், அந்நாள் உணவு-வேளாண்மைத் துறை மாநில அமைச்சர் திரு. அன்னாசாகிப் ஷிந்தே அவர்களிடமும் பேசி வலியுறுத்தி வந்திருக்கிறோம். தலைமைப்பீடம் தான் கொச்சிக்கு மாற்றப்பட்டிருக்கிறது. அது மாற்றப்படுவதனால் ஏற்படும் கஷ்டங்களை எடுத்துச் சொல்லியிருக்கிறோம். ஆராய்ச்சி நிலையம் மண்டபத்தில் இருக்கிறது. இருந்தாலும், தலைப்பீடத்தைக் கூட மண்டபத்தில் வைக்கவேண்டும். மண்டபத்தில் அதற்குரிய வசதி இல்லை என்று கருதினால் சென்னையில் அதை வைத்துக் கொள்ளலாம் என்று எஸ்டிமேட் கமிட்டியினர் சிபார்சு செய்து இருக்கிறார்கள். சென்னையில் வைத்துக்கொள்ளலாம் என்று நாங்கள் மீண்டும் வற்புறுத்தி வருகிறோம்.

திரு. கே. டி. கே. தங்கமணி : மார்ச் மாதம் 22-ந் தேதி எழுதிய கடிதத்தில் இந்திய விவசாய ஆராய்ச்சி நிர்வாகக் குழுவின் முடிவுப்படி, மண்டபம் பிராந்திய நிலையமாக இருக்கும் என்று கூறியிருக்கிறார்கள். அப்படியானால் அந்தப் பிராந்திய நிலையத்தை விரிவுபடுத்துவதற்கும் இப்பொழுது ஸப்-ஸ்டேஷனாக இருக்கக் கூடியதை சென்னையை விரிவுபடுத்துவதற்கும் அதிகமான ஆராய்ச்சியாளர்களைக் கொண்டுவருவதற்கும் இடம் கொடுக்க வேண்டும் என்று மத்திய அரசை நமது அரசு வற்புறுத்துமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, இதுவரை மண்டபம் தலைமையிடமாகவும், அதற்குக் கிளைகளாக சென்னை, தூத்துக்குடி, எர்ணாகுளம், கள்ளிக்கோட்டை, பம்பாய் கார்வார், மங்களூர், விழிஞ்சம், காக்கிநாடா, போர்ட் ப்ளேர் ஆகிய இடங்களெல்லாம் இயங்கிவந்தன. நிலையத்தின் தலைமைப்பீடம் இப்பொழுது கொச்சிக்கு மாற்றப்பட்டு விட்டபடியால், சென்னை நிலையமும். மண்டபம் நிலையமும் கிளை நிலைய அந்தஸ்தைப் பெற்றிருக்கும். அதை விஸ்தரிப்பு செய்யும் செயற்குறிப்பு தற்போது இல்லை.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** தலைவர் அவர்களே, கழிந்த மார்ச் மாதம் சட்டமன்றம் நடைபெற்ற போது நான் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன். மத்திய அரசாங்கத்தில் இருந்து பதிலை எதிர்பார்த்துக்கொண்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் அப்போது சொன்னார்கள். இப்போதும் மத்திய அரசாங்கத்தின் பதிலை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம் என்று கூறுகிறார்கள். கழிந்த சட்டமன்றக் கூட்டத்திற்கும். இந்த சட்டமன்றக் கூட்டத்திற்கும் இடையே அரசாங்கம் இது சம்பந்தமாக எடுத்த நடவடிக்கை என்ன ?

[1971 ஜூன் 28

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** அரசாங்கம் இது சம்பந்தமாக மத்திய அரசாங்கத்திற்கு கடிதம் எழுதலாம். நேரில் வற்புறுத்தலாம். நாங்கள் பலமுறை கடிதம் எழுதியும், நேரில் வற்புறுத்தியும் இருக்கிறோம். மத்திய அரசாங்கம் பாராமுகமாக இருக்கிறார்கள். இதுமாத்திரம் அல்ல—எத்தனையோ விஷயங்களில் அசட்டை செய்துகொண்டிருக்கிறார்கள்.

**திரு. எம். தேவராசன்:** இதேமாதிரி குன்னூரில் இருந்த சத்து உணவு ஆராய்ச்சி நிலையத்தை ஹைதராபாத்திற்கும், உதகையில் இருந்த எபிக்ராபி நிலையத்தை மைசூருக்கும் மாற்றியிருக்கிறார்களே . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்தக் கேள்விக்கு அனுமதி மறுக்கப்படுகிறது.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** 22-ஆம் தேதி நடந்த கூட்டத்தில் 1971-72-க்கு ஆராய்ச்சிக்காக 27 கோடி ரூபாய் வரையில் ஒதுக்கி இருக்கிறார்கள். அப்படியானால் மண்டபத்திற்கும், சென்னைக்கும் அதில் எவ்வளவு கிடைக்கும் என்று சொல்ல முடியுமா?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** தனிக் கேள்வி போட்டால் தகவல் அளிக்கப்படும்.

**திரு. பெ. மலைச்சாமி:** மதுவிலக்கு ரத்தாகிற காரணத்தினால் மதுவுக்கு ஆட்டிறைச்சியைவிட மீனே அதிக சுவையுடையதாக இருக்கும் என்று கூறுகிறார்கள். மண்டபம் போன்ற இடங்களில் இருந்து வெளியிடங்களுக்கு அதிகமான மீன் விற்பனைக்கு அனுப்ப அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** மதுவையும், மீனையும் ஒன்றாகச் சுவைத்தவர்கள் சிபாரிசு செய்தால் அதுபற்றி பரிசீலிக்கப்படும்.

## அரிசன மக்கள் வாழும் பகுதிகளுக்கு வானொலிப் பெட்டிகள்

*** 67 வினா திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு அரிசனநல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தாழ்த்தப்பட்ட மக்கள் வசிக்கும் பகுதிகளுக்கு வானொலிப் பெட்டிகள் அரசு சார்பில் இலவசமாக வழங்கப்படுகின்றனவா?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** ஆம். ஆனால் இதற்கென்று ஒரு தனி திட்டம் உள்ளது. அத்திட்டத்திற்கிணங்க வானொலிப் பெட்டிகள் அரிசன பகுதிகளுக்கு இலவசமாக வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தின்படி ஆண்டுதோறும் எல்லா மாவட்டத்திலும், ஒவ்வொரு வட்டத்திலும் மிகவும் தூய நிலையில் உள்ள ஒரு அரிசன் குடியினருக்கு ரூ. 300 மதிப்புள்ள வானொலிப் பெட்டி அல்லது ஐந்து அம்பர் சர்க்காக்களை பரிசுப்பொருளாக வழங்கப்படுகின்றது.



1971 ஜூன் 28]

## *Provision of Radio sets to Harijan Hostels*

* 68 THIRU B. VENKATASAMY: Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(*a*) whether there is any proposal to provide radio sets to Harijan Hostels in Tamil Nadu; and

(*b*) if so, when they will be provided?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:**

(அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

**திரு. என். கிட்டப்பா:** தாழ்த்தப்பட்ட மக்கள் வசிக்கின்ற எல்லாப் பகுதிகளிலும் வானொலிப் பெட்டிகளை வழங்குவதற்கான ஒரு சிறப்புத் திட்டத்தை அரசு மேற்கொள்ள முன்வருமா? அதேபோல மதம் மாறிய கிறிஸ்தவர்கள் வசிக்கின்ற பகுதியிலும் வானொலிப்பெட்டி வழங்கப்படுமா?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** இந்தத் திட்டம் அரிசனக் குடியிருப்புகளில் எந்த அரிசனக் குடியிருப்பு சுத்தமாகவும், சுகாதார வசதியோடும் வைத்துக்கொள்ளப்படுகிறதோ அதற்கு ஒரு பரிசு அளிப்பது என்ற அடிப்படையில் ஆண்டுதோறும் ஒவ்வொரு மாவட்டத்திலும், ஒவ்வொரு வட்டத்திலும் ஒரு குடியிருப்பைத் தேர்ந்தெடுத்து, பரிசாக வானொலிப்பெட்டி வழங்குவதொன்றாகும். கிறிஸ்தவர்கள் குடியிருப்பு என்று தனியாக இல்லை. இந்து அரிசனங்கள், கிறிஸ்தவ அரிசனங்கள் சேர்ந்தே வசிக்கிறார்கள். ஆனால் எல்லா அரிசனக் குடியிருப்புகளுக்கும் வானொலிப்பெட்டி வழங்குவது என்றால் நிதி நிலை எந்த அளவுக்கு இடம் அளிக்கிறதோ அந்த அளவுக்கு, பின்னால் அப்படி ஒரு திட்டம் வகுக்க பரிசீலிக்கலாம்.

**திருமதி ஜோதி வெங்கடாசலம்:** தலைவர் அவர்களே, பல அரிசன காலனிகளுக்குக் கொடுக்கப்பட்ட இந்த ரேடியோ செட்டுகள் கெட்டுப்போய் பல மாதங்களாகியும் கவனிக்கப்படாமல் இருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** அப்படிப்பட்ட புகார்கள் எதுவும் வரவில்லை. வந்தால் கவனிக்கலாம், சுத்தமாகவும் சுகாதாரத்தன்மையோடும் இருக்கிற காலனி எது என்று பார்த்து நாம் அதற்கு பரிசாக வானொலிப்பெட்டி அளிக்கிறோம். பரிசாகக் கொடுத்ததைக்கூட அந்தக் காலனி மக்கள் ஒழுங்காக கவனித்துக்கொண்டு, பழுது ஏற்பட்டால் அதை ரிப்பேர் செய்து வைத்துக்கொள்ளாவிட்டால் என்ன செய்வது? அதைக் கூட அரசாங்கமே செய்து தரவேண்டுமென்று எதிர்பார்ப்பார்களானால் மக்கள் எப்படி முன்னேறுவார்கள்?

**திரு. என். இராஜாங்கம்:** தலைவர் அவர்களே, பஞ்சாயத்துகளில் அரிசனக் காலனிகளுக்கு வானொலிப்பெட்டி அமைத்துத் தருவதில்லை. அரிசன இலாக்கா மூலமாக அளிப்பது கூட

[1971 ஜூன் 28

சுத்தமாக இருக்கிற காலனிக்குப் பரிசு என்ற முறையில் வட்டத்திற்கு ஒரு காலனிக்கே அளிக்கிறார்கள். இப்படிப்பட்ட திட்டத்தினால் 150 ஆண்டுகள் ஆனாலும் கூட எல்லா அரிசன காலனிகளுக்கும் வானொலிப்பெட்டி அமைவது முடியாத காரியமாகும். ஆகவே அரசாங்கம் இதற்கென்று ஒரு சிறப்புத் திட்டத்தை ஏற்படுத்தி எல்லா அரிசனக் காலனிகளிலும் வானொலிப் பெட்டி அமைக்க ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : நான் முன்பு சொன்னபடி இந்தத் திட்டம் சுகாதாரத் துறையில் முதன்மையாக இருக்கிற கிராமத்திற்கு வானொலிப் பெட்டி பரிசளிப்பது என்பதுதான். இந்தத் திட்டத்தின் மூலம் எல்லாக் காலனிகளும் இந்தப் பரிசை வாங்க நல்லமுறையில் சுகாதாரத் தன்மையில் காலனியை வைத்துக்கொள்ள வேண்டுமென்ற ஊக்கத்தை அளிக்கும். இதைத் தவிர எல்லாக் காலனிகளுக்கும் வானொலிப் பெட்டி வழங்குவது என்கிற முறை இப்போது இல்லை.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, may I know from the Hon. Minister for Harijan Welfare the total number of radio sets supplied to the Harijan hostels in the Dharmapuri district?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : விடுதிகளுக்கு இப்படிப்பட்ட வானொலிப் பெட்டி கொடுக்கிற திட்டம் இல்லை. கொடுக்கவும் இல்லை.

திரு. சி. கணேசன் : சுத்தமாக வைத்திருக்கக்கூடிய காலனிக்கு வானொலிப் பெட்டி பரிசளிக்கப்படுகிறது என்று சொன்னார்கள். வேறு சலுகைகள் ஏதாவது அளிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : வானொலிப் பெட்டியைக் கொடுக்கிற திட்டம் இருந்து கொண்டிருக்கிறது. வேறுபொருள் கொடுக்கிற திட்டம் இப்போது இல்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி : விடுதிகளுக்கு வானொலிப்பெட்டி கொடுக்கிற திட்டம் இல்லை என்று சொன்னார்கள். பள்ளிகளில் கூட வானொலிப்பெட்டி அமைக்கப்பட்டிருக்கிறது. வானொலி மூலம் மாணவர்களுக்குப் பல நல்ல கருத்துக்கள் அளிக்கப்படுகின்றன. ஆகவே, விடுதியில் உள்ள மாணவர்களும் நல்ல பயனடைய வானொலிப் பெட்டி வழங்குவதில் உள்ள கஷ்டம் என்ன.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : படிப்பில் நேரத்தைச் செலவழிக்காது—இசை கேட்பதிலே நேரத்தைப் போக்கிவிடுவார்கள் என்பதுதான்.

திரு. ரா. ரா. முனுசாமி : சுகாதாரத் துறையில் மிக முன்னேற்றமாக இருக்கிற காலனியைத் தேர்ந்தெடுத்து அதற்குப் பரிசு என்ற முறையில் வானொலிப் பெட்டி வழங்கப்படுவதாகச் சொன்னார்கள். ஆயிரக்கணக்கான மக்கள் வாழ்கிற தாழ்த்தப்பட்டோர் காலனிகள் பல இருக்கின்றன. அந்த மக்களுடைய பொது அறிவு, கலை அறிவு வளர்ச்சியை முன்னிட்டு இது போன்ற காலனிகள் எல்லாவற்றுக்கும் வானொலிப் பெட்டி வழங்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.



1971 ஜூன் 28]

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : முன்பே ஒரு கேள்விக்குப் பதில் சொன்னேன். கலை நிகழ்ச்சிகளைக் கேட்கவோ, இசை கேட்கவோ, உல்லாசமாக பொழுதைப் போக்கவோ இப்போது வானொலிப் பெட்டி கொடுக்கிற திட்டம் இல்லை. சுகாதாரத்துறையில் முன்னணியில் இருக்கிற காலனிக்குப் பரிசு என்றால் போட்டி போட்டுக் கொண்டு அந்தப் பரிசைப் பெற ஊக்கம் பெறுவார்கள் என்கிற அடிப்படையில்தான் அது செயல்படுத்தப் பட்டு வருகிறது.

திரு. என். இராஜாங்கம் : தலைவர் அவர்களே, பரிசு கொடுக்கின்ற வானொலிப் பெட்டிகள் ஒரு தாலுகாவிலே எங்கோ ஓரிடத்தில் இருக்கிறது. ஒரு மாவட்டத்தை எடுத்துக் கொண்டால் அந்த மாவட்டம் முழுவதற்குமாக ஒரு பன்னிரண்டு இடங்களில் அல்லது இருபத்துநான்கு இடங்களில்தான் கொடுக்கிறார்கள். இதனால் அரசாங்கத்தின் கொள்கை என்னவென்றே புரிய வில்லை. ஆகவே, சுத்தமாக இருக்கின்ற இடங்களுக்குத்தான் கொடுக்கிறோம் என்று அரசாங்கம் சொன்னால், பரிசுகளின் எண்ணிக்கையைக் கூட்டித் தருவதற்கு அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : தலைவர் அவர்களே, அரசாங்கத்தின் கொள்கையை அறிந்திருக்கின்ற உறுப்பினர்கள், நலக்குழுவிலே, மாவட்ட நலக் குழுவிலே அங்கம் வகிப்பவர்கள் அரசாங்கத்தின் கொள்கையை மக்களின் மத்தியிலே எடுத்துச் சொல்ல வேண்டும். சுத்தமாக வைத்துக்கொள்வதற்காக அரசாங்கம் அளிக்கும் எந்தச் சலுகையாக இருந்தாலும், மக்களிடத்திலே அரசாங்கத்தின் திட்டங்களை எடுத்து விளக்கினால் நன்றாக இருக்கும். இந்தத் திட்டமே சரியான முறையில் மக்களுக்குத் தெரியாத காரணத்தினால்தான் பல கிராமங்களுக்கு இந்தப் பரிசுகளைக் கொடுக்க முடியாமல் இருக்கிறது. பல கிராமங்கள் இப்படிப்பட்ட பரிசுகளைப் பெற முடியாத நிலையில் இருக்கின்றன. ஆகவே, தொகுதிகளில் இருக்கின்ற உறுப்பினர்கள் இந்தத் திட்டத்தை எடுத்துச் சொன்னால் நல்லது. உறுப்பினர்கள் இம்மாதிரியான வானொலிப் பெட்டிகளை கிராமங்களுக்கு வாங்கித் தர முயற்சிக்கலாம்.

திரு. கு. காமாட்சி : தலைவர் அவர்களே, அரிசன கிறித்தவர்கள் மட்டும் வாழ்கின்ற பகுதிகள் என்னுடைய தொகுதியில் நிறைய இருக்கின்றன. இப் பகுதிகள் எல்லாம் தூய்மையாக இருப்பதால் அப் பகுதிகளுக்கு வானொலிப் பெட்டிகள் வழங்குவது குறித்து அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொள்ளுமா ?

[1971 ஜூன் 28

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதை மாவட்ட நலக் குழுவிலே தெரிவித்து வாரியலிப் பெட்டிகளை வாங்கித் தரலாம்.

**அரிசனங்களுக்கு கூட்டுறவுத் தோல் பதனிடும் தொழிற்சாலைகள்.**

*69 வினா—**திரு. கே. ஏ. வகாப் :** மாண்புமிகு அரிசனநல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

வேலை வாய்ப்பில்லாத அரிசன மக்களுக்குக் கூட்டுறவுத் துறையில் தோல் பதனிடும் தொழிற்சாலைகள் ஏற்படுத்தத் திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** இல்லை.

**திரு. கே. ஏ. வகாப் :** தலைவர் அவர்களே, வடார்க்காடு மாவட்டம் தோல் தொழிலிலே நல்ல முன்னேற்றமடைந்து அந்நியச் செலாவணியை நிறைய பெற்றுக் கொடுக்கிறது. தோல் தொழிற்சாலைகள் சுகாதார முறையில் இல்லாததால் துர் நாற்றம் வருகிறது. ஆகவே, அரசாங்கம் சுகாதார வசதியுள்ள தொழிற்சாலைகளை அமைத்துக் கொடுத்து, முதலாளிகளுக்கும் தொழிலாளர்களுக்கும் நன்மை ஏற்படுகின்ற விதத்தில் கூட்டுறவு சொசைடிகள் மூலம் வசதிகளைச் செய்து தருமா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து (திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, ஏற்கனவே 53 நகர கோவாபரேடிவ் சொசைடிகள் இருக்கின்றன. ஒவ்வொரு மாவட்டத்திலும் இந்த சொசைடி மூலம் நன்மைகளை ஏற்படுத்தித் தந்திருக்கிறோம். 1,859 பேர் இதில் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். மேலும் இது போன்ற ஒரு கூட்டுறவுச் சங்கத்தைத் துவக்குகின்ற எண்ணம் இப்போது பரிசீலனையில் இல்லை.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** தலைவர் அவர்களே, வடார்க்காடு மாவட்டத்திலும், திருச்சி மாவட்டத்திலும், மதுரை மாவட்டத்திலுள்ள திண்டுக்கல்லிலும் தோல் பதப்படுத்தும் தொழிற்சாலைகள் இருக்கின்றன. இப்போது புதிதாக இயந்திரங்களைப் புகுத்தியதால் தொழிலாளர்கள் பலர் வேலை இழந்திருக்கிறார்கள். அந்த மாதிரி தொழிலாளர்களுக்கு கூட்டுறவுச் சங்கத்தின் மூலமாக வேலைவாய்ப்பை ஏற்படுத்தித் தருமா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** தலைவர் அவர்களே, அதுகுறித்து அரசாங்கத்திற்கு முழுத் தகவல் கொடுத்தால் பரிசீலனை செய்து நடவடிக்கை எடுத்துக் கொள்ளலாம். தற்போது அதைப்பற்றிய குறிப்பு என்னிடத்தில் இல்லை.



1971 ஜூன் 28]

**செங்கற்பட்டு மாவட்டத்தில் வேளாண்மை வருமான வரி வசூல்.**

*70. வினா—**திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு உணவு-வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

செங்கற்பட்டு மாவட்டத்தில் 1966–67, 1967–68 ஆண்டுகளில் விவசாய வருமான வரி குறிப்பிட்ட காலத்தில் செலுத்தாதவர்கள் எவ்வளவு பேர் ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :**

| வருடம் | வரி செலுத்தாதவர்களின் எண்ணிக்கை |
|---|---|
| 1966-67 | 116 |
| 1967-68 | 163 |

**திருமதி த. ந. அனந்தநாயகி :** தலைவர் அவர்களே, நிலத்திற்கு உச்ச வரம்பு இருக்கின்ற காரணத்தினால் அக்ரிகல்சரல் இன்கம் டாக்ஸ் இருப்பதே அவசியமில்லை. ஆகவே, அதை ரத்து செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொள்ளுமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, அக்ரிகல்சரல் இன்கம் டாக்ஸ் தேவையில்லை என்பது அம்மையார் அவர்களுடைய கொள்கையாக இருக்கலாம். அது அவசியம் என்பது அரசாங்கத்தின் கருத்து.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** தலைவர் அவர்களே, அக்ரிகல்சரல் இன்கம் டாக்ஸ் பாக்கி எவ்வளவு என்பதைச் சொல்ல முடியுமா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, 1966-67-ல் ரூ. 21,622.56 யை, 1967-68-ல் ரூ. 20,865.18 யை.

**திரு. கே. ஏ. வகாப் :** தலைவர் அவர்களே, விவசாய வருமான வரி கொடுக்காதவர்கள் பேரில் மிகவும் கெடுபிடி நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்ற பரவலான எண்ணம் இருப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா? அந்தக் கெடுபிடியைக் குறைக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படுமா?

**மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, விவசாயிகளின்மீது எடுக்கப்படுகின்ற நடவடிக்கைகள் கெடுபிடி என்று சொல்வதற்கு இல்லை. வரிகளைக் கொடுத்துவிட்டால் நடவடிக்கை என்ற பேச்சுக்கே இடம் இருக்காது.

**திரு. பெ. மலைச்சாமி :** தலைவர் அவர்களே, இத்தனை பேர்கள் வரி செலுத்தாமல் இருப்பதற்குக் காரணம் என்ன ? வரி செலுத்துவோர் தாமதமா, அல்லது அதிகாரிகளின் குறைபாடு காரணமா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, முதல் ஆண்டில் புயல் அடித்ததுதான் காரணம். இரண்டாவது ஆண்டில் ஏற்பட்ட வறட்சி காரணமாக இப்படி ஏற்பட்டது.

[1971 ஜூன் 28

**திருமதி த. ந. அனந்தநாயகி:** தலைவர் அவர்களே, 12½ ஸ்டாண்டர்டு ஏக்கர்களுக்குமேல் நிலங்கள் வைத்திருப்பவர்கள் விவசாய வருமான வரி கட்டி வந்தார்கள். இப்போது அந்த உச்சவரம்பை 7½ ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று ஆக்கிவிட்டீர்கள். இதனால் விவசாயிகள் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, மீண்டும் அதை 12½ ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று உயர்த்த அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** இப்போதைக்கு இல்லை.

*Compaints against Special Commercial Tax Officer, Tirunelveli.*

*71 Q.—DR. H. V. HANDE: Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state—

(a) whether a petition, dated 9th May 1970 has been received from a few villagers of Rajakrishnapuram in Nangunery taluk of Tirunelveli district regarding the corrupt practices of the Special Commercial Tax Officer, Tirunelveli; and

(b) if so, whether any action has been taken thereon?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:**

(அ) ஆம்.

(இ) மனுவில் அடங்கியுள்ள குற்றச்சாட்டுகள் புலனாய்வு செய்யப்பட்டு வருகின்றன.

*Appointment of Government Pleader for Madras City.*

*72 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether there is any proposal to appoint a Government Pleader for Madras City; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

*Industrial Estate at Hosur.*

*73 Q.—THIRU B. VENKATASAMI: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether there is any proposal to start an Industrial Estate at Hosur in Dharmapuri District; and

(b) if so, when it will be started?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** (அ) & (இ) இத்திட்டம் பரிசீலனையில் இருக்கிறது.

THIRU K. S. KOTHANDARAMIAH: The sanction of industrial estate at Hosur is pending for the last so many years May I know from the Hon. Minister when he is going to sanction it?



1971 ஜூன் 28]

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தலைவர் அவர்களே, நான் அன்றைக்கே பதில் சொன்னேன். சுமார் 6 லட்சம் ரூபாய் செலவில் அமைக்கத் திட்டம் தயாரிக்கப்பட்டது. ஹோசூரிலும், கிருஷ்ணகிரியிலும் இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்களை அமைப்பதற்குப் பயன்படாத சூழ்நிலை இருப்பதை கனம் அங்கத்தினர் அவர்கள் வந்து பார்த்தார்கள். இதைப் பற்றி ஆழ்ந்து சிந்தித்துப் பார்த்த பிறகுதான் முடிவு சொல்லப்படும்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: Has any land been acquired for Hosur to start an industrial estate?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தலைவர் அவர்களே, சுமார் 12 ஏக்கர் 34 சென்டு நிலம் அதனுடைய தேவைக்காக வாங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

THIRU K. M. SUBRAMANIAM: May I know from the Hon. Minister for Industries whether the buildings in all industrial estates in Tamil Nadu have been occupied or whether people are not coming forward to occupy certain industrial estates?

MR. SPEAKER: This is about Hosur.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** பெரிய நகரங்களிலே இண்டஸ்ட்ரியல் எஸ்டேட் கட்டிடங்களுக்கு கிராக்கி இருக்கிறது. மொபசல் பகுதிகளில் கட்டப்பட்ட இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்டுகளில் இடம் காலி இருக்கிறது.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: If the said land of 12 acres has not been put to proper use, why should not Government think of giving it back to the owners?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தலைவர் அவர்களே, இதுபற்றி இப்போது சொன்னார்கள். 1966-லே எடுக்கப்பட்ட முடிவு. கிருஷ்ணகிரியிலே தெரிகின்ற முடிவைப் பார்த்து இதை மறு பரிசீலனை செய்யலாம்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** தலைவர் அவர்களே, இது மிகவும் பின்தங்கிய மாவட்டம். 1966-ம் வருஷத்திலே திட்டம் போட்டு 12½ ஏக்கர் நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்ட பிறகு இதை ஆரம்பிக்காமல் இருப்பது கவலை தருவதாக இருக்கிறது. இது எப்போது ஆரம்பிக்கப்படும் என்ற உத்தேச தேதியாவது சொல்ல முடியுமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தலைவர் அவர்களே, ஆரம்பிக்க வேண்டாமென்றுதான் இப்போது பதில் சொன்னேன். கிருஷ்ணகிரியில் நடத்த முடியாத சூழ்நிலை இருக்கிறது. ஆகவேதான் இதைப்பற்றி மறுபரிசீலனை செய்யவேண்டுமென்று சொன்னேன்.

THIRU K. S. KOTHANDARAMIAH: The Hon. Minister said hat because Krishnagiri industrial estate is not functioning properly they are considering about Hosur. My submission is Hosur is different. Conditions in Hosur and Krishnagiri differ

in so many respects. I am confident that if an industrial estate is started in Hosur, it will work properly. May I know from the Hon. Minister when he is going to start an industrial estate at Hosur?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இதுபற்றி இப்படிப்பட்ட வாதங்கள் கிளப்பப்படும் என்றுதான் நம்முடைய அரசு புதிய கொள்கையை வகுத்திருக்கிறது. நாம் நிலத்தை வாங்கிக்கட்டிக் கொண்டு பின்னாலே வருவார்களா, வரமாட்டார்களா என்று பரிசோதிப்பதைவிட யார் யார் முன் வருகிறார்களோ அவர்களுக்கு ஹயர் பர்சேஸ் என்ற முறையில் கொடுக்கலாம் என்ற முடிவிற்கு வந்திருக்கிறோம். கனம் அங்கத்தினர் அவர்கள் ஹோசூரில் எத்தனைபேர்கள் இன்டஸ்டிரியல் எஸ்டேட் வேண்டுமென்று கேட்கிறார்கள் என்று தகவல் கொடுத்தால் அதைக் கட்டிக்கொடுக்கத் தயாராகயிருக்கிறோம்.

**திரு. பெ. மலைச்சாமி :** தலைவரவர்களே, தமிழகத்தில் சில பகுதிகளுக்குச் சலுகையளிக்க அரசாங்கம் முன் வந்திருப்பதாகத் தெரிகிறது. இப்படிப்பட்ட சலுகை புதிதாகத் தொடங்கும் தொழிற்சாலைகளுக்கு மட்டும்தானா, அல்லது ஏற்கனவே நடந்து கொண்டு வருகின்ற பழைய தொழிற்சாலைகளுக்கும் இந்தச் சலுகைகள் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** மாநில அரசும், மத்திய அரசும் பல சலுகைகள் தருகின்றன. சில சலுகைகள் புதிதாகத் தொடங்கப்படும் தொழிற்சாலைகளுக்கும், இருக்கின்ற ..தொழிற்சாலையை விஸ்தரிக்கும்பொழுது எக்ஸ்பான்ஷன் ஸ்கீம் என்ற வகையில் அவைகளுக்கும் இது பொருந்தும்.

**திரு. ஏ. சி. நரசிம்மன் :** தலைவரவர்களே, இப்பொழுது சென்னையில் இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்டுகளுக்கு கட்டிடம் கொடுக்காமல் இடத்தை மட்டும் தருவதாகச் சொல்லப்படுகிறது. ஏன் அங்கெல்லாம் கட்டடம் கட்டிக் கொடுக்கப்படவில்லை?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இரண்டு திட்டமும் இருக்கிறது. அரசாங்கம் கட்டிடம் கட்டிக் கொடுத்து கிண்டியில் அம்பத்தூரில் வந்திருக்கிறது. டெவலப்ட்பிளாட்ஸ் என்ற முறையில் நாமே வாங்கிக்கொடுத்து அவர்கள் விருப்பம்போல் கட்டிக்கொள்ள அங்கீகாரம் கொடுக்கிறோம், அதற்குரிய பண உதவியும் செய்கிறோம்.

*Paper Factory in Denkanikotta.*

* 74 Q.—THIRU B. VENKATASAMI : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether there is any proposal to start a paper factory at Denkanikotta in Dharmapuri district; and

(b) if so, when it will be started?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.





THIRU K. S. KOTHANDARAMIAH : May I know from the Hon. Minister for Industries the quantity of bamboo sent to Seshasayee Mills which is producing paper from Denkanikotta forest?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** மின்சாரத்துறை அமைச்சரிடத்தில் கேட்டால் காட்டிலாக்காவிலிருந்து அந்தப் புள்ளி விபரங்களைச் சேகரித்துக் கொடுப்பார்கள்.

**திரு. கே. ஏ. வகாப் :** தலைவரவர்களே, இப்பொழுது நம்முடைய தமிழகத்திலிருக்கும் சர்க்கரை ஆலைகளிலே அந்த சர்க்கரையானது பகாஸ் என்று சொல்லப்படுவது அதிகமாக வீணாகிறது. அவற்றையெல்லாம் ஒன்று சேர்த்து அந்த இடத்திலே ஒரு காகித ஆலை ஆரம்பிக்கும் எண்ணம் உண்டா? அதைப்பற்றி அரசு ஆலோசிக்குமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** வடார்க்காடு மாவட்டத்திலே ஒரு தனி நபர் இதுபோன்ற முயற்சியில் ஈடுபட முன்வந்திருக்கிறார். அவர்களுக்குத் தேவையான ஆதரவு தருவதாக அரசு கூறியிருக்கிறது.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** சார், பேப்பர் ஃபேக்டரி ஆரம்பிப்பதற்குத் தமிழக அரசே லைசென்ஸ் கொடுக்க முடியுமா? அல்லது இதற்கும் மத்திய அரசைத்தான் எதிர்பார்க்க வேண்டுமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** புதிதாக வந்திருக்கிற உத்தரவுப்படி இதற்கும் லைசென்ஸ் வாங்க வேண்டும்போல் தோன்றுகிறது. ஆனால், இந்தப் பேப்பர் தொழிற்சாலையைப் பொறுத்தவரையில் மத்திய சர்க்காரே ஏராளமாகத் தொடங்க வேண்டுமென்று அதற்காக கார்ப்பரேஷன் அமைக்க முன்வந்திருக்கிறார்கள். நம்முடைய மாநிலத்திலுள்ள வசதி வாய்ப்புகளை ஆராயச் சொன்னார்கள். நாம் அதைப்பற்றி காட்டிலாக்கா அதிகாரிகள், தொழிலதிபர்கள் இடையே கருத்தரங்கு அமைத்து முடிவெடுக்கப்பட்டது. குறைந்தபட்சம் ஒரு இலட்சம் ஏக்கராவில் வேட்டில், மூங்கில் மரங்கள் உற்பத்தி செய்யும் வாய்ப்பிருந்தால்தான் புதிய தொழிற்சாலைக்கு வாய்ப்பிருக்கும்.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** தலைவரவர்களே, பேப்பர் தொழிற்சாலைக்குத் தேவையான பேம்பு போன்ற மூலப்பொருட்கள் ஏராளமாக இருந்தால் அவை கிடைக்கும் இடங்களில் பேப்பர் தொழிற்சாலை ஆரம்பிக்க முன்வருவார்களா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இதுபற்றித்தான் இப்பொழுது சொன்னேன். ஒரு இலட்சம் எக்கராவில் புதிதாக உற்பத்தி செய்யும் வாய்ப்பிருந்தால்தான் இப்போதைக்குப் புதிய தொழிற்சாலை ஏற்பட வாய்ப்பிருக்கும்.

[1971 ஜூன் 28

திரு. நா. வெ. குருசாமி : தலைவரவர்களே, மதுரை மாவட்டம் ஆண்டிப்பட்டி, வருஷநாடு பகுதிகளில் மரங்கள் பயிரிடப்படுவதால். பேப்பர் தொழிற்சாலை ஒன்றை அங்கே அமைக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு செ. மாதவன் : வருஷ நாட்டு நிலங்களை இப்பொழுது சொந்தமாக்கப் போராட்டம் நடந்து வருகிறது. அதைப்பற்றித்தான் அரசாங்கம் பரிசீலித்து வருகிறது.

திரு. ஜே ஜேம்ஸ் : தலைவரவர்களே, கன்னியாகுமரி ஜில்லாவில் டயர், டியூப் போன்ற இரப்பர் பொருள்களை உற்பத்தி செய்வதற்கான மூலப்பொருளான இரப்பர் ஏராளமாக உற்பத்தி செய்யப் படுகிறது. அங்கே இரப்பர் பேக்டரி அமைக்க அரசாங்கம் முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு செ. மாதவன் : இது பேப்பர் தொழிற்சாலையைப்பற்றிய வினா. அந்தப் பகுதியிலே யாராவது அதுபோன்ற முயற்சியெடுக்க முன்வந்தால் அரசாங்கம் சேர்ந்து ஒத்துழைக்கத் தயாராக இருக்கிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, இந்த பேப்பர் தொழிற்சாலைக்கு யாருக்காவது உரிமம் வழங்கப்பட்டு திரும்பப் பெற்றிருக்கிறதா, அப்படியானால் விவரம் என்னவென்று அமைச்சரவரவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அந்த விவரங்கள் இப்பொழுது என்னிடத்தில் இல்லை.

திரு. எம் தேவராசன் : தலைவரவர்களே, நீலகிரி மாவட்டம் கூடலூர் பகுதியில் ஏராளமாக மூங்கில் கிடைக்கிறது. அங்கே பேப்பர் தொழிற்சாலை அமைக்க ஏதாவது திட்டம் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்போதைக்கு இல்லை.

### கோவை மாவட்டத்தில் சிமிட்டித் தொழிற்சாலை

*75. வினா—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கோவை மாவட்டம், பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை தாலுக்காக்களில் சிமிட்டித் தொழிற்சாலை ஒன்றை ஏற்படுத்தும் சாத்தியக்கூறுகளை ஆராயும் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

திருமதி த. ந. அனந்தநாயகி : சார், டால்மியாபுரத்தில் அரசாங்கம் ஆரம்பித்த பைலட் ப்ராஜக்ட்டில் லாபமா அல்லது நஷ்டமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : பைலட் ப்ராஜக்ட் என்று அவர்களே கேட்டு விட்டதால் லாப நஷ்டம் என்று அதிலே இருக்காது. புதிய முறை ஆராய்ச்சி செய்யப்பட்டது. ஆராய்ச்சி வெற்றியடைந்தது என்ற முடிவுக்கு வரப்பட்டது. ஆராய்ச்சியின் பயனை தமிழ்நாட்டுக்குப் பயன்படாது என்ற முடிவுக்கு வந்து இப்போதைக்கு உற்பத்தி செய்வதை நிறுத்தி வைக்கலாம் என்ற முடிவை எடுத்திருக்கிறோம்.



1971 ஜூன் 28]

திரு கே. டி. கே. தங்கமணி : தலைவரவர்களே. சாத்தூர் அருகில் சமீபத்தில் துவக்கப்பட்ட சிமெண்ட் பேக்டரி எந்த முறையில் செயல்படுகிறது? எந்த அளவிற்கு உற்பத்தி செய்கிறது? ரேட்டெட் கேபாசிட்டியில் எப்பொழுது உற்பத்தி துவங்கும்?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அரசாங்கத்திற்குச் சொந்தமான ஆலங்குளம் பேக்டரி பற்றிக் கேட்கிறார்கள் என்று கருதுகிறேன். அது இப்பொழுது தொடங்கி, நடந்து வருகிறது. இரண்டு கில்ன்கள் போடப்பட்டிருக்கின்றன. இரண்டும் உற்பத்தி தொடங்கியிருக்கிறது. இருக்கின்ற பிரச்னையெல்லாம் உற்பத்தி செய்யும் சிமெண்டுக்குச் சந்தை கிடைப்பதிலே தகராறு இருக்கிறது.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்தில் தொழிற்சாலை அதிகம் இல்லாததால் சிமெண்ட் தொழிற்சாலை ஒன்றை அங்கு துவக்குவதற்கு அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் தமிழ்நாட்டிலே உற்பத்தியாகும் சிமெண்டை வெளி மாநிலங்களுக்குச் சென்று விற்கவும், வெளிநாட்டிற்கு அனுப்பவும் இக்கட்டான நிலையில் இருக்கிறோம். இப்போதைக்கு நம்முடைய அரசின் கோரிக்கையை ஏற்று மத்திய அரசு விலைக் கட்டுப்பாட்டை வைத்திருக்கிறார்கள். இதை எடுத்து விட்டால் நம்முடைய மாநிலத்திலே உற்பத்தியாகும் சிமெண்டிற்கு விலை கிடைக்கும் வாய்ப்பில்லாமல் போகும். ஆகவே இப்போதைக்கு மேலும் சிமெண்ட் தொழிற்சாலை தொடங்குவதாக இல்லை.

திரு. ஏ. சி. நரசிம்மன் : தலைவரவர்களே, ஆலங்குளம் சிமெண்ட் தரமான சிமெண்டாக இருப்பதால் அரசாங்கத்திற்குச் சொந்தமான காரியாலயங்களில் அத்தகைய சிமெண்டைப் பயன்படுத்த வேண்டுமென்றும், நகராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்களில் அவர்கள் கட்டிடங்கள் கட்டும்பொழுது இந்தச் சிமெண்ட்டைப் பயன்படுத்த வேண்டுமென்றும், அதேநேரத்தில் விளம்பரம் செய்யப்பட வேண்டுமென்றும் இந்த அரசு உணர்கிறதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : உற்பத்தி செய்வதற்குத்தான் நமக்கு உரிமை. அதை விற்க நமக்கு உரிமை இல்லை. அந்த உரிமை மத்திய அரசுக்கு இருக்கிறது. யார் யாருக்கு அலாட் செய்கிறார்களோ அவர்களுக்குத்தான் விற்க வேண்டும். இந்த அரசாங்கத்தின் வேண்டுகோளை ஏற்று மத்திய சர்க்கார், ஆலங்குளம் சிமெண்ட்டிற்குத் தேக்கம் ஏற்படாமல் பார்த்துக்கொள்ள உதவி செய்கிறது.

[1971 ஜூன் 28

**திரு. கோவை செழியன்:** தலைவரவர்களே, காங்கேயம், தாராபுரம் பாதையில் ஊதியூர் மலை என்று இருக்கிறது. அந்த மலையில் கிடைக்கும் கற்கள் சிமெண்டிற்குத் தேவையான சிறந்த கற்கள் என்று நிபுணர்கள் கூறியிருக்கிறார்கள். எனவே, சிறிய முறையிலே அந்த இடத்தில் சிமெண்ட் தொழிற்சாலை ஆரம்பிக்கும் எண்ணம் அரசுக்கு உண்டா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** ஆலங்குளத்தில் பெரிய தொழிற்சாலை ஆரம்பித்தே இப்பொழுது கஷ்டப்படுகிறோம். எனவே, சிறிய தொழிற்சாலைக்கு இப்பொழுது செல்ல வேண்டாமென்று நினைக்கிறோம்.

**திருமதி. த. ந. அனந்தநாயகி:** சார் உற்பத்தியாகும் சிமெண்டிற்குத் சந்தை கிடைக்கவில்லை என்று கவலைப்பட்டார்கள் அமைச்சரவர்கள். ஆகவே, அந்தச் சிமெண்டைக்கொண்டு தமிழ் நாடு பூராவும் சிமெண்ட் ரோடு போட முன்வருவார்களா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** கனம் அங்கத்தினர் அவர்கள் அதிகமாக ஆசைப்படுகிறார்கள். அப்படிப் போடுவதற்குத் தேவையான பணம் கிடைக்கும்பொழுது அதைப்பற்றிச் சிந்திக்கலாம்.

**திரு. ரா. ரா. முனுசாமி:** தலைவரவர்களே, தென்னார்க்காடு மாவட்டத்தில் செஞ்சி பகுதியில் மூலப்பொருள்கள் ஏராளமாகக் கிடைக்கிறது. இதை ஆராய்ச்சி செய்து அங்கே சிமெண்ட் தொழிற்சாலை அமைக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** எல்லா மாவட்டத்திற்கும் நான் சொன்ன பதில் பொருந்தும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. ஒற்றிவைப்புத் தீர்மானம்.

### வாணியம்பாடியில் நடந்த துப்பாக்கிச் சூடு குறித்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர். பொன்னப்ப நாடார் அவர்கள் கீழ்க்கண்ட ஒற்றிவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள்:

'I move that the business of the House do stand adjourned to discuss about a matter of urgent public importance, namely, the police firing in Vaniyambadi on the evening of 27th June 1971.'



1971 ஜூன் 28]

***திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** தலைவரவர்களே, இந்த அவசர முக்கியமான காரியத்தைப்பற்றி இந்த மன்றத்திலே விவாதிக்க வேண்டுமென்று இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறேன். நேற்று வாணியம்பாடியிலே இரண்டு கோஷ்டிகளிடத்திலே மோதல் ஏற்பட்டதால் போலீசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்யவேண்டிய துரதிருஷ்டமான நிலை ஏற்பட்டுவிட்டது என்று எனக்கு வந்த தகவலின்படி நான் அறிகிறேன். இந்தத் துப்பாக்கிப் பிரயோகம் நடந்து ஐந்திற்கும் மேலானவர்கள் காயமுற்றதாகவும், வேறொரு இடத்தில் ஜெயவேலு என்பவர் உயிர்நீத்ததாகவும், வெட்டுக் காயங்களினால் உயிர் நீத்ததாகவும் எனக்குத் தகவல் இருக்கிறது. இம்மாதிரியான சண்டை சச்சரவுகள் அந்தப் பட்டணத்திலே இன்னும் நீடித்தால் பலத்த கஷ்டம் பொதுமக்களுக்கு ஏற்படும் என்று கருதுகிறேன்.

இதிலே குறிப்பாக பதட்டமான நிலைமை இன்று இருக்கிறது. மேலும் துரதிருஷ்டவசமாக சம்பவங்கள் நடைபெறாமல் இருக்க தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். சண்டை சச்சரவுகளைத் தவிர்க்க வேண்டும். அதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் தீவிரமாக எடுக்க வேண்டும். இது ஒரு முக்கியமான விஷயம் என்பதால், சபையின் இதர நடவடிக்கைகளை ஒத்தி வைத்து, இதை விவாதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

***மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, இந்தச் சம்பவம் பற்றி எனக்கு வந்துள்ள தகவல்களை ஒட்டிய கருத்துக்களை, மாண்புமிகு காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் திரு. பொன்னப்ப நாடார் தந்துள்ள ஒத்திவைப்புப் பிரேரணைக்கு விளக்கமாக சில வார்த்தைகளில் சொல்லுகிறேன்.

24—6—71 மாலை முஸ்லீம் நபராகிய மாலிக் என்பவர் ஆற்றங்கரையிலுள்ள ஒரு குடிசையில், வாணியம்பாடி கொல்லத் தெருவைச் சேர்ந்த சுலோச்சனா என்கின்ற ஆசாரிப் பெண்ணை அழைத்துச் சென்று இருக்கிறார். இதைப் பார்த்த சிட்டி, துரைசாமி என்பவர்கள் சேர்ந்து பலரைக் கூட்டுவித்து, மாலிக் என்பவரிடமிருந்து சுலோச்சனாவை அழைத்துச் சென்று, லோகநாத நாயுடு என்பவருடைய வீட்டில் வைத்தனர். லோகநாத நாயுடு வீட்டில் இது சம்பந்தமாகப் பஞ்சாயத்து நடந்தது. இதையெல்லாம் பார்த்த மாலிக்கின் நண்பர் நவாப் என்னும் 24 வயதுடைய முஸ்லீம் இளைஞர் 'பஞ்சாயத்தெல்லாம் என்ன வேண்டியிருக்கு' என்று வெளியில் நின்று சத்தம் போட்டுக் கொண்டிருந்தார். அந்த அளவில் அன்றையதினம் கலவரம் எதுவும் நடைபெறவில்லை. சுலோச்சனா என்கிற பெண்ணையும் பெற்றோர்களிடத்தில் ஒப்படைத்தனர்.

25—6—71, 26—6—71 இவ்விரு நாட்களிலும் தொடர்ந்து எந்நிகழ்ச்சியும் நடைபெறவில்லை.

[1971 ஜூன் 28

27—6—71-ம் நாளன்று பிற்பகல் 2 மணியளவில் சுலோச்சனாவை மீட்டுச் செல்வதில் பங்கு கொண்ட துரைசாமி, நவாப் இவர்களுக்குள் வாய்ச்சண்டை ஏற்பட்டு, சண்டை முற்றிக் கடைசியில் அடிதடியில் முடிந்தது. துரைசாமி தாக்கப்பட்டதாகக் கேள்வியுற்ற இந்துக்கள் சிலர், நவாப் வீடு இருக்கும் கொல்லத் தெருவில் (முஸ்லிம் பகுதி) போய் மூன்று குடிசைகளுக்குத் தீ வைத்துள்ளனர். தொடர்ந்து முஸ்லீம்களில் ஒரு பகுதியினர் இந்துக்கள் வசிக்கும் இடத்திற்குச் சென்று இரண்டு மூன்று குடிசைக்கு தீ வைத்திருக்கின்றனர். தொடர்ந்து பிற்பகல் 2 மணி முதல் 5 மணி வரை இரு பகுதியினருக்கும் இடையில் ஆங்காங்கே தாக்குதல்கள் நடைபெற்றன. மாலை 5½ மணியளவில் இந்துக்கள் பகுதியில் முஸ்லீம்கள் போய் கலவரம் செய்து கொண்டிருக்கும்போது, தாக்குதல்கள் பலமாக நடைபெற்றுக்கொண்டிருந்தன. நிலைமையைச் சமாளிக்க முற்பட்ட போலீசார் மீதும் கல்லெறிய ஆரம்பித்தனர். போலீசார் எவ்வளவோ எச்சரித்தும் கூட்டத்தினர் கலைந்து செல்லவில்லை. பின்னால் போலீஸ் சார்ஜெண்ட் ஒருவர் துப்பாக்கியினால் மூன்று முறை வானத்தில் வெறுமனே சுட்டிருக்கிறார். அதில் கூட்டத்தினர் எவரும் கலைந்து போகவில்லை. பின்னால் போலீசார் மீது கூட்டத்தினரைப் பார்த்து மூன்று முறை சுட்டிருக்கிறார்கள். இதில் ஐந்து பேர்கள் காயமடைந்தனர். போலீசார் மீது கல்லெறிந்ததன் காரணமாகப் போலீசாரில் மூவருக்குக் காயம் ஏற்பட்டது.

காயமடைந்த ஐந்துபேர்களும் (அப்துல் பாட்சா, அன்வர் பாட்சா, அப்துல் கபூர், அப்துல்லா, கலீல்) நேற்றிரவு வேலூர் ஆசுபத்திரிக்குக் கொண்டு போகப்பட்டனர். வேலூர் ஆசுபத்திரியில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

பின்னால் நேற்றிரவு 9½ மணியளவில் பெரியபட்டு என்னும் இடத்தில் (வாணியம்பாடி நகர எல்லைக்குள்ளேயே) இருந்த தேங்காய்க் கடைகள் சேதமடைந்தன. இத்தாக்குதலில் ஜெயவேலு—சுமார் 20 வயதுடையவர்—கத்தியால் குத்தப் பட்டு சம்பவ இடத்திலேயே மரணமடைந்தார். மேலும் இத்தாக்குதலில் காயமடைந்த செந்தாமரை, சந்திரன் என்கின்ற இருவர் வேலூர் ஆசுபத்திரியில் சேர்க்கப்பட்டனர். அதில் செந்தாமரை என்பவருக்குப் பலமான காயம் ஏற்பட்டிருந்ததால் ஆசுபத்திரியில் இன்று காலை 5½ மணியளவில் செந்தாமரை மரணமடைந்தார். காயமடைந்த சந்திரன் வேலூர் ஆசுபத்திரியில் சிகிச்சை பெற்று வருகிறார்.

பெரியபட்டு சம்பவத்திற்குப் பின்னால் ஒரு கூட்டம் வாணியம்பாடி சப்ட்ரெஷரிக்குச் சென்றிருக்கிறது. அங்கு காவலுக்கு இரு காவலர்கள் மட்டுமே நின்றிருந்தனர். கூட்டம் டிரஷரிக்குள் வராமல் தடுக்க இரண்டு முறை சுட்டிருக்கின்றனர். இதில் எவருக்கும் காயம் இல்லை.



1971 ஜூன் 28]

கலவரம் ஆரம்பித்திருக்கிற செய்தி அறிந்ததும் வேலூரிலிருந்து 11 செக்ஷன் போலீஸ்படை கொண்டு வரப்பட்டு வாணியம்பாடியில் உள்ளது. இப்போது கலவரம் எதுவுமில்லை. நிலைமை சாதாரணமாகியுள்ளது. வட ஆற்காடு போலீஸ் சூப்பிரண்டண்ட் வாணியம்பாடியில் உள்ளார். செய்தி சென்னைக்குக் கிடைத்ததும், வட-சரக டி.ஐ.ஜி. அவர்களும் வாணியம்பாடி சென்றுள்ளார். மாவட்ட ஆட்சித் தலைவர் இன்று காலையில் வாணியம்பாடி சென்றுள்ளார்.

இப்படிப்பட்ட நிலை வகுப்புக் கலவரத்தில் போய்விடாமல் அரசு பார்த்துக்கொள்ளும். அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. ஐ.ஜி. அவர்கள் இன்று காலை 8.15 மணிக்கு புறப்பட்டு, வாணியம்பாடிக்குச் சென்றிருக்கிறார். இந்த நிலையில் ஒத்தி வைப்புத் தீர்மானம் தேவையில்லை என்று அறிவிக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு முதல் அமைச்சர் விளக்கத்திற்குப் பிறகு, இந்த ஒத்திவைப்புத் தீர்மானம் அவசியம் என்று கருதப்படவில்லை என்பதால் இதற்கு அனுமதி மறுக்கப் படுகிறது.

மாண்புமிகு உணவு வருவாய்த் துறை அமைச்சர் இப்பொழுது சட்ட முன் வடிவை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளவேண்டும் என்று கோருவார்கள்.

## (3) நடைமுறைக் கேள்வி

பொது விற்பனை வரி சட்ட முன் வடிவை, கூடுதல் வரிவிதிப்பு நிதிநிலை அறிக்கை செயற்குறிப்புகள் மீது, முடிவு எடுக்குமுன், ஆய்வுக்கு எடுத்துக் கொள்வது குறித்து.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** பாயின்ட் ஆப் ஆர்டர் சார். இந்த தமிழ்நாடு 1971-ம் ஆண்டு பொதுவிற்பனை வரி திருத்த மசோதா ஏற்கனவே பட்ஜெட் சமர்ப்பிக்கும்போது புதிதாக வரி போடப் படும் என்று குறிப்பிட்டதை ஒட்டி சட்ட பூர்வமாக உறுதிப் படுத்த கொண்டு வந்திருக்கிறார்கள். ஏற்கனவே ஒரு அவசரச் சட்டம் இருந்திருந்தால், அந்த அவசரச் சட்டத்தைச் சட்டமாக ஆக்க இப்படிப்பட்ட மசோதாவை, எந்த நேரத்திலும் அவைமுன் கொண்டுவர அரசுக்கு அதிகாரம் உண்டு. ஆனால், பட்ஜெட் சம்பந்தமாக 3 சதவீதம் என்று இருந்த விற்பனை வரியை 3½ சதவீதம் ஆக அதிகப்படுத்துவதற்காக, ப்ரபோஸல்ஸ், ஆலோசனைகள் வைத்திருக்கிறார்கள். அந்த பட்ஜெட் விவாதம் இன்னும் முடியவில்லை. நாளை நிதி அமைச்சராக உள்ள முதல் அமைச்சர் பதில் சொல்லக்கூடிய காலத்தில், என்னென்ன வரி விதிப்புகளை ரத்து செய்வோம் என்று தெரிவிப்பார் என்பது நமக்கு தெரியாது. ஏற்கனவே நாடாளுமன்றத்தில் இம்மாதிரியான பல வரிகள் விதிப்பதில் பதில் சொல்லும்போது நிதி அமைச்சர்கள் ரத்து செய்திருக்கிறார்கள். ஆகவே, இப்பொழுது இந்த மசோதாவை எடுப்பது குறைந்த அளவுக்கு நான் சொல்ல வேண்டுமென்றால், it is premature நாளை என்ன பதில்

சொல்லுகிறார்கள் என்பது தெரிந்த பிறகு இந்த மசோதாவை எடுப்பதுதான் பொறுத்தமாக இருக்கும். அது மாத்திரமல்ல, ஏற்கனவே பட்ஜெட் ப்ரபோஸல்களுக்கு அப்பாற்பட்டும் 2 சதவீதம் என்பது 2½ சதவீதம் என்று அதிகரித்திருக்கிறார்கள். இந்த நிலையில் இந்த மசோதாவை இப்பொழுது எடுப்பது out of order என்று சொல்ல விரும்புகிறேன்.

*மாண்புமிகு பேரவைத் தலைவர்* : எப்படி 'அவுட் ஆப் ஆர்டர்' என்று தெளிவாகச் சொல்லவில்லை. யூகங்களைச் சொல்லுகிறீர்களே தவிர, எப்படி முறையானது அல்ல என்பதற்கான காரணங்களை உங்களால் சொல்ல முடியுமா?

THIRU K. T. K. THANGAMANI : It will be in order if this piece of legislation . . .

MR. SPEAKER : The hon. Member must explain how it is not in order.

THIRU K. T. K. THANGAMANI : It is not in order because to-day if we pass this legislation . . .

*மாண்புமிகு பேரவைத் தலைவர்* : நான் தங்களிடம் தெரிந்து கொள்ள விரும்புவது, இதற்கான 'ப்ரீசிடெண்டுகள்' இருக்கின்றனவா, இதற்கான தடைகள் இருக்கின்றனவா? உதாரணம் கொடுக்க முடியுமா?

*திரு. கே. டி. கே. தங்கமணி* : 'மே' யைப் பார்த்தேன்; ஏற்றுக் கொள்ளப் படாத நிலைதான் இருக்கிறது. 'மேஸ் பார்லிமெண்டரி ப்ராக்டிஸ்' படி ஒரு மசோதாவை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள எல்லா அம்சங்களும் இருக்கவேண்டும். நான் உங்கள் முன் சமர்ப்பிப்பது, இந்த மசோதா கொண்டு வரும்போது, எல்லா அம்சங்களும் பூர்த்தியாக இல்லை என்பதுதான். மசோதாவை அறிமுகப்படுத்தும்போதே, இதை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளும் போது தடுத்து நிறுத்தாமல் போனால், அது சரியாக இருக்காது என்பதை உணர்ந்தேன். நாளைக்கு நிதி அமைச்சர் எந்த எந்த வரிவிதிப்புக்களை வாபஸ் பெறுவார்களோ? அப்பொழுது இந்த சட்டம் நிறைவேற்றியதற்கு அர்த்தம் இல்லாமல் போகும். அதைத்தான் சொல்ல விரும்புகிறேன்.

DR. H. V. HANDE : This is just to help the Hon. Speaker to arrive at a conclusion. I am reinforcing the point made by the hon. Member Mr. Thangamani.

The problem is this. There is a Sales Tax Bill now before us. We have been having budget discussion all these days and we have been arguing and placing our case in respect of taxation measures announced in the budget. The Hon. Chief Minister or Finance Minister may be convinced of our arguments and may pass certain orders in pursuance of our plea rescinding certain taxation proposed. But if before the Hon. Chief Minister's reply, this Bill is passed, it effectively shuts the door for any further consideration of taxation measure. You, Sir, wanted certain



precedents. May I tell you, Mr. Speaker, that in the Lok Sabha there had been instances of certain taxation measures having been withdrawn. Even last year, in this House, the Hon. Minister had withdrawn a proposed taxation measure. There are precedents of taxation measures being withdrawn because of pursuasive arguments of hon. Members in the Opposition. A similar situation may arise now also. The Hon. Chief Minister or Finance Minister may reconsider question and tomorrow orders may be passed rescinding the original taxation proposals in the budget speech. But if we pass this Bill now, we are making it impossible for the Hon. Chief Minister or Finance Minister to show any such concession. Therefore, will it not be in order if this Bill is not taken up today but after two or three days, after the Hon. Chief Minister replies to the discussion. He may show some concession after hearing our persuasive arguments

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Apart from the point raised by Dr. Hande, I would like to mention that in the budget there was only mention that general sales tax will be raised from 3 per cent to 3½ per cent. The budget speech never spoke of increase of taxation on component parts from 2 per cent to 2½ per cent. When that is the case, how can they bring in a fresh measure of taxation now?

MR. SPEAKER. That is a matter or detail.

*மாண்புமிகு திரு. மு. கருணாநிதி* : தலைவர் அவர்களே, எழுந்துள்ள பிரச்சினைபற்றித் தாங்கள் இதிலே சட்ட நுணுக்கக் குறைபாடு இருக்கிறதா என்று கேட்டதற்கு அதற்குத் தகுந்த எந்த பதிலும், விளக்கமும் அளிக்கப்படவில்லை என்பதைத் தாங்கள் அறிவீர்கள். மாண்புமிகு உறுப்பினர் தங்கமணி அவர்களும், டாக்டர் ஹாண்டே அவர்களும் எடுத்துச் சொல்லியது ஒருவேளை நிதியமைச்சராக இருக்கிற நான் சலுகைகள் ஏதாவது அளிக்கக் கூடும், அதை இன்று நிறைவேறுகிற இந்த மசோதா கெடுத்துவிடக் கூடும் என்று கூறினார்கள். இந்த மசோதா விவாதிக்கப்படுகின்ற நேரத்தில் இங்கு நான் இருக்கத்தான் போகிறேன். இன்றைக்கு நீங்கள் எடுத்துச் சொல்லுகிற கருத்துக்கள் என்னுடைய மனத்திற்கு உகந்ததாகப்படுமானால் நான் அமைச்சரவையைக் கலந்து ஒரு நாளைக்கு முன்பே, இன்றைக்கே அளிக்கக்கூடிய சலுகைகளை அளிப்பேன் என்றும் எதிர்பார்க்கலாம். ஆகவே, மசோதாவை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளக்கூடாது என்பது சரியல்ல. சலுகைகளை அளிப்பதாக இருந்தால் இன்றைக்கே நானோ, என்னுடைய அனுமதி பெற்று மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களோ இந்த மசோதாவை நிறைவேற்றுகிற நேரத்தில் சலுகைகளை அளிக்கக் கூடும். அதை ஒரு காரணமாகக் கொண்டு இந்த மசோதாவை எடுத்துக் கொள்ளுவது சரியல்ல என்று கூறுவது சரியாக இருக்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*மாண்புமிகு பேரவைத் தலைவர்* : திரு. தங்கமணி அவர்கள் இந்த மசோதாவை இங்கு கொண்டுவர வேண்டுமா. வேண்டாமா

[1971 ஜூன் 28

என்பதைப் பற்றி ஒரு ஒழுங்குப் பிரச்சினை எழுப்பினார்கள். அதிலே என்ன தடை இருக்கிறது என்பதை அவர்கள் விளக்காமல் இதனால் ஏற்படக்கூடிய சாதக பாதகங்களை விளக்கினார்கள். அதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சலுகைகள் அளிப்பது அல்லது அளிக்காமல் இருப்பது என்பது இந்த மசோதாவைப் பரிசீலிக்கிற எந்தக் கட்டத்திலும் இருக்கலாம் என்று விளக்கினார்கள். ரிப்பில் பண்ணக்கூட அதிகாரம் இருக்கிறது. நிதிநிலை அறிக்கை விவாதிக்கப்பட்டு நிறைவேறுவதற்கு முன்னால் இந்த மசோதாவைக் கொண்டு வந்து நிறைவேற்றலாமா என்று திரு. தங்கமணி அவர்கள் கேட்டார்கள். மாண்புமிகு தங்கமணி அவர்கள் குறிப்பிட்டது இங்கிலாந்து நாட்டினுடைய நடைமுறை. இங்கிலாந்து நாட்டு நடைமுறைக்கும் நம்முடைய நாட்டு நடைமுறைக்கும் இடையே பெரிய வேறுபாடு ஒன்று உண்டு. இங்கிலாந்து நாட்டிலே இந்த மாதிரியான மசோதாக்கள் எல்லாம் கமிட்டிகளிலே விவாதிக்கப்பட்டு நிறைவேற்றப்படுகின்றன. மே'ஸ் பார்லிமெண்டரி பிராக்டிஸ் 531வது பக்கத்திலே—

Bills for imposing taxes or Consolidated Fund or Appropriation Bills are expressly exempted from the operation of the standing order and are committed automatically to a Committee of the whole House. என்று இருக்கிறது. அதே மாதிரியாக

*Finance Bills and other Bills founded on Ways and Means resolutions.*

When reports of the Committee of Ways and Means in its taxing capacity have been agreed to by the House, bills, the most important of which is the Finance Bill, are ordered to be brought in to carry the resolutions into effect.

The resolutions on which a Finance Bill (and occasionally other taxing bills) is founded may comprise resolutions of a Committee of the whole House with the Queen's recommendation as well as Ways and Means resolution.

என்ற வகையிலே இருப்பதால் இந்த வகையைச் சேர்ந்த மசோதாக்களை பொறுத்தவரை இங்கிலாந்து நாட்டுப் பாராளுமன்ற முறையை நாம் பின்பற்றுவது என்பது அவ்வளவு சரியானது அல்ல. நம்முடைய பாராளுமன்றங்கள், சட்ட மன்றங்கள் பின்பற்ற வேண்டிய முறைகள் பற்றி—

Kaul and Shakdher எழுதிய Practice and Procedure of Parliament. என்ற நூலில் கூறப்பட்டிருக்கிறது. எந்தக் கட்டத்திலும், எந்த நிலையிலும் இந்த மசோதாக்களைக் கொண்டு வரலாம் என்பதற்காக ஆதாரங்கள் இருக்கின்றன. அதில்

The Finance Bill is introduced immediately after the presentation of the Budget by the Minister of Finance on the last working day of February every year. Usually one Finance Bill is introduced in a financial year. But in the election years, as the Budget is presented twice, two Finance Bills are introduced, one in the outgoing Lok Sabha and another in the new Lok Sabha.



1971 ஜூன் 28]

At any time after the introduction in the House of a Finance Bill, the Speaker may allot a day or days, jointly or severally, for the completion of all or any of the stages involved in the passage of the Bill by the House but under the present practice the allocation of time is recommended by the Business Advisory Committee and is subsequently approved by the House.

என்று அனுசரிக்கும் முறைகள் இருப்பதால் இந்த மசோதா இந்தக் கட்டத்தில் வருவதில் எந்த மாதிரியான தவறும் இல்லை என்று கூறி, மசோதாவில் உள்ள கருத்துக்களின் அடிப்படையில் மாற்றம் செய்வதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதுபோல் எந்தக் கட்டத்திலும் வாய்ப்பு இருக்கிறது என்பதால் இந்த மசோதாவைக் கொண்டு வந்திருப்பது முறையாகத்தான் (ஆர்டர்) இருக்கிறது என்று தீர்ப்புக் கூறுகிறேன்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : On a point of Order, Sir. In the budget there is mention of increase of general sales tax from 3 to $3\frac{1}{2}$ per cent. But the Bill brought forward now by the Hon. Minister says that tax on component parts will be increased from 2 to $2\frac{1}{2}$ per cent. This fact is not mentioned in the budget. Without mentioning it in the budget, will it be in order to bring a taxation measure before the House now?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, வரவு செலவுத் திட்டத்திலே பொது விற்பனை வரியை 3 ல் இருந்து 3½ சதவிகிதமாக உயர்த்தியிருப்பதுபற்றி நிதியமைச்சர் அவர்கள் படித்தார்கள். காம்பொனென்ட்சுக்கு 2-ல் இருந்து 2½ சதவிகிதமாக உயர்த்தியிருப்பதுபற்றி வரவு செலவுத் திட்டத்தில் இல்லையென்றாலும் இது மசோதா அறிமுகப்படுத்தப்பட்டபோதே சேர்க்கப்பட்ட ஒன்றாகும். வரவு செலவுத் திட்டத்தில் எல்லாவற்றையும் சொல்ல வேண்டுமென்ற அவசியம் இல்லை. மசோதா அறிமுகப்படுத்தப்பட்ட போதே இது சேர்ந்திருக்கிறது என்பதை அம்மையார் அவர்கள் பார்த்திருப்பார்கள் என்று கருதுகிறேன்.

## (4) அரசினர் சட்ட முன்வடிவுகள்

### (அ) தமிழ்நாடு 1971-ம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 9/1971).

THE HON. THIRU P. U. SHANMUGHAM: Sir I beg to move—

"That the Tamil Nadu General Sales Tax (Second Amendment) Bill, * 1971 (L.A Bill No. 9 of 1971) be taken into consideration".

As a measure of mobilisation of resources, the Government have decided to revise the rate of multi-point tax levied under sub-section (1) of section 3 of the Tamil Nadu General Sales Tax

* 1971 ஜூன் 21-ம் தேதிய சிறப்பு தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது

[Thiru P. U. Shanmugham] [1971 ஜூலை 28]

Act, 1959, from 3 to $3\frac{1}{2}$ per cent with effect from 19th June 1971. Sub-clause (*a*) of clause 2 of the Bill seeks to give effect to this decision.

Under sub-section (3) of section 3 of the Tamil Nadu General Sales Tax Act, 1959 concessional rate of tax is allowed on the sales of goods specified in the First Schedule to the Act, if they are purchased for use as component parts of any other goods included in that schedule. The concessional rate was 2 per cent when the general multipoint rate was 3 per cent. Consequent on the increase of the multipoint rate to $3\frac{1}{2}$ per cent, the Government have decided to revise the concessional rate for component parts as $2\frac{1}{4}$ per cent, increasing it by half a per cent. Sub-clause (*b*) of Clause 2 of the Bill seeks to give effect to this decision.

The amendment in clauses 3 and 4 of the Bill are only consequential to the amendments in clause 2 of the Bill.

Sir, I commend the motion for the acceptance of the House.

*DR. H. V. HANDE: Sir, at the outset, I must express my gratitute for the Hon. Chief Minister for having given an assurance in the House just a few minutes ago that he would keep an open mind. If our arguments are persuasive enough and cogent enough to give him some satisfaction and an indication to him that due to particular increase in sales tax the very economy of the State would be acected, he has promised just now that he is still liable to keep an open mind and if necessary, he may rescind the order. Therefore with greater hope and conviction and with a sense of purpose I start explaining to this House how exactly and why exactly this Bill is obnoxious and why exactly I, on behalf of the Swatantra party strongly oppose this Bill tooth and nail as it were.

Sir, it is a very well-known fact that the sales tax originally was created to bring about a small rise in the income of the State to offset the loss sustained on account of the introduction of prohibition policy. Then later on it was slowly getting increased. Even then if I remember aright in the Legislative Council once our present distinguished Minister for Food was graphically explaining when he was sitting in the Opposition that when originally the sales tax was discovered it was like a small fire in a rod to light or kindle fire in the oven in the kitchen and it has been used to set fire to the entire house. It is in that way the sales tax is going on increasing. That is the alarm with which the Hon. Minister today when he was a member of the Opposition expressed. I had to share the feeling which he had expressed in those days. I also feel now that it is increasing at a very rapid rate. I shall only explain to the House how during the last four years—we have increased half a per cent now—we have increased it to the tune of one per cent—in other words from $2\frac{1}{2}$ to 3 per cent when the present party came to power and now it has come to



1971 ஜூலை 28] [Dr. H. V. Hande]

$3\frac{1}{2}$ per cent. There is an increase of one third or a little more than one-third. The increase in the last four years is about 2/5 of the sales tax. It is a very serious thing. I would request the Hon. Minister for Food to keep an open mind and is convinced without arguments to show concession wherever possible.

Reverting again to the previous topic, we have on the one hand scrapped prohibition. In our own memorandum of financial statement we have clearly expressed that by suspension of prohibition we have an increase in the mobilisation of resources to the tune of Rs. 21 crores. When it has been very clearly stated in the financial memorandum like that, I do not understand why this particular rise has been made. The rise is $\frac{1}{2}$ per cent from 3 per cent. What does it actually mean? It actually means that there is an increase of sales tax by 16-2/3 per cent. That I want the Hon. Minister to understand. There has been a colossal increase, an increase to the tune of 16.66 per cent. One-sixth of three per cent has been increased. In other words, one-sixth of 100 would be 16 and odd per cent. There is acolossal and fantastic increase of 16-2/3 per cent. Therefore, I want the Hon. Minister to consider this aspect. It is not just half a per cent. It is a rise of 16.66 per cent. That is how I would like him to appreciate. That too at what juncture? At a juncture when the Central Government has also taxed.

There is deficit financing which means that they have to print rupee notes also to make good. That is the law of deficit financing. Because of deficit financing at the Centre, it will introduce inflation by which process we will find that the cost of materials is increasing by 30/40 per cent.

Now I wish to point out to the Hon. Minister how this half a per cent increase would be magnified in reality. For argument's sake take the case of a house-wife purchasing articles worth Rs. 100 every month. Actually because of the Central taxation, because of the State taxation and because of spiralling of the prices, the house-wife will have to pay Rs. 30 or 40 more, which means it is not half a per cent on Rs. 100. It is half or Rs. 100, that is nearly Rs. 140 or 150, she has to pay, instead of Rs. 100. So, it is not just .5 per cent. It is not as innocuous as it looks on the surface. That is one of the aspects.

Then there is the aspect of multi-point tax. Half a per cent at point A, half a per cent at point B, half a per cent at point C, like half a dozen points and in toto if we calculate it will again magnify itself into 3 or 4 per cent. Therefore, it is a very serious aspect which I commend to the observation of and necessary action by the Hon. Minister.

Then, Sir, I will demonstrate again how the purchasing power of the common man has come down. Recently we have been told by the Hon. Minister for Health one particular point. He was mentioning during the debate that they had to reduce the number of doctors and also the number of teachers. Of course he gave

[திரு கே. டி. கே. தங்கமணி] [1971 ஜூன் 28

போடப்பட்ட ஒரு வரியானது இன்றைக்கு தமிழக அரசினுடைய வருவாயிலேயே பெரும் பகுதி வரக்கூடிய ஒரு வரியாக இன்றைக்கு அமைந்திருக்கிறது. ஒரு பத்தாண்டு காலமாகப் பார்த்தால் நான்கு மடங்காக விற்பனை வரி உயர்ந்திருக்கிறது. இந்த வருடம் விற்பனை வரி மூலமாக ரூ. 93 கோடி வரையிலும் வரும் என்று எதிர்பார்க்கிறார்கள். நான் இப்போது சொல்லுகிறேன். புதிதாக வரி போடாமலேயே இன்றைக்கு வரி வசூலிக்கின்ற முறையைச் சரிப்படுத்தி, வரியை ஏமாற்றுகிறவர்கள் பேரிலே சரியான நடவடிக்கை எடுப்போமானால் இந்த அரை சதவிகிதம் அதிகப்படுத்துவதால் கிடைக்கும் ரூ. 3.6 கோடி அதிகம் கிடைக்கும் என்று இப்போதே சொல்ல விரும்புகிறேன்.

இவ்வருடம் முடிந்த பின்னால் நாம் எதிர்பார்த்த ரூ. 93 கோடிக்குப் பதிலாக ரூ. 100 கோடி வரையிலும் வந்தது என்று சொல்வீர்கள். அப்படியானால் நமது தமிழகத்தில் கிடைக்கக் கூடிய வருமானத்தில் நான்கில் ஒரு பங்கு விற்பனை வரி மூலமாக வருகிறது. விற்பனை வரி என்று சொல்வதை விட வாங்குகிறவர்கள் பேரில் போடப்படும் வரி என்று குறிப்பிடலாம் என்று ஏற்கனவே இந்தச் சபையில் ஒரு உறுப்பினர் அவர்கள் தெரிவித்தார்கள். சென்ற ஆண்டு இரண்டரை சதவிகிதமாக இருந்த விற்பனை வரியை 3 சதவிகிதமாக உயர்த்துவதற்குக் காரணம் அரை என்பதில் சிக்கல் ஏற்படுகிறது என்ற காரணம் என்று சொன்னார்கள். இப்போது 3 என்பது 3.5 சதவிகிதம் ஆகும் என்று சொன்னால், நடைமுறையில் அது 4 ஆக உயர்ந்துவிடும். அப்படி உயரும்போதெல்லாம் கண்டிப்பாக விலை உயரத்தான் செய்யும் என்பது உங்களுக்கும் நன்றாகத்தெரியும். சாதாரணமாக ஒரு வரி விதிப்பு ஏற்பட்டால் இன்றைக்குள்ள சமுதாய அமைப்பில், தனியார் லாபம் சம்பாதிக்கவேண்டுமென்ற முறையில், போடப்பட்ட வரியை விட அதிகமாக வாங்கக் கூடிய போக்குதான் இன்றைக்கு இருக்கிறது. மத்திய அரசு 22 பைசா அதிகமாக விட்டருக்கு என்று உயர்த்தியவுடன், 45 பைசாவாகத்தான் உயர்த்தினார்களேயொழிய 22 பைசாவுடன் நிறுத்தவில்லை. ஆனால் சொல்லலாம். 3 என்பதற்குப் பதில் 3.5 என்று நான் சொல்லுகிறோம் என்று சொல்லலாம். நடைமுறையில் பார்த்தால் ஏற்கனவே இருக்கக் கூடிய விலைகள் அதிகமாகப் போவதற்கான நிலைதான் ஏற்படும். அவர்கள் இந்த வரிகளை ஏமாற்றும் அம்சங்கள் ஜாஸ்தியாக வரும் என்பதை மீண்டும் வற்புறுத்திச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

இந்த மசோதாவில் நான்கு பகுதிகள் இருக்கின்றன: அதில் இந்த 2-3-4 தான் முக்கியமான பகுதிகள். இந்த இரண்டாவது பகுதியை, க்ளாஸ் (2) அதை பரிபூரணமாக சபையின் முன்னால் வாசிக்கலாம் என்று நினைக்கிறேன். ஏற்கனவே இருந்த பகுதி என்னவென்றால்—



1971 ஜூன் 28] [திரு கே. டி. கே. தங்கமணி]

'Every dealer (other than a casual trader or agent of a non-resident dealer) whose total turnover for a year is not less than fifteen thousand rupees and every casual trader or agent of a non-resident dealer, whatever be his turnover for the year, shall pay a tax for each year at the rate of three per cent of his taxable turnover :

Provided that—

(i) in the case of foodgrains, namely, wheat, paddy (rice in husk), rice (husked paddy), cholam, cumbu, ragi, thinai, varagu, samai and kudiraivali and in the case of rice products (for example, rice flour and rice bran), wheat products (for example, wheat flour, sooji and wheat bran), milk, fresh vegetables (other than those mentioned in the First Schedule), fresh fruits, betel and plantain leaves, flowers, eggs, meat and fish (other than canned meat and fish), the rate shall be one per cent;

(ii) dealers dealing exclusively in one or more of the goods enumerated in the foregoing clause except foodgrains, rice products, wheat products and milk and whose total turnover for a year is not more than thirty-five thousand rupees shall not be liable to pay tax under this sub-section.'

இந்தப் பகுதியிலே ஏற்கனவே போடப்பட்டிருக்கக் கூடிய 3 சதவிகிதம் என்பதை 3.5 சதவிகிதமாக உயர்த்தவேண்டுமென்பது தான் முதலாவது கொடுத்திருக்கக் கூடிய திருத்தமாகும். அதற்கு நான் காரணங்களைச் சொல்லி விட்டேன். பொதுவாக வர்த்தகர்கள் மத்தியிலே 'சிங்கிள் பாயின்ட்' (Single point) இருக்கவேண்டுமென்ற வாதம் வந்திருக்கிறது. அதேமாதிரியாக இன்னும் அதிகமாக விதிவிலக்குகள் கொடுக்கப்படவேண்டுமென்ற வாதமும் வந்திருக்கிறது. இருந்தாலும் இந்த 3 சதவிகிதமே அதிகம் என்றிருக்கும் நிலையில், இப்போது 3 என்பதை 3.5 ஆக்குவது பொருத்தமில்லை என்று நான் மீண்டும் ஒரு முறை சமர்ப்பித்துக் கொள்கிறேன்.

அடுத்தாற்போல் இருக்கும் பகுதியில்—

'Notwithstanding anything contained in sub-section (1) or sub-section (2), the tax payable by a dealer in respect of any sale of goods mentioned in the First Schedule by such dealer to another for use by the latter as component part of any other goods mentioned in that schedule, which he intends to manufacture inside the State for sale shall be at the rate of only two per cent on the turnover relating to such sale :

Provided that the provisions of this sub-section shall not apply to any sale unless the dealer selling the goods furnishes to the 'assessing authority in the prescribed manner a declaration duly filled in and signed by the dealer to whom the goods are sold containing the prescribed particulars in a prescribed form obtained from the prescribed authority.'

இந்தப் பகுதியிலே வந்திருக்கக் கூடிய திருத்தம் 2 என்பது 2.5 ஆகியிருக்கிறது. இந்த இரண்டு பகுதிகளைப் பற்றியும் நான்

[திரு கே. டி. கே. தங்கமணி] [1971 ஜூன் 28

குறிப்பிட விரும்புவது என்னவென்றால், ஏற்கனவே ஒவ்வொரு ஆண்டிலும் இந்த ரூ. 15,000 'டர்ன்-ஓவர்' என்பதை அதிகப்படுத்த வேண்டும் என்பதாகக் கோரி வந்திருக்கிறார்கள். ரூ. 15,000 'டர்ன்-ஓவர்' என்பது குறைந்தது ரூ. 30.000 என்றாவது இருக்கவேண்டும்.

அடுத்து, இப்போது ஒரு மாநிலத்திலிருந்து இன்னொரு மாநிலத்துக்கு அனுப்பக்கூடிய சரக்குகளுக்கு விதிக்கும் வரி 2 சதவிகிதம் என்பது 2½ சதவிகிதம் என்பதாக வரி வசூல் ஏற்பட்டிருக்கிறதே, அதனுடைய நிலை என்ன என்பது தெளிவாகத் தெரியவில்லை. இந்தப் பகுதியினுடைய அம்சத்தை எடுத்து வைத்துப் பார்த்தால், அதுவும் 2½ சதவிகிதம் ஆக ஆகுமோ என்று அஞ்சவேண்டி இருக்கிறது. சாதாரணமாக, 3 என்பது 3½ ஆக ஆனது என்பதைப் பற்றி பலர் பல கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். என்பதை ஏற்கெனவே தெளிவுபடுத்தினேன். நீங்கள் சொன்ன சரியான கொள்கைக்கு நாங்கள் கட்டுப்பட்டுத் தான் இருக்கின்றோம். ஆனால் அதே நேரத்தில், நிதி மசோதா சமர்ப்பிக்கும்போது ஒப்புக்கொள்ளப்பட்ட கொள்கையின் அடிப்படையில் இருக்கவேண்டும் என்பது நடைமுறை அனுபவம். எல்லோரும் விவாதித்து நிலைமைகளைப் புரிந்துகொண்டதற்குப் பின்னால்தான், இந்த நிதி மசோதாவில் இன்றைய தினம் விவாதம் நடக்கிறது. அப்படிப் பார்த்தால், முதல் பகுதியில் உள்ள 3 சதவிதம் என்பதை 3½ சதவிதம் உயர்த்துவது என்பதை ஏற்றுக்கொள்ளலாம். ஆனால் எந்தெந்த இடத்தில் 1 என்பது 1½ ஆகவும், எந்தெந்த இடத்தில் 3 என்பது 3½ ஆகவும், 2 என்பது 2½ ஆகவும் ஆக்கிவிடுவது என்பது ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல. பொதுவாக எல்லாவற்றிலும் ½ சதவிதம் ஆக உயர்த்திவிடுவது என்ற ஒரு பொதுவான உத்தரவு மக்கள் மனதில் தாங்கள் ஏமாற்றப்படுவதாக நினைக்கிறார்கள். அதுவும் இந்தச் சபையில் விவாதித்து சமர்ப்பிக்கப்பட்ட கொள்கைக்கும், சமர்ப்பிக்கப்பட்ட இந்த பட்ஜெட்டுக்கும் சம்பந்தம் இல்லாமல் இருக்கிறது. இது பொருத்தம் அல்ல, இது சரியான முறை அல்ல. இது எந்த விதமான மசோதா என்பதும் எனக்குத் தெரியவில்லை. மசோதா சரியாக இருக்க வேண்டுமென்றால், அதைக் கொண்டு வந்த 'பிரபோஸல்ஸ்' அடிப்படையிலேயே இந்த மசோதா இருக்க வேண்டும். 3 என்பது 3½ என்பதோடு நின்று இருக்க வேண்டும். இரண்டாவது பகுதி 2 என்பதை 2½ ஆகக்கொண்டு வந்தது எந்த அடிப்படையில் நீங்கள் கொண்டு வந்திருக்கிறீர்கள் என்பது தெரியவில்லை. சரியான முறை இந்த அரசுக்குக் கொடுக்கப்படவில்லை என்பதுதான் என்னுடைய குற்றச்சாட்டு. இந்த இரண்டையும் எடுத்துப்பார்த்தால் மக்கள் பூராவும் இதை எதிர்த்துக் கொண்டு இருக்கின்றார்கள். அதேமாதிரி, அதற்கு மேலும் "சர் சார்ஜ்" வேறு போடப்பட்டிருக்கிறது. இந்த 'சர்சார்ஜ்' போட்டு வரி விதிப்பதன் மூலம், விவசாயப் பொருள்கள் மீது வரி விதிப்பது என்பது என்னுடைய கருத்திலே சரியான ஆலோசனைகள் அரசுக்குக் கொடுக்கப்படவில்லை என்பதுதான். அந்த நிலைமையைக்



1971 ஜூன் 28] [திரு கே. டி. கே. தங்கமணி]

கொண்டு வந்திருக்கிறீர்கள். திருப்பித் திருப்பிப் பார்த்தாலும் ஒரு மிக முக்கியமான விஷயம் புது வரி போடக்கூடாது என்பது. இந்த வரியால் கிடைக்கக்கூடிய பணம் எவ்வளவு என்பதை மக்களுக்கு முன்பே விளக்க வேண்டும். அப்படிச் செய்தால் மக்கள் இதை நிச்சயமாக எதிர்ப்பார்கள். மக்கள் எதிர்ப்பதால் இது சரியான முறை அல்ல. ஆகவே, இந்த மசோதாவை எதிர்ப்பது மட்டுமல்லாமல் ஏற்கனவே நிதி அமைச்சர் கொடுத்த வாக்குறுதி கொள்கையோடு நிற்கவில்லை. ஆகவே இதை அவருடைய வாக்குறுதியாக நான் ஏற்றுக்கொள்ளவில்லை. எனவே, இந்த மசோதாவை அவரே வாபஸ் வாங்கினால் மக்கள் பாராட்டுவார்கள். எல்லாக் கட்சிகளின் ஆதரவும் அவருக்கு இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, மீண்டும் ஒருமுறை இந்த மசோதாவை எதிர்க்கிறேன் என்பதைச் சொல்லிக்கொண்டு என்னுடைய வார்த்தையை முடித்துக் கொள்கிறேன்.

* THIRU K. M. SUBRAMANIAM: Mr. Speaker, Sir, I join my predecessors who have spoken on this subject, to strongly oppose this Bill. I am opposing this Bill on two grounds. First and foremost, the present position in the country is such that prices are going up like anything and it is the duty of every Government, whether it is Central or State, to do everything in their power to bring down prices. Of course they may say there is heavy deficit in the budget and the gulf has to be bridged. I don't mind if deficits are used for productive purposes, I don't think it is wrong to have deficit budgets in a developing country we cannot think of increasing taxes when people are groaning under Sales-tax. D.M.K. is doing exactly that.

The second objection is D.M.K. claims that it is a very good socialist Government. If it is socialist Government, the poor should be relief and richer sections should pay tax progressively. I can understand a proposal to increase tax on luxuries. For example, if tax on air-conditioners, is increased, I can understand. But what do we find here? They are doing exactly opposite to what they say. All their talk of socialism is only in talk and not in practice. I say this because it is the poor classes, who are already suffering, who are now asked to pay heavy prices. Mr. Speaker, Sir the Hon. Minister may know that during the last one month, price increase has been very severe. This Government, claiming as a socialist Government, has adopted a most discriminatory attitude. They should tax only luxuries and not those that are in common use everyday by the common people. Now, everything is taxed from 3 per cent to 3½ per cent. The poor are affected. So far as inter-State sales tax is concerned, we have to consider what other steps are going to be taken. We do not know what are all going to be taxed. There is heavy incidence of taxation in every State. Increase in inter-State taxation will not give us benefit. I think 2 per cent is very reasonable tax so far as inter-State sales are concerned. Higher percentage of tax will act as a break on our business. After all, Mr. Speaker,

what is it that Govtrnment propose to collect by this taxation. Three and half to 3.8 crores. But we must note that all categories are affected, especially the poor and low income groups who are already suffering because of high prices. It is proper that this Government proclaiming as friend of the poor, should not touch articles of common use by poor. But this increase in tax will affect all commodities used by poor also. It will only increase the cost of commodities. Any civilised Government should take steps to bring down prices.

This Government, proclaiming as socialist Government, saying that it follows socialist methods, is in fact not socialistic. I can understand tax on motor vehicles tax, on air conditioners and other luxuries but not on all things. Already the Central Government had levied and increased excise duty on many things. Add to that, comes this tax increase in sales tax. I thought this D.M.K., a party to which I have great respect, would not tax certain items used by poor and bring hardship to the poor. Added to the problems of price increase and unemployment, this further tax will only add to the troubles of the poor. I want to conclude by saying that Government should tax only luxuries and get Rs. 3 crores and not tax articles of common use by the poor. Thank you.

*** திரு. எம். சுரேந்திரன்:** சபாநாயகர் அவர்களே, இங்கே சட்டமன்றத்தின் முன்பு வைத்திருக்கும் விற்பனை வரி மசோதாவை, வரி உயர்வு மசோதாவை ஏற்றுக்கொள்வதற்கு முடியாததாய் இருக்கிறது என்பதை முதலில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் வரி போட வேண்டியதும் அரசாங்கத்தின் பொருளாதார நிலையை அபிவிருத்தி செய்யவேண்டியதும் அந்தப் பணத்தைக் கொண்டு மக்களுடைய க்ஷேம நலங்களை கவனிக்கவேண்டியதும் அவசியம். ஆனால் மதிப்பு மிக்க சுபரமணியம் கூறுவதுபோல் வரி போடுவதில் நாம் என்ன கோட்பாடுகளை கடைப்பிடிக்கிறோம் என்பது மிகப் பிரதானம். இந்த வரி உயர்வின் காரணமாக வியாபாரிகளுக்குத்தான் வரி போடுகிறோம் என்று இருந்தாலும்கூட அதனுடைய விளைவுகள் பலன்கள் வாங்குகின்றவன் தலையிலே ஏறுகிறது. மத்தியதர வர்க்கத்தைச் சேர்ந்தவர்களும், கீழ் வர்க்கத்தைச் சேர்ந்தவர்களும் இதனால் பாதிக்கப்படுவார்கள் என்பது சந்தேகமில்லை. காரணம் அவர்களுக்கு கிடைக்கும் வருமானம் ரூபாய் அளவில் பார்க்கும் போது அது மாற்றுப் பண்டங்கள் வாங்குவதற்காகவே இருக்கிறது. அரிசியாகவோ துணியாகவோ, மற்ற பொருளாகவோ, மாற்றிக்கொள்ளும் பொருளாகத்தான் பணம் இருக்கிறது. இந்த வரியில் எதிர்பார்க்கும் பணம் சிறிய அளவுதான், சில கோடிகள் தான். இந்த சில கோடிகளைப் பெறுவதில் வியாபாரிகள் முறையாகக் கணக்குகளை வைத்திருக்கிறார்களா, எவ்வளவு ஏமாற்றுகிறார்கள், எவ்வளவு வருமானம் வராமல் போகிறது என்பது எல்லோருக்கும் தெரிந்த பகிரங்க உண்மை. அதை ஒழுங்கு படுத்தினால் இப்போதுள்ள உத்தேசிக்கப்பட்ட வரி உயர்வு





தேவையில்லை. வியாபாரிகள் சம்பந்தப்பட்ட வரையில் தங்கள் லாபத்தைக் குறைத்துக்கொள்ளாமல் வாங்குவோர் தலையிலே ஏற்றுவது என்பது வழக்கமாக இருக்கிறது, ஆகவே உயர்திரு சுப்பிரமணியம் கூறியதுபோல் சோஷலிச கோட்பாட்டை கடைப்பிடிக்கிறவர்கள் நாம். அந்த நிலையில் சாதாரண மக்கள் மீது வரிபோடுவது என்பது சரியல்ல. உயர்ந்த வசதியுள்ளவர்கள் மேல் வரி போடுவதற்கு எல்லா வாய்ப்புகளும் இருக்கின்றன. அந்த வாய்ப்புகளை எல்லாம் ஆராய்ந்து, உணர்ந்து அவர்கள் மீது வரி போட்டால் அது சமுதாயத்தின் நலனுக்கு உகந்ததாகும், ஏழை மக்களுக்கு நலன் அளிப்பதாகும். ஆகவே இந்த விற்பனை வரி மீது வந்துள்ள உயர்வு வரியை கைவிடவேண்டுமென்று அமைச்சர் அவர்களைப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

**• திரு. கே. ஏ. வகாப்:** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, இங்கே இப்போது பேசப்படுகிற வரி உயர்வு நாங்கள் ஏற்றுக்கொள்வதற்கில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன். தமிழகத்திலுள்ள பல்லாயிரக்கணக்கான சிறிய வியாபாரிகள் சார்பிலும், வியாபார பெருமக்கள் சார்பிலும் இதை ரத்து செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். விற்பனை வரியை உயர்த்தி இருப்பதன் காரணமாக வியாபாரிகள் மட்டும் பாதிக்கப் படுகிறார்கள் என்பதில்லை. சாதாரணமாக உள்ள ஏழை மக்கள், தொழிலாள மக்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்பதை இந்த அரசு அறியும். என்றாலும்கூட வியாபாரிகள் சம்பந்தப்பட்ட வரை அவர்கள் தொல்லைகள் இன்னல்களை அனுபவித்து வருகிறபோது இந்த ½ சதவீதம் உயர்வானது மேலும் அவர்களுக்கு பல சிக்கலை ஏற்படுத்தும். குறிப்பாக கால் பர்சென்ட் அரை பர்செண்டு என்று கணக்குப்போடுவதில் சிக்கல் ஏற்படும். இதை மனதில் கொண்டு இந்த வரி உயர்வைக் குறைக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். வியாபார சமுதாயத்தினருக்கு இந்த அரசு சில சலுகைகள் தந்திருக்கிறது. அதே சமயத்தில் இந்த வியாபாரிகள் தலையில் மேலும் ½ சதவீதம் வரி உயர்த்துவது சரியல்ல என்று சொல்லிக் கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வியாபார குடும்பத்தில் பிறந்தவர்கள். அவர்களுக்கு வியாபாரிகளைகளைப் பற்றி நன்றாகத் தெரியும். கருணைக் கூர்ந்து இது பற்றி அரசாங்கம் ஆலோசித்து இந்த வரி உயர்வை கைவிட்டு முன்பு போல் வரியை ஆக்கித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அது மட்டுமல்லாமல் மத்திய அரசால் போடப்பட்ட வரிகளால் வியாபார குடும்பத்தில் பிறந்தவர்கள். அவர்களுக்கு வியாபாரி பெருமக்களுடைய சக்தி வாய்ந்த பிரசாரமும் ஒத்துழைப்பும் இந்த அரசுக்கு இருந்திருக்கிறது. எதிர்காலத்திலும் அது இருக்குமென்று எனக்கு நம்பிக்கை இருக்கிறது. இது சிறிய அளவில் அதாவது 3¼ கோடி ரூபாய் விஷயமென்றாலும் 300 கோடி ரூபாய்க்குள் உள்ள சாதகங்களை வியாபாரிகளின் ஆதரவு பெற்றுக் கொடுக்கும் என்பதை இந்த நேரத்தில் பணிவோடு கூறிக்கொள்கிறேன். அதே நேரத்தில் விற்பனை வரி என்பது எந்தக் காரணத்திற்காக கொண்டு வரப் பட்டதோ அது

எடுபட்டுப்போகிறது என்பதையும் மனதில் கொள்ளவேண்டும். ஆகவே தமிழகத்தில் வியாபாரிகள் சங்கத்தின் சார்பில், வியாபார பெருமக்கள் சார்பில், குறிப்பாக நடுத்தர வர்க்கம், வாங்குவோர் சார்பில் கேட்டுக்கொள்கிறேன். இந்த வரி உயர்வை கைவிட்டு முன்போல் 3 சதவீதமாக இருக்கச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி: இந்த விற்பனை வரி திருத்த மசோதாவின் மீது ஒரு சில வார்த்தைகள் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த விற்பனை வரி மசோதாவைக் கடுமையாக எதிர்க்க வேண்டிய கட்டாய நிலையில்தான் எங்கள் ஸ்தாபன காங்கிரஸ் இருக்கிறது என்பதை அரசுக்கு சொல்ல ஆசைப்படுகிறேன். வரிகளைக் குறைப்போம், வரிகளைக் குறைப்போம் என்று வாக்குறுதி கொடுத்தவர்கள் வரிகளைக் குறைக்காமல் அவைகளை ஏற்றத் தயாராக இருக்கிறார்கள், என்பதைப் பார்க்கும்போது நாட்டு மக்கள் இதை நன்றாக புரிந்துகொள்ளவேண்டுமென்று ஆசைப்படுகிறேன். அது மாத்திரம் அல்லாமல் இப்படிப் போடுகிற போது அவசரமாக வேறு வரி போடுகிறார்கள். நாளைக்கு முதலமைச்சர் அவர்கள் பதில் தர இருக்கிறார்கள். எதிர்க்கட்சிக் காரர்கள், மக்களுக்கு பயந்து சில வரிகளுக்கு விலக்கு கொடுக்கலாம் என்ற எண்ணத்தில் அவசரமாக இதைக் கொண்டு வந்திருக்கலாம்.

அதுமாத்திரமல்லாமல் இந்த விற்பனை வரியை புகுத்தியது யார் என்றால் மதிப்புள்ள ராஜாஜி அவர்கள்தான். மதுவிலக்கு மூலம் ஏற்பட்ட வருவாய் இழப்பை சரிக்கட்ட இந்த விற்பனை வரியை புகுத்தினார்கள். இன்று இந்த அரசாங்கம் மதுவிலக்கை ரத்து செய்யவேண்டும் என்ற முடிவுக்கு வந்த பிறகு இந்த விற்பனை வரியை எடுத்துவிடுவதற்கு பதிலாக மேலும் கூட்டுவதற்கு தயாராக இருக்கிறார்கள் என்றால் அது எப்படி நியாயம் என்று புரியவில்லை. அரசாங்கம் வரி மூலம் வசூல் செய்த பணத்தைக் கொண்டு மக்கள் வசதிகளை பெருக்கவில்லை. அதுமட்டுமல்லாமல் வரவு செலவு திட்டத்தில் 3 சதவீதம் வரியை 3½ சதவீதமாக மாற்றுவோம் என்று குறிப்பிட்டு இருக்கிறார்கள். இப்போது சட்டசபை முன்னாலே இந்த புதிய வரி உயர்வை கொண்டுவந்திருக்கிறார்கள். சட்டசபை முன்னால் என்னென்ன புதிய வரிகள் புகுத்த இருக்கிறோம் என்று அரசாங்கம் சொல்லுகிறபோது இது பற்றி குறிப்பிடவில்லை. இப்போது "2 சதவீத வரியை 2½ சதவீதமாக" கொண்டு வருகிறார்கள் என்றால் சட்டசபையில் இதற்கு முன் ஏன் இது மறைக்கப்பட்டது என்பது கேள்விக்குறி. அடுத்தபடியாக, இந்த வரி காமதேனுவாக இருக்கிறது. வருடா வருடம் அதிகமாகி சம்பாத்யம் கொடுத்து வருகிறது; மூன்று வருஷங்களுக்குள் கணக்குப் பார்த்தால் ஆந்திரா பிரிந்து சென்ற பிறகு 71 கோடி வருமானம். ரூ. 82 கோடியாக 10 கோடி அதிகமாக வந்திருக்கிறது. அதேபோல் 82 கோடி ரூபாய் 93 கோடியாக





பெருகி இருக்கிறது. இப்படி 10, 11 கோடியாக எதிர்பார்ப்பதற்கு மேல் வருவாய் கிடைக்கும்போது மூன்றில் இருந்து மூன்றரை சதவீத வரி உயர்வு எந்த விதத்தில் நியாயம் என்பது தெரியவில்லை. இந்த 10 கோடி உயர்வு சாதாரண வியாபார வளர்ச்சியின் காரணமாக கிடைக்கிறது. ஆகவே புதிதாக வரிபோடுவதில் எவ்வித நியாயம் இல்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன். தமிழ் நாட்டில் ஒரு பழமொழி உண்டு. வட்டிக் கடைக்காரனிடம் கடன் வாங்கினால் தம்படிக்கு தம்படி வட்டி என்று சொல்வான். அது மாதிரி இருக்கிறது இந்த அரைச் சத உயர்வு. அதுவும் பலமுனைக் கட்டங்களில் இது வசூலிக்கப்படுகிறது, அது எல்லா மக்களையும் பாதிக்கிறது என்பதை அரசாங்கம் உணர வேண்டும்.

அரசாங்கம் மதுவிலக்கின் மூலமாக 10 கோடி எதிர்பார்க்கிறது. இது குறைச்சல். ஏலம் விடுகிறபோது 20 கோடியாக உயரும். அப்படி இருக்க ஏன் இந்த 3½ கோடி ரூபாய்க்கு வரிகளைப் போட்டு வியாபாரிகள் வாங்குகின்றவர்களை நசுக்கவேண்டுமென்று கேட்கக் கடமைப்பட்டிருக்கிறேன், இதை வருவாய்த்துறை அமைச்சர் ஆராய்ந்து இந்த கூடுதல் வரியைக் கைவிடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதோடு உணவுப்பண்டங்கள் மீது போடப்பட்டிருக்கும் வரிகளிலிருந்து விலக்களிக்கப்படவேண்டும், என்று கேட்டுக்கொள்கிறேன். இப்போதே விலைவாசிகள் ஏறி இருக்கிறது. ரூபாய்க்கு மூன்று படி அரிசி என்று சொல்லி பிறகு ரூபாய்க்கு படி அரிசி என்று சொல்லி அதுவும் குறைக்கப்பட்டிருக்கிறது. இது விற்பனை வரி என்று சொல்வதை விட வாங்குகிறவர்கள் வரி என்றுதான் சொல்லவேண்டும். இது வாங்குகிறவர்களையே அதிகம் பாதிக்கிறது. இதை மனதில் கொண்டு இந்த வரி உயர்வை முதலமைச்சர் கைவிடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவர் அவர்களே, இந்த விற்பனை வரி மசோதாவை எங்கள் கட்சி சார்பிலே நான் வன்மையாக எதிர்க்கிறேன்.

இந்த விற்பனை வரி உயர்த்தி இருப்பது ஏழை மக்களையும், நடுத்தர மக்களையும் வெகுவாக பாதிக்கும் என்பதை பல தரப்பிலிருந்து விளக்கிக் கூறினார்கள். அதிலும், குறிப்பாக, இன்று அதிகமாக விலைவாசிகள் விஷம் போல் ஏறிக்கொண்டிருக்கிற தருவாயில் மறுபடியும் மறுபடியும் விற்பனை வரியை அதிகப்படுத்துவது நியாயம்தானா என்பதை அருள் கூர்ந்து முதலமைச்சர் அவர்கள் கவனிக்கவேண்டுமென்று கேட்டுகொள்கிறேன். இந்த வரியானது ஏழை மக்களை அதிகமாக பாதிக்கும் என்பதால் வாபஸ் பெற்றுக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அவர்களுடைய பட்ஜெட்டின் 'டி' பிரிவிலே 59-வது பாராவிலே எடுத்துக் கூறியிருக்கிறார்கள்.

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] [1971 ஜூன் 28

" Next in our efforts to improve our resources, is the revision of the rate of multi-point tax levied under the Tamil Nadu General Sales Tax Act from 3 per cent to 3½ per cent. . This measure will fetch Rs. 3.8 crores. "

முந்நூற்று எண்பத்தி ஏழு கோடி ரூபாய் இந்த வரி இனத்திலிருந்து வரவாக வரப்போகிறது என்று அதிலே கோடிட்டு காட்டப்பட்டிருக்கிறது. சாதாரணமாக காமதேனு என்று எனக்கு முன் பேசிய அம்மையார் கூறியது மாதிரி விற்பனை வரியிலே மிகக் குறைச்சலாக அரசாங்கம் வரிகளை எல்லாம் எதிர் பார்க்கிறது என்று சம்பிரதாய முறையில் கூறுவார்கள். உண்மையிலே அது யாரை பாதிக்கிறது என்பதை முதலிலே உணர்ந்து கொள்ள வேண்டும். ஏழை மக்களையும், நடுத்தர மக்களையும் அதிகமாகப் பாதிக்கும். முன்பு மதுவிலக்கு அமல் படுத்தியபோது இது சட்டமாக வந்தது. அதன் காரணமாக வருடந்தோறும் இந்த வரியானது பெருகிக்கொண்டே வருகிறது என்பதை நாம் அறிவோம். மேல் நாட்டில் இது பற்றி பார்க்கும்போது கடந்த உலக மகா யுத்தத்தில் புதிதாக இந்த சேல்ஸ்டாக்ஸ் வரியானது உருவாகியது என்பது புலப்படும். ஆனால் இதிலே பாதிக்கப்படுவது அதிகமாக ஏழை மக்கள். அதற்குப் பிறகு நடுத்தர மக்கள் பாதிக்கப்படுகிறார்கள். ஏழைகள்மீது பரிவு காட்டும் அரசாங்கம், சமதர்மத்தை உருவாக்க முனைந்திருக்கும் இந்த அரசாங்கம், இந்தச் சட்டத்தை வாபஸ் பெறவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதிலும் குறிப்பாக பல ஆட்சேபனைகள் இங்கே தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. 2 சதவீதம் ஆக இருந்ததை 2½ சதவீதம் ஆக மாறியதைப்பற்றி பட்ஜெட் உரையிலே இல்லை என்று ஒரு ஆட்சேபனை கூறினார்கள். இந்த மன்றத்தை இந்த அரசாங்கமானது நல்ல முறையில் மதித்து, அந்த விவாதத்தை இந்த அவையில் தந்திருக்க வேண்டும். ஆனால் முன்னாலேயே இதை அவையின் முன்னால் எடுத்துக் கூறாமல் இந்த மசோதாவிலே எடுத்துக் கூறியிருக்கிறார்கள், என்றால் " It is not taking of the House into confidence " என்று சொல்லும் அளவில் அமையும் என்று கருதுகிறேன்.

சாதாரணமாக இந்த வரி சட்டத்தின் அடிப்படையிலேதான் இதை வசூலிக்க முடியும் என்று அரசியல் சட்ட அமைப்பு ஷரத்துக்களிலே கூறப்படுகிறது. ஒரு வேளை மசோதா கொண்டு வந்துவிட்டோம், அதிலே காரண காரியங்களை விளக்கி இருக்கிறோம் என்று சொன்னால் அது குறுக்கு வழி என்பதால் அதை நாங்கள் எதிர்க்க கடமைப்பட்டிருக்கிறோம் என்று கூறிக் கொள்ளுகிறேன்.



1971 ஜூன் 28] [திரு. ஆர். பொன்னப்ப நாடார்]

அதுமட்டுமல்ல. ஒரு முனை வரியாகஇருந்தால் ஆட்சேபனை செய்வதற்கு இல்லை. பல முனை வரியாக இருப்பதால் இங்கே இருக்கிற காஸ்ட் ஆப் லிவ்விங் இன்டக்சை அதிகமாக உயர்த்திக் கொண்டே இருக்கும். மேலும் இப்போது காஸ்ட் ஆப் லிவ்விங் இண்டக்ஸ் உயர்ந்துகொண்டே இருக்கும் இந்தச் சந்தர்ப்பத்திலே இந்த வரியானது மறுபடியும் கூட்டப்படுவது உசிதமாக இருக்காது என்று கருதுகிறேன். முன்பு 2½ சதவீதமாக இருந்ததை 3 சத வீதமாக ஆக்கியபோது, கூட்டல் கழித்தல் போன்றவற்றில் மிகவும் கஷ்டமாக இருக்கிறது என்பது சுட்டிக்காட்டப்பட்டது. அது இப்போது ஏற்படக் கூடாது என்பதற்காகத்தான் இந்த ½ சதவீதம் வரிகூடாது என்கிறோம்.

அதோடு மட்டுமல்ல, நீங்கள் பத்திரிக்கையைப் பார்த்தால், விற்பனை வரி ஏற்றத்தை வெகுவாக பல பத்திரிக்கைகள் கண்டித்து இருக்கின்றன. அதனால் விலைவாசி உயரும் என்று காண்பிக்கப்பட்டிருக்கிறது. லெட்டர்ஸ் டு தி எடிட்டர் காலத்திலேயே பல கருத்துக்களை நாம் பார்க்கிறோம். குறிப்பாக சேம்பர் ஆப் காமர்ஸ் என்ன முறையில் கூறுகிறது என்பதை எல்லாம் அமைச்சரவர்கள் நல்ல முறையில் ஆராய்ந்து பார்ப்பார்கள் என்று கருதுகிறேன். இந்த விற்பனை வரி The incidence is on the poor and it is regressive. என்று சொல்வார்கள். அதுமாதிரி இது ஏழை எளியவர்களை அதிகமாக பாதிப்பதால் துன்பப்படுவார்கள். இந்த மசோதாவை நீங்கள் திரும்பிப் பெற்றுக்கொள்ளவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு, இந்த மசோதாவை வன்மையாகக் கண்டித்து, இது பொதுமக்களை அதிகமாக பாதிக்கிற சட்டமாக இருப்பதால் இதை நிறுத்தல் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு நான் அமைகிறேன். வணக்கம்.

திரு. நா. வீராசாமி : தலைவரவர்களே, இந்த விற்பனை வரி மசோதா மீது எனது கருத்துக்கள் சிலவற்றை சொல்ல விரும்புகிறேன். எனக்கு முன்னாலே பேசிய எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இங்கே பலதரப்பட்ட கருத்துக்களை சொன்னார்கள். அதிலே கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த திரு. தங்கமணி அவர்கள் வன்மையாக கண்டிக்கிறேன் என்றெல்லாம் சொன்னார்கள். அவர்களுடைய கட்சியைச் சார்ந்த உறுப்பினர் திரு. மணலி கந்தசாமி அவர்கள் சில நாட்களுக்கு முன்பு இதே மன்றத்தில் சொல்லியிருக்கிறார்கள். இந்த வரியை வரவேற்று இருக்கிறார்கள். 3-லிருந்து 3½ சதவீதம் ஆக விற்பனை வரியை உயர்த்தி இருப்பது மக்களை அவ்வளவாக பாதிக்காது என்று சொல்லி இருக்கிறார்கள். அவர்கள் இதைச் சொல்லி விட்டு ஒரு கணக்கையும் சொன்னார்கள். 10 ரூபாய்க்கு 30 பைசா என்று இருப்பது 35 பைசாவாகப் போகிறது, அதனால் ஒன்றும் குடி முழுகிப் போய்விடாது என்றும்

சொல்லியிருக்கிறார்கள். ஒரு கட்சியைச் சார்ந்த உறுப்பினர் அதை வரவேற்றுவிட்டு அதைச் சட்டமாகக் கொண்டு வரும்போது இன்னொருவர் எதிர்ப்பது விந்தையாக இருக்கிறது.

அதற்கு முன்னாலே பேசிய காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள் இதை வன்மையாகக் கண்டிக்கிறோம், வன்மையாகக் கண்டிக்கிறோம் என்று சொன்னார்கள். ஏதோ இதுவரை அவர்கள் ஆட்சி செய்வதற்கு வாய்ப்பு இல்லாதது போலவும், இதற்குப் பின்னாலேதான் ஆளும் கட்சியாக வருவதாகக் கற்பனை செய்து கொள்வது போலவும் இதை மக்கள் தாங்கமாட்டார்கள் என்று சொன்னார்கள். இது எல்லாம் எப்படி இருக்க வேண்டும் என்று அவர்கள் ஆட்சியில் இருந்த காலத்தில் எண்ணம் இருந்து இருக்கவேண்டும். 2 சதவிகிதமாக இருந்ததை 2½ சதவிகிதமாக **உயர்த்தியது யார்? அப்போது ஏன் செய்தார்கள். என்னுடைய** கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள் இதே மன்றத்திலே 2 சதவிகிதமாக இருந்ததை 2½ சதவிகிதமாக ஆக்குகிறீர்களே என்று கேட்ட நேரத்தில், அன்றைய தினம் நிதியமைச்சராக இருந்தவர்கள் விளக்கம் சொன்னார்கள். "இது வளர்ந்து வரும் சமுதாயம்" என்று சொன்னார்கள். மக்கள் வாழ்க்கைத் தரம் உயருகிறது. எல்லாத் துறைகளிலும் நாடு முன்னேறிக் கொண்டு இருக்கிற நேரத்தில் இந்த வரிஉயர்வு தவிர்க்க முடியாதது என்று சொன்னார்கள். 2 சதவிகிதமாக இருந்ததை 2½ சதவிகிதமாக ஏற்றியவர்கள், 3 சதவிகிதமாக இருப்பதை 3½ சதவிகிதமாக ஆக்கியிருப்பதைக் கண்டித்து, ஏதோ உலகத்தில் நடக்கக் **கூடாதது நடந்து விட்டது போல் பேசிக் கொண்டிருக்கிறார்கள்.** அது மட்டுமல்ல, அம்மையார் அவர்கள் சொன்னார்கள் வரிகளைக் குறைப்போம் என்று சொல்லிவிட்டு, இப்படி ஏற்றுகிறீர்களே என்று சொன்னார்கள். 20 ஆண்டுகாலம் ஆட்சியில் இருந்தவர்கள், ஒரு வரியைக் கூட குறைப்பதற்கு யோக்கியதை **இல்லாதவர்கள், இப்போது நம்மைப் பார்த்து கேட்கிறார்கள்.** இரண்டு விதமான வரிகளை முழுவதுமாக எடுத்து இருக்கிறோம். **புஞ்சை நிலங்களுக்கு வரி இல்லை, 5 ஏக்கருக்கு கீழ் உள்ள நஞ்சை நிலங்களுக்கு வரி இல்லை. எனவே எங்கே வாய்ப்புகள் வரிகளைக் குறைக்க ஏற்படுகிறதோ, அங்கெல்லாம் அதைச் செய்ய இந்த** அரசு தயாராக இருக்கிறது (குறுக்கீடு).

**திருமதி த. ந. அனந்தநாயகி:** "யோக்கியதை இல்லாதவர்கள்" பார்லிமெண்டரி தானா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** யோக்கியதை என்றால் என்ன அர்த்தம்? அதற்கு வேறு வார்த்தைக் கொடுங்கள்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** யோக்கியதை என்பதை மனம் இல்லாதவர்கள் என்று மாற்றிக்கொள்ளலாம்.

**திரு. நா. வீராசாமி:** மாற்றிக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாற்றிச் சொல்லுங்கள்.





**திரு. நா. வீராசாமி:** லக்சுரி பொருள்களுக்கு வரி போடுங்கள் என்று சொன்னார்கள். அதைப்போட்டாலும் போடலாமா என்று கேட்பதற்கு எல்லாத் தரப்பிலும் ஆட்கள் இருக்கிறார்கள். ஏழைகளுக்கு நன்மை செய்ய வேண்டுமென்று எண்ணுகிற நோக்கத்தில், **பஸ் கம்பெனிகளை தேசியமயம் ஆக்கினால், அதற்கும் இந்த மன்றத்திலே எதிர்ப்பு தெரிவிப்பது வாடிக்கையாகிவிட்டது. நல்லதைச் செய்வதை வரவேற்க . . . .**

**திருமதி த. ந. அனந்தநாயகி:** பஸ் தேசியமயமாக்கியதற்கு யாராவது எதிர்ப்பு தெரிவித்தார்களா? எதற்கு இப்படி சொல்கிறார்கள்?

**திரு. நா. வீராசாமி:** நம்முடைய அம்மையார் அவர்கள் திருமதி ஜோதி வெங்கடாசலம் பேசுகிறபோது இருந்தார்களோ இல்லையோ தெரியாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீக்கிரமாக முடியுங்கள்.

**திரு. நா. வீராசாமி:** அவர்கள் பேசுகிற நேரத்தில் பஸ் முதலாளிகளுக்காக வாதாடினார்கள். டாக்டர் ஹாண்டே அவர்கள் பேசுகிற நேரத்தில், பட்ஜெட்டின் 'ஏ' பிரிவு காமெடியாகவும், 'பி' பிரிவு டிராஜிடியாகவும் இருக்கிறது என்று சொன்னார்கள். **பட்ஜெட்டின் 'பி' பிரிவில் பஸ் தேசியமயம் அறிவிக்கப்பட்டிருக்கிறது.** நல்லதை எடுத்துச் சொல்லுகிறபோது வரவேற்று, எப்போதாவது எதிர்ப்புகள் என்று சொன்னால் அரசாங்கம் அந்த நிலைமையை கவனிக்கும். மக்களுடைய நன்மைக்கு வளர்ந்து வரும் சமுதாயத்தில் இந்த வரிகள் அவசியம் என்பதைக்கூறி முடிக்கிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவரவர்களே, 3 சதவிகிதத்திலிருந்து 3½ சதவிகிதமாக உயர்த்துவதற்கு இருக்கும் விற்பனை வரி மீது அங்கத்தினர்கள் சொன்ன கருத்துக்கள் அனைத்தையும் கேட்டுக்கொண்டு இருந்தோம். நான் துவக்கத்திலேயே எல்லா அங்கத்தினர்களுக்கும் தெரிவித்துக் கொள்கிறேன். இது விலைவாசிகள் ஏற்றத்திற்கு கொண்டு போய் விடுமோ என்று அங்கத்தினர்கள் கருத்து தெரிவித்து இருப்பதுபோல், அதை விட தீவிரமாக, முதலமைச்சரும், மற்ற அமைச்சர்களும் நெடுநாள் சிந்தித்து கடைசியில்தான் கொண்டு வந்து இருக்கிறோம். இதனால் ஏற்படும் விளைவுகள் என்ன என்பதையும் யோசித்து, வேறு வழி இல்லை, எனவே செய்கிறோம் என்று செய்யப்பட்டதே தவிர, வருவாயைப் பெருக்குவதற்கு ஒரு இனமாக வைத்து செய்யப்பட்டதே தவிர, வேறு அல்ல என்று துவக்கத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். எல்லோருக்கும் எந்த விதமான கருத்து, ஏழைகளை பாதிக்குமோ என்று இருக்கிறதோ, அதே கருத்து எங்களுக்கும் இருந்தது. அதை ஆராய்ந்து பிறகுதான் முடிவு எடுத்தோம் என்பதை துவக்கத்திலே நான் மீண்டும் வற்புறுத்திக் கூற விரும்புகிறேன்.

டாக்டர் ஹாண்டே அவர்கள் பேசும்போதும், அம்மையார் அவர்கள் பேசும்போது, ராஜாஜி அவர்கள் இந்த வரியை கண்டு பிடித்து மதுவிலக்கை கொண்டுவரும் நேரத்தில், அதனால் ஏற்படுகிற நஷ்டத்தை சரிக்கட்ட ½ சதவிகிதம் போட்டார்கள் என்று சொன்னார்கள். ஆனால், அந்தக் கருத்துக்கு நான் உடன்பாடு இல்லை என்று என்னைப் பத்திரிக்கையாளர்கள் கேட்டபோது நான் சொல்லி இருந்தேன். அதற்குப்பிறகு மதிப்பிற்குரிய ராஜாஜி அவர்கள் சமீபத்தில் கருத்து தெரிவித்து இருக்கிறார்கள். "நான் வரி போட்டது அதற்காகத்தான் என்றாலும், இந்த மது விலக்கையும், விற்பனை வரியையும் இணைத்துப் பேசுவது சரியல்ல" என்று அறிக்கை விட்டு இருக்கிறார்கள். அதை திரு. ஹாண்டே அவர்கள் படித்து இருப்பார்கள் என்று நினைக்கிறேன். அவர்கள் ஆங்கிலம் நன்கு அறிந்தவர்கள். ஆகவே அதைப் படித்துப் புரிந்து கொண்டிருப்பார்கள் என்று நம்புகிறேன். ராஜாஜியின் கருத்துக்கு மாறான கருத்து இல்லை என்று கருதுகிறேன்.

½ சதவிகிதம் உயர்த்தியதால் சோஷலிசம் கெட்டு விடும் என்று சொன்னார்கள். சோஷலிசப்போர்வையிலிருந்து சோஷலிசத்திற்கு எதிராக வேலைசெய்கிறீர்கள் என்று நண்பர் சுப்ரமண்யம் பேசும்போது சொன்னார்கள். ½ சதவிகிதத்தில் தான் சோஷலிசம் மறைந்து இருக்கிறதா என்று சொன்னார்கள்.

THIRU K. M. SUBRAMANIAM: With your permission Mr. Speaker, Sir, it is not half a per cent. It is two per cent. It is multi-point sales tax.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** இது பல முனைக் கட்டத்திலே வருகிறது என்பதை தெளிவாகச் சொல்லியிருக்கிறோம். அதற்கு விளக்கம் தேவையில்லை. பலமுனை வரி தான் போட்டு இருக்கிறோம். இப்படிப் போட்டு விட்டு, சோஷலிசத்திற்கு எதிராக வேலைகளைச் செய்து கொண்டு இருக்கிறீர்கள் என்று நண்பர் சுப்பிரமணியம் குறிப்பிட்டார்கள். அவர்களுக்கு நான் ஒன்றை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். சோஷலிசம், சோஷலிசம் என்று சொல்லிக்கொண்டு ராஜமான்யத்திற்கு ஓட்டுப்போட்டவர்கள் நீங்கள் தான் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

THIRU K. M. SUBRAMANIAM: We have gone out. That does not matter.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மக்கள் அதற்குப்பிறகு அளித்த தீர்ப்பு என்ன என்பதை மறந்து விடக்கூடாது. சோஷலிசம், சோஷலிசம் என்று சொல்லிக்கொண்டு நாட்டு மக்களை ஏமாற்றவேண்டுமென்ற எண்ணம் எங்களுக்கு இல்லை என்று சொல்லிக்கொள்கிறேன். நம்முடைய நோக்கம் சோஷலிசம் தான். இதிலே என்ன சலுகைகள் கொடுக்கப் போகிறீர்கள் என்று கேட்டார்கள். உயர்திரு தங்கமணி அவர்கள் பேசும் போது, 15,000 ரூபாய்க்கு மேல் எக்சம்ஷன் இல்லையா என்று கேட்டார்கள். அதைப்பற்றி மானியம் வரும்போது சொல்லலாம் என்று இருந்தேன். முதலமைச்சர் அவர்கள் இப்போதே சொல்லி விடுங்கள் என்று சொல்லிவிட்டார்கள். ஆகவே என்ன சலுகைகள் தர இருக்கிறோம் என்பதை இப்போதே அறிவித்து விடுகிறேன்.



ரூ. 10,000 வரை வரி இல்லை என்ற வரம்பு ஏற்கனவே காங்கிரஸ்காரர்கள் காலத்தில், மதிப்பிற்குரிய காமராஜ் அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்தில், ரூ. 10,000 வரை வியாபாரம் செய்பவர்களுக்கு வரி இல்லை என்று போடப்பட்டது. அதை பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சிக்கு வந்த பிறகு 15,000 ரூபாய்க்கு உயர்த்தினார்கள். 50,000 ரூபாய் வரை கம்பௌண்டிங் என்று வைத்து இருந்ததை, அண்ணா அவர்கள் ஆட்சி பொறுப் பேற்றுக்கொண்ட பிறகு, ரூ. 75,000 வரை உயர்த்தினார்கள். இப்போது இந்த அரசு கொடுக்க இருக்கும் சலுகை, ரூ. 15,000 வரை விற்பனை வரி இல்லை என்பதை மாற்றி, ரூ. 25,000 வரை விற்பனை செய்பவர்களுக்கு விற்பனை வரி இல்லை என்று கொண்டு வந்து இருக்கிறோம். ரூ. 75,000 வரை பண்ணலாம் என்று இருந்ததை மாற்றி, இப்போது 1 லட்சம் ரூபாய் வரை கம்பௌண்டிங் பண்ணலாம் என்று கொண்டு வருகிறோம். இதிலே கூட சோசலிச பாதையில்தான் செல்கிறோம். எப்படி ஸ்லாப் ரேட் வைத்து இருக்கிறோம் என்பதை மான்யம் வரும்போது சொல்கிறேன்.

அடுத்தபடியாக இன்னொன்றைச் சொன்னார்கள். 2 சதமாக இருந்ததை 2½ சதமாக உயர்த்துகிறீர்களே, இது நியாயமா என்று கேட்டார்கள். இதை ஏன் வரவு, செலவுத் திட்ட அறிக்கையிலே படிக்கவில்லையென்று கேட்டார்கள். கம்போனென்ட்ஸுக்கும் மூலப்பொருளுக்கும் ஒரு சதவீத வித்தியாசம் முன்பிருந்தே இருந்து வருகிறது. 3 சதமாக இருக்கும்போது அது 2 சதமாக இருந்தது. இந்த ஒருவிகித வித்தியாசம் இருந்துகொண்டிருக்கிறது. முன்பு 2½ பர்சென்டாக இருந்த பொழுது 1½ பர்சென்டாக இருந்தது. இதில் எந்தவிதமான மாறுபாடும் இல்லை. லக்ஸரி குட்ஸ்களுக்கு வரி போட்டிருக்கிறீர்களா என்று கேட்டார்கள். போன ஆண்டு ஆடம்பரப் பொருள்களின்மீது வரி போட்டிருக்கிறோம். இப்படி வரி அதிகமாகப் போடப்பட்டபொழுது டாக்டர் ஹாண்டே அவர்கள், இப்படி வரி போடுவதன் காரணமாக வேறு மாநிலங்களுக்கு வியாபாரம் போய்விடுமோ என்று கூறினார்கள். அந்த அச்சத்தின் காரணமாகத்தான் வேறு மாநிலங்களில் எந்த முறையில் வரி போட்டிருக்கிறார்கள் என்பதை கணக்கில் கொண்டுதான் அதைக் குறைத்திருக்கிறோம் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் நினைவு படுத்துகிறேன். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் கூட வரியை கடுமையாக எதிர்ப்பதாகச் சொன்னார். அதற்கு நண்பர் திரு. வீராசாமி அவர்கள் தக்க பதிலை அளித்தார்கள். திரு. மணலி கந்தசாமி அவர்கள் வரி விதிப்பைப் பற்றிப் பேசினார்கள். அவர் விற்பனை வரியைப்பற்றிப் பேசியிருப்பதைச் சொல்கிறேன்.

[திரு. ப. உ. சண்முகம்] [1971 ஜூன் 28

"வரி விதிப்புகளை எடுத்துக்கொண்டால், இதை யாரும் ஆட்சேபிக்க முடியாது. விற்பனை வரி 3 சதத்திலிருந்து 3½ சதமாக உயர்த்தியிருக்கிறார்கள். பத்து ரூபாய்க்கு சாமான்கள் வாங்கினால் அதற்கு வரியாக 30 காசாக இருந்ததை 35 காசாக உயர்த்தியிருக்கிறார்கள். மக்களின் நலனைக் காப்பதற்காக 5 காசுதான் கூடுதலாகக் கொடுக்க வேண்டும். வரிகளை கொடுக்காமல் பல்வேறு காரியங்களை அரசாங்கம் செய்ய முடியும் என்று நாட்டு மக்கள் எண்ணவில்லை"

என்று குறிப்பிட்டார்கள். திரு. மணலி கந்தசாமி அவர்கள் பேசியதை நான் நினைவுபடுத்துகிறேன். ஆனால் இந்த வரி உயர்வைப் பயன்படுத்திக்கொண்டு வியாபாரிகள் அதிக லாபம் பெறலாம் என்று நினைத்துக் கொண்டிருந்தால் அவர்கள் மீது கட்டாயம் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கூறியிருக்கிறார்கள். வியாபாரிகள் இந்த வரி உயர்வைப் பயன் படுத்திக் கொண்டு அதிக லாபம் பெற முயற்சி செய்தால், அவர்கள் மீது கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கத் தயங்க மாட்டோம் என்ற உத்தரவாதத்தை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே, விற்பனை வரி அதிகமான சுமையாக இருக்க முடியாது. அரசாங்கத்தின் நிதி வாயில்களைப் பெருக்குவதற்காகத்தான் செய்கிறோம். வேறு ஒன்றும் இல்லை ஏராளமான முன்னேற்றங்களைச் செய்கின்ற நேரத்தில் நமக்கு பணம் தேவைப் படுகிறது. வேறு தண்டச் செலவுக்காக அல்ல, நாட்டு மக்களுடைய வாழ்வுக்காகத்தான் இவைகளைச் செய்கிறோம் என்று கூறி, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. எம். சுரேந்திரன் :** ஆன் எ பாயின்ட் ஆஃப் க்ளாரிபிகேஷன் சார், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசும்போது கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த மணலி கந்தசாமி அவர்கள் வரியை ஆதரித்துப் பேசியிருக்கிறார் என்று சொன்னார்கள். அந்தக் கட்சித் தலைவர் அவர்கள் எதிர்த்துப் பேசியிருக்கிறார்கள். எனவே, அந்தக் கட்சியினுடைய முடிவு மணலி கந்தசாமி அவர்கள் பேசியதா, அல்லது கட்சித் தலைவர் அவர்கள் பேசியதா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்தபடியாக, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தீர்மானம் வாக்கெடுப்புக்கு விடப்படுகிறது.

பேரவையின் முன்னுள்ள கேள்வி :

" தமிழ்நாடு 1971-ம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன் வடிவு (சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண் 9/71) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டதாக அறிவிக்கப்பட்டது.



1971 ஜூன் 28]

DR. H. V. HANDE : Sir, I press for a division.

(மணியடிக்கப்பட்டு, உறுப்பினர்கள் இருக்கைகளில் அமர்ந்த பின்னர்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இந்தத் தீர்மானத்தை ஆதரிப்போர் எழுந்து நிற்க வேண்டும்.

(ஆதரிப்போர் எழுந்து நின்றனர்).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இந்தத் தீர்மானத்தை எதிர்ப்போர் எழுந்து நிற்க வேண்டும்.

(எதிர்ப்போர் எழுந்து நின்றனர்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நடுநிலைமை வகிப்பவர்கள் எழுந்து நிற்க வேண்டும்.

(நடுநிலைமை வகிக்கும் உறுப்பினர்கள் எழுந்து நின்றனர்).

இந்தத் தீர்மானத்தை ஆதரிப்போர் 110, தீர்மானத்தை எதிர்ப்போர் 16, நடுநிலைமை வகிப்பவர்கள் 4, ஆகவே, ஆதரிப்போர் அதிகமாக இருப்பதால் தீர்மானம் நிறைவேறியது என அறிவிக்கின்றேன்.

பின்னர், சட்ட முன்வடிவு பிரிவுவாரியான ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

Clauses 2 to 4 were put and carried.

Clause 1, the Preamble and the Long Title were put and carried.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, " தமிழ்நாடு 1971-ம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டப்பேரவை சட்டமுன்வடிவு எண் 9/1971) சட்டமாக ஆக்கப்பட வேண்டும்" என்று கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, சட்டமுன்வடிவு, சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

## 5. அறிவிப்பு

### தமிழ்நாடு 1971-ஆம் ஆண்டு குடியிருப்பு அனுபோகதாரர்கள் (வெளியேற்றப் படுதலிலிருந்து பாதுகாத்தல்) திருத்த சட்ட முன்வடிவு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தமிழ்நாடு 1971-ம் ஆண்டு குடியிருப்பு அனுபோகதாரர்கள் (வெளியேற்றப்படுவதிலிருந்து பாதுகாத்தல்) திருத்த சட்ட முன்வடிவை (சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண் 11/1971) ஆய்வுக்கு எடுத்துக்கொள்வதற்கு மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்திருக்கிறார்கள்.

[Thiru P. U. Shanmugam] *[1971 ஜூன் 28*

**4. அரசினர் சட்ட முன் வடிவுகள்—தொடர்ச்சி.**

**(ஆ) தமிழ்நாடு 1971-ம் ஆண்டு குடியிருப்பு அனுபோகதாரர்கள் (வெளியேற்றப்படுதலிலிருந்து பாதுகாத்தல்) திருத்த சட்ட முன் வடிவு (ச. பே. சட்டமுன் வடிவு எண் 11/1971).**

THE HON. THIRU P. U. SHANMUGAM : Speaker, Sir, I beg to move that the Tamil Nadu Occupants of Kudiyiruppu (Protection from Eviction) Amendment Bill, published in the Tamil Nadu Government Gazette Extraordinary, dated the 25th June 1971 (Legislative Assembly Bill 11 of 1971), be taken into consideration.

Under section 3 (1) of the Tamil Nadu Occupants of Kudiyiruppu (Protection from Eviction) Act," 1961 (Tamil Nadu Act 38 of 1961), no person occupying any kudiyiruppu on the 31st March 1959, can be evicted from such kudiyiruppu except in accordance with the provisions of that Act. Section 4 of the said Act gives a right of restoration to persons who were occupying the kudiyiruppu on the 31st March, 1959 and who were evicted from such kudiyiruppu after that date, but before the 29th November 1961 and also to persons who were in occupation of the kudiyiruppu on the 31st March 1959 and who were evicted after the 29th November 1961. The Government, after careful consideration, have decided that the right to protection from eviction should be given to all persons who were occupying the kudiyiruppu, irrespective of the date of such occupation. It has also been decided that the right of restoration should be given to any person who was evicted from such kudiyiruppu on or after the 1st February 1969, but before the date of the publication of the proposed legislation in the *Tamil Nadu Government Gazette* or who is evicted from such kudiyiruppu after the date of such publication. The existing right of restoration given to persons who were occupying the kudiyiruppu on the 31st March 1959 and who were evicted subsequently is also retained. Provision has also been made in the Bill empowering the Government to make rules for the preparation of the record of persons occupying kudiyiruppu and also for appeal and revision.

The Supreme Court in *Messrs. Jalan Trading Company* vs. *Mill Mazdoor Sabha* (1967 *I.S. C.J.* 189) has observed that the power to remove any doubt or difficulty by altering the provisions of the Act would in substance amount to exercise of legislative authority and that it cannot be delegated to an executive authority. It is, therefore, proposed to avail of this opportunity to omit section 13 of the Act which gives power to the Government to remove any difficulty which arises in giving effect to the provisions of the Act by issuing orders thereunder, and also to make consequential amendments to section 14 of the Act.

Sir, I commend the motion for the acceptance of the House.



*1971 ஜூன் 28]*

**திரு. கே. டி. கே. தங்கமணி :** சார், இந்த மசோதாதை நான் முழுமனதோடு வரவேற்கிறேன். அதே நேரத்தில், ஒருசில திருத்தங்களை நான் ஏற்கனவே கொடுத்திருக்கிறேன். அது வரும்பொழுது அதை நான் பிரேரேபிக்கிறேன் என்று சொல்லி விட்டு, எனக்கு ஏற்பட்ட சில சந்தேகங்களைப் பதில் சொல்லும்பொழுது தெளிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். 1961-ஆம் வருஷம் நிறைவேற்றப்பட்ட சட்டத்திலே ஒன்றாவது செக்ஷன்படி பார்த்தால், மூன்றாவது பிரிவின்படி என்று

'It shall remain in force for a period of three years.'

என்று சொல்லப்பட்டிருக்கிறது. அந்த மசோதாவானது 1959-ம் ஆண்டுக் காலத்திலே குடியிருப்பில் இருந்தவர்களுக்கெல்லாம் பாதுகாப்புக் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்ட சட்டம். அந்தச் சட்டமானது மூன்றாண்டுக் காலம் தொடர்ந்து அமலிலிருக்கும் என்று சொல்லியிருக்கிறார்கள். இப்பொழுது இந்த ஆண்டு நிறைவேற்றப்படக்கூடிய திருத்த மசோதாவில் அதைப்பற்றி எதுவும் சொல்லாமல் விடப்பட்டிருக்கிறது. எனக்கு ஏற்படுகின்ற ஐயப்பாடு என்னவென்றால், இந்தத் திருத்த மசோதாவானது அமலுக்கு வந்த பிறகும் மூன்றாண்டுக் காலத்திற்குப்பிறகு இதைத் திருத்த வேண்டிய அவசியம் இருக்குமா என்பது. அப்படியானால் ஐயத்திற்கிடமில்லாமல் இது நிரந்தரமான சட்டமாக்க வேண்டுமென்று முதன்முதலில் கேட்டுக்கொள்கிறேன்.

இரண்டாவதாக இம்மாதிரியாக நாடு பூராவிலும் ஏற்கெனவே பட்ஜெட் உரையிலே நிதியமைச்சராகயிருக்கும் முதலமைச்சரவர்கள் தஞ்சை மாவட்டத்திலிருக்கும் குடியிருப்புதாரர்களுக்கு, குறிப்பாக, விவசாயத் தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கப்படும் என்று மட்டுமல்லாமல், அது சொந்தமாக்கப்படும் என்றும் சொன்னார்கள். அதன் ஒரு பகுதியாக இதைப் பார்க்கும் பொழுது இம்மாதிரி குடியிருப்புகளெல்லாம் அவர்களுக்கு நிரந்தரமாக ஏற்பாடு செய்யப்பட வேண்டும். ஓரிரண்டு சம்பவங்களை நான் குறிப்பிடலாம் என்று நினைக்கிறேன்.

மதுரையிலே தெற்குவாசல் என்ற ஒரு பகுதியிலே 40 ஆண்டுக் காலமாக 100 ஹரிஜனங்கள் குடியிருந்துகொண்டு வருகிறார்கள். அந்த இடத்திற்கு மனைவாடகை கட்டிக்கொண்டுதான் இருக்கிறார்கள். அந்த இடமானது இரண்டு பேருக்குச் சொந்தமானது. யாரும் அதைப் பயன்படுத்துவது கிடையாது. ஆனால் இரண்டு வாரங்களுக்கு முன்பு அதைவிட்டு வெளியேற வேண்டுமென்று அடாபிடியாகச் சொல்லி சில காரியங்களைச் செய்தார்கள். ஜில்லா கலெக்டர் தலையிட்டு மீண்டும் இருக்கும் நிலை ஏற்பட்டது. அதனால் அவர்கள் பயந்துகொண்டு குடியிருக்கும் நிலை இருக்கிறது. அவர்கள் பயமில்லாமல் குடியிருக்க இது வசதி செய்யும் என்று நான் இந்த மசோதாவை மீண்டும் பாராட்டுகிறேன்.

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1971 ஜூன் 28

அடுத்தபடியாக, 4-வது கிளாசிலே 4-வது பிரிவிலே சொல்லப்பட்டிருக்கும் விஷயத்தைப்பற்றியுள்ள சந்தேகத்தைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

'If any person occupying any kudiyiruppu, to whom sub-section (1) does not apply, has been evicted from such kudiyiruppu on or after the 1st February 1969, but before the date of the publication of the Tamil Nadu Occupants of Kudiyiruppu (Protection from Eviction) Amendment Act, 1971 in the *Tamil Nadu Government Gazette*, or is evicted from such kudiyiruppu after the date of such publication, he may, within a period of six months after the date of such publication or after the date of eviction, as the case may be, apply to the authorised officer within whose jurisdiction the kudiyiruppu is situated in such form as may be prescribed for restoration to him of the possession of the kudiyiruppu from which he was evicted, and ' to occupy it subject to the same terms and conditions, as far as may be, as were applicable to him on the date on which he was evicted.'

என்றிருக்கிறது. 'சேம் டேர்ம்ஸ் அண்ட் கண்டிஷன்ஸ்' என்று இருப்பதால் பல கோளாறுகள் ஏற்படும் என்று ஐயப்படுகிறேன். அவர்கள் மீண்டும் அந்த குடியிருப்பை ஆக்ருபை பண்ணியிருப்பது என்று சொல்லிவிட்டால் போதும். அதற்குமாறாக "சேம் டெர்ம்ஸ்" என்று சொன்னால், அதற்குப் பல வியாக்கியானங்களும், முன்பு என்ன இருந்தது என்ற கருத்துக்களும் வரும் என்பதால் அந்தப் பகுதி மாற்றியமைக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, "ரூல் மேக்கிங் பவர்ஸ்" கொடுத்திருக்கிறார்கள் 5-வது பிரிவின்படி 2-ஏயில்

'The Government may make rules providing for the preparation of record of persons occupying kudiyiruppu.........

என்றிருக்கிறது. ஏற்கனவே சுப்ரீம் கோர்ட் தீர்ப்பைப்பற்றி மாண்புமிகு அமைச்சரவர்கள் தெரிவித்தார்கள். எந்தவிதமான அதிகாரத்தையும் சபார்டினேட் லெஜிஸ்லேஷனுக்கோ அல்லது எக்ஸிகியூட்டிவ் பவர்ஸ்க்கோ கொடுப்பது சரியல்ல, சட்டத்தின் அடிப்படையிலே இருக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, இம்மாதிரி ரூல் மேக்கிங் பவர்ஸிலே கொஞ்சம் வழுவழாத் தன்மையிருந்தால் அது மீண்டும் சிக்கலை ஏற்படுத்தும் என்று ஐயப்படுகிறேன். ஆகவே நான் ஒரு திருத்தமாகவே கொடுத்திருக்கிறேன். அந்த ரூல் மேக்கிங் பவர்ஸை எப்படித் தெளிவாகச் சொல்ல வேண்டுமென்றால்

' Government may make rules for ensurng persons ' occupation rights of kudiyiruppu. '

என்று. அந்த சட்ட திட்டங்கள், விதிகள் எப்படியிருக்க வேண்டுமென்றால், அவர்களுக்குப் பாதுகாப்பு கொடுக்கக்கூடிய முறையில் இருக்க வேண்டும். நான் கொஞ்சம் அதை விளக்கிச் சொல்கிறேன்.



1971 ஜூன் 28] [திரு. கே. டி. கே. தங்கமணி]

இவர்கள் சொல்வதுபோல் ரெக்கார்ட் தயார் பண்ண வேண்டுமென்றால் இன்றைக்குக் குத்தகை விவசாயிகள் ரெக்கார்ட் பண்ணிய கதையாகத்தான் முடியும். பல ஆண்டுகளாகக் குத்தகை விவசாயிகளாகயிருப்பவர்கள் அங்கேயுள்ளவர்களுக்குத் தெரியும், மக்களுக்கும் தெரியும். பல்நெடுங்காலமாக குத்தகை விவசாயிகள் இருக்கிறார்கள். குத்தகை விவசாயிகளாகயிருப்பவர்கள் ஏதோ எழுத்து மூலம் பதிவு செய்யவில்லை என்பதால் வெளியேற்றப்படுகிறார்கள். அப்படி வெளியேற்றப்படுவது மட்டுமல்ல, அவர்கள் வெளியேற்றப்பட்டதன் காரணமாக ஆயிரக்கணக்கான அப்பீல்கள் இன்றைக்கு ரெவின்யூ போர்டின் முன்னால் இருக்கிறது என்று ஏற்கனவே அறிவித்திருக்கிறார்கள். இது சம்பந்தமாக ஒரு அதிகாரி எப்படி ஆயிரக்கணக்கான, பல்லாயிரக்கணக்கான விவசாயிகளைப் பதிவு செய்யவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள்? ஆகவே நான் அச்சப்படுவது என்னவென்றால் இம்மாதிரியான ரிக்கார்டுகளை தயார் பண்ண வேண்டுமென்றால் உடனடியாக குடியிருப்பவர்கள் ஒவ்வொருவரும் போய் மனுச் செய்து ரெக்கார்ட் பதிவு செய்வது என்றால் சாதாரண ஏழை விவசாயிகள், ஹரிஜன மக்கள் அவர்கள்தான் பெரும்பகுதி இந்தக் குடியிருப்புகளில் இருப்பார்கள். அவர்களுக்கு அதிகக் கஷ்டமாகப் போகும். ஆகவே, அதிகாரியே சென்று அவருக்குத் திருப்தியாகயிருந்தால் அவர்தான் குடியிருப்புதாரர் என்று செய்ய வேண்டும். அந்த முறையில் பதிவு செய்ய வேண்டும். எனவே இன்னும் தெளிவாக

'Government may make Rules for ensusing persons occupation rights of Kudiyiruppu.'

என்று ஓரல் எவிடென்ஸ் மூலமாக, நேரடியாக விசாரிப்பதன் மூலம் செய்து கொள்ள வேண்டுமென்றும் தெரிவித்துக்கொள்கிறேன்.

பொதுவாகப் பார்த்தால் இந்த மசோதா வரவேற்கத்தக்க மசோதா. நாடு பூராவிலும் இன்றைக்கு ஏழைகள்—இந்த நகரம் உட்பட—பல இடங்களில், சர்க்காருக்குச் சொந்தமான புறம்போக்கு நிலங்களிலும், தனியாருக்குச் சொந்தமான, எந்தவித உபயோகத்திற்கும் இல்லாத இடங்களிலும் குடியிருப்புதாரர்களாக இருக்கிறார்கள். தனிப்பட்டவர்கள் சினிமா கொட்டகை கட்டப் போகிறோம், வீடு கட்டப் போகிறோம் என்று பலவிதமான காரணங்களைச் சொல்லி அந்த ஏழை மக்களை வெளியேற்றுகிறார்கள். அப்படி வெளியேற்றப்படாமல் இருக்கும் அளவுக்குப் பாதுகாப்புக் கொடுக்கும் இந்த மசோதா வரவேற்கத்தக்கது. இது நல்ல முறையில் அமலாவதற்கு நிரந்தமான சட்டமாக ஆக்கப்பட வேண்டும். அந்த மக்கள் இந்தச் சட்டத்தின் விதிமுறைகளை எல்லாம் தெரிந்தவர்களாக இருக்க முடியாது. அவர்கள் குறிப்பிட்ட காலத்தில் மனுச் செய்யவில்லை, எழுத்து மூலமாகக் கொடுக்கவில்லை என்ற காரணத்தால் புறக்கணிக்கப்படக் கூடாது என்பதற்காகத்தான் நான் இரண்டு அம்சங்களைக் குறிப்பிட்டேன். இந்த இரண்டு அம்சங்களையும் அரசினரே திருத்தமாக ஏற்றுக் கொண்டு வந்துவிட்டால்கூடச் சாலச் சிறந்ததாக இருக்கும்.

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1971 ஜூன் 28

இல்லாத போதிலும் கூட அம்மாதிரி செய்யப்படும் என்று வாக்குறுதி கொடுத்தால் உதவியாக இருக்கும் என்று சொல்லிக் கொண்டு, மீண்டும் ஒருமுறை இந்த மசோதாவை வரவேற்று முடித்துக் கொள்கிறேன்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவர் அவர்களே, இந்த மசோதாவில் நல்ல அம்சங்கள் இருப்பதைப் பாராட்டி ஏழைகளின் குடியிருப்புக்குத் தகுந்த பாதுகாப்பு அளித்திருப்பதை மனப் பூர்வமாக வரவேற்கிறேன். பொதுவாக ஏழை எளிய மக்கள் குடியிருப்புக்காக அல்லல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக, பெரும் நிலக்கிழார்கள் இருக்கும் இடத்தில் குடியிருப்புத் தகராறு அடிக்கடி ஏற்பட்டது. அது வேறுவிதமான முறையில் போலீசார் தலையிட வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. கட்டாயமாக அவர்களை வெளியேற்றுகின்ற நிலைமை இருப்பதால் பல இடங்களிலே இந்த ஏழை மக்கள் சங்கடப்படுகிறார்கள்.

பொதுவாக இது ஒரு நிரந்தமான சட்டமாக இருக்க வேண்டும். இந்தச் சட்டத்தை நிரந்தரமாக்க வேண்டுமென்று எனக்கு முன்பு பேசிய கம்யூனிஸ்டு கட்சியின், தலைவர் அவர்கள் வலியுறுத்திக் கூறினார்கள். நிலச் சீர்திருத்தத்தைப் பொறுத்து காம்ப்ரஹென்சிவ் லெஜிஸ்லேஷன் கொண்டு வருவதாகப் பலமுறை இந்த மன்றத்தில் எடுத்துக் கூறினார்கள். அதே போன்று குடியிருப்புச் சட்டத்தையும் நிரந்தரமான சட்டமாக, உறுதியான சட்டமாகக் கொண்டு வந்து, ஏழை மக்களுக்குப் பாதுகாப்பு அளிக்க அரசாங்கம் முன்வர வேண்டுமென்று கூற விரும்புகிறேன்.

இன்று வீடு இல்லாதவர்கள் எந்த வகுப்பைச் சார்ந்தவர்களானாலும் இருக்கக்கூடாது என்கிற நிலைமையைச் செய்ய வேண்டுமென்ற உறுதியை அரசாங்கம் ஏற்றுக் கொள்ள வேண்டும். பிறருடைய சொத்திலே வீடு கட்டிக் கொண்டிருந்தாலும் அவர்களை யேற்றும் நிலை இருக்கக் கூடாது. சோஷலிசம் பேசுகின்ற நாம் அவர்களுக்கெல்லாம் பாதுகாப்புக் கொடுக்க வேண்டும். சமுதாயத்தின் அடித்தளத்தில் இருக்கின்றவர்களுக்கு குடியிருப்பதற்கு வீடு கொடுப்பது அரசாங்கத்தின் தலையாய கடமை என்று உணர்ந்து, இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்தது பொருத்தமானது.

இன்னும் பல சங்கடங்கள் இருக்கின்றன. ஏரிக்கரையில் பலர் குடியிருக்கிறார்கள். சானல் கரையில் இருக்கிறார்கள். ரோடு மார்ஜினில் குடியிருக்கிறார்கள். எஸ்டேட் பகுதியின் ஓரத்தில் குடியிருக்கிறார்கள். இவர்களுக்கெல்லாம் அரசாங்க உத்தியோகஸ்தர்கள் ஒரு பக்கம் தொல்லை கொடுக்கிறார்கள், எஸ்டேட் உடைமையாளர்கள் மறுபக்கம் தொல்லை கொடுக்கிறார்கள். புறம்போக்கு நிலங்களில் இருப்பவர்களை எல்லாம் வெளியேற்ற எங்கள் ஜில்லாவில் பல இடங்களில் முயற்சி செய்கிறார்கள். இம்மாதிரி புறம்போக்கு நிலங்களில் குடியிருப்பவர்களை அங்கிருந்து அப்புறப்படுத்தினால் அவர்களுக்கு மாற்று இடங்கள் கொடுக்க



1971 ஜூன் 28] [திரு. ஆர். பொன்னப்ப நாடார்]

அரசாங்கம் வேண்டிய நடவடிக்கையை உடனடியாக எடுக்க வேண்டும். அதுவல்லாமல் எஸ்டேட் பகுதியில் வேறுவிதமான காரியங்கள் நடக்கிறது என்ற காரணத்தால், அதன் பக்கத்தில் இருக்கும் ஏழைகளைத் துன்புறுத்துவதும், போலீசை வைத்து மிரட்டுவதுமான காரியங்கள் நடக்கின்றன. குறிப்பாக, ஒரு பகுதியைச் சுட்டிக்காட்டுவது பொருத்தமாக இருக்குமென்று கருதுகிறேன். தட்டைக்காரன்குளம் என்ற பகுதி எங்கள் ஜில்லாவில் தோவாளை தாலுகாவில் இருக்கிறது. அங்கு குடியிருந்த ஏழைகளை அப்புறப்படுத்திவிட்டு வசதி படைத்தவர்கள் பல இடங்களில் ஆக்கிரமித்துக் கொண்டு நல்ல கட்டடங்களைக் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். இதற்குப் போலீசாரும் உடந்தையாக இருக்கிறார்கள். இதைப் பற்றிப் பலமுறை அதிகாரிகளிடம் எடுத்துக் கூறியிருக்கிறோம். இந்த மாதிரி சம்பவங்கள் நிகழ்ந்தால் சமுதாயத்தில் பெரும் புரட்சி ஏற்பட்டுவிடுமோ என்ற ஐயப்பாடு எழுகிறது. பக்கத்தில் இருக்கும் எஸ்டேட் உடைமையாளர்கள் அருகாமையில் இருக்கும் புந்தை புறம்போக்குகளில் இருப்பவர்களை அப்புறப்படுத்த வேண்டுமென்று கலெக்டர் அவர்களையும், எஸ்.பி. அவர்களையும் தூண்டிக் கொண்டிருக்கிறார்கள். இந்த மாதிரி சம்பவங்கள் ஏற்படாமல் இருக்க ராஜ்யம் முழுவதும் நடவடிக்கை எடுக்கும் அளவில் இந்தச் சட்டத்தைக் கொண்டு வரவேண்டும். தஞ்சையில் இருக்கும் பிரச்சினைக்கு ஒரு நல்ல, சுமுகமான தீர்வு காணப்பட்டிருப்பதுபோல் ஏனைய பகுதிகளுக்கும், வீடு இல்லாதவர்கள் பிறருடைய சொத்தில் குடியிருப்பவர்கள் இருப்பதால் அவர்களுக்கு வேறு நிலம் இல்லாத நிலையில் அவர்களுக்கும் பாதுகாப்பு அளிக்க வேண்டும். அரிசன சமூகத்தைச் சேர்ந்த பலரும் வீடு இல்லாத நிலையில் பிறருடைய சொத்தில் குடியமர்ந்திருக்கிறார்கள். அவர்களை எல்லாம் தேர்தல் காலத்தில் அரசியல் கண்ணோட்டத்தோடு எல்லா அரசியல் கட்சியைச் சார்ந்தவர்கள் விரட்டும் தன்மையாகத்தான் இருந்து கொண்டிருக்கிறது. இந்த மாதிரி சூழ்நிலை தவிர்க்கப்பட வேண்டும். ஜனநாயக மரபைச் சிருஷ்டிக்க இந்த மாதிரி நிலைகளைத் தவிர்ப்பது நலமாக இருக்கும்.

ஒரு சிறப்பான சட்டத்தை, நிரந்தரமான சட்டத்தை விரைவில் கொண்டு வரவேண்டும். எப்படி ரெக்கார்டு ஆஃப் டெனன்சி ஆக்டு கொண்டு வரப்பட்டதோ, அதே மாதிரி இந்த மாதிரிக் குடியிருப்பு பற்றி சர்வே நடத்தி அதற்கு வேண்டிய விதிமுறைகளை அமைப்பது பொருத்தமாக இருக்கும். பிறருடைய சொத்தில் குடியிருப்பவர்களுடைய சென்சஸ் கணக்கை உடனடியாக எடுக்க அரசாங்கம் ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

*** திரு. ஏ. ஆர். மாரிமுத்து :** மதிப்பிற்குரிய தலைவரவர்களே, இந்த மசோதாவை ஆதரித்து என்னுடைய கருத்தைக் கூற விரும்புகிறேன். அரசாங்கம் 1959-ம் ஆண்டுக்கு முன்னால் குடி

யிருந்தவர்களுக்கு அளிக்கப்பட்ட பாதுகாப்பை அதன் பிறகு வேறு இடங்களில் குடியிருப்பவர்களுக்கும் தொடர்ந்து அளிக்க வேண்டுமென்ற கருத்திலே இந்த மசோதாவைக் கொண்டுவந்திருக்கிறார்கள். நம் நாட்டில் எந்த விதமான சொத்தும் இல்லாத நிலையில் இருக்கிற மக்களுக்குக் குடியிருப்பு இடத்தையாவது கொடுத்தாக வேண்டுமென்ற கருத்தை அரசாங்கம் ஒப்புக் கொண்டிருப்பதற்கேற்ப இந்த மசோதா அதற்கு உறுதுணையாக இருக்குமென்று கருதுகிறேன்.

சாதாரணமாக, மனைக்கட்டுகள் என்று குறிப்பிடப்படுகிற இடங்களில் இருக்கிறவர்களைப் பாதுகாப்பதோடு கூட, தஞ்சை மாவட்டத்தில் கிழத் தஞ்சைப் பகுதி நிலைமையை விட மேலத் தஞ்சை நிலைமையைச் சற்றுக் கூர்ந்து பார்க்க வேண்டும். மேலத் தஞ்சைப் பகுதியில் தோப்புகள் அதிகம். தென்னந் தோட்டங்கள், மாந்தோட்டங்கள், பலாத் தோட்டங்கள் அதிகமாக இருப்பதால் அந்தத் தோட்டங்களில் குடியிருப்பவர்களுக்கும் இந்தப் பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டியது அவசியம். தோப்புகளுக்குச் சொந்தக்காரர்கள், தோட்டங்களுக்குச் சொந்தக்காரர்கள் அங்கிருக்கும் குடியிருப்புதாரர்களை, குடியிருக்கின்ற நிலமற்ற விவசாயிகளை. தோப்புக்குக் காவற்காரர்களாக நாங்கள் வீடு கட்டி வைத்திருக்கிறோம் என்ற வாதத்தைப் பல இடங்களிலே கூறிக் கொண்டு வருகிறார்கள். உண்மையான காவல்காரர்களாக நியமிக்கப்பட்டு குடியிருப்புகளில் இருக்கிறார்கள் என்ற கருத்தை ஏற்றுக் கொள்ளுவோமானாலும் அவர்களைக் குடியிருப்பில் இருந்து அகற்றாமல் இருப்பதற்கு இந்தச் சட்டம் பயன்படும் வகையில் இருக்க வேண்டும். குடியிருப்பது எந்த இடமாக இருந்தாலும் தோப்பாக இருந்தாலும், தோட்டமாக இருந்தாலும் அவர்களை வெளியேற்றக் கூடாது என்பது என்னுடைய வேண்டுகோள்.

அடுத்து, சர்க்கார் விதி மூலம் குடியிருப்புத் தகராறுகள் எங்கெங்கு இருக்கின்றன என்ற தகவலைச் சேகரிக்க விதி ஏற்படுத்திக் கொள்ள மசோதாவில் அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது. முன்னால் பேசிய கம்யூனிஸ்டு கட்சித் தலைவர் அவர்கள் கூறினார்கள்—விவசாயிகள் தாங்களாக மனுக் கொடுத்து தங்களைப் பதிவு செய்து கொள்ள வேண்டுமென்ற முறை இருந்தால் புரியாதவர்கள், படிக்காதவர்கள், சாதாரண மக்களுக்கு ரொம்பச் சிரமம் ஏற்படும் என்று கூறினார்கள்.

உண்மையில் அவர்கள் மனுக்கொடுத்து, அவர்களே பதிவு செய்து கொள்ள வேண்டுமென்பது சிரமமாக இருக்கலாம். அதே நேரத்தில் அதிகாரிகள் சென்று அவர்களாகவே குடியிருப்பை பதிவு செய்கிறபோது உண்மையாகவே பதிவு செய்யப்படுமா என்பதை உணர முடியாது. ஆகவே, அதிகாரிகள் பதிவு செய்கிற போது, பதிவு ரிஜிஸ்டரில் பதிவு செய்தபடி இருந்தாலும் ,அதிலே சில பேரை விட்டு விட்டால் சேர்த்துக்கொள்ள வழி இருக்கிறதா ?





அதிகாரிகள் மட்டும் அவ்வளவு சுத்தமாக எடுத்து விடுவார்கள் என்று குறிப்பிட முடியாது. மனுக்கொடுத்து பதிவு செய்து கொள்வதை விட, அதிகாரிகள் எங்கெங்கு பதிவு செய்து இருக்கிறார்களோ, அந்தப் பதிவை பப்ளிகேஷன் செய்கிறபோது, அந்தப் பதிவில் வராதவர்களின் பெயரை சேர்த்துக்கொள்ள முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும். இதை முன்னோடியாக வைத்து நாட்டிலுள்ள எல்லா மக்களுக்கும் குடியிருக்க வசதி செய்து தர முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தனியார் இடங்களில் என்று இல்லாமல் சர்க்கார் புறம்போக்கு நிலங்களில் இருப்பவர்களுக்கும் பாதுகாப்பு கொடுக்க வேண்டும். பல இடங்களில் சர்க்கார் நிலங்களில் குடியிருப்பவர்களை வெளியேற்றும் முயற்சி நடைபெற்று வருகிறது. அதாவது கம்யூனல் புறம்போக்கு சமுதாயத்திற்கு மிக மிக அவசியமாக தேவைப்படுகிற சர்க்கார் புறம்போக்கு தவிர. மற்ற இடங்களில் இருப்பவர்களுக்கு அந்த உரிமை கொடுக்கவேண்டும். மத்திய அரசு, மாநில அரசு புறம்போக்கு நிலங்களில் இருப்பவர்களுக்கும் பாதுகாப்பு அளிக்கவேண்டும். அதற்கு இந்த மசோதாவில் வழி வகைசெய்யவேண்டுமென்றும், அதற்கான வகையில் விதிமுறைகள் இயற்றப்படவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். எல்லா மக்களுக்கும் சீக்கிரமாக மனைக்கட்டு கிடைக்க வழி வகை செய்ய வேண்டுமென்று கூறி என்னுடைய உரையை முடிக்கிறேன். வணக்கம்.

* திரு. கே. ஏ. வகாப் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்தக் குடியிருப்பு மசோதாவை என்னுடைய கட்சியின் சார்பில் மனப்பூர்வமாக வரவேற்கிறேன்.

இது ஏழை மக்களுக்கு உதவக்கூடிய நல்ல திட்டங்கள் கொண்ட ஒரு மசோதா என்பதாலும், பேரறிஞர் அண்ணா அவர்கள் இந்த நாட்டிலே உள்ள மக்களுக்கு உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இடம் என்று கூறிய அடிப்படை தத்துவத்தை வைத்து, இந்த நாட்டிலுள்ள ஏழை மக்களுக்கு உதவ வேண்டுமென்ற அடிப்படையில், ஏழை மக்கள் குடியிருக்கும் இடங்களை அவர்களுக்கு சொந்தமாக்கித் தரும் திட்டம் என்பதாலும், இதை நான் மனப்பூர்வமாக வரவேற்கிறேன். இதை ஏழை எளிய மக்கள் எல்லோரும் மனப்பூர்வமாக வரவேற்கக்கூடிய ஒரு திட்டம் என்றும் சொல்லிக்கொள்கிறேன்.

அரசாங்கத்திற்குச் சொந்தமான நிலங்களில் குடியுள்ளவர்களுக்கு, அந்த நிலங்கள் பூரண உரிமையாக்கப்படவேண்டுமென்பதில் சில சிக்கல்கள் இருக்கின்றன. ஹைவேஸ் ரோடுகளுக்குப் பக்கத்தில் நிறைய புறம்போக்கு இருக்கிறது. இந்த இடத்தில் குடியிருப்பவர்கள் ஏராளமாக இருக்கிறார்கள். ஹைவேஸ் இலாகா இதற்கு ஆட்சேபணை செய்கிறது. இந்த இடங்களில் நூற்றுக்கணக்கான குடும்பங்கள் இருக்கின்றன. உதாரணத்திற்காக, வந்தவாசி, ராணிப்பேட்டை போன்ற இடங்களில்

குடியிருப்பவர்களுக்கு நில ஆர்ஜிதம் செய்து தரப்படாத நிலையில் இருக்கிறது. இவற்றை கவனத்தில் கொண்டு, உண்மையிலேயே ஏழை மக்களுக்கு, அவர்கள் நிம்மதியாக வாழ்கிற அளவுக்கு பயன்படும் விதத்தில் இதை ஆக்கித்தரவேண்டுமென்று கேட்டுக் கொள்வதோடு, இந்த குடியிருப்பு சம்பந்தமாக இந்து அற நிலையங்கள், முஸ்லீம் அறநிலையங்கள் அதற்கு சம்மந்தப்பட்ட சொத்துக்களில் ஈடுபடுகிறபோது அவர்களை கலந்து ஆலோசித்து அதை தீர்க்கமான முறையில், நல்ல முறையில் அவர்களின் கருத்துக்களைக் கேட்டு, அதை ஏழை எளிய மக்களுக்கு கிடைக்கச் செய்யவேண்டுமென்று கூறி, மறுபடியும் இது ஏழைகளை வாழ வைக்கும் திட்டம் என்று கூறி அமைகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவரவர்களே, பேசிய அங்கத்தினர்கள் அத்தனை பேரும் இந்த மசோதாவை வரவேற்றுப் பேசியிருக்கிறார்கள். அவர்களுக்கு எல்லாம் நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இந்த மசோதாவை நிறைவேற்றுவதில் யாருக்கும் வருத்தம் இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால், அதே நேரத்தில் இந்தச் சட்டத்தை அமுல் செய்வதில் ஏற்படுகிற சில சிக்கல்கள் பற்றி பலர் கவலை தெரிவித்தார்கள் அவற்றை அரசாங்கம் கவனத்தில் வைத்துக்கொண்டு அதற்கான விதி முறைகள் இயற்றும்போது செயல்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தச் சட்டம் 1970-ம் ஆண்டிலேயே கடந்து விட்டது என்று சொன்னார்கள். 1973-ம் ஆண்டு வரையில் நீட்டி ஏற்கனவே சட்டம் நிறைவேற்றி இருக்கிறோம்.. இது தற்காலிக சட்டமாக இருக்கிறதே, நிரந்தரச் சட்டமாக ஆகாதா என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. தங்கமணி அவர்கள் கேட்டார்கள். நிரந்தரமான சட்டமாக இதை ஏன் கொண்டுவரவில்லையென்றால், தொடர்ந்து இன்னொரு சட்டம் கொண்டு வர இருக்கிறோம். குடியிருப்பு மனைகளை சொந்தமாக்கிக் கொள்வதற்கு இந்த கூட்டத் தொடரிலே ஒரு சட்டம் கொண்டு வர இருக்கிறோம். அந்தச் சட்டம் கொண்டு வருகிறபோது, அந்த அரசாங்க மசோதா வருகிற நேரத்திலே அதிலே மாறுபட்ட கருத்து இருக்குமானால் அது பற்றியோசிக்கலாம், ஆனால் இந்த மசோதாவானது இப்போது குடியிருப்பவர்களை வெளியேற்றாமல் தடுப்பதற்காக, அவர்களுக்கு பாதுகாப்பு கொடுப்பதற்காக கொண்டு வரப் பட்டதாகும்.

அரசாங்க நிலங்கள் குடியிருப்பு மனைகள் அல்ல என்று முடிவான பிறகு அப்பீல் செய்வதற்கோ, ரிவிஷன் பெடிஷன் போடுவதற்கோ விதிகளில் இடம் வைத்து இருக்கிறோம். அரசாங்க நிலங்களில் இருப்பவர்கள் வெளியேற்றப்படாமல் தடுக்கவேண்டு மென்று கருத்து தெரிவிக்கப்பட்டது. அதிலே கொஞ்சம் கஷ்டம் இருக்கிறது. அர்சாங்கத்திற்கு தேவையான நிலம் என்று





இருக்கும்போது, அதைக்கொண்டு போய் அடமானம் செய் வதற்கோ, சொந்தமாக ஆக்கிக் கொள்வதற்கோ சரியாக இருககாது.

அற நிலையங்களைப் பற்றிச் சொல்கிறபோது, அது ஹிந்து அறநிலையமாக இருந்தாலும் சரி, முஸ்லீம்கள் அறநிலையமாக இருந்தாலும் சரி, தனியார் நிலங்களாக இருந்தாலும் சரி, யாருடைய நிலமாக இருந்தாலும் ஒரே விதியின் கீழ் தான் கொண்டு வரமுடியும். ஏழைகளுக்கு அந்த நிலத்தை சொந்த மாக்கித் தருவதில் எந்தவிதமான பாரபட்சமும் காட்டுவதற்கு இல்லை. குடியிருக்கும் நிலத்திலிருந்து ஏழைமக்கள் வெளியேற்றப் படாமல் பாதுகாக்கும் வகையில் தான் இந்த திட்டம் கொண்டு வந்து இருக்கிறோம். இந்தச் சட்டத்திலே கருத்து மாறுபாடு இருக்க நியாயமல்லாத காரணத்தால் இந்த மசோதாவை சட்ட மாக்கித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி :

"தமிழ்நாடு 1971-ம் ஆண்டு குடியிருப்பு அனுபோகதாரர்கள் (வெளியேற்றப்படுவதிலிருந்து பாதுகாத்தல்) திருத்த சட்ட முன் வடிவு (சட்டப்பேரவை சட்ட முன்வடிவு எண் 11/1971) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம், பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, சட்டமுன்வடிவு, பிரிவுவாரியான ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

Clause 2 was put and carried.

*Clause 3.*

MR. SPEAKER : The question is :—

'That Clause 3 do stand part of the Bill'

THIRU K. T. K. THANGAMANI : Sir, I move the following amendment :—

"In sub-clause (2) of Clause 3, delete the last three lines, namey "and to occupy it subject to the same terms and conditions, as far as may be, as were applicable to him on the date on which he was evicted."

The amendment was duly seconded.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** இந்தத் திருத்தத்தின் நோக்கம் ஏற்கனவே வெளியேற்றப்பட்டவர்களை மீண்டும் அதே குடியிருப்பில் கொண்டு வரவேண்டுமென்று. புதிதாக இந்தத் திருத்தம் சொல்கிற இந்த அம்சம் ரொம்பவும் வரவேற்கத்தக்கது. இதில் இந்த கடைசிப் பகுதியை நாம் சேர்த்து விட்டால், பின்னடி, ஏதாவது சிக்கல் ஏற்படும், என்ற காரணத்தால் தான்

"he may be restored to the possession of kudiyiruppu from which he was evicted"

எந்த இடத்திலிருந்து அவர் வெளியேற்றப்பட்டாரோ, அந்த இடத்தை மீண்டும் அவருக்குக் கொடுத்து விடவேண்டுமென்று நிலையில் நிறுத்தி விட்டால் போதும். அதற்கு பின்னால், முன்பு அவர் எப்படி இருந்தார் என்பது போன்ற விஷயங்களைப் பரிசிலித்து அந்த அடிப்படையில் இருக்கவேண்டுமென்று சொன்னால், அது நீடித்து சிக்கல் உண்டாக்கிவிடும் என்ற காரணத்தால் அந்தப் பகுதியை எடுத்துவிடலாம் என்று நான் திருத்தம் கொண்டு வந்து இருக்கிறேன். பொதுவாக இந்தத் திருத்தம் கொண்டு வந்து இருக்கக்கூடிய 3-வது கிளாசில் கருத்து வேறுபாடு இல்லை என்றாலும், இந்தப் பகுதி இல்லாமல் இருந்தாலும் எந்த நோக்கம் நாம் கொண்டிருக்கிறோமோ அந்த நோக்கம் நிறைவேற்றப் படுகிறது என்பதால்தான் இந்தத் திருத்தம் கொடுத்தேன். இதை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, இந்தத் திருத்தத்தை ஏற்றுக் கொள்வதற்கில்லை என்பதை வருத்தத்தோடு தெரிவிக்கிறேன். இந்தச் சட்ட முன்வடிவு ஏழைகளின் நன்மைக்காகத்தான் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இவையெல்லாம் விதிகள் வருக்கும்போது கவனத்தில் கொள்ளப்படும்.

MR. SPEAKER : Is the hon. Member Thiru Thangamani pressing his amendment?

THIRU K. T. K. THANGAMANI : No, Sir.

The amendment was by leave withdrawn.

Clause 3 was put and carried.

Clause 4, was put and carried.

### பிரிவு—5

MR. SPEAKER : The question is—

'That Clause 5 do stand part of the Bill'.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** Sir, I move the following amendment :

'Recast the proposed sub-section (2-A) as follows :—

"(2-A) Government may make rules for ensuring persons' occupation rights of kudiyiruppu".

ஏற்கனவே இருக்கக்கூடியது என்னவென்றால்

'The Government may make rules providing for the preparation of record of persons' occupying kudiyiruppu. Such rules may also provide for appeal and revision'

The amendment was duly seconded



**திரு. கே. டி. கே. தங்கமணி :** இது எழுத்தில் பார்ப்பதற்கு உதவியாக இருக்கிறது. ஏற்கெனவே சுப்ரீம் கோர்ட் தீர்ப்பை மனத்தில் வைத்துக் கொண்டு சட்டத்திலே தெளிவாகக் கொண்டு வரவேண்டும்; அவர்களுக்கு நிரந்தரமான 'ஆக்குபேஷன் ரைட்', குடியிருந்தார்கள் என்கிற உரிமை உறுதிப்படுத்தப் பட்டால் போதும். அந்த அடிப்படையில் விதிகள் கொண்டு வரலாம். ஆனால் விதிகளிலேயே 'ரெகார்ட்' தயார் செய்ய வேண்டும், இன்னின்ன காரியங்கள் செய்ய வேண்டும் என்று போட்டால், என்னுடைய அச்சம் நடைமுறையில், ஏற்கனவேயே குத்தகைக்காரர்கள் சீட்டு இல்லாமல் வெளியேற்றப்படுவதும், ரெவின்யூ போர்ட்டில் ஆப்பீல்கள் வருவது போன்ற நிலைகள் இருக்கின்றன. Such rules may provide for appeals and revision ஆகவே, இலகுவான முறையில் ஏற்கெனவே குடியிருப்பவர்களுக்கு மீண்டும் இடம் கொடுக்கும் உத்தரவாதம் இருந்தால் போதும். நீடித்து விடுவோமானால், உதவியாக இருக்காதோ என்கிற பயம். ஆகவே சுருக்கமாக இருந்தால் போதும் என்று சொல்கிறேன். ஆகவே, இந்தத் திருத்தத்தைக் கொண்டு வருகிறேன். பிரிவின் அடிப்படை நோக்கத்திற்கு விரோதம் இல்லை என்பதை மீண்டும் வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, 61ம் ஆண்டு நில உச்சவரம்புச் சட்டம் கொண்டு வந்த போது பல நிலச் சுவாந்தார்கள், குடியிருந்த விவசாயிகளை வெளியேற்ற முன்வந்தார்கள். அப்பொழுது இடைக்காலச் சட்டமாகக் கொண்டு வரப் பட்டது இது. இதற்கு ஆண்டுதோறும் 'லைஃப் எக்ஸ்டென்ட்' செய்து கொண்டு வந்தோம். இப்பொழுது அதை நிரந்தரமாக ஆக்க வேண்டும் என்று செய்யப்படுகிறது. இந்த மசோதா 59-க்குப் பின்னால் இருந்தாலும் சரி அவர்களை நிரந்தரமாக வெளியேற்றக் கூடாது என்பதுதான் மசோதாவின் பொருள். விதியைப் பற்றி அங்கத்தினர் சொன்னார்கள். விதி போட்டிருப்பது இந்த மசோதாவிற்கு ஏற்ற முறையில், எப்படி குடியிருப்பவர்கள் என்பதற்கு ஆதாரம் காட்ட வேண்டும் என்று செய்யப் படுகிறது. ஆகவே, ரெகார்ட் ஆப் டெனன்சி, உழுபவர்களுக்குக் கொண்டு வந்ததுபோல் குடியிருப்பவர்களுக்கும் செய்கிறோம். இது ஒரு 'எனேப்ளிங் ப்ரொவிஷன்'. நிறைவேற்றினாலும் நிறைவேற்றலாம். நிறைவேற்றாமலும் இருக்கலாம். அப்பீல் பற்றிச் சொன்னார்கள். அப்பீல் போடாமல் விட்டால் இந்தச் சட்டம் செல்லாமல் போகும். நிரந்தரமாக ஆக்க விதிகளில் அதிகாரம் எடுத்துக் கொள்ளலாம் என்று திருத்தம் சொல்லுகிறது. அது சட்டத்திற்கு முரண்பட்ட திருத்தம். அதை டெலிகேட்டட் பவர்ஸில் கொடுக்க முடியாது. அதைப் பற்றித்தான் கொஞ்ச நேரத்திற்கு முன்னால் வாதாடினார்கள். இது சட்டத்திற்கு முரண்பட்ட திருத்தம். ஆனால். இதைக் கொண்டு வந்திருக்கக் கூடிய நல்லெண்ணத்தை அரசாங்கம் ஏற்றுக் கொண்டு, பின்னால் குடியிருப்பை நிரந்தரமாக்கச் சட்டம் வருவதால், இந்தத் திருத்தம் தேவையில்லை, திருத்தத்தின் பலன் கிடைக்காது. இது எனேப்ளிங் ப்ரொவிஷன்

[திரு. செ. மாதவன்] [1971 ஜூன் 28

தான், ஏழைக் குடியிருப்பவர்களுக்கு நன்மை செய்யக் கூடியது, அவர்களுக்கு பாதகம் ஏற்படாது என்பதால் திருத்தம் தேவையில்லை என்று தெரிவிக்கிறேன்.

The amendment was, by leave, withdrawn.

Clause 5 was put and carried.

Clause 1, the Preamble and the Long Title were put and carried.

THE HON. THIRU P. U. SHANMUGHAM : Sir, I move.

"That the Tamil Nadu Occupants of Kudiyiruppu (Protection from Eviction) Amendment Bill, 1971 (L.A. Bill No. 11 of 1971) be passed.

MR. SPEAKER : The question is :—

"That the Tamil Nadu Occupants of Kudiyiruppu (Protection from Eviction) Amendment Bill, 1971 (L.A. Bill No. 11 of 1971) be passed.

The motion was put and carried and the Bill was passed into law.

### (5) அறிவிப்புகள்—தொடர்ச்சி.

### (ஆ) 1971-ம் ஆண்டு மதுரை மாநகராட்சி சட்டமுன்வடிவு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அவைக்கு ஒரு அறிவிப்பு. 1971-ம் ஆண்டு மதுரை மாநகராட்சி சட்டமுன்வடிவை (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண். 10/1971) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள ஆளுநர் தன் இசைவைத் தெரிவித்திருக்கிறார்கள்.

### (4) அரசினர் சட்டமுன்வடிவுகள்—தொடர்ச்சி.

### (இ) 1971-ம் ஆண்டு மதுரை மாநகராட்சி சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 10/1971).

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** பேரவைத் தலைவர் அவர்களே, 1971-ம் ஆண்டைய மதுரை நகர மாநகராட்சி சட்ட முன்வடிவை @ பேரவை முன் வைப்பதில் பெருமையடைகிறேன். 1971-ம் ஆண்டு மதுரை மாநகராட்சி சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 10/1971) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் என்று கோருகிறேன்.

கடந்த இருபது ஆண்டுகளாக, மதுரையை மாநகராட்சியாக்க வேண்டுமென்கிற முறையீடுகள் அரசின் கவனத்தைக் கவர்ந்து வந்துள்ளன. பன்னெடுங்காலமாகவே தமிழ்ப் புலமைக்கும், தமிழ்ப் பண்பாட்டிற்கும் உறைவிடமாக விளங்கிவந்த இந்நகர், வரலாற்றுச் சிறப்புடன் யாத்திரைத் தலமாகவும், சுற்றுலா

@ 1971-ம் ஆண்டு ஜூன் மாதம் 24-ம் தேதிய சிறப்பு தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.



1971 ஜூன் 28] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

இடமாகவும் பெருமை பெற்றுத் திகழ்கிறது. ஆண்டின் சில பகுதிகளில் இங்கு வந்துபோகும் நாலு இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்களை இந்நகரம் ஏற்கவேண்டியதாக இருக்கிறது; அன்றியும் விரைந்து தொழில் மயமாகியும் வருவதால் உயர்ந்த அளவிலான வாழ்வு வசதிகள் இந்நகர மக்களின் நியாயமான எதிர் பார்ப்பேயாகும். மேலும், மதுரை நகராட்சியை மாநகராட்சியாக உயர்த்த வேண்டும் என்று திரும்பப் திரும்ப வேண்டப்பட்டு வந்தது. அண்மையில் இந்நகரின் வருவாய் ரூ. 2 கோடியைக் கடந்துள்ளது. தற்போதைய கணக்கெடுப்பின்படி நகரின் மக்கள் தொகை 5.28 இலட்சமாகப் பெருகியிருக்கிறது. எனவே இந் நகரம் எல்லாவகையிலும் மாநகராட்சிக்குரிய தகுதியை எய்தியுள்ளதை அறிந்து அதற்குரிய காலம் கனிந்துள்ளதாக அரசு முடிவெடுத்தது. இக்காரணங்களால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 1971-72-க்குரிய இடைக்கால வரவு-செலவுத் திட்டத்தைச் சட்டப் பேரவை முன் வைத்து 25—3—1971 அன்று பேசியபோது, மதுரை நகராட்சி 1—5—1971 முதல் மாநகராட்சியாக அமைக்கப்படுமென்று அறிவித்தார். மதுரை நகர மக்களின் விருப்பங்கள் நிறைவேற்றப் படுகிற வகையில் 27—4—1971 அன்று தமிழ்நாடு மேதகு ஆளுநர் அவர்களால் பிறப்பிக்கப்பட்ட மதுரை மாநகராட்சி அவசர சட்டம் (1971) வாயிலாக 1—5—1971 முதல் இந் நகராட்சி மாநகராட்சியாக மாற்றியமைக்கப்பட்டதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள். சட்டப் பேரவையில் நிறைவேற்றப்படும் சட்டத்தின் வாயிலாக அவசரச் சட்டத்தை மாற்றீடு செய்ய இந்த சட்டமுன்வடிவு வழி செய்கிறது.

இந்நகராட்சியின் நிர்வாக அமைப்பு முறை சென்னை மாநகராட்சியின் நிர்வாக முறையைப் பெரும்பாலும் ஒட்டியதாகவே இருக்கும் என்பதைப் பேரவையின் மாண்புமிகு உறுப்பினர்கள் உற்றறியலாம். ஆயினும், உள்ளூர் நிலைமைகளுக்கேற்ப சில மாறுதல்களும் செய்யப்பட்டுள்ளன. திட்டங்களுக்கு நிதி வழங்குதல், ஒப்பந்தங்கள், ஒப்பந்தப் புள்ளிகளை ஒத்துக் கொள்ளுதல், ஒதுக்குதல், அசையும், அசையாச் சொத்துக்களைக் கையகப்படுத்துதல், விற்றல். அன்றன்றைய நிர்வாகத்தில் எழும் முக்கியமான செய்திகள் போன்ற உயிர்நாடியான செயல்களில் நகராட்சியாயிருந்த நாட்களை விட இப்போது மாநகராட்சியின் வெவ்வேறு நிர்வாகத் துறையினர்க்கு அதிக அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. நகராட்சியில் கிடைத்ததைவிடச் சிறந்த பலன்கள் கிடைக்கும் வண்ணம், நெடுங்காலமாக உணரப்பட்டு வந்த வாழ்க்கை வசதிகள் சிறந்த முறையில் செய்து தரப்படுவதை இஃது உறுதி செய்கிறது.

இந்தச் சட்டமுன்வடிவின் சிறப்பு கூறுபாடுகளை இப்போது நான் கோடிட்டு காட்ட விரும்புகிறேன். மாநகராட்சி மன்றம், நிலைக் குழுக்கள், ஆணையர் ஆகிய முத்திறத்தாரிடம் மாநகராட்சியின் நிர்வாகப் பொறுப்பு ஒப்படைக்கப்படுகின்றது. இப்போதைய மாநகராட்சியின் உறுப்பினர்கள் எண்ணிக்கை 48 ஆகவே

தொடர்ந்து இருக்கும். இவ்வெண்ணிக்கை 80 வரைக்கும் அவ்வப்போது அறிவிப்புகள் வாயிலாக அரசாங்கத்தால் மாற்றியமைக்கப்படலாம். அரிசனங்கள் மூவரும், பெண்களில் மூவரும் உறுப்பினர்களாக எக்காலத்திலும் மன்றத்தில் இருக்கவேண்டும். அதற்கு ஏற்றவகையில் தேவைப்படும் அளவிற்கு அரிசனங்களிலிருந்தும் பெண்களிலிருந்தும் கூட்டு உறுப்பினர்களைச் சேர்த்துக் கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது. மன்ற உறுப்பினர்களின் பதவிக் காலம் மூன்று ஆண்டுகள். ஆயினும் அதனை ஓராண்டுக் காலம் கூட்டவோ குறைக்கவோ வழிவகையுண்டு.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாநகர் முதல்வரின் பதவிக்காலம் ஓராண்டு. மாநகர் முதல்வர் பொறுப்பிலிருந்து வெளியேறுபவர், மீண்டும் தேர்தலுக்கு நிற்கத் தகுதியுடையவர். எல்லா நிலை குழுக்களுக்கும், அத்துடன் வரி விதிப்பு, மேல் முறையீட்டுக் குழுக்களுக்கும் மாநகர் முதல்வர் அலுவல் முறையால் தலைவராக இருப்பார். இம்மாநகராட்சியின் முதல்வர், துணை முதல்வர், சென்னை மாநகராட்சியின் முதல்வர், துணை முதல்வர்க்குரிய தனிச் சிறப்புரிமைகளை உடையவராவார்.

ஒவ்வொன்றும் ஐந்து உறுப்பினர்களைக் கொண்டதாக ஆறு நிலைக் குழுக்கள் இருக்கும். அவை ஒவ்வொன்றுக்கும் மாநகராட்சித் தொடர்பான குறிப்பிட்ட பணிகள் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு நிலைக் குழுவுக்கும் அதன் உறுப்பினர்களிலிருந்து ஒருவர் தலைவராக அவர்களால் தேர்ந்தெடுக்கப்படுவார். அவருடைய அலுவல் காலம் ஓராண்டு. நிலைக் குழுவின் தலைவர் பதவியிலிருந்து விலகுபவர் மறு தேர்தலில் அதே பதவிக்கு நிற்கத் தகுதியுடையவர் அல்லர். ஒரு நிலைக் குழுவில் உறுப்பினராக உள்ளவர் மற்ற எந்த நிலைக் குழுவிலும் உறுப்பினராக இருக்க இயலாது.

ஆணையரோடு, ஒரு துணை ஆணையரும், ஆணையரின் நேர்த் துணையாளரும் இருக்கலாம். மாநகராட்சியின் அலுவலர்கள் நான்கு வகையினராகப் பிரிக்கப்பட்டுள்ளனர். முதல் வகையினர் அரசாலும், இரண்டாம் வகையினர் அரசின் ஒப்புதலோடு மாநகராட்சி மன்றத்தாலும், மூன்று, நான்காம் வகையினர் மாநகராட்சியின் பணி நியமனக் குழுவாலும் அமர்த்தப்படுவர். சொத்து வரி பொதுக் காரியங்களுக்கென ஒரே வரியாக விதிக்கப்படும். வரி விதிப்பின் அளவு, கட்டடங்கள், நிலம் ஆகியவற்றுக்கு மாநகராட்சி மன்றம் குறிக்கும் ஆண்டு மதிப்பில் 15½ சதவீதத்துக்குக் குறையாமலும், 35 சதவீதத்துக்கு மேற்படாமலும் இருக்கும். விளம்பரங்கள் மீதும் மாநகராட்சி வரி விதிக்கலாம்.

இம்மாநகராட்சிக்குச் சாதாரணப் பொதுத் தேர்தல் நடைபெற்று, மன்றம் உரிய முறையில் அமைக்கப்படும் வரையிலும் மாநகராட்சியின் நிர்வாகம் தடையின்றி நடைபெறுவதற்கு ஏற்ற வகையில் இடைக்கால வழிவகைகள் இம்மசோதாவில் இடம்





பெற்றிருப்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறியலாம். நகர் மன்றத் தலைவரும், துணைத் தலைவரும், முறையே மாநகராட்சியின் முதல்வராகவும், துணை முதல்வராகவும் தொடர்ந்து இருப்பது இவ்விடைக்கால ஏற்பாட்டின் சிறப்புக் கூறுபாடாம்.

மதுரை நகர மாநகராட்சி அவசரச் சட்டம் 27—4—1971 அன்று பிறப்பிக்கப்பட்டது. சட்டப் பேரவை மூலம் இதற்கெனச் சட்டம் இயற்றப்படாவிட்டால் இந்த அவசரச் சட்டம் 1—8—1971 முதல் நடைமுறையில் இருக்கமுடியாது. ஆகவே, இம்மசோதா கொணரப்படுகிறது.

இச்சொற்களோடு, துணைத் தலைவர் அவர்களே, இம்மசோதாவினை அவையின் ஆய்வுக்கு வைக்கிறேன்.

DR. H. V. HANDE : Sir, I move my amendment—

"That the Madurai City Municipal Corporation Bill, 1971 L.A. Bill No. 10 of 1971 be referred to a Joint Select Committee consisting of . . . Members of both the Houses (Names to be furnished later)".

The amendment was duly seconded.

THIRU K. T. K. THANGAMANI : Sir, I move my amendment—

"The Madurai City Municipal Corporation Bill, 1971 (L.A. Bill No. 10 of 1971) be circulated for eliciting public opinion to be returned before the end of July 1971".

THIRU S. ALAGARSAMY : I second the amendment.

DR. H. V. HANDE : Hon. Mr. Deputy Speaker, Sir. The purpose of my amendment is very clear, if we only just look at the size of the Bill that is before the House. This Bill consists of more than nearly 500 Clauses and if they are to be properly examined and revised, it may take at least a week's time for the Hon. Members to sit and discuss. Therefore, I suggest to the Hon. Chief Minister as also to the Hon. Minister concerned with this particular Bill that they should keep an open mind and see that an *ad hoc* Select Committee is created. Even in the course of this Session itself we have got four weeks' time and we can concurrently sit for a few days and then find out how different clauses will be perfectly in order or whether we can improve different clauses. Otherwise, if such a huge Bill were to be passed hurriedly within about an hour and a half or two, so many problems will arise. Even the people would be really surprised and people would be wondering how this Assembly passed it in such a hurry. Therefore, with all persuasiveness and emphasis at my command I would once again request the Hon. Minister and the Hon. Chief Minister to see that this Bill is referred to a Joint Select Committee.

Sir, I have been able to pick out a few salient points also with regard to different clauses of this Bill. Before I come to the Clauses I would also like to stress the fact that this Bill also was created in a great hurry. There was actually no need to bring an Ordinance immediately. There was no emergency necessitating the same. They could have waited till the Legislature met and discussed the Bill. What exactly prompted the Government to bring an Ordinance is a mystery to myself and the members and to the public also. Was there anyemergency situation that arose in Madurai, whether it could not have waited till the Assembly met again? After all last time the Assembly was over on April 3rd or 4th and then two or three months later we are again meeting here. We could have taken it up now itself. But then it was made into an Ordinance. Once it is made into an Ordinance there is always the egalitarian theory that it has become an Ordiance, therefore it has to be passed and therefore we must rubber stamp it. It is the usual convention we have been seeing it for a number of years. This Government are trying to break conventions in several things. Why not they break the convention here at least? Why should the Government bring an Ordinance before the House met?

I have got a number of points on various clauses. But I shall take up a few clauses and show how anomalous the clauses are and how irregular the clauses are. I will only take up a few clauses, even though I can take up a number of Clauses. But without consuming much time of the House, I will take up a few clauses.

Clause 12—I would request the Hon. Minister to open the book and *see* Clause 12. Clause 12 clearly says—

"The Government may, at any time, withdraw the Commissioner from office and shall do so if such withdrawal is recommended by a resolution of the council passed at a special meeting called for the purpose and supported by the votes of such number of councillors as shall constitute not less than two-thirds of the sanctioned strength of the Council".

What does it mean? It means this. For instance, let us take the Corporation of Madras. If two-thirds of members, if about 60 or 70 members of the Corporation pass a resolution that the Commissioner of the Corporation should be removed from office, then what would happen? The Government are forced to take him away. We have seen that in several instances the Government themselves have given strict instructions to the Commissioner to override some times certain considerations which the Councillors ask the Commissioner to give or not to pay heed to them. The Government, on several occasions, have clearly told the Commissioner "you be strict, you adhere to the rules, you go ahead, we are behind you, do not have fear". In that manner the Government have told the Commissioner several times. But according to this Clause, supposing there is a Commissioner who is very strict—for argument's sake I am saying—it is incovenient to the members of the Council because the Government themselves also have asked him to be strict, in such cases there is a possibility of these members meeting and then passing a resolution and sending it to the Government and the Commissioner will be removed. Therefore, I do not agree that such powers should be vested with the Council. It will be dangerous. Political considerations and party feelings will play a decisive role. Even now it is not too late. I do not know why exactly they should depart from the original Bill. In the Original Bill, the Clause was not there. Now the Clause is here and what made them put the Clause. I would like to know the secrets or the working of the mind of the Government.



Then I come to Clause 57. It is a huge Clause dealing with disqualification of councillors. "Subject to the provisions of Section 60, a councillor shall cease to hold office as such if he—(a) is sentenced—it goes on like that. They go on listing a number of disqualifications. But then under sub-clause (2) of clause 57—page 233 below the 20th line of the Bill—says.

"Notwithstanding anything contained in clause (a) of sub-section (1), the Government may direct that such sentence shall not operate as a disqualification."

Supposing a person is disqualified because of certain rules under this Act itself; then the Government can bring in another rule saying that they will not apply for this man. In other words, if a particular person is wanted very much by the Government, if he is a blue-eyed boy of the Government, the Government can say that it shall not operate as a disqualification. This is a dangerous provision. I would request every hon. Member to give serious consideration to this provision.

The Government may by a blanket order say that that does not apply to a particular member and that means that there is no security. Also there may be a invidious distinction made between one member and another member. That is the reason why I have brought this aspect of the matter to the attention of the Hon. Minister. These are some of the reasons which prompted me to request the Hon. Minister to give us an opportunity to speak across the table and discuss the Bill in the Select Commitee. In fact, last time I successfully persuaded the Hon. Minister for Health for referring the Town and Country Planning Bill to the Select Committee and I was grateful to him for that. Under the chairmanship of the Hon. Minister for Health, the Select Committee held five or six sittings and a number of points were put forth by Members of the Committee and it was useful to the Government also. So, I request the Hon. Minister to consider this aspect of the matter.

Now I come to clause 95. It reads as follows :—

'The Government may with the consent of the council transfer to the corporation the management of any institution or the execution of any work not provided for by this Act and it shall thereupon be lawful for the corporation to undertake such management or execution :

Provided that in every such case, the funds required for such management or execution shall be placed at the disposal of the corporation by the Government'. This particular clause is a dangerous clause. It would lead to patronage of undeserved institutions. It is a well-settled principle of the Law of Municipal Corporations that they do not engage themselves in objects and purposes which are not authorised by the Act. The Act does not prescribe these institutions or the works. What are the institutions and what are the works? The selection is to be made by the Government. If this provision is there, the Corporation will ultimately become either an asylum of underserved institutions or an orphanage of neglected works.

Then I come to clause 115. In the enumeration of taxes companies tax has been omitted. In the original Act such a companies tax has been provided. But in this Bill the companies tax has been omitted. Here I am not asking for any reduction of tax. But I am only pointing out an omission. I request the Hon. Minister to consult his experts with regard to the consequences of this omission. I want to improve the financial position of the Madurai Corporation. Now the Madurai Corporation owes huge sums of money to the State Government. The Corporation has to pay Rs. 6 lakhs as annuity on the loans the Government have given to the Corporation. In fact, members of the Corporation raised a hue and cry about it in the meeting of the Council and the Council had appointed a Committee called 'Economy Committee' to go into the working of the Corporation and its financial position. Now the income of the Corporation is Rs. 1.75 crores and out of it, a sum of Rs. 1.2 crores is spent on the employees of the Corporation alone. That shows that the financial position of the Madurai Corporation has to be improved. That is why I have suggested that companies tax should find a place in this clause. Actually there are companies which have got main offices in Madras but which are having branches in Madurai. Such companies should be taxed as is done in the case of the Madras City. I have brought this omission to the notice of the Hon. Minister and I hope he will do something in that direction.

Then I come to another omission. I refer to the omission of the powers to reopen the property tax on the ground of escaped assessment as modelled by Section 137-A of the Madras City Municipal Corporation Act. Supposing an assessment has been made irregularly or there has been an under-assessment and if that was not detected within the stipulated time, there was no





remedy under this Bill to reopen such cases. My hon. Friend, Thiru K. M. Subramaniam will agree with me that Section 137-A of the Madras City Municipal Corporation Act allows scope for a re-opening of assessment already made. Such a thing is not found in this Bill. I request the Hon. Minister to consider this aspect of the matter.

Then I come to the composition of the Council. In his opening speech the Hon. Minister has stated that he wants the Council to have about 80 members including 8 lady members. In this connection, I wish to suggest that Madurai City being a temple City and a centre of tourist attraction, it would be quite useful if representation is also given to the persons connected with the temple. The Joint Select Committee on the Town and Country Planning Bill also provided for such a representation which was not originally there. It is for these reasons and not with the idea of delaying the passage of the Bill I have suggested that the Bill be referred to a Select Committee. If it is referred to a Select Committee it can be considered within half an hour or one hour and when the Bill as considered by the Committee is placed on the statute book, it would be a good piece of legislation and the people also will not have any grievance that it has been passed in a hurry. Thank you, Sir.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** அவைத் துணைத் தலைவர் அவர்களே, மதுரை நகராட்சி மதுரை மாநகராட்சியாக 27—4—1971-ல் மக்களுடைய கருத்துக்கள் அறிந்து இந்த சட்ட மன்ற கூட்டத்துக்குள்ளாகவே நிறைவேற்றவேண்டும் என்ற ஒரு திருத்தத்தை நான் உங்கள் முன் பிரேரேபித்திருக்கிறேன். இந்தத் திருத்தத்தில் பேசுவதற்கு முன்பு, இந்த முடிவு எடுத்ததற்கு பாராட்டுத் தெரிவிக்கிறேன். இதை மதுரை மக்கள் மாத்திரமல்லாமல் தமிழ்நாட்டிலுள்ள மக்கள் எல்லோரும் பெரிதும் வரவேற்கிறார்கள் என்று கூறிக்கொள்கிறேன். 500-க்கும் அதிகமான பிரிவுகளைக் கொண்ட இந்த மசோதாவை 17—4—1971-லேயே தயாரிக்க பொறுப்பாக உள்ளவர்களையும் பாராட்டாமல் இருக்க முடியாது. இதுவரை சென்னையிலிருந்த மாநகராட்சி மசோதாவை அப்படியே எழுதியிருக்கலாம் அல்லது சில மாறுதல்கள் கூட செய்திருக்கலாம். இருந்தாலும் கூட பல கஷ்டங்களுக்கு மத்தியில் இம்மாதிரி மசோதாவை அவசரமாகக் கொண்டு வந்ததற்கு நான் மீண்டும் பாராட்டு தெரிவித்துக்கொள்கிறேன். இம்மாதிரி ஒவ்வொரு காரியங்கள் நடக்கும்போது அது சம்பந்தப்பட்டவர்களுக்கெல்லாம் இந்த மசோதா நகல் கொடுக்கப்பட வேண்டும் அவசரமாக. மதுரையைச் சேர்ந்தவன் என்ற முறையில் சொல்லுகிறேன்.

மே 1-ம் தேதி மதுரை மாநகராட்சி விழா சித்திரைத் திருவிழாவாக இருந்தது. தமிழகத்திலிருந்து எல்லா அமைச்சர்களும், மதுரையில் உள்ள முக்கிய மக்களும், நகரசபையைச் சேர்ந்த தலைவர்களும் அதிலே கலந்து கொண்டார்கள். என்னைப் போன்றவர்களுக்கு இந்த மசோதா குறிப்பிட்ட நேரத்தில் கிடைத்துவிட்டது, என்னுடைய விருப்பமெல்லாம் இதன் அவசரத்

தன்மை ஒருபுற மிருக்க நல்ல முறையில் இன்னும் ஜனங்களுடைய கருத்தை இதன் மூலம் அறிய எல்லா தரப்பினருக்கும் அனுப்பப் படவேண்டும். கருத்துகள் என்று சொல்லுகிறபோது நகர சபை உறுப்பினர் கருத்துக்களை அறியலாம், நகரசபைத் தலைவராய் இருந்தவர்கள் கருத்தை அறியலாம், கமிஷனர்கள் கருத்துக்களை அறியலாம், இதே மாதிரி சென்னை மேயர், இது சம்பந்தப்பட்ட உறுப்பினர்கள் கருத்தை அறியலாம், அது பேருதவியாக இருக்குமென்று நம்புகிறேன். சட்ட பூர்வமாக இதற்கு இடமில்லாமல் போனாலும் இது மாதிரி கருத்துக்களை அறிய அரசு முயல்வது நல்லது என்று நினைக்கிறேன். இந்த மசோதாவை நான் ஒரு தடவை படித்தேன். சில குறிப்புகளை எழுதிவைத்திருக்கிறேன். சில திருத்தங்களையும் பிரேரேபித்திருக்கிறேன். அவைகள் இன்னும் உதவியாக இருக்கும் என்று நம்புகிறேன்.

இந்த மசோதாபற்றி மதுரையில் உள்ள மக்கள் தெளிவாக சில விஷயங்கள் அறிய விரும்புகிறார்கள். இந்த மசோதாவில் "in the vicinity of the City" என்று இருப்பதை "adjoining areas in the vicinity of the city" ஆக்க வேண்டும் என்று கூறவிரும்புகிறேன். அது இன்னும் தெளிவாக இருக்கவேண்டும். "adjoining area" என்றால் என்ன என்பதை தெளிவுபடுத்தவேண்டும். அதை "within a circle of radius of 15 miles 15 மைல் சுற்றளவுக்குள் இருக்கும் பகுதிகள் adjoining area என்று சொல்ல வேண்டும். உடனடியாக மதுரையிலே கேட்கிறார்கள், மதுரையை ஒட்டியுள்ள புதூர் கார்ப்பரேஷனுடன் சேருமா? ஒட்டியுள்ள பகுதிகள் சேருமா? அல்லது தீவு மாதிரி உள்ள ஜெய்ஹிந்துபுரம் சேருமா? என்றெல்லாம் சந்தேகங்கள் வருகின்றன. இந்த மாதிரியான விஷயங்களைத் தெளிவுபடுத்தினால் உண்மையிலேயே மதுரை மாநகராட்சி greater Madurai என்ற அளவுக்கு வரலாம். மதுரையை அழகுபடுத்தவும் செய்யலாம்.

முதலமைச்சர் அவர்கள் அன்று வந்திருந்தபோது சில ஆலோசனைகளைக் கொடுத்தார்கள். அந்த ஆலோசனைகளை அமலாக்க வேண்டுமென்றால் மதுரை இன்னும் பெரிய நகரமாகவேண்டும். அழகுபொருந்திய சென்னைக்கு அடுத்தாற்போல் அழகுள்ள பெரிய நகரமாக ஆவதற்கு சாத்தியமாகும்.

அடுத்து, எனக்கு முன்பு பேசிய உறுப்பினர் "taxation policy" வரி போடுவது பற்றிச் சொன்னார்கள். அப்படிப் பேசிக் கொண்டிருக்கும்போது எனக்கு ஒரு கருத்து ஏற்பட்டது. கார்பொரேட் டாக்ஸ், கார்பொரேட் வரி பெரிய கம்பெனிகளுக்கு போடுவதுபோல் அங்கும் விதிக்கலாம் என்ற யோசனை வரவேற்கத்தக்கது. பெரிய பெரிய கார்ப்பரேஷன்களுக்கெல்லாம் இந்த மாதிரி பணம் வசூலிப்பதற்கு அனுமதி இருக்கிறது. சென்னையில் வசூலிப்பது போல் இதை மதுரையிலும் வரி வசூலிக்கவேண்டும் என்ற யோசனையை நான் வரவேற்கிறேன்.





**மாண்புமிகு திரு. செ. மாதவன்** : சுதந்திரா கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் வரவேற்கும் கருத்துக்கள் அரசியல் அமைப்புச் சட்டபடி செல்லாது.

**திரு. கே. டி. கே. தங்கமணி** : சென்னை கார்பரேஷனுக்கு கார்பொரேட் டேக்ஸ் போட அதிகாரம் இருக்கிறது என்று சொல்கிறார்களே. அதன் அடிப்படையில் சொன்னேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்** : அரசியல் அமைப்புச் சட்டத்தில் அதற்கு விதி விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.

**திரு. கே. டி. கே. தங்கமணி** : அது மாதிரி இதற்கும் பெற்றுக் கொள்ளலாம்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்** : ராஜமன்னார் கமிட்டி அதற்கு சிபார்சு செய்திருக்கிறது. அந்த அதிகாரங்கள் மாநிலங்களுக்கு மாற்றப் படவேண்டுமென்று சிபார்சு செய்திருக்கிறது.

**திரு. கே. டி. கே. தங்கமணி** : மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் கிடைப்பதோடு மதுரை கார்பரேஷனுக்கும் பெரும் பகுதி வேண்டும் என்று வற்புறுத்த ஆசைப்படுகிறேன்.

இன்னொரு முக்கியமான விஷயம். சாதாரண பஞ்சாயத்து தேர்தல் அல்லது பஞ்சாயத்து தலைவர் அல்லது பஞ்சாயத்து யூனியன் தலைவர், சட்டமன்ற உறுப்பினர், இவர்கள் தேர்தல்கள் எல்லாம் 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடந்து, உறுப்பினர்கள் 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள் ஆகவே, கார்ப்பரேஷன்களுக்கும் இப்போது இருக்கும் மூன்று ஆண்டை ஐந்து ஆண்டென்று மாற்றுவது நலம். அப்போது தான் ஐந்தாண்டுக்கொரு முறை ஒருவர் உறுப்பினராக இருக்கமுடியும்.

இம்மாதிரி மேயர்களும் ஒவ்வொரு வருஷமும் மாறவேண்டுமென்று இல்லாமல் ஒரு ஏற்பாடு செய்து கொள்ளவேண்டும். தற்போது மேயர்கள் குறிப்பிட்ட ஜாதியைச் சேர்ந்தவர்கள் ஆக இருக்க வேண்டும். ஒவ்வோர் ஆண்டும் மாறவேண்டும் என்பது நெடுங்கால பழக்கத்தில் இருக்கிறது. என்னைப் பொறுத்தவரையில் ஒருவர் மேயராக இருப்பார் என்றால் அவர் குறைந்தது ஐந்து வருஷம் அந்தப் பதவியில் இருக்கவேண்டும். இதற்கிடையில் மற்றவர்கள் அந்தப் பதவிக்கு வருவதற்கு அது இடைஞ்சலாக இருந்தால் அந்தப் பதவியை மூன்று ஆண்டுக்காலத்துக்காவது வைத்துக்கொள்ள வேண்டும்.

இன்னும் இரண்டு விஷயங்கள். பிரிவு 56-லே Disqualification of members இருக்கிறது. அதிலே delete clause 56 (e) பக்கம் 231, கடைசியில்

A representative or officer of any association or union representing, or purporting to represent, any section of the corporation establishment or any class of employees of the corporation.

என்று இருக்கிறது. இது நீக்கப்படவேண்டும். அது என்ன சொல்கிறது என்றால் ஒருவர் கார்ப்பரேட்டார் ஆக இருந்தாலும், அல்லது ஒரு கௌன்சிலராக இருந்தாலும் அங்குள்ள சிப்பந்திகள் சங்கத்துக்கோ அல்லது அவர்கள் சம்பந்தப்பட்ட ஏதாவது ஒரு ஸ்தாபனத்துக்கோ உறுப்பினராக இருக்கக்கூடாது என்று குறிப்பிடுகிறது. மதுரையிலே 1-வது வார்டிலே உள்ள உறுப்பினர் வெகு சிறப்பாக மின்சார ஊழியர் சங்கத்தை நடத்திக்கொண்டு வந்தார். மின்சார ஊழியர்கள், மதுரை கார்ப்பரேஷன் ஊழியர்கள் ஏற்கெனவே மின்சார வாரியத்தில் உள்ள ஊழியர்களுக்கு கிடைத்த ஊதியம் போல் கிடைத்திடவேண்டும் என்று வெகு பண்பாகவும் எல்லோருடனும் சேர்ந்து செயல்பட்டுக்கொண்டு வந்தார். இப்போது அவர் கார்ப்பரேஷன் உறுப்பினர் ஆன உடன் அவர் செய்த முதல்வேலை அந்த தலைவர் பதவியை ராஜினாமா செய்தார். எங்கள் கட்சியைப் பொறுத்த வரையில் அவர் சானிடரி ஓர்க்கர் ஆக இருந்தாலும் சரி, அலுவலக பணியாளராக இருந்தாலும் சரி, அவர் நகர மன்ற உறுப்பினராக வரலாம் என்பது தான். ஆகவே, இந்தத் தடையை நீக்கினால் அம்மாதிரியானவர்கள் உறுப்பினர்களாக வருவதற்கு உதவியாக இருக்கும்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : சுதந்திரா கட்சி இதற்கு எதிர்ப்பு தெரிவித்திருக்கிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி : இன்னொரு முக்கியமான விஷயம் 35(2) பிரிவு பின்வருமாறு சொல்லுகிறது.

No servant of the Central or any State Government or the corporation or any other body corporate owned or controlled by the Central or any State Government shall be qualified for election or co-option as a councillor;

எங்களைப் பொருத்த வரையில் எந்த பதவியில் இருந்தாலும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் பதவிக்கு வரலாம் என்பது என்னுடைய கருத்து. குறிப்பாக திருச்சியிலுள்ள சர்க்கார் நடத்துகிற ஆலையாக இருக்கலாம், அல்லது மாநில அரசு நடத்துகிற ஆலையாக இருக்கலாம். அந்த மாதிரி குவாஸி கவர்ன்மெண்டு ஆலைகளாக இருக்கும் நிறுவனங்களில் வேலை பார்க்கும் ஊழியர்கள், பாங்கு சிப்பந்திகள். . . . இப்போது அவைகள் தேசியமயமாக்கப்பட்டிருக்கலாம். பொது இன்ஷ்யூரன்ஸ் ஊழியர்கள் இவர்களெல்லாம் இதன்படி தொடர்ந்து உறுப்பினராக இருக்க முடியுமா என்றால் முடியாது. மேற்படி ஊழியர்கள் நகர உறுப்பினர் பதவியை இழக்கிறார்கள் என்றால் அது ரொம்ப பரிதாபமாக இருக்கும் என்று நான் இந்த அவையிலே தெரிவித்துக்கொள்கிறேன். இப்போதுதான் இந்த மசோதா முதலிலே பரிசீலனை எடுக்கப்பட்டிருக்கிறது. முதலிலே இந்த மசோதாவை எடுத்துக்கொண்டபோது அமைச்சர் அவர்கள் சில கருத்துக்களை சொன்னார்கள். சில கருத்துக்கள் சம்பந்தமாக நான் சில ஆலோசனைகளை கொடுத்திருக்கிறேன். அவைகளை ஏற்றுக்கொண்டு இந்த மசோதாவை நிறைவேற்றுவது உதவிகரமாக இருக்கும் என்று





கேட்டுக்கொள்கிறேன். மீண்டும் அவசர சட்டத்தின் மூலம் இந்த முயற்சி எடுத்துக்கொண்டதற்கு பாராட்டுதலைத் தெரிவித்து காலதாமதமில்லாமல் இந்த மசோதாவை இந்தக் கூட்டத்திலே நிறைவேற்றுவதற்கு நான் ஒத்துழைப்பேன் என்று சொல்லிக் கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

* திருமதி த. ந. அனந்தநாயகி : மதிப்பிற்குரிய உதவி சபா நாயகர் அவர்களே, 500 ஷரத்துக்கள் கொண்ட இந்த மசோதாவைப் பார்க்கும்போது எவ்வளவு அவசரமாக கொண்டு வருகிறார்கள் என்று தெரிகிறது. ஏற்கெனவே இங்கு ஒரு கார்ப்பரேஷன் நடந்து கொண்டு இருக்கிறது. அதனுடைய சட்டத்தை அப்படியே காப்பி அடித்து ஒரு சட்டத்தை கொண்டுவரப்போகிறோம் என்று சொல்லி அவசரமாக கொண்டு வந்தோம் என்று அமைச்சர் சொல்வதை நம்மால் வரவேற்க முடியவில்லை. இது அவ்வளவு அவசரமான காரியமா என்பது புரியவில்லை. மிக அவசரமாக சட்டமாக்கி 500 ஷரத்துக்கள் கொடுத்திருக்கிறீர்கள். மசோதாவை சட்டம் ஆக்கி, அது ஓட்டைகள் நிறைந்த சட்டமாக கொண்டுவந்தோம் என்ற அவமானத்துக்கு சட்டசபை ஆளாகும் என்பதை நான் சுட்டிக்காட்ட விருப்பப்படுகிறேன். இது அவசரச் சட்டமாக கொண்டுவரப்படாமல் இருந்திருந்தால், நன்றாக ஆராய்ந்து பார்த்து திறமையான சட்டத்தை கொண்டுவர வாய்ப்பு இருக்கும். அதை விட்டு விட்டு அவசர அவசரமாக ஒரு அவசர சட்டம் கொண்டுவருகிறோம் என்று இந்த அரசாங்கம் கொண்டு வருகிறது. சட்டசபை கூடுவதற்கு முன்னால் ஒரு ஆர்டினன்ஸ் வருகிறது. எதற்கு சொல்கிறேன் என்றால் சட்டசபையில் இவர்களுக்கு நம்பிக்கையில்லை அல்லது சட்டசபையை அவமதிக்க வேண்டும் என்ற எண்ணம் இருப்பதாகத் தோன்றக் கூடும். சட்டசபை கூடும்போது சட்டங்களை கொண்டுவரலாம். இனிமேலாவது இதை இந்த அரசாங்கம் உணரவேண்டும், என்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

* மாண்புமிகு திரு. செ. மாதவன் : மாண்புமிகு அம்மையார் அவர்கள் இந்தச் சட்டத்தைப்பற்றிப் பேசுவது ஆட்சேபணையில்லை. ஆனால் முன்னாலே ஒரு சட்டத்தைப்பற்றிச் சொன்னார்கள். அந்தச் சட்டத்தை அவசரச்சட்டமாக சட்டசபை கூடுவதற்கு முதல்நாள் கொண்டுவந்ததினால் இந்தச் சட்டப்பேரவையை அவமதிக்கவேண்டுமென்ற எண்ணம் இந்த அரசாங்கத்திற்குச் சிறிதும் கிடையாது. அதை அவசரச்சட்டமாகக் கொண்டுவர வேண்டுமென்று ஒரு மாதத்திற்கு முன்பே மத்திய அரசாங்கத்திற்கு எழுதினோம். ஆனால் அதற்கான அனுமதி எங்களுக்கு அன்று காலையில்தான் கிடைத்தது. கிடைத்தவுடன் அவசரச் சட்டத்தைப் பிரகடனம் செய்தோம். அப்படிச் செய்ய வேண்டியதன் அவசியம் என்ன என்பதையும் அவர்கள் உணர்ந்தார்களானால் அதில் உள்ள நியாயத்தை ஒப்புக்கொள்வார்கள். சட்டசபையில் மசோதாவாகக் கொண்டுவந்து நிறைவேற்றுவது—பின்னர் குடியரசுத் தலைவரின் அனுமதிக்காக அனுப்புவது என்றால்

அது அமலுக்கு வருவதற்குள் இரண்டு மாதம் கழிந்து விடும் அதற்குள் எத்தனைபேர் தங்களிடம் உள்ள பஸ்களை எந்தெந்த முறையில் மாற்றிவிடுவார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறிவார்கள். "உச்சவரம்புச் சட்டம் கொண்டுவரப் போகிறோம் கொண்டுவரப்போகிறோம் என்று முன்கூட்டியே நாங்கள் அறிவித்த காரணத்தினால் சட்டம் கொண்டுவருவதற்குள் பல பிரிவினை ஏற்பட்டு நிலமே கிடைக்காது போய்விட்டது. அது போல் நாங்கள் செய்த தவறை நீங்களும் இந்த விஷயத்தில் செய்து விட்டீர்களே" என்று நீங்கள் சொல்லக்கூடாது என்ற எண்ணத்தில்தான் கொண்டுவந்தோம்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏதோ மிக சாமர்த்தியமாக அவசரச்சட்டத்திற்கு ஆதரவு காட்டுவதாக நில உச்சவரம்பு சட்டம் கொண்டுவந்ததைப்பற்றிச் சொல்லிவிட்டார். ஆனால் பல மாதங்களுக்கு முன்பே முதல் அமைச்சர் அவர்கள் நான் சொன்னதற்குப் பதிலாக பஸ்ஸுக்கும் உச்சவரம்பு கொண்டுவரப்படும் என்று அறிவித்திருக்கிறார். ஆக சட்டமாகக் கொண்டுவந்தால் பல மாற்றங்கள் ஏற்பட்டுவிடும் என்கிற வாதம் சரியல்ல. முன்பே பல மாற்றங்களைச் செய்து கொள்ள சந்தர்ப்பம் ஏற்பட்டுவிட்டது.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் மேலவையில் இது பற்றிக் குறிப்பிட்டிருக்கிறேன். அம்மையார் அவர்கள் பத்திரிகையில் படித்திருக்கலாம். படிக்காமலும் இருக்கலாம். பஸ்ஸுக்கு உச்சவரம்பு கொண்டுவர வேண்டும் என்று ஏற்கனவே அம்மையார் அவர்கள் இந்த மன்றத்தில் குறிப்பிட்டபோது—நான் அப்போதே சொன்னேன், உச்சவரம்பு கொண்டு வருவதைப்பற்றி யோசித்துக்கொண்டிருக்கிறோம் என்பதாக. இந்த உச்சவரம்புக்கு அவசரச் சட்டத்தைப் பிறப்பிக்கவேண்டுமென்று எண்ணினோம். ஆனால் மத்திய அரசாங்கத்தின் அங்கீகாரம் பெறாமல் அவசரச் சட்டத்தைப் பிறப்பிக்க முடியாது. அதுவும் சோஷலிசக்கருத்துள்ள அவசரச்சட்டத்தைப் பிறப்பிக்க வேண்டியிருந்ததால் மத்திய அரசாங்கத்தின் அனுமதியைக் கோரி எழுதினோம். கிட்டத்தட்ட 25 நாட்களுக்கு மேல் அனுமதி அளிக்கத் தாமதப்படுத்திவிட்டார்கள். இந்தக் காரணத்தினால்தான் மாநில அரசாங்கத்திற்கு அதிக அதிகாரம் கொடுக்க வேண்டுமென்ற கொள்கையை வலியுறுத்திக்கொண்டு வருகிறோம். கிட்டத்தட்ட 20 நாட்களுக்கு முன்பே இந்த அனுமதி கிடைத்திருந்தால், சட்டமன்றம் கூடுவதற்கு இருபது நாட்களுக்கு முன்பே இந்த அவசரச் சட்டம் வந்திருக்கும். சட்டமன்றம் கூடுவதற்கு முதல்நாள் இந்த அவசரச் சட்டம் வந்தது இந்த அரசின் குற்றமல்ல, மத்திய அரசு காட்டிய காலதாமதமாகும்.

DR. H. V. HANDE : On a point of personal explanation and by way of clarification, Sir. I did not mean that a corporation councillor who is a member of a trade union need not be removed or disqualified. My point is let there be no discretionary power





with the Government to disqualify one person and qualify another person. That kind of discrimination I did not want. Such kind of discretionary power I do not want to be with the Government. That is my point. Otherwise I have no objection if Government were to say in black and white, these are the disqualifications. Let the rule be applicable to one and all and not be discriminatory.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** எப்படியும் அவசரச் சட்டம் கொண்டுவருவது என்பது இந்த அவைக்கு அளிக்கிற உரிய மரியாதையாகாது. அந்தச் சட்டம் தான் அப்படி என்றால் மதுரை மாநகராட்சி மன்றச் சட்டத்திற்கு என்ன அவசரம்? மே மாதம் 1 ஆம் தேதியே வந்துவிடவேண்டும் என்ற வரையறை உண்டா? மேயர் தேர்ந்தெடுக்கப்பட்டுவிடவேண்டும் என்ற அவசியம் உண்டா? எதற்காக இதற்கு அவசரச்சட்டம் கொண்டுவந்திருக்க வேண்டும்? ஏதோ ஒன்றைக் காட்டி மற்றொன்றைச் செய்வதில் மன்னர்களாக இருக்கிறார்கள். சட்டசபை கூட இருக்கிற நேரத்தில் இதுபோன்ற அவசரச்சட்டத்தைக் கொண்டுவருவது பொதுவாக நல்லதல்ல என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அதுவும் இந்த மதுரை மாநகராட்சி மன்றச் சட்டத்தில் 500 ஷரத்துகள் இருக்கின்றன. படித்துப்பார்க்கக்கூட நேரம் இல்லாத அளவுக்கு இருக்கிறது. மதிப்பிற்குரிய தங்கமணி அவர்கள் அதில் உள்ள முரண்பாடுகளை எடுத்துக்காட்டினார்கள். உறுப்பினர்கள் அவற்றை எடுத்துச்சொல்லும்போதே வேறுசில முரண்பாடுகளும் ஏற்படுகின்றன. குறிப்பாக திரு ஹாண்டே அவர்களும், தங்கமணி அவர்களும் விதிவிலக்கு பற்றிக் குறிப்பிட்டார்கள்.

Notwithstanding anything, Government can exempt

என்று இதன்மூலம் பல பேருக்கு விதிவிலக்கு கொடுத்துவிடலாமே என்றால்

Notwithstanding anything contained in clause (a) of sub-section (1) the Government may direct that such sentence shall not operate as a disqualification.

என்று சொன்னார். இந்த விதி விலக்கு யாருக்கென்றால்

one who is sentenced by a criminal court to such punishment and for such offence as is described in sub-section (1) of section 56.

என்பதாக யார் க்ரிமினல் கோர்ட்டிலே தண்டிக்கப்பட்டிருக்கிறார்களோ அவர்களுக்கு பிரிவு 56 படி விலக்கு அளிக்க—

A person who has been sentenced by a criminal court to imprisonment for life or to imprisonment for a period of more than two years for any offence other than an offence of a political character or an offence not involving moral delinquency (such sentence not having been reversed or the offence pardoned) shall be disqualified for election or co-option as a councillor while undergoing the sentence and for five years from the date if expiration of the sentence.

என்பதாக இருக்கிறது. ஒரு க்ரிமினல் வழக்கிலே ஈடுபட்டு—பொலிடிகலாகக் கூட இல்லை—இரண்டு வருஷம் தண்டனை அடைந்தவர்களுக்கு விலக்கு அளித்து அவர்களை கவுன்சிலர்

களாகக் கொண்டுவருவது என்ன நியாயம் என்று தெரியவில்லை. அந்த விதிவிலக்கு ஷரத்தே யூனியன் தலைவராக இருக்கக்கூடியவர்களுக்கும் பொருந்தும் என்று திரு. மாதவன் அவர்கள் குறிப்பிட்டார்கள். அது எப்படி என்று தெரியவில்லை. பொலிடிகலாக இல்லாது ஐ.பி.ஸி. யின் கீழ் தண்டிக்கப்பட்டவர்கள் மக்கள் பிரதிநிதியாக இருக்கவே லாயக்கில்லை. அப்படி லாயக்கில்லாதவர்களை லாயக்குள்ளவர்களாக ஆக்குவதற்கு அவசியம் என்ன?

இதுபோல இந்தச் சட்டத்தில் அவர்களுக்கு வேண்டிய சில வசதிகளையும் செய்துகொண்டிருக்கிறார்கள். ஷரத்து 8இன் படி ஸ்டாண்டிங் கமிட்டிச் சேர்மன் ஒரு முறைக்குமேல் பதவி வகிக்க வழியில்லை. இது நியாயமாகும். ஒருவரே பதவியில் ஒட்டிக்கொண்டிருக்க ஜனநாயக அமைப்பில் இடமளிக்கக் கூடாது, பலரும் பணியாற்ற சந்தர்ப்பளிக்கவேண்டும் என்பதை வரவேற்கிறேன். ஆனால், மேயருக்கும், டெபுடி மேயருக்கும் ஒரு பதவிக்காலம் முடிந்தவுடன் திரும்பவும் தேர்தலுக்கு நிற்கலாம் என்று செய்ய வேண்டிய அவசியம் என்ன? மிகப்பெரிய நகராட்சி மன்றமாகிய சென்னையில்கூட ஒருவர் மேயராக ஒரு வருஷம் இருக்கிறார் என்றால் அடுத்த வருஷம் ஒருவர், அதற்கடுத்த வருஷம் ஒருவர் என்பதாக கம்யூனிஸ்ட் வாராக ரோட்டேஷனில் வரும்படி அமைத்திருக்கிறார்கள். பலரும் அந்த உயர்ந்த பதவிக்கு வரவேண்டும் என்றாலும்—பெரும்பான்மை உறுப்பினர்களைக் கொண்ட கட்சியினரில் இருந்தே மேயர் வர முடியும் என்கிற நிலைமையினால் அந்தக் கட்சியின் கொள்கைகளுக்கேற்ப தொடர்ந்து பணியாற்ற வாய்ப்பு இருந்துகொண்டுதான் இருக்கிறது. அதை விட்டு மதுரை மாநகராட்சி சட்டத்திலே மேயர், டெபுடி மேயர் ரீயெலக்ஷனுக்கு நிற்கலாம் என்கிற பிரிவு வரவேற்கத்தக்கதாக இல்லை. அதை மீண்டும் யோசிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பெரிய கூட்டுறவு ஸ்தாபனத்தில்கூட தலைவர் தொடர்ந்து பதவியில் இரண்டாண்டுக்கு மேல் இருக்கக்கூடாது என்பதாக சட்டம் கொண்டுவந்துள்ளோம். (மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: இல்லை) இல்லை என்றாலும் அப்படிக்கொண்டு வருவதே வரவேற்கத் தக்கது. பெரிய பதவியைப் பிடித்துக்கொண்டவர்கள் ஒன்று தாமாக ராஜீநாமாச் செய்யவேண்டும், அல்லது சாவுதான் அவர்களை அந்த இடத்தைவிட்டு அகற்றவேண்டும் என்கிற நிலையில் சட்டத்தை அமைத்துவிடுவது சரியல்ல.

மற்றொன்று—நாங்கள் ஆட்சியில் இருந்தபோதே சொன்னோம் அவர்கள் செய்யவில்லை. நீங்களாவது செய்வீர்கள் என்கிற கருத்தில் இந்தக் கோரிக்கையை வைக்கிறேன். மாநகராட்சியில் பத்து வார்டுகள் இருக்கின்றன என்றால் அந்தப் பத்து வார்டுகளைக் கொண்டதுதான் எம்.எல்.ஏ. தொகுதியும். கிராமப்புறங்களில் உள்ளவர்களுக்காவது பாலம் கட்டச் சொல்வது, ரோடு போடச் சொல்வது என்பதாக பல விஷயங்களில் கருத்துக்கூற சந்தர்ப்பம் இருக்கிறது. ஆனால் நகர்ப்புறங்களில் கவுன்சிலர்கள் வேறு, எம்.எல்.ஏ. க்கள் வேறு என்கிறபோது ஒரே கட்சியைச் சேர்ந்தவர்



களாகவே இரண்டுபேர்களும் இருந்துவிட்டால் பரவாயில்லை—வேறுவேறு கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்துவிட்டால் எம்.எல்.ஏ.-க்கள் எந்த யோசனையையும் எந்த இடத்திலும் சொல்வதற்கு வகையில்லாது போகிறது. என்னுடைய விட்டுக்கு எதிரே உள்ள விளக்கே எட்டு நாளில் ஏழு நாள் எரிவதில்லை. ஒரு நாளும் ½ மணி எரிந்துவிட்டு அணைந்துவிடுகிறது. அந்த அளவில் தெருவிளக்கு நிர்வாகம் இருக்கிறது. அடையார் பகுதியில் குடிசைப் பகுதிகளிலாவது தண்ணீர் வருகிறது. நடுத்தர மக்கள் வசிக்கிற சாஸ்திரி நகரில் தண்ணீரே கிடையாது. போய் கவுன்சிலரிடம் சொன்னால்—நீங்கள் யாருக்கு வோட்டுப்போட்டீர்கள், அவர்களிடம் போய்ச் சொல்லுங்கள் என்கிறார்கள். ஆகவே, இப்படிப்பட்ட சிக்கல்கள் எல்லாம் ஏற்படாதிருக்க நகரப்பகுதிகளில் தேர்ந்தெடுக்கப்படுகிற எம்.எல.ஏ. க்களில் நகராட்சி மன்றக் கூட்ட உறுப்பினர்களைப்போல் நகராட்சி மன்றக் கூட்டங்களில் தேர்ந்தெடுக்கப்படுகிற எம்.எல்.ஏ.-க்களில் நகராட்சி சொல்லவும் சந்தர்ப்பம் சட்டப்படி ஏற்படுத்த வேண்டும்

அடுத்தபடியாக நகரங்களில் உள்ள எங்களைப் போன்றவர்களுக்கு பொதுஜனங்களுக்கு வேலை செய்வதற்கான வழி இல்லாமல் போய்விடுகிறது. எம்.எல்.ஏ க்களுக்கும் நகரசபைகளின் நிகழ்ச்சிகளிலே, மக்களின் பிரதிநிதிகளாகப் பங்கெடுத்துக் கொள்ளும் வாய்ப்பைத் தரவேண்டும்.

அடுத்தபடியாக, 'எலெக்டோரல் லிஸ்ட்' என்று ஒன்று தயார் செய்கிறார்கள். பொதுத் தேர்தலுக்கென்ற வகையில் ஒரு லிஸ்ட் தயார் செய்தால் நலம். அப்படிக்கில்லாமல் பஞ்சாயத்து தேர்தலுக்கு ஒரு லிஸ்ட், நகரசபை தேர்தலுக்கு ஒரு லிஸ்ட், பொதுத் தேர்தலுக்கு ஒரு லிஸ்ட் என்ற முறையில் ஓட்டர் ஜாபிதாவைத் தயார் செய்து கொண்டிருக்கிறார்கள். அப்படி ஓட்டர் ஜாபிதாவைத் தயார் செய்யும்போது பஞ்சாயத்து தேர்தலுக்கு தயார் செய்த லிஸ்டில் பெயர் இருக்கும், ஆனால் அவருடைய பெயர் சட்டமன்றத் தேர்தலுக்கான லிஸ்ட்டில் விடுபட்டுப் போய்விடுகிறது. இதற்குக் காரணம் என்ன என்பதே தெரியவில்லை. சிலருடைய பெயர் சட்டமன்றத் தேர்தலுக்கான லிஸ்டில் பெயர் இருக்கும், ஆனால் கார்ப்பொரேஷன் லிஸ்டில் பெயர் இருக்காது. இப்படிப் பலவிதமான கோளாறுகள் இருக்கின்றன. சிலசமயங்களில் தங்களுடைய பெயர் லிஸ்டில் இல்லாத காரணத்தால் அவர்கள் தேர்தலுக்கு நிற்க முடியாத நிலைமையும் ஏற்படுகிறது. இப்படி அடிக்கடி ஓட்டர் ஜாபிதாவை தயாரித்துக்கொண்டிருப்பதால் அதிகமான பணச் செலவும் ஏற்படுகிறது. பலருடைய பெயர்கள் விடுபட்டிருக்கின்றன. பலருடைய பெயர்கள் சேர்க்கப்பட்டிருக்

கின்றன. இருப்பவர்களின் பெயர்கள் இருப்பதில்லை, இல்லாதவர்களின் பெயர்கள் எல்லாம் லிஸ்டில் இருக்கும். ஒருவருடைய பெயர் பஞ்சாயத்து லிஸ்டிலே இருந்து சட்டசபை தேர்தல் லிஸ்டிலே இல்லாத காரணத்தினாலே சாத்தூர் தொகுதியிலே தேர்தலுக்கு அவரால் நிற்க முடியாத நிலைமைகூட ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, ஒரு லிஸ்டைத் தயாரித்து, ஏதாவது திருத்தங்கள் வந்தால் அதை அந்த லிஸ்டிலே செய்து கொள்ளலாம்; மீண்டும் மீண்டும் புதுப் புது லிஸ்டுகளைத் தயாரித்துக்கொண்டிருப்பதிலே செலவு அதிகமாகிறது; பல சிக்கல்கள் எழுகின்றன.

அடுத்தபடியாக, டாக்டர் ஹாண்டே அவர்கள் பேசும்போது ப்ராப்பர்டி டாக்ஸ், கம்பெனிகளுக்கு போட வேண்டுமென்று சொன்னார்கள். கம்பெனியில் வேலை செய்பவர்களுக்கு ப்ரபொஷனல் டாக்ஸ் போடவேண்டும்.

Clause 132 says :

" (1) If the Council by a resolution determines that profession tax shall be levied, every company which, after the date specified in the notification published under section 118 transacts business in the City for not less than sixty days in the aggregate in any half-year and every person, who after the said date, in any half-year—

(a) exercises a profession art or calling or transacts business or holds any appointment, public or private . . .

தொழில் செய்கின்றவர்களின் ஒவ்வொருவருக்கும் வரி போட வேண்டும். —Profession tax on individuals. மாதவருமானக்காரர்கள்தான் இதில் மாட்டிக்கொள்கிறார்கள். கிளாஸ் 132-லே கம்பெனிக்கும் வரி போடலாம் என்றிருக்கிறது. எங்கெங்கு வரி போடலாம் என்பதைக் கண்டுபிடித்து போட்டுவிடுவார்கள். மறந்துவிட மாட்டார்கள். சுதந்திரா கட்சி அங்கத்தினர் வரி போட மறந்துவிட்டார்கள் என்று நினைப்பது சரியல்ல. முக்கியமான வரிகளையெல்லாம் போட்டுவிட்டார்கள். தொழில் வரி சம்பந்தப்பட்டவரையில் சென்னை நகரத்திலே உள்ளவர்களுக்கு எவ்வளவு வருமானம் வருகிறது என்பதைக் கண்டுபிடிப்பது கஷ்டம். மாத வருமானம் வாங்குகிறவர்கள்தான் ஒழுங்காகக் கட்டுகிறார்கள். மாதவருமானம் அல்லாத மற்றவர்களைக் கண்டு பிடிப்பது நல்லது. இருக்கின்ற வரிகளை எடுப்பதற்கு முயற்சி எடுக்கவேண்டும். இன்னும் வரிகளைப் போடாமல் விடமாட்டார்கள் என்பதை சுதந்திரா அங்கத்தினர் அறிந்துகொள்ள வேண்டும்.

அடுத்தபடியாக, இன்றைக்கு சொத்து வரி 35% போட்டிருக்கிறார்கள். அதிகபட்சமாக எல்லா கார்ப்பரேஷனிலும் 35 பர்சென்ட் என்றுதான் எல்லோரும் போடுகிறார்கள். ஒருவர் சாதாரண வீட்டிலே குடியிருந்து கொண்டு, மற்ற பகுதியை வாடகைக்கு விட்டிருக்கலாம். பொதுவாக 15½ பர்சென்டிலிருந்து 35 பர்சென்ட் வரை போடலாம் என்றுதான் இருக்கிறது. 35 பர்சென்ட்





என்றுதான் எல்லோரும் போடுகிறார்கள். நடுத்தர வகுப்பினர் ஒரு சிறிய பகுதியில் இருந்துகொண்டு, மற்ற பகுதிகளை வாடகைக்கு விடும்போது அந்த வீட்டிற்காக வரி செலுத்துவதற்காக அவர்கள் நான்கைந்து மாத வாடகையைக் கொடுக்க வேண்டியிருக்கிறது. மீதி இரண்டு மாத வாடகை வீட்டு ரிப்பேருக்காகப் போய் விடுகிறது. பாக்கியை வைத்துக்கொண்டு அவன் எப்படி முன்னேற முடியும்? இன்னும் சொல்லப்போனால் வசதிகளை செய்து கொடுக்காத இடங்களிலும், சாக்கடை வசதி, குடிநீர் வசதி, விளக்கு வசதி, ரோடு வசதி இவைகள் எல்லாம் செய்துகொடுக்காத இடங்களிலுள்ள வீடுகளுக்கும் சொத்துவரி 35 பர்சென்ட் என்று போடுகிறார்கள். கேட்டால், உன் வீடு கார்ப்பரேஷன் எல்லையில் இருக்கிறது என்று சொல்கிறார்கள். கார்ப்பரேஷன் பகுதிகளில் சரியான வசதிகளைச் செய்துகொடுப்பதில்லை. ஒருவேளை முதலமைச்சர் அந்தத் தொகுதியில் தேர்தலுக்கு நின்றால்தான் அந்தத் தொகுதியில் சீரான வேலைகள் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்படி வசதிகளை இல்லாமல் 35 பர்சென்ட் சொத்துவரி விதிப்பது மிகமிகக் கஷ்டமானது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதைக் குறைக்க வழிவகை செய்ய வேண்டும்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அர்பன் லேண்ட் டாக்ஸ்க்கு ஒரு மனையும் அதற்கும் குறைந்த பகுதிக்கு விதிவிலக்கு கொடுத்ததைப்போல, ஒரு வீடு வைத்திருப்பவர்களுக்கு சொத்து வரியிலிருந்து விதிவிலக்குக் கொடுத்தல் நலம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கார்ப்பரேஷன் பணத்தில் முக்கால்வாசிப் பணத்தை மக்களுக்கு செலவழிக்க வேண்டும். வருகின்ற வருமானம் 1¾ கோடியிலே 1½ கோடி ரூபாய் சம்பளம் கொடுப்பதற்கே செலவாகி விடுகிறது. கவுன்சிலர் ஒவ்வொருவருக்கும் தங்களுக்கு வேண்டிய ஒரு பத்துப் பேர்களுக்கு கார்ப்பரேஷனில் வேலை கொடுக்க வேண்டும். மேயரும் கமிஷனரும் கவுன்சிலர் சொல்கின்ற ஆட்களுக்கு வேலை கொடுத்துத்தான் ஆக வேண்டும். கார்ப்பரேஷன் பணியை இப்போது வேலை கொடுக்கும் ஸ்தாபனமாகத்தான் வைத்திருக்கிறார்கள். அளவுக்கு மீறி ஆட்களைப் போட்டுவிடுகிறார்கள். இதனால் வருமானத்தில் முக்கால் பங்கு சம்பளம் கொடுப்பதற்குத்தான் செலவாகிறது. இப்படிச் செய்தால் மக்களுக்கு எப்படி நன்மை செய்ய முடியும்?

சென்னை நகரத்திலே குப்பை கூளங்கள் எடுக்கப்படுவதில்லை. அவற்றை எடுக்க வேண்டிய வசதி இல்லை. கேட்டால் கூடை இல்லை, முறம் இல்லை, துடைப்பம் இல்லை. சுண்ணாம்பு இல்லை, வண்டி இல்லை என்கிறார்கள். குப்பைகூளங்களை எடுப்பதுதான் கார்ப்பரேஷனின் முக்கியமான வேலையாகும். வருகிற பணத்தைச் சம்பளமாகக் கொடுத்துவிட்டால், சுண்ணாம்பு எப்படி

வாங்கமுடியும்? அவற்றை வாங்குவதற்குக்கூட சக்தியில்லாமல் இருக்கிறார்கள். வருகின்ற 1¾ கோடி ரூபாயிலே At least upto 50 per cent alone you can spend on establishment செலவு செய்யலாம். மக்களுக்கு வசதிகள் இல்லாமல் நாம் கார்ப்பரேஷனை நடத்துகிறோம். இது சரியல்ல.

கிளாஸ் 167-லே எக்ஸம்ப்ஷன் கொடுக்கப்பட்டிருக்கிறது. அரசாங்கம் விருப்பப்பட்டால் விதி விலக்கு செய்யலாம் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அர்பன் லேண்ட் டாக்ஸிலிருந்து விதி விலக்கு கொடுத்ததுபோல இதற்கும் விதிவிலக்கு அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து பில்கிரிம்ஸ் டாக்ஸ் வேண்டுமென்று திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் சொன்னார்கள். எல்லா டாக்ஸ்களையுமா போட வேண்டும்? இந்தச் சட்டத்தை அவசரம் அவசரமாகக் கொண்டுவர வேண்டுமென்று சொன்னால் அது மிகவும் வருந்தத்தக்கது. ஆகவே, தயவு செய்து இதைப் பொறுக்கு கமிட்டிக்கு அனுப்புங்கள். முன்பு ஸ்டாண்டிங் கமிட்டி இருந்தது. அது சரியில்லாததால் சர்க்கிள் கமிட்டிகளைப் போடலாம் என்று போட்டோம். இந்த மசோதாவை பொறுக்குக் கமிட்டிக்கு அனுப்புங்கள். பழைய கார்ப்பரேஷன் ஆக்ட்டை காப்பியடித்து அப்படியே சட்டமாகக் கொண்டுவருவது சரியல்ல என்று கூறி என்னுடைய கருத்துக்களை முடித்துக்கொள்கிறேன்.

DR. H. V. HANDE : On a point of personal explanation, Sir, with due respect to the hon. Member. When she spoke she said that I have not understood the provision. It comes to that. It is clearly mentioned there—I will repeat it again—In the present Bill it is clearly put (a) property tax, (b) profession tax, (c) tax on carriages, whereas in the old Bill it was mentioned (a) property tax (b) tax on companies (c) profession tax. So, profession tax is different. Clause 132 deals with profession tax. It means a lawyer or doctor who earns more than a particular sum of money is taxed. It is not for companies. (Interruption) Excuse me. It is very clear. I do not want to contradict the distinguished lawyer member. But it is very clear, it is profession tax for individuals and not for companies. A person who is earning can be taxed and not a company like Simpsons.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Clause 132 says: "(1) If the Council by a resolution determines that profession tax shall be levied, every company which after the date specified in the notification published under section 118 transacts business in the City for not less than sixty days in the aggregate . . etc. சட்ட அமைச்சரவர்கள், எதனால் இப்படிப் போட்டிருக்கிறார்கள் என்று விளக்கம் அளிப்பார்களா?





மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, கனம் அங்கத்தினர் அவர்கள் வழக்குரைஞர் என்ற முறையிலே வெளியிலே தப்பாக நினைத்துவிடப் போகிறார்களே என்று நினைத்துக் கொண்டிருந்தேன். நல்லவேளையாக டாக்டர் ஹாண்டே அவர்கள் விளக்கம் கொடுத்தார்கள். 'டாக்ஸ் ஆன் கம்பெனிஸ்' என்பது வேறு, 'புரொபஷன் டாக்ஸ்' வேறு. அரசியலமைப்புச் சட்டத்திலேயே விளக்கம் கொடுத்திருக்கிறார்கள். நாடாளுமன்றம் வேறு சட்டம் கொண்டு வந்து, ரத்து செய்யும்வரையில் போட்ட சட்டம் செல்லும் என்பதாகத் தெரிகிறது.

அடுத்தபடியாக, சட்டத்தைக் காப்பியடிப்பதாகச் சொன்னார்கள். இதுவரையில் பெருமையோடு அந்தச் சட்டத்தை ஏற்றுக்கொண்டிருந்தார்கள். டிஸ்குவாலிபிகேஷன் என்று சொல்லிவிட்டு எத்தனை ஆண்டுகள் சிறை சென்றாலும் அதிகாரம் இருப்பதாகச் சொல்கிறார்கள். அதுவும் புதிதல்ல. ஏற்கனவே இருக்கிற, பல ஆண்டுகளாக அம்மையார் அவர்கள் ஏற்றுக் கொண்ட சட்டம், அவருடைய கட்சியும் ஏற்றுக்கொண்ட சட்டம். அந்தச் சட்டத்தை நாங்கள் கொண்டு வருவது எங்களுக்காக என்று நோக்கம் கற்பிப்பது நல்லது அல்ல.

அசோசியேஷன்பற்றிச் சொன்னார்கள். திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களும் சொன்னார்கள். அதுவும் ஏற்கெனவே ஏற்பட்டதுதான். புதிது அல்ல. இந்த அரசாங்கம் ஏதோ நோக்கத்தோடு கொண்டு வருவது என்று சொல்லாமல் விட்டுவிட்டால் போதும்.

திருமதி த. ந. அனந்தநாயகி : தலைவரவர்களே, ஏற்கனவேயிருந்தவர்கள் தவறு செய்திருக்கிறார்கள் என்றால் அதை மாற்றிக் கொள்வதில் ஆட்சேபணை இருக்க முடியாது. நாங்கள் தவறு செய்தோம் என்று நினைத்துத்தானே உங்களை அனுப்பியிருக்கிறார்கள். நீங்கள் அப்படியே செய்வது தவறு.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இருபதாண்டுகளுக்குப் பின்னாலே இப்பொழுதாவது கண்டுபிடித்தார்களே, அதற்கு மகிழ்ச்சி.

* திரு. துரை முருகன் : தலைவரவர்களே, மதுரை மாநகரை மாநகராட்சி மன்றமாக்கக் கொண்டு வந்திருக்கும் இந்த மசோதாவின்மீது என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைச் சொல்ல விழைகிறேன். பன்னெடுங்காலமாகவே இலக்கியப் புகழும், வரலாற்றுச் சிறப்பும் மிக்க அந்த மதுரை மாநகரை மாநகராட்சியாக்கும் பெருமை நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகத்தின் காலத்தில் ஏற்பட்டதை நினைத்து, அதுவும் கலைஞர் அவர்களின் தலைமையில் அமைந்திருக்கிற இந்த அரசில் ஏற்பட்டதை நினைத்து நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். காரணம் என்னவென்றால், உலகத்திலே பல நாடுகள் அநாகரிகத்திலேயிருந்த காலத்தில் தமிழுக்குப் பெருமை கொடுத்த நகரங்களில் மதுரையும் ஒன்று

என்பதை நினைக்க நாம் கடமைப்பட்டவர்களாவோம். இன்றைக்கு நாம் பேசும் மொழியை வளர்த்த இடமாகவும் மதுரையிருப்பதால் அந்த மதுரைக்கு ஒரு சிறப்பைச் செய்யவேண்டுமென்று இந்த மதுரையை மாநகராட்சியாக ஆக்கியிருக்கிறார்கள். அதற்காக நான் என்னுடைய பாராட்டுதலைச் சர்க்காருக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டவனாவேன்.

இந்த மதுரையை மாநகராட்சியாக்க வேண்டுமென்று பன்னெடுங்காலமாக கோரிக்கை இருந்து வந்தது. ஆனால் என்ன காரணத்தினாலோ அது புறக்கணிக்கப்பட்டு வந்தது. அந்தக் கோரிக்கையை நியாமான கோரிக்கை என்று உணர்ந்து நம்முடைய முதல்வரவர்கள் இதயத்திலே பதியவைத்து அதற்கு இப்படிப்பட்டதொரு சட்டவடிவமாக்கி அதையும் மாநகராட்சியாக மாற்றியிருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல, ஏற்கனவே நகராட்சியாக இருந்ததை இன்றைக்கு மாநகராட்சியாக மாற்றுகிறபொழுது புதிதாகத் தேர்தல் நடந்து புதிதாக உறுப்பினர்கள் வந்து மீண்டும் மேயர் வருவது என்பதைக்கூட மாற்றி இன்றைக்கு நகராட்சியின் தலைவராகயிருந்து வரும் பெருமதிப்பிற்குரிய மதுரை முத்து அவர்களே இன்றைக்கு மாநகராட்சியின் தந்தையாக வந்திருப்பதை நாம் பாராட்டக் கடமைப்பட்டவர்களாவோம். காரணம், மதுரையின் சமீபகால வளர்ச்சிக்கும், மதுரையின் புகழுக்கும் தன்னுடைய வாழ்நாள் முழுவதும் பணியாற்றிய பெரியவர் மதுரை முத்து அவர்கள் என்பதை மறக்க முடியாது. அதை மறந்தால் நாம் நன்றி மறந்தவர்களாவோம். அப்படிப்பட்டவருக்கு புகழும் பெருமையும் சேர்ப்பதுபோல அவர் இன்றைய தினம் மாநகராட்சியின் தந்தையாக இந்தச் சட்டத்திலே வழிவகை செய்திருப்பதற்காக நான் பாராட்டக் கடமைப்பட்டவனாவேன்.

இங்கே பேசிய அங்கத்தினர்களில் பெரும்பாலோனோர் இந்த மசோதாவை வரவேற்றார்கள். கடைசியாகப் பேசிய நம்முடைய மதிப்பிற்குரிய அங்கத்தினர் அம்மையார் அவர்கள் சொன்னார்கள், சென்னையிலேயிருக்கும் மாநகராட்சிக்குக்கூட ஒரு ஆண்டுக்காலம் என்று வைத்திருக்கிறார்கள். ஆனால் மதுரை மேயருக்கு ஐந்தாண்டுக்காலம் இருப்பதா, அது என்ன உங்கள் ஆளே இருக்க வேண்டுமா, ஒன்று அவராக ராஜினாமா செய்ய வேண்டும், அல்லது சாவு வர வேண்டும், அதுவரை அவர்தான் ஆள வேண்டுமா என்றெல்லாம் கேட்டார்கள். என்னைப்பொறுத்தவரையில் நான் கூறிக்கொள்ள விரும்புவது புதிதாக உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்து மாநகராட்சிக்குப் பல்வேறு திட்டங்களைத் தீட்டி மாநகராட்சிக்குப் பல்வேறு செயல்களைச் செய்வது என்று சொன்னால் திட்டங்கள் தீட்ட அதைச் செயல்படுத்துவதற்கு காலமும் நேரமும் தேவைப்படுகிறது. ஆனால் சென்னை மாநகராட்சியில் நடைமுறைகள், செய்கைகள் திட்டங்கள் வேகமாக ஓடிக்கொண்டிருக்கும், ஏனென்றால் அது முன்பே மாநகராட்சியாகயிருந்து கொண்டிருக்கிறது.



அதைக்கூட மாற்றியமைக்க வேண்டுமென்ற கோரிக்கை இருந்து கொண்டுதான் இருக்கிறது. ஆனால் மதுரை மாநகராட்சி அப்படி அல்ல. புதிதாக மாநகராட்சியாக ஆகிறது. எனவே, புதிதாக எந்தெந்தப்பகுதிகளைச் சேர்ப்பது, எதுவரையில் மாநகராட்சியாகச் சேர்ப்பது, என்னென்ன திட்டங்கள் தீட்டுவது, எதையெதை முன்னேற்றம் செய்வது, என்னென்ன காரியங்களை ஆற்ற வேண்டுமென்பதையெல்லாம் சிந்திப்பதற்குள் இரண்டாண்டுக் காலம் ஓடிவிடும். அப்படி இரண்டாண்டுக் காலம் ஓடிவிட்டால், ஒவ்வொருவரும் வந்தவுடன் திட்டங்கள் தீட்டுவது, பிறகு வீட்டுக்குப் போவது என்றிருந்தால் அது செம்மையாக இருக்காது என்பதால்தான், திட்டம் தீட்டியவர்கள் இப்படிச் செயல்பட வேண்டுமென்ற கருத்தை உள்ளத்திலே கொண்டுதான் ஐந்தாண்டுக்காலம் மேயர் பதவி என்று ஏற்பட்டிருப்பதாக அறிந்து மெத்தப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதற்காகவேதான் ஐந்தாண்டுக்காலம் என்று வைத்திருக்கிறதே தவிர, ஏதோ எங்களுடைய ஆளேதான் இருப்பார்கள் என்ற எண்ணத்தில் இல்லை. ஒரு நாளைக்குத் தேர்தல் வரலாம், அந்தத் தேர்தலில் உங்களைக் கூட ஆதரிக்கலாம். மக்களின் ஆதரவு பெற்று நீங்கள் வரலாம். ஆகவே, இன்றைக்குப் போடுகிற சட்டம் ஒரு கட்சிக்கு மட்டும் சொந்தமானதாகயில்லாமல், எல்லா மக்களும் ஏற்றுக்கொள்ளும் வகையிலேயிருப்பதால் இப்படிப்பட்ட ஒரு திட்டத்தை நமக்கு இவர்கள் தீட்டியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஒரு நல்ல திட்டத்தைச் செய்து, அத்தகைய ஒரு நல்ல மாநகராட்சியை உருவாக்குவதற்கான வழிகளை வகுத்திருக்கும் இந்த மசோதாவை நான் வரவேற்கிறேன் என்று கூறி விடை பெறுகிறேன், வணக்கம்.

* THIRU K. M. SUBRAMANIAM: Mr. Deputy Speaker, Sir, I congratulate the D.M.K. Government on having made the Madurai Municipality into a Corporation. Nobody disputes the fact that Madurai is qualified to be made into a Corporation. I do not know why my hon. Friend, Durai Murugan has misunderstood the speech of Thirumathi Anandanayaki by saying that we are opposed to Madurai Municipality being made a Corporation. We all agree on the fundamental point that it should be made into a Corporation. What we are objecting to is that this Bill should not be passed as it is in this House now, but should be referred to a Select Committee . . .

திரு. துரை முருகன்: தலைவரவர்களே. ஐந்தாண்டுக்காலம் மேயர் பதவியிருப்பதை அம்மையார் அவர்கள் எதிர்த்திருக்கிறார்கள் என்பதைக் கனம் அங்கத்தினர் அவர்களுக்கு உங்கள் மூலமாக ஞாபகமூட்ட விரும்புகிறேன்.

THIRU K. M. SUBRAMANIAM: I have not lost my memory. I do not want to be reminded that Thirumathi Anandanayaki spoke like that. I may tell my hon. Friend, through you, Mr. Deputy Speaker, that we are asking for reference of the Bill to a

Select Committee to find out whether the Mayor should hold office for one year or five years. It is all a matter of individual opinion. We have had enough experience of the working of the Corporation of Madras. This Bill is based on the 1919 Act with occasional changes here and there. So far as City Municipal Act was concerned, it did not work well. Then a White Paper was issued and the Corporation has recommended to the Government certain alterations in the White Paper. So also, if a White Paper is given in respect of the Madurai Corporation, it would be useful for both sides. Now we are finding it difficult to run the City Corporation in certain respects. So, when the country develops and when people develop new ideas, it is very necessary that such democratic institutions must also develop and therefore I want that the Select Committee should consider the Bill in all its aspects.

Then I come to the views expressed by Dr. Hande on the Bill. He has stated that the Commissioner must have extraordinary powers and nobody should pass a No-confidence Motion against the Commissioner. I entirely oppose it because I have found during my experience of 17 years that there have been good Commissioners, bad Commissioners, indifferent Commissioners, democratic Commissioners and undemocratic Commissioners. If the members of the Corporation or the Municipality or a Panchayat Board do not have such a power, there will be no democracy at all. As this Government are asking for more powers from the Centre. I am sure they will also be willing to give more powers to the Corporations, municipalities, local bodies, etc. So Dr. Hande's point is that the Council should not have the power to request Government to withdraw the Commissioner. My point is that the Council should have full powers because whenever they find the Commissioner is acting in a high-handed manner, they must have the power to ask the Government to withdraw the Commissioner. It is left to Government to withdraw him or not.

Coming to Clause 7 relating to election to Standing Committees, find (in page 211) that every Standing Committee shall consist of five members elected by the Council from among its Councillors by a majority of the Councillors present in accordance with such procedure as may be prescribed. Our experience has been, Mr. Deputy Speaker, that a local body election may be on political feelings. Once the election is finished, in the administrative body, political feelings should not exist. When a Committee is formed, there should be proportional representation. All the parties should be given a chance and they must get their right. It cannot be by simple majority of Councillors present. Today it may be the D.M.K., tomorrow it may be the Communist Party. Whatever the party may be, I would request the Hon. Minister to see, that in a democratic set-up, election to committee should be by single transferable vote. All the parties will get their representation according to their strength. It is not a question of what functions they have. It is not a question of honour. It is an expression of each party's views. All should get representation.



Similarly there are many things. I have not had time to go through the Bill entirely. There are many lacunae. It is said this is modelled after the Madras Corporation Act. There the Governmental powers are too much. Here in this Bill it is said that the Commissioner can make direct representation to Government. If that be the case, what honour will there be for D.M.K. councillors of Madurai Council? I say this because D.M.K. is in majority there. Tomorrow some other party may be there. I say, in democracy, the Commissioner must have rights. Of course, it is necessary that Government should know what is happening there from the Commissioner. But that should be done through the Mayor. The Mayor should know what is going on between the Commissioner and the Government. If this be the position, if the Mayor does not know anything, what is the use of his being there for five years? I have had only a casual reading of this Bill and I had not gone through it thorougly But what I say is, let us not hurry. I know that because of the Ordinance, the Bill has to be passed within a limited time. There is nothing wrong in referring it to a Committee. The Committee can have 5 or 6 days sitting, go through it thoroughly and suggest suitable amendments. Then we can consider the Bill in this session itself and pass it.

There are many lacunae. For instance it is said Government can appoint the Commissioner, Deputy Commissioner and P.A. I can understand the first two by the Government. Let them have the power to appoint the Commissioner and the Deputy Commissioner. But what about P.A. He is the man who prepares notes to the Commissioner. He represents continuity, past, present and future. He should be appointed by the Council from among the staff of the Corporation. The Councillors know who is the man fit to be appointed as the P.A. to Commissioner. So it is the Council, and not Government which should have this power. That is one lacuna which I had come across. There are many such things. That is why I say, let it go through a Committee.

Take profession tax. Is it being collected and administered properly ? U.P. has given it up. Why can't our Government also give it up? Do you know what is the amount collected and what money is spent on collection charges? These things are there. Let Government consider these things dispassionately and not because Thiru K. M. Subramaniam is raising his voice against it. If they consider the things dispassionately, it may be evident that there is need for changes. Take the instance of the cycle tax. We have abolished it during Congress Government here. But in the Madurai municipality you have made provision for that tax. Why? It is time it is given up because it would otherwise affect the poor. We want to help the poor. We want the Corporation to flower. That is why I again say, let us not hurry. If we want to discuss it now I have got 50 to 60 points. But I do not want to

waste the time of the House now. I would appeal to the Hon. Minister to refer it to a Select Committee. That Committee may sit for five or six days continuously, discuss the thing thoroughly and come again with an amended Bill before this session is over. We can then pass the Bill. With these words I conclude my speech.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** பேரவைத் துணைத் தலைவரவர்களே, மதுரையை மாநகராட்சியாக்கிய மசோதா ஆய்வுக்கு வைக்கப்பட்டுள்ள நிலையில் திருத்தங்கள் பல தரப்பட்டுள்ளன. மதிப்பிற்குரிய டாக்டர் ஹாண்டே அவர்கள் இதை பொறுக்குக் குழுவிற்கு விடலாம் என்று கருத்து தெரிவித்தார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கமணி அவர்கள் பொதுமக்கள் கருத்தை அறியலாம் என்று கருத்துரை தந்து இருக்கிறார்கள். அதற்கும் மேலாக இவ்வளவு அவசர அவசரமாக இதைக் கொண்டு வர வேண்டுமா என்று மாண்புமிகு உறுப்பினர் திருமதி அனந்த நாயகி அவர்கள் தெரிவித்தார்கள். இதற்கு இவ்வளவு அவசரப் படுவானேன் என்று எடுத்துச் சொன்னார்கள். அவர்கள் ஆட்சியில் இருந்தபோது பல்லாண்டுகாலமாக கோரிக்கை விடப்பட்டும் அது நிறைவேற்றப்படாமல் இருந்ததன் காரணமாகத் தான் இப்போது கொண்டு வர வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இதிலே அவசரப் படக் கூடிய அவசியம் இல்லை. இதை மாநகராட்சி ஆக்குவதற்கு அவசரச் சட்டம் கொண்டுவரவேண்டியது அவசியம் தானா என்று கேட்கப்பட்டது.

இந்த ஆண்டே மாநகராட்சியாக மதுரையை ஆக்கிவிடவேண்டுமென்று முதலமைச்சர் அவர்கள் மார்ச்சு மாதத்தில் நடைபெற்ற கூட்டத்திலே தெரிவித்தார்கள். 1—5—1971 அன்று முதல் மதுரை மாநகராட்சியாகும் என்றும், 1—5—1971 மே நாளாக இருக்கிற காரணத்தாலும், அது உலக வரலாற்றிலேயே ஒரு சிறப்பான நாள் என்ற காரணத்தாலும், அந்த நாள் மாநகராட்சி ஆக்குவதற்கு ஏற்ற நாள் என்ற அடிப்படையில் அந்தத் தேதியைக் குறிப்பிட்டு அந்த கருத்தை வெளியிட்டார்கள். 24—4—1971 அன்று அவசரச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது. இவ்வளவு அவசரமாக சட்ட வடிவம் கொண்டுவரவேண்டிய காரணம் 31—7—1971-க்குள் இந்த அவசரச் சட்டம் காலம் முடிந்து விடுகிறது. அதற்குள் சட்டம் நிறைவேற்றப்பட வேண்டும். சட்டம் நிறைவேற்றப்பட்ட பிறகு இந்திய அரசின் ஒப்புதல் பெறுவதற்கு அனுப்ப வேண்டும். குடியரசு தலைவர் கையெழுத்தாகி வரவேண்டும். 31—7—1971-க்குள் இவைகளெல்லாம் முடிந்து வரவேண்டிய காரணத்தால், இதை சட்ட வடிவில் கொடுக்கவேண்டுமென்ற காரணத்தால் இதை இந்தச் சட்டப் பேரவையின் ஆய்வுக்கு வைக்கப்பட்டிருக்கிறது. அவசரச் சட்டம் கொண்டு வரவேண்டிய நிலையிலோ அல்லது உறுப்பினர்கள் கலந்து கொள்ளாமலேயே கொண்டு வரவேண்டுமென்ற நிலையிலோ இது கொண்டுவரப்பட்டதல்ல.





பெரிய அளவில் இருக்கிறது ஏராளமான பிரிவுகள் சேர்க்கப்பட்டு இருக்கிறது. புதிதாக நாம் ஒரு நிலைமையை உருவாக்குகிறோம். அதிலே இருக்கிற நிலைமைகளைப் பற்றி பரிசீலிக்க வேண்டாமா என்று கேட்டார்கள். நான் முன்னுரையிலேயே எடுத்துக் கூறினேன், பெரும்பான்மையான விதிமுறைகள் சென்னை மாநகராட்சியால் நீண்ட நாட்கள் நடைமுறையில் இருப்பவைதான். அந்த அடிப்படையில் தான் மதுரை மாநகராட்சி பிரிவு அமைக்கப்பட்டு இருக்கிறது. அந்த மதுரை நகருக்கு ஏற்ற வகையில் சில பல திருத்தங்களை எதிர்காலத்திற்கு ஏற்றவகையில் சேர்த்து இருக்கிறோம். மசோதா பெரிதாக இருந்தாலும், ஏராளமான பிரிவுகள் பல்லாண்டு காலம் சென்னை மாநகராட்சி மன்றத்தின் மூலமாக நடைமுறைபடுத்தப்பட்டு, வழக்கத்திலே உள்ளவைதான். எல்லோருக்கும் தெரிந்த பிரிவுகள்தான். இது பல்லாண்டுகாலமாக சென்னை மாநகராட்சி பின்பற்றி வருகிற நடைமுறையை ஒட்டித் தான் வருகிறது என்ற காரணத்தால் திருத்தங்களுக்கும் மற்றவற்றிற்கும், சென்னை மாநகராட்சி மன்றத்திலேகூட திரு. கே. எம். சுப்பிரமண்யம் அவர்கள் எடுத்துக் கூறியது போல், அதிலேயும் மாற்றம் செய்யவேண்டிய நிலையில் சென்னை மாநகராட்சி சட்டத்திற்கே ஒரு திருத்தச் சட்டத்தின் மூலம் இந்த மன்றத்தில் கொண்டு வர இருக்கிறோம். சென்னையை அடிப்படையாகக் கொண்டு மதுரை மாநகராட்சி சட்டம் இருப்பதால் இந்தத் திருத்தத்தை இப்போது கொண்டு வந்து இருக்கிறோம். ஆகவே எல்லாவற்றையும் மனதில் வைத்துக்கொண்டு கூடுமான வரையில் நல்ல முறையில் இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

விதிமுறைகளின் மேல் ஆங்காங்கு கருத்து தெரிவித்து இருக்கிறார்கள். அதிலே 'டிஸ்குவாலிபிகேஷன்' பற்றி எடுத்துச் சொன்னார்கள். அந்தப் பிரிவை பற்றிச் சொல்லுகிறபோது அது இங்கே இல்லை ஏற்கெனவே மாநகராட்சி மன்றத்தின் சட்டத்திலே அதற்கான பிரிவு இருக்கிறது, அதுதான் இந்த சட்டத்திலும் பின்பற்றப்பட்டு இருக்கிறது. அதிலே மட்டுமல்ல நகராட்சி மன்றங்களின் சட்டத்தின் குறிப்புகளிலே செக்ஷன் 50(2)-ல் இந்த பிரிவு இருந்து வருகிறது. சென்னை மாநகராட்சி மன்ற சட்டப் பிரிவிலும் செக்ஷன் 53(2)-ல் இந்த விதிமுறை இருந்து வருகிறது. அந்த விதிமுறைதான் இங்கே கையாளப்பட்டிருக்கிறது. சென்னை மாநகராட்சி மன்றத்தின் விதிமுறைகள் கையாளப்பட்டு வருவதாலே நாம் பயப்படவேண்டிய அளவுக்கு மதுரை மாநகராட்சி ஏற்பட்டு விடாது என்ற நிலைமையை நாம் சொல்லலாம். அச்சப்பட வேண்டிய அவசியம் இல்லை என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கமணி அவர்கள் மதுரை மாநகராட்சியின் எல்லையைக் குறிப்பிட்டது பற்றிச் சொன்னார்கள். மாநகராட்சியின் எல்லைக்குட்பட்டு எந்தப்பகுதியை எடுக்கலாம் என்பதிலே சில பகுதிகளை சேர்க்கவும், நீக்கவும் உரிமை தந்து விதி கொடுக்கப்பட்டிருக்கிறது. ஒரு 15 மைல் சுற்றுவட்டாரக்

திற்குள் இருக்கும் பகுதிகளை சேர்க்கவேண்டுமென்று குறிப்பிட்டு விட்டால், அதிலே பல சங்கடங்கள் ஏற்படும். 15 மைல் சுற்றளவு என்றால், ஒரு ஊராட்சி மன்றத்தின் பாதி எல்லை வரலாம் அதனால் அந்த மன்றங்களிலே தகராறு ஏற்படும். ஆகவே எல்லையைக் குறிப்பிடாமல். எந்த எந்த பகுதியைச் சேர்த்துக்கொள்ளலாம் என்பதற்கு உரிமை அளிக்கப்பட்டிருக்கிறது. சில பகுதிகளை விடுவதற்காகவும் வாய்ப்பு தரப்பட்டிருக்கிறது. அது மட்டுமல்ல, மெட்ரோபாலிடன் சிடி ஆக்குவதற்கு நடவடிக்கை எடுக்கிறபோது, அதற்கான திருத்தங்கள் செய்கிறபோது, மாண்புமிகு தங்கமணி அவர்கள் கூறுகிற கருத்தை நடைமுறைப்படுத்த வாய்ப்பு இருப்பதால், இப்போது அந்த திருத்தம் தேவையில்லை என்று கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் மேயரின் பதவிக்காலத்தை 3 ஆண்டுகாலமாக ஆக்கலாம் என்று குறிப்பிட்டார்கள். மாண்புமிகு உறுப்பினர் திருமதி அனந்தநாயகி அவர்கள் மேயர், துணை மேயர் இன்னொரு தடவை வரக்கூடாது என்று கூறினார்கள். மேயர், துணை மேயர் மறுபடியும் தேர்ந்தெடுக்கப்பட வாய்ப்பு இருக்கிறது. இங்கே சென்னையில் வகுப்பு வாரி பிரதிநிதித்துவம் இருப்பதால், அப்படிப்பட்ட தன்மையில் மாறி மாறி வருகிறது. அப்படி ஒரு கன்வென்ஷன் ஏற்பட்டு இருப்பதால் அதை பின்பற்றி வருகிறோம். மேயர். துணை மேயர் மறுபடியும் தேர்ந்தெடுக்கப்படலாம் என்று சட்டவிதிகளிலே இருந்து வருகிறது. அந்த அடிப் படையில்தான் திரு. குசேலர் அவர்கள் மறுபடியும் மேயராக வருவதற்கு எல்லா கட்சிகளின் ஆலோசனையின் பேரில், அந்த முறை மேற்கொள்ளப்பட்டது. மூன்று ஆண்டுகாலம் மேயர் நீடித்து இருக்கவேண்டுமென்று திரு. தங்கமணி அவர்கள் குறிப்பிட்டார்கள். எந்த ஒரு மாநகராட்சி மன்றத்திலும் ஒரு ஆண்டுக்கு மேல் மேயர் பதவி காலம் வைக்கப் படவில்லை. எல்லா மாநிலங்களிலும் ஒரு ஆண்டு காலம்தான் வைக்கப்பட்டு இருக்கிறது. அதே முறையில் பல மாநகராட்சி மன்றங்களில், அதாவது, ஆக்ரா. அகமதாபாத், பெங்களூர், கல்கத்தா, சந்தர்நாகூர், டெல்லி, ஹைதராபாத், இன்டோர், ஜபல்பூர், கான்பூர், லக்னோ, நாக்பூர், கிரேடர் பாம்பே, ஆகிய இடங்களில் மேயர் பதவி காலம் ஒரு ஆண்டுதான் இருக்கிறது. ஹூப்ளி, தார்வார், ஆகிய இடங்களில் இரண்டு ஆண்டுகாலம் இருக்கிறார்கள். அரசாங்கம் பார்த்துகூட நியமிக்கலாம் என்று விதி இருக்கிறது. ஆகவேதான் இந்த முறை பின்பற்றப்படுகிறது.

அடுத்தபடியாக 3 ஆண்டுகாலமாக இருக்கும் உறுப்பினர்களின் பதவிக் காலத்தை 5 ஆண்டுகாலமாக ஆக்கலாம் என்ற கருத்தை உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்கள். இப்போது, ஊராட்சி மன்றங்களைப் பொறுத்த வரையில் 5 ஆண்டுகாலம் இருக்கும் முறை மேற்கொள்ளப்பட்டு இருக்கிறது. நகராட்சியைப் பொறுத்தவரையில் 5 ஆண்டுகாலம் ஆக்குவதை அரசு பரிசீலனை செய்துகொண்டு





இருக்கிறது. அந்தக்கருத்தோடு, மாநகராட்சி மன்றங்களுக்கும் சேர்த்து பரிசீலிக்கலாம். அது குறித்து ஒரு முடிவிற்கு வருகிற போது, அந்தப்பிரச்னையை எடுத்துக்கொள்ளலாம், ஆகவே அது வரை இந்த 3 ஆண்டுகாலமே இருக்கலாம் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

சொத்து வரியைப் பற்றிச் சொன்னார்கள். ப்ரொபெஷன் டாக்ஸ் 15 சதவீதத்திலிருந்து 35 சதவீதம் வரை போகலாம் என்று சொல்கிறோம். வரி போடுவது தேவைகளை யொட்டித்தான். சாதாரணமாக ஊராட்சி, நகராட்சி மன்றங்கள் எந்த வரியை நம்பி வாழ்கின்றன என்றால், சொத்து வரியைத்தான், தேவைகளை ஒட்டி, செலவினங்களை ஒட்டி, சொத்து வரியைக் கணிக்க வேண்டியதாக இருக்கிறது நகராட்சிகளில் தேவைகள் நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டிருக்கின்றன. அவற்றை நிறைவேற்ற அவர்களுக்கு வருவாய் அற்ற நிலையில் இருக்கிறார்கள்.

அம்மையார் குறிப்பிட்டார்கள் 1¼ கோடி செலவாகிறது ஒன்றே முக்கால் கோடி வருமானத்தில் என்று. ஆகவே ஒரு மார்ஜின் கொடுக்கலாம் என்று 35 சதவீதம் வரையில் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதனாலேயே 35 சதவீதம் போட்டுத் தீரவேண்டும் என்பதல்ல பொருள். அப்படிப்பட்ட அவசியமும் இல்லை. 17 சதவீதம் 20 சதவீதம், 25 சதவீதம் என்றிருக்கலாம். இப்பொழுது மதுரை 26 சதவீதம் அளவில் நின்று கொண்டிருக்கிறது. மக்களின் தன்மைகளை, மனப்பாங்கை ஒட்டி, அதை அறிந்து கொண்டு செய்வார்கள். உறுப்பினர்கள் இருக்கிறார்கள். அவர்கள் கருத்துக்களைச் சொல்வார்கள். அதைக் கொண்டு நிறைவேற்றுவார்கள். நாம் இடம் வசதி செய்து கொடுப்பதுதான். வரிகள் இவ்வளவு என்று நிர்ணயித்து விட்டால், வேண்டிய பணிகளை ஆற்ற முடியாத நிலை ஏற்படலாம். சிலபல நகராட்சி மன்றங்களுக்கு வருவாய் வாய்ப்பில்லாமல் இருக்கிறது. வருவாயைப் பெருக்குவதன் மூலம் வசதிகளைச் செய்து கொள்ளலாம். குறைந்த அளவில் வசதிகள் போதும் என்றால், 15 சதவீதம் என்றே வைக்கலாம். இதனால் கேடு எதுவும் ஏற்படாது என்பதை குறிப்பிட்டுக் கூற விரும்புகிறேன்.

மற்றொன்று. 12-வது பிரிவைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். பிரிவில் The Councils have powers to resolve to remove Commissioners என்றிருக்கிறது. ஏற்கெனவே இருந்து வருகின்ற திட்டங்களில், சென்னை மாநகராட்சியில் கடைப்பிடிக்கப்பட்டு வருவதே ஏற்றுக் கொள்ளப் பட்டிருக்கிறது. எந்தப் பிரிவு சென்னை மாநகராட்சி சம்பந்தமாக கையாளப்படுகிறதோ அதேதான் இங்கும் பின்பற்றப் பட்டிருக்கிறது. மதுரைக்கு என்று புதிதாகக் கொண்டு வரப்படவில்லை.

57-வது பிரிவு பற்றிச் சொன்னார்கள். முதலிலேயே குறிப்பிட்டேன்.

95 பற்றியும் குறிப்பிட்டார்கள். அதுவும் சென்னை மாநகராட்சியின் விதிமுறைகளைப் பின் பற்றித்தான் செய்யப் பட்டிருக்கிறது. ப்ரொவிஷன் 76-ஏ the Madras City Corporation Act, says "shall have powers to transfer any charitable institution to the Corporation".
என்றிருக்கிறது. சில சமயங்களில் சாரிடபிள் இன்ஸ்டிட்யூஷன்களை கார்ப்பொரேஷன் கீழே கொண்டு வந்து விடவேண்டிய அவசியம் இருக்கிறது. அதற்கு வசதி சென்னை மாநகராட்சியில் செய்யப்பட்டிருக்கிறது. மதுரையிலும் அது சேர்க்கப்பட்டிருக்கிறது.

'டாக்ஸ் ஆன் கம்பெனிஸ்' பற்றிக் குறிப்பிட்டார்கள். அதற்கு மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் விளக்கங்கள் கொடுத்தார்கள். அரசியல் சட்டத்திற்கு முன்னால் ஏற்பட்டதற்கு இது பொருந்தும். அரசியல் சட்டத்திற்குப் பிறகு நமக்கு உரிமையில்லை. போடவில்லை. உரிமை கொடுத்தால் நமக்கும் மகிழ்ச்சியாக இருக்கும். இப்பொழுது உரிமையில்லை. ஆகலால் சேர்க்கப் படவில்லை.

பில்க்ரிம் டாக்ஸ் பற்றிக் குறிப்பிட்டார்கள்.
There is already provision for a pilgrim tax in Clause 163.
ஆகவே அதற்கும் வசதி செய்யப்பட்டிருக்கிறது.

எம்.எல்.ஏ.-கள் சேர்த்துக் கொள்ளப் படவேண்டும் என்றார்கள். அம்மையார் அது பற்றிக் குறிப்பிட்டார்கள். அது தனியாக பரிசீலிக்கப் படவேண்டிய ஒன்று. அதில் இருக்கும் சாதக பாதகங்களை (திருமதி அனந்தநாயகி : சாதகம் தான்!) ஆராய்ந்து பார்த்து முடிவு எடுக்க வேண்டிய, ஆலோசிக்கப் படவேண்டிய ஒன்று.

வோட்டர்ஸ் லிஸ்ட் பற்றிச் சொன்னார்கள். பாராளுமன்றத்திற்கும், சட்ட மன்றங்களுக்கும் தேர்தல் நடத்துவதை கமிஷன் ஏற்றுக் கொண்டிருப்பதால், லிஸ்டை திருத்தும்படிக் கேட்கிறார்கள். மாநகராட்சிக்கும், நகராட்சிகளுக்கும் தேர்தல் வரும்போது நாம் திருத்த வேண்டியதாக இருக்கிறது. ஒரு பொதுவான சட்ட திட்டங்களைச் செய்து எந்த அளவுக்கு நிலைமைகளை ஒருமைப் படுத்தலாம் என்பதை ஆராய்ந்து, ஆண்டுக்காண்டு கணக்கெடுத்துச் செய்தால் நலமாக இருக்கும். அப்படிப் பட்ட ஒருமுகமான லிஸ்டை பின்பற்றுவது என்று ஏற்பட்டால் சிறந்ததாக இருக்கும். இப்பொழுது இருக்கும் முறையில் பல சங்கடங்கள் இருக்கின்றன. பொதுத் தேர்தல் நடந்தபோது கூட பல சங்கடங்கள் ஏற்பட்டன. பொது லிஸ்டாக இருந்தால், எல்லோருக்கும், வாக்காளருக்கும், வேட்பாளருக்கும், அத்தனை பேருக்கும் வசதியாக அமையும். ஒரு தேர்தலில் இருந்த பெயர்கள் மற்ற தேர்தலில் இல்லை என்கிற குறைபாடுகள் ஏற்படாமல் இருக்கும். இதையெல்லாம் அரசாங்கம் பரிசீலித்து சரிப்படுத்த, செம்மைப்படுத்த சட்டதிட்டங்களைத் திருத்த நாம் இந்திய சர்க்காருக்கு பரிந்துரைகள் செய்யலாம். அந்த முறையில் செய்வார்கள்.





இங்கே உறுப்பினர்களால் குறிப்பிடப்பட்ட முறையில் மாறுதல்கள், திருத்தங்கள் வேண்டியது இருந்தால், திருத்தங்கள் செய்ய வழிவகைகள் இருக்கின்றன. சென்னை மாநகராட்சிச் சட்டத்தை ஒட்டி, மதுரை மாநகராட்சிச் சட்டத்திலும் திருத்தங்கள் செய்யலாம். மதுரை மாநகராட்சிச் சட்டத்தில் செய்யப்படும் திருத்தத்தை ஒட்டி சென்னைச் சட்டத்திலும் செய்து கொள்ளலாம். இந்த முறையில். இந்த மசோதாவை நிறைவேற்றித்தரவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். எப்பொழுதும் திருத்தம் கொண்டு வந்து நிறைவேற்றிக் கொள்ள வாய்ப்பும் வசதியும் இருக்கின்றன.

மதுரை மாநகராட்சிச் சட்டத்திலேயே, 38(2) பிரிவில் "No official correspondence between the Corporation and the Government shall be conducted except through the Mayor".
என்றுதான் இருக்கிறது. ஆகவே, மேயர் மூலந்தான் கடிதப் போக்கு வரத்து நடக்கவேண்டும் என்று இருக்கிறது.

THIRU K. M. SUBRAMANIAM : How is election to the standing Committees going to be conducted—whether by proportional representation or by simple majority? I raised that point.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** நிலைக் குழுக்களுக்கு ஒற்றை மாற்று ஓட்டு முறையில் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர், 'ப்ரபோர்ஷனல் ரெப்ரஸெண்டேஷன்', கோருகிறார்கள். ஏற்கனவே இருப்பது குழு பார்த்துத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்பது. அந்த முறையில் கவுன்சிலே பார்த்து தேர்ந்தெடுக்க வேண்டும் என்று விதி சேர்க்கப் பட்டிருக்கிறது. சென்னை மாநகராட்சியில் நிலைக் குழுக்கள் இருந்த போது இருந்த முறை வைக்கப் பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் கூறுவதுபோல், மாநகராட்சி, நகராட்சி மன்றங்களில் கட்சிகள் என்பதை எதிர்பார்க்கவில்லை. கட்சிகள் என்பது சட்ட மன்றம், பாராளுமன்றம் இவற்றில்தான். ஆளும் கட்சி என்றும், எதிர்க் கட்சியென்றும் இருக்கின்றன. அங்கேயெல்லாம் அப்படிக் கட்சி வேறுபாடுகள் வைக்கப் படவில்லை. சட்டங்களில் கூட அப்படி இல்லை. ஆனால் நாமாகப் பார்த்து, ஆளும் கட்சி, எதிர்க் கட்சி என்று பிரித்து வைத்துக் கொண்டிருக்கிறோம். அப்படிப் பட்ட பிரிவினைகளுக்கு சட்டங்களில் இடம் இல்லை. ஒரே கவுன்சில் என்ற நோக்கத்தின் அடிப்படையில் தேர்தல் குழுக்கள், சென்னையில் முன்பு இருந்த அடிப்படையில் அமைக்கப்பட்டிருக்கின்றன.

THIRU K. M. SUBRAMANIAM : Though it is not expected that there should be party distinctions in the Council, in actual practice so far as the Corporation of Madras is concerned, there are definite party limitation or sections in almost all the Committees that are formed. I do not think there is any opposition member elected. Wherever there is election, the D.M.K. Party has not condescended to elect even one Congress member from the opposition to my knowledge. I am bringing this to your notice.

[1971 ஜூன் 28

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, பெரும்பாலான பணிகளில் எல்லோரும் ஒத்துப்போகும் சூழ்நிலைகள். மனப்பான்மை இவற்றின் அடிப்படையில், எல்லாத் தரத்தினரும் வரவேண்டும் என்று முறை கையாளப்படுகிறது. வெளிநாடுகளுக்குப் போவதில் கூட எல்லோரும் ஒன்றாக இணையும்படி, விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை ஏற்படும் வகையில்தான் செய்யப்படுகிறது. சங்கடங்கள் ஏற்படும் சூழ்நிலைகள் ஏற்பட்டால், திருத்தங்கள் கொண்டுவரலாம். ஆகவே, இப்பொழுது இந்த மசோதாவை நிறைவேற்றித் தரவேண்டும் என்று அவையைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

MR. DEPUTY SPEAKER : I hope the House gives permission to extend the sitting till the Bill is passed.

DR. H. V. HANDE : I am pressing my amendment.

MR. DEPUTY SPEAKER : The question is :

"That the Madurai City Municipality Corporation Bill 1971 be referred to a Joint Select Committee consisting (L.A. Bill No. 10 of 1971) of . . . Members of both the Houses (Names to be furnished later)".

The amendment was put and lost.

THIRU K. T. K. THANGAMANI : I am pressing my amendment.

MR. DEPUTY SPEAKER : The question is :

"That the Madurai City Municipal Corporation Bill, 1971 (L.A. Bill No. 10 of 1971) be circulated for eliciting public opinion to be returned before the end of July 1971 ".

The amendment was put and lost.

MR. DEPUTY SPEAKER : The question is :

"That the Madurai City Municipal Corporation Bill, 1971 (L.A. Bill No. 10 of 1971) be taken into consideration. "

The motion was put and carried, and the Bill was taken for consideration clause-by-clause.

THIRU K. T. K. THANGAMANI : May I make a submission? The clause-by-clause consideration may be taken up the next day when Bills are considered.

MR. DEPUTY SPEAKER : We have got only five amendments. We can finish the Bill today itself.

THIRU K. T. K. THANGAMANI : If this Bill is taken up on the 12th July, then there is a likelihood of more amendments being given notice of. There is the third reading and some members would like to speak. Hence, one more hour may be required for finishing the Bill.



1971 ஜூன் 28]

## CLAUSE 2

MR. DEPUTY SPEAKER : The question is :

" That Clause 2 do stand part of the Bill ".

THIRU K. T. K. THANGAMANI : Sir, I move my amendment :

In clause 2, *add* the following as item (45) :

" (45) ' Local area' means an area in the vicinity of the City of Madurai within a radius of 15 miles. "

The amendment was duly seconded.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : துணைத் தலைவரவர்களே நான் முதலில் கூறியபடி சேர்த்துக்கொள்ளப்பட விதி தனியாக இருக்கிற காரணத்தால் 15 மைல் என்று வரையறை செய்யாமல் இருப்பது நல்லது. ஆகவே 'மெட்ரோபாலிடன் சிடி' என்று வரும்போது விரிவுபடுத்தும் சூழ்நிலை ஏற்படும். அப்போது சேர்த்துக் கொள்வதற்கு வழிவகை இருக்கிறது என்பதை தெரிவித்துக் கொண்டு இந்த திருத்தத்திற்கு அவசியமில்லை என்று கூறிக்கொள்கிறேன்.

THIRU K. T. K. THANGAMANI : I am not pressing my amendment.

The amendment was, by leave, withdrawn.

Clause 2 was put and carried.

Clauses 3 to 6 were put and carried.

Clause 7

THIRU K. M. SUBRAMANIAN : Mr. Deputy Speaker, Sir, I am not moving my amendment because I do not think there is any use in pressing my amendment, as it has already been decided by the Government.

Clause 7 was put and carried.

THIRU K. T. K. THANGAMANI : When an amendment is before the House, the hon. Member should get the leave of the House to withdraw.

MR. DEPUTY SPEAKER : The hon. Member did not move his amendment at all.

Clauses 8 to 29 were put and carried.

## CLAUSE 30

MR. SPEAKER : The question is :

" That Clause 30 do stand part of the Bill ".

THIRU K. T. K. THANGAMANI : I move my amendment given notice of to Clause 30.

"In clause 30, for the words 'one years' *substitute* the words 'three years'."

My amendment seeks to increase the term of office of Mayor and Deputy Mayor to three years, instead of one year.

The amendment was duly seconded.

*மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :* துணைத் தலைவரவர்களே நான் முதலில் குறிப்பிட்டபடி சென்னை மாநகராட்சி மன்றத்தில் ஓராண்டுக் காலம என்று இருக்கிறது. சென்னையில் கடைப்பிடிக்கப்பட்டு வரும் முறையை மதுரையிலும் கடைப்பிடிப்பது நடைமுறைக்கு ஒத்ததாக இருக்கும். வேறு மாறுதல் தேவையானால் பிறகு ஏற்படுத்திக் கொள்ளலாம்.

THIRU K. T. K. THANGAMANI : I am not pressing my amendment.

The amendment was, by leave, withdrawn.

Clause 30 was put and carried.

Clauses 31 to 54 were put and carried.

## CLAUSE 55.

MR. DEPUTY SPEAKER : The question is :

"That clause 55 do stand part of the Bill".

THIRU K. T. K. THANGAMANI : Sir, I am moving my amendment to Clause 55 :

"In line 17 of sub-clause (2) of Clause 55, delete the words, 'or the Corporation or any other body corporate', owned or controlled by the Central or any State Government".

The amendment was duly seconded.

THIRU K. T. K. THANGAMANI : I have already explained in the course of the first reading that this kind of disqualifying people who are members of quasi-Governmental bodies will cause very great hardship.

சாதாரணமாக, ஏற்கெனவே உறுப்பினராக இருப்பவர்கள் கூட 'க்வாஸீ-கவர்ன்மெண்ட் பாடி' உறுப்பினராகிவிட்டால் இதன் மூலம் தொடர முடியாது என்று சிக்கல் ஏற்படும் நிலைமையினால் தான் நான் இந்த திருத்தத்தைக் கொண்டு வந்தேன். அதில் ஆட்சேபனை இருக்காது என்று நினைத்தேன். ஆட்சேபனை இருக்குமென்று சொன்னால் அதை நான் வற்புறுத்த விரும்பவில்லை. ஆனால் இது மிகவும் முக்கியமான திருத்தம் என்பது என்னுடைய கருத்து. ஏனென்றால் இப்போது புதிதாக 'ஜெனரல் இன்ஷ்யூரன்ஸ்' இருக்கிறது என்று வைத்துக்கொள்ளுங்கள். இன்றைக்கு யாருமே—





ஒருவர் கார்ப்பரேஷன் உறுப்பினராக இருந்தாலும்—ஜெனரல் இன்ஷ்யூரன்சை அரசு தேசிய மயமாக்கி விட்டது என்று வைத்துக் கொள்ளுங்கள்—அப்படியானால் இப்போது உறுப்பினராக இருந்தவர் தொடர்ந்து அதில் உறுப்பினராக இருக்க முடியுமா என்ற ஐயப்பாடு ஏற்படுகிறது. அப்படிப்பட்டவர்களுக்கு பாதுகாப்பு வேண்டும் என்ற காரணத்தால்தான் இந்த திருத்தத்தை கொண்டு வந்தேன். குறிப்பாக, சிலர் பாதிக்கப்படுவார்கள் என்ற அச்சம் எனக்கு இருக்கிறது. அந்தக் காரணத்தால் இத்திருத்தம் கொண்டு வந்தேன் என்று மீண்டும் சொல்ல ஆசைப்படுகிறேன்.

*மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :* துணைத் தலைவரவர்களே. இந்த விதி முறை—கிளாஸ் 55 (2)—

"No servant of the Central or any State Government or the Corporation or any other body corporate, owned or controlled by the Central or any State Government shall stand for election to the House of Parliament or State Legislatures" என்ற Representation of People's Act, 1951 அதே விதி முறையைப் பின்பற்றிதான் வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது போல் ஏற்கெனவே தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு பாதகம் ஏற்பட்டால் அதற்கு விதிவிலக்கு ஏற்படுத்தி ஏற்றுக் கொள்ள வழிவகை செய்யலாம்.

THIRU K. T. K. THANGAMANI : I am not pressing my amendment.

The amendment was, by leave, withdrawn.

Clause 55 was put and carried.

## CLAUSE 56

MR. DEPUTY SPEAKER : The question is :

"That clause 56 do stand part of the Bill"

THIRU K. T. K. THANGAMANI : I move my amendment namely deletion of Clause 56 (2) (e) :

"In sub-clause (2) delete item (e), namely, a representative or officer of any Association or Union representing or purporting to represent any section of the Corporation establishment or any class of employees of the Corporation'."

The amendment was duly seconded.

திரு. கே. டி. கே. தங்கமணி : துணைத் தலைவர் அவர்களே—என் முக்கியமான கருத்து என்னவென்றால் கார்ப்பரேஷன் உறுப்பினராக இருப்பவர்கள், கார்ப்பரேஷன் சம்பந்தப்பட்ட பிற எந்த ஸ்தாபனங்களிலும் தலைவராக அல்லது உறுப்பினராக இருக்கக் கூடாது என்பது. உதாரணமாக கார்ப்பரேஷன் தொழிலாளர் சங்கம் இருக்கிறதென்றால் அந்தச் சங்கத்தில் தலைவராக அல்லது செயலாளராக இருப்பதற்கோ வேறு எந்த வகையிலும்

பணியாற்றவோ தடை செய்கிறது. சாதாரண நகர சபையில் இருப்பவர்களுக்கு இவ்வாய்ப்புகள் அனுமதிக்கப்பட்டிருக்கின்றன. அதன் நிலை உயர்ந்து கார்ப்பரேஷன் ஆனவுடன் ஏன் இது மறுக்கப் படுகிறது என்று புரியவில்லை. ஏற்கெனவே சென்னையில் அப்படி இருந்தாலும், இப்போது உள்ள இந்த திருத்தத்தைக் கொண்டு வருவது ஒரு வகையில் நன்மையாக உதவியாக இருக்குமென்ப தால்தான் இந்த திருத்தத்தைக் கொண்டு வந்தேன் என்று சொல்லி, மீண்டும் ஒரு முறை இதை அரசு கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, திருத்தத்தை பிரேரேபிக்கிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே ஏற்கெனவே கொண்டுவந்த கொள்கையைப் பின்பற்றி இதை மாறுதல் செய்கின்ற நிலைமை வருகிறபோது, இதிலும் மாறுதல் செய்யலாம்.

The amendment was, by leave, withdrawn.

Clause 56 was put and carried.

Clauses 57 to 60 were put and carried.

## CLAUSE 61.

MR. DEPUTY SPEAKER : The question is :

'That clause 61 do stand part of the Bill'.

THIRU K. T. K. THANGAMANI : Sir, I move the following amendment :—

"In clause 61. for the words 'three years' substitute the words 'five years'."

The purpose of the amendment is to extend the life of the Council from three years to five years.

The amendment was duly seconded.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** இதுவும் நான் ஏற்கனவே குறிப் பிட்டு இருக்கின்றேன். சாதாரண நகரசபை உறுப்பினர்கள், பஞ்சாயத்து உறுப்பினர்கள், பஞ்சாயத்து ஒன்றிய உறுப்பினர்கள், சட்டசபை உறுப்பினர்கள் எல்லோருக்கும் 5 ஆண்டுக் காலம் என்று இருக்கிறபோது, ஏன் இந்த கார்ப்பரேஷனில் இருப்பவர் களுக்கு மட்டும் 3 வருஷம் இருக்க வேண்டுமென்று புரியவில்லை. 5 ஆண்டுகளுக்கு ஒரு தடவை தேர்தல் என்ற அமைப்பு ஏற் பட்டிருக்கிறபோது, அதே மாதிரி மதுரை கார்ப்பரேஷனுக்கும் கொண்டு வரவேண்டுமென்று, 5 ஆண்டுக் காலம் என்று திருத்த வேண்டுமென்று சொல்லி, இந்தத் திருத்தத்தை நான் மீண்டும் வலியுறுத்துகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே. நான் முதலில் கூறியபடி, நகராட்சி, சட்ட மன்ற உறுப்பினர் களுக்கு பதவிக் காலம் 5 ஆண்டு என்று எப்படி இருக்கிறதோ அதை ஒட்டி, மாநகராட்சியிலும் 5 ஆண்டுக் காலம் என்ற கருத்து



பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளலாம். நகராட்சிக் காலத்தை 5 ஆண்டு ஆக்க வேண்டும் என்ற கருத்து எங்கள் பரிசீலனையில் இருக்கிற காரணத்தால், அதை ஒட்டி இதையும் எடுத்துக் கொண்டோம் என்ற காரணத்தால், உறுப்பினர் இதை வலியுறுத்த வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

The amendment was, by leave withdrawn.

Clause 61 was put and carried.

Clauses 62 to 512 were put and carried.

Schedules I to VII were put and carried.

Clause 1, and the Preamble and the Long Title were put and carried.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே! "1971-ம் ஆண்டு மதுரை மாநகராட்சி சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண். 10/1971) சட்டமாக நிறைவேற்றப் படவேண்டும்" என முன்மொழிகிறேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** ஏற்கனவே நான் குறிப்பிட்ட படி இந்த மசோதாவைக் கொண்டுவந்து நிறைவேற்ற வேண்டும் என்கிற அவசரத்தில் நீங்கள் தவறு எதும் செய்யக்கூடாது. சென்னைக் கார்ப்பரேஷனில் இருக்கக் கூடிய முறை அப்படியே மதுரையிலும் இருக்க வேண்டும். நீங்கள் திருத்திக் கொள்வதற்கு இன்னும் அவகாசம் இருக்கிறது. அடுத்த சபைக் கூட்டத்திலா வது சில திருத்தங்களைக் கொண்டு வருவீர்கள் என்று நான் நம்பு கிறேன். அப்படிக் கொண்டு வருவதன் மூலம் சென்னையில் கிடைக்கும் அனுபவம் மதுரைக்கும் கிடைக்கும். இன்றைக்கு மதுரை மக்கள் எதை விரும்புகிறார்களோ அதை அமல் நடத்து வதற்கு உதவியாய் இருக்கும் என்று சொல்ல விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே! சூழ்நிலைக்கு ஏற்ப சிந்தித்து, இதற்கான சில திருத்தங்கள் செய்யப் படும். அப்படிச் செய்கின்ற நேரத்தில், மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்த கருத்துக்களை மனதில் கொண்டு தக்கபடி திருத்தங் களைக் கொண்டு வரலாம் என்று நினைக்கிறேன்.

MR. DEPUTY SPEAKER : The question is :

'That the Madurai City Municipal Corporation Bill, 1971 (L.A. Bill No. 10 of 1971) be passed.'

The motion was put and carried and the Bill was passed into law.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இத்துடன் இந்தப் பேரவையின் இன்றைய அலுவல்கள் முடிவுற்றன. நாளைக் காலை 9 மணி அளவில் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை ஒத்திவைக்கப்பட்டது.

## 6. பேரவையின் முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. *Statutory Rules and Orders.*

114. Notification issued with Roc. No. 187084/69-P1, dated the 19th December 1969, in regard to exclusion of certain areas from the existing Kandrakottai Panchayat in Cuddalore taluk of South Arcot district for the constitution of a separate panchayat by the said Notification. [Laid on the Table of the House under section 179 (4) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act 23 of 1959).]

115. Notification issued with G.O. Ms. No. 1370, Revenue, dated the 6th May 1970, in regard to certain amendments to the Rules framed under the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1959. [Laid on the Table of the House under section 116 (3) of the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1959 (Tamil Nadu Act, 22 of 1959).]

116. Notification issued with Roc. No. 188409/69-E3, dated the 11th Feburary 1970, in regard to extension of certain provisions of the Tamil Nadu District Municipalities Act, 1920 in the entire area of Vedasandur Town Panchayat. [Laid on the Table of the House under section 179 (4) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

117. Notification issued with Roc. No. 22265/70-P1, dated the 25th February 1970, in regard to exclusion of certain areas from the existing Koduvilarpatti Panchayat in Periakulam taluk of Madurai district for constitution into a separate panchayat by name "Nagalapuram". [Laid on the Table of the House under section 179 (4) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

118. Notification issued with Roc. No. 140036/69-PI, dated the 3rd December 1969, in regard to exclusion of certain areas from the existing Vadathoor panchayat in Tiruvallur taluk of Chingleput district for constitution into a separate panchayat by name "Koyambakkam". [Laid on the Table of the House under section 179 (4) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958,.]

119. Notification issued with G.O. Ms. No. 786, Public (Election IV), dated the 18th March 1971, in regard to certain amendment to the rules for the use and maintenance of Government Cars allotted to the Ministers, the Speaker, Legislative Assembly and the Chairman, Legislative Council. [Laid on the Table of the House under section 14 (3) of the Tamil Nadu Payment of Salaries Act, 1951 (Tamil Nadu Act XX of 1954).]

120. Notification issude with Roc. No. 136406/69-P2, dated the 3rd December 1969, in regard to exclusion of certain areas from the existing Padirenkottai village panchayat in Orathanad taluk of Thanjavur district for constitution into a separate panchayat



by name "Padirenkottai South". [Laid on the Table of the House under section 14 (3) of the Tamil Nadu Payment of Salaries Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

### B. *Reports, Notifications and Other Papers.*

65. Notification issued with G.O. Ms. No. 14, Labour, dated the 7th January 1971, in regard to certain amendments to the minimum wages (Tamil Nadu) Rules, 1953.

@ 66. The Madurai City Municipal Corporation Bill, 1971 (L.A. Bill No. 10 of 1971).

---

@ Despatched to Members on 25th June 1971

ஊராட்சி ஒன்றிய நிதி விசாரணைக் குழு தனது அறிக்கையை சமர்ப்பித்திருக்கிறது.

(ஆ) ஆம்.

(இ) விரைவில்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** தலைவர் அவர்களே, இந்த அறிக்கையானது சபையில் சமர்ப்பிக்கப்பட்டு, அதன்பேரில் விவாதத்தைத் துவக்க அரசு வகை செய்யுமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே. அறிக்கை அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது. விரைவில் அது அவைமுன் வைக்கப்படும். அதற்குப்பிறகு அதன்மீது விவாதம் வைத்துக்கொள்ளலாமா அல்லது அது பற்றிய மானியக் கோரிக்கை வருகிறபோது அதுபற்றிய கருத்துக்களை விவாதிக்கலாமா என்பதுபற்றி முடிவு செய்யலாம்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவர் அவர்களே, இப்பொழுது பல பஞ்சாயத்துக்கள், நிதிப் பற்றுக்குறை காரணமாக, ஆசிரியர்களுக்குச் சம்பளம் கூட கொடுக்க முடியாது மிகவும் அவல நிலையில் இருக்கின்றன. அரசாங்கத்திடமிருந்து கிடைக்கும் கிராண்டை வைத்துத்தான் அவர்கள் கொடுக்க வேண்டிய நிலைமை இருக்கிறது. ஆதலால், இதைத் தவிர்க்க என்ன என்ன நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள இருக்கிறது, இந்தக் கமிட்டியின் பரிந்துரையின் பேரிலே?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியங்களுக்கு நிதி வசதிகள் இருக்க வேண்டும் என்பதற்காகச் சிலபல பரிந்துரைகளை அவர்கள் வழங்கியிருக்கிறார்கள். அது அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது. அந்த அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிற முக்கியமான பரிந்துரைகளாவன :

(1) தொடக்கக் கல்வியின் பயனை ஏற்று நடைமுறைப் படுத்தும் பொறுப்பு ஊராட்சியிடமும் தொடர்ந்து இருக்க வேண்டும்;

(2) தொடக்கக் கல்விக்காக ஊராட்சிகளின் செலவினத்தின் வரம்பு தலைக்கு ரூ. 17 என்று இருக்க வேண்டும் ;

(3) தொடக்கக் கல்விக்காக ஊராட்சி ஒன்றியங்களுக்கு அளிக்கும் அரசு மானியம் மக்கட்தொகை அடிப்படையில் கொடுக்கப்பட வேண்டும் ;

(4) தொடக்கக் கல்விக்காக அரசு அளிக்கும் மானியம் தலைக்கு ரூ. 6 என்ற அடிப்படையில் கொடுக்கப்பட வேண்டும் ;

(5) ஊராட்சி ஒன்றியங்களால் வசூலிக்கப்படும் லோகல் சர்சார்ஜ் வீதத்தை நிர்ணயிக்கும் உரிமையை அரசு எடுத்துக் கொள்ள வேண்டும் ;





(6) தொடக்கக் கல்வியின் செலவினத்திற்காக வீட்டு வரியின் மீது மிகு வரி ஒன்று விதிக்கலாம் ;

(7) மேற்படி செலவினத்திற்காக விற்பனைக்கு வரும் வணிகப் பொருள்களின்மீது வரியொன்று விதிக்கலாம் ;

(8) தொடக்கக் கல்வியின் மீதான செலவினத்தில் அரசு மானியம் ஈடுகட்டப்பட்டது போக, மீதமுள்ள செலவுத் தொகை அரசாலும், ஒன்றியங்களாலும் குறிக்கப்பட்ட சில விகிதங்களில் பகிர்ந்து கொள்ளப்பட வேண்டும்.

இவ்வாறு அவர்கள் பரிந்துரைகள் செய்திருக்கிறார்கள். இதிலே எவை சாத்தியமாக இருக்கக்கூடும், எவை நடைமுறைக்குக் கொண்டுவரப்படக்கூடும் என்பது பரிசீலனையில் இருக்கிறது. பரிசீலனைக்குப் பிறகு தக்க முடிவு எடுக்கப்படும்.

**திரு. கே. ஏ. வகாப் :** இப்பொழுது ஊராட்சிப் பகுதிகளில் வீட்டு வரி போன்றவைகளை மணியக்காரர்—கணக்கப்பிள்ளை வசூலித்து வருகிறார்கள். இதனால் சரியான முறையில் வசூலிக்கப்படுவதில்லை. ஆகவே, வரி வசூலிக்கும் அதிகாரத்தைக் கிராமத் தலைவர்களுக்கே அளிக்கும் உத்தேசம் ஏதாவது அரசுக்கு உண்டா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, மூலக்கேள்விக்கும் மாண்புமிகு உறுப்பினர் கேட்டிருக்கும் இந்தத் துணைக் கேள்விக்கும் தொடர்பு இல்லை. ஆனால், இப்பொழுது அந்த வரி வசூலைக் கிராம அதிகாரிகளேதான் செய்ய வேண்டும் என்று வருவாய்த் துறையில் வற்புறுத்தப்பட்டு வருகிறது.

**திரு. சி. கணேசன் :** ஊராட்சி ஒன்றியப் பொது நிதியை அதிகப்படுத்துவது பற்றி இந்தக் குழு ஆராய்கிறதா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே. இந்தக் குழு கல்வி மானியத்தைப் பொறுத்தும் கல்வி நிலையைப் பொறுத்தும் ஆராய்வதற்கு மட்டுமே அமைக்கப்பட்டது. ஆகவே, கல்வித் துறையை ஊராட்சி ஒன்றியங்களின் கீழ்க் கொண்டுவந்து, கல்வித் துறையை வளப்படுத்த என்னென்ன செய்யலாம் என்பதைப்பற்றிப் பரிந்துரை செய்திருக்கிறார்கள்.

**திரு. கே. என். குமாரசாமி :** தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியத்தின் வருவாயினைப் பெருக்குவதற்கு ரெவின்யூ துறை வருமானத்திலிருந்து ஒரு பகுதியை ஒதுக்க வேண்டும் என்று விசாரணைக்குழுவின் அறிக்கையில் பரிந்துரை செய்யப்பட்டுள்ளதா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, சில புதிய வரிகள்—சர்சார்ஜ்கள்—போடலாம் என்று அவர்கள் பரிந்துரை செய்திருக்கிறார்கள். அந்த சிபார்சுதான் இப்பொழுது பரிசீலனையில் இருந்து வருகிறது. ரெவின்யூ துறையில் ஒரு பகுதியை ஒதுக்க வேண்டும் என்று சிபார்சு செய்யவில்லை.

# தமிழ் நாடு சட்டப் பேரவை

செவ்வாய்க்கிழமை, 1971 ஜூன் 29.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

## 1. நீத்தார் நினைவுக் குறிப்பு.

### முன்னாள் உறுப்பினர் திரு. எச். பி. அரி கௌடர் அவர்கள் மறைவு குறித்து

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : நீலகிரி பொதுத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு இப்பேரவையில் 1952-ம் ஆண்டு முதல் 1957-ம் ஆண்டு வரை உறுப்பினராக இருந்த திரு. எச். பி. அரி கௌடர் அவர்கள் தம் 78-ம் வயதில் 27—6—1971-ம் நாளன்று இரவு இயற்கை எய்திவிட்டார் என்பதைப் பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். அன்னாரது குடும்பத்தினருக்கு இப் பேரவையின் இரங்கலையும் ஆழ்ந்த வருத்தத்தையும் நான் தெரிவிக்கிறேன். மறைந்த உறுப்பினருக்கு நம் இரங்கலைத் தெரிவிக்கும் வகையில் உறுப்பினர்கள் அனைவரும் ஒரு நிமிடம் எழுந்து மவுனமாக நிற்கக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து ஒரு நிமிடம் மவுனமாக நின்றனர்.

## 2. வினாக்கள்-விடைகள்

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்

*Panchayat Unions Revenue Enquiry Committee.*

* 76 Q.—Dr. H. V. HANDE :
Thiru N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether the Committee which went into the scope for improving the revenue of Panchayat Unions has submitted its report;

(b) if so, whether a copy of the report or its recommendations will be placed on the Table of the House; and

(c) when a decision on the recommendations will be taken?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்** : (அ) தொடக்கக் கல்வியைப் பொறுத்தமட்டில் ஊராட்சி ஒன்றியங்களின் தற்போதைய பொருளாதார நிலைமையை அபிவிருத்தி செய்வதற்கான வழி வகைகளை ஆய்வு செய்து அறிவிக்கும்படி அமைக்கப்பட்ட

[1971 ஜூன் 29

THIRU K. S. KOTHANDARAMIAH : After the advent of the Panchayat Unions, the village panchayats have lost their importance and their financial position is very poor and miserable. May I know from the Hon. Minister for Education the steps he is going to take to improve the finances of village panchayats?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, பொதுவாக ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்களின் நிதி வாய்ப்புகளை வளர்க்க வேண்டும் என்ற ஒரு கருத்து இருந்து வருகிறது. அதற்காக எந்த எந்த வழிகளில் செய்யலாம் என்பது தனியாகப் பரிசீலிக்கப்பட்டு வருகிறது. இது ஊராட்சி ஒன்றியங்களின்கீழ் இயங்குகிறது. கல்வித் துறையை எப்படிச் செம்மைப் படுத்துவது, செயல்படுத்துவது என்பதுபற்றி இது ஆராய்ந்தது. கல்வித் துறைக்குத் தேவையான அளவுக்குப் பண வசதி இல்லாத தன் காரணமாகப் பல ஊராட்சி ஒன்றியங்களில் குறிப்பிட்ட முதல் நாளை ஆசிரியர்களுக்குச் சம்பளம் கொடுக்காத நிலை ஏற்பட்டிருக்கிறது. அரசு 85% தந்தாலும் மீதமுள்ள 15% கூடத் தர முடியாத அளவுக்கு சில ஊராட்சி ஒன்றியங்கள் விளங்குகின்றன. அதைப் பொறுத்து ஊராட்சி, ஊராட்சி ஒன்றியங்களின் நிதி வசதியைப் பெருக்க வேண்டும் என்ற கருத்து நிலவி வருகிறது. ஊராட்சி, ஊராட்சி ஒன்றியங்கள் ஏற்று நடத்த வேண்டிய பணிகள் ஏராளமாக இருப்பதாலும், நாளுக்கு நாள் தேவைகள் அதிகமாக வளர்ந்துகொண்டு வந்திருப்பதாலும் வருவாயினைப் பெருக்க வேண்டும் என்ற கோரிக்கை எல்லா இடங்களிலிருந்தும் வந்துகொண்டிருக்கின்றன. அரசு அதைத் தனியாக ஆராய்ந்து கொண்டிருக்கிறது. அதுபற்றி நடவடிக்கை தனியாக எடுக்கப்பட வேண்டும்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** ஊராட்சி ஒன்றியங்களில் பணியாற்றக்கூடிய ஆரம்ப ஆசிரியர்களுக்கு 85% வரையில் அரசு கொடுக்கிறது என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். அப்படியானால், சில பள்ளிகளில் எந்தவிதமான ஊதியமும் கொடுப்பதில்லை. 85 சதவீதத்தையாவது 1-ம் தேதி ஆசிரியர்களுக்குக் கொடுக்கும்படியாக அரசு உத்தரவிடுமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, எந்த எந்த ஒன்றியங்களில் சம்பளம் கொடுக்கப்படவில்லை என்று கூறப்படுகிறதோ அந்த அந்த ஒன்றியங்களினுடைய குறைபாடுகளைத் தீர்க்க அவ்வப்போது தக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. அவர்களுக்குக் கொடுக்கும் பிளாக் கிராண்டை வேறு இனத்திற்குச் செலவழித்துக் கொண்டிருக்கக்கூடும். இனிமேல் கல்விக்கென்று ஒதுக்கும் தொகையைக் கல்விக்காக மட்டுமே செலவழிக்க வேண்டும், வேறு துறைக்கு மாற்றக்கூடாது என்ற உத்தரவை அரசு வெளியிட்டிருக்கிறது. எந்த எந்த ஊராட்சி ஒன்றியங்களில் இப்படிப்பட்ட இக்கட்டான நிலை ஏற்படுகின்றதோ அதைக் தடுக்க அவ்வப்போது தக்க நடவடிக்கையை அரசு மேற்கொள்ளுகிறது.



1971 ஜூன் 29]

**திரு. வா. மை. அப்துல் ஜப்பார் :** வறட்சிப் பகுதிகளில் சில ஊராட்சி ஒன்றியங்களில் போதுமான வருவாய் இல்லாமல் தங்களுடைய ஆக்கப் பணிகளைச் சரிவர செய்ய முடியாமல் இருக்கின்றன. அப்படிப்பட்ட ஊராட்சி ஒன்றியங்களைத் தனியாகப் பிரித்து அரசு விசேஷ மானியம் கொடுக்கும் திட்டம் ஏதேனும் உண்டா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியங்களையெல்லாம் கூட்டாக தாங்களாகப் பிரித்துத்தான் அவற்றுக்கேற்றவாறு நிதி வசதி செய்து வருகிறது. அது போதுமான அளவு இல்லாத நிலையில் சில ஊராட்சி ஒன்றியங்களுக்கு நிதி வசதிகளை எப்படிப் பெருக்கலாம், வரி இனத்தின் மூலமும் வரி இல்லாத இனத்தின் மூலமும் வருவாயை எப்படி எப்படிப் பெருக்கலாம் என்பதைப்பற்றிய கருத்துக்களைத்தான் நாம் பரிசீலிக்க வேண்டியதாக இருக்கிறது. அதைப் பரிசீலித்துத் தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்வதற்கு நாம் முயல வேண்டும். அது பற்றிய கருத்துக்கள் ஆராய்ச்சியில் இருந்து வருகின்றன.

**திரு. கே. என். குமாரசாமி :** தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியங்களின் வருமானத்திற்கு இந்தச் சந்தை, முக்கியமான வியாபார ஸ்தலங்கள் ஆகியவற்றில் இருந்து பணம் வசூலிக்க சட்டங்களில் விதி செய்யப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** ஊராட்சி ஒன்றியங்களின் நிதி வசதியைப் பெருக்க நாம் என்ன என்ன முறைகளை மேற்கொள்ளலாம் என்பது ஆராயப்படும்போது இந்த யோசனையையும் கவனத்தில் கொண்டு ஆராயலாம்.

**திரு. எம். சுரேந்திரன் :** ஊராட்சி ஒன்றியங்களில் பணிபுரிகிற ஆசிரியர்களுக்குக் கொடுக்கும் சம்பளத்தில் 85% அரசாங்கம் கொடுப்பதாகச் சொன்னார்கள். பாக்கி 15%-ஐயும் அரசாங்கமே ஒப்புக்கொண்டு நேரிடையாக அரசாங்கமே ஆசிரியர்களுக்குச் சம்பளம் கொடுக்கும் ஏற்பாட்டை மேற்கொள்வார்களா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** துவக்கப் பள்ளிகளை அரசாங்கமே ஏற்று நடத்த வேண்டுமென்ற கோரிக்கையும் அரசாங்கத்தின் முன் வைக்கப்பட்டிருக்கிறது. இப்போது அதன் பொறுப்பு ஊராட்சிகளிடம் இருக்கிறது. அதிக பொறுப்புகள் கொடுக்கப்பட வேண்டும் என்கிற நிலையில் இந்த உரிமையையும் பறித்துக் கொள்ளக்கூடாது என்கிற கருத்தும் வற்புறுத்தப்பட்டு வருகிறது. தொடக்கப் பள்ளிகளை ஏற்று நடத்தும் பொறுப்பு தொடர்ந்து ஊராட்சிகளிடமே இருக்க வேண்டும் என்ற கருத்தை இந்தக் குழுவினரும் வற்புறுத்தியிருக்கிறார்கள். ஆகவே, ஊராட்சிகளின் நிதிவசதியைப் பெருக்குவது என்பதில்தான் நாம் நாட்டம் கொண்டிருக்கிறோம், அரசு அதில் கவனம் செலுத்தி வருகிறது.

[1971 ஜூன் 29

## இசை வல்லுநர்களுக்குப் பரிசு.

***77 வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு கல்வி—உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தமிழ்நாட்டில் உள்ள சிறந்த இசை வல்லுநர்களுக்கு அரசாங்கத்தின் சார்பில் ஆண்டுதோறும் பரிசுகள் வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தமிழக அரசினால் நிறுவப்பட்டு, அதன் நிதி உதவியுடன் இயங்கி வரும், தமிழ்நாடு சங்கீத நாடக சங்கம், இசைக்கலை வல்லுநர்களுக்குப் பரிசு வழங்கும் திட்டம் ஒன்றை அமல் செய்து வருகிறது.

**திரு. என். கிட்டப்பா :** தலைவர் அவர்களே. சங்கீத நாடக சங்கம் சினிமாத்துறை, இசைத்துறை வல்லுநர்களுக்குப் பரிசு அளித்து வருவதாகச் சொன்னார்கள். கர்நாடக இசை வல்லுநர்களுக்கும் பரிசு வழங்கும் திட்டம் உண்டா? இசைக்கலை வல்லுநர்களாகிய கிட்டப்பா, தியாகராஜ பாகவதர், ராஜரத்தினம் போன்றவர்களுடைய குடும்பங்களுக்கு உதவித்தொகை வழங்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்** சங்கீத • நாடக சங்கத்தின் மூலமாக சிறந்த இசை வல்லுநர்கள், பாடல் ஆசிரியர்கள், ஆண்டுக்காண்டு தேர்ந்தெடுக்கப்பட்டு பரிசுகள் வழங்கப்படுகின்றன. யார் யாருக்குப் பரிசுகள் வழங்கலாம் என்பதற்கு சங்கீத நாடக சங்கம் அந்த அந்தத் துறையில் வல்லுநர்களாக இருக்கிறவர்களைத் தனித்தனி குழுக்களாகப் போடுகிறார்கள். இந்தக் குழுக்களின் சிபார்சை அவர்கள் முடிவில் பரிசீலனை செய்து ஆண்டுதோறும் பரிசுகளும், கலைமாமணி என்ற பட்டமும் வழங்கப்பட்டு வருகிறது. இதுவரை 40 பேர்கள் பரிசு பெற்றிருக்கிறார்கள். இசைத்துறையில் வல்லுநர்களாக இருந்து 58 வயதுக்கு மேற்பட்டவர்களாக வசதியற்று இருப்பவர்களுக்குப் பென்ஷன் வழங்க மத்திய அரசாங்கத்தின் உதவியுடனும், மாநில அரசாங்கத்தின் உதவியுடனும் சங்கம் உதவி வருகிறது. 50 ரூபாய், 75 ரூபாய் என்ற அளவில் பென்ஷன் உதவி அளிக்கிறது. இந்திய அரசு இதுவரை கொடுத்துவந்த உதவியைக் கூட இனி புதியதாக யாருக்கும் தாங்கள் கொடுக்க முடியாது என்று கூறிவிட்டார்கள். ஆகவே மாநில அரசு தற்போது ரூபாய் 2 லட்சம் ஒதுக்கியிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதுபோல கிட்டப்பா, ராஜரத்தினம் ஆகியவர்களின் குடும்பத்தினர் விண்ணப்பித்துக் கொண்டால் அவர்களுடைய மனுவும் ஆராயப்பட்டு, எந்த வகையில் உதவி செய்யலாம் என்பது பரிசீலிக்கப்படும்.

**திரு. பெ. மலைச்சாமி :** இந்தப் பரிசு வாய்ப்பாட்டுக்காரர்களுக்கு மட்டும் அளிக்கப்படுகிறதா? இசைக் கருவி வல்லுநர்களுக்கும் அளிக்கப்படுகிறதா?



1971 ஜூன் 29]

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** இசைத்துறையில் தலைசிறந்து நிற்கிற வீணை, பிடில், மிருதங்கம், கஞ்சிரா, புல்லாங்குழல்—வித்வான்களுக்கும் அளிக்கப்படுகிறது. அவர்கள் அந்த அந்தத் துறையில் வல்லுநர்களாக, புகழ் மிக்கவர்களாக, பல மாணவர்களை உருவாக்கிய பெருமை உடையவர்களாக, பெயரும், புகழும் பெற்ற வயது முதிர்ந்தவர்களாக இருக்க வேண்டும். முதல் ஆண்டு பரிசு பெற்றவருக்கு அடுத்த ஆண்டு கொடுப்பதில்லை.

**திரு. சோ. கருணைநாதன் :** தலைவர் அவர்களே, இத்திட்டத்தின் கீழ் சிறந்த இசை அமைப்பாளருக்கும், நடன ஆசிரியர்களுக்கும் பரிசு வழங்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** சிறந்த இசை வல்லுநர்களும், நடன ஆசிரியர்களும் பரிசு பெற்று வருகிறார்கள்.

**திரு. எம். சுரேந்திரன் :** இசை வல்லுநர்கள் என்ற வரிசையில் சினிமாத் துறையில் இருக்கிற டைரக்டர்களும் வருகிறார்களா? அப்படி என்றால் எம். எஸ். விஸ்வநாதன் போன்றவர்கள் இந்தப் பரிசுக்குத் தகுதி உடையவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறாரா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, இன்னின்னார் பரிசுத் பெறத் தகுதி உடையவர்கள் என்று குறிப்பிட்டேன். அந்தக் குழுவினர் யார் யாரைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள் என்கிற பெயர்ப் பட்டியல் என்னிடம் இல்லை. தனிக் கேள்வி போட்டால் அறிந்துசொல்கிறேன்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** இந்தமாதிரி பரிசு வழங்குகிற சமயத்தில் இதற்கு யார், யார் தேர்வுக் குழுவில் நியமனம் செய்யப்படுகிறார்கள்? எந்த அடிப்படையில் இந்தப் பரிசு கொடுக்கப்படுகிறது என்று விளக்குவார்களா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அதைத்தான் முன்பே சொன்னேன். சங்கீத நாடக சங்கத்தைச் சேர்ந்தவர்கள் துணைக் குழுக்களை நியமிக்கிறார்கள். அந்த அந்த இசைத் துறையைச் சேர்ந்தவர்கள் அந்தக் குழுக்களில் இடம் பெறுகிறார்கள். அவர்கள் அந்த அந்தத்துறையில் யார் யாருக்கு பரிசு அளிக்கலாம் என்பதை ஆராய்ந்து பரிந்துரைக்கிறார்கள். பொதுக்குழு உட்கார்ந்து மறுபடியும் தேர்ந்தெடுத்து பரிசு அளிக்கிறார்கள். கலைஞர்களே இந்தப் பரிசுக்குரிய கலைஞர்களைத் தேர்ந்தெடுப்பதால் இதில் இதுவரை எந்தக் குறைபாடும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை.

**திரு. கா. மு. கதிரவன் :** வில்லுப்பாட்டு வாசிக்கின்றவர்கள் இந்தப் பரிசுத் திட்டத்தின் கீழ் வருகிறார்களா என்று அறிய **விரும்புகிறேன்.**

[1971 ஜூன் 29

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** வில்லுப்பாட்டு வாசிக்கின்றவர்கள் விலக்கப்பட்டிருப்பதாகத் தெரியவில்லை. பரிசு பெற்றிருக்கிறார்களா என்கிற விவரம் என்னிடம் இல்லை. தனிக் கேள்வி வேண்டும்.

**திரு. மா. வெ. கரிவேங்கடம் :** தலைவர் அவர்களே, தாரை தப்பட்டை போன்ற வாத்தியக்காரர்கள் இதில் சேர்க்கப்பட்டிருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** கவின்கலைகள்—ஃபைன் ஆர்ட்ஸ் என்ற பிரிவின் கீழ் அவை வருவதில்லை. கவின் கலைகள் என்ற தலைப்பின் கீழ் வருபவைகள் தான் இதில் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** வில்லுப்பாட்டில் சிறந்த பிச்சைக் குட்டி என்பவர் காலமாகிவிட்டார். அவரது குடும்பத்திற்கு உதவித்தொகை அளிக்க அரசாங்கம் சிபார்சு செய்யுமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அவரது குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் சங்கீத நாடக சங்கத்திற்கு விண்ணப்பித்துக்கொண்டால் அதுபற்றி பரிசீலிப்பார்கள்.

**திரு. கே. ஏ. வகாப் :** தமிழ்நாட்டின் சிறந்த கலையாகிய தெருக்கூத்து, பொம்மலாட்டம் போன்றவைகள் அருகி வருகின்றன. அவற்றின் வளர்ச்சிக்கும் ஊக்கம் அளிக்க இந்தப் பரிசுத் திட்டத்தின் கீழ் அவர்கள் கொண்டுவரப்படுவார்களா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அந்தக் கலை வல்லுநர்களுக்கும் பரிசு வழங்குவதில் தடை இருக்காது என்று நினைக்கிறேன். சங்கீத நாடக சங்கத்தினர் அவர்களைப்பற்றி எல்லாம் ஆராய்ந்து முடிவு எடுக்கலாம்.

**திரு. ரா. ரா. முனுசாமி :** தலைவர் அவர்களே, இசைக் கலைஞர்களுக்குப் பரிசுகள் வழங்குகிறபோது, அதற்காக தமிழக அரசால் எவ்வளவு தொகை ஒதுக்கப்படுகிறது ? மத்திய அரசு எவ்வளவு தொகை ஒதுக்கித் தருகிறது ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, இந்தப் பரிசுகளின் முழுப் பொறுப்பையும் தமிழக அரசுதான் ஏற்றுக்கொண்டிருக்கிறது. பரிசு பெறுபவர்களுக்கு இரண்டு சவரன் பதக்கமும், 'கலாசிகாமணி' என்ற பட்டமும், ஒரு பட்டாடை போர்த்தலும் நடைபெறுகிறது.

**திண்டுக்கல் அரசினர் பெண்கள் கலைக்கல்லூரி.**

*** 78 வினா—திரு. ஓ. என். சுந்தரம் :** மாண்புமிகு கல்வி—உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) திண்டுக்கல் நகர் அரசினர் பெண்கள் கலைக் கல்லூரியை தற்போதுள்ள சந்தடி மிக்க இடத்திலிருந்து வேறு இடத்திற்கு மாற்றும் உத்தேசம் ஏதேனும் உண்டோ?



1971 ஜூன் 29]

(இ) ஆம் எனில், எந்த இடத்திற்கு, எப்போது மாற்றப்படும் ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) ஆம்.

(இ) கட்டிடம் கட்டியபின் கல்லூரி தற்போதுள்ள இடத்திலிருந்து குறும்பபட்டி கிராமத்திற்கு மாற்றப்படும்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவர் அவர்களே, இப்போது இருக்கின்ற இடம் அசௌகரியமாக இருக்கின்ற காரணத்தினால், துரிதமாக மாற்றுவதற்கு அரசாங்கம் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, இப்போது திண்டுக்கல் நகரின் மத்திய பகுதியில் தற்காலிகமான கட்டிடத்தில் இந்தப் பெண்கள் கலைக் கல்லூரி நடைபெற்றுக் கொண்டு வருகிறது. இப்போது கல்லூரி நடக்கிற இடத்திலிருந்து ஒரு மைல் தூரத்தில் உள்ள குறும்பபட்டி என்ற கிராமத்தில் கல்லூரிக்காக 40 ஏக்கர் நிலம் பெறப்பட்டிருக்கிறது. 'அங்கு விலாஸ்' உரிமையாளர் திரு. முத்தையாப்பிள்ளை அவர்கள் குமாரர் திரு. எம். அங்கமுத்து அவர்கள் இந்தக் கல்லூரிக்காக 40 ஏக்கர் நிலமும் ஒரு லட்சம் ரூபாயும் வழங்கியுள்ளார். 21—4—1971-ம் தேதியன்று நிலம் பதிவு செய்யப்பட்டது. இப்போது கட்டடம் கட்டும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. கட்டடம் கட்டி முடிக்கப்பட்ட பிறகு கல்லூரி புதிய கட்டடத்திற்கு மாற்றப்படும்.

**திரு. க. நாகராஜன்:** தலைவர் அவர்களே, திண்டுக்கல் அரசினர் பெண்கள் கலைக் கல்லூரியில் பட்டப் படிப்புக்கான பிரிவுகள் குறைவாக உள்ளன. இடங்களும் குறைவாக உள்ளன. அதனால் புகுமுக வகுப்பில் பயின்ற ஏழை மாணவர்கள் வேறு இடங்களுக்கு பட்டப் படிப்புக்காகச் செல்கின்ற நிலைமை இருக்கின்றது. இதனால் ஏழை மாணவர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, இந்தப் பெண்கள் கலைக் கல்லூரியில் பட்டப் படிப்பு படிப்பதற்கான பிரிவுகளை விரிவுபடுத்தி, மாணவர்கள் படிப்பதற்கான வசதிகளை அரசாங்கம் ஏற்படுத்தித் தருமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே இருக்கின்ற இடவசதியைப் பொறுத்துத்தான் பட்டப் படிப்புக்கான வசதியைச் செய்ய முடியும். புதிதாக கட்டடம் கட்டுகின்றபோது, தேவையான இட வசதியை ஏற்படுத்திக் கொள்ளலாம். இப்போது இருக்கின்ற நிலைமையில் பல்கலைக் கழகத்தார் அதற்கு அனுமதி வழங்க மாட்டார்கள். புதிய கட்டடம் கட்டிய பிறகு அதற்கான முயற்சியை மேற்கொள்ளலாம். மேலும், இந்த ஆண்டு பட்டப் படிப்பு வசதி செய்யப்பட்டிருக்கிறதா, இல்லையா என்கிற விவரம் தற்போது என்னிடத்தில் இல்லை.

[1971 ஜூன் 29

**திரு. அ. சின்னசாமி :** தலைவர் அவர்களே, புது கட்டடம் கல்லூரிக்காக கட்டப்படுகின்ற நேரத்தில் அங்கே பணியாற்றுகின்ற ஆசிரியர்களுக்கும் வீடுகள் அங்கே கட்டிக் கொடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே முதலில் கல்லூரிக்கான கட்டடம் வரட்டும், பிறகு ஆசிரியர்களைப் பற்றிக் கவனிக்கலாம்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** தலைவர் அவர்களே, குறும்பப் பட்டியில் கட்டடம் கட்டுவதற்காக பலரும் இன்றைக்கும் பணம் கொடுத்திருக்கிறார்கள். இடமும் கிடைத்துவிட்டது. அடுத்த ஆண்டுக்குள்ளாவது கட்டடம் கட்டி, கல்லூரி அங்கே ஆரம்பிக்கப் படுமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, 21—4—1971-ம் தேதியன்று நிலம் பதிவு செய்யப்பட்டிருக்கின்ற காரணத்தால் முயற்சி எடுத்தால் அடுத்த ஆண்டு கல்லூரியை மாற்ற வேண்டுமென்று அரசு முயற்சி செய்து வருகிறது. அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

## மருத்துவக் கல்லூரிகளுக்கு மாணவர்கள் தேர்வு.

* 79. **வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மருத்துவக் கல்லூரியில் மாணவர்களைச் சேர்ப்பதில் நடப்பு **ஆண்டில் புதிய முறைகளைக் கையாள அரசு ஆலோசித்துள்ளதா ?**

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** மருத்துவக் கல்லூரியில் மாணவர்களைச் சேர்ப்பது குறித்து இந்த ஆண்டு பரிசீலனை செய்யப்பட்டு, புதிய ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

**திரு. என். கிட்டப்பா :** தலைவர் அவர்களே, மருத்துவக் கல்லூரியில் இடம் கிடைக்காதவர்கள் சிலர் நீதிமன்றத்திற்குச் செல்வது வாடிக்கையாக இருக்கிறது. இதைத் தவிர்க்கும் வகையில் மருத்துவக் கல்லூரியில் மாணவர்களைச் சேர்ப்பதற்கான புதிய முறைகளை அரசு மேற்கொள்ளுமா ?

* **மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு மருத்துவக் கல்லூரியில் இடம் பெறாத சில மாணவர்கள், 'மருத்துவக் கல்லூரியில் மாணவர்களைச் சேர்க்கும் முறை தவறானது' என்று கூறி நீதிமன்றத்திற்குச் சென்றனர். உயர்நீதி மன்றம், மாணவர்களைச் சேர்ப்பது, பொறுக்கியெடுப்பது போன்ற வேலைகள் நடைபெற்ற வகையில் முறையோடுதான் இருக்கிறது என்று ஒப்புக் கொண்டாலும், இன்னும் மாணவர்கள் சேர்க்கப் படுவது குறித்து முறையான சில நடவடிக்கைகளை மேற்கொள்ள லாம் என்ற ஆலோசனையைத் தெரிவித்திருக்கிறது. அந்த ஆலோசனைகளை அடிப்படையாக வைத்து, இரண்டு முக்கியமான நட



1971 ஜூன் 29]

வடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறோம். முதலாவதாக, மருத்துவக் கல்லூரிகள், சென்னையிலுள்ள கல்லூரிகள் எல்லாம் ஒரு பகுதி யாகவும், செங்கல்பட்டு, தஞ்சை, கோவை, மதுரை, திருநெல்வேலி மருத்துவக் கல்லூரிகள் தனித்தனி யூனிட்டாகவும் கருதப்பட்டு, மாணவர்களிடம் மனுக்கள் பெறப்பட்டன.

மாநில அளவில் அரசாங்கத்தின் சார்பிலே மாணவர்கள் சேர்க் கப்படுகின்றபோது தனித்தனியாக சேர்க்கப்படுவது முறை அல்ல என்று நீதிமன்றம் கூறியதால், இந்த ஆண்டு மாநிலம் முழுவதும் ஒன்றாகக் கொள்ளப்பட்டு, அந்த அடிப்படையில் சேர்க்கப்பட இருக்கிறார்கள். இன்னும், மாணவர்களைப் பொறுக்கியெடுப்பதற் காக, அவர்களுடைய தகுதிகளைத் தீர்மானிக்கிற வகையில் சில சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. தேவைப்படு கின்ற அடிப்படையான தகுதி, எந்த இரண்டு பாடங்களில் நல்ல தேர்ச்சி பெற்றிருக்க வேண்டுமோ பிஸிக்ஸ் அல்லது கெமிஸ்ட்ரி அல்லது பிஸிகல் சயன்ஸ் என்கிற பாடத்திலும், நேச்சுரல் சயின்ஸ் பாடத்திலும் ஏற்கனவே அமைக்கப்பட்ட அடிப்படை 50 சதவித எண்களாவது, தனித்தனியாக 'பி' கிரேடு அளவு பெற்றிருக்க வேண்டும். இந்த ஆண்டு கூட்டிப் பார்க்கின்றபோது இரண்டு பாடங்களில் 115 எண்கள் இருப்பவர்கள்தான் விண்ணப் பிக்கலாம் என்று தீர்மானிக்கப்பட்டு செயல்படுத்தப்பட இருக் கிறது. மாணவர்கள் பொறுக்கப்பட்டு, அவர்களுடைய அறிவை, திறமையை, தனித் தகுதியைக் கண்டறிவதற்காக குழுக்கள் இருக் கின்றன. ஏற்கனவே இருந்த முறைகள் மாணவர்களுடைய அறிவுநிலையையும் ஆர்வத்தையும் மதிப்பிடப் போதுமானதாக இல்லையென்ற காரணத்தால் மேலும் சீர்திருத்திய திட்டம் இந்த ஆண்டு வர இருக்கிறது.

DR. H. V. HANDE : Sir, in the process of reconsideration of the issues connected with the selection of students for the medical colleges will this Government also take into consideration the practice adopted in other States where the whole thing is based on the marks obtained in the University examination and the *viva voce* examination is skipped over and only reservation is made for backward classes and scheduled castes? Now, it has become a chronic practice with the students to go to the High Court and the Supreme Court on this issue. As the Government have got confidence in the University, will the Government reconsider the whole issue and give a categorical assurance that the marks obtained in the University examination alone will be considered and no extra marks will be added for the *viva voce* examination?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி, கல்வித் துறையிலே அதிகத் தொடர்புடையவர்கள் கேட்கக் கூடாத கேள்வியாகும். பல்கலைக் கழகத்திலே வழங்கப்படுகின்ற மார்க்குகளின் அடிப்படையில் இடம் தரவேண்டும் என்று சொல் இவர்கள், பல்கலைக் கழகம் வழங்கிய மார்க்கை அப்படியே ஏற்றுக்

கொள்ளக் கூடாதா என்கிறார்கள். அவை மட்டும் ஒரு மாணவனுடைய தகுதியைத் தீர்மானிக்கப் போதுமானதாகாது என்பது உலகம் பூராவும் ஏற்றுக்கொண்ட கருத்தாகும். எழுத்து முறையினால் எழுதப்படும் தேர்வுகள் மாணவர்கள் தாங்கள் பயின்று, மனப்பாடம் கொண்டுள்ள கருத்துக்களை எழுதி அதிக எண்கள் பெறுவதற்குக் காரணமாக இருக்கிறது. பல்கலைக் கழகம் நடைமுறை தேர்வில் மாணவர்கள் பெறும் எண்கள் மட்டும் ஒரு மாணவனுடைய அறிவை, திறனைப் புலப்படுத்தப் போதுமானதாக இல்லை என்பதைக் கல்வி நிபுணர்களும் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். அந்த எண்களும் மாணவர்களுடைய தகுதியை ஏற்றுக் கொள்வதற்கு ஒரு கூறாக இருக்கிறது. அந்த எண்களே பெரும் பகுதியாக இடம் பெறுகிறது.

**திரு. கு. காமாட்சி :** தலைவரவர்களே, இந்த ஆண்டு மருத்துவக் கல்லூரியில் பின் தங்கியவர்களுக்கு, ம. நோட்டிஃபைட் பிரிவைச் சேர்ந்தவர்களுக்கு எத்தனை இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன? எந்த அடிப்படையில் ஒதுக்கப்பட்டுள்ளன?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவரவர்களே, அண்மையில் பிற்படுத்தப்பட்ட மக்கள், அவர்களுக்கு வழங்கப்படுகிற சலுகைகள் உயர்த்தப்பட வேண்டுமென்று கூறிய கருத்தை ஆராய்ந்த குழு ஒரு ஆலோசனை தெரிவித்தது. 100-க்கு 25 பங்காக ஒதுக்கப்படும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான இடங்களை 35 ஆக ஒதுக்கப்பட வேண்டுமென்று கேட்டிருந்தார்கள். அதேபோல தாழ்த்தப்பட்டவர்களுக்கு ஒதுக்கப்படும் இடங்களை 100-க்கு 16 ஆக ஒதுக்கப்பட்டதையும் உயர்த்த வேண்டுமென்று கூறினார்கள். அதைப்பற்றித் தமிழக அரசு ஆலோசனை நடத்தி, நூற்றுக்கு 25 இடங்களாக இருந்ததை 31 இடங்களாகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு உயர்த்தவும், தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு ஒதுக்கப்பட்ட இடங்கள் 16-ஆக இருந்ததை 18 ஆக உயர்த்தவும் ஆக 100-க்கு 49 இடங்களை ஒதுக்கிவைத்த இடங்களாகத் தீர்மானித்துள்ளது. அதற்குமேல் ஒதுக்க அரசியல் சட்டம் இடம் தராது என்ற அளவில் ஒதுக்கியிருக்கிறோம். இந்த ஆண்டு மருத்துவக் கல்லூரியில் மாணவர்களைச் சேர்ப்பதில் செயல்படுத்தப்படும்.

**திரு. ஏ. சுப்பிரமணியம் :** தலைவரவர்களே, சென்ற ஆண்டு மருத்துவக் கல்லூரிக்குத் தேர்வு நடந்ததைப்பற்றி தலைமை நீதி மன்றத்தில் வழக்குகள் தொடரப்பட்டு, அந்த வழக்குகளின் பயனாகச் சில மாணவர்கள் இடைக்காலத்தில் சேர்க்கப்பட்டவர்களுக்கு இந்த ஆண்டு மார்ச் திங்களிலே நடந்த தேர்விலே பங்கெடுத்துக் கொள்ள முடியாமல் போனதுபற்றி அமைச்சரவர்களுக்குத் தெரியுமா? அப்படியானால் வருகின்ற செப்டம்பர் தேர்விலாவது அவர்கள் பங்கெடுத்துக்கொள்ளும் வகையில் ஆவன செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவரவர்களே, இது தேர்விலே பங்கெடுத்துக்கொள்வதா அல்லவா என்பது அல்ல. அப்படிப்பட்ட வழக்கு தொடர்ந்தால் அவர்களிலே சிலருக்கு வாய்ப்பு



கிடைக்க, லாபம் கிடைத்தது, இன்னொரு வழக்கினால் பலருக்கு இருந்த லாபமும் போகிற நிலை ஏற்பட்டது. ஆகவே, வழக்கு தொடர்வது இந்தப் பிரச்சனைக்கு முடிவு அல்ல. வழக்குத் தொடர்ந்தால், அரசாங்கம் இந்திய உயர்நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு கட்டுப்பட்டு நடவடிக்கை எடுக்க வேண்டியவர்களாக இருக்கும். வழக்குகளைப்பற்றி அரசாங்கமும் கவலைப்படுவதற்கில்லை.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவரவர்களே, முன்பு நேர்முகமான தேர்விலே எண்கள் கொடுப்பதிலே சங்கடங்கள் இருக்கிறது என்ற கருத்து நிலவி வந்தது. ஆதலால், இண்டர்வியூ மார்க்கைக் குறைக்க ஏதாவது இந்த அரசாங்கத்திற்கு உத்தேசமுண்டா? அப்படியிருந்தால் இது குறித்த விவரங்களை அமைச்சரவர்கள் விளக்குவார்களா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவரவர்களே, பல்கலைக் கழகத்தினுடைய எண்களில் ஏறத்தாழ 200 எண்களுடைய மதிப்பு எடுத்துக் கொள்ளப்படுகிறது. ஏறத்தாழ 100 எண்களிலிருந்து 130 வரையுள்ள மாணவர்கள் சற்றேறக்குறைய ஏற்றத் தாழ்வைப் பெறக்கூடிய வாய்ப்பு தேர்வு முறையில் இருக்கத்தான் செய்கிறது. நான் கல்லூரி ஆசிரியராகவும், பல்கலைக்கழகத் தேர்வுக் குழுவினுடைய உறுப்பினராகவும் இருக்க வாய்ப்பு இருந்த காரணத்தால் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். முறையாகச் செய்யும்பொழுது ஏற்றத்தாழ்வு ஏற்படத்தான் செய்கின்றது. வேறுவகையான தவறுகளுக்கு இந்தச் சமுதாயத்தில் இன்றைக்கும் இடம் இருக்கத்தான் செய்கிறது. வகுப்புணர்ச்சி, சமுதாய உணர்ச்சி இவைகளிடையே போய்விடக்கூடிய துர்ப்பாக்கியமான நிலை நாட்டிலே இருக்கிறது. 200 எண்கள் என்று எடுத்துக் கொள்ளும்போது மாணவர்களின் உண்மையான தகுதியை அறிய 75 எண்களாவது வைத்தால் உண்மையான தகுதியை அறிய வாய்ப்பிருக்கும். ஏற்கெனவே ஒரு காலத்தில் 150 எண்களாக இது இருந்ததாக நான் கேள்விப்படுகிறேன். அது குறைக்கப்பட்டு 75 எண்களாக இருக்கிறது. இது மிகச்சிறந்த ஒன்று. அதோடு மட்டுமல்லாமல், இந்த மதிப்பெண்கள் ஜெனரல் நாலெட்ஜ் அல்லது பொது அறிவு என்ற அடிப்படையில் 15 எண்களும் ஜெனரல் பேரிங் அல்லது பொதுத் தோற்றப் பொலிவு இவைகளுக்கு 10 எண்களும், மெண்டல் அலெர்ட்னெஸ் அல்லது அறிவுத் திறன் இவற்றிற்காக 10 எண்களும், ஆப்டிட்யூட் ஃபார் மெடிகல் புரொஃபெஷன் அல்லது மருத்துவக் கல்வியைப் பயில்வதற்கான ஆர்வத்திற்கான காரணத்திற்காக 15 எண்களும், இண்டரெஸ்ட் இன் சோஷியல் சர்வீஸ் ஆக்டிவிட்டிஸ் அல்லது மக்களுக்குப் பணியாற்றும் மனப்பான்மைக்காக 15 எண்களும், எக்ஸ்ட்ரா கரிகுலர் ஆக்டிவிட்டிஸ் என்ற தலைப்பில் என்.சி.சி. போன்று இதிலே பயிற்சி பெற்று தகுதி பெற்று இருந்தால் அதற்காக 5 எண்களும், ஸ்கவுட்டிங் அல்லது சாரணர் இயக்கத்திற்காக 5 எண்களும், ஸ்போர்ட்ஸ் அல்லது விளையாட்டுப் பாடத்திலே தேர்வு, ஆற்றல் பெற்று சிறந்த பரிசைப் பெற்றிருந்தால் 5 எண்களும் என்ற

முறையில் பங்கீடு செய்யப்படுகிறது. இந்தப் பங்கீட்டுக்கு உட்பட்டவற்றைத் தவிர மீதியான சலுகைகளை யாரும் வழங்கிவிட முடியாது. ஆனால் குறைந்த பட்ச சலுகையை உலகத்தில் எப்பொழுதும் தவிர்க்க முடியாது.

**திரு. சோ. அழகர்சாமி** : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் பதில் சொல்லும்போது நேர்முகத் தேர்வுகளில் கல்லூரிகளில் வழங்கப்படும் மார்க்கை மட்டும் வைத்துத் தகுதியைக் கணக்கிட முடியாது என்று சொன்னார்கள். இப்பொழுது நாம் மருத்துவக் கல்லூரிக்குத் தேர்வு நடத்தும் காலத்தில் நேர்முகத் தேர்வில் எழுத்து மூலம் விடையளிக்கும் முறையை, மருத்துவத்துறைக்குப் பொருத்தமான கேள்விகளைக் கொடுத்து பதில் அளிக்கும் முறையில் மார்க்குகள் அளிக்கும் முறையைச் செய்ய அரசு ஆலோசிக்குமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்** : தலைவரவர்களே, அது குறித்தும் ஆலோசிக்கப்பட்டது. ஆனால் எஸ். எஸ். எல். சி. தேர்வு எழுதிய பிறகு அடுத்து சுமார் 9 மாதம் அல்லது ஒரு வருஷத்திற்குள்ளே இரண்டாவது முறை ஒரு பல்கலைக் கழகத் தேர்வை மாணவர்கள் எழுத நேரிடுகிறது. ஏற்கனவேயிருந்த இண்டர் மீடியட் வகுப்பு முறையிருந்தால் இரண்டாண்டுகள் அல்லது ஒன்றே முக்கால் ஆண்டுகள் கழித்து பல்கலைக் கழகத் தேர்வை எழுதக்கூடிய வகையில் மாணவர்களுக்குச் சந்தர்ப்பமிருந்திருக்கும். ஆனால் இப்பொழுது பி. யூ. சி. இருப்பதால் சுமார் 11 மாதங்களிலேயே அடுத்த தேர்வை மாணவர்கள் எழுதக் கூடிய நெருக்கடிக்கு ஆளாகிறார்கள். பிறகு ஒரு மாதம் அல்லது இரண்டு மாதங்களில் கடுமையாக உட்கார்ந்து எழுதக்கூடிய தேர்வை வைத்தால் மாணவர்கள் கடுமையான சோதனைக்குள்ளாகிறார்கள். மற்றொன்று, எழுத்துத் தேர்வு மட்டும் என்றைக்குமே முடிவைத் தராது என்ற ஒரு கருத்தை உலகம் ஒப்புக் கொண்டிருப்பதால் இந்த எழுத்துத் தேர்வை மட்டும் வைத்து தேர்வு நடத்துவதால் மட்டும் இந்தப் பிரச்னை தீரப் போவது இல்லை. ஆகவே, இந்த இரண்டு பிரச்னைகளால் இப்பொழுதுள்ள நடைமுறை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

**திரு. நா. வீராசாமி** : தலைவரவர்களே, சுப்ரீம் கோர்ட்டின் தீர்ப்பையொட்டி இந்த ஆண்டு தேர்ந்தெடுக்கப் போகும் மாணவர்கள் மாநில அடிப்படையிலே தேர்ந்தெடுக்கப் போவதாகச் சொன்னார்கள். அப்படித் தேர்ந்தெடுக்கப்பட்டால், எஜுகேஷனலி பேக்வேர்ட் ஏரியாக்கள் இருக்கின்றன. அவைகளில் படித்தவர்கள் சென்னை போன்ற நகரங்களில் படித்தவர்களோடு போட்டி போட வேண்டியிருக்கிறது. இதையெல்லாம் ஒட்டித் தேர்வுக்கு ஒதுக்கப்பட்ட 75 எண்கள் என்பதை 100 ஆக உயர்த்த அரசாங்கம் முயற்சி எடுக்குமா?



**மாண்புமிகு திரு. க. அன்பழகன்** : தலைவரவர்களே, இன்று மாநில அடிப்படையில் மாணவர்கள் பொறுக்கப்படுவது என்பது முடிவாகச் செய்யப்படுகின்ற மாணவர்களுடைய எண்களை ஒன்றாக, ஒரே இடத்தில் செய்துவிடுகிற முறையாக இல்லாமல், 4 இடங்களில் குழுக்கள் அமைக்கப்படுகிறது. எனவே, அந்தந்த வட்டாரங்களிலே யார் யார் சற்று உயர்ந்த நிலையில் இருக்கிறார்களோ அவர்கள் மேல்நிலைக்கு வரக்கூடிய வாய்ப்பிருக்கும். அதிலே பிற்பட்ட மக்கள் இடம் பெற முடியும். மதுரையில், கோவையில், தஞ்சையில் அமைக்கிற காரணத்தால், இப்படி 4 குழுக்களாகப் பிரிக்கப்பட்டு எடுத்துக்கொள்ளப்படுவதால் பிற்பட்ட மக்களும் பெற வேண்டிய இடத்தைப் பெறுவார்கள் என்று நான் நம்புகிறேன்.

DR. H. V. HANDE : Is it not a fact that on several occasions, during several years, there were large reports coming in the Press that during the interview, questions which have no bearing on the mental or physical capacity of the student, some irrelevant questions, were asked? Will this Government, just as it has now come forward to break it up into some compartments, which is very good, will they similarly come forward to give some broadlines to these persons who conduct the *viva voce*? Will they ask these people to put relevant questions so that the disadvantages that crept up during *viva voce* previously, might be considerably reduced?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்** : தலைவரவர்களே, இந்த ஆண்டு பெரும்பாலும் இந்தக் குழுவிலே இடம் பெறுபவர்களெல்லாம் மருத்துவத்துறையோடு ஏதாவதொரு வகையிலே தொடர்பு கொண்டுதான் இருப்பார்கள். எனவே அந்தத் துறை பற்றிய கேள்விகளை எழுப்பச் சந்தர்ப்பம் இருக்கும். எனவே அந்தக் குறைபாடு ஏற்படாது. மாணவர்களை இப்படிச் சில கேள்விகளைக் கேட்டார்கள் என்றால் அந்தந்த மாணவர்கள் எந்தெந்த வகையிலே சிபாரிசு பெற்று வந்தார்களோ அதையொட்டி அந்தக் கேள்விகள் எழுப்பப்பட்டிருக்கும்.

**திரு. செ. கந்தப்பன்** : தலைவரவர்களே, விண்ணப்பத்திற்கான அடிப்படையாக வேண்டிய அளவிற்கான அந்தந்தத் தகுதியை 115 எண்கள் என்று நிர்ணயிக்கும்பொழுது மாணவர்கள் பெற்றிருக்கும் பி, பி பிளஸ், ஸி என்ற அளவிற்கு எண்கள் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் பல்கலைக் கழகம் ஸி அல்லது பி என்பதற்கு 45-லிருந்து 50 மார்க்குகள் வரையிலும், அல்லது 50-லிருந்து 60 வரையிலும், அல்லது 60-லிருந்து 70 வரையிலும் என்பதுபோல இடையிலே விகிதாச்சாரத்தை வைத்து நிர்ணயம் செய்திருக்கிறார்கள். நம்முடைய அரசு இந்த மெடிகல் தேர்வுக்கு நிர்ணயம் செய்திருக்கும் அந்த அடிப்படையை குறைந்த பட்ச அளவே எடுத்துக் கொண்டிருக்கிறது. இந்த வகையில் சில மாணவர்கள் பி, பி பிளஸ் வாங்கியிருந்தும்கூட குறைந்த பட்ச நிர்ணயம் 50 என்று

எடுக்கப்படுமானால் 55 வாங்கியிருக்கும் மாணவர்கள். 60 வாங்கியிருக்கும் மாணவர்கள் ஒருசிலர் இருக்கக்கூடும். அவர்கள் 115-க்கு மேல் வந்துவிடக்கூடும். இது அநேகமாகக் கோர்ட்டிலே சர்ச்சை புரிவதாக அமைகிறது. எனவே இது குறித்து சட்ட ஆலோசனை செய்யப்பட்டதா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவரவர்களே, இதற்கு முன்னால் கூட மதிப்பு எண் பெற்ற மாணவர்கள் சிலர் இப்படித் தேர்வுக்கு வரத்தான் செய்தார்கள். மதிப்பெண் 57, 58 ஆக இருந்தாலும் பிளஸ் 55 என்று தான் கொள்ளப்பட்டு அதற்குச் சமமாகக் கருதப்படும். 63-ஆக இருந்தால் 60 ஆகவும், 77 ஆக இருந்தால் 75 ஆகவும் கருதப்படும். என்வே இந்த முறை மருத்துவக் கல்லூரிக்கு மாணவர்களைத் தேர்ந்தெடுக்கும் முறையில் முன்னரே இருந்து வருகிறது.

**திரு. எம். தேவராசன் :** தலைவர் அவர்களே, இப்போதுள்ள முறைப்படி பிற்பட்ட மாவட்டங்களைச் சேர்ந்தவர்களுக்குப் போதிய இடம் கிடைப்பதில்லை. ஆகவே, மாவட்ட வாரியாக மாணவர்களைத் தேர்ந்தெடுக்கும் முறை வருமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, இவையெல்லாம் சில பொது நீதியிலே தானகவே இடம் பெற்றுவிடுகின்றன. பிற்பட்டவர்களுக்கு என்று 31 பங்கு ஒதுக்கியிருக்கிறார்கள் என்றால் அவர்களில் பெரும்பாலானவர்கள் பிற்பட்ட மாவட்டங்களிலிருந்துதான் வரக்கூடிய நிலை இருக்கும். பிற்பட்ட மாவட்டங்களில்தான் பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள். தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள் சாதாரணமாக இருக்கக் கூடும். ஏதாவது ஒரு வகையிலே நீதி கொடுக்கப்பட்டுவிடுகிறது என்று கூற விரும்புகிறேன்.

**திரு. ஆ. கு. சுப்பையா :** மருத்துவக் கல்லூரித் தேர்வுக்கு டெஸ்ட் வைத்து தேர்ந்தெடுப்பது பொருத்தமாக இருக்காது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறினார்கள். ஆனால் பாண்டிச்சேரி மாநிலத்தில் டெஸ்ட் வைத்துத் தேர்ந்தெடுக்கிறார்கள். அங்கு பொருத்தமாக இருக்கிறபோது நம்முடைய மாநிலத்தில் ஏன் பொருத்தமாக இருக்காது என்பதற்கு அமைச்சர் அவர்கள் விளக்கம் தருவார்களா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, எழுத்து மூலமாகத் தேர்வு வைப்பதாக இருந்தால் பல நேரங்களில் அந்தத் தேர்வுகளில் நடக்கும்படியான முறைகேடுகளை என்ன என்பதை இந்த அரசு நன்றாக அறிந்திருக்கிறது, அரசை விட நான் மிக நன்றாக அறிந்திருக்கிறேன். அப்படி எழுத்து மூலமாகத் தேர்வு நடக்கும்போது முற்போக்கு என்று சமுதாயத்தில் கருதப்பட்டாலும் உண்மையிலேயே பிற்பட்ட ஏழை மாணவர்கள் அந்த வாய்ப்பை இழக்கின்ற நிலை ஏற்படுகிறது. எழுத்துத் தேர்வில் உடல் நலம் இல்லாதவர்கள், சுறுசுறுப்பு இல்லாதவர்கள், மருத்துவத்தைப் பயிலுவதற்குத் தகுதி இல்லாதவர்கள் கூட வெற்றி பெற்று விடுவார்கள் என்ற தவிர்க்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டுவிடும் என்று கருதுகிறேன்.





**திரு. மா. வெ. கரிவேங்கடம் :** பிற்பட்டவர்களுக்கான விகிதாசாரத்தை 25-ல் இருந்து 31 சதவிகிதமாகவும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு 14-ல் இருந்து 18 சதவிகிதமாகவும் உயர்த்தியிருக்கிறார்கள். சமுதாயத்தில் பிற்பட்டவர்கள் 75 சதவிகிதத்தில் இருக்கிறார்கள். சில சந்தர்ப்பங்களில் தாழ்த்தப்பட்ட மலைவாசிகளுக்கு எத்தனை இடங்கள் ஒதுக்கப்படுகின்றனவோ அந்த இடங்கள் நிரப்பப்படுவதில்லை. அவ்வாறு அவர்களால் நிரப்பப்படாத இடங்கள் பிற்படுத்தப்பட்ட இனத்தவர்களுக்குச் சேரும் வகையில் விதிமுறைகள் இருக்கின்றனவா ? அந்த வகையில் ஒதுக்க அரசாங்கம் முன் வருமா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, வகுப்பு வாரி பிரதிநிதித்துவம் போன்று பிற்பட்டோருக்கும், தாழ்த்தப்பட்டோருக்கும் இடம் ஒதுக்கப்படுகிறது. இந்த இட ஒதுக்கல் என்பது மக்கள் எண்ணிக்கையில் மட்டும் ஒதுக்கப்படுவது அன்று. மக்கள் எண்ணிக்கை அடிப்படை எதுவாக இருந்தாலும் எந்த அளவு ஒதுக்குவது குறைந்தபட்ச பாதுகாப்பை அந்தச் சமுதாய வளர்ச்சிக்கு அளிக்குமோ அந்த அளவுக்கு ஒதுக்க வேண்டுமென்பதுதான் அரசியல் சட்டம் கூறுவது. Minimum guarantee for the safe growth of the backward Com munities. என்ற வகையில் தான் ஒதுக்கப்பட வேண்டும். இப்போது ஒதுக்கப்பட்டிருப்பது தாராளமாக அவர்களுடைய முன்னேற்றத்திற்கு உகந்த முறையில் தான் இருக்கிறது. தாழ்த்தப்பட்டவர்கள் வராவிட்டால் அதிலே பிற்படுத்தப்பட்டவர்களை மட்டுமே எடுத்துக் கொள்வது என்ற முறை இல்லை. பொது விழுக்காடு 51 பங்கு இருக்கிறது. அதிலே தாழ்த்தப்பட்டவர்களாக இருந்தாலும், பிற்பட்டவர்களாக இருந்தாலும் திறமை காரணமாக இடம் பெற முடியும். நல்ல தகுதி பெற்ற பிற்பட்ட மாணவர்களும், தாழ்த்தப்பட்ட மாணவர்களும் 51 பங்கில் இடம் பெறக் கூடிய நிலை பல நேரங்களில் ஏற்படுகிறது.

**திரு. எம். முத்தையா :** பின்தங்கிய வகுப்பினருக்கு 25 சதவிகிதமாக இருந்ததை 31 சதவிகிதமாகவும் அதாவது 6 சதவிகிதம் உயர்த்திக் கொடுத்திருக்கிறார்கள். அரிசனங்களுக்கு 16-ல் இருந்து 18 ஆக, அதாவது 2 சதவிகிதந்தான் உயர்த்திக் கொடுத்திருக்கிறார்கள். இது எந்த அடிப்படையில் உயர்த்தப்பட்டிருக்கிறது?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** இந்த விகிதாசாரம் அந்தச் சமுதாய மக்கள் முன்னேற்றத்திற்குக் காரணமான அந்த மக்களின் எண்ணிக்கை அடிப்படையில் நிர்ணயிக்கப்படுகிறது.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** இரண்டு முறை சுப்ரீம் கோர்ட்டில் நாம் மருத்துவ கல்லூரிக்கு மாணவர்களைச் சேர்க்கும் முறை தவறு என்று கூறியதன் பேரில் அந்த முறையை மாற்றி இருக்கிறார்களா? மாற்றுவதற்கு . . .

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* இந்தக் கேள்வி ஏற்கெனவே கேட்டாயிற்று.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : The Hon. Minister can answer it..

MR. SPEAKER : That question has already been put.

*திருமதி த. ந. அனந்தநாயகி :* கேரளாவில் செய்வது மாதிரி தேர்வில் மாணவர்கள் எடுத்த மார்க்கை வெளியே அட்டவணையாக ஒட்டுவதற்கு வழி செய்வார்களா?

*மாண்புமிகு திரு. க. அன்பழகன் :* இதற்கு முன்னாலே கூட தரப்படுகின்ற எண்ணிக்கைகளைச் சேர்த்து உயர்நீதி மன்றத்திலே கேட்கும்போது எந்த நேரத்திலும் தரப்படுகிறது. வெளியில் ஒட்டுவது என்பது வெளியில் இருப்பவர்களுக்காக. நீதிமன்றத்தில் எப்போது தேவை என்று கேட்டாலும் வழங்கப்படுகிறது. இதை வெளியிலே ஒட்ட வேண்டிய அவசியம் இல்லை. தேவையானவர்கள் பெற வேண்டிய முறையில் பெற்றுக் கொள்ளலாம்.

THIRUMATHI JOTHI VENCATACHELLUM : Sir, is it a fact that those who have passed creditably in the second attempt in the P.U.C. will not be considered for medical college admission according to the present rules in force?

*மாண்புமிகு திரு. க. அன்பழகன் :* அந்த மாதிரி ஒரு முறை இருப்பதாக எனக்குத் தெரியவில்லை.

*திரு. ஏ. ஆர். சுப்பையா :* இந்த வருஷம் மதுரைப் பல்கலைக் கழகத்திற்கும் சென்னைப் பல்கலைக் கழகத்திற்கும் இடையே ஒரு வித்தியாசம் இருக்கிறது. மதுரைப் பல்கலைக் கழகத்தில் ஒரு பாடம் கடினமாக இருந்ததன் காரணமாக மார்க் குறைக்கப் பட்டிருப்பதாகத் தெரிகிறது. அதனால் அதற்கு ஏதாவது பாகு பாடு வைத்துக் கொள்ள விதிமுறை இருக்கிறதா ?

*மாண்புமிகு திரு. க. அன்பழகன் :* அந்த அளவுக்குப் பாகு பாடு செய்வது என்பது இயலாத ஒன்று. உறுப்பினர்கள் அந்தந்தப் பகுதி மாணவர்களைப் பார்க்கும்போது அவர்களில் திறமை யானவர்கள், அதிகமான மார்க்குகளைப் பெற்றவர்களைத் தேர்ந் தெடுப்பதுதான் இயல்பு. இது தவிர்க்க முடியாதது.

*திரு. எஸ். முருகையன் :* மருத்துவக் கல்லூரிக்கு மனுச் செய்ய வேண்டுமென்று சொன்னால் இரண்டு பாடங்களில் 115 மார்க்குக்குக் குறைவாக இருக்கக் கூடாது என்று சொன்னார்கள். இந்த விதி அரிசனங்களுக்கும், மலைவாசிகளுக்கும் தளர்த்தப் பட்டிருக்கின்றதா ?

*மாண்புமிகு திரு. க. அன்பழகன் :* தாழ்த்தப்பட்ட மக்களுக் கும், மலைவாசிகளுக்கும் இந்த விதி கிடையாது. அவர்கள் புகுமுக வகுப்பிலே தேர்ச்சி பெற்றிருந்தாலே போதும். அவர்கள் அப்படி



இடம் கிடைத்தாலும் எண்ணிக்கை பெறத் தேவையில்லை என்ற எண்ணத்தோடு படிக்காமலே இருந்து முதல் ஆண்டிலேயே மூன்று, நான்கு முறை தோற்றுவிடுகிறார்கள். மருத்துவக் கல்லூரியில் கிடைத்த அருமையான இடத்தைப் பயன்படுத்தி அவர்கள் படித்து முன்னேற முயற்சிக்க வேண்டுமென்றுதான் நான் கேட்டுக் கொள்ள முடியும்.

### புதிய மருத்துவக் கல்லூரிகள்.

**80 வினா திரு. என். கிட்டப்பா :* மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

1971-72-ம் ஆண்டில் தமிழகத்தில் புதிதாக மருத்துவக் கல்லூரிகள் ஏதேனும் துவங்கிட அரசு திட்டமிட்டு உள்ளதா ?

*மாண்புமிகு திரு. க. அன்பழகன் :* இல்லை.

*திரு. என். கிட்டப்பா :* ஆண்டுதோறும் எத்தனை மருத்துவப் பட்டதாரிகளை உருவாக்கினாலும் கிராமப் புறங்களுக்கு டாக்டர் கள் பற்றாக்குறை இருப்பதால் புதிய புதிய மருத்துவக் கல்லூரி களைத் தோற்றுவித்து அதிலே கிராமப் புறங்களில் கட்டாயம் சேவை செய்பவர்களுக்கு இடம் கொடுக்க வழி செய்யப்படுமா ?

*மாண்புமிகு திரு. க. அன்பழகன் :* இந்தக் கேள்வி மிக விரி வாக ஆராயப்பட்ட ஒன்றாகும். மருத்துக் கல்லூரியில் பயிற்சி பெற்று வெளியில் வருகிற டாக்டர்கள் இப்போதே அரசாங்கத்தின் வேலையை மட்டுந்தான் எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருக் கிறார்கள். கிராமப் பகுதிகளிலே சட்டமன்ற உறுப்பினர்களாக உள்ளவர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களாக உள்ளவர்களும் பொதுமக்களுக்குப் பணியாற்றும் வகையில் மக்கள் ஒத்துழைப் போடு மருத்துவ மனைகளை ஏற்படுத்தி தமிழக அரசு சர்வீஸ் போல் சில முறைகளை ஏற்படுத்தி மக்களிடமிருந்து குறைந்த அளவு சந்தா பெற்று நல்ல வசதிகளைச் செய்தால் நூற்றுக் கணக்கான டாக்டர்களுக்கு வேலை வாய்ப்புத் தரமுடியும். இந்த ஆண்டு மருத்துவக் கல்லூரியில் பயில இருக்கிற மாணவர்கள் ஏறத்தாழ ஆயிரம் பேர். ஏற்கனவே ஆயிரம் பேர் தேர்வு எழுதியிருக்கிறார்கள். அரசாங்க மருத்துவ மனையில் ஆண்டு ஒன்றுக்கு 100 அல்லது 150 பேரைத்தான் அதிகப்படியாகச் சேர்த்துக் கொள்ள முடியும். தாராளமாக அழைப்பவர்கள் இருந்தால் செல்லுவதற்கு டாக்டர்கள் காத்துக் கொண்டிருக்கும் காலம் இன்றைக்கு வந்திருக்கிறது.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, may I know from the Hon. Minister for Public Health, whether he or the Hon. Minister before him, has received any proposal or letter from the Collector of the Dharmapuri district with regard to starting a medical college in that district?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவரவர்களே, எந்த ஒரு மாவட்ட ஆட்சித் தலைவர் எழுதியிருக்கிறார் என்பது தனிக் கேள்விக்குரிய ஒன்றாகும். மருத்துவக் கல்லூரி அமைப்பது என்பது அகில இந்திய அடிப்படை திட்டத்தில் எத்தனை லட்சம் மக்களுக்கு ஒரு மருத்துவக் கல்லூரி என்று கருதுகிறார்களோ அந்த அடிப்படையில் மருத்துவக் கல்லூரிகள் இப்போது இந்த மாநிலத்தில் இருக்கின்றன. இப்போது ஏற்படுத்தப்பட்டுள்ள கல்லூரிகளுக்குச் செய்யப்பட வேண்டிய minimum satisfactory conditions. இன்னும் பெரும் அளவுக்கு செய்யப்பட வேண்டிய நிலைமை இருக்கிறது. பயிற்சி பெற்றவர்களுக்கு வாய்ப்பளிக்க வேண்டிய திட்டம் இருக்கிறது. எனவே, இந்த இடைக் காலத்திலே புதிய கல்லூரிகளுக்கு அவசியம் இல்லை என்று அரசு கருதுகிறது.

**திரு. மு. சுருளிவேல் :** தலைவரவர்களே, இந்த ஆண்டு வழங்கப்பட்டுள்ள விண்ணப்பத் தாள்களில் வேலை வாய்ப்பு உத்தரவாதம் இல்லை என்று சேர்க்கப்பட்டுள்ளதாக அறிகிறேன். இப்போது சேர்க்கப்பட்டுள்ள மாணவர்கள், பயிற்சி பெற்ற பிறகு, அவர்கள் தனியாகவே மருத்துவ மனை அமைத்துக் கொள்வதற்கு அரசாங்கம் நிதி உதவி செய்யும் திட்டம் இருக்கிறதா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவரவர்களே, உள்ளபடியே இப்போது கூட பயிற்சி பெற்று வருகிற மாணவர்களுக்கு அரசாங்கத்திலே உடனடியாக அலுவல்கள் தருவதற்கு வாய்ப்புகள் வசதிகள் நிதிநிலை அறிக்கையில் அளிக்கப்பட்டிருக்கிறது. அதிலே ஒரு 100 பேர்களுக்கு டாக்டர் அசிஸ்டெண்ட் என்று போட்டு ரூ. 250 சம்பளத்தில் அவர்களை நியமிக்கிற திட்டம் இருக்கிறது. இன்னும் புதிதாக அரசாங்க மருத்துவ மனைகள் ஏற்படுத்தப்பட இருக்கின்றன. ரூரல் டிஸ்பென்சரி, யூனியன் டிஸ்பென்சரி இவற்றை எல்லாம் அரசாங்கம் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று திரும்பத் திரும்ப வேண்டுகோள் விட்டுக்கொண்டிருக்கிறார்கள். இப்போது ரூ. 33 கோடி செலவாகிறது. உடனடியாக இல்லாவிட்டாலும், ஆண்டுக்கு 10 மருத்துவ மனை என்று எடுக்கிறபோது அங்கே மருத்துவர்கள் போட வேண்டிய நிலைமை ஏற்படும். அரசாங்கத்தின் முயற்சியில் நடைபெறுகிற சிறு தொழில் கடன் தரும் நிறுவனங்கள் மூலம் டாக்டர்கள், தாங்கள் தொழில் நடத்துவதற்காகக் கடன் கேட்டு முன்வருவார்களானால், ஏறத்தாழ அவர்களுக்கு ரூ. 1 லட்சம் வரையில் கட்டடம் கட்டுவதற்கும், 10,000 ரூபாய் வரையில் எக்விப்மெண்ட்ஸ் வாங்குவதற்கும் நிதி தருகிறது. அதற்காக ஒரு விவரமான அறிக்கையின் மூலம் அறிவிக்க இருக்கிறேன். அது விரைவில் நிறைவேற்றப்படும் என்று எதிர்பார்க்கிறேன்.

**திரு. அ. தேவேந்திரன் :** தலைவரவர்களே, கிராமங்களில் இருக்கிற ஆரம்பச் சுகாதார நிலையங்களில் பெரும்பாலான இடத்தில் ஒரே மருத்துவர் தான் இருக்கிறார். கிராமங்களில் அதிக நோயாளி



கள் அந்த மருத்துவ மனைக்கு வருவதால், ஒரு மருத்துவரால் அவர்களைச் சரியாக கவனிக்க முடியவில்லை. இன்னும் அதிகமான மருத்துவரை இந்த பிரைமரி ஹெல்த் சென்டரில் நியமிக்கிற உத்தேசம் அரசுக்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவரவர்களே. இந்தக் கேள்வி தனிக் கேள்வியாக இருந்தாலும், ஆரம்பச் சுகாதார நிலையத்தில் ஏற்கெனவே ஒரு டாக்டர் கூட இல்லாத நேரத்தில், இப்போது ஒரு டாக்டராவது இருக்கிறார் என்று கருதி திருப்தி அடைய வேண்டும். இன்னும் கொஞ்சம் காலம் கழித்துத்தான் இரண்டாவது டாக்டரைப்பற்றிச் சிந்தித்துப் பார்க்க முடியும்.

### *Discharged Prisoners' Society*

*81 *Q.* THIRU A. SWAMIDHAS: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether any grant is given to the Tamil Nadu State Discharged Prisoners' Society by the Government; and

(*b*) if so the details thereof for the years 1969-70-71?

THE HON THIRU S. MADHAVAN:

(*a*) Yes.

(*b*) 1969-70 Rs. 12,000 (in two instalments.)

1970-71 Rs. 12,000 (in two instalments.)

**திரு. ஏ. சுவாமிதாஸ் :** சார், இப்போது அவர்களுக்கு அளிக்கும் கிராண்ட் தொகையை இன்னும் கூடுதலாகக் கொடுக்கவும், இந்த மாதிரி சொசைட்டி இல்லாத இடங்களில் கூடுதல் சொசைட்டி தொடங்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** மாநிலம் முழுவதும் உள்ள சங்கம் இது. இன்னும் அதிகப்படுத்தும் நோக்கம் இல்லை.

### சிறைக் கைதிகளுக்குக் கட்டாயக் கல்வி

*82 திரு. என். மருதாசலம் : மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் சிறைக் கைதிகளுக்குக் கட்டாய கல்வி அளிக்கும் செயற் குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையிலுள்ளதா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இல்லை.

**திரு. என். மருதாசலம் :** தலைவரவர்களே, ஜெயிலில் உள்ளவர்களுக்குக் கட்டாயக் கல்வி அளிப்பதன் மூலம் அவர்களுக்கு நல்ல அறிவு வளருமே. ஆகவே, அவர்களுக்குக் கட்டாயக் கல்வி அளிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

[1971 ஜூன் 29

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவரவர்களே, பொதுவாக யார் படிக்க முன்வருகிறார்களோ, அவர்களுக்குத் தேவையான வசதி கொடுக்கப்படுகிறது. வெளியே வந்து படிக்க விரும்பினால் அனுமதி கொடுக்கப்படுகிறது. தேர்வு எழுதக்கூட வசதி செய்யப் படுகிறது. கட்டாயம் இப்போது தேவையில்லை என்று கருதுகிறோம்.

**திரு. எஸ். முருகையன் :** தலைவரவர்களே, ஜெயிலில் இருக்கும் போது தமிழ் ஆசிரியர்கள் படிப்பு படித்து விட்டு வேலை கிடைக் காமல் பலர் இருக்கிறார்கள் என்று அரசுக்குக் குறிப்புகள் வந் துள்ளனவா ? அப்படி வந்திருந்தால் அவற்றை நிவர்த்திக்க அர சாங்கம் என்ன நடவடிக்கை எடுத்து இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவரவர்களே, அப்படிப் பட்ட பிரச்னையை எழுதி அனுப்பினால் பரிசீலிக்கலாம்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** சார், சிறையிலிருந்தே பல கைதி கள் மேல்படிப்பு படித்து விட்டு சிறப்பான நிலைக்கு வந்து இருக் கிறார்கள். எங்களுடைய கட்சியின் தலைவர் பூபேஷ் குப்தா அவர் களே சிறையில் இருந்து படித்தவர் தான். இப்போது சிறையில் இருப்பவர்கள் வெளியே வரும்போது எழுதப் படிக்கக் கூடத் தெரி யாமல் இருக்கிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** எல்லோருக்கும் செய்வது என்பது முடியாது. ஒரு வயது வைத்து இருக்கிறோம். 30 வயதுக்கு கீழே இருப்பவர்கள் படிப்பதற்கு ஏராளமான வசதிகள் செய்து கொடுக்க ஏற்பாடு செய்திருக்கிறோம். 40 வயதுக்கு மேலே போய்விட்டால், கைதிகள் அவர்களாகவே படிக்க முன் வந்தால் வசதி செய்து தருகிறோம். நைட் ஸ்கூல் கூட வைத்து இருக்கிறோம். அதிலே படிக்கலாம். இப்போது செய்து இருக்கும் வசதிகளே போதுமானவை என்று கருதுகிறோம்.

**திரு. எம். சுரேந்திரன்:** தலைவரவர்களே. சிறைக்கூடத்தில் இருப் பவர்களுக்குப் படிப்பு சொல்லித் தருவதற்காக தகுதி படைத்தவர் கள் எவ்வளவு பேர் இருக்கிறார்கள் என்று கணக்கிடப்பட்டிருக் கிறதா ? அங்கே சிறைக் கைதிகளாக இருப்பவர்கள் சந்தர்ப்ப வசதியினால் தண்டனை அடைந்து விட்டவர்கள். அவர்கள் வெளியே வரும்போது திருந்தியவர்களாக வர ஏற்பாடு செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவரவர்களே, ஆசிரியர்கள் யாராவது குற்றவாளிகளாக இருக்கிறார்களா என்று கேட்பது போல் தெரிகிறது. அந்த புள்ளி விவரம் என்னிடத்தில் இல்லை. அவர் களைப் பயன்படுத்தாமல் வெளியிலிருந்து கல்வி இலாக்கா மூல மாகத்தான் ஆசிரியர்கள் வைக்கப்பட்டு இருக்கிறார்கள் எல்லா சிறைகளுக்கும் சேர்த்து இப்போது 37 ஆசிரியர்கள் இருக்கிறார் கள். இன்னும் எங்கெங்கே இந்த வசதி கேட்கப்படுமோ அங்கெல் லாம் ஏற்பாடு செய்யப்படும்.



1971 ஜூன் 29]

**திரு. பெ. மலைச்சாமி :** தலைவரவர்களே, சிறையில் அரசாங்கத் தேர்வு எழுதி தேர்ச்சி பெற்றவர்கள். அவர்கள் தண்டனை காலம் முடிவதற்குள்ளாக சிறையிலிருந்து வெளியே அனுப்பப்படு வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவரவர்களே, தேர்ச்சியிலே வெற்றி பெற்றதாலே, விடுதலை கொடுக்கலாம் என்பதற்குச் சட்டம் இடம் கொடுக்காது.

### ஆயுள் கைதிகளின் தண்டனைக் காலவரம்பு.

* 83. **வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா.

தமிழ்நாட்டில் ஆயுள் தண்டனைக் கைதிகளின் தண்டனைக் கால வரம்பை மாற்றி அமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையிலுள்ளதா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இல்லை.

**திரு. என். கிட்டப்பா :** தலைவரவர்களே, ஆயுள் தண்டனைக் கால வரம்பு இத்தனை ஆண்டுக் காலம் என்று மாற்றியமைக்கப் படுமா? திறந்த வெளி சிறைச்சாலையில் வைத்து நன்னடத்தை பார்க்க வசதி செய்து, காலவரம்பு குறைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவரவர்களே, ஆயுள் தண்டனை என்றால் ஆயுள் முழுவதும் இருக்கவேண்டியது தான். ரெமிஷன் பர்ப்பஸுக்காக கணக்கிடும்போது 20 ஆண்டுகாலம் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. 3-லே 2 பங்கு ஆயுள் தண்டனை அனுபவித்து அதற்கென்று ஒரு ஆட்சேபணை கமிட்டி வைத்து, அந்தக் கமிட்டி அதைப் பரிசீலித்து, அரசாங்கத்திற்கு சிபார்சு செய்யும். அந்தப் பரிந்துரைகளை வைத்து 'ப்ரீமெச்சூர்' ரிலீஸ் கொடுக்க அரசு உத்தரவிடும்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** தலைவரவர்களே, ஆயுள் கைதிகள் என்றால், ஆயுள் பூராவும் இருக்க வேண்டுமென்று நான் நினைக்க வில்லை. சாதாரணமாக 10 ஆண்டுகளுக்கு மேலே அவர்கள் விடுதலை செய்வதற்கான ஏற்பாடு செய்யப்படுகிறது. இன்று பல சிறைச்சாலைகள் 15-17 ஆண்டுகள் சிறையில் கைதிகள் இருக்கிறார்கள் என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவரவர்களே. ஆயுள் தண்டனைக் காலம் 10 ஆண்டு காலம் என்று எந்தச் சட்டமும் சொல்லவில்லை. ஆயுள் தண்டனை என்றால் ஆயுள் தண்டனைதான். விடுதலை செய்வதற்கு விதிகளில் இடம் செய்திருக்கிறோம். அந்த விதிகளின்படி 20 ஆண்டுகள் ஆயுள் தண்டனை காலம் என்று

கணக்கிட்டுக் கொண்டு அதிலே 3-ல் 2 பங்கு தண்டனை அனுபவித்து விட்டால் 'ப்ரி-மெச்சூர்' ரிலீஸ், முன்கூட்டியே விடுதலை செய்வதற்கு அரசாங்கம் உத்தரவிடுகிறது. 15 ஆண்டுகளுக்கு மேல் சிறைச் சாலையில் இருந்தால் அவர்களை உடனடியாக அரசாங்கத்தின் பரிசீலனைக்கு அனுப்ப வேண்டுமென்று அரசாங்கம் சுற்றறிக்கை அனுப்பியிருக்கிறது.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** தூக்கு தண்டனை கொடுக்கக் கூடாது என்ற எண்ணம் பரவி வருகிறதே அதன்படி தூக்குத் தண்டனையை தமிழக அரசு ரத்து செய்ய பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அப்படி ஒன்றும் பரிசீலனையில் இல்லை.

**திரு. ஏ. சுப்பிரமணியம் :** தலைவர் அவர்களே, 'ப்ரி-மெச்சூர்' ரிலீஸ் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அது ஆலோசனைக் குழுவின் பரிந்துரையின் பேரில் செய்யப்படுகிறது என்று சொன்னார்கள். இந்த ஆலோசனைக் குழு பரிந்துரை செய்வதற்கு ஏதாவது அடிப்படை (கிரைடீரியன்) நிர்ணயிக்கப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவரவர்களே, 3-ல் இரண்டு பங்கு இருந்து விட்டால், உடனே அது ஆலோசனைக் குழுவிற்கு செல்கிறது. அந்த ஆலோசனைக் குழு அந்த கைதிகள் வாங்கி இருக்கும் மார்க்குகள் என்ன, அவர்களுக்கு ரெமிஷன் எவ்வளவு கொடுக்கலாம் என்று கணக்கிட்டு, பரிசீலனை செய்து பரிந்துரை செய்கிறது. அரசாங்கம் அந்த பரிந்துரைகளின் மீது முடிவு எடுக்கிறது.

மு.ப. 10-00 **திரு. கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே, கடும் குற்றம் புரிந்த நீண்டகாலக் கைதிகளோடும் சிறு சிறு குற்றங்கள் புரிந்து விட்டு, குறைந்த கால தண்டனை பெற்றவர்களோடும் ஒன்றாகச் சேர்த்து வைக்காமல் அவர்களைத் தனித்தனியாக வைக்க ஏற்பாடு செய்யப் படுமா? அதற்கான பரிசிலனை செய்யப் படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இப்போதே அடிக்கடி குற்றம் செய்பவர்கள் ( Habitual offenders ) மட்டுந்தான் தனியாக வைக்கப்படுகிறார்கள். ஒரு சிறைச்சாலையில் இருக்கிற குற்றவாளிகளைத் தனித்தனியாக வைக்க வாய்ப்புக்கள் இருக்கின்றன. திறந்த வெளி சிறைச்சாலையிலும் தண்டனை பெற்றவர்களை எப்படி எப்படி பிரித்து வைக்கலாம் என்பதும் யோசிக்கப்படும். கனம் அங்கத்தினர் சொல்வதுபோல் ஆயுள்தண்டனை போன்று தண்டனை அடைந்தவர்கள் கெட்டவர்கள் என்றோ குறைந்தகாலத் தண்டனை பெற்றவர்கள் கெட்டவர்கள் அல்ல என்றோ முடிவு செய்ய முடியாது.



**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இப்பொழுது கேள்வி நேரம் முடிகிறது. அவையின் அனுமதியோடு கேள்வி நேரம் நீட்டிக்கப் படுகிறது.

### *Tourism Development Corporation*

*84 *Q.* Thiru S. SANGUMUTHU THEVAR : Will the Hon. The Minister for Backward Classes be pleased to state :

(*a*) whether any Tourism Corporation has to be set up in the State; and

(*b*) if so, the details thereof ?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :**

(அ) ஆம்.

(ஆ) தமிழ்நாட்டில் சுற்றுலா வளர்ச்சிக் கழகம் அமைக்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது. அதற்[illegible] செயலாளர் தரத்தில் தனி அலுவலர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். இக்கழக அமைப்புபற்றிய விபரங்கள் முடிவு செய்யப்பட்டுள்ளன. விரைவில் இக்கழகம் பதிவு செய்யப்படும்.

Thiru K. M. SUBRAMANIAM : Will the Hon. Minister clarify whether the middle and low-income group tourism will be encouraged in this State and if so what arrangements he is proposing to make for this type of tourism apart from foreign tourism? That is point No. 1. Is the Hon. Minister also aware that several crores of rupees are being spent by luxury hotels, under the excuse of tourism, with the result many of the priority claims of people, poor people, in respect of housing, are lost?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி தமிழக சுற்றுலா வளர்ச்சிக் கழகம் பற்றியது. இதில் கனம் அங்கத்தினர் குறைந்த வருவாய் உள்ளவர்களுக்கு சுற்றுலாவிற்கு என்னென்ன ஏற்பாடுகள் என்று கேட்கிறார்கள். அதையெல்லாம் கவனிக்கத்தான் இந்த சுற்றுலாக் கழகம் அமைக்கப்படுகிறது. எல்லா இடங்களிலும் குறைந்த செலவில் தங்குவதற்கான விடுதிகளை அமைக்கவும், சுற்றுலா பயணிகள் நல்ல வகையில் தங்குவதற்கான அளவில் விடுதிகளை அமைக்கவும் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

**திரு. எம். தேவராசன் :** தலைவர் அவர்களே, உல்லாசப் பயணிகளை ஈர்க்க உதகையில் 'ரோப் வே' ஒன்றை அமைக்கத் திட்டமுண்டா? ஆம் எனில், அதற்கான வேலைகள் எப்பொழுது துவங்கும் ?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** திட்டம் இருக்கிறது. வேலைகள் துவங்குவதற்கான நடவடிக்கைகள் அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

[1971 ஜூன் 29

**திரு. மு. சுருளிவேல் :** தலைவர் அவர்களே, இந்தச் சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தில் சட்டமன்ற உறுப்பினர்களும் அங்கத்தினர்களாகச் சேர்த்துக் கொள்ளப் படுவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** சுற்றுலா வளர்ச்சிக் கழகம் என்பது ஒரு கம்பெனியைப் போல உருவாக்கப்படும். அதற்கான சட்டதிட்டங்களை உருவாக்கி வருகிறோம். அவை உருவாக்கப் பட்ட பிறகு, சட்ட மன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் இடம் பெறுவார்களா என்பது சட்ட சபைக்கு அறிவிக்கப்படும்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : When they set up this Tourism Corporation, will they have a non-official Chairman and when they appoint members to this corporation, will they do it without any political bias?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** திட்டம் இப்பொழுது கருவில் இருக்கிறது, பிறந்த பின் சொல்லுகிறேன்.

**திரு. ஏ. ஆர். சுப்பையா :** சார், இந்தச் சுற்றுலா வளர்ச்சிக் கழகம் சென்டர் டூரிஸம் டிபார்ட்மென்டின் கீழ் ஒன்று இருக்கிறது; நம் ஸ்டேட் கழகம் ஒன்று வருகிறது. இரண்டுக்கும் முரண்பாடு ஏற்படாதா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தலைவர் அவர்களே, இந்த சுற்றுலா வளர்ச்சிக் கழகம் அமைக்கப்படுவதன் நோக்கமே, தமிழகத்தில் சுற்றுலாத் துறையை வளர்ச்சி செய்ய வேண்டும் என்ற அடிப்படையில்தான். அதன் மூலம் அந்நியச் செலாவணியைப் பெற வேண்டும் என்பதுதான் நோக்கம். மத்திய சர்க்காரில் உள்ள கழகத்திற்கு இது ஆதரவாக இருக்குமே யல்லாமல் அதற்கு எதிராகவோ, போட்டியாகவோ இருக்காது.

**திரு. நா. வீராசாமி :** தலைவர் அவர்களே, இதற்கு முன்னால் இருந்த அரசாங்கம் இப்படிப்பட்ட கார்ப்பொரேஷன்கள் அமைக்கும் போது, நான்-அபிஷியல் சேர்மனையே போட்டார்கள். அதே முறையே இந்த அரசும் பின்பற்றுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தலைவர் அவர்களே, இதற்கு நான் முன்பே பதில் அளித்திருக்கிறேன்.

**திரு. கே. எ. வகாப் :** தலைவர் அவர்களே, சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்கு சட்ட திட்டங்கள் ஏற்படுத்தப் போவதாகச் சொன்னார்கள். அப்படி ஏற்படுத்தும்போது, இப்பொழுது ஜப்பான் நாட்டில் இருக்கும், ஜே. டி. எல். என்கிற ஜப்பான் ட்ராவல் சர்வீஸ் என்ற ஸ்தாபனம், உலகத்தில் உள்ள உல்லாச நிறுவனங்களில் மிக பிரசித்தமானதாக இருப்பதால், அதன் முறைகளையும் ஆராய்ந்து, அதிக அளவில் அந்நியச் செலாவணி பெறுவதற்கு நம் அரசு முயற்சிக்குமா என்று அறியவிரும்புகிறேன்.



1971 ஜூன் 29]

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தலைவர் அவர்களே, பல நாடுகளுடைய சுற்றுலா வளர்ச்சிக் கழகங்களை இந்த அரசு ஆராய்ச்சி செய்துதான் நமக்கு ஒரு சுற்றுலாக் கழகத்தை அமைக்க முடிவு எடுத்துள்ளது. தமிழகத்தில் சுற்றுலா வரும் பயணிகளை மூன்று பிரிவாகக் கொள்ளலாம். வெளிநாட்டிலிருந்து வரும் பயணிகள் ; வட நாட்டிலிருந்து வரும் யாத்திரிகர்கள் ; மூன்றாவதாக உள்நாட்டிலேயே க்ஷேத்திரங்களைப் பார்க்க வரும் பிரயாணிகள். இந்த மூன்று பிரிவு பிரயாணிகளையும் பாதுகாப்பாக வைக்க, அவர்களுடைய தேவைகளைத் தந்து, கணிசமான அளவில் கட்டணங்களைப் பெற வளர்ச்சிக் கழகம் முயற்சி செய்யும். அந்த எண்ணத்தின் அடிப்படையில் தான் இது ஏற்படுத்தப் படுகிறது. இருக்கும் சுற்றுலா விடுதிகளையும் இந்தக் கழகம் மேற்கொள்ளும். அதே போல், ரூ. 50 லட்சம் அளவில் மூலதனம் போட்டு, இதை உருவாக்கத் தீர்மானித்திருக்கிறது. இது வளர்ச்சி அடைந்த பிறகு, இதன் மூலம் உணவு விடுதிகள், சாதாரண பாமர மக்களும் தங்குவதற்கான வகையிலும், வெளி நாட்டவரைக் கவரும் முறையிலும் ஏற்பாடுகளைச் செய்யும்.

**திரு. என். இராசாங்கம் :** தலைவர் அவர்களே. இந்த சுற்றுலா வளர்ச்சிக் கழகம் ஏற்கனவே இருந்த இடங்களை வளர்ச்சி செய்வதில் மட்டும் ஈடுபடுமா அல்லது புதிதாக இடங்களை அமைக்கவும் பரிசீலிக்குமா? அப்படிச் செய்யும் போது அன்று காலத்திலேயே குறிப்பிடப்பட்ட, சிதம்பரம் பக்கத்தில் உள்ள பிச்சவரம் என்ற இடத்தில் சுற்றுலா மாளிகை அமைக்க வேண்டும் என்ற கோரிக்கையையும் இந்தக் கழகம் கவனிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தலைவர் அவர்களே, தமிழகத்தில் சுற்றுலாத் துறையில் ஏராளமான வேலைகள் இருக்கின்றன. நிதிப் பற்றாக்குறை இருப்பது கனம் அங்கத்தினருக்கும் தெரியும். அதே நேரத்தில் மத்திய சர்க்காரிலிருந்து பெறவேண்டிய தொகைகளையும் பெற முடியவில்லை. இல்லையென்றால், பிச்சவரத்தில் மட்டுமல்லாமல், இன்னும் கோடிக்கரை போன்ற அழகான பகுதிகள் பல இருக்கின்றன, அவற்றையும், நல்ல அளவில் வளர்த்து விளம்பரம் செய்ய முயற்சிகள் எடுக்கலாம். ஏற்கனவே இருக்கின்ற பகுதிகளை வளர்க்கவும். புதுப்பகுதிகளை விளம்பரம் செய்யவும் இந்தக் கழகம் பாடுபடும்.

**திரு. ரா. ரா. முனுசாமி :** தலைவர் அவர்களே, உதகைக்கு சீசன் காலத்தில் வரும் பயணிகள் தங்க இடம் போதாமல் இருப்பதால், உதகையில் அதிகமான பயணிகள் தங்கக்கூடிய அளவில், தக்க வாய்ப்பினை ஏற்படுத்த அரசு முயற்சிக்குமா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தலைவர் அவர்களே, அடுத்த கேள்வி இதே தான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அதையும் சேர்த்து எடுத்துக் கொள்ளலாம். கேள்வி எண் 85.

## Beautification of Ooty Hills

*85 Q. THIRU N. K. PALANISAMI: Will the Hon. the Minister for Backward Classes be pleased to state the steps taken by the Government for the beautification of Ooty hills with a view to attract tourists in large numbers?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவர் அவர்களே, உதக மண்டல மலையை சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வண்ணம் அழகு படுத்த அரசு பல தேவையான நடவடிக்கைகள் எடுத்து வருகிறது. உதகையில் படகு விடுவதற்காக கடந்த 10 ஆண்டுகளுக்கு முன் பாக, ஏரியில் தூர்வாரி இருக்கிறார்கள். உதகையில் உள்ள ஏரியில் ஒரு இல்லம் அமைப்பதற்காக இண்டோ-ஜெர்மன் பிராஜக்ட்டின் இயந்திரங்களைக் கொண்டு ஏரியிலுள்ள சேற்றை வாருவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

**திரு. எம். தேவராசன்:** தலைவர் அவர்களே, காஷ்மீரில் உள்ளதைப் போன்று உதகையிலும் படகு இல்லங்கள் அமைக்கும் எண்ணம் அரசுக்கு உள்ளதா என்று தெரிய விரும்புகிறேன்?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** அங்கத்தினரின் நல்ல ஆலோசனையை வரவேற்கிறேன். ஆனால் அது அரசின் எண்ணத்தில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திருப்பூர் திரு. ஏ. எம். மொய்தீன்:** சுற்றுலா என்கிற பெயராலே வெளி நாட்டிலிருந்து வருகிறவர்களிலே ஒழுக்கத்தைக் கெடுக்கும் ஹிப்பிகள் வருகிறார்கள். அத்தகையவர்களைப் பார்த்து அவர்களை சுற்றுலாவுக்குத் தகுதியில்லாதவர்கள் என்று தீர்ப்பு அளிக்குமாறு இந்தச் சர்க்காரைக் கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவர் அவர்களே, ஹிப்பிகளால் எந்த நிலைமையும் கெட்டுவிட்டதாக அரசுக்குத் தகவல் இல்லை. அப்படிப்பட்ட தகவல் வருமானால், அரசு அதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்கத் தயங்காது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. துரைமுருகன்:** மேட்டுப்பாளையத்திலிருந்து உதகை செல்லும் ரயில் பாதையில் நீலமலை மங்கையின் எழில்மிகு கோலத்தையே காணலாம். அப்படிப்பட்ட ரயில் பாதையை மத்திய அரசு நஷ்டம் காரணமாக எடுத்து விடுவது என்று அறிவித்தது. நம்முடைய மாநில அரசு அதை எடுக்கக் கூடாது என்று மத்திய அரசுக்கு தெரிவித்தபின் ஏற்பட்டுள்ள நிலைமை என்ன என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவர் அவர்களே, உலகத்திலேயே ஒரு சிறந்த ரயில் பாதை என்று சொன்னால் அது நீலகிரி மலை ரயில் பாதைதான் என்று ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். ரயில்வே அமைச்சர் பூனைச்சா காலத்தில் தான் அந்த ரயில் பாதையை அகற்றிவிடவேண்டும் என்ற எண்ணம் இருந்தது. அதற்குப் பிறகு தமிழகத்திலிருந்த உறுப்பினர்கள் முறையிட்டதற்குப் பின்னால் விட்டுவிட்டார்கள். நஷ்டம் இருந்தால் இருக்கட்டும் என்று தொடர்ந்து இருந்துவருகிறது. அதைப் பயன்படுத்திக் கொள்ளும் வகையில் பிரசாரம் செய்யவேண்டியது நம்முடைய கடமை என்பதை மீண்டும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.





THIRU K. M. SUBRAMANIAM: Will the Hon. Minister consider providing cheap facilities for the ordinary people going to Ootacamund? At present only rich people can afford a trip to Ootacamund and enjoy the facilities. In the new proposals can he provide cheaper facilities so that the low and middle income groups can also enjoy Ootacamund life?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவர் அவர்களே, உதகைக்கு மூன்றாம் கிளாஸ் ரயிலில் போகலாம், அல்லது சாதாரண பஸ்களில் போகலாம். அது மட்டுமல்லாமல் அங்கே போய்த் தங்குவதற்கு . . . .

MR. SPEAKER: The hon. Member is asking what further steps you are going to take. That is the question.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** கோத்தகிரியில் ஒரு 'வியூ பாயிண்ட்' அமைக்க ஏற்பாடு செய்திருக்கிறது அரசாங்கம். 'டூரிஸ்ட் ஹோம்' வெளிநாட்டுக்காரர்கள் தங்குவதற்கான வகையில் —இந்த 2 திட்டங்கள் தான் நாம் மேற்கொண்டுள்ளோம். மற்ற திட்டத்திற்கான நடவடிக்கை ஏதுவும் தற்போது இல்லை.

**திரு. கா. காளிமுத்து:** உதகை போன்ற எழில் மிகுந்த இடத்தை ஒரு கலாச்சாரம் நிறைந்த வெளிநாட்டவரை ஈர்க்கும் படியான நடவடிக்கை எடுக்க இந்த அரசு ஏற்பாடு செய்திருக்கிறார்களா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** நம்முடைய முதல் அமைச்சர் நடத்தும் செய்தித் துறை மூலம் இதற்கு நல்ல விளம்பரக் கார்டு எல்லாம் வெளிநாட்டுப் பயணிகளைக் கவரத்தக்க முறையில் கலை, கலாச்சாரத் துறையில் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அதைப் போலவே உதகையைப் போன்ற மலை நகரத்தின் முக்கியத்துவத்தைப்பற்றி ஒரு புத்தகம் வெளியிட்டிருக்கிறார்கள். வெளிநாட்டிலிருந்து வருகிறவர்கள் உதகையில் வந்து தங்கி பயன் அடையத்தக்க வகையில் இந்த ஏற்பாட்டை எல்லாம் செய்து மிகச் சிறப்பாக நடத்துகிறார்கள் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. கா. வேழவேந்தன்:** மேலை நாட்டுப் பகுதியிலிருந்தும், கீழை நாட்டுப் பகுதியிலிருந்தும் டில்லியில் வந்து இறங்குகிற பயணிகள் இந்த உதகையைப் போன்ற ஒரு எழில் மலை இருக்கிறது என்பதைப் பற்றி தங்களுக்கு நல்ல முறையில் அறிவிக்கப் படவில்லை என்று குறைபாட்டைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அதற்காக தமிழக அரசு என்ன நடவடிக்கை எடுக்க

இருக்கிறது என்பதையும், டில்லியில் வந்து இறங்குகிற பயணிகளுக்கு உதகையைப் பார்த்துச் செல்வதற்காக என்ன திட்டம் செய்யப்பட்டு இருக்கிறது என்பதையும் தெரியப்படுத்த வேண்டுகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** உதகையைப் பற்றி அழகான வண்ணச் சுவரொட்டிகள் அமைக்கப்பட்டு வெளிநாடுகளுக்கு அனுப்பப்படுகின்றன. அந்தச் சுவரொட்டிகள் அந்நாட்டு சுற்றுலா பயணிகளுக்காக வெளிநாட்டில் ஒட்டப்பட்டு பிரச்சாரம் செய்யப்படுகிறது என்பதை மட்டும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால், உறுப்பினரால் அவ்வுரை சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

### (3) கவன ஈர்ப்பு.

மதுரை செந்தமிழ் ஓரியண்டல் கல்லூரி மூடப்பட்டது குறித்து.

MR. SPEAKER: Thiru K. T. K. Thangamani and Thiru P. Malaichamy hvae given a calling attention notice under Rule 41 of the Assembly Rules.

THIRU K. T. K. THANGAMANI: Mr. Speaker, Sir, under Rule 41 of the Tamil Nadu Legislative Assembly Rules I call the attention of the Hon. Minister for Education and Local Administration to a matter of urgent public importance, namely, the proposal to abolish the Senthamil College, Madurai which is an affiliate of the Madurai University and the consequent hardships to staff and students and loss of prestige to the City with 15 years of continued existence to the Institution. I request that he may be pleased to make a statement thereon.

**திரு. பெ. மலைச்சாமி :** மதுரைப் பல்கலைப் கழகத்துடன் இணைந்துள்ள மதுரை செந்தமிழ்க் கல்லூரியை எடுத்துவிடப்பட வேண்டும் என்று எழுதியுள்ளதன் விளைவாக மேற்படி கல்லூரிப் பணியாளர்களுக்கும் மாணவர்களுக்கும் இடர்ப்பாடு ஏற்பட இருப்பதும், இந்நகரில் தொடர்ந்து 15 ஆண்டு காலமாக இருந்து வருகின்ற இக்கல்லூரி எடுத்துவிடப்படுவதனால் நகரின் மதிப்புக்கு இழுக்கு ஏற்படுவதும் குறித்து அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்துக்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** மதுரையிலுள்ள செந்தமிழ் ஓரியண்டல் கல்லூரி மதுரைத் தமிழ்ச் சங்கத்தாரால் நடத்தப்பட்டு வருகிறது. செந்தமிழ் ஓரியண்டல் கல்லூரி மதுரைப் பல்கலைக்கழகத்துடன் 1957-முதல் இணைக்கப்பட்டுள்ளது.





இக்கல்லூரி தமிழ்ச் சங்கத்தின் எல்லைக்குள் இயங்கி வருகிறது. செந்தமிழ்க் கல்லூரியும் இத்துடன் இணைந்து சங்க எல்லைக்குள் இயங்கி வருகிறது. செந்தமிழ் ஓரியண்டல் கல்லூரி மாணவர்களிடமிருந்து சம்பளம் வசூல் செய்யவில்லை. தமிழ்ச் சங்கம் மூன்றில் இரண்டு பகுதி பற்றுக்குறையை கல்வி மானியமாகப் பெற்று வருகிறது. 1968-69-ல் தமிழ்ச் சங்கம் செந்தமிழ் கலைக் கல்லூரியைப் பெண்களுக்காகத் துவக்கியது. அக்கல்லூரியையில் புகுமுக வகுப்பில் தமிழ் சிறப்புப் பாடமாகவும், பி.ஏ. பட்டப்படிப்பில் ஒருபகுதியாக தமிழையும் கொண்டு இயங்கியது. மேற்கூறிய இரு கல்லூரிகளும் ஒரே இடத்தில் இருந்தமையால், இட நெருக்கடி ஏற்பட்டது. இது தவிர மாணவர்களிடையே ஒழுக்கக் குறைவான நடவடிக்கைகளைத் தமிழ்ச் சங்கம் சந்திக்க நேரிட்டது. அரசிடமிருந்து மூன்றில் இரண்டு பங்கு மானியம் பெற்ற போதிலும், ரூ. 20,000 வரை நிர்வாகத்தினருக்கு ஏற்று நடத்துமாறு அரசுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர். ஓரியண்டல் கல்லூரிக்கு 1968-69 முதல் மாணவர்களைச் சேர்ப்பதை நிறுத்தி விட்டனர்; 1968-69 முதல் சேர்க்கப்பட்ட மாணவர்கள் ஏப்ரல் 1971-ல் படிப்பை முடித்துவிட்டனர்.

இவ்வாறு நிர்வாகத்தினர் 1968-69-லேயே படிப்படியாக கல்லூரியை மூடிவிட முடிவு செய்து விட்டனர். ஆயினும், ஏப்ரல் 1971-ல் கடைத் தொகுதி மாணவர்கள் தங்கள் படிப்பை முடிக்கும் தருவாயில் நிருவாகத்தினர் ஓரியண்டல் கல்லூரி ஊழியர்களுக்கு, அவர்களது பணி இனி தேவையிருது என 1970 மே மாதத்திலேயே அறிவிப்பு கொடுத்து விட்டனர். ஊழியர்கள் தங்களது பணியை முடிக்க வேண்டாமென்று நிருவாகத்தினருக்கு வேண்டுகோள் விடுத்தனர். அவர்கள் ஓரியண்டல் கல்லூரிக்கு மாற்று இடம் தருவதாகவும் 1970-71 முதல் வித்துவான் படிப்பை தொடருமாறும், நிருவாகத்தினரைக் கேட்டுக்கொண்டனர். அவர்களது இக்கோரிக்கை நிருவாகத்தினரால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஜூன் 1970-ல் இரண்டாமாண்டு வித்துவான் படிப்பிற்கு 27 மாணவர்கள் சேர்க்கப்பட்டனர். மாற்று இடம் வாடகைக் கட்டடங்களிலேயே தனியாக அமைக்கப்பட்டது. இந்த 27 மாணவர்களும் இன்னும் தங்கள் படிப்பை முடிக்கவில்லை. அவர்கள் இரண்டாண்டு படிப்பை தொடர்ந்து படிக்க அனுமதிக்கப்படுவர் என நிருவாகத்தினர் கூறி உள்ளனர். எனவே, கல்லூரியை மூடிவிடல் என்ற நிருவாகத்தினரின் எந்த முடிவினாலும் இந்த மாணவர்கள் பாதிக்கப்படமாட்டார்கள்.

ஓரியண்டல் கல்லூரி மாணவர்கள், அக்கல்லூரியை அரசே ஏற்று நடத்துமாறு அரசுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர். மாநில அரசு எந்த ஓரியண்டல் கல்லூரியையும் ஏற்று நடத்தவில்லை. இயங்கிவரும் எல்லா ஓரியண்டல் கல்லூரிகளும் தனியார் துறையினராலேயே நடத்தப்படுகின்றன. எனவே, இக் கல்லூரியை மாநில அரசு ஏற்று நடத்துதல் என்ற கேள்விக்கு இடமில்லை.

**திரு. பெ. மலேச்சாமி :** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் நிதிப்பற்றுக்குறை என்று குறிப்பிட்டார்கள். ஆனால் நிதிப் பற்றுக்குறை செந்தமிழ் கல்லூரிக்கு இல்லை. இப்போது கூட ஒரு லட்சம்-ரூபாய் இதற்கு நிதி இருப்பதாக கூறப்படுகிறது. எனவே இப்போது நிர்வாகத்தை மாற்றி புதிய நிர்வாகத்தை அமைத்தால் நிச்சயமாக செந்தமிழ் கல்லூரி இயங்க வாய்ப்பு இருக்கிறது, என்பதை அரசு உணர்ந்து வேறு நிர்வாகத்தை அமைக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, கழக உறுப்பினர் கோருகிற மாற்றத்தை மதுரை தமிழ் சங்க விதி முறைகளுக்கு உட்பட்டுத்தான் செய்ய இயலும். இப்போது உள்ள நிர்வாகத்தை அரசு மாற்றுவது என்பது இயலாது. தமிழ் சங்கத்தின் விதி முறைகள் அந்த அடிப்படையில் அமைந்திருக்கின்றன. அதை மாற்றவேண்டும். அதை மாற்றுவதற்கான சூழ்நிலையை கழக உறுப்பினர் செய்வார் என்று நம்புகிறேன்.

(4) அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) 1971-ம் ஆண்டு நில உடைமைகள் (நிறைவேற்றுதல் நடவடிக்கைகளை நிறுத்திவைத்தல்) (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவரவர்களே, 1971-ம் ஆண்டு நில உடைமைகள் (நிறைவேற்றுதல் நடவடிக்கைகளை நிறுத்தி வைத்தல்) (தமிழ்நாடு திருத்த) சட்டமுன் வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** இச்சட்ட முன் வடிவை அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இச்சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

(ஆ) 1971-ம் ஆண்டு சென்னை மாநகர சிவில் நீதிமன்ற (திருத்த) சட்டமுன்வடிவு.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவரவர்களே, 1971-ம் ஆண்டு சென்னை மாநகர சிவில் நீதிமன்ற (திருத்த) சட்ட முன் வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இச் சட்டமுன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இச்சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.





(5) 1971–72-ம் ஆண்டுக்கான திருத்தப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தின் மீது பொது விவாதம்—தொடர்ச்சி.

* **திரு. இ. எஸ். தியாகராசன் :** மாண்புமிகு தலைவரவர்களே, முதலமைச்சர் கலைஞர் அவர்கள், இந்த அவை முன் வைத்துள்ள பட்ஜெட், கடந்த காலங்களில் சமர்ப்பித்த பட்ஜெட்டுகளைவிட சிறப்பு வாய்ந்த பட்ஜெட் என்று எல்லோரும் ஒப்புக்கொள்ளக் கூடியதாக இருக்கிறது. புதிய வரிகள் ஏதும் போடாமல் இருந்ததில் மகிழ்ச்சி. பழைய வரிகளை உயர்த்தியிருந்தாலும் அது ஏழைகளை பாதிக்காது. சில விதி விலக்குகள் தாழ்த்தப்பட்ட, வகுப்பினருக்கு கொடுத்திருப்பது மகிழ்ச்சிக்குரியது. தாழ்த்தப் பட்ட, பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள் முன்னேற்றத்துக்கு அரசு பல சலுகைகளையும் வசதிகளையும் வழங்கியுள்ளதை அந்தச் சமூகத்தை சேர்ந்தவன் என்ற முறையில் பாராட்டுகிறேன்.

கிராமவாசிகளுக்கும் ஏழைகளுக்கும் வழங்கப்பட இருக்கும் நீண்டகால கடன் வசதித் திட்டத்தை கிராமவாசி என்ற முறையில் பாராட்டுகிறேன். வேலையற்றோருக்கு வேலை வழங்குவதற்கும் அவர்கள் தொழில் துவங்க ஏற்பாடு செய்திருப்பது சமுதாயத்தின் அடித்தளத்திலுள்ள ஏழை எளிய மக்களுக்கு குறிப்பாக கிராம வாசிகளுக்கு இன்னலை நீக்கி வசதியைப் பெருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

ராஜமன்னார் கமிட்டி தன்னுடைய சிபாரிசுகளை அறிவித்திருக்கிறது. துரதிருஷ்டவசமாக மாநிலங்களுக்கு சுயாட்சி வழங்க வேண்டும் என்கிற நமது அரசுக் கோரிக்கையை மத்திய அரசு ஏற்றுக்கொள்ளாதது வருந்தத்தக்கது. அந்தக் கோரிக்கையை வற்புறுத்தும் எல்லா நடவடிக்கைக்கும் தமிழரசுக் கழகம் தன்னுடைய ஆதரவைக் கொடுக்கும். இந்த பட்ஜெட் சோஷலிஸ்டு பட்ஜெட், ஏழைகளுக்கு நலன் தரும் பட்ஜெட். எங்களது ஒப்பற்ற தலைவர் திரு. ம. பொ. சி. அவர்கள் நாடு முழுவதும் மதுவிலக்கை அமல் நடத்தக்கோரும் கோரிக்கையை மத்திய சர்க்காரிடம் வற்புறுத்துவதோடு மதுவிலக்கைக் கைவிடவேண்டும் என்பதை ஓர் ஆண்டுக்கு ஒத்திப் போடவேண்டும் என்று கூறியிருக்கிறார். அதற்கு இந்த அரசு செவி சாய்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1971-72-ம் ஆண்டுக்கான வரவு-செலவு திட்டத்தை நிதி அமைச்சர் அவர்கள் நம் முன்னால் சமர்ப்பித்திருக்கிறார்கள். அதனுடைய சில அம்சங்களைப் பற்றி நான் விவரமாக பேசுவதற்கு முன்னால், இந்த பட்ஜெட்டைப்பற்றி என்னுடைய கட்சியின் நிலை என்ன என்பதை தெரிவிக்க விரும்புகிறேன். அதைச் சொல்லி விட்டு சில விளக்கங்களும் தர நினைக்கிறேன். இந்த வரவு-செலவு திட்டமானது அரசியல் சட்டத்தின் அடிப்படையில் தயாரிக்கப் பட்டதின் காரணமாக, அதில் சில ஊனங்கள் இருக்கும் என்பதை

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1971 ஜூன் 29

எங்கள் கட்சி ஒத்துக்கொள்கிறது. பொதுவாக இந்த வரவுசெலவு திட்டம் தமிழகத்தை எதிர் நோக்கியுள்ள பிரச்னைகளுக்கு தீர்வு காணவேண்டும் என்ற நல்லெண்ணத்தையும் அதற்கு ஆவன செய்வதற்கு சில நடவடிக்கைகள் பின் அணியில் இருக்கின்றன என்பதையும் ஏற்றுக்கொள்ளவேண்டும். இருந்தாலும் கூட சில குறைபாடுகளை நான் சுட்டிக்காட்டாமல் இருக்க முடியாது.

விவசாயப் பிரச்னை நிலச் சீர்திருத்தம் சம்பந்தமாகவும் அதை ஒட்டியுள்ள விஷயங்கள் பற்றியும் அரசாங்கத்தின் நிலை பற்றியும் இந்த பிரசங்கத்தில் ஒன்றும் பார்க்க முடியவில்லை. அதே மாதிரி தொழிலாளர் பிரச்னையும் அரசின் கவனத்தை உரிய அளவில் போதிய முறையில் ஈர்க்கவில்லை என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன். மூடப்பட்ட மில் சம்பந்தமாகவும் இதில் ஏதும் கூறப்படவில்லை என்பதைச் சொல்ல வேண்டும்.

பெரும் பஸ் போக்குவரத்து அரசு உடைமையாகப் போவதும் பத்து பஸ்களுக்கு மேற்பட்டு தனியார் யாரும் வைத்துக்கொள்ளக் கூடாது என்று நிர்ணயம் செய்து இருப்பதும் சரியானது என்று வரவேற்கிறோம். இது தொழில் ஏகபோகத்தை தடுக்கும் நல்ல நிலையாகும்.

விவசாய வருமான வரி விதிப்பில் செய்துள்ள மாற்றத்தை வரவேற்கிறேன். மதுவிலக்கு என்பதில் பொதுவாக எல்லோருக்கும் உடன்பாடுதான். ஆனால், தமிழகத்தில் இது அமல் நடத்தும் காலத்தில் தோல்வி ஏற்பட்டு விட்டது என்பதை எல்லோரும் ஏற்றுக்கொள்வர். பல விவரங்களை நான் எடுத்திருக்கிறேன் அதில், லஞ்சம், ஊழல், கலப்படம் சமுதாயத்தை பாதிக்கும்படியான நிலைகள் எல்லாம் ஏற்பட்டு இருக்கின்றன. நம் சமுதாயமானது வற்புறுத்தி இதைத் தொடர்ந்து செய்ய வேண்டாம் என்று சொல்லக் கூடிய அளவிலே, அந்த அடிப்படையிலே அரசு இம்முடிவை எடுத்திருப்பதை வரவேற்கிறோம். பொதுவாக. இந்த அரசு மக்களுடைய அபிலாஷைகளை ஆராய்ந்து அதற்கு ஏற்றவாறு தங்களுடைய நிலையை மாற்றிக்கொண்டிருக்கிறார்கள் என்ற ஒரு நல்ல அம்சத்தை நான் இந்த இடத்தில் குறிப்பிட வேண்டும்.

விற்பனை வரி 3 சதத்திலிருந்து 3½ சதமாகவும், சென்னையில் 10 சதம் சர்சார்ஜ் உயர்த்தியது சரியல்ல என்பதும் நம்முடைய நிலை. நகர் வீட்டு மனைக்கு விதிக்கப்பட்ட வரி விதிப்பை முழு மனதோடு வரவேற்கிறோம். வேலை வாய்ப்பு அளிப்பதற்காக திட்டங்கள் போடப்பட்டிருந்தாலும் அவை மட்டும் பிரச்னையைத் தீர்க்காது. வேலைகளுக்கு ஆட்களை நிரப்புகிறபோது சர்வீஸ் கமிஷன் மூலமாக ஏற்பாடு செய்தால் மற்றவர்கள் இதை எதிர்த்துப் பேசுவதற்கு இடமில்லாமல் போகும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். இது தான் பட்ஜெட் சம்பந்தமான நிலை என்று சுருக்கமாக தெரிவித்துக்கொள்கிறேன். மத்திய அரசாங்கத்திலே எகனமிக் ரெவ்யூ என்று வெளியிடுகிறார்கள். அது மாதிரியாகத்தான் இங்கு (எகனமிக் கிளாஸிபிகேஷன்)



1971 ஜூன் 29] [திரு. கே. டி. கே. தங்கமணி]

"An economic classification of the Tamil Nadu Government Budgetary transaction, 1971–72.

என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. இதிலிருந்து தமிழகத்தின் பொருளாதார தன்மையைப் புரிந்து கொள்ள முடிகிறது என்பதைப் பார்க்கும்போது இந்த அரசைப் பாராட்டாமல் இருக்க முடியாது. அதில் உள்ள சில அம்சங்கள் வரவேற்கத்தக்கவை தான். அதிலே பின் வருமாறு தெரிவிக்கப்பட்டு இருக்கிறது.

The Budget for 1971–72 shows that the total provision for net capital formation out of the Budgetary resources of the State Government has been stepped up from Rs. 5,768 lakhs in 1970–71 to Rs. 8,862 lakhs in 1971–72, representing an increase by 53.6 per cent. The income directly generated from the Government sector is also anticipated to rise to 11,834 lakhs in 1971–72 from Rs. 9,968 lakhs in 1970–71. This indicates an increase of 18;7 per cent மேலும் அதிலே பின்வரும்போது சொல்லப்பட்டிருக்கிறது of the deficit of Rs. 59 crores, Rs 19 crores is for increased emoluments to the Government employees, Rs. 17 crores for new activities and Rs. 23 crores represent the existing deficit.

அடுத்து பக்கம் 22-லே 1971-72 சர்க்காருடைய நிர்வாகச் செலவு ரூ. 1,18,34 லட்சங்கள் என்று குறிப்பிட்டு இருக்கிறார்கள். இந்த ஆண்டு மொத்தச் செலவு 16-ம் பக்கத்திலே ரூ. 3,60,02 லட்சம் என்று கூறப்பட்டிருக்கிறது. இடைக்கால பட்ஜெட் சமர்பிக்கும்போது நிதி அமைச்சர் அவர்கள் நம்முடைய வருவாய் ரூ. 416 கோடியாக இருக்கும் என்றும் செலவு ரூ. 458 கோடியாக இருக்கும் என்றும் சொல்லியிருக்கிறார். பக்கம் 17-ஐப் பார்த்தால் (நெட் கேபிடல் பார்மேஷன்) ரூ. 3,630 லட்சம் என்று குறிப்பிடப்பட்டு இருக்கிறது. பக்கம் 18-ல் மேலும் விளக்கமாக கொடுக்கப்பட்டு இருக்கிறது. இந்த அளவுக்கு வளர்ச்சி இருக்கிறது என்றும் அதற்கேற்ற வகையில் பல துறைகளில் செலவினங்கள் ஏற்படும் என்றும் தெளிவாக போடப்பட்டு இருக்கிறது.

பொதுவாக வரிபோடக்கூடாது என்பது எங்கள் கட்சியைப் பொறுத்தவரையில் உள்ள கொள்கையல்ல. 1967-க்கு பிறகு 5 மாநிலங்களில் கூட்டாக ஆட்சியில் இருந்திருக்கிறோம். இப்போது குறிப்பாக கேரள மாநிலத்தில் முதலமைச்சராக இருக்கிறவர் எங்கள் கட்சியைச் சேர்ந்தவர். ஆகவே, வரிபோடாமல் ஆட்சி நடத்துவோம் என்று நாங்கள் சொல்லவில்லை. ஆனால் வரி போடுகிற நேரத்தில் சாதாரண மக்கள் உபயோகிக்கும் பண்டங்கள் எல்லாம் விலை உயர்ந்து கொண்டு போகும் நேரத்தில் இம்மாதிரி விலைவாசிகளை ஏற்றக்கூடிய வகையில் வரிகள் கூடாது என்பதுதான் எங்கள் கொள்கை. அப்படி வருகிறபோது சில கோடிகள் கொடுக்கும் விற்பனை வரி உயர்வோ, 3 கோடி கொடுக்கும் சர்சார்ஜோ அவசியம் இல்லை. அது இல்லாமல் சமாளிக்கமுடியும். ஏற்கெனவே விற்பனை வரி பாக்கி இருக்கும் நபர்களிட

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1971 ஜூன் 29

மிருந்து வரவேண்டியதை வசூலித்தால் வரி போடவேண்டிய நிலை வராது. அது முறையாக வசூல் செய்தால் 93 கோடிக்கு மேல் கிடைக்கும் என்பதுதான் எங்கள் நிலை.

தவிர 10 வீடுகளுக்கு மேல் வைத்துக்கொண்டு இருப்பவர்களுக்கு அதன் மூலம் பிழைப்பு நடத்தி அந்த வருமானத்தை மட்டும் வைத்துக் கொண்டு ஒரு பெரிய பணக்காரன் ஆகவேண்டும் என்ற போக்கு தமிழகத்தில் குறைக்கப்படவேண்டும். அதற்கேற்ற முறையில் நகரத்தில் உச்ச வரம்பு கட்டவேண்டும்.

எங்கள் கட்சியைச் சேர்ந்த திரு. சுப்பு அவர்கள் ஆசிரியர்கள் நிலைபற்றி பேசும்போது ஒரு கருத்தைத் தெரிவித்தார்கள். 25 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் ஏற்படுத்தினாலே போதும். பயிற்சி பெற்று வேலையில்லாமல் இருக்கும் ஆசிரியர்கள் வேலைப் பிரச்னை தீர்ந்துவிடும், என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

நர்சுகள் மருத்துவ மனைக்கு அதிகமாகத் தேவைப்படும் இந்த நேரத்தில் அந்தப் பயிற்சியை நிறுத்தாமல் சென்னையில் 50 பேர்களுக்கும் மதுரையில் 50 பேர்களுக்கும் பயிற்சி கொடுப்பது நல்லது என்று கூறுகிறேன். இன்னொன்று—நில மீட்சிப் படை என்ற ஒரு படையை அமைக்கலாம் என்பது என்னுடைய கருத்து. 4 லட்சம் ஏக்கர் நிலங்கள் அறநிலையப் பாதுகாப்பிலுள்ள மட நிலங்களின் மொத்த வருமானம் ரூ. 5 கோடி ; மட சொத்து, தங்கம், வெள்ளி ரூபாய் 27 கோடி. இவைகளெல்லாம் இப்போது 'டெட் கேபிடல்' ஆக இருக்கின்றன. அவைகளை முதலீடு செய்யலாம். இது மாத்திரமல்லாமல் எங்களைக் கேட்பார்களேயானால். இன்றைக்கு மத்திய அரசு சொல்லுகிறது வரி ஏய்ப்பு பற்றி—போட்டுள்ள வரியிலிருந்து 'டிமிக்கி' கொடுப்பவர்கள், ஏமாற்றுகிறவர்கள் பலர் இருப்பதாகச் சொல்லலாம். அந்த மொத்த தொகை ரூ. 750 கோடி. நாம் மத்திய அரசை தெளிவாக கேட்க முடியும். தமிழகத்தில் அம்மாதிரி ஏமாற்றுகிறவர்களுடைய 'லிஸ்ட்' கொடுங்கள். நாங்கள் வசூல் பண்ணிக் கொடுக்கிறோம். அப்படி வசூல் பண்ணிக் கொடுத்தால், அதில் ஒரு பகுதி எங்களுக்கு கொடுக்கலாம் என்ற முறையில் பேச்சு வார்த்தை நடத்தலாம். அப்படி நடத்தும்போது என்ன இடைஞ்சல் இருக்கிறது என்று பார்க்கலாம் என்பது எங்கள் அபிப்பிராயம்.

அடுத்து, மத்திய—மாநில அரசுகள் உறவு பற்றி வெகு தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். உண்மையிலேயே ராஜமன்னார் கமிட்டி ரிப்போர்ட்டின் பேரில் ஒரு விவாதம் நடத்தியிருந்தால் உதவிகரமாக இருக்கும் என்பது என்னுடைய கருத்து. எந்தெந்த அடிப்படையில் அதிக அதிகாரம் வேண்டுமென்பதை தெளிவுபடுத்தி உள்ளது. தேர்தல் காலத்தில் தமிழகத்தில் ஏழு கட்சி கூட்டணி அமைந்திருக்கிறது. அப்போது மக்களுக்கு சாதகமான முறையில் அரசியல் சட்டத்தை திருத்துவோம், சோஷலிச சமுதாயத்தை, மதச் சார்பற்ற அமைப்பை ஏற்படுத்து



1971 ஜூன் 29] [திரு. கே. டி. கே. தங்கமணி]

வோம் என்று மக்களிடத்தில் கூறினோம். இன்றைக்கு அதே கருத்தை, அன்று நம்மை எதிர்த்தவர்கள் கூட ஆதரிக்கும் நிலைமையைப் பார்க்கிறோம்.

நேற்றைய தினம் நடந்த ஸ்தாபன காங்கிரஸ் கமிட்டி கூட்டத் தீர்மானத்தைப் பார்த்தால், அரசியல் அமைப்புச் சட்டம் பல முறைகளில் மாற்றப்படவேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அம்மாதிரி நிலை எடுத்தது ரொம்ப வரவேற்கத்தக்க அம்சம் தான். பொதுவாக மக்கள் அதை விரும்புகிறார்கள் என்று எடுத்துக் காட்டுகிறது.

ஆனால், சுதந்திராக் கட்சியின் நிலை என்ன என்று இன்று வரை தெரியவில்லை. ஏனென்றால் அதிகார பூர்வமாக அவர்களுடைய தலைவர் என்றைக்குமே அது ஒரு பகவத்கீதை மாதிரி என்று சொல்லுகிறார்கள். ஆகவே அவர்களும் அந்த நிலையை மாற்றினார்கள் என்று சொன்னால் எவ்வளவோ அளவு உதவியாக இருக்கும்.

இன்றைக்கு மத்திய அரசுக்கும் மாநில அரசுக்கும் ஏற்பட்டுள்ள சில பாகுபாடுகளைப்பற்றி இடைக்கால பட்ஜெட்டை சமர்ப்பிக்கும்போது நிதியமைச்சர் அவர்கள் நல்ல விவரங்கள் கொடுத்தார்கள். அது உறுப்பினர்கள் எல்லோருக்கும் தெரியும் என்பதால் நான் அதைக் குறிப்பிட விரும்பவில்லை. அதே நேரத்தில், நமக்கு நிதிக் கமிஷனுக்கு அப்பாற்பட்ட திட்டக் கமிஷன் பணம் ஒதுக்கும் நிலை இருக்கிறது என்பதை எல்லோரும் அறிவார்கள். அப்படி வருகிறபோது 17—6—71-ம் தேதி "மெயில்" பத்திரிகையில் வந்த செய்தியை நான் உங்களுக்கு சொல்லுகிறேன். தமிழ்நாடு இவ்வாண்டு கேட்டது ரூ. 67.41 கோடி. ஏற்கெனவே அரசு ஒத்துக்கொண்டிருந்தது ரூ. 50 கோடி. ஆனால் இப்போது அவர்கள் கொடுப்பதாக ஏற்றுக்கொண்டது ரூ. 40 கோடி, 40 லட்சம். மேற்கு வங்கத்தில் கேட்டது ரூ. 60 கோடி. கொடுப்பது ரூ. 44 கோடி 20 லட்சம். உத்தரப் பிரதேசத்தில் கேட்டது ரூ. 44 கோடி 20 லட்சம். கொடுப்பது 150 கோடி 20 லட்சம். மகாராஷ்டிரத்தில் கேட்டது 38 கோடி 28 லட்சம். அவர்கள் கொடுப்பது ரூ. 45 கோடி 10 லட்சம். இம்மாதிரி சில மாநிலங்களுக்கு கேட்டதற்கும் அதிகமாகவே கொடுத்திருக்கிறார்கள். நாம் எவ்வளவோ கேட்டிருக்கிறோம். கடைசியில் கேட்டதற்கும் குறைவாக கொடுக்கும் இந்த நிலைமை இருக்கிறதே, இவை கண்டிப்பாக மாற்றப்பட வேண்டும். எப்படி காவிரி நீர் சம்பந்தமாக தமிழகத்தில் இன்றைக்கு கூடியுள்ள மக்கள் எல்லோரும் கட்சிப் பாகுபாடில்லாமல் சேர்ந்து நிற்கிறார்களோ, அந்த முறையில் தமிழ்நாட்டு மக்களுக்கு போதுமான நிதி வசதி கொடுக்கவேண்டுமென்பதில் சேர்ந்து நிற்கவேண்டும். அந்த முறையில் நிதியை அதிகமாக மத்திய அரசிலிருந்து பெறுவதன் மூலமாக நமக்கு எவ்வளவோ வசதிகள் கிடைக்கும்; அதைச் செய்வதற்கு முயற்சிக்க வேண்டும்,

[திரு. கே. டி. கே. தங்கமணி [1971 ஜூன் 29

இப்போது 1971-72-ம் ஆண்டு மத்திய சர்க்கார் பட்ஜெட் சமர்ப்பித்தபோது அவர்களுக்கு ரூ. 4,162 கோடி கிடைக்கிறது. ஆனால், மாநிலங்களுக்கு கொடுப்பது ரூ. 1,219 கோடி தான். நம்முடைய குறிப்பிலிருந்து பார்த்தால் 'டேக்ஸ்' லிருந்து மத்திய சர்க்கார் நமக்கு கொடுப்பது ரூ. 50 கோடி. எப்படி ரூ. 50 கோடி? தீவிர திட்டத்துக்காக இந்தியா பூராவுக்கும் வகுக்கும்போது நமக்கு ரூ. 1½ கோடி கிடைத்தது. இது பத்தில் ஒரு பகுதி கூட இல்லை. 30-ல் ஒரு பகுதி. எப்படி இன்னும் அந்த நிலைமை இருக்கிறதோ அதே மாதிரி ரூ. 1,219 கோடி மாநிலங்களுக்கு ஒதுக்கும்போது நமக்கு 50 கோடி கூட இல்லை என்பதை பார்க்க வேண்டும். இதை மக்கள் மத்தியில் எடுத்துச் சொல்ல வேண்டும்.

எங்களைப் பொறுத்தவரை நாடாளுமன்றத்தில் எங்கள் கட்சி சார்பில் பேசியவர்கள் ரூ. 4,200 கோடி இருக்கிறதென்றால், அதில் பாதியாவது மாநிலங்களுக்கு கொடுக்கவேண்டும். மாநிலங்களுக்கு நான்கில் ஒரு பங்கு என்பதை இரண்டில் ஒரு பங்காக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். நமக்கு இன்னொரு கடமை இருக்கிறது. அப்படி வரும்போது எங்களுக்கு உரிய பங்கை கொடுக்கவேண்டும் என்று கேட்பதில் உரிமை இருக்கிறது. மக்களும் ஏற்றுக்கொள்வார்கள். இது கட்சிக்கு அப்பாற்பட்ட பிரச்னையாக இருக்கும். ஆகவே மத்திய—மாநில அரசு உறவு சம்பந்தமாக நிதி ஒதுக்குவதில் சங்கடம் இருக்குமென்று சொன்னால், எனக்கு புரியவில்லை.

நிதிக் கமிஷனுக்கு தெரியும், நாம் இரண்டாவது சம்பளக் கமிஷன் அமைத்திருக்கிறோம் என்று. இந்த பட்ஜெட் அடிப்படையில் பார்த்தால் ரூ. 19 கோடி அதிகம் கொடுக்கவேண்டியிருக்கிறது என்று தெரிந்தும் கூட ஒரு கோடி கூட கொடுக்க மறுத்தால் நாம் கேட்க வேண்டும்—சர்க்கார் ஊழியர்களுக்கு சம்பளம் ஜாஸ்தி கொடுங்கள். நாங்கள் கொடுக்கத் தயார். அப்படிக் கொடுக்கும்போது மத்திய அரசும் மாநில அரசும் ஊழியர்களுக்கு எந்த முறையில் சம்பளம் நிர்ணயம் பண்ணுகிறோம் என்பதை அடிப்படையில் குறைந்தது 'கன்சல்டேஷனாவது' இருக்கவேண்டும். அப்போது தான் எங்கள் நிதிக்கு தக்கபடி 'அட்ஜஸ்ட்' பண்ண முடியும். நாங்கள் எவ்வளவு கேட்கிறோம் என்று சொல்வதற்கு உதவியாக இருக்க முடியும் என்ற இந்தக் குறிப்பை மட்டும் சொல்லிக் கொள்கிறேன்.

பிறகு வரும் சில விஷயங்களை மட்டும் வேகமாகச் சொல்லிக் கொண்டு போகலாம் என்று நினைக்கிறேன். மற்ற மாநிலங்களைப் போல் தமிழகத்திலும் சில காரியங்கள் செய்யவேண்டும் என்று சொன்னால் சில சமயத்தில் ஏற்றுக்கொள்கிறார்கள். பொதுவாக நாம் கேரளத்தில் நடக்கும் சில விஷயங்களைக் கவனிக்கவேண்டும். கேரளத்தில் அவர்கள் கொண்டு வரும் சட்டங்கள்—அதை நாமும் கொண்டு வருவது கொஞ்சம் உதவிகரமாக இருக்குமென்று நான் நம்புகிறேன்.



1971 ஜூன் 29] [திரு. கே. டி. கே. தங்கமணி]

ஒரு சிறு உதாரணம். கேரளத்தில் தனியார் துறையில் இருக்கும் காடுகளை எல்லாம் எடுத்துக்கொண்டார்கள். 2½ லட்சம் ஏக்கர். இன்று அந்த நிலங்களை விவசாயிகளுக்கு வினியோகம் பண்ணுகிறார்கள். அப்படி வினியோகம் செய்யும் காலத்தில், அந்தந்த பிராந்தியத்தில் சர்வ கட்சி கமிட்டி போட்டு அதன் மூலம் வினியோகம் செய்தார்கள். ஆகவே, எந்த இடத்தில் யாருக்கு செல்வாக்கு இருக்கிறதோ அவர்களுக்கு கிடைக்கும் என்ற கட்சிப் பாகுபாடு வராது. இன்றைக்கு இங்கே கட்சி பாகுபாடு இருக்கிறது என்ற குற்றச்சாட்டை நான் சொல்லவில்லை. ஆனால் அம்மாதிரி குற்றச்சாட்டு வருவதற்கு இடமிருக்கிறது. கேரளத்தில் செய்தது போல் இங்கே நிலம் பிரித்துக் கொடுக்க சர்வகட்சி கமிட்டி போடவேண்டும். அதே மாதிரி 50,000 ஏக்கர் காட்டு நிலங்கள் விவசாயிகளுக்கு பகிர்ந்தளிக்கப்படுகிறது, என்று நிதியமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அப்படி வரும்போது 'வர்ஷ நாடு' பகுதியும் வரும் என்று நினைக்கிறேன்.

இன்றைக்கு தமிழகத்தில் 50,000 ஏக்கர் காட்டு நிலங்களை அப்படி செய்தால்—பல தேயிலைத் தோட்ட முதலாளிகள் இருக்கிறார்கள்—நீலகிரியில் 'ஓ வாலி' எஸ்டேட் என்ற ஒன்று இருக்கிறது. அது 20,000 ஏக்கர் பரப்பு உள்ளது. இன்றைக்கு அது பிர்லாவுக்குச் சொந்தம். எந்த விதத்திலும் யாருக்கும் உதவி செய்யாத அளவுக்கு நடுக்காடாக இருக்கிறது. அதை எல்லாம் எடுத்துக் கொள்ள வேண்டும். கண்ணன் தேவன் டீ எஸ்டேட்டுக்கு சொந்தமான 25,000 ஏக்கரை கேரள சர்க்கார் எடுத்திருக்கிறார்கள். அதே மாதிரி மடங்களுக்கு சொந்தமான இடங்கள். பத்மநாபசுவாமி சொத்து என்றால் தொடுவதற்கே பயப்படுவார்கள். எங்கள் கட்சியில் தலைவர் ஜீவா சொல்லுவார். "திருவனந்தபுரத்தில் ஆட்சி நடத்துவது மன்னர் அல்ல; பத்மநாபசுவாமி தான்" என்று. அப்படிப்பட்ட கேரளத்தில் அவர்கள் உன்னதமான பத்மநாபசுவாமிக்கு கோயிலுக்கு வருஷத்துக்கு ரூ. 2 லட்சம் செலவழிக்கப்படும் என்று செய்தார்கள். அம்மாதிரி காரியம் செய்தால் தான் அரசாங்கத்தின் மீது மக்களுக்கு இன்னும் நம்பிக்கை ஏற்படும் என்று பலர் பேசியிருக்கிறார்கள். அறநிலையங்களுக்குச் சொந்தமான நிலங்களை எல்லாம் பிரித்து விவசாயிகளுக்கு கொடுக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள்.

அவர்கள் நிறைவேற்றியிருக்கிற சில சட்டங்கள்—அதிலும் இப்போது தொழிற்சாலைகளில் பணியாற்றக்கூடிய தொழிலாளர்களுக்கு க்ராஜுடி கொடுக்கவேண்டும் அவர்கள் டிஸ்மிஸ் செய்யப்பட்டாலும் கூட ½ மாதம் க்ராஜுடி கொடுக்கப்படவேண்டும் என்பதாக மசோதா கொண்டுவந்து, அதற்கு மத்திய அரசின் அங்கீகாரமும் பெற்று சட்டமாக்கியிருக்கிறார்கள். நாம் தயாரிக்கக் கூடிய மசோதாவில் 1½ மாதம் அல்லது 1 மாத சம்பளத்தை க்ராஜுடியாகக் கொடுக்கவேண்டும் என்ற முறையில் செய்தால்—

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1971 ஜூன் 29

கேரளாவில் உள்ளதுபோலவும் சட்டம் இருக்கும். அவர்கள் ½ மாதம்தான் கொடுக்கிறார்கள், நாம் ஒரு மாதம் க்ராஜுவிடி கொடுக்கும்படியாகச் செய்திருக்கிறோம் என்பது பெருமையாகவும் இருக்கும்.

அடுத்து, சம்பள போர்டின் பல தீர்ப்புகள் இருக்கின்றன. சம்பள போர்டின் தீர்ப்புகளை பல மில்காரர்கள் அமுல்படுத்தவில்லை. அமைச்சர் அவர்கள் கூட பொறுமை இழந்து அவர்களைக் கூப்பிட்டுப் பேசி, ஆகஸ்டு 30-க்குள் அமுல் செய்யப்படாமற்போனால் அரசு தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளும் என்று சொல்லியிருக்கிறார்கள்.

Payment of fair wages to transport workers' ordinance என்பதாக கேரளாவில் டிரான்ஸ்போர்ட் தொழிலாளர்களுக்கு நியாயச் சம்பளம் கொடுப்பதற்கு அவசரச் சட்டம் கொண்டுவந்திருக்கிறார்கள். அதுபற்றி அந்த அதிகாரிகளோடு விவாதித்திருக்கிறேன். அதன் ஷரத்து என்னவென்றால் வேஜ் போர்டின் தீர்ப்பை அப்படியே மசோதாவாக்கியிருப்பதனால் ஆர்டினன்ஸாகவே வந்திருக்கிறது. Regulation of Discharged and Dismissed Workers Bill என்பதாக இன்றைக்கு ஒரு தொழிலாளி சஸ்பெண்டு செய்யப்பட்டால் மத்திய சர்க்காரும், மாநில சர்க்காரும் சஸ்பென்ஷன் காலத்தில் ½ சம்பளம் கொடுக்கவேண்டும். ஆனால் தொழிலாளர்களுக்கு 6 மாதம் வரை சம்பளம் கொடுக்காமல் இருந்தால் பரவாயில்லை. அதற்கு மேல் ஒரு தொழிலாளி சஸ்பென்ஷனில் இருந்தால் பாதிச் சம்பளம் கொடுக்க வேண்டும் என்ற அடிப்படையில் அவர்கள் ஒரு மசோதாவைத் தயாரித்து மத்திய அரசாங்கத்தின் அனுமதிக்காக அனுப்பியிருக்கிறார்கள். அது அங்கே தூங்கிக்கொண்டிருக்கிறது. அதைப் போலவும் இங்கே ஏற்பாடு செய்ய பரிசீலிக்கலாம்.

அடுத்து, கேரளாவில் இ.எஸ்.ஐ. ஆஸ்பத்திரியில் ஒரு தொழிலாளிக்கு மட்டுமல்ல, அவரது குடும்பம் பூராவுக்கும் மருத்துவ உதவி அளிக்க 1—5—71 முதல் வைத்தியச் சலுகை அளிக்கப்பட்டிருக்கிறது. அதுபற்றியும் பரிசீலிக்கவேண்டும்.

முதல் அமைச்சர் அவர்கள் தம் பட்ஜெட் உரையில் குறிப்பிட்டார்கள். மினிமம் வேஜஸ் ஆக்ட்-ன் கீழ் வரக்கூடிய பீடித் தொழிலாளர்கள், டானரி தொழிலாளர்கள் கட்டடத் தொழிலாளர்கள் அதற்கெல்லாம் அப்பாற்பட்டிருக்கிற சிகை சிங்காரத் தொழிலாளர்கள், சலவைத் தொழிலாளர்கள் ஆகியவர்களுக்குச் சலுகை அளிக்கப்படும் என்று அறிவித்தார்கள். இதுபோல சமுதாயத்தின் கீழ்த்தட்டில் இருக்கும் தொழிலாளர்களுடைய நலனுக்காக சாங்கம் சில சலுகைகளை அறிவித்தாகத்தான் வேண்டும். Workers' Welfare Fund for cashewnut workers என்பதாக கேரளாவில் மசோதா கொண்டு வந்திருக்கிறார்கள். அதுவும் மத்திய சர்க்காரின் கீழ் இருக்கிறது. 1,2 லட்சம் உறுப்பினர்கள் காஷுனட் லேபர



1971 ஜூன் 29] [திரு. கே. டி. கே. தங்கமணி]

ர்களாக வேலை செய்கிறார்கள். இதன்மூலம் 15 லட்சம் வருஷத்தில் கிடைக்கும். இதை ஒரு நிதியாகக் கொண்டு அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க வகை செய்திருக்கிறார்கள்.

அடுத்து, இன்னொரு முக்கியமான விஷயம் பஞ்சாலைத் தொழிலாளர்கள் வற்புறுத்துக்கொண்டிருக்கிறார்கள். 1960 பூராவிலும் பஞ்சப்படி புள்ளி தயாரிப்பதில் கோளாறு இருந்தது என்று— மகாராஷ்டிராவிலும், குஜராத்திலும் தகராறு ஏற்பட்டு அதைச் சரிக்கட்ட தொழிலாளர்களுக்கு நானூறு, ஐநூறு ரூபாய் கொடுத்திருக்கிறார்கள். அதைப்போலவே புள்ளிவிவரம் தயாரிப்பதில் இங்கும் தவறுகள் நடந்திருக்கின்றன. அதற்கு ஈடுகட்ட இவர்களுக்கும் பாக்கி என்ற முறையில் பணம் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும். இவ்வளவுதான் நான் தொழிலாளர்களைப் பற்றிச் சொல்லிக்கொள்ள விரும்பியது எல்லாம்.

தமிழகத்தைப் பொறுத்தவரையில் பஞ்சாலைத் தொழில் மிகவும் நெருக்கடியான நிலையில் இருக்கிறது. பருத்தி கிடைக்காத குறைதான். வடநாட்டில் இருந்தோ, வெளிநாட்டில் இருந்தோ தான் பருத்தி வந்தாக வேண்டியிருக்கிறது. எனக்குத் தெரியும். இங்கே எம்.டி.யு. பருத்தி உற்பத்தி செய்கிறார்கள். தேனிப் பிராந்தியத்தில் இருபதாயிரம் ஏக்கரா, பத்தாயிரம் ஏக்கரா பருத்தி சாகுபடி செய்கிறார்கள். கோவை மாவட்டத்தில், ராஜபாளையம் போன்ற இடத்தில் நல்ல உயர்ந்த ரக லாங் ஸ்டேபிள் பருத்தி சாகுபடி செய்கிறார்கள். ஒரு ஏக்கருக்கு 3 க்விண்டால் என்றால் 10 க்விண்டால் கூட உற்பத்தி செய்கிறார்கள். அதற்குப் போதுமான உதவியைச் செய்ய அரசு முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதிகமான இடங்களில் பருத்தி விவசாயம் செய்தால் பேருதவியாக இருக்கும்.

இன்னொன்று ரிடையர்ட் பீப்பிள் பென்ஷன்—மத்திய சர்க்கார் ஊழியர்களைப்போல உடனடியாகப் பலரும் வாங்க ஏற்பாடு செய்ய வேண்டும் 9 மாத சராசரியைப் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். துரிதமாக அதைச் செய்ய வேண்டும். நான் ஏற்கனவே ஆலோசனை சொன்னேன். கடைசியாக வாங்கிய சம்பளம் Salary last received என்பதாக இருக்கிறது. பிப்ரவரி 1970-க்கு முன்னால் ரிடையராகியிருந்தால் பஞ்சப்படியில் பாதி கொடுக்கப்படும் என்று சொல்லப்படுகிறது. அதுபற்றி விரிவாகப் பேசுவதற்கும் நாங்கள் தயாராய் இருக்கிறோம். அதற்குப் பிறகு பஞ்சப்படி இணைக்கப்பட்டு விட்டால் ரூ. 400 சம்பளம் வாங்கியவருக்கு முன்பு ரூ. 150 பஞ்சப்படி வழங்கப்பட்டது. அதில் பாதி ரூ. 75-ஐ பென்ஷனோடு சேர்க்கப்பட வேண்டும். அந்த முறையில் அரசு உத்தரவிடுமானால் பிப்ரவரிக்கு முன்னால் ரிடையரான பல நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கான சிப்பந்திகளுக்குப் பேருதவியாய் இருக்கும்.

அதோடு முதல் அமைச்சர் நினைத்தால் லேசாக ஒரு உத்திரவு கூட போடலாம். முனிசிபல் சிப்பந்திகளில் பென்ஷன் வாங்கக்

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1971 ஜுன் 29

கூடியவர்கள் கம்மி. 1970-க்கு முன்னால் பென்ஷன் வாங்காதிருப்பவர்கள் 800 இருக்கும். அவர்களுக்கு பென்ஷன் கொடுப்பதனால் பெரிய அளவில் நஷ்டம் ஏற்பட்டு விடப்போவதில்லை. 2 லட்சம் கூடச் செலவாகாது. இன்றையதினம் வாழ வழியின்றி பிச்சைக்காரர்களாகக்கூட அவர்கள் மாறியிருக்கிற நிலை எனக்குத் தெரியும். ஆகவே முனிசிபல் சிப்பந்திகள் எல்லோருக்கும் பென்ஷன் வழங்கப்படும் என்பதாக அரசு உத்திரவிடவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத்தலைவர் (திரு. மா.வெ. கரிவேங்கடம்) தலைமை.

அடுத்து, போலீஸ் துறையினர் தொழில் தகராறுகளில் தலையிடக் கூடாது என்பதாக ஏ.ஐ.டி.யு.ஸி. மட்டுமல்ல, இந்து மஸ்தூர் சபா மட்டும் அல்ல ஐ.என்.டி.யு.சி. மட்டுமல்ல இப்போது ஆரம்பிக்கப்பட்டிருக்கிற முன்னேற்றக் கட்சி தொழிற்சங்க நிறுவனங்களும் கூட வற்புறுத்தி வருகின்றன. ஆனால் எனக்குத் தெரியும். போலீஸ்துறையினர் தலையிட்டு இருந்துகொண்டுதான் இருக்கிறது. இரண்டு இடங்கள் எனக்கு நன்றாகத் தெரியும். சங்கரி சிமிண்டு தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்துகொண்டிருக்கிறார்கள். அது சரியா தவறா என்பது வேறு விஷயம். அதைப்பற்றி அரசாங்கம் அவர்களுடன் பேசி ஒரு உடன்பாடு காணலாம். ஆனால் சங்கரி பூராவும் போலீஸ் கோட்டையாக இருந்துகொண்டிருக்கிறது. கிராம மக்கள்கூட வெளி வரமுடியாத நிலை இருக்கிறது. நான் தொழில் அமைச்சர் அவர்களைப் பார்த்துச் சொன்னேன். எல்லாக் கட்சியைச் சேர்ந்தவர்களும் பிரச்சினை என்ன என்று பார்க்கலாம். ஆனால் இதுபோல தொழில் தகராறில் போலீஸ் தலையீடு இருக்கக்கூடாது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேமாதிரி கோயம்பத்தூரில் சந்திராமில்ஸ் தகராறு சம்பந்தமாக போலீஸ்காரர்கள் தலையிட்டு பலபேர்களைக் கைது செய்திருக்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினர் திரு. மருதாசலம் அவர்கள் கூட தலையிட்டு அந்தத் தொழிலாளர்களை ஜாமீனில்தான் அழைத்துவர முடிந்தது. இப்படி தொழிலாளர்களுடைய பிரச்சினையில் போலீஸ் துறையினர் தலையிடுவது என்பது கண்டிப்பாக நிறுத்தப்படவேண்டும். இதன்காரணமாக மற்ற தொழில் நிறுவனங்களில் உள்ள சகோதர தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்ய முன்வந்தால் கூட அது நியாயம் என்றே என்னால் சொல்ல முடியும்.

இன்னொரு முக்கியமான விஷயம் ஸ்டாண்டர்ட் மோட்டார் நிறுவனம் சம்பந்தப்பட்டது. அமைச்சர் அவர்கள் கூடச் சொன்னார்கள். அந்த நிர்வாகிகளுடன் என்ன செய்வது என்றே எனக்குத் தெரியவில்லை, முதல் அமைச்சரிடம் வேண்டுமென்றால் சென்று சொல்லுங்கள் என்பதாக. இன்றைக்கு 600 பேர்கள் வேலை செய்கிறார்கள் என்றால் 2,500 பேர்கள் வெளியே வேலையில்லாதிருக்கிறார்கள். எந்தக்காலத்தில் இந்தத் தொழிலாளர்கள் அனை



1971 ஜுன் 29] [திரு. கே. டி. கே. தங்கமணி]

வரையும் எடுத்துக்கொள்ளப் போகிறார்கள் என்று தெரியவில்லை. இதுபற்றி முதல் அமைச்சர் அவர்கள் ஒரு வாக்குறுதி அளிக்க வேண்டும்.

ஏற்கனவே 1952 முதல் சங்குகுளி தொழிலாளர்கள் தாங்களே அந்தத் தொழிலை நடத்த அனுமதிக்க வேண்டுமென்று சொன்னார்கள். நடக்கவில்லை. கடைசியில் தேர்தலில் அது முக்கிய பிரச்சினையாக வந்தது. அவர்களே செய்ய ஏற்பாடு செய்வதாக முதல் அமைச்சர் சொன்னார். அது நடைமுறைக்கு வந்துவிட்டது. எப்படியோ இன்றைக்கு 5 ஆயிரம் தொழிலாளர்கள் இந்த அரசைப் பாராட்டுகிறார்கள். அப்படி முதல் அமைச்சர் வாக்குறுதி கொடுத்தால் அதை நிறைவேற்றிவிடுவார்கள்.

பஸ்கள் 15 என்பது பத்தாகிவிட்டது. மதுரை கார்ப்பரேஷன் ஆகிவிட்டது. கோவை விவசாயப் பல்கலைக் கழகம் வந்துவிட்டது. இப்படியாக முதல் அமைச்சர் அவர்கள் அரசின் சார்பில் வாக்குறுதி கொடுத்தால் அது நடக்கிறது. அதேமாதிரி இந்த விஷயத்திலும் முதல் அமைச்சர் அவர்கள் ஒன்றிரண்டு வாக்குறுதிகள் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் உள்ள கோவை முன்னேற்றக் கழக சட்டமன்ற உறுப்பினர்களை நீங்கள் கேளுங்கள். ஸ்டேன்ஸ் மில், காளிஸ்வரா மில், முருகன் மில் போன்ற பல மில்களின் தொழிலாளர்கள் முன்னேற்றக் கழகத்திற்காக உழைத்திருக்கிறார்கள். இன்றையதினம் அந்த மில்கள் எல்லாம் மூடிக்கிடக்கின்றன. அந்தத் தொழிலாளர்கள் அடைந்துகொண்டிருக்கிற துன்பம் கொஞ்சநஞ்சமல்ல. ஏற்கனவே 16 மில்கள் மூடப்பட்டன. 5 மில்கள் திறக்கப்பட்டன. இது சம்பந்தமாக மிகமிக மந்தமான போக்கு இருக்கிறது. நான் தொழில் இலாகா காரியதரிசியைப் பார்த்தேன். அவர் மிக மிக வருந்தத்தக்க கொள்கை உடையவராக இருக்கிறார். ஏற்கனவே 80 லட்சம் கொடுத்தோம். சாப்பிட்டுவிட்டார்கள் என்கிறார். கோவை மில் முதலாளிகளைப் பற்றி பட்டுக்கோட்டை கலியாணசுந்தரம் அவர்கள் திட்டம்போட்டு திருட்டுக் கூட்டம் நடத்திக்கொண்டிருக்கிறது என்று சொன்னார். வாங்கிய பணத்தை எவ்வாறு சுருட்டிக் கொள்வது என்ற நிலையில்தான் அவர்கள் இருக்கிறார்கள்.

இன்றைக்கு ஐந்து மில்களை எடுத்து நடத்துகிறபோது, எங்களுடைய கார்ப்பொரேஷன் ஏஜென்டாகத்தான் இருக்கும் என்று நினைப்பது சரியல்ல. கோவையிலே நகரசபையிலே தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றியிருக்கிறார்கள். கம்போடியா, ரங்கவிலாஸ், ஸ்ரீ பராசக்தி போன்ற மில்கள் எல்லாம் நன்றாக இருக்கின்றன. அதை நல்லபடியாக நடத்துவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். மதுரையிலே ராஜா மில்லும், பழனியிலே முருகன் மில்லும் இருக்கின்றன. ராஜா மில்லில் சுமார் 13 ஆயிரம் தறி ஓடும். முருகனில் 8 ஆயிரம் தறி ஓடும். ஒன்றாக

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1971 ஜூன் 29

மில் போன்ற 16 மில்கள் இருக்கின்றன. இவைகளைத் திறப்பதன் மூலமாக புதிதாக வேலைவாய்ப்பு கொடுக்க முடியும். வேலையிழந்தவர்களுக்கு இது மிக்க பேருதவியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னொன்றைச் சொல்ல விரும்புகிறேன், அதாவது ரெவின்யூ போர்டு சம்பந்தப்பட்டது. சென்ற தடவை நடந்த சட்டமன்றக் கூட்டத்திலே கூட ரெவின்யூ போர்டு ஒழிக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். அது கௌன்சில் ஆஃப் செகரட்டேரீஸ் ஆகத்தான் இருக்கிறது. முதலில் ஆர்.டி.ஓ-க்கு அப்பீல், டி.ஆர்.ஓ.-க்கு அப்பீல், பிறகு சர்க்காருக்கு அப்பீல் என்ற நிலையில் தான் காரியங்கள் நடக்கின்றன. இந்த ரெவின்யூ போர்டு இருப்பதால் யாருக்கு என்ன நன்மை? இந்த ரெவின்யூ போர்டு மெம்பர் ஒவ்வொருவருக்கும் என்ன வேலை என்றே நமக்குத் தெரியவில்லை. இது ஒரு 'ஒயின்ட் எலிபென்ட்' ஆகத்தான் மாறிவிட்டது. இனிமேல், ரெவின்யூ போர்டு இருப்பது தமிழகத்திற்கு நல்லது அல்ல. சிறந்த அதிகாரிகள் இருக்கலாம். அவர்களை வேறு முறையில் பயன்படுத்திக் கொள்ளலாம். இப்போது நிலைமை வந்திருக்கிறது. நல்லதோர் அதிகாரியைப் போட்டு, அதை வளர்க்கலாம். சிறந்த அதிகாரிகளை வேறு இடங்களுக்குப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

அடுத்தபடியாக நிர்வாகச் சீரமைப்புக் குழுவைப்பற்றி நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். நிர்வாகச் சீரமைப்பு ஜூன் 10-ல் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. அதன் தலைவராக இருக்கக் கூடியவர் திரு. வர்கீஸ் அவர்கள் திறமையானவர். அவரைப்பற்றி முன்னாள் முதலமைச்சராக இருந்த திரு. பக்தவத்சலம் அவர்கள், 'நான் பார்த்த சீஃப் செகரடரிகளில் மிகவும் கெட்டிக்காரர் வர்கீஸ்' என்று சொல்வார்கள். நமது சட்டமன்ற உறுப்பினர் திரு. எ. ஆர். சுப்பையா முதலியார் அவர்களும் அந்தக் குழுவில் இருக்கிறார்கள். மத்திய சர்க்கார் அட்மினிஸ்ட்ரேஷன் ரிபார்ம்ஸ் கமிட்டியின் அடிப்படையிலே அறிக்கை கொடுத்திருக்கிறது. மாதா மாதம் அட்மினிஸ்ட்ரேஷன் ரிபார்ம்ஸ் கமிட்டியினுடைய ரிபோர்ட்டை சமர்ப்பிக்க வேண்டும். ஏதோ இரண்டு ஆண்டுகளுக்கு உட்கார்ந்து தயாரிக்கப்படுகிற அறிக்கையாக செய்யக்கூடாது. கிராம பஞ்சாயத்திலேயிருந்து மேலே இருக்கக் கூடிய தலைமைச் செயலகம் வரையிலும் எப்படி எப்படி மாற்றியமைப்பது என்ற முறையிலே செயல்பட வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. மா. வெ. கரிவேங்கடம்) :** இன்னும் இரண்டொரு நிமிடங்களில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தம்முடைய உரையை முடித்துக்கொள்ள வேண்டும்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** தலைவர் அவர்களே, இன்னும் கொஞ்சம் நேரம் கொடுங்கள். அடுத்தது, திட்டக் குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அதன் தலைவராக முதலமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள். திட்டக் கமிஷன் உறுப்பினர் திறமைசாலிகள். டாக்டர் பி. நடராஜன் போன்றவர்கள் இருக்கிறார்கள். மத்தியத் திட்டக்



1971 ஜூன் 29] [திரு. கே. டி. கே. தங்கமணி]

கமிஷன் இருக்கிறது. மத்திய திட்டக் கமிஷனுக்கும் இந்தத் திட்டக் கமிஷனுக்கும் என்ன சம்பந்தம் இருக்கப் போகிறது? எதைது பற்றி நாம் கேட்கப் போகிறோம் என்பதுபற்றி இப்போது தெரியவில்லை. திட்டக் கமிஷன் கூடி, நாட்டிற்கு வேண்டிய நல்ல பல காரியங்களைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சில விவரங்களை நான் வைத்திருக்கிறேன். அந்தந்த டிமாண்டில் சொல்லலாம் என்றிருந்ததை இப்போதே தெரிவித்துக் கொள்கிறேன். மதுவிலக்கு சம்பந்தமாக, 'மதுவிலக்கை ரத்து பண்ணுவதை நாங்கள் ஆதரிக்கிறோம்' என்று சொல்லியிருக்கிறோம். ஆனால் எல்லோரும் மது குடிக்க வேண்டுமென்று நாங்கள் சொல்லவில்லை. யாராவது குடிப்பழக்கம் உள்ளவர்கள் இருந்தால் எங்கள் கட்சியிலிருந்து நீக்கப்படுவார்கள். அது எங்கள் கட்சியின் கட்டுப்பாடு, எங்கள் கட்சியின் கொள்கை. அப்பாவித் தொழிலாளிகளும், முனிசிபல் தொழிலாளிகளும்தான் குடிக்கிறார்கள். சிறையில் சென்று பார்த்தால் அவர்கள்தான் அதிகமாக இருக்கிறார்கள். சென்னையை எடுத்துக்கொண்டால் 57 ஆயிரம் கேசுகள், மதுரையில் 10 ஆயிரம் கேசுகள், தஞ்சையில் 22 ஆயிரம் கேசுகள். இப்படி வருஷம் பூராவும் குடி கேசாகத்தான் இருந்து கொண்டிருக்கிறது. மதுவிலக்கு சம்பந்தமாக சிறையில் இருப்பவர்களை ஆகஸ்ட் 30-ம் தேதிக்குள் வெளியே விட்டுவிடுவது நல்லதாக இருக்கும்.

அடுத்து, ஆயுள் தண்டனை அடைந்தவர்கள் சிறையில் இருக்கிறார்கள். அவர்கள் பத்து ஆண்டுகளுக்கு மேல் சிறையில் இருப்பது நல்லது அல்ல. நமக்குச் சுதந்திரம் கிடைத்து 25 ஆண்டுகளாகி விட்டன. நாம் வருஷா வருஷம் சுதந்திர தினத்தைக் கொண்டாடுகிறோம். அவர்களுக்கெல்லாம் விடுதலை கிடைக்கும்படி செய்யலாம்.

அடுத்தபடியாக, சேதுசமுத்திரத் திட்டம். இது நாட்டிற்கு மிகவும் முக்கியமான திட்டமாகும். நாடாளுமன்றத்தில் எல்லோரும் இதைப்பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறார்கள். சேது சமுத்திரத் திட்டத்தின் ஒரு பகுதிதான் தூத்துக்குடி துறைமுகத் திட்டம். கல்கத்தாவிலும், பம்பாயிலும் இருந்து கப்பல்கள் எல்லாம் இப்போது சிலோனைச் சுற்றிக்கொண்டு போகின்றன. சேது சமுத்திரத் திட்டம் முடிவுற்றால் கப்பல்கள் எல்லாம் குறுகிய தூரத்தில் செல்வதற்கு வசதியாக இருக்கும். தூத்துக்குடி துறைமுகம் இதற்கு பயன்படும். எனவே, இந்த பட்ஜெட்டில் சேது சமுத்திரத் திட்டத்தை அமல்படுத்த வேண்டுமென்பதை வற்புறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தது, ஒலி, ஒளிக் காட்சி. இதை டெல்லியிலே போய்ப் பார்த்தால் தெரியும். ஒவ்வொரு கல்லும் பேசும். பிரெஞ்சுக்காரன் இதைக் கண்டுபிடித்து நடந்து கொண்டிருக்கிறது. மதுரையில் இதைக் கொண்டுவருவது பேருதவியாக இருக்கும் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன். அதைச் செய்ய வேண்டும்.

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1971 ஜுன் 29

அடுத்தபடியாக, மெடிகல் காலேஜில் 100 பேரைக் குறைத்திருப்பது கண்டிக்கத்தக்கது. மெடிகல் காலேஜில் இன்னும் அதிகமான வசதிகளைச் செய்துகொடுக்க வேண்டும். சிலர் டாக்டர்களைக் குறைக்க வேண்டும் என்று சொன்னார்களாம். அவர்கள் வெளி நாட்டிற்குப் போய்ப் பார்க்கட்டும். முதலில் டாக்டர்களுடைய பிரைவேட் பிராக்டீஸை 'குளோஸ்' பண்ண வேண்டும். எத்தனை டாக்டர்கள் தேவைப்படுகிறார்கள் என்பதைப் பார்க்க வேண்டும். இந்த நேரத்தில் மெடிகல் காலேஜில் 100 பேரைக் குறைக்கிறோம் என்று சொல்வதை ஏற்றுக்கொள்ள முடியாது. ஆகவே, இருப்பதையாவது அப்படியே வைத்துக்கொண்டிருக்க வேண்டும். இந்த அரசின் கொள்கையும் அதுவாகத்தான் இருந்து வருகிறது. ஆகவே, 100 பேரைக் குறைக்கக்கூடாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மதுவிலக்கை எடுத்துக்கொண்டால், மதுவிலக்கு ரத்து செய்வதை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். மதுவிலக்கு ரத்து செய்வதை நாங்கள் எதிர்க்கிறோம் என்று சிலர் சொல்கிறார்கள். முதலில் கேரளத்தில் அப்படித்தான் சொன்னார்கள். பிறகு ஏற்றுக் கொண்டார்கள். நமது சுதந்திராக் கட்சியும் ஸ்தாபன காங்கிரஸ் உறுப்பினர்களும் இதை எதிர்க்கிறார்கள். அவர்கள் ஆட்சி செய்கின்ற எல்லா மாநிலங்களிலும் மதுவிலக்கு போய்விட்டது. இது அவர்களுடைய கொள்கைப் பிரச்சினை இல்லை. இந்த அரசை எப்படியாவது எதிர்க்க வேண்டுமென்பதற்காக எடுத்துக் கொள்ளப்பட்ட முடிவு.

அடுத்தபடியாக 'கல்ட் ஆஃப் பர்சனாலிடி' பற்றிச் சொன்னார்கள். இதை 'பூஸ்ட் அப்' பண்ண வேண்டும். எவ்வளவோ பேர் ஜெயிலுக்குப் போனார்கள். நான்கூட எட்டு வருஷங்கள் ஜெயிலுக்குப் போனேன். அதுவல்ல பெரிய விஷயம். அம்மாதிரி நாங்கள் பேசினால் பரவாயில்லை. ஆனால் மூதறிஞர் என்று சொல்லி அவரைப் பின்பற்றுகின்றவர்கள் 'கல்ட் ஆஃப் பர்சனாலிட்டி' பற்றிச் சொல்லுகிறார்கள். அவர்கள் சொல்லுவது ஆச்சரியமாக இருக்கிறது. 'கல்ட் ஆஃப் பர்சனாலிட்டி' இங்கெல்லாம் புதிய முறையிலே அமைகிறது. மகாத்மா காந்தி அல்லது குறிப்பிடத்தக்க தலைவர்களை வைத்துக்கொண்டு அவர்களை பற்றிக்கொண்டு போகிறார்கள். யாருமே யாரைப்பற்றியும் உயர்த்திப்பேசக்கூடாது என்ற தத்துவம் தமிழகத்திற்குப் பொருந்தாது என்பதை மட்டும் சொல்லிக்கொண்டு ஏற்கெனவே நான் சொன்ன அடிப்படையில் சில வாக்குறுதிகளைத் தமிழக அரசு கொடுத்தால், குறிப்பாக நிலச் சீர்திருத்தத்தை நாங்கள் கொண்டு வருவோம் என்பது போன்று, "அது மிக உதவிகரமாய் இருக்கும். அதே மாதிரி இந்த பஸ்களைப்பொறுத்தவரையிலே ஒரேயொரு விஷயத்தைச் சொல்ல விரும்புகிறேன். 10 பஸ்கள் என்று சொன்னார், எத்தனை கம்பெனிகள் என்று தெரியவில்லை. 47 கம்பெனிகள் இருக்கலாம் என்று சொல்லுகிறார்கள். 50 பஸ்களுக்கு மேலுள்ள கம்பெனிகள் எனக் எடுத்துக்கொள்ளப்போவது 5, 6 கம்பெனிகள் இருக்கலாம். அதை



1971 ஜுன் 29] [திரு. கே. டி. கே. தங்கமணி]

யேற்று நடத்தும்பொழுது என்னென்ன வருவாய் ஏற்படும், யார் யார் பாதிக்கப்படுகிறார்கள் என்பதைப் பற்றியெல்லாம் விவரங்கள் நமக்குத் தெரியவில்லை. அவை தெரியவேண்டும்.

மதுவிலக்கு ரத்தினால் 20 கோடி கிடைக்கும் என்று சொல்லுகிறார்கள். இருந்தாலும்கூட 27 கோடிக்கு பள்ளம் விழத்தான் செய்கிறது. பாதிக்கத்தான் செய்யும் என்பதை அரசு பார்த்துக் கொள்ள வேண்டும். அட்மினிஸ்ட்ரேஷனெல்லாம் வேறு முறையில் சரிப்படுத்தும் விஷயங்கள்.

பல கமிட்டிகள் அமைக்கப்படும்பொழுது இந்த கமிட்டிகளில் எல்லாக் கட்சிகளையும் சார்ந்தவர்களும் சேர்க்கப்பட வேண்டும். உதாரணத்திற்காக ஒன்றைச் சொல்லுகிறேன். சிறைப் பார்வையாளர் என்று யாரைப்போடலாம்? அது நம்முடைய ஸ்தாபன காங்கிரசைச் சேர்ந்தவராகவும் இருக்கலாம் அல்லது இந்திரா காங்கிரசைச் சேர்ந்தவராகவும் இருக்கலாம், பி.எஸ்.பி. கட்சியைச் சேர்ந்தவர்களாகவும் இருக்கலாம் அல்லது என்னுடைய கட்சியைச் சேர்ந்தவராகவும் இருக்கலாம். நாங்கள் அதிகமாக ஜெயிலில் இருந்திருக்கிறோம். அதுமாதிரி போடாமல் சிறு வயது ஆட்களைப் போடக்கூடாது. இந்த இடத்திலே கூடியவரை யார் யார் நம்மை ஏற்றுக்கொள்ளுகிறார்களோ அந்தக் கட்சிகளைக் கலந்துகொண்டு சில நியமனங்களைச் செய்வது உதவிகரமாக இருக்கும் என்று சொல்லிக்கொண்டு பொதுவாக எங்கள் நிலையைப்பொறுத்தவரையில் நான் ஏற்கெனவே தெளிவு படுத்தியிருக்கிறேன் என்று சொல்லிக்கொண்டு என்னுடைய உரையை முடிக்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர்—தலைமை)

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** மதிப்பிற்குரிய சபாநாயகரவர்களே, 99 உறுப்பினர்கள் பங்கெடுத்தபிறகு 100-வது உறுப்பினராகப் பேசுவதற்குப் பேறு கிடைத்தமைக்கு நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். இந்த விவாதத்திலே கலந்து கொண்ட பலரும் அருமையான கருத்துக்களையெல்லாம் இந்த அவையின் சிந்தனைக்குச் சமர்ப்பித்திருக்கிறார்கள். அவைகளிலே நல்ல ஆழமான கருத்துக்களைப் பிரதிபலிக்கக்கூடியவையும் இருந்தன. தனிப்பட்ட முறையிலே தாக்குதல் ஏற்படக் கூடிய கருத்துக்களும் இருந்தன. அவையெல்லாம் தொகுத்து இங்கே பேசுவதற்குக் காலம் அதிகம் இல்லாத காரணத்தால் நான் என்னுடைய கடமையிலே செல்வது பொருத்தமாக இருக்கும் என்றே கருதுகிறேன்.

முதன்முதலாக, இந்த 26 அம்சங்களைக்கொண்ட ஒரு சிறப்புத் திட்டத்தை முதலமைச்சரவர்கள் இங்கே அவருடைய 'பி' உரையிலே கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள். அதைப்பற்றிப் பலவிதமான அபிப்பிராயங்கள் இந்த மன்றத்தின் முன்னால் வைக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் என்னுடைய கட்சியைப் பொறுத்தவரையிலே இந்த வரவு-செலவுத் திட்டத்தில் நான் எந்தவிதமான புதுமையையும் காணவில்லை, புரட்சியையும் காணவில்லை. இது ஒரு

சமதர்ம சாசனம் என்று சொல்லிக்கொள்ள முடியவில்லை. அது மட்டுமல்லாமல், பசுமைப்புரட்சியின் பிரதிபலிப்பு என்று சித்தரித்துக் காட்டக்கூடிய வகையில் அது இருக்கின்றதா? 1967-இல் இவ்வளவு பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது, அதற்குப் பிறகு நாங்கள் இவ்வளவு ஒதுக்கியிருக்கிறோம் என்று சிறப்பாக, அதிகமாகப் பணம் ஒதுக்கியிருக்கிறது என்ற முறையிலே இங்கு உரை நிகழ்த்தப்பட்டிருக்கிறது. நான் முதன் முதலிலே இந்தத் துண்டு விழக்கூடிய பட்ஜெட்டைப்பற்றி என்னுடைய கட்சியின் சார்பாக ஓரிரு கருத்துக்களைக் கூறக் கடமைப்பட்டுள்ளவனாக இருக்கிறேன்.

இப்படிப்பட்ட பற்றுக்குறை பட்ஜெட்டைச் சமர்ப்பிப்பதால் விலைவாசி உயரும். அதுமட்டுமல்ல பண வீக்கமும் ஏற்படும் என்ற கருத்தினை இங்கே பலரும் எடுத்துக் கூறினார்கள். ஆனால் பிரஜா சோஷலிஸ்ட் கட்சியைச் சார்ந்தவர்களும், இன்னும் பலரும் இம் மாதிரி ஒருநாளும் வராது என்ற கருத்திலே இங்கே எடுத்துக் கூறினார்கள். நான் ஓரிரு அம்சங்களை நமது வரவு-செலவுத் திட்டத்திலேயிருந்து முதலிலே இந்த அவைக்குக் கொடுப்பது பொருத்தமாக இருக்கும், சிறந்ததாக இருக்கும் என்று கருது கிறேன். 1971–72-ம் ஆண்டின் தொடக்க இருப்பு—23.23 கோடி என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. மொத்தப் பற்றுக்குறை 59 கோடியாக இருக்குமென்று இந்த பட்ஜெட்டிலே எடுத்துக் கூறி யிருக்கிறது. இந்த பட்ஜெட்டானது ஏழை எளிய மக்களையும். நடுத்தர வகுப்பினரையும் அதிகமாகத் தாக்கக் கூடிய ஒரு வரவு-செலவுத் திட்டமாக இருக்கிறது என்பது மட்டுமல்ல அது விலை வாசியை உயர்த்தும் தன்மையையும் உருவாக்கியிருக்கிறது. ஏன் இந்தப் பற்றுக்குறை பட்ஜெட் இம்மாதிரி தொடர்ந்து வந்திருக் கிறது என்பதை அரசாங்கம் விளக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

1969-70-லே 2532.49 இலட்சம் பற்றுக்குறையாக இருந்திருக் கிறது. 1970-71-லே 783.59 இலட்சம் பற்றுக்குறையாக இருக் கிறது. இம்மாதிரி பற்றுக்குறை பட்ஜெட்டை மாநில அரசும், மத்திய அரசும் உருவாக்கும் காரணத்தால் விலை வாசி ஏறி, உற்பத்திச் செலவும் அதிகமாகி, எவ்வளவு சம்பள உயர்வை நமது ஊழியர்களுக்குக் கொடுத்தாலும் அதை ஈடுகட்ட இது உகந்தது அல்ல என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். சாதாரணமாக நம்முடைய செலவினங்கள் விரிந்துகொண்டே வருகிறது. ஏனென்றால் வாழ்க்கைப் புள்ளி விவரங்களின் அடிப்படையில் சர்க்கார் ஊழியர்களானாலும் சரி அல்லது தொழில் துறையிலே இருப்பவர்களானாலும் சரி கூலி நிர்ணயம் செய்வதைக் காலாகாலத்தில் செய்யப்பட வேண்டியது ஒரு நியதியாக இருக்கிறது. அப்படி இந்த வரவு-செலவுத் திட்டத்திலுள்ள பற்றுக்குறையைப் பார்க்கும்பொழுது, எவ்வளவு விலைவாசி உயர்ந்திருக்கிறது என்பதை ஓரிரு கருத்துக்களின் மூலமாகக் கூற முற்படுகிறேன்.



மார்ச் திங்கள் 23-ஆம் தேதி பாராளுமன்றத்திலே மாண்புமிகு பிரசிடெண்ட் அவர்கள், குடியரசுத் தலைவரவர்கள் அவருடைய உரையிலே ஒரு அம்சத்தை சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். அவர்கள் 3.4 பர்செண்ட் மொத்த விலைவாசி உயர்ந்ததாக எடுத்துக் கூறி இருக்கிறார்கள். அதோடு மட்டுமல்ல, மத்தியிலே பைனான்ஸ் மினிஸ்டராக இருக்கும் உயர்திரு சவான் அவர்கள் இந்த விலைவாசி எவ்வளவு மொத்த அளவிலே கூடியிருக்கிறது என்பதையும் அங்கு எடுத்துக் கூறியிருக்கிறார்கள்.

'wholesale price increase by 7 per cent more than the latter part of 1970'

என்ற ஒரு பகுதியையும் எடுத்துக்கூறியிருக்கிறார்கள். இப் படிபார்க்கும்பொழுது, மொத்தமாக விலைவாசி உயர்ந்துகொண்டே யிருக்கிறது. அது மட்டுமல்ல, திரு. சவான் அவர்களின் உரையைப் பார்க்கும்பொழுது—

'He stressed the need for continued vigilance and for taking vigorous measures for ensuring price stability in regard to essential goods entering mass consumption.'

என்றும் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். பொதுவாக, நாம் பார்க்கும் பொழுது விலைவாசி அதிகமாக உயர்ந்திருக்கிறது. அதிலும் குறிப்பாக இந்த ஆண்டு உணவுப் பண்டங்களில் விலைவாசி அதிக மாக உயர்ந்திருக்கிறது. அத்தியாவசியப் பண்டங்களின் விலை உயர்ந்திருக்கிறது. அதற்குச் சான்றாக நம்முடைய மாநிலத்திலே யிருக்கும் வாழ்க்கைப்புள்ளி விவரத்தை எடுத்துக் கூற வேண்டு மென்று கருதுகிறேன். 1966 ஜனவரியிலே இந்த வாழ்க்கைப் புள்ளி 639 ஆக இருந்தது. டிசம்பரிலே 698 ஆக உயர்ந்தது. 1967 ஜனவரியிலே 692 ஆகக் குறைந்து கடைசியிலே டிசம் பரிலே 712 ஆகக் கூடியிருக்கிறது. 1968-லே 715 ஆக ஜனவரியிலே யிருந்தது டிசம்பரிலே 693 ஆகக் குறைந்திருக்கிறது. 1969-லே 690 ஆக ஆரம்பித்து 756 ஆக இருந்திருக்கிறது. 1970-லே 774 ஆக ஜனவரியிலேயிருந்தது டிசம்பரிலே 828 ஆக ஆகியது. இப்படி 1971-லே பார்க்கும்பொழுது 828-க்கு மேலாக வாழ்க்கைப்புள்ளி இருக்கிறது. இந்த அடிப்படையில் பார்த்தால் விலைவாசி குறைய வில்லை, குறையக்கூடிய முறையிலே இந்த பட்ஜெட் சரியான முறை யிலே அமையவில்லை. அதிலும் பற்றுக்குறையிருப்பதால் அரசாங்கத்திலே செலவினம் அதிகமாக இருப்பதால் பணப் புழக்கம் அதிகமாக இருக்கிறது.

'circulation of money and velocity of circulation of money has increased'

என்ற தன்மையிலே அந்தப் பொருளாதாரத் தத்துவத்தின் அடிப் படையில் அதிகப் பணப்புழக்கம் இருப்பதால் விலைவாசி உயர்ந் திருக்கிறது. இதைக் கடைப்பிடித்து மத்திய அரசாங்கமும், மாநில அரசாங்கமும் என்னென்ன நடவடிக்கைகளை மேற் கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த மன்றத்திலே விளக்க வேண்டும். மத்திய சர்க்காரிலிருந்து பல காரியங்களையெல்லாம்.

செய்கிறார்கள், ஆனால் உருப்படியாக ஒன்றும் செய்யவில்லை. சாதாரணமாக இந்த நிதிப் பங்கீட்டு முறையில், மாநிலங்கள் விலைவாசியைக் கட்டுப்படுத்துவதற்கு தன்னந்தனியாக அதிகாரங்கள் பரவலாக இல்லை என்ற ஆட்சேபணையைச் சொன்னால் இந்த அரசாங்கம் அதற்காக மத்திய அரசாங்கத்தோடு என்னென்ன காரியங்களைச் செய்திருக்கிறது என்பதை எடுத்துக் கூறக் கடமைப்பட்டவர்களாக இருக்கின்றீர்கள் என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்னொரு விஷயத்தையும் கூறவேண்டுமென்று நினைக்கிறேன். இவ்வளவு பணம் அதிகமாகச் செலவழிந்தாலும் உண்மையாக இந்தப் பணத்திற்கு அந்த மதிப்பு இருக்கிறதா? 'ருபி வால்யூ' என்பதைப் பற்றிச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். 1966 ஜூன் திங்களில் இந்த நாணயத்தின் மதிப்பைக் குறைத்தார்கள். இன்று பிளானிங் மினிஸ்டராக உள்ள திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் அன்று அமைச்சரவையில் இருந்த போது இந்த நாணய மதிப்புக் குறைவு ஏற்பட்டது. அதன் விளைவாக என்ன கஷ்டங்கள், துன்பங்கள் ஏற்பட்டன என்பதைப் பற்றியெல்லாம் விரிவாக எடுத்துக் கூற விரும்பவில்லை. தற்போது இருக்கும் நாணய மதிப்பைப் பற்றிப் பேராசிரியர் ஒருவர் ஒரு கட்டுரை எழுதியிருக்கிறார்கள். அதிலே, இன்று ஒரு ரூபாயின் மதிப்பு 54 பைசாதான் என்று அவர்கள் கூறி இருக்கிறார்கள். இன்னொரு பகுதியிலே—'Erosion of Value of Rupee' என்று கூறியிருக்கிறார்கள். இன்று கறுப்புப் பணம் நடமாடுகிறது என்ற உண்மை அனைவருக்கும் தெரியும். பல கடத்தல் மன்னர்கள் இந்த நாட்டில் இருக்கும் காரணத்தால் பல கஷ்டங்கள், துன்பங்கள், விலைவாசி உயர்வுகள் ஏற்படுகின்றன. இதைப் பற்றி விசாரணை செய்ய 'டைரக்ட் டாக்ஸஸ் என்குயரி கமிட்டி' என்று முன்னாள் உயர்நீதிமன்ற நீதிபதி என். என். வாஞ்சு அவர்கள் தலைமையில் நிறுவப்பெற்றது. அதிலே இதற்கெல்லாம் என்ன பரிகாரம் காணப்பட்டிருக்கிறது? மத்திய அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது? இன்று விலைவாசி கூடுகிறது என்றால் பணத்தில் மதிப்பு குறைந்து கொண்டே போகிறது. கறுப்புப் பணம் நடமாடிக் கொண்டிருக்கிறது. மற்ற விதமான பணங்களும் நடமாடிக் கொண்டிருக்கின்றன. அரசாங்கம் அதிகப்படியாகச் செலவு செய்து கொண்டிருக்கிறது. அரசாங்கச் செலவினங்களைக் குறைக்க வேண்டும்.

'Ostentations expenditure should be avoided'

என்ற கருத்தை வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். இந்தக் கமிட்டியின் அறிக்கையை மத்திய அரசு பெற்றுவிட்டதா? இந்த அறிக்கை வந்த பிறகு மாநில அரசு என்ன நடவடிக்கைகளை மேற்கொள்ளப்போகிறார்கள் என்பதைப் பற்றியெல்லாம் விளக்கத்தை நான் இங்கு எதிர்பார்க்கிறேன்.

குறிப்பாக, மத்திய—மாநில அரசுகள் உறவு பற்றி என்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்பதைப் பற்றி முதலமைச்சர்கள் அத்தனை பேரும் கூடி தலைமை அமைச்சர் தலைமையில் பேசித்





தீர்க்க வேண்டும். மொழிப் பிரச்சினையானாலும் சரி, நதி நீர்ப் பங்கீடு பிரச்சினையானாலும் சரி, மத்திய அரசுக்கும் மாநிலங்களுக்கும் இருக்கக்கூடிய உறவு முறையானாலும் சரி—அவர்களே பேசித் தீர்த்துக் கொள்ளுவது சாலச் சிறந்ததாக இருக்கும் என்ற கருத்தில் ஸ்தாபன காங்கிரஸ் தீர்மானம் போட்டியிருக்கிறார்கள். அதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுவது பொருத்தமாக இருக்குமென்று நான் கருதுகிறேன்.

மதுவிலக்குக் கொள்கையைப் பற்றி இங்கே பலவிதமான கருத்துக்களைக் கூறியிருக்கிறார்கள். ஸ்தாபன காங்கிரஸில் இருப்பவர்கள் எதற்காக இந்த மதுவிலக்கு ரத்து செய்ததை எதிர்க்கிறார்கள் என்ற கேள்வியைக் கனம் அங்கத்தினர் பலரும் இந்த மன்றத்திலே கேட்டார்கள். காந்தியத்தில் அதிகமான நம்பிக்கை வைத்திருக்கிறவர்கள் எல்லாம் மதுவிலக்குக் கொள்கையைக் கைவிட்டு விட்டார்களே, தமிழ்நாட்டில் மட்டும் மதுவிலக்குக் கொள்கை நீடித்து இருக்க வேண்டுமா என்ற கருத்தைப் பலரும் கூறினார்கள். நான் ஒன்று கூற விரும்புகிறேன்.

குறிப்பாக, நமது இந்தியக் கம்யூனிஸ்டு கட்சித் தலைவர் அவர்கள் மதுவிலக்கு ரத்து செய்வதை வரவேற்றார்கள். அதே மாதிரி இந்த மன்றத்தில் பெரும்பாலான அங்கத்தினர்கள் வரவேற்றிருக்கிறார்கள். முஸ்லிம் லீக் கட்சி கண்டிக்கிறது. பி.எஸ்.பி. கண்டிக்கிறது. சுதந்திராக் கட்சி கண்டிக்கிறது. இவர்கள் எல்லாம் என்ன முறையில் கண்டிக்கிறார்கள் என்பதைச் சற்று நிதானமாகச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

1937ல் மதுவிலக்கைக் கொண்டு வந்தபோது சாதாரணமாக எல்லோரும் கோஷம் போட்டோம். மது ஒழிந்தது, தேன் சுரந்தது என்றெல்லாம் கூறினோம். பனை மரத்திற்கும் விடுதலை தென்னை மரத்திற்கும் விடுதலை என்றெல்லாம் பாட்டுக்கள் இசைத்தோம். பிரசாரங்கள் செய்தோம். 1937ல் சேலம் மாவட்டத்திற்கு மட்டும் உடனடியாக சட்டம் செய்திருக்கிறார்கள். அதற்குப் பிறகு 1948 அக்டோபர் 2-ம் தேதி முதல் தமிழ் நாடு முழுவதும் மதுவிலக்குச் சட்டம் அமலாகியிருக்கிறது. இப்போதுள்ள நிலையிலே ஒரு ஆட்சேபணை இருக்கிறது என்பதைக் கூற விரும்புகிறேன். இப்போது மதுவிலக்கை ரத்து செய்யவில்லை. ஒத்தி வைக்கப்பட்டிருப்பதாகக் கூறியிருக்கிறார்கள். அப்படியானால் முன்பு இருந்த அப்காரி ஆக்டை கொண்டு வரப் போகிறார்களா? அது இல்லாமல் மதுவிலக்குச் சட்டத்தை அறவே ரத்து செய்து சட்டம் கொண்டு வரப் போகிறார்களா? முதலமைச்சர் அவர்கள் ரத்து செய்து சட்டம் செய்யாவிட்டால் அதிலே சிறு ஆட்சேபணை இருக்கக்கூடும் என்று என் சிற்றறிவுக்கு எட்டுகிறது என்று கூற விரும்புகிறேன். அப்போது சேலத்தில் உடனடியாக அந்த மதுவிலக்குச் சட்டம் அமலாகும் என்று கூறினார்கள். 1, 3, 6 என்ற ஷரத்துக்களில் உடனடியாக அமலுக்கு வரும் பகுதிகள் என்று சட்டத்திலே இருக்கிறது. மற்றப் பகுதிகளிலே விஸ்தரிப்புத்தான் நடந்

திருக்கிறது. அந்த நிலையில் இப்போது நோடிபிகேஷன் மூலமாகத் தள்ளிப் போடுவது என்றால் அது கஷ்டமாக இருக்கும். அது சேலம் ஜில்லாவுக்கு உகந்ததாக இருக்காது. ஆகையால் அதை ரிப்பீல் செய்து சட்டம் கொண்டு வருவதுதான் பொருத்தமாக இருக்குமென்ற கருத்தை நான் கூற விரும்புகிறேன்.

மதுவிலக்குக் கொள்கை எல்லோராலும் வரவேற்கத்தக்க கருத்து. ஏன் நம்முடைய அரசாங்கம் அதைக் கைவிட வேண்டு மென்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இந்த மதுவிலக்கை ஒத்திப் போடுவதன் மூலம் வரக்கூடிய வருவாய் பத்துக் கோடி ரூபாய் என்று கூறுகிறார்கள். இதற்காக ஏழை எளிய நடுத்தர மக்கள் மேலும் கஷ்டப்பட வேண்டுமா என்பதைத் தயவு செய்து பரிசீலிக்க வேண்டும். ஏற்கனவே, பல இடங்களில் அரிஷ்டம், மதுக் கஷாயம் போன்றவை விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. இதைத் தடை செய்வதற்கு மாநில அரசிற்கு அதிகாரம் இல்லை யென்று சொல்லப்படுகிறது. டெல்லியிலும் அரிஷ்டம் போன்ற வற்றைத் தடை செய்யாமல் இருக்கின்ற நிலையில் மதுவிலக்கை ரத்து செய்தால்கூட போதிய வருவாய் ஏற்படாது என்பதையும் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

மதுவிலக்கைப் பற்றி இதற்கு முன்னால் இந்தச் சட்டமன்றத் தில் பல அபிப்பிராயங்களைக் கூறியிருக்கிறார்கள். குறிப்பாக, இரண்டு மேற்கோள்களை இந்த மன்றத்தின்முன் வைக்க விரும்பு கிறேன்.

1958-ல் மதுவிலக்கு குற்றங்கள் அதிகமாகி வந்தன. ஆகையால் குற்றம் புரிந்தவர்கள் மீது கடுமையான தண்டனை விதிக்கப்பட வேண்டுமென்று அன்று திரு. பக்தவத்சலம் அவர்கள் சட்டம் கொண்டு வந்தார்கள். அப்போது இந்த மன்றத்தில் விவாதத்தில் கலந்து கொண்ட கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாகப் பேசிய உயர் திரு கலியாணசுந்தரம் அவர்களும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக மறைந்த தலைவர் உயர்திரு சி. என். அண்ணா துரை அவர்களும் கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள். அவர்கள் என்ன கூறியிருக்கிறார்கள் என்பதை இங்கே நான் படித்துக் காட்ட விரும்புகிறேன்.

உயர்திரு கலியாணசுந்தரம் அவர்கள் மார்ச் 13, 1958 அன்று பேசியதாவது—

"கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மசோதாவை இன்னும் 6 மாதத்திற்குப் பிறகு நாம் ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ள லாம் என்று நண்பர் சட்டநாதக் கரையாளர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் திருத்தத்தை நான் ஆதரிக்கிறேன். அதனால் மது விலக்குக் கொள்கைக்கு விரோதம் என்று அர்த்தமல்ல. மதுவிலக் கைப் பரிபூரணமாக, வெற்றிகரமாக நடத்த வேண்டுமென்பது தான் என்னுடைய அபிப்பிராயமும். கம்யூனிஸ்டு கட்சியின் அபிப்பிராயமும் அதுதான்"





என்று கூறியிருக்கிறார். அவர்கள் மேலும் அதைப் பற்றிப் பாராட்டி, புகழ்ந்து பல கருத்துக்களை, நல்ல அறிவுமிக்க கருத்துக் களை எல்லாம் கூறியிருக்கிறார்கள். அதையெல்லாம் எடுத்துப் படித்து என்னுடைய காலத்தைக் குறைத்துக் கொள்ள விரும்ப வில்லை.

நமது மதிப்பிற்குரிய மறைந்த முதலமைச்சர் மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை அவர்கள் அன்று எந்த முறையில் பேசி யிருக்கிறார்கள் என்பதையும் இந்த அவையின்முன் வைக்க விரும்பு கிறேன்—

"கனம் சபாநாயகர் அவர்களே, மதுவிலக்குச் சட்டம் நம் நாட்டில் எந்த அளவிற்கு வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டிருக் கிறதோ அந்த அளவிற்கு நாம் பெருமைப்பட வேண்டும். எந்த அளவிற்கு அது தோல்வியடைந்திருக்கிறதோ அந்த அளவிற்கு நம்மைப் பற்றிக் கேவலமான ஒரு கருத்து நமக்குள்ளேயே எல்லாக் கட்சியினரிடத்திலும் இருந்து வருகிறது. எனவே, ஒரு குறிப்பிட்ட கொள்கையில் எல்லாக் கட்சிகளும் ஒருமித்த கருத் துக் கொண்டிருக்கின்றன என்றால் அது மதுவிலக்குத் திட்டம் நம் நாட்டில் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட வேண்டுமென்ற கொள்கைதான் ஆகும்."

இப்படி பல கருத்துக்களை அவர்கள் எடுத்துக் கூறியிருக்கிறார்கள்.

மதுவிலக்குக் கொள்கையைப் பற்றி ஏளனமாக மத்திய அமைச் சரவையில் இருப்பவர்களும் தோல்வியடைந்து விட்டது என்று பேசியிருக்கிறார்கள். அது நியாயம் அல்ல, தர்மம் அல்ல என்று கருத்து தெரிவித்து இருக்கிறார்கள். ஒரு வேளை காலம் கடந்து விட்டது, 1958 போய் பல வருஷங்கள் ஓடிவிட்டன, ஆகவே அந்த கருத்தை மறு பரிசீலனை செய்ய வேண்டுமென்ற கருத்து நமது அரசாங்கத்திற்கு இருந்தாலும் அது நியாயமான அடிப்படையிலே இல்லை அதிலும் குறிப்பாக திருக்குறளிலே தமிழ் மறையிலே 93-வது அதிகாரத்தில் என்ன சொல்லியிருக்கிறது என்று நான் கூற வேண் டிய தேவையில்லை. மதுவிலக்குக் கொள்கையை 'டெம்பரன்ஸ் லீக்' மூலமாக பிரசாரம் செய்யலாம். இது ஒரு சமூக சீர்திருத்த சட்டமாக செய்யப்படுமானால் அது நன்றாக இருக்கும். அது சமூ கத்திற்கு உகந்த சட்டமா என்று பார்க்க வேண்டும். பலவிதமான எதிர்ப்புகள் இருக்கின்றன. பலவிதமான கோட்பாடுகள் இருந்து கொண்டு வருகின்றன. சமுதாயத்தில் இருக்கும் சிக்கல்கள், கஷ்டம் இவற்றை மாற்றுவதற்கு இதுமாதிரி சட்டம் தேவை. இந்த மது விலக்கு ரத்தினால் சமுதாயத்தின் அடித்தளத்தில் இருக்கும் மக்கள் மிகவும் பாதிக்கப்படுவார்கள். நடுத்தர மக்கள் பாதிக்கப் படுவார்கள் என்று அச்சப்படுகிறேன். ஆகவே, இந்த மதுவிலக்கு சட்டத்தை எடுக்கக்கூடாது, எடுக்கக்கூடாது என்று என் கட்சியின் சார்பில் சொல்லிக்கொள்கிறேன்.

மைசூரில் 5 வருஷத்திற்கு முன்பு எடுக்கவில்லையா என்று எடுத்துக் காட்டலாம். குற்றம் யார் செய்தாலும் குற்றம் தான்,

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] [1971 ஜூன் 29

ஒப்புக்கொள்ளத் தயாராக இருக்கிறோம். காங்கிரஸ்காரர்கள் எடுத்து விட்டார்கள் என்றால் அதே குற்றத்தை நாம் புரிய வேண்டுமா? தமிழ் நாட்டு மக்கள் பண்பாடு தெரிந்தவர்கள், நாகரீகம் தெரிந்தவர்கள். ஒருகாலும் அதைக் கடைபிடிக்கக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன். புறநானூறு போன்ற காவியங்களில்கூட கள்குடித்து இருக்கிறார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது என்று சொல்லலாம். அதைவிட திருக்குறளை நாம் மேற்கோளாகக் கொள்வது சாலச் சிறந்ததாக இருக்கும், பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். ஆகவே தய்வு செய்து இந்த மதுவிலக்கை ரத்து செய்வதை கைவிட்டு விடவேண்டுமென்று மக்களுடைய பெயரால் அதிலும் குறிப்பாக, ஏழை எளிய மக்களின் பெயரால் பெண்கள் சமுதாயத்தின் பெயரால் வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

விற்பனை வரியைப் பற்றி எல்லாம் நேற்றைய தினம் இங்கே காரசாரமான விவாதம் நடந்தது. 3 சத விகிதம் என்று இருந்ததை, 3½ சதவிகிதமாக உயர்த்தி இருக்கிறார்கள். கம்பௌண்டிங் செய்வதற்கு 2 சதவிகிதம் இருப்பதை 2½ சதவிகிதமாக உயர்த்தியிருக்கிறார்கள். இதனால் எவ்வளவு வருவாய் வருகிறது என்பதைப் பற்றி விரிவாக எடுத்துச் சொன்னார்கள். அது முடிந்த சமாசாரமாக இருக்கிறது. சட்டமாகி விட்டது, இனி கையெழுத்து ஆக வேண்டியதுதான். ஆகவே, அதைப் பற்றி அதிகமாக பேசினால் அதை அரசாங்கம் மறுபரிசீலனை செய்யும் என்று கருதவில்லை.

ஆனால் ஒன்று கூற விரும்புகிறேன். இந்த விற்பனை வரி மீது 10 சதவிகிதம் சர்சார்ஜ் இந்த சென்னை மாநகரத்திலுள்ளவர்களிடமிருந்து வர்த்தகர்களிடமிருந்து வசூல் செய்ய வேண்டுமென்று இந்த வரவு செலவு திட்டத்தில் எடுத்துக் கூறப்பட்டிருக்கிறது. இது வெகுவாக ஏழை மக்களை பாதிக்கக்கூடிய ஒரு வரியாக இருக்கும் இதை வாங்குபவர்கள்மீது திணிப்பதற்கு இந்த வர்த்தகர்கள் முனைவார்கள்.

அது மட்டுமல்ல, இந்த சென்னைப்பட்டினத்திலே இருக்கும் வர்த்தகர்கள் வெகுவாக பாதிக்கப்படுவார்கள். இங்கே இருக்கும் தொழிலை பாதிக்கும் என்பதால் இந்த வரியை உடனடியாக ரத்து செய்யவேண்டுமென்று இந்த சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக நமது அரசாங்கத்தின் தொழில் கொள்கை, தொழிலாளர்கள் நலனைப் பற்றி கூறுவது பொருத்தமானதாக இருக்கும் என்று கருதுகிறேன். நமது மாநிலத்திலே மாநில தொழில் மேம்பாட்டுக் கழகம் ஒன்று ஆரம்பிக்கப்போவதாகவும், அதற்காக 5 கோடி ரூபாய் மூலதனம் திரட்டி இருப்பதாகவும், இப்போது பல நல்ல முன்னேற்றம் செய்வதற்கு வாய்ப்பாக இருக்கும் என்று இந்த வரவு செலவு திட்டத்தில் கோடிட்டுக் காட்டப்பட்டு இருக்கிறது. ஆனால், இந்த பிற்பட்ட மாவட்டங்கள் எது எது என்ற பட்டியலை இந்த வரவு செலவு திட்டத்திலே எடுத்துக்



1971 ஜூன் 29] [திரு. ஆர். பொன்னப்ப நாடார்]

கூறப்பட்டு இருக்கிறது. சாதாரணமாக இன்று பார்த்தால் தொழில்கள் எல்லாம் புதிதாக தொடங்கப்படுவது, எங்கெங்கு தொழில்கள் அதிகமாக இருக்கிறதோ அதற்குப் பக்கத்தில் தான். அதாவது ஒன்றிரண்டு நகரங்கள், மாவட்டங்கள் இவற்றில்தான். இது பரவலாக ஆக்கப்பட வேண்டும். 'ரீஜினல் இம்பேலன்ஸ்' கொஞ்சமும் இல்லாத முறையில் மாற்றி அமைப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். பிற்பட்ட மாவட்டங்களிலே 'ஜாயிண்ட் செக்டாரிலே' துவங்கப்படுகிற தொழிற்சாலைகளை நடத்துவதற்கு அரசாங்கம் வேண்டிய நடவடிக்கை எடுத்து ஆக்கமும் ஊக்கமும் அளிக்க வேண்டும். அதிலும் குறிப்பாக, சில இடங்களில் 'என்டர்பிரினர்ஸ்' வர கஷ்டப்படுவார்கள், ஆகவே அந்தப் பகுதியில் இருப்பவர்களுக்கு பிரத்யேக ஊக்கம் தர வேண்டுமென்று சொல்லிக் கொள்கிறேன்.

இப்போது கூட்டுறவுத் துறையில் ஒரு உரத் தொழிற்சாலை 62 கோடி ரூபாய் செலவில் தூத்துக்குடியில் தொடங்குவதை நான் மிகவும் பொருத்தமானது என்று கருதுகிறேன். அதோடு 20 கோடி ரூபாய் செலவில் ஹெவி வாட்டர் தொழிற்சாலை ஒன்றையும், நிறுவப்பட்டிருப்பதாக அறிகிறேன். பொதுவாகப் பார்க்கிறபோது, பல தொழிற்சாலைகள் நிறுவுவதற்கு திட்டம் வகுத்து இருக்கிறார்கள். ஆனால் பிற்பட்ட மாவட்டங்களில் குறிப்பாக கன்னியாகுமரி மாவட்டத்திலே ரப்பர் தொழிற்சாலை நிறுவுவதற்கு எல்லா வசதிகளும் வாய்ப்புகளும் இருக்கின்றன. பிற்பட்ட மாவட்டங்கள் என்று பிரகடனப்படுத்தப்பட்ட மாவட்டங்களில் ஒவ்வொரு தொழிற்சாலை சர்க்கார் தரப்பில் நிறுவுவது பொருத்தமாக இருக்கும் என்று இந்த சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்கிறேன். கன்யாகுமரி மாவட்டத்தில் ஒரு ரப்பர் தொழிற்சாலை நிறுவினால் அதற்கு வேண்டிய ரப்பர் தோட்டங்கள், தனியார் துறையிலும் சர்க்கார் துறையிலும் ஏராளமாக உற்பத்தி செய்கின்றன. தாராளமாக மூலப்பொருள்கள் கிடைக்க வாய்ப்பு இருக்கிறது. எஞ்சிய பொருள்களையும் கேரளாவிலிருந்து பெற்றுக் கொள்ள வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, பொதுத்துறையில் ஒரு ரப்பர் தொழிற்சாலை கன்னியாகுமரியில் உருவாக்கித் தர வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறன்.

சேலம் இரும்பாலையைப் பற்றி இங்கே சிறப்பாக எடுத்துக் கூறப்பட்டிருக்கிறது. அதிலே 'ப்ராடக்ட் மிக்ஸ்' பொருள் கலவை பற்றி அறிக்கை மத்திய அரசிலிருந்து வருவதற்கு காலதாமதம் ஏற்பட்டிருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. அந்த காலதாமதம் தவிர்க்கப்படவேண்டுமென்று மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்திக்கேட்டுக் கொள்ளவேண்டுமென்றும், அதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். ஒரு சமயம் 1980 வரை என்று பயப்படக்கூடிய அளவிலே, அதிருப்தி தரக்கூடிய அளவிலே நடந்தது என்பதை உணரவேண்டும். அதிலே உடந்தையாக யார் இருந்தார்கள் என்பதை மறந்துவிட்டு, தமிழகத்திற்கு மிகச் சிறப்பான திட்டம், அதை மிக விரை

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] [1971 ஜூன் 29

வில் உருவாக்குவதற்கு எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்னொன்றையும் விசேஷமாக எடுத்துக் கூற வேண்டுமென்று விரும்புகிறேன். தூத்துக்குடி துறைமுகத் திட்டம் நிறைவு பெறும் நிலையில் இருக்கிறது. அதோடு சேர்த்து, சேதுசமுத்திரத் திட்டத்தையும் உடனடியாக மத்திய அரசாங்கத்தோடு தொடர்பு கொண்டு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்த முறையில் அதற்கான குறிப்பு இருக்கிறது. அதையும் பார்த்தேன். அதே மாதிரி நெய்வேலி இரண்டாவது ஸ்டேஜ் சுரங்கப் பணி துவக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். தூத்துக்குடியில் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை ஒன்றை நிறுவுவதற்கும் அரசாங்கம் வேண்டிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும். தொழில் துறையில் நாம் முன்னேறிக்கொண்டு இருக்கிறோம். புதிதாக பல ஸ்தாபனங்களைத் தொடங்குகிறோம். மூடிக்கிடக்கும் ஆலைகளை திறப்பதற்கு முன்பு மத்திய அரசாங்கத்தோடு தொடர்பு கொண்டு பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு இருக்கின்றன. ஆனால் அந்த நடவடிக்கைகள் இன்னும் துரிதமாக எடுக்க வேண்டும். அதிகப் பணத்தை பெற்றுக்கொண்டு மூடிக்கிடக்கும் எல்லா ஆலைகளையும் திறக்க அரசாங்கம் ஆவன செய்யவேண்டும். அப்படிச் செய்தால் தான் பெருகி வரும் வேலையில்லாத் திண்டாட்டம் தொழில் துறையில் இருக்கும் அமைதியின்மை ஆகியவற்றை தவிர்க்க முடியும். அரசாங்கம் அதற்கு துரித நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் இந்த சந்தர்ப்பத்தில் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். தொழில் துறையில் உள்ள தகராறுகளில் போலீஸ்காரர்கள் வேண்டுமென்றே நுழைவதால் பல தகராறுகள் ஏற்படுகின்றன. யூனியனில் மாச்சர்யங்கள் ஏற்படுகின்றன. இந்த மாதிரி கட்சி மாச்சர்யங்கள் இல்லாமல், யூனியன்கள் செயல்படுவதற்கு நல்ல விதிமுறைகள் இருந்தாலும் நடைமுறையில் நடக்கவில்லை என்று முதலமைச்சர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தாற்போல், நமது கல்விக்காக அதிகப் பணத்தை செலவழித்திருப்பது பாராட்டத்தக்கது தான். இல்லை என்று சொல்லவில்லை. கல்விக்காக 81.84 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. 6,500 புதிய ஆசிரியர்களுக்கு வேலை கொடுக்க குறிப்புக்கள் இந்த வரவு செலவுத் திட்டத்தில் இருக்கின்றன. ஆனால், இந்த புதிய தொழில் பயில் பிரச்சினைகளைப் பற்றி அரசாங்கம் சற்று சிந்திக்க வேண்டும். 'அப்ரெண்டிஸ் டீச்சர்' களுக்கு குறைந்த சம்பளம் இருக்கிறது. புதிதாக இலாகாவில் வேகன்ஸி இருந்தால், அதில் ஆசிரியர்களை அமர்த்தினால், அவர்களுக்கு குறைந்த ஊதியம் கொடுப்பது நியாயம் இல்லை. நியாயமான முறையில், அதற்கென்று அட்வர்டைஸ் செய்து வேலைக்கு எவ்வளவு உரியதோ அந்தச் சம்பளத்தைக் கொடுக்க அவர்களுக்கு உரிமை இருக்கிறது.



1971 ஜூன் 29] [திரு. ஆர். பொன்னப்ப நாடார்]

அப்ரெண்டிஸ் டீச்சராக இருப்பதாலேயே இந்த வேலைக்கு நியமிக்கப்படும்போது, குறைந்த சம்பளத்தை ஆசிரியப் பெருமக்கள் பெற வேண்டும் என்று செய்வது நீதி வழங்குவது ஆகாது.

இன்னும் ஆசிரியர்கள் பயிற்சியில் பல கஷ்டங்கள், சங்கடங்கள் இருக்கின்றன. சில இடங்களில் பயிற்சிப் பள்ளிகள் மூடப்படுகின்றன. மலையாளப் பயிற்சிப் பள்ளி குழித்துறையில் ஒன்று இருக்கிறது. மலையாள மொழி ஆசிரிய பயிற்சிப் பள்ளி அது ஒரே ஒரு பள்ளிதான். அந்த ட்ரெயினிங் ஸ்கூல் கன்யாகுமரி ஜில்லாவில் இருந்தது ஒன்றுதான். அது நீலகிரி மாவட்டத்திற்கும், கன்யாகுமரி மாவட்டத்திற்கும் சேர்த்து மாணவர்களை ட்ரெயின் செய்ய பயிற்சி பள்ளியாக இருந்தது. இந்த ஆண்டிலிருந்து அந்தப் பள்ளியை மூடவேண்டும் என்று உத்தரவு போடப்பட்டிருப்பதாக எனக்குத் தெரிகிறது. மலையாள மைனாரிடி சமாஜ உறுப்பினர்கள் எனக்கு அது சம்மந்தமாக கடிதம் மூலம் தெரிவித்திருக்கிறார்கள். அது மலையாள மைனாரிடிகளுக்கு அநீதியாக இருக்கிறது என்று கருதுகிறேன். சிறுபான்மையோர்களுக்குச் செய்யும் காரியமாக இருப்பதால் இதில் அரசாங்கம் தயக்கம் காட்டாமல், உடனடியாக ஈடுபட்டு, இதற்கு ஆவன செய்ய வேண்டும்.

இன்னொரு விஷயம். ஆசிரியர் பயிற்சிப் பள்ளிக்கு, 300 சிறப்பு எண் மார்க்கு வேண்டும் என்று புதிய விதி பிறப்பித்திருக்கிறார்கள். அதைப் புனர் பரிசீலனை செய்ய வேண்டும். குறைந்த மார்க் ஏழை எளிய மக்களுக்கு, குறிப்பாக தாழ்த்தப்பட்ட பாக்வர்ட் கிளாஸ் மக்களுக்கு, ஷெடூல்டு காஸ்ட் மக்களுக்கு போதிய ஊக்கம் அளிக்கும் வகையில் இருக்க வேண்டும். ஆகவே, அவர்களுக்கு இதில் விதிவிலக்கு அளிக்க வேண்டும். இல்லையென்றால் பயிற்சிப் பள்ளிகளில் அவர்களுக்கு அட்மிஷன் கிடைக்க வழிவகை காணமுடியாமல் போய்விடும்.

அடுத்தபடியாக, முக்கியமானது அரசாங்கத்தின் பயிற்சி மொழித் திட்டம். இதற்காக உயர்திரு இலட்சுமணசுவாமி முதலியார் அவர்கள் ஒரு அறிக்கை சமர்ப்பித்திருக்கிறார்கள். இது சம்மந்தமாக சுப்ரீம் கோர்ட் கல்லூரிகளில் பயிற்சி மொழி பற்றிய கேஸ் நடந்து, வட்டார மொழி மட்டுமாக இருக்கக் கூடாது என்று தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. இன்றைக்கு பல பகுதிகளிலும் ஆங்கிலத்தை ஒழித்து விடவேண்டும் என்ற மோகம் பலரிடத்திலே இருக்கிறது. வட நாட்டில் இருக்கிறவர்களுக்கு அதிகமாக இருக்கிறது என்றாலும், என் தென் நாட்டிலும், தமிழகத்திலும் இருக்கிறது. தமிழைப் போற்ற வேண்டும்; குறைக்க வேண்டும் என்று சொல்லவரவில்லை. ஆனால் எந்தத் துறையிலும் அறிவு பெற, போதுமான அளவில் தெரிந்து கொள்ள சிறந்த மொழி ஆங்கிலம் தான். உலகத்திலே உள்ள மொழிகளில் சிறந்த மொழி ஆங்கிலம் தான். ஒரு வேளை முன்பு ஆங்கிலேயர்கள் நம்மை ஆண்டார்கள் என்பதால், அது ஒரு அந்நிய மொழி,

அதைக் கையாள்வதால் அடிமைப்படுகிறோம் என்று சொல்லலாம். ஆனாலும், அது ஒரு சிறப்பான வளமான மொழி என்ற கருத்தில், விஞ்ஞானத்தில், பொருள் இயலில், வேறு எந்தக் காரியமாக இருந்தாலும், அதிலே இருக்கின்ற வளம் வேறு மொழியில் இல்லை.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, சுப்ரீம் கோர்ட் தீர்ப்பின்படி பார்த்தால், குறிப்பிட்ட ஒரு மொழி மட்டுமே, வட்டார மொழி மட்டுமே இல்லாமல், பிற மொழிகளுக்கு, சிறுபான்மையோருக்கு வாய்ப்பு இருக்க வேண்டும் என்றிருக்கிறது. அந்த வகையில் பார்த்தால், அது தமிழகத்தின் கல்வித் துறையை பாதிக்காது. தமிழகத்தின் கல்வியைப் பொறுத்தவரையில், சட்டப் பூர்வமாக, இந்த அவை தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது, நமக்கு இரு மொழித் திட்டம் என்று. அது வற்புறுத்தி ஏற்றுக் கொள்ளப் பட்டிருக்கிறது ; தமிழகத்தில் ஆங்கிலமும், தமிழும் இரண்டும் இருக்கும் என்று. எல்லாக் கல்லூரிகளிலும் இரண்டு மொழிகளும் பயிற்சி மொழிகளாக இருப்பதால், அந்தத் தீர்ப்பு நம்மைப் பாதிக்காது.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. ஆனால், நடைமுறையில் இருப்பதைப் பார்க்க வேண்டும். மாணவர்கள் பயிற்சி மொழியின் காரணமாக என்னென்ன முறைகளில் நடந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் சொல்ல வேண்டியதில்லை. ஆங்கிலத்தில் பயிற்சி பெறத்தான் விரும்புகிறார்கள். தமிழில் படிக்க விரும்பவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இன்னும் ஐந்து நிமிஷங்கள் தான் இருக்கிறது.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** இன்னொரு பத்து நிமிஷங்கள் கொடுங்கள் I will finish very soon. I have a lot of Points to Cover.

அதோடு அல்லாமல், தமிழிலே கற்றுக் கொண்ட மாணவர்களிடையே குறைவாக உணரும் அளவில் நிலைமைகள் இருக்கின்றன. ஊக்கம் அளிப்பதில் ஆட்சேபனையில்லை. எண்பது ரூபாய் ஆனாலும் சரி, இன்னும் அதிகமானாலும் சரி, கொடுப்பதற்கு தடஸ்தம் சொல்லவில்லை. ஆனால் இன்றைக்கு இருக்கும் நிலை என்ன என்று சிந்தித்துப்பார்க்க வேண்டும். வேலையில்லாத் திண்டாட்டம் அதிகமாக இருக்கும் நிலையில், மாணவர்களிடையே அமைதிக் குறைவு ஏற்படுகிறது. எனக்குத் தெரிந்த அளவில், நக்ஸலைட் இயக்கத்தில் பட்டதாரிகள், படித்தவர்கள் சென்று கொண்டிருக்கிறார்கள். காரணம், இன்று இருக்கின்ற கல்வி முறைதான். தொழில் செய்ய உகந்ததாக இல்லை என்ற காரணத்தால் அப்படி அந்த இயக்கத்தில் சேர்ந்துகொண்டு இருக்கிறார்களோ என்று நினைக்க வேண்டியிருக்கிறது. ஆகவே தான் கல்வி முறையைப் புனர்பரிசீலனை செய்ய வேண்டும் என்றும் அந்த வகையில் நல்ல காரியங்களைச் செய்ய வேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளுகிறேன்.





அடுத்தபடியாக, குடிநீர் பிரச்சினை. அதைப்பற்றியும் குறிப்பிட்டிருக்கிறார்கள். எல்லாக் கிராமங்களுக்கும், பாதுகாக்கப் பட்ட குடிநீர் கொடுக்கவேண்டியது அரசாங்கத்தின் தலையாய கடமை. பஞ்சத் துயர் தணிப்புக் காரியத்தின் கீழ் பல இடங்களில் தண்ணீர்த் தொட்டிகள் அவசர அவசரமாக நிறுவப்பட்டன. அப்படிச் செய்ததால் பல மேல் நிலைத் தொட்டிகள் தண்ணீர் இல்லாமல் பழுது பட்டும் இருக்கின்றன. சிலவற்றில் பம்பு இல்லை. லட்சக் கணக்கான ரூபாய்களைச் செலவு செய்து பல தொட்டிகளை அமைத்தும், ஒரு சொட்டுத் தண்ணீரும் இல்லாமல் இருக்கிறது. இவற்றை 'இவால்யூவேஷன்' என்ற முறையில் சரியான முறையில் இயங்குகிறதா என்பதை ஆராயவேண்டும். அதன் மேல் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அடுத்தபடியாக, நம்முடைய ஸ்டேட் ப்ளானிங் கமிஷன். நம்முடைய ஸ்டேட் பிளானிங் கமிஷனின் வேலைத் திட்டங்கள் என்ன என்பதைப் பற்றி ஒரு தெளிவான அறிக்கை அங்கத்தினர்களுடைய பார்வைக்கு வைத்தால், பொருத்தமானதாக இருக்கும். வருகிற பத்து வருஷங்களில் தமிழகத்தில் என்னென்ன செய்ய வேண்டும் என்று எடுத்துக் கூறியிருக்கிறார்கள். மாவட்டந் தோறும், ப்ரையாரிடி வைத்து, வேண்டிய காரியங்கள் செய்யப் பட நடவடிக்கை எடுக்க அரசு முன்வரவேண்டும். அதைப் பற்றி விரிவாக சபைக்கு எடுத்துக் கூறவேண்டும். வேலையில்லாத் திண்டாட்டம் இன்றைக்கு அதிகமாக கடுமையாக இருக்கிறது. அதை நிவர்த்திக்க பல திட்டங்கள் இருக்கின்றன. ரூரல் எம்ப்ளாய்மெண்ட் கிராஷ் ப்ரோகிராம் இருக்கிறது. அது போதாது. அதே மாதிரி, படித்தவர்களுக்கு மத்தியில் இருக்கும் வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்க பல திட்டங்களை போட்டிருக்கிறது. இவையெல்லாம் சாதாரணமாகச் சொல்வது, போல் யானைப் பசிக்கு சோளப்பொரி போல்தான் இருக்கிறது. திட்டங்கள் இருக்கின்றன. மத்திய சர்க்காரிலிருந்து போதிய அளவில் நிதி கிடைக்கவில்லை. ஆகவே முழுமையாக, போதிய அளவில் செய்ய வாய்ப்பில்லை என்று சொல்லுவார்கள். ஆனால், இதையெல்லாம் மறந்து விட்டு, வளர்ந்துக் கொண்டிருக்கிற வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிப்பதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அடுத்து இளைஞர் அணி, யூத் கோர் 2,000 பேர்களுக்கு பயிற்சி கொடுக்கப் போகிறார்கள். அதற்கான திட்டம் உருவாக்கப் பட்டிருக்கிறது. இதெல்லாம் கட்சிக் கண்ணோட்டத்தோடு இருக்கக் கூடாது என்று மாண்புமிகு முதல் அமைச்சரைப் பணிவோடு கேட்டுக் கொள்ளுகிறேன். என் பகுதியில் என்ன நடக்கிறது என்று எனக்குத் தெரியும். குறிப்பாக பசுமைப் புரட்சி பற்றியும், நிலவள வங்கிகள் பற்றியும் சொல்ல வேண்டும். யார் யார் அங்கம் வகிக்கிறார்கள். யார் யாருக்கு கடன்கள் கொடுக்கப் படுகின்றன என்பதையெல்லாம் பற்றி ஒரு நீ

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] [1971 ஜூன் 29

விசாரணை நடத்தினால் கூட பொருத்தமாக இருக்கும். கட்சிக் கண்ணோட்டத்தோடு செய்யாமல், நல்லமுறையில், ஆர்வம் உள்ளவர்களையும், ஊக்கம் உள்ளவர்களையும் போட்டு நல்ல காரியங்களைச் செய்ய வேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, இந்த சத்து உணவு வழங்குவதில், கட்சிக் கண்ணோட்டத்தோடு செய்யப்படுவதாக திருமதி அனந்தநாயகி அம்மையார் கூறினார்கள். சத்து உணவு வழங்குவதில் குறிப்பிட்ட ஒரு அரசியல் கட்சிக்கு, குறிப்பிட்ட அரசியல் கட்சி மன்றங்களுக்கு உரிமைகள் வழங்கப்பட்டிருக்கிறது என்பதை சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அதைப் பற்றி தனிப்பட்ட முறையில் அதற்கான விவரங்களை, மாண்புமிகு முதல் அமைச்சரிடம் தனியாகப் பார்த்து, விவரங்களைக் கூறக் கடமைப் பட்டிருக்கிறேன்.

என்னிடத்தில் தந்திருக்கும் இந்தக் கார்டு சிறப்பாகக் கொடுக்கப் பட்டிருக்கிறது. மைலாப்பூர் வட்டத்தில், இன்னும் வேறு ஸ்தாபனங்களாலும், விநியோகம் செய்யப் பட்டிருக்கின்றன.

இந்த 'பெக்கர் ரிலீப்' பற்றி ஒரு வார்த்தை கூறவேண்டும். இதற்கு அரசாங்கத்தில் இருந்து அட்டை அடிக்கப்பட்டு பிரச்சாரம் செய்யப் பட்டிருக்கிறது. இதிலும் சின்ன கோளாறு இருக்கிறது. தயவு செய்து முதல் அமைச்சர் அவர்கள் மன்னித்துக் கொள்ளவேண்டும். இதிலும் ஒருவிதமான கோளாறு, அதாவது 'சீரியல் நம்பர்' கோளாறாக இருக்கிறது. விநியோகம் செய்திருக்கின்ற அட்டைகளில் நம்பர் இருப்பது அவசியம்தான். சாதாரணமாகச் சொல்வார்கள் "சீஸரின் மனைவி சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு இருக்க வேண்டும்" என்று. நடைமுறையில் பார்க்கிறபோது இந்த மாதிரியான பல ஊழல்கள் ஏற்படுகின்றன. நல்ல திட்டத்தில் எந்தவிதமான ஊழலும் வரக் கூடாது என்பதற்காகத்தான் இதை எடுத்துக் கூறினேன். இந்த மாதிரி பல இடங்களில் ஊழல் இருக்கிறது. அதை அதிகாரிகள் அவர்களின் ஆட்கள் நடத்தியிருக்கிறார்கள் என்று சொல்வது பொருத்தமல்ல. இதை எல்லாம் அருள்கூர்ந்து கவனிக்க வேண்டும் என்று கேட்கிறேன்.

அடுத்து, நில உச்ச வரம்பு போன்ற காரியத்தைப் பற்றி இன்னும் துரிதமான நடவடிக்கை எடுப்பதிலே நாங்கள் எல்லோரும் சந்தோஷமாக இருக்கிறோம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

பஸ்களுக்கு உச்ச வரம்பு கட்டுவது, 50-க்கு மேல் உள்ள பஸ்களை எல்லாம் நாட்டு உடமை ஆக்கப்பட எல்லா திட்டங்களும் தீட்டப்பட்டிருக்கின்றன. ஆனால், அதற்கு முன்னதாக நாட்டு உடமை ஆக்கப்படுவதால், அந்தப் பஸ்களை நடத்துகிறவர்களுக்கு



1971 ஜூன் 29] [திரு. ஆர். பொன்னப்ப நாடார்]

எவ்வளவு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்பதையும் சிந்தித்துப் பார்க்கவேண்டும். 50-க்கும் மேற்பட்ட பஸ்களை நாட்டு உடமை ஆக்கும்போது, அந்த நிர்வாகத்தில் உள்ளவர்கள் என்னென்ன சலுகைகளை வைத்துக்கொள்ளவேண்டும் என்பதையும் பார்க்க வேண்டும். இதை எல்லாம் ஆலோசித்து இந்தத் தொழிலில் இருக்கிறவர்களுக்கு நல்ல பாதுகாப்பு அளிக்கவேண்டும். ஏதோ பஸ் முதலாளிக்குப் பரிந்து பேசுவதாக எண்ணத் தேவையில்லை. நாட்டு உடமை ஆக்கப்பட்ட நகர பஸ் போக்குவரத்தில் 1968-69 ல் ரூபாய் 40 லட்சத்து 76 ஆயிரம் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. 1970-71-ல் 53 லட்சத்து 30 ஆயிரம் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. பொதுவாக இந்த டிரான்ஸ்போர்ட் சரியான முறையில் நடக்கவில்லை. சென்னையிலோ அல்லது கன்னியாகுமரியிலோ. இதில் உள்ள கஷ்டம் தடுக்கப்படவில்லை. பல ரூட் பஸ்கள் நடு ரோட்டில் நிற்கிற அவல நிலைமையைப் பார்க்கிறோம். இந்த மாதிரியான நிலைமை நீடித்து இருக்குமானால், நாட்டு உடமை ஆக்கப்படும் நிறுவனம் எல்லாம் வீணாகிவிடுமே என்று நாம் எல்லாம் வருந்துகிறோம்.

இன்னும் பல குறைகளைப் பற்றி எல்லாம் இங்கே கூறுவதற்கில்லை. பொதுவாக இந்த ஒரு மதுவிலக்குக் கொள்கையைப் புனர் பரிசீலனை செய்யவேண்டும்.

விற்பனை வரியின்மீது மேல் வரியை ரத்துச் செய்யவேண்டும் என்று இங்கு அழுத்தந்திருத்தமாகக் கூறிக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

* மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்தின் முன்னால் வைக்கப்பட்ட நிதி நிலை அறிக்கைமீது மாமன்றத்து உறுப்பினர்கள் அனைவரும் தங்களுடைய விழுமிய கருத்துக்களை எடுத்துக் கூறியிருக்கிறார்கள். நம்முடைய காங்கிரஸ் கட்சித்தலைவர் மாண்புமிகு திரு பொன்னப்ப நாடார் அவர்கள் எடுத்துக் கூறியதைப்போல், அவரோடு, சேர்த்து 100 பேர் இந்த விவாதத்திலே கலந்து கொண்டு நல்ல கருத்துக்களை எல்லாம் தந்திருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே 64 பேரும், காங்கிரஸ் கட்சியின் சார்பிலே 11 பேரும். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியிலே 6 பேரும், முஸ்லீம் லீகின் சார்பிலே 4 பேரும், பி.எஸ்.பி. கட்சியின் சார்பிலே 4 பேரும் சுதந்திராக் கட்சியின் சார்பில் 3 பேரும், பார்வர்ட் பிளாக் கட்சியின் சார்பில் 3 பேரும், தமிழரசுக் கழகத்தின் சார்பில் ஒருவரும், சுயேச்சைகளில் 3 பேரும். [illegible] 100 பேர் இந்த விவாதத்திலே கலந்துகொண்டு நிதிநிலை அறிக்கை பற்றி எதிர்ப்பான கருத்துக்களையும், ஆதரவான கருத்துக்களையும் தெரிவித்தமைக்காக அந்தக் கருத்துக்கள் எதாவது ஒரு வகையில் இந்த அரசின் காரியங்களுக்குப் பயன்படும் என்ற நிலையில் நான் நன்றி கூறி வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. மு. கருணாநிதி] [1971 ஜூன் 29

இந்த விவாதத்திலே கலந்து கொண்டு உரை ஆற்றிய உறுப்பினர்களில் பலர் உள்ளபடியே இந்த நிதிநிலை அறிக்கை தங்களுடைய உள்ளத்துக்கு மகிழ்ச்சி அளிக்கிறது என்பதை அவர்களுடைய மனச்சாட்சியே கூறினாலும், இந்த மன்றத்திலே அவர்கள் எதிர்க்கட்சி வரிசையிலே அமர்ந்து இருக்கின்ற காரணத்தால், எதிர்த்துத் தீரவேண்டிய அவசியத்திற்கு ஆளானார்கள் என்பதையும் நான் மறந்து விடவில்லை. இதிலே புரட்சி எதுவுமே இல்லை. புதுமை எதுவுமே இல்லை என்று பத்திரிகைக்குத் தலைப்புச் செய்தியை முதலில் கொடுத்துவிட்டு, நம்முடைய மாண்புமிகு திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் தன்னுடைய உரையைத் தொடங்கினார்கள். இதிலே புரட்சியும், புதுமையும் இருக்கிறதா இல்லையா என்பதை இந்த அறிக்கையிலே சுட்டிக் காட்டப்பட்டிருக்கிற திட்டங்கள் நடைமுறைக்கு வருகின்ற நேரத்திலேதான் தெரியுமே அல்லாமல், நாம் நிதிநிலை அறிக்கையைப் படித்து முடிந்ததும், உடனடியாக இந்த மாமன்றம் தலைகீழாகச் சுழன்று ஒரு பெரிய புரட்சிகரமாக மாறும் என்று நானும் எண்ணவில்லை, மாண்புமிகு பொன்னப்ப நாடார் அவர்களும் எண்ணியிருக்க மாட்டார்கள் என்றே நான் கருதுகிறேன்.

பல உறுப்பினர்கள் இந்த நிதிநிலை அறிக்கையைப் பற்றிப் புகழ்கின்ற நேரத்தில், நம்முடைய டாக்டர் ஹாண்டே அவர்கள் பேசும்போது குறிப்பிட்டார்கள். இதிலே புகழ்வதற்கு என்ன இருக்கிறது ? மயக்க மருந்து உட்கொண்டவர்கள், அதாவது "க்ளோரபார்ம்" கொடுக்கப்பட்டவர்களைத் தவிர மற்ற யாரும் இதைப் புகழ முடியாது என்று சொன்னார்கள். "க்ளோரபார்ம்" கொடுக்கப்பட்டவர்கள் பேசவே முடியாது. நல்ல டாக்டர்களுக்கு இது தெரியும் (கரவொலி). ஆனால் என்ன காரணத்தாலோ நம்முடைய டாக்டர் ஹாண்டே அவர்கள் இந்த பட்ஜெட்டைப் புகழ்கிறவர்கள் எல்லாம் "க்ளோரபார்ம்" மயக்கத்தில் இருப்பவர்கள் என்று குறிப்பிட்டார்கள். இது பொருளாதாரம் தெரியாமல் தயாரிக்கப்பட்டு இருக்கின்ற ஒரு நிதிநிலை அறிக்கை என்று ஹாண்டே அவர்கள் குற்றம் சாட்டினார். வரிகள் போடுவதால் விலைவாசி உயரும் என்ற ஒரு கருத்தும், உயராது என்கிற ஒரு கருத்தும் பொருளாதார மேதைகளால் சொல்லப்பட்டு இருக்கிறது. கின்ஸ் மாஸ்கிரேவ் போன்ற மேதைகள், வரிகள் போடுவதால், மக்களிடத்திலுள்ள பணத்தைக் குறைப்பதன் மூலம் விலைவாசி குறையும் என்ற தத்துவத்துக்குச் சொந்தக்காரர்களாய் இருக்கிறார்கள் என்பதை நாம் மறந்து விடக்கூடாது. ஹாண்டே அவர்கள் சொல்வதுபோல் நான் பொருளாதார மேதை அல்ல. நான் அந்த மேதாவிலாசத்தின் அடிப்படையில் இந்த அறிக்கையைத் தயாரித்துக் கொடுத்திருக்கிறேன் என்று வாய்ப்பறை அடித்துக் கொள்ளவும் நான் தயாராயில்லை. நானும் எனது கட்சியும் கொண்டிருக்கிற பொருளாதாரமெல்லாம் இந்த நாட்டிலே இருக்கிற ஏழை எளிய, சாதாரண, நடுத்தர, பாட்டாளி மக்கள், தொழிலாளி மக்கள் நல்வாழ்வைப்



1971 ஜூன் 29] [திரு. மு. கருணாநிதி]

பெறவேண்டும், அதற்கேற்ற வகையிலே என்னென்ன திட்டங்கள் தீட்டவேண்டும் என்கிற அடிப்படையிலே எதை யோசிக்கிறோமோ அதைத்தான் நாங்கள் கொண்டுள்ள அல்லது நாங்கள் சிறப்பாகப் போற்றுகின்ற பொருளாதாரமாகக் கருதிக்கொண்டு இருக்கின்றவர்கள்.

மத்திய அரசு இன்றைக்கு இந்த நாட்டில் அரசுக்கு இட்டிருக்கின்ற கட்டளைப்படி, ஆண்டு ஒன்றுக்கு திட்டத்தின் வாயிலாக 70 அல்லது 80 கோடி ரூபாய்தான் செலவிடலாம் என்று வரையறுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், நம்முடைய தமிழக அரசைப் பொறுத்தவரையில் அந்த 70 கோடி அல்லது 80 கோடி ரூபாய் என்கின்ற வரையறையில் திட்டங்களை வரையறுப்பது முடியாது என்ற காரணத்துக்காக, நம்முடைய ஓராண்டுத் திட்டத்தை 100 கோடியிலிருந்து 150 கோடி ரூபாய் வரையில் உயர்த்தி, அதற்கான நிதிவகைகளைக் கண்டுபிடிக்கவேண்டும் என்கின்ற ஒரு நல்ல அரசின் இலக்கணத்துக்கு உட்பட்டு, வழிவகைகளை எல்லாம் ஆராய்ந்து, இந்த நிதிநிலை அறிக்கையை இந்த மன்றத்தின் முன்னால் நாங்கள் வைத்திருக்கிறோம்.

நண்பர் மாரிமுத்து பேசும்போது ஒன்றைக் குறிப்பிட்டார். ரெவினியூ கணக்கை மட்டும் கணக்கில் எடுத்துக்கொண்டு அதற்கேற்ற வகையிலே வரிகளை எல்லாம் குறைத்துக் கொள்ளலாம் என்று அவர் சொன்னார். மூலதனக் கணக்கையும் ஒன்றாகச் சேர்த்துப் பார்த்துத்தான் மொத்த வருமானம் எவ்வளவு, மொத்தச் செலவு எவ்வளவு என்பதையும் சேர்த்து, ஊதிய உயர்வை எப்படி சரிக்கட்டுவது என்று ஆராய்ந்து, மூலதனக் கணக்கிலே தொழில் வளர்ச்சிக்கென்று நாம் முதலீடுகள் செய்ய வேண்டியிருக்கிறது.

கட்டிடங்கள், பொதுத் துறை என்ற தலைப்பிலே பல்வேறு கட்டிடங்கள், அரசுக்கு ஆதாயம் கிடைக்காத வகையிலேயுள்ள பல்வேறு வசதிகளை இயற்ற வேண்டிய நிலையிலே இருக்கிறோம் நாம்.

இவைகளெல்லாம் மக்களுடைய வசதிக்காகத்தானே தவிர, அரசுக்கு ஆதாயம் வரவேண்டுமென்ற நோக்கத்தில் நாம் நிதிநிலை அறிக்கையைத் தயாரிக்கவில்லை. எனவே, இந்த மூலதனம் என்ற அம்சத்திலிருந்து நாம் தப்பித்துக் கொள்ளவோ ஒளிந்து கொள்ளவோ முடியாத நிலையிலிருக்கிறோம்.

இது போன்ற மூலதனச் செலவுகளுக்கு வருவாய்க் கணக்கிலேதான் மிச்சத்தை நாம் கொண்டுவர வேண்டியிருக்கிறது. அதுவும் போதாததால் மொத்தமாக எல்லாக் கணக்குகளிலும் ஏற்படும் துண்டு எவ்வளவு என்று பார்க்க வேண்டியிருக்கிறது என்று அவர்களுடைய சந்தேகத்திற்கு விளக்கமாகத் தெரிவிக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த வரவு-செலவுத் திட்டத்தில் உறுப்பினர்கள் வரவேற்கும் திட்டங்கள் ஏராளம். ஆனால் தோழமை கட்சியிலே உள்ள சில பேர் கூட, குறிப்பாக தஞ்சைப் பெரியவர் மணலி கந்தசாமி அவர்களைப்போன்ற ஒரு சிலரைத் தவிர மற்றவர்கள், மக்கள் நல்வாழ்வுக்காகப் போடப்பட்டிருக்கும் திட்டங்களைப் பாராட்டாமல் இருப்பது என்னைப் பொறுத்தவரையில் ஒரு மனக் குறைதான். ஒரு வேளை முதலமைச்சர் தஞ்சாவூர்காரர் என்பதற்காகவோ என்னவோ, தஞ்சாவூர் பெரியவர் மணலி கந்தசாமி அவர்கள் இந்த நிதிநிலை அறிக்கையைப் பாராட்டி இருக்கக்கூடும்.

அவர்கள், இவ்வளவு நல்ல காரியங்கள் செய்வதற்கு விற்பனை வரியிலே அரை சதவிகிதம் உயர்த்தினால்தான் என்ன, என்று கேட்ட நேரத்தில் எனக்கு மிகத் தெம்பாக இருந்தது. இவ்வளவு தூரம் பழுத்த அனுபவம் வாய்ந்த ஒரு நல்லவருடைய, வல்லவருடைய ஆதரவு இந்த அரசுக்கு இந்த வரி விதிப்பிலே கிடைத்திருக்கிறது என்பதில் எனக்கு மிகுந்த மகிழ்ச்சி. ஆனால், மணலி பேசிய பிறகு இந்திய கம்யூனிஸ்டு கட்சியினர் தமக்கிடையே நடத்திய ரகசிய கூட்டத்தில் என்ன முடிவு எடுத்தார்களோ எனக்குத் தெரியாது. அவர்கள் நேற்றைய தினம் இந்த வரியை எதிர்த்துப் பேசியதோடு இன்றைக்கும் அதன் தொடர்பாகப் பேசியிருக்கிறார்கள்.

வரவேற்ற திட்டங்கள் என்று எடுத்துக் கொண்டால், எல்லா மாவட்டங்களிலேயும் விவசாயத் தொழிலாளர்களுக்கு அவர்கள் குடியிருக்கிற மனைகளைச் சொந்தமாக்க வேண்டும் என்கிற திட்டம் முதற்கட்டமாகத் தஞ்சை மாவட்டத்திலே நிறைவேற்றப் படவிருக்கின்றதை இங்கே மாமன்ற உறுப்பினர்கள் பலராலும் வரவேற்கப்பட்டிருக்கிறது.

ஐம்பதாயிரம் ஏக்கர் காட்டு நிலத்தை இந்த ஆண்டு புதிதாக விவசாயிகளுக்குத் தரத் திட்டம் தீட்டப்பட்டிருப்பதையும் அனைவரும் வரவேற்றிருக்கின்றார்கள். இதிலெல்லாம் கேரளாவைப் பின்பற்ற வேண்டுமென்று திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் கூறினார்கள்.

கேரளத்தில் கம்யூனிஸ்டு கட்சி முதன் முதலாகப் பீடத்தில் அமர்ந்த காலம் 1957. அந்த ஆண்டிலேயிருந்து 1971-ம் ஆண்டு வரை—கிட்டத்தட்ட ஒரு பதின்மூன்று பதினான்காண்டுக் காலம்—அவர்கள் தொடர்ந்து ஆட்சிப் பீடத்திலே இல்லாவிட்டாலும்—அந்தக் கொள்கைகள் கேரள மாநிலத்தில் பாவலாக்கப்பட்டு அதற்கு ஏற்றவண்ணம் அந்த மண் பக்குவப்படுத்தப்பட்டிருக்கிறது என்பதை மறந்து விடக்கூடாது.

ஆனால் கேரளாவிற்கு கிஞ்சிற்றும் சளைக்காத அளவுக்கு புதுமைகளையும், அமைதியான புரட்சிகளையும் ஏழை எளியோர் வாழ்க்கையிலே செய்திட வேண்டும்; ஏழைகள் நிமிர்ந்து நடக்கவும், அவர்கள் முகத்திலே புன்னகை காணவும் வழிபிறக்க





வேண்டுமென்று எண்ணி செயலாற்றுகின்ற இந்த அரசு, ஆட்சிப் பொறுப்பேற்று எத்தனை ஆண்டு காலமாகிறது என்பதனையும், இடையிலே எவ்வளவு பெரிய சோகப்புயல்களை எல்லாம் ஆளும் கட்சி தாங்கிக் கொள்ள வேண்டும் என்பதனையும் உறுப்பினாகள் மிக நன்றாக அறிவார்கள்.

பயணிகள் பேருந்துகளை தேசிய மயமாக்கியிருப்பதை நீங்கள் வரவேற்றிருக்கிறீர்கள்; அவைகளுக்கு உச்ச வரம்பு கட்டப் பட்டிருப்பதையும் வரவேற்றிருக்கிறீர்கள்.

வேலைவாய்ப்பிற்காக வழி செய்திருக்கிறோம் என்பதையும் இம் மாமன்றத்தின் உறுப்பினராகிய நீங்கள் வரவேற்றிருக்கிறீர்கள்.

காவல் துறைக்கு எஸ்.எஸ்.எல்.சி. படித்தவர்கள் 1,000 பேர் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்; இன்ஜினியர்கள் மூவாயிரம் பேருக்கு சிறுதொழில் துவங்க கடனுதவி செய்யப்படும். பட்டதாரி மாணவர்கள் 2,000 பேருக்கு இளைஞர்கள் அணி மூலமாக வேலை வாய்ப்பு தரப்படும். கிராமப் புறங்களிலே மத்திய அரசிடமிருந்து மாநில அரசிற்கு கிடைக்கும் தொகை, 15 ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்பளிக்கப் போதாதென்று வாதாடி வருகிறோம். முடிவு தெரியும் வரையிலே காத்திராமல்—நம் மாநில அரசின் மூலமாக மேலும் 15 ஆயிரம் பேருக்கும் வேலை வாய்ப்பளிக்கிறோம். ஆக 30 ஆயிரம் பேருக்கு கிராமப்புறங்களிலே வேலை வாய்ப்புத் தருகிறோம். இதுவன்றி 150 மருத்துவர்களுக்கும் 200 செவிலியர்களுக்கும் வேலை வாய்ப்புத் தருகிறோம். இது போன்ற சூழ்நிலைகள் எல்லாம் இன்றைக்கு உருவாகிக் கொண்டிருக்கின்றன.

இதிலே கட்சிக் கண்ணோட்டம் இருக்கக்கூடாதென்று எதிர்க் கட்சித் தரப்பிலேயிருக்கின்றவர்களும் தோழமைக் கட்சியிலே உள்ளவர்களும் எடுத்துரைத்ததை நாங்கள் மறந்துவிட மாட்டோம்.

இதற்கெல்லாம் தகுதியாளவர்கள் இதற்கு ஆற்றல் படைத்தவர்கள் ஆகியவர்கள்தான் தேர்ந்தெடுக்கப்படுவார்களே தவிர, இவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள், இவர் இவரை அறிவார்; எனவே தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்கின்ற அளவிலே—தேர்ந்தெடுக்கப்படமாட்டார்கள். கட்சிக் கண்ணோட்டம் இல்லாமல் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

தகுதி, திறமை யாருக்கிருந்தாலும், அவர்கள் அதுவரை எந்தக் கட்சியிலே இருந்தாலும், அவர்கள் உள்ளத்திலேயே எந்தக் கட்சி உணர்வு இருந்தாலும், அவைகளைப் பற்றி எல்லாம் கவலைப் படாமல்—திறமைசாலிகள் தான், இந்த அரசினுடைய கடமைகளை ஒழுங்காக நிறைவேற்றக்கூடிய ஆற்றலுள்ளவர்கள்தான்—தேர்ந்தெடுக்கப்படுவார்கள். இது உறுதி.

பிச்சைக்காரர்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் ஒரு திட்டத்தை இந்த அரசு தயாரித்து அதற்காக நிதியினைத் திரட்டி வருகிறது.

[திரு. மு. கருணாநிதி] [1971 ஜூன் 29

அது பற்றி நமது பொன்னப்ப நாடார் அவர்கள், இது ஒரு நல்ல திட்டம், ஆனால் இதிலே ஊழல் நடக்க விடக்கூடாது என்று கூறினார்கள். எல்லாத் திட்டங்களையும் சந்தேகக் கண்ணுடன் பார்க்கக்கூடாது. நாம் நிதி சேர்ப்பதோ பிச்சைக்காரர்களுக்கு. அதில் சிலர் தவறு செய்கிறார்கள் என்றால் அவர்கள் பிச்சைக் காரர்களுக்குத் துரோகம் செய்கிற கொடியவர்கள், தீயவர்கள் என்கிற கணக்கிலே எடுத்துக் கொள்ளவேண்டுமே அல்லாமல், இதற்கெல்லாம் ஏன் சீரியல் நெம்பர் போடவில்லை என்று கேட்பதிலே அர்த்தமில்லை.

கொடிநாள் என்று எத்தனையோ ஆண்டு காலமாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது. அந்தக் கொடிநாளில், கொடிகளுக்கு விலை இவ்வளவு என்று குறிக்கப்படுகிறது. அந்தக் கொடிகள் பள்ளிகளில்—சிறார்களிடத்தில் குறிப்பிட்ட தொகைக்கு விற்கப்படுகின்றன. அப்படி விற்கப்படுகின்ற எந்தக் கொடிக்கும் சீரியல் நம்பர் போடப்பட்டதாக நான் கேள்விப்பட்டதில்லை. ஆகவே, அச்சடிக்கப்பட்ட அட்டைகள் எவ்வளவு? அப்படி யாரும் அச்சடிக்க முடியாதபடி அதிலே என்னுடைய கையெழுத்து பதிக்கப்பட்டிருக்கிறது.

உத்தமர் காந்தியடிகள் மூன்று பிச்சைக்காரர்களுக்கு சிகிச்சையளிக்கின்ற படம் இன்னொரு புறத்திலே குறிக்கப்பட்டிருக்கிறது. இவைகளைக் கணக்கிட்டு ஒவ்வொரு இடத்திலும் தரப்பட்டு, இதன் மூலமாக இந்த நிதிக்கு இவ்வளவு தொகை வர வேண்டும் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. ஆகவே, இதிலே தவறு நடந்து விடாது என்று நான் நிச்சயமாக நம்புகிறேன். தவறுகள் சுட்டிக் காட்டப் படுமேயானால் அரசு சார்பில் ஏற்ற நடவடிக்கைகளை எடுப்பதற்கும் நான் தயாராயிருக்கிறேன்.

ஆசிரியர்களுக்கு வேலை வாய்ப்பும் 2,400 பொறியாளர்களுக்கு வேலை வாய்ப்பும், பின்தங்கியோர், ஹரிஜன மக்கள், முடிதிருத்துவோர், சலவைத் தொழிலாளர்கள், ஆகியோருக்குச் சலுகைகளும், கொடுக்கப்படுகின்றன. இவைகளன்னியில் பல குடிநீர் திட்டங்களும் இந்த வரவுசெலவுத் திட்டததிலே 'பார்ட் 2 ஸ்கீமில்' சேர்க்கப்பட்டிருக்கின்றன. இதனால் தான் நாம் வரிகளைப் போடவேண்டிய நிலைமைக்கு ஆளாகியிருக்கிறோம் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

இந்த நிதிநிலை அறிக்கையிலே எடுத்துச்சொன்ன திட்டங்களால் மட்டும் நமது மாநிலத்தின் தேவைகள் பூர்த்தி அடைந்துவிடுமா என்றால் இல்லை. இன்னும் ஏராளமான தேவைகள் இருக்கின்றன. அந்தத்தேவைகளையெல்லாம்—இங்கே பேசிய உறுப்பினர்கள் தொகுதி வாரியாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

இந்த நிதிநிலை அறிக்கை விவாதத்தில் எடுத்துச் சொல்லப்பட்ட இந்தப் பிரச்சினைகள் எல்லாம் மறுபடியும் விரும்பினால் சட்டமன்ற நடவடிக்கைப் புத்தகத்திலிருந்து படித்துக் கொள்ள



1971 ஜூன் 29] [திரு. மு. கருணாநிதி]

லாம் என்கிற நிலைமை இருந்து வந்திருக்கிறது. அவைகளில் சில மறந்தும் விடலாம். கூடிய வரையில் அந்த நிலைமைக்கு இடம் தராத வகையில் தங்கள் தங்கள் தொகுதிகளைப் பற்றிக் கோடிட்டுக் காட்டுகின்ற எந்தப் பிரச்சனையானாலும் அவைகளை ஆராய தலைமைச் செயலாளர், நிதித் துறைச் செயலாளர், வருவாய் வாரிய உறுப்பினர்களில் ஒருவர், ஆக மூவர் கொண்ட குழு அமைக்கப் பெற்று அந்தக் குழு, பேசிய உறுப்பினர்களுடைய கருத்துக்களை எல்லாம் ஆராய்ந்து, ஒவ்வொரு துறையின் தலைவர், துறையினருடைய செயலாளர்கள் அலுவலர்கள் இவர்களோடு கலந்து ஆராய்ந்து, அமைச்சர் அவைக்கு அறிக்கைகளை அறிவித்து, அதிலே பெரும்பாலானவற்றை இந்த ஆண்டு வரவுசெலவுத் திட்டத்திலேயே நிறைவேற்ற வழிவகைகள் வகுக்கும் என்பதை மிகுந்த மகிழ்ச்சியோடு இந்த மாமன்றத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதுபோன்ற தேவைகள் பூர்த்தி செய்யப்படவேண்டும் என்பதற்காகத்தான்—நாம் எப்படியும் தவிர்த்து விடலாம் என்று எண்ணினால்கூட வரிகளின் மூலம் அவற்றிற்குத் தேவையான நிதிவாயில்களைப் பெருக்க வேண்டியவர்களாயிருக்கிறோம். விற்பனை வரியில் கூட 3 சதவீதம் வரியை 3½ சதவீதமாக ஆக்கிய அதே நேரத்தில், நேற்று அந்தத் துறை தொடர்புடைய அமைச்சர் அவர்கள் இங்கே சில சலுகைகளை அளித்திருக்கிறார்கள். 15,000 ரூபாய் வரை டர்னோவர் உள்ளவர்களுக்கு விற்பனை வரி இல்லை என்பதை மாற்றி 25,000 ரூபாய் வரை டர்ன்-ஓவர் உள்ளவர்களுக்கு விற்பனை வரி இல்லை என்றும், ரூ. 75,000 வரை கம்பவுண்டிங் பண்ணலாம் என்பதை ஒரு லட்ச ரூபாய் வரை கம்பவுண்டிங் பண்ணலாம் என்றும் சலுகைகளை நேற்றைய தினம் தெரிவித்து இருக்கிறார்கள்.

பத்து சதவீதம் சர்சார்ஜ் விற்பனை வரி பற்றி இந்த மாமன்ற உறுப்பினர்கள் எல்லாம் ஒரு கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். வேறு சில உறுப்பினர்கள் இது சென்னை நகரத்துக்கு மாத்திரம் இருக்கிற காரணத்தினால் இதைப் பயன்படுத்திக்கொண்டு சென்னை புறநகர்ப் பகுதியிலுள்ளவர்கள் இதை ஏமாற்றித் தப்பித்துக் கொள்ளக்கூடும் என்றெல்லாம் சொன்னார்கள். ஆகவே அதைப் பற்றியும் யோசித்துப் பார்த்தோம்.

சென்னைக்கு மட்டும்தான் இந்த வரியா? கோவை, சேலம், மதுரை, திருச்சி போன்ற நகர்ப் பகுதிகளுக்கு இந்த வரி கிடையாதா என்றெல்லாம் உறுப்பினர்கள் கேட்டார்கள். ஆகவே சென்னையின் புற நகரப்பகுதிகளுக்கும் கோவை, திருச்சி, மதுரை, சேலம் போன்ற நகரங்களையும் அவற்றின் புற நகர்ப்பகுதிகளையும் இணைத்து இதே விற்பனை வரி சர்சார்ஜை விதிக்கலாம் என்று உறுப்பினர்களின் கோரிக்கைக்கிணங்க, 10 சதவிகிதம் என்று இருக்கும் மேல் வரியை 5 சத விதமாகக் குறைத்து விதிக்கலாம் என்று கருதுகிறோம் என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்துக் கொள்கிறேன். பத்து சதவீதம் என்று இருந்தது 5 சதவீதமாகக் குறைக்கப்பட்டிருக்கிறது.

[திரு. மு. கருணாநிதி] [1971 ஜூன் 29

சென்னை நகரிலும் மற்ற நகரங்களிலும் உள்ள பல்லாயிரக் கணக்கானவர்கள் ஒரு கிரவுண்ட்வரை உள்ளவர்களுக்கு நகர்புற நிலவரி ரத்து செய்யப்பட்டிருக்கிறது.

மனை வரியின் மூலமாக சென்னை நகரிலும் பிற இடங்களிலும் ஒரு கிரவுண்ட் வைத்திருக்கிற பல்லாயிரக்கணக்கானவர்களுக்கு வரிவிலக்கு செய்யப்பட்டதன் மூலமாக அதன் மூலம் ஒரு சமதர்ம நோக்கோடு அவர்களெல்லாம் இந்த வரியிலிருந்து விடுபடக்கூடிய சூழ்நிலையை இந்த அரசு உருவாக்கியிருக்கிறது.

இந்த மன்றத்தில் நிதிநிலை அறிக்கை வைக்கப்பட்டதும் வேளாண்மை வரிபற்றி நிருபர்களிடத்திலே கருத்து தெரிவிக்கை யில் உறுப்பினர் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள், கிராமங் களிலே அதிகமாகச் சம்பாதித்துக் கொண்டிருப்பவர்களை வரிகள் தொடவில்லையென்று சொன்னார்கள். வேளாண்மை மூலம் அதிக ஆதாயம் பெறக் கூடியவர்களை மட்டுமே பாதிக்கின்ற அளவுக்குச் சில மாறுதல்களைச் செய்திருக்கிறோம். அதற்கான மாறுதல் சம்பந்தப்பட்ட மசோதா இந்த மன்றத்திலே வரவிருக்கிறது.

இந்த வரிகளை எல்லாம் குறிப்பிட்ட டாக்டர் ஹாண்டே அவர்கள் ஒருகையால் கொடுத்துவிட்டு இன்னொரு கையால் திரும்பி வாங்கிக்கொள்கிறீர்கள் என்று குறிப்பிட்டார்கள். இந்த மாநிலத்தினுடைய மொத்த வருமானம் 2,400 கோடி ரூபாய். இந்த 2,400 கோடி ரூபாயில் அரசு ஊழியர்கள் ஊதியமாகப் பெறுகின்ற தொகை 100 கோடி ரூபாய். இது இந்த மாநில வருமா னத்தில் 20-ல் ஒரு பங்காகும். இப்போது கூடுதலாக எழுப்புகின்ற வரிகள் மூலம், நிதி வாயில்கள் மூலம் கிடைக்கின்ற தொகை 25 கோடி ரூபாய் என்றால் அதில் ஒரு பங்கைத்தான் ஒரு கோடி ரூபாய்க்கான வரிப் பளுவைத்தான் அரசு ஊழியர்கள் ஈர்க்க வேண்டி இருக்கிறது. அதே நேரத்தில் அவர்களுக்காக இரண்டாவது ஊதியக் குழு சிபாரிசுபடி 25 கோடி ரூபாய் ஊதிய உயர்வு தந்திருக்கிறோம். அதனை ஒப்பிட்டுப் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று மிகுந்த பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

குடிசைவாரியம், குடிசைகளை மாற்றி நல்ல கட்டிடங்களை ஏழை எளிய மக்களுக்காகக் கட்டித்தருகிற திட்டம் நல்ல திட்டம். குடிநீர் வாரியத் திட்டம் இவைகளுக்காக நாம் ஏராள மாகச் செலவு செய்ய வேண்டியிருக்கிறது.

குறிப்பிட்ட காலத்திற்குள் 1972-ம் ஆண்டு முடிவதற்குள்ளாக தமிழ்நாட்டிலே எங்குபார்த்தாலும் மின்னொளி இல்லாத கிராமமே இருக்கக் கூடாது என்று சூளுரைத்து, அத்திட்டத்தை நிறைவு படுத்துகிறோம்.

"இதுவரை தமிழ்நாடு முதல் இடம் வகித்து வந்தது. ஆனால் இப்போது அந்த வகையில் 2-வது இடத்திற்கு வந்து விட்டது. அரியானா முதல் இடத்திற்கு வந்துவிட்டது" என்று, திருமதி அனந்தநாயகி அவர்கள் பேசும்போது சொன்னார்கள். அது முதல்



1971 ஜூன் 29] [திரு. மு. கருணாநிதி]

இடத்தில் இருக்கிறதா என்பதை வடக்கே உள்ள பத்திரிக்கைகள் வெகுவாக எழுதிக்கொண்டிருக்கின்றன. ஒரு மாநிலத்தின் முதலமைச்சர் இன்னொரு மாநிலத்தின் பிரச்சனைகளில் தலையிடுவது நல்லதல்ல. அந்த சர்ச்சையில் நான் இறங்கவும் இல்லை. அரியானா முதலிடம் பெற்றது என்றால் அது தமிழ் நாட்டின் பரப்பில் மூன்றில் ஒரு பங்கு—தமிழக மக்கள் தொகை யில் நான்கில் ஒரு பங்கு கூட இல்லை. வட ஆர்காடு, தென்னார்க் காடு, செங்கற்பட்டு மூன்று மாவட்டங்கள் சேர்ந்த தொண்டை மண்டலம்தான் அரியானா.

நாம் எல்லா கிராமங்களுக்கும் உண்மையிலேயே விளக்குப் போட தீவிர முயற்சி எடுத்து வருகிறோம். இன்னும் 2, 3 ஆண்டு களில் ஒளி வசதி இல்லாத கிராமமே இல்லை என்ற நிலைக்கு ஏற்பாடு கள் செய்வோம் என்று சூளுரைத்து அதன் காரணமாக உங்கள் பாராட்டுதலைப் பெறும் நிலைக்கு ஆளாவோம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாநிலத் திட்டக்குழு பற்றி இங்கே பேசப்பட்டது. திட்டக் குழுவின் பணிகள் என்ன என்று வரையறுக்கப்படவில்லை என்று தங்கமணி அவர்கள் கூறினார். ஏற்கனவே திட்டக்குழுவின் பணிகள் பற்றிய பட்டியல் அறிவிக்கப்பட்டு அது இதழ்களில் வந்துள்ளது. அதை உறுப்பினர்களுக்கும் வழங்கச் செய்வேன்.

மாநிலத்திட்டக் குழு அமைக்கப்பட்ட நேரத்தில் இதை ஒரு அதிர்ச்சியுடன் மற்ற மாநிலங்கள் பார்த்தன. இன்றைக்கு ஒவ்வொரு மாநிலமும் திட்டக் குழு அமைக்க முன்வருகிற காட்சியைப் பார்க்கிறோம். திட்டக்குழு அமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்களும் இதை வரவேற்றுப் பேசியிருப்பது ஒரு நல்ல அம்சம் ஆகும். நமது திரு. சுப்பிரமணியம் அவர்கள் மத்தியில் அமைச்சராக இருந்த போதுதான் நாணய மதிப்புக் குறைக்கப்பட்டது என்று பொன்னப்ப நாடார் அவர்கள் பேசும் போது குறிப்பிட்டார்கள். அவர் சுப்பிரமணியத்தைக் குறிப் பிட்டார்களே தவிர, அசோக் மேத்தாவும் அதற்குக் காரணம் என்பதைக் குறிப்பிடவில்லை. அவர் எங்கிருக்கிறார் என்பது பொன்னப்ப நாடார் அவர்களுக்குத் தெரியும். அவர் பக்கத்தில் தான் இருக்கிறார். அது தவிர, பெருமதிப்புக்குரிய தலைவர் காமராஜ் அவர்கள் அகில இந்தியக் காங்கிரஸ் தலைவராக இருந்த போதுதான் இந்த நாணய மதிப்புக் குறைப்பு செய்யப்பட்டது. இது எந்தக் காலத்தில் செய்யப்பட்டது என்பது அல்ல; அப்போ தெல்லாம் மத்திய அரசுக்கு வக்காலத்து வாங்குகின்ற அளவில் இந்த மாமன்றத்தில் இருந்தார்கள் காங்கிரஸ் உறுப்பினர்கள். ஆனால் எங்களுடைய அதிர்ஷ்டம் இப்போது மத்திய அரசைக் குற்றம் சாட்டும் அளவுக்கு வந்திருக்கிறார்கள் என்பதை எண்ணி எண்ணிப் பூரிப்பு அடைகிறேன் ; புளகாங்கிதம் அடைகிறேன்.

மத்திய மாநில உறவுகளைப் பற்றிய ராஜமன்னார் அவர்களுடைய அறிக்கையை அநேகமாக அனைவரும் இங்கே வரவேற்றுப் பேசியிருக்கிறார்கள். டாக்டர் ஹாண்டே அவர்கள் இதிலே ஏதோ பெரிய அபிப்ராயம் சொல்லப் போவதாகச் சொல்லிவிட்டு, ஏதும் சொல்லவில்லை. ஒரு வேளை ராஜமன்னார் அறிக்கை விவாதத்துக்கு வரும் நேரத்தில் அதைப் பற்றிப் பேசுவார் என்று நான் கருதுகிறேன். நாம் மாநிலத்துக்கு சுயாட்சியும் மாநிலத்துக்கு அதிக அதிகாரங்களும் வேண்டும் என்று கேட்கிற நேரத்தில் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சி கூட, மாநிலங்கள் அதிக அதிகாரங்கள் பெறவேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றி இருப்பது உள்ளபடியே வரவேற்கத்தக்கது.

திருமதி த. ந. அனந்தநாயகி : என்னவோ இன்றைக்குக்கூடி தீர்மானம் போட்டோம் என்பது சரியல்ல. 1967-லேயே எங்கள் கட்சித் தலைவர் காமராஜர் அவர்களால் கூறப்பட்டிருக்கிறது. பல மாகாணங்களிலும் இந்தப் பிரச்னை எழுப்பப்பட்டது. அகில இந்திய ரீதியில் இந்தத் தீர்மானம் போடப்பட்டது.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அதை யார் சொன்னாலும் சரி; போடப்பட்ட நேரம்தான் முக்கியம். யார் முன்னாலே சொன்னார்கள் என்பதல்ல. ஆனால், மாநிலங்கள் அதிக அதிகாரம் பெறவேண்டும், மாநில சுயாட்சி பெறவேண்டும் என்கிற கருத்தைப் பற்றி நம்முடைய மூதறிஞர் ராஜாஜி அவர்கள் 'கல்கி' ஏட்டில் ஒரு கருத்தைக் குறிப்பிட்டிருக்கிறார். தலைவர் அவர்களுடைய அனுமதியுடன் அதை நான் படித்துக் காட்ட விரும்புகிறேன்.

"சார்லஸ் லாம்ப் என்ற பிரபல ஆங்கில எழுத்தாளர் கூறுகிற ஒரு வேடிக்கைக் கதை: ஆதி காலத்தில் சீனத்தில் ஒரு வீடு பற்றி எரிந்தபோது அதிலிருந்த ஒரு பன்றியும் வெந்து மாண்டது. அந்தப் பிராணியைத் தொட்டவன் சூடு பொறுக்கமாட்டாமல் விரலை வாயில் வைத்துக்கொண்டான். வெந்த பன்றி மாமிசம் மிகச் சுவையாக இருப்பதாகக் கண்டான். உடனே பக்கத்திலிருந்தவர்கள் தங்கள் வீடுகளை எல்லாம் கொளுத்தி, அங்கிருந்த பன்றிகளை வேகவைத்து ருசி பார்த்தார்கள். இப்படியாகத் தானே ஊனைச் சமைத்து உண்ணும் பழக்கம் ஏற்பட்டது. இந்த வேடிக்கைக் கதையை நினைவூட்டும் முறையில் சில முதன் மந்திரிகள் நடந்து கொள்கிறார்கள். அதாவது மத்திய சர்க்காருக்கு எதிராக ராஜ்ய சர்க்கார் அதிக சுயாதீன உரிமை பெறவேண்டும் என்ற தங்களது கருத்துக்கு கிழக்கு வங்கத்தின் கோரிக்கை வலுவூட்டுவதால், பங்களா தேசக் கொந்தளிப்பை இந்த முதன் மந்திரிகள் வரவேற்கிறார்கள்."— என்று அவர் சொல்லியிருக்கிறார்.



உள்ளபடியே பன்றிக் கறியைத் தொட்டு சுவைத்துப் பார்ப்பதற்காக வீட்டைக் கொளுத்தியவர்கள் குற்றப்பட்டியலில், நேற்றைய தினம் கூடிய தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியையும்—ராஜாஜி அவர்கள் கூற்றுப்படி—சேர்த்து விட்டிருப்பதற்காக நான் வருந்துகிறேன்.

ஆனால் பன்றிக் கறியை முதலில் தொட்டுப் பார்த்து, அது சுவைக்கிறது என்று சொன்னவர் யார் என்று பார்த்தால்—

" சமஸ்டி அமைப்பு உருவாவதைத் தவிர்க்க முடியாது என்பதை நாம் ஒப்புக்கொண்டேயாக வேண்டும். நாம் வகுத்த இந்திய அரசியலமைப்பு இதை கவனத்தில் கொள்ளத் தவறிவிடவில்லை. ஆயினும் 1947-க்குப் பிந்திய இந்திய அரசியல் சரித்திரமோ, அதிகாரங்களை மத்திய அரசாங்கத்திடம் குவிக்கும் சபலம் எப்படி இடையறாது இயங்கி வந்துள்ளது என்பதைக் காட்டுகிறது. பிரதேசங்களின் முக்கியத்துவத்தைப் படிப்படியாகக் குறைத்து, அதிகாரங்களை மேலும் மேலும் மத்திய அரசாங்கத்திடம் குவிக்கும் முயற்சி நடைபெற்று வருகிறது ".

இதைச் சொன்னவர் ராஜாஜி அவர்கள். ஆக பன்றிக்கறி சுவைக்கிறது என்று முதலில் எடுத்துக் காட்டியவர் மூதறிஞர் ராஜாஜி அவர்கள்—" நமது ஜனநாயகம் " என்ற புத்தகத்தில் குறிப்பிட்டிருக்கிறார்—' பிரதேச ஆட்சியை பலவீனப்படுத்தும் போக்கு " என்ற தலைப்பில் அந்தப் புத்தகத்தின் 53-ம் பக்கத்தில் அவர் எழுதியுள்ள கட்டுரையைத்தான் இங்கே குறிப்பிட்டேன்.

DR. H. V. HANDE : There is difference of opinion between the two points. That was when Rajaji wanted us to have more financial resources. He introduced sales tax which is giving us plenty of Revenue now. Rajaji objects to this particular habit of fighting with the Centre for anything and every thing —seeing the manner in which it is going on in West Bengal and Tamil Nadu, if it were to spread to the other States, it will be bad for the country. As a visionary, Rajaji is primarily concerned with it. In the manner in which it is being done, it does not augur well. Rajaji as one interested in the welfare of the country is concerned with it. It is very easy to deride and make fun of him. But, we must remember, as a visionary, he has said this does not augur well and will bring us down as between the Centre and State.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இந்தப் புத்தகம் 1958-ல், வெளியிடப்பட்டது. 1958-லேயே காலம் பக்குவமாகக் கனிந்திருக்கிறது. ஆனால் 1971-ல் காலம் பக்குவப்படவில்லை என்பது எனக்கு வேடிக்கையாக இருக்கிறது. நாங்களும் மத்திய அரசு பலவீனப்பட்டுவிட வேண்டும் என்று சொல்லவில்லை. அவர் எங்களை விட ஒரு படி மேலாகவே சென்று, கிழக்கு பாகிஸ்தானுடைய விடுதலைப் போரை ஆதரித்து, பாகிஸ்தானத்திலிருந்து விடுபட்டு தனியாக துண்டாகப் பிரிய வேண்டும் என்பதைக் கூட ஆதரித்துக் கொண்டிருக்கிறார்.

[திரு. மு. கருணாநிதி] [1971 ஜூன் 29

ஆனால் இங்கே நாம் கேட்கும் மாநில சுயாட்சி, அதிகார அளவில் அல்லாமல், தனியாக துண்டித்துக்கொண்டு போக வேண்டுமென்ற எண்ணம் சிறிதும் இல்லை என்பதை நினைவுபடுத்துகிறேன். மத்திய அரசுடன் நமக்கு இருக்கும் உறவுகள், நட்புகளில், நமக்கு ஏற்படும் சங்கடங்களை, அதன் அடிப்படையில் இடைக்கால வரவு-செலவுத் திட்டத்தில் விளக்கமாகக் கூறி, அதுபற்றி எழுந்த ஐயப்பாடுகளுக்கெல்லாம் நான் அந்த நேரத்தில் மிக விளக்கமான பதில் கூறி இருக்கிறேன். ஆகவே அதைப்பற்றி மீண்டும் ஒரு முறை விரிவாகச் சொல்வது அவசியமில்லை என்று கருதுகிறேன்.

மத்திய அரசோடு நாம் போராடவேயில்லை, போராடி எதையும் பெறவேயில்லை என்று யாரும் கூறி விட முடியாது. இன்றைக்கு கூட ஒரு மகிழ்ச்சிகரமான செய்தியை நான் சொல்ல முடியும். மத்திய அரசினுடைய அனுமதி பெற்று, மத்திய அரசு உதவியுடன் திருத்துறைப்பூண்டி, பூதலூர், குற்றாலம், லால்குடி, காட்டுமன்னார் கோயில், பட்டுக்கோட்டை ஆகிய 6 இடங்களில் வேளாண்மை விற்பனைக்கூடம் அமைக்கவும்; அவற்றோடு இணைந்து 56 கிராமச் சாலைகள் ஏற்படுத்தவும், ஒருங்கிணைந்த திட்டத்தைத் தொடங்க 1½ கோடி ரூபாய் மத்திய அரசு இரண்டு நாள் முன்பு நமக்கு அனுமதித்திருப்பதை நான் இங்கே மிகுந்த மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, நாம் தேவைப்படும் நேரத்தில் எல்லாம் பின்வாங்காமல் மத்திய அரசோடு வாதாடிப் போராடி, நம்முடைய மாநிலத்துக்கு உரியவைகளைப் பெறுவதிலே என்றைக்கும் சளைத்து விடவில்லை. ஆனால் 'எதற்கெடுத்தாலும் மாநில சுயாட்சி, மாநில சுய ஆட்சி என்று அதையே சொல்லி நீங்கள் மக்களிடத்திலிருந்து தப்பித்துக் கொள்கிறீர்கள்—கல்லூரி அனுமதியா, மருத்துவச் சாலை அனுமதியா, மருத்துவச் சாலைக்கு—2, 3 புதிய படுக்கைகள் வேண்டுமா— இந்தக் கோரிக்கைகளுக்கெல்லாம் கூட நீங்கள் மாநில சுயாட்சியைக் காட்டித் தப்பித்துக்கொள்கிறீர்கள்" என்ற குற்றச்சாட்டை ஹாண்டே அவர்கள் எடுத்துச் சொன்னார். ஒரு வேளை அவர்கள், மாநில சுயாட்சியை வரவேற்கக் கூடும். ஆனால் அதே நேரத்தில் எதற்கெடுத்தாலும் மாநில சுயாட்சியைக் காட்டுகிறோம் என்று எங்கள் மீது குற்றம் சாட்டவும் கூடும். ராஜமன்னார் குழு அறிக்கை மீது பேசுகிற நேரத்தில்தான் மத்திய-மாநில அரசு உறவுபற்றிச் சுதந்திராக் கட்சியின் உண்மைத் தோற்றத்தை ஹாண்டே மூலம் நாம் பார்க்க முடியும். ஏனென்றால், சுதந்திராக் கட்சிக்குள்ளேயே இதுப்பற்றிய பல்வேறு கருத்துகள் இருக்கின்றன. சுதந்திராக் கட்சிக்காக நடைபெறுகின்ற "சுயராஜ்யா" பத்திரிகையில் மதிப்புக்குரிய சந்தானம் அவர்கள் ராஜமன்னார் குழு அறிக்கையை வரவேற்று நீண்ட கட்டுரைகளை எழுதிக் கொண்டிருக்கிறார்கள்.

ஹாண்டே அவர்களுக்கு ராஜமன்னார் அறிக்கையை இங்கு எடுத்துக் கொடுத்தவர் திரு. பொன்னப்ப நாடார். அவர் எடுத்துக் கொடுத்து உதவி புரிந்தார். ராஜமன்னார் குழு அறிக்கை மீது பின்னால் பேசுகிறேன் என்று பீடிகை போட்டார். இன்று



1971 ஜூன் 29] [திரு. மு. கருணாநிதி]

பிரமாதமான விமரிசனம் கேட்கலாம் என்று நினைத்து வந்த எனக்கு ஒரு கதைதான் ஞாபகத்துக்கு வந்தது. ஒரு பள்ளிக்கூடத்தில் ஆசிரியர் பாடம் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருக்கிறார். ஒரு மாணவன் பாடத்தைக் கவனிக்காமல் சுவற்றைப் பார்த்துக் கொண்டிருந்தான். சுவற்றில் ஒரு துளை. அதில் ஒரு எலி நுழைந்து கொண்டிருந்தது. ஆசிரியர் 'நான் குறிப்பிட்டதெல்லாம் நுழைந்ததா?" என்று கேட்டார். 'வால் மாத்திரம் பாக்கி' என்று அவன் சொன்னான். அதைப்போல் ராஜமன்னார் அறிக்கையிலே அவர்கள் எல்லாவற்றையும் விட்டுவிட்டு, முதல் பக்கத்திலே வெளியிடப்பட்டுள்ள முதலமைச்சருடைய படத்தை மாத்திரம் காட்டி, 'இது தேவைதானா?' 'பர்சனாலிட்டி கல்ட்' வளருகிறது என்று குற்றம் சாட்டி, இது ஏதோ ஆளும் கட்சியில் உள்ளவர்கள் கூட அந்த உணர்ச்சியில் இருக்கிறார்கள் என்பதைப் போல் இங்கேயும் ஏதாவது நடத்திப் பார்க்கலாம் என்ற எண்ணத்தோடு அவர்கள் பேசினார்கள்.

திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரை 'பர்சனாலிடி கல்ட்' இல்லை. இவரை விட அவர் பெரியவர், அவரை விட இவர் பெரியவர் என்று பார்க்கும் உணர்ச்சியை வளர்த்துக் கொண்டது கிடையாது. திராவிட முன்னேற்றக் கழகத்திலே இருக்கிற தலைவனிலேயிருந்து தொண்டவர்கள் வரை நாங்கள் ஒரே குடும்பம் என்று எண்ணி அண்ணன்—தம்பிகளாகப் பழகி வருகிறவர்கள். இங்கே தனியார் தோத்திரம், தனியார் துதி என்பதற்கெல்லாம் எள்ளளவும் இடம் இல்லை என்பதை எடுத்துக் காட்ட விரும்புகிறேன். அதற்குப் பதிலளிக்கும் வகையில் என்னுடைய அருமை நண்பர் வீராசாமி அவர்கள் மிகுந்த சிரமப்பட்டு புத்தகங்களைக் கொண்டு வந்து காட்டி, அதிலே காமராஜர் படம் இல்லையா ? நேரு படம் இல்லையா ?' என்று கேட்டார்கள். ஹாண்டே விரும்பியது அது அல்ல. ஹாண்டே பேசும்பொழுது இப்படிச் சொன்னால் நேரு ; காமராஜர் படம் போடப்பட்டதையும் எதிர்த்திருக்கிறோம், ஆகவே இதையும் எதிர்க்கிறோம் என்று குறிப்பிடுவார். எனவே அவர் விரும்புகிற படத்தைக் காட்ட விரும்புகிறேன்.

'மெட்ராஸ் இன்பர்மேஷன்' என்ற சர்க்கார் பத்திரிகையில் 1952-ஆம் ஆண்டு அவர் முதலமைச்சராக இருந்தபோது வெளிவந்த படம் இது. (படத்தை அவையில் எடுத்துக்காட்டினார்.) இது பர்சனாலிடி கல்டா? எளியேனுக்குத் தெரியாது!

அதுமாத்திரம் அல்ல, புதியதாக மாநில கவர்னர் அவர்கள் வந்து பதவியேற்றுக்கொள்கிறார்கள். அவரது படம் முகப்பு அட்டையில் வந்திருக்கிறது. அடுத்து போடப்பட்ட படம் தான். இது பர்சனாலிடி கல்டா இல்லையா என்பது எனக்குத் தெரியாது!

'கலைமகள்', 'கல்கி' போன்ற பத்திரிகைகளில்--அதிலும் முக்கியமாக அவருக்குத்தொடர்புடைய கல்கியில்—அவர் கவர்னர்—ஜெனரலாகப் பதவியேற்றுக்கொண்டபோது எழுதிய தலைப்பில் "அரியா

சனத்தில் ஜனகமகராஜர்" "ஜனக ராஜரிஷி" என்பதாக எல்லாம் வருணிக்கப்பட்டது. அதுமாத்திரம் அல்ல. 1952-ஆம் ஆண்டு இந்த மன்றத்திலே ஒரு நம்பிக்கைத் தீர்மானம் ராஜாஜி அவர்களால் கொண்டு வரப்பட்டபோது நம்பிக்கைத் தீர்மானத்தின் மீது எதிர்தரப்பில் இருந்து திரு. அந்தோணிப்பிள்ளை பேசிய பேச்சை எடுத்துக் காட்டுவது பொருத்தமாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

"........The intention behind this Resolution is to show that this is not the usual type of Ministry headed by nonentities or mediocritis like previous Ministries, but something wonderful, headed by a master statesman. That is the intention behind this Resolution. The present tendency within the Congress is to develop a leader cult, (even during the last elections one noticed it). Congress went about canvassing votes not on the basis of the Five-Year Plan but asked the voters to vote for the Congress candidate though he be a donkey or a mule, because their vote for a Congress candidate was a vote for the 'great leader', Nehru Unfortunately for them, that particular tactics of building up a cult of leadership did not succeed in South India. Hence the necessity for the Congress to build up a south Indina Messiah. This new cult, Rajaji himself has tried to foster. He has claimed that he is the chosen instrument of God's ambassador-Pleni-Potentiary on earth. It will not be long, indeed I would not be surprised, if one day Rajaji climed to be God himself. When the Chief Minister appealed to the pepole to be pray to God for rain and when the rain came in this State, some of the Congressmen began to look upon him as God, and that he has been responsible for the recent rain. If this be true, then, I would submit that it is time we sent up a special Resolution to Union Government asking them not to waste the tax-payer's money any more in carrying on research on how to bring about the artificial rain. All that is necessary to do in the way of giving help to any particular State where there is suffering due to drought is to send Rajaji there as Chief Minister of the State".

என்பதாக திரு. அந்தோணிப் பிள்ளை அவர்களால் பர்சனலிடி கல்ட் கூட அல்ல, கடவுளாகவே ராஜாஜி தன்னை ஆக்கிக் கொண்டிருக்கிறார் என்று, குற்றஞ்சாட்டுகிற நிலைமையில் அன்றைக்கு ராஜாஜி வளர்க்கப்பட்டார்.

அதுமாத்திரம் அல்ல—ஏ.வி.எம். தயாரித்த சினிமாப்படத்தில் ராஜாஜி ஏர் உழுவதுபோலக் காண்பிக்கப்பட்டது. பரம்பரை பரம்பரையாக ஏர் உழுது களைத்துப்போனவர் அல்லவா? (சிரிப்பு)

அதுமாத்திரமல்ல, பல ஆங்கில ஏடுகளில் இன்னும் பூணூலைக் காதிலே மாட்டிக்கொண்டு அவரே துண்டு துவைப்பதுபோலப் படம் போட்டுக் காட்டப்பட்டது.

சுதந்திராக் கட்சியினரைப் பொறுத்தவரையில், தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் ராஜாஜி இல்லாவிட்டால் அதற்குப்





பிறகு யார் என்ற நிலை. அது பர்சனலிடி கல்ட் அல்லவா? அந்த முறையில் பர்சனலிடி கல்டை வளர்த்து விட்டார்கள். ஆனால் திராவிட முன்னேற்றக் கழகத்தில் சொல்லுகின்றேன்—கருணாநிதி இல்லாவிட்டால் அதை அடுத்து பல பேர் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருக்கிறார்கள் என்பதை நான் இங்கே எடுத்துக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பர்சனலிடி கல்ட் என்ற அந்தக்குற்றத்தை எங்கள் மீதும் எங்களுக்கு எல்லாம் அரசியல் வழிகாட்டியாகத் திகழ்ந்த பேரறிஞர் அண்ணா அவர்கள் மீதும் சுமத்திய நேரத்திலும், நான் எண்ணிக்கொண்டேன். ராஜாஜி உயிரோடு இருக்கும்போதுதான் ராஜாஜி ஹால் என்று பெயரிடப்பட்டது. ராஜாஜி உயிரோடு இருக்கும்போதுதான் இந்த மாமன்றத்தில் அவரது பெரிய படம் திறந்து வைக்கப்பட்டது என்பதை எண்ணிப் பார்த்திருந்தேன்.

DR. H. V. HANDE : What I objected to was the Hon. Chief Minister himself was trying to encourage this personality cult. Even in this House, when the Hon. Member Thiru Cheemaichamy had mentioned something about Swathantra Party, the Hon. Chief Minister said தலையா? வாலா? meaning that he would follow "தலை" and not "வால்" It is that sort of mentality that I object to. I want that sort of mentality to be removed. அந்த மாதிரியான மனப்பான்மை மாறி நல்ல டெமாக்ரடிக்காக ஜனநாயகவாதியாக ஆகவேண்டும் என்று சொன்னேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : ஜனநாயகம் உங்களிடம் இருக்கிறதா இல்லையா என்பதைப் பின்னால் பேசுகின்ற நேரத்தில் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

ராஜமன்னார் குழு அறிக்கை டெல்லி போய்ச் சேர்ந்ததாகக் கூடத் தெரியவில்லை என்றெல்லாம் குறிப்பிட்டார்கள். ராஜமன்னார் அறிக்கை அங்கே போய்ச் சேர்ந்து இம்மாதம் 22-ம் தேதி அன்று பெருமதிப்பிற்குரிய பிரதமர் இந்திரா காந்தி அம்மையாரிடம் இருந்து எனக்கு ஒரு கடிதம் வந்திருக்கிறது. பேரவைத் தலைவர் அவர்களே, உங்கள் அனுமதியுடன் அதைப் படிக்கிறேன்.

New Delhi,
June 22, 1971.

Dear Thiru Karunanidhi,

I have received your letter of the 15th June with which you have sent me a copy of the report of the Centre-State Relations Enquiry Committee. Your Government will probably examine the recommendations of this Report. As you know the Administrative Reforms Commission also went into this question and has already submitted a report, which is under our consideration. If the views of your Government on this matter are made available to us, they will also be taken into account. These are important issues and we intend to consult all the Chief Ministers.

With regards,

Your sincerely,
(sd.) Indira Gandhi.

[திரு. மு. கருணாநிதி] [1971 ஜூன் 29

என்பதாக இந்திய முதல் அமைச்சருடைய கடிதத்தில் கூட இது பற்றிப் பரிசீலிப்பதற்கு இந்தியத் தலைமை அரசு தயாராக இருப்பதற்கு அறிகுறி காணப்படுவதைக் குறித்து நான் உள்ளபடியே மகிழ்ச்சி அடைகிறேன். இன்றைக்குத் தமிழ்நாடு ராஜமன்னார் குழுவின் அறிக்கை மூலம் பிற மாநிலங்களுக்கும் வழிகாட்டியாக அமைந்துள்ளது குறித்து பெருமை அடைகிறேன். அதற்காக என்னை ஆளாக்கிய பேரறிஞர் அண்ணா அவர்களின் கல்லறைக்கு என் அஞ்சலியைச் செலுத்திக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக இந்த மாமன்றத்தில் பேசப்பட்ட முக்கிய பொருள் மதுவிலக்குக் கொள்கை பற்றியது. மதுவிலக்குக் கொள்கை இங்கே இருக்கிற நம்மால் மாத்திரம் அல்ல—உலகத்திலுள்ள பல்வேறு நாடுகளிலும்—பல்வேறு நாட்டுமக்களாலும், பல்வேறு நாட்டு அரசுகளாலும் சட்டபூர்வமாக அமுல்படுத்தத் திட்டமிட்டு தோற்றுப்போய் இருக்கிறார்கள் என்பதை வரலாற்றுச் சான்றுகள் நிறையக் காட்டுகின்றன.

அமெரிக்க நாட்டில் 1919-ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 16-ஆம் நாள் அரசியல் சட்டத்தையே திருத்தி மதுவிலக்குச் சட்டத்தை அமலுக்குக் கொண்டுவந்தார்கள். பதினான்கு ஆண்டுக்காலம் அமல்படுத்தப்பட்டதில் கடைசியாகக் குற்றங்கள் அதிகமாயின, கள்ள மதுவைத் தடுக்க முடியவில்லை, கள்ளக் கடத்தல் அதிகமாயிற்று, மதுவிலக்கை அமல் நடத்த வேண்டியவர்கள் லஞ்சப் பேயானார்கள் என்று கூறப்பட்டு, 1933-ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 20-ம் தேதி மதுவிலக்குச் சட்டம் ரத்து செய்யப்பட்டிருக்கிறது.

பின்லாந்து நாட்டில் 1907-ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டம் கொண்டுவரப்பட்டு 1931-ஆம் ஆண்டு அந்தச் சட்டத்தின் பயனை ஆராய ஒரு குழு அமைக்கப்பட்டது. குடிவெறி அதிகமாகி இருப்பதாகவும், குற்றம் புரிவோர் தொகை அதிகமாகிவிட்டதாகவும் அந்தக் குழு கூறியது. அந்த முடிவின்படி 1932-இல் அந்த நாட்டில் மதுவிலக்குச் சட்டம் ரத்து செய்யப்பட்டது.

நார்வே 1919-ல் மதுவிலக்கைக் கொண்டு வந்தது. அது 1927-இல் ரத்து செய்யப்பட்டது.

நியூபவுன்ட்லாண்டு 1915-இல் மதுவிலக்கை அமல் செய்தது. 1924-இல் அதை ரத்து செய்தது. துருக்கி 1920-இல் மதுவிலக்கை அமல்படுத்தியது. 1924-இல் அதை ரத்து செய்தது மாத்திரமல்ல, 1926-இல் அரசாங்கமே அந்த வியாபாரத்தை மேற்கொண்டது.

நான் முஸ்லிம் லீக் மெம்பர்களுக்கு ஒன்றை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழகமானாலும், முஸ்லீம் லீகானாலும் காங்கிரசானாலும், கம்யூனிஸ்டானாலும், பி.எஸ்.பி. கட்சி ஆனாலும், தமிழரசுக் கழகமானாலும், சுதந்திரா ஆனாலும்



1971 ஜூன் 29] [திரு. மு. கருணாநிதி]

சரி, எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களானாலும் தமிழக அரசைப் பொறுத்தவரையில் மதுவிலக்குக் கொள்கை அளவில் ஒப்புக்கொள்ளப்பட வேண்டிய ஒன்று என்பதை நாம் யாரும் மறுக்கவில்லை. அதில் இரு வேறு கருத்துக்களுக்கு இடம் இல்லை. ஆனால் அதைச் சட்ட பூர்வமாக அமல்படுத்திவிட முடிந்ததா என்பதை எண்ணிப்பார்க்கவேண்டும். அன்றே சொன்னேன். முஸ்லிம் மத அடிப்படையில் மதுவிலக்குக் கொள்கையைப் பொன்னே போல் போற்றவேண்டிய துருக்கி, சிரியா, ஈராக், ஈரான், எகிப்து, பாகிஸ்தான், மலேசியா, இந்தோனேசியா ஆகிய முஸ்லிம் நாடுகளில் சட்டபூர்வமாக மதுவிலக்கை அமல்படுத்த முடியவில்லை. அங்கெல்லாம் சட்டம் இல்லை என்பதற்காக நாட்டு மக்கள் அத்தனை பேரும் குடித்துக்கொண்டிருக்கிறார்கள் என்பது பொருள் அல்ல. இங்கும் சட்டம் தளர்த்தப்படுவதன் மூலம்—இந்தியப் பேரரசு இந்திய பூபாகம் முழுமைக்கும் மதுவிலக்கை அமல்படுத்த முன்வருகிற நாள்வரை—நாம் அந்தச் சட்டத்தை ரத்து செய்வது என்பது கூட இல்லை—அதற்கு ஓய்வு கொடுப்பதன் மூலம் தமிழ் நாட்டில் இருக்கிற அத்தனைபேரும் குடிகாரர்களாக மாறிவிடுவார்கள் என்று நாம் கூறிவிட முடியாது. அந்தக் கருத்தைத்தான் முஸ்லிம் லீக் உறுப்பினர் திரு. மொய்தீன் அவர்கள் எடுத்துக் காட்டினார்கள்.

அடுத்து, மதுவிலக்கைப் பற்றி ஆராய்வதற்காக நீதிபதி தேக் சந்த் என்பவர் தலைமையில் மத்திய திட்டக் குழு ஒரு கமிட்டியை 1963-இல் நிறுவியது. இந்தக் குழு ஏன் நிறுவப்பட்டது என்றால் 1956-இல் நாடாளுமன்றத்தில் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

"This House is of opinion that prohibition should be regarded as an integral part of the Second Five-Year Plan and recommends that the Planning Commission should formulate the necessary programme to bring about nation-wide prohibition speedily and effectively".

1956-ம் ஆண்டிலே இந்தக் குழு அமைக்கப்பட்டு, நாடு முழுவதிலும் மதுவிலக்கை அமல்படுத்த வேண்டும் என்று முயற்சி செய்தார்கள். பல்வேறு ஆராய்ச்சிகள் நடத்தியது. 1963-லே ஒரு அறிக்கையைக் கொடுத்தது. தனது ரிபோர்ட்டிலே அந்தக் கமிட்டியார் என்ன என்ன சிபாரிசுகளைச் செய்தார்கள் என்பதைப் பார்க்க வேண்டும். அதில் முக்கியமான சிபாரிசு காது மருந்துகளில் ear drops ஆல்கஹால் (Alcohol) இருக்கிறது. ஒரு மாநிலத்தில் மாத்திரம் ஆயிரக்கணக்கான பவுண்டுகள் அந்த மருந்து செலவாவதாகத் தெரிகிறது. ஒரு சில மாநிலங்களில் அதிக விற்பனையாகிறது. ஆகவே, இதைக் கட்டுப்படுத்த வேண்டுமென்று சிபாரிசு செய்தது. அடுத்தது, அளவுக்கும் மீறிய ஆல்கஹால் உள்ள டிஞ்சர் உற்பத்தியைக் கட்டுப்படுத்த வேண்டுமென்றும் கமிட்டி சிபாரிசு செய்தது. இவற்றையெல்லாம் மத்திய அரசால் செயல்படுத்த முடியவில்லை.

[திரு. மு. கருணாநிதி]

அடுத்து, டிரக்ஸ் ஆக்டில் (Drugs Act) பல திருத்தங்கள் செய்ய வேண்டுமென்று தேக்சந்த் கமிட்டி கூறியது. அதையும் மத்திய அரசு காதுகொடுத்துக் கேட்கவில்லை. அஸ்வா, அரிஷ்டம் ஆகிய மருந்துகள் முறைப்படி தயாரிக்கப்பட்டால் அதில் 10 முதல் 12 பர்சென்ட் ஆல்கஹால்தான் இருக்க முடியும். ஆனால் 80 பர்சென்ட், 90 பர்சென்ட் ஆல்கஹால் உள்ள அரிஷ்டங்கள், அஸ்வா போன்ற மருந்துகள் விற்பனைக்கு வருகின்றன. இதற்கு டிரக்ஸ் ஆக்ட் திருத்தப்பட வேண்டும் என்று தேக்சந்த் கமிட்டி கூறியது. அது செய்யப்படவில்லை.

அடுத்து, ' கள்ளச் சாராயத்தைவிட கள் ஆபத்துக் குறைந்தது ' என்று அந்தக் கமிட்டி கூறியது. சில பாதுகாப்புகளுடன் கள்ளை அனுமதிக்கலாம் என்றும் அது கூறியது. கமிட்டியின் குறிக்கோள் மதுவிலக்குதான். ஆனால் இடையில் சில சிபார்சுகளைக் கூறியது. அவை, 5 சதவீதம் ஆல்கஹால் உள்ள கள்ளை அனுமதிக்கலாம், கள் புளித்துவிடாமல் இருக்க குளிர்ப்பதன சாதனங்களைப் பயன்படுத்தலாம், விற்பனையாகும் இடங்களில் மட்டுமே குடிக்க வேண்டும், வீட்டிற்கு எடுத்துச் சென்று குடிக்க தடை விதிக்க வேண்டும், கள் மீதுள்ள தீர்வை குறைவாக இருக்க வேண்டும், அப்போதுதான் மக்கள் கள்ளச் சாராயத்தை நாடிப் போக மாட்டார்கள். இப்படியாகப் பல சிபாரிசுகளை அந்தக் கமிட்டி செய்தது.

நாடு முழுவதிலும் உள்ள கள்ளச் சாராயத்தின் விற்பனைக் கணக்குகளை அந்தக் கமிட்டி குறிப்பிட்டிருக்கிறது. 1963-64-ம் ஆண்டில் இந்தியா முழுவதும் கள்ளச் சாராய விற்பனை 52 கோடி ரூபாய். அதில் மது அருந்துகிற மாநிலங்களில் 9 கோடி ரூபாய், மதுவிலக்குச் சட்டம் அமலில் இருக்கின்ற மாநிலங்களில் கள்ளச் சாராய விற்பனை 43 கோடி ரூபாய். மொத்தம் 52 கோடியில் மது அருந்துகிற மாநிலங்களில் 9 கோடி ரூபாய், மதுவிலக்கு அமலில் உள்ள மாநிலங்களில் 43 கோடி ரூபாய் விற்பனையாகிறது. இதில் கள்ளச் சாராயம் மாத்திரமே சேர்க்கப்பட்டிருக்கிறது. இதர மது வகையராக்கள் சேர்க்கப்படவில்லை. இது அரசாங்கத்திற்கு வராமல் போகிற பணம் என்பதையும் அந்தக் குழு சுட்டிக்காட்டியிருக்கிறது.

அடுத்து 'வெட் ஏரியா'வில் மதுவிலக்கிற்கு முன்பு 100 யூனிட்டுகளாக இருக்குமானால் பத்து ஆண்டுகளுக்குப் பிறகு சுமார் 20 சதவீதம் மக்கட் தொகை அதிகரிப்பிற்கும் இதர நிலைகளுக்கும் பிறகு அது 130 யூனிட்டாக உயர்ந்திருக்கிறது. 'டிரை' "ஏரியாவில், 100 யூனிட்டாக இருந்தது, பத்தாண்டுகளுக்குப் பின்பு 90 யூனிட்டாக குறைந்திருக்கிறது என்பதையும் இது எல்லாம் கள்ள மது என்பதையும் நாம் மறந்துவிடக் கூடாது " எனவும் தேக்சந்த் குழு கூறியுள்ளது.



1971 ஜுன் 29] [திரு. மு. கருணாநிதி]

நாடெங்கும் மதுவிலக்கைக் கொண்டு வர வேண்டும் என்பதற்காக அமைக்கப்பட்ட குழுவின் அறிக்கை தந்த விவரங்கள் தான் நான் குறிப்பிட்டவை. 1957-ம் ஆண்டும், 1962-ம் ஆண்டும் காங்கிரஸ் கட்சியின் தேர்தல் பிரச்சாரத்தின்போது என்ன அறிக்கைகளை வெளியிட்டார்கள் என்பதை எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

" Prohibition has long been the Congress Policy and has been introduced in some Parts of the Country. Progressive steps should be taken to introduce it in other Parts "

இது 1957-ம் ஆண்டின் காங்கிரஸ் தேர்தல் அறிக்கை.

" The Congress Policy of Prohibition should be maintained and encouraged "

இது 1962-ம் ஆண்டின் காங்கிரஸ் அறிக்கை. 1962-ம் ஆண்டு காங்கிரஸ் அறிக்கைக்குப் பிறகு மராட்டிய மாநிலத்தில் முதலமைச்சர் அவர்கள் சட்ட சபையில் ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்தார்கள். 1963-ல் அதாவது தேக்சந்த் கமிட்டி நிறுவப்பட்ட சில மாதங்களுக்குப் பிறகு, மதுவிலக்குக் கொள்கையை மராட்டியம் தளர்த்தத் தொடங்கியது. அப்போது மாநில முதலமைச்சர் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது,

Policy statement issued by the Chief Minister on the 31st December 1963—

" Beverages with an alcohoic content not exceeding 3;5 per cent will be made freely available.

" Toddy with alcoholic content not exceeding 3;5 per cent will be made freely available.

என்கிற அளவுக்கு மதுவிலக்குக் கொள்கை மராட்டிய மாநிலத்திலே தளர்த்தப்பட்டது மட்டுமல்ல, அம்மாநில முதலமைச்சர் அவர்கள், மேலும் கூறியதாவது--

" However the experience of the implementation of this policy over the last 14 years compels us to make a more realisttic and rational view of the situation as it has developed. We find that the biggest factor which works against Prohibition is not the consumer who is only the victim of the evil of drinking but the illicit distiller, the bootlegger and trafficker."

என்று பேசி, 1963-ம் ஆண்டு மதுவிலக்குக் கொள்கை அங்கே தளர்த்தப்பட்டது.

1968-ம் ஆண்டு குன்ஹா நகரில் நடைபெற்ற அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி மாநாட்டில் தேசம் முழுவதும் பூரண மதுவிலக்கு அமல் செய்ய ஏழு ஆண்டுக்காலம் அவகாசம் தர வேண்டும் என்ற ஒரு திருத்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அப்போது திரு. நிஜலிங்கப்பா அவர்கள் தான் தலைவராக இருந்தார். திரு. சி. சுப்பிரமணியம் தமிழ்நாட்டுப் பிரதிநிதியாக இருந்தார். திருமதி சுசீலா நய்யார் போன்ற காந்தியடிகளைப் பின்பற்றிய வீராங்கனைகளும் அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

அவர்கள் கொண்டு வந்த தீர்மானம் 1968-ல் இருந்து, இன்னும் 7 ஆண்டுக் காலத்தில் இந்தியா முழுமையிலும் மதுவிலக்குக் கொள்கையை அமல்படுத்த வேண்டும் என்பது. அந்த மா நாட்டில் கலந்துகொண்ட தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள், மதுவிலக்குப் பிரச்சினையை உணர்ச்சிபூர்வமாக அணுகக் கூடாது என்றும், நடைமுறையில் அமல் செய்யும் வகையில் அணுக வேண்டுமென்றும் குறிப்பிட்டார். அந்த நேரத்தில் தமிழ்நாட்டிலே உள்ள ஒரு பத்திரிகை எழுதிய தலையங்கத்தைத் தலைவரின் அனுமதியோடு படித்துக் காட்டுகிறேன்.

'பஞ்சாபில் நடைபெறும் அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்திலும் அதற்கு முன்னால் நடைபெற்ற காரியக் கமிட்டிக் கூட்டத்திலும் மதுவிலக்கு பற்றி காரசாரமான விவாதங்கள் நடை பெற்றிருப்பதில் வியப்பில்லை. காங்கிரஸ் கட்சியைப் பொறுத்த வரையில் மதுவிலக்கினை நாம் ஒரு அடிப்படைக் கொள்கை யாக ஏற்றுக்கொண்டுள்ளோம். நமது அரசியல் சட்டமும் கட்டளைக் கொள்கைகள் பகுதியில் அதைத் தெளிவாக வற்புறுத்தி யுள்ளது. (Directive Principles) பகுதியில் அதைத் தெளிவாக வற்புறுத்தியுள்ளது.

ஒன்றைக் கொள்கையளவில் ஒப்புக்கொள்வது வேறு. அதை நடைமுறையில் அமல் செய்வதுபற்றி அபிப்பிராய பேதங்கள் எழுவது வேறு. பூரண மதுவிலக்குக் கொள்கையினை எப்போது அமல் செய்வது, எப்படி அமல் செய்வது என்பதுபற்றிக் காங்கிரஸ் மேலிடத்தில் நிலவிடும் கருத்து வேற்றுமையினை யாரும் பெரிது படுத்தத் தேவையில்லை.

மதுவிலக்கு என்பது வெறும் ஒழுக்கக் கோட்பாடு மட்டுமல்ல. அதற்குப் பின்னே பொருளாதார விளைவுகளும் உண்டு. எனவே, மதுவிலக்கினை அமல் செய்யும் விஷயத்தில் பல்வேறு ராஜ்ய முதல் வர்கள் காட்டியுள்ள தயக்கத்தினை அலட்சியப்படுத்துவதோ அல்லது மதுவிலக்கு விஷயத்தில் அவர்கள் தேவையான ஆர்வம் காட்டத் தவறிவிட்டார்கள் என்று விமர்சிப்பதோ அவர்களுக்கு நியாயம் வழங்கியது ஆகாது.

பூரண மதுவிலக்கோ அல்லது பகுதி மதுவிலக்கோ அமலாகும் ராஜ்யங்களிலேகூட அது முழு வெற்றியடைந்துவிட்டதாகச் சொல்ல முடியாது. உதாரணமாக, பூரண மதுவிலக்கு நடை முறையிலிருக்கும் தமிழகத்தில் மது இறக்குவதும் விற்பதும் சட்டப்படி தடைப்படுத்தப்பட்ட காரியங்கள், ஆனாலும், ஆங்காங்கே பரவலான குடிசைத் தொழிலாக அது அமோகமாக நடைபெற்று வருவதைச் சட்டம் கண்ணை மூடி வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பது அனைவரும் அறிந்த விஷயம். இப்படி ஒரு சட்டத்தையும் போட்டு அது மீறப்படுவதை கையாலாகத் தனத்தோடு வேடிக்கை பார்த்துக்கொண்டிருப்பதை விட அப்படி யொரு சட்டத்தை நிறைவேற்றாமல் இருப்பதே விவேகமான



செயலாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. தவிர மதுவின் தீமையையும் ஒழிக்க முடியாமல் அதனால் கிடைக்கும் வருமானத் தையும் இழப்பது, ஒழுக்கம், நீதி ஆகிய இரண்டு முனைகளிலும் பெரு நஷ்டம் என்பதனை எவரும் மறுக்க முடியாது-

கவுரவப் பிரச்சினையாகக் கருதி சில பல திட்டங்களை மேற் கொள்ளுவதைவிட சமூக நலனுக்கான சாத்தியக்கூறுகளை மனதில் கொண்டு திட்டமிடுவதும் செயல்படுத்துவதும் வரவேற்கக்கூடிய தாகும்.

மதுவிலக்கு கூடாது என்பதல்ல நமது வாதம், ஒழுங்காக அமல் செய்ய முடியவில்லையானால் நிதிநிலை வசதி கருதி அதைக் கைவிடுவதுகூடத் தவறு அல்ல என்பதே நமது நிலை."

இது 'நவசக்தி'யின் தலையங்கம். 1968-ம் ஆண்டு நவம்பர் மாதம் 6-ம் தேதியன்று 'நவசக்தி' பத்திரிகையில் எழுதியுள்ள தலையங்கம் (கரவொலி). ஆனால் இன்றைக்கு வேறே எழுதுவார்கள். ஆனால் அன்றைக்குக் கைவிட்டுவிடுவது சாலப் பொருத்தம் என்றும், மாநில முதல்வர்களை பலர் அலட்சியப்படுத்தும் காரணத்தாலும், ஆர்வம் காட்டவில்லை என்பதாலும் அவர்கள்மீது குற்றம் கூறக் கூடாது என்றும் அன்றைக்கு நவசக்தி பத்திரிகை எழுதியிருப்பதை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

அண்ணாவைப்பற்றிச் சொன்னார்கள். அண்ணா வழியிலே வந்தவர்கள், அண்ணாவின் வழியில் முழுக்க முழுக்கப் பின் செல்லு பவர்கள், அதை மீறிப் போகலாமா என்றெல்லாம் கேட்டார்கள். அண்ணாவின் ஆன்மா கண்ணீர் விடும், அண்ணாவின் ஆன்மா சபிக்கும் என்று காங்கிரஸ் உறுப்பினர்களும் பேசினார்கள். நான் ஒன்றைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். அண்ணா அவர்கள் தீவிரமாக மதுவிலக்கை அமல்படுத்துவதாகச் சொன்னபோது குன்ஹா நகர் அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் சட்ட மன்றத்தின் முன்னாள் கொறடா என்ன பேசினார் என்றால் 'குற்றம் செய்பவர்கள் கைது செய்யப்படக் கூடாது அல்லது கோர்ட் முன் தாக்கல் செய்யப்படக் கூடாது என்று தமிழக முதன் மந்திரி உத்தரவிட்டுள்ளதாக' அவர் அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் குற்றஞ்சாட்டினார். குற்றம் செய்பவர்கள் கைது செய்யப்படக் கூடாது அல்லது கோர்ட் முன் தாக்கல் செய்யப் படக் கூடாது என்று தமிழக முதல் மந்திரி, அப்பொழுது அண்ணா முதலமைச்சர், உத்தரவிட்டுள்ளதாகவும் அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் சொன்னார். அண்ணா தீவிரமாக மது விலக்கை அமல்படுத்துவதாகச் சொல்வதற்காக அவருக்குப் பரிசாக அந்தப் பேச்சு அமைந்திருந்தது ! இப்பொழுது வேண்டு மென்றே அண்ணாவை இழுக்கிறார்கள். அண்ணாவின் கொள்கையை மீறிவிட்டீர்கள், நீ யார் என்றெல்லாம் டாக்டர் ஹான்டே அவர்கள் கேட்டார்கள். நான் ஒன்றை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். இதே மாமன்றத்தில் 1968-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 23-ஆம் தேதி எங்கள் தலைவர் அண்ணா அவர்கள், ஐந்தாண்டுக் காலத்தில்

தமிழகத்திலுள்ள கல்லூரிகள் அனைத்திலும் தமிழ்தான் பாட மொழியாக இருக்கும் என்று ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்தார்கள். அந்தத் தீர்மானத்தை நாங்கள் அமல் படுத்துவதற்காக செயல் வடிவத்திற்குக் கொண்டுவரக்கூடிய நேரத்தில் எழுந்த கிளர்ச்சிகளை நீங்கள் யாரும் அறியாதவர்கள் அல்ல. அதற்காக லட்சுமணசாமி முதலியார் கமிட்டி போடப் பட்டு அண்ணா அவர்கள் கொண்டுவந்த தீர்மானத்திற்குப் புறம்பாக, தமிழகம் முழுவதும் எல்லா இடங்களிலும் தமிழே பாட மொழியாக இருக்கும் என்பதற்கு மாறாக, லட்சுமணசாமி முதலியார் குழுவின் சிபாரிசின் அடிப்படையிலே இன்றைய தினம் அரசு கல்லூரிகளில்கூட ஆங்கிலத்தைப் பாடமொழியாக விரும்புகின்றவர்களுக்கு வாய்ப்பளிக்கும் நிலையில் வசதி செய்யப்பட்டிருக்கிறது என்றால் அண்ணா அவர்கள் காலத்தில் நிறைவேற்றிய தீர்மானத்தை என்ன செய்தீர்கள் என்று ஹாண்டே அவர்கள் கேட்க வேண்டாமா? கேட்கவில்லை. காரணம், அது அவருக்குச் சாதகமான விஷயம்.

அண்ணா அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். கால வேறுபாடு, கால மாறுபாடு, நாட்டு நிலை ஆகியவைகளை உணர்ந்து அனைத்துக் கட்சித் தலைவர்களையும் சந்தித்து முடிவெடுத்து, அந்தத் தீர்மானத்தைக் கொஞ்சம் மாற்றியமைக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது.

இப்பொழுதும்கூட, மதுவிலக்கை ஒத்தி வைத்திருக்கிறோம் என்று தான் சொல்லுகிறோம். சுதந்திராக் கட்சியின் சார்பிலும் சிலர் மதுவிலக்கை ரத்து செய்வதை வரவேற்றார்கள். சாதிக் அலி காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவரும் மேலவையிலே வரவேற்றிருக்கிறார். கீழவையில் எதிர்க்கிறார்கள். மேலவையில் திரு. ஈஸ்வரமூர்த்தி அவர்கள் வரவேற்றுப் பேசியிருக்கிறார்கள். நம்முடைய சுதந்திராக் கட்சியின் பெரியவர், பேராசிரியர் ரத்தினசாமி அவர்கள் ஒரு கட்டுரை எழுதி, அந்தக் கட்டுரையை நாங்கள் படித்துப் பார்க்க வேண்டுமென்று தொழிலமைச்சரவர்களுக்கு அவரே அனுப்பியிருக்கிறார். அதிலே குறிப்பிட்டிருக்கிறார். 'மது விலக்கை ரத்து செய்தாலும் செய்யாவிட்டாலும் குடிப்பவன் குடித்துக் கொண்டு தான் இருக்கிறான். நல்ல சரக்கு கிடைக்காவிட்டால் கண்டதை யெல்லாம் குடிக்கிறான். அவதியுறுகிறான். திரு. ராஜகோபாலாச்சாரியார் கள்ளுக் கடையைத் திறந்தால் மனைவியை அடிக்கும் குற்றம் பெருகும் என்கிறார். குடிக்காதவன் மட்டும் மனைவியை அடிக்காமலா இருக்கிறான்? பெருவாரியான குடியர்கள் மனைவியை அடிப்பதில்லை. மட்டோடுதான் குடிக்கின்றனர்.' இது பேராசிரியர் ரத்தினசாமி, எம்.பி., அவர்கள் எழுதியுள்ள கட்டுரையின் ஒரு பகுதியாகும்.

கடைசியாக நம்முடைய திரு. பொன்னப்ப நாடார் அவர்களும் என்ன பேசினார்கள்? மதுவிலக்குச் சட்டத்தை ரத்து செய்யக்கூடாது என்ற கருத்தைப் பேசிவிட்டு கடைசியாக சட்டத்



தைப் போடுங்கள், ஜாக்கிரதையாக இருங்கள் என்று சேலத்தைச் சுட்டிக் காட்டி, ஒத்தி வைத்ததற்கு அவரும் அனுசரணையாகத் தான் வந்தார்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** தலைவரவர்களே, நான் அனுசரணையாக இல்லை என்ற தன்னிலை விளக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். மதுவிலக்கு இருக்க வேண்டுமென்று பரிபூரணமாக நம்புகிறேன். அதற்குக் களங்கம் கற்பிக்க வேண்டுமென்று முதலமைச்சரவர்கள் நினைத்தால் அதற்கு நான் பொறுப்பு இல்லை.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** களங்கம் கற்பிக்கவும் மாட்டேன், காட்டிக் கொடுக்கவும் மாட்டேன்.

DR. H. V. HANDE: The Chief Minister has not told this House why he is going away from the path of Thiru Annadurai My only point is this. I accept that there was a briliant speech of the Chief Minister defending the policy of scrapping of prohibition. But the point is how exactly he can claim in this particular matter, an important point a major issue in 1968 that he has not gone away from the path of Anna? He must explain how exactly he can call that this is the policy of Anna. That is the pinpoint of the question which I am asking. How can he claim that there is a change in the last two years? Will the Hon. Chief Minister categorically and intellectually say why he has gone away from the path of Anna in this particular thing. Let him say that I have no objection.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** அண்ணா வழி ஒரு ஜனநாயக வழி. அதைப் பின்பற்றுபவர்கள் நாங்கள். ஜனநாயக வழிகளில் ஒருகாலத்திலே சொல்லப்பட்ட கருத்துக்கள் வேறொரு காலத்திலே பரிசீலிக்கப்படலாம். அண்ணா அவர்கள் திராவிட நாடு கொள்கையில் அழுத்தந்திருத்தமாக இருந்தார்கள். பிறகு நாட்டின் நிலை, இந்தியாவின் பாதுகாப்பு இவைகளை உத்தேசித்து திராவிட நாடு கொள்கையை மறுபரிசீலனை செய்வதற்காகப் பொதுக் குழுவைக் கூட்டினார்கள். பொதுக்குழு ஆராய்ந்து, பரிசீலித்தது. பிரிவினைக் கொள்கையைக் கைவிட வேண்டுமென்று கூறியது. அண்ணா அவர்கள் ஜனநாயகத்திற்குத் தலை வணங்கி அதை ஏற்றுக் கொண்டார்கள். அதைத் தான் நாங்களும் கடைப்பிடித்து வந்தோம். மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று பொதுக்குழு விரும்பியது; அமைச்சரவைக்குக் கட்டளை இட்டது. பொதுக் குழுவின் கட்டளைக்கு நாங்கள் தலைவணங்கினோம். அண்ணா அவர்கள் ஜனநாயகத்திற்குத் தலை வணங்கினார், நாங்களும் ஜனநாயகத்திற்குத் தலை வணங்குகிறோம். ஆகவே, இது அண்ணா வழிதானே தவிர வேறல்ல.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** அண்ணாவிற்கு மதிப்பளிக்கவில்லை, பொதுக்குழுவிற்குத்தான் மதிப்பளித்திருக்கிறீர்கள்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அண்ணா வணங்கிய பொதுக் குழுவிற்கு நாங்கள் தலை வணங்குகிறோம். நாங்கள் கல்கி தோட்டத்திற்கு மாத்திரம் தலை வணங்குபவர்கள் அல்ல.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** அண்ணாவின் பெயரைச் சொல்லி ஊரை ஏமாற்றுகிறார்கள்.

(பல உறுப்பினர்கள் ஒழுங்குப்பிரச்சினை எழுப்பினார்கள்).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அதை எக்ஸ்பஞ்ச் பண்ணி விடலாம்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தயவு செய்து வேண்டாம். அண்ணாவின் பெயரைச் சொல்லி நாங்கள் ஊரை ஏமாற்றுகிறோம் என்று அவர்கள் சொல்கிறார்கள். நாங்கள் ஊரை ஏமாற்று கிறோமா இல்லையா என்பது ஊருக்குத் தெரியும், உளறுவாயர் களுக்குத் தெரியவேண்டிய அவசியமில்லை. (ஷேம், ஷேம்)

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** சொல்வதற்கு உங்களுக்கு என்ன யோக்கியதை இருக்கிறது?

(பல உறுப்பினர்கள் பாயின்ட் ஆஃப் ஆர்டர் என்று சொல்லிக் கொண்டு எழுந்து நின்றார்கள்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** எல்லோரையும் அமருமாறு கேட்டுக்கொள்கிறேன். டாக்டர் ஹாண்டே அவர்கள், ஊரை ஏமாற்றுகிறார்கள் என்று சொன்னதைச் சபைக் குறிப்பிலே இருக்க லாம் என்று மாண்புமிகு முதலமைச்சரவர்கள் பெருந்தன்மை யுடன் கூறியதால் அவர்கள் என்ன வேண்டுமானாலும் சொல்லலாம் என்று டாக்டர் ஹாண்டே அவர்கள் கருதிக் கொண்டிருக்கிறார்கள். இப் பொழுது அவர் சொல்லியதை, 'என்ன யோக்கியதை' என்று சொல்லியதைத் திரும்ப பெற வேண்டும்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** எதை வாபஸ் வாங்க வேண்டும்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** 'என்ன யோக்கியதை இருக் கிறது' என்று சொன்னதை, இந்த மன்றத்தின் மரபுக்கு முரணான வார்த்தையை வாபஸ் வாங்க வேண்டும்.

THE HON. THIRU K. ANBAZHAGAN :The hon. Member should yieid to the order of the Chair first, in the beginning. Then only if he wants to give any axplanation, he can give is personally to you and not ni the House. He cannot also exchange feelings here.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** என்ன யோக்கியதை இருக் கிறது என்று சொன்னதைத் திரும்பப் பெற்றுக் கொள்கிறேன். ஆனால் . . .

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** நான், மதுவிலக்குச் சட்டத்தை ரத்து செய்வது நல்லது அல்ல என்ற கருத்தை, உணர்ச்சியை எப்பொழுதும் புண்படுத்த விரும்பவில்லை. டாக்டர்



ஹாண்டே போன்றவர்கள் வேண்டுமானால் எங்கள் உணர்ச்சிகளைப் புண்படுத்தலாம். ஆனால் யாருடைய உணர்ச்சியையும் புண்படுத்த நான் விரும்பவில்லை.

மதிப்பிற்குரிய திருப்பூர் மொய்தீன் அவர்கள் பேசினார்களே, அது திராவிட முன்னேற்றக் கழகத்தை எதிர்க்க வேண்டுமென்று சொல்லப்பட்ட கருத்தா ? அல்ல. தமிழரசுக் கழகத்தின் சார் பிலே சொல்லப்பட்டதும் முன்னேற்றக் கழகத்தை எதிர்க்க வேண்டுமென்று சொல்லப்பட்ட கருத்தா? பி. எஸ். பி. கூறிய கருத்துக்களும் முன்னேற்றக் கழகத்தை எதிர்க்க வேண்டுமென்று சொல்லப்பட்ட கருத்தா? அல்ல.

அவர்களெல்லாம் உள்ளபடியே மதுவிலக்கில் நம்பிக்கை வைத் திருக்கிறார்கள். ஆகவேதான் உணர்ச்சி பூர்வமாகப் பேசினார்கள். அந்த உணர்ச்சிகளுக்கு நான் என்றைக்கும் மதிப்பளிக்கத் தயாராகயிருக்கிறேன்.

அதே நேரத்தில் நாம் ஒருவருக்கொருவர் மதிப்பளிப்பதற்குத் தயாராகிக் கொள்ளவேண்டும். ஒருவருக்கொருவர் மரியாதை கொடுக்கத் தயாராகிக் கொள்ள வேண்டும். இன்றைக்கு அண்ணா வின் வழியைப் பின் பற்றுகிறோம் என்று சொன்னால்--அண்ணாவின் வழி ஜனநாயக வழி. அந்த ஜனநாயக வழியைப் பின்பற்று கிறோம். எந்தக் கருத்தையும் பொதுக் குழுவில் வைத்து பொதுக் குழுவின் கட்டளையை ஏற்றுக் கொள்வதுதான் அண்ணாவின் வழி யாகும். அதே வழியைப் பின்பற்றித்தான் இந்தக் கொள் கையைப் பற்றிப் பொதுக் குழுவின் முன்னால் வைத்து ஆய்ந்து பொதுக்குழுவின் கட்டளையை ஏற்றுக் கொண்டிருக்கிறோம்.

ஆகவே. இது அண்ணனின் வழியா, அண்ணனின் வழியா என்று கேட்டால், இந்தியாவில் இருக்கிற காங்கிரஸ் முதலமைச்சர் கள் மதுவிலக்கை ரத்து செய்துவிட்டதால் அவர்கள் எல்லாம் காந்திய வழியில் நம்பிக்கையற்றவர்கள் என்று அர்த்தம்?

அன்று திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள், 'சில பேருக்காவது மதுவிலக்கில் இருந்து விதிவிலக்குச் செய்தாக வேண்டும். இராணுவ வீரர்களுக்கு மது கிடைக்கச் செய்ய வேண்டும். இதில் எல்லாம் காந்தியைப் பார்த்துக் கொண்டிருக்கக் கூடாது. ஒரு காலத்தில் காந்தியார் இராணுவமே வேண்டாமென்று சொன்னார்கள். இராணுவம் இல்லாமல் இந்தியா வாழ முடியுமா ? ஆகவே, மது அருந்தும் உரிமைகள் இராணுவத்திற்கு அளித்தாக வேண்டும் என்று துர்காபூரில் நடந்த காங்கிரஸ் கட்சி மாநாட்டிலே பேசினார்.

இவர்கள் எல்லாம் பழைய காங்கிரசாக இருந்தபோதுதான் மராட்டியத்திலே மதுவிலக்கு ரத்து செய்யப்பட்டது. மைசூரிலே மதுவிலக்கு ரத்து செய்யப்பட்டது. ஆந்திராவிலே மதுவிலக்கு ரத்து செய்யப்பட்டது. வேறு எந்த மாநிலத்தில் மதுவிலக்கு ரத்து செய்யப்படாமல் இருக்கிறது? அவர்கள் எல்லாம் காங்கிரஸ்

காரர்களாக இருந்தாலும் அவர்கள் காந்திய வழிக்குப் புறம்பாக, காந்திக்கு மரியாதை தரக்கூடாது என்று செய்தார்கள்? அந்த அளவிலே இந்த அரசை, இந்த அரசில் இருக்கும் அமைச்சர்களை, அண்ணாவால் தயாரிக்கப்பட்ட எங்களை எண்ணிப் பார்க்க வேண்டும். அண்ணாவின் பெயரைப் பயன்படுத்தி எங்கள் மீது குற்றஞ்சாட்ட விரும்புகிறார்கள். அதற்கும் எங்கள் அண்ணாவைப் பயன்படுத்தி எங்களை ஒழித்துவிடலாம் என்று நினைக்கிறீர்கள். எங்கள் அண்ணன் எங்களை அவ்வளவு சாதாரணமாக விட்டுவிட மாட்டார், என்று அவர்களுக்குக் கூறிக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

கடைசிப் பகுதியை ட்ராஜடி என்றார்கள். மதுவிலக்கு அமலில் இருந்தபோது எவ்வளவு ட்ராஜடிகள் நடந்திருக்கின்றன? இதே சென்னையில் 7—8—1967 அன்று வார்னிஷ் குடித்து 113 பேர் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டு 51 பேர் இறந்தார்கள். காஞ்சிபுரத்தில் 145 பேர் வார்னிஷ் சாப்பிட்டு மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டு 24 பேர் இறந்தார்கள். செங்கற்பட்டில் 151 பேர் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டு 14 பேர் இறந்தார்கள். வாலாஜாபாத்தில் 84 பேர் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டு 14 பேர் இறந்தார்கள். அந்த ட்ராஜடியை நிறுத்தத்தான் இந்த ட்ராஜடி என்றால் நான் இது ட்ராஜடி என்பதை உள்ளபடியே ஏற்றுக் கொள்ளுகிறேன்.

மதுவிலக்கு தோல்வியுற்றுவிட்டது. அந்தச் சட்டம் இங்கே வெற்றிகரமாக நடைபெற முடியவில்லை என்பதை முன் இருந்த அமைச்சர்கள் ஏற்றுக் கொள்ள மறுத்தார்கள். நாங்கள் அதைத் தாராளமாக ஒத்துக் கொள்ளுகிறோம். மாண்புமிகு உறுப்பினர்களின்—தோழமைக் கட்சி நண்பர்களின் உணர்ச்சியை மதிக்கிறேன், பாராட்டுகிறேன். அவர்களில் சில பேர் என்னைக் கெஞ்சிக் கூடக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். மன்றாடிக் கேட்பதாகக் கூடச் சொன்னார்கள். அவர்களை எல்லாம் விட நான் வயதிலே சிறியவன். அப்படி மன்றாடிக் கேட்டதை, கெஞ்சிக் கேட்டதைத் தயவு செய்து திரும்பப் பெற்றுக் கொள்ளுங்கள். இதைத் தவிர வேறு வழி இல்லை என்ற காரணத்தால்தான் இந்த முடிவுக்கு வந்திருக்கிறோம். அதுவும் ஒத்தி வைத்திருக்கிறோம். இந்தியா முழுவதற்கும் மதுவிலக்குத் திட்டத்தை அமல்படுத்துவதற்கு மத்திய அரசு பொறுப்பேற்றுக் கொள்ளும் வரையில் மதுவிலக்கை ஒத்திவைத்திருக்கிறோம் என்றுதான் கூறியிருக்கிறோம்.

இந்த நிதிநிலை அறிக்கையின் பேரில் பல கருத்துக்களை எடுத்துக் கூறிய மாண்புமிகு உறுப்பினர்கள், கட்சித் தலைவர்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்து, இடையில் சூடு ஏற்பட்டாலும் அந்தச் சூட்டைத் தமிழ்ப் பண்பின் காரணமாக நிச்சயமாக மறந்து விட வேண்டுமென்று கேட்டுக் கொண்டு உங்களுக்கெல்லாம் நன்றி கூறி அமர்கிறேன், வணக்கம்.





**திருமதி த. ந. அனந்தநாயகி :** அர்பன் லாண்ட் டாக்ஸிலிருந்து விலக்குக் கொடுக்கக்கூடிய உரிமையை எடுத்து விட்டார்கள். அதன் காரணமாகச் சிறு சிறு ஆலயங்களை நடத்துவது கஷ்டமாகி விடும். அந்த ஆலயங்களுக்கு விதிவிலக்குக் கொடுப்பது பற்றி முதலமைச்சர் அவர்கள் கருத்துத் தெரிவிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அது பற்றி நடவடிக்கை எடுக்கும்போது சர்க்கார் யோசனை கூறும்.

THIRUMATHI T. N. ANANDANAYAGI : Another clarification is that we wanted 1½ grounds to be exempted from the Urban Land Tax Act. Will the Hon. the Chief Minister consider it ? He has not given a reply to that.

Yet another clarification is that the Hon. Chief Minister has stated that the proposed surcharge on sales tax collected in Madras City is to be levied in other places also. In the Budget speech there is no such proposal and how can the Hon Chief Minister mention it here?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிந்து, மீண்டும் நாளை காலை 9 மணி அளவில் பேரவை கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை ஒத்திவைக்கப்பட்டது.

6. பேரவையின் முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

*A. Statutory Rules and Orders.*

121. Notification issued witth G.O. Ms. NO 87, Agriculture, dated the 8th January 1970, in regard to certain amendments to the Tamil Nadu Agricultural Produce Markets Rules, 1962. [Laid on the Table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).]

122. Notification issued with Roc. No. 182509/69-P1, dated the 19th February 1970, in regard to exclusion of certain areas from the existing Kundiyamallur Panchayat in Cuddallore taluk of South Arcot district for constitution into a separate panchayat by name " Kallayankuppam ". [Laid on the Table of the House under section 179 (4) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

123. Notification issued with G.O. Ms. No. 643, Agriculture, dated the 4th March 1969, in regard to declaration of the notified market areas of the Vadasery Market in the Kanyakumari district. [Laid on the Table of the House under section 29 (4) of the Tamil Nadu Panchayats Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).]

124. Notification issued with G.O. Ms. No. 54, Agriculture, dated the 7th January 1971, in regard to certain amendments relating to notification of Market area at North Arcot district in respect of paddy, gingelly, sugarcane, etc., under the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959. [Laid on the Table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).]

125. Notification issued with Roc. No. 194678/69-P1, dated the 7th February 1970, in regard to exclusion of certain areas from the existing Palur panchayat in Cuddalore taluk of South Arcot district for constitution into a separate panchayat by name "Agaram". [Laid on the Table of the House under section 179 (4) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

B. *Reports, Notifications and Other Papers.*

@ 67. The Tamil Nadu Occupants of Kudiyiruppu (Protection from Eviction) Bill, 1971 (with Annexure). (L.A. Bill No. 11/71).

£ 68. A Review on the Industrial Development in Tamil Nadu for the year 1970–71 (English and Tamil).

@ Despatched to Members on 26—6—1971.
£ Despatched to Members on 28—6—1971.

# தமிழ்நாடு சட்டப் பேரவை.

## புதன்கிழமை, 1971 சூன் 30.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

## 1. வினாக்கள்-விடைகள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 86, 87, 88, 89 ஆகிய எண்கள் உள்ள கேள்விகள், மாண்புமிகு அமைச்சர்களின் வேண்டுகோளுக்கிணங்க தள்ளிப்போடப்படுகின்றன.

### விற்பனை வரி ஏய்ப்பு

* 90 வினா—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு உணவு-வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் 1968–69-ம் ஆண்டில் விற்பனை வரி செலுத்தாது ஏமாற்றியவர்களிடமிருந்து சோதனைகளின் மூலம் கிடைத்த வருமானம் எவ்வளவு ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : 1968–69-ம் ஆண்டில் விற்பனை வரியைச் செலுத்தாது ஏமாற்றியவர்களிடமிருந்து சோதனைகளின் மூலம் கிடைத்த வருமானம் பின்வருமாறு :—

| | |
|---|---|
| வரி | ரூ. 1,30,89,745 |
| அபராதம் | ரூ. 14,25,404 |
| கம்பவுண்டிங் பீஸ் | ரூ. 2,45,921 |
| மொத்தம் | ரூ. 1,47,61,070 |

திரு. பெ. மலைச்சாமி : வரி செலுத்ாதவர்களுக்கு அபராதம் விதிக்கப்படுகிறது என்றாலும் இனிமேல் குறைந்தபட்சம் ஆயுள் தண்டனையாவது விதிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : விதிக்கப்படுகின்ற அபராதமே போதும் என்று அரசாங்கம் கருதுகிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி : 1968–69-ம் ஆண்டுக்கான விவரத்தை அமைச்சரவர்கள் தெரிவித்தார்கள். 1969–70-ம் ஆண்டு வரி எவ்வளவு பாக்கியிருந்தது, அதில் எவ்வளவு வசூல் செய்யப்பட்டிருக்கிறது என்று சொல்ல முடியுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : நான் அளித்த விவரம் வரி பாக்கி வசூல் பற்றியதல்ல ; விற்பனை வரியைச் செலுத்தாது ஏமாற்றியவர்களை திடீர் என்று சோதனை போட்டுக் கணக்குகளைப்

பதிமுதல் செய்து அதன்மூலம் கிடைத்த வருமானம் எவ்வளவு என்பதாகும். 1969–70-ம் ஆண்டுக்கான புள்ளி விவரம் இல்லை. தனிக் கேள்வி போட்டால் விவரம் அளிக்கலாம்.

**திரு. எஸ். முருகையன் :** மாநிலத்தில் எந்த எந்த மாவட்டங்களில் அதிகப்படியாக வரி ஏய்ப்புகள் நடைபெற்றிருக்கின்றன ? அந்த இடங்களில் அடிக்கடி சோதனை செய்வதற்கு அரசாங்கம் ஏதாவது தனியாக ஏற்பாடு செய்திருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** சோதனை செய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. மாவட்டவாரியாக என்னிடம் புள்ளி விவரம் இல்லை.

**திரு. ஏ. சுப்பிரமணியம் :** வரி ஏய்ப்பின் அளவு பற்றிய மதிப்பீடு ஏதாவது அரசாங்கத்திடம் இருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** ஆண்டுதோறும் மாறிக்கொண்டே போகும். மதிப்பீடு அரசாங்கத்திடம் இல்லை. சோதனை செய்கிற அதிகாரிகளின் திறமையைப் பொறுத்தும், கணக்கு எழுதுகிறவர்களின் திறமையைப் பொறுத்தும் இது இருக்கிறது. 1968–69-ம் ஆண்டுக்கான புள்ளிவிவரம் நான் தந்தேன். அடுத்த ஆண்டுக்குரிய விவரம் வேண்டுமென்றால் தனிக் கேள்வி போட்டால் விவரம் தரலாம்.

**திரு. எம். சுரேந்திரன் :** சார், திடீர் சோதனைகளின் மூலம் இந்த வரி ஏய்ப்புகளைக் கண்டுபிடிப்பதைவிட வரி ஏய்ப்பே ஏற்படாமல், ஒழுங்காக வியாபாரிகள் நடந்துகொள்ள ஏதாவது வழிவகைகளைப்பற்றி அரசு யோசனை செய்யுமா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** வழிவகைகளை அரசு செய்ய முடியாது. வியாபாரிகள் தாங்களாகவே திருந்தினாலொழிய வேறு வழி இல்லை.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** சோதனைச் சாவடிகளில் இருக்கும் அதிகாரிகளும் வரி ஏய்ப்புக்கு உடந்தையாக இருக்கிறார்கள் என்று கூறப்படுகிறது. ஆகவே, அவர்களைப் பரிசோதனை செய்வதற்கு 'பறக்கும் படை' ஒன்றை ஏற்படுத்த அரசாங்கம் முன்வருமா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, அதிகாரிகளின்மீது சாட்டப்படுகிற இந்தக் குற்றச்சாட்டை நான் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை.

**திரு. நா. வீராசாமி :** அரசாங்க அதிகாரிகள் எவ்வளவுதான் கடுமையான நடவடிக்கை எடுத்தாலும், சுறுசுறுப்பாகப் பணியாற்றினாலும், வரியை ஏய்க்கக்கூடியவர்கள் நாட்டில் இருந்து கொண்டுதான் இருக்கிறார்கள். அதிகாரிகளுக்குத் துணை புரிகின்ற வகையில் 'நான்-அஃபிஷியல்' குழுவை ஒவ்வொரு வட்டத்திற்கும் அமைத்து, அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா ?



**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** கணக்குகளைக் கண்டுபிடிக்க அப்படிப்பட்ட குழுக்களை ஏற்படுத்தினால், அரசியல் கண்ணோட்டம் என்ற குற்றச்சாட்டுக்கு ஆளாக்கப்படுவோம்.

**திரு. கே. ஏ. வகாப் :** திடீர் சோதனையின் மூலம், சில நேரங்களில், தவறு செய்யாத வியாபாரிகள்கூட பலவிதமான துன்பங்களுக்கு ஆளாகிறார்கள் என்ற பரவலான எண்ணம் வியாபாரிகளிடையே இருக்கிறது. தவறு செய்யாத வியாபாரிகளுக்குத் துன்பம் வராமல் காக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** துர்பாக்கியவசமாக வரி ஏய்ப்பைக் கண்டுபிடிக்கச் சோதனை செய்ய அதிகாரிகள் போகுமிடங்களில், புதையல் கிடைப்பதுபோல் கணக்குகள் அகப்படுகின்றன.

THIRU K. M. SUBRAMANIAM : When the sales tax exemption limit has been fixed at Rs. 15,000—now it has been increased to Rs. 25,000—when such exemption is given, is it not a fact that after a dealer completes Rs. 25,000 worth of sales, he deals in some other names in the same place or even before completing the limit he gives bills in two or three names thus evading sales tax?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** அப்படிச் செய்கின்ற வியாபாரிகள் இருப்பார்களானால் கனம் அங்கத்தினர் தயவு செய்து அரசாங்கத்திற்குத் தகவல் கொடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். அதன் பிறகு உடனடியாக அரசு நடவடிக்கை எடுக்கும்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** திடீர் சோதனை செய்யும் விசேஷ அதிகாரிகள்—நான் அறிந்த வரையில்—வெகு திறமையாகப் பணியாற்றி அதிகமாகப் பணத்தை எடுத்திருக்கிறார்கள் என்பதை அறிவேன். அம்மாதிரி திடீர் சோதனை மூலமாக சில முக்கியமான இடங்களில் தவறுகளைக் கண்டுபிடித்து, வரி ஏய்ப்புப் பணத்தை வசூலிக்கும் அதிகாரிகளுக்குச் சன்மானம் வழங்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** சன்மானம் வழங்கப்படுகிறது என்று கருதுகிறேன். தனிக் கேள்வி போட்டால் விவரம் சேகரித்துத் தரலாம்.

## விற்பனை வரி விலக்கு

*** 91 வினா—திரு. கே. ஏ. வகாப் :** மாண்புமிகு உணவு-வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சிறு வியாபாரிகளுக்கு ஐம்பது ஆயிரம் ரூபாய் வரை விற்பனை வரி விலக்கு அளிக்கும் திட்டம் அரசிடம் உண்டா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** இது போன்ற கோரிக்கைகள் வியாபாரிகளிடமிருந்து வந்துள்ளன. இவை அரசின் பரிசீலனையிலுள்ளன. இந்த பதில், மூலக் கேள்வி கேட்ட

[1971 ஜூன் 30

நேரத்தில் தயாரிக்கப்பட்டதாகும். ஆனால், நேற்று முன்தினம் சட்டமன்றத்தில் சொல்லியிருக்கிறேன், இந்த உச்ச வரம்பு எந்த அளவுக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது என்று. உச்ச வரம்பை 15,000 ரூபாயிலிருந்து 25,000 ரூபாய் வரையும், கம்பவுண்டிங்கை 75,000 ரூபாயிலிருந்து ஒரு இலட்சம் ரூபாயாகவும் மாற்றியிருக்கிறோம்.

திரு. கே. ஏ. வகாப் : தலைவர் அவர்களே, பலமுனை விற்பனை வரியின் காரணமாக வியாபாரிகளுக்கும் வரி வசூலிப்பவர்களுக்கும் சிரமங்கள் ஏற்படுகின்றன. ஆகவே, ஒருமுனை விற்பனை வரி விதிப்பதுபற்றி அரசு ஆலோசிக்குமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : எந்தெந்தப் பொருட்களை ஒருமுனை வரிக்குக் கொண்டுவர முடியுமோ அவைகளை மாற்றிக் கொண்டிருக்கிறோம். ஆனால், எல்லாப் பொருள்களையும் ஒருமுனை விற்பனை வரிக்குக் கொண்டுவர முடியாது என்பதை நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன். ஏனென்றால், பலமுனை விற்பனை வரி என்றால், எங்காவது ஒரு முனையில் விடப்பட்டுவிடுமானால், இன்னொரு முனையில் கண்டுபிடிக்கப்பட்டுவிடும். ஒருமுனை வரி என்று வைத்து விட்டால், அந்த ஒரு இடத்தில் வரி ஏய்க்கப் பட்டுவிட்டால் அரசாங்கத்திற்கு வரவேண்டிய வரி வராமல் பெரிய இழப்பு ஏற்பட்டுவிடும்.

திரு. மா. பா. சாரதி : உச்ச வரம்பை ரூ. 15,000-இலிருந்து ரூ. 25,000 வரை இப்பொழுது உயர்த்தியுள்ளதை, வியாபாரிகள் 50,000 ரூபாயாக உயர்த்தி கம்பவுண்டிங் செய்து வசூலிக்கவேண்டும் என்று ஏகோபித்த குரலில் எடுத்துச் சொல்லியும் அது ஏற்றுக் கொள்ளப்படவில்லை. ஆகவே, 25,000 ரூபாய் என்றிருப்பதை 50,000 ரூபாயாக்க அமைச்சரவர்கள் முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, இரண்டு நாட்களுக்கு முன்புதான் 25,000 ரூபாய் என்று உயர்த்தப் பட்டது. ஒரு இலட்ச ரூபாயாகக்கூட உயர்த்தினால் வியாபாரிகள் மகிழ்ச்சி அடையக்கூடும். வரியே இல்லையென்றால் அவர்கள் இன்னும் மகிழ்ச்சி அடையக்கூடும். ஆனால், அரசாங்க நிதி நிலையைப் பொறுத்து, எந்த அளவுக்கு நிர்ணயிக்கலாம் என்பதைப் பார்த்து அரசாங்கம் நிர்ணயித்துள்ளது. 25,000 ரூபாய்க்கு மேல் வியாபாரம் செய்கிறவர்களை சிறு வியாபாரிகள் என்று கருதுவதற்கு இயலாது.

திரு. க. நாகராஜன் : வரி ஏய்ப்பு செய்யாமல் ஒழுங்காக வியாபாரம் நடத்தக்கூடிய வியாபாரிகளை ஊக்குவிக்கும் முறை குறித்துப் பரிசீலிக்கும் திட்டம் அரசாங்கத்தின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அப்படி ஒன்றும் இல்லை.



1971 ஜூன் 30]

## மணிமுக்தா நதியின் குறுக்கே அணை

*92. வினா.—திரு. ந. நாச்சியப்பன் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கராபுரத்திற்கு மேற்கே மணி நதியில் ஒரு நீர்த் தேக்கம் கட்டுவதற்கு தீவிர நடவடிக்கை எடுக்கும் செயற் குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையிலுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) தற்போது ஒன்றும் இல்லை.

(இ) இக்கேள்வி எழாது.

திரு. ந. நாச்சியப்பன் : தலைவர் அவர்களே, வெள்ளையர்கள் ஆண்ட காலத்தில் 1920-இல் ஆய்வு செய்யப்பட்டு, அது இதுவரை யில் நடைமுறையில் எடுத்துக்கொள்ளப்படாமல் விடப்பட்டிருக் கிறது. ஆகவே, நம்முடைய ஆட்சிக் காலத்தில் விரைவாக அணையைக் கட்ட முயற்சி எடுத்துக்கொள்ள அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : பாலப்பட்டு கிராமத்திற்கு அருகே மணி நதியின் குறுக்கே ஒரு அணை கட்டி கொசப்பாடி ஏரிக்குப் பாசன வசதியளிக்க ரூ. 4.4 லட்சத்திற்கு ஒரு திட்டம் இருந்தது. மேற்குறிப்பிட்ட அணைக்கட்டுத் தலத்திற்குக் கீழே மணிமுக்தா நதித் திட்டம் திட்டமிடப்பட் டிருந்ததால் மணிமுக்தா நதித் திட்டத்திற்கு மேல் தண்ணீர் வரவைத் தடுக்கும் எந்தத் திட்டமும் செயல்படுத்துவது விரும்பத் தக்கதல்ல எனக் கருதி இத் திட்டம் செயல்படுத்தப்படவில்லை. தற்போது, மணிமுக்தா நதித் திட்டம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. அதன் செயல்முறையைச் சில ஆண்டுகள் கவனித்தபிறகு, அத்திட்டத்தின் தேவைக்குமேல் உபரி நீர் இருப்பின், மேற்கண்ட மணி நதி திட்டம் குறித்து மறு பரிசீலனை செய்யப்படும்.

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, பொதுவாக, தமிழ் நாட்டில் தண்ணீர்ப் பற்றாக்குறை இருக்கிறது. அதற்குக் காரணம், தமிழ்நாட்டு எல்லையைப் பிரிக்கும் நேரத்தில், எந்த முறைப்படி பிரிக்கவேண்டுமோ அந்த முறைப்படி பிரிக்காத காரணத்தால் தான், தமிழ்நாட்டுக்குச் சேரவேண்டிய தண்ணீர் பல ஆறுகளின் மூலம் சேரவில்லை என்பது உண்மையா ? எப்போதுமே ஆறுகளையும் மலைகளையும் எல்லையாக வைத்துப் பிரிப்பதுதான் முறை. ஆனால், கேரள எல்லையைப் பொறுத்த வரை, அப்படிப் பிரிக்கப்படாமல் இருக்கிறது. இதைத் தனியாக மறு பரிசீலனை செய்து, மத்திய அரசோடு தொடர்பு கொண்டு தமிழ் நாட்டுக்கு வேண்டிய நீர் வசதியைப் பெற்றுத்தர அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** இது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்து என்று நான் நினைக்கிறேன். எல்லைப் பற்றிய பிரச்னைக்கு இப்போது இடம் இல்லை. மூலக் கேள்வி ஒரு அணைக்கட்டு கட்டுவதைப் பற்றிய திட்டமாகும். அப்படி ஒரு கருத்து இருந்து வருகிறது.

**திரு. எம். தேவராசன் :** தலைவரவர்களே, பாண்டியார்-புன்னம் புழா திட்டம் நிறைவேற்றப்படுமா என்று அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா:** மூலக்கேள்விக்கு தொடர்பு இல்லை. பாண்டியார்-புன்னம்புழா அணை கட்டுவதைப் பற்றி இப்போது சொல்வது பொருத்தம் இல்லை என்று நினைக்கிறேன்.

*Dam across South Pennar*

* 93 Q.—THIRU B. VENKATASWAMY : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether there is any proposal to construct an anicut in South Pennar near Kelavarapalli in Hosur Taluk; and

(b) if so, the estimated cost for the same and when it will be completed ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** (அ) ஆம், ஹோசூர் தாலுகாவில்; சின்ன செந்திராம், கெலீவரபள்ளி கிராமங்களின் இடையே பொன்னியாற்றின் குறுக்கே, ஒரு நீர்த்தேக்கம் அமைப்பதற்கான திட்டம் பரிசீலனையில் உள்ளது.

(இ) இத்திட்டத்தின் உத்தேச மதிப்பீடு ரூ. 1,61,50,000 ஆகும். இந்தத் திட்டம் இப்பொழுது ஆரம்ப காலப் பரிசீலனையில் தான் உள்ளது. ஆகையால் திட்டத்தை முழுவதும் பரிசீலித்த பிறகுதான் இத்திட்டத்தைச் செயலாக்குவதுபற்றி எடுத்துக் கொள்ளமுடியும்.

THIRU K. S. KOTHANDARAMIAH : With regard to Kelvaarpalli dam, the investigation engineers have made full investigation and recommended construction of dam there. May I know whether the Government will taken up the question of sanction for a dam at an early date?

THE HON. THIRU S. J. SADIQ PASHA : The scheme is under detailed examination. It will be possible to report whether this scheme is possible of being taken up for execution only after detailed examination is made.

**திரு. கே. ஏ. வகாப் :** தலைவரவர்களே, பாலாற்றில் மழைக் காலத்தில் வருகிற நீர் எல்லாம் கடலில் கலந்து வீணாகி விடுகிறது. வேலூர் அருகே ஒரு அணை கட்டி, அதை விவசாயத்திற்கு பயன் படுத்தும் திட்டத்திற்கான செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தலைவரவர்களே, கடலில் போய் சேருகிற அளவுக்கு பாலாற்றில் தண்ணீர் இருப்பதாகத் தெரியவில்லை. இப்போது பாலாற்றின் குறுக்கே அணை கட்டும் திட்டம் இல்லை.

**புலவர் திரு. சி. பழனிச்சாமி:** தலைவரவர்களே, பழனி தொகுதியில் உள்ள வரதமா நதி, குதிரை ஆறு, பச்சையாறு இவற்றின் குறுக்கே அணைகள் கட்டும் திட்டத்திற்காக அரசாங்கம் ஏதேனும் முன்னேற்பாடு செய்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தலைவரவர்களே, வரதமா நதித் திட்டம் பற்றி சில நாட்களுக்கு முன்புதான் அந்த இடம் பார்வையிடப்பட்டிருக்கிறது. குதிரையாறு, பச்சையாறு அணைக்கட்டுத் திட்டங்கள் பற்றிய திட்டம் அரசாங்கத்திடம் இல்லை.

**திரு. கே. டி. கே தங்கமணி :** தலைவர் அவர்களே, ஹோசூர் தாலுக்காவிலுள்ள அந்த அணைக்கட்டுக்கு ரூ. 1,61,50,000 ரூபாய் என்று செலவு மதிப்பிடப்பட்டு இருப்பதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். இப்படி எஸ்டிமேட்டுகள் போட்டதற்குப் பின்னும், அந்த அணை தொடங்குவதாகத் தெரியவில்லை. இப்போது, அடுத்த ஆண்டிலாவது தொடங்கப்படும் என்று உறுதி கூறுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தலைவரவர்களே, அது உத்தேச மதிப்பீடு தான். இன்னும் டிடெயில்ட் இன்வஸ்டிகேஷன் நடைபெறவில்லை. டிடெயில்ட் இன்வஸ்டிகேஷனுக்குப் பிறகு தான், அதன் பேரில் பரிசீலித்து நடவடிக்கை எடுக்கப்படும்.

THIRU K. T. K. THANGAMANI : Sir, my point has not been answered.

MR. SPEAKER : You can put another supplementary.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** நான் அறியவிரும்புவது எல்லாம் என்னவென்றால் இந்த ஆண்டு எடுக்கப்படாமல் இருந்தாலும், அடுத்த ஆண்டு சேர்க்கப்படுமா, அதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பது தான்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** அதுபற்றிய முடிவு இப்போது சொல்வதற்கு இல்லை.

திரு. எம். சுரேந்திரன்: சார், இது போன்ற பல அணைக் கட்டு திட்டங்கள் கீழ்மட்டத்திலே எல்லாம் பரிசீலிக்கப்பட்டு, முடிவு செய்யப்பட்டு, அரசாங்கத்திற்கு அனுப்பப்பட்டுள்ளன. ஆனால்

அந்தத் திட்டங்கள் இன்னும் எடுத்துக்கொள்ளப்படாமல் இருக்கிறதே, அவற்றை எல்லாம் உடனே எடுத்துக்கொள்வதற்கு உரிய ஏற்பாடுகளை அரசு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அப்படிக் குறிப்பாக ஏதேனும் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்படுமானல் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. மா. வெ. கரிவேங்கடம் : தலைவரவர்களே, இந்தத் திட்டம் நான்காவது ஐந்தாண்டு திட்டத்தில் சேர்க்கப்பட்டு இருக்கிறதா, மத்திய அரசின் திட்டக் குழுவின் அனுமதியை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இனிமேல்தான் மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பவேண்டும்.

*Coffee plantations in Denkanikota forest.*

* 94 Q.—THIRU B. VENKATASWAMY : Will the Hon. the Minister for Electricity be pleased to state :

(a) whether there is any proposal to raise coffee plantations in the forest areas of Denkanikota taluk in Dharmapuri district; and

(b) if so, the present stage thereto?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (அ) இல்லை.

(இ) இக் கேள்வி எழுவில்லை.

THIRU K. S. KOTHANDARAMIAH : I definitely learn that the Central Coffee Board had recommended the establishment of coffee plantations (new) at Kolli hills and Denkanikota hills. It has been published in newspapers like 'Economic Times' and it is stated that they are also going to take a film called 'Coffee country' and send it to foreign countries to earn foreign exchange. May I know whether Government had taken steps to start a Coffee Plantation at Denkanikota?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவரவர்களே, சேலம் மாவட்டத்தில் இருக்கும் கொல்லிமலையில் காப்பி விளைவதற்கு தகுந்த இடம் என்று கருதப்படுகிறது. ஆனால் தர்மபுரி மாவட்டத்தில் இருக்கும் டெங்கணிக்கோட்டா அதற்கு ஏற்ற இடம் இல்லை என்ற காரணத்தால் அங்கே அதைப்பற்றி யோசிப்பதற்கு இடம் இல்லை.

திரு. பெ. மலைச்சாமி : தலைவரவர்களே, அரசாங்கத்திற்குச் சொந்தமான மலைப்பகுதியில் எங்கே காப்பிச் செடி பயிரிடப் பட்டுள்ளது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : இப்போது எங்கும் பயிரிடப் படவில்லை, பயிரிடலாமா என்று ஆலோசனையில் இருக்கிறது.



திரு. நா. வீராசாமி : தலைவரவர்களே, தர்மபுரி மாவட்டத்தில் இருக்கக்கூடிய டெங்கணிக்கோட்டா பகுதியில் காப்பி பயிரிடுவதற்கு வாய்ப்பு இல்லை என்றாலும் தமிழ் நாட்டில் எந்தெந்தப் பகுதியில் அரசாங்கம் காப்பி பயிரிட திட்டம் தீட்டி இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன். மேலும், இதன் மூலம் அந்நிய செலவாணி கிடைக்க வாய்ப்பு இருப்பதால் அதிக அக்கறை எடுத்து காப்பி பயிரிட அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவரவர்களே, நீலகிரி மாவட்டத்தில் சில பகுதிகளிலும், சேலம் மாவட்டத்தில் கொல்லி மலைப் பகுதியிலும், காப்பி பயிரிடலாம் என்று ஆலோசனையில் இருக்கிறது. இலங்கையிலிருந்து தமிழ் நாட்டிற்கு வந்திருக்கும் அகதிகள் 3,500 ஏக்கர் நிலத்தில் தேயிலை பயிரிட்டு வருகிறார்கள்.

திரு. எம். சுரேந்திரன் : சார், காப்பி சீட் பயிரிடுவதற்கு எவ்வளவு ஆயிரம் அடி உயரம் இருக்க வேண்டும், என்ன மாதிரி சீதோஷ்ண நிலைமை இருக்கவேண்டும், அது எங்கெங்கு வளர்க்க முடியும் என்று ஆராய்ச்சி செய்யப்பட்டிருக்கிறதா? சேலம் மாவட்டத்தில் உள்ள பாலமலை 4,000 அடி உயரத்தில் இருக்கிறது. அங்கே காப்பி சீட் பயிரிடுவதற்கு வாய்ப்பு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவரவர்களே, மலையின் உயரம் மட்டும் போதாது, பொதுவாக 3,000 முதல் 4,000 அடி வரை உயரம் இருக்கவேண்டுமென்று சொல்கிறார்கள். மந்தமான சீதோஷ்ண நிலைமை வேண்டும். 80 முதல் 100 இஞ்ச் வரை மழை வேண்டும். மண் வளம் பொருத்தமாக இருக்க வேண்டும்.

திருமதி த. ந. அனந்தநாயகி : சார், அகதிகள் 3,500 ஏக்கரிலே தேயிலை பயிரிடுகிறார்கள் என்று சொன்னார்கள். அகதிகளுக்கு என்று தனித்தனியாக 5 ஏக்கர் என்று பிரித்துக்கொடுக்கப் பட்டிருக்கிறதா அல்லது கூட்டுறவு முறையின்கீழ் பயிர்செய்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அகதிகள் துறை அமைச்சரிடத்தில் இதுபற்றிக் கேட்க வேண்டும்.

திரு. க. நாகராஜன் : தலைவரவர்களே, திண்டுக்கல் அருகிலே உள்ள சிறுமலைப்பகுதியில் ஏற்கனவே காப்பி சொந்த நிலத்தில் பயிரிடுகிறார்கள். அதை அடுத்துள்ள அரசாங்க காட்டு பகுதியில் காப்பி பயிரிடும் திட்டம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

(பதில் இல்லை)

THIRU K. S. KOTHANDARAMIAH : With regard to Denkanikota Coffee Plantation, it is stated that the Union Hon. Deputy Minister for Foreign Trade announced in the Lok Sabha recently

that the Coffee Board has finished the studies for establishment of a Coffee Plantation at Kollimalai and also at Denkanikota. This has been published in the " Economic Times ", dated June 25th so may I know from the Hon. Minister whether he will find out the details and give us correct answer?

THIRU N. VEERAASAMI : On a point of Order, Sir.

MR. SPEAKER : The hon. Member should not refer to newspaper reports. He should not base his question on newspaper reports.

THIRU K. S. KOTHANDARAMIAH : May I request the Hon. Minister to be kind enough to sanction a Coffee Plantation for Denkanikota?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவரவர்களே, நான் ஏற்கெனவே சொன்னேன். டெங்கணிக்கோட்டாவில் காப்பி பயிரிடும் திட்டம் இல்லை. காப்பி பயிரிடுவதற்கு தேவையான சீதோஷ்ண நிலை அங்கு இல்லை. மண் வளம் ஏற்றபடி இல்லை என்று சொல்கிறார்கள். மத்திய அரசிடமிருந்தும் எந்தவிதமான தகவல் வந்ததாக குறிப்பு இல்லை.

திரு. எம். தேவராசன் : தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தில் காபி பயிரிடும் திட்டம் இருப்பதாகச் சொன்னார்கள். அங்கே உள்ள சிறும்பட்டிப் பகுதியில் நிலாம்பூர் கோவிலகம் ஏதாவது தடை வாங்கியிருக்கிறார்களா என்பதை அறிவிக்க முடியுமா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : டெல்லி சுப்ரீம் கோர்ட்டில் வழக்கு இருக்கிறது.

திரு. கே. ஏ. வகாப் : தலைவர் அவர்களே, வடாற்காடு மாவட்டத்திலுள்ள ஜவ்வாது மலைகளில் காபி வளர்க்கும் சாத்தியக் கூறுகள் இருக்கின்றனவா ? அங்கே சந்தன மரங்களை வளர்ப்பது போல் வேறு இடங்களில் வளர்க்க எண்ணம் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : அங்கே காபி வளர்க்கத் திட்டம் இல்லை. சந்தனக் காடுகள் வளர்க்கத்தான் திட்டம் இருக்கிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி : காபிப் பயிருக்கு 'போர்' என்ற வியாதி வருவது அமைச்சருக்குத் தெரியுமா ? அந்த வியாதியிலிருந்து காபி பயிருக்கு காப்பு அளிக்க சட்ட திட்டங்களைப் போட்டு, மருந்துகளை கண்டு பிடித்திருக்கிறார்களா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சட்ட திட்டங்களைப் போட்டு எப்படி தடுக்க முடியும்?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: அதற்குத் தனியாகக் கேள்வி போடவேண்டும்.





THIRU K. M. SUBRAMANIAM : Sir, are the Government aware that because of the threat of nationalisation of plantations, many of the plantation owners are not arranging for replantation of either tea or coffee and consequently the plantations are suffering?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : அப்படி ஒன்றும் தகவல் இல்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி : கேள்வி டெங்கணிக்கோட்டா பற்றி இருந்தாலும், அமைச்சர் பல இடங்களைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். சேர்வராயன் மலையில் தனியார் காபித் தோட்டம் போட்டிருக்கிறார்கள். அரசு தனியாகத் திட்டம் போட்டு, காபித் தோட்டம் நடத்த ஆலோசனை உண்டா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : அப்படிச் சொல்லக் கூடிய திட்டமானது, ஒரு கார்ப்பொரேஷன் மூலமாகவோ அல்லது போர்டு மூலமாகவோ நிர்வாகத்திற்கு எடுக்கலாம் என்பது பரிசீலனையில் அரசாங்கத்தில் இருக்கிறது. பரிசீலனைக்குப் பின்னால், எந்த எந்த இடங்களில் காபி வளர்க்கும் திட்டத்தை அரசாங்கத்தின் மூலம் செய்யலாம் என்று ஆலோசிக்க வேண்டும்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, is there any proposal to bring about a ceiling for the plantation areas in Tamil Nadu?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : அரசு முடிவு எடுக்க வேண்டிய ஒன்றாகும்.

### கான்சாபுரம் கிராமப் புல்வெளிக்காடு

* 95 வினா—திரு. க. சுப்பு : மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டம், கான்சாபுரம் கிராமத்திலுள்ள புல்வெளிக்காடு என்ற நிலப்பகுதி எப்போது வனத்துறையுடன் இணைக்கப்பட்டது?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : இராமநாதபுரம் மாவட்டம் ஸ்ரீவில்லிப்புத்தூர் வட்டம் கான்சாபுரம் கிராமத்திலுள்ள "புல்வெளிக்காடு" என்ற நிலப்பகுதி 1899-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 22-ம் நாளில் வனத்துறையுடன் ஒதுக்கக்காடாக இணைக்கப்பட்டது.

திரு. க. சுப்பு : பேரவைத் தலைவர் அவர்களே, சாகுபடிக்கு லாயக்கான நிலங்களை நிலமில்லாத விவசாயிகள் பயிரிட்டு வந்தார்கள். அவை காடுகள் என்று சொல்லி தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள். அந்த நிலங்களைப் பகிர்ந்து அளிக்கும் போது அப்படிப் பட்ட விவசாயிகளுக்கு முதலிடம் தரப்படுமா?

__மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :__ பெயர்தான் புல்வெளிக் காடு, ஆனால் அங்கே அடர்த்தியான மரங்கள் இருக்கின்றன. யானைக் கூட்டங்களும் இருக்கின்றன. விவசாயம் செய்ததாக என்னிடத்தில் விவரம் இல்லை. அப்படி விவசாயம் செய்தாலும், யானைக் கூட்டத்தால் அழிக்கப் பட்டுவிடும். நிலத்தைப் பிரித்துக் கொடுக்கும் செயற்குறிப்பு பரிசீலனையில் இருக்கிறது.

__திரு. கே. டி. கே. தங்கமணி :__ கான்சாபுரத்தை ஒட்டியிருக்கும் இந்தக் காடு அமைச்சர் சொல்வதுபோல் யானைகள் நிறைந்த இடமில்லை. பல ஆண்டுக்காலமாக விவசாயம் பண்ணிக்கொண்டு வந்திருக்கிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் விவசாயம் செய்கிறவர்களுக்கு நிலம் பிரித்துக் கொடுக்கப்படும் என்று சமீபத்தில் சொன்னார்கள். அப்படிப்பட்ட திட்டம் உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

__மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :__ 50,000 எக்கர் கொடுப்பதாக இருக்கிறது. ஸ்ரீவில்லிபுத்தூர் புல்வெளிக்காடு பற்றி பரிசீலிக்க வேண்டிய ஒன்று.

__திருமதி த. ந. அனந்தநாயகி :__ சார், இப்படிப்பட்ட காடுகளையெல்லாம் பிறவகையில் உபயோகித்துவிட்டால், ஆடு, மாடுகளுக்கு மேய்ச்சல் நிலம் இல்லாமல் போவது அரசாங்கத்திற்குத் தெரியுமா? அவைகளால் மகஜர் கொடுக்க முடியாது என்பதால் கவனிக்காமல் இருக்கிறார்களா?

__மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:__ அம்மையார் அவர்களுடைய கவனத்திற்கு நன்றி.

__திரு. கே. ஏ. வகாப் :__ தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட இடங்களை மக்களுக்கு விவசாய இடங்களாகவும், வீடுகட்ட இடங்களாகவும் கொடுத்துவிடுவதால், காட்டு வளம் அழிந்து, நமக்கு வரவேண்டும் என்கிற மழை வராததால், முன்பிருந்த அரசாங்கம் செய்ததுபோல், வனமகோற்சவம் நடத்த அரசு ஏற்பாடு செய்யுமா?

__மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :__ விவசாயத்திற்குப் பயன்படக்கூடிய நிலங்களைப் பிரித்துக் கொடுத்தாலும், மலைப் பகுதிகளில் நிலங்களை மீண்டும் அடர்த்தியான காடுகளாக வளர்க்கத் திட்டம் இருக்கிறது.

__திரு. எம். சுரேந்திரன் :__ சார், காட்டிலாகாவின் கணக்கில் இருக்கின்ற எல்லா நிலங்களும் காட்டுப் பகுதி இல்லை என்றும், காட்டுப் பகுதியான இடத்தில் காடுவளர்க்காமல் இருப்பதையும், விவசாயத்திற்கு லாயக்கான இடத்தை பாரஸ்டில் சேர்க்கப் பட்டிருப்பதையும் ஆராய்ந்து, காட்டு வளத்தை அபிவிருத்தி செய்யும் தகுதி உள்ள நிலங்கள், விவசாயத்திற்குத் தகுதி உள்ள நிலங்கள் என்று ஒரு சர்வே செய்து வரையறுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.



__மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :__ அப்படிப்பட்ட ஆலோசனையின்பேரில்தான், 50,000 ஏக்கர் கொடுக்கக்கூடிய முடிவு எடுத்திருக்கிறார்கள்.

__திரு. க. சுப்பு :__ பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீவில்லிபுத்தூரில் வழங்கப்படவிருக்கும் காட்டுப் பகுதி எது என்பதை அறிவிக்க முடியுமா ?

__மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :__ தனிக் கேள்வி தேவை.

__திரு. கே. டி. கே. தங்கமணி :__ இந்தப் புல்வெளிப் பிரதேசத்தில் பல ஆண்டுகளாக விவசாயம் செய்தவர்கள் காட்டிலாகாவால் வெளியேற்றம் செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் சிறைத் தண்டனையும் அனுபவித்திருக்கிறார்கள். அங்கே விவசாயம் செய்கிறவர்கள் வீடுகளும் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். அவையெல்லாம் அவர்களுக்கு நிரந்தரம் செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

__மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:__ நான் ஏற்கனவே சொன்னது போல், புல்வெளிக்காடு என்பது மரங்கள் அடர்ந்த காட்டுப் பிரதேசம். மாண்புமிகு கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் வேறு எதையோ புல்வெளிக்காடு என்று நினைத்துச் சொல்கிறார் போலும். நான் சொல்லுமிடத்தில் விவசாயம் செய்யவில்லை என்றும், அடர்த்தியான மரங்கள் இருக்கின்றன என்றும் என்னிடம் குறிப்பு இருக்கிறது. வேறு நிலத்தை கருத்தில் கொண்டு சொல்கிறார்கள் என்று நினைக்கிறேன். விவரம் எழுதினால், அதைப் பற்றிப் பார்க்கலாம்.

__மாண்புமிகு பேரவைத் தலைவர் :__ வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்).

## (2) ஒத்திவைப்புத் தீர்மானம்

**ஸ்டாண்டர்ட் மோட்டார் கம்பெனி நிர்வாகத்தினர் தொழிலாளர்களை வேலைக்கு எடுத்துக்கொள்ள மறுப்பதும் தொழிலாளர் நேரடி நடவடிக்கை எடுக்க உத்தேசித்திருப்பதும் குறித்து.**

Mr. SPEAKER: **Under** Rule 42 of the Tamil Nadu Legislative Assembly Rules, the hon. Member, Thiru K. T. K. Thangamani has given notice of the following adjournment motion, namely :—

> " Serious situation arising out of the continued refusal of the management of the Standard Motor Company to take back more than 1,000 workers and the consequent threat to go on direct action from 1st July 1971."

[Mr. Speaker]

The hon. Member, Thiru J. James, has also given notice of the following motion under Rule 42 of the Tamil Nadu Legislative Assembly Rules for the adjournment of the House, to discuss a matter of urgent public importance, namely :

> "That the decision taken by the workers of the Standard Motor Factory in Madras to launch direct action from 1st July 1971 as the management has failed to implement the terms of agreement entered into between the management and the workers on 15th February 1971 in the presence of the Labour Minister. Government of Tamil Nadu."

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், சென்னைக்கு அருகாமையிலுள்ள ஸ்டாண்டர்ட் மோட்டார் கம்பெனி இந்தியாவில் இருக்கக் கூடிய மூன்று பெரிய மோட்டார் கம்பெனிகளில் ஒன்று. அது தனியார் துறையில் நடந்து வருகிறது என்றும், சென்ற ஆண்டு, மே மாதத்தில், அதை மூடிவிட்டார்கள் என்றும், உடனடியாக மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களும், மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்களும் தலையிட்டு, சில ஒப்பந்தங்களை ஏற்பாடு செய்தார்கள் என்பதும், நாம் எல்லோரும் அறிந்த விஷயங்கள். 2,000-க்கும் அதிகமாக தொழிலாளர்கள் இருக்கக்கூடிய அந்தத் தொழிற்சாலையை அரசாங்கம் நேரிடையாக கண்காணித்துப் பொறுப்பு ஏற்கக் கூடிய நிலை இருக்கிறது என்று பலரும் சொல்லுகிறார்கள். ஏற்பட்ட ஒப்பந்தத்தின் பேரில், இப்பொழுது ஒரு 600 தொழிலாளிகளுக்கு உட்பட்டே வேலைக்கு எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இன்னும் 1,000-க்கும் அதிகமான தொழிலாளிகள் வேலைக்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை. இந்த நிலையில்தான் தொடர்ந்து அவர்கள் பேச்சுவார்த்தைகள் நடத்தியும் பயன் இல்லை என்கிற காரணத்தால், அவர்களுடைய சங்கத்தின் சட்ட ஆலோசகர், ராமசாமி அவர்கள், வரும் ஒன்றும் தேதி, தொழிற்சாலையின் அலுவலகத்தின் முன்னால் உண்ணாவிரதம் இருப்பதாகச் சொல்லுகிறார்கள்.

தொழிலாளர்கள் சம்பந்தப்பட்டவரையில், எவ்வளவு பொறுமையாக இருந்து அரசு சொல்வதையெல்லாம் கேட்கமுடியுமோ அந்த அளவில் செய்திருக்கிறார்கள். தமிழ்நாட்டு மக்களுக்கு
மு.ப. 9.30. பெருமை கொடுக்கும் அருமையான இந்தத் தொழிற்சாலை தனியாரிடம் இருந்து கொண்டு, அரசியல் சட்டத்திற்கு விரோதமாகவும், தொழில் தகராறு சட்டத்திற்கு விரோதமாகவும் நடந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே அரசு இதுசம்பந்தமாக ஒரு தீவிரமான நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியம் என்ற ஒரு எண்ணத்தினால்தான் இந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்தை நான் கொண்டு வந்திருக்கிறேன். ஆகவே, அரசினுடைய உறுதியான நடவடிக்கை இருந்தால்தான் அந்தத் தொழிற்சாலை தொடர்ந்து நடக்க முடியும். இவ்வளவு நாளாக பொறுமையாக இருந்த ஆயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கும் நல்வாழ்வு கிடைக்கும்.



[திரு. கே. டி. கே. தங்கமணி]

அவர்கள் மனம் நொந்து நேரடி நடவடிக்கையில் இறங்குவதைத் தவிர்க்க உதவியாக இருக்கும் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். வி. நடராசன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, பெருங்களத்தூரில் உள்ள ஸ்டாண்டர்டு மோட்டார் தொழிற்சாலை பொருளாதார நெருக்கடியின் காரணமாக 22—5—1970 அன்று மூடப்பட்டது.

பின்னர் பல்வேறு கட்டங்களில் அரசுக்கும் தொழிற் சங்கங்களின் நிர்வாகிகளுக்கும், தொழில் நிறுவன நிர்வாகிகளுக்கும் இடையே நடைபெற்ற பேச்சு வார்த்தைகளின் விளைவாக 15—2—1971 அன்று தொழிலாளர் நலத்துறை அமைச்சர் முன்னிலையில் மேனேஜ்மெண்டாருக்கும் தொழிற்சங்க நிர்வாகிகளுக்குமிடையே ஒரு சமரச முடிவு ஏற்பட்டது. அந்த முடிவின் அடிப்படையில் லேபர் கமிஷனரின் முன்னிலையில் இரு தொழிற் சங்கங்களின் நிர்வாகிகளும் மேனேஜ்மெண்டாரும் கையெழுத்திட்டனர். 22—2—1971 அன்று தொழிற்சாலையை மீண்டும் திறப்பது என்ற முடிவும் ஏற்பட்டு அதுபோலவே திறக்கப்பட்டது.

ஏறத்தாழ பத்து மாதங்களாக தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு இல்லாத காரணத்தினால் அவர்களது நெருக்கடியை ஓரளவுக்கு தணிப்பதற்காக மாண்புமிகு முதல்வர் தமது உதவி நிதியிலிருந்து தொழிலாளர் ஒவ்வொருவருக்கும் ரூபாய் 50 வழங்குமாறு செய்தார்.

வேலைக்கு எடுத்துக் கொள்ளப்படும் தொழிலாளர் ஒவ்வொருவருக்கும் வேலைக்குச் சேர்ந்த 10 நாளைக்குள்ளாக ரூ. 200 அட்வான்ஸ் அடிப்படையில் தரவேண்டுமென்ற கோரிக்கையை மானேஜ்மெண்டாரும் ஏற்றுக்கொண்டனர்.

ஒப்பந்தம் ஏற்பட்ட நாளிலிருந்து நான்கு மாதங்களுக்குள்ளாக எல்லாத் தொழிலாளர்களையும் வேலைக்குத் திரும்ப எடுத்துக் கொள்வது என்பது ஒப்பந்த நிபந்தனைகளில் ஒன்றாகும். அந்த நான்கு மாதத் தவணை ஜூன் 22-ஆம் தேதியோடு முடிவடைகிறது. ஆனால் ஜூன் 23-ஆம் தேதிவரையில் 613 தொழிலாளர்களுக்கும் 20 அதிகாரிகளுக்கும் வேலை வாய்ப்பு கிடைத்திருக்கிறது.

ஐ.டீ.பி. மூலமாக தாம் கேட்ட நிதி உதவி இதுவரையில் கிடைக்காததாலே எல்லாத் தொழிலாளர்களையும் வேலைக்கு அமர்த்த முடியாத நிலை ஏற்பட்டுவிட்டதென்ற நிலையை மானேஜ்மெண்டார் தெரிவித்தனர்.

வேலைக்கு அமர்த்தப்பட்ட 618 பேர்களில் சீனியாரிடிப்படி அமர்த்தவில்லை என்று தொழிற்சங்க நிர்வாகிகள் என்னிடம் சொன்ன குற்றச்சாட்டை மேனேஜ்மெண்டாரிடம் எடுத்துக் கூறி இதுபோன்ற குறைபாடுகளை உடனே தீர்க்க வேண்டுமென்றும், ஒப்பந்தப்படி மேனேஜ்மெண்டார் நடந்துகொள்ளுமாறு வலியுறுத்திக் கூறினேன். சீனியாரிடி முறைப்படி வேலை தருவதில்

ஏற்பட்ட ஒரு சில குறைபாடுகளை மானேஜ்மெண்டார் திருத்திக் கொண்டதாகவும் தெரிய வந்தது.

இதுவரை வேலை வாய்ப்பு பெற்றவர்களைத் தவிர மீதமுள்ள தொழிலாளர்களும் வேலை வாய்ப்பு பெறுவதற்கான தங்களது முயற்சிக்கு மாநில அரசு துணை புரிய வேண்டுமென்று மானேஜ்மெண்டார் கேட்டுள்ளனர். ஐ.டி.பி.ஐ. (I.D.B.I.) மூலம் கடன் பெறவும் மாநில அரசு தனது நிதி நிறுவனங்களின் மூலம் நிதி அளிக்கவும், நிர்வாகத்தோடு அரசு பேச்சு வார்த்தை நடத்தி வருகின்றது. அதற்கான முயற்சிகளிலும் தொடர்ந்து அரசு ஈடுபட்டு வருகிறது. ஆகவே, எல்லாத் தொழிலாளர்களுக்கும் வேலை கிடைப்பதற்கான வாய்ப்புகள் விரைவில் நிறைவேறும் என்ற நம்பிக்கையிருப்பதால் இந்நிலையில் மேலும் விவாதிப்பதற்குக் காரணம் இல்லை என்ற என் கருத்தைக் கூறி ஒத்திவைப்புத் தீர்மானத்தைத் தள்ளுபடி செய்யுமாறு தலைவர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்குப் பிறகு இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அவசியம் இல்லை என்று கருதுகிறேன். ஆகவே இத்தீர்மானத்திற்கு அனுமதி மறுக்கிறேன்.

## (3) கவன ஈர்ப்பு.

**(அ) கோவை மாவட்டத்தில் மூடப்பட்டுள்ள ஜவுளி ஆலைகளை திறக்க மாநில அரசை வற்புறுத்த பஞ்சாலைத் தொழிலாளர் நடத்த இருக்கும் மறியல் குறித்து.**

<u>திரு. க. சுப்பு</u> : பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்தில் மூடப்பட்டுள்ள ஜவுளி ஆலைகளை மீண்டும் திறக்குமாறு மாநில அரசாங்கத்தை வற்புறுத்த மாவட்ட ஆட்சியாளர் அலுவலகத்தின் முன்பு இம்மாதம் 21-ம் தேதியிலிருந்து ஆர்ப்பாட்டமும், ஜூலை 1-ம் தேதி முதல் நாள்தோறும் மறியலும் நடத்துவதென பஞ்சாலைத் தொழிலாளர் சங்கத்தின் கூட்டுச் செயற்குழு முடிவு செய்திருப்பதைத் தொடர்ந்து அரசாங்கம் மேற்கொள்ள வேண்டிய உடனடி நடவடிக்கை குறித்த அவசரப் பொது முக்கியமான காரியத்தை சட்டப்பேரவை விதி 41-இன் கீழ் நான் மாண்புமிகு தொழிலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டுவருகிறேன்.

<u>மாண்புமிகு திரு. செ. மாதவன்</u> : பேரவைத் தலைவரவர்களே, பஞ்சாலைத் தொழில் நெருக்கடி 1965-ம் ஆண்டின் பிற்பகுதியில் தொடங்கியது. இதற்கு முக்கிய காரணம் பருத்தி விலை உயர்வு, உற்பத்தித்திறன் குறைவு, போதிய முதலீடு செய்யாமை, கடுமையான நிதிப் பற்றுக்குறை நிலைமை ஆகியவை.

1967-68-ல் சிறப்புக்குழுக்களின் பரிவுரைகளின் மேல், உத்தரவாத உதவியளிக்க அரசு முன்வந்தது. ஆனால் வங்கிகள் முன்பணம்





அளிக்க விரும்பவில்லை. எனவே அதனால் பயன் ஏதும் கிட்டவில்லை. தொழிலாளர் வருங்கால வைப்புநிதி, தொழிலாளர் அரசுக் காப்புறுதித் திட்டம் ஆகியவற்றுக்குக் கொடுக்கவேண்டிய தொகைகள், விற்பனைவரி நிலுவைகள் முதலியவற்றை வசூல் செய்வதை ஒத்திப் போடுதல் போன்ற ஏனைய நடவடிக்கைகளையும் அரசு மேற்கொண்டது. நொடித்துப்போன ஆலைகளை மீண்டும் தொடங்க அரசு இதுவரை ரூ. 222 லட்சம் உத்தரவாத உதவி அளிக்க முன்வந்தது. பன்னிரண்டு ஆலைகள் மொத்தம் ரூபாய் 119.41 லட்சம் அளவிற்கு அந்த உத்தரவாத உதவியைப் பெற்றுள்ளன.

இவ்வரசின் திட்டமிட்ட முயற்சிகளின் விளைவாகவும் புதிதாக அமைக்கப்பட்ட பஞ்சாலைக்கழகத்தின் முயற்சிகளின் விளைவாலும், 1969-ம் ஆண்டில் இம்மாநிலத்திலுள்ள நொடிந்த பஞ்சாலைகள் சில திறக்கப்பட்டன. பஞ்சாலைத் தொழிலும் ஒரு பகுதி புத்துயிர் பெற்றது. இம்மாநிலத்தில் உள்ள 169 ஆலைகளில் 1969-ம் ஆண்டில் 26 ஆலைகள் மூடிக்கிடந்தன. சில ஆலைகள் அரசின் உதவி கொண்டு தனியார் நிர்வாகங்களாலேயே திறக்கப்பட்டன. பஞ்சாலைக் கழகம், கோயம்புத்தூரிலுள்ள கீழ்க்காணும் 4 ஆலைகளையும் மேற்கொண்டு அவற்றை மீண்டும் தொடங்கியது.

1. ஓம் பராசக்தி ஆலை.
2. கம்போடியா ஆலை.
3. கிருஷ்ணவேணி டெக்ஸ்டைல்ஸ்.
4. ஸ்ரீ ரங்கவிலாஸ் நூற்பு நெசவுக்கும் ஆலை.

பஞ்சாலைக்கழகம் கோயம்புத்தூர் முருகன் ஆலையையும் மேற்கொள்ளும். 30—4—1971 அன்று, 15 ஆலைகள் மட்டுமே மூடிக்கிடந்தன.

கோயம்புத்தூர் மாவட்டத்தைச் சேர்ந்த கீழ்க்கண்ட ஆலைகள் நிதி நெருக்கடி காரணமாகத் தற்போது செயல்படாமல் உள்ளன.

1. பாலமலை ரங்கநாதர் ஆலை, கோயம்புத்தூர்.
2. ராதிகா ஆலை, கோயம்புத்தூர்.
3. பங்கஜா ஆலை, கோயம்புத்தூர்.
4. அவினாசி சுழிவுப்பஞ்சு ஆலை, கோயம்புத்தூர்.
5. வாசுதேவா இண்டஸ்ட்ரீஸ், கோயம்புத்தூர்.
6. கோயம்புத்தூர் நூற்பு நெசவாலை, கோயம்புத்தூர்.

இந்த ஆறு ஆலைகளில், பாலமலை ரங்கநாதர் ஆலை, ராதிகா ஆலை ஆகியவற்றின் விவகாரங்களை இந்திய அரசால் 1968-ம் ஆண்டு தொழில்கள் (வளர்ச்சியும் முறைப்படுத்தலும்) சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட குழு ஆய்வு செய்தது. பாலமலை ரங்கநாதர் ஆலை தனித்தியங்கும் நிலையில் இல்லாததால் அதனைக் கலைத்துவிட வேண்டுமென்று இக்குழு பரிந்துரைத்துள்ளது. ராதிகா ஆலையை அண்மையில் பம்பாயைச் சேர்ந்த தனிப்பட்ட நபர் ஒருவர்

வாங்கியுள்ளார். அந்த ஆலை விரைவில் தொடங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பங்கஜா ஆலை குறித்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த ஆலையை அதன் தொழிலாளர்களே குத்தகைக்கு ஏற்று நடத்தும் செயற் குறிப்பு, தமிழ்நாடு பஞ்சாலைக் கழகத்தினுடன் கலந்தாலோசிக்கப்பட்டு பரிசீலனையின்கீழ் இருந்து வருகிறது. அவிநாசி கழிவுப் பஞ்சு நூற்பு ஆலையில் 30 தொழிலாளர்களே வேலையிலமர்த்தப்பட்டுள்ளனர். அந்த ஆலை நிதி உதவி எதையும் கேட்கவில்லை. வாசுதேவா இண்டஸ்ட்ரீஸைப் பொறுத்தவரை அதன் கடன் பொறுப்புகள் மிக அதிகமாக உள்ளதால் அரசு அதற்கு உத்தரவாத உதவி அளிக்கத் தேவையில்லை என்று மூத்தாப்புக் குழு பரிந்துரைத்துள்ளது. கோயம்புத்தூர் நூற்பு நெசவாலை குறித்து கலைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. அரசைச் சேர்ந்த கலைப்பு அதிகாரி இந்த ஆலைக்குப் புத்துயிரளிக்க நடவடிக்கை எடுத்து வருகிறார்.

தனித்தியங்கும் நிலையிலுள்ள எல்லா ஆலைகளையும் உத்தரவாத உதவி மூலம் மீண்டும் திறக்க, இவ்வரசு உரிய நடவடிக்கைகள் அனைத்தையும் மேற்கொள்ளும். உண்மையில், ஆதாயமற்ற ஆலைகளுக்கும், நொடித்த ஆலைகளுக்கும் நூல்களின் மீதான விற்பனை வரியில் 50 சதவீதம் வசூலிக்கப்படாமல் அத்தொகை 5 ஆண்டுகளுக்கு வட்டியில்லாக் கடனாக அனுமதிக்கப்பட்டது. பஞ்சாலைகள் அனைத்திற்கும் மின்சாரக்கட்டணம் 40 சதவீதத்திலிருந்து 30 சதவீதமாகக் குறைக்கப்பட்டது. இவ்வரசு மேற்கொண்ட முயற்சிகளின் விளைவாக, மத்திய அரசு நொடிந்த ஆலைகள் தம் உற்பத்தித் திறனை மேம்படுத்திக்கொள்வதற்கு இயலும் வகையில் அவற்றிற்கு நெட்டிழைப் பருத்தி இறக்குமதி செய்து ஒதுக்கீடு செய்ய முடிவு செய்துள்ளது. பஞ்சாலைக் கழகம் முடிந்த அளவுக்கு, தனித்தியங்கும் நிலையிலுள்ள ஆலைகள் அனைத்தையும் மேற்கொள்ளும். ஏற்கனவே, 4 ஆலைகளை மேற்கொண்டதன் மூலம் இக்கழகம் சுமார் 3,700 தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு அளித்துள்ளது. கோயம்புத்தூர் முருகன் ஆலையை மேற்கொள்ளுவதன் மூலம் இக் கழகம் கூடுதலாக 958 தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பளிக்கும். இவ்வாறு மூடப்பட்டுக்கிடக்கும் எத்தனை ஆலைகளை மீண்டும் திறக்க இயலுமோ அத்தனை ஆலைகளையும் மீண்டும் திறக்க இவ்வரசு ஆர்வமுடனும் விரைந்தும் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது என்பது புலனாகும்.

**ஆ) கோவையில் சோமசுந்திரம், காளீஸ்வரா, பங்கஜா போன்ற ஆலைகள் மூடப்பட்டிருப்பதும், தொழிலாளரின் அல்லலும்**

திரு. கே. என். குமாரசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவையின் 41-வது விதியின் கீழ்.

கோவையில் பல மாதங்களாக சோமசுந்தரா, காளீஸ்வரா, பங்கஜா போன்ற மில்கள் மூடப்பட்டிருப்பதால், பல்லாயிரக்



கணக்கான தொழிலாளர் குடும்பங்கள் வேலையிழந்து துன்பத்திற்குட்பட்டுள்ளதைப்பற்றிய அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு தொழிலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : பேரவைத் தலைவரவர்களே, இம்மாநிலத்தில் மொத்தம் 169 ஆலைகள் உள்ளன. இவற்றில் 26 ஆலைகள் 1969-ம் ஆண்டு முதல் மூடப்பட்டுள்ளன. சில ஆலைகள் அரசின் உதவியுடன் தனியார் நிர்வாகத்தினரால் தொடங்கப்பட்டன. அரசு இதுவரை ரூ. 222 லட்சத்திற்கு உத்திரவாதம் உதவி அளித்துள்ளது. 12 ஆலைகள் ரூ. 119.41 லட்சம் அளவுக்கு உதவியைப் பயன்படுத்திக்கொண்டன. தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம் கோயம்புத்தூர் மாவட்டத்தில் ஐந்து ஆலைகளை மேற்கொண்டுள்ளது. 30—4—1971 அன்றுள்ள நிலவரப்படி 15 ஆலைகள் மட்டுமே இன்னும் மூடப்பட்டுள்ளன. இதுநாள் வரை மூடப்பட்டிருக்கும் ஆலைகள் பெரும்பாலானவை கலைக்கப்படும் நிலையில் அல்லது நிலையாக மூடி விடப்படும் நிலையிலுள்ளன.

கோயம்புத்தூரிலுள்ள சோமசுந்தரம் ஆலை ஏறக்குறைய 1,346 தொழிலாளர்களுக்கு வேலையளிக்கிறது. இவ்வாலை கதவடைப்பு காரணமாக 1—5—1971 முதல் மூடப்பட்டிருக்கிறது. இவ்வாலையின் நிதி இடர்ப்பாடுகளைச் சரிக்கட்டவும் இதற்கு மீண்டும் புத்துயிர் அளிக்கவும் வேண்டி இந்த ஆலைக்கு ரூ. 25 லட்சம் உத்தரவாதம் உதவி அளிக்கப்பட்டது. ஆனால் அரசு உத்தரவாதம் அளித்தும் கூட இவ்வாலைக்குக் கடனுதவி செய்ய எந்த வங்கியும் முன்வரவில்லை. இவ்வாலையை மேற்கொள்ள இயலுமா என்பது குறித்துத் தமிழ்நாடு பஞ்சாலைக்கழகம் இந்த ஆலையின் அலுவல்கள் பற்றி தொடக்க ஆய்வு செய்து வருகிறது.

காளீஸ்வரா ஆலை சுமார் 1584 தொழிலாளர்களுக்கு வேலையளிக்கிறது. இவ்வாலை 27—5—1971 முதல் மூடப்பட்டு இருக்கிறது. காளீஸ்வரா ஆலைக்கும் ரூ 25 லட்சம் உத்தரவாத உதவி அளிக்கப்பட்டது. இந்த ஆலையும் எந்த வங்கியிடமிருந்தும் உதவியைப் பயன்படுத்திக்கொள்ள இயலவில்லை. இவ்வாலையின் அலுவல்கள் குறித்து ஆய்வு செய்த தொழில் வளர்ச்சி—முறைப்படுத்துதல் குழுவும் கூடுதலாக ரூ. 25 லட்சம் உத்தரவாதம் அளித்தல் குறித்து அல்லது அதற்கு இவ்வாலையை சோமசுந்தரம் ஆலையுடன் மாறுக இணைப்பது குறித்து செயற்குறிப்பு ஒன்றை அனுப்பியது. இச்செயற்குறிப்பு தமிழ்நாடு பஞ்சாலைக்கழகத்துடனும் கைத்தறி ஆலை இயக்குநருடனும் கலந்தாலோசிக்கப் பரிசீலிக்கப்பட்டு வருகிறது

கோயம்புத்தூரில் சுமார் 361 தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு அளித்து வரும் பங்கஜா ஆலை நிதி இடர்பாடுகள் காரணமாக 12—4—1969 முதல் மூடப்பட்டு இருக்கிறது. இவ்வாலைக்கு

ரூ. 18 லட்சம் உத்தரவாத உதவி அளிக்கப்பட்டது. இந்த ஆலை இவ்வுதவியைப் பயன்படுத்திக்கொண்டு சிண்டிகேட் வங்கியிடமிருந்து கடன் பெற்றது. இவ்வாலை கலைக்கப்படும் நிலையில் உள்ளது. இவ்வாலையை குத்தகைக்கு எடுத்து நடத்த வேண்டுமென்ற இவ்வாலைத் தொழிலாளர்களின் செயற்குறிப்பு குறித்துத் தமிழ்நாடு பஞ்சாலைக் கழகத்துடன் கலந்தாலோசித்துப் பரிசீலிக்கப்பட்டு வருகிறது. எனவே, இவ்வாலைகளுக்கு விரைவில் புத்துயிர் அளித்து அதன் மூலம் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க அரசு முயற்சி எடுத்து வருகிறது என்பதை இதிலிருந்து அறியலாம்.

திரு. கே. என். குமாரசாமி : தலைவர் அவர்களே, இந்த ஆலைகளில் பணிபுரிகின்ற தொழிலாளர்கள் பல மாதங்களாக, நகர்ப்புறத்தில் குடியிருப்பதன் காரணமாக அவர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்காத காரணத்தினால் மிகுந்த கஷ்டத்திற்குள்ளாகியிருக்கிறார்கள். ஆகவே, அவர்களுடைய கஷ்டத்தைப் போக்குவதற்காக அரசாங்கமே அந்த ஆலைகளை எடுத்து நடத்துவதற்காகப் பரிசீலனை செய்து, தமிழ்நாடு கார்ப்பரேஷனோடு சேர்ந்து கலந்து, மத்திய கார்ப்பரேஷனோடு கலந்துபேசி மத்திய அரசாங்கத்திடமிருந்து நிதி உதவி பெற்றோ அல்லது பாங்குகளின் மூலமாக நிதி பெற்றோ அந்த ஆலைகளை தொழிலாளர்கள் நடத்துவதற்கான வாய்ப்பை உருவாக்க இந்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, எந்தெந்த ஆலைகளை அரசு எடுத்து நடத்தினால் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும், அதேசமயத்தில் அரசினுடைய பணத்திற்கு இழப்பு இல்லாமல் இருக்கும் என்று தோன்றுகிறதோ அந்த ஆலைகளை அரசு எடுத்து நடத்துவதற்கு வேண்டிய முயற்சிகளைச் செய்யும்.

## (4) அறிவிப்பு

## மதுரைப் பல்கலைக் கழக ஆட்சிக் குழுவிற்கு தேர்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மதுரைப் பல்கலைக் கழக ஆட்சிக் குழுவிற்கு (Madurai University Senate) கீழ்க்கண்ட மூவருடைய பெயர்கள் முறையாக நியமனம் செய்யப்

1. திரு. வீ. மலைக்கண்ணன்
2. திரு. கா. மு. கதிரவன்
3. திரு. சொ. காவேரிமணியம்

முறைப்படி நியமனம் செய்யப்பட்டுள்ள வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப்பட வேண்டிய வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு ஒத்திருப்பதால், அதாவது, மூன்று என்பதால், இம் மூவரும் மதுரைப் பல்கலைக் கழக ஆட்சிக் குழுவிற்கு முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள் என நான் அறிவிக்கிறேன்.





## (5) 1971-72-ம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

### (அ) நிதிக் கோரிக்கை எண் 20—தொழில்கள்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :

"நிதிக் கோரிக்கை எண் 20—தொழில்கள் * என்ற தலைப்பின் கீழ் ரூ. 4,39,88,300-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

THIRU R. PONNAPPA NADAR : Mr. Speaker, Sir, to discuss policy, I move the cut motion standing in my name :

"That the allotment of Rs. 4,39,88,300 under Demand No. 20—Industries be reduced by Rs. 100."

THIRU K. T. K. THANGAMANI : Sir, to discuss about the need to take over by the Textile Corporation, the closed Mills in Coimbatore, Madurai, Ramanathapuram, Tirunelveli and North Arcot districts, I move the cut motion standing in my name :

"That the allotment of Rs. 4,39,88,300 under Demand No 20—Industries be reduced by Rs. 100."

திரு. எம். சுரேந்திரன் : தலைவர் அவர்களே, மூடிக்கிடக்கும் தொழிற்சாலைகளைத் திறக்காமலிருப்பது குறித்து விவாதிக்க :

"நிதிக் கோரிக்கை எண் 20—தொழில்கள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 4,39,88,300ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

DR. H. V. HANDE : Sir, to discuss the need to establish larger number of small scale industries in the rural area and to create greater number of employment opportunities, I move the following cut motion standing in my name :

"That the allotment of Rs. 4,39,88,300 under Demand No. 20—Industries be reduced by Rs. 100."

### (ஆ) நிதிக் கோரிக்கை எண் 40—தொழில் வளர்ச்சிக்கான மூலதனச் செலவு.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:

"நிதிக் கோரிக்கை எண் 40—தொழில் வளர்ச்சிக்கான மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 15,82,73,900-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

DR. H. V. HANDE : Sir, to discuss policy, I move the cut motion standing in my name :

* ..........ம் பக்கங்களில் ஆய்வுரை இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது

" That the allotment of Rs. 15,82,73,900 under Demand No. 40—Capital Outlay on Industrial Development be reduced by Rs. 100. "

THIRU J. JAMES : Sir, to discuss policy, I move the following **cut motion :**

" That the allotment of Rs. 15,82,73,900 under Demand No. 40—Capital Outlay on Industrial Development be reduced by Rs. 100. "

**திரு. கே. டி. கே. தங்கமணி :** தலைவர் அவர்களே, அதிக வறட்சிப் பகுதியான கோவில்பட்டி வட்டாரத்தில் கிராமப் பகுதிகளிலுள்ள வேலையில்லாதவர்களுக்கு வேலை வாய்ப்பளிக்க தொழில்கள் தொடங்க வேண்டுமென்று விவாதிக்க :

" நிதிக் கோரிக்கை எண் 40—தொழில் வளர்ச்சிக்கான மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூபாய் 15,82,73,900-ல் ரூ. 100 குறைக்க வேண்டும் "
என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. ஏ. சுப்பிரமணியன் :** தலைவர் அவர்களே, பஞ்சாலை கார்ப்பரேஷனுக்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்பது பற்றி விவாதிக்க :

" நிதிக் கோரிக்கை எண் 40—தொழில் வளர்ச்சிக்கான மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 15,82,73,900-ல் ரூ. 100 குறைக்க வேண்டும் "
என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

*THIRU K. M. SUBRAMANIAM : Mr. Speaker, Sir, before going into this question, I would like the Hon. Chief Minister to be more charitable to the Opposition. Yesterday in his speech he said the Opposition is opposing sometimes for opposition sake. He also mentioned that if they—meaning opposition members—searched their conscience, they would find that they are speaking not because there is substance in it. But for sake of opposition. I can assure the Hon. Chief Minister that people like me are here to contribute to the success of Government wherever Government does the right thing. If they do the right thing, we are here to support them; as Opposition party we have to point out whenever there are certain things that can be improved; when they should be objected to, we object. In this democracy of course conscience plays a part inside the party. But once the party takes a decision, only a few exceptions are there who can talk according to their conscience.

Coming to industries in Tamil Nadu, I have to point out certain things. We found that it was fast developing and it had so developed that Madras occupied the third place in the whole of





India a few years back. But now there has been a setback, according to the figures available. Of course I know that the Government of Tamil Nadu is doing its best. It is well known that unemployment is increasing. In many cases, it is under-employment; more people are coming for employment. All these things require a very careful examination of policy. We have talked about closure of Mills. There are Mills closed and Mills likely to close. Are the Government serious about it? What is the reason for this failure of industries? The name of the State has gone down. In olden days it used to be said in North India, when I used to travel frequently to sell cloth, some 30 years ago, that Madras was famous for three things, Balaji temple meaning Tirupathi, Iddli and Madras cloth. Madras cloth was so popular. Now we have had a set back. That is the first thing we have to analyse. We are speaking not for Opposition sake but I am pointing out the real facts. Our cost of management (not only cost of labour) has gone up because of various factors that have come into management. If you analyse the reasons for closure of mills realistically, you may discover, that the expenses of these industries had gone up considerably. Certain industries of Coimbatore are having guest houses in Madras, Ooty and some have it in Bombay. But with whose money? Public funds. To-day there is no private industry because any big industry gets loan from LIC, Development Corporation and from Government. All these industries are now almost 50 to 60 per cent financed by public loan and so much so you do not have a private industry. Either it is public industry or joint industry by whatever name you may call it. In these circumstances it is the essential duty of the Government to find out the reasons for the closure of these mills or the closure of any industry. My friend Thiru K. T. K. Thangamani spoke about the Standard Motor Factory. Is it not a pity, Sir, when the Government are thinking of giving licence to new factories for the manufacture of cars, smaller or medium size cars and also big cars, according to Thiru C. Subramaniam who mentioned this fact in one of his speeches. that this factory should be closed. It is a factory that has been working for years and that has been producing one of the best quality care in Madras. Should it be closed because of something that cannot be solved by the management or Government, or labour, In such cases, I am sure, the only remedy for the Government is to come forward and take up the industry because we have the industry and we want to save the workers. Licences are being given for other factories. This is a small car and a useful car. In so far as this industry is concerned, Tamil Nadu can be proud of it. In such circumstances, I think if the management fails, if the workers fail, whatever be the reason, the Government have a right to step in and take it up particularly when the Central Government is giving licences for new car industries. They must ask for sufficient funds from Central Government. It is not for State autonomy that I am pressing. it is for joint consultation. We must try to solve a big problem like this jointly.

[Thiru K. M. Subramaniam] [6th June 1971

Coming again to various other industries, corruption and other things are not confined to public industries only. There are private industries which are not thriving because of many faults including corruption. We find particularly in industries, there are huge equity shares and where the partners are sleeping shareholders, there is nobody control except the management. The managements are very highly paid. It is not suitable to Indian conditions. Sir, I will just refer to the history of salaries to managements. When India got freedom, Indian executives or Indian people employed in these industries wanted their salaries to be upgraded to the level of European or Western executives. Naturally the Government upgraded their salaries. These Western people came to India to serve as executives because they got a higher and better pay than what they could get in their countries. Having equalised the salaries of almost all the Indian executives in the Indian firms, they get more than what their counterparts get either in Manchester or America. That is the state to which we have come now. Fortunately for us somebody may remind me that I am not a member of the Rajya Sabha. Mr. Chavan has put a ceiling on salaries at Rs. 5,000/- and perquisites at Rs. 1,000. For the sake of industries in Tamil Nadu I welcome it. . . .

MR. SPEAKER : The hon. Member may finsh his speech quickly.

THIRU K. M. SUBRAMANIAM : I want 10 more minutes, Sir.

MR. SPEAKER : I have to cut short some of the speakers from your party, if I have to give you 10 minutes more. I will give you few more minutes.

THIRU K. M. SUBRAMANIAM : Then I have to supress all my thoughts. Within the limited time available, I will refer to a few points. Now I come to the handloom industry. Many of the mills producing yarn and supplying to the handloom industry have been closed. Handloom industry is our main stay after agriculture in Tamil Nadu. So far as Tamil Nadu State is concerned, handloom industry has been employing about 20 lakhs of people in 1952. In 1946 the family of a handloom weaver was getting Rs. 45. Today it is only getting about Rs. 90, when all the people working in other industries are getting 4 times or 5 times or even 10 times more than what they were getting in 1947 What steps have the Government taken to increase the earnings on handloom weavers? This is a very important point. (Mr. Speaker sounded the gong) I want your indulgence for three more minutes, Sir.

MR. SPEAKER : I have already given you some time.



1971 ஜூன் 30]

THIRU K. M. SUBRAMANIAM : So far as the handloom industry is concerned, we asked the Central Government to reserve certain items of manufacture for handloom alone. One of the items is dhoti. But what happened today? Dhoti has gone out of fashion. In Northern India, instead of dhoti people are rapidly changing their sartorial fashion to trousers. What happened to dhoties? Dhoti business has gone down. Similarly coloured sarees was one of the items reserved for the handloom industry in Tamil Nadu. Today, Sir, what happened? Under the excuse of modernisation of mills, 48, 54, 60 inches looms are being brought in and they are replacing 36 inches looms. They are able to manufacture wide cloth which is being printed and sold throughout India at the cost of handloom sarees. Have the Government gone into this question and found out the reason? What are the reasons? Several lakhs of people are unemployed and under employed. Why have not the Government investigated into it or undertaken a research? That is the question I am asking. So far as shirtings are concerned, Mr. Speaker, Sir, What is happening now? Many of the people will bear evidence to the fact that cotton is being replaced by terycotton or terylene. Have the manufacturers of cotton goods been trained to manufacture terylene or terycotton? A Polyster factory is going to come in Madras. Then what will happen to the handloom weavers? There are many aspects to be considered. It is the duty of the Government to look into these changes, watch the changes and prepare the workers for it. The Government should see that these changes in manufacture are taught to the people. Mr. Speaker, Sir, are the Government thinking that after 10 years the handloom weavers' children will sit in the pits and weave? In Surat all handloom factories are converted into powerloom factories. But here we are still having handlooms. . .

MR. SPEAKER : Will you support Polyster or oppose it?

THIRU K. M. SUBRAMANIAM : I will neither support Polyster nor oppose it. I want the handloom weavers to know the art of weaving with Polyster. Weavers should be prepared for it. Most of the shirtings are now coming in non-cotton lines. I want the Government to take note of this change. The Government should be watchful about things happening and adjust their policies in such a way as not to create any difficulties for the handloom weavers in future. What steps have Government taken to prevent the manufacture of substitutes for sarees, the manufacture of printed wider cloth which are very much used as sarees.

Is it not our duty to tell the Central Government, Sir, that our handloom weavers are suffering; certain reservations are obsolete and we want fresh reservations, and these reservations are to be made. If that is done, the mills in Coimbatore which are supposed to be the second Ahmedabad or third Manchester have no right to suffer or no right to close down because they are

[Thiru K. M. Subramaniam] [6th June 1971

catering to handloom industry. If it is well managed, well-planned and well-tackled, I do not think there will be any need for Coimbatore Mills to close. I am not offering my services. Please do not misunderstand. But I can prove with great emphasis that we are lacking in Planning, we are lacking in our research.

We have to take care about the unemployed. 17 crores of Indians are unemployed. One-third of the population is unemployed. It is the duty of the Government to find out how to utilise them. They should plan for small scale industries. The industries should not be allowed to die. That is all I can speak now within the limited time available. I thank you Sir, for giving me a few more minutes.

மு.ப. 10.00

*திரு கி. ஜெயராமன்: பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு தொழிலமைச்சர் கொண்டுவந்த மானியக் கோரிக்கைகளை ஆதரித்து ஒருசில கருத்துக்கள் கூற விரும்புகிறேன். அந்தக் கருத்துக்களைக் கூறுவதற்கு முன்னால் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சுப்பிரமணியம் அவர்கள் இங்கே கைத்தறித் துறைக்கு நம்முடைய அரசு ஏதாவது செய்திருக்கிறதா, வெளி மாநிலங்களில் இருந்து ஆடைகள் வருவதைத் தடுத்திருக்கிறதா என்று கேட்டது பற்றி ஒரு கருத்தைக் கூற விரும்புகிறேன். 12,500 விசைத்தறிகளை அவர்கள் காலத்தில் ஏதோ பயந்து கொண்டு விநியோகம் செய்யாமல் இருந்ததை நம்முடைய அரசு தீவிரமாக முதலில் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் அதற்குப் பின்னால் மாஸ்டர் வீவர்களுக்கும் கொடுக்காமல் உண்மையான நெசவாளப் பெருமக்களுக்குக் கொடுக்கும் முறையை மேற்கொண்டு இப்போது வேகமாக விநியோகம் செய்து வருகிறது. அப்படி விநியோகம் செய்வதன் மூலம் துணிகளை நெய்யும்போது வேறு மாநிலத் துணிகளை வாங்காமல் நம்முடைய துணியை வாங்கும் நிலைமை ஏற்படத்தான் போகிறது. 36"-க்கு மேல் இருக்கும் துணிகளை எல்லாம் இங்கே வரவிடக் கூடாது என்று சொன்னார்கள். அதற்கு நம்முடைய அரசு முயற்சி செய்து பருத்தி அல்லாத ஆடைகளை நிறுத்துவதற்கு உரிய முறைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பாக, பஞ்சாலைகள் மூடப்படுகின்றன என்று சொன்னார்கள். அவர்கள் காலத்தில் மூடிய ஆலைகள் மூடியபடியே ஆனால் நாமோ நிர்வாகத்திற்குப் புதியவர்களாக இருந்தும் அண்ணா அவர்கள் மூடப்பட்ட ஆலைகளை உடனடியாகத் திறந்து விட வேண்டுமென்று விடிய விடிய யோசனை செய்து மூன்று ஆலைகள் திறக்கப்பட்டன. இன்று முருகன் ஆலையும் திறக்கப்பட்டிருக்கிறது. நாமோ மூடப்பட்ட ஆலைகளைத் திறந்து கொண்டிருக்கிறோம். வடக்கே குஜராத் மாநிலத்தில் நேற்று முன்தினம் ஜூபிடர் ஆலை மூடப்பட்டு 7,500 பேருக்கு மேல் வேலையற்ற நிலைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். இந்தியாவின் மான்செஸ்டர் என்று சொல்லப்படுகின்ற இடத்திலேயே ஆலைகள் மூடப்பட்டுக்



1971 ஜூன் 30] [திரு. கி. ஜெயராமன்]

கொண்டிருக்கும் நேரத்தில் நாம் ஆலைகளை திறப்பதற்காகத் தனி நிறுவனம் ஏற்படுத்தி மூடப்பட்ட ஆலைகளைத் திறந்து அந்த ஆலைகளில் வேகமாக உற்பத்தியும் செய்யப்படுகிறது.

திராவிட முன்னேற்றக் கழக அரசு வந்த பிறகு தொழிலில் மந்த நிலை ஏற்பட்டுவிட்டது என்று சொன்னார்கள். கொடுக்கப்பட்ட கணக்கைப் பார்க்கும்போது மின்சாரச் செலவும், ஷெட்யூல்டு பாங்குகளால் கொடுக்கப்பட்ட கடனும் அரசுத் துறைக்குத் தொழிற் துறையில் இருந்து வந்த வருவாயையும் பார்க்கும்போது தொழிலில் பின் தங்கவில்லை, வளர்ச்சி அடைந்திருக்கிறோம், மந்த நிலை ஏற்படவில்லை என்பது தெளிவாகத் தெரிகிறது.

இங்கு வேலை வாய்ப்பை இழக்கின்ற முறையில் தொழிற்சாலைகள் மூடப்படுகின்றன என்று சொன்னார்கள். நம்முடைய அரசு தனியார் துறை, பொதுத் துறை என்ற இரண்டு துறைகளோடு நிற்காமல் புதிய ஒரு துறையை மேற்கொண்டிருக்கிறார்கள். அது தான் கூட்டுத் துறை. தனியார் துறை, பொதுத் துறை இணைந்த துறை. இது மற்ற மாநிலங்களுக்கு வழிகாட்டியாக இருக்கும். இந்தத் துறையில் ஹைட்ரோ சல்பேட் தொழிற்சாலையும், சோடா ஆஷ் தயாரிக்கும் தொழிற்சாலையும் பத்து கோடி ரூபாய்க்கு மேல் மூலதனம் இட்டு நடத்த இருக்கிறார்கள். இந்தத் துறை மற்ற மாநிலங்களில் இல்லாத நிலையில் நம்முடைய தொழில் அமைச்சர் அவர்கள் இந்த முறை மூலம் தொழில்களைத் துவங்குவது நன்மை பயப்பதாக இருக்கும் என்று கருதி துவங்கியிருக்கிறார்கள். இதன் மூலம் பல உப தொழில்கள் ஏற்பட்டு வேலை வாய்ப்பு ஏற்படும்.

அடுத்து, தமிழக சரித்திரத்தில் முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சி நம்முடைய சேலம் இரும்பாலை. அவர்கள் பொறுப்பில் இருந்தபோது 'சேலம் இரும்பா? எங்கே இருக்கிறது' என்று கேட்டுக் கொண்டிருந்தார்கள். தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் தமிழகத்தின் பொற்காலத்தைக் கணிக்கின்ற முறையில் இரும்பாலைப் போராட்டத்தில் பெருவெற்றி பெற்று இன்றைய தினம் அதற்கு 110 கோடிக்கு மேல் மூலதனம் ஒதுக்கப்பட்டிருப்பதைப் பார்க்கிறோம். அதன்மூலம் 50,000 பேருக்கு மேல் வேலை வாய்ப்பு கிடைக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. இவ்வளவும் செய்த பிறகும்கூட எதிர்க்கட்சியினர், சாதிக் அலி காங்கிரஸ் கட்சியினர், இன்று தொழிற்துறையில் முன்னேறவில்லை என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஏற்கனவே இல்லாதிருந்த பல நல்ல காரியங்களை எல்லாம் நம்முடைய தமிழக அரசு செய்து வருகிறதா இல்லையா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

அவர்கள் காலத்தில் சிறு தொழில் செய்பவர்கள் அனுமதி வாங்க மனுப் போட்டால், யார் போட்டால் என்ன, யார் போடாவிட்டால் என்ன என்ற நிலைமை இருந்தது. ஆனால் கலைஞர் அவர்கள் இந்தக் காரியங்களை எல்லாம் செய்யும்போது பந்தயக் குதிரை போல் ஓடிக் கொண்டிருக்க வேண்டுமென்ற முறையில் அவர்கள்

பின்னால் அதிகாரிகள் அந்த வேகத்துடன் வந்துதான் ஆக வேண்டுமென்ற முறையில் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். இன்று சிறு சிறு தொழில் நடத்த அனுமதி பெற மனுப் போட்டாலே போதும், உடன் கொடுக்கப்படுகிறது. மாவட்ட அளவில்கூட டிஸ்ட்ரிக்ட் லைசென்சிங் கமிட்டி என்று நிறுவி சுறுசுறுப்பாகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். ஸ்மால் ஸ்கேல் இண்டஸ்ட்ரிஸ் டெவலப்மெண்ட் கார்ப்பரேஷன் என்று நிறுவி மூலப் பொருள் கிடைக்க வழி செய்யப்பட்டிருக்கிறது. இன்று மூலப் பொருள் கிடைப்பது அரிதாக இருக்கிறது. மாண்புமிகு தொழிலமைச்சர் மாதவன் அவர்கள் சேலம் வந்த நேரத்தில் குறிப்பிட்டார்கள். 'மூலப் பொருள் எல்லோருக்கும் எளிதாகக் கிடைக்காத நிலை இருக்கிறது. பெரிய தொழிற்சாலைகள் வருகின்ற நேரத்தில் இங்கே சிறு தொழில்களுக்கு மூலப் பொருள் கிடைப்பதில்லை. மத்திய அரசு லைசென்ஸ் வழங்குவதில் பாரபட்சம் காட்டுகிறார்கள் என்று சொன்னார்கள். தொழிலமைச்சர் அவர்கள் விடாமல் உண்மையைச் சொல்லிக் கொண்டுதான் வருகிறார்கள். அது மத்திய அரசின் காதுக்கு எட்டவில்லையென்றாலும் அவர்களுடைய காதுக்கு எட்டி பலன் கிடைக்கவேண்டுமென்ற முறையில் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

கைத்தறி நெசவாளர் பற்றிச் சொன்னார்கள். 'கைத்தறி நெசவாளருக்கும், விசைத்தறி உபயோகிப்போருக்கும் மூலப் பொருள் நார்ப்பட்டு நூல். இதன் விநியோகம் மத்திய அரசாங்கத்தால் தனிப்பட்ட ஸ்பின்னர்ஸ் அசோசியேஷனுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. டாரிஃப் கமிஷன் ரிப்போர்ட்டை ஏற்றுக் கொள்ளாமல் பல லட்சக்கணக்கான ரூபாய் பெறுமான மூலப் பொருளை மில் முதலாளிகளுக்கும், அவர்களுடைய பிரதிநிதிகளாக இருக்கும் அசோசியேஷன் மூலமாகவும் விநியோகம் செய்யப்படுகிறது. அது அரசுத் துறை மூலமாக விநியோகம் செய்யப்படுவதற்கு அதன் மூலம் கைத்தறி நெசவாளரும், விசைத்தறி நெசவாளரும் பெறும் வகையில் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நார்ப்பட்டு நூல் விநியோகத்தில் உண்மையான மூலப்பொருள் 'பல்ப்' ஆகும். இது தற்போது இறக்குமதி செய்யப்பட்டு வருகிறது. நார்ப்பட்டு நூலுக்கு வேண்டிய பல்ப் தமிழகத்தில் மேட்டுப்பாளையத்தில் உள்ள சவுத் இண்டியன் விஸ்கோஸில் ஏராளமாக இருக்கிறது. அதிலிருந்து கொஞ்சமாக வெளியில் இருப்பவர்கள் வாங்குகிறார்கள். வெளிநாட்டிலிருந்து இதை இறக்குமதி செய்யப்படுவது நிறுத்தப்பட வேண்டும். இதிலே மத்திய அரசு பாரபட்சம் காட்டுகிறது. உரிமைக்குக் குரல் கொடுப்போம். உறவுக்குக் கை கொடுப்போம் என்று கூறும் முறையில் விஷயத்தில் உரிமைக் குரல் கொடுத்து உள்நாட்டிலே கிடைக்கக் கூடிய பல்ப்பை வாங்க வழி செய்ய வேண்டும்.

நாங்கள் பெரு மெஜாரிடி பெற்றுவிட்டதாலே மக்கள் நலன் நாடுகின்ற காரியங்களை எல்லாம் செய்யாது இன்னும் ஐந்து வருடங்கள் இருக்கின்றனவே என்று பேசாமல் இருக்கவில்லை.



மக்கள் எங்கள் கட்சியின் பணியின்மீது பெருநம்பிக்கை வைத்து எங்களை மீண்டும் தேர்ந்தெடுத்து அனுப்பி இருக்கிறார்கள். ஆகவே மக்கள் நலனுக்காக காரியங்களைச் செய்யும்போது எத்தனை இடையூறுகள் வந்தாலும் அவற்றையெல்லாம் போக்கி அந்தக் காரியங்களைச் செய்ய பாடுபட்டுக் கொண்டு வருகிறோம்.

இங்கிருந்து பொருள்களை ஏற்றுமதி செய்பவர்கள் சில இடையூறுகள் இருப்பதை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அந்த இடையூறுகள் எல்லாம் உடனடியாகக் களையப்பட வேண்டும். அதிலே சிறு கஷ்டங்கள் ஏற்பட்டாலும் கவனித்துச் செய்ய வேண்டுமென்பதற்காக ஏற்றுமதி வாரியம் ஒன்றை நிறுவ ஆலோசனை செய்திருக்கிறார்கள். அதனை உடனடியாக நிறுவ வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கூட்டுறவு நூற்பாலைகள் எல்லாம் பொதுத் துறையில் சரிவரப் பணியாற்றுவதில்லை, நஷ்டம் வருகிறது என்று சொன்னார்கள். யார் யாரோ வருகிறார்கள், போகிறார்கள் என்று திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் சொன்னார்கள்.

கூட்டுறவு நூற்பாலைகள் நல்ல விதத்தில் தற்போது இயங்குவதோடு இல்லாமல் பங்குதாரர்களுக்கு டிவிடெண்ட் கொடுக்கும் நிலையில் இருக்கின்றன. ஏற்றுமதி செய்கிற அளவுக்குப் பெரிய மாறுதல்கள் அந்தத் துறையில் ஏற்பட்டு இருக்கின்றன. ஆகவே, நிர்வாகம் சரியாக இருந்தால் நிச்சயமாகப் பொதுத் துறையில் இந்தக் கூட்டுறவு நூற்பாலைகளின் மூலம் நல்ல லாபம் ஏற்படும் என்று குறிப்பிட விரும்புகிறேன்.

இப்படிச் சொல்லிக்கொண்டிருக்கும்போது இங்கே நம்முடைய சாதிக் அலி காங்கிரசைச் சேர்ந்தவர்கள், "நெசவாளர்களுக்கு இந்த அரசு என்ன செய்திருக்கிறது?" என்று கேட்கக் கூடும். அவர்கள் வேலைவாய்புக்காக ஒரு புதிய கொள்கையை நமது அரசு கையாண்டு இருக்கிறது. ஐ.டி. தொழிற் பயிற்சிக் கூடங்கள் நெசவாளர்களுக்கு ஏற்பட்டிருந்தாலும் அதிலே பயிற்சி பெற்றவர்களுக்கு வேலை உத்தரவாதம் (காரண்டி) செய்யாமல் விட்டு இருந்தது முந்தைய அரசாங்கம். ஆனால் தமிழக அரசு அப்படிப்பட்ட நெசவாளர்களுக்கு ஐ.டி. யில் படித்த நம்முடைய போக்குவரத்துத் துறை அல்லது தொழில் துறை அல்லது அரசுத் துறைகளில் வேலைவாய்ப்பு உத்தரவாதம் கொடுத்து இருக்கிறது. இதற்காகத் தமிழக அரசை நான் மிகவும் பாராட்டுகிறேன். இப்படிப்பட்ட தொழிற்துறை சம்பந்தமான உத்தரவுகள் எல்லாம் இப்போது அமைந்து இருக்கும் தமிழக அரசுதான் செய்திருக்கிறது.

நம்முடைய மாநில தொழில் அமைச்சர் அவர்கள் அமைதியான முறையில் ஒரு தொழில் புரட்சியை, பசுமைப் புரட்சியைச் செய்து நல்ல திட்டங்களை நடைமுறையில் கொண்டுவர தொழில்

[திரு. கி. ஜெயராமன்] [1971 ஜூன் 30

அமைச்சர் அவர்கள் வெளிநாடுகளில் சுற்றுப்பயணம் செய்ய இருக்கிறார்கள். அதை வெற்றிகரமாக முடித்துக்கொண்டு அந்த அனுபவத்தைக் கொண்டு தமிழகத்திலே ஒரு பெரிய தொழிற் புரட்சியை ஏற்படுத்தித் தருவார் என்றும், தலைவர் அவர்கள் காலத்தில் தமிழகம் பொற்காலத்தைக் காணும்பேறு ஏற்படும் என்று சொல்லி மானியக் கோரிக்கையை ஆதரிக்கிறேன். வணக்கம்.

திரு. மா. வெ. கரிவேங்கடம்: தலைவர் அவர்களே, தொழில் அமைச்சர் அவர்கள் இந்தச் சபையின் முன் கொண்டுவந்திருக்கும் மானியக் கோரிக்கைமீது ஒரு சில கருத்துக்களை வைக்க ஆசைப் படுகிறேன்.

சாதிக் அலி காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த இந்த மன்றத்து உறுப்பினர்கள் பொதுவாக தொழில் துறையில் முன்னேற்றம் அடையவில்லை, தொழில் துறையில் நாம் மந்த நிலையை அடைந்திருக்கிறோம், தொழில் வளர்ச்சி குன்றிவிட்டது என்றெல்லாம் எடுத்துச்சொன்னார்கள். அவர்களும் தமிழக மக்களும் அறிய வேண்டுமென்று ஒரு சில புள்ளி விவரங்களை இந்த மாமன்றத்தின் முன் வைப்பது சாலச்சிறந்ததாக இருக்குமென்று கருதுகிறேன். விவசாயத் துறையிலே 2.5 லட்சம் விசை ஏற்றங்களுக்கு விசை இணைப்பு 66-67-ல் கொடுக்கப்பட்டது. ஆனால் தற்போதைய 4 ஆண்டுகளில் 5.3 லட்சம் விசை ஏற்றங்களுக்கு மின் இணைப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. அதேபோல் 67-ம் ஆண்டு வரை சற்றேறக்குறைய 75.125 கிராமங்களுக்கு மின் இணைப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. தற்போது 17,000 கிராமங்களுக்கு மேலும் மின் விளக்கு வசதி விஸ்தரிக்கப்பட்டு இருக்கிறது. ஆகவே விவசாயத் துறை ஆனாலும் சரி, கிராம மின் விளக்கு விஸ்தரிப்பு ஆனாலும் சரி மின்சாரம் அதிகமாகப் பயன்படுத்தப்பட்டு இருக்கிறது. அதே விதத்தில் கூடுதலாகத் தொழில் துறையைப் பொறுத்தவரையில் 68-70-ல் பயன்படுத்தப்பட்ட மின்சாரம் 4,574 மில்லியன் யூனிட்டுகள்.

நமது மாநிலத்திலே மொத்தம் விற்பனை செய்யப்பட்ட—அது விவசாயத்திற்கு ஆனாலும் சரி, மின் வசதிக்காக ஆனாலும் சரி—தொழில் துறையில் பயன்படுத்திய மின்சாரம் 54:46 என்ற விகிதத்தில் உள்ளது. ஆகவே விவசாயத்திற்கும் கிராம மின் விளக்குக்கும் இன்னேரென்ன பிற காரியங்களுக்கு நாம் பயன்படுத்திய மின்சாரம் கூடுதல் 5% ஆகிறது. அதேபோல் சிறு தொழில்களின் எண்ணிக்கை 69-ல் 13,571. [illegible] அது 22,899 தொழில்களாக பெருகி இருக்கிறது. ஆகவே, இரண்டு ஆண்டுகளில் 9,328 சிறு தொழில்கள் அதிகரிக்கப்பட்டு இருக்கின்றன.

Thiru K. M. SUBRAMANIAM: Sir, on a point of information. How many were closed during those two years?



1971 ஜூன் 30]

திரு. மா. வெ. கரிவேங்கடம்: இவைகளிலே எந்தத் தொழிலும் மூடப்பட்டதாக இந்தப் புத்தகத்திலே கூறப்படவில்லை. நிச்சயமாக எந்தத் தொழிலும் மூடப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சிறு தொழில்களைப் பொறுத்தவரை இந்த அரசு ஏற்பட்ட பிறகு ஒரு விறுவிறுப்பான வேகம் என்றுமே இல்லாத முன்னேற்றம் ஏற்படுத்தி இருக்கிறது என்றால், அது மிகை ஆகாது. அடுத்தாற்போல், இந்த அரசு தொழில் துறையில் முற்போக்கான மாவட்டங்கள் எவை, பிற்போக்கான மாவட்டங்கள் எவை என்று ஆராய்ந்து அறிய தர்மபுரி, வடார்க்காடு, தென்னார்க்காடு போன்ற மாவட்டங்களில் பிற்படுத்தப்பட்ட மாவட்டங்கள் என்று ஒரு பட்டியலைத் தயாரித்து அதை மத்திய அரசுக்கு பரிந்துரை செய்து அந்த மாவட்டங்களுக்கு தனிச் சலுகைகள், மின்சாரக் கட்டணச் சலுகை, விற்பனை வரிச் சலுகை இவைகள் எல்லாம் தரச் செய்திருக்கிறது. இவைகள் பற்றி நீண்ட நேரம் சொல்லத் தேவையில்லை. இந்தப் புத்தகத்தில் 64-65 பக்கங்கள் மத்திய அரசு இசைவிலிருந்து அந்தப் பட்டியல்படி, திருச்சி, மதுரை, தென் ஆர்க்காடு, இராமநாதபுரம், கன்னியாகுமரி, தஞ்சாவூர், வட ஆர்க்காடு, தர்மபுரி ஆகிய மாவட்டங்கள் பிற்படுத்தப்பட்ட மாவட்டங்கள் என்றும், அங்கே தொழில்கள் ஆரம்பித்தால் இந்தச் சலுகைகள் அளிக்கப்பட இருக்கின்றன, நிதி வசதிகள் அளிக்கப்பட இருக்கின்றன என்றும் கூறப்பட்டு இருக்கின்றது. இதற்கு முன்பு இது யாருடைய சிந்தனையிலும் உதிக்கவில்லை. இந்த அரசு சிந்தனையில்தான் உதித்து, அதற்கு ஆவன செய்ய மத்திய அரசிடம் வாதாடி பெற்று இருக்கிறது.

இதேபோல் மின்வசதிக் கட்டணம், பிற்படுத்தப்பட்ட மாவட்டங்களில் முதல் மூன்று ஆண்டுகளுக்கு மூன்று ரூபாய் செலுத்த வேண்டுமென்றால் 2 ரூபாய் இரண்டு ஆண்டுகளுக்கு முதலில் செலுத்தினால் போதும். மூன்றாவது ஆண்டில் 62½ சத விகிதமும், 4-வது ஆண்டில் 80 சத விகிதமும், 5-வது ஆண்டில் 90 சத விகிதமும் செலுத்தினால் போதும். 6-வது ஆண்டில்தான் முழுக் கட்டணம் செலுத்த வேண்டும். இப்பேர்ப்பட்ட சலுகைகள் இந்த ஆட்சியில் தவிர 1967 வரையில் இருந்த ஆட்சியில் இருந்தது உண்டா என்று கேட்டால், நிச்சயமாக இல்லை என்று சொல்வேன்.

அடுத்தாற்போல், மத்திய அரசு ஆதரவிலே ஏற்படுத்தப் படுகிற கனரக தொழில்களுக்காக 1967 வரையிலே 340 கோடி ரூபாய்க்கு செலவழிக்கப்பட்டு, இந்த ஆண்டு நமது தமிழக முதல்வர் மத்திய அரசிடம் வாதாடி சேலம் இரும்பாலையை பெற்றுக்கொண்டு இருக்கிறார்கள் என்பதை இந்த மாமன்றத்தில் உள்ளவர்கள் நன்றாக அறிவார்கள்.

[திரு. மா. வெ. கரிவேங்கடம்] [1971 சூன் 30

நமது முதலமைச்சர் அவர்கள் அதற்காக ஒரு மாநாடு கூட்டியதை எல்லோரும் அறிவார்கள். நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு மத்திய அரசு இசைவு கேட்ட நேரத்தில் சேலம் இரும்பாலை அதிலே இடம் பெற்று இருக்கிறதா என்று அறிந்து, அதில் இடம் பெறவில்லை என்று தெரிந்ததும், அதற்கு சம்மதம் தெரிவிக்க மறுத்துவிட்டார். பிறகு அது சேர்க்கப்பட்ட பிறகு தான் சம்மதம் தெரிவித்து சேலம் இரும்பாலைக்கு துவக்க வேலைகள் ஆரம்பிக்கப்பட இருக்கின்றன. அதற்கு ஒதுக்கப்பட்டு இருப்பது 110 கோடி.

அடுத்தாற்போல், தூத்துக்குடியில் அமைய இருக்கும் உரத் தொழிற்சாலை மத்திய சர்க்கார் ஆதரவோடு 62 கோடி ரூபாய் அளவில் அமைய இருக்கிறது. அது ஒரு பெரிய ஆலை. அதற்கு நாப்தா மூலப்பொருளை மத்திய அரசு வழங்க முன் வந்திருக்கிறது. அந்த ஆலை செயல்படத் தொடங்கினால் ஆண்டு ஒன்றுக்கு அம்மோனியா 1,100 டன்னும், யூரியா 1,600 டன்னும் உற்பத்தி செய்ய திறன் கொண்டதாக இருக்கும். ஆகவே 170 கோடி ரூபாய் அளவுக்கு, ஆட்சி பொறுப்பை ஏற்ற இந்த குறைந்த காலத்தில் மத்திய அரசாங்கத்திடமிருந்து வாதாடி பெற்று இருக்கிறது எங்கள் அரசு. தொழில் துறையில் பல தொழில் வசதிகள் பெருக, தொழிற்சாலைகள் பெருக, பல சலுகைகள் வழங்கி இருக்கிறது. எவ்வளவோ இக்கட்டான நிலையில் உரிமங்கள் பெறுவதற்கு மத்திய அரசிடம் வாதாடி, பல தொழில்களுக்கு உரிமங்கள் பெற்றிருக்கின்றன. அதன் நீண்ட பட்டியல் இங்கே கொடுக்கப்பட்ட புத்தகத்தில் இருக்கின்றது. இப்படிப்பட்ட விதத்தில் தொழில் துறையில் இந்த அரசு ஒரு மகத்தான சாதனையை ஏற்படுத்தி இருக்கிறது என்றால் அது மிகையாகாது.

அடுத்தாற்போல், நமது தமிழ்நாடு 3-வது இடம் பெற்று இருக்கிறது என்று அங்கத்தினர்கள் சொன்னார்கள். மகாராஷ்டிராவுக்கு அடுத்தது 2-வது தமிழகம் தான் மத்திய அரசிடம் வாதாடி கடன் பெறுவது, தொழில் ஆரம்பிப்பது போன்ற சலுகைகள் பெற்று இருக்கிறார்கள். அதை இந்தப் புத்தகத்தில் உள்ள புள்ளிவிவரங்களில் இருந்து பார்த்தால் தெரியும்.

தமிழகம் இன்று 2-வது இடத்தில் தொழில் துறையில் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த வகையில் அமைந்திருக்கிறது. ஆக, சிறு தொழில்கள் ஆனாலும் சரி, பெரிய தொழில்கள் ஆனாலும் சரி, இந்த அரசு ஏற்பட்ட பிறகு ஏராளமாக ஏற்பட்டு இருக்கிறது என்பதை நாடு அறியுந் என்று சொல்லி, இந்த மானியக் கோரிக்கைகளை வரவேற்று என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம், நன்றி.

DR. H. V. HANDE : Hon. Speaker, Sir, at the very outset I wish to state in support of the cut motion the Swatantra Party has given ha I am viewing the growth of Industries in Tamil Nadu with grave misgivings or the following reasons.



1971 சூன் 30] [Dr. H. V. Hande]

In the past four or five years no industry worth mentioning has really come up either in the private sector or the public sector of our State. Now nobody knows what is going to be the nationalisation policy of the Government and what is going to be nationalised. Therefore, I would request the Hon. Minister in his reply to categorically indicate to the people of Tamil Nadu and outside, what exactly is going to be the nationlisation policy of this Government, what are the areas of industries they are going to take up for nationalisation and what areas they are going to leave for the private sector. Otherwise, the flow of fresh capital into the State will be very greatly jeopardised. I know the Hon. Minister is trying his best to attract capital to this Stae but we must not create conditions wherein private capital will fight shy to come to our State. No one can argue that the private sector must not come at all. Even an extreme leftist, I am sure will come forward and say that industries are required to solve two basic problems, namely, unemployment problem and increased production. As far as that is concerned, I do not think there can be two opinions because everyone wants the unemployment problem to be solved.

Even during the Question Hour this morning the Hon. Minister for Labour in reply to a question about Standard Motor, Company, pointed out pathetically how his ideas could not be put to practice. The Company is now in doldrums and the same thing applies to the Structurals Limited in Pattabhiram. So, the situation in Tamil Nadu is far from satisfactory and I want that this uncertainly in the field of industries be clearly and summarily removed. I am not bothered whether A or B or C starts an industry but I want more industries in Tamil Nadu. The Government may say that they do not want any private industries and that they want only industries in the public sector. But that would mean plenty of money and for that they will have to levy taxes. Then only resources can be mobilised for that purpose. So, that is the only aspect of the matter.

Then I want the Hon. Minister to state the objective of the Government. Let it not be misunderstood that I am trying to attack the party in power and whatever I wish to say I say with an open mind and it will also be useful to the Government. If there is any dereliction of duty, you pull up the top officials or executives of the Government.

Sir, as regards the unemployment problem, it is increasing in diametric proportion. Now boys and girls come every day to almost every M.L.A. asking information and help for employment. It is a very tragic sight and we are not able to help even 1/100th of the persons who come to us. There is a tremendous frustration among them and this is the main problem which the Hon. Minister must look into. This problem was partly attempted to be solved by our distinguished previous Minister in the

[Dr. H. V. Hande] [1971 ஜூன் 30

Congress regime, Thiru R. Venkataraman and that has been conceded by our present Minister also. My only hope and wish is—I pray to God—that our present Minister will excel the previous Minister. He is intelligent and he is able to grasp things, and he will do the needful in the matter. During the regime of Thiru Venkataraman, a large number of industries and factories were started.

For instance, take the Paper Factory. After the completion of the gestation period, the factory has started production. Recently four tyre factories have started production. Rayon factory has started production, as also Wattle Factory. Thus new industries have come up during the last four years in Tamil Nadu. Then there is the Tuticorin Project and there are also other industries started by the Central Government.

Then I come to the continuous casting plant. I have time and again referred to it and again I wish to point out that there is not enough scrap iron even for a week's production. A lot of money has been sunk in this industry. I request the Hon. Minister to straightaway take up the matter and find out the exact quantity of scrap iron required by this industry at this minute. My information is that it is not sufficient even for three or four days' production.

Then there is the Dastur Report and that report gives particulars about the cost of production of steel in the Steel plant at Arkonam. Supposing the cost of production is Rs. 1,000 per tonne. The actual selling price is about 70 per cent of the cost of production. I request the Hon. Minister to check it up, whether it is a fact or not. The Hon. Minister may kindly look into this. It has to be seriously looked into. Whether the plant could not be shifted to some other place, may also be considered.

மு.ப. I now come to the problem of cement. Government produc-
10·30. tion is 1,200 tonnes per day whereas most private companies produce 2,000 tonnes per day. I understand there is no proper arrangement for marketing the cement. Any industry, as soon as it starts production, must make arrangements for proper marketing of its product. The product has to be properly graded refined and marketed. Because of lack of proper marketing, I understand about a lakh of tonnes are lying idle. There is no proper marketing.

With regard to companies started by Government, there is a lot of problems. Mr. Jayaraman was trying to list out something but he was trying to defend. I could understand it. A number of companies had been started by Government. Everyday one thing or other is coming. The proliferation of companies is not commensurate with the proliferation of production. Take TIDCO, and other companies. TIDCO, is running into Rs. 35 to Rs. 40 lakhs. Actually the loss is Rs. 45,23,792. The Chairman has tried to give an explanation for that saying that it is



[1971 ஜூன் 30 [Dr. H. V. Hande]

because of some accounting procedure. Incidentally I may say it is all very badly drafted. After my speech, I shall give it to the Hon. Minister. A very poor attempt has been made to convince members of the House that the loss is reasonable. He has tried to give an explanation. Government must see that something is done. There is no meaning in running into loss continuously. TIDCO brochure says that Arkonam plant will be commissioned by August 1971. So far as TIDCO is concerned, four Chairmen have been changed, within a short time. Alangulam comes under their jurisdiction. But there is no proper marketing of its product. A number of companies, had been started by Government. TANSI, Industries Development Corporation, etc. But the speed with which they had been started is not commensurate with their production. Previously during Mr. Venkataraman's regime, people from Maharashtra, Gujarat used to come to our State to see our industrial estates but it is reverse now. now. Our peaple are going to see the estates in the North I now understand that the Hon. Minister is shortly going abroad to see the industrial position there. I hope he will come back with good ideas. I do not know the details of his programme. I do not know what exactly the terms of reference of his trip are. I hope the Hon. Minister in his reply will explain this.

I come to textile mills. Today also there was a call-attention notice. I have also raised the issue a number of times. I very categorically say that unless you take the remedial measure of diversifying production, you cannot solve this problem. Persons are now wearing terelyne because of its cheapness. May be I am wearnig khadar. One who weaves that, earns about 75 paise to 1.00 Rupee a day. But you cannot force khadi or handloom on anybody. They wear terelyne because it lasts longer and is cheaper. What is the reason for our cloth not selling? It is due to wrong marketing.

The Government are trying to take over sick mills. What I say is let the Government adopt at the same time some rational, realistic and absorbing marketing methods. I am very sorry that Hon. Chief Minister is not here now (not that I consider the Industries Minister less important). If the Hon. Chief Minister were to give a powerful assurance to all entrepreneurs to come and start industries in our State, it will have some effect.

Now I come to small-scale industry. Mr. M. V. Karivengadam has also said that small-scale industries are not working satisfactorily. I shall now read from the booklet given to us. On page 51 it is stated as follows:—

" Out of the net value of assets of Rs. 989 lakhs, an amount of Rs. 400 lakhs was treated as share capital and the remaining amount of Rs. 589 lakhs was treated as interest bearing loans to be repaid by the company. The annual burden of interest to the extent of over Rs. 30 lakhs is being charged to the accounts of the company towards interest, before arriving at its net working results. "

The financial position of many of the companies had not at all improved, as I had pointed out already. Let me read again :

" In order to relieve the company of this crippling burden recently Government have passed orders giving a moratorium on interests payments to Government for a period of 5 years. "

There is something missing, between production point and sale point. There is missing link. No proper marketing. Government may think of utilising the ambitions of energetic engineers in rural areas in industries including small-scale industries. Government's sales tax, income-tax imposing excise duty on so many articles are all there.

I shall also list out who are all the persons whom one wanting to start a small-scale industry, has to look after. He has to obtain licence from (1) municipality or corporation or panchayat union, (2) Factory Inspector, (3) Health Officer, (4) Town Planning Officer (we are going to have a Town planning Bill shortly), (5) Excise Duty Officer, (6) Sales Tax Officer, (7) Assistant Director of Industries, (8) National Small Industries Corporation, etc. Like that it goes on. Are the department helpful? The departmental officers are helpful to persons who go about cringing to them. It may be there are certain honest persons who mind their work alone. They are not for going about cringing about persons in authority. Such persons do not get licence. What is spoken in legislature does not trickle down to directorate level. That is the point. Let this be properly investigated.

Then, Sir, this cumbersome procedure creates frustration. Many young people who want to start industries, when they are driven half a dozen times from pillar to post, they think that it is not worth doing all these things and run away.

Another important point is non-availability of raw materials. The Government must find out a solution for the same soon. Entrepreneurs are not permitted to import raw materials directly. The moment they go to the Government, they say 'we cannot do it because it is the Central Government who should do it.' Then the Central Government say 'we are not going to do it.' There must be some method by which a proper linking is done at the point where the small-scale industrialists want the raw materials' and at the point at which they require foreign exchange. There must be a proper linking at the point at which the raw materials are actually distributed. The red-tape at the State level also should be reduced to the minimum. This is a very important point which I would like the Government to consider and do something about it.

Sir, with these words I hope and trust that our Hon. Chief Minister would take a sort of drive and tell all the people to start more and more industries. Because there is a very nice political





climate and it should be properly utilised by our Hon. Chief Minister. With all the emphasis at his command he shoud make a statement as loudly as possible telling the entrepreneurs that they will get a lot of encouragement from Government. If he can do that, he can do ten times better than it was done during the time of our former Minister for Industries, Mr. R. Venkataraman. If this problem is solved, this Government would have solved 90 per cent of the problems in the entire State.

As far as revenue is concerned, as far as employment is concerned, as far as production is concerned, I would like this Government, especially the Hon. Chief Minister and the Hon. Minister for Industries to put their heads together and see that they overtake other States like Maharashtra in the matter of development of industries. Our revered Anna told the House that they would have a Consultative Committee so that we can give any amount of suggestions. Let us forget about our parties. We are prepared to offer any number of suggestions. There was a proposal to have a Consultative Committee and later on the Hon. Minister for Industries Thiru V. R. Nedunchezhian also was seized of it. But subsequently, it was left out, I do not know for what particular reasons. If for this particular section, department, a Consultative Committee is formed, it will serve very good purposes.

With these words in support of the cut motions I have moved, I resume my seat.

**திரு. செ. கந்தப்பன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே! தொழில் அமைச்சரின் இந்த நிதிநிலை அறிக்கை ஒதுக்கீட்டை நான் முழுமையாக ஆதரிக்கின்றேன். எனக்கு முன்னாலே பேசிய மற்றக் கட்சி நண்பர்கள் பல்வேறு கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள் என்றாலும், காரண காரிய விளக்கங்கள் நாம் எதிர்பார்த்த அளவுக்கு அவர்களிடத்தில் இருந்து எதுவும் வராமல் போனது எனக்கு உண்மையிலேயே ஏமாற்றத்தைத் தருகின்றது. அதோடு நமது தொழில் அமைச்சகத்தில் மேற்கொள்ளப்படக்கூடிய பல நல்ல திட்டங்களை அவர்கள் குறிப்பிடுகிறபோது கண்டிக்க வேண்டியவைகளைக் கண்டிக்காமலும், பாராட்டப்படவேண்டியதைப் பாராட்டாமலும் போனது எனக்கு ஏமாற்றத்தையே தருகின்றது. டெல்லியிலே மத்திய அரசு சார்பில் நிர்வாகச் சீர்திருத்தக் குழு ஒன்றை அமைத்து அதனுடைய பரிந்துரையாக அரசுத்துறை நிறுவனங்கள், 'பர்பாமன்ஸ் பட்ஜெட்' என்று சொல்லப்படுகிற சாதனை பட்ஜெட்டை வெளியிட வேண்டும் என்கிற பரிந்துரை டெல்லியில் கூட இன்னும் அமல் நடத்தப்படாமல் இருக்கிறது. ஆனால் அந்தப் பரிந்துரையை நமது தமிழக அமைச்சகம் ஏற்று அழகான 'பர்பாமன்ஸ் பட்ஜெட்' தயாரித்தமைக்காக நான் அதை வெகுவாகப் பாராட்டுகின்றேன்.

மாண்புமிகு உறுப்பினர் ஹான்டே அவர்கள் பேசுகிறபோது, இங்கு பாராட்டத்தக்க அளவுக்கு அல்லது சொல்லிக்கொள்ளும் அளவுக்குத் தமிழகத்தில் இந்த ஆட்சி அமைந்தபிறகு எந்தத் தொழிலும் ஏற்படவில்லை என்று குறிப்பிட்டிருக்கிறார். ஓரே அடியாக அடித்துப் பேசியது ஒருவேளை தமிழகத்தில் இந்த அளவுக்குத் தொழில் வளர்ச்சி என்று சொன்னால் இந்த வேகம் தணிந்துவிடுமோ என்று கருதினாரோ என்னவோ, அதை உற்சாகப்படுத்தும் முறையில்தான் சொன்னார் என்று கருதுகின்றேன். வேகமாக ஓடிக்கொண்டு இருக்கிறவர்களை ஓரே அடியாக ஓடவில்லை, உட்கார்ந்திருக்கிறார்கள் என்று அடித்துப் பேசுவது கொஞ்சம் உற்சாகத்தை கெடுத்துவிடும் என்ற காரணத்தால்தான், நாங்கள் செய்திருப்பதைக் கொஞ்சம் ஒப்புக்கொண்டு, மேற்கொண்டு செய்ய வேண்டிய காரியங்களுக்கு உதவியாக ஆலோசனை சொல்ல முன் வரவேண்டும். மேலும் அவர் பேச்சில் சில முரண்பாடுகள் இருக்கின்றன. முன்பு திரு. ஆர். வெங்கடராமன் அமைச்சராக இருந்த இடத்தில் இப்போது நம்முடைய தொழில் அமைச்சர் திரு. மாதவன் அவர்களும் அவரைப் போலவே ஆற்றல் வாய்ந்தவர் திறமை உள்ளவர்கள் என்று கூறிப்பிட்டார் அதிலுள்ள லாஜிக் வாதம் என்ன வென்றால் இவரும் ஆற்றல் வாய்ந்தவராக இருந்தும் திறமை வாய்ந்தவராக இருந்தும், அவர் கருத்துப்படி வெங்கடராமன் காலத்தில் வளர்ந்த தொழில்துறை இப்போது இயலவில்லை என்றார். அந்தக் கருத்தில் எனக்கு உடன்பாடு இல்லை. இருந்தாலும் அவருடைய கருத்து வாதத்தின்படி, அவர் அப்படி தொழில் வளரவில்லை என்று சொல்கிற நேரத்தில், ஆற்றல் மிக்க தொழில் அமைச்சர் ஏன் செய்யமுடியவில்லை என்பதை அவர் ஆய்ந்து பார்க்க வேண்டும். அப்படி ஆய்ந்திருந்தால், இந்த வாதத்தைச் சொல்லியிருக்க மாட்டார்.

வேலையில்லாக் கொடுமையைப்பற்றிப் பேசுகின்றபோது வேலையில்லாமையைப் போக்க நாம் செய்யும் முயற்சிகளை அவர் நன்றாக அறிவார். மத்திய அரசை இந்த நேரத்தில் நாம் இன்னும் அதிகமாக உதவி கோரி வலியுறுத்தவேண்டும் என்ற எண்ணத்தில் தான் அவர் சொல்லியிருக்கவேண்டும். நமது முயற்சியைக் கெடுக்கும் அதிகாரம் டெல்லியில் இருக்கிறது. இதற்கு அவசியமான மூலதனத்தை ஒதுக்கீடு செய்வதற்கு ஏற்படுகின்ற இடையூறுகள், நிலைமைகளை எல்லாம் சுட்டிக் காட்டியிருந்தால் நன்றாக இருந்திருக்கும் என்று நினைக்கிறேன்.

அடுத்து ஹான்டே அவர்கள் ஸ்டாண்டர்டு மோட்டார்சைக் குறிப்பிட்டுப் பேசினார் இது அவருக்கும் தெரிந்திருக்கும் என்று கருதுகிறேன். இந்த 'பாக்டரி' மூடப்படுகிற நிலைமை ஏற்பட்ட போது நமது மதிப்பிற்குறிய தமிழகத்தின் முதல் அமைச்சரான கலைஞர் அவர்கள் ஒரு அறிக்கை விடுத்தார்கள். இந்த நிர்வாகத்தின் போக்கால் தொழிற்சாலை நின்று போகும் நிலைமையைப் பொறுத்துக் கொண்டிருக்க மாட்டோம், அதை ஏற்று நடத்துவதற்கு அரசு தயாராய் இருக்கிறது என்று அறிக்கை விடுத்தார். டெல்லியில் இருந்த பக்ருதீன் அகமது அவர்களும் இதை ஒப்புக்





கொள்கிற பாணியில் அப்போது பேசினார். அதன் பின்னரும் நமது தொழில் அமைச்சகத்தில் இருந்து அதற்கான சில விதிகள் எல்லாம் மேற்கொள்ளப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்பட்டு டெல்லிக்குப் பரிந்துரை அனுப்பியது. பிறகு சட்டச் சிக்கல் காரணமாய் இருப்பதால் நாங்கள் சொன்ன யோசனைகளையெல்லாம் செயல்பட முடியாத நிலைமை வளர்ந்தது என்பதை இந்தப் பிரச்னையை எடுத்துச் சொன்ன உறுப்பினர் அறிந்தே இருப்பார் என்று கருதுகின்றேன். இந்த அரசு எடுக்கும் முயற்சிக்குத் தடை செய்வதாய் இருக்கிற மத்திய அரசுப் போக்கினை மாண்புமிகு உறுப்பினர் சுட்டிக் காட்டாமல் இருப்பது எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. இதைச் சுட்டிக் காட்டுவது மூலம்தான் உண்மையில் தமிழக வளர்ச்சியிலே உண்மையாக நாம் பங்கு ஏற்றவர்களாகக் கருதப்படுவோம் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இதற்காக நம்முடைய அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளுக்கு மத்திய அரசின் ஆதரவு கிடைக்கும், கிடைக்க வேண்டும் என்று வலியுறுத்த வேண்டிய பொறுப்பு எல்லா உறுப்பினர்களுக்கும் இருக்கிறது என்பதையும் நாம் இந்த நேரத்தில் மறந்துவிடக்கூடாது.

இன்னொன்று 'ஸிக் மில்ஸ்' பற்றிக் குறிப்பிடப்பட்டது. ஹான்டே அவர்கள் குறிப்பிட்டார். தமிழக அரசு தொழில் கொள்கை தனியார் துறை விஷயத்தில் விளக்கம் கேட்டிருக்கிறார்கள். அதே நேரத்தில் அவர் பொதுத்துறையில் கண்காணிப்பு ஏற்படவேண்டும், பொதுத்துறை நிர்வாகம் சரியில்லை என்பதையும் சுட்டிக்காட்டியிருக்கின்றார். நூற்பு ஆலைகளைப்பற்றிக் குறிப்பிடுகையில், அவர் சுட்டிக் காட்டிய நூற்பு ஆலைகள் எல்லாம் தனியார் துறையிலுள்ள நூற்பு ஆலைகள்தானே தவிர, பொதுத்துறையில் உள்ள நூற்பு ஆலைகள் அல்ல என்பதையும், இதனால்தான் தனியார் துறையில் உள்ள மில்கள் மூடப்பட்ட நிலை ஏற்பட்டு இருக்கிறது என்பதையும் மறந்துவிட வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அவர்கள் சொன்ன பேப்பர் மில்லைப் பொறுத்தவரையில் அகில இந்தியா முழுவதும் பேப்பருக்கு பெரிய டிமாண்ட் இருக்கின்ற நேரத்தில் தனியாரால் நடத்தப்படும் பள்ளிப்பாளையம் பேப்பர் மில் ஆரம்பிக்கப்பட்டுப் பத்து ஆண்டுகள் ஆகியிருந்தும் சென்ற ஆண்டுதான் லாபம் அடையத் தொடங்கியது. பேப்பர் தொழிலுக்கு அவர்கள் சொல்லக்கூடும் 'ஜெஸ்டேஷன் பீரியட்' என்று. பத்து ஆண்டுக் காலம் ஜெஸ்டேஷன் பீரியட் இருக்குமென்று நான் கருதவில்லை. தனியார் நிறுவனங்களிலும் இழப்பு ஏற்படத் தான் செய்கிறது. இதைச் சொல்வதன்மூலம் பொதுத் துறையில் ஏற்படும் இழப்புச் சரிதான் என்று நான் சொல்வதாகக் கருத வேண்டாம். அந்த இழப்பை ஈடுகட்ட, குறைக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்து இருக்கிறது, மேற்கொண்டு என்ன நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர்கள்

[திரு. செ. கந்தப்பன்] [1971 ஜூன் 30

சுட்டிக் காட்டியிருந்தால் அது ஆரோக்கியமான கிரிடிசிசமாக இருந்து இருக்கும் என்று நான் ஆரம்பத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இப்போது கைத்தறித் துறையில் நூலுக்கு இருக்கும் பஞ்சத்தைப் பற்றிச் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். இந்திய துணைக் கண்டத்திலேயே கைத்தறிப் பிரச்னை பெருத்த அளவுக்கு தமிழகத்தின் பிரச்னையாக இருக்கிறது. அதிலும் குறிப்பாக, நான் சார்ந்திள்ள சேலம் மாவட்டத்தைப் பெரிதும் பாதிக்கும் பிரச்னை. இந்தக் கைத்தறித் தொழிலுக்குப் பல்வேறு காரணங்களால் இடர்ப்பாடு ஏற்படுகிறது. அரசு அதற்கான முறையில் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது என்றாலும், இந்த நூல் விலையில் ஏற்றத் தாழ்வு நிச்சயம் அற்ற தன்மை கைத்தறி தொழிலைப் பாதிக்கிறது. இதை உணர்ந்து நமது அரசு நூல் விலை ஏற்றம் கொள்கிற நேரத்தில் ஒரு நூல் கிடங்கு ஆரம்பித்து, 'பஃப்பர் ஸ்டாக்' ஏற்படுத்த வேண்டு மென்று டெல்லிக்குப் பரிந்துரை செய்தது. துவக்கத்தில் இதை ஏற்றுக்கொள்கிற வகையில் பதில் கொடுத்தாலும், கடைசியில் அதைக் கொண்டு வரவில்லை. அதிகமாக நூல் இருக்கிற நேரத்தில், கைத்தறிக்காக என்று ரூ. 5 அல்லது ரூ. 10 கோடி ஒதுக்கி, அதன் மூலம் 'பஃப்பர் ஸ்டாக்' ஏற்படுத்தித் தொடர்ந்து குறிப்பிட்ட விலையில் நூல் கிடைப்பதற்கான முயற்சியை நாம் மேற்கொள்ள வேண்டுமென்று நமது அமைச்சர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

பொதுவாக மத்திய அரசின் சார்பில், ரப்பருக்கு, காயருக்கு என்று இப்படி பல்வேறு பொருள்களுக்கு அகில இந்திய நிறுவனங்கள் அமைக்கப்பட்டு இருக்கின்றன. அந்த கைத்தறி சம்பந்தப்பட்ட ஆல் இந்தியா ஹேண்ட்லூம் போர்டு பம்பாயில் அமைத்து இருக்கிறார்கள். டெக்ஸ்டைலுக்கு முக்கியத்துவம் இருக்கும் இடத்தில் எதற்காக கைத்தறிக்கான அகில இந்திய நிறுவனம் இருக்க வேண்டுமென்று கேட்கிற நேரத்தில், ஏற்றுமதி-இறக்குமதிக்கு வசதியாக இருக்கும் என்று ஏதோ சொல்கிறார்கள். இந்த நிறுவனம் சென்னையில் இருப்பது பொருத்தமாக இருக்கும் என்று டெல்லியிடத்தில் வலியுறுத்திச் சொல்ல வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

சில ஆண்டுகளுக்கு முன்பு மேட்டூர் பகுதியில் கெம்பிளாஸ்ட் திறப்பு விழாவுக்கு வந்திருந்த நேரத்தில் அப்போது மதிப்பிற்குரிய அமைச்சராக இருந்த அசோக் மேத்தா அவர்கள், தமிழகத்தை ஜப்பான் நாட்டிற்கு ஒப்பிட்டுச் சொன்னார்கள். ஆசியாக்கண்டத்திலே எப்படி ஜப்பானோ அதுபோல், இந்தியக் கண்டத்திலே தமிழகம் இருக்கிறது என்று சொன்னார்கள். ஜப்பான் நாட்டிலுள்ளவர்கள்போல். அறிவும், ஆற்றலும், தொழில் நுணுக்கத் திறனும் பெற்றவர்கள் மிகுந்து இருப்பதால், அங்கே உள்ள தொழில்களைப் போன்று தமிழகத்தில் ஆரம்பிக்க ஆர்வம் காட்டப்படவேண்டுமென்று குறிப்பிட்டு இருக்கிறார்கள்.



1971 ஜூன் 30] [திரு. செ. கந்தப்பன்]

கடந்த சில ஆண்டுகளில் உள்ள நம்முடைய தொழில் வளர்ச்சியைப் பார்க்கிறபோது, அது போன்று சில முயற்சிகளைச் செய்து வருகிறோம் என்றாலும், பிளாஸ்டிக்ஸ், கெமிகல்ஸ், எலக்டிரானிக்ஸ் போன்ற தொழில்களுக்கு உரிய முயற்சிகள் எடுத்துக் கொள்ளவேண்டும். குறிப்பாக, எலெக்டிரானிக்ஸ் துறையில் இன்னும் அதிகமான முயற்சி எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஜப்பான் மிகமிக உயர்ந்து விளங்கும் மேலை நாட்டோடு ஒப்பிட்டுப் பார்க்கிற அளவுக்கு வளர்ச்சி பெற்று, வளர்ச்சி அடைந்த மேலை நாடுகளில்கூட அங்கே இருக்கும் ஏர்போர்ட்டுகளிலே வரி இல்லாது சரக்குகளை வாங்குகிற நேரத்தில், மற்ற நாட்டைவிடக் கவர்ச்சியாகவும், குறைந்த விலையிலும் நல்ல சரக்காகவும் உற்பத்திசெய்து அந்தச்சந்தையை ஜப்பான் நிரப்பி வைத்து விடுகிறது. மூலப் பொருள்கள் இல்லாமல் எந்த அளவுக்கு முன்னேறி இருக்கிறார்கள் என்பதைப் பார்க்க வேண்டும். அந்த வகையில் கவனம் செலுத்த நாமும் பல்வேறு தொழில்களை ஆரம்பிக்க முயற்சி மேற்கொள்வதற்கு நாம் செய்யும் பரிந்துரை என்ன என்பதை நினைத்துப் பார்க்காமல் இருக்கமுடியவில்லை.

எனக்கு முன்னாலே பேசிய டாக்டர் ஹாண்டே அவர்கள் குறிப்பிட்டார்கள். தமிழக அரசுக்கு விண்ணப்பம் போட்டால் அது எல்லாம் டெல்லிக்குப் போகிறதா அல்லது இல்லையா என்று கேட்டார்கள். அப்படி அவர்கள் சொன்னது எனக்கு ஆச்சரியத்தைக் கொடுத்தது. நான் டெல்லியில் இருந்தபோது எனக்கு ஏற்பட்ட அனுபவத்தைக் கூறுகிறேன். நம்முடைய தமிழகத்திலே உள்ள அரசு, விண்ணப்பங்களைப் பரிசீலித்து, பரிந்துரை செய்து, அதற்கு உரிமங்கள் வழங்க, அனுமதி வழங்க மத்திய அரசுக்கு அனுப்புவார்கள். தமிழகத்தைச் சார்ந்தவர்கள் என்னை வந்து சந்திக்கிற நேரத்தில், தமிழகத்திலே உள்ள தொழில் துறை, அந்த விண்ணப்பங்களை ஒரு சில நாட்களுக்குள்ளே பரிசீலித்து மேலே அனுப்பி விடுகிறது. இங்கேயிருந்துதான் பதில் வருவது தாமதமாகிறது என்று சொல்வார்கள். நம்முடைய டாக்டர் ஹாண்டே அவர்கள் ஒரேயடியாக அந்தத் துறையைச் சாடியதைக் கொஞ்சம் அச்சத்தோடு பார்க்கிறேன். காரணம், நான் அவர்களைப் பற்றிக் கேள்விப்பட்டதெல்லாம், ரொம்ப நுணுக்கமாகப் பேசுவார்கள் என்றுதான். எனவே, ஏதோ சில குறைகள் எங்கோ ஏற்பட்டதை அதையும் சுட்டிக் காட்ட விரும்பாமல், ஒரேடியாக அரசாங்கத்தையும், அமைச்சரவையும், திறமைக் குறைவாக இருக்கிறது என்று குறிப்பிட்டது ஆச்சரியமாக இருக்கிறது.

உண்மையிலேயே நான் அறிந்த வரையில் நம்முடைய தொழில் அமைச்சரும், அந்தத் துறையைச் சார்ந்த அதிகாரிகளும் மிகவும் திறமை படைத்தவர்கள், ஒரு திறன் படைத்த சூழ்நிலையில் பணியாற்றிக்கொண்டு இருக்கிறார்கள் என்பதுதான். இதைப் பல்வேறு விரைவு நடவடிக்கைகள் நமக்குக் காட்டிக்கொண்டு வருகின்றன.

தமிழகத்தைப் பொறுத்தவரையில் கைத்தறிக்காக ஒரு மாவட்டக் குழு ஒன்று அமைக்கப்பட்டு இருக்கிறது. தொழில்களுக்கு உரிமை வழங்கினாலும் மூலப்பொருள்கள் பெறுவதற்கு டெல்லி அரசோடு எந்த அளவுக்கு நம் அரசாங்கம் போராட வேண்டியிருக்கிறது என்பதைச் சொல்வது பொருத்தமாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

சில வேலைகிடைக்காத பொறியாளர்கள் ஒன்றாகச் சேர்ந்து, மேட்டூர் பகுதியில் ஒரு தொழிற்சாலை ஆரம்பிக்க முன்வந்தார்கள். அதற்காக அவர்களுக்கு 'பாரபின் வாக்ஸ்' தேவைப்பட்டது. நம்முடைய தமிழக அரசு ஏறத்தாழ 7, 8 தடவைக்கு மேல் டெல்லி அரசுக்கு வலியுறுத்தி எழுதியும், அது கவனிக்கப்படுவதாகத் தெரியவில்லை. இருந்தாலும் மேற்கொண்டு கடிதங்கள் தொடர்ந்து எழுதப்பட்டு வந்ததற்குப் பின்னாலே, "பாரபின் வாக்ஸ்" கொடுப்பதற்குப் போதிய ப்ரோவிஷன் இல்லை என்று சொல்லி, ஒரு ஏஜெண்ட் பெயரைச் சொல்லி அவரிடத்தில் பெற்றுக்கொள்ளுங்கள் என்று சொன்னார்கள். அந்த ஏஜெண்டிடம் சென்று கேட்டபோது, எங்களுக்குப் போதிய அளவுக்கு ஒதுக்கீடு இல்லை என்று தெரிவித்து விட்டார்கள். அந்த நண்பர்கள் வெளியே சிலர் கள்ள மார்க்கெட்டில் 'பாரபின் வாக்ஸ்' விற்கிறார்கள் என்று கேள்விப்பட்டு, அவர்களிடமிருந்து கொடேஷன் பெற்று வாங்கி வருகிறார்கள். டெல்லி அமைச்சரகத்திலே இல்லை என்று சொல்கிறபோது, அதே சமயத்தில் எங்கோ கள்ள மார்க்கெட்டில் அந்த சரக்கு விற்கப்படுகிறது என்று சொன்னால், எந்த அளவுக்கு டெல்லி அரசு இருக்கிறது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். நம்முடைய மாநில அரசு சிபார்சு செய்தும் முடியவில்லை. இப்படிப் பல்வேறு நிலையில் காரியங்கள் நடைபெறுகின்றன. தொழில் அறிவும், நிதி வசதியும் பெற்ற ஒருவரைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு ஒரு தொழில் ஆரம்பிக்க அனுமதி வழங்கலாம் என்று சொன்னால், பரிந்துரை செய்து அனுப்பினால், அந்தக் காரியத்தில்கூட யாருக்கு நம் அரசு பரிந்துரை செய்து அனுப்பினார்களோ, அந்த ஆளுக்குக் கொடுக்காமல், வேறு வடநாட்டைச் சேர்ந்த ஒருவருக்கு உரிமை கொடுக்கப்பட்டது எனக்குத் தெரியும். அதை இங்கே வெளியிடுவது முறையாக இருக்காது என்று கருதுகிறேன். நம்முடைய தமிழகத்தில் தொழில்கள் தொடங்க வசதி, வாய்ப்பு பெற்றுள்ள ஒருவரைத் தேர்ந்தெடுத்து பரிந்துரை செய்தும்கூட, அவர்களுக்கு இல்லை என்று டெல்லி அரசு முடிவு எடுத்து, டெல்லி அரசுக்குத் தெரிந்த வேறு சில தொழிலதிபர்களுக்கு அந்த உரிமங்கள் வழங்கப்பட்டு இருக்கின்றன.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

ஆக, அந்த அளவிற்குத் தான்தோன்றித்தனமான போக்கில், எந்தக் கட்டுப்பாட்டிற்கும் ஆளாகாமல், அந்நியச் செலாவணி தேடுவது தன்னிடம் இருக்கிறது, உரிமம் கொடுக்கும் பொறுப்பு தன்னிடம் இருக்கிறது, மூலப் பொருள்கள் விநியோகம் தன்னிடம் இருக்கிறது. உள்நாட்டில் உற்பத்தியாகும் பொருள்களை விநி





யோகிக்கும் உரிமை தன்னிடம் இருக்கிறது என்ற வகையில் தொழில் வளர்ச்சியைக் கட்டுப்படுத்த முடியும் என்று டெல்லி அதிகாரத்தை வைத்திருக்கும் வரையில், நாம் எவ்வளவு பாடு பட்டாலும், நம்முடைய உழைப்பில் 5 அல்லது 10 சதவீதம்தான் நமக்கு வெற்றியாகக் கிடைக்கும். முழுமையாகக் கிடைக்கும் நிலையில்லை. அதையேதான் மாண்புமிகு முதல்வர் அவர்களும் தன்னுடைய நிதிநிலை அறிக்கையில் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். நாம் எத்தனை உரிமங்களுக்கு வேண்டுகோள் விடுகிறோமோ அவ்வளவையும் பெறமுடியவில்லை என்பதை மாண்புமிகு தொழில் அமைச்சரும் எவ்வளவோ இடங்களில் எடுத்துக் கூறியிருக்கிறார்கள்.

இந்த நிலை மாறுவதற்கு, தொழில் வளர்ச்சி நாம் அடைவதற்கு, மாநில உரிமைதான் வழி. குறைந்த அளவிற்கு அந்நியச் செலாவணியில் நமக்கென்று சில ஒதுக்கீடுகள் வேண்டும். உதாரணத்திற்கு ஒன்று சொல்லுகிறேன். சில ஆண்டுகளுக்கு முன் பேசப்பட்டது. எண்ணூரில் ஒரு தொழிற்சாலை அமைக்க நிலம் ஒதுக்கப்பட்டது. கடலுக்குள்ளேச் சென்று மீன் பிடிக்க விசைப்படகில் பொருத்த மெரைன் எஞ்சின்கள் உற்பத்தி செய்வது என்றும், ஜப்பான் நாட்டுக் கூட்டுறவோடு நடத்துவது என்றும் ஒரு திட்டம் போடப்பட்டது. அது ஒத்துக் கொள்ளப்படும் சூழ்நிலை இருந்து, 200 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டு இருந்தது. பிறகு அது அப்படியே கிடப்பில் போடப்பட்டு விட்டது. ஒரு காலகட்டத்தில் ஒரு தொழில் அதிபர் வெளிநாட்டுக் கூட்டுறவோடு, என்மார் எஞ்சின்களை தயார் செய்யவேண்டாம் என்று சொன்னார்கள். சமீபத்தில் ராஞ்சியில் மேற்கு ஜெர்மனி கூட்டுறவோடு மெரைன் எஞ்ஜின் உற்பத்தி மேற்கொள்ளப்பட்டு, விரைவில் உற்பத்தி செய்ய இருக்கிறார்கள் என்ற செய்தி, செய்தி ஏடுகளில் வந்திருக்கிறது. மெரைன் என்ஜின்கள் படகுகளில் புகுத்தப்படும்போது, குறிப்பாக நீர்மட்டத்திற்கு அடியில் எஞ்ஜின்கள் போவதால், படகுகளில் இருப்பவர்கள் மேல் தட்டில் எஞ்சின் சூடு ஏறாத வகையில் இருக்க வேண்டும் என்று எஞ்சின்களைப் பயன் படுத்துவோர் திரும்பத் திரும்பச் சொல்லி வருகிறார்கள். பாராளுமன்ற மதிப்பீட்டுக் குழுவில், டெல்லியில் நான் இருந்தபோது மெரைன் சர்வேயும் எடுத்துக் கொள்ளப்பட்டது. அந்த ரிபோர்ட்டில் அது பற்றி பரிந்துரை செய்யப்பட்டது, மெரைன் என்ஜினின் தேவையைச் சரிவர ஈடு செய்யவில்லை, குறிப்பாக என்மார் என்ஜின் ஒரு சிறந்த என்ஜின் என்று கருதப்படுவதால், மீனவர்கள், மேற்குக் கரைகளிலும், கிழக்குக் கரைகளிலும், அதையே கேட்கிறார்கள், என்பதையெல்லாம் குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த எஞ்ஜின் உற்பத்தியை நிறுத்தி வைப்பதால், உற்பத்தி குறைகிறது. பெரும் அளவிற்கு அந்நியச் செலாவணி அடையமுடியவில்லை என்பது பலமாக பரிந்துரை செய்யப்பட்டது. ஆனால் அதைக் கிடப்பில் போட்டுவிட்டு, ஆகாத காரணத்தை சொல்லி, அவர்களுக்குத் தேவை என்ற காரணத்தால், கொலாப்ரேஷன் தேவை

யில்லை என்று சொல்லிவிட்டு, ராஞ்சியில் கொலாபரேஷனோடு அனுமதிக்கிறார்கள் என்றால், எந்த அளவுக்கு போக்கு இருக்கிறது, உண்மையில் அது எவ்வளவு வரம்பற்ற போக்கு தெளிவற்ற போக்கு ஓரவஞ்சனையான போக்கு என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

இப்படி எத்தனையோ உதாரணங்களைக் கொடுத்துக் கொண்டேப் போகலாம். இம்மாதிரி நிலையில் மாநிலத்தின் உரிமையைப் பெற அரசின் பின்னால் நிற்கக் காத்திருக்கிறோம். எதிர்க் கட்சி நண்பர்களும் இந்தப் பிரச்சினையை இந்த வகையில் ஆராய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, அமைச்சரவையை பெரிதும் பாராட்டி இந்த மாத இறுதியில் வெளிநாடு பயணமாகும் தொழில் அமைச்சர் அவர்களை வெற்றி நாடுவதாக என்று வாழ்த்தி இந்த மானியக் கோரிக்கையை ஆதரித்து, முடிக்கிறேன்.

* **திரு. எம். சுரேந்திரன்:** துணைச் சபாநாயகர் அவர்களே, மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் இந்த சபைமுன் வைத்திருக்கிற மானியக் கோரிக்கைமீது, நான் அளித்திருக்கிற வெட்டுப் பிரேரணையைத் தொடர்ந்து, சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். நம்முடைய மாநிலத்திலே தொழில் வளர்ச்சி மிக அதிகமாக இருக்கவேண்டும் என்று நம்முடைய அரசு பல காரியங்களைச் செய்து வருகின்றது என்றாலும், அந்தக் காரியங்களில் வேகமாக வளரவேண்டும் என்ற நம்முடைய உணர்வு காரணமாக சில காரியங்கள் நம்முடைய கவனத்தில் படாமலேயே போய்விடுகின்றன என்பதை முதலிலே கூறிக்கொள்ள விரும்புகிறேன். நம் மாநிலத்திலே இருக்கின்ற பெரும் தொழிற்சாலை அதிபர்கள், தங்கள் தொழிற்சாலைக்கு வேண்டும் என்று நிலங்களை எடுத்துக் கொண்டு, அந்த நிலங்களை தொழிற்சாலைக்காகப் பயன் படுத்தாமல், வேறு காரியங்களுக்குப் பயன்படுத்தும் நிலைகள் நம்முடைய மாநிலத்தில் பல இடங்களில் இருக்கிறது. அதுவும் இந்த அரசுக்குத் தெரிந்தே இருக்கிறது. சமீப காலத்தில் நில உச்ச வரம்புச் சட்டத்தைத் திருத்தியபோது, ஒவ்வொரு தொழிற்சாலைக்கும் இவ்வளவு வைத்துக் கொள்ளலாம் என்று விதி இருந்தாலும், பலபேர்கள் விதி விலக்குப் பெற்றிருக்கிறார்கள். விதிவிலக்குப் பெறுவதற்குச் சட்டத்தில் இடம் இருந்தாலும், விலக்குகள் நியாயம் இல்லாமல், பெற்றிருக்கிறார்கள் என்பதை நான் சொல்லுகிறேன். குறிப்பாக மேட்டூரில் அலுமினியம் தொழிற்சாலை இருக்கிறது. அந்தத் தொழிற்சாலைக்கு ஏராளமான நிலம் இருக்கிறது. அந்த நிலத்திலே எல்லாவற்றையும் தொழிற்சாலைக்குப் பயன்படுத்தினார்கள் என்றால் ஆட்சேபணையில்லை. ஆனால் அங்கே நெல் விளைவித்து, புல் விளைவித்து, மாட்டுப் பண்ணை நடத்தி, மாமரங்களையும், தென்னை மரங்களையும் பயிர் செய்து, அந்தவகையில் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப் பட்ட நிலங்களை, ஒரு காலத்தில், தொழிற்சாலை வருவதற்கு முன்னால், நிலமில்லாத ஏழை எளிய விவசாயிகள் பயிர் செய்து கொண்டிருந்தார்கள். அவர்கள் பெற்று வந்த வருமானத்தை இன்றைக்கு தொழிற்சாலை நிர்வாகம் பெறுவதற்கு வாய்ப்பாக இது அமைந்திருக்கிறது.





அதேப் போன்று மற்ற இடங்களிலும் இருக்கிறது. கோவையில் இம்மாதிரி தொழிற்சாலைகளிடம் நிலம் இருக்கிறது. இவற்றை அரசாங்கம் கவனத்தில் எடுக்க வேண்டும். தொழில் வளரவேண்டும் என்றால், அந்தத் தொழில் வளர்ச்சிக்குத் தேவையான வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும். அப்படிச் செய்யும்போது, நியாயம் இல்லாத வகையில், கெடுதல்கள் வரும் அளவில் செய்து விடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும், என்பதை இந்த நேரத்தில் சொல்லி கொள்வதன் மூலம், இந்தப் பிரச்சினையை இந்த அரசாங்கம் கவனத்தில் எடுத்துக்கொண்டு அதைப்பற்றி ஆராயும், அந்தக் கேடுகளை நல்ல முறையில் தீர்க்கும் என்று எதிர்பார்க்கிறேன்.

இந்த அரசு கூட்டு முறையில் தொழில் நடத்துவது என்று கூறுகிறது. கூட்டுத் துறையில் தொழில்கள் நடத்துவது என்றால், அரசாங்கமும், தனியாரும் தொழில் நடத்துவதற்கான ஏற்பாடு என்று நினைக்கிறேன். தனியார் துறையில் தொழில் நடத்துகிறார்கள் என்றால், அவர்கள் இலாபத்தை மையமாகக் கொண்டு எல்லாவிதமான அமைப்புக்களையும் செய்கிறார்கள். ஆனால், அரசாங்கத்தில் தொழில் சேவையை மையமாகக் கொண்டு நடத்தும் காரியம். அந்தத் துறையில் ஈடுபட்டிருக்கின்ற தொழிலாளர்களுக்கு நல்ல சம்பளமும், வசதிகளும் செய்து கொடுக்க வேண்டும். உற்பத்தியாகும் பொருள்கள், அரசாங்கத்திற்கு லாபமாகவும், மக்களுக்கு உதவியாகவும் உற்பத்தி செய்யப்பட வேண்டும் என்ற குறிக்கோளை மையமாகக் கொண்டு செய்யப்படும். ஆகவே, தனியார்கள் செய்யும் தொழிலில் உள்ள கருத்திற்கும், அரசாங்கம் கொள்ளும் கருத்திற்கும் முரண்பாடு ஏற்படும் தன்மைகள் இருக்கின்றன. இந்த இரண்டு பேரும் சேர்ந்து தொழில் நடத்துவது என்றால் அதனால் பலன் அரசாங்கத்திற்கு வருமா? அரசின் பொது நோக்கம் நிறைவேற உபயோகமாக இருக்குமா என்பதை ஆராய வேண்டும் என்று கருதுகிறேன்.

ஏதோ மூலதனம் திரள்வதற்காகத்தான் இந்த வழி என்றாலும் கூட மூலதனம் திரட்டுவது எதற்காக என்ற கேள்வியைப் பார்க்க வேண்டும். மூலதனம் திரள்வது பயன் அளிக்கத்தக்க காரியங்களைச் செய்யவேண்டும் என்பதற்காகவே. தொழில் உண்டாகிவிடட்டும், பலன் யாருக்குச் சென்றாலும் பரவாயில்லை என்ற நோக்கம் இந்த அரசுக்கு இருக்க முடியாது என்று நான் உறுதியாக நம்புகிறேன். சேவையை நாம் மையமாக வைத்திருக்கிறோம், லாபத்தையே தனியார் மையமாக வைத்துக்கொண்டிருக்கிறார்கள். லாபத்தையே மையமாக வைத்துக்கொண்டிருப்பவர்களோடு ஒன்றாகச் சேர்ந்து நிர்வாகத்தை எப்படி நடத்துவது என்பதுதான் பிரச்சினையாக இருக்கிறது. பல நிறுவனங்களுக்கு நாம் கடன் அளித்திருக்கிறோம். கடன் அளித்திருக்கிற நிறுவனங்களில் எல்லாம் அரசாங்கத்தின், பிரதிநிதிகள் இருக்கிறார்கள். அரசாங்கப் பிரதிநிதிகள் இருந்தாலும் கொள்கை வகுப்பதற்குத்தான் இவர்களைக் கலந்துகொள்கிறார்களே தவிர நிர்வாகத்தின்

உற்பத்தி, விநியோகம், இன்னும் ஆயிரக்கணக்கான தொழிலாளர்களை நியமித்தல் ஆகியவற்றில் எல்லாம் அரசாங்கப் பிரதிநிதிகளுக்குப் பங்கு கிடையாது.

அதோடு மட்டுமல்ல—அத்தகைய நிறுவனங்களை எடுத்துக் கொண்டு பார்த்தால் அரசாங்கத்தில் சேவை செய்து ரிடையரான அதிகாரிகள் எல்லாம் சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். காரணம் அரசாங்கத்தில் இருந்து சட்டபூர்வமாகவும், சட்ட விரோதமாகவும், முறையாகவும், முறைகேடாகவும் தங்களுடைய நிர்வாகத்திற்கு அதிகமான லாபத்தைப் பெறுவதற்கு அரசாங்கத்தில் இருந்து ரிடையரான உயர் அதிகாரிகளை நியமித்துக் கொண்டு, பயன்படுத்திக் கொள்கிறார்கள். பெரும் நிர்வாகங்களை எடுத்துக்கொண்டால் மாவட்டத்தில் இருக்கிற அவ்வளவு அதிகாரிகளும் அவர்களது விருப்பத்திற்கு அனுசரணையாக நடக்கக் கூடியவர்கள்—நிலப்பிரபுத்வ முறை மாறி முதலாளித்துவத்திற்குச் செல்கிற அளவிற்கு ஒவ்வொரு இடங்களிலும் நிலைமை வளர்ந்து கொண்டு வருவதைப் பார்க்கிறோம்.

அப்படி இருக்கிற நிலையில் அரசாங்கம் தனியாரோடு கூட்டாகச் சேர்ந்த நிறுவனம் என்பதே முறை அல்ல. இதற்குப் பதிலாக அரசாங்கமே தனியாக பல தொழில்களை உண்டாக்க முயற்சிக்க வேண்டும். அப்படி இல்லாவிட்டால் தனியார் துறையில் தொழில் அமைக்க முன்வருகிறவர்களுக்கு கடன் உதவி அளிக்கலாம். அந்தக் கடனுக்கு நமக்கு உத்தரவாதம் இருக்கிறது. ஆனால் த்னியாரோடு சேர்ந்து பங்குகள் எடுத்துக்கொள்கிற முறை அரசாங்கத்திற்குக் கெட்ட பெயரைத்தான் உண்டாக்கும்--தனியார் அரசாங்கத்தை ஏமாற்றி கொள்ளை லாபம் அடையச் செய்யத்தான் வழிவகுக்கும் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தாற்போல நம்முடைய பொதுத்துறையில் இருக்கிற சிறு தொழில்கள் மற்ற தொழில்கள் எல்லாம் நடக்கிற முறை, நிர்வாக அமைப்பு ஆகியவற்றைக் கண்காணிக்க வேறு ஏதாவது அமைப்பு ஒன்று தேவைப்படுகிறது. குறிப்பாகச் சட்டமன்றத்தில் இருக்கிறவர்கள், பாராளுமன்றத்தில் இருக்கிறவர்கள் உத்தியோகப் பற்றற்ற நிபுணர்கள் ஆகியவர்களைக்கொண்ட கமிட்டியாக அமைத்து சரியான முறையில் பொதுத்துறைத் தொழில் நிறுவனங்களைக் கண்காணிக்க ஏற்படுத்தினால் மிக்க உதவியாக இருக்குமென்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தாற்போல பொதுத்துறையில் இருக்கிற தொழில்களில் ஆங்காங்கிருக்கிற தொழிலாளர்களுடைய பிரதிநிதிகளையும் போட்டு அவர்களுக்கும் சரியான சந்தர்ப்பத்தை அளித்தால் அவை சரியாக நடைபெறுவதற்கும், அதில் ஏற்படுகிற தவறுகளை உடனடியாகத் திருத்திக்கொள்வதற்கும் முடியும். அதுபோன்ற நடவடிக்கையை மத்திய அரசும் எடுத்துக்கொண்டு வருகிறது. இங்கும் தொழிலாளர்களுக்குரிய பங்கைத் தருவதற்கான விதிமுறைகளை வருங்காலத்தில் உண்டாக்க 'வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





அடுத்தாற்போல நம்முடைய கோவை ஜில்லாவில் மூடியிருக்கிற மில்கள் பல பல வருஷங்களாக மூடிக்கிடக்கின்றன. மேலும் பல மில்களை மூடுகின்ற முயற்சிகளும், தொழிலாளர்களின் கிளர்ச்சிகளும் தொடர்ந்து இருந்துகொண்டிருக்கின்றன. மூடியது மூடியபடி இருக்கின்றது. புதியதாகவும் மூடப்பட்டு வருகிறது. இதற்கு சரியான உறுதியான நடவடிக்கை எடுக்கவேண்டும். கோவையில் உள்ள காளேஸ்வரா மில், சோமசுந்தரா மில் மிக்க பழமையான மில்கள். இயந்திரமும் பழமையானது. அவற்றை எடுத்துக் கொண்டால் லாபம் வருமா, நஷ்டம் வருமா என்று யோசித்துக் கொண்டிருக்கிறார்கள். வேலையில்லாதவர்களுக்கு வேலை அளிக்க தொழிற்சாலையைத் திறக்க வேண்டுமென்று சொன்னால் சோஷலிசம் பேசுகின்ற நாம், சோஷலிசக் கருத்துக்களை உள்ளே அடக்கிக்கொண்டிருக்கிற நாம் ஒரு திட்டமான கொள்கையை வரையறுத்துக்கொண்டாக வேண்டும். தொழிற்சாலை நிர்வாகம் காரணமாக, முதலாளியின் நிர்வாகம் காரணமாக தொழிலாளர்களைப் பட்டினிபோடுகிற நிலைமையை நாம் அனுமதித்துக்கொண்டிருப்பது சரியானது அல்ல. ஆகவே தொழிற்சாலையை மூடினாலும் கூட அவர்கள் வாழ முடியும் என்ற நிலையை உண்டாக்கிவிட்டால் நம்முடைய கருத்துக்கள் நிறைவேறுவதாகச் சொல்ல முடியும். தொழிற்சாலை மூடப்பட்டு, உடனடியாக அவர்களுடைய பிரச்சினையைத் தீர்க்க முடியாது என்று சொன்னால் அவர்களுக்கு வேறு வேலைவாய்ப்பை உண்டாக்கித் தர முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும். அப்படியும் இல்லை என்றால் அவர்கள் உயிர்வாழ்வதற்கு வழிவகைச் செய்தாகவேண்டும். இந்த முறையில் இந்தப் பிரச்சினையை அரசாங்கம் அணுகவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தாற்போல இருக்கிற சிறு தொழில்களை நாம் விரிவாக எல்லா இடங்களுக்கும் பரவலாகக் கொண்டுவரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஆனால் சிறு தொழில்கள் வளர்வதற்கு அந்த அந்தப் பகுதியில் இருக்கிற நிலைமைகளை அனுசரணையாக இல்லை என்று சொல்ல விரும்புகிறேன். ஒரு சிறு தொழில் ஆரம்பிக்க வேண்டுமென்று இரண்டாயிரம், மூவாயிரம் தொகை வைத்திருப்பவர்கள் முதலில் மாவட்ட சுகாதார அதிகாரியை அணுகி அனுமதி பெறவேண்டியிருக்கிறது. அதற்குப் பிறகு மின்சாரத்துறையினரை அணுகி மின்சார வசதி பெற முயன்றாக வேண்டியிருக்கிறது. இப்படி ஒவ்வொரு காரியமாக ஒவ்வொரு துறையினரை அணுகி தொழிலை ஆரம்பிக்கலாம் என்ற நிலை வருவதற்குள் பல வருடங்கள் ஆகிவிடுகின்றன. கையில் இருந்த சிறு தொகையும் கரைந்து தொழிலையே ஆரம்பிக்க முடியாத நிலைக்கு வந்துவிடுவதைப் பார்க்கிறோம். இப்படி சிறுதொழிலை ஆரம்பிக்க வருகிறவர்களுடைய சிறு மூலதனம் ஆரம்ப நிலையிலேயே பல சங்கடங்களைச் சமாளிக்க செலவழிக்கப்பட்டுவிடுகிறது. தொழிலை ஆரம்பிக்க முன்வருகிறவர்கள் அதைக்கொண்டு லாபம் சம்பாதிக்க முன்வருகிறார்களே தவிர இருக்கிற பொருளையும் இழப்பதற்கு முன்வர முடியுமா? ஆகவே சிறு தொழில்கள் பரவவேண்டுமென்றால் அதிகச் செலவின்றி அவர்

களுக்கு வேண்டிய வசதிகள் எல்லாம் உடனுக்குடன் அளிக்கப்படுவதற்கான திட்டம் ஒன்றை நாம் ஏற்படுத்தியாக வேண்டும். அப்படிச் செய்தால்தான் பலருக்கும் சிறு தொழில்களை ஆரம்பிக்க வழி பிறக்கும். அத்தகைய நிலை இப்போது இல்லை என்பதை வருத்தத்துடன் இந்த நேரத்தில் அரசின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, கைநெசவுத் தொழிலாளர்களின் நிலைமையைப் பற்றிப் பலபேர் குறிப்பிட்டார்கள். விவசாயத் தொழிலுக்கு அவர்களுக்கு பல வசதிகளை இந்த அரசாங்கம் செய்துகொடுக்க விரும்புகிறது என்றாலும் அவர்களுக்கு நூல் மார்க்கெட்டில் இருக்கிற நூலைவிட அதிகமான அளவில் தான் விற்கப்படுகிறது அடுத்தபடியாக இதில் அதிகமான்பேர்கள் ஈடுபட்டு வருகிறார்கள். என்பதாக பல நேரங்களில் புகார்கள் வருகின்றன. அதற்கு இடமின்றி நியாயமான விலையில் அவர்களுக்கு நூல் கிடைக்கவும், அவர்கள் உற்பத்தி செய்கிற துணிக்கு மார்க்கெட் கிடைக்கவும் வழிவகை செய்யவேண்டுமென்று சொல்லி நான் அளித்திருக்கிற வெட்டுப் பிரேரணையை வற்புறுத்தி என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* திரு. ஏ. ஆர். சுப்பையா: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழில் அபிவிருத்திக்கு நமது அரசாங்கம் செய்து வருகிற காரியங்களை எல்லாம் பாராட்டி நன்றி தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த ஆண்டில் இரண்டு புத்தகங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.
'Information for Small Industrialists' 'Incentives for starting Industries in Tamil Nadu' இவைகளைப் பார்ப்பவர்களுக்கு தொழில் நடத்தவேண்டும் என்ற ஊக்கம் தானாகவே ஏற்படக்கூடிய நிலையில் இருக்கின்றன. இவைகளைத் தமிழில் அச்சிட்டு தாலுக்காதோறும் கொடுக்கக்கூடிய ஏற்பாட்டைச் செய்தால் பல தொழில்கள் ஏற்படுவதற்கு வாய்ப்பு ஏற்படும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இதுபோல ரூல்ஸ் அண்டு ரெகுலேஷன்ஸ் அடிக்கடி மாற்றப்படுகின்றன. அவையும் அவ்வப்போது 'புக்லட்' மூலம் விநியோகம் செய்தால் மிகவும் உதவியாக இருக்கும்.

இன்னும் ஜியலாஜிகல் ப்ராஞ்சு இலாக்கா மூலம் செயல்பட்டு வருகிறது. இன்று தொழில் இலாகாக்களில் எல்லாம் dnal Control இருந்து வருகின்றது நிதி சம்பந்தப்பட்ட மட்… மத்திய சர்க்காரிடமிருந்து அதிகப் பணம் கிடைக்கும் எ…று(?) சொல்வதற்கு இல்லை. சில நிறுவனங்கள் மத்திய சர்க்காரால் நிறுவப்பட்டு இயங்கி வருகின்றன. தொழிற்சாலைகளை மேலும் அதிகமாக்க—நாம் அவைகளை ஊக்குவிக்க—முறையாகச் செயல்பட வேண்டும். மத்திய அரசு (NSIC) National Small Indu-tries Corporation ஒன்றை நம் மாநிலத்தில் ஆரம்பித்திருக்





கிறார்கள். அதிலும் (SIDCO) சில மாதங்களாகச் செயல்படுகிறது. dupl cation of work ஆக இருக்குமோ என்று சந்தேகப்படுகிறேன். நமக்குப் பணக் குறைபாடு இருப்பதால் (NSIC) மூலம் செயல்பட நாம் தூண்டினால் அதன் மூலம் அதாவது மத்திய அரசு மூலம் பணம்வர அதிக வாய்ப்பு ஏற்படும். மகாராஷ்டிரம், பஞ்சாப், மேற்கு வங்காளம் போன்ற மாநிலங்கள் இந்த (OISN) உதவியை நன்றாய் உபயோகப்படுத்திக் கொள்ளுகின்றன.

இன்று Small scale Industries -க்குப் பணஉதவி கீழ்க்கண்ட ஸ்தாபனங்கள் கொடுக்கின்றன.

(1) Department of Industries, (2) Tamil Nadu Industrial Investment Corporation, (3) Small Scale Development Corporation (SIDCO), (4) State Bank of India and 14 Nationalised Banks.

இவைகள் மூலம் பண உதவி பெறுவதில் சங்கடங்கள் இருக்கின்றன என்று நான் சொல்லும்போது அவைகளைப் பற்றிக் குறை கூறுவதாகக் கொள்ளக்கூடாது. பல இலாக்காவினருக்குப் பதில் சொல்ல வேண்டிய நிலையில் பண உதவி கோருவோர் இருக்கிறார்கள். இந்தப் பணத்தை யாரிடத்தில் கேட்பது, எப்படிக் கேட்பது? அதில் ஏற்படும் தாமதம் அதிகம். இது duplcat of work இவை 'பல' வாக இல்லாமல் சிலவாக இருந்தால் நலம். Industrial Department Set up Assistant Director, Regional Director Depty Director போன்றவர்கள் உதவிக்கு வரும் தொழில்களுக்கு சிபாரிசு செய்து, வங்கியிலிருந்து உதவி வாங்கிக் கொடுக்கலாம். மாவட்ட கலெக்டர்களிடம் பொறுப்பை ஒப்படைக்கலாம் என்ற யோசனை இருப்பதாக கேள்விப்பட்டேன். அப்படிச் செய்வது நல்லதல்ல. Technical Department இல் Technical persons -க்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். (SIDCO)

Tamil Nadu Industrial Development Corporation (SIDCO) Small Industrial Development Corporation Tansi Small Industries Corporation (Sipso) State Industries Promotion Corporation ஆகியவை இருக்கின்றன.

இவைகளில் தொழில் அனுபவம் உள்ள Non- officials and Technical persons -ஐ அதிகமாக Directors ஆக நியமிக்க வேண்டும். மற்ற அதிகாரிகளைப்பற்றி அதனால் குறைசொல்லுகிறேன் என்று எடுத்துக் கொள்ளக்கூடாது. அந்தந்தத் துறையில் அனுபவமுள்ளவர்களுக்கு நுட்பமாக Technical persons பிரச்சனைகளைப்பற்றி, அதிகம் தெரியும். இன்று தொழில் இலாக்காவில் பல ஆலோசகர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு இன்னும் பொறுப்பு அதிகமாக கொடுத்து, அவர்கள் மூலம், தேசியமயமாக்கப்பட்ட பாங்குகள் மூலம் உதவிபெற்றால் தொழில் வாய்ப்பு, வேலை வாய்ப்பு விஸ்தரிப்பு ஏற்படும். நான் திரும்பத் திரும்ப குறிப்பிட விரும்புவது தொழில்கள் சம்பந்தப்பட்ட வரையில் Technical person -க்கு முக்கியத்துவம் கொடுக்க

வேண்டும். அப்படி நடைமுறையில் இல்லை. அதனால்தான் எதிர் பார்க்கப்பட்ட முன்னேற்றம் ஏற்படவில்லை என்று நினைக்கிறேன். Dual Control இருக்கலாகாது. அதனால் பல இன்னல்கள் தான் ஏற்படுகின்றன. **Electricity Board** ஐ நம்பி சில Government யூனிட்டுகள் இருக்கின்றன. அவைகள் போர் டோடு இணைக்கப்பட வேண்டும். **Punjab aharasatra** போன்ற மாநிலங்களில் **(NSIC)** மூலம், **Purchase programme** திட்டம் வைத்து இருக்கிறாகள். அதை நாமும் அமுல் செய்ய திட்டம் வைத்து இருக்கிறார்கள். அதை நாமும் அமுல் செய்ய ஏற்பாடு செய்யலாம். அதன் மூலம் உற்பத்தி பெருகும்.

(மணியடிக்கப்பட்டது.)

திரு. வி. கே. இராஜப்பிள்ளை : தலைவர் அவர்களே, நமது தொழில் அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டுள்ள மானியக் கோரிக்கையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன்.

தமிழ் நாட்டிலே பல மாவட்டங்களில் தொழில்கள் எப்படி இயங்குகின்றன எப்படி நல்ல முறையில் செயல்படுகின்றன, குறிப்பாக கழக அரசு ஆட்சி ஏற்பட்ட பிறகு, என்பதை எல்லாம் நண்பர்கள் எடுத்துக் கூறினார்கள். அவற்றை எல்லாம் கேட்க மிகவும் மகிழ்ச்சிகரமாக இருந்தது. ஆனால் அதே சமயத்தில் எதிர்க் கட்சிக்காரர்கள் கழக அரசு வந்த பிறகு தொழில்கள் சரியாக இயங்கவில்லை. குறிப்பாக இந்த 4, 5 ஆண்டுகளில் குறிப்பிடப்படக் கூடிய தொழில்கள் எதும் தொடங்கப்படவில்லை என்று எடுத்துக் கூறினார்கள். அதைக் கேட்கிறபோது என் மனம் சஞ்சலம் அடைந்தது. ஆனால் அவற்றைப் பற்றி எல்லாம் திருப்பித் திருப்பிக் கூற விரும்பாமல் எனது மாவட்டத்தைப் பொறுத்த வரையில் ஒரு சில யோசனைகளை சொல்லுகிறேன்.

நண்பர்கள் கூறியது போல் பிற மாவட்டங்களில் எல்லாம் தொழில்கள் முன்னேற்ற நிலையில் இருக்கும்போது அதிலும் குறிப் பாக கழக அரசு ஆட்சிக்கு வந்த பிறகு எத்தனையோ இன்னல்கள் இருந்தும் கூட குறிப்பாக டெல்லி அரசு நமக்கு உதவியாக இல்லாமல் இருந்தபோதிலும்கூட தொழில்கள் கன்னியாகுமரி மாவட்டத்தில் மாத்திரம் முன்னேற்றம் காணவில்லை என நான் கூறிக்கொள்கிறேன். இப்படி கூறுவதால் நான் கழக அரசை குறை சொல்கிறேன் என்று யாரும் நினைத்து விடக்கூடாது. ஏனென்றால் 1956 வரை நாங்கள் திருவனந்தபுரம் கொச்சியோடு இருந்த காலத்தில் தொழில் முன்னேற்றம் எதும் நடைபெறவில்லை என்பதை எல்லோரும் அறிவார்கள். அந்த அரசு எங்களை மாற்றாந்தாய் மனப்பான்மையோடு தான் நடத்திக்கொண்டு வந்திருக்கிறது. பிறகு வந்த காங்கிரஸ் அரசு கூட எங்கள் மாவட்டத்தில் முன்னேறவில்லை என்ற உண்மையைத்தான் சொல்ல வேண்டும். எதிர்க்கட்சி உறுப்பினர் குறிப்பாக பொன்னப்ப நாடார் அவர்கள் ஒருவேளை இதை மறுக்கலாம். ஆனால் உண்மை அது தான். அவர்களுக்கு தெரியும் நாங்கள் காங்கிரஸ் உடன்





இணைந்திருந்த காலத்திலும் கூட எங்களை மாற்றாந்தாய் மனப் பான்மையுடன் தான் காங்கிரஸ் அரசு நடத்தி வந்தது என்பதை நிச்சயம் அவர்கள் உணர்வார்கள்.

குறிப்பாகச் சொல்லவேண்டும் என்றால் கூட்டுறவுத் துறையிலே ஒரு நூற்பு ஆலை ஆரல்வாய்மொழியிலும், தனியார் துறையில் ஒன்று நாகர்கோயிலிலும் இயங்கி வருகிறது. சுமார் 12½ லட்சம் மக்கள் வாழ்கிற அந்த மாவட்டத்தில் இரண்டே இரண்டு நூற் பாலைகள் தான் இயங்கி வருகிறபோது. அடுத்திருக்கும் திருநெல் வேலியில் சுமார் 25 லட்சம் மக்கள் கொண்ட மாவட்டத்தில் எத்தனையோ நூற்பு ஆலைகள் இருக்கின்றன என்பதை எல்லோரும் அறிவார்கள். நாங்குநேரியிலே நூற்பாலை, பேட்டையிலே நூற் பாலை, விக்ரம சிங்கபுரத்திலே, கோயில்பட்டியிலே, தூத்துக் குடியிலே, நூற்பாலைகள் அப்படி இருக்க கன்னியாகுமரியிலே இரண்டே இரண்டு நூற்பாலைகள் தான் இருக்கின்றன.

அதோடு தொழிற்பேட்டை என்று குறிப்பிடப்பட்ட விதத்தில் இல்லாமல் ஏதோ ஒரு தொழில்பேட்டை என்று இருக்கிறது. இந்த மாவட்டம் இப்படி இருக்கிற நிலைமைக்கு காரணம் கூறவேண்டு மென்றால் அங்குள்ள தலைவர்கள் அரசாங்கத்தோடு நல்ல ஒத்துழைப்பு தராததோடு எதை எடுத்துக்கொண்டாலும் குறை சொல்லிக்கொண்டு இருந்ததுதான் என்றே கூறவேண்டும். அதோடு கூட அங்கே ரயில்வே இல்லாதது மற்றொரு காரணம். மு.ப. 11.00 எந்த தொழில்கள் வளரவேண்டும் என்றாலும் ரயில்வே இருக்க வேண்டியது அவசியம். ஆனால் எத்தனையோ தடவை வாதாடியும் கூட டெல்லி அரசு ரயில்வே இணைப்புக்கு ஏற்பாடு செய்யவில்லை. இப்போதுகூட அங்குள்ள மக்கள் எல்லோரும் சேர்ந்து மதிப்பிற் குரிய காமராஜ் அவர்கள் ஒருவேளை நிச்சயமாக கொண்டு வருவார், இதற்கான நடவடிக்கை எடுப்பார் என்று நம்பினார்கள். ஆனால் இது வரை என்ன பார்க்கிறோம் என்றால் அது பற்றி முயற்சி கள் எதும் எடுக்கப்பட்டதாக தெரியவில்லை. ரெயில்வே வந்தால் நிச்சயமாக அங்கே தொழில்கள் பெருக வசதி இருக்கிறது. அதற்கு இந்த அரசு ஆவன செய்யவேண்டும்.

அங்கே சாராயம் வடிக்கும்" தொழிற்சாலை எற்படுத்த வசதி இருக்கிறது. ஏற்கெனவே அந்த இடத்திற்கு டிஸ்டிலரி ரோட் என்று பெயர் இருக்கிறது.

திரு. பொன்னப்ப நாடார் : சாராயத் தொழிற்சாலையை ஆரம்பிப்பதில் இந்த அரசாங்கத்துக்கு அக்கறை இருக்கலாம். ஆனால் எங்களைப் பொறுத்த வரையில் அத்தகைய தொழிற்சாலை வைப்பதில் அக்கறை இல்லை.

திரு. நா. வீராசாமி: சாராயம் குடிப்பதில் அக்கறை இல்லையா, அல்லது தொழிற்சாலை வைப்பதில் அக்கறை இல்லையா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: யார் குடிக்கிறார்கள் என்பது உலகறிந்த உண்மை. அதைப்பற்றி இந்த மா மன்றத்திலே சொல்லத் தேவையில்லை. எதிர்க்கட்சித் தலைவர்கள் குடித்துவிட்டு கும்மாளம் போடுகிறார்களா அல்லது மற்றவர்கள் குடித்துவிட்டு போடுகிறார்களா என்பது எல்லோரும் அறிந்த விஷயம்.

திரு. வி. கே. இராஜாப்பிள்ளை: மதுவிலக்கு வருவதற்கு முன்பேயே அங்கே டிஸ்டிலரி ரோட் என்று இருந்து இருக்கிறது. இப்போது மதுவிலக்கை தள்ளிவைத்து இருப்பதால், இந்த தொழிற்சாலையை அங்கே ஆரம்பிக்கலாம் என்ற யோசனையைக் கூறுகிறேன். இதற்காக கட்டடம் இருக்கிறது. அது ஒரு கல்லூரி கையில் இருந்தாலும்கூட, அதை அவர்களிடமிருந்து வாங்கி அதை நடத்த முடியும். அதோடு கூட அங்கு ஏராளமாக ரப்பர் கிடைக்கிறது. அதை வைத்து ரப்பர் ஷீட் செய்து கொண்டு இருக்கிறார்கள் இப்போது. ரப்பர் டயர் தொழிற்சாலை தனியார் துறையிலோ அரசாங்கத் துறையிலோ ஏற்படுத்துவது நலம். அதோடுகூட அங்கே அண்டி கிடைக்கிறது. அதை வைத்து அங்கே ஒரு முந்திரி தொழிற்சாலையை ஏற்படுத்தினால், வேலையில்லாத் திண்டாட்டத்தை வெகுவாக நீக்கவல்லது. அதோடுகூட போன் மில், பேப்பர் தொழிற்சாலை, மைகா தொழிற்சாலை ஏற்படுத்த வாய்ப்பு இருக்கிறது.

கன்னியாகுமரி துறைமுகத்தில் சங்கு தொழிற்சாலை ஏற்படுத்த வசதி இருக்கிறது.

அதோடு கூட மட, காபி இலைகள் ஏராளமாக கிடைக்கிறது. மடஸ்டிலிருந்து காபின் எடுக்க வசதியாக இருக்கிறது. மூறை பகுதியில் இது அதிகம். அங்கே தொழிற்சாலை அமைந்தால் வேலையில்லாத் திண்டாட்டத்தை போக்க உதவிகரமாக இருக்கும். இது மாதிரியான தொழில்கள் ஏற்படுத்தி வேலையில்லாது இருப்போருக்கு வேலை வாய்ப்பு அளிக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

* திரு. ஏ. எம். டி. நாச்சியப்பன்: பெருமதிப்பிற்குரிய துணைத் தலைவர் அவர்களே, தொழில் அமைச்சர் அவர்கள் 1971-72-ம் ஆண்டுக்கான மானிய கோரிக்கையை கொண்டுவந்துள்ளதை வரவேற்று என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

தமிழ்நாட்டிலே மக்கள் எல்லோருக்கும் வேலைவாய்ப்பு கொடுக்கப்படவேண்டும். அதற்காக பல தொழில் முன்னேற்றங்கள் அமைய பல தொழிற்பேட்டைகளை பல பாகங்களில் அமைத்து மக்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்தியதை நான் பாராட்டுகிறேன். அதேநேரத்தில் மதுரை மாவட்டத்தில் வட பகுதியிலே உள்ள ஆத்தூர், ரெட்டியார் சத்திரம், ஒட்டன்சத்திரம், பழனி, வட





மதுரை, வேடசந்தூர் போன்ற தொகுதிகளில் தொழில் வளர்ச்சி இல்லாமல் அந்த பகுதியில் உள்ள மக்கள் வேலைவாய்ப்பு இல்லாமல் இருக்கிறார்கள். விவசாயத்தை எடுத்துக்கொண்டால் அந்த பகுதியிலே ஒரு வரண்ட மாவட்டமாகத்தான் காட்சி அளிக்கிறது. அதே நேரத்தில் தொழில் துறையில் முன்னேற்றம் ஏதும் இல்லாமல் இருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அமைச்சர் அவர்கள் தொழில் துறையில் பரவலாக வாய்ப்புகளை அமைத்து பல பாகங்களிலும் தொழில் ஏற்பட பெரு முயற்சி எடுத்துக் கொண்டிருப்பதை பாராட்டாமல் இருக்க முடியாது. அங்கே பல தொழில்பேட்டைகள் அமைத்து தொழில் வளர்ச்சி ஏற்படுத்தவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பாக விவசாயத்திற்கு அடுத்தபடியாக இருப்பது கைத்தறித் தொழில். இந்த கைத்தறித் தொழிலிலே லட்சக்கணக்கான மக்கள் தமிழகத்திலே வாழ்கிறார்கள். இந்த நெசவாள மக்களுக்கு தேவையான நூலும் செயற்கை பட்டும் நியாய விலையில் கிடைக்கவில்லை. செயற்கை பட்டை எடுத்துக்கொண்டால் தமிழகத்தைப் பொறுத்தவரையில் ஒரு சில பணக்காரர்கள் மட்டும் இதை விநியோகிக்கும் உரிமையை மத்திய அரசிடமிருந்து வாங்கிக்கொண்டு இந்த பட்டுகளை எல்லாம் வேண்டிய சங்கங்களை உற்பத்தி செய்து கொண்டு ஒரு சிலருக்கு மட்டும் பயன்படுத்திக்கொள்ளும் அளவில் இருக்கிறார்கள் என்ற உண்மையை நான் மத்திய தொழிலமைச்சர் அவர்களுக்கும் தமிழக தொழில் அமைச்சர் அவர்களுக்கும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் விண்ணப்பம் செய்தேன். அந்த விண்ணப்பத்துக்கு மத்திய தொழில் அமைச்சர் ஆவன செய்வதாக கடிதம் எழுதி இருக்கிறார்கள். ஆகவே தமிழக தொழில் அமைச்சர் அவர்கள் இந்த நேரத்தில் செயற்கைப் பட்டு விநியோகத்தை இந்த மாநில ஆட்சிக்கு எடுத்துக்கொள்ளும் வகையில் பொறுப்பை ஏற்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அதோடு கூட அதிக விலையில் நூலை வாங்கி துணிகளை தயார் செய்தும் கூட அந்தத் துணிகளை விற்பனை செய்ய மார்க்கெட் இல்லை. அதற்கு காரணம் இந்த கைத்தறித் துணிகளுக்கு போட்டியாக மில் துணிகள் அதிலும் மற்ற மாநிலங்களிலிருந்து அதிகமாக இறக்குமதி ஆகி இங்கே விற்பனைக்கு வருகிற காரணத்தால் அந்த மில் துணியோடு போட்டியிட்டுக்கொண்டு, ஜெயிக்கும் நிலைமை, வெற்றி அடையும் நிலைமை கைத்தறித் துணிக்கு இல்லை. ஆகவே கைத்தறி நெசவாளர்கள் வாழவேண்டுமென்றால் மற்ற மாநிலங்களிலிருந்து வருகின்ற துணிகள் விற்பனையை கட்டுப்படுத்துகிற உரிமை மாநில அரசு உடனே ஏற்றுக்கொள்ள வேண்டும். அப்படி இல்லை என்றால் இந்த துணிகளை—இங்கே தயார் செய்த துணியை—வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்து அங்கே விற்பனை செய்யும்

உரிமை மாநில ஆட்சிக்கு வேண்டும். அப்படி செய்தால்தான் இந்த கைத்தறி நெசவுத் தொழிலை நம்பி இருப்பவர்களுக்கு ஒரு உருப்படியான நன்மை செய்ய முடியும் என்று கூறி அமர்கிறேன்.

* திரு. கே. ஏ. வகாப் : மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் நம்முடைய அரசு தொழில் துறையில் ஒரு முன்னேற்றக் கண் கொண்டு எடுத்து வரும் முயற்சிகளைப் பாராட்டவும், நான் இந்த உரையில் பங்கு பெறும் நேரத்தில் சிறு தொழில்களுக்கு அரசு அளிக்க வேண்டிய சில சலுகைகளைப் பற்றியும் உரிமைகளைப்பற்றியும் இங்கே எடுத்துக்கூற முன் வந்திருக்கிறேன்.

சிறு தொழில் கூட்டுறவுச் சங்கங்கள், தொழில் கூட்டுறவு சங்கங்கள் இந்த தமிழ்நாட்டில் நடைபெற்று வருவதில் பெருவாரியான நஷ்டத்தில் நடைபெற்று வருகின்றன என்று புள்ளி விவரத்திலிருந்து தெரிகிறது. அதன் காரணமாக அரசு சிறு தொழில்களை எல்லாம் மூடவேண்டுமென்று கருதும்போது தயவுசெய்து அப்படியெல்லாம் செய்யாமல் இந்தச் சிறு தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு—பாய் முடையும் தொழில், தீக்குச்சி செய்யும் தொழில் மற்றும் பனை ஓலைக் கூடை முடையும் தொழில், பிரம்பு பின்னும் தொழில் போன்றவற்றில் சாதாரணமாக சமுதாயத்தின் அடித்தளத்தில் இருக்கும் ஏழை மக்கள்—அவர்களுக்கு அரசாங்கம் அளிக்கும் சலுகைகள் மிகக் குறைவு—ஆகவே அப்படிப்பட்டவர்களால் நடத்தப்படும் சங்கங்கள், அது நஷ்டத்தில் நடந்தாலும், அரசு அதைப் பொருட்படுத்தாமல் மீண்டும் மானியம் அளித்து வேறு பல வகையில் உற்சாகமளித்தும் முன்னேற்றத்துக்கு ஆவன செய்யவேண்டும். அதையெல்லாம் மூடுவதற்கு அரசாங்கம் ஆலோசிக்கக் கூடாது, என்று பணிவுடன் என் வேண்டுகோளைத் தெரிவித்துக் கொள்கிறேன். இங்கே பேசியவர்கள் சொன்னார்கள். மேட்டூர் அலுமினியம் தொழிற்சாலையைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். அப்படிப்பட்ட தொழிற்சாலைகளுக்கு ரூ. 5 கோடி, 10 கோடி என்று அரசு கடன் தரும்போது, அந்தப் பணத்தைக் கூட 5 அல்லது 10 ஆண்டுகளுக்கு வட்டியில்லாக் கடனாகப் பெற்று வருவதாக அறிகிறோம். அந்தப் பணத்தை வட்டியில்லாமல் கொடுக்கும்போது சிறு தொழில்களில் லாப நஷ்டம் பாராமல் ஏழைகளுக்கு அளிக்கும் உதவியாகக் கருதி முன்னேற்றம் ஏற்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தொழில் கூட்டுறவு சங்கங்கள் நஷ்டத்தில் நடைபெறுகிறதென்றால், அவற்றுக்கு பல காரணங்கள் இருக்கின்றன.

உதாரணமாக, பாய் முடையும் தொழிலில் கூட்டுறவில் ஈடுபட்டோர் தனியாருடன் போட்டி போடவேண்டி இருக்கிறது. அதற்கடுத்தபடி அதற்கு மார்க்கெட் பிடிப்பதில் பல சிரமங்கள் இருக்கின்றன. அதில் பல கூட்டுறவு சங்கங்கள் நல்ல லாபகரமாக நடைபெறாமல் போவதற்கு நிர்வாகம் வகிக்கும் நிர்வாகஸ்தர்கள் தான்பொறுப்பு என்பதை அரசு அறிந்திருக்கும். ஆகவே அப்படிப்



பட்ட சங்கங்களுக்கு நிர்வாகஸ்தர்களை ஏற்படுத்தும்போது முன்னெச்சரிக்கையாக அதில் நல்லவர்களாக ஏற்பாடு செய்வதில் நிச்சயமாக அரசு அக்கறை செலுத்துமென்ற நம்பிக்கை இருக்கிறது.

இன்றைய தினம் வந்தவாசியில் பாய் முடையும் தொழில் கூட்டுறவுச் சங்கம் இருக்கிறது. தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சிக் குறிப்புகளில் அதற்கு அங்கு ஒரு பணிமனை கட்டுவதற்குத் திட்டமிட்டிருப்பதை மனப்பூர்வமாகப் பாராட்டி வரவேற்கிறேன். ஏனென்றால் அந்தச் சங்கத்துத் தலைவர் என்ற முறையில் வரவேற்கிறேன். அது மட்டுமல்ல, கோரைக்கு இந்த அரசு வரி விலக்கு அளித்திருக்கிறது. அதற்கு நன்றி கூறக் கடமைப்கிறேன். ஏழை நெசவாளர்கள் சார்பிலும் நன்றி கூற கடமைப் பட்டிருக்கிறேன். இன்றைக்குக் கைத்தறி நெசவுக்கு அடுத்த அடுத்தபடியாக பரவலாக இருப்பது பாய் நெசவுதான். அந்தத் தொழிலுக்கு இன்னும் ஆக்கமும் ஊக்கமும் தரவேண்டும். பத்தமடை பட்டுப்பாய் பற்றி எல்லோரும் கேள்விப்பட்டிருப்பார்கள். எலிசபெத் மகாராணிக்கு மனமுவந்து கொடுத்தோமே அப்படிப்பட்ட நல்ல பாய் செய்யும் நல்ல கலைஞர்கள் நம்மிடத்தில் இருக்கிறார்கள். அப்படிப்பட்ட சங்கங்கள் நசிந்து விடாமல் மானியம் வேண்டுமென்றால் கொடுத்து அவற்றை நல்ல முறையில் முன்னேற்றமடையச் செய்யவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், இப்படிப்பட்ட சங்கங்களுக்கு அதிகாரிகளை நியமிக்கும்போது அரசாங்கம் ஒரு முறையைக் கடைப்பிடித்தால் நல்லது என்று நினைக்கிறேன். இப்போது பாய் சங்கத்துக்கு ஒரு அதிகாரி நியமிக்கப்படுகிறார். அப்புறம் அவர் பாத்திரத் தொழிற்சாலை சங்கத்துக்கு மாற்றப்படுகிறார். இப்படிப் பல தொழில்களுக்கு மாற்றப்படுவதால் ஒரு குறிப்பிட்ட அதிகாரி எந்த அறிவையும் அபிவிருத்தி செய்ய முடியாது. ஆகவே ஒரு அதிகாரி ஒரே தொழில்துறையில் இருந்தால் அந்தத் துறையை அபிவிருத்தி செய்ய முடியும். குறிப்பாக பாய் சங்கங்களில் இருப்பவர்களை பாய் சங்கங்களுக்கு அனுப்பும் முறையையும், பாத்திரச் சங்கங்களில் இருப்போரை பாத்திரச் சங்கங்களுக்குப் போடும் முறையையும் கடைப்பிடித்தால் நலமாக இருக்குமென்று நினைக்கிறேன்.

கரூரில் ஒரு பாய் நெசவுச் சங்கம் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக அறிகிறோம். ஆனால் எந்த அளவுக்கு அது வளர்ச்சி அடைந்திருக்கிறதென்று தெரியவில்லை. இது ஏழைகள் தொழில். ஆகவே இன்னும் அக்கறை செலுத்தவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, தீக்குச்சி செய்யும் தொழில்—அரசாங்கத்தால் நடத்தப்படும் தொழில் கூட்டுறவுச் சங்ககங்களில் நஷ்டத்துக்குக் காரணம் இந்த 'பாண்ட்ரோல் சிஸ்டம்" எடுபட்டு விட்டதால்,

தனிப்பட்டவர்கள் குறைந்த விலைக்கு—இன்றைக்கு ஒரு பண்டல் ரூ. 32 அடக்கமாகிறது—வரியை ஏய்த்து குறைத்து விற்கும் நிலை ஏற்படுவதால் அதைக் கூட்டுறவுச் சங்கங்களால் செய்ய முடியவில்லை. ஆகவே, அதில் சிக்கல் ஏற்பட்டு, தீக்குச்சித் தொழிற்சாலை எல்லாம் நஷ்டத்தில் நடந்து வருகின்றன. நம்மிடத்தில் அதிகாரம் இல்லையென்றால், மத்திய அரசினிடத்தில் அந்த அதிகாரம் இருக்கிறதென்றாலும் அதற்காக மாநில அரசு போராடி 'பாண்ட்ரோல் சிஸ்டம்' என்ற முறையை மீண்டும் அமல் படுத்துவதற்கு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றையதினம் சென்னையில் தொழில் கூட்டுறவு வங்கி ஒன்று இருக்கிறது. அது ஓரளவுக்கு நல்ல விதத்தில் நடந்து வருகிறது. அதன் மூலம் கூட்டுறவுச் சங்ககங்களுக்குக் கடன் கொடுக்கப்பட்டு வருகிறது. ஆனால் இந்தச் சங்கமும் மற்ற வங்கிகள் கொடுப்பது போன்றே வட்டி விகிதத்தில் கொடுத்து வருகிறது. பல லட்ச ரூபாய் அந்த வங்கி லாபம் அடைந்திருக்கிறது. அதனால் சிறு கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கடன் கொடுக்கும்போது வட்டி விகிதத்தைக் குறைத்துக் கொடுக்கவேண்டும். லாபநஷ்டம் இல்லாத அடிப்படையில் துணைச் சங்கங்களுக்கு உதவியளிக்கும் வகையில் வட்டி விதத்தைக் குறைப்பதற்கு அரசு தக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன். அதே நேரத்தில் கோரைப் பாய் போன்ற தொழிலில் நல்ல முறையில் மார்க்கெட் இல்லாமல் இருக்கிறது. பம்பாய் போன்ற இடங்களுக்குப் பாய் அனுப்பும்போது அவர்கள் அதை வெளிநாடுகளுக்கு அனுப்புகிறார்கள். அந்த மாதிரி ஒரு கார்ப்பரேஷன் முறை, ஒரு களஞ்சிய முறை ஏற்படுத்தி கோரைப் பாய் மற்றும் கைவினைப் பொருட்களை வாங்கி வைத்து வெளிநாடுகளுக்கு அரசு அனுப்ப ஏற்பாடு செய்தால் நலமாக இருக்குமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இராணிப்பேட்டையில் தொழிற்பேட்டை ஒன்று அமைப்பதற்கான திட்டமொன்று இருப்பதாகச் சொன்னார்கள். அதை உடனடியாக அமுல் படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, வாலாஜாப்பேட்டையில் கம்பளித் தொழில் வாய்ப்பு இருப்பதால், அங்கே கம்பளித் தொழில் கூட்டுறவுச் சங்கம் ஒன்றை ஆரம்பிக்கும்படி வேண்டிக்கொள்கிறேன். அதேபோல் 'சோடியம் டை-கார்பனேட்' தொழிற்சாலை ஆரம்ப நிலையில் இருக்கிறது. அதை உடனடியாக ஆரம்பிக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். மேல்விஷாரத்தில் பிளாஸ்டிக் பாலிதீன் போன்ற தொழில் ஆரம்பிக்க முயற்சித்து வருகிறார்கள். தனியார் துறையில் அதைக் கூட்டுறவுத் துறையிலும், ஏற்படுத்தித் தரவேண்டுமென்றும், வந்தவாசியில், முன்பிருந்த காங்கிரஸ்காரர்கள் ஆட்சியில் நூற்பாலை அனுமதிக்கப்பட்டு அப்போது நாங்களெல்லாம் இப்போது ஆளும் கட்சிக்காரர்களுக்கு





ஆதரவு செய்ததால் அந்த நூற்பாலையை வேலூருக்கு கொண்டு சென்று அங்கே அமைத்துக் கொண்டார்கள். ஆகவே இந்த அரசு அக்கறை செலுத்தி மாற்றப்பட்ட ஆலைக்குப் பதிலாக வந்தவாசியிலும் ஒரு நூற்பாலை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இங்கே பேசிய திரு. கந்தப்பன் சொன்னார்கள், ஜப்பான் ன்நாட்டின் சிறு தொழில்களைப் பற்றி; அந்த முறையை நாமும் பின்பற்றவேண்டும் என்று சொன்னார்கள்.

**They are bilding shipsintthierbut**, ஜப்பானியர் கப்பலையே தங்கள் குடிசைகளில் கட்டுகிறார்கள். அப்படி ஜப்பானில் செய்கிறார்கள், என்பதை நானும் நேரில் பார்த்தேன். பெரிய கப்பல் இயந்திரம் முதல் சிறிய ரேடியோ, ட்ரான்சிஸ்டர் இவற்றைக்கூடக் குடிசைத் தொழில் முறையில் நடைபெறுகின்றன. ஆகவே குடிசைத் தொழில்களுக்கு ஊக்கம் அளித்து நல்ல முறையில் வளர்ச்சி அடைய ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, வெளிநாடு செல்லுகின்ற மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஜப்பான் செல்லும்போது சிறு தொழில்கள் முன்னேற்றம் பற்றி அறிந்து வரவேண்டும், அப்படி அறிந்து வந்து தமிழகத்திலும் சிறு தொழில் வளர்ச்சிக்கு வேண்டியவைகளை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி: மாண்புமிகு உதவி சபாநாயகர் அவர்களே, 5 நிமிடம் கொடுத்திருப்பதாகச் சொன்னார்கள். நமக்குக் கொடுத்திருக்கும் அறிக்கையைப் பார்த்தால் 5 நாள் கொடுத்தாலும் சரியாகப் புரிந்துகொள்ள முடியுமா என்பது கஷ்டம்தான். புத்தகம் பெரிதாக இருக்கிறதே தவிர, வளர்ச்சி குறைந்திருக்கிறது என்பதைப் பின்னால் விவரமாக எடுத்துச் சொல்ல முடியும். புத்தகத்தின் துணை கொண்டு சுருங்கச் சொல்லி விளங்க வைக்கவேண்டும். அப்படிச் செய்தால் வரவேற்கத்தக்கதாகும். இது மட்டுமல்லாமல் தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சி என்ற இந்தப் புத்தகம் அச்சடித்திருக்கும் எழுத்தைப் பார்க்க தனிக் கண்ணாடி கொடுக்க வேண்டும் போலிருக்கிறது. பிழைகள் நிறைந்து அச்சும் அசிங்கமாக இருக்கிறது. ஆகவே இதிலே முதலில் முன்னேற்றத்தைக் கொணர வேண்டும், என்று தொழிலமைச்சருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, இந்த அரசு தொழில் வளர்ச்சியில் பின்தங்கி இருக்கிறது என்பதை வன்மையாக ஸ்தாபன காங்கிரஸ் சார்பில் சொல்ல ஆசைப்படுகிறேன். காரணம் 1950-ல் வளர்ச்சி 12% இருந்தது 67-ல் 20%. ஆனால் 1971-ல் 21% தான். காங்கிரஸ்காரர்கள் ஆட்சி நடத்தியபோது வளர்ச்சி இருந்திருக்கிறது. நீங்கள் தொழில் வளர்ச்சி என்ற பேரில்—முன்பு சொன்னீர்கள், முந்திரிக்கொட்டையிலிருந்து பிளாஸ்டிக் செய்வோம். தேங்காய் நாரிலிருந்து ரப்பர் செய்வோம் என்றெல்லாம் சொன்னீர்கள்—

இப்போது என்ன வளர்ச்சி கண்டீர்கள் என்று பார்த்தால் புள்ளி விவரம் 1% 4 வருடத்திற்கு என்ற முறையில் வளர்ச்சி அடைந்திருக்கிறதென்பதை இந்தப் புள்ளி விவரம் காட்டுகிறது என்றால், தொழில் துறையில் தொழில் முடக்கம் எந்த அளவுக்கு இருக்கிறது என்பதைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

இங்கு தொழில் வளராதது மட்டுமல்ல. இருக்கும் தொழில்களைக்கூட நடத்தக்கூடிய சக்தி இந்த அரசாங்கத்துக்கு இல்லாமல் இருக்கிறது. கோவை மாவட்டத்தில் மூடப்பட்ட மில்கள் இன்னும் திறக்கப்படவில்லை. திறக்கப்படுமா என்றால், அதற்கு நிதி வசதி அப்படியிருக்கிறது, இப்படியிருக்கிறது என்று பதில் சொல்கிறார்களே தவிர, அவற்றைத் திறப்பதற்கான வகையில் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறீர்கள் என்று கேட்பது என் கடமையாய் இருக்கிறது. கோவை மாவட்ட நூற்பு ஆலைகள் ஒரு காலத்தில் இந்தியாவுக்கே பெருமை தரக்கூடியவையாக இருந்தன. ஆனால் இப்போது கோவை மாவட்டத்தில் அவல நிலை ஏற்பட்டு, ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் பிழைப்பில்லாமல் தவிக்கிறார்கள். தொழிலாளர் அரசு என்று சொல்லிக் கொள்ளும் இந்த அரசு மூடிய மில்களைத் திறப்பதற்கு அக்கறை எடுத்துக்கொள்ளவில்லை என்ற குற்றச்சாட்டைக் கூறுகிறேன்.

இங்கே ஒரு நல்ல சிறு கார் தொழிற்சாலை (ஸ்டாண்டர்ட் மோட்டார்) நடந்துகொண்டு இருந்தது. 1½ ஆண்டு காலம் இருந்தது. இன்னும் அது நடப்பதற்கு வழிவகை ஏற்படவில்லை. மானேஜ்மெண்டாரைக் கேட்டால் நிர்வாகம் சிக்கலில் இருப்பதாகச் சொல்கிறார்கள். யாராவது இதைப்பற்றிக் கேட்டால் நஷ்டம் ஏற்படுகிறது என்று சொல்கிறார்கள். ஒரு சின்ன கார் தொழிற்சாலை சரியான முறையில் நடக்க கொள்கை எதுவுமில்லை. இத்தகைய தொழிலாளர் பிரச்னையில் உடனடியாக சுறுசுறுப்பாக என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்யாமல் மிகவும் மந்தமாக இந்த அரசு வேலை செய்கிறது. இவ்வாறு அரசு இருந்தால் எப்படி பிரச்னையைத் தீர்க்கமுடியும்? வேலைநிறுத்தம் ஏற்படுகிறது, நிர்வாகத்தினர் தொழிற்சாலையை மூடுகிறார்கள். அதைத் தடுப்பதற்கு இந்த அரசுக்கு ஏன் இந்தத் தாமதம்? இந்த முக்கியமான பிரச்னையைத் தீர்க்க நேரம் இல்லை என்றால் வேறு காரியம் எல்லாம் அவசரம் அவசரமாகச் செய்வதற்கு மட்டும் நேரம் இருக்கிறதா என்று கேட்கிறேன். அதேபோன்று தொழிற்சாலையில் வேலை நிறுத்தம் ஏற்பட்டால் உடனடியாக போலீஸ் தலையிடுகிறது. நேற்று இரவு சங்கரிதுர்க்கத்தில் சிமெண்ட் தொழிற்சாலையில் முதலாளிக்கும் தொழிலாளர்களுக்கும் நடந்த சச்சரவில் போலீஸ் தலையிட்டு 'பயரிங்' நடந்திருக்கிறது. தொழிலாளிகள் அடிக்கப்பட்டிருக்கிறார்கள். சங்கரிதுர்க் சிமெண்ட் தொழிற்சாலையில் ஒரு முக்கியமான அமைச்சருக்கு அக்கறை உண்டு. அதன் காரணமாக இந்தக் கொடுமையான நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமா? எதற்கு எடுத்தாலும் ஆதாரம் இருக்



கிறதா என்று கேட்பதால் இதற்கும் ஆதாரம் உண்டு. மானேஜ்மெண்டைத் திருப்தி செய்வதற்காக போலீசை ஏன் பயன்படுத்த வேண்டும் என்று கேட்கிறேன். மக்கள் எழுப்பும் இந்தக் இந்த அரசாங்கம் பதில் கொடுக்கக் கடமைப்பட்டிருக்கிறது. அதிகாரம் கிடைத்தபிறகு நீங்கள் என்ன செய்தீர்கள்? இந்த 4 வருஷமாக செய்த உருப்படியான காரியம் என்ன? நீங்கள் அதைச் செய்யவேண்டும் என்றுதான் கேட்கிறேன்.

ராஜமன்னார் கமிஷனில் 100 கோடிக்கு மேல் முதலீடு இருந்தால் மத்திய அரசு அதை மாற்றுகிற சாத்தியக்கூறு கிடையாது என்பதில், மத்திய அரசு தமிழ்நாடு மாநிலம் மட்டுமின்றி அகில இந்திய ரீதியில் எல்லா மாநிலங்களின் நலத்தையும் கவனிக்க வேண்டிய பொறுப்பு மத்திய அரசுக்கு இருக்கிறது என்பதைப் பார்க்கவேண்டும். மத்திய அரசு தலையீடு இருக்கிறது என்று சொல்லுகிறீர்கள். ஆனால் எந்தத் துறையில் இந்த மத்திய அரசின் தலையீடு இருக்கவேண்டும், எதில் இருக்கக்கூடாது என்று திட்டவட்டமாக இதற்குள்ள வித்தியாசத்தைத் தொழில் அமைச்சர் விளக்கினால், அதை முழுமையாக வரவேற்கலாம். ஒரு கூட்டத்தில் பேசும்போது விவசாயிகள் அமைப்பு பற்றிப் புரியாமல் தொழில் அமைச்சர் பேசினார், பத்திரிக்கைகளிலே வந்தது.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** நான் பேசியதாகக் கற்பனை செய்துகொண்டு பேசக்கூடாது.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** இந்தச் செய்தி பத்திரிக்கையில் வந்தது.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அது உங்கள் செய்தித்தாளில் தான் பார்த்திருக்கலாம், வேறு இல்லை.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** அப்படிச் சொல்லவில்லை, இப்படிச் சொன்னேன் என்றால் எப்படியோ! அந்தச் செய்தி கிடைத்திருக்கிறது. முன்பிருந்த அரசாங்கம் 1950 முதல் 1967வரை தொழில் வளர்ச்சியை உயர்த்தி 8% தொழில் அபிவிருத்திச் சாதனையைச் செய்து முடித்திருக்கிறது. ஆனால் நாங்கள் தான் மத்திய அரசுடன் போராடி அதிக உதவியைப் பெற முடியும் என்று சொல்லிக் கொள்ளும் இந்த ஆட்சியில் 4 வருஷத்தில் 1% கூட சாதிக்க முடியவில்லை, எங்கு பார்த்தாலும் ஊழல், ஊழல் என்று மக்கள் சொல்வதைக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். இதற்கான பதில் அளிக்க வேண்டும்.

சர்க்கரை ஆலை கரும்பு உற்பத்தியாளருக்கு ரிஜிஸ்டர்ட் ஆட்களுக்கு 73 ரூபாய் ஒரு டன் என்றும், நான்-ரிஜிஸ்தர்ட் ஆட்களுக்கு 40 ரூபாய் என்றும் கொடுத்து, வித்தியாசம் ரூபாய் 33 என்று இருக்கிறது. கரும்பு உற்பத்தியாளர்களுக்குள் இவ்வளவு வித்தியாசம் ஏன்? இதைத் தடுக்க ஏற்பாடு செய்யாமல் கூட்டுறவுத்

துறை லமும் இன்றைக்குச் செய்வது என்று சொன்னால், எப்படிப் பொருந்தும்? ஒரு காலத்தில் 93 ரூபாய் இருந்தது இன்றைக்கு ரூபாய் 73 என்று இறங்கிவிட்டது. நாளை விலை எவ்வளவு குறையுமோ தெரியவில்லை. 93 என்பது 73 ஆகக் குறைந்துவிட்டது. ஆனால் உரவிலை குறையவில்லை, கூலி குறையவில்லை. கரும்பு உற்பத்தியாளருக்கு மட்டும் குறைய வேண்டுமா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** ரிஜிஸ்டர்ட் கரும்பு உற்பத்தியாளர்கள் கரும்பை எடுத்துக்கொள்ளுங்கள் என்று கேட்கும்போது அரசாங்கத்துக்குத்தான் மனுக் கொடுக்கிறார்கள். எங்களுக்குத் தேவையில்லை என்று சொல்லும்போது எடுத்துக் கொள்ளச் சொல்கிறோம். இதில் 2 வித விலைகள் இருக்கின்றன அங்கத்தினர்களுக்கு ஒரு விலை, மற்றவர்களுக்கு இன்னொரு விலை என்றுதான் இருக்கும். கூட்டுறவுத்துறையில், பின்னால் ரிஜிஸ்டர்டுக்கு 'வால்யூ' இல்லாமல் போகும்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** கூட்டுறவுத் துறையில் மட்டும் சொல்லவில்லை. தனியார் நடத்துகின்ற சர்க்கரை ஆலைகளிலும் இந்த வித்தியாசம் இருக்கிறது என்பதைப்பற்றித்தான் சொல்கிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** இந்த நிலைமை பற்றி நானும் தொழில் துறை அமைச்சரும் நீண்ட நேரம் விவாதித்தோம். ரிஜிஸ்டர்ட் கேனுக்கு விலை நியாயமாய் இருக்கவேண்டும் அதே போன்று நான்-ரிஜிஸ்டர்டு கேனுக்கும் விதிப்பது என்ற எண்ணத்துடன்தான் இதுபற்றி முடிவு எடுப்போம்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** இதில் இருக்கிற நியாயத்தை உணர வேண்டும் என்பதற்காகத்தான் இதைச் சொன்னேன். 73-க்கும் 43-க்கும் உள்ள வித்தியாசத்தை முறைப்படி குறைத்தே ஆகவேண்டும். நம்முடைய மாண்புமிகு தொழில் அமைச்சர் இது பற்றிச் சொன்னார். ராணிப்பேட்டையில் தொழில்பேட்டை அமைப்பதற்காக 800 ஏக்கரா இடம் அப்படியே 64-லிருந்து 71 வரை தரிசாகக் கிடக்கின்றதே. அதில் இன்னும் தொழில்பேட்டை ஏற்படவில்லை.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** இதைப் பரிசீலித்து வருகிறோம். 1964-ல் உங்கள் ஆட்சிக் காலத்தில் தான் அந்த 800 ஏக்கரா வாங்கப்பட்டது. நாங்கள் நிச்சயம் அந்த 800 ஏக்கரா நிலத்தைப் பயன்படக்கூடிய முறையில் பயன்படுத்துவோம், அதற்கான ஆலோசனை செய்து வருகிறோம்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** ஆனால் இதற்குப் பதில் சொல்லுங்கள். ஆட்சிக்கு வந்த 1967 முதல் 1971 வரை இந்த 4 வருஷமாக நீங்கள் என்ன செய்தீர்கள் ? செய்வதற்குச் சக்தி இல்லையா ?





**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** சக்தி இல்லையென்று சொல் ந. ப.
கிறார்கள். அம்மையார் சக்தி எங்களுக்குத் தெரியாது. இப்படி 12.0
யெல்லாம் பேசுவது மன்றத்திற்கு ஏற்றது அல்ல.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** தலைவர் அவர்களே, 'கெப்பாசிடி' என்பதற்கு அப்படித்தான் பொருள். குதர்க்கமாக அமைச்சர் அவர்கள் எடுத்துக் கொண்டால் அதற்கு நான் என்ன செய்வது ? சரியான அர்த்தம் தெரிந்துகொண்டுதான் பேசுகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** 'குருடாக இருக்கிறது' என்பதற்கு என்ன பொருள் ?

**திருமதி த. ந. அனந்தநாயகி :** 'பிளைண்ட் டு ஃபேக்ட்ஸ்' என்பதைத் தமிழில் சொன்னேன். அதிலே தவறு ஒன்றும் இல்லை. அப்படித் தவறாக அர்த்தம் செய்துகொண்டால், தமிழிலே பேசுவதும் குற்றமாகும். அந்த வார்த்தை எந்த அர்த்தத்தில், எந்தக் கான்டெக்ஸ்ட்டில் பேசப்படுகிறதோ அந்தப் பொருளில், அந்த அர்த்தத்தில் எடுத்துக்கொள்ள வேண்டுமே தவிர, அதற்கு வேறு பொருள் எடுத்துக்கொண்டால் என்ன செய்வது ?

(மணியடிக்கப்பட்டு, அடுத்த உறுப்பினர் அழைக்கப்பட்டார்).

**திரு. மா. வெ. நாராயணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழக அரசின் 1971-72-ம் ஆண்டுக்கான தொழில் துறை மானியக் கோரிக்கையை வரவேற்றும், ஆதரித்தும் பேசுகின்ற வாய்ப்பு அளித்தமைக்கு முதலில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழகம் தொழில் மயமாக மாற வேண்டும், தொழில் வளர்ச்சி நல்ல முறையில் ஓங்கி வளர வேண்டுமென்பதற்காகத் தமிழக அரசு பெருமுயற்சிகளை எடுத்துக் கொண்டு வருவதும், அதன்விளைவாக பல்வேறு துறைகளில் தொழிற்சாலைகள் துவங்கப்பட்டு வருவதுமான முயற்சிகளை இந்த நாட்டுமக்களும், இந்த மாமன்றமும் நன்றாக அறியும். நம்முடைய தொழில் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. மாதவன் அவர்களும் தமிழகத்தின் முதல்வர் மாண்புமிகு கலைஞர் அவர்களும், திரு. மாதவன் அவர்களும் அதற்கென நல்ல கவனம் செலுத்தி, அதிக நிதியை ஒதுக்கி, எப்படியாவது நம்முடைய நாட்டிலே நல்ல தொழில் வளர்ச்சியை ஏற்படுத்தி, அதன்மூலமாக விரைவாக, கூடிய விரைவில் வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்க வேண்டுமென்று அரும்பாடுபட்டுக்கொண்டு வருகிறார்கள்.

இப்படி பல முயற்சிகளை நாம் மேற்கொள்கின்ற நேரத்தில், நடைமுறையில் காணக்கூடிய கஷ்டங்களைப்பற்றி எடுத்துச்சொல்கின்ற நேரத்தில், மத்திய அரசு நம்முடைய தேவைகளை உணர்ந்து கொள்ளாமல், நம்முடைய நோக்கங்களை உணர்ந்துகொள்ளாமல், அதற்கான லைசென்ஸுகளை வழங்காமல் இருப்பதன் காரணமாக, தமிழக அரசோடு மத்திய அரசு ஒத்துழைப்புத் தரவில்லையென்ற குற்றச்சாட்டை நாம் சொல்ல வேண்டியவர்களாக இருக்கிறோம்

திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் பேசும்போது, 'ஒரு சதவீதம்தானா கழக ஆட்சியில் ஏற்பட்டிருக்கின்றது' என்று குறிப்பிட்டார்கள். அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்வதெல்லாம், ஏற்கனவே காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் அவசரக் கோலத்தில் அள்ளித் தெளித்ததுபோல, சரியான முறையில் தொழில்களை அமைக்காததன் காரணமாக, தனியார் துறையில் தொழிலதிபர்களின் விருப்பம் போல் விட்டதன் காரணமாக, தொழிற்சாலைகள் லாபகரமான முறையில் நடத்த முடியாமல் அதற்கேற்ற ரிசர்வ் நிதியை ஒதுக்கித்தராததன் காரணமாக, புதிய புதிய இயந்திரங்களை வரவழைத்து சரியான கவனம் செலுத்தாததன் காரணமாக தொழில்களில் ஏற்பட்ட கவனக் குறைவின் காரணமாக தொழில்கள் எல்லாம் பாதிக்கப்பட்டன. மூடிய மில்களைத் திறக்க வேண்டுமென்பதற்காக கழக அரசு நாட்டம் செலுத்திக் கொண்டிருக்கிறது என்பதை எதிர்த்தரப்பினர் உணர்ந்துகொள்ள வேண்டும். ஏற்கனவே காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் சரியான முறையில் தொழில்களை துவக்கப்பட்டு நடத்தாதன் காரணமாக தொழில்கள் எல்லாம் பாதிக்கப்பட்டன. முடியாத நிலைமை இருந்தது. கழக அரசு தொழில் வளர்ச்சியையும், வேலையில்லாத் திண்டாட்டத்தையும் கருத்திற்கொண்டு, புதிய தொழில்களை மிகக் குறுகிய காலத்திலே துவக்க வேண்டுமென்று கருதிக் கொண்டிருக்கிறது. ஆனால் லைசென்ஸ்களைப் பெறுவதிலுள்ள சங்கடங்களை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

தொழில்கள் தனியார் துறை, கூட்டுறவுத் துறை, சர்க்கார் இலாகாவினால் நடத்தப்படும் துறை என்று முறைகளில் நடத்தப்படுகிறது என்றாலும், இன்றைக்கு தமிழக அரசு 'ஜாயின்ட் செக்டார்' அதாவது கூட்டுத் துறையிலே துவங்குவதை ஒரு முன்மாதிரியாகக் கொண்டிருப்பதைக் கண்டு எல்லோரும் பாராட்டுகிறார்கள். தூத்துக்குடியிலே உரத் தொழிற்சாலை கூட்டுத் துறையிலே இருக்கிறது. தொழில் அமைச்சர் மாண்புமிகு திரு. மாதவன் அவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சிகளை இந்த நாடே பாராட்டுகிறது. எப்படியாவது நம்முடைய தமிழகத்தை தொழில் மயமாக்கிவிட வேண்டும், வேலையில்லாத் திண்டாட்டத்தை நல்ல முறையில் சமாளிக்க வேண்டும் என்று நம்முடைய அரசு முயற்சிகளை எடுத்துக்கொண்டு வருகிறது. அப்படிப்பட்ட அரசை நாம் பாராட்ட வேண்டும். குறை சொல்கின்ற நேரத்திலே, எவ்வளவு அருமையான முயற்சிகளையெல்லாம் இந்த அரசு எடுத்துக்கொண்டிருக்கிறது என்பதைக் கண்டு அவர்கள் பாராட்ட வேண்டும்.

அடுத்தபடியாக, தொழில்கள் இன்னும் பரவலாக துவக்கப்பட வேண்டும். மத்திய அரசின் தொழில் கொள்கை சரியாக இல்லாவிட்டால், நம்முடைய மாநிலத்தின் நன்மையைக் கருதி, நாம் எல்லோரும் ஒன்றாக இணைந்து நின்று பாடு பட வேண்டும்.





நம்முடைய தமிழகத்திலே பரவலாக எல்லா மாவட்டங்களிலும் தொழில்கள் வளரவில்லை என்ற நிலையைக் காண்கிறோம். அதற்காகத்தான் நம்முடைய அரசு, புதிய தொழில்களை ஊக்குவிக்கின்ற முறையில், புதிய தொழில்களைத் துவக்குகின்ற முறையில் பல்வேறு திட்டங்களை அமைத்துக் கொடுத்திருக்கிறது. அதன் பொருட்டே, தாலூகாவின் தலைநகரங்களிலே தொழில் பேட்டைகளை அமைக்க வேண்டுமென்று நமது அரசு சொல்லிக் கொண்டு வந்தது, சொல்லி வருகிறார்கள். அதை வெற்றிகரமாகச் செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, என்னுடைய தொகுதியான திருவொற்றியூர் பகுதி தொழில் மயமான தொகுதி என்று சொல்லப்படுகிறது. அது உண்மைதான். என்றாலும், அங்குள்ள மக்களுக்கு வேலை வாய்ப்பை ஓரளவுக்கேனும் பூர்த்தி செய்யக்கூடிய நிலைமை இல்லை. தொழிற்சாலைகள் எல்லாம் ஏற்கனவே தனியார் துறையில் துவக்கப்பட்டிருக்கின்றன. இப்போது சில தொழில்கள் விரிவுபடுத்தக் கூடிய நிலையிலும் இருக்கின்றன. இன்றைக்கு இருக்கக்கூடிய தொழிற்சாலைகள் எல்லாம் மானேஜ்மெண்டுகளின் கீழ் இருக்கின்ற காரணத்தால் மக்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்க முடியாத நிலை இருக்கிறது. மத்திய அரசு நிறுவிய தொழிற்சாலையும் வெளிநாட்டு நிறுவனங்களோடு இணைந்து துவக்கப்பட்டிருக்கிறது. திருவொற்றியூரை அடுத்த மணலியில் 'மெட்ராஸ் ரீபைனரீஸ்' இருக்கிறது. அங்கே வேலைவாய்ப்பு என்று பார்க்கும்போது ஒரு 500 தொழிலாளர்களுக்கும் குறைவாகத்தான் இருக்கும். 'மெட்ராஸ் பெர்டிலைஸர்ஸ் ப்ளான்ட்' தொழிற்சாலையை எடுத்துக் கொண்டாலும் வேலைவாய்ப்பு கொடுக்கிற நிலைமை அப்படித்தான் இருக்கிறது. நாட்டிலேயுள்ள வேலையில்லாத் திண்டாட்டத்தைத் தீர்க்கக்கூடிய அளவுக்கு புதிய தொழிற்சாலைகள் அமைத்தால் நல்லது.

அடுத்தபடியாக, எண்ணூரில் உள்ள அனல் மின்சார நிலையம் நம்முடைய கழக அரசால் நடத்தப்பட்டு வருகிறது. இதில் பலருக்கு வேலைவாய்ப்பு அளித்திருக்கிறோம். மத்திய அரசானது கல்பாக்கத்தில் 'அடாமிக் பவர் பிளான்ட்' அதாவது அணுமின் சக்தி நிலையம் துவக்கியிருக்கிறார்கள். கோடிக்கணக்கில் செலவழித்துத் துவக்கியிருக்கும் நிலையத்தில் பலருக்கு வேலைவாய்ப்பு கொடுக்க முடியாமல் இருக்கிறது. மத்திய அரசு தொழில்களைத் துவங்கினாலும் சரி, மாநில அரசு தொழில்களைத் துவங்கினாலும் சரி, மக்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்க வேண்டும். நம்முடைய அரசு மத்திய அரசை வலியுறுத்தி மக்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் வகையில் தொழில்களைத் துவங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ள வேண்டும். ஏற்கெனவேயுள்ள தொழில்களை விரிவாக்கும் போது மக்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்க வேண்டும்.

என்னுடைய பகுதியில் வேலைக்கு வந்தவர்கள், வேலைக்கு வரக் கூடியவர்கள் என்றெல்லாம் இருக்கிறார்கள். அந்தத் தொழிற்சாலைகளில் வேலைக்கு வரக் கூடியவர்கள் பல பகுதிகளிலிருந்து

வரக்கூடியவர்களாக இருக்கிறார்கள். அங்கே இருப்பவர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கவில்லை. மத்திய அரசின் நேரடி நிர்வாகத்திலுள்ள தொழிற்சாலைகளைப் பார்த்தால், பெரிய அதிகாரிகள் என்று பார்த்தால், அவர்களுக்கும் தமிழகத்திற்கும் தொடர்பே இல்லாமல் இருக்கிறது. தமிழகத்தில் இருப்பவர்கள் வேலையில்லாமல் திண்டாடக்கூடிய நிலையில் இருக்கும்போது, அவர்களுக்கு வேலை வாய்ப்பை அளிக்க வேண்டுமென்று நோக்கத்தோடு அதிகாரிகள் இருப்பதாகத் தெரியவில்லை. இந்த அரசு தனிக் கவனம் செலுத்தி அங்குள்ள மக்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும்படி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பல்வேறு தொழில்கள் வளர வேண்டிய நிலையில் இருக்கின்றன. ரீ ரோலிங் மில் தேவையான மூலப் பொருள்கள் பில்லட்ஸ் போன்றவை பிலாய் உருக்காலை, ரூர்கேலா உருக்காலை, இந்துஸ்தான் ஸ்டீல்ஸ் போன்றவைகளிலிருந்துதான் அவர்களுக்கு அலாட்மென்ட் கிடைக்க வேண்டும். சரியான முறையில் அலாட்மென்ட் கிடைப்பதில்லையென்று சொல்லி ரீ ரோலிங் மில் தொழிலாளர்களுக்கு 'லே ஆஃப்' தருகிறார்கள். சில நேரங்களில் ஆட்குறைப்பு செய்கிறார்கள். அதற்காக மத்திய அரசு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டு, நம்முடைய மாநிலத்தில் ரீ ரோலிங் மில்லுக்குத் தேவையான மூலப்பொருள்களைத் தருவதற்கு மத்திய அரசு முன்வர வேண்டும். அதற்கு தமிழக அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தொழில்கள் தமிழகத்திலே துவக்கப்பட இருக்கின்றன. அதற்காக அரசு எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது. அதற்கு நாட்டு மக்களின் பேராதரவு இருக்கிறது என்று சொல்லி, இந்த மானியக் கோரிக்கையை வரவேற்று ஆதரித்து முடிக்கிறேன், வணக்கம்.

**திரு. எம். தேவராசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே. . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஏழு நிமிஷங்களில் முடியுங்கள்.

**திரு. எம். தேவராசன் :** தலைவரவர்களே, தமிழகம் வேகமாக முன்னேறி வருகிறது என்பதை நாடு அறியும். இந்த நிலையில் நீலகிரி மாவட்டத்திலே இருக்கின்ற தொழில் வாய்ப்புக்களைப் பற்றிக் கூற விரும்புகிறேன். நமது அரசு மதுவிலக்கைத் தள்ளி வைக்கத் தீர்மானித்துள்ள நிலையில் நீலகிரி மாவட்டத்திலே பீர் தொழிற்சாலை ஆரம்பிக்க வாய்ப்புக்கள் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏற்கனவே அங்கே கேட்டி என்ற இடத்திலேயிருந்து பீர் தயாரித்துக் கொண்டிருந்தார்கள். அங்கே பார்லி, மால்ட் போன்ற பொருள்கள் கிடைப்பதால் நமது அரசு உடனடியாக பீர் தொழிற்சாலையை அங்கே ஆரம்பிக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.





கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலை நீலகிரி மாவட்டத்திலே மிகச் சிறப்பாக இயங்கிக் கொண்டு வருகிறது. அங்கே புதிதாக 6 கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலை கட்டுவதற்கு வாய்ப்பிருக்கிறது. நமது அரசு மத்திய அரசுக்குச் சொல்லி, தேயிலை போர்டுக்கும் சொல்லி, அந்த 6 தொழிற்சாலைகளுக்கும் அனுமதி வாங்கித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நீலகிரி மாவட்டத்திலே கோத்தகிரி பகுதியில் ஆடுதுறை என்ற எஸ்டேட்டிலே தங்கம் கிடைப்பதாக ஆய்வு நடத்தியிருக்கிறார்கள். வெள்ளைக்காரர் காலத்திலே அரசாங்கம் எடுத்திருப்பதாகத் தகவல்கள் இருக்கின்றன. எனவே அந்தத் துறையிலே அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கூடலூர் பகுதியிலே மைக்கா நிறைய கிடைக்கிறது. அங்கே மைக்கா தொழிற்சாலை ஆரம்பிக்க நிறைய வாய்ப்புக்கள் இருக்கின்றன என்பதையும் பணிவோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

கூடலூர் பகுதியிலே கிடைக்கும் களிமண்ணிலிருந்து பீங்கான் செய்யலாம். அங்கே ஒரு பீங்கான் தொழிற்சாலை ஆரம்பிப்பதற்கு நிறைய வாய்ப்புக்கள் இருக்கின்றன. இலங்கையில் இருந்து வரும் தமிழர்களைக் குடியமர்த்தயிருப்பதால் நல்ல பல தொழிற்சாலைகள் அமைக்க வாய்ப்பு இருப்பதை அரசுக்குப் பணிவோடு எடுத்துச் சொல்லி, நல்ல முறையில் தொழிற்சாலைகளை நிறுவிக்கொண்டும் இந்த பிரச்சினையில் நல்ல முறையில் துரித கவனம் செலுத்தியும் வரும் நமது அரசைப் பாராட்டி உரையை முடிக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்.** திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள், 15 நிமிஷங்களில் முடித்து விடுங்கள்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** மிஸ்டர் ஸ்பீக்கர் சார், தொழில் துறை சம்பந்தமாகயிருக்கும் மானியக் கோரிக்கைகள் 20, 40-க்குச் சில வெட்டுப் பிரேரணைகளை எங்கள் கட்சியின் சார்பிலே கொடுத்திருக்கிறோம். அந்த வெட்டுப் பிரேரணைகளில் இரண்டு முக்கியமான பிரேரணைகளைத்தான் இந்தச் சபையின் முன்னால் நாங்கள் அளித்துப் பேச வைத்திருக்கிறோம். அதாவது பல மாவட்டங்களிலே மூடியிருக்கும் ஆலைகளைத் திறப்பது, பின் தங்கிய பகுதியாக இருக்கும் நெல்லை மாவட்டத்திலுள்ள கோயில்பட்டி தாலூக்காவிற்கு எந்தவிதமான தொழில்களும் இல்லாமல் இருக்கிறது, அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கொடுத்திருக்கிறோம். முதலில் சொல்லியிருக்கும் பகுதியில் அதிகமான பேர்கள் பேசியிருப்பதால் நான் அதைப்பற்றிக் கடைசியில் சுருக்கமாகச் சொல்லலாம் என்று நினைக்கிறேன். அதற்கிடையிலே சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு 4 கோடி ரூபாய்வரை அதிகமாக மானியக் கோரிக்கை வேண்டுமென்று இந்த இலாக்காவின் சார்பிலே கேட்டிருக்கிறார்கள். 16 கோடியிலிருந்து 20 கோடி ரூபாய்

வரையிலே. ஆகவே இந்த ஆண்டும் முடியும்பொழுது 4 கோடியில் எந்த அளவிற்குச் சாதித்து இருக்கிறோம் என்பதை நமக்கு இன்று காலையில் கொடுத்ததைப்போல ஒரு ரிப்போர்ட் கொடுப்பார்கள் என்று நம்புகிறேன். நாங்கள் கொடுத்திருக்கும் சில வெட்டுப் பிரேரணைகளில் ஒரு முக்கியமான விஷயத்தை நான் குறிப்பிட ஆசைப்படுகிறேன்.

ஆறு வருஷ காலமாக அக்ரோ இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷன் என்று அரசு செயல்பட்டுக்கொண்டு வருகிறது. அந்த கார்ப்பொரேஷனின் தலைவராக மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா அவர்கள் இன்றைக்கு இருக்கிறார்கள். அக்ரோ இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பொரேஷன் மூலமாக எந்தவிதமான தொழில்களை ஆரம்பிக்க வேண்டுமென்று சொன்னாலும்கூட, மத்திய சர்க்காரின் அங்கிகாரத்தைப் பெறவேண்டிய அவசியமில்லை. ஆகவே, அந்த நிலையிலே நாம் உடனடியாக ஒரு டிராக்டர் ப்ளாண்ட் ஆரம்பிக்க வாய்ப்பினைச் செய்தால் பொருத்தமாக இருக்கும் என்று நம்புகிறேன்: பல சூழ்நிலைகளைக் கவனித்துப் பார்த்தால் அதற்குச் சரியான இடம் திருச்சியாகத்தான் இருக்க முடியும் என்று நம்புகிறேன். திருச்சியைச் சுற்றி தொழில் வளர்ச்சியடைந்து வருகிறது. எனவே, அதற்கான ஏற்பாட்டை அரசு செய்ய வேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தமிழக அரசு 10 லட்சம் ஏக்கர்களுக்கு மருந்து போடுவதற்கு ஏற்பாடு செய்திருந்தார்கள். ஒவ்வொரு தடவையும் மருந்து போடுவதற்கு நாம் ஹெலிகாப்டரை பம்பாயிலிருந்து கொண்டுவர வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அதற்கு மாறாக ஹெலிகாப்டர் விலை என்னவென்று எனக்கு நிச்சயமாகத் தெரியாது, 5 இலட்சம் ரூபாய்க்குமேல் இருக்காது என்று நினைக்கிறேன். 5 ஹெலிகாப்டர்களை நாம் வாங்கியிருப்போமானால் கண்டிப்பாக தமிழகத்தில் தேவையான இடங்களிலேயெல்லாம் மருந்து போடப் பேருதவியாக இருக்கும். சென்ற ஆண்டு 10 இலட்சம் ஏக்கர்களுக்குப் போடுவதாகத் திட்டமிட்டு, போதுமான நேரத்தில் ஹெலிகாப்டர்கள் கிடைக்காத காரணத்தால் 6 இலட்சம் ஏக்கர்களுக்குத்தான் மருந்து போடக்கூடிய நிலை ஏற்பட்டது.

அடுத்தபடியாக அரசைப் பொறுத்தவரையிலே, நான் தனியார் துறை, பொதுத் துறையிலே இருக்கும் விஷயங்களைப்பற்றி இப்பொழுது அதிகமாகப் பேச விரும்பவில்லை. பொதுத் துறை சரியான இலாபத்தில் இல்லை என்று சொல்லுகிறார்கள். அதைப் பற்றித் தனியாக ஒரு விவாதமே வைத்து, எந்த அளவிற்கு நாம் பொதுத் துறையில் முன்னேறி வந்திருக்கிறோம் என்று அதற்காகத் தனியாக விவாதம் இருந்தால் உதவிகரமாக இருக்கும் என்று நம்புகிறேன். இன்றைக்கு நம் முன்னால் எழுப்பப்பட்டிருக்கும் விஷயம், பொதுத் துறையில் சில சிரமங்கள் இருப்பதால் பொதுத் துறையும், தனியார் துறையும் சேர்ந்திருக்கும் ஜாயிண்ட் துறை அமைத்திருக்கிறோம் மத்திய அரசின் அங்கீகாரம் பெற்றிருக்கிறோம் என்று



தெரிவித்திருக்கிறார்கள். அம்மாதிரி விஷயத்தில் சோடியம் ஹைட்ரோ சல்பேட் தொழிற்சாலை விஷயத்தில் 140 இலட்சம் செலவாகும் என்றும், ஆடோமொபைல் டயர்ஸ் அண்ட் டியூப்ஸ் தொழிற்சாலை விஷயத்தில் எந்த அளவிற்குப் பணம் செலவிடப்படுவது என்று தெரியவில்லை. சோடா ஆஷ் அமோனியம் குளோரைட் தொழிற்சாலை விஷயத்தில் 8 கோடியே 80 இலட்சம் ரூபாய் செலவாகும் என்றும் கூறப்பட்டிருந்தது.

எங்களைக் கேட்டால் இம்மாதிரியாக கூட்டுத்துறை என்று அமைப்பது அவ்வளவு உசிதம் அல்ல என்பதுதான். ஆனாலும் சிறிய தொழிலாக, ஒரு கோடி ரூபாய்க்கு உட்பட்ட தொழிலாகயிருந்தால் அதில் தனியார் திறமையையும் பயன்படுத்திக் கொள்வதில் ஆட்சேபணை கிடையாது. ஆனால் 8 கோடி, 9 கோடி, 10 கோடி ரூபாய் என்று மூலதனம் போட்டுச் செலவு செய்யும் பொழுது அதில் தனியாரையும் கொண்டுவந்தோமானால் அது விளையாட்டாகத்தான் முடியும். அவர்கள் அதில் எந்த அளவிற்குச் சிரமத்தோடு பாடுபடுவார்கள் என்று சொல்ல முடியாது. சிறு தொழில்களாகயிருந்தால் அம்மாதிரி கூட்டு அமைப்பதிலே ஆட்சேபணை இல்லை. ஆனால் இம்மாதிரி பெரிய தொழில்களில் கூட்டு இருக்கக்கூடாது என்ற ஒரு கருத்து இந்த இடத்திலே சொல்லக் கடமைப்பட்டவனாகயிருக்கிறேன்.

இன்னொரு முக்கியமான விஷயம் என்னவென்றால், ஏற்கெனவே சென்ற ஒரு தடவை கேள்வி கேட்கும்பொழுது அமைச்சரவர்கள் சொன்னார்கள், இந்தியா பூராவிலும் 45 கோடி ரூபாய் வரையிலும் சர்க்கரை ஆலை முதலாளிகள் விவசாயிகளுக்குப் பணம் கொடுக்கவில்லை, அதில் தமிழகத்தில் எவ்வளவு என்று கேட்டேன், அதற்கு நேரடியாகப் பதில் சொல்லவில்லை. தமிழகத்திலேகூட தனியார் துறையிலே இருக்கும் ஆலை முதலாளிகள் விவசாயிகளுககுப் பணம் கொடுக்காமலிருக்கிறார்கள். இது தொழில்களையும் பாதிக்கிறது, தொழில்களுக்கு மூலப் பொருள்கள் கொடுக்கும் விவசாயிகளையும் பாதிக்கிறது என்ற முறையில் அவர்களுக்கு உடனடியாகப் பணம் கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டும். எவ்வளவுதான் விவரமாக விவாதத்திற்குப் பதில் கொடுத்தாலும்கூட மாண்புமிகு அமைச்சர் திரு. சண்முகம் அவர்கள் சொன்னது எங்களுக்குத் திருப்தியளிக்கவில்லை. காரணம், 1 டன்னுக்கு 100 ரூபாய் விவசாயிகளுக்குக் கொடுக்க வேண்டுமென்று அகில இந்திய ரீதியில் விவசாயிகள் சங்கம் கேட்டுக் கொண்டு வருகிறார்கள். அப்படியிருக்கும் பொழுது தமிழகத்தில்தான் குறைந்த விலையாக, 1 டன்னுக்கு 75 ரூபாய் என்று, அதுவும்கூட நிச்சயமாகக் கிடைக்காமல் போகிறது என்று சொன்னால் அது சரியல்ல. விவசாயிகளுக்கு ஓரளவிற்கு நியாயம் வழங்கவேண்டும், குறிப்பாக கரும்பு விவசாயிகளுக்கு வழங்கப்படும் ரூபாயை அதிகமாக உயர்த்தவும், ரிஜிஸ்தர் பண்ணை விவசாயிகளுக்கு அந்த அளவிற்குப் பணம் கிடைக்கவும் உதவி செய்ய வேண்டுமென்று உங்கள் மூலமாகக் கேட்டுக் கொள்கிறேன்.

கைத்தறி நெசவைப் பொறுத்தவரையில் இந்த மானியக் கோரிக்கையில் எந்த அளவுக்குச் சொல்ல முடியும் என்று தெரியவில்லை. கைத்தறி நெசவுத் தொழிலாளர்கள்—அரசு கொடுத்த விவரத்தின் அடிப்படையில் பார்த்ததில் தமிழகத்தில் 5,50,000 கைத் தறிகள் இருக்கின்றன. அதிலே 2,30,000 கூட்டுறவுத் துறையில் இருக்கிறது. அதிலே பணியாற்றக்கூடிய தொழிலாளர்கள் 20,00,000 பேர். ஒரு வருஷத்தில் உற்பத்தியாகக் கூடிய துணி 3850 லட்சம் கஜம். அதன் எஸ்டிமேடட் காஸ்ட்—மதிப்பு 48 கோடி ரூபாய். நாற்பத்தெட்டு கோடி ரூபாய் மதிப்புள்ள துணியைக் கைத்தறி நெசவாளர்கள் உற்பத்தி செய்கிறார்கள். அவர்களுக்குப் பாது காப்புக் கொடுக்க வேண்டுமென்றால், 48 கோடி ரூபாய் பெறுமானம் உள்ள சரக்குகள் உற்பத்தி செய்யப்பட்டிருப்பதை விற்பதற்குத் தனி ஏற்பாட்டை அரசு செய்தால்தான் கைத்தறித் தொழிலைப் பாதுகாக்க முடியும். கூட்டுறவுத் துறையில் 2,30,000 லூம்கள் இருக்கின்றன என்று சொன்னார்கள். அவற்றில் பாதி அளவுகூட செயல்படாமல் இருக்கின்றன. ரிசர்வ் பாங்கு கடன் பெறுவதில் சில சிக்கல்கள் இருப்பதன் காரணமாக அந்த நிலை ஏற்பட்டிருக்கிறது. பல கூட்டுறவு சொசைடிகள் மூடப்பட்டன. ஏற்கனவே மூடப்பட்ட கூட்டுறவு சொசைடிகளை மீண்டும் திறப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

மூடிய ஆலைகளைப் பொறுத்தவரை என்னுடைய கருத்தை விவரமாகவும், அழுத்தமாகவும் சொல்ல விரும்புகிறேன். பஞ்சாலைகளை பொறுத்தவரை 1965-ம் வருஷத்திற்குப் பிறகு ஒரு நெருக்கடி ஏற்பட்டு பல ஆலைகள் மூடப்பட்டன. இந்தியா பூராவும் 68 ஆலைகள் மூடப்பட்டன. அதிலே தமிழகத்திலே 28 ஆலைகள் மூடப்பட்டன. மூடப்பட்ட உடனே எப்படியாவது தொழிலாளர்களுக்கு நன்மை செய்ய வேண்டுமென்ற முறையில் அன்று இருந்த முதலமைச்சர் அவர்கள் எங்களை எல்லாம் கூப்பிட்டு தொழிலாளர்களுக்கு எப்படியாவது பணம், பிராவிடண்ட் பண்ட் நிதியில் இருந்தாவது கிடைப்பதற்கு, முதலாளி போட்ட பணத்திலிருந்து பாதியாவது கிடைப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று கூறினார்கள். அதை நாங்கள் நிறைவேற்றி வைத்தோம். தொழிலாளர்கள் அவர்கள் போட்ட பணத்திலிருந்து பணம் பெறுவதற்கு வழி செய்யப் பட்டது.

நம்முடைய அரசு தொழிலதிபர்களுக்குக் காரண்டி கொடுக்கும் வகையில் கிட்டத்தட்ட 80 லட்சம் ரூபாய் வரையில் காரண்டி கொடுத்தது. அதை அந்த முதலாளிகள் விரயம் செய்தார்கள். தொழிலாளர்களுக்கு எந்தவிதமான நன்மையும் ஏற்படவில்லை. இந்த அனுபவத்தை வைத்துக்கொண்டு பஞ்சாலைகளுக்குப் பணம் கொடுக்க காரண்டி கொடுக்கக்கூடாது என்ற நிலையை எடுக்கக் கூடாது. இன்றைக்கு ஐ.டி.ஆர். சட்டத்தின்படி ஏதாவது தொழிற்சாலை மூடியிருக்கும் என்று சொன்னால் அதைக் கண்காணித்து விசாரணை நடவடிக்கைகளைச் செய்ய மத்திய அரசுக்குத்தான்





அதிகாரம் இருக்கிறது. அவர்கள் விசாரணை நடத்துவதில் கிட்டத்தட்ட ஓராண்டு, இரண்டு ஆண்டுகள் ஆகிவிடுகின்றன. வயபிள் யூனிட் என்று தெரிந்த பிறகு எடுத்து நடத்த ஆதரைஸ்டு ஏஜண்டைப் போடுகிறார்கள். நம்முடைய தமிழ்நாடு டெக்ஸ்டைல் கார்ப்பரேஷன் ஆதரைஸ்டு ஏஜண்ட் என்ற அளவுக்குத்தான் இருக்கும் என்று சொன்னால் அது தேவைதானா? தமிழ்நாடு டெக்ஸ்டைல் கார்ப்பரேஷன் மூலதனத்தை அதிகப்படுத்த வேண்டும். திறமையற்று இருக்கக்கூடிய பஞ்சாலைகளை ஏற்று நடத்த உரிய அதிகாரமும், தெம்பும் பெற்றதாக இருக்கவேண்டுமே தவிர மத்திய அரசுக்கு ஆதரைஸ்டு ஏஜண்டாகத்தான் அது இருக்கவேண்டுமென்றால் அது தேவையே இல்லை.

சமீபத்தில் நான்கு பஞ்சாலைகளைக் கோவையில் ஏற்று நடத்தினார்கள். தொழிலாளர்களுக்கு ஏற்கெனவே கொடுக்கப்பட்ட சம்பளத்தைக் குறைக்கக்கூடாது என்ற நிலைமை இருந்தாலும் எல்லாத் தொழிற் சங்கங்களும் சேர்ந்து தியாகம் செய்யத் தயாராக இருக்கிறோம், லாபம் கிடைத்தால் பங்கு கொடுக்கட்டும் என்று கூறி குறைந்த சம்பளத்தை வாங்கிக்கொண்டு தொழிலாளர்கள் பணியாற்றி வருகிறார்கள். அந்த நான்கு பஞ்சாலைகளும் திறம்படப் பணியாற்றிக்கொண்டு வருகின்றன. ஒரு லட்சத்திற்கும் அதிகமான ஸ்பிண்டில்கள் உள்ள மில்கள் ஓடிக் கொண்டிருக்கின்றன. ரொம்ப நாட்களுக்குப் பிறகு லாபம் கிடைத்திருக்கிறது. லாபத்தில் தொழிலாளர்களுக்குப் பங்கு கிடைத்திருக்கிறது. இப்போது முருகன் மில்லையும் எடுக்க முடிவு செய்திருக்கிறார்கள். ஐ.டி.ஆர். சட்டத்தின்கீழ் மில்களைத் திறக்க வேண்டுமென்று சொன்னால் கோவை நகரத்தில் கண்டிப்பாகத் திருப்தியும் ஏற்படாது, அமைதியும் ஏற்படாது. என்பதை எல்லோரும் உணருவார்கள். அதனை நகரத்தில் இருக்கக்கூடிய மக்களுடைய முக்கியமான பிரச்சினை என்று பார்க்க வேண்டும். மூடிய மில்களைத் திறக்கச் சட்டம் இருக்கிறது. சட்டத்தின் அடிப்படையில்தான் வேலை செய்யவேண்டுமென்ற முறையில் போவோமானால் கண்டிப்பாக—

" we will be missing the main problem "

என்பதுதான் என்னுடைய குற்றச்சாட்டு. அதைப் பிரத்தியேகமாக எடுத்துக் கவனிக்கவேண்டும். தமிழகத்தின் முக்கியமான தொழில், பஞ்சாலைத் தொழில், நசித்துப் போக அனுமதிக்கக் கூடாது. உடனடியாக கோவை நகரத்தில் இருக்கக்கூடிய நாலைந்து மில்களை எடுத்து நடத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

மதுரை நகரத்தைப் பொறுத்தவரை எல்லா சட்டமன்ற உறுப்பினர்களையும் பார்த்து ஒரே கேள்வியைத்தான் கேட்கிறார்கள். 'ராஜா மில் மூடிக் கிடக்கிறது, கோதண்டராமன் மில் மூடிக் கிடக்கிறது, பாண்டியன் மில் திறந்து மூடப்பட்டிருக்கிறது, பழைய முருகன் மில் மூடிக் கிடக்கிறது. இவற்றை எல்லாம் திறக்க வழி

இல்லையா ? நீங்கள் எல்லாம் போயிருக்கிறீர்களே ! என்று கேட்கிறார்கள். நாங்கள் அரசைக் கேட்கிறோம். அரசு நீங்களே ஏதாவது வழி சொல்லுங்களேன் என்று கூறுகிறார்கள்.

பாண்டியன் மில் நிர்வாகம் வெள்ளைக்கார நிர்வாகம். அவர்கள் ஏற்கனவே செயல்பட்டு வருகிறார்கள். அவர்கள் விரும்புவது ஒரு வீவிங் யூனிட் அமைக்க வேண்டுமென்று மத்திய அரசை லைசென்ஸ் கேட்டிருக்கிறார்கள். மத்திய அரசு அந்த லைசென்சைக் கொடுக்க தமிழக அரசு தன்னுடைய செல்வாக்கைப் பயன்படுத்திச் செய்வார்களானால் 800 பேருக்கு உடனடியாக வேலை கிடைக்கும் வாய்ப்பு இருக்கிறது.

ராஜா மில்லில் சமீப காலத்தில் சில நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு அந்த விவரத்தைச் சொல்ல வேண்டுமென்று சொன்னால்—

**preparatory section has been modernised**

என்ற வகையில் தமிழகத்தின் சிறந்த மில்லாக இருக்கிறது. ஆரம்ப காலத்தில் என்ன மாதிரி அதை எல்லாம் செய்தார்கள் என்று பார்க்கும்போது 12,000 கதிர்கள் இருக்கும் நிலை இருந்தது. இப்போது 8,000 ஓடும் வாய்ப்பு இருக்கிறது. பழனியில் உள்ள ஒரு சிறு மில், நல்ல மில், முதலாளிகளுக்குள்ளே சண்டை போட்டுக் கொண்டு கோர்ட்டில் வாதாடிக் கொண்டிருக்கிறார்கள். அதனால் 750 தொழிலாளர்கள் வேலை வாய்ப்பு இல்லாமல் இருக்கிறார்கள். இந்த மாதிரி நிலைமை வரும்போது கண்டிப்பாகத் தலையிட வேண்டும்.

இராமநாதபுரத்தில் உள்ள சண்முகர் மில், செங்கோட்டையில் உள்ள பலராம வர்மா மில்—ரொம்ப சிரமப்பட்டு அந்த மில்லைத் திறந்தோம். ஒரே வருஷத்தில் அந்த மில்லை மூடியே தீருவோம் என்ற வகையில் முதலாளிகள் செய்கிறார்கள். வட ஆற்காடு மில், திருச்சி மில் ஆகிய இவற்றை எல்லாம் தொழிலாளர்களுக்கு வேலை இல்லாத பிரச்சினை என்ற ரீதியில் பார்த்து அதற்குரிய ஏற்பாடுகளை அரசு செய்ய வேண்டும். அதைச் செய்வதற்கு நான் ஒரு ஆலோசனை கூறுகிறேன்.

ஒன்று, சதர்ன் ஸ்ட்ரக்சுரல்ஸ் மாதிரி நேரடியாக எடுக்க வேண்டும். அதிலே இருக்கக்கூடிய முதலாளிகளே மறுபடியும் நடத்துவது என்றால் அதிலே ஊழல்தான் ஏற்படும். அதிலே கண்ட்ரோல் அரசுக்கு என்று இருக்கவேண்டும். கோவையிலே காளீஸ்வரா மில், சோமசுந்தரா மில் இரண்டையும் அந்த அதிபர் சோமசுந்தரம் செட்டியார் கையிலேயே மறுபடியும் விட்டால் மில் ஓடாது. யாராவது குத்தகை எடுக்கத் தயாராக இருந்தால் அவர்களுக்கு விடுங்கள். அதற்கு மாறாக—

**we have burnt our fingers once.**

என்ற நிலைமையில் அரசோ, அரசுக்கு ஆலோசனை சொல்லுபவர்களோ முடிவு எடுத்தால் அது நாட்டு நிலைமையைப் புரிந்து கொள்ளாமல் சட்டத்தை மட்டும் பார்க்கக்கூடிய நிலையாகத்தான் இருக்கும் என்பதை வற்புறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.





தமிழகத்தில் சில மாவட்டங்களைப் பின்தங்கிய மாவட்டங்கள் தொழில்துறையில் என்று அறிவித்திருக்கிறார்கள். அதிலே மதுரையும் சேர்ந்திருக்கிறது. மதுரையில் சுற்றிச் சுற்றிப் பார்த்தால் பஞ்சாலைகள் தவிர வேறு ஒன்றும் கிடையாது. பக்கத்தில் அலுமினியம் பாக்டரி ஒன்று இருக்கிறது என்று சொல்லலாமே தவிர வேறு ஒன்றும் இல்லை.

இந்திய அரசைப் பொறுத்தவரை பர்மனென்ட் டிராட் ஏரியாவாக தருமபுரியையும், கிழக்கு இராமநாதபுரத்தையும் கூறியிருக்கிறார்கள். கிழக்கு இராமநாதபுரத்திலும், தருமபுரியிலும் உடனடியாகத் திட்டமிட்டு தொழிற்சாலைகளை ஆரம்பிக்க ஏற்பாடு செய்ய வேண்டும். இருப்பதே போகக்கூடிய நிலைமை வரக்கூடாது. பொது விவாதத்தில் பேசுகின்றபோதே சொன்னேன்.

சேதுசமுத்திர கால்வாய்த் திட்டத்தை உடனடியாகக் கொண்டு வர முயற்சி செய்வதோடுகூட, தமிழக அரசு இப்போது தொடங்கக் கூடிய தொழில்களுக்கு அதிகமான இடம் கிழக்கு இராமநாதபுரத்திற்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இறுதியாக, டூப்ளிசிடி என்பது கூடாது என்று தெரிவித்துக் பி.ப.
கொள்கிறேன். உதாரணமாக ஸ்மால் ஸ்கேல் இண்டஸ்ட்ரிஸ் கார்ப 12.30.
ரேஷன் என்று ஒன்று அமைத்தார்கள். சில தொழில்கள் வளர்ந்தன, அவற்றில் சில மூடிவிட்டன. ஏன் மூடியது என்று தெரியாது. அதற்காக இன்னொரு கார்ப்பரேஷன் அமைக்கப்பட்டிருக்கிறது. இதற்கும் அதற்கும் என்ன சம்பந்தம் என்று தெரியவில்லை. இந்த மாதிரி டூப்ளிசிடி இல்லாமல் இருந்தால் நல்லது.

ஹாண்டே அவர்கள் வேறு விதத்தில் கூறினார்கள். தொழில் நடத்துவதில் எந்த அளவிற்கு எளிதாகச் செய்ய வேண்டுமோ அந்த அளவுக்கு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இன்று மத்திய அரசு தொழில்களைப் பொறுத்தவரையில் நமக்கு அளிக்கும் மான்யம் வங்கத்திற்கு அளிப்பதற்கு ஒப்பாக இருக்கிறது. நாங்கள் பாராளுமன்றத்தில் இருந்தபோது, தமிழகத்திற்கு அதிகமான நிதி ஒதுக்கீடுகள் செய்யவேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். முன்பெல்லாம் மகாராஷ்டிரத்திற்குத்தான் அதிகமான மான்யங்கள் அளிக்கப்படும். இன்று வங்கத்தை ஒதுக்கிவிட்டார்கள். தமிழகத்திற்கு இன்று அளிக்கப்பட்டு வரும் மான்யங்கள் அதிகமாக இருந்தபோதிலும், பின்தங்கிய மாநிலங்களான மைசூரும், ஆந்திரப் பிரதேசமும் எந்த அளவுக்கு வளர்ந்து இருக்கின்றன என்பதைப் பார்க்கவேண்டும்.

தமிழகத்திற்கு வர இருந்த அலுமின்யம் பவுடர் பாக்டரியை பம்பாயிற்கு கொண்டுபோகத் தயாராக இருந்தார்கள். அதை நாங்கள்தான் சண்டை போட்டு இங்கே கொண்டு வந்தோம். தொழில்துறைக்கு எந்த முறையில் பாதுகாப்பளிக்கவேண்டுமென்பதற்கு 2 உதாரணங்களைச் சொல்லி என் வார்த்தையை முடிக்கிறேன்.

முதலாவதாக, கோவையில் பம்புசெட்டுகள் அதிகமாக உற்பத்தி செய்கிறார்கள். அகில இந்திய அடிப்படையில் பார்த்தால், 40 சத விகிதம் பம்புசெட்டுகள் இங்கே உற்பத்தி செய்யப்படுகின்றன. நான் சொல்லியதில் தவறு இருந்தால், அமைச்சர் அவர்கள் பதில் கூறுகிறபோது கரெக்ட் செய்யலாம். இவ்வளவு உற்பத்தி இருந்த போதிலும், விற்பனை சரியாக இல்லை. ஆகவே, டைரக்டர் ஜெனரல் ஆப் சப்ளைஸ் அண்டு டிஸ்போசல்ஸ் அவர்கள் மூலமாக இவ்வளவு பம்புசெட்டுகள் தமிழ்நாட்டிலிருந்து வாங்க வேண்டுமென்று சொல்லவேண்டும். அந்தமாதிரி செய்தால்தான் பம்புசெட்டு உற்பத்தியாளர்கள் பாதுகாக்கப்படுவார்கள். அவர்களுக்கு வேண்டிய மூலப் பொருள்கள் எந்த அளவுக்கு சப்ளை செய்ய வேண்டுமோ அந்த அளவுக்கு சப்ளை செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்ததாக, சிம்கோ, அதாவது, மின்சார கணக்கு எடுக்கும் மீட்டர். அது திருச்சியில் தயாராகிறது. அந்த சிம்கோ நிறுவனத்தை நாம் பாதுகாக்கவில்லையென்றால், பிர்லா அதை விழுங்கி விடுவார். அங்கே உற்பத்தியாகும் மீட்டர்களை தமிழ்நாடு பூராவும் சப்ளை செய்யவேண்டும். அரசாங்கத்திற்கு வேண்டியவைகளை வாங்கவேண்டும். வெளிமாநிலங்களுக்கும் ஏற்றுமதி செய்ய வேண்டும்.

பொதுவாகப் பார்த்தால், இன்னும் அதிகமான முறையில் நாம் ஏற்கெனவே போட்ட திட்டங்கள் எல்லாம் விரிவுபடுத்தப்பட வேண்டும்.

சேலம் பிளாண்டைப் பொறுத்தவரையில் இவ்வளவு மெதுவாக வேலை நடத்துவது என்பது எல்லோருக்கும் கவலையைக் கொடுத்து வருகிறது. அது துரிதமாக உற்பத்தியை ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடிக்கிறேன்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவரவர்களே, இந்த விவாதத்திலே பல கட்சிகளின் சார்பாக பல நல்ல கருத்துக்களை எல்லாம் இங்கே எடுத்துக் கூறினார்கள். பொதுவாக, எங்கள் கட்சியின் பெயரால் கொடுத்து இருக்கும் வெட்டுப் பிரேரணைகளை ஆதரித்து, ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

தொழில் துறையில் வேகமாக முன்னேறி இருக்கிறோம் என்று சொன்னார்கள், அந்த வேகம் ஆமை வேகமாக இருக்கிறது. பயப்படக்கூடிய வகையில் இருக்கிறது என்று தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். நமது மாகாணத்தில் தொழில் துறையில் என்னென்ன விதத்தில் முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது என்பதை கிராப் மூலமாகக் கோடிட்டுக் காட்டப்பட்டிருக்கிறது. 57-ல் இருந்த வளர்ச்சியும், அதற்கு பிற்பாடு இருந்த வளர்ச்சியின் சத விகிதத்தைப்பற்றி எல்லாம், என்னுடைய கட்சியைச் சார்ந்த உறுப்பினர் திருமதி டி. என். அனந்தநாயகி அவர்கள் சுட்டிக் காட்டினார்கள், அதை எல்லாம் நான் மறுபடியும் எடுத்துக் கூற





விரும்பவில்லை. அவர்கள் கூறிய கருத்தோடு, நான் ஒரு சில கருத்துக்களை இந்த மன்றத்தின் கவனத்திற்கு குறிப்பாக தொழிலமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

அதிக நூற்பு ஆலைகள் மூடப்பட்டுக் கிடக்கின்றன. அதற்கு எடுத்த நடவடிக்கைகள் போதாது, இன்னும் துரிதமாக நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். மத்திய அரசாங்கத்திலிருந்து பணம் வரவில்லையென்றால், அதை எப்படியாவது பெற்றுக்கொள்ளவேண்டுமென்று பலர் பேசினார்கள். அந்த நூற்பு ஆலைகள் திறப்பதில் என்ன கஷ்டங்கள், சங்கடங்கள் இருக்கின்றன என்பதை நல்ல முறையில் ஆராயவேண்டும். ஒரு வேளை அது பழங்காலத்தில் ஆரம்பித்த தொழிற்சாலைகள், இயந்திரங்கள் சரிவர இருக்காது, தொழில்கள் இயங்க கஷ்டமாக இருக்கும் என்று சொன்னால், அந்த கஷ்டத்தைத் தவிர்ப்பதற்கு திறமை படைத்த, ஆற்றல் படைத்த, தொழில் அமைச்சர் அவர்கள் வேண்டிய நடவடிக்கைகள் மேற்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அரசாங்கத்தைப் பற்றி எதிர்க்கட்சிகள் குற்றக்கணக்கைப் படிக்கிறார்கள் என்று சொன்னார்கள். அப்படிக் குற்றங்களைச் சொல்கிறபோது, பொறுமையோடு அமைச்சர்கள் கேட்டுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஒரு வேளை ஆத்திரத்தோடு கருத்து கூறப்பட்டாலும், அதைச் சிந்தித்து அதற்குப் பதில் சொல்வது அன்னாரின் கடமையாகும் என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

கூட்டுறவு அடிப்படையில் நூற்பு ஆலை நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. பல நூற்பு ஆலைகளும் இருக்கின்றன. விசைத்தறிகளும் இருக்கின்றன. சுமார் 1,20,000—1,25,000 நூற்பு ஆலைகள் பகுதியில் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகமாக இருக்கிறது. இயங்கி வருகின்றன. அது ஒரு 'வயபிள் யூனிட்டாக' இருக்காது, லாப நஷ்டக்கணக்கு புள்ளி அளவு கொடுத்தால் போதாது. குறைந்த பட்சம் 25,000 கதிர்கள் வைத்து ஆரம்பிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும். பேட்டையிலே இருக்கும், நூற்பு ஆலையும், திருச்செந்தூரில் இருக்கும் நூற்பு ஆலையும் இப்போது விரிவுபடுத்தப்பட்டிருக்கின்றன. மற்றப் பகுதிகளில் இருக்கும் நூற்பு ஆலைகளிலும் இதை விஸ்தரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கன்யாகுமரியில் இருக்கும் நூற்பு ஆலைப் பற்றி எனக்கு முன் பேசிய திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் நாங்கள் அவர்களோடு சரிவர ஒத்துழைக்கவில்லை என்ற குற்றச்சாட்டைச் சொன்னார்கள். எந்தத் தொழிலும் எங்கள் ஜில்லாவில் ஆரம்பிப்பதை நாங்கள் குறுக்கிட்டு தடுக்கவில்லை. அவர்கள் எங்கள் மாவட்டத்தின் செல்லப்பிள்ளையாக இருக்கிறார்கள். அவர்கள் இந்த மாதிரி எங்கள் மீது குற்றம் சொல்ல வேண்டாம்.

**திரு. வீ. கே. இராஜாப்பிள்ளை** : காங்கிரஸ்காரர்கள் என்று பட்ட முறையில் சொல்லவில்லை, எங்கள் கட்சியையும் சேர்த்துத் தான் இந்த அரசோடு ஒத்துழைக்கவேண்டுமென்று சொன்னேன். தனிப்பட்ட முறையில் சொல்லவில்லை, எங்கள் கட்சியையும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்** : விளக்கத்திற்கு நன்றி. கன்னியாகுமரி மாவட்டம் பிற்பட்ட பகுதி என்று பிரகடனப் படுத்தப்பட்டிருக்கிறதே தவிர, நம்முடைய அரசாங்கம் அங்கே என்ன செய்து இருக்கிறது என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ரப்பர் தொழிற்சாலை ஆரம்பிப்பதற்கு எல்லாவிதமான மூலப்பொருள்களும் எல்லா சௌகரியங்களும் இருந்தாலும், அந்தத் தொழிற்சாலை அங்கே அமைக்கப்படாமல், அமைச்சர் இருக்கும் மாவட்டத்திற்குள் ஓடி ஒளிந்து இருக்கிறது என்ற உண்மையை உங்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். கூட்டுறவுத் துறையில் ஆரம்பிக்கப்படும் எந்த நிறுவனமும் ஏன் அந்த ஜில்லாவில் அமைக்கக்கூடாது என்பதற்கு இந்த அரசாங்கமும், குறிப்பாக, ஆளும் கட்சியும், சமாதானம் கூறவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அது மட்டுமல்ல பல தொழிற்சாலைகள் அங்கே தொடங்குவதற்கு போதிய வசதி இருக்கிறது. உப்பு அதிகமாக உற்பத்தி ஆகிறது. எப்படி தூத்துக்குடியில் ரசாயன உரம் செய்ய வசதி இருக்கிறதோ அதேபோல் இந்த மாவட்டத்திலும் வசதி இருக்கிறது. அதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கடந்த 4 ஆண்டுகளில் என்னென்ன தொழிற்சாலைகள் நம் ஜில்லாவில் தொடங்கப்பட்டது என்பதை நெஞ்சிலே கை வைத்துச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பொதுவாக அந்த ஜில்லாவிலே, மக்கள் அத்தனை பேரும் புறக்கணிக்கப்பட்டிருக்கிறார்கள். அதிகாரிகளும், கன்யாகுமரி ஜில்லாவிலிருந்து வருகிறார் என்றால் இடம் கிடையாது என்று சொல்லும் அளவில் இருக்கிறது. தொழில் துறையிலும் வேறு எந்தத் துறையிலும், பிற்பட்ட இனம் என்று கேவலப்படுத்தும் அளவில் நடத்தப்படுகிறது, இந்த அரசாங்கத்தால் என்கிற குற்றச்சாட்டைக் கூற விரும்புகிறேன்.

ஸ்டாண்டர்ட் மோட்டார்த் தொழிற்சாலை பற்றியெல்லாம் பல கருத்துக்கள் கூறினார்கள். அதில் அரசாங்கத்தின் தயக்கம் என்ன, சங்கடம் என்ன என்று தெரியவில்லை. தொழிலாளர்கள் வாடி வதங்குகிறார்கள். அந்தப் பிரச்சினைக்கு உடனடியாக அரசாங்கம் தீர்வு காணாமல், ஏன் மௌனம் சாதித்துக்கொண்டு இருக்கிறார்கள் என்பது புரியவில்லை. காலந்தாழ்த்தாமல், அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். தொழிலாளப் பெருமக்கள், தொழிலாளர் அரசு என்று பறை சாற்றிக்கொள்ளும் இந்த அரசால் புறக்கணிக்கப்படுவது இந்த அரசாங்கத்திற்குச் சிறப்பாக இருக்காது என்று மட்டும் கூற விரும்புகிறேன்.



இன்னும் பல காரியங்கள் கூறவேண்டும் என்று நினைக்கிறேன். தொழில் துறையில் அதிக முன்னேற்றம் அடைந்திருந்த மாநிலமாக இருந்தது நம்முடைய மாநிலம். ஆனால் இன்று வேறு மாநிலங்களோடு ஒப்பிடப் பார்த்தால், மகாராஷ்ட்டிரா, குஜராத், வங்கம் போன்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்த்தால், நமக்குப் போதுமான வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறதா என்பதை மாண்புமிகு தொழில் அமைச்சர் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

குறிப்பாக ஒன்று கூற விரும்புகிறேன். இங்கே 12,500 பவர் லூம்ஸ் ஏற்படுத்துவதற்கு அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது. எந்த எந்தப் பகுதிகளிலெல்லாம் வழங்கியிருக்கிறது என்கிற விளக்கக் குறிப்பினையும் அமைச்சர் கூறுவார்கள் என்று நினைக்கிறேன். பொதுவாக கைத்தறி நெசவாளர்கள் பவர் லூம்கள் வருவதை எதிர்க்கிறார்கள். உண்மை நிலை என்ன ? மகாராஷ்டிரா போன்ற மாநிலங்களில் 'காம்போசிட்' மில்களை வைத்து, துணியும் நெய்கிறார்கள், நூற்பும் நடத்துகிறார்கள். மார்க்கெட்டில் முன்னணியில் இருக்கிறார்கள். அவர்களோடு நாம் போட்டியிட வேண்டிய நிலையில் இருக்கிறோம். அதற்கு வேண்டிய அளவில் நடவடிக்கை எடுக்கவேண்டும். நாம் பிற்பட்டு இருக்கக்கூடாது, அதனால் மற்ற மாநிலங்களுக்கு அடிமைகளாக ஆகிவிடும் நிலை ஏற்பட்டு விடக்கூடாது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்னும் சிமெண்டைப் பொறுத்தவரையில், ஏற்பாடுகள் இருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. வள்ளியூரில் தொழிற்சாலை அமைக்க தனியார் துறையில் உரிமம் வழங்கப்பட்டது. அது என்ன வாயிற்று? தனியார் நடத்துவதில் கஷ்டம், சங்கடம் இருந்தால், கூட்டுறவு முறையில் அல்லது அரசாங்கத் துறையில் நடத்த வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்.

தூத்துக்குடியில் 'பிரை கேன்' செய்யும் ஏற்பாடு, டின் உற்பத்தி செய்வதாகக் குறிப்பிட்டிருக்கிறது. அதில் பெருத்த நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. டின் உற்பத்தி செய்து மார்க்கெட்டில் போட்டி போட முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது. பொதுக் கணக்குக் குழுவில் இது கவனிக்கப்பட்டிருக்கிறது. அப்படி நஷ்டம் ஏன் ஏற்பட்டது என்பதை அமைச்சர் கவனிக்க வேண்டும்.

இன்னும் கயிறு தொழிற்சாலைகள் பற்றி அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஈத்தாமொழி என்ற இடத்தில் கன்யாகுமரி ஜில்லாவில் கயிறு பயிற்சி பாடசாலை இருக்கிறது. அந்தப் பாடசாலையில் பயின்றவர்களுக்கு வேலை இல்லை. பயிற்சி அடைந்தவர்களால் தனிப்பட்ட முறையில் தொழில்கள் அமைக்க முடியவில்லை என்றாலும், அவர்களுக்கு அளிக்கப்படும் ஊக்கம் என்ன என்பதைச் சிந்திக்க வேண்டும். பொதுவாக இந்தக் கயிறு உற்பத்தி செய்யும் தொழில் அவ்வளவு உயர்வாக இல்லை. பேட்டையில் 'ரப்பரைஸ்ட் ஃபைபர்' என்று உற்பத்தி செய்ய நிறுவப்பட்டிருக்கிறது. நாரிலிருந்து என்னென்ன மாற்றங்கள் செய்ய முடியும் என்பதைப்

பார்க்கிறார்கள். வேலையில்லாத் திண்டாட்டம் அந்த மாவட்டத்தில் அதிகமாக இருக்கிறது. அந்த மக்களுக்கு வேண்டிய வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தொழில் பட்டரைகளைப் பொறுத்தவரையில், தோட்டத்திற்கு ஒரு தொழில் பட்டறை என்று விஸ்தரிக்க வேண்டும் என்பது அரசாங்கத்தின் கொள்கையாக இருந்தது. ஆனால் பல தொழில் பட்டறைகள் இயங்கவில்லை. இத்தனை டார்ஜெட் என்று சொல்லி, 100-க்கு 53 தான் உற்பத்தியாகியிருக்கிறது. வியாசர்பாடியில் 43 தான் என்பதையும் தெரிவிக்கிறேன். ஐடிலாக இருப்பதற்கு காரணம் என்ன ? காபிடல் எக்ஸ்பெண்டிசர் இங்கர் செய்த பிறகு இந்தமாதிரி மூடிக் கிடப்பது அரசாங்கத்திற்கு நல்ல காரியம் அல்ல என்பதையும் சிந்தித்துப் பார்க்க வேண்டும். யூனிட்டுகள் இயங்க வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். எப்படி மின்சாரத்திற்கு சலுகை கொடுக்கிறோமோ, எப்படி சேல்ஸ் டாக்சில் சலுகை கொடுக்கிறோமோ அதேபோல வாடகையிலும் சலுகை கொடுக்க வேண்டும்.

பிற்பட்ட பகுதிகளில், நூல் தொழில் பட்டறைகள் இருக்கின்றன. அவற்றிற்கு வாடகை நிர்ணயிப்பதில் கஷ்டங்கள் இருக்கின்றன. பப்ளிக் ஒர்க்ஸ் டிபார்ட்மெண்ட் வாடகை நிர்ணயிப்பதில் காட்டும் நிலைகள் தொழில் நடத்துவதற்கு யாரும் வராத முறையில் இருக்கிறது. குறிப்பாக என்னுடைய தொகுதியில், மார்த்தாண்டத்தில் ஒரு தொழில் பட்டரை இருக்கிறது. அதில் பல யூனிட்டுகள் மூடியிருக்கின்றன. வாடகை கொள்ளாத அளவில் இருப்பதால் அப்படிக் கஷ்டம் இருக்கிறது. இம்மாதிரியான சில நிர்ப்பந்தங்கள் இருக்கின்றன. பெரிய அளவில் உதவிகள் செய்கிறோம் என்று பறைசாற்றிக்கொண்டாலும், உண்மையிலே நடப்பு என்ன என்பதைச் சிந்தித்துப் பார்த்து நல்ல முறையில் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இன்னும் பல தொழில்களைப் பற்றியெல்லாம் சொல்லப்பட்டது. முந்திரித் தொழிற்சாலை பற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. கேரளத்தில் இருக்கும் தொழில் அதிபர், கன்யாகுமரியில் வந்து முந்திரி தொழிலைத் துவக்கியிருக்கிறார். ஆனால் அதற்கான மூலப்பொருள் ஆப்ரிக்க நாட்டிலிருந்து, 'நட்ஸ்' கிடைக்க வேண்டியதாக இருக்கிறது. அது கிடைப்பதில் கஷ்டம் இருக்கிறது. ஒரு வேளை அமைச்சர், அது மத்தியில் அதிகாரம் குவிந்திருப்பதால் ஏற்பட்டது என்று சொல்லலாம். 'எசன்ஷியாலிடி சர்ட்டிபிகேட்' வாங்குவதில் கஷ்டம் இருக்கிறது என்று எடுத்துக் கூறினார்கள். அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்ள பிரச்சினையைத் துருவிப் பார்க்க வேண்டிய அவசியம் இல்லை. அந்தப் பகுதியில் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகமாக இருக்கிறது. கற்றவர்களிடையே வேலையில்லாத் திண்டாட்டம் அதிகமாக





இருக்கிறது. அதிகமான ஜனத்தொகை இருக்கிறதால் நெரிசல் இருப்பதால் அந்தப் பகுதியிலிருந்து இங்கே வருகிறார்கள். அந்தத் தொழிற்சாலையை ஊக்குவிக்க வேண்டிய நடவடிக்கைகளை துரிதமாக அரசாங்கம் மேற்கொள்ளவேண்டும் என்று கோருகிறேன்.

முன்பெல்லாம் நாம் சில பண்டங்களுக்கு விற்பனை செய்ய ஊக்கம் அளித்தோம். குறிப்பாக நெசவுத் தொழிலில் 'ப்ளீடிங் மெட்ராஸ்' என்ற வண்ணம் மாறும் துணிக்கு சலுகைகள் கொடுத்து, அமெரிக்க நாட்டிற்கும் வேறு நாடுகளுக்கும் அனுப்பி வந்தார்கள். ஆனால் அந்தத் துணிக்கு கிராக்கி குறைந்து அவல நிலை ஏற்பட்டிருக்கிறது. ஏன் என்பதை ஆராய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

பொதுவாக தொழில் துறையில் முன்னேற்றம் அடைந்திருப்பது மிகவும் குறைவாக இருக்கிறது. முன்பு காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில், முன்னேற்றங்கள் இருந்தன. அப்பொழுது எல்லோரும் டெல்லிக்குப் போகும் நிலையில் இருந்தார்கள். இன்றைக்கு ஒன்று கூற விரும்புகிறேன். இன்று உங்களுக்குச் சாதகமான, உங்களோடு தோழமை கொண்ட அரசாங்கம் டெல்லியிலிருக்கிறது. ஆதலால். அவர்களோடு வாதாடினாலும் சரி, போராடினாலும் சரி, எப்படியாவது அதிக அதிகாரங்களைப் பெற்று, தொழில் துறையில் முடங்கியிருக்கும் காரியங்களைத் துரிதப்படுத்தி, காலதாமதங்களைத் தவிர்த்து, வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு உங்களுக்கு வசதி வாய்ப்பு இருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அதுமாத்திரமல்லாமல், இன்னும் பெரிய தொழில்கள் துவங்க வேண்டும் என்று திட்டங்கள் இருக்கின்றன. சேலம் உருக்காலையை ஆரம்பித்து வைத்தும் இன்னும் காலதாமதம் ஏற்பட்டுக்கொண்டே இருக்கிறது. ரசாயனத் தொழிற்சாலைகளெல்லாம் துவங்காத முறையில் இருக்கின்றன. தூத்துக்குடியில் இருக்கும் பல தொழில்களும் துவங்கக்கூடிய தன்மைகளைக் காணோம். அறிக்கையில் விரைவில் துவங்கும் என்று சொல்லப்பட்டிருந்தாலும், உண்மையான நிலை என்ன என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். இந்த மாதிரி கால தாமதம் ஏற்படுவதைத் தவிர்க்க நடவடிக்கைகள் எடுக்கவேண்டும்.

இந்த இலாகாவிலே ஒரு டைரக்டரும், ஆறு துணை டைரக்டர்களும் இருக்கிறார்கள். இந்த இலாக்கா ஒரு பெரிய இலாகாவாக இருக்கிறது. ஆனாலும் மக்களுக்கு இருக்கின்ற கஷ்டங்கள் அதிகமாக இருக்கின்றன. தொழில் நடத்துகிறவர்கள் எந்த அதிகாரியை அணுகவேண்டும், எந்த போர்டை அணுகவேண்டும் என்று தெரியாமல் அல்லல்படும் சூழ்நிலைதான் இருக்கிறது.

பொதுவாக நடுத்தர தொழில்களும், பெரிய தொழில்களும் நடத்துவது சம்பந்தமாக அரசாங்கம் இன்னின்ன சலுகைகள் தர இருக்கிறது என்பது தெளிவாகக் கூறப்பட வேண்டும். இங்கே

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] [1971 ஜுன் 30

தொழில் நிறுவனங்களை துவங்க ஒரு இண்டஸ்டிரியல் கிளைமேட் ஏற்படுத்தப்படவேண்டும். பிற மாவட்டங்களிலிருந்து தொழிலதிபர்கள் இங்கே பணம் போட்டு மூலதனம் போட்டு தொழில் செய்யக்கூடிய வகையில் தொழில் அமைதிக்கு ஊக்கம் இந்த அரசாங்கம் கொடுத்தால் பிற மாநிலங்களிலிருந்து தொழில்கள் நடத்த எல்லோரும் வருவார்கள் என்று தெரிவித்துக் கொள்கிறேன். முன்பு இருந்த சென்னை மாநிலத்தில் எல்லா தொழில் அதிபர்களும் முதலீடு செய்ய முன் வந்தார்கள். ஆனால் இப்போது ஏன் அந்த தயக்கம் என்பதை இந்த அரசு சிந்திக்க வேண்டும். அப்படி இல்லாமல் முன்பு இருந்த காங்கிரஸ்காரர்கள் திட்டம் ஏதும் போடவில்லை என்றெல்லாம் சொல்லிக்கொண்டிருப்பது சரி இல்லை என்று கூறி முடிக்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, இன்று இந்த மாமன்றத்திலே பல்வேறு அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் மிக நல்ல யோசனைகளைக் கூறியதோடு தமிழ்நாட்டிலே தொழில்கள் விரிவாகவும் பரவலாகவும் தொடங்கப்பட வேண்டும் என்று கூறினார்கள். ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒவ்வொரு தொழிலுக்கும் ஏராளமான தொழிற்சாலைகள் வரவேண்டும் என்ற எண்ணத்தை இங்கே எடுத்துச் சொன்னார்கள். அவர்களுக்கு எல்லாம் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். எப்படியும் எல்லா இடங்களிலும் தொழிற்சாலைகள் உருவாக வேண்டும் என்ற நல்ல எண்ணம் இந்த அரசுக்கு உண்டு என்றும் அந்த எண்ண அடிப்படையிலே இந்த அரசு மிகுந்த வேகத்தோடு நல்ல பணிகளை ஆற்றி வருகிறது என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்திலே கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இதை அரசியல் கட்சியின் பிரச்சினையாகவோ, அல்லது அலுவலர்களை இணைத்து பேசாமலோ இருந்திருந்தால் நன்றாக இருந்து இருக்கும் என்பது என்னுடைய கருத்தாகும். எனக்குத் தெரிந்த வரையில் வெளிநாட்டுக்காரர்களாக இருந்தாலும், பிற மாநிலங்களிலிருந்து வருகிறவர்கள் ஆனாலும் தமிழ்நாடு அரசுத்துறை அலுவலர்களுக்கு பாராட்டு தெரிவிப்பதோடு அல்லாமல் இங்கேதான் நல்ல முறையில் அவர்கள் பணியாற்றுவதோடு காலாகாலத்தில் அரசுச் சலுகைகள் தருவதற்கு சுணக்கம் ஏதும் இல்லாமல் நடவடிக்கை எடுக்கின்றனர் என்றும் கூறியிருக்கிறார்கள். ஆகவே, இந்த அரசு அலுவலர்கள் சிறந்த முறையில் தொழில்கள் நிறுவுவதற்கு உதவி இருக்கிறார்கள். உதவி வருவார்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு என்று மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

தமிழ்நாட்டிலே தொழில் வளர்ச்சிக்கான நடவடிக்கைகள் பெருவாரியாக எடுக்கப்பட்டு வருகின்றன. இன்னும் அது வேகமாக இருக்கவேண்டும் என்பது இந்த அரசாங்கத்தின் கொள்கை. புள்ளி விவரங்கள் எல்லாம் தரப்பட்டு இருக்கின்றன. நம்முடைய காங்கிரஸ் உறுப்பினர் 'பொன்னப்ப நாடார் அவர்கள் இங்கே பேசியபோது தொழில் வளர்ச்சி குறைந்த சத விகிதத்தில் தான் இருந்து இருக்கிறது என்று சொன்னார். இந்த 5 ஆண்டு



1971 ஜுன் 30] [திரு. செ. மாதவன்]

வளர்ச்சியைப் பார்க்கும்போது இரண்டு சதவிகித வளர்ச்சியானது பாதுகாக்கப்பட்டு இருக்கிறது. இப்போது அது இன்னும் 1 சதவிகிதம் வளர்ச்சி அடைந்திருக்கிறது என்பதை யாரும் மறுப்பதற்கில்லை.

பொதுவாக தொழில் துறையில் ஒரு நாடு வளர்ந்து இருக்கிறது என்பதை எப்படி பார்ப்பது என்றால் கம்பெனிகள் உருவாகி இருக்கும் எண்ணிக்கை, அதிலே மூலதனம் எந்த அளவுக்கு பெருகி இருக்கிறது, மின்சாரம் எந்த அளவு அதற்காக பயன்படுத்தப்பட்டு இருக்கிறது என்ற குறியீடுதான். அடுத்தபடியாக மத்திய அரசு, மாநில அரசு உதவியோடு தொழில்கள் எந்த அளவுக்கு அதிகம் ஏற்பட்டு இருக்கின்றன என்பது சில புள்ளி விவரங்களால் தெரிய வரும்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் 1966-லே தொடங்கப்பட்ட பெரிய கம்பெனிகள் 2949. அதிலே முதலீடு செய்யப்பட்டது. ரூ. 252 கோடி. அது தற்போது ரூ. 334 கோடியாக வளர்ச்சி அடைந்திருக்கிறது. மூன்றாவது திட்டத்திற்குப் பிறகு தொழில் வளர்ச்சியில் சிறிது தளர்ச்சி ஏற்பட்டது. இப்போது தமிழ்நாட்டிலும் பரவலாக இந்தியாவிலும் தொழில் வளர்ச்சிக்கான அறிகுறிகள் தென்படுகின்றன. தமிழக அரசு கொடுத்துள்ள பட்டியலை எடுத்துக் கொண்டால் எல்லோரும் பிரமித்துக் கொள்ளும் அளவுக்கு தொழில் முன்னேற்றங்கள் ஏற்பட்டு இருக்கின்றன.

இங்கே பேசியவர்களில் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் இந்த அரசு செய்த பணிகளைப் பாராட்டியும் காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் முந்தைய அரசு செய்த பணிகளைப் பாராட்டியும் பேசினார்கள். நாங்கள் முந்தைய அரசு செய்த பணிகளை பாராட்ட என்றும் மறந்தது இல்லை. அதே நேரத்தில் இந்த அரசு செய்த, செய்ய இருக்கும் நல்ல தொழில் திட்டங்களை எதிர்க் கட்சியினர் பாராட்டத் தவறக்கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன். என்னைப் பொறுத்தவரையில் புள்ளிவிவரங்களின் அடிப்படையில் தமிழ் நாடு தொழில் வளர்ச்சியில் எப்போதுமே மூன்றாவது இடத்தைத்தான் பிடித்திருந்தது. அது கொஞ்சம்கூட குறையாமல் இப்போதும் பாதுகாக்கப்பட்டு இருக்கிறது.

அதிலே இன்னும் சிறிது முன்னேற்றம் காண வாய்ப்பு ஏற்பட்டு இருக்கிறது என்று கூறிக்கொள்ளுகிறேன். ஐ.டி.பி.-யைப் பொறுத்தவரையில் 1967-68-ல் மூன்றாவது இடத்தைப் பெற்றிருந்த நாம் இன்று இரண்டாவது இடத்திலே வந்திருக்கிறோம் என்பதை பெருமையோடு சொல்ல வேண்டி இருக்கிறது. தகுந்த சூழ்நிலை இருந்தால் நாம் முதலிடத்திற்கு வரமுடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். அதேபோல் ஐ.எப்.எஸ். பொறுத்தவரையில் 1966-67-ல் நாம் 5-வது இடத்தை பெற்று இருந்தோம். இப்போது 1969-70-ல் 3-வது இடத்திற்கு வந்திருக்கிறோம். ஐ.சி.சி.ஐ. உலக நாடுகளிலிருந்து பெரும் உதவியிலிருந்து பெற்ற வளர்ச்சியில் நமக்கு இருந்த மூன்றாவது இடத்தைத் தொடர்ந்து

[திரு. செ. மாதவன்] [1971 ஜூன் 30

வகித்து வருகிறோம். அதேபோல் மின்சார உற்பத்தியை தொழில் துறையில் எந்த அளவுக்குப் பயன்படுத்தி இருக்கிறோம் என்று பார்க்கும்போது 1966-ல் 1,600 மில்லியன் யூனிட்டு பயன்படுத்தி இருக்கிறோம். இப்போது 1969-70-ல் 2,484 மில்லியன் யூனிட்டு பயன்படுத்தியிருக்கிறோம். ஆகவே இந்தக் குறியீடுகளை வைத்துப் பார்க்கையில் தமிழ் நாட்டில் தொழில் வளர்ச்சி பெருகி வருகிறது என்பதை தயவுசெய்து ஒப்புக்கொள்ள வேண்டும்.

அதேபோல் சிறுதொழில் வளர்ச்சிக்கு முக்கியத்துவம் கொடுக்க
பி.ப. 1-00. வேண்டும் என்பதை உணர்ந்து இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது. ஒரு நாட்டின் தொழில் வளர்ச்சி அதிகமாக வேண்டுமானால் அங்கே சிறு தொழில்கள் ஏராளமாக வளர்க்கப் பட்டால்தான் முடியும். ஒவ்வொரு கிராமத்திலும் அம்மாதிரி சிறு தொழில்கள் ஏற்பட்டால்தான் நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க முடியும். அதன் மூலம் தான் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த முடியும் என்று இந்த அரசாங்கம் நம்புகிறது என்பதால் சிறு தொழில் வளர்ச்சியால் ஏராளமான உதவிகள் செய்யவேண்டுமென்று நாம் முடிவுகள் எடுத்து செயல் பட்டு வருகிறோம்.

31—12—1967-லே நம்முடைய தமிழ் நாட்டில் ஏற்பட்ட சிறு தொழில்கள் 11,813. 31—3—1971-ல் அது 22,899 ஆகி கிட்டத்தட்ட 2 மடங்கு அதிகம் ஆகி இருக்கிறது. ஒரு சில ஆண்டுகளில் இந்த வளர்ச்சி தமிழ் நாட்டில் நாம் பெற்று இருக்கிறோம் என்றால் அதைப் பாராட்டத்தான் வேண்டும். அதற்காக நம் அலுவலர்கள் எந்த அளவுக்கு முயற்சி செய்து ஒத்துழைப்பு கொடுத்துக்கொண்டு இருக்கிறார்கள் என்பதைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

புதிய, புதிய வாரியங்கள் தொடங்கப்படுவது பற்றிச் சில சந்தேகங்கள் கிளப்பப்பட்டன. மராட்டியம் போன்ற மாநிலங்கள் இதுபோன்ற வாரியங்கள் அமைத்து தொழில் துறையில் நல்ல வசதிகள் பெற்றுத் தந்திருப்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும். அதைப் பார்த்து இம்மாதிரி அமைப்பை தவறு என்று சொல்ல மாட்டார்கள் என்று நினைக்கிறேன். நாம் வர இருக்கும் ஒன்று இரண்டு ஆண்டுகளில் புதிய முயற்சிகளில் ஈடுபட இருக்கிறோம். அப்படி ஈடுபடுகிறபோது ஒன்றுக்கொன்று முரண்பாடுகள் ஏற்பட்டு விடக்கூடாது என்ற கருத்தில் இந்த வாரியத்தை தொழில் வளர்ச்சிக்கு அவசியம் என்ற முறையில் ஏற்படுத்தி இருக்கிறோம். ஆகவே இதுபோன்ற வாரியங்கள் தவிர்க்க முடியாத இன்றியமையாதவை. இவை நாட்டுக்குத் தேவை என்று சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

சிறு தொழில்கள் அபிவிருத்திக்காக சிம்கோ என்ற வாரியம் ஏற்படுத்தப்பட்டு இருக்கிறது. அதன்மூலம் தனியார் துறையில் ஏராளமான சிறு தொழில்கள் பெருக வசதி உருவாகும் என்று வலியுறுத்த ஆசைப்படுகிறேன். சிறு தொழில்கள் பெருகுவதற்கு



1971 ஜூன் 30] [திரு. செ. மாதவன்]

மூலப்பொருள்கள் தேவை. இந்த மூலப்பொருள்களை வெளி மாநிலங்களிலிருந்தும், வெளி நாடுகளிலிருந்தும் தருவித்துக் கொள்ள உடனடி முயற்சிகள் இந்த அரசால் எடுத்துக் கொள்ளப் பட்டு இருக்கின்றன. அப்படிச் செய்வதற்குத்தான் இந்த வாரியம் உருவாக்கப்பட்டு பல கோடி ரூபாய் முதல் வைத்து மத்திய அரசாங்கத்து கட்டுக்கோப்புக்குள்ளும், வெளிநாடுகளிலிருந்தும் மூலப் பொருள்களை நாமே இறக்குமதி செய்து இந்த சிறிய தொழில் வளர்ச்சிக்கு ஊக்கம் அளித்து இருக்கிறோம். இந்த வாரியத்தின் மூலம் மூலப்பொருள்கள் இறக்குமதியாவதற்கும், தொழில்கள் விஸ்தரிப்புக்காகவும் ரூ. 30 லட்சம் கொடுக்கப்பட்டு இருக்கிறது. இதை ஒவ்வொரு மாவட்டத்தின் தலைநகரிலும் மாவட்ட ஆட்சித் தலைவர், மக்கள் பிரதிநிதி, தொழில்துறையைச் சேர்ந்தவர்கள் அமர்ந்து சிறு தொழில்கள் வளர்ச்சிக்காக ரூ. 25,000 வரை உடனடியாகக் கடன் கொடுக்கும் நல்ல முயற்சியை எல்லோரும் பாராட்டக் கடமைப்பட்டு இருக்கிறார்கள் என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். ஒவ்வொரு மக்கள் பிரதிநிதியும் அந்தந்த ஆட்சித் தலைவரையும் தொழில் சம்பந்தப்பட்டவர்களையும் கலந்து முன்பு கூறிய திட்டத்தை பயனுள்ளதாக ஆக்கச் செய்யவேண்டும்.

இதேபோல் அரசாங்கம் ஏற்று நடத்துகிற வாரியம் டிட்கோ ஒவ்வொரு மாவட்டத்திலும் தொழில் நடத்த விரும்புவோர் இந்த வாரியத்தைப் பயன்படுத்தி தொழில்களை பரவலாக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். தனியார் துறையில் இது போன்ற பெரிய தொழில்கள், நடுத்தரத் தொழில்கள், பலகோடி ரூபாய் மூலதனத்தில் தொடங்கிக்கொண்டு வருகின்றன. அவர்களுக்கு ஊக்கமும் உற்சாகமும் அளிக்கத் தக்க வகையில் இந்த வாரியங்கள் உதவிகரமாய் இருக்கும். மராட்டிய மாநிலத்தில் இதுபோன்ற வாரியங்களால் ஏராளமான தொழிற்சாலைகள் பெருக வாய்ப்புச் செய்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோலத்தான் டிட்கோ வாரியம் அமைக்கப்பட்டிருக்கிறது. இந்த வாரியத்தின் பலன்களை நாம் முழுவதும் பார்க்கவேண்டுமென்றால் 10, 15 ஆண்டுகளுக்கு பிறகு ஏராளமான புதிய தொழில்கள் ஏற்பட வாய்ப்பு இருக்கும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இதேபோல் சிறிய தொழில்களும் பெரிய தொழில்களும் பெருக இந்த வாரியம் அமைக்கப் பட்டது.

ஆலங்குளம் சிமெண்டு தொழிற்சாலை, சர்க்கார் துறையில் ஏற்படுத்தப்பட்டு சிமெண்டு உற்பத்தியில் தமிழ்நாட்டில் தன்னிறைவு ஏற்பட்டு இருக்கிறது. ஏராளமான சிமெண்டு தொழிற்சாலைகள் தமிழ் நாட்டில் ஏற்கெனவே ஏற்படுத்தப்பட்டு இருப்பதால், இந்தத் தொழிலுக்குப் பாதுகாப்பு கொடுக்க வேண்டியது மத்திய அரசு தான்.

[திரு. செ. மாதவன்] [1971 ஜூன் 30

அதேபோல் அரக்கோணம் தொழிற்சாலை பற்றிச் சொன்னார்கள். அரக்கோணத்தில் விரைவில் பொருள் உற்பத்தியாவதற்கு தொழிற்சாலை தொடங்கவேண்டுமென்று சென்ற ஆண்டு கூறப்பட்டது. அப்போதே விளக்கம் தரப்பட்டது. அதை வேகமாய்ச் செய்ய வேண்டுமென்பதில் யாருக்கும் ஆட்சேபம் இருக்க முடியாது. ஆனால் ஏன் ஆரம்பிக்கப்பட்டது, எப்படி ஆரம்பிக்கப்பட்டது, யோசனை செய்து ஆரம்பிக்கப்பட்டதா? அன்றைக்குள்ள பிரச்னைகளை சிந்தித்துவிட்டு ஆரம்பித்தார்களா? என்று அந்தப் பிரச்னைகளுக்குள் இன்றைக்கு நான் போக விரும்பவில்லை. அந்தத் தொழில் நல்ல முறையில் நடக்க வேண்டுமென்ற ஆசை இந்த அரசுக்கும் இருக்கிறது. அதற்கான முயற்சி செய்கிறோம். ஆனால் இரண்டு தகராறுகள் இருக்கின்றன.

அது ரஷ்ய நாட்டு கூட்டுறவுடன் ஆரம்பிக்கப்பட்டது. நம் நாட்டு நிபுணர்களுக்கும் ரஷ்ய நாட்டு நிபுணர்களுக்கும் கருத்து வேறுபாடு நிலவிற்று. டில்லியிலிருந்து ரஷ்ய நாட்டு நிபுணர்கள் வந்தார்கள். என்னுடன் பேச்சு வார்த்தைகள் நடத்தினார்கள். முதலமைச்சர் அவர்களையும் சந்தித்தார்கள். இன்னும் 2, 3 மாதங்களில் உற்பத்தி தொடங்கலாம் என்ற நம்பிக்கை இருக்கிறது.

இன்னொரு காரணம் அது தொடங்கப்படும்போது மூலப் பொருளைப்பற்றி நாம் எந்த அளவுக்கு சிந்தித்தோம்?. அன்று போல் இன்றைக்கு மூலப்பொருள் நிலை இருக்கிறதா என்ற சந்தேகம் இன்றைக்கு விளக்கப்படுகிறது. அதற்கு "ஸ்க்ராப்" மூலப்பொருள் தேவைப்படுகிறது. இப்போது நாட்டிலுள்ள நிலை "ஸ்க்ராப்"பை வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்யாது தடை ஏற்பட்டால் ஒழிய நிரந்தரமாக ஒன்றும் செய்ய முடியாது. அதை நிரந்தரமாக தடை செய்ய முடியாதா என்பதை யோசித்து நாம் மத்திய அரசுக்கு வலியுறுத்தியிருக்கிறோம். ஆகவே "ஸ்க்ராப்" கிடைத்தால் தொழிற்சாலை லாபத்துடன் நடத்த முடியும் என்பதை நம்மால் உணர முடிகிறது. இன்றைக்கு முடிந்த அளவு நாம் சேகரித்திருக்கிறோம். 3 மாதங்களுக்கான ஸ்டாக் நம்மிடத்தில் இருக்கிறது. ஆனால் அதே சமயத்தில் அது கிடைக்க வழி என்ன என்பதை ஆராய்ந்து மத்திய அரசின் ரயில்வேத் துறை அமைச்சருடன் தொடர்பு கொண்டு ரயில்வேயில் அதற்கான வாய்ப்பு இருக்கிறது, ரயில்வேயில் எத்தனை ஸ்க்ராப் கிடைக்குமோ அத்தனையும் குறைந்தபட்சம் தமிழ் நாட்டு அளவிலாவது எங்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று வலியுறுத்தி வருகிறோம். ரயில்வே அமைச்சருக்கும் எழுதப்பட்டிருக்கிறது. கொள்கையளவில் அதிக லாபம் வேண்டும் என்று எதிர்பார்ப்பது நியாயம் தான். அந்த லாபம் வேண்டுமென்று கேட்டாலும், மத்திய அரசுடன் தொடர்பு கொண்டு இது அரசு முதலீடாக இருப்பதால் அதை அரக்கோணம் 'கண்டின்யுவஸ் ஸ்டீல் காஸ்டிங் ப்ளாண்டுக்கு' கொடுக்க வேண்டுமென்று கேட்டிருப்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இதற்கு நிரந்தரமான பரிகாரம் காணவேண்டுமென்று இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு புதிய முயற்சி எடுத்து ஓரளவு வெற்றி பெற்றிருக்கிறது.



1971 ஜூன் 30] [திரு. செ. மாதவன்]

... மாற்று மூலப்பொருள் "ஸ்பான்ஜ் அயரன்" என்ற பொருள் உற்பத்தி செய்யவேண்டும் என்று மத்திய அரசுக்கு தெரிவித்திருக்கிறோம். சில நாட்களுக்கு முன்பு நாடாளுமன்றத்தில் அதற்குப் பதில் அளிக்கப்பட்டிருக்கிறது. நம் ஆலோசனையைப் பார்த்து மைசூரில் கிடைக்கும் கனிப்பொருளைக் கொண்டு "ஸ்பான்ஜ் அயரன்" உற்பத்தி செய்ய நமக்கு அனுமதி தருவார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது. அதைப் பொருத்து அரக்கோணம் தொழிற்சாலை சிறந்த முறையில் செயல்பட வாய்ப்பு இருக்குமென்று கருதுகிறேன்.

உற்பத்தியாகும் பொருளின் அடக்க விலைக்கும் விற்பனை விலைக்கும் தொடர்பு இருக்க வேண்டும். நஷ்டம் வருமே என்ற யோசனை வந்தது. இதுபற்றியும் ஒரு நல்ல முடிவை அரசு எடுத்திருக்கிறது. தொழிற்சாலை தொடங்கும்போது முதல் நோக்கம் லாப நஷ்டமல்ல. அதற்குப் பதிலாக தமிழ் நாட்டில் ஏராளமான "ரீ-ரோலிங் மில்ஸ்" சும்மா இருக்கின்றன. அவற்றிற்கு வேலை கொடுக்கவேண்டும். அவர்கள் உற்பத்தியைப் பெருக்கி 'பில்லெட்ஸ்' உருவாக்கவேண்டும் என்ற முறையில் தொழிற்சாலை தொடங்கப்படும். ஆனால் அவர்களுக்குக் கிடைக்கும் லாபத்தை நமக்குக் கொடுத்து நஷ்டம்இல்லாமல் நடத்த வேண்டுமென்ற புதிய தத்துவத்தின் அடிப்படையில் இந்த அரசு ஒரு புதிய முடிவெடுத்திருக்கிறது. தமிழ்நாட்டில் உள்ள 'ரீ-ரோலிங்' மில்களுக்கு அரக்கோணம் ப்ளாண்டிலிருந்து நாம் 'பில்லெட்ஸ்' தருவோம். அவர்கள் உற்பத்தி செய்த பொருளை நமக்கே விற்பனை செய்ய வேண்டும், கூலி போன்ற செலவைப் பெற்றுக்கொண்டு, லாபத்தை அரசு பெறுவதற்கு வாய்ப்பு செய்யவேண்டுமென்ற முடிவெடுத்திருக்கிறோம். அந்த முறையில் தமிழ்நாட்டில் உள்ள எல்லா ரீ ரோலிங் மில்களும் நம்முடன் ஒத்துழைக்கும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. லாபத்துடன் நடத்தப்படும்.

'டிட்கோ'வைப்பற்றிச் சொன்னார்கள். அது கூட்டுத்துறை. 'ஜாயிண்ட் செக்டார்' திட்டம். ஆனால் சொன்னார்கள், 'அதைப் பற்றி குறை சொல்லவில்லை. அது தவறாகச் சென்று விடுமோ? அரசினுடைய கொள்கைக்கு விரோதமாகப் போய் விடுமோ' என்ற கவலை தெரிவிக்கப்பட்டது. நிச்சயம் இந்த அரசாங்கமும் அப்படிப்பட்ட கவலையைக் கருத்தில் கொண்டு எந்த முடிவும் எடுக்கும் என்று இந்த சந்தர்ப்பத்தில் உறுதி கூறுகிறேன். ஆனால் அதேநேரத்தில் அரக்கோணம் தொழிற்சாலையில் அரசு பங்கேற்க வேண்டுமென்ற புதிய கொள்கைக்கு இது உறுதுணையாக இருக்குமென்று இந்த சந்தர்ப்பத்தில் வலியுறுத்த ஆசைப்படுகிறேன்.

ஒரு கோடிக்குக் கீழ் உள்ள திட்டத்தில் நாம் தொடர்பு கொள்ளலாம் என்று ஆலோசனை கூறப்பட்டது. தனியார் துறையே ஏற்று நடத்தினாலும் ஒரு கோடி முதலைச் சேகரித்தாலும் சரி, யாராவது நடத்த முன்வந்தால் அவர்களுக்கு அனுமதி கொடுத்து, அவர்களுக்கு கஷ்டம் ஏற்பட்டாலும் பண வசதி இல்லா

விட்டாலும் நாமே முன் சென்று நடத்த வேண்டும் என்பது அரசின் கொள்கையாகும். அவர்களுக்கு கடன் கொடுத்துவிட்டுப் போகலாமே என்று ஆலோசனை கூறப்பட்டது. பல தொழிற் சாலைகள் அரசு பணத்தைக் கொண்டு—மத்திய அரசினிடத்திலோ மாநில அரசினிடத்திலோ வாங்கி—தன்னுடைய சிறு முதலைப் போட்டு அதே சமயத்தில் அதிகாரம் அவர்களிடத்தில் இருப்பதால் பல தொழிற்சாலைகளை நம்மால் எடுத்து நடத்த முடியாமல் இருக்கிறது.

உதாரணம், "சதர்ன் ஸ்டாக்சுரல்ஸ்" பற்றி கவலையோடு குறிப்பிட்டார்கள். ஆனால் இன்றைக்கு அரசாங்கத்தின் பணத்தை கடனாகப் பெற்று அது தேசிய வங்கிகளாக இருந்தாலும் சரி மத்திய அரசாக இருந்தாலும் மாநில அரசுப் பணமாக இருந்தாலும் சரி, மக்கள் பணத்தைப் பெற்று நடத்தினாலும் தைரியமாக அரசு எடுத்து நடத்த முடியாத நிலை இருக்கிறது.

அதே போல் "ஸ்டாண்டர்ட் மோட்டார்ஸ்" பற்றி தொடர்ந்து கவலை தெரிவிக்கப்பட்டது. அதற்கு விளக்கமெல்லாம் சொன்னார்கள். அந்தத் தொழிற்சாலையிலும் அதே கருத்து தான். இப்படிப்பட்ட நிலை மாற்றப்பட வேண்டுமானால் புதிதாக ஏற்படுத்தும் பெரிய பெரிய தொழிற்சாலைகள் முக்கியமான தொழிற்சாலைகளை அரசே தொடங்க ஒதுக்கவேண்டும். அப்படி இருந்தால் எங்கேயாவது தவறு எனக் கண்டால் அதை அகற்றி, மாற்றி அமைத்து அங்கே நாமே நிர்வாகம் நடத்தும் வாய்ப்பு ஏற்படுத்தும். புதிய கொள்கையின் அடிப்படையில் கூட்டுத் தொழில் "ஜாயிண்ட் செக்டார்" இப்போது தான் தொடங்கவிருக்கிறோம். தொடங்கியவுடன் செய்வோம் என்று சொல்லாமல் அதன் உண்மை நிலையினை ஆராய்ந்து பிரத்தியட்சபூர்வமாகச் செய்கிறோம். மத்திய சர்க்காரும் இந்த நல்ல கருத்தை ஏற்றுக் கொள்வார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது. மத்திய அரசுக்குக் கூட நம்பிக்கை தேவை என்றால் அவர்கள் விரும்பினால் பங்குகளை— "ஈக்விட்டி ஷேர்ஸ்" ஆக மாற்றிக் கொள்ளும் உரிமை வேண்டும் என்ற புதிய கொள்கை ஏற்படுத்தியிருக்கிறோம். இது போல் நாங்கள் புதிய முயற்சி எடுத்துச் செயல்பட்டு வருகிறோம். ஆகவே தமிழ் நாட்டில் இந்தக் கூட்டுத் தொழில், தொழில் வளர்ச்சிக்கு மிகுந்த உறுதுணையாக இருக்கும் என்று பல விவரங்கள் கொடுத்திருக்கிறோம். அதையெல்லாம் உன்னிப்பாகப் பார்க்கும்போது ஒத்துக்கொள்வார்கள் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது. 62 கோடி ரூபாயில் ரசாயனத் தொழிற்சாலை தொடங்கப்படவிருக்கிறது.

இங்கே வந்து மத்திய அரசு வேற்று நாட்டுக்காரர்களுடன் சேர்ந்து மணலியில் ஒரு தொழிற்சாலை வைத்திருக்கிறார்கள். அதே போல் தமிழக அரசும் கூட்டுத் தொழிலில் தனியார் துறையுடன் சேர்ந்து இதற்கான முழு முயற்சி எடுக்கும் என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.



... அதே போல் நூற்பாலை பற்றி மிகுந்த கவலை தெரிவிக்கப்பட்டது. ஏதோ ஆளும் கட்சியைக் குறை சொல்ல வேண்டும் என்று வேகமாகப் பேசி இருந்தாலும், உண்மையிலேயே இந்த மாதிரி யோசனைகளை மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறோம். அதே கவலையை நாங்களும் பகிர்ந்து கொள்ளத் தயாராக இருக்கிறோம் என்பதைக் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அதற்காக அரசு எடுத்துள்ள நடவடிக்கைகளை எல்லாம் ஆழ்ந்து சிந்தித்து கருத்துக்களைக் கூறவேண்டும். எங்கள் துர்ப்பாக்கியம் நாங்கள் பொறுப்பேற்றவுடன் பல ஆலைகளை மூடத் தொடங்கிவிட்டார்கள். அது தமிழ் நாட்டில் மட்டுமல்ல. இந்திய நாடு முழுவதும் குறிப்பாக இந்த நூற்பாலைகள் எல்லாம் மூடப்பட்டன. இன்றைக்கு அத்தொழிலில் சிறந்த இடம் வகிக்கும் மகாராஷ்டிரம் பற்றி நேற்றும் இன்றைக்கும் பத்திரிகைச் செய்தியைப் பார்த்தால் நமக்கும் இப்படி ஒரு நிலை உருவாகுமோ என்ற கவலை தான் எனக்கு ஏற்படுகிறது.

நூற்பு ஆலைகளுக்கு தமிழ் நாட்டில் இந்தமாதிரி நிலை வந்தது மிகவும் துர்ப்பாக்கியம். இதற்குக் காரணம் நூற்பு ஆலை ஒரு பக்கம், கைத்தறி நெசவு ஒரு பக்கம். அரசியல்வாதி இன்று எந்தப் பக்கம் திரும்புவது என்பது அது ஒரு பக்கம்.

திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் சொன்னார்கள். கைத்தறித் துறைக்கு நாம் நல்ல பாதுகாப்பு கொடுக்கவேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டால், மற்ற மாநிலங்கள் பின்பற்றுகிற மாதிரி இங்கும் 'பவர் லூம் அண்ட் காம்போஸிட் மில்' என்ற முறையை நடத்த வேண்டும், நம்முடைய நாட்டுக்கு அது தான் தேவை. விசைத் தறி பற்றி இன்னும் உற்சாகத்தோடு யோசிப்போம் என்று அவர் சொன்னது எனக்கு உற்சாகத்தை அளிக்கிறது. கைத்தறிக்குப் பாதுகாப்பு கொடுக்கவேண்டும். அதே சமயத்தில் மற்ற மாநிலங்களோடு போட்டி போடத்தக்க வகையில் நம்முடைய மாநிலத்திலும் (காம்போஸிட் மில்ஸ்-பவர் லூம்) அமைக்க வேண்டும் என்று இந்த மன்றத்துக்கு வழிகாட்டிய அந்த யோசனையை நான் பாராட்டுகிறேன்.

விசைத் தறிக்குத் தடை போட வேண்டும் என்று நினைத்து மத்திய அரசாங்கம் தடை போட முயற்சித்தால், அதனால் உற்பத்தி பாதிக்கும் என்பதோடு, எதை எதை உற்பத்தி செய்வது என்ற பொறுப்பை மாநிலத்துக்கு விட்டுவிடவேண்டும். அதுதான் குறை. ஆனாலும் தமிழக அரசு அந்தத் தடை குறித்து மத்திய அரசு போடும் உத்தரவை அமல் நடத்துவதற்குத் தயாராய் இருக்கின்றது. நாம் விசைத் தறியை கொஞ்சம் கொஞ்சமாகத்தான் கொண்டு வரவேண்டும் என்று ஆசைப்படுகிறோம். மராட்டிய மாநிலம் இதை அமல்படுத்த விரும்பவில்லை. நம்முடைய மாநிலத்துக்கு தடை செய்கின்ற அதிகாரம் நம்மிடம் இல்லை. இதைத் தான் மாநில அரசு மத்திய அரசுக்கு சுட்டிக்காட்டி, நம்முடைய மாநிலத்தில் எந்தெந்த இனங்கள், ரகங்கள் விசைத் தறியில் உற்பத்தி செய்வது என்று சொல்லி விடவேண்டும்.

[திரு. செ. மாதவன்] [1971 ஜூன் 30

எதை அமல் நடத்துவது தடை ஆகும், எதை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று நம்முடைய அரசு வலியுறுத்தி வருகிறது. வேண்டும் என்று நம்முடைய அரசு வலியுறுத்தி வருகிறது. செய்வதற்குத் தயாராய் இருந்து வருகிறோம், அதைத் தொடர்ந்து செய்வோம் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக் கொள்கிறேன்.

நம்முடைய நூற்பு ஆலைகள் தற்போது நல்லபடியாக இயங்கி வரவேண்டும். இதற்குத் தேவையான பண வசதி கிட்டத்தட்ட 225 லட்சத்துக்கு நான் 'காரண்டி' கொடுத்தேன். கிட்டத்தட்ட 119 லட்சம் தான் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. மூடிய மில்களை நாமே ஏற்று நடத்தவேண்டும் என்று ஒரு கமிட்டியைக் கூட்டிய போது, திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் சொன்னார், நீங்கள் அவசரப்படாதீர்கள், இப்போது 4, 5 என்று எடுத்தால் போதும், என்றார்கள். இப்போது 4, 5 என்று தான் எடுத்தோம். இதில் ஓரளவு லாபம் தான். பாராட்டுகின்றார்கள். 'ஜாக்கிரதை' என்று சொல்வதில் தவறு இல்லை. மக்களுடைய வரிப்பணம் வீணாகக்கூடாது என்பது தான் நம்முடைய லட்சியம். இதில் ஆலோசனை கூறுவதற்கு இயக்குநரைப் போட்டிருக்கிறோம். எதிர்க் கட்சியாய் இருந்தாலும், அவர்களுக்கும் பங்கு இருக்க வேண்டும் என்ற முடிவை ஏற்றிருக்கிறோம். எதிர்க் கட்சியை அலட்சியப்படுத்தும் நோக்கமல்ல.

மதுரையில் உள்ள சில ஆலைகள் பற்றி நம்முடைய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் சொல்லியிருக்கின்றார். விரைவில் அதைப்பற்றி முடிவு எடுப்போம். கோவையைப் போல் மதுரை மாவட்டத்திலும் செய்வதற்கு எங்களுக்கு ஆலோசனை சொல்லலாம். எதையும் எடுத்துக் கொள்வதற்குத் தயாராய் இருக்கிறோம். லாபம் வந்தாலும், நஷ்டம் வந்தாலும் நாங்கள் எடுத்துக்கொள்வோம் என்ற முடிவுக்கு இந்த அரசாங்கம் வரும்போது, உங்களுடைய கருத்துக்கள் எங்களுக்கு உற்சாகத்தைக் கொடுக்கும் என்று நம்புகிறேன்.

புதுக்கோட்டை ஆலை எடுத்துக்கொள்வது சம்பந்தமாக வற்புறுத்தினார்கள். நாளைக்கு இதுபற்றி பேச்சு வார்த்தை நடத்த இருக்கிறேன். எதிர்க்கட்சியில் உள்ளவர்களுக்கு இன்றையதினம் அக்கறை, கவலை காரணமாக உடனடியாக இதை எல்லாம் எடுக்க வேண்டிய ஆர்வம் இருக்கின்றது. இதில் சொத்தையும் கடனையும் பார்த்தால், சொத்தை விட கடன் தான் அதிகமாக இருக்கிறது. இந்த சொத்தைவிட கடன் இருக்கிறதோ இல்லையோ, நாம் எடுத்துக்கொள்வது என்ற உற்சாகத்தின் காரணமாக, மக்களுடைய பணம் விரயம் ஆகாது என்ன செய்வது என்பதைப் பற்றி யோசித்துவருகிறேன்.

பொதுவாக நூற்பு ஆலை பிரச்னையில் மத்திய அரசு இன்னும் அதிகக் கவனம் செலுத்தவேண்டுமென்று நாம் வலியுறுத்தி வருகிறோம். நூற்பு ஆலைக்கு இவ்வளவு அதிகமாக பருத்தி மற்ற



1971 ஜூன் 30] [திரு. செ. மாதவன்]

நாடுகளில் இருந்து வருகிறது. இதுதான் நூற்பு ஆலை பிரச்சனைக்கு மூலகாரணம். இதைத் தொடர்ந்து மத்திய அரசு பஞ்சு மில் (ஸ்பின்னிங் மில்ஸ்)-க்கு மட்டும் தனிச் சலுகை காட்டுகிறது. கைத்தறி வகையில் அதிக பரிவைக் காட்டவேண்டும் என்ற கோரிக்கையை மத்திய அரசு நிறைவேற்ற வேண்டும் என்று எண்ணித்தான் இந்த அரசு வலியுறுத்தி வருகிறது. அப்படியிருந்தால் தான் இந்த நூற்பு ஆலையும் வளர்ச்சி பெறமுடியும் என்று நம்புகிறோம்.

நூற்பு ஆலையைப் பொறுத்தவரையில் நமது அரசு அதிக கவனம் செலுத்தி வருகிறது. கைத்தறி நெசவிலும் குறையைப் போக்குவதற்குத்தான் முயற்சி செய்து வருகிறோம். நாம் கொடுத்திருக்கின்ற புள்ளிவிவரங்களை எல்லாம் படிக்கவேண்டும். நம்முடைய கூட்டுறவுத் துறை, சிறப்பான முறையில் செயல் படுகிறது என்பதை யாரும் மறுத்துவிட முடியாது. பொதுவாக கைத்தறிக்கு இருக்கும் பிரச்சனை இன்றைக்கு நீடிக்கின்றது. இதை அகற்றும் கண்ணோட்டத்தில் பார்ப்போமானால், தமிழ்நாடு இன்னும் அதிக வளர்ச்சி அடைவதற்கு, வளர்ச்சி ஏற்படுவதற்கு நாம் எல்லாம் முயற்சி செய்யவேண்டும் என்பதை இந்த அரசாங்கம் ஏற்றுக்கொண்டு, கைத்தறித்துறைக்கு எவ்வளவு சலுகை கொடுத்திருக்கிறது என்பதற்கெல்லாம் புள்ளிவிவரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. எல்லோரும் படிக்கவேண்டும். பெரிய பெரிய புத்தகம் எல்லாம் படிக்கிறவர்கள் சாதாரண இந்தப் புத்தகத்தைப் படிக்கவா பயப்படுவார்கள்? இப்படிப்பட்ட புள்ளி விவரம் பயன் தரக்கூடிய புள்ளிவிவரமாக இருக்கும் என்பதை இந்த சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

கைத்தறித் துறையில் ரிபேட் போன்ற அதிக சலுகை கேட்கப் பட்டது. 80 லட்சம் ஆனது 110 லட்சம் என்று ரிபேட் கொடுத்தது உற்சாகப்படுத்தும் முறையில் இருக்கிறது. இன்னும் கடன் கொடுப்பது, விற்பனை வரியிலிருந்து விலக்கு அளிப்பது போன்ற சலுகை காட்டப்பட்டிருக்கிறது.

மத்திய அரசாங்கம், மாநில அரசாங்கம் உறவு பற்றிய விஷயம் எல்லாம் பேசினார்கள். இதில் தமிழகத்தின் குறைகளை எடுத்துச் சொல்வது சாதகம் தான் என்பதையும் சொல்லிக் கொள்கிறேன்.

பொதுவாக நம்முடைய வேண்டுகோள் எல்லாம் இந்தத் தொழில் துறையைப் பொறுத்தவரையில் எல்லா அரசியல் கட்சிகளும் சேர்ந்து நம்முடைய தமிழ்நாட்டுக்கு அதிகம் வேண்டும் என்ற நல்ல கருத்தை அவர்கள் வலியுறுத்தவேண்டும். அஸ்ஸாம் மாநிலத்தில் தொழில் வளர்ச்சி பற்றிப் பேசும்போது அந்த மாநில அமைச்சர் பேசும்போது, இந்தச் சிறு தொழில் வளர்ச்சி நம்முடைய நாட்டில் இருந்தும், அதற்குப் போடப்படுகிற அதிகாரி தமிழ்நாட்டில் இருந்துதான் வருகிறார் என்று குறிப்பிட்டார்கள் ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** விவாதத்தினுடைய நேரத்தை நீட்டிக்க அவை அனுமதி அளிக்கிறது என்று கருதுகின்றேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இப்படி மற்ற மாநிலங்கள் எல்லாம் நம்மைப் பார்த்து பொறாமைப்படக்கூடிய அளவுக்கு
பி.ப. 1.30. நாம் வளர்ச்சி கண்டாலும் அந்த வளர்ச்சி போதாது, மேலும் பலவகையில் வளர்ச்சி அடைந்தாக வேண்டும் என்பதுதான் நம்முடைய வேண்டுகோளாக இருக்கவேண்டும். தமிழ்நாட்டிற்கு நன்மை அளிக்கக்கூடிய வேண்டுகோளாக, கோரிக்கையாகத்தான் இது இருக்கும் என்பதை நாம் உணர்ந்தாக வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மத்திய அரசாங்கத்தின் கொள்கையைக் கண்டித்துப் பேசுகின்றோம், குறை கூறிக்கொண்டிருக்கிறோம் என்பதாகச் சிலர் சொல்லி வந்தார்கள். அவர்களேகூட இன்றையதினம் கூட்டம் கூட்டி மத்திய அரசாங்கத்திடம் அதிகாரங்கள் குவியக் கூடாது, மாநில அரசாங்கங்களுக்கு அதிக அதிகாரங்கள் தரப்பட வேண்டும் என்று தீர்மானம் போட்டிருக்கிறார்களே அதைக் கண்டு இதுவரை நீங்கள் எதிர்த்துவிட்டு இன்றைக்கு இப்படிப் பேசத் தொடங்கினீர்களே என்று ஆட்சேபித்தோமா? கண்டித்தோமா ? மாறாகப் பாராட்டினோம், வரவேற்றோம். அந்தத் தலைவர்களுக்கு வாழ்த்தைக் கூறினோம். அத்தகைய பெருந்தன்மையான மனம் வந்தாக வேண்டாமா ? மத்திய அரசு, மாநில அரசு, டெல்லி ஆட்சி, தமிழ்நாடு ஆட்சி என்கிற அளவில் கண்ணோட்டம் நமக்கு இருக்குமானால் நன்மை தரும். தொழில் துறையைப் பொறுத்தவரையில் தமிழ்நாட்டில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி அல்லவா இருக்கிறது, இது சொல்லவாவது என்கிற கண்ணோட்டம் இருக்குமானால் அது தமிழ் மக்களுக்கு செய்யக்கூடிய தீமையாகத்தான் நான் கருதுகிறேன்.

எனக்கு நினைவு வருகிறது. நானும், நம்முடைய முதல் அமைச்சர் அவர்களும் டெல்லி பிரதமருடன் அவருடைய இல்லத்தில் பேசிக்கொண்டிருந்தோம். அதுவும் தமிழ்நாட்டு வறட்சிப் பணியைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தோம். அதிக உதவி அளித்தாக வேண்டிய அவசியத்தை வற்புறுத்தியபோது அவர்கள் சிரித்துக்கொண்டே சொன்னார்கள். "நீங்கள் கேட்கக் கேட்க நானும் பதினான்கு கோடி வரை வறட்சிப் பணிக்காக உங்கள் மாநிலத்திற்கு அளித்து வந்திருக்கிறேன். ஆனால் உங்கள் மாநிலத்தில் உள்ள—சாதாரணத் தலைவர்கள் கூட இல்லை—பெரிய பெரிய தலைவர்கள் எல்லாம் தமிழ் நாட்டிலா பஞ்சம் ? எங்கே பஞ்சம் ? பஞ்சம் என்றால் உத்திரப் பிரதேசத்தைச் சென்று பார்த்திருக்க வேண்டும் என்று பாராளுமன்றத்திலேயே பேசும்போது மற்ற மற்ற மாநிலக்காரர்கள் எல்லாம் என்ன சொல்வார்களோ என்கிற பயம் ஏற்பட்டுவிட்டது" என்று சிரித்துக்கொண்டே குறிப்பிட்டதை நான் இங்கே வருத்தத்துடன் கூற வேண்டியதாக இருக்கிறது. அவர்கள் சிரித்ததன் பொருள் நமக்கு எல்லாம் புரியும். அவர்கள் அப்படி யாரைக் குறிப்பிட்டார்கள் என்பதும் நமக்குத் தெரியும். நம்முடைய மாநிலத்தில் உள்ள அரசியல் கட்சிகள் வேறுபட்ட கருத்துடையவர்களாக இருக்கலாம். ஆனால் மாநில மக்களுடைய நலன் என்று வருகிற





போது—வோட்டைப் பெறுவதற்காக, ஆட்சியைக் கைப்பற்றுவதற்காக, பதவியைப் பிடிப்பதற்காக—மாநில மக்களுடைய பொது நலனுக்கு விரோதமான முறையில் பேசுவது என்பது தவிர்க்கப்பட வேண்டும். அன்றைக்கு இந்தியப் பிரதமர் அவர்கள் சிரித்துக்கொண்டே சொன்னபோது, நமது முதல்வர் அவர்களும் குறிப்பிட்டார்கள். "அப்படிப் பேசுவது யார் என்று உங்களுக்குத் தெரியாதா ? எதற்காக இப்படிப் பேசுகிறார்கள் என்பதும் தெரியாதா ? அவர்கள் உங்கள் கட்சியில் இருந்தவர்கள் தானே. மீண்டும் உங்களோடு வந்து சேர்ந்தாலும் சேருவார்கள். ஆனால் இன்றைக்கு தமிழ் மக்களுடைய துயர் துடைப்புக்கு உதவி செய்யத்தான் வேண்டும்" என்று வற்புறுத்தினார்கள்.

அதே கருத்தையே வலியுறுத்திச் சொல்ல ஆசைப்படுகிறேன். தமிழ்நாட்டு மக்களுக்கு நன்மை அளிக்கக்கூடிய வகையில் பல விதத் தொழில்களும் இங்கே வளர்ந்தாக வேண்டுமென்றால் மத்திய அரசினிடத்தில் நாம் எல்லாம் ஒன்றாகச் சேர்ந்து கோரஸ் பாட வேண்டும். அப்படிக் கோரஸ் பாடுவதிலே எனக்கு மகிழ்ச்சி. யார் முன்னணியில் இருக்க வேண்டும், யார் பின்னணியில் இருக்க வேண்டும் என்பது கூட இல்லை. எனக்குச் சாரீரம் இருக்கிறதா, இல்லையா என்பது தெரியாது. தமிழ்நாட்டின் நன்மைக்காக யார் கோரஸ் பாட முன்வந்தாலும் அவர்களோடு சேர்ந்து நானும் பாடுவதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** கோரஸ் பாடிக்கொண்டே இருக்கலாம், அதனால் எவ்விதப் பயனும் ஏற்படாது. ப்ராப்ளமுக்கு சொல்யூஷன் காணுங்கள்—தீர்வு காணுங்கள் என்றுதான் சொல்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** நன்றி. இப்போதாவது தமிழ் மக்களுடைய பொதுநன்மையைப் புரிந்துகொண்டிருப்பார்கள். நமக்குள் கருத்து வேறுபாடு கட்சி அடிப்படையில் இருந்தாலும் தமிழ் மக்களுடைய நன்மைக்காக ஆட்சியில் உள்ள எந்தக் கட்சி ஒன்றை வற்புறுத்தினாலும் அதை மற்ற கட்சிகளும் ஆதரித்தாக வேண்டும். குறிப்பாக, நாங்கள் செய்கிற ஒரு காரியத்தை இங்குள்ள காங்கிரஸ் கட்சியினர் எதிர்த்து பரிகசித்தால்—அகில இந்திய அடிப்படையில் அமைந்துள்ள அவர்களது கட்சியைச் சேர்ந்த மற்ற மாநிலக்காரர்கள் இதையே நமக்கு எதிராக டெல்லியில் பேசுகிறார்கள். கம்யூனிஸ்டுக் கட்சியும் அப்படித்தான். ஆகவே நமக்குள் கருத்து வேறுபாடு இருந்தால் நாம் விவாதித்துத் தீர்த்துக் கொள்ளலாம். ஆனால் மாநில மக்களுடைய நலனுக்கு விரோதமாகக் கூடிய வகையில் பேசுவதோ, நடந்துகொள்வதோ கூடாது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் பணிவோடு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, மத்திய அரசு எந்த அதிகாரமும் செலுத்தக் கூடாது என்று நாம் சொல்வதாக சிலர் கற்பனை பண்ணிக் கொள்கிறார்கள். அப்படி அல்ல. இன்றைக்கு தொழில்துறையை எடுத்துக் கொள்ளுங்கள். அவர்களிடத்தில் குவிந்துள்ள அதிகாரங்கள் எவ்வளவு ? இன்றைக்கு மாநிலத்தில் அதிகமான தொழில்கள் உடனுக்குடன் வர முடியாததற்குக் காரணம் என்ன ? ஒவ்வொரு கட்டத்திலும் மத்திய அரசினிடத்தில் தான் நாம் செல்ல வேண்டியதாக இருக்கிறது. இத்தனை அதிகாரங்கள் மத்திய அரசினிடத்தில் குவிந்திருக்கக்கூடாது என்பதாக திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த முதல் அமைச்சர் அவர்கள் வற்புறுத்துகிறார்கள் என்று மற்ற மற்ற மாநிலத்து—வேறு கட்சியைச் சேர்ந்த—முதல் அமைச்சர்களும் இதை ஆதரிக்கத் தான் செய்கிறார்கள். ஆனால் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த முதல் அமைச்சர்கள் சொல்லுகிறார்கள் என்றால் அதை மகிழ்ச்சியோடு வரவேற்கிறார்கள். கேரளத்தைச் சேர்ந்தவர்கள் சொல்கிறார்கள், தமிழ்நாட்டைச் சேர்ந்த திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் சொல்கிறார்கள் என்கிறபோது அச்சப்படுகிறார்கள். மத்திய அரசாங்கத்தினுடைய எல்லா உரிமைகளையும், அதிகாரத்தையும் பறிக்க வேண்டுமென்ற தீய நோக்கத்தோடு நாம் பார்க்கவில்லை. அதற்கு மாறாக தேவையில்லாத அதிகாரம் அவர்களிடம் என்ன என்ன இருக்கின்றன என்பதை அடிக்கடி எடுத்துக் காட்டி வந்திருக்கிறோம்.

உதாரணத்திற்கு ஒன்று சொல்ல விரும்புகிறேன். 1 கோடி ரூபாய்க்குள் துவங்கப்படுகிற தொழில். ஆனால் அதற்கு மத்திய அரசாங்கத்தின் அனுமதி தேவையில்லை என்று செய்யவேண்டும் என்று வற்புறுத்தினோம். மத்திய அரசின் தொழில் அமைச்சர் திரு. பக்ருதீன் அலி அவர்கள்கூட—அவரை நேரில் பார்த்துப் பேசிக்கொண்டிருந்தபோது சொன்னார்கள். உங்கள் வற்புறுத்தலுக்கு இணங்க—நீங்கள் தொடர்ந்து செய்து வந்த கோரிக்கைக்கு இணங்க ஒரு கோடி ரூபாய்க்குள் ஆரம்பிக்கப்படுகிற தொழிலுக்கு இனி மத்திய அரசாங்கத்தின் அனுமதி தேவையில்லை என்று உத்தரவு பிறப்பிக்க இருப்பதாகச் சொன்னார்கள். அதுபோல முடிவு செய்து உத்தரவிட்டார்கள். ஆனால் அந்த உத்தரவு எப்படி அமைந்துவிட்டது ? ஒரு கோடி ரூபாய்க்குள் ஆரம்பிக்கப்படுகிற தொழிலுக்கு மத்திய அரசாங்கத்தின் அனுமதி தேவையில்லை என்றாலும் எந்த எந்தத் தொழிலுக்கு இறக்குமதி தேவைப்படுகிறதோ, எந்த எந்தத் தொழிலுக்கு வெளிநாட்டு தொழில் நுட்ப உதவி தேவைப்படுகிறதோ அவற்றுக்கு மத்திய அரசின் முன் அனுமதி பெற்றாக வேண்டும் என்று போட்டிருக்கிறார்கள்.

மத்திய அரசு நாடு முழுவதும் ஒரேமாதிரியான சீரான பொருளாதார முன்னேற்றம் பெறவேண்டும் என்று நினைக்கிறார்கள். அதில் தவறு இல்லை நாங்கள் சொல்வது என்ன ? நாடு முழுவதற்கும் சீரான முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டு இருக்கக்கூடிய பணத்தை இன்ன இன்ன மாநிலத்திற்கு இவ்வளவு



என்று வரையறுக்கட்டும். அதுபோல என்ன என்ன பொருள்கள் இறக்குமதி செய்யவேண்டும் என்பதை முன்கூட்டியே திட்டமிட்டு, பகிர்ந்து அளிக்கட்டும். வேண்டாம் என்று சொல்லவில்லை. என்ன என்ன தொழில்களுக்கு பாரின் கோலாபரேஷன் வேண்டுமென்று தீர்மானித்து அதைப்பெற்று இன்ன இன்ன மாநிலங்களுக்கு அது கிடைக்கும் என்று அறிவிக்கட்டும். மிகவும் அவசியமானது. ஆனால் லைசென்சிங் கமிட்டி என்று வைத்துக்கொண்டிருக்க வேண்டாம், இதை எடுத்து விடுங்கள் என்று சொல்கிறோம். நம்முடைய மூலக் கொள்கையின் தத்துவமே இதுதான். இதைத் தான் நமது அரசு வற்புறுத்தி வருகிறது.

62 கோடி ரூபாய் அளவில் தூத்துக்குடி உரத்தொழிற்சாலைக்கு அனுமதி பெறுவதற்கு நாம் படாதபாடு பட்டோம். மற்ற மாநிலங்களைவிட சற்று விரைவாகத்தான் அனுமதியும் பெற்றோம். ஆனால் அதற்குத் தேவையான மூலப்பொருள் எது என்று நிர்ணயிப்பதில் தொடர்ந்து காலதாமதப்பட்டு வருகிறது. வெளிநாட்டுச் செலாவணிப் பிரச்சினை எழுவதால் தயக்கம் காட்ட வேண்டியிருக்கிறது என்று சொல்கிறார்கள். நாங்கள் விரும்புவது எல்லாம் இங்கிருந்து ஆரம்பிக்கப்படுவது எல்லாம் ஒவ்வொரு கட்டமாகச் சென்று இந்தியப் பிரதமர் வரை செல்ல எவ்வளவு காலதாமதமாகிறது, இதைத் தவிர்க்க என்ன வழி என்பதைப் பரிசீலிக்க வேண்டும் என்பதுதான். இந்தியா முழுமைக்கும் நாப்தா இறக்குமதி எவ்வளவு இருக்கவேண்டும் என்பதை நீங்கள் முடிவு எடுத்துக்கொள்ளுங்கள். மாநிலத்திற்கு இவ்வளவு என்று ஒதுக்கி விடுங்கள். அந்நியச் செலாவணியாக மொத்தம் ஒவ்வொரு மாநிலத்திற்கும் இவ்வளவு என்று ஒதுக்கிவிடுங்கள். அந்த அதிகாரம் உங்களிடமே இருக்கட்டும். ஆனால் மாநிலத்துக்குக் கிடைக்கக்கூடிய வசதிகளை வைத்துக்கொண்டு எந்த எந்தத் திட்டங்களை மேற்கொள்ளலாம் என்று முடிவு செய்து திட்டங்களைத் துவக்குகிற பொறுப்பு மாநில அரசுக்கே இருக்கவேண்டுமென்பது தொடர்ந்து வலியுறுத்தப்பட்டு வருகிறது.

திரு. ஹாண்டே அவர்கள் பேசும்போது கூடச் சொன்னார்கள். தொழில் துறையில் தயக்கம்—நிரந்தரமற்ற கொள்கை நீடிப்பது தமிழ்நாட்டுத் தொழில் வளர்ச்சியையே குன்றச் செய்யும் என்றார்கள். அவர்கள் எங்களை நினைத்துச் சொன்னதாக நான் கொள்ளவில்லை. அவர் சொல்வதன் உண்மையான உட்பொருளை நாங்கள் ஏற்றுக்கொள்ளத் தயாராய் இருக்கிறோம். மத்திய அரசினிடத்திலும் நாங்கள் அதைத்தான் வற்புறுத்தி வருகிறோம். அது பொதுத்துறையோ, கூட்டுத்துறையோ, கூட்டுறவுத் துறையோ, தனியார் துறையோ, இந்த மாநிலத்திற்கோ, அந்த மாநிலத்திற்கோ அதைப்பற்றி எல்லாம் கவலையில்லை—எந்த முடிவு எடுத்தாலும் விரைவாக எடுங்கள். பேச்சுவார்த்தையில் அன்சர்டனிடி இன் இண்டஸ்ட்ரியல் பாலிஸி உருவாகக் கூடாது. அப்படி உருவானால் ஒரு நாட்டினுடைய பொருளாதார வளர்ச்சி வெகுவாக பாதிக்கப்படும் என்பதை மிகத் தெளிவாக

[திரு.செ. மாதவன்] [1971 ஜூன் 30

நாம் நம்முடைய கருத்துக்களை எடுத்துச் சொல்லி வருகிறோம். தொழிற் கொள்கையில் நிரந்தரமற்ற தன்மை இருக்கக்கூடாது என்பதையே இந்த அரசு வற்புறுத்தி வருகிறது. மத்திய அரசுக்கும் எடுத்துக்கூறி வருகிறது. தமிழ்நாடு முழுவதும் ஏராளமான தொழிற்சாலைகள் உருவாகவேண்டுமென்று வற்புறுத்தி வருகிறோம். நம்முடைய முயற்சியில் நாம் தொடர்ந்து தோல்வியே கண்டாலும் அதைக் கண்டு கவலைப்படாது நம்முடைய லட்சியத்தை அடைந்துவிடலாம் என்கிற நம்பிக்கையிலேயே இந்த அரசு செயல்பட்டு வருகிறது.

சேலம் உருக்காலையைப் பெற்றோம். எதிர்த்தரப்பிலுள்ளவர்கள் ஒரு வார்த்தை கூட அதைப் பாராட்டவில்லை. இவர்கள் பாராட்டாது இருக்கலாம் இந்த அரசின் சாதனையைப்பற்றி. ஆனால் நாங்கள் சேலம் உருக்காலைத் திட்டத்திற்குக் காரணமானவர்களை எல்லாம் பாராட்டினோம். அவர்களைப் பாராட்டுக் கூட்டத்திற்கே அழைத்தோம். அந்த இடத்திலேயே நம்முடைய முதல்வர் அவர்கள் பாராட்டுரையை வழங்கினார்கள். யாரையும் தாழ்த்திக் கூறவேண்டும் என்பது திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கையே இல்லை. நல்லது எந்த இடத்தில் இருந்தாலும் பாராட்டுகிறோம். 1963 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட திட்டம். இத்தனை ஆண்டு காலதாமதப்பட்டாலும் மேலும் காலதாமதம் செய்யக் கூடாது என்பதை மத்திய அரசாங்கத்தினிடம் திட்டவட்டமாக கூறியிருக்கிறோம்: "மேலும் உங்களிடம் ஏராளமான ஆலைகள் இருக்கின்றன. இருக்கிற ஆலைகளோடு இதையும் ஒன்றாக நீங்கள் சேர்த்துவிடக்கூடாது. இதற்கென்று ஒரு தனி வாரியத்தையே போடுங்கள்" என்று நாங்கள் கேட்கிறோம்.

அதுமட்டுமல்ல, அந்த வாரியத்தை நடத்துகின்ற பொறுப்பை எங்கள் அரசுக்குத் தாருங்கள், பல நல்ல நிலைமைகள் உருவாகும் என்று சொல்லியிருக்கிறோம். சேலம் உருக்காலைக்குச் செலவு ரூ. 100 கோடியானாலும் சரி, அதன் உற்பத்திப் பொருள் 5 கோடி டன் ஆனாலும் சரி, அதை எப்படியாகவாவது வேகமாகச் செயல்படுத்த வேண்டும் என்ற கருத்தை நேரடியாகச் சொல்லியிருக்கிறோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் நானும் பிரதம மந்திரி அவர்களிடம் இதுபற்றி நல்ல முறையில் எடுத்துச் சொல்லியிருக்கிறோம். கடிதம் மூலமாகவும் அதைக் குறித்து எழுதியிருக்கிறோம். மேலும் அந்தத் துறையின் பொறுப்பை மத்தியில் வகிப்பவர் நம்முடைய மாநிலத்துக்காரர். சேலம் உருக்காலை கொஞ்சம் வேகமாக வரவேண்டுமென்று அவர்களும் ஆசைப்படுகிறார்கள். ஆகவே, மத்திய அரசு விரைவில் மேற்கொண்டு நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறோம். சேலம் உருக்காலை சுமார் மூவாயிரம், நான்காயிரம் பேர்களுக்கு வேலைவாய்ப்பைத் தேடிக் கொடுக்கும் என்று நம்புகிறோம்.



1971 ஜூன் 30] [திரு. செ. மாதவன்]

அடுத்தபடியாக, தமிழ்நாடு முழுவதும் ஏராளமான அளவில் இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்டுகளை ஏற்படுத்துவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. மத்திய அரசு விரைவிலே நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென்று நாம் மத்திய அரசைத் தொடர்ந்து வலியுறுத்திக்கொண்டு வருகிறோம்.

புதிய தொழிற்சாலையை தொடங்குகிறபோது மத்திய அரசு தன்னிச்சையாக முடிவு எடுக்காமல், அனுமதி வழங்கக்கூடிய குழுவின் மூலமாக முடிவு எடுக்காமல், இலாகாவின் சிபாரிசுகளின்படி முடிவு எடுக்காமல் எந்தெந்த மாநிலங்களில் தொழில்களைத் தொடங்க இருக்கிறதோ அந்த மாநிலத்தின் முதலமைச்சருடன் கலந்து பேசி, மாநிலங்களின் முதலமைச்சர்களின் கூட்டத்திலே கலந்து பேசி தக்க முடிவுகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறோம். மாநில முதலமைச்சர்களின் ஆலோசனைகளைக் கேட்டு முடிவு எடுக்க வேண்டுமென்று மத்திய அரசை வலியுறுத்தி வருகிறோம். அந்தக் கருத்தின் அடிப்படையில் தான் தொழில்கள் தொடங்கப்பட வேண்டுமென்பதை நான் சொல்லிக்கொள்கிறேன்.

மத்திய அரசின் தொழில் கொள்கையானது, அதாவது தொழில்களுக்கு அனுமதி வழங்கும் கொள்கையானது, 'லைசென்ஸ் பாலிஸி' மாற்றப்பட வேண்டும். மாநில அரசோடு தொடர்பு கொண்டு, மாநில அரசின் ஆலோசனையோடு, மாநில அரசின் கருத்துக்களை ஏற்று தொழில்களைத் தொடங்கக்கூடிய வாய்ப்பு இருக்குமாறு மத்திய அரசு தன்னுடைய கொள்கையை உருவாக்க வேண்டும். மாநில அரசு மத்திய அரசின் கொள்கையைப் பரிசீலிக்கவும் வழி செய்ய வேண்டும் என்றெல்லாம் நாங்கள் வலியுறுத்திக் கொண்டிருக்கிறோம். அதற்காக நாம் எல்லோரும் ஒருங்கிணைந்து, ஒரே குரலிலே இந்தக் கருத்தை எடுத்துச்சொல்ல வேண்டுமென்று விரும்பி, வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

எல்லாத் தரப்பிலும் இருந்து பேசிய உறுப்பினர்கள் அனைவரும் தொழில்கள் நன்கு வளர வேண்டுமென்றுதான் பேசினார்கள். ஒரு சதவிகிதம் தானே வளர்ச்சியடைந்திருக்கிறது என்று சொன்னார்கள். அப்படிச் சொல்லாவிட்டால் இந்த விவாதத்தில் சூடும் இருக்காது, சுவையும் இருக்காது என்பதற்காக அப்படிச் சொல்லியிருப்பார்கள். எல்லாத்தரப்பு அங்கத்தினர்களும், இன்னும் வேகமாகச் செய்ய வேண்டும், தமிழ்நாட்டு மக்களுக்கு வேலைவாய்ப்பைத் தேடித் தர வேண்டும், தமிழ்நாடு வளம் பெற வேண்டும் என்று தமிழ் நாட்டின் நன்மையைக் கருத்திற்கொண்டு தான் பேசினார்களே தவிர, இதிலே இருவேறு கருத்து இருக்க முடியாது என்பதை நான் மனப்பூர்வமாக நம்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்த ஒவ்வொரு கருத்தையும் பின்னாலே இந்த அரசு தொடர்ந்து பரிசீலித்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்ததுபோல ஒவ்வொரு ஆண்டும்

1971 ஜுன் 30] [திரு. செ. மாதவன்]

செயல்திட்டங்களை இந்த மன்றத்திலே வைக்க இருக்கிறோம். தமிழ் நாட்டின் நன்மைக்கேற்ற வகையில் நாங்கள் செயல்பட இருக்கிறோம் என்ற உறுதியைக் கூறி, எல்லோரும் சேர்ந்து உற்பத்தி பெருக வேண்டும், வேலையில்லாத் திண்டாட்டம் போக வேண்டும், தொழில்கள் பெருக வேண்டும் என்ற முறையிலே கொடுத்த வெட்டுப் பிரேரணைகளை மாண்புமிகு உறுப்பினர்கள் திரும்பப் பெற்றுகொண்டு, இந்த அரசின் தொழில் கொள்கைக்கு உதவ வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

THIRU K. M. SUBRAMANIAM: On a point clarification, Sir, In this Joint sector industry in Tuticorin......

MR. SPEAKER: There is no time for seeking clarifications now.

THIRU R. PONNAPPA NADAR: Sir, I am pressing my cut motion to Demand No. 20.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, தோல்வியுற்றது.

THIRU K. T. K. THANGAMANI: Sir, I am pressing my cut motion.

திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களின் வெட்டுத் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, தோல்வியுற்றது.

THIRU M. SURENDRAN: Sir, I am pressing my cut motion.

திரு. எம் சுரேந்திரன் அவர்களின் வெட்டுத் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, தோல்வியுற்றது.

DR. H. V. HANDE: Sir, I am pressing my cut motion.

டாக்டர் ஹாண்டே அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, தோல்வியுற்றது.

MR. SPEAKER: The question is:

"That the Government be granted a sum not exceeding Rs. 4,39,88,300 under Demand No. 20 Industries."

The Demand was put and carried, and the Grant was made.

DR. H. V. HANDE: I am pressing my cut motion to Demand No. 40.

டாக்டர் ஹாண்டே அவர்களுடைய வெட்டுத் தீர்மானமும், அதோடு இணைந்த திரு. ஜே. ஜேம்ஸ் அவர்களுடைய வெட்டுத் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, தோல்வியுற்றது.



1971 ஜுன் 30]

"THIRU K.T.K. THANGAMANI: I am pressing my cut motion.

திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படடு, தோல்வியுற்றது.

THIRU A. SUBRAMANIAM: I am pressing my cut motion.

திரு. ஏ. சுப்பிரமணியம் அவர்களின் வெட்டுத் தீர்மானம் தீர்மானமும் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, தோல்வியுற்றன.

MR. SPEAKER: The question is . . .

THIRU J. JAMES: On a point of order, Sir, I have moved a cut motion. I am pressing it.

MR. SPEAKER: Your name will be included in the record of proceedings as if you have pressed your cut motion.

The question is . . .

THIRU J. JAMES: On a point of order, Sir, I am pressing my cut motion.

MR. SPEAKER: The hon. Member's cut motion was clubbed with Dr. Hande's cut motion. Both were clubbed together in one cut motion as item No. 35. So, it has been treated as if pressed and put to vote.

The question is:

"That the Government be granted a sum not exceeding Rs. 15,82,73,900 under Demand No. 40. Capital Outlay on Industrial Development."

The Demand was put and carried, and the Grant was made.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவடைந்து, பேரவை மீண்டும் நாளை காலை 9 மணிக்குக் கூடும்.

பின்னர் பேரவை ஒத்திவைக்கப்பட்டது.

## 6. பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. Statutory Rules and Orders

**126.** Notification issued with G. O. Ms. No. 835, Home, dated the 24th March 1971, in regard to certain amendments to the Tamil Nadu Motor Vehicles Rules, 1940. [Laid on the Table of the House under section 133 (3) of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939)].

127. Notification issued with Roc. No. 9279/70–P1, dated the 19th February 1970, in regard to exclusion of certain areas from the existing Valayamadevikoil Panchayat in Chidambaram taluk of South Arcot district for constitution into a separate Panchayat by name "Ammankuppam". [Laid on the Table of the House under section 179 (4) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

128. Notification issued with G. O. Ms. No. 403, Home, dated the 5th February 1971, in regard to concessional rate of tax in respect of the newly invented bicycle "Maipony". [Laid on the Table of the House under section 11 (2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1931 (Tamil Nadu Act III of 1931) ].

129. Notification issued with G.O. Ms. No. 1024, Agriculture, dated the 26th March 1971, in regard to an amendment to the Tamil Nadu Agricultural Produce Markets Rules, 1961. [Laid on the Table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).*

130. Notification issued with Roc. No. 137688/69–P1, dated the 3rd December 1969 in regard to exclusion of certain areas from the existing Vathrayanthethu panchayat in Chidambaram taluk of South Arcot district for constitution into a separate panchayat by name "Kilavadinatham". [Laid on the Table of the House under section 179 (4) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

131. Notification issued with G.O. Ms. No. 976, Agriculture, dated the 23rd March 1971, in regard to declaration of castor as an agricultural produce for the purposes of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959. [Laid on the Table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959)].

*B. Reports, Notification and other Papers.*

69. Notification issued with G. O. Ms. No. 415, Labour, dated the 8th April 1971, in regard to an amendment to the Tamil Nadu Workmen's Compensation (Occupational Diseases) Rules, 1964.

@ 70. The pamphlet regarding the incentives to Small Scale Industries and other Departmental Schemes.

£ 71. Erratum issued to the Madurai City Municipal Corporation Bill, 1971 (L.A. Bill No. 10 of 1971).

$ 72. A Review on the working of Minor Ports in Tamil Nadu, 1970–71 (English and Tamil).

---

@ Despatched to Members on 28th June 1971.

£ Laid on the table of the House on 28th June 1971.

$ Despatched to Members on 29th June 1971.

# இணைப்புகள்

[385ம் பக்கத்திலுள்ள அடிக் குறிப்பைக் காண்க.]

# தமிழ் நாட்டின் தொழில் வளர்ச்சி
## 1970-71

## ஆய்வுரை

### பெருந் தொழில்கள், நடுத்தரத் தொழில்கள்.

#### முகவுரை.

மக்கட் தொகைப் பெருக்கமும், பெரும்பாசனத் திட்டங்கள் போன்ற பிற திட்டங்களை மேலும் நிறைவேற்றினும் வேளாண்மைக்காக நமக்குக் கிட்டும் குறைந்த அளவு நிலப்பரப்பும் இம் மாநிலத்தின் பொருளாதார முன்னேற்றத்திற்காகத் தொழில் வளர்ச்சியை எதிர்நோக்கி நிற்க வேண்டிய நிலையில் தமிழகம் உள்ளது. தொழில் வளர்ச்சி விரைவாகவும், சம நிலையிலும் அமையும் வண்ணம் பொருளாதார நடவடிக்கைகளைப் பலகால்களாகப் பிரிப்பதன் வாயிலாகவே மக்களின் வாழ்க்கைத் தரத்தை உறுதியாக உயர்த்த முடியுமென்றும், அவர்களுக்கு வேலை வாய்ப்பளிக்க இயலுமென்றும் நாளும் வளர்ந்துவரும் மக்கட் தொகைப் பெருக்கம் தெளிவாக எடுத்துக் காட்டியுள்ளது. இக் குறிக்கோளைக் கருத்திற் கொண்டு, மாநில அரசு தொழில் முன்னேற்றத்திற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்துள்ளது. மூலப்பொருள்கள் முதலியன கிட்டும் இடத்திற்கு அண்மை, போக்குவரத்து வசதிகள், நீர் வசதி, மின்சார வசதி, தொழிலாளர் வசதி இவை நிரம்பியிருத்தல், சந்தைக்கு அருகில் அமைந்திருத்தல் போன்ற தொழில் நுட்பப் பொருளாதாரக் கூறுகளே தொழில்களை ஓரிடத்தில் அமைப்பதற்குப் பின்பற்றப்படும் வாயில்களாகும். இவ்வுண்மைகளை உள்ளத்திற் கொண்டு தொழில்களைப் பெருக்குவதற்குத் தன்னால் இயன்ற முயற்சிகளை தமிழ்நாடு அரசு எடுத்து வருகிறது.

2. தமிழ்நாடு குறுகிய காலத்திற்குள் பொருளாதார நடவடிக்கைகளைப் பலதிறப்பட்ட வழிகளில் பிரித்து மகத்தான சாதனையை எய்தியிருப்பதைக் கருத்தில் கொண்டால், தமிழ்நாட்டின் தொழில் மேம்பாடு போற்றுவதற்குரியதாகும். பொருளாதார வளர்ச்சி வீதத்தை இயன்ற மட்டில் விரைந்து பெருமளவுக்கு உயர்த்த வேண்டும் என்கிற உண்மையான நோக்கத்துடன், அரசு திட்டங்களைத் தீட்டியுள்ளது. முதல் திட்டத்தில் மாநில அரசுத் துறை, மத்திய அரசுத் துறை, தனியார் துறை இவற்றிற்கிடையே செவ்விய முறையில் ஒத்துழைப்பு ஏற்பட்ட காரணத்தால், நமது மாநிலத்தில் தொழில் வளர்ச்சி மலரத்தொடங்கியது, 2-வது, 3-வது திட்டக் காலங்களில் தொழில் மேம்பாடு விரைந்து வளர்ச்சி பெற்று, இப்போது நான்காம் திட்டத்தின் தொடக்கத்தில் இந்தியாவின் தொழில் வளர்ச்சியில் தமிழ்நாடு சிறப்பான ஓர் இடத்தை எய்தியுள்ளதென்பது பெருமிதத்திற்குரிய ஒரு செய்தியாகும்.

3. கீழே கொடுத்துள்ள சில முக்கிய தொழில் வளர்ச்சிக் குறியீடுகளைக் கொண்டு இம் மாநிலம் தொழில் துறையில் கண்டுள்ள மகத்தான முன்னேற்றத்தைப் பெருமளவிற்கு நாம் அறிய இயலும்.

எடுத்துக்காட்டாக, தொழில் துறையில் பயன்படுத்திய மின்சாரத்தின் அளவு 1956–57-ல் 560 மில்லியன் யூனிட்டுகளாக இருந்ததற்கு மாறாக, 1969–70-ல் 2,484 மில்லியன் யூனிட்டுகளாக உயர்ந்தது. அதாவது விற்பனை செய்த மொத்த மின்சார யூனிட்டுகளான 4,574 மில்லியன் யூனிட்டுகளில் தொழில் துறையில் பயன்படுத்திய மின்சாரத்தின் அளவு 54:46 என்ற விகிதத்தில் உள்ளது. கடந்த 14 ஆண்டுகளில் (விலைக்கு வாங்கிய மின்சாரம் உட்பட) உற்பத்தி செய்த மின்சாரத்தின் அளவையும், தொழில் துறையில் பயன்படுத்திய மின்சாரத்தின் அளவையும் வரைபடம் எடுத்துக்காட்டுகிறது.

1970-ஆம் ஆண்டில் 13 பொது லிமிடெட் கம்பெனிகளும், 136 தனியார் கம்பெனிகளும் இம் மாநிலத்தில் பதிவாகியுள்ளன. இவற்றின் அனுமதி பெற்ற மொத்த மூலதனம் ரூ. 30·55 லட்சம். இவற்றின் தொகை செலுத்திய பங்கு மூலதனம் ரூ. 54 லட்சமாகும்.

1970-ல் இம் மாநிலத்திற்காகவும் இந்தியா முழுவதற்காகவும், மூலதன வெளியீடுகள் பற்றிய கட்டுப்பாட்டு அதிகாரி அரசுச் சார்பற்ற கம்பெனிகளின் மூலதன வெளியீடுகளுக்கு இசைவளித்துள்ள விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| | இசைவுபெற்ற முதலீடுகள். | | ஏற்பளிக்கப்பட்ட தொகை. (ரூபாய் லட்சத்தில்). | |
|---|---|---|---|---|
| | இந்தியா. | தமிழ்நாடு மட்டும். | இந்தியா | தமிழ் நாடு மட்டும். |
| (1) | (2) | (3) | (4) | (b) |
| அரசுச் சார்பற்ற கம்பெனிகள் (தனியார் மற்றும் பொது லிமிடெட் கம்பெனி) தொடக்கத்தில் அளித்த முதலீடு | 13 | .. | 16,75·00 | .. |
| மேற்கொண்டும் அளித்த முதலீடு .. .. | 32 | 2 | 23,73·33 | 59·50 |
| பூரிப்பூதிய முதலீடு .. | 162 | 17 | 42,94·29 | 3,65·13 |
| கடன் ஈட்டுப் பத்திரங்கள் .. | 11 | .. | 8,55·00 | .. |
| கடன்கள் முதலியவை .. | 12 | .. | 6,56·55 | .. |
| மொத்தம் .. | 230 | 19 | 98,54·17 | 4,24·63 |

4. 1970-ஆம் ஆண்டில் 371 தொழிற்சாலைகள் பதிவு செய்யப் பட்டுள்ளன. 10,758 தொழிலாளர்கள் அத்தொழிற்சாலைகளில் பணியில் அமர்த்தப்பட்டனர். 1970-ஆம் ஆண்டில், பொறியியல் பட்டம் பெ வர்களின் மொத்த எண்ணிக்கை 2,000-ஆகவும் மற்றும் பொறியி





தகுதிப் பட்டயம் பெற்றவர்களின் மொத்த எண்ணிக்கை 3,200-ஆகவும் இருந்தது. 1971–72-ஆம் ஆண்டில் எதிர்பார்க்கப்படும் பொறியியல் பட்டதாரிகள் மற்றும் பொறியியல் தகுதிப் பட்டயதாரர்கள் ஆகியோரின் எண்ணிக்கை முறையே 2,000 ஆகவும் 3,200 ஆகவும் இருக்கும்.

5. இம்மாநிலத்தில் தொழிற்சாலைகளின் நிகர உற்பத்திப் புள்ளி விவரங்கள் மேற்படி தொழிற்சாலைகள் மூலம் அரசுக்குக் கிடைத்த வருவாய் பற்றிய புள்ளி விவரமும் அட்டவணையும் தமிழ் நாட்டில் கடந்த காலத்தில் ஏற்பட்டுள்ள தொழில் வளர்ச்சியினைச் சுட்டிக் காட்டுகின்றன. 1960–61-ல் தொழில் துறையிலிருந்து மாநில அரசுக்கு 16·03 சதவீதம் வருவாய் கிடைத்ததற்கு மாறாக, 1969–70-க்குள் இது 21·14 சதவீதமாக உயர்ந்துவிட்டது. தொழில் துறையிலிருந்து பெறப் படும் வருவாய் அதிகரித்ததன் விளைவாக அரசு வருவாய் உயர்ந் துள்ளதை பின்வரும் விவர அட்டவணை காட்டுகிறது.

**தொழில் துறை வாயிலாக அரசுக்குக் கிடைத்த வருவாய்.**

| ஆண்டு. | அரசு வருவாய். | இடைநிலைத் துறை வழங்கியது (பெரும் உற்பத்தித் தொழில்கள், சிறு தொழில்கள் கனிவளம் வெட்டி எடுத்தல், கல் உடைத்தல், மின்சாரம், கட்டுமானம் தொழில்கள்.) | தொழில் துறையிலிருந்து அரசுக்குக் கிடைத்த மொத்த வருவாயின் சதவீதம் |
|---|---|---|---|
| | (ரூபாய் லட்சத்தில்.) | | |
| (1) | (2) | (3) | (4) |
| 1950–51 .. .. | 77,492 | 9,805 | 12·65 |
| 1955–56 .. .. | 96,354 | 13,608 | 14·12 |
| 1960–61 .. .. | 112,956 | 18,102 | 16·03 |
| 1961–62 .. .. | 118,453 | 20,294 | 17·13 |
| 1962–63 .. .. | 121,277 | 20,976 | 17·30 |
| 1963–64 .. .. | 124,517 | 22,520 | 18·09 |
| 1964–65 .. .. | 127,577 | 24,954 | 19·56 |
| 1965–66 .. .. | 129,157 | 27,094 | 20·98 |
| 1966–67 .. .. | 137,841 | 27,950 | 20·28 |
| 1967–68 .. .. | 140,309 | 29,733 | 21·19 |
| 1968–69 .. .. | 142,370 | 31,292 | 21·98 |
| **1969–70** .. .. | 157,252 | 33,247 | 21·14 |

இம்மாநிலத்தில் தொழில் வளர்ச்சியில் வட்டாரத்துக்கு வட்டாரம் ஏற்றத்தாழ்வுகள் இருப்பதை நீக்கும் பொருட்டு, இம்மாநிலத்தில் பின் தங்கிய பகுதிகளில் தொழில்களை வளர்க்க வேண்டிய இன்றியமையாத தேவையைக் குறித்து அரசு உணர்ந்துள்ளது.

பின்தங்கிய பகுதிகளில் தொழில் வளர்ச்சியை ஊக்கப்படுத்தும் வகையில் அரசு, தொழில் வளர்ச்சி அடையாத பகுதிகளில் அமைக்கப்படும் புதிய தொழிற்சாலைகளுக்குரிய கட்டண வீதங்களில் 15 சதவீத சலுகையை அண்மையில் வழங்கியுள்ளது. இது காரியத்திற்காக, தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சி அடையாத பகுதிகளையும் அரசு அறிவித்துள்ளது. இந்திய அரசின் ஆலோசனையின்பேரில், "மத்திய அரசு நிதியிலிருந்து ஒரு மொத்த மானியம் அல்லது உதவித்தொகை வழங்க, இவ்வரசு இந்திய அரசுக்கு குறிப்பிட்ட சில பகுதிகளைப் பரிந்துரைத்துள்ளது. புதிய தொழிற்சாலைகள் தொடங்குவதற்கு கடன் வழங்கும் நிறுவனங்களிலிருந்து சலுகை நிதி உதவி பெற வேறு சில பகுதிகளையும் பரிந்துரைத்துள்ளது.

மணலியிலுள்ள எண்ணெய்த் தூய்மைப்படுத்தும் ஆலையில் உருவாக்கப்பட்ட வாய்ப்புகளை அரசு நன்கறியும். பெட்ரோலியத் துணைப் பொருட்களின் அடிப்படையில், தனியார் துறையிலும், பொதுத்துறையிலும் பல தொழிற்சாலைகளைத் தொடங்குவதற்கான வாய்ப்புகளை மதிப்பிடுவதற்கு முன்னரே நடவடிக்கைகளை அரசு எடுத்து வந்துள்ளது. நெய்வேலி பழுப்பு நிலக்கரிக் கூட்டு நிறுவனம் மற்றும் மணலியிலுள்ள பெட்ரோலியம் சார்ந்த இரசாயனத் தொழிற்சாலை ஆகியவற்றின் துணைப்பொருட்களைப் பயன்படுத்துவது குறித்து சாத்தியக் கூறுபற்றி இந்தியா இன்ஜினீர்ஸ் லிமிடெட் நிறுவனம் அளித்துள்ள ஆய்வு அறிக்கைகள் அரசின் பரிசீலனையில் உள்ளன.

புதிய மாநில தொழில் வளர்ச்சிக் குழுவின் பரிந்துரைகளையொட்டி, பெட்ரோலியம் சார்ந்த இரசாயனத் தொழில் குறித்து ஒரு துணைக் குழுவையும், உப்பை அடிப்படையாகக் கொண்ட தொழில்கள் குறித்து ஒரு துணைக் குழுவையும், தொழிற்சாலைகளுக்கு உரிமங்கள் வழங்குவதில் உள்ள இடர்ப்பாடுகள் குறித்து ஆய்வு செய்ய ஒரு துணைக் குழுவையும் அரசு அமைத்தது. முதல் இரு குழுக்களின் அறிக்கைகள் அரசின் பரிசீலனையில் உள்ளன. மூன்றாவது குழுவின் அறிக்கை விரைவில் எதிர்பார்க்கப்படுகிறது.

இறக்குமதியைக் குறைத்து ஏற்றுமதியை அதிகரிப்பதின் முக்கியத்துவத்தை அரசு முற்றிலும் உணர்ந்துள்ளது. ஏற்றுமதியை அதிகரிப்பதற்குரிய வழிவகைகளைக் காண்பதில் அதிக ஆர்வம் இருந்துவருகிறது. தமிழ்நாட்டில் ஏற்றுமதியை அதிகரிப்பதற்குரிய வாய்ப்புகள் பற்றிய ஆய்வு குறித்து அயல்நாட்டு வாணிபம் குறித்த இந்திய நிறுவனத்தின் அறிக்கையை அரசு முனைந்து பரிசீலித்து வருகிறது.

விரைவான தொழில் வளர்ச்சியின் மூலம் வேலை வாய்ப்புக்களை உயர்த்தவும் தேசிய மொத்த உற்பத்தியளவை விரைந்து பெருக்குவதற்கு வகை செய்யவும் இந்திய அரசின் தொழில் உரிமங்கள் வழங்கும்





கொள்கை அண்மையில் மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. ஏற்றுமதியை நோக்கமாகக்கொண்ட தொழிற்சாலைகளுக்கு உரிமம் வழங்குதல், மற்றும் அதே சமயத்தில், உற்பத்தியைப் பெருக்குவதற்கான பொருளாதார வசதியும் கட்டுப்பாடும் ஒருசில வணிகர்களின் கைகளில் குவிவதைத் தடுப்பதற்குத் தேவையான தொழில் வாய்ப்புகளைப் பரவலாக ஏற்படுத்துவதுமே தாராளமாய் உரிமம் வழங்கும் இக்கொள்கையின் முக்கிய நோக்கங்களாகும். உள்நாட்டுத் திறன் மற்றும் செயல் வல்லமையை முழு அளவிற்கும் பயன்படுத்திக்கொண்டு, அதே சமயத்தில், எங்கே ஏகபோக உரிமை அல்லது ஓரளவு ஏகபோக உரிமை ஏற்பட்டுள்ளதோ அல்லது ஏற்படவிருக்கிறதோ அங்கே பல்வேறு பொருள்களைத் தயாரிப்பதிலும் பல்வேறு பணிகளை உருவாக்குவதிலும் அதிக போட்டியை உண்டு பண்ணவும் தாராளமாய் உரிமங்கள் வழங்கவும் இக்கொள்கை கருதுகிறது. எனினும், இந்திய அரசால் பின்பற்றப்பட்டுவரும் தொழில் உரிமம் வழங்கும் கொள்கை, தொழில் மயமாக்குதலை விரைவுபடுத்துவதில் மாநிலங்களுக்கு பெருமளவு உதவியாக இல்லை. உரிமம் வழங்குவதற்கான புதிய கொள்கை ரூ. 1 கோடி வரை மூலதன முதலீடு உள்ள தொழிற்சாலைகளுக்கு விதிவிலக்கு அளிக்கக் கருதுகிறது. என்றாலும், இப்பொழுது உரிமங்கள் வழங்குவதில் பின்பற்றப்படும் நடைமுறை அதிகக் கால தாமதமாவதோடு, மத்திய அரசிடம் இதுகுறித்து அளவுக்கு மீறிய அதிகாரம் குவிந்திருக்கும் ஓர் அமைப்பினால் பாதிக்கப்படுகிறது என்று கூறினால் அது மிகையாகாது.

## மத்திய அரசுத் துறை.

தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சியில் பொதுத்துறை நிறுவனங்கள் முக்கியப் பங்காற்றி வருகின்றன. இம்மாநிலத்தில் பல்வேறு பொதுத் துறைத் திட்டங்களில் மத்திய அரசு செய்துள்ள முதலீடு இம்மாநிலத்தின் விரைவான தொழில் வளர்ச்சிக்கு மிகப் பெருமளவில் உதவி புரிந்துள்ளது. நீண்ட காலமாக ஆவலுடன் எதிர்பார்த்து வந்த சேலம் உருக்கு ஆலை இந்தியத் தலைமை அமைச்சரால் 16—9—1970 அன்று தொடங்கி வைக்கப்பட்டதை இங்கு குறிப்பிடுவது சாலப் பொருத்தமாகும். இத்திட்டத்திற்கான மூலதன முதலீடு ரூ. 100 கோடியாகும். கஞ்சமலைப் பகுதியில் இதற்காக நிலங்கள் கையகப்படுத்தப்பட்டு வருகின்றன. இவ்வாலையை அமைப்பதற்கான தொடக்க ஏற்பாடுகள் அனைத்தும் செய்யப்பட்டு வருகின்றன.

இம்மாநிலத்தில் பல்வேறு பொதுத்துறைத் திட்டங்களில் மத்திய அரசு ரூ. 377 கோடிக்கு மேற்பட்ட தொகையை முதலீடு செய்துள்ளது. இவற்றின் வாயிலாக ஆண்டொன்றுக்குக் கிட்டத்தட்ட ரூ. 90 கோடி அளவிற்கு (தற்காலிகமானது) பொருள்கள் உற்பத்தியாகின்றன. இம்மாநிலத்தில் பல்வேறு தொழில் துறைத் திட்டங்களில் இந்திய அரசு இதுவரை செய்து வந்துள்ள முதலீடு காரணமாக இம்மாநிலத்தின் தொழில் வளர்ச்சி விரைந்து பெருகியுள்ளது. இதைக் கீழ்க்காணும் விவர அறிக்கைத் தெள்ளத் தெளியக் காட்டுகிறது.

| வரிசை எண்ணும் நிறுவனத்தின் பெயரும். | அமைக்கப் பட்ட ஆண்டு. | மூலதன முதலீடு. | தயாரிக்கப்படும் பொருள்கள். ஆண்டொன்றுக்கு உற்பத்தி திறனளவு. | உற்பத்தி. | மதிப்பு. | வேலையளிக் கப்படுபவர் களின் எண்ணிக்கை. |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| | | (ரூபாய் லட்சத்தில்.) | | | (ரூபாய் லட்சத்தில்.) | |
| 1 நெய்வேலி பழுப்பு நிலக் கரி கூட்டு நிறுவனம், நெய்வேலி. | 1962 | 17,122·37 | பழுப்பு நிலக்கரி—6,000,000 டன்கள். | 24,178,000 டன்கள். | 675·82 | 17,537 |
| | | | 46 சதவீதம் நைட்ர ஜன் அடங்கிய யூரியா உரம் — 152,000 டன்கள். | 48,208 டன்கள் .. | 604·12 | .. |
| | | | சுட்ட அச்சுக்கரி—327,000 டன்கள். | 53,420 டன்கள்+ (10மி.மி. லீகோ). | 330·91 சுட்ட அச்சுக் கரியுடன் ரூ. 52·03 லட்சம் மதிப் புள்ள துணைப்பொருட் கள் அச்சுக் கரி தயாரிப் புத் தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்பட்டது. | |
| | | | தார்—49,100 டன், நியூட்ரல் எண ணெய்—48,200 டன், கிலெண்ணெய் வடிப்பு அமிலம்—1,470 டன், பாலி வேலண்ட் பினைல்—480 டன், ஆர்த் தோகிரீசால்—200 டன். | | | |
| | | | மெட்டா பாராகிரீசால்—990 டன், ஸைலி னல்ஸ்—220 டன், வெள்ளைக் களிமண்—6,000 டன். | | | |
| 2 இணைப்பு ரயில் பெட்டித் தொழிற்சாலை, சென்னை. | 1955 | 2506·00 | 640 பெட்டிகள் (700 பெட்டிகள் அகலப் பாதை மூன்றும் வகுப்பு யூனிட்டு களில்). | வசதி செய்து முடிக் கப் பெறாத பெட்டி கள் 649. வசதி செய்து முடிக்கப்பட்ட பெட்டிகள் 668. (1969-70) | 1522·00 | 11,500 |
| 3 அறுவை சிகிச்சைக் கருவிகள் தயாரிப்பு தொழிற்சாலை, நந்தம்பாக்கம். | 1965 | 468·00 | அறுவை சிகிச்சைக் கருவிகள்—2·5 மில்லியன் கருவிகள். | 3,05,119 கருவிகள் .. | 32·15 | 1,013 |

| வரிசை எண்ணும் நிறுவனத்தின் பெயரும். (1) | அமைக்கப் பட்ட ஆண்டு. (2) | மூலதன முதலீடு. (3) (ரூபாய் லட்சத்தில்.) | தயாரிக்கப்படும் பொருள்கள்: ஆண்டொன்றுக்கு உற்பத்தித் திறனளவு. (4) | தயாரிக்கப்படும் பொருள்கள்: உற்பத்தி. (5) | மதிப்பு. (6) (ரூபாய் லட்சத்தில்.) | வேலையளிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை. (7) |
|---|---|---|---|---|---|---|
| 4 இந்துஸ்தான் டெலி பிரிண்டர்ஸ் நிறுவனம் கிண்டி, சென்னை-32. | 1964 | 432·83 | டெலிபிரிண்டர்களும் அவற்றுடன் இணைந்த கருவிகளும்—8,500 யூனிட்டுகள் டெலி பிரிண்டர்கள். | 5,325 யூனிட்டுகள் .. | 293·45 | 1,243 |
| 5 இந்துஸ்தான் புகைப் படச் சுருள் தயாரிப்பு நிறுவனம், உதகமண்டலம். | 1967 | 1296·67 | திரைப்படச் சுருள் பாசிடிவ் (வண்ணம் அல்லாதது) 24,50,000 சதுரமீட்டர். | 8,12,669 சதுரமீட்டர். | 113·34 | 1,861 |
| | | | திரைப்பட ஒலிப்படம்—3,00,000 சதுரமீட்டர். | 16,379 சதுரமீட்டர் .. | 2·95 | |
| | | | திரைப்படச் சுருள் நெகடிவ்—2,50,000 சதுரமீட்டர். | | | |
| | | | மருத்துவ "எக்ஸ்" கதிர் ,சுருள்—10,00,000 சதுரமீட்டர். | 1,77,966 சதுரமீட்டர். | 66·51 | |
| | | | உருவப்படமெடுக்கும் சுருள்—50,000 சதுர மீட்டர். | 702 சதுரமீட்டர் .. | 0·26 | |
| | | | அச்சுருவப்படம்—50,000 சதுரமீட்டர். | 277 சதுரமீட்டர் .. | 0·13 | |
| | | | சுருள் பிலிம்ஸ்—5,40,000 சதுரமீட்டர். | 248 மீட்டர் .. .. | 0·14 | |
| | | | எரியல் படச்சுருள்—10,000 சதுரமீட்டர். | 7,79,885 சதுரமீட்டர் .. | 94·96 | |
| | | | புகைப்படத்தாள்—15,00,000 சதுர மீட்டர். | | | |
| | | | 35 மி.மீ. நெகட்டிவ் படச்சுருள்—1,00,000 சதுரமீட்டர். | | 10·09 | |
| 6 உயர் அழுத்தக் கொதி கலன் தொழிற்சாலை, திருவெறும்பூர், திருச்சிராப்பள்ளி. | 1965 | 2,570 | அனல்மின் நிலையங்களுக்கான உயர் அழுத்தக் கொதி கலன்கள்—750 மெகா வாட் உற்பத்தித்திறன் கொண்டது. | கொதிகலனும துணைக் கருவிகளும்—20,516 டன்கள். | 1962·00 | 6,653 |

| வரிசை எண்ணும் நிறுவனத்தின் பெயரும். | அமைக்கப் பட்ட ஆண்டு. | மூலதன முதலீடு. | தயாரிக்கப்படும் பொருட்கள். ஆண்டொன்றுக்கு உற்பத்தித் திறனளவு. | உற்பத்தி. | மதிப்பு. | வேலையளிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை. |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) (ரூபாய் லட்சத்தில்.) | (4) | (5) | (6) (ரூபாய் லட்சத்தில்.) | (7) |
| | | | வால்வுகளும் பொருத்துக் கருவிகளும்—2,500 டன் அழுத்த வால்வுகள்— 1,100 டன் பேக்கேஜ் கொதிகலன்கள்—10 | வால்வுகள் 598 .. | 169·50 | |
| 7 சென்னை, எண்ணெய்த் தூய்மைப்படுத்தும் தொழிற்சாலை, மணலி, சென்னை. | 1969 | 4,479·00 | பெட்ரோலிய திரவ வாயு. | 5,090 டன் .. .. | 3,345·77 | |
| | | | மோட்டார் எண்ணெய். | 103,830 டன் .. | | |
| | | | பாரை எண்ணெய். | 183,540 டன் .. | | |
| | | | விமான டர்பைன் எரிபொருள். | 68,710 டன் .. | | |
| | | | உயர்ந்த மண்ணெண்ணெய். | 369,420 டன் .. | | |
| | | | கடுவேக டீசல் எண்ணெய். | 319,930 டன் .. | | |
| | | | உயவு எண்ணெய் .. | 127,220 டன் .. | | |
| | | | உலை எண்ணெய் .. | 552,460 டன் .. | | |
| | | | தார் .. .. | 99,780 டன் .. .. | | |
| | | | கந்தகம் .. .. | 910 டன் .. .. | | |
| | | | அடர்த்தி குறைவான டீசல் எண்ணெய் (ஆண்டொன்றுக்கு 2·5 மில்லியன் டன். | 40,560 டன் .. .. | | |
| | | | தூய்மைப்படுத்தப் படாத எண்ணெய் (2·5 மில்லியன் டன்கள்). | 966,880 மில்லியன் டன்கள் | 2,182·7 | 496 |
| 8 சென்னை உரத்தொழிற்சாலை, சென்னை. | | 6,465 (தோராயமாக) | திரவ அமோனியா கலப்பு உரம்—36,500 டன் (யூரியா உரமாக மாற்றப் படாமை). | | | |
| | | | யூரியா உரம்—200,000 டன்கள். | கட்டப்பட்டு வருகிறது. | | 650 (தோராயமாக) |
| | | | நைட்ரஜன், பாஸ்பரஸ், பொட்டாஷ் உரக் கலவை—3,62,700 டன்கள். | | | |
| 9 கனரக வண்டிகள் தொழிற்சாலை, ஆவடி, சென்னை. | 1965 | 1,727·00 | நடுத்தர டாங்குகள் .. | தயாரிக்கப்பட்டு வருகின்றன. | 1,600 (1968-69) | 4,879 |

| வரிசை எண்ணும் நிறுவனத்தின் பெயரும். | அமைக்கப் பட்ட ஆண்டு. | மூலதன முதலீடு. | தயாரிக்கப்படும் பொருட்கள். ஆண்டொன்றுக்கு உற்பத்தித் திறனளவு. | தயாரிக்கப்படும் பொருட்கள். உற்பத்தி. | மதிப்பு. | வேலையளிக் கப்படுபவர் களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) (ரூபாய் லட்சத்தில்.) | (4) | (5) | (6) (ரூபாய் லட்சத்தில்.) | (7) |
| 10 படைக்கலன் தொழிற் சாலை, திருச்சிராப்பள்ளி | 1966 | 1,450·00 (தோராயமாக) | | தயாரிக்கப்பட்டு வருகின்றன. | | 1,500 (தோராயமாக) |
| 11 இந்திய எண்ணெய்க் கூட்டு நிறுவனம், தண்டையார்பேட்டை, சென்னை. | 197 | 178·00 | மோட்டார் இரசாயன எண்ணெய் கலவை —140,000 டன். | 44,800 (K.L.) at 15C | .. | 80 |
| | | | 24 கிராம் எடையுள்ள பீப்பாய்கள்—500,000 (எண்ணிக்கை). | | | |
| | | | 18 கிராம் எடையுள்ள பிற சிறப்புப் பீப்பாய்கள்—1,000,000 (எண்ணிக்கை). | | | |



1971 ஜூன் 30]

மத்தியத் துறைத் திட்டங்களைப் பொறுத்தவரையில் நடப்பாண்டில் பின்வருமாறு முன்னேற்றம் எய்தப்பட்டுள்ளது :—

### 1. நெய்வேலி பழுப்பு நிலக்கரி கூட்டு நிறுவனம்.

(மூலதன முதலீடு ரூ. 171·22 கோடி.)

மூலதன முதலீடு ரூ. 171·22 கோடியுடன் சுமார் 17,537 பேர்களுக்கு வேலைவாய்ப்பளிக்கின்ற நெய்வேலி பழுப்பு நிலக்கரித் திட்டம் இம்மாநிலத்திலுள்ள பொதுத்துறைத் திட்டங்களில் மிக இன்றியமையாதது. இத் திட்டத்தில் நான்கு பெரும் திட்டங்கள் அடங்கியுள்ளன. அவையாவன : சுரங்கப்பணி, மின்உற்பத்தி, உர உற்பத்தித் தொழிற்சாலை, சுட்ட அச்சுக்கரித்தொழில் பிரிவு. முதல் நிலையில் ஆண்டொன்றுக்கு 3·5 மில்லியன் டன் பழுப்பு நிலக்கரிதான் வெட்டியெடுக்கப்பட்டு வந்தது. பின்னர் இது ஆண்டொன்றுக்கு சுமார் 6 மில்லியன் டன் அளவுக்கு உயர்த்தப்பட்டுள்ளது. இந்தப் பழுப்பு நிலக்கரி பின்வருவனவற்றிற்காகப் பயன்படுத்தப்படும் :—

(i) மின் உற்பத்தி (தற்போது மின் உற்பத்தி செய்யப்படும் திறனளவு 600 மெகா வாட்டாகும்).

(ii) ஆண்டொன்றுக்கு 152,000 டன் அளவுக்கு 46 சதவீதம் நைட்ரஜன் அடங்கிய யூரியா உற்பத்தி செய்தல்.

(iii) வீட்டுக்காரியங்களுக்காகவும், சிறு தொழில்களுக்காகவும் ஆண்டொன்றுக்கு 327,000 டன் சுட்ட அச்சுக்கரி தயாரிப்பதோடு, சார்பைன்ஸ் (charfines), தார், எரி எண்ணெய், கார்பாலிக் அமிலம், பாலி வேலண்ட் பினைல், ஆர்தோ கிரிசால், மெட்டா, பாராகிரிசால் க்செலினல் (Xylenol) முதலியனவையும் தயாரித்தல்.

சுரங்கத்திலிருந்து கிடைக்கும் வெள்ளைக் களி மண்ணிலிருந்து ஆண்டொன்றுக்கு 6,000 டன் சுத்தம் செய்த களிமண் (நெகோலின்) தயாரிப்பதற்கு இத்திட்டம் வகை செய்கிறது.

இக்கால அளவில், மேற்படி திட்டங்கள் அனைத்தும் உற்பத்தியைத் தொடங்கிவிட்டன. அனல் மின் நிலையத்தின் ஒன்பதாவது பிரிவு (மூன்றுவது 100 மெகாவாட் பிரிவு) 1970 செப்டம்பரில் செயல்படத் தொடங்கியது. இத்துடன் இந்நிலையத்தின் உற்பத்தித் திறன் 600 மெகாவாட்டினை எட்டியது. இனி நிறைவேற்றி முடிக்க வேண்டிய திட்டமோ அல்லது விரிவாக்கப்பணியோ அல்லது உற்பத்தியைப் பல வழிகளில் திருப்பிவிடும் திட்டங்கள் எவையும் தற்போது இல்லை.

### 2. இணைப்பு ரயில்பெட்டித் தொழிற்சாலை.

(மூலதன முதலீடு ரூ. 25·06 கோடி.)

இத்தொழிற்சாலை 1955-இல் அமைக்கப்பட்டது. 1969–70-ம் ஆண்டில் இத்தொழிற்சாலையில் வசதிசெய்து முடிக்கப்பெறாத 649 பெட்டிகளும் வசதி செய்து முடிக்கப்பட்ட 668 பெட்டிகளும் தயாரிக்கப்பட்டுள்ளன. இக்கால அளவில் உற்பத்திசெய்யப்பட்ட பெட்டிகளின் மொத்த மதிப்பு ரூ. 15·22 லட்சமாகும். 1972-73-ஆம் ஆண்டு

நிதி ஆண்டு முதற்கொண்டு படிப்படியான முறையில் 750 பெட்டிகள் அளவுக்கு உற்பத்தியை அதிகரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. ஏற்றுமதியைப் பொறுத்தவரையில் 1970-71-ம் ஆண்டில் தைவான் நாட்டின் ரயில்வே நிர்வாகத்தினரிடமிருந்து 3 அடி—6 அடி பாதை ரயில்பெட்டிகள் 100-ம், தாய்லாந்து நாட்டின் ராயல் ஸ்டேட் ரயில்வேயிடமிருந்து 45 மீட்டர்கேஜ் பெட்டிகளும், வழங்கும்படி இரண்டு கேட்பு ஆணைகள் வந்தன. அவற்றின்படி பெட்டிகள் தயாரிக்கப்பட்டு தைவான் நாட்டிற்கு அனுப்பப்பட்டு விட்டன. இதன் மூலம் இத்தொழிற்சாலையின் முன்னேற்றத்தில் இது ஒரு முக்கிய மைல் கல்லாகும். இந்த இரு ஆணைகளின் மதிப்பு ரூ. 32 லட்சமாகும். மேலும், தைவான் நாட்டு ரயில்வே நிர்வாகத்திடமிருந்து ரூ. 3·8 கோடி மதிப்புடைய வசதிகள் அனைத்தும் நிறைந்த 113 பயணிகள் ரயில் பெட்டிகளுக்குக் கேட்பு ஆணை ஒன்று இத்தொழிற்சாலைக்குக் கிடைத்துள்ளது. அர்ஜெண்டினா நாட்டு ரயில்வே ரூ. 36 லட்சம் செலவில் 120 மீட்டர்கேஜ் ரயில்பெட்டிகளுக்குக் கேட்பு ஆணை ஒன்றைக் கொடுக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இத்தொழிற்சாலை கிட்டத்தட்ட 11,500 தொழிலாளர்களுக்கு வேலையளித்து வருகிறது.

### 3. அறுவை சிகிச்சைக் கருவிகள் தொழிற்சாலை.

(மூலதன முதலீடு ரூ. 4·68 கோடி.)

இந்திய மருந்துகள், மருந்துத் தயாரிப்பாளர்கள் நிறுவனம் ரஷ்ய நாட்டு உடனுழைப்புடன் இத்தொழிற்சாலையை நிறுவியுள்ளது. இத்தொழிற்சாலை 1,013 பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கிறது. 1970-இல் ரூ. 32·15 லட்சம் மதிப்புள்ள சிகிச்சைக் கருவிகளை இத்தொழிற்சாலை தயாரித்துள்ளது. தற்போது, கையிருப்பிலுள்ள தேவை ஆணைகளையொட்டியே உற்பத்தி செய்யப்படுகிறது. உற்பத்தித் திறனளவைப் பயன்படுத்த பெருமளவில் தேவை ஆணைகள் மேற்கொள்ளப்படுகின்றன. பிரிக்கக்கூடிய ஸ்கால்பெல், சிறு கத்திகள், கைப்பிடிகள் தயாரிப்பதற்கான ஒரு திட்டம் பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது.

### 4. இந்துஸ்தான் டெலிபிரிண்டர் நிறுவனம்.

(மூலதன முதலீடு ரூ. 4·33 கோடி.)

இந்திய அரசுக்கு முற்றிலும் சொந்தமான இந்நிறுவனம் 5,500 யூனிட் டெலிபிரிண்டர்களை உற்பத்தி செய்யும் திறனுள்ள தொழிற்சாலையைக் கொண்டுள்ளது. இந்த நிறுவனம் ரூ. 293·45 லட்சம் மதிப்புடைய 5,325 யூனிட் இயந்திரங்களை உற்பத்தி செய்துள்ளது. இத்தொழிற்சாலையை விரிவுபடுத்தும் திட்டம் 1964-ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டது. இதன்மூலம் 1970–71-இல் ஒரு முறை மாற்று வேலையில் 5,400 யூனிட் டெலிபிரிண்டர்களைத் தயாரிக்க வகை செய்யப்பட்டுள்ளது. விரிவுபடுத்தும் திட்டம் முடியும் தருவாயிலுள்ளது. பலதரப்பட்ட கருவிகள், மின்சாரத் தட்டெழுத்துப் பொறிகள், கணக்கிடும் மின் அணு இயந்திரங்கள் ஆகியவற்றைத் தயாரிக்க இந்த நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

### 5. இந்துஸ்தான் புகைப்படச் சுருள் தயாரிப்பு நிறுவனம், உதகமண்டலம்.

(மூலதன முதலீடு ரூ. 12·96 கோடி.)

இந்துஸ்தான் புகைப்படச் சுருள் தயாரிப்பு நிறுவனம் 1967 ஜனவரியில் தொடங்கி வைக்கப்பட்டது. இதன் முதலாவது பெரிய தயாரிப்புப் பொருளான திரைப்படங்களுக்குரிய நிழற்பட நேர்படிகள் தயாரிக்கும் இலக்கை இவ்வாண்டின் இறுதிக்குள் எய்திவிடும். நிழற்படமெடுக்கத் தேவைப்படும் தாள் விற்பனைக்கு உற்பத்திச் செய்யும் பிரிவு





அடுத்து நிறுவப்பட்டது. இத்துடன் மருத்துவத்திற்குத் தேவைப்படும் எக்ஸ் கதிர் சுருள்கள் உற்பத்தி செய்வதும் முதலாண்டு உற்பத்தியின் போதே மேற்கொள்ளப்பட்டது. இத்தொழிற்சாலையில், கச்சாப் பொருள்களைக்கொண்டு இச்சுருள் முற்றிலும் தயாரிக்கப்பட்டு வருகிறது. தற்போதைய உற்பத்திப் பொருள்களின் பட்டியலில் திரைப்படங்களுக்கான நிழற்பட நேர்படிகள், மருத்துவத்திற்கான எக்ஸ் கதிர் சுருள், நிழற்படமெடுக்கத் தேவைப்படும் தாள், திரைப்பட ஒலி, 35 மி. மீட்டர் நெகடிவ் படச்சுருள் ஆகியவை அடங்கும். 1968-இல் ஏற்பட்ட உடனுழைப்பு ஒப்பந்தம் முடிவானதும், உற்பத்திப் பணிகள் அனைத்தும் தற்போது இந்தியர்களாலேயே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இறக்குமதி செய்யும் தேவையை நிறுத்திவிடுவது குறித்து இது அடைந்துள்ள வெற்றி இத்தொழிற்சாலையின் பெரும் சாதனைகளில் ஒன்றாகும். சில்வர் நைட்ரேட் தயாரிப்புத் தொழிற்சாலை ( Silver Nitrate Plant ) போன்ற துணைப் பொருள்கள் தயாரிப்புப் பிரிவை இந்நிறுவனமே நிறுவியுள்ளது. இதனை வழங்குவதைப் பொறுத்த வரையில் இத்தொழிற்சாலை பொறுப்பு ஏற்கிறது. இத்தொழிற்சாலையிலுள்ள கரிம இணைப்புப் பிரிவு (Organic Synthesis Unit) இத் தொழிற்சாலைக்கு தேவைப்படும் உற்பத்தி இரசாயன கலவைகள் பலவற்றை உற்பத்தி செய்கிறது "மெத்திலீன் குளோரைடு", "மெத்தனால்", "செல்லுலோஸ்", "ட்ரை அசிடேட்" முதலியன போன்ற மூலப் பொருள்கள் பலவற்றைப் பொறுத்த வரையில், உள்நாட்டில் அவை கிடைக்குமிடங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. இதுபோன்ற பொருள்களின் இறக்குமதியை நிறுத்துவது குறித்து இதுவரை 77 சதவீதம் அளவிற்கு மொத்தத்தில் வெற்றி கிட்டியுள்ளது. 1973–74-இல் 99 சதவீத அளவிற்கு இத்துறையில், வெற்றி கிட்டுமென எதிர்பார்க்கப்படுகிறது.

புகைப்படத்தாள் உற்பத்தியில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இதன் மாதாந்திர உற்பத்தியளவு இப்பிரிவின் உற்பத்தித் திறனளவுக்குக் கிட்டத்தட்ட சமமாகவுள்ளது. புதிய உற்பத்திப் பொருளாகிய உருவப்படமெடுக்கும் சுருள் தயாரிப்பது மேற்கொள்ளப்பட்டுள்ளது. வேறு இரண்டு பொருட்களைப் பொறுத்த வரையில் மேம்பாட்டுப்பணி முன்னேற்ற நிலையை அடைந்துள்ளது. ஏற்றுமதியைப் பொறுத்த வரையில், கடுமையான போட்டி இருந்தும், இத்தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்படும் திரைப்பட நிழற்பட நேர்படிகள் சிறிதளவினை ஏற்றுமதி செய்வதிலும் இந்நிறுவனம் வெற்றியடைந்திருக்கிறது. உண்மையில் திரைப்பட நிழற்பட நேர்படிகளுக்கு இலங்கை நாட்டிலிருந்து அடுத்தடுத்து இடைக்கால அளவில் கேட்பு ஆணைகள் பெறப்படுகின்றன. ஊட்டியிலுள்ள இத்தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்படும் கச்சா படச் சுருள்களை வழங்குமாறு கோரி மீண்டும் மீண்டும் தேவைக் குறிப்பு ஆணைகள் பெறப்படுகின்றன. எனவே, உலகப் புகழ் பெற்ற கம்பெனிகள் தயாரிக்கும் கச்சா படச் சுருள்களின் தரங்களுக்கு நிகராக இவை உள்ளன என்பது புலனாகும்.

இந்துஸ்தான் புகைப்படச் சுருள் தயாரிப்பு நிறுவனமும் உலகப்புகழ் பெற்ற புகைப்படச் சுருள் தயாரிப்பாளர்களாகிய ஈஸ்ட்மேன் கோடக் நிறுவனமும் கூட்டாகச் சேர்ந்து மேற்கொள்ளவிருக்கிற இந்நிறுவன விரிவாக்கத் திட்டங்கள் குறித்து ஆய்வு ஒன்றைத் தொடங்க இந்திய அரசு அண்மையில் அதிகாரமளித்துள்ளது. வண்ணப்படச் சுருள் தயாரிப்பது மட்டுமல்லாது, தற்போதைய உற்பத்திப் பிரிவுகளை, குறிப்பாக எக்ஸ் கதிர் சுருள், வேறு நுட்பமான படச் சுருள்கள் தயாரிப்புப் பிரிவை விரிவுபடுத்துவது குறித்தும் ஆய்வு செய்யக் கருதப்பட்டுள்ளது. சாத்தியக்கூற்று ஆய்வு தொடங்கப்பட்டுள்ளது. இது குறித்த அறிக்கை 1971 இறுதிக்குள் தயாராகுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

[1971 ஜூன் 30

6. உயர் அழுத்தக் கொதிகலன் தொழிற்சாலை.

(மூலதன முதலீடு ரூ. 25·70 கோடி.)

இத்தொழிற்சாலை பாரத கனரக மின் கருவிகள் நிறுவனத்தின் நான்கு தொழிற் பிரிவுகளில் ஒன்றாகும். இது இந்திய அரசின் நிறுவன மாகும். அனல் மின் நிலையத்திற்கான உயரழுத்தக் கொதிகலன் களையும் தொழிற்சாலைப் பயனுக்கான கொதிகலன்களையும் உயரழுத்த வால்வுகளையும் தயாரிப்பதற்காக இது நிறுவப்பட்டுள்ளது. கட்டுமானப் பணி அனைத்தும் முடிவடைந்துள்ளதோடு தொழிற்சாலை முழு அளவில் உற்பத்தியைத் தொடங்கியுள்ளது. 1970-ஆம் ஆண்டில், ரூ. 2,131·5 லட்சம் மதிப்புள்ள கொதிகலன்கள், துணைக் கருவிகள், வால்வுகள் முதலியவை இங்கு உற்பத்தி செய்யப்பட்டன.

7. சென்னை எண்ணெய்த் தூய்மைப்படுத்தும் தொழிற்சாலை.

(மூலதன முதலீடு ரூ. 44·79 கோடி.)

பெட்ரோலிய திரவ வாயு, மோட்டார் எண்ணெய், பாறை எண்ணெய் விமான டர்பைன் எரிபொருள், உயர்தர மண்ணெண்ணெய், கடுவேக டீசல் எண்ணெய், குறைந்த அடர்த்தியுள்ள டீசல் எண்ணெய், எரி எண்ணெய், லூப் அடிப்படையிலான பொருள்கள் தார், கந்தகம் ஆகியவற்றைத் தயாரிக்க சென்னை எண்ணெய்த் தூய்மைப்படுத்தும் தொழிற்சாலை அமைக்கப்பட்டுள்ளது. இத்தொழிற்சாலையில் 1,871,450 டன் அளவுக்கு மேற்படி பொருள்கள் உற்பத்தி செய்யப்பட்டன. இவற்றின் மதிப்பு ரூ. 3,345·77 லட்சமாகும். 966,800 டன் தூய்மைப்படுத் தாத எண்ணெயும், இங்கு உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இதன் மதிப்பு ரூ. 218, 270,000 ஆகும்.

8. சென்னை உரத்தொழிற்சாலை.

சென்னை உரத்தொழிற்சாலை நிறுவனம், மணலியில் எண்ணெய்த் தூய்மைப்படுத்தும் தொழிற்சாலைக்கு அருகில் ரூ. 64·65 கோடி செலவில் பெரிய உரத் தொழிற்சாலை ஒன்றை அமைத்து வருகிறது. யூரியா, அமோனியா, உரக்கலவைகள் ஆகியவற்றை உற்பத்தி செய்யவே இது நிறுவப்பட்டுள்ளது. இத்தொழிற்சாலை ஆண்டொன்றுக்கு 36,500 மிலியன் டன் (யூரியா உரமாகப் மாற்றப்படாத) திரவ அமோனியாவையும் 200,000 மிலியன் டன் யூரியா உரத்தையும், 362,700 மிலியன் டன் நைட்ரஜன் பாஸ்பரஸ்-பொட்டாஷ் உரக் கலவையையும் உற்பத்தி செய்யும் திறனுடைய தாகும். தொழிற்சாலைப் பிரிவுகள் கட்டப்பட்டு வருகின்றன. சாதனங் கள் நிறுவுதலும் மின்சாரப் பொறிகளை நிறுவுதலும் முடியும் தறுவாயில் உள்ளன.

நாட்டுப் பாதுகாப்புத் தொழில்கள்.

**கனரக வண்டிகள் தொழிற்சாலை, ஆவடி.**—ஆவடியிலுள்ள கனரக வண்டிகள் தொழிற்சாலை, டாங்கிகளுக்குத் தேவையான பெரிய பகுதிகள் அனைத்தையும் தயாரிப்பதற்கான ஒருங்கிணைப்புப் பிரிவாக நிறுவப்பட்டுள்ளது. இதில் இயந்திரத் துணைக் கருவிப்பெட்டி, நிறுத்தப் பிரிவுகள் ஆகியவை அடங்கும். பிரிவுகள் அனைத்தும் உற்பத்தியைத் தொடங்கியுள்ளன. இத்தொழிற்சாலையில் 4,879 பேர் களுக்கு வேலை அளிக்கப்படுகிறது.

படைக்கலத் தொழிற்சாலை, திருச்சிராப்பள்ளி.

இத்தொழிற்சாலையின் மூலதன முதலீடு தோராயமாக ரூ. 14·5 கோடியாகும். இங்கு சுமார் 1,500 பேர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப் படுகிறது. காலக்கிரமத்தில் இத்தொழிற்சாலை முழு அளவில் செயல்படத் தொடங்கும்போது இங்கு தோராயமாக 3,500 பேர்களுக்கு வேலை வாய்ப்பு கிட்டும்.



1971 ஜூன் 30]

மாநில அரசுத் துறை.

நூல், சர்க்கரை, சிமிட்டி, செங்கல் போன்ற இன்றியமையாப் பொருள் கள் சிலவற்றைப் பொறுத்த வரையில், நேரடியாகவோ அல்லது தனது தொழில் வளர்ச்சிக் கழகத்தின் மூலமாகவோ அல்லது கூட்டுறவுச் சங்கங்கள் வாயிலாகவோ உற்பத்திப் பிரிவுகளை அமைப்பதில் தமிழ்நாடு அரசு குறிப்பிடத்தக்க பங்கினை ஆற்றி வருகின்றது.

1. தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம்.

இம்மாநிலத்தில் பெருந் தொழில்களை ஏற்படுத்தி அவற்றை மேம் படுத்துவதற்காக அமைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் கடந்த ஆய்வுரை ஆண்டில் தொடர்ந்து தனது மேம்பாட்டு முயற்சிகளை மேற்கொண்டது.

தனியார் துறையில் தொடங்கப்படும் புதிய தொழில்கள் மற்றும் மரபு வழியில் வராத தொழில்களுக்கு மட்டும் இது கடன் வழங்கு நிறு வனமாக இருந்து வருகின்றது.

தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் பல்வேறு தொழிற்சாலைகளை அமைப்பதற்கான வாய்ப்புகளைக் கண்டறிந்ததோடு அது குறித்து சாத்தியக் கூறு அறிக்கைகளைப் பெறவும் ஏற்பாடு செய்தது. பின்வரும் தொழிற் சாலைகளை அமைக்க 1970–71-இல் அனுமதிக் கடிதங்கள் இக்கழகத்திடம் கொடுக்கப்பட்டுள்ளதோடு, தகுந்த தனியார் தொழில் முனைவர்களுடன் "கூட்டுத்துறையில்" இத்திட்டங்களை மேற்கொள்ள ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளன:—

1. சோடியம் ஹைட்ரோசல்பைட் தொழிற்சாலை.
2. மோட்டார் வண்டி டயர்கள்-டியூப்புகள் தொழிற்சாலை.
3. உவர்க்காரம்-அமோனியம் குளோரைடு தொழிற்சாலை.

இவை தவிர, சுண்ணாம்புக்கற்கள் குறைவாகக் கிடைக்கக்கூடிய பகுதி களில் சிறிய அளவு சிமிட்டி தயாரிப்பவர்களின் தேவைக்கேற்றவாறு சொற்ப உற்பத்தித் திறனுள்ள செங்குத்து வடிவிலான சூளையைக் கொண்ட முன்னோடி சிமிட்டித் தொழிற்சாலை ஒன்றை இக்கழகம் வடிவ மைத்துள்ளது. இந்த வடிவமைப்பிற்கான சிறப்புரிமைகளை இக்கழகம் பெற்றுள்ளது. சேலம் உருக்கு ஆலை தொடர்பான தொடக்கப்பணியும் தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இக்கழகம் மேற்கொண்டுள்ள பின்வரும் தொழிற்சாலைகளில் அடைந் துள்ள முன்னேற்றம் பற்றிய விவரங்கள் கீழே சுருக்கமாகக் கொடுக்கப் பட்டுள்ளன:—

1. தமிழ்நாடு சிமிட்டித் தொற்சாலை, ஆலங்குளம்.
2. உருக்குத் தொடர் வார்ப்படசாலை, அரக்கோணம்.
3. முன்னோடி சிமிட்டித் தொழிற்சாலை, முதுவாத்தூர்.
4. நெய்வேலி—சேலம் உருக்கு ஆலை, சேலம்.

**1. தமிழ்நாடு சிமிட்டித் தொழிற்சாலை, ஆலங்குளம்.**—இப்பிரிவின் உற்பத்தித் திறனளவு அதாவது 600 டன் உற்பத்தித் திறனளவு கொண்ட இரண்டு சூளைகளில் நாள் ஒன்றுக்கு 1,200 டன் சிமிட்டி உற்பத்தி செய்யப் படுகிறது. இத்தொழிற்சாலை அமைக்கும் பணி முடிக்கப்பட்டுவிட்டதோடு, முதற் சூளை 1970-ம் வருடம் பிப்ரவரி மாதம் 5-ஆம் தேதி அன்று தொடங்கிவைக்கப்பட்டது. இது செயல்படுவதையும் உற்பத்தி செய்யப்பட்ட சிமிட்டியின் தரத்தைப் பார்த்த பின்னரும், இத்தொழிற்சாலை மரபியல் முறையில் தமிழ்நாடு முதலமைச்சரால் 1970-ம் வருடம் ஜூன் மாதம் 14-ம் தேதி அன்று தொடங்கி வைக்கப்பட்டது. சிமிட்டி விற்பது 1970-ம ஆண்டு ஜூன் மாதம் 14-ம் தேதி அன்று தொடங்கப்பட்டது. உற்பத்தி

செய்யப்பட்ட சிமிட்டி அலிபுரத்திலுள்ள தேசியச்சோதனைச் சாலையில் பரிசோதனை செய்யப்பட்டு தரமிக்கதெனக் கண்டறியப்பட்டதோடு இந்தியத் தரநிர்ணயத்தையும் உறுதி செய்வதாக இருக்கிறது.

இத்தொழிற்சாலை தனது நேரடி மேற்பார்வையில் மறைமுகமாக சுமார் 500 பேர்களுக்கும் 345 பேர்களுக்கும் வேலை வாய்ப்பு அளித்துள்ளது.

1970-ம் வருடம் எப்ரல் மாதம் 1-ம் தேதி முதல் 1971-ம் வருடம் ஜனவரி மாதம் 31-ம் தேதி வரை உற்பத்தி செய்யப்பட்டதும் அவை விற்பனை செய்யப்பட்டதும் குறித்த விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

| | டன்கள். |
|---|---|
| உற்பத்தி செய்யப்பட்ட பதமான செங்கற்கள் (Clinker) | 112,729·00 |
| உற்பத்தி செய்யப்பட்ட சிமிட்டி .. .. .. | 56,812·00 |
| விற்பனை செய்யப்பட்ட சிமிட்டி .. .. .. | 44,124·25 |

இத்தொழிற்சாலையிலுள்ள இயந்திரத்தில் தொடக்கத்தில் சிற்சில இடையூறுகள் நேரிட்டன. சிமிட்டிக் கட்டுப்பாட்டு ஆணையின் விதித்துறைகளையொட்டி, விற்பனை அதிகரிக்கப்பட வேண்டியிருந்தது. தென்மண்டலத்தில் உற்பத்தி செய்யப்படும் சிமிட்டி தேவைக்கு மேற்பட்டு உபரியாக இருப்பதால் கடுமையான போட்டி இருந்து வருவதோடு விற்பனை மெதுவாக அதிகரித்து வருகிறது. இரண்டாவது சூளையும் 1971-ம் வருடம் பிப்ரவரி 8-ம் தேதி அன்று தொடங்கப்பட்டது.

## 2. உருக்குத் தொடர்வார்ப்படத் தொழிற்சாலை, அரக்கோணம்.

உருக்குத்தொடர் வார்ப்படத் தொழிற்சாலை ஒன்று அரக்கோணத்தில் அமைக்கப்பட்டு வருகிறது. இதற்கான சாதனங்களும் இயந்திரமும், பின்னர் தொகை செலுத்தும் அடிப்படையில் ரஷ்யா நாட்டைச்சார்ந்த மெஷினோ எக்ஸ்போர்ட் நிறுவனத்தினால் வழங்கப்படுகின்றன. இத்தொழிற்சாலை முதல் நிலையில் ஆண்டொன்றுக்கு 50,000 டன் உருக்குப் பாளங்களைத் தயாரிக்கும். இரண்டாவது நிலையில் இந்த உற்பத்தியளவு ஆண்டொன்றுக்கு 1,00,000 டன் அளவுக்கு உயர்த்தப்படும். நடைமுறை மூலதனம் ரூ. 52 லட்சம் உட்பட இத்தொழிற்சாலைக்காகும் செலவு ரூ. 687 லட்சமாக இருக்குமென மதிப்பிடப்படுகிறது. இதற்கு மாறாக, 1970-ம் வருடம் டிசம்பர் மாதம் 31-ம் வரை ரூ. 304 லட்சம் செலவிடப்பட்டுள்ளது. தொழிற்சாலையை அடைந்துள்ள சாதனங்களுக்குப் பின்னர் செலுத்தப்படும் தொகை இதில் அடங்காது. சாதனங்கள் 1971 ஜூலைக்குள் நிறுவப்பட்டுவிடுமென எதிர்பார்க்கப்படுகிறது. தொழிற்சாலை 1971 ஆகஸ்டு மாதத்தில் செயல்படத் தொடங்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

## 3. முன்னோடி சிமிட்டி தொழிற்சாலை, முதுவாத்தூர்.

சிறுஅளவு அடிப்படையில் சிமிட்டி உற்பத்தி செய்யும் வாய்ப்பினைக் கண்டறியும் நோக்கத்துடன் திருச்சி மாவட்டதில் கல்லக்குடியில் (டால்மியாபுரம்) முன்னோடி சிமிட்டித் தொழிற்சாலை ஒன்றை அமைக்கும் திட்டத்திற்கு 1965-ல் அனுமதி வழங்கப்பட்டது.

வெவ்வேறு வகை நிலக்கரியை எரிபொருளாகப் பயன்படுத்தி சிமிட்டி தயாரிப்பதற்கான மூலப்பொருள் அளவை வரைறுப்பதோடு, ஒரே சீராகச்செயல்படுவது குறித்துத் தொடர்ந்து ஆராய்ச்சி செய்யப்பட்டு வந்தது. நாள் ஒன்றுக்கு 15 டன் என்ற வீதத்தில் பதமான செங்கற்களை இச்சூளை தொடர்ந்து உற்பத்தி செய்யும். செங்குத்து வடிவிலான சூளையின் வடிவமைப்பிற்கும், "நாட்யுலைசர்" (Nodulizer) யந்திரத்தின் வடிவமைப்பிற்கும் இக்கழகம் சிறப்புரிமையைப் பெற்றுள்ளது. பெற்றுள்ள





அனுபவத்தைக்கொண்டு இக்கழகம் நாள் ஒன்றுக்கு 75 முதல் 150 டன் வரை செங்கற்கள் உற்பத்தி செய்யும் சூளைகளை அமைக்க இயலுமென எண்ணப்படுகிறது.

தற்போது, இத்தொழிற்சாலையின் வடிவமைப்பு சீராக்கப்பட்டு விட்டதால் இச்சிறு தொழிற்சாலையை ஓர் உற்பத்திப் பிரிவாக நமது மாநிலம் போன்ற (இங்கு TIDCO 1,200 டன் உற்பத்தித் திறன் கொண்ட பெரிய தொழிற்சாலை ஒன்றை அமைத்துள்ளது). உற்பத்தி உபரியாயுள்ள பகுதியில் நடத்துவது ஆதாயம் தரத்தக்கதாக இருக்காது என்று அறியப்பட்டுள்ளது. எனவே, இம்முன்னோடித் தொழிற்சாலையை சில பணியாளர்களுடன் கட்புலவிளக்கப்பிரிவாக நீடித்து வரவும் இதன் வடிவமைப்பைப் பிரபலப்படுத்தி விற்பனை செய்வதற்கான வாய்ப்புகளைக் கண்டறிய ஏற்பாடு செய்வதற்கு தேசிய ஆராய்ச்சி வளர்ச்சிக் கழகம் உறுதியளித்துள்ளதால், இத்தொழிற்சாலைக்கான சிறப்புரிமைகளை மேற்படி கழகத்திற்கு மாற்றவும் கருதப்பட்டுள்ளது

## 4. நெய்வேலி-சேலம் உருக்கு ஆலை.

சேலம் உருக்கு ஆலையைப் பொறுத்தவரையில், மேற்கொண்டும் தொடக்கப்பணியை மேற்கொள்ள தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சிக் கழகமே தகுந்த முகவர் நிறுவனமாகும் என்று அரசு கருதி மேற்படி பணியை தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்திற்கு 1969 ஆகஸ்டு மாதத்தில் மாற்றியது. இந்நாளுக்குப் பின்னர், கஞ்சமலையில் கிடைக்கக் கூடிய கனிப் பொருளைப்பயன்படுத்தி அயச்செறிவுள்ள அடர்த்தியான உருக்கு உருளைகள் தயாரிப்புத் தொழிற்சாலையை அமைப்பது குறித்து சாத்தியக்கூற்று அறிக்கையைத் தயாரிக்க ஆலோசகர்கள் கருத்துத் தெரிவித்துள்ளபடி ரூ. 3.22 லட்சம் செலவில் இரு இடங்களில் முன்னோடிச் சுரங்கம் வெட்டும் பணியும் கஞ்சமலையின் தென்மேற்குப் பகுதியில் ரூ. 0·25 லட்சம் செலவில் துளையிடும் பணியும் மேற்கொள்ளப்பட்டன. இதன் மூலம் சேகரிக்கப்பட்ட புள்ளிவிவரங்கள், சாத்தியக்கூற்று அறிக்கைகளைத் தயாரிப்பதற்காக ஆலோசகருக்குக் கொடுக்கப்பட்டன.

சிறப்பு உருக்கு, கலப்பு உருக்கு இவ்ற்றை உற்பத்தி செய்யும் உருக்குத் தொழிற்சாலை ஒன்றை அமைப்பது குறித்த திட்டம் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.

இவ் உருக்காலையை அமைப்பதற்கான இடத்தைத் தெரிந்தெடுப்பதற்கு மத்திய அரசு நியமித்துள்ள குழு இவ்விடத்தைப் பார்வையிட்டதோடு, திட்டப்பகுதி, நகரியம், இணைப்பு இருப்புப்பாதை முதலியவை குறித்துத் தனது பரிவுரைகளைச் செய்தது. இக்குழுவின் பரிவுரைகள் இந்திய அரசினால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான தொடக்கப்பணி இந்தியத் தலைமை அமைச்சரால் 1970-ம் வருடம் செப்டம்பர் மாதம் 16-ம் தேதி அன்று தொடங்கி வைக்கப்பட்டது. இத்தொழிற்சாலை அமைந்துள்ள பகுதியில் 43·38 ஏக்கர் நிலம் அண்மையில் கையகப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தை இந்தியத் தலைமை அமைச்சர் 1970-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 16-ம் தேதி அன்று தொடங்கி வைப்பதற்கு முன்பு மேற்படி நிலங்களை அரசு எடுத்துக்கொண்டது.

இந்துஸ்தான் ஸ்டீல் கன்ஸ்ட்ரக்ஷன் நிறுவனத்திடம் இந்த ஆலையின் கட்டுமானப்பணி ஒப்படைக்கப்பட்டுள்ளது. இது குறித்த தொடக்க ஆய்வை இந்நிறுவனம் தொடங்கிவிட்டது. நிலையக் கட்டிட பொறியாளர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். நிலங்கள் படிப்படியாக கையகப்படுத்தப்பட்டு வருகின்றன. தேவையற்ற நிலங்களை அறிவிப்பிலிருந்து நீக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. நீர் வழங்குதலுக்கு வகை செய்வதற்காக மூன்று மாற்றுத் திட்டங்களுக்காக தலைமைப் பொறியாளர் (பொதுச் சுகாதாரம்) செயற்குறிப்புகளை அனுப்பியுள்ளார். அவை ஆய்வு செய்யப்படுவதற்காக

வும் இறுதி ஒப்புதல் அளிக்கப்படுவதற்காகவும் இந்திய அரசுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. புதிய ஆலை அமைப்பிடம் நிச்சயிக்கப் பட்டிருப்பதையொட்டி ரயில்வே நிலங்களை விரிவாக ஆய்வு செய்யும் பணி தற்போது தொடங்கப்பட்டுள்ளது.

## கூட்டுத் துறை

### சோடியம் ஹைட்ரோ சல்பைட்டு தொழிற்சாலை.

3,300 டன் சோடியம் ஹைட்ரோ சல்பைட்டு தயாரிப்பதற்கான தொழிற் சாலை ஒன்று அமைப்பதற்கு 1970 ஏப்ரல் திங்களில் அனுமதி கடிதத்தை இக்கழகத்திற்கு இந்திய அரசு வழங்கியுள்ளது. இத்தொழிற்சாலையை அமைப்பதற்கான இடமும், இதனை அமைப்பதில் கூட்டாகச் சேர்த்துக் கொள்ளப்படவிருக்கும் தனியார் நிறுவனமும் தாற்காலிகமாக முடிவு செய்யப்பட்டுள்ளன. நீர்வழங்குத் திட்டம் குறித்து முடிவு எடுக்கப்பட்டு வருகிறது. இதற்கான தொழில் உரிமம் வழங்கவும், இறக்குமதி உரிமம் ஒன்றை வழங்கவும் இந்திய அரசுக்கு எழுதப்பட்டுள்ளது. இத்திட்டத்தைச் செயல்படுத்த தமிழ்நாடு இரசாயனப் பொருள்கள் நிறுவனம் என்ற பெயரில் தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்தின் தனித்துணை நிறு வனம் ஒன்றை அமைகக அரசு முடிவு செய்துள்ளது. இத் துணை நிறு வனம் அமைக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கான மதிப்பீட்டுச் செலவு ரூ. 140 லட்சமாகும்.

**மோட்டார் வண்டி டயர்கள், டியூப்கள் தயாரிப்புத் தொழிற்சாலை:—** ஆண்டொன்றுக்கு 3,00,000 டயர்கள் டியூப்களைத் தயாரிப்பதற் கான தொழிற்சாலை ஒன்றை அமைப்பதற்கு இந்திய அரசு அனுமதி கடிதத்தைக் கொடுத்துள்ளது. தனியார் தொழிலதிபர்களின் உடனுழைப் புடன் ஒரு கூட்டுத்துறைத் திட்டமாக இத்தொழிற்சாலை அமைக்க கருதப்பட்டுள்ளது. இத்தொழிற்சாலைக்கான மனை தாற்காலிகமாகத் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தைச் செயல்படுத்தத் தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்தின் தனித் துணை நிறுவனம் ஒன்றை அமைக்கக் கருதப்பட்டுள்ளது.

**உவர்க்காரம்-அமோனியம் குளோரைடு தொழிற்சாலை.**—66,000 டன் உவர்க்காரமும், 66,000 டன் அம்மோனியம் குளோரைடும் தயாரிப்பதற் கான தொழிற்சாலை ஒன்றை தூத்துக்குடியில் அமைக்க இந்திய அரசு 1971, ஜனவரியில் இக்கழகத்திற்கு அனுமதி கடிதம் வழங்கியுள்ளது. இத்திட்டத்திற்கான மதிப்பீட்டுச் செலவு ரூ. 8·80 கோடியாகும். ரூ. 2.10 கோடி அந்நியச் செலாவணியும் இதிலடங்கும். கீழ்க்காணும் பிறத்திட்டங் கள் கழகத்தின் பரிசீலனையில் உள்ளன.

**மாரியூர் சதுப்பு நிலத்தில் உப்புப் பணிகள்.**—கடல்சார்ந்த துணைப்பொருள் கள் தவிர, ஆண்டொன்றுக்கு 250,000 டன் தொழிற்தர உப்பைத் தயாரிப்பதற்கு இராமநாதபுரம் மாவட்டம், மாரியூரில் 5,680 ஏக்கர் பரப்பளவில் நவீன உப்புத் தொழிற்சாலை ஒன்று அமைக்கப்பட விருக்கிறது. இத்திட்டத்திற்கான மதிப்பீட்டுச் செலவு ரூ. 52 லட்ச மாகும். இவ்வுப்பைத் தயாரிப்பதற்கு உரிமம் வழங்குமாறு உப்பு குறித்த ஆணைக்குழு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. உவர்க்காரம்—அம்மோ னியம் குளோரைடு திட்டத்துடன் ஒருங்கிணைக்கப்பட்ட திட்டமாக இத் திட்டத்தை மேற்கொள்வது குறித்துப் பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது.

**நைலான் நூல் தொழிற்சாலை.**—இத்திட்டத்திற்கான தொடக்க அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது.



**இயந்திரக் கருவிகள் தொழிற்சாலை.**—கீழ்க்கண்டவற்றைத் தயாரிப்ப தற்காக இயந்திர கருவிகள் தொழிற்சாலை ஒன்றை அமைப்பதற்கான வாய்ப்புக்களைத் தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் ஆய்வு செய்து வருகிறது :

(i) தூண் துளைக்கருவிகள் (Piller drills).

(ii) " பெஞ்ச் " துளைக் கருவிகள்.

(iii) கடைசல் இயந்திரங்கள்.

**இயந்திரத் துணைக் கருவிகள் செயல் திட்டம்.**—இச்செயல் திட்டம் பற்றிய சாத்தியக்கூற்று அறிக்கையை பெங்களூர், திருவாளர்கள் இந்துஸ்தான் இயந்திரக் கருவிகள் நிறுவனம் தயாரித்துள்ளது. அவர் களது அறிக்கையின் அடிப்படையில், இயந்திரத்துணைக் கருவிகள் தயாரிப்ப தற்காக அரக்கோணத்தில் புதிய தொழிற்சாலை ஒன்றை அமைக்கத் தேவைக் குறிப்பு கடிதம் ஒன்று கேட்டு இந்திய அரசிற்கு விண்ணப்பம் அனுப்பப்பட்டது. இந்திய அரசு கருத்துத் தெரிவித்தபடி சிலவகைக் கருவிகள் தயாரிப்புப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்டன. சிலவகைக் கருவி களைத் தயாரிப்பதற்கு ஒப்புதல் அளிக்குமாறு இந்திய அரசு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

பின்வரும் தொழில்கள் பற்றி சாத்தியக்கூற்று அறிக்கைகளைப் பெற தமிழ்நாடு தொழில்வளர்ச்சிக் கழகம் ஏற்பாடு செய்துள்ளது :—

1. மென் இரும்பு (Sponge iron).
2. மோட்டார் வண்டித் துணைக் கருவிகள்.
3. நைலான்.
4. தோல் பதப்படுத்துதலுக்குத் தேவைப்படும் குரோமைட் மாவு (சோடியம் டைகுரோமேட்).
5. ஒளிமுறிவை ஏற்படுத்தும் பொருள்கள் (Refractories)
6. அலுமினியம் குளோரைடு.
7. பொட்டாசியம் குளோரேட்.
8. சோடியம் பார்மேட், ஆக்ஸாலிக் அமிலம்—சோடியம் பார்மேட்.
9. மெத்தனல் பார்மால்டிஹைடு.
10. அலுமினியம் மாவு.
11. விளிம்பற்ற உருக்குக் குழாய்த் திட்டம்.
12. பற்றவைக்கப்பட்ட உருக்குக் குழாய்கள், டயர்கள்,
13. இயந்திரத் துணைக் கருவிகள்.
14. இயந்திரக் கருவிகள்.

பின்வரும் தொழில்கள் பற்றிய சாத்தியக் கூற்று அறிக்கைத் தயாரிப்பது குறித்துக் கழகம் பரிசீலித்து வருகிறது :—

1. உவர்க்காரம்—அமோனியம் குளோரைடு.
2. சோடியம் சைனைடு.
3. கைத்தறித் தொழிலுக்கும் துணி ஆலைக்கும் தேவைப்படும் சாயம், இரசாயனக் கலவைகள்.
4. கால்சியம் கார்பைடு.

தமிழ்நாட்டில் பின்வரும் தொழிற்சாலைகளை அமைப்பதற்கு அனுமதிக் கடிதம் கேட்டு இந்திய அரசுக்கு விண்ணப்பம் செய்யப்பட்டுள்ளது:—

1. நாப்தா உற்பத்தித் தொழிற்சாலையும் அதன் துணைப் பொருள் களைத் தயாரித்தலும்.

2. சோடியம் டைகுரோமைட் தொழிற்சாலையில், பதப்படுத்துதலுக்குத் தேவையான குரோமைட் மாவு தயாரித்தல் (அனுமதிக் கடிதம் தற்போது பெறப்பட்டுள்ளது).

3. நைலான் 6.

4. பொட்டாசியம் குளோரேட்.

5. மெத்தனால்—பார்மால்டிஹைடு.

6. சிகரெட்டுத் தொழிற்சாலை. (இசைவுக் கடிதம் இப்போது பெறப் பட்டுள்ளது.)

7. இரு அச்சு அமைப்புள்ள பாலிஸ்ட்ரீன் படச் சுருள் (Biaxially Oriented Polystyrene Film) தயாரிப்புத் தொழிற்சாலை, சென்னை.

8. போராக்ஸ்—போரிக் அமிலம்.

9. பாலிஸ்டர் நெட்டிழை நூல்.

10. அலுமினியம். (Atomised Aluminium power)

11. மென் இரும்பு.

12. விளிம்பற்ற உருக்குக் குழாய்த் திட்டம்.

13. இயந்திரத் துணைக் கருவிகள் தயாரிப்புத் திட்டம்.

14. டெலிவிஷன் ரிசீவர், உயரழுத்த மின்சக்திக் கடத்திகள்.

கீழ்க் குறிப்பிட்டுள்ள திட்டங்கள் குறித்தும் கழகம் பரிசீலித்து வருகிறது :—

1. தையல் இயந்திரங்கள் தயாரித்தல்.

2. ஒருங்கிணைக்கப்பட்ட சுற்றுக்கள், குறைந்த வெப்ப நிலையிலும் மின்கடத்தாப் பொருள்கள்.

3. மோட்டார் வண்டித் துணைப் பொருட்கள்.

**நிதி உதவி.**—ஆய்வுரை ஆண்டில், தனியார் துறையில் தொடங்கப்பட்ட புதிய தொழில்களுக்கும் மரபு வழியில் அமையாத பிற தொழில்களுக்கும் கழகம் நிதியுதவியளித்து வந்துள்ளது :—

1. சென்னை ஆக்ஸிஜன்-அசிட்டிலீன் கம்பெனி, லிமிடெட், உத்திரவாதத்தைத் தொடர்ந்து கடன் பொறுப்பு உட்பட பங்கு—ரூ. 3·39 லட்சம்.

2. W.S. இன்சுலேட்டர்ஸ் ஆப் இந்தியா, லிமிடெட், கடன் பொறுப்புப் பங்கு ஒவ்வொன்றும் ரூ. 1,000 மதிப்புடைய 10,000 மூலதனப் பங்குகள்—ரூ. 10 லட்சம்.

3. திருவாளர்கள் டெக்ஸ்டூல் கம்பெனி லிமிடெட், கோயம்புத்தூர். ரூ. 10 லட்சம் கடன்.

## 2. தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம், லிமிடெட்.

கோவைப் பகுதியில் உள்ள நான்கு பஞ்சாலை ஆலைகளின் அதிகாரம் பெற்ற கட்டுப்பாடு நிறுவனமாக நியமனம் செய்யப்பட்டுள்ள முழுவதும் மாநில அரசுக்குச் சொந்தமான தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம் திறம்பட்ட முறையில் அவைகளைத் தொடர்ந்து நடத்தி வருவதாக ஆய்வுரை ஆண்டில் தெரிய வந்தது.

1970-ம் ஆண்டில் இந்த ஆலைகள் எல்லாவற்றின் பணியின் தரம் குறித்த விவரங்கள் இணைப்பு IX-ல் கொடுக்கப்பட்டுள்ளன. 1,08,852 மொத்த நூற்புக் கதிர் நிறுவிய திறன் கொண்ட இந்த ஆலைகள் 10-ம் நம்பர் நூலிலிருந்து 80-ம் நம்பர் வரையிலான பருத்தி நூலை உற்பத்தி செய்தன.





1970–71-ம் ஆண்டில், கழகத்தின் பங்கு மூலதனத்திற்கு 50 லட்சம் ரூபாயை அரசு வழங்கியுள்ளது. தற்போது கழகத்தின் செலுத்தப் பட்ட மூலதனம் 90,00,300 ரூபாயாகும். இத் தொகையின் முக்கிய பகுதி ஆலைகளுக்குத் தேவைப்படும் நடைமுறை மூலதனத்திற்கு முன்னதாகக் கொடுக்கப்பட்டது. எஞ்சியுள்ள தொகை இரண்டு வங்கிகளில் வைப்புத் தொகையாக வைக்கப்பட்டுள்ளது. நாளது வரை ஆலைகளுக்கு முன்பணமாகக் கொடுக்கப்பட்டுள்ள தொகை கீழ்க்காணுமாறு :—

| | | | ரூபாய் லட்சத்தில்.) |
|---|---|---|---|
| 1. ஓம் பராசக்தி ஆலைகள், லிமிடெட் | .. | .. | 4·20 |
| 2. கிருஷ்ணவேணி ஆலைகள், லிமிடெட் | .. | .. | 9·38 |
| 3. கம்போடியா ஆலைகள், லிமிடெட் .. | .. | .. | 24·25 |
| 4. ஸ்ரீரங்கவிலாஸ் ஜின்னிங், ஸ்பின்னிங், வீவிங் ஆலைகள், லிமிடெட். | | .. | 35·50 |
| | | மொத்தம் .. | 73·33 |

மூடப்பட்ட ஆலைகள் நான்கையும் எடுத்துக்கொண்டதன் மூலம் கழகம் அவை உற்பத்தி செய்யும் அளவின் பயனையும், 2·45 கோடி ரூபாய் மதிப்புள்ள அங்காடி நூலையும் தவிர, 3,000 தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பளித்தது. இரண்டு ஆண்டுகளிலிருந்து மூன்று ஆண்டுகள் வரை மூடப்பட்டிருந்த இந்த ஆலைகளில் உள்ள யந்திரங்களின் பழுதடைந்த நிலை, போதிய நிதிப் பற்றாக்குறை, அதிகப் பொறுப்புகள், தேவைக்கதிகமான தொழிலாளர் சக்தி முதலியவை கழகம் சமாளிக்க வேண்டிய பெரிய பிரச்சினைகளாகும். வங்கிகளிலிருந்து தேவையான நிதி உதவி கிடைப்பதிலும், பருத்தி விலை மிக அதிகமானதிலும் உண்டான இடர்ப்பாடுகள் மேற்சொன்ன பிரச்சினைகளைக் கடுமையாக்கின. மேலும் அவைகள், ஆலைகளைத் திறம்பட நடத்துவதற்கும், கடந்த ஆண்டுகளில் ஏற்பட்ட இழப்பீடுகளைக் குறைக்கவும் கழகத்திற்கு இயலாமல் செய்துவிட்டன. ஸ்ரீரங்கவிலாஸ் ஜின்னிங், ஸ்பின்னிங், வீவிங் ஆலை, வங்கியிடமிருந்து நிதியை 1971 பிப்ரவரியில் பெற்றது. இத்தகைய காரணங்களுக்காகத்தான் கழகம் அதிகத் தொகைகளை ஆலைகளுக்கு முன்பணமாக வழங்கவேண்டி வந்தது.

இந்த ஆலைகளில் உள்ள யந்திரங்களை நவீனப்படுத்துவது, தொழிலாளர்களைக் கட்டாய அடிப்படையில் ஓய்வு பெறச் செய்வது, தேசியப் பஞ்சாலைச் கழகத்திடமிருந்து பெற்ற நிதி உதவியுடன் பணிக்கொடை கொடுப்பது போன்ற வினாக்களை கழகம் முனைந்து ஆய்வு செய்து வருகிறது. இந்தச் செயற்குறிப்புகள் செயல்படுத்தப்பட்டால், ஆலைகள் கூடுதலான திறனுடன் பணி புரியலாம் என்றும், பிற நல்ல ஆலைகளில் உள்ள அளவுக்கு இந்த ஆலைகளின் உற்பத்தித் திறனை அதிகரிக்கலாம் என்றும், கழகம் இந்த ஆலைகளை எடுத்துக்கொள்வதற்கு முன் அவை அடைந்த அதிக இழப்பீடுகளைக் குறைக்கலாம் என்றும் எதிர்பார்க்கப் படுகிறது. இதற்கிடையில், முதல் நிலையாக, ஆலைகளில் யந்திரங்களை மாற்றியமைத்தும், நவீனப்படுத்தும் குறைந்த அளவிலானத் திட்டம் ஒன்று எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது.

பருத்தியைச் சேமித்து வைக்கவும், விற்பனை செய்வதற்கும், கழகம், ‘A’ வகுப்புப் பருத்தி உரிமத்தைப் பெற்றுள்ளது.

1951-ம் ஆண்டுத் தொழிற்சாலைகள் (மேம்பாடு–முறைப்படுத்துதல்) சட்டத்தின் கீழ், கோயம்புத்தூர் முருகன் ஆலைகள் லிமிடெட்டிற்கு அதிகாரம் பெற்ற கட்டுப்பாடு அதிகாரியாகக் கழகத்தை இந்திய அரசு நியமித்துள்ளது. இந்த ஆலையின் நிர்வாகத்தை கழகம் இப்போது எடுத்துக் கொண்டுள்ளது.

பொருத்தமான இடங்களில் 1,000 விசைத் தறிகளைப் பரவலாக மத்திய அரசுத் துறையில் நிறுவும் வினவும் தற்போது கழகத்தின் பரிசீலனையில் உள்ளது.

### 3. விசைச் செங்கல் சூளை, திருமழிசை.

திருமழிசையில் உள்ள விசைச் செங்கல் சூளை 1968 எப்ரல் முதல் நாளன்று தொடங்கப்பட்டது. கட்டிட செங்கற்களுக்கு எப்பொழுதும் தட்டுப் பாடுள்ள சென்னை மாநகரில் கட்டிடம் கட்டுபவர்களுக்கு வழங்குவதற்காக இந்தப் பிரிவு தரமானச் செங்கற்களை உற்பத்தி செய்கிறது. நாளொன்றுக்கு 88,000 செங்கற்கள் உற்பத்தி செய்வதை இந்தப் பிரிவு குறியளவாகக் கொண்டுள்ளது. இந்தப் பிரிவின் மூலதனம் முதலீடு சுமார் 70 லட்சம் ரூபாயாகும்.

1970 அக்டோபர் வரை இந்தப் பிரிவு உற்பத்தி செய்த மதிப்பு 18,74,724 ரூபாய். இந்தக் கால அளவில் விற்பனை 18,36,572 ரூபாய்.

மரபு முறையிலும், மெட்ரிக் அளவிலுமானச் செங்கற்களை இந்தப் பிரிவு உற்பத்தி செய்கிறது. யந்திரத்தின்மூலம் செய்யப்படும் செங்கற்கள் உறுதியிலும், அமைப்பிலும், வடிவிலும் உயர்தரமானவை. இவற்றிற்குத் தண்ணீரை உறிஞ்சும் திறன் மிகக் குறைவு. எனவே, கட்டிடம் கட்டுவதில் இச் செங்கற்கள் சிக்கனமானவை. மேற்கூரை ஓடுகள், தடுப்புச் சுவர் கற்கள், துளையுள்ள செங்கற்கள் போன்ற சிக்கல் மிகுந்த ஓடுகள், செங்கற்கள் இவற்றையும் உற்பத்தி செய்கின்றது. சொருகு ஓடுகள் போன்றவற்றைச் சோதனை முறையில் உற்பத்தி செய்யும் பணியும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

திருமழிசையில் உள்ளதுபோல் முற்றிலும் விசையில் இயங்கும் செங்கற் சூளைகள் உறபத்திக்குறியளவை எட்டுவதற்கு சுமார் நான்கு அல்லது ஐந்து ஆண்டுகள் ஆகும். தற்போது, அந்தச் சூளை உற்பத்திக் குறியளவில் 50 சத வீத உற்பத்தியைத்தான் தருகிறது. அந்தச் சூளையில் உற்பத்தியைக் கூடுதலாக்கத் தொடர்ச்சியான நடவடிக்கைகள் எடுக்கப் பட்டு வருகின்றன.

### 4. கூட்டுறவு நூற்பு ஆலைகள்.

தமிழ்நாட்டில் 12 கூட்டுறவு நூற்பு ஆலைகள் உள்ளன. அவை அனைத்தும் ஆய்வு ஆண்டில் தொடர்ந்து செயல்பட்டு வருகின்றன.

1970-ம் ஆண்டில் 12 கூட்டுறவு நூற்பு ஆலைகள் அனைத்தும் செயல் பட்டு வந்ததன் முடிவுகளைக் ,காட்டும் விவர அறிக்கை இணைப்பு I-ல் கொடுக்கப்பட்டுள்ளன. மொத்த நிறுவனத் திறனுள 1.82,808 நூற்புத் தறிகளுடன் கூடிய இந்த ஆலைகள் 20-ம் நம்பர் நூலிலிருந்து 100-ம் நம்பர் வரையிலான பல்வேறு பருத்தி நூல்களை உற்பத்தி செய்தன.

இந்த ஆண்டில் கூட்டுறவு நூற்பு ஆலைகள் அனைத்தும் வேலை நாட்களை வாரத்தில் 7 நாட்களாக மாற்றிக்கொண்டன. கூட்டுறவு நூற்பு ஆலைகளின் செயல் முடிவுகள் முந்திய இரண்டு ஆண்டுகளைக் காட்டிலும் 1970-ம் ஆண்டில் கூடுதலான முன்னேற்றத்தைக் கீழ்க்காணுமாறு காட்டுகிறது :—

| | 1969. | 1970. |
|---|---|---|
| உற்பத்தி (லட்சம் கிலோகிராமில்) .. | 105·70 | 118·10 |
| மொத்த விற்பனை (ரூபாய் லட்சத்தில்) | 899·36 | 1,146·17 |





" இந்த நூற்பு ஆலைகளின் பங்கு மூலதனத்தில் தமிழ்நாடு அரசு செய்த மொத்த முதலீடுகள் 184·12 லட்சம் ரூபாயாகும். அவர்களுடைய நிதி இடர்ப்பாடுகளை நீக்குவதற்கு எதுவாகக் கூட்டுறவு நூற்பு ஆலைகளுக்கு 52·07 லட்சம் ரூபாய்க்கு நேர்முகக் கடன்களை அரசினர் வழங்கியுள்ளனர். கடன் வழங்கும் நிறுவன முகவர்களிடமிருந்து தவணைக் கடன்களைத் திருப்பிச் செலுத்துவதற்கும், வாங்கிய மூலதனக் கடன்களைத் திருப்பிச் செலுத்துவதற்கும் கூட்டுறவு நூற்பு ஆலைகளுக்கு 618·98 லட்சம் ரூபாய்க்கு உத்திரவாதத்தையும் அரசு வழங்கியுள்ளது. தவிர வெளி நாட்டு, உள்நாட்டு நிறுவனங்களிடமிருந்து பஞ்சாலை யந்திரங்களை இந்த ஆலைகள் வாங்கிய வகையில் பின்னர் தவணை முறையில் திருப்பிச் செலுத்தும் ஏற்பாட்டின்படி ரூ. 30·69 லட்சம் அளவிற்குக் (நிலுவையாக) கடன் வழங்கினால், அது உரிய காலத்தில் திருப்பிச் செலுத்தப்படு மென்றும், அரசு உத்திரவாதம் அளித்துள்ளது.

நிலையான நீட்டிப்புத் திட்டம் என்ற புதிய திட்டத்தைத் தொடங்கி யுள்ள ஸ்ரீவில்லிப்புத்தூர் கூட்டுறவு நூற்பு ஆலைகளும், திருச்செந்தூர் கூட்டுறவு நூற்பு ஆலைகளும் தங்களது ஆலை விரிவுப் பணிகளை முடித்து விட்டன. அயல் நாடுகளிலிருந்து வரும் இந்திய அகதிகளுக்கு வேலை வாய்ப்பளித்தல், நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கொடுக்கப்படும் நூலின் அளவை உயர்த்துதல் என்கிற இரண்டு நோக்கங்களுடன் இந்த ஆலைகள் இவ்வகை விரிவுப் பணித் திட்டத்தை மேற்கொண்டுள்ளன. ஸ்ரீவில்லிப்புத்தூர் கூட்டுறவு நூற்பு ஆலையைப் பொறுத்த வரை, 11 ரிங் பிரேம்கள் தவிர, மற்றெல்லாயந்திரங்களும் நிறுவப்பட்டுவிட்டன. யந்திரங்கள் வழங்கப்படுபவர்களிடமிருந்து சில பகுதிகள் இந்தப் பிரேம் களுக்காக வாங்கப்பட்டு வருகின்றன. அவை நிறுவப்பட்டு வருகின்றன. இந்த ஆலைகள் தங்களுடைய விரிவுப் பணித் திட்டத்தை முடித்துவிடும் என்றும், 25,088 நூற்புக் கதிர்களையும் 1971-ம் ஆண்டு மார்ச் மாதம் 31-ம் தேதிக்குள் ஓடவிடும் என்றும், எதிர்பார்க்கப்படுகிறது. விரிவுப்பணித் திட்டத்தின்கீழ் 206 அகதிகளுக்கு பயிற்சி வசதிகளை இந்த ஆலைகள் அளிக்கும். அவர்களில் 130 பேர் முறையான பணியில் சேர்த்துக்கொள்ளப் பட்டனர். மேலும் 24 பேர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு அவர்கள் பயிற்சி முடிந்தவுடன் அவர்களும் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள். எல்லா வகை யிலும் இந்த விரிவுப் பணித் திட்டம் முடிவடைந்த பின்னர் ஆலைகள் 200 அகதிகளை பணியில் சேர்த்துக்கொள்ள இயலும். இன்னொரு ஆலையாகிய திருச்செந்தூர் கூட்டுறவு நூற்பு ஆலை 15 ரிங் பிரேம்கள் தவிர மற்ற எல்லா யந்திரங்களையும் நிறுவி விட்டது. எஞ்சிய 15 பிரேம்களுக்குத் தேவைப்படும் பகுதிகளை வாங்குவதற்கும், அவற்றை நிறுவவும் நட வடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இந்த ஆலையும் தன்னுடைய நீட்டிப்புத் திட்டம் முடிவடைந்த பின்னர் 200 அகதிகளுக்கு வேலை வாய்ப்பளிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பிற ஆலைகளின் நிறுவும் திறனைக் கூடுதலாக்க திட்டம் உள்ளது. எல்லாக் கூட்டுறவு நூற்பு ஆலைகளும் ஐந்து ஆண்டுகளுக்கு மேல் பணி புரிந்துவந்ததால், பஞ்சாலைத் தொழிலில் ஏற்பட்டுள்ள அண்மைக் கால தொழில் நுட்ப முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டு, தற்போதுள்ள யந்திரத்தைச் சீரமைத்து நவீனப்படுத்தும் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட் டுள்ளது. நவீனப்படுத்தும்-சீரமைக்கும் திட்டம் ஒவ்வொரு தனிப்பட்ட ஆலைகளினுடைய முதன்மையான அடிப்படையில் படிப்படியானத் திட்டத் தினால் எடுத்துக் கொள்ளப்படும். பயன் கொள்வோரின் விருப்பத்தை யொட்டி, இந்த ஆலைகளின் உற்பத்தி முறையை மாற்றியமைப்பது/ திருத்தி அமைப்பது அவசியமாகிறது. அதனால், பெரும்பாலான ஆலைகள் இரட்டை நூல் யந்திரங்கள், கூம்பு வடிவான இயந்திரங்களையும், நிறுவி சிட்ட நூல் தவிர இரட்டை நூல், கூம்பு நூல் முதலியவற்றைத் தயாரிக் கிறது. 1970-ம் ஆண்டு இறுதியில், கூட்டுறவு நூற்பு ஆலைகள், முக்கிய மாக மட்ட ரக நூல் உற்பத்தி செய்யும் ஆலைகள் தங்களுடைய தேவைகளான உள்ளூர் பருத்தியையும், வெளியூர் பருத்தியையும்

பெறுவதில் சில இடர்ப்பாடுகளை அடைந்தன. இந்த ஆலைகளின் இடர்ப்பாடுகளைக் களைவதற்காக, அரசு பருத்தியின் அளவைக் கூடுதலாக்கி ஆலைகளுக்குத் தேவையான அளவு பருத்தியைக் கிடைக்கச் செய்தது. பம்பாயிலும், பிற இடங்களிலுமுள்ள மகாராஷ்டிர மாநிலக் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பின் உதவியைக் கொண்டு, வெளியூர் பருத்தியை மலிவாக வாங்குவதற்கு ஆலைகளினால் முடிந்தது. இந்த நடவடிக்கைகளின் பயனாக கூட்டுறவுத் துறைகளில் உள்ள ஆலைகள் எந்த விதத் தடையுமில்லாமல் தங்களுடைய உற்பத்தித் திட்டத்தைத் தொடர்ந்து நடத்த முடிந்தது.

1970-ல் கீழ்க்காணும் கூட்டுறவு நூற்பு ஆலைகள் அவற்றிற்கு எதிரே குறிப்பிட்டுள்ளளவுக்கு ஏற்றுமதிக்காக நூல் வழங்கின :—

| வரிசை எண்ணும் கூட்டுறவு நூற்பு ஆலையின் பெயரும். | ஏற்றுமதி செய்த கட்டின் அளவு. | ஏற்றுமதி செய்யப் பட்ட நாட்டின் பெயர். |
|---|---|---|
| 1 திருச்செந்தூர் கூட்டுறவு நூற்பு ஆலை. | 998 | பர்மா, மேற்கு ஐரோப்பா. |
| 2 கோயமுத்தூர் மாவட்டக் கூட்டுறவு நூற்பு ஆலை. | 1,000 | பர்மா. |
| 3 கன்னியாகுமரி மாவட்டக் கூட்டுறவு நூற்பு ஆலை. | 1,275 | பர்மா. |
| 4 வடார்க்காடு மாவட்டக் கூட்டுறவு நூற்பு ஆலை. | 825 | பர்மா. |
| 5 திருச்சிராப்பள்ளி மாவட்டக் கூட்டுறவு நூற்பு ஆலை. | 950 | பர்மா. |
| 6 காஞ்சிபுரம் காமாட்சி அம்மன் கூட்டுறவு நூற்பு ஆலை. | 250 | பர்மா. |

**கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள்.**

1969–70 உடன் முடிவடைந்த சர்க்கரை ஆண்டில் மாநிலத்தில் 20 சர்க்கரை ஆலைகள் இருந்தன. அவற்றில் 9 ஆலைகள் கூட்டுறவுத் துறையில் இருந்தன.

மேலே குறிப்பிடப்பட்ட 9 கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளில் 6 கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் 6,500 டி.சி.டி. T.C.D. நிறுவும் திறனுடன் உள்ள 6,500 உற்பத்தியில் உள்ளன. தர்மபுரி மாவட்டம் பாலக்கோட்டிலுள்ள 1,250 டன்கள் நாளொன்றுக்கு நசுக்கும் திறனைக் கொண்ட தர்மபுரி மாவட்டக் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை கட்டப்பட்டு வருகிறது. இந்த ஆலை விரைவில் உற்பத்தியைத் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் மாநிலத்தில் கூட்டுறவுத் துறையில் மேலும் மூன்று ஆலைகளை ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. நாளொன்றுக்கு 1,250 டி.சி.டி. T.C.D. நசுக்கும் திறனுடன் இரண்டு ஆலைகளை வடார்க்காடு மாவட்டத்தில் ஒன்றை குடியாத்தம் வட்டம் பிரம்மபுரத்திலும், மற்றொன்றை வாணியம்பாடி வட்டம் ஆம்பலூரிலும் ஏற்படுத்துவதற்கு இந்திய அரசு அனுமதிக் கடிதம் இரண்டை வழங்கியுள்ளது. அதன்படி, வேலூர் (பிரம்மபுரம்) கூட்டுறவுச் சர்க்கரை ஆலையும், திருப்பத்தூர் (ஆம்பலூர்) கூட்டுறவுச் சர்க்கரை ஆலையும் அமைக்கப்பட்டு அவை தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின்கீழ்ப் பதிவு செய்யப்பட்டுள்ளன. அவை செயல்படத் தொடங்கியுள்ளன. கோவை மாவட்டம் பேரூரில் நாளொன்றுக்கு 2,000 டன்கள் நசுக்கும் திறனுடன்





ஒரு கூட்டுறவுச் சர்க்கரை ஆலையை ஏற்படுத்துவதற்காக மாநில அரசு அனுமதிக் கடிதத்தை (letters of intent) விண்ணப்பித்துள்ளது. 1,250 டன்கள் திறனுடன் தொடங்க இந்த ஆலைக்கு ஒப்புதல் கடிதம் ஒன்றை இந்திய அரசு அனுப்பியுள்ளது. கோவை மாவட்டக் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை அமைக்கப்பட்டு, 1971-ம் ஆண்டு ஜனவரி திங்கள் 28-ஆம் தேதியன்று தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின்கீழ்ப் பதிவு செய்யப்பட்டு, அதே நாளில் தன்னுடைய பணியைத் தொடங்கியது. ஒப்புதல் கடிதத்தில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளை இந்த மூன்று ஆலைகளும் நிறைவேற்ற வேண்டும். இந்த நிபந்தனைகளை நிறைவேற்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அந்தந்த ஆலைகளின் திட்ட மதிப்பீட்டுச் செலவு 240–250 லட்சம் ரூபாய் என்ற வீதத்தில் இருப்பதால், கரும்பு பயிரிடும் உறுப்பினர்களிடமிருந்து பங்கு மூலதனமாக 45 லட்சம் ரூபாயையும், ஒப்புமை முறையின்கீழ் பங்கு மூலதனத்தில் மாநில அரசு கலந்து கொள்ளும் திட்டத்தின்கீழ் மாநில அரசிடமிருந்து இணை பங்குத் தொகையாக ரூ. 45 லட்சத்தை கேட்டுப் பெறவும் மத்திய அரசின் கடன் வழங்கும் நிறுவனங்களிடமிருந்து 140 லட்சம் ரூபாய் தவணைக் கடன் வழங்கும்படி கேட்கவும் ஆலைகள் முயல வேண்டும். இந்த மூன்று ஆலைகளும் தொடக்க நிலையிலேயே உள்ளன. இவைகள் நிறுவப்பட்டு, 1973–74-ல் உற்பத்தி தொடங்கப்படும் என்று எதிர்ப் பார்க்கப்படுகிறது.

கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் ஒன்பதிலும், 338·95 லட்சம் ரூபாய் தொகை செலுத்திய மூலதனத்துடன் உள்ள கரும்பு பயிரிடுபவர்கள் 47,179 பேர் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். இவர்கள் தவிர, 31 கூட்டுறவு நிறுவனங்களும், பிற நிறுவனங்களும் இதில் உறுப்பினர்களாகச் சேர்ந்து, பங்கு மூலதனத்திற்காக 27·15 லட்சம் ரூபாயை வழங்கி உள்ளன. ஏழு ஆலைகளில் பங்குக்காக தமிழ்நாடு அரசு 203·93 லட்சம் ரூபாயை வழங்கியுள்ளது. 1970-ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 31-ஆம் நாள் வரை, 576·47 லட்சம் ரூபாய் செலுத்தப்பட்ட மூலதனத்துடன் 47,217 உறுப்பினர்கள் அவைகளில் இருந்தனர்.

1967–68, 1968–69 ஆண்டுகளில், கரும்பு உற்பத்தியின்கீழ் உள்ள பகுதிகள் முந்திய ஆண்டுகளில் உள்ளதைவிட கூடுதலாகியுள்ளன. இதை ஆலைகள் கருத்தில் கொண்டு அதிகப்பகுதிகளைப் பதிவு செய்தன. அதனால் கோடைக் காலங்களில் கூட ஆலைகள் தங்களுடைய கரும்பு பிழியும் வேலையைத் தொடர்ந்தன. 1969–70-ல் உற்பத்தியில் உள்ள 6 கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் 49,428 ஏக்கர் கரும்பை பதிவு செய்தன. சீக்கிரமே கரும்பை நடுவதற்கு கரும்பு வளர்ப்பவர்களைக் கவரவும், சீக்கிரமே விளைச்சலைத் தரும் ரகங்களை நடுவதற்கும், நல்ல தரமுள்ள கரும்புகளை நடவும் கரும்பு வளர்ப்பவர்களுக்கு நிதி உதவியை மதுராந்தகம், அமராவதி கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் தந்துதவியதால் அவைகளுக்கு 1·31 லட்சம் ரூபாய்க்குச் செலவு ஏற்பட்டது.

இந்தக் காலத்தில், சராசரி பயிர் நாட்களின் எண்ணிக்கை 258 ஆகவும், சராசரி கரும்பு பிழியும் நாட்களின் எண்ணிக்கை 253 ஆகவும் இருந்தது. ஆலைகள் 1,250,457 டன்கள் கரும்பைப் பிழிந்து 14,13,685 ரூபாய் மதிப்புள்ள 100,699 டன்கள் சர்க்கரையை உற்பத்தி செய்தன. ஒரு ஏக்கருக்குச் சராசரி கரும்பு விளைச்சல் 27 டன்கள் ஆகும். அதிலிருந்து பெறப்படும் சர்க்கரையின் சராசரி 8·01 சத வீதம் கரும்பு. விளைச்சலுக்காக இதுவரை 955 லட்சம் ரூபாயை ஆலைகள் கொடுத்துள்ளன. இன்னும் 9·1 லட்சம் ரூபாய் கொடுக்கப்படாமல் உள்ளது. 73·70 ரூபாய் குறைந்த அளவு விலை என்று மாநிலத்தில் உள்ள பெரும்பகுதி ஆலைகளுக்கு மத்திய அரசினால் முடிவு செய்யப்பட்டதற்கு மாறாக, ஆலைகள் கரும்பு பயிரிடுபவர்களுக்கு ஒரு டன்னுக்குச் சராசரியாக 80 ரூபாயைக் கொடுத்துள்ளன. இதனால் 9·4 சதவீதத்திற்கு சர்க்கரை பெறப்பட்டது.

[1971 ஜூன் 30

உற்பத்தியில் உள்ள ஆறு ஆலைகளுள், அலங்காநல்லூர், தேசீய கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் லிமிடெட் தவிர மற்ற ஆலைகள், கரும்பு பிழியும் திறனை விரிவு படுத்துவதற்கு தங்களுக்கெனச் சொந்தமாகத் திட்டத்தை வைத்திருக்கின்றன. அந்தப் பணிகள் பல்வேறு நிறுவும் நிலைகளில் உள்ளன. மூன்று ஆலைகளும் உற்பத்தியைத் தொடங்கியபொழுதும், 5 ஆலைகளும் தங்களுடைய விரிவுபடுத்தப்பட்ட திறனில் கரும்பு பிழிவதைத் தொடங்கும்போது சர்க்கரையின் உற்பத்தி கணிசமான அளவுக்கு அதிகரிக்கும்.

எல்லா ஆலைகளிலும் சர்க்கரைத் தேங்கிக் கிடப்பதாலும், அங்காடியில் சர்க்கரைப் போக்குவரத்து மெதுவாக நடப்பதாலும், சர்க்கரையின் விலை குறைவாக இருப்பதாலும், உற்பத்தி செய்துவரும் 6 ஆலைகளில் இரண்டு மட்டும்தான் இந்த ஆண்டில் ஆதாயம் எட்டியுள்ளன. 1969-ம் ஆண்டு நவம்பர் திங்கள் 1-ம் நாளிலிருந்து 1970-ம் ஆண்டு அக்டோபர் 31-ம் நாள் வரையில் 9 கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளின் செயல் முடிவுகள் இணைப்பு II-ல் காணப்படுகின்றன.

## தனியார் துறை.

தமிழ் நாட்டிலே பரந்த அடிப்படையில் தொழில்கள் அமைந்திருப்பதால், இந்தியத் தொழில் வளர்ச்சியில் தமிழ்நாடு முக்கியமான இடத்தைத் தற்போது பெற்றிருக்கிறது. மின்விசை, போக்குவரத்து, தொழில் நிதி உதவி, தொழில் நுட்ப தேர்ச்சியுள்ள தொழிலாளர்களை உருவாக்கப் பயிற்சி வசதிகள் முதலியவை குறித்து அரசின் கொள்கைகள் மாநிலம் முழுவதும் தொழில் வளரவும், தொழில்கள் பரவுவதற்கும் காரணமாக அமைந்துள்ளன. மாநில, மத்திய அரசுகள் வழங்கியுள்ள பல்வேறு வசதிகளைத் தனக்குச் சாதகமாகக் கொண்டு மாநிலத்தில் உள்ள தனியார் துறை, தொழில்மயமான மாநிலத் தொழில் வளர்ச்சிப் பணியில் முக்கியமான இடத்தைப் பெற்றிருக்கிறது. அது உற்பத்தியின் பல்வேறு துறைகளில் கணிசமான அளவு முன்னேற்றத்தையும் எய்தியுள்ளது.

முதலாவது, இரண்டாவது, மூன்றாவது திட்டக் காலங்களிலும் 1970 வரையிலும் துணி உற்பத்தித் துறை தவிர ஏனைய பல்வேறு தொழில் துறைகளில், 1951-ம் ஆண்டு தொழிற்சாலைகள் வளர்ச்சி முறைப்படுத்துதல் சட்டத்தின்கீழ் இம்மாநிலத்தில் வழங்கப்பட்ட உரிமங்களின் எண்ணிக்கை கீழ்க்காணும் விவர அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது.



1971 ஜூன் 30]

| தொழில். | கொடுக்கப்பட்ட உரிமங்கள். முதல் திட்டம். | II-வது திட்டம். | III-வது திட்டம். | 1970 டிசம்பர் வரை. | மொத்தம். | நிறைவேற்றப்பட்ட உரிமங்கள் (உற்பத்தியில் உள்ளவை). | நிறைவேறிவரும் உரிமங்கள். | ரத்து செய்யப்பட்டவை, திருப்பிக் கொடுக்கப்பட்டவை முதலியவை. |
|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8, | (9) |
| உலோகவியல் .. .. .. .. | 9 | 59 | 45 | 8 | 121 | 71 | 21 | 29 |
| பொறியியல் (இயந்திரம்) .. .. .. | 16 | 130 | 73 | 13 | 232 | 170 | 30 | 32 |
| பொறியியல் (மின்சாரம்) .. .. .. | 4 | 45 | 25 | 10 | 84 | 61 | 11 | 12 |
| இரசாயன உரம், கனரக இரசாயனங்கள், பி.வி.சி. (P.V.C.) வர்ணங்கள், வெடி மருந்துகள், பூச்சிக்கொல்லிகள், பல்வகை இரசாயனங்கள். | 19 | 48 | 31 | 8 | 106 | 74 | 12 | 20 |
| உணவு, சர்க்கரை, சாராயம், மாவு, தாவர எண்ணெய், வனஸ்பதி முதலியவை. | 11 | 33 | 43 | 13 | 100 | 59 | 18 | 23 |
| பல்வகைக் காகிதம், சோப்புகள், அலங்காரப் பொருள்கள், ரப்பர், தோல், கண்ணாடி, மட்பாண்டம், சிமிட்டி, மரப் பொருட்கள் முதலியவை. | 9 | 66 | 37 | 32 | 144 | 109 | 14 | 21 |
| | 68 | 381 | 254 | 84 | 787 | 544 | 106 | 137 |

துணி வகைகளைப் பொறுத்தவரை கீழ்க் காணும் புள்ளி விவரம் கடந்த 14 ஆண்டுகளில் எண்ணிக்கையிலும், திறனிலும் கூடுதலாகியுள்ளதைக் குறிப்பிட்டுக் காட்டும்:—

| ஆண்டு. | நூற்பு ஆலைகளின் எண்ணிக்கை. | கூட்டு ஆலைகளின் எண்ணிக்கை. | ஆலைகளின் மொத்த எண்ணிக்கை. | கதிர்கள். | தறிகள். |
|---|---|---|---|---|---|
| 1956, ஜனவரி 1 .. .. .. .. | 58 | 24 | 82 | 2,111,276 | 3,016 |
| 1961, ஜனவரி 1 .. .. .. .. | 109 | 25 | 134 | 3,541,841 | 7,346 |
| 1967, ஜனவரி 1 .. .. .. .. | 158 | 25 | 183 | 3,787,860 | 9,404 |
| 1968, ஜனவரி 1 .. .. .. .. | 175 | 24 | 199 | 3,979,524 | 9,349 |
| 1969, செப்டம்பர் 1 .. .. .. .. | 176 | 24 | 200 | 4,049,952 | 9,290 |
| 1970, மே 1 .. .. .. .. | 181 | 24 | 205 | 4,115,616 | 9,115 |



1970-ஆம் ஆண்டில், பருத்தி நூல், நெட்டிழைப் பருத்தி நூல், ஆலைத் துணி முதலியவற்றின் உற்பத்தி விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

(i) பருத்தி நூல் .. .. 180,832,000 கிலோகிராம்கள்.

(ii) நெட்டிழைப் பருத்தி நூல். 19,393,000 கிலோகிராம்கள்.

(iii) துணி .. .. .. 153,456,000 மீட்டர்.

இம் மாநிலத்தில் பெருந் தொழில் நிறுவனங்களை நிறுவுவதற்காக 7,500 பேர்களுக்கு வேலை வாய்ப்பளிப்பவையும் 20·78 கோடி ரூபாய் மூலதன முதலீடு தேவைப்படுபவையுமான 36 (முப்பத்தாறு) உரிமங்களுக்கு இந்திய அரசு 1970-ஆம் ஆண்டில் அனுமதி வழங்கியுள்ளது. இது தவிர, 30·69 கோடி ரூபாய் மூலதன முதலீடு தேவைப்படுவதும் 6,700 பேர்களுக்கு வேலை வாய்ப்பளிக்கக் கூடியதுமான தொழில் தொடங்க 25 அனுமதிக் கடிதங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. கொடுக்கப்பட்ட தொழிற்சாலை உரிமங்களில் ஆறு உரிமங்கள், துணிகள் உற்பத்தி, வெளுத்தல், தொழிற்சாலை உருளைச் சங்கிலிகள், பிஸ்கோத்துகள், தொடர் ஒளிவட்ட மின்வாய் (continuous arc electrode), கரைம வடிப்பு எண்ணெய் (solvent extracted oil), பாலிஸ்டர் நெட்டிழை நூல் போன்ற புதிய உற்பத்திப் பொருள்கள் குறித்தவையாகும். இந்தியக் கரிம ரசாயனப் பொருள் நிறுவனத்தால் தொடங்கப்படவிருக்கும் பாலிஸ்டர் நூல் ஆலைக்கு 1971 அக்டோபர் 3-ம் நாளன்று முதலமைச்சர் அடிக்கல் நாட்டினார். பாலிவினைல் (Polyvinyl), குளோரைடு எரி உவர்க்காரம், கார்பிரிட்ஜ் ப்யூஸ்கள், பருத்தி நூல் தயாரிப்புக்கான கதிர்கள், சர்க்கரை இவற்றை உற்பத்தி செய்கிற எட்டு நிறுவனங்கள் தங்கள் உற்பத்தித் திறனளவைக் கணிசமான அளவு அதிகரிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தோல் பொருள்கள், காகிதம் மற்றும் படச்சுருள் அடிப்படையிலான நெகிழ்ச்சித் திறனுள்ள தொழிலியல் சிப்பப்பொருள்கள், அழுத்த ஏனங்கள், வனஸ்பதி, நெகிழ்ச்சி இரும்பு வார்ப்படங்கள், குழாய் இணைப்புகள் முதலியவை உற்பத்தி செய்ய வணிகம் நடத்துவதன் மீதான 22 உரிமங்கள் வழங்கப்பட்டுள்ளன. மின் உருக்கு முத்திரைகள் (Electrical steel stampings), எரி உவர்க்காரம் (Caustic soda), சோடியம் ஹைட்ரோ ஸல்பைட், குழல்கள், தொடர் குழல்கள், குளிர்க்கலத் தொகுதி (Gang condensor), பி.எச்.சி. (B.H.C.) (தொழில் நுட்பம்), விரைவேகச் சுழற்சியினால் தொகுதிகளைப் பிரித்தெடுக்கும் இயந்திரம், மின் முத்திரைகள், ஜி.எல்.எஸ். (G.L.S.) விளக்குகள், உருளை வடிவமான குழாய்கள், விஸ்கோஸ் நெட்டிழை, உயர் அடர்த்தி பாலிதினிலிருந்து நெய்யப்பட்ட சாக்கு, இணைப்புக் கருவிகள், ஸ்கூட்டர்கள், சிகரட்டுகள், வண்டிக் கருவிகள், மோட்டார் வண்டி டயர்கள், டியூபுகள், விட்டமின் "பி" "B" காம்ப்ளெக்ஸ் முதலியவை, ரப்பர் ரசாயனங்கள், பிஸ்டன், பிஸ்டன் வளையங்கள் முதலியவைகளைத் தயாரிப்பதற்கு 25 அனுமதிப் பத்திரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

பயன்கொள் பொருள்கள் குறித்த தொழில்கள், இயந்திர, மின்சார, இராசாயன, தோல் தொழில்கள் ஆகிய துறைகளில் கணிசமான அளவு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. 1970-ஆம் ஆண்டில் 1951-ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின் (வளர்ச்சி–முறைப்படுத்துதல்) கீழ் உரிமங்கள் கொடுக்கப்பட்ட, ஒப்புதல் கடிதம் கொடுக்கப்பட்ட நிறுவனங்களைப் பற்றிய விவரங்கள் இணைப்பு III, இணைப்பு IV ஆகியவற்றில் காணப்படும்.

1970-ஆம் ஆண்டில், புதுடெல்லி தொழில் நுட்ப வளர்ச்சி தலைமை இயக்குநர் அலுவலகத்தில் பதிவு செய்துள்ள இம்மாநில நடுத்தரத் தொழிற்சாலைகளின் எண்ணிக்கை 13. இதுவரை பதிவு செய்துள்ளவைகளின் மொத்தம் 63. பல்வேறு உற்பத்தித் தொழில்களில் ஈடுப

இம்மாநிலத்தின் தொழில் முனைவர்கள் அமெரிக்கா, செக்கோஸ்லாவேகியா, பிரிட்டன், கிழக்கு ஜெர்மனி, கிரீஸ், ஜப்பான் நாடுகளுடன் தொழில் நுட்ப நிதி உடனுழைப்பு உறவு கொண்டதற்கு இந்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. 1970-ஆம் ஆண்டில் தொழில் நுட்ப வளர்ச்சித் தலைமை இயக்குநர் அலுவலகத்தில் பதிவு செய்துள்ள நிறுவனங்களும், வெளிநாட்டுத் தொழில் நுட்ப நிதி உடனுழைப்புப் பெற ஒப்புதல் அளிக்கப்பட்டவற்றின் விவரங்கள் முறையே V-வது, VI-வது இணைப்புகளில் கொடுக்கப்பட்டுள்ளன.

மாநிலத்தின் தொழில் பொருளாதாரத்தில் குறிப்பிடத்தக்க 23 பெரிய தொழிலியல் உற்பத்திப் பொருள்கள் குறித்து 1960-ஆம் அடிப்படை ஆண்டில் உற்பத்தி 100 என்று கொண்டு தொழில் உற்பத்திப் புள்ளி விவரங்களைப் பார்த்தோமானால் தமிழ் நாட்டில் அடுத்தடுத்த ஐந்தாண்டுகளில் தொழிலியல் உற்பத்தி வேகம் உயர்ந்து கொண்டே போவது தெரியவரும். இம் மாநிலத்தின் தொழில் உற்பத்தியையும் இந்தியாவின் தொழில் உற்பத்தியையும் இந்த வரைப்படம் விவரிக்கிறது. 1961, 1966, 1970-ஆம் ஆண்டுகளுக்கான தொழிற்சாலைகளின் எண்ணிக்கையும், பல்வேறு தொழில் துறைகளின் உற்பத்தி அளவுகளும் குறித்த ப்புமை ஆய்வு கீழே கொடுக்கப்பட்டுள்ளது.



1961, 1966, 1970 ஆண்டுகளில் பல்வேறு தொழில் துறைகளின் பிரிவுகள் எண்ணிக்கை, உற்பத்தி விவரம் குறித்த ஒப்புமை ஆய்வு கீழே கொடுக்கப்பட்டுள்ளது. புள்ளி விவரங்கள் தெளிவாக முன்னேற்றத்தைக் காட்டுவதால், சாதனைகளைத் தனியே விளக்க வேண்டிய தேவை இல்லை.

| பொருள்கள். | 1961 | | 1966 | | 1970 | |
|---|---|---|---|---|---|---|
| | பிரிவுகளின் எண்ணிக்கை. | உற்பத்தி. | பிரிவுகளின் எண்ணிக்கை. | உற்பத்தி. | பிரிவுகளின் எண்ணிக்கை. | உற்பத்தி. |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| வேளாண்மை டிராக்டர்கள் | .. | .. | 1 | 3,400 எண்ணிக்கை. | 1 | 3,344 எண்ணிக்கை. |
| கால்சியம் கார்பைடு | 1 | 5,057 டன்கள். | 1 | 9,200 டன்கள். | 1 | 9,953 மெட்ரிக் டன். |
| கார்கள் | 1 | 3,364 எண்ணிக்கை. | 1 | 1,008 எண்ணிக்கை. | 1 | 454 எண்ணிக்கை. |
| கரியிருதியதை வாயு | 3 | 2,060 டன்கள் | 4 | 1,741 டன்கள். (மூன்று பிரிவுகள் மட்டும்). | 3 | 1,435,677 கிலோகிராம். |
| வார்ப்படங்கள் (உருக்கும் வார்ப்பட இரும்பும்). | 1 | .. | 7 | 22,039 டன்கள். | 7 | 20,535 டன்கள். |
| எரி உவர்க்காரம் | 2 | 25,191 டன்கள். | 2 | 62,232 டன்கள். | 2 | 81,802 டன்கள். |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| சிமிட்டி .. .. .. .. .. | 4 | 1,15,123 டன்கள். | 5 | 18,79,18 டன்கள். | 6 | 23,82,286 டன்கள். |
| வணிக வண்டிகள் .. .. .. .. | 1 | 2,071 எண்ணிக்கை. | 1 | 3,615 எண்ணிக்கை. | 1 | 5,264 எண்ணிக்கை. |
| சைக்கிள்கள் .. .. .. .. .. | 1 | 2,07,535 எண்ணிக்கை. | 1 | 2,76,514 எண்ணிக்கை. | 1 | 3,90,240 எண்ணிக்கை. |
| டீசல் எஞ்சின்கள் .. .. .. .. | 2 | 11,766 எண்ணிக்கை. | 3 | 8,859 எண்ணிக்கை. | 3 | 8,296 எண்ணிக்கை. |
| உரங்கள் .. .. .. .. .. | 3 | 1,19,312 டன்கள். | 8 | 2,49,442 டன்கள். | 8 | 2,96,764 டன்கள். |
| வேண்டும் உருவுக்குக் கொண்டுவருதல் .. | .. | .. | 5 | 5,875 டன்கள். | 6 | 8,811 மெட்ரிக் டன் கள். |
| மோட்டார் சைக்கிளும் ஸ்கூட்டரும் .. .. | 1 | 3,901 எண்ணிக்கை. | 1 | 8,298 எண்ணிக்கை. | 1 | 10,414 எண்ணிக்கை. |
| தீயகம் .. .. .. .. .. | 1 | 11,02,000 கன மீட்டர் | 2 | 16,73,000 கன மீட்டர். | 2 | 34,47,914 கன மீட்டர். |
| பூச்சு வண்ணங்கள் .. .. .. .. | 1 | 4,90,697 காலன்கள் | 1 | 34,75,395 லிட்டர்கள். | 1 | 21,96,505 லிட்டர்கள். |
| காகிதம் .. .. .. .. .. | .. | .. | 3 | 24,042 டன்கள். | 4 | 45,648 டன்கள். |
| குழாய்கள் .. .. .. .. .. | .. | .. | 1 | 132,47,855 மீட்டர். | 1 | 1,4164,275 மீட்டர். |



| பொருள்கள், | 1961 | | 1966 | | 1970 | |
|---|---|---|---|---|---|---|
| | பிரிவுகளின் எண்ணிக்கை. | உற்பத்தி. | பிரிவுகளின் எண்ணிக்கை. | உற்பத்தி | பிரிவுகளின் எண்ணிக்கை. | உற்பத்தி |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| சர்க்கரை .. .. .. .. .. | 7 | 1,29,306 | 14 | 2,25,907 டன்கள். | 15 | 3,01,350 டன்கள். |
| கந்தக அமிலம் .. .. .. .. | 1 | 24,175 டன்கள். | 6 | 87,492 டன்கள். | 6 | 71,820 மெட்ரிக் டன்கள். |
| மின் அழுத்த மாற்றிகள் .. .. .. | 3 | 1,83,160 K.V.A. | 3 | 9,46,275 K.V.A. | 3 | 7,13,622 K.V.A. |
| தட்டச்சு .. .. .. .. .. | 1 | 3,755 எண்ணிக்கை. | 1 | 8,660 எண்ணிக்கை. | 1 | 8,781 எண்ணிக்கை. |
| மோட்டார் டயர்கள் .. .. .. .. | 1 | 1,04,700 எண்ணிக்கை. | 2 | 4,23,123 எண்ணிக்கை. | 2 | 9,28,030 எண்ணிக்கை. |
| மோட்டார் டியூபுகள் .. .. .. .. | .. | .. | 1 | 22,306 எண்ணிக்கை. | 2 | 8,20,078 எண்ணிக்கை. |
| சைக்கிள் டயர்கள் .. .. .. | 1 | 15,34,360 எண்ணிக்கை. | 1 | 39,46,066 எண்ணிக்கை. | 1 | 55,74,000 எண்ணிக்கை. |
| வனஸ்பதி .. .. .. .. .. | 4 | 12,714 டன்கள். | 4 | 13,320 டன்கள். | 4 | 14,110 டன்கள். |

## நிறுவனக் கடன்

இந்தியத் தொழிலியல் நிதிக் கழகம், தொழிலியல் கடன் வசதி முதலீட்டுக் கழகம், இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி, இந்திய ஸ்டேட் வங்கி, இந்திய ரிசர்வ் வங்கி, இந்திய ஆயுள் ஈட்டுறுதிக் கழகம் போன்ற மத்திய நிறுவன நிதி அமைப்புகளும் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம், தமிழ் நாடு தொழில் கூட்டுறவு வங்கி, தமிழ்நாடு கூட்டுறவு வங்கி போன்ற மாநில நிறுவன நிதி முகவர்களும் அளித்த கடன் வசதியைக் கொண்டு இம் மாநிலத் தொழில்கள் தொடர்ந்து பெரும் பயன் பெற்று வருகின்றன.

1970-ஆம் ஆண்டில் இந்தியத் தொழிலியல் நிதிக் கழகம் அனைத்திந்திய அடிப்படையில் ரூ. 26·31 கோடி நிதி உதவி அளித்தது. அதில் ரூ. 3·03 கோடி இம் மாநிலத்தில் உள்ள தொழில் பிரிவுகளுக்காகும். இக் கழகம் தொடங்கப்பட்டதிலிருந்து 1970 டிசம்பர் 31-ஆம் நாள் வரை அது அளித்த உதவி ரூ. 350·52 கோடியாகும். இதில் இம் மாநிலத்தில் உள்ள 58 தொழில் பிரிவுகளுக்கு ரூ. 49·60 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது. 1970 டிசம்பர் 31-ஆம் நாள் வரை கழகத்தினால் அனுமதிக்கப்பட்ட மாநில வாரியான நிதி உதவியைக் கருதிப் பார்த்தால், தமிழ் நாட்டில் உள்ள தொழில் பிரிவுகளுக்கு அனுமதிக்கப்பட்ட உதவித் தொகை மகாராஷ்டிராவுக்கு அடுத்தபடியாக இருப்பது தெரியவரும். கீழே கொடுத்துள்ள புள்ளி விவரங்களில் இதைக் காணலாம் :—

| மாநிலம். | பிரிவுகளின் எண்ணிக்கை | அனுமதிக்கப்பட்ட நிதி உதவி. |
|---|---|---|
| (1) | (2) | (3) (ரூபாய் இலட்சத்தில்.) |
| ஆந்திரப் பிரதேசம் .. .. .. | 32 | 2,549·09 |
| அஸ்ஸாம் .. .. .. .. | 6 | 651·79 |
| பீஹார் .. .. .. .. | 24 | 1,937·61 |
| குஜராத் .. .. .. .. | 40 | 2,207·59 |
| அரியானா .. .. .. .. | 22 | 1,015·90 |
| கேரளா .. .. .. .. | 15 | 1,134·19 |
| மத்தியப் பிரதேசம் .. .. .. | 14 | 875·89 |
| மகாராஷ்டிரா .. .. .. .. | 113 | 7,379·11 |
| மேகலாயா .. .. .. .. | 1 | 95·00 |
| மைசூர் .. .. .. .. | 36 | 2,105·02 |
| ஒரிஸ்ஸா .. .. .. .. | 14 | 850·93 |
| பஞ்சாப் .. .. .. .. | 11 | 684·28 |
| ராஜஸ்தான் .. .. .. .. | 12 | 1,528·00 |
| தமிழ்நாடு .. .. .. .. | 58 | 4,960·43 |
| உத்திரப் பிரதேசம் .. .. .. | 36 | 2,540·37 |
| மேற்கு வங்காளம் .. .. .. | 74 | 4,095·67 |
| டில்லி .. .. .. .. | 4 | 299·67 |
| அந்தமான்-நிகோபார் தீவுகள் .. | 1 | 11·00 |
| புதுச்சேரி .. .. .. .. | 1 | 60·16 |
| கோவா .. .. .. .. | 1 | 75·00 |
| மொத்தம் .. | 515 | 35,052·70 |



இந்தியத் தொழில் கடன் வசதி முதலீட்டுக் கழகம் ரூ. 34·15 கோடி நிதி உதவியை அனுமதித்துள்ளது. இதில் ரூ. 2·55 கோடி தமிழ் நாட்டில் உள்ள தொழில் பிரிவுகளுக்காக 1970-ஆம் ஆண்டில் ஒப்பளிக்கப்பட்டது. கழகம் தொடங்கியதிலிருந்து 1970 டிசம்பர் வரை அது அனுமதித்துள்ள மொத்தத் தொகை ரூ. 295·70 கோடியாகும். இதில் ரூ. 30·62 கோடி (10·3 சத வீதம்) தமிழ் நாட்டில் உள்ள தொழில் பிரிவுகளுக்கு ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி இந்தியா முழுவதற்குமாக மொத்தம் ரூ. 347·1 கோடி உதவி செய்திருக்க இம் மாநிலத்தில் உள்ள தொழில் நிறுவனங்களுக்காக ரூ. 41·78 கோடி ஒப்பளிப்பு செய்துள்ளது. இந்திய தொழில் வளர்ச்சி வங்கி 1964 ஜூலை முதல் 1970 ஜூன் வரை மாநில வாரியாக நிதி உதவி ஒப்பளித்து வழங்கியதில் மற்ற மாநிலங்களுடன் ஒப்பிடும்போது தமிழ் நாட்டுக்குக் கிடைத்த தொகை விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.—

| மாநிலம். | ஒப்பளித்த நிதி உதவி. | வழங்கிய நிதி. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | (ரூபாய் இலட்சத்தில்.) | |
| ஆந்திரப் பிரதேசம் .. .. .. | 1,864·1 | 1,748·9 |
| அஸ்ஸாம் .. .. .. .. | 12·4 | 24·4 |
| பீஹார் .. .. .. .. | 872·1 | 745·5 |
| குஜராத் .. .. .. .. | 4,301·9 | 3,527·4 |
| அரியானா .. .. | 429·1 | 334·1 |
| ஜம்மு, காஷ்மீர் .. .. .. | .. | 30·0 |
| கேரளா .. .. .. .. | 518·5 | 511·5 |
| மத்தியப் பிரதேசம் .. .. .. | 1,281·7 | 690·3 |
| மகாராஷ்டிரா .. .. .. .. | 11,880·6 | 9,759·4 |
| மைசூர் .. .. .. .. | 1,390·6 | 1,139·3 |
| நாகாலாந்து .. .. .. .. | .. | .. |
| ஒரிஸ்ஸா .. .. .. .. | 517·2 | 238·7 |
| பஞ்சாப் .. .. .. .. | 130·4 | 144·6 |
| ராஜஸ்தான் .. .. .. .. | 1,137·4 | 903·1 |
| தமிழ்நாடு .. .. .. .. | 4,178·0 | 3,756·1 |
| உத்திரப் பிரதேசம் .. .. .. | 1,325·8 | 1,201·8 |
| மேற்கு வங்காளம் .. .. .. | 4,121·0 | 2,700·8 |
| மத்திய நேரடி ஆட்சிப் பகுதிகள் .. | 749·9 | 476·3 |
| மொத்தம் .. | 34,710·7 | 27,932·2 |

1969-70-ல் இந்திய ஸ்டேட் வங்கி (State Bank of India) தமிழ் நாட்டில் உள்ள தொழில்களுக்கு கீழ் குறிப்பிட்டவாறு நிதி உதவியை அளித்தது.

| | நிதி உதவி பெற்ற தொழில் பிரிவுகளின் எண்ணிக்கை. | வழங்கப்பட்ட தொகை வரம்பு. |
|---|---|---|
| (1) | (2) | (3) (ரூபாய் கோடியில்) |
| 1. சிறு தொழில்கள் .. .. .. | 1,217 | 6·60 |
| 2. சிறு தொழில் நீங்கலான பிற தொழில்கள். | 69 | 80·06 |

நிதி உதவி அளிப்பதன் மூலம் மாநிலத்தில் தொழில் வளர்ச்சிக்கு உதவி செய்ய பட்டியல் வங்கிகளும் அதிக அளவில் உதவி செய்துள்ளன. 1969 செப்டம்பர் வரை, பட்டியல் வணிக வங்கிகள் அனைத்தின் மூலம் தமிழ்நாட்டிற்குக் கிடைத்த கடன் வசதி ரூ. 143·11 கோடியாகவும், 1970 செப்டம்பர் வரை மேற்சொன்ன தொகை ரூ. 169·21 கோடியாகவும் இருந்தது.

### தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம்.

தமிழ்நாட்டில் உள்ள தொழில் பிரிவுகளுக்கு நிதி உதவி அளிப்பதற்காக தமிழ்நாடு அரசு இக் கழகத்தைத் தோற்றுவித்தது. கழகம் 1970-ஆம் ஆண்டில் தொடர்ந்து தன் பணியைச் திறம்படச் செய்தது. 1970-ஆம் ஆண்டில் கழகம் அளித்த நிதி உதவியின் அளவு கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| வரிசை எண்ணும் நிதி உதவியின் தன்மையும். | 1970-ஆம் ஆண்டில் 1-1-1970 முதல் 31-12-1970 வரை அனுமதிக்கப்பட்ட நிதி உதவி. | | தொடக்கத்திலிருந்து அனுமதியளித்த தொகை. | |
|---|---|---|---|---|
| | விண்ணப்பங்களின் எண்ணிக்கை. | தொகை. | விண்ணப்பங்களின் எண்ணிக்கை. | தொகை. |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | ரூ. | | ரூ. |
| ரொக்கக் கடன்கள் ... | 62 | 3,42,98,300 | 416 | 30,25,00,611 |
| கூட்டுக் கடன்கள் .. | 1 | 15,00,000 | 14 | 1,81,65,000 |
| உத்திரவாத வகையில் கொடுத்த கடன்கள். | ... | ... | 27 | 6,36,15,084 |
| பின்னர் பணம் திருப்பிச் செலுத்துவதற்குக் கொடுத்த உத்திரவாதம். | 6 | 54,88,544 | 77 | 16,38,24,817 |
| பங்குகளுக்கு உத்திரவாதம் அளித்த வகையில். | 5 | 16,00,000 | 98 | 13,33,60,500 |
| கடனீட்டுப் பத்திரங்களுக்கு உத்தரவாதம் அளித்த வகையில். | .. | .. | 1 | 15,00,000 |

### தமிழ்நாடு தொழில் கூட்டுறவு வங்கி.

மாநிலத்தில் உள்ள தொழில் கூட்டுறவுகளுக்கும், சிறு தொழில் பிரிவுகளுக்கும் நிதி உதவி அளிப்பதையே தன் முக்கியக் குறிக்கோளாகக் கொண்டு, தமிழ்நாடு தொழில் கூட்டுறவு வங்கி ஏற்படுத்தப்பட்டது. 1970-ஆம் ஆண்டில், செயல் கால அளவு முடிவடைந்த ரொக்கக் கடன் வசதியைப் புதுப்பித்துக் கொடுத்தல் தவிர, தொழில் கூட்டுறவுகளுக்குக் கடன்களாகவும், ரொக்கக் கடன்களாகவும் மொத்தம் ரூ. 40·77 லட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது.



### தமிழ்நாடு கூட்டுறவு வங்கி.

.. கூட்டுறவு நூற்பு ஆலைகள், சர்க்கரை ஆலைகள் போன்ற பெரிய அளவிலான தொழில் கூட்டுறவுகளுக்கு இந்த வங்கி நிதி உதவி அளிக்கிறது. 1970-ஆம் ஆண்டில் ரூ. 534 லட்சத்துக்குத் தவணைக் கடன்களும் ரொக்கக் கடன்களும் இந்த வங்கி கொடுத்துள்ளது.

### சுரங்கங்களும் கனி வளங்களும்.

சிவகங்கை, திருமங்கலம் பகுதிகளில் காரியகப்படிவங்கள் கிடைப்பதைப் பற்றியும், திசையன்விளைப் பகுதியில் கிளிஞ்சல் சுண்ணாம்புக்கல் பற்றியும் அரசு மட்பாண்ட நிலையத்திற்கான களிமண் பற்றியும், [illegible] மாவட்டத்தில் ஒகேனக்கல் பகுதியில் கனிவள அளவைப் பற்றியும், முந்தைய ஆண்டுகளில் நடைபெற்ற கனி வளப்படிவங்களின் விரிவான ஆய்வுப் பணியை மாநில புவியியல் பிரிவு இந்த ஆய்வுரை ஆண்டிலும் தொடர்ந்து நடத்தியது. மேலும், தென் ஆர்க்காடு மாவட்டத்தில், மரக்காணத்திற்கு அருகில் சுண்ணாம்புக்கல், திருநெல்வேலி மாவட்டத்தில் களக்காட்டுப் பகுதியில் கனிவள அளவை பற்றிய ஆய்வுகளும், சவர்காரக்கல், படிகக்கல் முதலிய கனிவளங்கள் கிடைப்பது பற்றிய சிறு ஆய்வுப் பணிகளும் எடுத்துக்கொள்ளப்பட்டன. மாநில வீட்டு வசதி வாரியத்திற்கு, அவர்களால் கருதப்பட்டுள்ள, புழைக்கற்கலவைத் திட்டத்திற்காகத் திருச்சிராப்பள்ளி பகுதியில் சுண்ணாம்புக்கற்களைச் சேகரிப்பதற்கும், சோதனை செய்வதற்கும் தொழில் நுட்ப உதவி அளிக்கப்பட்டது. தொழில்கள், தொழிற்பேட்டைகள் முதலியவற்றின் தேவைகளை நிறைவு செய்வதற்காக நிலநீர் ஆய்வுகளும் ஒருசில மேற்கொள்ளப்பட்டன. 1970-ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட கனிவள, நிலநீர் ஆய்வுகள் பற்றிய விவரங்கள் இணைப்பு எண் VIII இல் கொடுக்கப்பட்டிருக்கின்றன. முக்கிய ஆய்வுகளைப் பற்றிய சுருக்கமான விளக்கவுரை கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

சிவகங்கையில் I-ஆம் II-ஆம் பிரிவுகளில் கரியகப் படிவங்கள் பற்றிய விரிவான ஆய்வு தொடர்ந்து நடைபெற்றது. மொத்தம் 393 மீட்டர் நீளத்திற்கு 14 துளைகள் இடப்பட்டுள்ளன. ஒழுங்கான இடைவெளிகளில் 35 பள்ளங்கள் தோண்டப்பட்டுள்ளன. I-ஆம் பிரிவில் 4 முதல் 8 மீட்டர் கனத்திற்கும் II-ம் பிரிவில் 1 முதல் 5·5 மீட்டர் கனத்திற்கும் காரியகப் படிவங்கள் இருப்பதை இவை வெளிப்படுத்தின. காரியகப் படிவங்களின் செறிவு 18 முதல் 23 சதவீதம் வரை மதிப்பிடப்பட்டுள்ளது.

திருமங்கலம் பகுதியில் மொத்தம் 35 பள்ளங்கள் தோண்டப்பட்டன. ஒரு துளையிடப்பட்டது. 3 முதல் 4 மீட்டர் அகலமுள்ள காரியகப் படிவப்பகுதிகள் வெளிப்பட்டன. காரியகப்படிவங்களின் செறிவு 7 சதவீதம் என மதிப்பிடப்பட்டது. இத்துறையின் ஆலோசனையின் படி, கனிவளத்தன்மையைத் தீர்மானிக்க இந்திய நிலவியல் அளவை நிறுவனத்தால் நில உட்கூற்றியலை அறிவதற்காக உசிலம்பட்டி வட்டத்தில் கல்லூத்துப் பகுதியில் உள்ள காரியகப் படிவங்கள் எடுத்துக்கொள்ளப்பட்டன.

திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த நாங்குனேரி, திருச்செந்தூர் வட்டங்களில் உள்ள அரசூர், கரிக்கோயில் கிராமங்களில் 1 சதுர கிலோமீட்டர் பரப்பிற்கு கிளிஞ்சல் சுண்ணாம்புக்கல் கிடைக்குமென்று தெரியவந்துள்ளது இணைப்பாக 17 துளைகளிடப்பட்டன. 4 மீட்டர் கனத்திற்குச் சுண்ணாம்புக் கற்கள் இருக்கக் காணப்பட்டது. சிமிட்டி தயாரிப்பதற்கேற்ற 50 லட்சம் டன் கிளிஞ்சல் சுண்ணாம்புக்கல்லும், இரும்பு உற்பத்தி செய்வதற்கு ஏற்ற (சுண்ணாம்பு ஆக்சைடு சராசரியாக 46 சதவீதம்) சுண்ணாம்புக்கல் ஓரளவும் இப்பகுதியில் இருக்கிறதென மெய்ப்பிக்கப்பட்டுள்ளது.

தென் ஆர்க்காடு மாவட்டத்தில், மரக்காணத்திற்கு அருகில் உள்ள உப்பங்கழிகளில் கிடைக்கும் சுண்ணாம்புக்கற்களின் தரம், அளவு ஆகியவற்றை அறிவதற்காக அவை விரிவாக ஆராயப்படுகின்றன. 5 சதுர கிலோமீட்டர் பரப்பு ஆய்வு செய்யப்பட்டது. கிளிஞ்சல்கள் எந்த அளவு அடர்ந்துள்ளன என ஆராய்வதற்காக 1,200 சோதனைத் துளைகள் இடப்பட்டன. சில லட்சம் டன்கள் கிளிஞ்சல் இங்கு கிடைக்குமென்று மதிப்பிடப்பட்டுள்ளது.

மாநில வீட்டு வசதி வாரியத்திற்கு, எண்ணூரில் அவர்களால் கருதப்பட்டுள்ள புழைக்கற்கலவைத் திட்டத்திற்கான சுண்ணாம்புக் கற்களைப் பெறுவதற்குப் பொருத்தமான இடங்களைத் தேர்ந்தெடுக்க உதவி அளிக்கப்பட்டது. கருதப்பட்ட இடம் சுண்ணாம்புக் காளவாய்க்குப்பொருத்தமானதுதானா என்று பரிசோதிப்பதற்கு, பெரம்பலூர், லால்குடி வட்டங்களில் கிடைக்கும் பல்வேறு சுண்ணாம்புக் கற்களின் மாதிரிகள் பொறுக்கி எடுக்கப்பட்டன.

மேற் சொன்னவற்றோடுகூட, சோடா உப்பு, பொட்டாசியம் குளோரேட்டு முதலியன உற்பத்திசெய்யும் தொழிற்சாலைகளின் தேவைகளை நிறைவு செய்வதற்காக நிலநீர் ஆய்வுகளும் நடத்தப்பட்டன. வேளாண்மை மறு கடன் வழங்கும் கழகத்தால் தீட்டப்பட்டுள்ள திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக, கோயம்புத்தூர், ராமநாதபுரம், மதுரை மாவட்டங்களில் தேர்ந்தெடுத்த சில பகுதிகள் நில நீர்வளம் பற்றி ஆய்வு செய்ய எடுத்துக்கொள்ளப்பட்டன.

வட ஆர்க்காடு மாவட்டத்தில் திருப்பத்தூர் வட்டத்தில் கிடைக்கும் வெர்மிகுலைட் அபிரகத்தை வெட்டியெடுக்கவும், வேலை முறைக்குட்படுத்தவும் அரசு ஒரு திட்டத்தை அனுமதித்துள்ளது. மின்காப்புக் கற்கள், அபிரகப் பலகைகள், பூச்சுவர்ணங்கள், தாள்கள் முதலியவை செய்ய அக்கனி வளத்தைப் பயன்படுத்த முடியும்.

வெர்மிகுலைட் அபிரகம் கிடைக்கும் நிலங்கள் உடைமையாக்கப்பட்டு சுரங்கவேலை தொடங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. சுரங்க வேலை தொடங்குவதற்கான அறிவிப்பும் தொடர்புள்ள அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது.

அம்பத்தூர் தொழிற்பேட்டையில் கனிப்படல உரிவைஆலைக்கான கட்டடம் கட்டி முடிக்கப்படும் தறுவாயில் இருக்கிறது. அங்கு கனி வளத்தை வேலை முறைக்குட்படுத்தக் கருதப்பட்டுள்ளது. அதிர்வுகளைக் காட்டும் இயந்திரம், நிறுவை அளவைகள், சுரங்கக் கருவிகள் முதலியவை இங்கு வந்து சேர்ந்துள்ளன. இவற்றை வழங்கும் ஒருவரைக் கண்டுபிடிப்பதற்கு அல்லது வெர்மிகுலைட் அபிரகக் கனி வளத்தை படலம் படலமாக உரித்தெடுப்பதற்கு ஒரு காளவாயைத் துறைவாரியாக அமைப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இம்மாநிலத்தில் கிடைக்கக் கூடிய பல்வேறு வகைகளைச் சேர்ந்த கனிகளின் பெருமளவு மாதிரிகளை ஆய்வு செய்யவும், அவைகளைச் சுத்தப்படுத்தும் வழிகள் வகுக்கவும், சுத்தப்படுத்தும் முறைகளை வகுக்கவும் பயன்படும் வகைகளை ஆராயவும் 20 லட்சம் ரூபாய் செலவில் கனிவள ஆய்வுக்கூடம் ஒன்றினை முன்னோடி ஆலைத் திட்ட அடிப்படையில் கட்டுவதற்குரிய திட்டம் ஒன்றை அரசு அனுமதித்துள்ளது. இம் மாநிலத்தில் கிடைக்கும் பல்வேறு கனிகள் எந்த அளவுக்குத் தொழில்களுக்குப் பயன்படும் என்பதன் சாத்தியக் கூறுகள் பற்றி விரிவாக ஆராய இத் திட்டம பெரிதும் பயன்படும். இத் திட்டப் பணி அடுத்த நிதியாண்டிலிருந்து மேற்கொள்ளப்படும்.

## தமிழ்நாட்டுக் கனிவள வளர்ச்சித் திட்டம்

தமிழ்நாட்டுக் கனிவள வளர்ச்சித் திட்டம் ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டத்தின் உதவியுடன் செயல்பட தமிழ்நாட்டு அரசு 1968-ஆம் ஆண்டில் அனுமதி வழங்கியது. இந்த ஐந்தாண்டு காலத் திட்டத்திற்கு இந்த





அரசிடமிருந்து 34·63 லட்சம் ரூபாயும், ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டச் சிறப்பு நிதியிலிருந்து 10·2 லட்சம் டாலர்கள் (77 லட்சம் ரூபாயும்) செலவாகின்றது. வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு, சேலம், தர்மபுரி மாவட்டங்களில் சுமார் 20,000 சதுர கிலோ மீட்டர் பகுதிகளில் கனிவள ஆய்வு நடைபெற்றது. இத்திட்டம் விமானத்திலிருந்து நிழற்படம் எடுப்பு துடன்தொடங்கப்பட்டது. அதைத் தொடர்ந்து வரிசையாகக் காந்த, கதிரியக்க (Radiometric) ஆய்வுகள் பல தொடர்ந்து நடைபெற்றன. விமான மூலம் நில உட்கூற்றியல் ஆய்வு (காந்தம், கதிரியக்கம் இவ்விரண்டும்) இத் திட்டப் பகுதியிலுள்ள எல்லா நிலவியல் அமைப்புகள் பற்றியும் மதிப்பிடப் பெரிதும் பயன்பட்டது. சுமார் 30 கோடி டன் தாது அளவுள்ள நடுத்தர அயக்காந்தப் படிகக் கற்களாலான விதமான இரும்புக் கனிப் படிவங்கள் பல இடங்களில் இருப்பதை இந்த ஆய்வுகள் வெளிப்படுத்தின. வட ஆர்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த திருவண்ணாமலைக்கு வட மேற்கே சுமார் 10 கிலோ மீட்டர் தொலைவில் கவுதி மலையிலும், வேதியப்பன் மலையிலும் பெருமளவில் இரும்புக் கனி இருப்பதாக (சுமார் 14 கோடி டன் இருப்பதாக) இவற்றிலிருந்து தெரிய வந்தது.

இத் திட்டத்தின் முதல் நிலை முடிவுற்றபோது எய்திய சாதனைகளில் கீழ்க்காணும் கனிவளப் படிவங்கள் கண்டுபிடிக்கப்பட்டதும் அடங்கும்

1. திருவண்ணாமலைப் பகுதியில் இரும்புக் கனி 14 கோடி டன்கள் சராசரியாக 40 முதல் 44 சதவீதம் வரை இரும்புள்ளவை. இவை கஞ்சமலையிலுள்ள படிவங்களை (அயக்காந்தப் படிகக் கற்கள்) ஒத்துள்ளன.

2. திருப்பத்தூருக்கு அருகில் சிவித்தூக்கொறட்டிப் பகுதியில் 350,000 டன்கள் வெர்மிகுலைட் அபிரகம் இப் பணி வளர்ச்சியுற்று வருகிறது.

3. திருப்பத்தூருக்கு அருகில் 190,000 டன்கள் சுண்ணாம்பு பாஸ்பேட்டும் (அபடைட்), 324,000 டன்கள் அயக்காந்த இரும்பும். பைரோகுளோர் (கார்போனடைட்டில் ஒரு கதிரியக்க கனிவளம் 800 டன்களும் கிடைக்கின்றன.

படிகக் கற்கள், சில்லிமனைட்டு, வொல்லஸ்டனைட்டு முதலிய பிற கனி வளங்களும் கிடைப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. கற்பாறை அமைப்பியல், நிலவியல்–இராசாயன இயல், கனிகள் சுத்தம் செய்யும் நவீன வசதிகள் நிறைந்த ஆய்வுக்கூடங்களை இத் திட்டம் அமைத்துள்ளது. காரியகப் படிவங்கள், இரும்புக் கனிகள் (கஞ்சமலைப் பகுதி இரும்புக் கனிகளுக்குக் கூடுதலான கற்பாறை அமைப்பியல் வேலைகள் நடைபெற்று வருகின்றன). சுண்ணாம்பு பாஸ்பேட் (அபடைட்), அபிரகம் (வெர்மிகுலைட்) முதலியன நல்ல முறையில் பயன் தரும் வகையில் கனித்தூய்மை ஆய்வுக்கூடங்களில் தூய்மைப்படுத்தப்பட்டு பயனுக்கங்கள் நிறைவேற்றப்படுகின்றன. நில உட்கூற்றியல் அளவை, நிலவியல் நிழற்படம், இரசாயனம் முதலிய துறைகளுக்குத் தேவையான பயனுள்ள கருவிகளும், சாதனங்களும் ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்ட நிறுவனத்திடமிருந்து பெறப்பட்டிருக்கின்றன. நவீனக் கருவிகளைக் கையாளுவதற்கு இந்திய அலுவலர்களுக்கு நல்ல முறையில் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

இத் திட்டப் பகுதியில் உள்ள முக்கிய நிலவியல் அமைப்புகளை இத் திட்டம் நன்கு புலப்படுத்துகின்றது. அடுத்துள்ள பகுதிகளில் பணி மேற்கொள்ள அது பயனுள்ள வழிகாட்டியாக விளங்குகின்றது.

ஊக்கமளிக்கக் கூடிய முடிவுகள் கிடைத்திருப்பதாலும், இத் திட்டப் பகுதியின் தென்மேற்கில் இது போன்ற கனிவளப் படிவங்கள் கிடைப்பதற்குச் சாத்தியமிருப்பதாலும், தற்போதைய திட்டப் பகுதியின் தென் மேற்கில், சேலம், கோயம்புத்தூர், மதுரை மாவட்டங்களில் சுமார் 13,000 சதுர கிலோ மீட்டர் பரப்பில் முனைப்பான கனிவள ஆய்வை இத்திட்டத்தின் 2–வது வளர்ச்சிப் படியாக இரண்டாண்டுகளுக்கு நடத்தும்படி அரசுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டிருக்கின்றது. இது இந்திய அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டத்தின் அனுமதி எதிர்பார்க்கப்படுகின்றது.

### உப்பு—ரசாயனப் பொருள்கள் தொடர்பான

### தமிழ் நாடு மாநில வாரியம்.

உப்பு எடுப்பதற்கான இடங்களை முறையாக அளவை செய்யவும் இது குறித்து மேற்கொள்ளப்பட வேண்டிய குறிப்பான நடவடிக்கைகள் பற்றி கருத்துரை நல்கவும், தற்போதுள்ள உப்பளங்களின் விளைவுத்திறனை மேலும் பெருக்குவதற்கான வாய்ப்புகளை மதிப்பிடவும் புதிய உப்பளங்களை அமைப்பதற்கும் இன்ன பிறவற்றை ஆராயவும் அரசு உப்பு, அது தொடர்பான இராசயனப் பொருள்களுக்கான தமிழ்நாட்டு வாரியத்தை அமைத்தது (தொழில்துறையில் 26–2–1971-அன்று வெளியிடப்பட்ட 535-ஆம் அரசு ஆணையைப் பார்க்கவும்). இவ்வாரியம் சட்டபூர்வமாக அமைக்கப்பட்டதல்ல இது ஆலோசனை வழங்கும் வாரியமே ஆகும். தொழில் அமைச்சர் இந்த வாரியத்தின் தலைவர் ஆவார். தொழில்—வாணிபத் துறை இயக்குநர் இவ்வாரியத்தின் செயலாளர் ஆவார். இவ் வாரியத்தில் மேலும் 13 உறுப்பினர்கள் உள்ளனர்.

2. தொடர்ந்தாற்போல் உள்ள பகுதிகளில் பெரிய உப்பளங்களை திட்டமிட்டு அமைத்தல், உப்பின் தரம் உயர தொழில் நுட்ப உதவி அளித்தல், உப்பு ஏற்றுமதி செய்தல், உப்பை அடிப்படையாகக் கொண்டுள்ள கடல் இரசாயனத் தொழில்கள் முதலியவற்றைத் தொடங்குதல் போன்றவை குறித்து அரசுக்கு ஆலோசனை வழங்குவதே இவ் வாரியத்தின் முக்கிய அலுவல்களாகும்.

3. தொழில் நுட்ப முறையில் வாரியத்திற்கு உதவி செய்வதற்காக சென்னையில் உள்ள, உப்பு கடல் இரசாயனத் தொழில்கள் ஆலோசகராகிய திரு. எம். எம். குருநாத் அவர்களை வாரியத்தின் பகுதி நேரத் தொழில் நுட்ப ஆலோசகராக நியமிக்க அரசு முடிவு செய்துள்ளது. வாரியத்தின் கூட்டங்களில் செய்யப்படும் முடிவுகளை நிறைவேற்றுவது குறித்துத் திறம்பட மேற்கொண்டும் நடவடிக்கை எடுப்பதற்காக வாரியத்தில் முழு நேரத் துணைச் செயலாளர் ஒருவரை நியமிக்கவும் அரசு முடிவு செய்துள்ளது.

### தொழில் வளர்ச்சிக்கு ஊக்கம் அளிப்பதற்கான நடவடிக்கைகள்.

இம்மாநிலத்தில் தொழில் வளம் மேலும் பெருக அரசு தொழில் முனைவர்களுக்கு ஊக்கமளிக்கும் வகையில் கீழ்க்காணும் வசதிகளை அளிக்கின்றது:—

### 1. தொழில் தொடங்குவதற்கான வாய்ப்புகள் குறித்த அறிக்கை

தொழில்கள் தொடங்குவதற்கான வாய்ப்புகள் குறித்த அறிக்கை அரசினால் தயாரிக்கப்படுகின்றது. இந்த அறிக்கைகள் புதிய தொழில்களுக்கு இலவசமாக அளிக்கப்படும். ஆனால் இந்த அறிக்கைகள் அரசின் உடைமையாகும். தொழில் முனைவர் அரசின் இசைவுடன் தொழில்வாய்ப்பு குறித்த ஆய்வை மேற்கொள்கையில் அதற்கான செலவின் 75 சதவீதத்தை அரசு மேற்கொள்ளும். புதிய தொழில் பிரிவு உற்பத்தி தொடங்கியவுடன், இந்த உதவித் தொகை இத் திட்டத்திற்கான பங்கு மூலதனமாக மாற்றப்படும்.

### 2. உத்தரவாதங்கள்.

தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் உத்தரவாதங்களை அளிக்கிறது. இக் கழகத்தின் பொறுப்புகளுக்கு அரசு உத்தரவாதமளிக்கின்றது. குறிப்பிட்ட சில நேர்வுகளில் அரசும் கழகத்துடன் சேர்ந்து உத்தரவாதம் அளிக்கின்றது.





### 3. நிலம்.

பொது நலனுக்கு உதவக்கூடிய தொழில்கள் சார்பாக நிலங்கள், நிலங்கள் கையகப்படுத்துதல் சட்டத்தின் கீழ் கட்டாயமாகக் கையகப்படுத்தப்படுகின்றன. அவ்வாறு கையகப்படுத்தப்படும் நிலங்கள் தொழில் முனைவர்கள் தொழிற்சாலைகளை நிறுவுவது சாத்தியமாகும் வகையில் ஆதாய, விரயமற்ற அடிப்படையில் தொழில் முனைவர்களிடம் ஒப்படைக்கப்படுகின்றன.

இவை தவிர, தொழில் உரிமையாளர்கள் தங்கள் தேவைகளுக்கேற்ப பெரிய அல்லது நடுத்தரத் தொழிற்பிரிவுகளைக் கட்டிக்கொள்ள ஏற்ற வகையில் சாலைகள், விளக்குகள், வடிகால், சாக்கடை, நீர் வழங்கல், மின்சக்தி ஆகிய வசதிகளுடன் கூடிய, பல்வேறு அளவுகளில் உள்ள, மேம்படுத்தப்பட்ட மனைகள் தொழில் முனைவர்களுக்குக் கொடுக்கப்படுகின்றன. மனைகள் ஒதுக்குதல், அவற்றிற்கான விலையை வசூலித்தல் ஆகியவை குறித்த நிபந்தனைகள் தளர்த்தப்பட்டுள்ளன. வெளியூர்களில் மனைகளை எடுத்துக்கொள்ளும் தொழில் முனைவர்களுக்கு, அவர்கள் தொடக்கநிலையில் செலுத்தவேண்டிய தவணைத் தொகைகளைக் குறைப்பதன் மூலமும், மனைகளுக்கான விலையை வசூலிப்பதற்கான காலஅளவை நீட்டிப்பதன் மூலமும் 95 ஆண்டுகள் வரை நீண்டகாலக் குத்தகை அடிப்படையில் மனைகளை வழங்குவதன் மூலமும் ஊக்கமளிக்கப்படுகின்றது.

### 4. மின்சக்திக் கட்டணம்.

அனல் மின்சக்திப் பகுதியில் உயர் அழுத்தத் தொழில்களுக்கான மின்சக்தி வரியின் 10 சதவீதம் ரத்து செய்யப்படவேண்டுமென செயற்குழு பரிவுரை செய்துள்ளது. அரசு இப் பரிவுரைக்கு ஏற்பளித்துள்ளது.

மின்சக்திக் கட்டணங்களைப் பொறுத்தவரையில் (மேல் வரி உட்பட) அரசு கீழ்க்காணும் சலுகை வீதங்களையும் புதிய தொழில்களுக்கு அனுமதித்துள்ளது:—

முதல் மூன்று ஆண்டுகளுக்கு—66⅔ சதவீதம்.

நான்காவது ஆண்டுக்கு—80 சதவீதம்.

ஐந்தாவது ஆண்டுக்கு—90 சதவீதம்.

ஆறுவது ஆண்டுக்கு—முழுக்கட்டணம்.

மேற்கண்ட சலுகைகள் எரிபொருளுக்கான மேல் வரி உட்பட மேல் வரிக்கும் யூனிட் வீதங்களுக்கும் பேரளவு கேட்புக் கட்டணங்களுக்கும் பொருந்தும்.

இரவு 9–30 மணி முதல் மறுநாள் காலை 5–30 மணி வரை இரவு நேர முறை மாற்றுப்பணியாற்றும் புதிய தொழிற்சாலைகளுக்கு, இரவு நேர முறை மாற்றுப்பணி தொடங்கிய கால அளவிலிருந்து 5 ஆண்டுக் கால அளவுக்கு இரவு நேர முறை மாற்றுப்பணியின்போது பயன்படுத்தப்படும் மின்சக்திக்காக சராசரி மின்சக்திக் கட்டண வீதத்தில் 40 சதவீதம் மட்டும் மேற்கொண்டும் சலுகை அளிக்கப்படுகிறது. "புதிய தொழிற்சாலைகளுக்கு" மேற் குறிப்பிட்ட சலுகைகள் அளிக்கப்பட்ட பின்னர், கணக்கிடப்படும் சராசரி மின்சக்திக் கட்டண வீதத்திற்கும் இச் சலுகை பொருந்தும்.

தற்போது பகல் நேரத்தில் மட்டும் செயல்பட்டு வரும் தொழிற்சாலைகளில் புதிதாக இரவு நேர முறை மாற்றுப்பணி கொண்டுவரப்பட்டால், அவை வரையறுக்கப்பட்ட நேரங்களில் பயன்படுத்தக்கூடிய மின்சக்திக்காக மேற்குறிப்பிட்ட நிபந்தனைகளுக்குட்பட்டும் அதே 5 ஆண்டுக் கால அளவிற்கும் 40 சதவீத மின்சக்திக் கட்டணச் சலுகை பெறத் தகுதியுடையதாகும்.

[1971 சூன் 30

புதிய உயர் அழுத்தத் தொழிற்சாலைகள் அனைத்தும் தொழிற்சாலைகள் (மேம்பாடு—முறைப்படுத்துதல்) சட்டத்தின்கீழ் அனுமதி வழங்கப்பட்டிருந்தாலும் இல்லாவிட்டாலும் அவற்றிற்குத் தற்போது முதல் 3 ஆண்டுகால அளவிற்கு அளிக்கப்பட்டு வந்த மின்சக்தி பயன்கொள்ளும் வகையினின்றும் விலக்கு முதல் 5 ஆண்டுக்கால அளவுக்கென நீட்டிக்கப்பட்டுள்ளது.

தற்போதுள்ள தொழிற்சாலைகளும் புதிதாகத் தொடங்கப்பட்ட தொழிற்சாலைகளும் தற்போது 75 பரித்திறன் குறைவழுத்த மின்சக்தி பெறுவதற்குப் பதிலாக 130 பரித்திறன் அளவுக்கு மின்சக்தி பெற அனுமதியளிக்கப்படுகிறது.

தொழில் துறையில் மேம்பாட்டடையாத பகுதிகளில் புதிதாக அமைக்கப்படவிருக்கும் தொழிற்சாலைகளுக்கு, வரிக்குறைப்பு செய்யப்பட்டதைத் தொடர்ந்து மின்சக்திக் கட்டண விதத்தில் 15 சதவீதம் குறைப்பு அளிக்கப்படுகிறது. இதனால் ஏற்படக்கூடிய இழப்புத் தொகை மின்சார வாரியத்திற்கு அரசினால் திருப்பிக் கொடுக்கப்படுகிறது. மேற்கூறிய காரியத்திற்காக 10 மாவட்டங்களிலிருந்து 40 வட்டங்களைத் தொழில் துறையில் பின்தங்கிய பகுதிகளாக அரசு அறிவித்துள்ளது.

## 5. தொழிற்பேட்டைகள்.

வாலாயமான தொழிற்பேட்டைகள் அந்தந்தத் தொழிலுக்குரிய தொழிற்பேட்டைகள், துணைத் தொழிற்பேட்டைகள் ஆகியவற்றையும் அரசு அமைத்துள்ளது. பல்வேறு வாணிபப் பொருள்களைத் தயாரித்துவரும் பல பிரிவுகள் இத் தொழிற்பேட்டைகளில் உள்ளன முறையாக வடிவமைக்கப்பட்டு, முன்னரே கட்டப்பட்டு நகராட்சி, தொழிற்சாலைச் சட்டங்களை உறுதி செய்யும் வகையிலான வெவ்வேறு வகைத் தொழிற்சாலைகளுடன் கூடிய மேம்படுத்தப்பட்ட, திட்டமிடப்பட்ட மனைகளை சிறு தொழில் அதிபர்களுக்கு நியாயமான வாடகைக்கு விட இத் தொழிற்பேட்டைகள் வகை செய்கின்றன.

## 6. விற்பனை வரிச் சலுகைகள்.

புதிய தொழில் முனைவர்கள் அமைக்கவிருக்கிற நடுத்தர, பெரிய தொழிற்சாலைகளின் புதிய பிரிவுகளும் தொழில் துறையில் பின்தங்கிய பகுதிகளாக திட்ட ஆணைக்குழு அறிவித்துள்ள 8 மாவட்டங்களில் தற்போதுள்ள தொழிற்சாலைகளை விரிவுபடுத்துவதன் மூலம் அமைக்கப்படவிருக்கும் பிரிவுகளும், அவை தோராயமாகச் செலுத்தக்கூடிய விற்பனை வரித் தொகை அல்லது அதன் ஒரு பகுதி அளவுக்கு வட்டியில்லாக் கடனை தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்திடமிருந்து பெற அனுமதிக்கப்படுகின்றன. இத் தொகை, மூன்று ஆண்டுக்கால அளவில் விதிக்கப்பட்டு செலுத்தப்பட்ட/செலுத்தத்தக்க விற்பனை வரித் தொகைக்குச் சமமான பேரளவுத் தொகைக்குட்பட்டதாகும். மேலும், பின்தங்கிய பகுதிகளில் அமைக்கப்பட்ட நிறுவனத்தின் வரையறுக்கப்பட்ட இருப்புகளில் எட்டு சதவீத உச்சவரம்பிற்குட்பட்டதாகும்.

இராமநாதபுரம் மாவட்டக் கிழக்கு மேம்பாட்டுப் பகுதி, மதுரை மாவட்டத்தில் மேலூர் வட்டம், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் திருமயம், ஆலங்குடி, குளத்தூர் வட்டங்கள் ஆகியவற்றை மத்திய அரசிடமிருந்து ஒரு மொத்த மானியம் அல்லது உதவித் தொகை பெறத் தகுதியுடைய பகுதிகளாகத் திட்ட ஆணைக்குழு அறிவித்துள்ளது. இம்மானியத் தொகை, மேற்படி பகுதிகளில் அமைக்கப்படவிருக்கிறதும் ஒவ்வொன்றும் ரூ. 50 லட்சம் வரையறுக்கப்பட்ட மூலதன முதலீடு உடையதுமான புதிய பிரிவுகளின் வரையறுக்கப்பட்ட மூலதனத்தில் பத்தில் ஒரு பங்காகும். எனினும், மேற்படி பிரிவுகளுக்கான திட்டங்களும் வேலைத் திட்டங்களும் தகுதியின் அடிப்படையில் மானியம் வழங்கப்படுவதற்காக இந்திய அரசினால் பரிசீலிக்கப்படும்.



1971 சூன் 30]

## நிதி உதவி.

பங்குத் தொகைகளை வாங்க உறுதியளிப்பதன் மூலமும், பின்னர் தொகை செலுத்துவதன் அடிப்படையில் இயந்திரங்களை வாங்குவதற்காக உத்திரவாதம் அளிப்பதன் மூலமும், தொழிற்சாலைகளுக்கு நிதி உதவி செய்யவேண்டி தமிழ் நாடு தொழில் முதலீட்டுக் கழகம் தமிழ் நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் ஆகியவற்றை அரசு அமைத்துள்ளது. பங்கு மூலதனத்தில் முதலீடு செய்வதன் மூலமும், ரூபாய் வகையிலும், அயல் நாட்டுச் செலாவணி வகையிலும் நீண்ட காலக் கடன்கள் அளிப்பதன் மூலமும், தொழில் நிதிக் கார்ப்பொரேஷன், தொழிற் கடன் முதலீட்டு கார்ப்பொரேஷன் போன்ற பிற கடனுதவி நிறுவனங்களிடமிருந்து நிதி உதவிபெற தனியார் தொழிற்சாலைகளுக்கும் உதவியளிக்கப்படுகிறது.

இந்த அரசு செய்துள்ள பரிவுரைகளின் அடிப்படையில், கடனுதவி நிறுவனங்கள் கடன் வழங்குவதற்காக கீழ்க்காணும் எட்டு மாவட்டங்களை தொழில் துறையில் பின்தங்கிய மாவட்டங்களாக இந்திய அரசு அறிவித்துள்ளது :—

(1) தென் ஆர்க்காடு.
(2) திருச்சிராப்பள்ளி.
(3) மதுரை.
(4) இராமநாதபுரம்.
(5) கன்னியாகுமரி.
(6) வட ஆர்க்காடு.
(7) தஞ்சாவூர்.
(8) தருமபுரி.

மேற்கண்ட பகுதிகளில் அமைக்கப்படவிருக்கிற தொழிற்சாலைகளுக்கு இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி, இந்தியத் தொழில் நிதிக் கார்ப்பொரேஷன், இந்தியத் தொழிற் கடன் முதலீட்டுக் கார்ப்பொரேஷன் ஆகியவை சலுகை வீதங்களில் நிதியுதவி அளித்து வருகின்றன.

# சிறு தொழில்கள்

## தமிழ்நாடு சிறு தொழில் கழகம்.

தொழில் துறையில் பல சிறு தொழில் பிரிவுகள் முதல் மூன்று ஐந்தாண்டுத் திட்டக் காலங்களில் தொடங்கப்பட்டன. இவையனைத்தும் இம்மாநிலத்தின் சிறு தொழில்கள் வளர்ச்சிக்குத் தேவையான அடித் தளத்தை அமைத்தற் பொருட்டு முக்கியப் பணி நிலையங்களாக நிறுவப் பட்டன. முதற்கண், இத் தொழிற் பிரிவுகள் யாவும், தொழிற் பெருக்கத்தின் வளர்ச்சி, தொழில் வினைஞர்களுக்கான பயிற்சி, நவீன தொழில் நுட்ப உத்திகளைக் கையாளுதல் போன்ற பல்வேறு வாணிகத் தன்மையல்லாத காரியங்களுக்காகவே நிறுவப்பட்டன. இப்பிரிவுகளில் பாதி முழுமை பெற்ற பொருட்களை உற்பத்தி செய்வதில்லை. வெளியி லிருந்து வரும் வேலைகளையே அவை முழுவதும் நம்பியுள்ளன. இந்தப் பிரிவுகளின் மூலதன அமைப்புக்கும் அவை வாணிக அளவில் தனித் தியங்கும் தன்மைக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை. ஏனெனில், இவையனைத்தும் பணி நிலையங்களாகச் செயல்படவேண்டுமென்றே சிறப்பாகத் திட்டமிடப்பட்டு உருவாக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையங்களை மேற்கொண்டு செயல்படுத்துவதற்காக, தமிழ் நாடு சிறு தொழில் கழகம் அரசால் அமைக்கப்பட்டது. இந்நிறுவனம் 1965 டிசம்பர் முதல் செயல்படத் தொடங்கிற்று.

உடைமைகளின் (assets) நிகர மதிப்பான ரூ. 989 லட்சத்தில், ரூ. 400 லட்சம் பங்கு மூலதனமாகக் கருதப்பட்டது; எஞ்சிய ரூ. 589 லட்சம் நிறு வனத்தால் வட்டியுடன் திருப்பிச் செலுத்தப்பட வேண்டிய கடனாகக் கருதப்பட்டது. இந்த நிறுவனம் செயல்படுவதன் காரணமாக ஏற்படும் நிகர பலன்களைக் கணக்கிட்டு அறிந்து கொள்ளும் முன்னர் இதன் கணக்கு களில் ஆண்டு வட்டிப் பொறுப்புக்கென ரூ. 30 லட்சத்துக்குமேல் வகைசெய்யப்பட்டு வருகிறது

நிறுவனம் இக்கடன் சுமையைத் தீர்ப்பதன் பொருட்டு, வட்டி வசூலைச் சட்டப்படி நிறுத்திவைத்து ஐந்தாண்டுகளில் வட்டியுடன் சிறிது சிறிதாக திருப்பித்தரும்படி அரசு அண்மையில் உத்திரவிட்டுள்ளது. இந்நிறுவனம் அமைக்கப்பட்டதிலிருந்து அது தன் உற்பத்தியைப் படிப் படியாகப் பெருக்கி வந்துள்ளது. 1965–66-இல் ரூ. 389 லட்சமாக இருந்த அதன் உற்பத்தி மதிப்பு 1969–70-இல் ரூ. 659 லட்சம் அளவை எட்டியுள்ளது. நிறுவனத்தின் விற்பனையும், 1965–66-இல் 342 லட்ச மாக இருந்ததற்கு மாறாக, 1969–70-இல் ரூ. 681 லட்சம் அளவுக்கு உயர்ந்துள்ளது.

1969–70-இல், உற்பத்தி விற்பனை அளவில் ஏற்பட்ட அதிகரிப்பு மொத்தமாகப் பார்த்தாலும் ஆண்டுக்கு ஆண்டு ஒப்பிட்டு பார்த்தாலும் மிகவுயர்ந்ததாகும்.

உற்பத்தியாளர்களிடமிருந்து மூலப்பொருட்கள் மிகமிகக் குறைந்த அளவே வந்தன. மூலப் பொருட்கள் அதிக அளவில் வந்திருப்பின் நிறுவனத்தின் உற்பத்தி உண்மையில் மேலும் உயர்ந்திருக்கும்.

நிறுவனத்தைச் சேர்ந்த பல பிரிவுகளுக்குள்ளிருந்து பொருட்கள் உரிய காலத்தில் மாற்றப்பட்டதன்மூலம், இருப்பு கட்டப்பட்டிருந்த மூலப் பொருள்கள் அனைத்தையும் நிறுவனம் முழு அளவில் பயன்படுத்திக் கொள்ள முடிந்தது. மற்றும், உற்பத்தியாளர்களிடமிருந்து மிகமிகக் குறைந்த அளவே மூலப்பொருட்கள் பெறப்பட்டதால் ஏற்பட்ட கடும் நெருக்கடி நிலையை ஓரளவு தணிக்க அது உதவிற்று. இருப்புச் சரக்குகள்

மீது தீவிர மேற்பார்வை செய்து வந்ததால், இருப்புச் சரக்குகள் அளவு உற்பத்தியில் 50 சதவீதம் என்கிற நிலையிலிருந்து 42 சதவீதம் என்கிற நிலைக்குக் குறைக்கப்பட்டது.

19பொது நோக்குப் பொறியியல பணிக்களரிகளில், உற்பத்தியளவு ல 68–69-இல் ரூ. 74·54 லட்சத்திலிருந்து 1969-70-இல் ரூ. 100·46 ட்சத்துக்கு உயர்ந்துள்ளது. விற்பனையும் ரூ. 68·04 லட்சத்திலிருந்து ரூ. 101 லட்சத்துக்கு உயர்ந்துள்ளது. மூலப்பொருட்கள் பற்றுக்குறையே இப்பணிக்களரிகள் மேலும் உற்பத்தியைப் பெருக்கமுடியாமல் முட்டுக் கட்டையாக இருந்தது.

முந்திய ஆண்டுகளில், கிண்டியிலுள்ள அறை அலங்காரப் பொருள்கள் (மேசை, நாற்காலிகள்) தயாரிக்கும் பணிக்களரி மட்டுமே சொகுசான அறைச் சாமான்கள் தயாரிக்கும் பணியில் ஈடுபட்டிருந்தது. மாவட்டங்களில் உள்ள ஏனைய பிரிவுகளில் தரமான மேசை நாற்காலி களின் தேவை குறைந்து வந்துள்ளதால், இந்தப் பிரிவுகளிலும் தரம் அல்லாத மேசை நாற்காலிகளும், சொகுசான அறைச் சாமான்களும் கூடத் தயாரிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

சுகாதார-துப்புரவு சாதனங்கள், மின்காப்புப் பொருட்கள் (Insulators) மட்பாண்டற தொகுதிகள் ஆகிய பொருட்களை உற்பத்தி செய்ய, பொருத்த மான உற்பத்தி விகிதக் கலப்புக்கு வழிவகுத்ததன் மூலம், விருத்தா சலத்திலுள்ள டான்சி மண்பாண்டத் தொழில் (Tansi Ceramics) நிறுவனம் நாளொன்றுக்கு 3 டன் எடையுள்ள பொருட்களை உற்பத்தி செய்யும் திறனை எய்தியது. மின்காப்புப் பொருட்களை உற்பத்திசெய்யும் திறனளவுக்கு ஏற்ப தற்போது முழுமையாக உற்பத்தி ஆணைகள் பெறப் பட்டுள்ளன. அப்பிரிவு, மேலனுப்புவதற்கான ஆணைகளை மட்டுமே தற் போது ஏற்று வருகிறது. அழகு வேலைப்பாடு செய்யப்பட்ட பாண்டங் களுக்குத் தேவை அதிகம் என்பதையும், அவற்றால் ஆதாயம் அதிகம் என்பதையும் கருத்தில் கொண்டு வேலைப்பாடுகள் செய்யப்பட்ட மட் பாண்டப் பிரிவினை விரிவுபடுத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது. பலதரப் பட்ட பொருள்களை திட்டமிட்டு உற்பத்தி செய்வதன் மூலமும், தரமான பொருள்களை உற்பத்தி செய்ததன் மூலமும், விற்பனையை அதிகரித்ததன் மூலமும் மண்பாண்டத் தொழிற்சாலை தனது வருவாய் இழப்புகளைப் பெருமளவு ஈடு செய்துள்ளது; தற்போது இத்தொழிற்சாலை ஆதாயம் பெறும் வகையில் அதன் பணிகள் இப்போது விரைவுபடுத்தப்பட்டுள்ளன.

தேய்த்து மெருகிட்ட குழாய்களின் விற்பனை 1968--69-இல் ரூ. 5·05 லட்சத்திலிருந்து 1969-70-இல் ரூ. 9·08 லட்சமாக அதிகரித்துள்ளது. குழாய்களின் தேவை அதிகரித்து வருவதால் இப்பிரிவில் குழாய்களை உலர்த்தும் திறனும் அவற்றை உலையிலிடும் திறனும் விரிவு படுத்தப்பட்டு வருகின்றன. தற்போது இப்பிரிவிலேயே வடிவமைக்கப் பட்ட ஒரு சிறப்பு இணைப்புப் பகுதியின் உதவியால், தற்போதுள்ள அச்சுக் கருவியிலிருந்தே 15 அங். தேய்த்து மெருகிட்ட குழாய்கள் உற்பத்தி செய்தலை இப்பிரிவு மேற்கொள்ள முடிந்தது. பெருங் குழாய் களுக்கு அதிகத் தேவையிருப்பதாகத் தெரிவதால் இந்நிறுவனம் பெருங் குழாய்கள் உற்பத்தி செய்வதற்கான திட்டம் ஒன்றைத் தற்போது பரி சீலித்து வருகிறது. இந்தத் தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்பட்ட 4அங். 6 அங். குழாய்கள் இந்தியத் தர நிர்ணய நிறுவனத்தின் சான்றுக் குறிகளைப் பெற்றுள்ளன. தமிழ் நாட்டில் இந்தியத் தர நிறுவனக் (I.S.I.) குறிகளுடன் கூடிய குழாய்கள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலை இது வொன்றேயாகும்.

அம்பத்தூரிலுள்ள கட்டுமானப் பொருள்கள் தொழிற்சாலை (ஸ்டரக் சுரல் ஒர்க்ஸ்) விசாகப்பட்டினத்தில் உள்ள கப்பல் கட்டும் தளத்துக்கு ஒன்றும், அரக்கோணத்திலுள்ள தொடர் உருக்கு வார்பு ஆலைக்கு ஒன்றுமாக இரண்டு பணிமனைப் பட்டறைகளை அமைக்க முடிந்துள்ளது. விசாகப்பட்டினத்திலுள்ள பணிமனை பட்டறை தொடக்கத்தில் 400 டன்



திறனுக்கு உற்பத்தியை மேற்கொள்ளுவதற்காகவே நிறுவப்பட்டதாகும்; இப்பட்டறை இதுவரை 1,800 டன்கள் வரை உற்பத்தி செய்வதற்கு ஆணைகளைப் பெற்று அவற்றை நிறைவேற்றி வைத்துள்ளது. இது மேலும் 800 டன் உற்பத்திப் பணியை மேற்கொள்ளும் என்று எதிர் பார்க்கப் கிறது.

மேட்டூர் அணைப்பகுதியில் ஸ்ட்ரக்சுரல்-கால்வனைசிங் ஒர்க்ஸ் நிறுவனம் உள்ளது. இதிலுள்ள துத்தநாக மின் முலாம் பூசும் பிரிவு முந்திய ஆண்டுகளில் சராசரி 2 500 டன் அளவிற்கு மின் முலாம் பூசி வந்த தற்குமாறாக, தற்போது, 4,500 டன் அளவுக்கு மின் முலாம் பூசி ஒரு சாதனையை ஏற்படுத்தியுள்ளது. இந்த பிரிவு பல பணிகள் தொடர்பாக ஒப்பந்தப் புள்ளிகள் அனுப்பியிருந்தபோதிலும் இதற்குக் கிடைத்துள்ள பெருமளவு ஆணைகள் எதும் கிடைக்கவில்லை. இதற்குக் கிடைத்துள்ள ஒரு பெருமளவு ஆணை தமிழ்நாடு மின்சார வாரியத்தால் நமது வடி வமைப்பின் அடிப்படையில் கொடுக்கப்பட்டது இவ்வாணை ரூ. 50 லட்சம் மதிப்புக்கு, குறைவழுத்த மின் கம்பங்களுக்கான ஆணையாகும். கட்டுமானப் பொருள்கள் உற்பத்தித் துறையில் அதுவும் குறிப்பாக கோபுரவடிவிலான மின்கம்பங்களை உற்பத்தி செய்வதில் போட்டி மிகவும் கடுமையாகவுள்ளதால், இந்த நிறுவனம், இயந்திரங்களை முழு அளவில் வேலையில் ஈடுபடுமாறு செய்யப் போதுமான அளவு ஆணைகளைப் பெறப் பொருத்தமான திட்டம் ஒன்றை வகுக்க வேண்டும்.

வார்ப்பட பட்டறைப் பிரிவுகள் பல்லாண்டுகளாக ஆணைகள் அதிகம் பெறாமல் பணி நலிவடைந்திருந்தது. தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டதன் விளைவாலும் பொதுப்பணிகள் துறைக்கும், பொது சுகாதாரத் துறைக்குமிடையே நெருங்கிய தொடர்பு வைத்துக்கொள்ளப்பட்டதன் விளைவாலும், உற்பத்தித் தரத்தை மேம்படுத்துவதற்கு எடுத்துக்கொள்ளப் பட்ட நடவடிக்கைகளின் விளைவாலும் வார்ப்படப் பட்டறைப் பிரிவுகள் தம் உற்பத்தியளவை ரூ. 23·88 லட்சத்திலிருந்து ரூ. 32·28 லட்சமாக அதிகரித்தன. தற்போதுள்ள நிலவரப்படி, இந்தப் பட்டறைகள் பொதுச் சுகாதாரத் துறையிலிருந்து மேலும் அதிக அளவில் ஆணைகள் பெறக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. கடந்த ஆண்டு சென்னை மாநகரில் ஏற்பட்ட கடும் தண்ணீர்த் தட்டுப்பாட்டின் காரணமாக எழுந்த நெருக்கடி நிலையைச் சமாளிப்பதற்காக இப் பட்டறைகள் 15 நாள் குறுகிய கால அளவில் 1,500 கைப்பம்புகளை உற்பத்தி செய்து வழங்கி ஒரு பெருஞ் சாதனையை ஏற்படுத்தி விட்டன.

விண்ணமங்கலத்திலுள்ள "டான்சி" தோல் பதனிடும் தொழிற்சாலை இறுதி வேலைப்பாடுகள் செய்யும் திறன் இல்லாத காரணத்தால் தனது உற்பத்தியை உயர்த்த இயலாமலுள்ளது. இந்நிலையினைச் சமாளிக்க மேற்பரப்பு மெருகிடும் இயந்திரம் (Embossing Machine) ஒன்றை இறக்குமதி செய்வதற்கு இந் நிறுவனம் ஆணை கொடுத்துள்ளது; இந்த இயந்திரம் விரைவில் பெறப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. இந்த இயந்திரம் நிறுவப்பட்டதும், இப்பிரிவில் இறுதி வேலைப்பாடுகள் செய்யப்பட்ட தோலின் உற்பத்தி பெரிதும் அதிகரிக்கும். 1969–70–ஆம் ஆண்டில் இப்பிரிவு ரூ. 5·37 லட்சம் மதிப்புடைய தோலை ஏற்றுமதி செய்தது.

உற்பத்தி மந்த நிலை பெரும்பாலும் நீங்கியதென்றாலும் கூட, கருவிப் பட்டறைகள் உற்பத்தித் தொழிலை முழு அளவில் மேற்கொள்ளவில்லை. உற்பத்தி ஆணைகள் நிலை தொடர்ந்து மனநிறைவு அளிக்காவண்ணம் உள்ளது. பொதுத் துறையிலும் தனியார் துறையிலும் உள்ள பல பெரிய நிறுவனங்களுடன் முன்போலவே முறைப்படியான தொடர்பு கொள்ளப்பட்டது. இந்நிலை அண்மையில் சீரடைந்துள்ளது. கிண்டி யிலுள்ள கருவிப்பட்டறைக்குத் தற்போது ரூ. 2·7 இலட்சம் அளவுக்கு உற்பத்தி ஆணைகள் கிடைத்துள்ளன (இவற்றில் தும்பா ஏவுகணை நிலையத் திடமிருந்து பெற்ற ஆணைகளும் அடங்கும்.)

பங்களூரிலுள்ள மத்திய இயந்திரக் கருவிகள் நிறுவனத்தால் 50 மி.மி. ரேடியல் டிரில்லிங் மிஷின் என்னும் வகை துளையிடு கருவி வடிவமைக்கப்பட்டது. இதனை விற்பனை செய்வது குறித்த ஆய்வு தற்போது முடிவடைந்துள்ளது. மூல முன்மாதிரிக் கருவி ஒன்றின் உற்பத்தி சுற்சோதா மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கருவிப் பட்டறைகள் செயல்படுவதை ஆய்வு செய்யும்பொருட்டு நிறுவனம் ஆலோசகர்களை நியமித்துள்ளது. இந்த ஆய்வு நடந்தேறி வருகிறது. இந்நிறுவனத்தின் பிரிவுகளில் சரக்குப் பட்டியல்கள் குறித்து செவ்விய முறையில் மேற்பார்வையிடும்பொருட்டு ஆலோசகர்களை நியமிக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்நிறுவனம் தொடங்கப்பட்டது முதற்கொண்டு இதனை எதிர் நோக்கி வந்த பெருந் தடைகளில் ஒன்று, இது அளிக்க வேண்டியிருந்த பெருந்தொகையான வட்டிச் சுமையாகும். இந்திய ரிசர்வ் வங்கி 1,500 க்கும் மேற்பட்ட தொழில்கள் குறித்து மதிப்பீட்டாய்வு நடத்தியது. அம்மதிப்பீட்டாய்வின்படி இந்நிறுவனத்தில் நிலையான வட்டி வீதம் அமையாத கடன்களின் விகிதம் (Equity debt ratio) தனியார் துறை நிறுவனங்களிலிருப்பதைக் காட்டிலும் மிக அதிகமானதாகுமென்று கூறப்படுகிறது. இவ்வாறு தனியார் துறையிலுள்ளதைக் காட்டிலும் இந்நிறுவனத்தின் வட்டிச் சுமை ஆறு பங்கு உயர்ந்ததாகும். பெருங்கடன் சுமை, இந்த நிறுவனம் ஆதாயகரமாகச் செயல்படுவதைக் கீழ்க்கண்ட வழிகளில் பாதிக்கின்றது:—

1. ஒப்பந்தப் புள்ளிகள் கொடுக்கும்போது வட்டியை நிர்வாகச் செலவாகக் கணக்கில் காட்ட வேண்டியுள்ளதால் இந்நிறுவனம் மற்ற நிறுவனங்களுடன் போட்டியிட்டு, ஒப்பந்தப் புள்ளிகளைக் கொடுக்க இயலாத நிலையில் உள்ளது.

2. வருவாய் வாயில்களுக்கு வழி இல்லாமல் உள்ளதால், நிறுவனம், அரசுக்குரிய வட்டியை செலுத்துவதற்காக வங்கிகளிடமிருந்து கடன் பெற வேண்டியுள்ளது. இந்நிறுவனத்தின் கடன் பொறுப்பு நாளுக்கு நாள் பெருகிக் கொண்டே வருகிறது.

3. இந்நிறுவனம் ஆதாயத்தில் செயல்படுவதாகக் காட்ட முடியாத நிலை ஏற்படுகிறது.

இந்நிலை தற்போது அரசின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. இந்நிறுவனத்தின் மூலதன அமைப்பைத் திருத்தியமைத்தல் பற்றி அரசு ஆராய்ந்தது. முன்னரே கூறப்பட்டுள்ளது போல், வட்டி செலுத்துவதை காலம் தாழ்த்திச் செலுத்துவதற்கு ஆணையிட்டதன் மூலம் ஓரளவு சலுகை கொடுக்கப்பட்டது. அரசும் தொழிற்சாலைப் பிரிவுகள் ஒவ்வொன்றும் செயல்படுவது குறித்து மறு ஆய்வு செய்துள்ளது; ஆதாயம் அளிக்காத பிரிவுகளில் சிலவற்றைப் படிப்படியாக மூடி விடவும் அரசு முடிவெடுத்துள்ளது.

வட்டிக்குத் தொகை ஒதுக்குவதற்கு முன்பும், தேய்மானத்திற்காக ரூ. 25·52 லட்சம் ஒதுக்கிய பின்பும், நடப்பு ஆண்டில் இந்நிறுவனம் 19·21 இலட்சம் ஆதாயம் பெற்றுள்ளதாக இதன் கணக்குகள் காட்டுகின்றன. வட்டி வகையில் ரூ. 37·81 லட்சம் கணக்குகளில் காட்டியிருப்பதால், ஆதாய விரயக் கணக்கு ரூ. 18·60 லட்சம் விரயம் ஏற்பட்டதாகக் காட்டுகிறது. இதற்கு மாறாக 1968–69-ல் ரூ. 22·41 லட்சம் விரயம் ஏற்பட்டிருந்தது. இந்த ஆண்டுக் கணக்கில், இந்நிறுவனம் வட்டி வகையில் நிகரமாய் ரூ. 9·6 லட்சம் அளவுக்கு அதிகமாய் செலுத்த வேண்டியிருந்ததாலும், பிற நிர்வாகச் செலவுகளில் ரூ. 12·4 லட்சம் அளவுக்கு அதிகச் செலவு ஏற்க வேண்டி வந்ததாலும் முந்திய ஆண்டை விட இவ்வாண்டில் மேற்சொன்ன அளவிற்கு விரயம் ஏற்பட்டது.





ஆதாயத்தில் செயல்பட்ட பிரிவுகளின் மொத்த எண்ணிக்கையை எடுத்துக் கொண்டால், 1968–69-ல் 25 பிரிவுகள் மட்டுமே ஆதாயத்தில் செயல்பட்டு வந்ததற்கு மாறாக, 1969–70-ல் 31 பிரிவுகள் ஆதாயத்தில் செயல்பட்டு வந்தன.

இந்நிறுவனம், சுமார் 6,800 பேர்களுக்கு வேலைவாய்ப்பு அளித்துள்ளது.

இந்த ஆய்வுரையுடன் சேர்த்துள்ள இணைப்பு XVII-ல் ஓர் அறிக்கை உள்ளது. அவ்வறிக்கையில், 1969–70-ல் பல்வேறு பிரிவுகளில் எய்திய உற்பத்தியின் மதிப்பும், 1970–71-ல் எதிர்பார்க்கப்படும் உற்பத்தியளவும், 1971–72-ல் உற்பத்தி இலக்கும் கொடுக்கப்பட்டுள்ளன.

1969–70-ல் ஐந்தாண்டுத் திட்டப்பணிகள் நிறைவேற்றுவதற்காக, அரசிடமிருந்து ரூ. 11·00 லட்சம் தொகை கடன் பெறப்பட்டது. அதே காரியத்துக்காக, 1970–71-ஆம் ஆண்டில் ரூ. 25 லட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. 1971–72-ஆம் ஆண்டுக்குரிய வரைவு ஆண்டுத் திட்டத்தில் ரூ. 25 லட்சம் நிதி ஒதுக்கக் கருதப்பட்டுள்ளது.

தமிழ் நாடு சிறு தொழில் க்மம் பாட்டு நிறுவனம்,

இம்மாநிலத்தில் சிறு தொழில்களுக்கு உதவி செய்யவும் அது போன்ற பிற தொழில்களைத் திறம்பட வளர்ச்சியுறச் செய்து அவற்றிற்கு வழி காட்டவும் வேண்டி, தமிழ் நாடு சிறு தொழில் மேம்பாட்டு நிறுவனம் அமைக்கப்பட்டுள்ளது. இந்நிறுவனத்தின் அனுமதிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூ. 2 கோடியாகும். இத்தொகை முழுவதும் அரசினால் செலுத்தப்பட்டதாகும் இந் நிறுவனத்தின் இயக்குநர்கள் வாரியத்தில் சிறு தொழில்களின் பிரதிநிதியாக அதிகாரிகள் நால்வரும் அரசுச் சார்பற்ற உறுப்பினர்கள் ஐவரும் இருப்பர்.

### மூலப்பொருள் பங்கீடு

இந் நிறுவனம் தொழில் துறையைச் சார்ந்த மூலப் பொருள் இடங்குகள் மூன்றினை அதாவது கிண்டியிலுள்ள பணி வசதிக் கழகம், மதுரை, போத்தனூர் ஆகிய இடங்களிலுள்ள மூலப்பொருள் கிடங்குகள் முதலியவற்றின் நிர்வாகத்தை மேற்கொண்டு 1970 அக்டோபர் 14-ஆம் நாள் முதல் மூலப் பொருள்களைப் பகிர்ந்தளிக்கத் தொடங்கியுள்ளது. இம் மாநிலத்தில் சிறு தொழில்களுக்கென இதுவரை ரூ. 190 லட்சம் மதிப்புடைய மூலப் பொருள்களை (இரும்பு, உருக்குகு துருப்பிடிக்காத உருக்கு) இந்நிறுவனம் வழங்கியுள்ளது. மூலப், பொருள் கிடங்குகள் முன்பு பாளங்களையும், தகடுகளையும் வழங்கி வந்தன. பின்னர், இக் கிடங்குகளை மேற்படி நிறுவனம் மேற்கொண்டவுடன் கட்டுமானப் பொருள்கள் வழங்கும் பொறுப்பையும் இக் கிடங்குகள் மேற்கொண்டன. இந்த நிறுவனம் 1671–72-ம் ஆண்டில் பெரிய அளவில் திட்டமொன்றைத் தீட்டியுள்ளது. 1971–72-ல் ரூபாய் 490 லட்சம் பெறுமான மூல பொருள்களை விற்பனை செய்ய வேண்டுமென்ற குறிக்கோள் அளவு முடிவு செய்யப்பட்டுள்ளது.

மாநில, மத்திய அரசுகளுடனும், அரசு வாணிபக் கழகத்துடனும் கனிப்பொருள்கள், உலோகப் பொருள்கள் வாணிபக் கழகத்துடனும் முனைந்து தொடர்பு கொள்ள இந்நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

### பொறிகளை தவணைக் கொள்முதல் முறையில் வாங்குதல்

தவணைக் கொள்முதல் அடிப்படையில் இயந்திரங்களை விற்பதற்கான திட்டம் 1971 மார்ச் திங்களில் தொடங்கப்பட்டது. இந்நிறுவனம் இது வரை ரூ. 7.62 லட்சம் அளவுக்கு உதவி அளித்துள்ளது. தவணை கொள்முதல் முறையில் இயந்திரங்களை வாங்குவதற்கு உதவி செய்வதற்காக இந்நிறுவனம் 1971–72-ல் ரூ. 60 லட்சம் ஒதுக்கியுள்ளது.

### பணிக் கூடங்களைக் கட்டித் தவணைக் கொள்முதல் அடிப்படையில் அவற்றை ஒதுக்குதல்

பணிக்கூடங்களைக் கட்டி அவற்றைத் தவணைக் கொள்முதல் அடிப்படையில் தொழில் முனைவர்களுக்கு ஒதுக்குவதற்காக அம்பத்தூரில் சுமார் 36 ஏக்கர் நிலம் அரசிடமிருந்து பெறப்பட்டுள்ளது. தங்களது சொந்த நிலத்தில் பணிக்கூடங்களைக் கட்டிக்கொள்ள விழையும் தொழில் உரிமையாளர்களுக்கும் இந்நிறுவனம் உதவி அளிக்கும். இந்நிறுவனத்தின் 1971–72 வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் பணிக்கூடங்களைக் கட்டுவதற்காக ரூ. 40 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

### தொழில்நுட்ப சாத்தியக்கூறு குறித்த அறிக்கைகள்

இம்மாநிலத்தில் சிறு தொழில்களாக அமைக்கப்படவிருக்கும் சிறந்த திட்டங்கள் பற்றித் தொழில் நுட்ப சாத்தியக்கூறு அறிக்கைகளைத் தயாரிக்கப் பெறுவதற்கான செயற்குறிப்பு ஒன்றும் இந்நிறுவனத்திடம் உள்ளது. ஆதாயம் தரத்தக்க திட்டங்களைக் கண்டறியவும், இத்திட்டங்களுக்கென சாத்தியகூறு அறிக்கைகளைத் தயாரித்துக் கொடுக்கும் படியும் ஆலோசகர்கள் சிலருடன் பேச்சு வார்த்தைகள் தொடங்கப் பட்டுள்ளன.

### கைவினைத் தொழில்கள்

கைவினைப் பொருள்கள் உற்பத்தியை அதிகரிப்பது, அவற்றை விற்பனை செய்வது போன்ற பணிகளைத் தமிழ்நாடு சிறு தொழில் மேம்பாட்டும் நிறுவனத்திடம் ஒப்படைக்க அரசு முடிவு செய்துள்ளது. இந் நிறுவன கைவினைப் பொருள் ஏற்றுமதி வளர்ச்சி மன்றத்தில் தன்னைப் பதிவு செய்து கொண்டுள்ளது. இயக்குநர் அலுவலகத்தைச் சேர்ந்த கைவினைப் பொருள்கள் விற்பனை நிலையங்களை இந் நிறுவனம் விரைவில் மேற் கொள்ளும்.

### ஏற்றுமதி

சிறு தொழில் உற்பத்திப பொருள்கள் ஏற்றுமதியை அதிகரிக்கும் பொறுப்பை சிறு தொழில் மேம்பாட்டு நிறுவனத்திடம் ஒப்படைக்க அரசு முடிவு செய்துள்ளது. ஏற்றுமதியை அதிகரிப்பது குறித்து இந் நிறுவனம் தனது நடவடிக்கைகளை இவ்வாண்டில் தொடங்குமென்று எதிர்பார்க்கப் படுகிறது.

### விற்பனை உதவி

அரசுத் துறைகளுக்குத் தேவைப்படும் சில பொருட்களை வாங்குவதில் சிறு தொழில் மேம்பாட்டு நிறுவனத்தின் உதவியைப் பயன் படுத்திக்கொள்ள அரசு கொள்கையளவில் ஒப்புக்கொண்டுள்ளது. இதன் மூலம் இம் மாநிலத்திலுள்ள சிறு தொழில்கள் சரக்குகள் கொள்முதல் பற்றிய அரசின் திட்டத்தில் பங்கு கொள்ள இயலும். சிறு தொழில் மேம்பாட்டு நிறுவனம் இப்பணியை விரைவில் மேற்கொள்ளுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

### சிறு தொழில்களுக்கு நிதி உதவி

தொழில்களுக்கு அரசு உதவியளித்தல் சட்டத்தின் கீழ் நிதியுதவி அளிக்க வகை செய்வதற்கான பொறுப்பை சிறு தொழில் மேம்பாட்டு நிறுவனத்திடம் ஒப்படைக்கும் செயற்குறிப்பு ஒன்றும் உள்ளது. சிறு தொழில் மேம்பாட்டு நிறுவனம் இந்திய தொழில் வள வங்கியிடமிருந்து கடன் பெற்று, அதைக் குறைந்த வட்டி வீதத்தில் மாநிலச் சிறு தொழில்களுக்கு வழங்க இயலும், வகையில், மேற்படி நிறுவனத்தை மாநிலக் கடனுதவி நிறுவனமாக ஏற்பளிக்குமாறு இந்திய அரசு கேட்டுக்கொள்ளப்படும்.



**பொது.**—மாநில முழுவதுமுள்ள தொழிலதிபர்கள் சிறு தொழில் மேம்பாட்டு நிறுவனத்தை எளிதில் அணுகி அவற்றிடமிருந்து உதவி பெறுவதற்கு ஏற்றவாறு இந்நிறுவனம் இவ்வாண்டில் பல கிளைகளையும் நிலையங்களையும் தொடங்கத் திட்டமிட்டுள்ளது. இம்மாநிலத்தில் தொழில் வளர்ச்சியில் பின் தங்கியுள்ள மாவட்டங்களில் தொழில் வளர்ச்சிக்கு உதவ சிறப்பான முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

தொழில்-வாணிகத் துறை இயக்குநரகத்தின் கட்டுப்பாட்டின் கீழ்த் தொடர்ந்து சிறு தொழில்களும், இயக்குநர் அலுவலகமும் செயல்படும் சிறு தொழில் திட்டங்களில் பின்வரும் பிரிவுகள் அடங்கும். மதிப்பீட்டாய்வு, புள்ளிவிவரப் பிரிவு, தொழில் நுட்பத் தகவல் பிரிவுகள், தொழில் நுட்பப் பயிற்சி நிலையங்கள், பொதுக் குத்தகைப் பட்டறைகள் முதலியன.

இம்மாநிலத்தில், சிறு தொழில்கள் தொடர்பாகத் தொழில் மதிப்பீட்டாய்வுகளை மேற்கொள்ளவும், விரிவான புள்ளி விவரங்களைப் பேணிவரவும், மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் மதிப்பீட்டாய்வு புள்ளி விவரப் பிரிவு நிறுவப்பட்டது. இப்பிரிவினிடம் கீழ்க்கண்ட வேலைகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன:—

1. இம்மாநிலத்திலுள்ள சிறு தொழில் பிரிவுகளைப் பதிவு செய்தல்; அவற்றிற்குப் பதிவுச் சான்றிதழ்கள் வழங்கல்.

2. பதிவு செய்யப்பட்ட பிரிவுகளிடமிருந்து உற்பத்திப் புள்ளி விவரங்களைச் சேகரித்து, அவற்றைத் தொழில் வாரியாகத் தொகுத்தல்.

3. பதிவு மூலமாகச் சேகரிக்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் மாநிலத்திலுள்ள சிறு தொழில் பிரிவுகளின் விவரப் பட்டியல் ஒன்று வெளியிடல்.

4. சென்னையிலுள்ள சிறு தொழில் பணி நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டாய்வு அறிக்கைகளை அச்சிட்டு வெளியிடல்.

5. மாநில அரசால் மேற்கொள்ளப்படுவதற்குத் தேவைப்படுகிற தனி மதிப்பீட்டாய்வு அல்லது சிறப்பு மதிப்பீட்டாய்வு.

6. டாக்டர் லோகநாதன் குழுவால் பரிந்துரைக்கப்பட்டவாறு சிறு தொழில்களின் உற்பத்தித் திறன் குறித்த மதிப்பீட்டாய்வு.

7. உள்நாட்டுத் தயாரிப்பாளர்கள் பற்றிய சிறு நூல் வெளியிடுவதற்குத் தகவல்கள் தயாரித்தல்.

8. புது டில்லியிலுள்ள தொழில் நுட்ப வளர்ச்சித் துறைத் தலைமை இயக்குநரிடமிருந்து சிறு தொழில் துறைக்கு மாற்றப்பட்ட தொழில் பிரிவுகளிடமிருந்து மாதாந்திர உற்பத்திப் புள்ளி விவரங்களைச் சேகரித்தல்.

9. இம்மாநிலத்திலுள்ள சிறு தொழில்கள் தொடர்பான புள்ளி விவரத் தகவல்களை "கார்டெக்ஸ் முறையில்" (Kardex system) பேணிவருதல்.

இந்நாட்டில் முறையான நிறுவன அமைப்பற்ற துறையில் (Unorganised sector) உள்ள சிறு தொழில்கள் பற்றிய புள்ளி விவரங்கள் சேகரிப்பதற்காக மத்திய அரசுத் திட்டம் ஒன்று நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது; இம்மாநிலத்தைப் பொறுத்த மட்டில், இம் மதிப்பீட்டாய்வுப் பணி, இத் துறையின் மதிப்பீட்டாய்வு-புள்ளி விவரப் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் முறையான நிறுவன அமைப்பு அற்ற துறையில் உள்ள சிறு தொழில்களைக் கண்டறியும் பொருட்டு, 1-12-1969 முதல் 28-2-1970 முடிவுள்ள கால அளவில் முன்னோடி மதிப்பீட்டாய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த மதிப்பீட்டாய்வு, நகர்ப்புறப் பகுதிகளிலும் மற்றும் 1948-ஆம் ஆண்டு தொழிற்சாலைச் சட்டச் செயல் வரம்பின்கீழ் வராத தொழிற் பிரிவுகளிலும் மட்டும் (அதாவது: மின்சாரம் பயன்படுத்தப்பட்டால், 5 முதல் 9 வரை தொழிலாளர்கள் கொண்ட தொழிற்சாலைகள்; மின்சாரம் பயன்படுத்தப்படாவிட்டால் 5 முதல் 19 வரை தொழிலாளர்கள் கொண்ட தொழிற்சாலைகள்) மேற்கொள்ளப்பட்டது. இந்தத் தொடக்க ஆய்வின்போது, தமிழ்நாட்டிலுள்ள 171 நகரங்களில் அமைந்துள்ள மொத்தம் 49,428 சிறு தொழில்கள் குறித்துக் கணக்கெடுக்கப்பட்டது. இப் பிரிவு மூன்று மாத காலத்துக்கு முற்றிலும் தற்காலிக





அடிப்படையில் கணக்கெடுப்பவர்கள் 100 பேரை நியமித்து இப்பணியை மேற்கொண்டது. 1969-70-ஆம் ஆண்டுக்கு இக்காரியத்துக்காக இந்திய அரசு ரூ. 65,000 தொகையை மனமுவந்து ஒதுக்கியுள்ளது. இத் தொகையில் ரூ. 58,978 பயன்படுத்தப்பட்டது. 1970-71-ஆம் ஆண்டுக்கு இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்காக இம் மாநிலத்திற்கு மத்திய அரசின் உதவியாக இந்திய அரசு ரூ. 90,000 தொகை ஒதுக்கியுள்ளது. முறையான நிறுவன அமைப்பற்ற துறையில் புள்ளி விவரங்களைத் தொகுத்தல் தொடர்பான முக்கிய மதிப்பீட்டாய்வு தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சிக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டுள்ளது. அந்நிறுவனம் மாநில அரசின் சார்பாக அவ்வேலையை மேற்கொள்ளும். அவ்வேலையை உடனடியாக மேற்கொள்ளுமாறு கழகம் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

இம்மாநிலத்திலுள்ள சிறு தொழில் பிரிவுகளைப் பதிவு செய்தல், 1960 நவம்பர் முதல் இப் பிரிவால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. பொருள்கள் தயாரிப்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளவையும், ரூ. 7·5 லட்சத்திற்கு மேற்படாத மூலதன முதலீடும் (தொழிற்சாலையும், இயந்திரங்களும் மட்டும்) உடையனவாகிய தொழில் நிறுவனங்கள் சிறு தொழில்கள் என்னும் வரையறைக்குள் வருகின்றன. அவை சிறு தொழில்களாகப் பதிவு செய்யப்படத் தகுதியுடையவை. சிறு தொழில் பிரிவுகள் மத்திய அரசிடமிருந்தும் மாநில அரசிடமிருந்தும் தொழில் நுட்ப உதவி, விற்பனை வசதி உதவி, நிதியுதவி, மற்றும் ஏனைய வகைகளில் உதவி பெறுவதற்குத் தகுதியுடையனவாகும். சிறு தொழில்கள் மேற்குறிப்பிட்ட உதவிகளைப் பெற்றுக்கொள்ள இயலும் வகையில், அவை தம் பிரிவுகளைத் தொழில் துறையில் பதிவு செய்துகொள்ள வேண்டும் என்று வேண்டப்படுகிறது. தகுதிச் சான்றிதழ் மாநில அரசின் தொழில் உதவிக் கடன்கள், இறக்குமதி உரிமம், முன்னுரிமை அடிப்படையில் தொலைபேசித் தொடர்பு, தவணைக் கொள்முதல் ஏற்பாட்டின்கீழ் இயந்திரங்களை வாங்குதல், கட்டுப்பாட்டுப் பொருள்கள் ஒதுக்கப் பெறுதல், தொழிற்பேட்டையில் தொழிற்சாலைக்கு இட ஒதுக்கம் முதலியவற்றுக்காக விண்ணப்பம் செய்கையில், தொழிற்பிரிவுகள் தமது பதிவு எண்ணைக் குறிப்பிட வேண்டும்.

பதிவுச்சான்றிதழ்கள், தொழில்களின் இயல்புக்கிணங்க "முறையானவை" என்றும் "தற்காலிகமானவை" என்றும் வகைப்படுத்தப்பட்டுள்ளன. (அதாவது, முன்னரே இருந்துவரும் தொழில்களுக்கு முறையான சான்றிதழும், தற்போது திட்டமிடப்படும் தொழில்களுக்குத் தற்காலிகச் சான்றிதழ்களும் அளிக்கப்படுகின்றன) மாவட்ட அளவில், சிறு தொழில்களைப் பதிவு செய்வது தொடர்பான பணி, உதவி இயக்குநரால் கவனிக்கப்படுகிறது. உதவி இயக்குநர்கள் தங்களது அதிகார வரம்பின்கீழ் உள்ள பிரிவுகளைப் பதிவு செய்ய அதிகாரமளிக்கப்பட்டுள்ளனர்.

1971, மார்ச் 31-ஆம் நாளன்றுள்ளபடி 22,899 பிரிவுகள் பதிவு செய்யப்பட்டு, பதிவுச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

உற்பத்தி, வேலைவாய்ப்பு, மூலதன அமைப்பு முதலியன பற்றிய புள்ளி விவரங்களைப் பேணி வருவதற்காக, பதிவு செய்யப்பட்ட சிறு தொழில்கள் எல்லாவற்றிடமிருந்தும், இப்பிரிவு ஆண்டு முடிவுப் புள்ளி விவரங்களைச் சேகரிக்கிறது. அவ்வாறு சேகரிக்கப்பட்ட புள்ளி விவரங்கள் "கார்டெக்ஸ்" முறையில் ( Kardex ) புள்ளி விவரங்களைப் பேணுவதற்காக, வைத்துவரப்படும் "குறிப்பு அட்டை" களில் (Index Cards) குறிக்கப்படுகின்றன. மேலும், அவ்வாறு சேகரிக்கப்பட்ட புள்ளி விவரங்கள் மாவட்டவாரியாகவும், தொழில்வாரியாகவும் தொகுக்கப்படுகின்றன. ஆண்டு "கார்டெக்ஸ்" தகவல்கள் மற்றும் புதிதாகச் செய்யப்பட்ட பதிவுகள் இவற்றின் மூலமாகச் சேகரிக்கப்பட்ட புள்ளி விவரங்களின் அடிப்படையில் ஓர் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட சிறு தொழில்கள் பற்றி மதிப்பீட்டாய்வு நடத்தப்பட்டு, இம்மாநிலத்தில் சிறு தொழில் வளர்ச்சியின் போக்குபற்றி அதிக முக்கியத்துவமளித்து பகுப்பாய்வும்

மேற்கொள்ளப்படுகின்றது. இந்திய அரசின் வேண்டுகோளின் பேரில், இன்றியமையாப் பொருள்களின் விலைப்போக்கினைக் கண்டறியும்பொருட்டு, சிறு தொழில் துறையில் இன்றியமையாத பொருள்களை உற்பத்திச் செய்யும் பிரிவுகள் பற்றிய தகவல்களைச் சேகரிக்கும் காரியத்துக்கென மாதாந்தர அறிக்கை ஒன்று தயாரிக்கப்பட்டு வருகின்றது.

பதிவு செய்யப்பட்டதன் மூலமாகச் சேகரிக்கப்பட்ட விவரங்களின் அடிப்படையில், சிறு தொழில் பிரிவுகள் பற்றிய விவர விளக்க நூல் இரண்டினை இந்தப் பிரிவு வெளியிட்டுள்ளது. முதல் நூல் 1962-ம் ஆண்டில் வெளியிடப்பட்டது. 1961-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31-ம் நாள்வரை பதிவு செய்யப்பட்டுள்ள தொழில் பிரிவுகள் (3,000) பற்றிய விவரங்கள் இதில் உள்ளன. 1965-ல் வெளியிடப்பட்ட 2-வது நூலில் 1963-ம் வருடம் டிசம்பர் மாதம் 31-ம் நாள்வரையில் பதிவு செய்யப்பட்ட (6,135) தொழில் பிரிவுகள் பற்றிய விவரங்கள் அடங்கியுள்ளன. 1967-ம் வருடம் டிசம்பர் மாதம் 31-ம் நாள்வரை பதிவு செய்யப்பட்ட சிறுதொழில் பிரிவுகள் 4,913) அனைத்தையும் கொண்ட பிற்சேர்க்கை ஒன்று இரண்டாவது வெளியீட்டிற்குத் தயாரிக்கப்பட்டு, 1969-ம் ஆண்டு இறுதியில் வெளியிடப்பட்டது. புதிய தொழில் துறைகளில் இறங்க விரும்பும் தொழில உரிமையாளர்களுக்கும் தொழில் முனைவர்களுக்கும் இந்த விளக்க நூல்கள் பயனுள்ள தகவல்களை அளிக்கின்றன.

கிண்டி, மதுரை, பேட்டை, காட்பாடி, அம்பத்தூர் ஆகிய இடங்களிலுள்ள தொழில்பேட்டைகளில் இடத்துக்கு ஒன்றாக, ஐந்து தொழில் நுட்ப தகவல் பிரிவுகள் தற்போது செயல்பட்டு வருகின்றன.

கிண்டியிலுள்ள தொழில் நுட்பத் தகவல் பிரிவில் நூலகம், வெளியீடுகள், மொழிபெயர்ப்புப் பிரிவுகள் ஆகியவை அடங்கியுள்ளன. நூலகத்தில், பொறியியல், தொழில் நுட்பப் பிரிவுகள், தொழில் நிர்வாகம், தொழில் நிறுவனச் செலவினக் கணக்கியல் (Cost Accounting) திட்ட அறிக்கைகள் முதலியவை குறித்து ஏராளமான நூல்கள் உள்ளன. இவை பெரும்பாலும் வெளி நாட்டிலிருந்து தருவிக்கப்படுபவையாகும். இத்துறைகளில் அண்மையில் ஏற்பட்டுள்ள மேம்பாடுகள் குறித்து இன்றைய நாள் வரையிலான தகவல்களை இவை அளிக்கின்றன. இந்நூல்கள் கிண்டி தொழிற்பேட்டையிலுள்ள தொழில் உரிமையாளர்களுக்கும், துறை அதிகாரிகளுக்கும் படிப்பதற்கு அளிக்கப்படுகின்றன. ஆங்கிலத்திலும், தமிழிலும் உள்ள சிறு தொழில் வழிகாட்டி நூல் தற்போதுள்ளவையும், இனி ஏற்படக் கூடியவையுமான தொழில்களின் தகுதிப் பட்டியல் போன்ற பயனுள்ள வெளியீடுகள் பல வெளியிடப்பட்டுள்ளன. தொழில் நுட்பத் தகவல் பிரிவு வெளியிட்டு வந்த "தொழில்வாணிபம்" (Indcom) என்னும் பெயர் கொண்ட பத்திரிகை அரசின் வெளியீடாகிய "தமிழரசு" பத்திரிகையுடன் தற்போது இணைக்கப்பட்டுள்ளது. திரைப்படக்கலை-பொருட்காட்சிப் பணியை தகவல்-விளம்பரப் பிரிவு மேற்கொண்டுள்ளது.

கிண்டியிலுள்ள தொழில் நுட்பத் தகவல் பிரிவை விரிவுபடுத்தும் திட்டத்திற்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இத் திட்டத்தில் (1) இப்பிரிவின் பல்வேறு கிளைகளை அமைப்பதற்காக கிண்டியிலுள்ள தொழிற்பேட்டையில் புதிய கட்டிடம் கட்டுதல், (2) நுண்படம் செய்திப் படங்கள் பிரிவு ஒன்றை ஏற்படுத்துதல், கட்டிடப் பணி முடியும் தறுவாயில் உள்ளது. பிற தொழில் நுட்பத் தகவல் பிரிவுகள், தம்முடன் இணைக்கப்பட்டுள்ள சிறு நூலகங்கள் மூலமாக அப்பகுதிகளைச் சுற்றியும் உள்ள தொழிலதிபர்களுக்கும், பொதுமக்களுக்கும் தொழில் நுட்ப அறிவூட்டும் பணி நிலையங்களாகச் செயல்பட்டு வருகின்றன.

மின் அணு தொழில்கள் குறித்த செயற்குழு ஒன்றை அரசு அமைத்துள்ளது. அது 1970 ஆகஸ்ட் திங்களில் தனது அறிக்கையைப் பணிந்தனுப்பியது. அரசு அந்த அறிக்கையை ஆய்வு செய்து அதன் பரிவுரைகள் பல குறித்து ஆணைகள் பிறப்பித்துள்ளது.





மின்சாரத் தொழிலுக்கு உற்பத்திப் பரிசோதனை வசதிகளை அளிப்பதற்கும், பகுதிப் பொருட்களுக்கும், பணி நிறைவுற்ற பொருள்களுக்கும் புதிய வடிவமைப்புகளை வகுப்பதற்கும் திருவள்ளூருக்கு அருகில் காக்களூரில் மத்திய மின் பரிசோதனை ஆய்வுக்கூடம் ஒன்று அமைக்கப்பட்டு வருகிறது. ஆய்வுக்கூடக் கட்டிடம் கட்டுவது முடியும் தறுவாயில் உள்ளது.

மின் அணு-கருவிகள் தொழிலுக்கான தேவைகளைச் சரிக்கட்ட சென்னையில் பரிசோதனை-சான்றிதழ் வழங்கும் ஆய்வுக்கூடங்களை அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த ஆய்வுக் கூடங்கள், பரிசோதனை செய்தல், சான்றிதழ் வழங்குதல், உற்பத்தி மேம்பாடடுப் பணி ஆகியவற்றை மேற்கொள்ளும்.

அடையாறில் மின்சாரக் கருவிகள் தொழிற்சாலைக்கான தனித்தொழில் பேட்டையில் சோதனை-சான்றளிக்கும் வசதிகள் பிரிவை அமைக்க இந்த அரசு கருதியுள்ளது. இந்திய அரசு தங்களது இந்திய தர நிர்ணய நிறுவனத்தின் மூலம் இந்த அரசின் மேற்படி திட்டத்தில் ஒத்துழைக்குமாறு வேண்டப்பட்டுள்ளது. அடையாறிலுள்ள, இராஜஸ்தான் மத்திய மின் பொறியியல் ஆராய்ச்சி நிலையத்தைச் சேர்ந்த வட்டார பணி-செப்பனிடு நிலையம் ஒன்றை அமைக்கவும் மற்றொரு செயற்குறிப்புள்ளது.

விலை உயர்ந்த இயந்திரங்களை வாங்கப் பெருந்தொகை முதலீடு செய்ய இயலாத சிறு தொழிலதிபர்களுக்குப் பணி வசதி செய்து கொடுக்கும் நோக்கத்துடன் பேட்டை (திருநெல்வேலி மாவட்டம்), திருச்சி, கோயம்புத்தூர், மதுரை, அம்பத்தூர் ஆகிய இடங்களில் உள்ள தொழிற்பேட்டைகளில் பொதுக் குத்தகைப் பட்டறைகள் ஏற்படுத்தப்பட்டன. மதுரையிலும், திருச்சிராப்பள்ளியிலுமுள்ள பொதுக் குத்தகைப் பட்டறைகள் 1—2—71 அன்று வேளாண்மை-தொழில் கழகத்திற்கு மாற்றப்பட்டுள்ளன.

கிண்டியிலுள்ள தொழில் நுட்ப பயிற்சிப் பள்ளி மூன்றாவது திட்டக் காலத்தில் தொடங்கப்பட்டது. பொறியியல் பட்டதாரிகளுக்கும், தகுதிப் பட்டயம் பெற்றவர்களுக்கும் (Diploma holders) தொழில் பயிற்சிப் பள்ளிகளில் பயிற்சி பெற்றவர்களுக்கும், அச்சு வடிவமைப்பு, அச்சு வார்த்தல், கருவிகள் செய்தல், உலையில் காய்ச்சி அடித்துப் பக்குவப் படுத்தல் (Forge and heat treatment), இயந்திரங்களை இயக்குதல் ஆகியவற்றில் சிறப்புப் பயிற்சி வசதிகளை இப்பயிற்சிப் பள்ளி அளித்து வருகிறது. இப்போது 65 பேர் பயிற்சி பெற்று வருகின்றனர். பட்டதாரிகளுக்குத் திங்கள் தோறும் 200 ரூபாய் பயிற்சி உதவித் தொகை அளிக்கப்படுகிறது. தகுதிப் பட்டயம் பெற்றவர்களுக்கும், தொழில் பயிற்சிப் பள்ளியில் பயிற்சி பெற்றவர்களுக்கும் முறையே ரூ. 125 வீதமும், ரூ. 75 வீதமும் பயிற்சி உதவித் தொகை அளிக்கப்படுகிறது. இப்பிரிவு கிண்டியில் மூன்று வெவ்வேறு இடங்களில் அமைந்துள்ளது. இப்பிரிவிற்கான கட்டிடம் கட்டுவது முடியும் தறுவாயில் உள்ளது.

அறிவியல் தொழில் நுட்பத் துறையில் ஏற்படும் முன்னேற்றங்களையொட்டி இருக்கும் வகையில், மின் அணுக் கருவிகள், குளிர் வசதி இயந்திரம், ரப்பர் தொழில் நுட்பவியல் போன்ற புதிய பாட முறைகளில் பயிற்சி அளிப்பதற்காக நான்காவது திட்டத்தில் ரூ. 22·35 லட்சம் செலவில் விரிவுத் திட்டம் ஒன்றிற்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இத் திட்டம் பொறியியல் பணியாளர்களுக்குப் புதிய வேலை வாய்ப்புகளை ஏற்படுத்தித் தருவதுடன் தொழிற்சாலைகளின் நவீனத் தேவைகளை நிறைவு செய்யும்.

[1971 ஜூன் 30

மூன்றாவது திட்டக் காலத்தில் திண்டுக்கல்லில் அமைக்கப்பட்ட கருவிகள் அச்சு மாதிரி அமைப்புப் பயிற்சி நிலையம், பற்பல பொறியியல் பிரிவுகளுக்கும், குறிப்பாக பூட்டு தயாரிப்பதற்கும் வேண்டிய கருவிகளையும் அச்சுக்களையும் வடிவமைத்து தயாரிப்பதில் நூலறிவிலும், செயலறிவிலும் சிறப்புப் பயிற்சி அளித்து வருகிறது. இந்த நிலையத்தில் தற்போது 34 பேர் பயிற்சி பெற்று வருகின்றனர்.

மின் மருத்துவப் பணிகளுக்கான மத்தியப் பணி-செப்பனிடு பிரிவு 1967-ம் ஆண்டு கிண்டியில் ஏற்படுத்தப்பட்டது. இதன் துணைப் பிரிவு மதுரையில் ஏற்படுத்தப்பட்டது. மிக நுண்ணிய கருவிகளைக் கொண்ட இப் பிரிவுகள் கால்நடை வளர்ப்பு, பொதுச் சுகாதாரத் துறைகளைச் சேர்ந்த தனி மருத்துவ மனையைச் சேர்ந்த கருவிகளைச் செப்பனிடும் பணியை மேற்கொள்ளுகின்றன. கிண்டியில் உள்ள மத்தியப் பிரிவில் பணி பல்குவதை குறைக்கவும், செப்பனிடு பணிகளை விரைவுபடுத்தவும், நான்காவது திட்டக் காலத்தில் தஞ்சாவூரில் பிரிவு ஒன்றை ஏற்படுத்துவதற்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. இப்பிரிவுக்கான கட்டிடம் கட்டுதலும் கிண்டியிலுள்ள மத்திய பிரிவுக்கான கட்டிடம் கட்டுதலும் முடியும் தறுவாயில் உள்ளன. தஞ்சாவூரில் உள்ள பிரிவு 1971-இல் பணியாற்றத் தொடங்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

அரக்கோணத்திலுள்ள கருமார்-தச்சுப் பிரிவு, அரக்கோணத்திலும், சுற்றுப்புறங்களிலும், குறிப்பாக வேளாண்மைக் கருவிகளுக்கு வேண்டிய பணி வசதிகளைச் செய்து தருவதுடன், கருவிகளைத் தயாரிக்கவும் வசதி அளிக்கிறது.

விண்ணமங்கலத்திலுள்ள கம்பளி பக்குவப்படுத்தும் நிலையம் வெளி நாடுகளுக்கு தூய்மைப்படுத்தப்பட்ட ஆட்டு உரோமத்தை ஏற்றுமதி செய்கிறது.

பொருத்துபவர், கடைபவர், பற்றவைப்பவர் ஆகிய தொழில்களில் விசையில் இயங்கும் அடிப்படை இயந்திரங்களை இயக்குவதில் மாணவர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காக திருநெல்வேலி மாவட்டத்தில் தென்காசியில் ஒன்றும், கீழ் அம்பாசமுத்திரத்தில் இரண்டும் ஆக மூன்று ஆதாரக் கிராமப் பணி நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. பயிற்சிக்கால அளவு 18 திங்களாகும். ஒவ்வொரு நிலையத்திலும் ஒவ்வொரு தொகுதியிலும் 12 பேர் பயிற்சி பெற்று வருகின்றனர். தென்காசியிலும் அம்பாசமுத்திரத்திலும் உள்ள ஒவ்வொரு நிலையத்திலும் ஐந்தாவது தொகுதியான 12 மாணவர்களும், அம்பாசமுத்திரத்தில் உள்ள மற்றொரு நிலையத்தில் நான்காவது தொகுதியான 12 மாணவர்களும் பயிற்சி பெற்று வருகின்றனர்.

ரசாயனச் சோதனை-பகுப்பாய்வுக்கூடம் ஒன்று கிண்டியில் செயல்பட்டு வருகிறது. இது பொதுத் துறைக்கும், தனியார் துறைக்கும் ரசாயனங்களைப் பரிசோதனை செய்து பகுப்பாய்வு செய்வதற்கான வசதிகளை அளித்து வருகிறது. 1970-71-ல் 4—6—71 வரை 877 மாதிரிகளை ஆய்வுக்கூடம் சோதனை செய்தது. இதனுடன் இணைந்துள்ள இயந்திர உலோகத் தொழில் பிரிவில் பொறியியல் சாதனங்கள் முதலியன குறித்து இயந்திர உலோகப் பரிசோதனை செய்வதற்கான வசதிகள் உள்ளன. "மாக்னிகாஜ்" காலமானி (Weathero Meter) போன்ற புதிய சாதனங்கள் இத்திட்டத்திற்காக வாங்கப்பட்டு வருகின்றன. 1970–71-இல் 4–6-71 முடிய மொத்தம் 741 மாதிரிகள் சோதனைச் செய்யப்பட்டன. ரசாயனப் பொறியியல் பிரிவு ஒன்றும் நிறுவப்பட்டுள்ளது. இந்தப் பிரிவு ரசாயனத் தொழில்கள், அதனுடன் தொடர்புள்ள தொழில்கள் குறித்து முன்னோடி இயந்திர சாலைகளை இயக்குவது பற்றிய ஆய்வுப் பணியை மேற்கொண்டு வருகிறது. பின்வரும் பணிகள் நடந்தேறி வருகின்றன:— (1) பாக்சைட்டிலிருந்து படிகாரம் தயாரித்தல். (2) சின்கோனா மரப் பட்டைக் கழிவிலிருந்து செயலூக்கக் கரியம் தயாரித்தல். (3) சர்க்கரை கசண்டுகளிலிருந்து பரபியூரல் தயாரித்தல். (4) தேயிலை கழிவிலிருந்து காபின் தயாரித்தல்.



1971 ஜூன் 30]

"செயலூக்கக் கரியம் (active carbon) தயாரிப்பதற்கான பிரிவு ஒன்றுக்காக வடலூரில் கட்டிடங்களும், உலைக்கூட இயந்திரம் தவிர பிற இயந்திரங்களும் தயாராக உள்ளன. உலைக்கூட இயந்திரத்தைத் தயாரிப்பதற்குத் தேவைப்படும் சிறப்பு வகை துருப்பிடிக்காத உருக்கு பிரிட்டனிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. இப்பிரிவு 1971 அக்டோபர் திங்களில் செயல்படத் தொடங்கும்.

காடிச்சத்து (Yeast) தயாரிப்பதற்கான பிரிவு ஒன்று கிண்டியில் அமைக்கப்பட்டுவருகிறது. கட்டிடங்கள் கட்டி முடிக்கப்பட்டு பெரும்பாலும் சாதனங்கள் அனைத்தும் பெறப்பட்டுள்ளன. இப்பிரிவு 1971–72 மத்தியில் உற்பத்தியைத் தொடங்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

சோடியம் டைகுரோமேட் தயாரிப்பதற்கான பிரிவு ஒன்று வாலாஜாபேட்டையில் அமைக்கப்பட்டு வருகிறது. கட்டிடங்கள் கட்டி முடிக்கப்பட்டு விட்டன. ஒரு நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்ட தொடக்கப்பணி பெரும்பாலும் முடியும் தறுவாயிலுள்ளது. இப்பிரிவு 1971-ல் செயல்படத் தொடங்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

இளிஞ்சலிலிருந்து ரசாயனச் சுண்ணாம்பு தயாரிப்பதற்கான பிரிவு ஒன்று மரக்காணத்தில் அமைக்கப்பட்டு வருகிறது. தொழிற்சாலைக்கான கட்டிடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. தொடக்கப்பணி அடிப்படையில் பொறியையும் இயந்திரத்தையும் வழங்குவதற்காக ஒப்பந்தப் புள்ளிகள் வரவழைக்கப்பட்டுள்ளன.

கிண்டியிலுள்ள ரசாயனச் சோதனை-பகுப்பாய்வுக்கூட அடிப்படையில் வட்டாரப் பரிசோதனை ஆய்வுக்கூடம் ஒன்று மதுரையில் அமைக்கப்பட்டு வருகிறது. இந்த ஆய்வுக்கூடம் 1971 ஜூலைத் திங்களில் செயல்படத் தொடங்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

"அயான்கள்" (Ionnes) தயாரிப்பதற்கான பிரிவு ஒன்று கிண்டியில் செயல்பட்டு வருகிறது. நறுமணப் பொருட்கள், நறுமணக் கலவைகள், நறுமண ரசாயனங்கள் ஆகியவை குறித்து ஆய்வுக்கூட சோதனைகள் இப்பிரிவில் நடத்தப்படுகின்றன. நறுமண ரசாயனங்கள், நறுமணப் பொருட்கள், அவற்றின் கலவைகள் ஆகியவை காமதேனு, காவேரி சிறப்பங்காடிகள் மூலமாக விற்கப்படுகின்றன.

மக்னீஷியம் கார்பனேட் தயாரிப்பதற்கான பிரிவு ஒன்று தூத்துக்குடியில் செயல்பட்டு வருகிறது. குறிப்பான அளவில் தேவைப்படும் மக்னீஷியம் கார்பனேட் உற்பத்தி செய்யப்படடு விற்கப்படுகின்றது.

பொட்டாசியம் குளோரைடு, பாரிஸ் உறை மாவு (Plaster of Paris) தயாரிப்பதற்காக வேறு இரண்டு பிரிவுகள் தூத்துக்குடியில் அமைக்கப்பட்டு வருகின்றன. உப்பு—கடல் ரசாயனங்களுக்கான நேரிட ஆராய்ச்சி நிலையம் ஒன்றை தூத்துக்குடியில் அமைப்பது குறித்து அரசு பரிசீலனை செய்து வருகிறது.

உற்பத்திப் பிரிவுகளில் ஓராண்டு செயல் முறைப் பயிற்சி உட்பட நான்காண்டு காலப்படிப்புடன் மட்பாண்ட வகை தயாரிப்பதில் மாணவர்களுக்குப் பயிற்சியளிக்க மட்பாண்டப் பயிற்சிப்பள்ளி ஒன்று விருத்தாசலத்தில் செயல்பட்டு வருகிறது. இதுவரை பயிற்சியை முடித்துள்ள மாணவர்கள் அனைவரும் தொழிற்சாலையில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளனர். திங்கள் ஒன்றுக்கு ரூ. 50 என்ற பயிற்சி உதவித் தொகையுடன் பயிற்சியளிப்பதற்காகத் தெரிந்தெடுக்கப்பட்ட 15 மாணவர்களைத் தவிர, பயிற்சி உதவித் தொகை அளிக்கப்படாமல் மேலும் 10 மாணவர்கள் இப்பள்ளியில் சேர்க்கப்பட்டுள்ளனர். மட்பாண்டத் தொழிற்சாலைகள், இந்தத் தொழிற்சாலை தொடர்பான பிற நிலையங்கள் ஆகியவற்றினால் நியமனம் செய்யப்படவிருக்கும் ஐவரும் இதில் அடங்குவர்.

பயிற்சிப் பள்ளியுடன் இணைக்கப்பட்டுள்ள மட்பாண்ட ஆய்வுக்கூடங்கள் மேம்பாட்டுப் பணியை மேற்கொண்டுள்ளன. தொழில் நுட்ப இடர்ப்பாடுகள் எழும்போதெல்லாம் அவற்றைச் சரி செய்யும் பொருட்டு விருத்தாசலத்திலுள்ள வாணிகப் பிரிவுகளுக்கும் இவர்கள் உதவி புரிகின்றனர். இந்த மட்பாண்ட ஆய்வுக் கூடம் இவ்வாண்டில் வெற்றிகரமாக மேற்கொண்டுள்ள பணிகளில், வண்ண செங்கற்கள் தயாரித்தல், பழுப்பு நிறமுடைய மணிக்கல் வகை கட்டுகள், பளப்பளப்பான பளிங்கு வகைக் கற்கள், மட்பாண்ட வடிகட்டிகளுக்கான கட்டுகள் தயாரித்தல் ஆகியவை அடங்கும்.

குறைவு அழுத்த மின் கடத்திகளுக்கென வெப்பம் தாங்கும் கற்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகளுக்கு கூடுதல் சோதனை வசதிகளை ஏற்படுத்துவதற்கான திட்டமும், விருத்தாசலத்தில் மட்பாண்ட தொழிற்சாலையில் மின்சாரம் தொடர்பாக பயன்படுத்தப்படும் பீங்கான் பொருட்களைத் தயாரிப்பதை மேம்படுத்த ஒரு பிரிவை அமைக்கும் திட்டமும் ஒப்பளிக்கப்படுமெனக் கருதப்படுகிறது.

பெரம்பூரிலும், விருத்தாச்சலத்திலும் உள்ள வேலைப்பாடுகள் அமைந்த மட்பாண்டத் தொழில் பிரிவுகள், வேலைப்பாடுகள் அமைந்த—பயன்படுத்தத்தக்க மட்பாண்டங்களைத் தயாரிப்பதில் மாணவர்களுக்குப் பயிற்சியளிக்கிறது. பெரம்பூரிலுள்ள பிரிவு 1963 மே திங்களிலும், விருத்தாசலத்திலுள்ள பிரிவு 1964 ஜூன் திங்களிலும் செயல்படத் தொடங்கின. பெரம்பூரிலுள்ள பிரிவில் 10 மாணவர்களும் விருத்தாச்சலத்திலுள்ள பிரிவில் 15 மாணவர்களும் பயிற்சி பெறுகின்றனர். வடிவமைப்பு, வார்ப்பு மாதிரி வடிவம், எழில்மிகு வேலைப்பாடுகள் ஆகியவை குறித்தும் பயிற்சியளிக்கப்படுகிறது. இந்த இரண்டு துறைப் பிரிவுகளிலும் தயாராகும் வேலைப்பாடமைந்த மட்பாண்ட வகைகளுக்கு தேவை அதிகரித்திருப்பதை முன்னிட்டு இப்பிரிவுகளில் உற்பத்தியைப் பெருக்க முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

வேலைப்பாடமைந்த மட்பாண்டப் பொருள்களை விற்பதற்காகத் தற்போது மலைச்சாலையிலுள்ள துறை விற்பனை நிலையத்தில் காட்சிக்கூடம் ஒன்று தொடங்கப்பட்டுள்ளது.

விருத்தாச்சலத்தில் செயல்பட்டு வருகின்ற மட்பாண்டத் தொழில்—பொது வசதிப் பணி நிலையம் மட்பாண்டத் தொழிற்சாலைகளுக்குச் செப்பனிடு பணி வசதிகளை அளித்து வருகிறது. இப்பணி நிலையம், விருத்தாசலத்தில் அமைந்துள்ள மட்பாண்டத் தொழிற்பேட்டையிலுள்ள பிரிவுகளுக்கும் வெளியே அமைக்கப்பட்டுள்ள பிரிவுகளுக்கும் வேண்டிய கட்டுகளையும் பளப்பளப்புச் சாதனங்களையும் தயார் செய்து அனுப்புகின்றது. இப்பிரிவுகளிலிருந்து அனுப்பப்படும் பொருள்கள் இந்த நிலையத்தினால் இயக்கப்படும் பொதுச் சூளைகளில் சுடப்படுவதற்கும் அது ஏற்பாடு செய்கிறது.

விஞ்ஞானக் கண்ணாடிக் கருவிகளைத் தயாரிப்பதற்காகப் பயிற்சி நிலையம் ஒன்று 1950 முதற் கொண்டு கிண்டியில் செயல்பட்டு வருகிறது. நுட்பமான வகை ஆய்வுக்கூடக் கண்ணாடிக் கருவிகளைத் தயாரிப்பதில் இப்பிரிவு இரண்டு ஆண்டு காலப் பயிற்சியளிக்கிறது. ஆண்டு தோறும் 20 மாணவர்கள் பயிற்சி பெறுகின்றனர். இப் பிரிவை விரிவுபடுத்துவதற்கான திட்டம் ஒன்றுக்கும் இது போன்ற பிரிவை கோயம்புத்தூரில் தொடங்குவதற்கும் அரசு அனுமதி வழங்கியுள்ளது. வேலைப்பாடமைந்த கண்ணாடிச் சாமான் தயாரிப்பதற்கான பிரிவு ஒன்று 1961 முதற்கொண்டு மதுரையில் செயல்பட்டு வருகின்றது. இங்கு 15 மாணவர்களுக்கு இரண்டாண்டு காலப் பயிற்சியளிக்கப்படுகிறது.



கண்ணாடிப் பொம்மைகள் தயாரிப்பதற்கான நிலையம் ஒன்று 1960 முதற்கொண்டு சென்னையில் செயல்பட்டு வருகிறது. வண்ணக் கண்ணாடித் தண்டுகள், குழாய்களைப் பயன்படுத்திக் கண்ணாடிப் பொம்மைகள், கண கவர் பொருள்கள் ஆகியவற்றைத் தயாரிப்பதில் 10 மாணவர்களுக்கு இது இரண்டாண்டு காலப் பயிற்சியளிக்கிறது.

சிறுநகர்ப் பகுதிகளிலும் கிராமப் பகுதிகளிலும் சிறு தொழில்களை மேம்படுத்துவதற்கான திட்டத்தைத் தொழில் முனைவர்களுக்குத் தெரிவிக்கவும் இப் பகுதிகளில் புதியத் தொழில்களைத் தொடங்கத் துணிகர முயற்சிகளை மேற்கொள்ள அவர்களுக்கு ஊக்கமளிக்கவும் வேண்டி மும்முர இயக்கங்கள் 1969–70-இல் சேலம், தஞ்சாவூர், இராமநாதபுரம், மாவட்டங்களில் நடத்தப்பட்டன. 1971 ஜூன் திங்களில் தருமபுரியில் தொழில் கருத்தரங்கு ஒன்று நடந்தது.

1970–71-இல் வட்டார வாரியாக 6 கருத்தரங்குகளை நடத்த அரசு ஆணையிட்டுள்ளது. இவற்றில், வேளாண்மைத் துறை இயக்குநருடனும் சென்னை, தமிழ்நாடு வேளாண்மைத் தொழில் கழகத்துடனும் கலந்தாலோசித்து வேளாண்மை சார்ந்த தொழிலை மேம்படுத்தும் பொருட்டு இரண்டு கருத்தரங்குகள் நடத்தப்படவிருக்கின்றன.

ஏற்றுமதியை அதிகரிப்பதற்காக நாட்டில் பல்வேறு அளவில் மேற்கொள்ளப்பட்டுவரும் முயற்சிகளுக்கு இணக்கமாக, புதுடில்லி, இந்திய வெளிநாட்டு வாணிப நிலையம், மாநில அரசு வேண்டுகோளின் பேரில், தெரிந்தெடுக்கப்பட்ட 72 பொருள்கள் குறித்து விரிவான ஆய்வை நடத்தித் தமிழ் நாட்டின் ஏற்றுமதி வாய்ப்பு குறித்து 5 பாகங்கள் கொண்ட ஆய்வு அறிக்கைகளைத் தயாரித்தது. ஆய்வு அறிக்கைகளில் கண்டுள்ள பரிவுரைகளைச் செயல்படுத்தும் நோக்கத்துடன் “ஏற்றுமதி மேம்பாட்டுப் பிரிவு” ஒன்று தொழில்—வாணிப இயக்குநர் அலுவலகத்தில் 1970-ம் ஆண்டு மே திங்கள் 12-ம் நாளன்று அமைக்கப்பட்டது. மேற்படிப் பரிவுரைகளை மறு ஆய்வு செய்வதற்காக அரசுத் தொழில் துறைச் செயலாளர் தலைமையில் 22 உறுப்பினர்களைக் கொண்ட குழு ஒன்றை அரசு அமைத்துள்ளது. முதற் கூட்டம் 1970-ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 12-ம் நாளன்று நடந்தது. அக்கூட்டத்தில், வேளாண்மைப் பொருட்கள், கடற்பொருட்கள், திரைப்படச்சுருள் ஆகியவை குறித்த பரிவுரைகள் பரிசீலனை செய்யப்பட்டன.

இம் மாநிலத்தில் சிறு தொழிலை மேம்படுத்துவதற்கு ஊக்குவிக்கவும் கருத்துரைகள் அளிக்கவும் வேண்டி, தொழில் துறை அமைச்சர் தலைமையில் அலுவல் சார்பான அதிகாரிகள், அரசு சார்பற்றவர்கள், தொழிலதிபர்கள் ஆகியோரைக் கொண்ட சிறு தொழில் வாரியம் ஒன்றை அரசு அமைத்துள்ளது. இவ்வாரியம், இதுவரை இரண்டு முறை கூடி அரசு பரிசீலனை செய்வதற்காகப் பல கருத்துக்களைத் தெரிவித்துள்ளதோடு பரிவுரைகளையும் செய்துள்ளது.

1969-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 2-ம் நாளன்று நடந்த கூட்டத்தில் சிறு தொழில் வாரியம் எடுத்த முடிவையொட்டி, அதிகாரிகள், அரசுச் சார்பற்றவர்கள் ஆகியோரைக் கொண்ட மாவட்ட அளவிலான குழு ஒன்று ஒவ்வொரு மாவட்டத்திலும் அமைக்கப்பட்டது. இக் குழு சிறுதொழிற்சாலைகளை அமைப்பது தொடர்பாக மாவட்டங்களில் பல்வேறு அதிகாரிகள் தமக்கு வந்துள்ள விண்ணப்பங்கள் குறித்து இசைவளித்து அவற்றிற்கு உரிமங்கள் வழங்குவதில் ஏற்படும் தாமதத்தைக் கண்டு பிடித்து அதைக் களையும். இக் குழு தனது மாவட்டத் தலைமையிடத்தில் திங்களுக்கொரு முறை கூடும்.

சிறு தொழில் வாரியம் செய்துள்ள பரிவுரையை அரசு ஏற்றுக் கொண்டுள்ளதோடு, இம்மாநிலத்தில் சிறு தொழில் வளர்ச்சிக்கு உதவும் பொருட்டு பல்வேறு சட்டங்களின் விதித்துறைகளைத் தளர்த்துவதற்கா

[1971 ஜூன் 30

வாய்ப்பு குறித்துப் பரிசீலனை செய்ய தொழில்—வாணிப இயக்குநர் தலைமையில் அதிகாரிகள், அரசுச் சார்பற்ற அதிகாரிகள், தொழிலதிபர்கள் ஆகியோரைக் கொண்ட துணைக் குழு ஒன்றை அமைத்துள்ளது. துணை குழு தனது அறிக்கையைத் தற்போது அனுப்பியுள்ளது. இதை அரசு தொழிலாளர் நல ஆணையருடன் கலந்தாலோசித்து பரிசீலித்து வருகிறது.

தொழில்களுக் கான அரசு உதவிச் சட்டம்.

**தொழில்களுக்கான அரசு உதவி அளித்தல் சட்டத்தின் கீழ் கடன்கள் வழங்குதல்.**

தொழில்களுக்கு அரசு உதவி அளிக்கும் சட்டத்தின்கீழ், 1969–70-இல் 1,473 தொழிலதிபர்களுக்கு ரூ. 24.90 லட்சம் கடன் வழங்கப்பட்டது. 1970–71-இல் இவ்வகையில் ரூ. 30 லட்சம் செலவிடப்படும்.

நான்காம் திட்டக் காலத்தில் ரூ. 200 லட்சம் கடன் வழங்கத் திட்டமிட்டுள்ளது. எனவே, 1971–72-ஆம் வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இதற்காக ரூ. 40 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

பொற் கொல்லர் கள்மறு வாழ்வுத் திட்டம்.

**வேலையிழந்த பொற்கொல்லர்களுக்கு மறுவாழ்வளிக்கும் திட்டம்.**

பொற்கொல்லர்களுக்கு மறுவாழ்வளிக்கும் திட்டத்தின்கீழ் இம்மாநிலத்தில் 1969-ம் ஆண்டு மார்ச் திங்கள் 31-ம் நாள் வரை, வேலையிழந்த 25,199 பொற்கொல்லர்களுக்கு ரூ.2,30,25,716 கடனாக வழங்கப்பட்டுள்ளது.

1968-ம் ஆண்டு தங்கக் கட்டுப்பாட்டுச் சட்டம் 1968-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 1-ம் நாள் முதற்கொண்டு செயலுக்கு வந்தது. வேலையிழந்த பொற்கொல்லர்களுக்குப் பொற்கொல்லர் தொழில் சான்றிதழ் வழங்குவதற்கு இச்சட்டம் வகை செய்கிறது. தங்கள் பழைய தொழிலை மீண்டும் மேற்கொள்ளுவது இயலும் வகையில் மறுவாழ்வுக் கடன் பெறும் பொற்கொல்லர்களும் இதில் அடங்குவர். தொழில் சான்றிதழ் பெற்றுக் கடன் பெறும் பொற்கொல்லர்கள் தங்களது கடன் தொகைகளை அத்தகைய சான்றிதழ்கள் பெறும் நாளிலிருந்து 36 திங்கட்கால அளவிற்குள் திருப்பிச் செலுத்த அனுமதிக்கப்படுகின்றனர்.

**தொழிற்பேட்டைகளும், செப்பனிட்ட நிலங்களும்.**

நீர், மின் சக்தி, போக்குவரத்து வசதி, சாலைகள் முதலிய வசதிகளுடன் சிறு தொழிலதிபர்களுக்கு நன்கு திட்டமிட்டஇடவசதியை அளிப்பதன் மூலம், இம் மாநிலத்தில் தொழில் வளர்ச்சிக்கு ஊக்கமளித்து விரைவு படுத்துவதே தொழிற் பேட்டைகளை நிறுவுவதன் முக்கிய குறிக்கோள் ஆகும்.

தொழிற் பேட்டை கள்

தொழிற்பேட்டைகள், கீழ்க்கண்ட வகைகளாக உள்ளன; 1. பல்வேறு வகையான தொழிற்சாலைகள் உள்ள பலதொழில்களுக்கான தொழிற்பேட்டைகள். 2. தோல், மண்பாண்டத் தொழிற்சாலை போன்ற சில சிறப்புத் தொழிற்சாலைகள் உள்ள அவ்வத் தொழிலுக்கான தொழிற்பேட்டை. 3. பெருந் தொழில்களுக்கான துணைப் பிரிவுகளின் தேவையைப் பூர்த்தி செய்யும் துணைத் தொழிற்பேட்டைகள். 4. கூட்டுறவு—தனியார் தொழிற்பேட்டைகள்.



1971 ஜூன் 30]

**பல தொழில்களுக்கான தொழிற்பேட்டைகள்.**

முந்தைய திட்டகாலங்களில் பல்வேறு அளவுகளில் தொழிற் பிரிவுகளுக்கு வேண்டிய இடவசதியுடன் பல தொழில்களுக்கான 26 தொழிற் பேட்டைகளை அரசு நிறுவியது. இத் தொழிற் பேட்டைகளில் கட்டப்பட்ட, ஒதுக்கப்பட்ட தொழிற் பிரிவுகள் எண்ணிக்கை விவரம், வாடகை வீதங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

**இரண்டாம் திட்ட தொழிற்பேட்டைகள்.**

| | தொழிற்பேட்டையின் பெயர். | கட்டப்பட்ட தொழிற் பிரிவுகளின் எண்ணிக்கை. | ஒதுக்கப்பட்ட தொழிற் பிரிவுகளின் எண்ணிக்கை. | சதுர அடிக்கு திங்கள் ஒன்றுக்கு 1970 ஏப்ரல் 1-ம் நாள் முதல் 1971 மார்ச் 31-ம் நாள் வரை செயலிலுள்ள திருத்த வாடகை வீதம். (காசுகளில்.) |
|---|---|---|---|---|
| 1 | கிண்டி .. .. .. | 129 | 129 | 15 |
| 2 | மதுரை .. .. .. | 40 | 40 | 11 |
| 3 | விருதுநகர் .. .. | 15 | 10 | 10 |
| 4 | பேட்டை .. .. .. | 12 | 12 | 11 |
| 5 | ஈரோடு .. .. .. | 11 | 11 | 10 |
| 6 | காட்பாடி .. .. .. | 16 | 16 | 8 |
| 7 | தஞ்சாவூர் .. .. | 6 | 6 | 9 |
| 8 | திருச்சி .. .. .. | 29 | 29 | 11 |
| 9 | மார்த்தாண்டம் .. .. | 5 | 5 | 8 |
| | மொத்தம் .. | 263 | 258 | |

**மூன்றுவது திட்டத் தொழிற்பேட்டைகள்.**

| | தொழிற் பேட்டையின் பெயர். | கட்டப்பட்ட தொழிற் பேட்டைகளின் எண்ணிக்கை. | ஒதுக்கப்பட்ட தொழிற் பேட்டைகளின் எண்ணிக்கை. | சதுர அடிக்கு திங்கள் ஒன்றுக்கு 1970 ஏப்ரல் 1-ம் நாள் முதல் 1971 மார்ச் 31-ம் நாள் வரை. செயலிலுள்ள திருத்த வாடகை வீதம். (காசுகளில்.) |
|---|---|---|---|---|
| 1 | அம்பத்தூர் .. .. | 117 | 117 | 10 |
| 2 | தேனி .. .. .. | 7 | 7 | 5 |
| 3 | திண்டுக்கல் .. .. | 18 | 18 | 7 |
| 4 | காரைக்குடி .. .. | 12 | 10 | 5 |

[1971 சூன் 30

| தொழிற்பேட்டையின் பெயர். | கட்டப்பட்ட தொழிற் பேட்டைகளின் எண்ணிக்கை. | ஒதுக்கப்பட்ட தொழிற் பேட்டைகளின் எண்ணிக்கை. | சதுர அடிக்கு திங்கள் ஒன்றுக்கு 1970 ஏப்ரல் 1-ம் நாள் முதல் 1971 மார்ச் 31-ம் நாள் வரை செயலிலுள்ள திருத்த வாடகை வீதம். (காசுகளில்.) |
|---|---|---|---|
| 5 கோவில்பட்டி .. .. | 11 | 11 | 5 |
| 6 கிருஷ்ணகிரி .. .. | 12 | 12 | 7 |
| 7 புதுக்கோட்டை .. .. | 12 | 12 | 5 |
| 8 அரக்கோணம் .. .. | 8 | 8 | 7 |
| 9 சிவகங்கை .. .. .. | 6 | 6 | 5 |
| 10 நாகர்கோயில் .. .. | 6 | 6 | 7 |
| 11 கும்பகோணம் .. .. | 4 | 4 | 7 |
| மொத்தம் .. | 213 | 211 | |

### தொழிற்பேட்டைகளுக்கான ஆண்டுத் திட்டம் (1966–69).

| தொழிற் பேட்டையின் பெயர். | ஒப்பளிப்பு வழங்கப்பட்ட பிரிவுகளின் எண்ணிக்கை. | கட்டப்பட்ட பிரிவு களின் எண்ணிக்கை. | ஒதுக்கப்பட்ட பிரிவுகளின் எண்ணிக்கை. | திங்களொன்றுக்கு சதுர அடிக்கு வாடகை வீதம் 1-4-1970 முதல் 31-3-71 வரை. (காசுகளில்). |
|---|---|---|---|---|
| 1 மேட்டூர் .. | 4 | 4 | 4 | 6 |
| 2 காஞ்சிபுரம். | 4 | 4 | 4 | 5 |
| 3 கரூர் .. | 4 | 4 | 4 | 5 |
| 4 நாகபட்டினம் | 6 | 4 | 3 | 5 |
| 5 ஒசூர் .. | 6 | .. | .. | .. |
| 6 கடலூர் .. | 6 | .. | .. | .. |
| மொத்தம் .. | 30 | 16 | 15 | |

நான்காம் திட்டக் காலத்தில், 10 வருவாய்க் கோட்டங்களில் பல தொழில்களுக்கான தொழிற்பேட்டைகள் பத்தினைத் தொடங்கக் கருதப்பட்டுள்ளது. ஒவ்வொரு வருவாய்க் கோட்டத்திலும் ஒரு தொழிற்பேட்டை இருக்கவேண்டும் என்ற கருத்தை எய்துவதற்கு இது ஒரு முக்கியமான நடவடிக்கையாக இருக்கும். நான்காவது திட்டத்தின் முதலாம் ஆண்டான 1969–70-ல், நாமக்கல்லில் ரூ. 6·22 லட்சம் செலவில் 6 பிரிவுகள் கொண்ட தொழிற்பேட்டை ஒன்றைத் தொடங்குவதற்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டது.



1971 சூன் 30]

முன்னரேயே நிறுவப்பட்டுள்ள தொழிற்பேட்டைகளை விரிவுபடுத்தும் திட்டம் 1970–71 இல் தொடர்ந்து செயல் படுத்தப்படுகிறது. சங்கரி தருமபுரி, திருவண்ணாமலை ஆகிய வருவாய்க்கோட்டம் ஒவ்வொன்றிலும் ஒரு தொழிற்பேட்டையை நிறுவக் கருதப்படுகிறது. ஈரோடு, கரூர், பேட்டை, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, மேட்டூர் ஆகிய இடங்களில் கூடுதல் பிரிவுகளை அமைக்கவும் திட்டமிடப்படுகிறது. அவற்றை விரைவில் கட்டி முடித்து அவற்றைச் செயல்படத் தகுதியாக்க எல்லா முயற்சிகளும் செய்யப்பட்டு வருகின்றன. இம் மாநிலத்தில் உள்ள அவ்வத் தொழில்களுக்குரிய தொழிற்பேட்டைகள் உட்படப் புதியத் தொழிற்பேட்டைகள் அனைத்திலும் தவணைக் கொள்முதல் திட்டத்தைச் செயல்படுத்துவதைக் கொள்கை அளவில் அரசு ஏற்றுக்கொண்டுள்ளது.

### அவ்வவ்தொழில்களுக்குரிய தொழிற்பேட்டைகள்.

சிறப்பு வசதிகள் வேண்டியுள்ள தோல் தொழில், மட்பாண்டத் தொழில், மின் தொழில், உணவு-பழ அடிப்படையில் அமைந்த தொழில், கருவிகள் தொழில், மருந்துகள்-மருந்துக் கலவைத்தொழில், மின் அணுத் தொழில் போன்ற நுண்மை வாய்ந்த சிறப்பு வகைத் தொழில்களை வளர்ப்பதற்காக, இத் தொழில்களுக்கென்றே சிறப்பான தொழிற்பேட்டைகளை நிறுவுவதற்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இத்தகைய தொழிற் பேட்டைகள் நிறுவப்பட்டால், அத்தொழிலைத் திட்டமிட்ட வகையில் வளர்ப்பதும், தக்க தொழில் நுட்பப் பணியாளர், பணவசதிகள், திறமைமிக்க தொழில் நுட்பவினைஞர் கிடைக்காத சிக்கல்களைத் தீர்ப்பதும் இயலக் கூடிய வகையில் அந்தந்தத் தொழில்களைத் தனித்தனியே ஒரே இடத்தில் தொகுதியாக அமைக்க முடியும். இத் தொழிற்பேட்டைகளால் உற்பத்தியும் விற்பனையும் பெருகுவதுடன் அனைத்து நாட்டுத் தரத்திற்கு ஏற்ப தரமுள்ள பொருள்களை உற்பத்தி செய்ய வேண்டும் என்ற உணர்வினையும் ஊட்டும். இதனால் வெளி நாடுகளுக்கு இப்பொருள்களை ஏற்றுமதி செய்யும் வாய்ப்பு கிட்டும். இந்த நோக்கங்களை எய்தவே இத்திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன.

மூன்றுவது திட்டக் காலத்தில், விருத்தாசலத்தில் மட்பாண்டத் தொழிலுக்காக ஒன்றும், மாதவரத்தில் தோல் தொழிலுக்காக ஒன்றும், ஆக, அவ்வவ்தொழில்களுக்கான இரண்டு தொழிற்பேட்டைகள் அமைக்கப்பட்டுள்ளன. ஒப்பளிப்பு வழங்கப்பட்ட, கட்டி முடிக்கப்பட்ட, ஒதுக்கப்பட்ட தொழில் பிரிவுகளின் எண்ணிக்கை விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:—

| தொழிற்பேட்டையின் பெயர். | ஒப்பளிப்பு வழங்கப்பட்ட பிரிவுகளின் எண்ணிக்கை. | கட்டப்பட்ட பிரிவு களின் எண்ணிக்கை. | ஒதுக்கப்பட்ட பிரிவு களின் எண்ணிக்கை. | சதுர அடிக்குத் திங்கள் ஒன்றுக்கு செயலிலுள்ள வாடகை வீதம் (காசுகளில்.) |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| விருத்தாசலம். | 29 | 13 | 13 | 7 |
| மாதவரம் .. | 21 | 18 | 18 | 10 |
| மொத்தம் .. | 50 | 31 | 31 | 17 |

1966–67, 1967–68 ஆண்டு திட்டக் கால அளவுகளில், மேற்கொண்டும் இத்தகைய 5 தொழிற்பேட்டைகள் ஒப்பளிப்பு வழங்கப்பெற்றன. இப் பேட்டைகளில் கட்ட ஒப்பளிப்பு வழங்கப்பட்ட தொழிற் பிரிவுகளின் எண்ணிக்கை, இதுவரை கட்டி முடிக்கப்பட்டவற்றின் எண்ணிக்கை, ஒதுக்கப்பட்ட பிரிவுகளின் எண்ணிக்கை ஆகிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

| தொழிற்பேட்டையின் பெயர். | ஒப்பளிப்பு வழங்கப்பட்ட பிரிவுகளின் எண்ணிக்கை. | கட்டப்பட்ட பிரிவுகளின் எண்ணிக்கை. | ஒதுக்கப்பட்ட பிரிவுகளின் எண்ணிக்கை. | இங்கு ஒவ்வொன்றுக்கு சதுர அடிக்கு வாடகை வீதம். (காசுகளில்.) |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1 மின் தொழில், காகளூர் .. | 16 | 10 | 7 | 10 |
| 2 உணவு-பழ அடிப்படையில் அமைந்த தொழில்கள், வத்தலகுண்டு. | 20 | 4 | .. | .. |
| 3 கருவிகள் தொழில், அடையாறு. | 15 | 6 | .. | .. |
| 4 மருந்துகள்-மருந்து கலவைப் பொருள் தொழில்கள், அம்பத்தூர். | 25 | .. | .. | .. |
| 5 சென்னைக்கருகே மின் அணுத் தொழில். | 30 | 6 | .. | .. |
| மொத்தம் .. | 106 | 26 | 7 | |

மின் அணுத் தொழில்பேட்டை, கருவித் தொழில் பேட்டை ஆகிய இரண்டையும் அடையாறிலுள்ள மத்திய பாலிடெக்னிக்கில் நிறுவ முடிவு செய்யப்பட்டுள்ளது. தொழிற்சாலைக் கொட்டகைகளைத் தொழில் முனைவோருக்குத் தவணைக் கொள்முதல் முறையில் ஒதுக்கவும் முடிவு செய்யப் பட்டுள்ளது.

### துணைத் தொழிற்பேட்டைகள்.

இம் மாநிலத்தில் முக்கியமான இடங்களில் பெருந் தொழில்கள் பல அமைந்த பின்னர், அவற்றிற்கு வேண்டிய தேவைகளை நிறைவு செய்ய அப் பகுதிகளில் துணைத் தொழிற்பேட்டைகளை நிறுவ வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அத்தகைய தொழிற்பேட்டைகளை நிறுவுவதன் வாய்ப்புகளை அரசு பரிசீலனை செய்த பின்னர் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள திருவெறும்பூரில் ஒரு தொழிற்பேட்டையும், தென் ஆர்க்காடு மாவட்டத்தில் உள்ள வடலூரில் மற்றொன்றுமாக இரண்டு தொழிற்பேட்டைகளை நிறுவ ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

திருச்சி கனரக அழுத்தக் கொதிகலன் தொழிற்சாலைக்கான பல்வேறு பொருள்கள், உதிரிப் பகுதிகள் ஆகியவற்றைச் சிறு தொழில் துறையில் தயாரிப்பதற்காகத் திருவெறும்பூரில் துணைத் தொழிற்பேட்டை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. கட்டிடம் கட்டும் பணி முடிவடைந்துவிட்டது. ஏற்புடைய தொழில் முனைவர்களுக்கு இப் பிரிவுகள் ஏற்கெனவே ஒதுக்கிக் கொடுக்கப்பட்டுள்ளன. தமிழ் நாடு அரசு, திருச்சி உயர் அழுத்தக் கொதி



கலன் தொழிற்சாலை ஆகியவற்றின் கூட்டு முயற்சியினால் 1970 அக்டோபரில் அமைக்கப்பட்ட "தொழில் முனைவோர்க்கான வாய்ப்புகள்" குறித்த கண்காட்சியின் வாயிலாக, நல்ல, போதிய பலன் கிடைத்துள்ளமையால் மேற்கொண்டும் இருபது பிரிவுகளை ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. (மட்பாண்டங்களுக்காக.) வடலூரில் துணைத் தொழிற்பேட்டை ஒன்று, மட்பாண்ட தூய்மைக் கருவிகள் தயாரிக்கும் திருவாளர்கள் சேஷசாயி தொழில்கள் தனியார் நிறுவனம், நெய்வேலி மட்பாண்ட அதிகச் சூடு தாங்கும் கற்கள் தயாரிப்பு நிறுவனம் (Ceramics and Refractories, Limited) ஆகிய இரண்டு பெருந் தொழில்களின் தேவைகளை நிறைவு செய்வதற்காக நிறுவப்பட 1967–68-ல் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. இந்துஸ்தான் நிழற்பட பிலிம் நிறுவனத்தின் தேவைகளை நிறைவு செய்வதற்காக உதகமண்டலத்தில் துணைத் தொழிற்பேட்டை நிறுவவும் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. ஹிந்துஸ்தான் நிழற்பட ஃபிலிம்ஸ் நிறுவனம் தங்களது நிறுவனத்தின் தேவைகளுக்காகவென்றே துணைத்தொழில் பேட்டைகளை நிறுவத் தயங்குவதால் இத்திட்டத்தைச் செயல் படுத்த முடியவில்லை. தொழிற்பேட்டைகளில் ஒப்பளிப்பு வழங்கப்பட்ட, கட்டி முடிக்கப்பட்ட, ஒதுக்கிக் கொடுக்கப்பட்ட பிரிவுகளின் எண்ணிக்கை விவரம் கீழே கொடுக்கப் பட்டுள்ளது:—

| தொழிற் பேட்டையின் பெயர். | ஒப்பளிப்பு வழங்கப் பட்ட பிரிவுகளின் எண்ணிக்கை. | கட்டி முடிந்த பிரிவுகளின் எண்ணிக்கை. | ஒதுக்கப்பட்ட பிரிவுகளின் எண்ணிக்கை. | இங்கு ஒவ்வொன்றுக்கு சதுர அடிக்கு வாடகை வீதம் (காசுகளில்). |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| வடலூர் துணைத் தொழிற் பேட்டை. | 6 | 4 | 4 | 5 |
| உதகமண்டலத் துணைத் தொழிற்பேட்டை. | 6 | .. | .. | .. |
| திருவெறும்பூர் துணைத் தொழிற்பேட்டை. | 10 | 10 | 10 | 8 |
| மொத்தம் .. | 22 | 14 | 14 | 13 |

### தனியார், கூட்டுறவுத் தொழிற்பேட்டைகள்.

அடியிற்கண்ட தனியார், கூட்டுறவுத் தொழிற்பேட்டைகளை நிறுவுவதற்கு, 1968–ம் ஆண்டு மார்ச் மாதம் 31-ம் தேதி வரை ரூ. 108·79 லட்சம் அளவுக்கு அரசு கடன் உதவி அளித்துள்ளது. ஒவ்வொரு தொழிற்பேட்டைக்கும் கொடுக்கப்பட்ட கடன், அப்பேட்டைகளிலுள்ள பிரிவுகள் ஆகிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| தொழிற்பேட்டையின் பெயர். | அளித்த கடன் உதவி (ரூபாய் லட்சத்தில்). | பிரிவுகளின் எண்ணிக்கை. ஒப்பளிப்பு வழங்கப் பட்டவை. | கட்டப்பட்டவை. | ஒதுக்கப்பட்டவை. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1 கே. ஆர். சுந்தரம் (தனியார்) தொழிற்பேட்டை, திருவொற்றியூர். | 13·46 | 20 | 20 | 20 |

| தொழிற்பேட்டையின் பெயர். | அளித்த கடன் உதவி (ரூபாய் லட்சத்தில்). | பிரிவுகளின் எண்ணிக்கை ஒப்பளிப்பு வழங்கப் பட்டவை. | கட்டப்பட்டவை. | ஒதுக்கப்பட்டவை. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 2 கோயம்புத்தூர் (தனியார்) தொழிற்பேட்டை, கோயம் புத்தூர். | 32·00 | — | 42 | 39 |
| 3 தூத்துக்குடி கூட்டுறவுத் தொழிற்பேட்டை, தூத் துக்குடி. | 12·61 | 20 | 20 | 20 |
| 4 சக்தி கூட்டுறவுத் தொழிற் பேட்டை, பொள்ளாச்சி. | 16·00 | 50 | 20 | 17 |
| (உடுமலைப்பேட்டைப் பிரிவு உட்பட) | | | | |
| 5 சிவகாசி கூட்டுறவுத் தொழிற்பேட்டை, சிவகாசி. | 8·00 | 20 | 20 | 20 |
| 6 வியாசர்பாடி கூட்டுறவுத் தொழிற்பேட்டை, வியாசர் பாடி. | 24·50 | 100 | 53 | 43 |
| 7 சேலம் கூட்டுறவுத் தொழிற்பேட்டை, சேலம். | 2·22 | 35 | 12 | .. |
| மொத்தம் .. | 108·79 | 345 | 187 | 159 |

மாநில அரசின் உத்தரவாதத்தின் மேல் தொழில் கூட்டுறவுச் சங்கங் களுக்கு நேரடியாக திட்டச் செலவில் 60 சதவீதம்வரை இந்திய ஆயுள் ஈட்டுறுதிக் கழகம் கடனுதவி அளிக்க முன்வந்துள்ளது. சில நிபந்தனை களின்கீழ், தொழிற்பேட்டைகள் அமைப்பதற்காக, தனியார் துறையில் பங்கு முதலீட்டு நிறுவனங்கள் அமைக்கப்பட்டன. 1968–69-ல் சேலம் கூட்டுறவுத் தொழிற்பேட்டைக்கு ரூ. 6·66 லட்சமும், வியாசர்பாடி கூட்டுறவுத் தொழிற்பேட்டைக்கு ரூ. 8·69 லட்சமும் ஆயுள் ஈட்டுறுதிக் கழகம் கடனுதவி அளித்துள்ளது.

### செப்பனிட்ட நிலங்கள்.

இம் மாநிலத்தின் தொழிற் பகுதிகளைச் சுற்றியுள்ள இடங்களில் பெற்ற மனைகளை குறைந்த செலவில் கையகப்படுத்தி, சாலைகள், மின்வசதி, நீர் வசதி, கழிவு நீர் அகற்று வசதி, பொருள்களை அனுப்பிவைக்க இருப்புப்பாதை வசதி முதலியவற்றுடன் அவற்றை மேம்படுத்தி, பெரிய நடுத்தர, சிறு தொழிலதிபர்களுக்கு வழங்க வகைசெய்வதே இத்திட்டத் தின் நோக்கமாகும். அவர்கள் எளிதில் அங்கு தொழிற்சாலைகளை அமைத்து உற்பத்தி தொடங்கப் பெரிதும் இதனால் வசதி ஏற்படும்.



இதுவரை, இத்திட்டத்திற்காக சுமார் ரூ. 110 லட்சம் செலவு செய்யப் பட்டுள்ளது. இத்திட்டம் நிறைவேற்றப்படுவதில் ஏற்பட்ட முன்னேற்றம் கீழ்க்கண்ட அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது :—

| செப்பனிட்ட நிலங்கள் அமைந்துள்ள இடம். | கையகப்படுத்த எண்ணியுள்ள நிலப்பரப்பு. (ஏக்கரில்.) | கையகப்படுத்த பட்ட நிலப் பரப்பு. (ஏக்கரில்.) | 1971 மார்ச் வரை விற்கப் பட்டுள்ள நிலங்கள். (ஏக்கரில்.) |
|---|---|---|---|
| 1 அம்பத்தூர் .. .. | 983·06 | 950·79 | 498·19 |
| 2 மேட்டூர் .. .. .. | 209·08 | 209·08 | 17·31 |
| 3 மதுரை .. .. .. | 536·87 | 525·49 | 20·65 |
| 4 திருச்சி .. .. .. | 478·38 | 478·38 | .. |
| 5 இராணிப்பேட்டை .. .. | 723·29 | 711·52 | .. |
| 6 திருவள்ளூர் .. .. | 283·00 | .. | .. |
| 7 கிண்டி .. .. .. | 157·43 | 157·43 | 46·58 |
| மொத்தம் .. | 3,371·11 | 3,032·69 | 582·73 |

மேற்சொன்ன திட்டங்களைத் தவிர, இம் மாநிலத்தில் சேலம், அரக் கோணம், தூத்துக்குடி, மணலி, காஞ்சிபுரம் ஆகிய இடங்களில் செப்ப னிட்ட நிலங்கள் கொண்ட பேட்டைகளை நான்காம் திட்டக் காலத்தில் அமைக்கக் கருதியுள்ளது.

மனைக்கான செலவுகள், மூன்று தவணைகளில் வசூலிக்கப்பட்டு வந் தன. மனையைப் பெறும் நேரத்தில், முதல் தவணையாக 50 சதவீதமும், மனையைப் பெற்றுக் கொண்ட பின்னர் இரண்டாண்டுகளுக்குள்ளாக 25 சதவீதமும், இரண்டாம் தவணை செலுத்திய தேதியிலிருந்து ஓராண்டிற் குள்ளாக 25 சதவீதமும் வசூலிக்கப்பட்டன.

செப்பனிட்ட நிலங்களின் விலையைச் செலுத்துவதற்கான நிபந்தனை களைத் தளர்த்தும் நோக்கத்துடனும், தொழில் அதிபர்களை அதிகமாக ஈர்க்கும் கருத்துடனும், 1969 நவம்பரில் அரசு கீழ்க்கண்ட ஆணைகளை வெளியிட்டது.

(1) அம்பத்தூரில் உள்ள செப்பனிட்ட நிலங்களை பொறுத்த மட்டில், ஏக்கர் ஒன்றுக்கான செலவு 30,000 ரூபாயிலிருந்து 20,000 ரூபாயாகக் குறைக்கப்பட்டுள்ளது.

(2) கிண்டியில் உள்ள செப்பனிட்ட நிலங்களைப் பொறுத்த வரையில் அந்த நிலத்திற்கான செலவை ஆறு தவணைகளில் செலுத்தலாம்.

(3) தலைநகருக்கு தொலை தூரத்தில் இருக்கின்ற மதுரை, திருச்சி. மேட்டூர் ஆகிய பகுதிகளில் உள்ள செப்பனிட்ட நிலங்களைப் பொறுத்த வரையில், செலவை மூன்று தவணைகளில் வசூலிக்கலாம் என்ற தற்போதைய நடைமுறைக்கும கூடுதலாக, செலவை ஆறு ஆண்டுத் தவணைகளாக வசூலிக்கலாம் என்றும் அரசு இசைவளித்தது. தலை நகருக்குத் தொலை தூரத்தில் உள்ள மனைகளைப் பொறுத்த வரையில், 95 ஆண்டு கால நீண்ட கால அளவுக் குத்தகை அடிப்படையில் தொழில் அதிபர்களுக்கு நிலங்கள் ஒதுக்கப்படலாமென்கிற வகையில் புதிய தூண்டுகோல் இப்போது அளிக்கப் படுகிறது. செப்பனிட்ட நிலங்களின் செலவில் 6 சதவீதம்தான் ஆண்டுக குத்தகைத் தொகையாகிறது. எனினும், குத்தகைதாரர், குத்தகைக்கால அளவின் முதல் பத்தாண்டுகளுக்குள்ளாக, அந்த மனையை ஒரேயடியாக வாங்கிக் கொள்வது அவருடைய விருப்பத்தைப் பொறுத்ததாகும்.

1971 ஜுன் 30]

## கைவினைப் பணிகள்.

இம்மாநிலத்தின் தொன்மை வாய்ந்த கைவினைகளுக்குப் புத்துயிரூட்டி, அவை தழைத்தோங்க வகை செய்வதே அரசால் எடுத்துக்கொள்ளப் பட்டுள்ள இத் திட்டத்தின் முதன்மையான நோக்கமாகும்.

கைவினைப் பணி வளர்ச்சிக்காக நான்காம் ஐந்தாண்டு திட்டக்காலத்தில் ரூ. 60,00,000 நிதி தற்காலிகமாக ஒதுக்கப்பட்டது. 1970–71-ஆம் ஆண்டில் இத்திட்டப் பணிகளுக்காக ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 5·69 லட்சமாகும். ஏற்கெனவே தொடங்கப்பட்ட பிரிவுகளில் பெரும்பாலானவை திட்டத்தின் கீழ் வராத வேலைத் திட்டங்களாகக் கருதப்படுகின்றன.

மாமல்லபுரத்தில் சிற்பப் பயிற்சி நிலையம், சுவாமிமலை, சேலம் ஆகிய இடங்களில் வேலைப்பாடுகள் அமைந்த உலோகப் பொருட்கள் தயாரிப்புப் பயிற்சி நிலையம், நாகர்கோயிலில் ரதத் தயாரிப்பு பயிற்சி நிலையம், நாச்சியார்கோயில், காஞ்சீபுரம் ஆகிய இடங்களில் உள்ள வெண்கலப் பாத்திரத் தயாரிப்புப் பயிற்சி நிலையம், திருநெல்வேலி மாவட்டம், கோபாலசமுத்திரம், ஆயிக்குடி ஆகிய இடங்களில் உள்ள சணல் இரட்டுகள் தயாரிப்புப் பயிற்சி நிலையம், புதுக்கோட்டையிலும், இராமேஸ்வரத்திலும் உள்ள பனை ஓலைப் பொருட்கள் தயாரிப்புப் பயிற்சி நிலையம், கோலக்குடியில் உள்ள கம்பளி இரட்டுகள் தயாரிப்புப் பயிற்சி நிலையம், நெடுவயலில் உள்ள கற்றாழை நார்ப் பொருட்கள் தயாரிப்புப் பயிற்சி நிலையம், சேரன்மாதேவியில் உள்ள மெருகு எண்ணெய் பூசப்பட்ட மரச்சாமான்கள் குறித்த பயிற்சி நிலையம் ஆகியவற்றைத் தற்போது அரசு நடத்தி வருகின்றது.

1970–71-ல் இப்பயிற்சி நிலையங்கள் பலவற்றில் 157 பேர் பயிற்சி பெற்று வருகின்றனர். பயிற்சிக்கால அளவு அந்தந்த கைவினைப்பணிகளைப் பொறுத்து ஓர் ஆண்டு முதல் நான்கு ஆண்டுகள் வரை பரந்துள்ளது. 1969–70-ம் ஆண்டில் கைவினைப் பொருள்கள் உற்பத்தியின் மதிப்பும் விற்பனைத் தொகையும் முறையே ரூ. 4,18,737-ம், ரூ. 4,11,203-ம் ஆகும். 1970–71-ஆம் ஆண்டில் உற்பத்தியின் மதிப்பும் விற்பனைத் தொகையும் முறையே ரூ. 3,65,471, ரூ. 3,25,676 ஆகவும் இருந்தன.

மேற்சொன்ன பயிற்சி நிலையங்களைத் தவிர, கலைகள்-கைவினைப்பணிகள் கல்லூரி ஒன்றைச் சென்னையிலும், கலைகள்-கைவினைப்பணிகள் பள்ளி ஒன்றைக் கும்பகோணத்திலும் தொழில்துறை நடத்தி வருகின்றது. இந்த இரண்டு நிலையங்களில் இரண்டாண்டு ஒருங்கிணைக்கப்பட்ட படிப்பும், அதன்பின் மூன்றாண்டு டிப்ளமா படிப்பும் நடத்தப்படுகிறது. வண்ணம் தீட்டுதல், சிற்ப வேலை, வணிக ஓவியம் ஆகியவை இப்பாடமுறைகளில் அடங்கும். இந்திய அரசினால் தகுதி வாய்ந்த மட்டங்களில் உள்ள பணிகளுக்காக தெரிந்தெடுக்கப்படும் காரியங்களுக்காக, அனைத்திந்திய தொழில் நுட்பக் கல்விக் கழகம் அளிக்கும் கலைக்கான தேசியப் பட்டயத்திற்கிணையாக சென்னை, கலை-கைவினைப்பணிகள் கல்லூரியினால் கொடுக்கப்படும் தகுதிப்பட்டயங்கள் தற்போது அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

சென்னையிலுள்ள கலைகள்-கைவினைப்பணிகள் கல்லூரியில் 1968 ஜூலை முதல் தொழில் வடிவ அமைப்புக்கலையில் பட்டமேற்படிப்புப் பாடமுறை ஒன்று தொடங்கப்பட்டு உள்ளது.

உலோகக கைவினைப் பணிப் பொருள்கள் உற்பத்திக்கான பொது வசதிகள் பெற்ற நிலையம் நாச்சியார்கோயிலில் 1969-ஆம் ஆண்டில் செயல்படத் தொடங்கியது. இந்நிலையம் உள்ளூர் கைவினைஞர்களுக்கு நியாயமான கட்டண வீதங்களில் வசதிகளை அளிக்கவேயுள்ளது.



1971 ஜுன் 30]

கருங்கற்களைப் பளபளப்பாக்குவதற்கான உற்பத்தி நிலையம் கிருஷ்ணகிரியில் செயல்படத் தொடங்கியுள்ளது. ஏற்றுமதியைப் பெருக்கும் நோக்கத்துடன், லப்ஸிக் (Leipzig, East Germany) காட்சியில் வைப்பதற்காக பளபளப்பாகிய கருங்கற்களின் மாதிரிகளை இந்த நிலையம் அனுப்பியுள்ளது.

தமிழ்நாடு கைவினைப் பணி பொருட்களின் தரம், உற்பத்தி, விற்பனை ஆகியவைப்பற்றி ஆலோசனை கூறுவதற்காக அமைக்கப்பட்ட மாநிலக் கைவினைப் பணிப் பொருள்கள் வாரியம், பயனுள்ள கருத்துரைகளைக் கூறியுள்ளது. அவை தற்போது பின்பற்றப்பட்டு வருகின்றன. அந்தப் பரிந்துரைகளைத் தொடர்ந்து, மீனம்பாக்கம் விமான நிலையத்தில் தீர்வையிலிருந்து விலக்களிக்கப்பட்ட கடைகளில் கைவினைப் பணிப் பொருட்கள் விற்கப்படுகின்றன. மீனம்பாக்கம் விமான நிலைய நுழைவு வாயிலின் முன்பு கல்லில் செதுக்கப்பட்ட இரண்டு துவார பாலகர்களையும், இரண்டு தீப லட்சுமிகளையும் நிறுவுவதற்கும் இந்திய அரசு முடிவு செய்துள்ளது. மாமல்லபுரத்தில் உள்ள சிற்பப்பயிற்சி நிலையத்தினால் இந்த கற் சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டுக் கைவினைப்பணி பொருட்கள் சிட்னி (ஆஸ்திரேலியா சந்தையில் வைக்கப்பட்டு, மக்களால் பாராட்டப்பெற்றன. சில வகைப் பொருள்கள் குறித்த விவரங்கள் கேட்கப்பட்டுள்ளன. ஃபிராங்ஃபர்ட் (Frankfurt) (மேற்கு ஜெர்மனி) சந்தையில் கைவினைப்பணிப் பொருட்கள் காட்சியில் வைக்கப்பட்டன. தமிழ்நாடு கைவினைப் பணிப் பொருட்களுக்குப் பணித்துறைச் செயற் கட்டளைப் பெறுவதற்காக, கைவினைப் பணிப் பொருட்கள் வாஷிங்டன், ரோம் ஆகிய நகரங்களில் உள்ள இந்திய வர்த்தகக் கமிஷனர்களுக்கு அவர்களது அலுவலகங்களிலும் ஏனைய பொருட்காட்சிகளிலும் வைக்கப்படுவதற்காக அனுப்பப்பட்டுள்ளன. நாகர்கோயில் ரதம் தயாரிப்புப் பயிற்சி நிலையத்தில் தயாரிக்கப்பட்ட ரதமும், மாமல்லபுர கடற்கரை ஆலயத்தின் மாக்கல் மாதிரியும், ஜப்பான், ஓசாகாவில் நடைபெற்ற எக்ஸ்போ-70 பொருட்காட்சியில் வைப்பதற்காக அனுப்பப்பட்டுள்ளன. கோபாலசமுத்திரம், ஆயிக்குடி (திருநெல்வேலி மாவட்டம்) ஆகியவற்றில் உள்ள துறைப் பிரிவுகளில் தயாரிக்கப்படும் சணல் இரட்டுகளையும், இராமநாதபுரம், பழவேற்காடு (செங்கற்பட்டு மாவட்டம்), மணப்பாடு (திருநெல்வேலி மாவட்டம்) ஆகிய இடங்களில் தயாராகும் பனை ஓலைப் பொருட்களையும் இந்தத் துறை முறையாக ஏற்றுமதி செய்து வருகின்றது. ஏற்றுமதிக்கென உற்பத்தி செய்வதைக் குறிக்கோளாகக் கொண்டு துறைப் பிரிவுகளில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

தமிழ்நாடு கைவினைப் பணிப்பொருள்கள் தயாரிப்பாளர்களை ஆதரிக்கவும் அவர்களது பிரச்சினைகளைத் தீர்க்க உதவுவதற்கும், 1969 ஆகஸ்டில் கருத்தரங்கு ஒன்று நடத்தப்பட்டது. கைவினைப் பணியாளர்களுக்காக நல்ல கருவிகளைப் பாதி விலையில் வழங்குவதற்கான திட்டம், பரிசீலனையில் உள்ளது.

சென்னை, மாமல்லபுரம், நெய்வேலி, தஞ்சாவூர், திருச்சி, திண்டுக்கல், திருநெல்வேலி, கோவை, சேலம் ஆகிய இடங்களில் துறைப்பிரிவுகளும், கூட்டுறவுத் தொழில் பிரிவுகளும், தனியார் கைவினைஞர்களும், கைவினைப் பணியாளர்களும் தயாரிக்கின்ற கைவினைப் பணிப் பொருள்களை விற்பனை செய்வதற்கு வசதியாயிருக்கும் பொருட்டு, மொத்தம் ஒன்பது கைவினைப் பணிப் பொருள் விற்பனை நிலையங்களை துறை நடத்தி வருகிறது. 1969–70-ல் இம்மாநிலத்தில் நடத்தப்பட்ட பெரிய பொருட்காட்சிகள் அனைத்திலும் இந்த விற்பனை நிலையங்கள் பங்கு கொண்டன. 1969–70-ஆம் ஆண்டில் ரூ. 34,07,137-க்கு விற்பனையானது. 1969–70-க்கான லாபம் ரூ. 28,418 ஆகும். 1970–71-ல் மொத்த விற்பனைத் தொகை ரூ. 35·63 லட்சமாகும். கிடைத்த லாபம் ரூ. 47,169 ஆகும். மேற்

சொன்ன துறை விற்பனை நிலையங்களைத்தவிர தமிழ்நாடு கைப்பணிகள் கூட்டுறவு விற்பனைச் சங்கம், வேலூர், காஞ்சீபுரம், ஈரோடு, உதகமண்டலம், கடலூர், கரூர், மதுரை, தூத்துக்குடி, புது டில்லி ஆகிய இடங்களில் விற்பனை நிலையங்களை நடத்தி வருகின்றது. இந்த விற்பனை நிலையங்களில் மொத்த விற்பனைத் தொகை 1969–70-ல் ரூ. 13,66,870 ஆகும்.

## இராமப் பணி நிலையங்கள்.

மாமண்டூரில் (செங்கல்பட்டு மாவட்டம்) கையினால் தயாரிக்கப்படும் காகிதத் தொழிற்சாலையும், ஓமலூரில் (சேலம் மாவட்டம்) ஒரு மட்பாண்டப் பணி நிலையமும் ஆக இரண்டு பணி நிலையங்கள் செயற்பட்டு வருகின்றன. மாமண்டூரிலுள்ள கையினால் தயாரிக்கப்படும் காகிதத் தொழிற்சாலை 1–9–1962 அன்று தொடங்கப்பட்டது. இது சென்னை-1 எழுதுபொருள்–அச்சுத் துறை இயக்குநருக்கு தட்டையான கோப்பு அட்டைகளை வழங்கி வருகின்றது. உயர்தர வரைப்படத் தாள்களையும், புகைப்படத் தொகுப்பு ஏட்டுத் தாள்கள் (Album Mounts) முதலியவற்றைத் தயாரிப்பதன் மூலம் இத்தொழிற்சாலையின் பணிகளை பரவலாக்க கருதும் செயற்குறிப்பு ஒன்று உள்ளது. ஓமலூர் மட்பாண்டப் பணி நிலையம் அப்பகுதி ஓரளவு படித்த இளைஞர்களுக்குப் பயிற்சியளிப்பதற்காக ஒப்புதலளிக்கப் பட்டது. அந்த மட்பாண்டப் பணி நிலையத்தில் வேலை வாய்ப்பும் அளிக்கப்படும். இப்பிரிவு ஓமலூர் திட்டப்பகுதியில் அமைந்துள்ளது. கட்டிடங்கள் கட்டுவது எடுத்துக் கொள்ளப்பட்டது. பணி முன்னேற்ற நிலையில் உள்ளது.

## பட்டுத் தொழில்.

பட்டுத்தொழில் இம்மாநிலத்தில் சமீபத்தில் கொண்டுவந்த ஒன்றாகும். இது தாளவாடி பிர்க்காவிலும் (கோயம்புத்தூர் மாவட்டம்), ஓசூர் வட்டத்திலும் (தருமபுரி மாவட்டம்) கொள்ளேகாலிலுள்ள தொழில் பிரிவின் தேவைகளை நிறைவு செய்வதற்காகக் கொண்டுவரப்பட்டது. 1956-ம் ஆண்டில் மைசூர் மாநிலத்துடன் கொள்ளேகால் சேர்க்கப் பட்டபிறகு, இத்தொழிலின் வளர்ச்சி இம்மாநிலத்திலுள்ள இந்த இடங்களிலும், மற்ற இடங்களிலும் எடுத்துக் கொள்ளப்பட்டது. பிறகு, நோய் நீங்கிய முட்டைகள் வழங்குவதற்காகவும், பட்டுப் புழுக்களிலிருந்து நூல் எடுப்பதற்காகவும் பல தொழிற்பிரிவுகள் அமைக்கப்பட்டுள்ளன. இத்தொழிலின் மேன்மையை விளக்குவதன் பொருட்டு கட்புல விளக்கப் பண்ணைகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. கோலட்டியிலும் (தருமபுரி மாவட்டம்), மசினகுடியிலும் (நீலகிரி மாவட்டம்), மாதஹள்ளியிலும் (கோயம்புத்தூர் மாவட்டம்) மூன்று பெரிய அளவு பட்டுப் பண்ணைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. முசுக்கட்டைச் செடி நடுவதற்காக பதியங்கள் இலவசமாக வழங்குதல், பாதி விலையில் கருவிகளை வழங்குதல், கிணறுகள் வெட்டுவதற்காகக் கடன் வழங்குதல், உதவித் தொகை வழங்குதல், பட்டுப்புழு வளர்ப்புக் கொட்டகைகள் கட்டுதல் ஆகிய பணிகள் மூலம் பட்டுப்பூச்சி வளர்ப்பவர்களுக்கு உதவி செய்யவே இப்பண்ணைகள் நிறுவப்பட்டுள்ளன. இப்பொழுது 9 கட்புல விளக்கப் பண்ணைகளும், 3 முட்டைப் பண்ணைகளும், 5 பட்டுப் புழுக்கள் பண்ணைகளும், 2 முசுக்கட்டைச் செடி வளர்ப்புப் பண்ணைகளும், 2 கலப்புப் பண்ணைகளும், 5 பட்டுப் பூச்சி கூடு சந்தைகளும், 1 நடுத்தர அளவு பட்டுப் பண்ணையும், 3 பெரிய அளவு பட்டுப் பண்ணைகளும் உள்ளன. இத்தொழில் மேலும் வளர்ச்சி அடையாமைக்கு முக்கிய இடர்பாடு உபரி நிலம் இல்லாமையே ஆகும். 50 சத வீதம் நிலங்களில் முசுக் கட்டைச் செடிகள் வளர்ப்பதற்காக அரசு நிலங்களைக் குத்தகைக்கு விடும் பணியை மும்முரப்படுத்துவதற்காக தனி வருவாய்ப் பணியாளர்கள் இப்பொழுது நியமிக்கப்பட்டுள்ளனர்.





கோலட்டியிலுள்ள பெரிய அளவு பட்டுப் பண்ணைக்கான கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டது. கோலட்டியில் 525 ஏக்கர் நிலத்திலும், தாளவாடியில் 150 ஏக்கர் நிலத்திலும், மசினகுடியில் 40 ஏக்கர் நிலத்திலும் முசுக்கட்டைச் செடி ஏற்கெனவே பயிரிடப்பட்டுள்ளன.

1970–71-ம் ஆண்டிலும், கடந்த ஆண்டிலும் ஒப்பளிப்பு வழங்கப் பட்ட வேலைத் திட்டங்கள் 1971–72-ல் தொடர்ந்து நிறைவேற்றப்படும். இந்த மூன்று பெரிய அளவு பட்டுப்பண்ணைகளில் முசுக்கட்டை செடிகள் வைத்து 300 ஏக்கர் அளவிற்கு விரிவுபடுத்தப்படும். கூனூரிலுள்ள பட்டுப் புழு குடல் நாண பிரிவு, 1970–71-ல் ஆராய்ச்சி வளர்ச்சிப் பிரிவாக மாற்றப்பட்டது. அது தொடர்ந்து செயல்படும்.

பட்டு வளர்ப்புத் திட்டங்களைப் பற்றிய பட்டியல் ஆய்வுரையின் XIV இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது.

## கயிற்றுத் தொழில் திட்டங்கள்.

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தின்போது ஒப்பளிக்கப்பட்டு ஈத்தாமொழியில் நிறுவப்பட்ட அரசு கயிற்றுத் தொழில் பள்ளி 15–11–1961-ம் நாள் முதற்கொண்டு செயல்படத் தொடங்கியது. இப் பள்ளியில் 40 மாணவர்களுக்கு மேம்பட்ட முறைகளைக் கையாண்டு பாய்கள், பாய்முடைவுகள் போன்ற கயிற்றுப் பொருள்கள் தயாரிப்பதில் பயிற்சியளிக்கப்படுகிறது. இப்பயிற்சிக் காலம் இரண்டு ஆண்டுகளாகும்.

இதுவரை இக் கயிற்றுத் தொழில் பள்ளி ஏழு தொகுதிப் பயிற்சி யாளர்களுக்குப் பயிற்சி தந்துள்ளது. இப்பள்ளியில் பயிற்சிப் பெற்ற நபர்களின் எண்ணிக்கை 136 ஆகும். இப்பொழுது 8-வது, 9-வது தொகுதி மாணவர்கள் பயிற்சி பெற்று வருகின்றனர். 8-வது தொகுதி யில் 29 மாணவர்களும், 9-வது தொகுதியில் 5 மாணவர்களும் பயிற்சி பெற்று வருகின்றனர்.

இப்பள்ளியில் பயிற்சி பெற்ற மாணவர்களுக்கு வேலைவாய்ப்பளிக்கும் நோக்கத்துடன், கயிற்றுத்தொழில் பயிற்சிப் பள்ளியுடன் இணைந்து செயல்படும் விதத்தில் உற்பத்திப் பிரிவு ஒன்றை நிறுவுவதற்கான அல்லது பள்ளியில் பயிற்சிப் பெற்ற முன்னாள் பயிற்சியாளர்களை உறுப்பினர்களாகக் கொண்ட தொழில் கூட்டுறவுச் சங்கம் ஒன்றை நிறுவுவதற்கான செயற்குறிப்பு ஒன்று உள்ளது.

இம்மாநிலத்தில் பாய்களையும், முரட்டு மெத்தைகளையும் தயாரிப்பதற் கான சாத்தியக் கூறுகளை விளக்குவதன் பொருட்டு, திருநெல்வேலி மாவட்டம், தென்காசியில், முன்னோடி தொழிற்சாலை ஒன்று அமைக்கப் பட்டுள்ளது. இத்தொழிற்சாலை 13–6–1968 முதற்கொண்டு உற்பத்தியை தொடங்கியது. இத்தொழிற்சாலை மருத்துவ மனைகளில் உள்ள முரட்டு மெத்தைகளில் நிரப்புவதற்காகவும், ரப்பர் சேர்ந்த கயிற்றுப் பிரிவுகளுக் காகவும் கலப்புக் கயிற்று நார்களை இப்போது உற்பத்தி செய்து வருகிறது. இப் பிரிவில் ஓரளவு உற்பத்தி நடைபெற்று வருகிறது. இந்தப் பிரிவில் உற்பத்தியைப் பெருக்குவதற்காக நான்கு கயிற்று நார்களை ஊறவைக்கும் தொட்டிகள் கட்டப்பட்டுள்ளன. இப் பிரிவுக்கு முறையாக நீர் வழங்கு வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

தமிழ்நாட்டின் உட்பகுதிகளில் ஏராளமான பரப்பளவில் தென்னை வளர்க்கப்படுகின்றது. ஆனால் ஈரப்பதப்படுத்தும் வசதிகள் இல்லை. ஆகையால், இயந்திர முறை கயிற்று நார் தொழிற்சாலையின் (ஈரப்பதப்படுத்தப்படாத தென்னை மட்டைக்காக) மேம்பாட்டுக்காக அடங்கல் திட்டம் ஒன்றை அரசு ஏற்பளித்துள்ளது. இத் திட்டத்தில் கீழ்க் கண்டவை அடங்கும் :—

(1) ஈரப்பதப்படுத்தப்படாத தென்னை மட்டையிலிருந்து இயந்திர முறையில் கயிற்று நார் உரிப்பதற்கான தொழிற் பிரிவுகளைத் தனியார் துறையில் நிறுவ 20 தொழில் முனைவர்களுக்கு நிதி உதவி அளித்தல்.

ஒவ்வொரு பிரிவுக்கும் உயர்ந்த அளவு ரூ. 70,100-க்குட்பட்டு, தொழில்களுக்கு அரசு உதவியளித்தல் சட்டத்தின்கீழ் தொழில் முனைவர்களுக்குக் கடன் வழங்கப்படும்.

(2) உற்பத்தியைப் பெருக்குவதிலும், உற்பத்தி செய்த பொருள்களை விற்பனைச் செய்வதிலும், இம் மாநிலத்தில் கயிற்றுத் தொழில் முறையாக மேம்பாடடைவதிலும் தொழில் முனைவர்களுக்கு ஆலோசனை கூறும் பொருட்டு மத்தியச் சங்கம் ஒன்றை அமைத்தல்.

இத் திட்டம் வெகுவிரைவில் நிறைவேற்றப்படும். கயிற்று நார், கயிற்றுப் பொருட்கள் ஆகியவற்றிற்கு மாநில விற்பனை வரி விதிப்பதற்கு மாநில அரசு விலக்களித்துள்ளது.

## தொழில் கூட்டுறவுச் சங்கங்கள்.

31–3–1970 அன்றுள்ளபடி, 338 தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வந்தன. விவரம் பின்வருமாறு :—

| | |
|---|---|
| (1) சிறுதொழில் கூட்டுறவுச் சங்கங்கள் .. .. | 190 |
| (2) கைவினைத் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் .. | 122 |
| (3) கயிற்றுத் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் .. | 25 |
| (4) பட்டுப்பூச்சி வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள் .. | 1 |
| மொத்தம் .. | 338 |

1970–71-ம் ஆண்டில் 10 புதிய சங்கங்கள் பதிவு செய்யப்பட்டன. கூட்டுறவுத் துறையிலிருந்து இரண்டு சங்கங்கள் இத்துறைக்கு மாற்றப்பட்டன. சங்கங்கள் செயல்படுவதுபற்றி குறித்த காலத்துக்கு ஒரு முறை நடத்தப்பட்ட ஆய்வின் விளைவாக, 21 சங்கங்கள் மூடப்பட்டன.

தொழில் கூட்டுறவுத் திட்டங்களுக்காக (கூட்டுறவுத் தொழில்பேட்டைகளுக்கான செலவு நீங்கலாக) அரசினால் 1970–71-ம் ஆண்டில் ரூ. 39·81 லட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது. அந்த ஆண்டில் எல்லாச் சங்கங்களின் மொத்த உற்பத்தியின் மதிப்பு ரூ. 411·37 லட்சமாகும். விற்பனைத் தொகை ரூ. 480·80 லட்சமாகும். 1968–69-ம் ஆண்டின் உற்பத்தியோடும். விற்பனையோடும் தற்போதைய உற்பத்தி, விற்பனையை ஒப்பிட்டுப்பார்த்தால், முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது தெரிய வரும்.

தொழிற் கூட்டுறவுச் சங்கங்களில், நீலகிரியிலுள்ள கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைகளும், இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்களிலுள்ள சிறு அளவில் தீக்குச்சி தயாரிப்போர் பணிக் கூட்டுறவுச் சங்கங்களும் நல்ல முறையில் செயல்பட்டு வருகின்றன.

நீலகிரியில் தோராயமாக 9,000 ஏக்கர்களைச் சொந்தமாக உடைய 3,422 சிறிய அளவில் தேயிலை பயிரிடுபவர்களுக்கு இந்த எட்டுக் கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகள் உதவி புரிகின்றன. 1969–70-ல் தேயிலைத் தொழிற்சாலைகளில் உற்பத்தி, விற்பனை முதலியவற்றின் மொத்த மதிப்பு முறையே 116 லட்சம் ரூபாயாகவும், 143 லட்சம் ரூபாயாகவும் இருந்தது. 1970–71-ல் தயாரித்த தேயிலையின் விற்பனை ரூ. 163 லட்சமாக இருந்தது.

இந்த எட்டுத் தொழிற்சாலைகள் அனைத்தும் 1970–71-ல் நிகர இலாபத்தில் செயல்பட்டன. 31—3—1971 அன்றுள்ளபடி ரூ. 22·55 இலட்சம் அளவிற்கு மேம்பாட்டுத் தள்ளுபடித் தொகையையும் தேய்மான சேமநிதியையும் அவை ஏற்படுத்தியுள்ளன என்பதை நோக்குங்கால், இது குறிப்பிடத்தக்க சாதனைதான் என்பதில் ஐயமில்லை. ஆறு சங்கங்கள் குறித்துச் சேர்ந்து வந்த விரயங்கள் முழுவதும் ஈடு செய்யப்பட்டன. மேம்பாட்டுத் தள்ளுபடித் தொகையையும், தேய்மான சேமநிதியையும்



ஏற்படுத்தியதனால், இரண்டு சங்கங்களுக்கு ஏற்பட்ட விரயத்தை ஈடுசெய்ய வேண்டியுளது. அந்த விரயங்கூட 1971–72-ல் ஈடு செய்யப்பட்டுவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. சிறு தேயிலைச் சாகுபடியாளர்கள்கூட தங்களது பங்கு மூலதனத்தைப் பெருமளவுக்கு அதிகரித்துள்ளதுடன், தங்களது தேயிலைக்காக இருமடங்கு விலையையும் பெறுகின்றனர். இந்த எட்டுத் தொழிற்சாலைகளின் உற்பத்தியும் நீலகிரியில் தயாராகும் தேயிலையில் 10 சதவிகிதமாகும். 1971-ல் எட்டுத் தேயிலைத் தொழிற்சாலைகளுக்கும் மத்திய பணிச் சங்கத்துக்கும் ரூ. 9 இலட்சம் அளவிற்குக் கூடுதல் பங்கு மூலதன உதவி வழங்கப்பட்டுள்ளது. தேசீயக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்திடமிருந்து இந்த உதவிக்காக நாம் மறுநிதி வசதி பெறுகிறோம்.

கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகள் பல வளர்ச்சியடைவதற்கான ஒருங்கிணைந்த திட்டம் ஒன்று தேயிலை வாரியத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. ஒருங்கிணைந்த திட்டத்தின்கீழ்த் தொடங்க எண்ணியுள்ள எட்டு புதியத் தொழிற்சாலைகளில், கூடலூர், பிக்கட்டி ஆகிய இடங்கள் ஒவ்வொன்றிலும் புதிய தொழிற்சாலை ஒன்றை ஏற்படுத்தத் தேவையான நிதி உதவி 17·62 லட்சம் ரூபாயைத் தேயிலை வாரியம் அனுமதித்துள்ளது. இந்த இரண்டு தேயிலைத் தொழிற்சாலைகளையும் விரைவிலேயே ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. சிறிய அளவில் தேயிலை வளர்ப்பவர்களுக்கான மத்தியப் பணிச் சங்கம் உரு முதலியவைகளை வழங்குவதன் மூலம் தற்போதுள்ள தேயிலைத் தொழிற்சாலைகளுக்குத் தொடர்ந்து பணி வசதிகளை வழங்கி வருகிறது.

சிறிய அளவு தீப்பெட்டி உற்பத்தியாளர்கள் பணி—தொழில் கூட்டுறவு தீப்பெட்டிச் சங்கங்கள் நான்கு உள்ளன. இவற்றுள், சிவகாசியில் உள்ள நான்காவது சிறிய தீப்பெட்டி உற்பத்தியாளர் பணிக் கூட்டுறவுச் சங்கம் 6—2—1970 அன்று பதிவு செய்யப்பட்டு, 1970 ஜூன் திங்களில் முறையாகச் செயல்படத்தொடங்கியது. சாத்தூர், ஏழாயிரம்பண்ணை, கோவில்பட்டி ஆகிய இடங்களில் உள்ள மூன்று சிறிய தீப்பெட்டி உற்பத்தியாளர்கள் பணி தொழில் கூட்டுறவு சங்கங்கள் 1969–70-ல் 134·80 லட்சம் ரூபாய்க்குத் தீப்பெட்டிகளை விற்பனை செய்தன. 1970–71-ல் இந்த நான்கு சங்கங்களும் ரூ. 150 லட்சம் மதிப்புள்ள தீப்பெட்டிகளை விற்றிருக்கின்றன. நல்ல தரமுள்ள தீப்பெட்டிகளை விற்பனை செய்கின்ற புகழை இந்தச் சங்கங்கள் ஏற்படுத்தியுள்ளன. அத்தகைய சங்கம் மேலும் ஒன்று, அதாவது ஐந்தாவது சிறிய தீப்பெட்டி உற்பத்தியாளர்கள் பணித் தொழில் கூட்டுறவுச் சங்கம், சாத்தூரில் நிறுவக் கருதப்பட்டுள்ளது.

இந்த ஆண்டில், இரண்டு சங்கங்கள், அதாவது சென்னை வாடகை வண்டி ஓட்டுவோர் சங்கமும், சென்னை ஆட்டோ-ரிக்ஷா ஓட்டுவோர் சங்கமும் கூட்டுறவுத் துறையிலிருந்து தொழில் துறைக்கு மாற்றப்பட்டுள்ளன. சென்னை ஆட்டோ-ரிக்ஷா கூட்டுறவுச் சங்கம் புதியதாகத் தொடங்கப்பட்ட சங்கமாகும். தவணைக் கொள்முதல் திட்டத்தின்கீழ் தன்னுடைய உறுப்பினர்களுக்கு ஒதுக்குவதற்காக 75 ஆட்டோ-ரிக்ஷாக்களை வாங்குவதற்கு அரசு இச் சங்கத்திற்கு 6·50 லட்சம் ரூபாயைக் கடனாக அனுமதித்துள்ளது. 75 வண்டிகளையும் முன்னரே வாங்கி தன்னுடைய உறுப்பினர்களுக்கு இச் சங்கம் அளித்துள்ளது.

கீழ்க்காணும் புதிய சங்கங்கள் இந்த ஆண்டில் பதிவு செய்யப்பட்டுள்ளன :—

1. வள்ளியூர், மணி செய்வதற்கானக் கலப்பு உலோகத் தொழிலாளர்கள் கூட்டுறவுத் தொழில் சங்கம் லிமிடெட்.

2. சாத்தூர், பேனா நிப்புகள் தொழிலாளர்கள் கூட்டுறவுத் தொழிற் சங்கம் லிமிடெட்.

3. கும்பகோணம் சுருட்டுத் தொழிலாளர்கள் கூட்டுறவு-குடிசைத் தொழிற்சங்கம் லிமிடெட்.

4. மணிமுத்தாறு காவலர் தேவைகள் மகளிர் தொழிற் கூட்டுறவுச் சங்கம்.

5. முன்னாள் இராணுவத்தினர் ஒலி பெருக்கி, பேப்பர் கன்டென்சர் உற்பத்தியாளர் தொழிற் கூட்டுறவுச் சங்கம் லிமிடெட்.

6. அழகிய மண்டபம் பனை ஓலை கைவினைஞர் தொழிலாளர்கள் கூட்டுறவு குடிசை தொழிற் சங்கம் லிமிடெட்.

7. சிந்தாதிரிப்பேட்டை கயிறு, தேங்காய் நார் தொழிலாளர் தொழில் கூட்டுறவுச் சங்கம் லிமிடெட்.

அரசினாலும், தமிழ்நாடு தொழில் கூட்டுறவு வங்கியினாலும் இந்தச் சங்கங்கள் கணிசமான நிதி உதவியைப் பெற்றுள்ளன. வழங்கப்பட்டுள்ள நிதி உதவியின் அளவு கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| | 1961–62 முதல் 1969–70 வரை. | | 1—4—70 முதல் 31—10—70 வரை | |
|---|---|---|---|---|
| | நேர்வுகளின் எண்ணிக்கை. | தொகை. (ரூ. லட்சத்தில்.) | நேர்வுகளின் எண்ணிக்கை. | தொகை. (ரூ. லட்சத்தில்.) |
| 1. தொழில்களுக்கு அரசு உதவி அளித்தல் சட்டம். | 320 | 19·16 | .. | .. |
| 2. (அ) தமிழ்நாடு தொழில் கூட்டுறவு வங்கி. | 290 | 1,41·11 | 32 | 25·33 |
| (இ) சிறுதொழிலதிபர்கள் | 51 | 15·20 | .. | 0·52 (தற்போதுள்ள வருக்கு கூடுதல் கடன்.) |

1969–70-ல் தொழில் கூட்டுறவுச் சங்கங்களின் பணி நிலை கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

| | |
|---|---|
| 1. 31—3—1970 வரையில் உள்ள சங்கங்களின் மொத்த எண்ணிக்கை .. .. .. .. | 338 |
| 2. மூன்று ஆண்டுகளுக்கும் மேலாகப் பணி புரிந்து வரும் சங்கங்களின் எண்ணிக்கை .. | 324 |
| 3. (அ) இந்த ஆண்டில் ஆதாயத்தில் இயங்கிவரும் சங்கங்களின் எண்ணிக்கை .. .. .. | 108 |
| (இனம் 2-லிருந்து) | |
| (இ) விரயத்தில் இயங்கிவரும் சங்கங்களின் எண்ணிக்கை (இனம் 2-லிருந்து)— | |
| (i) கைவினைப் பொருள்கள் சங்கங்கள்— அரிசனங்கள், பெண்கள், கயிற்றுத் தொழிலாளர்கள் முதலியோரின் பயனுக்கான சங்கங்கள் .. .. .. .. | 12[illegible] |
| (ii) மற்றவை .. .. .. .. | 9[illegible] |
| 4. (அ) 3 (அ) பத்தியில் உள்ள சங்கங்களினால் 1969–70-ஆம் ஆண்டில் பெறப்பட்ட ஆதாயம் .. .. .. .. .. | 9·77 லட்சம் |





| | |
|---|---|
| (இ) 3 (இ) பத்தியில் உள்ள சங்கங்களினால் 1969–70-ல் அடைந்த விரயம் .. .. | 7·12 லட்சம் |
| (உ) இனம் 2-ல் உள்ள சங்கங்களுக்கு 31—3—1970 அன்று அடைந்த மொத்த விரயம் .. .. .. .. .. | 42·00 லட்சம் |
| 5. மூன்று ஆண்டுகளுக்கும் மேல் பணிபுரியும் சங்கங்களின் மொத்த ஆதாயம் .. .. | 6·50 லட்சம் |
| 6. (அ) (1) இனத்தில், 1969–70-ல் ஆதாயத்தோடு பணிபுரிந்து வந்த சங்கங்களின் எண்ணிக்கை.. | 113 |
| (இ) (1) ஆம் இனத்தில், 31—3—1970-ல் ஆதாயத்தோடு பணி புரிந்துவரும் சங்கங்களின் எண்ணிக்கை .. .. .. .. | 64 |
| (உ) (1) ஆம் இனத்தில், 1969–70-ல் விரயத்தில் பணி புரிந்துவரும் சங்கங்கள் .. .. | 225 |
| (எ) (1) ஆம் இனத்தில், 31—3—1970-ல் விரயத்தில் பணி புரிந்துவரும் சங்கங்கள் .. | 274 |
| 7. 2-ஆம் இனத்தின்கீழ் வேலை வாய்ப்பளிக்கப் பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை .. | 26,773 |
| 8. (1) இனத்தின்கீழ் வேலை வாய்ப்பளிக்கப் பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை .. | 26,926 |

இம் மாநிலத்தில் உள்ள தொழில்-கூட்டுறவுச் சங்கங்களின் மாவட்ட வாரியானப் பட்டியல் தொழில் கூட்டுறவுகள் குறித்த திட்டப் பணிகளின் முன்னேற்றம் குறித்த விவரங்கள் ஆகியவை இந்த ஆய்வுரையின் XV & XVI-வது இணைப்புகளில் கொடுக்கப்பட்டுள்ளன.

1971–72-ல் கீழ்க்காணும் திட்டங்களை எடுத்துக்கொள்ளக் கருதப்பட்டுள்ளது :—

1. தமிழ்நாடு தொழில்-கூட்டுறவு வங்கிக்கு 5 லட்சம் ரூபாய்க்கான நிதி உதவி.

2. நீலகிரி மாவட்டம், கூடலூர், பிக்கட்டி ஆகிய இடங்களில் தொழில் கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலை ஏற்படுத்துதல்.

3. தெரிந்தெடுக்கப்பட்ட சிறுதொழில் கூட்டுறவுகளின் பங்கு மூலதனத்தில் மாநில அரசு பங்கு கொள்ளுதல்.

4. வந்தவாசி மத்திய பாய் முடைபவர்கள் கோரை வளர்ப்பவர்கள் தொழில் கூட்டுறவுச் சங்கத்திற்கான பணிக் கொட்டகை, கிடங்கு முதலியவற்றிற்கு மானியம்.

5. பேட்டை பாய் முடைபவர்கள் தொழில் கூட்டுறவுச் சங்கத்திற்கானப் பணிக் கொட்டகை கட்டுதல்.

6. மதுரை சுங்காடி புடவைத் தொழிலாளர்கள் தொழில் கூட்டுறவுச் சங்கத்தில் பொது வசதி நிலையம் ஒன்றை ஏற்படுத்துதல்.

7. கரிகிரி மண்பாண்டத் தொழிலாளர்கள் சங்கத்தில் பொதுப் பணிக் கொட்டகை கட்டுதல்.

8. முடையூர் கற்சிலைத் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்திற்காகப் பயிற்சித் திட்டத்தை ஏற்படுத்துதல்.

9. திருவண்ணாமலை சுங்கடி முடைவோர் சங்கத்தில் பணிக் கொட்டகை-அலுவலகம் ஒன்று கட்டுதல்.

10. சாத்தூரில் சிறிய தீப்பெட்டி உற்பத்தியாளர் பணி-தொழில் கூட்டுறவுச் சங்கத்தை ஏற்படுத்துதல்.

[1971 சூன் 30

11. சிவகாசியில் லித்தோ அச்சகத்திற்கான பணித் தொழில் கூட்டுறவுச் சங்கத்தை நிறுவுதல்.

12. கடலூர் பொம்மை தயாரிக்கும் சங்கத்திற்காகக் கூடுதல் பணிக் கொட்டகை கட்டுதல்.

### பொருட்காட்சிப் பிரிவு.

தொழில்-வாணிப இயக்குநர் அலுவலகம் 1970–71-ல் கீழ்க்காணும் பொருட்காட்சிகளில் கலந்து கொண்டது :—

(1970 நவம்பர் வரை)

| பொருட்காட்சி. | கால அளவு. | |
|---|---|---|
| | முதல். | வரை. |
| 1. 120-வது மலர், பழம், காய்கறிக் கண் காட்சி, சென்னை. | 11—1—70 | 26—1—70 |
| 2. தொழில் வாய்ப்பு கண்காட்சி ( Career Exhibition ), திருச்சிராப்பள்ளி .. .. .. | 5—3—70 | 7—5—70 |
| 3, மலர்க் கண்காட்சி, உதகமண்டலம் .. | 23—5—70 | 24—5—70 |
| 4. 15-வது தேசியக் கண்காட்சியும், சுகாதார விழாவும், திருநெல்வேலி. | 5—6—70 | 19—7—70 |
| 5. குற்றாலம், 5-வது பருவக் காலத்துப் பொருட்காட்சி .. .. .. | 22—7—70 | 23—8—70 |
| 6. தருமபுரி, சீரணிப்படையினர் பொருட்காட்சி .. .. .. | 19—8—70 | 21—7—70 |
| 7. உதகமண்டலம், இளவேனிற்கால மலர்க் கண்காட்சி .. .. .. | 27—9—70 | 28—10—70 |
| 8. மைசூர், தசரா பொருட்காட்சி .. | 27—9—70 | 15—11—70 |
| 9. திருச்சிராப்பள்ளி, துணைத் தொழில்கள் பொருட்காட்சி .. | 22—10—70 | 28—10—70 |
| 10. சென்னை, துணைத் தொழில்கள் பொருட்காட்சி .. .. .. | 21—11—70 | 27—11—70 |
| 11. காந்தி பிறந்த நாள் விழாவின் போது துறையின் அலங்கார வண்டி. | 2—10—70 | .... |

வேலையில்லாத பொறியாளர்களிடையே துணைத் தொழில்களை ஊக்குவிக்க இயக்குநர் அலுவலகம் திருச்சிராப்பள்ளியிலும், சென்னையிலும் இரண்டு பொருட்காட்சிகளை இதற்கென்றே நடத்தியது.

திருநெல்வேலி, குற்றாலம் கண்காட்சிகளில், துறையின் அரங்கத்திற்குத் தகுதிச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. தசரா பொருட்காட்சியில், தமிழ் நாடு அரசின் பிற துறைகளுடன் கூட்டாக முதல் பரிசைப் பெற்றுள்ளது.

1970 அக்டோபர் 2-ஆம் நாள் காந்தி பிறந்த நாளன்று நடந்த விழாக்களில் இயக்குநர் அலுவலகம் அலங்கார வண்டி ஒன்றுக்கு ஏற்பாடு செய்தது.

ஏற்றுமதியை ஊக்குவிக்கும் முகமாக, விற்பனை வாய்ப்புகளை ஆராய்வதற்கென 1970-ஆம் ஆண்டு .·.பிராங்.·.பர்ட் வசந்த காலக் கண்காட்சியிலும் சந்தையிலும், ஜெர்மன் அங்காடியில் சிறு தொழில் பொருள்களைப் புகுத்துவதற்காக 1970-ஆம் ஆண்டு லீப்ஸிக் வசந்த காலச் சந்தையிலும் இத் துறை கலந்து கொண்டது. 1970-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் சிங்கப்பூரில் நடந்த இந்தியப் பொருட்காட்சிக்குத் துறை கைத்திறப் பொருட்களை அனுப்பியது. ஒசாகாவில் நடந்த 'எக்ஸ்போ 70'-க்காக அனுப்பப்பட்ட கோயில் தேரும் பிற சிறப்புப் பொருட்களும் 'எக்ஸ்போ 70'-ல் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தன. அது எல்லோருடைய பாராட்டுதலையும் பெற்றது.



1971 சூன் 30[

1971 ஜனவரித் திங்களில் பம்பாயில் நடந்த கைத்திறப் பொருட்களுக்கான பொருட்காட்சி ஒன்றுக்கு இயக்குநர் அலுவலகம் ஏற்பாடு செய்தது. 1970 டிசம்பர்—1971 பிப்ரவரி வரை தென்னிந்திய வாணிபக் கழகத்தினால் சென்னையில் நடத்தப்பட்ட அனைத்திந்திய தொழில்-வேளாண்மைப் பொருட்காட்சியில் தொழில் துறையும் கலந்துகொண்டது.

### கிராமத் தொழில் திட்டங்கள்.

கிராமப்புறப் பகுதிகளிலும், சிறு நகரங்களிலும் கிராமத் தொழில்கள், மற்றும் சிறு தொழில்கள் வளர்ச்சியை ஊக்குவிக்கும் நோக்கத்துடன், இந்தியா முழுதும் தெரிந்தெடுக்கப்பட்ட 49 கிராமப்புறப் பகுதிகளில் சிறு தொழில் மும்முர வளர்ச்சிக்கு முன்னோடித் திட்டங்களை 1962-ஆம் ஆண்டில் இந்திய அரசு ஒப்பளித்தது. அவற்றுள் 3 திட்டங்கள் தமிழ் நாட்டுக்கு ஒதுக்கப்பட்டன.

முன்னோடி திட்டங்களுக்காக இடங்களை தெரிந்தெடுப்பது குறித்து திட்ட ஆணைக் குழு குறிப்பிடும் கூறுகளின் அடிப்படையில், தொழில் மிகவும் பின்தங்கியவையும், நிலம் கிடைப்பது அரிதாக இருப்பவையும், வேலையின்மையும் போதிய வேலை வாய்ப்பற்ற நிலையும் எளிதில் கண்டறியக் கூடியவையுமான கீழ்க்காணும் மூன்று திட்டங்களை மாநில அரசு தெரிந்தெடுத்தது :—

(1) செங்கற்பட்டு மாவட்டத்தில் ஸ்ரீபெரும்புதூர், திருவள்ளூர் வட்டங்கள், பொன்னேரிபேட்டை துணை வட்டம்.

(2) சேலம் மாவட்டத்தில் ஓமலூர் வட்டம் (தற்பொழுது ஓமலூர் வட்டம், ஓமலூர், மேட்டூர் வட்டங்கள் என்று இரண்டாகப் பிரிக்கப்பட்டுள்ளது).

(3) திருநெல்வேலி மாவட்டத்தில் நாங்குனேரி வட்டம்.

வேளாண்மை, பாசனம், சாலை வசதிகள் முதலியவற்றை எல்லா வகைகளிலும் மேம்படுத்துவதன் வாயிலாக, கூட்டுறவு வேளாண்மைத் தொழில் பொருளாதாரத்திற்கு வகைசெய்வதே முதன்மையான நோக்கமாக இருப்பதால், வாழ்க்கை நிலையையும், உற்பத்தி நிலையையும், உயர்த்துவதற்காகவும், கிராமச் சமூகத்தினரில் நிலமற்றோருக்கும் பொருளாதார நிலை குன்றியவருக்கும் வேலை வாய்ப்புகளை இன்னும் அதிக அளவில் நல்குவதற்கும் தொழில்கள் வளர்ச்சிக்கு முழு அளவில் முயற்சிகளை மேற்கொள்ளல் வேண்டும். எனவே, கிராமப் பகுதிகளில் மேம்படுத்தக் கூடிய தொழில்கள் பற்றியும் அவற்றிற்குத் துணையாயுள்ள பிற நடவடிக்கைகள் பற்றியும் முக்கியமாக ஆழ்ந்த நாட்டம் செலுத்த வேண்டும். இத்திட்டப் பகுதிகளில் நியமிக்கப்பட்ட திட்ட அதிகாரிகளால் இந்த மூன்று திட்டப் பகுதிகள் பற்றிய ஆய்வு வேலை ஒன்று நடத்தப்பட்டது.

இதுவரை அனுமதித்து செயல்படுத்தப்பட்ட இவ்வேலைத் திட்டங்களில் கீழ்க்கண்டவை அடங்கும். பயிற்சித் திட்டங்கள், பொது வசதிப் பணி நிலையங்கள், மூன்று பொதுநோக்குப் பொறியியல் பட்டறைகள், பளபளப்பு ஓடுகள் தொழில்பிரிவு, காலணி தொழில்பிரிவு, மரவேலைப் பிரிவு, காகித உறைகள், காகிதப் பைகள் தயாரிப்புப் பிரிவு, சாக்குக் கட்டிகள் உற்பத்திப் பிரிவு, பாலிதீன் தட்டைக் குழாய்கள் உற்பத்திப் பிரிவு, கட்டுல விளக்க பட்டுப்பண்ணை ஆகியவையே அவை.

கிராமத் தொழில் திட்டம் மத்திய அரசு ஆதரவு பெறும் திட்டமாகத் தொடர்ந்து இயங்கி வருகிறது. 1969–70-ஆம் ஆண்டில், மத்திய அரசு கிராமப் புற தொழில் திட்டத்திற்காக, தமிழகத்திற்கு 6·40 இலட்சமே வழங்கியுள்ளது. இதில் 4·76 இலட்சம் நிதியாகவும் 1·64 இலட்சங்களை கடனாகவும் வழங்கியுள்ளது. மூன்று கிராமப்புறத் தொழில் திட்டப் பகுதிகளில் இத் திட்டங்கள் குறித்து ரூ. 16·25 லட்சம் செலவிடப்பட்டது. மற்றும் தனியார் தொழிலதிபர்களுக்குக் கடன்கள் வழங்க ரூ. 5·56 லட்சம் செலவிடப்பட்டது. 1970–71-ஆம ஆண்டில் ரூ. 6·39 லட்சம் இந்திய அரசு அனுமதித்துள்ளது. தமிழ்நாட்டில் இத் திட்டத்திற்காக ரூ. 19·78 இலட்சமும், தனியார் துறையினர்களுக்குக் கடனாக வழங்க ரூ. 4·55 இலட்சமும் தேவைப்படுகிறது.

மூன்று கிராமத் தொழில் திட்டம் சார்ந்த பகுதிகளில் தொடங்கப்பட்ட எல்லாப் பயிற்சி நிலையங்களும், வரையறுத்த பயிற்சிக் கால அளவுகள் முடிவுற்றப் பிறகு மூடப்பட்டன. ஆனால் உள்ளூர்க் கைவினைஞர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காக செம்பரம்பாக்கம், திருப்பாச்சூர், வள்ளியூர் ஆகிய ஊர்களில் உள்ள மூன்று பொது நோக்கப் பொறியியல் பணிக்களரிகளில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

மூன்று கிராமத் தொழில் திட்டப் பகுதிகளிலும் 16 பொது வசதி நிலையங்கள் உள்ளன. 16 பொது வசதி நிலையங்களில் இரண்டு ஸ்ரீபெரும்புதூரிலும் நான்கு ஓமலூர் திட்டத்திலும் 10 நாங்குனேரி திட்டத்திலும் உள்ளன. கிராமப்புற தொழில் திட்டப் பகுதியில் உள்ள 5 பொது வசதி நிலையங்களை தனியார் தொழில் முனைவர்களுக்குத் தவணைக் கொள்முதல் முறையில் கொடுக்கலாமென்று அரசு ஆணையிட்டுள்ளது. பிற பொது வசதி நிலையங்கள், தனியார் தொழில் முனைவர்களுக்குத் தேவைப்படுகிற நேர்வுகளில் வழங்கப்படும்.

ஸ்ரீபெரும்புதூர் திட்டத்தின் கீழ் இரண்டு பொது வசதிப் பணிநிலையங்களில் ஒன்று செம்பரம்பாக்கத்திலும், மற்றொன்று திருப்பாச்சூரிலும் மேப்பெடுவில் ஒரு காலணித் தொழில் பிரிவும், ஊத்துக்கோட்டையில் காகித உறைகள், காகிதப் பைகள் தயாரிப்புத் தொழில் பிரிவு ஒன்றும் செயல்படுகின்றன.

ஓமலூர் திட்டத்தின்கீழ் ஓமலூரில் பாலிதீன் தட்டைக் குழாய்கள் உற்பத்திப் பிரிவு ஒன்றும், பளபளப்பு ஓடுகள் பிரிவு ஒன்றும் மரவேலைப் பிரிவு ஒன்றும் செயல்பட்டு வருகின்றன.

நாங்குனேரி திட்டத்தின் கீழ் வள்ளியூரில் ஒரு பொது நோக்குப் பொறியியல் பணிக்களரியும், வடக்கு விஜயநாராயணம் என்ற ஊரில் ஒரு சாக்குக் கட்டி உற்பத்திப் பிரிவும் இயங்கி வருகிறது.

பட்டுப்பூச்சி வளர்ப்புத் தொழில் மேம்பாட்டுக்காக, நாங்குனேரி திட்டத்தின்கீழ் பணகுடியில் பட்டுத்தொழில் வளர்ப்புப் பண்ணை ஒன்று செயல்படுகிறது.





தொழில்களுக்கு அரசு உதவியளித்தல் சட்டத்தின்கீழ், குறைந்த வட்டிக்கு ஆண்டுக்கு 3 சதவிகிதம் கடன் வழங்குவது மூலம் தனியார்த் தொழில் முனைவர்களுக்கு கிராமப்புற தொழில் திட்டப் பகுதிகளில் தொழிற்சாலைகள் அமைக்க ஊக்கமளிக்கப்படுகிறது. தொழில்களுக்கு அரசு உதவியளித்தல் சட்டத்தின்கீழ் தனியார் தொழில் முனைவர்களுக்கு ஆண்டு வாரியாக வழங்கப்பட்ட கடன்கள் பற்றிய விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| ஆண்டு. | ஒப்பளிக்கப் பட்ட கடன் தொகை. (ரூபாய் லட்சத்தில்.) |
|---|---|
| 1964-65 .. .. .. .. .. .. | 4·04 |
| 1965-66 .. .. .. .. .. .. | 6·03 |
| 1966-67 .. .. .. .. .. .. | 5·39 |
| 1967-68 .. .. .. .. .. .. | 2·29 |
| 1968-69 .. .. .. .. .. .. | 2·00 |
| 1969-70 .. .. .. .. .. .. | 5·56 |

மூன்று கிராமத் தொழில் திட்டப் பகுதிகளில் செயல்பட்டு வரும் தொழில் பிரிவுகள் பற்றிய விவரங்கள் இந்த ஆய்வுரையின் "IX-ஆவது இணைப்பில்" கொடுக்கப்பட்டுள்ளன. 1969-ஆம் ஆண்டு முடிவில் இந்திய மாநில வங்கி "தாராளக் கடன்வசதி திட்டம்" என்ற ஒரு புதிய திட்டத்தை ஏற்படுத்தியுள்ளது. அதன் மூலம் கிராமத் தொழில் திட்டப் பகுதிகளில் உள்ள தனியார் தொழிலதிபர்களுக்கு தொழிற்பிரிவு ஒன்றுக்கு 5,000 ரூபாய் வரை கொடுக்கிறது. இத் திட்டத்தின் கீழ் உள்ள கிராமத் தொழில் அதிபர்களுக்கு இத் திட்டம் பெருமளவிற்கு உதவியுள்ளது. மூன்று கிராமத் தொழில் - திட்டப் பகுதிகளிலும் 1969-70-ஆம் ஆண்டில், அதாவது, 1970-ஆம் ஆண்டு ஜனவரித் திங்களிலிருந்து 1970-ஆம் ஆண்டு மார்ச் வரை 158 தொழிற் பிரிவுகளுக்குக் கடன் வழங்கியுள்ளது. அதன் மொத்த தொகை ரூபாய் 4,57,000. 1970–71-ல 196 தொழிற் பிரிவுகளுக்கு மொத்தத்தில் ரூ. 2·84 லட்சம் கடனாக வழங்கப்பட்டது. இந்த திட்டம் 1971–72-ஆம் ஆண்டில் பல புதிய தொழிற்சாலைகளை நிறுவவும், ஏற்கனவே செயல்பட்டுக் கொண்டிருக்கிற தொழிற்சாலைகளை விரிவுபடுத்த தொழில் அதிபர்களுக்கு பெருமளவில் பயன்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், கொடுக்கப்படுகின்ற கடன் அளவை தொழில் பிரிவு ஒன்றுக்கு 15,000 ரூபாயாக உயர்த்தவும் செயற்குறிப்பு ஒன்று உள்ளது. இந்த முறை செயல்படுகின்றபொழுது கிராமத் தொழில் திட்டப் பகுதிகளில் உள்ள தனியார் தொழில் முனைவர்களுக்கு இது பெரும் உதவியாக இருக்கும்.

மூன்று கிராம தொழில் திட்டப் பகுதிகளில் கிராமக் கலை, கைவினைகள் மற்றும் தொழில்கள் குறித்த நிதியிலிருந்து கிராம தொழிற் பேட்டைகள் ஐந்தினை நிறுவ அரசு அனுமதி அளித்துள்ளது. 5 கிராமத் தொழிற் பேட்டைகளில், தனியார் தொழில் முனைவர்களின் நன்மைக்காக இரண்டு கிராமத் தொழிற்பேட்டைகளை ஸ்ரீபெரும்புதூர் திட்டப் பகுதியில் நிறுவப்படவிருக்கின்றன. ஓமலூர் திட்டப் பகுதியில் நிறுவப்பட இருக்கின்ற இரண்டு தொழிற் பேட்டைகளில் ஜலகண்டபுரத்தில் விசைத் தறிக்காக ஒன்றும், தாராமங்கலத்தில் கைத்தறிக்காக ஒன்றும் நிறுவப்படும். நாங்குனேரி திட்டப் பகுதியில் உள்ள வள்ளியூரில் ஒரு கிராமத் தொழிற்பேட்டை நிறுவ அனுமதிக்கப்பட்டுள்ளது. கிராமத் தொழிற்சாலைக்குப் பல்வேறு வகைக் கொட்டகைகளைக் கட்டுவதற்கு அது பயன்படும். கிராம தொழிற் பேட்டைகளை நிறுவுவதற்கு ஏற்ற மனைகள் ஜலகண்டபுரத்திலும், தாரா

மங்கலத்திலும் பூவிருந்தவல்லியிலும் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளன. அந்த நிலங்கள் விரைவில் தன் வசப்படுத்திக்கொள்ளப்படும். ஓமலூர், ஸ்ரீபெரும்புதூர் திட்டப்பகுதிகளுக்காக அனுமதிக்கப்பட்டுள்ள கிராமத் தொழிற் பேட்டைகளை தொழில்-வர்த்தகத் துறை இயக்குநரின் உதவியுடன் சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியங்கள் நிறைவேற்றி வருகின்றன. நாங்குனேரி திட்டத்திற்காக அனுமதிக்கப்பட்டுள்ள கிராமத் தொழிற் பேட்டைகளைச் செயல்படுத்தும் பொறுப்பை தமிழ்நாடு கதர்-கிராமத் தொழில் வாரியம் ஏற்றுள்ளது.





## இணைப்பு I.

### 1970-ஆம் ஆண்டில் கூட்டுறவு நூற்பாலைகள் செயல்பட்ட விவரங்கள்.

| தொடர் எண்ணும், கூட்டுறவு ஆலைகளின் பெயர்களும். | உரிமம் அளிக்கப்பட்ட திறனளவு (கதிர்கள்). | நிறுவப்பட்ட திறனளவு (கதிர்கள்). | 1970-ஆம் ஆண்டில் ஒரு நாளில் மூன்று மாற்றுப் பணி ஒன்றில் இயங்கிய கதிர்களின் சராசரி எண்ணிக்கை. | 1970-ஆம் ஆண்டில் வேலை செய்த நாட்களின் எண்ணிக்கை. | 1970-ஆம் ஆண்டில் உற்பத்திச் செய்யப்பட்ட நூலின் மொத்த அளவு (கிலோகிராம்). | 1970-ஆம் ஆண்டில் விற்பனைச் செய்த நூலின் அளவு (கிலோகிராம்). | 1970-ம் ஆண்டில் விற்பனைச் செய்த நூலின் மதிப்பு (ரூ. லட்சத்தில்). |
|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
| 1. தென்னிந்தியக் கூட்டுறவு நூற்பு ஆலை— | | | | | | | |
| "ஏ" பிரிவு .. .. | 17,600 | 17,600 | 16,349 | 355 | 13,96,595 | 14,10,671 | 119·38 |
| "பி" பிரிவு .. .. | 12,096 | 12,096 | 11,740 | 333 | 3,52,700 | 3,47,020 | 57·24 |
| 2. ஸ்ரீவில்லிப்புத்தூர் கூட்டுறவு நூற்பு ஆலை. | 25,088 | 19,264 | 15,101 | 337 | 7,89,537 | 7,76,263 | 74·96 |
| 3. திருச்செந்தூர் கூட்டுறவு நூற்பு ஆலைகள். | 25,200 | 18,800 | 15,508 | 343 | 9,23,242 | 9,29,456 | 90·59 |
| 4. சேலம் கூட்டுறவு நூற்பு ஆலை. | 14,080 | 14,080 | 13,684 | 357 | 4,78,273 | 4 72,307 | 72·93 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 5. மதுரை மாவட்ட கூட்டுறவு நூற்பு ஆலை. | 13,680 | 12,420 | 11,615 | 354 | 14,49,262 | 15,32,139 | 119·02 |
| 6. கோயம்புத்தூர் மாவட்ட கூட்டுறவு நூற்பு ஆலை. | 12,420 | 12,420 | 10,864 | 356 | 15,66,131 | 15,57,500 | 122·34 |
| 7. திருச்சிராப்பள்ளி மாவட்ட கூட்டுறவு நூற்பு ஆலை. | 12,000 | 12,000 | 11,182 | 351 | 14,68,494 | 15,65,997 | 122·29 |
| 8. கன்னியாகுமரி மாவட்ட கூட்டுறவு நூற்பு ஆலை. | 12,000 | 12,000 | 10,812 | 323 | 15,04,935 | 14,55,141 | 109·07 |
| 9. காஞ்சீபுரம் கூட்டுறவு நூற்பு ஆலை. | 13,680 | 13,680 | 12,910 | 352 | 5,37,826 | 5,54,962 | 64·33 |
| 10. தென் ஆர்க்காடு மாவட்ட கூட்டுறவு நூற்பு ஆலை. | 12,096 | 12,096 | 10,535 | 346 | 3,72,189 | 3,72,644 | 50·41 |
| 11. வட ஆர்க்காடு மாவட்ட கூட்டுறவு நூற்பு ஆலை. | 13,824 | 13,824 | 13,342 | 356 | 6,11,965 | 6,35,291 | 80·25 |
| 12. தஞ்சாவூர் மாவட்ட கூட்டுறவு நூற்பு ஆலை. | 25,000 | 12,528 | 11,598 | 356 | 3,58,391 | 3,65,412 | 63·36 |
| மொத்தம் .. | 2,08,764 | 1,82,808 | 1,65,240 | .. | 118,09,540 | 119,74,803 | 1,146·17 |





## இணைப்பு II.

1969-ம் ஆண்டு நவம்பர் திங்கள் 1-ஆம் நாள் முதல் 1970-ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 31-ம் நாள் வரையுள்ள கால அளவில் ஒன்பது கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் செயலாற்றியதைக் குறித்த விவரங்கள்.

| தொடர் எண்ணும் சர்க்கரை ஆலையின் பெயரும் இருப்பிடமும். | ஆலைகளின் திறனளவு | | கரும்பாடிய காலஅளவு (கூட்டுறவு நாட்களில் கரும்பாடிய நாட்கள் எண்ணிக்கை). | பிழிந்த கரும்பின் மொத்த அளவு (மெட்ரிக் டன்). | உற்பத்தி செய்த சர்க்கரையின் மொத்த அளவு (மெட்ரிக் டன்). | மதிப்பு (ரூபாயில்). | கிடைத்த சர்க்கரை விகிதம் (சதவீதம்). |
|---|---|---|---|---|---|---|---|
| | உரிமம் அளிக்கப்பட்டது. | நிறுவப்பட்டது. | | | | | |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
| 1. மதுராந்தகம் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை. | 1,000 | 1,000 | 208 | 1,88,428·527 | 14,152·000 | 1,98,56,796·48 | 7·51 |
| 2. வட ஆர்க்காடு மாவட்ட கூட்டுறவுச் சர்க்கரை ஆலை. | 2,200 | 1,250 | 186 | 1,84,646·730 | 15,843·80 | 2,11,02 124·00 | 8·58 |
| 3. சேலம் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை. | 1,750 | 1,000 | 248 | 2,69,924·058 | 21,908·254 | 2,95,71,438·14 | 8·11 |
| 4. கள்ளக்குறிச்சி கூட்டுறவுச் சர்க்கரை ஆலை. | 1,250 | 1,250 | 247 | 2,06,734·640 | 16,823·500 | 2,90,00,000·00 | 8·18 |
| 5. தேசியக் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை. | 1,000 | 1,000 | 218 | 1,98,128·073 | 14,532·400 | 1,91,82,770·00 | 7·32 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 6. அமராவதி கூட்டுறவுச் சர்க்கரை ஆலே. | 1,250 | 1,000 | 229 | 2,02,595·661 | 17,438·400 | 2,26,07,556·33 | 8·42 |
| 7. தருமபுரி மாவட்ட கூட்டுறவுச் சர்க்கரை ஆலே. | 1,250 | ஆலே நிறுவப்பட்டு வருகிறது. | | | | | |
| 8. வேலூர் கூட்டுறவுச் சர்க்கரை ஆலே. | 1,250 | இந்த ஆலேகள் இன்னும் அமைக்கும் நிலேயில் உள்ளன. | | | | | |
| 9. திருப்பத்தூர் கூட்டுறவுச் சர்க்கரை ஆலே. | 1,250 | | | | | | |
| மொத்தம் .. | 12,750 | 6,500 | 1,336 | 12,50,457·689 | 100,698·354 | 14,13,20,684·95 | 8·01 |



## இணைப்பு III.

1951-ஆம் ஆண்டு தொழில்கள் (வளர்ச்சி-முறைப்படுத்துதல்) சட்டத்தின்கீழ் 1970-ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட உரிமங்களின் பட்டியல்.

| நிறுவனத்தின் பெயரும் முழு முகவரியும் (அமைப்பிடமும்). | உரிம எண்ணும் தேதியும். | உற்பத்தி செய்யும் பொருள்களும் திறனளவும் (உரிமத்தின் வகை என்.யு./எஸ்.இ./என்.எ./சி.ஓ.பி. மாறுவது). |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 எஸ்.எஸ்.எம். பினிஷிங் சென்டர், அஞ்சல் பெட்டி எண் 90, குமாரபாளேயம், ஈரோடு. | L/23(1)/113/டெக்ஸ் (H)·/70, நாள் 28–4–1970. | பஞ்சாலேகளில் நடைபெறும் வேலே முறைகள்—<br>வெளுப்பாக்குதல்—1,200,000 கிலோகிராம்.<br>பளபளப்பும் உறுதியும் ஏற்றுதல்—இறுதிக்கட்ட வேலே—1,20,000 கிலோகிராம்.<br>சாயம் தோய்த்தல்—3,60,000 கிலோகிராம்.<br>அச்சிடுதல்—3,60,000 கிலோகிராம் (என்.எ.). |
| 2 எல். ஜி. பாலகிருஷ்ணன் அண்டு பிரதர்ஸ், கிருஷ்ணராயபுரம், கணபதி அஞ்சல், கோயம்புத்தூர். | L/8/பி/92/88/70-1, எம்.இ.ஐ; நாள் 11–6–1970. | இயந்திரத் தொழில் சார்ந்த உருளே—ஒன்று, இரண்டு, மூன்று அமைப்புகளில் பற்கள் இடைவெளி 5/8"-க்கு மேலுள்ள சங்கிலி—160 டன்கள். பொருள்களே எடுத்துச் செல்லும் சங்கிலி—40 டன்கள். |
| 3 ஆரோஃபுட் (தனியார்) நிறுவனம், புதுச்சேரி (தமிழ் நாடு). | L/27(5) (5)/70/எம்.ஐ. (I) (எ), நாள் 28–8–1970. | பிஸ்கோத்துகள் ஆண்டொன்றுக்கு 3,000 டன்கள் (என்.எ.). |

| நிறுவனத்தின் பெயரும் முழு முகவரியும் (அமைப்பிடமும்). | உரிம எண்ணும் தேதியும். | உற்பத்தி செய்யும் பொருள்களும் திறனளவும் (உரிமத்தின் வகை என்·யு./எஸ்.இ./என்.ஏ./சி.ஓ.பி. மாறுவது). |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 4 இந்தியன் ஆக்ஸிஜன் நிறுவனம், ஆக்ஸிஜன் ஹவுஸ், கல்கத்தா (அம்பத்தூர், தமிழ் நாடு). | L/IA (7) (2)/70எல்.இ.ஐ. (பி), நாள் 28–6–1970. | தொடர் ஒளிவட்ட மின்வாய்கள் ஆண்டுக்கு 240 டன்கள் (என்.ஏ.). |
| 5 பவானி எண்ணெய் அண்டு உரத் தயாரிப்பாளர்கள், பவானி. | L/எஸ்.இ.ஓ./163–சி, நாள் 3–10–1970. | கரைம வடிப்பு எண்ணெய் உற்பத்தி செய்தல், எண்ணெய் நீக்கப்பட்ட பொடி உரம் (என்.ஏ.). |
| 6 இந்தியன் கரிம ரசாயனப் பொருள் நிறுவனம், 28, அபொல்லோ சாலை, பம்பாய், மணலி, சென்னை-1. | L/23/5/12/70, சி.எச்.ஐ., நாள் 22–4–1970. | பாலிஸ்டர் நெட்டிழை நூல் 6,100 டன்கள். |
| 7 கெமிகல்ஸ் அண்ட் பிளாஸ்டிக்ஸ், இந்தியா லிமிடெட், சென்னை-2. | L/19 (4)/10/70, சி.எச்.ஐ, நாள் 30–1–1970. | பாலிவினைல் குளோரைட் (P.V.C.)—ஆண்டுக்கு 20,000 டன்கள் (எஸ்.இ.). |
| 8 மேட்டூர் கெமிக்கல் அண்ட் தொழிற் கழகம், மேட்டூர் அணை-2. | L/19 (1) (3)/70, சி.எச். II/எஸ்.ஈ., நாள் 14–10–1970. | எரி உவர்க்காரம்—ஆண்டுக்கு 6,600 டன்கள் உற்பத்தி அளவை அதிகரிக்க திட்டமிட்டுள்ளது (எஸ்.இ.). |
| 9 இங்கிலீஷ் எலக்ட்ரிக் கம்பெனி (இந்தியா), பல்லாவரம், சென்னை-43. | L/5 (1)–158—இ.இ.ஐ. 70, நாள் 15–7–1970. | கார்பிரிட்ஜ் ப்யூசஸ், பீங்கான் ப்யூஸ் பகுதிகள் (எஸ்.இ.). |
| 10 விஜயேஸ்வரி பஞ்சாலை, கோயம்புத்தூர். | L/23 (1)/1114/70, டெக்ஸ் (எச்), நாள் 10–7–1970. | பஞ்சு நூல் நூற்பதற்கான 2,836 கதிர்கள் (எஸ்.இ.) |
| 11 திருவாளர்கள் எஸ்ஸெல்லாம் அண்டு கம்பெனி, அருணா சர்க்கரை நிறுவனம் நிர்வாக முகவர்கள், 11, தன் பில்டிங், சென்னை-2. | L/25/என்–226/70, எல்.சி. நாள் 21–3–1970. | நாள் ஒன்றுக்கு 750 டன் கரும்பு (எஸ்.இ.) |



| | | |
|---|---|---|
| திருவாளர்கள் காவிரி சுகர்ஸ் அண்டு கெமிக்கல்ஸ் நிறுவனம், டேர் ஹவுஸ், சென்னை-1. | L/25/என்–230 /70-எல்.சி., நாள் 7–5–1970. | விரிவுபடுத்திய பிறகு, நாள் ஒன்றுக்கு கரும்பு பிழி திறனளவு 1,500 டன்கள் (எஸ்.இ.). |
| 13 தென்னிந்திய உருக்கு சர்க்கரை நிறுவனம், 99, அரண்மனைக்காரத் தெரு, சென்னை-1. | L/25/என்–229/70, எல்.சி., நாள் 2–5–1970. | விரிவுபடுத்தப்பட்ட பிறகு, நாள் ஒன்றுக்கு கரும்பு பிழி திறனளவு 1,500 டன்கள் (எஸ்.இ.). |
| 14 திரு. ஆரூரான் சர்க்கரை நிறுவனம், 55–எ, பீடர்ஸ் சாலை, சென்னை. | L/25/என்–231/70/எல்.சி., நாள் 8–5–1970. | கரும்பு பிழி திறனளவு நாள் ஒன்றுக்கு 800 டன்கள் அதிகரித்திருக்கிறது. (விரிவுபடுத்தப்பட்ட பிறகு கரும்பு பிழி திறனளவு நாள் ஒன்றுக்கு 2,000 டன்கள். (எஸ்.இ.). |
| 15 திரு. ஏ. சுப்ரமணியன், திருவாளர்கள் ஸ்ரீநிவாசா அண்டு கம்பெனி, பெரிய மேடு, சென்னை-3. | L/31-15/70 LI (II), நாள் 18–2–1970. | தோல் பதனிடும் இடம்—<br>L. I. பதனிடப்பட்ட தோல்கள்—320,000 தோல்கள்.<br>ஊறவைத்த தோல்கள்—284,000 தோல்கள்.<br>குரோம் பதனிடப்பட்ட தோல்கள்—367,000 தோல்கள்.<br>மரப்பட்டை மூலம் பதனிடப்பட்ட தோல்—4,000.<br>முழு நிறைவு பெற்ற தோல்—45,000 விலங்குகளின் தோல்.<br>தோல் பதனிடும் இடம் 2 :<br>இ. ஐ. பதனிடப்பட்ட தோல்கள்—348,000 தோல்கள். |

| | தொழில் நிறுவனத்தின் பெயரும் முழு முகவரியும் (அமைப்பிடமும்). | உரிம எண்ணும் தேதியும். | உற்பத்தி செய்யும் பொருள்களும் திறனளவும் (உரிமத்தின் வகை என்.யு./எஸ்.இ./என்.எ./சி.ஓ.பி. மாறுவது). |
|---|---|---|---|
| | (1) | (2) | (3) |
| | | | தோல் பதனிடும் இடம் 3 : E. T. பதனிடப்பட்ட தோல்கள்—3,55,000 தோல்கள் (சி.ஓ.பி.). |
| 16 | P. கிருஷ்ணமூர்த்தி அண்டு கம்பெனி, சென்னை. | L/31-17/70-LI (II), நாள் 28–2–1970. | 4,164 லட்சம் தோல்கள் (சி.ஓ.பி.). |
| 17 | திருவாளர்கள் ரஃபீத் அஹமத் அண்டு கம்பெனி, சென்னை-1. | L/31-16/70-LI (II), நாள் 28–2–1970. | இ. ஐ. பதனிடப்பட்ட 3·63 இலட்சம் துண்டுகள். ஈர நீலநிற 14·95 இலட்சம் துண்டுகள். (பதனிடப்பட்ட வெள்ளாட்டுத் தோல்.) ஆண்டொன்றுக்கு முழுநிறைவு பெற்ற தோல் 0·86 லட்சம் (சி.ஓ.பி.). |
| 18 | M. M. கலியுல்லா அண்டு கம்பெனி, வேப்பேரி நெடுஞ்சாலை, சென்னை. | L/31-18/70-LI (II), நாள் 28–2–1970. | இ.ஐ. பதனிடப்பட்ட வெள்ளாட்டுத் தோல்—4·58 லட்சம் தோல்கள் (சி.ஓ.பி.). |
| 19 | T. அப்துல் வஹீது அண்டு கம்பெனி, சென்னை–3. | L/31-23/70-LI(II), நாள் 19–6–1970. | இ. ஐ. பதனிடப்பட்ட கன்றின் தோல்—10·37 இலட்சம் துண்டுகள். ஈர நீலநிற குரோம் பதனிடப்பட்ட தோல்கள்—15·70 லட்சம் துண்டுகள் (சி.ஓ.பி.). |
| 20 | C. கல்யாணம் அண்டு கம்பெனி, சென்னை-3. | L/31-22/70-LI (II), நாள் 19–6–1970. | ஐ.இ. பதனிடப்பட்ட எருமைக்கன்று, பசுமாடு இவற்றின் தோல்கள்—2·75 இலட்சம் துண்டுகள் (சி.ஓ.பி.). |



| | | | |
|---|---|---|---|
| 21 | B .K. ஹாஜி முகம்மது மீரா சாகிப் அண்டு சன்ஸ், பெரிய அக்ரஹாரம், ஈரோடு. | L/31-24/70-LI (II), நாள் 22-6-1970. | பதனிடப்பட்ட உரிவை—2·15 இலட்சம் துண்டுகள். பதனிடப்பட்ட தோல்கள்—77,000 துண்டுகள் (சி.ஓ.பி.), |
| 22 | F. K. ஹரூப் அண்டு கம்பெனி, சென்னை-3. | L/31-21/70-LI (II), நாள் 19–6–1970. | இ.ஐ. பதனிடப்பட்ட உரிவை, கன்றின் தோல்கள்—2·07 இலட்சம் துண்டுகள் (சி.ஓ.பி.). |
| 23 | நாசிர் அண்டு பஷிர் அண்டு கம்பெனி, ஆம்பூர். | L/31-28/70-2-இண்ட்-II, நாள் 22–9–1970. | இ.ஐ. பதனிட்ட வெள்ளாட்டுத்தோல்கள் ஆண்டொன்றுக்கு 2 இலட்சம் தோல்கள் (சி.ஓ.பி.). |
| 24 | அப்துல் காதர் சாகிப் அண்டு கம்பெனி, சென்னை-3. | L/31-29/70-L-இண்ட்-II, நாள் 22–9–1970. | இ.ஐ. பதனிட்ட வெள்ளாட்டுத்தோல்கள் 1 இலட்சம் துண்டுகள் (சி.ஓ.பி.). |
| 25 | பரீடா பிரைம் தோல் பதனிடும் தொழிற்சாலை, சென்னை-3. | L/31-26/70-எண் எ II, நாள் 31–8–1970. | இ. ஐ. பதனிட்ட வெள்ளாட்டு செம்மறியாட்டுத் தோல்கள்—15·30 இலட்சம் துண்டுகள். பதனிட்ட ஈர நீலநிற தோல்கள் 1·64 லட்சம் (சி.ஓ.பி.). |
| 26 | அப்துல் ரசாக் அண்டு சன்ஸ், சென்னை-3. | L/31-30/70-எல் இண்ட் II, நாள் 22–9–1970. | பதனிட்ட ஈரமான நீலநிற வெள்ளாட்டு தோல்கள்—1·30 இலட்சம் துண்டுகள். இ.ஐ. பதனிட்ட வெள்ளாட்டுத் தோல்கள் 2·05 இலட்சம். இ.ஐ. பதனிட்ட செம்மறியாட்டுத் தோல்கள்—2·26 இலட்சம். இ.ஐ. பதனிட்ட உரிவைகள்—0·02 இலட்சம் (சி.ஓ.பி.). |

| | | | |
|---|---|---|---|
| 27 | சேஷசாயி பேப்பர் அண்டு போர்டுஸ் நிறுவனம், பள்ளிப்பாளையம், ஈரோடு. | L/24 (1) (7)/சி.ஓ.பி.-70-எல்.ஐ. (III) | கூழ் — 35,000 டன்கள்; தாள், அட்டை—35,000 டன்கள் (சி.ஓ.பி.). |
| 28 | இ.கே. எம்டி. இப்ராகிம் சாகிப் அண்டு சன்ஸ், ஈரோடு. | L/31-27/70-எல் இண்ட் (I), நாள் 22-9-1970. | இ.ஐ. பதனிட்ட பசு உரிவைகள்—464 துண்டுகள். இ.ஐ. பதனிட்ட பசுக்கன்றுத் தோல்கள் 39,000 துண்டுகள். இ.ஐ. பதனிட்ட கன்றுத் தோல்கள்—51,000 துண்டுகள். இ.ஐ. பதனிட்ட எருமை உரிவைகள்—5,600 துண்டுகள் (சி.ஓ.பி.). |
| 29 | இம்பீரியல் புகையிலை கம்பெனி (இந்தியா), சென்னை-19. | L/24 (4) (2)/சி.ஓ.பி.-70-LI (II), நாள் 5-10-1970. | பல்வேறுபட்ட அச்சடிக்கப்பட்ட/அச்சடிக்கப்படாத தொழிற்சாலைகள் பயன் படுத்துபவர்களுக்கு சிப்பப்பொருள்கள் —1,200 டன்கள் (சி.ஓ.பி.). |
| 30 | திருவாளர்கள் தென் இந்தியா தோல் பதனிடும் கம்பெனி, சென்னை. | L/31/32/70-எல் இண்ட் II, நாள் 22-10-1970. | இ.ஐ. பதனிட்ட வெள்ளாட்டுத் தோல்கள்—6·30 இலட்சம் தோல்கள். இ.ஐ. பதனிட்டசெம்மறியாட்டுத் தோல்கள் 0·87 இலட்சம் தோல்கள். ஈர நீலநிறமுடைய வெள்ளாட்டுத்தோல்கள்—32·00 இலட்சம் தோல்கள். ஈர நீலநிறமுடைய செம்மறியாட்டுத் தோல்கள் 2·30 இலட்சம் தோல்கள் (சி.ஓ.பி.). |
| 31 | இலட்சுமி காகிதத் தொழிற்சாலை, சேலம். | L/24 (4) (7) (சி.ஓ.பி.) 70-LI (III), நாள் 23-11-1970. | காகிதம், படச்சுருளை அடிப்படையாகக் கொண்டு நெகிழ்ச்சித் திறனுள்ள தொழிற்சாலை சிப்பப் பொருள்கள் —1,500 டன்கள் (சி.ஓ.பி.) |



| | தொழில் நிறுவனத்தின் பெயரும், முழு முகவரியும் (அமைப்பிடமும்). | உரிம எண்ணும் தேதியும். | உற்பத்தி செய்யும் பொருள்களும் திறனளவும் (உரிமத்தின் வகை என்.யு./எஸ்.இ./என்.ஏ./சி.ஓ.பி. மாறுவது). |
|---|---|---|---|
| | (1) | (2) | (3) |
| 32 | காவேரி கட்டிட அமைப்புத் தொழிற்சாலை மவுண்ட் ரோடு, சென்னை. | L/8A (a)/70 திட்டம், நாள் 5-10-1970. | அழுத்த கலங்கள்—400 டன்கள் சி.ஓ.பி. |
| 33 | கே.எம்.ஆடம், 526, பூவிருந்தவல்லி நெடுஞ்சாலை, சென்னை-7. | L/31/19/70-எல்.ஐ(II),நாள் 11-3-1970. | பதனிட்ட பாம்புத் தோல்கள்—21·00 லட்சம் தோல்கள் (சி.ஓ.பி.). |
| 34 | எஸ்.வி.எஸ். எண்ணெய் ஆலை, சென்னை. | L/28 (2) என்-20/70 எல்.சி., நாள் 30-12-1970. | வனஸ்பதி—10 டன்கள் (சி.ஓ.பி.). |
| 35 | திருவாளர்கள் நிர்மலா எண்ணெய்த் தொழில்கள், 956/57, திருவொற்றியூர் நெடுஞ்சாலை, சென்னை. | L/28 (2) என்-34/70 எல்.சி., நாள் 30-12-1970. | வனஸ்பதி—25 டன்கள் (சி.ஓ.பி.). |
| 36 | தி. இந்தியா சிமெண்ட் நிறுவனம், சென்னை. | L/1எ (3)-27 இ.இ.ஐ/70, நாள் 24-12-1970. | வேண்டிய உருவாக்கக் கூடிய வார்ப்பு இரும்புகளும், குழாய் பொருத்திகளும் ஆண்டு உற்பத்தி 1,200 டன்கள். அதிக பளுதாங்கும்கலப்பு உலோகமும் வார்ப்பு இரும்பு அச்சுக்களும் ஆண்டுக்கு 1,500 டன்கள். |

என்.ய.=புதிய தொழில். என்.எ.=புதிய பொருள். எஸ்.இ.=கணிசமான விரிவாக்கம். சி.ஓ.பி.=தொழில் நடத்தி வருவதைக் குறிக்கும்.

## இணைப்பு.—IV

**1951-ஆம் ஆண்டு தொழில்கள் வளர்ச்சி முறைப்படுத்துதல் சட்டத்தின்கீழ் 1970-ஆம் ஆண்டில் அளித்த இசைவுக் கடிதங்கள் பட்டியல்.**

| | தொழில் நிறுவனப் பெயரும் அமைப்பிடமும். (1) | உற்பத்திப் பொருள்கள்/உற்பத்தித் திறன். (2) | இசைவுக் கடிதத்தின் எண்ணும் நாளும். (3) |
|---|---|---|---|
| 1 | எஸ்.ஆர். பாலகிருட்டிணன், கிரீன்வேய்ஸ் சாலை, சென்னை-28. | மின்சார பொறிப்பீட்டு உருக்கு 3,000 டன்கள் (தொழிற்சாலை முழு அளவில் பணியாற்றும் போது (என்.யு). | இ.இ.ஐ.13 (19)/69 நாள் 11-2-1970. |
| 2 | மேட்டூர் கெமிக்கல் அண்டு தொழிலியல் கழக நிறுவனம், மேட்டூர் அணை. | எரிஉவர்காரம் ஆண்டுக்கு 6,600 டன்கள் (விரிவுபடுத்தப்பட்டபின் உற்பத்தித் திறன் 42,200 டன்கள் ; ஆண்டுக்கு 330 நாட்கள் தொடர்பணி அடிப்படையில் (எஸ்.இ). | 4 [8]/69, CRII, நாள் 12-2-1970. |
| 3 | ஐ.எல்.எச்.துறை, அரசுச் செயலாளர் (பேரூர், கோவை மாவட்டம்). | கரும்பு பிழியும் திறனளவு நாளொன்றுக்கு 1,250 டன்கள்) (என்.யு.). | 25 [812]/29/66, நாள் 11-8-1970. |
| 4 | தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழக நிறுவனம், சென்னை-2. | சோடியம் ஹைட்ரோ சல்பைட் ஆண்டுக்கு 3,300 டன்கள் (என்.யூ.). | 36 (16)/69-L1 (1)/3, நாள் 23-4-1970. |
| 5 | திருவாளர்கள் சதர்ன் எலக்ட்ரானிக் (தயாரிப்பு) நிறுவனம், லஸ் சர்ச் சாலை, சென்னை. | குழல்களும் தொடர் குழல்களும் ஆண்டுக்கு 30 இலட்சம் குழல்கள் (என்.யு.). | 29 (19)/68/டி.எஸ்., நாள் 17-5-1970. |
| 6 | சிம்கோ மீட்டர் நிறுவனம், மீட்டர் தொழிற்சாலை திருச்சிராப்பள்ளி. | கருவிகளை ஒத்திசைவிக்கின்ற வடிகலம், 6 லட்சம் ஒரு ஆண்டிற்கு (என்.வ.). | 36 (12)/69/டி.எஸ்., நாள் 6-7-1970. |



| | தொழில் நிறுவனப் பெயரும் அமைப்பிடமும். (1) | உற்பத்திப் பொருள்கள்/உற்பத்தித் திறன். (2) | இசைவுக் கடிதத்தின் எண்ணும் நாளும். (3) |
|---|---|---|---|
| 7 | கே. எஸ். நாராயணன், மின் அணு உற்பத்திப் பொருள்கள், கதீட்ரல் சாலை, சென்னை-6. | மின் அழுத்த ஆற்றல் மானிகள், ஆண்டுக்கு 10 லட்சம் மானிகள் மின்பகுப்புக்கு உதவும் நீர் மின்னியல் உறைகலம் ஆண்டிற்கு 50 லட்சம் (என்.யு). | 22 (8)/69/டி.எஸ்., நாள் 6-6-1970. |
| 8 | இ. அப்புபல்லா ராவ், 7/15, ஹெடோஸ் சாலை, சென்னை-6. | பி.எச்.சி. [டெக்] 3,500 டன்கள் ஆண்டொன்றுக்கு (என்.யூ.). | A அண்டு I 32 (1)68, நாள் 17-6-1970. |
| 9 | கே.சி.பி. நிறுவனம், இராமகிருட்டிண பில்டிங்ஸ், மவுண்ட் ரோடு, சென்னை. | தொடர்ந்து வெவ்வேறு எடைச்செறிவுள்ள பொருள்களை விரைவேகச் சுழற்சியினால் பிரிக்கும் இயந்திரம், ஆண்டுக்கு 50 இயந்திரங்கள் (என்.எ). | 3·54/69-எம்.ஈ.ஐ., நாள் 20-6-1970. |
| 10 | ஈஸ்வரன் அண்டு சன்ஸ், பொறியியல் (தனியார்) நிறுவனம், 5-7 கடற்கரை 2-ஆம் சாலை, சென்னை-1. | மின்சார முத்திரைகள் ஆண்டுக்கு 2,000 முதல் 3,000 டன்கள் (எஸ்.இ.). | இ.இ.ஐ.-13 (14)/70, நாள் 27-6-1970. |
| 11 | இ.பி.யு. தொழிற்சாலை, காமராஜ் நாடார் சாலை, கோயம்புத்தூர்-18. | மின்சார முத்திரைகள் ஆண்டுக்கு 18,000 டன்கள் (என்.யு). | இ.இ.ஐ. 13 (21)70, நாள் 30-6-1970 |
| 12 | பாரத் எலக்ட்ரிகல் தொழிலியல் நிறுவனம், இராசேந்திரநாத் முகர்ஜி சாலை, கல்கத்தா-1. (அம்பத்தூர்— தமிழ்நாடு). | ஜி.எல்.எஸ். விளக்குகள் 15-250 வாட் ஆண்டுக்கு 45 லட்சம் விளக்குகள் ; வெள்ளீயத்தினால் ஆன மின்கம்பிகள் (விளக்கு மின்வாய்கள்) 20 கோடி, கண்ணாடி கூடுகள் 600 டன்கள், கண்ணாடி குழாய்கள் 600 டன்கள் (எஸ்.இ.). | 7 (43) 9— எல்.இ.இ.I, நாள் 3-7-1970. |

| | | | |
|---|---|---|---|
| 13 | கே.சி.பி. நிறுவனம், சென்னை (தமிழ்நாடு). | மின்ம இயக்க அளவுக் கருவிகள் ஆண்டுக்கு 500 (எஸ்.இ). | 28 (13)/69/டி.எஸ்., நாள் 10/20-7-1970. |
| 14 | திருவாளர்கள் டி. பொறியியல் (தனியார்) நிறுவனம், அவனாசி சாலை, கோவை-18. | ஒரு உருளைக்குழாய்கள்— 48,000 ; பல உருளைக்குழாய்கள்— 5,00,000 ; மூலங்கள்— 5,00,000 ; வெளிதள்ளு வால்வுகள்—3,00,000 ; குழாய்முனை கைப்பிடிகள்— 1,20,000 ; குழாய்முனைகள்— 5,00,000 (எஸ்.இ.). | 2 (38)/70-எஇ-இண்ட் (1), நாள் 28-7-1970. |
| 15 | சவுத் இந்தியா விஸ்கோஸ் நிறுவனம், கோவை-18. | நெட்டிழை மரச்சத்து குழைமம், 18,000 டன்கள் ஆண்டுக்கு. | 3 (17)/டெக்ஸ் (எப்)/69, நாள் 14-7-1970. |
| 16 | சி. பி. ரெங்காச்சாரி, சதர்ன் எக்பிலோசிவ்ஸ் கம்பெனி, சென்னை-6. | எச்.டி. பாலிதீன் கோ—பாலிபெரிசேட்ஸ் முதலியவைகளிலிருந்து நெய்யப்பட்ட கோணிகள். ஆண்டுக்கு 90 லட்சம் ; பி.வி.சி. தகடுகள் 475 டன்கள் (ஆண்டுக்கு) ; பி.வி.சி. தோல்துணி 200—200 கிலோ மீட்டர் ஆண்டுக்கு (என். யு.). | 11 (43)/69-CHI, நாள் 16-7-1970. |
| 17 | மதுரை மில்ஸ் கம்பெனி, லிமிடெட், மதுரை ... | (எச்)பருத்தித்துணி நெய்வதற்குரிய கருவிகலமைப் பினை கொண்டு தானாக இயங்கும் 400 தறிகள் நிறுவுதல் (எஸ்.இ.). | 10/51/69—டெக்ஸ் (H), நாள் 13-7-1970. |
| 18 | W. S. இன்சுலேட்டர்ஸ் ஆப் இந்தியா, லிமிடெட், சென்னை. | இணைப்பு மின்விசை ஏற்றிகள் (மின் அழுத்த அளவுக் கருவிகளுடன்) ஆண்டுக்கு 400 லயன் பொறிகள் (அலைப் பொறிகள்) ஆண்டுக்கு 400 லயன் மேட்சிங் யூனிட் ஆண்டுக்கு 400. (என்.எ.). | இ. இ. ஐ. 13 (25)/69, நாள் 26-9-1970. |



| | தொழில் நிறுவனப் பெயரும் அமைப்பிடமும். | உற்பத்திப் பொருள்கள்/உற்பத்தித் திறன். | இசைவுக் கடிதத்தின் எண்ணும் நாளும். |
|---|---|---|---|
| | (1) | (2) | (3) |
| 19 | திரு எ. இராமன்லால் என். திரிவேதி, டி.நகர், சென்னை-17. | ஸ்கூட்டர் ஆண்டிற்கு 24,000 (என். யூ.). .. | L நெ. 7 (33)/70, A. E. இண்டர். (1), நாள் 7-10-1970. |
| 20 | திரு எம். பி. ராவ், அடையாறு, சென்னை-20. | சிகரெட்டுகள், ஆண்டுக்கு 450 கோடி (என். யூ). | கடித எண் 28/8/70, LI, (II), நாள் 1-11-1970. |
| 21 | சேஸ் அலாய்ஸ் (தனியார்) நிறுவனம், சென்னை-34. | வார்ப்பு அச்சு இயந்திரக் கருவிகள் தொழிற் சாலை, ஆண்டுக்கு 70 டன்கள், பிளாஸ்டிக் வார்ப்படக் கருவிகள், ரப்பர் வார்ப்படக் கருவிகள் தொழிற்சாலை, 25 டன்கள். வார்ப்பு வெட்டுக் கருவிகள், 25 டன்கள். ஏனைய தொழிற்சாலைக்குரிய வார்ப்புக் கருவிகள், 25 டன்கள். | கடித எண் 5-10/70—MEI நாள் 9-11-1970. |
| 22 | தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம், சென்னை-2. | மோட்டார்களுக்குரிய டயர்களும், டியூப்புகளும் ஆண்டுக்கு மூன்று லட்சம். | L. Nos. 29 (35)/70—LI (II), திட்டம், நாள் 12-12-1970. |
| 23 | ராலிஸ்மி இந்தியா நிறுவனம், பம்பாய்-1 (தமிழ் நாடு). | வைட்டமின் பி காம்ப்ளெக்ஸ் லிக்கியுடேட், வைட்டமின் பி காம்ப்ளெக்ஸ் லிக்நியோ. பெரிடெக்ஸ், காஷிஜேல், டிக்பிலக்ஸ், மைநால்டு—600,000 லிட்டர்கள். பிரோவிபோ, பொர்ரிலெக்ஸ் மால்ட், நியூமரோ வைட்ஸ்—372,000 லிட்டர்கள். கால்சியம் பேன்டோதீனபுல் மாத்திரைகள், ரிபோப்ளாவின் மாத்திரைகள், யு. பி. சி. மாத்திரைகள்—960 இலட்சங்கள். | 1 (35)/69-CH. III, நாள் 27-4-1970. |

| தொழில் நிறுவனப் பெயரும் அமைப்பிடமும். | உற்பத்திப் பொருல்கள்/இற்பத்தித் திறன். | இசைவுக் கடிதத்தின் எண்ணும் நாளும். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | மூழு லியோ எக்ஸ். பி. டபிள்யூ. எல். எக்ஸ். சிபி-12, எல். எக்ஸ்போர்டி பி. எல். எக்ஸ். சிபி. 12, எல். எக்ஸ்போட் 12, ஒய். டி. பி. காம்ப்ளெக்ஸ்-பி கால்சியம் பேன்டோதினேட்-பி லியோடர்ன் 24,000 சி. கி. மெடிசிரைம் பிரேவிபெக்ஸ் தூள் 36,000 சி.சி. லிபோடன்ர் பூச்சு—24,000 கிலோ கிராம். மெடிகிளும் பிரோவிபெக்ஸ் பவுடர்—36,000 கிலோ கிராம். | |
| 24 அமர்சாயம் இரசாயன நிறுவனம், பம்பாய்-16 (தமிழ்நாடு/குஜராத்). | ரப்பர் இரசாயனங்கள் 3,856 டன்கள்.(என்.யூ.). | 13 (20)/70-எல்-சி.எச். (1) நாள் 21-12-1970. |
| 25 திரு எஸ். இராமச்சந்திரன், சென்னை .. | .. பிஸ்டன் உற்பத்தித் திறன் ஆண்டுக்கு 5 இலட்சம். பிஸ்டன் வளையங்கள் ஆண்டுக்கு 'உற்பத்தித் திறன் 10 இலட்சம். பிஸ்டன் பின் ஆண்டு உற்பத்தித் திறன் 5 இலட்சம் (என்.யூ.). | 2 (176)/70 எ இண்ட்ச் (1) 12, நாள் 11-12-1970. |

என்.எ.புதிய பொருள். எஸ்.இ.—கணிசமான விரிவாக்கம். என்.யூ.—புதிய நிறுவனம்.



## இணைப்பு V

**1970-ஆம் ஆண்டில் தொழில் நுட்ப வளர்ச்சித் தலைமை இயக்குநரால் பதிவு செய்யப்பட்ட நடுத்தரத் தொழிற்சாலைகளின் பட்டியல்.**

| வரிசை எண்ணும், தொழிற்சாலை நிறுவனத்தின் பெயரும் அமைப்பிடமும். | உற்பத்தியாகும் பொருள்கள். | பதிவு எண்களும், நாளும். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 மதருஸ் ரேடியேட்டர்ஸ் அண்டு பிரஸ்சிங்ஸ் (பி), லிமிடெட், ஆவடி சாலை, அம்பத்தூர் சென்னை-53 (அம்பத்தூர்). | மோட்டார், டிராக்டர், டிரக் உள்தக நிலை இயந்திரங்கள் ஆகியவற்றிற்குரிய உலோக தகட்டுப் பகுதிகள். | D.G.T.D. /ஆர். 626/ இ-11 (ii), எஸ். 16/70. |
| 2 விஜயா பவுண்டரி, 5, புளியக்குளம் சாலை, பாப்பநாயக்கன்பாளையம், கோயம்புத்தூர்-18 (கோயம்புத்தூர்). | குழாய்கள் .. .. .. .. | D.G.T.D./ஆர். 636/இ-இ-11 (i) எஸ். 16/70. |
| 3 இராமராஜு சர்ஜிகல் காட்டன் மில்ஸ், லிமிடெட், பி.பி. நெ. 2, பெருமாள்பட்டி, இராஜபாளையம் (பெருமாள்பட்டி). | உறிஞ்சும் இயல்புடைய பஞ்சு .. .. | D.G.T.D./ஆர்-642/சி-29/எஸ்.-12/70. |
| 4 புளு மவுன்டன் எஸ்டேட் அண்டு இன்டஸ்ட்ரீஸ் லிமிடெட், பி.பி. நெ. 3309, கோத்தாரி பில்டிங்ஸ், 20, நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலை, சென்னை-34 (சென்னை). | சோடியம் சிலிக்கா ப்ளோரைடு .. .. | D.G.T.D./ஆர்-657/சி-30 (iv)/எஸ்-16/70. |
| 5 மதருஸ் போர்ஜிங்ஸ் அண்டு அலேடு இன்டஸ்ட்ரீஸ் (சி.பி.இ.) லிமிடெட், மேட்டுப்பாளையம் சாலை, பி.பி. நெ. 9, காரமடை (பி.ஒ.), கோயம்புத்தூர் மாவட்டம் (காரமடை). | மின்சாரத்தால் இயங்கும் மோட்டார் அச்சுப் பதிவுகள். | D.G.T.D./ஆர்-668/இ 12 (i)/எஸ்-16/70. |

| | | | |
|---|---|---|---|
| 6 | ஸ்ரீ. எஸ். சீனிவாஸ், 5, முதல் தெரு, அபிராமபுரம், ஆவடி, சென்னை-18 (ஆவடி). | பற்றவைக்கப்பட்ட குழாய்கள் .. .. .. | D.G.T.D./ஆர். 680 இ-13 (i)/எஸ்,-16/70. |
| 7 | டைம் எய்ட்ஸ் (இந்தியா) (பி) லிமிடெட், 331/333, தம்புச் செட்டித் தெரு, சென்னை-1 (சென்னை). | அலார ஒலி எழுப்பும் 24 மணி நேரம் ஓடக் கூடிய கடிகாரம், பெண்டுலக் கடிகாரங்கள். | D.G.T.D/ஆர் 687/இ-13 (ii)/எஸ்.-16/70. |
| 8 | தொகுசு பேப்பர் தயாரிப்பு நிறுவனம், 19, அரண்மனைக்காரத் தெரு, சென்னை-1 (சென்னை). | இதய ஓட்டப் பதிவு மின் இயந்திரத் திற்குரிய காகிதம், இ.இ.சி. எதிரொலி காண்பவை அசைவுமானி, ஏனையவை. | D.G.T.D./ஆர் 690/இ-14 (ii) எஸ். 14. |
| 9 | மதராஸ் யந்திரக் கருவி உற்பத்தி நிறுவனம், சிங்காநல்லூர் (பி.ஓ.), கோயம்புத்தூர்-5 (கோயம்புத்தூர்). | இயந்திரத் தெளிப்பான்கள் .. .. .. | D.G.T.D./ஆர். 694/இ-16 (iv)/எஸ்.-16/70. |
| 10 | டி. இஞ்சினீயரிங் (பி) லிமிடெட், கோபால் தோட்டம், அவிநாசி சாலே, கோயம்புத்தூர்-18 (கோயம்புத்தூர்). | குழாய் முனைகள், மூலங்கள், வெளி வால்வுகள். | D.G.T.D/ஆர். 723/இ-11 (ii)/எஸ்.-16/70. |
| 11 | ஸ்ரீ சி. கே. சசங்க ராவ், ஸ்கூட்டா வீல்ஸ் (பி) லிமிடெட், 46, பர்கெட் ரோடு, தியாகராயநகர், சென்னை-17 (சைதாப்பேட்டை வட்டம்). | ஸ்கூட்டர் சக்கரங்கள் .. .. .. .. | D.G.T.D./ஆர். 731/இ-11 (ii). எஸ்.-16/70. |
| 12 | சுந்தரம் இண்டஸ்ட்ரீஸ் (பி) லிமிடெட், டி.வி.எஸ். பில்டிங்ஸ், மேற்கு வெளித் தெரு, மதுரை-1 (பொன்மேனி கிராமம்). | நீர்ப்புகாத பைகள், மெக்கானிக்கல் ரப்பர் பொருள்கள், ரப்பர் காற்றுப் பைகள். | D.G.T.D./ஆர். 323/சி-24 (ii)/எஸ்.-16/2/70. |
| 13 | ஆம்செஸ் இஞ்சினீயர்ஸ் (தனியார்) நிறுவனம், தொழிற்பேட்டை, சென்னை-32 (சென்னை). | முத்திரை குத்தும் இயந்திரம் (பல வால்வு) .. | D.G.T.D./ஆர். 254/பி/இ-16 (iv)/எஸ்.-16/70 |





## இணைப்பு VI

### 1970-ஆம் ஆண்டில் இந்திய அரசால் ஏற்பளிக்கப்பட்டு வெளிநாட்டு தொழில் நுட்ப/நிதி உடனுழைப்புடன் தொடங்கப்பட்ட நிறுவனங்களின் பட்டியல்.

| தொடர் எண். | இந்திய நிறுவனத்தின் பெயர். | உடனுழைப்பு நல்கும் வெளி நாட்டு நிறுவனத்தின் பெயர். | உற்பத்திப் பொருள்கள். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | முருகப்பா அண்டு சன்ஸ், டயம் இல்லம், 11/12, வடக்கு கடற்கரைச் சாலே, சென்னை. | பண்டி (Bundy) கழகம், டெட்ராயிட், அமெரிக்கா. | பண்டி (Bundy) பற்றவைப்புக் குழாய்கள். |
| 2 | கே. சி. பி. நிறுவனம், இராமகிருட்டிணு பில்டிங்ஸ், 38, மவுண்ட் ரோடு, சென்னை-6. | திருவாளர்கள் சி. கே. டி. பிரகா, செக்கோஸ்லோவேகியா. | உலர்முறை சிமிட்டி தயாரிப்பு இயந்திரங்கள். |
| 3 | சதர்ன் எலக்டிரிகல்ஸ் (தனியார்) நிறுவனம், 25-A, அம்பத்தூர் தொழிற்பேட்டை, சென்னை-58. | பவர் சென்டர் கம்பெனி நிறுவனம், பிரிட்டன். | அலுமினிய மின்கடத்தி அடைப்புகள். |
| 4 | சதர்ன் தொழிலியல் கழகம், 14, பிரின்சஸ் தெரு, அஞ்சல் பெட்டி எண் 113, 99, அரண்மனைக்காரத் தெரு, சென்னை-1. | லாண்ட்-மாஸ்டர் நிறுவனம், ஹக்நால், இங்கிலாந்து (U.K.). | லாண்ட் மாஸ்டர் இயந்திரங்கள். (L 150). |
| 5 | தி ஸ்டாண்டர்டு பிரிண்டிங் இயந்திர நிறுவனம், 9, மவுண்ட் ரோடு, சென்னை. | வெப் ரிப்போர்ஷனிக், லீப்ஜிக், கிழக்கு ஜெர்மனி. | புகைப்படக் கருவிகள். |
| 6 | ஏரோமரைன் தொழிற்சாலை (தனியார்) நிறுவனம், 19, கணபதி நகர், சென்னை-18. | ஆர்.எப்.டி.-ஜி.ஓ. நிறுவனம், கோல்டுமிங், பிரிட்டன். | காற்றூட்டப்படத்தக்க மிதவைகள். |

| | | | |
|---|---|---|---|
| 7 | எஸ். வி. இருட்டிணமூர்த்தி அண்டு எஸ். வி. இராமய்யா, 18, கிரீம்ஸ் ரோடு, சென்னை-16. | ஹன்சிலீட் இயந்திரப் பணிகள், லீட்ஸ், 10, பிரிட்டன். | மூன்று சக்கரப் பயணிகள் வண்டிகள். |
| 8 | சத்ய நாராயண பிரதர்ஸ், பொறியாளர் அண்டு ஒப்பந்தக்காரர், 25, எட்வர்டு எலியட்ஸ் சாலை, சென்னை-4. | வெற்றிட கற்கலவை (ஓவர்சீஸ்) நிறுவனம் (INC), 10, இ/ஐ. வெனிஸ்லா தெரு, ஏதென்ஸ்-134, கிரீஸ். | முன்னதாகவே உறுதிப்படுத்தப் பட்ட கற்கலவைக் குழாய்கள். |
| 9 | திருவாளர்கள் டியூலேட் பிளாஸ்டிக்ஸ் (தனியார்) நிறுவனம், அவனாசி சாலை, கோவை. | திரு பி. எ. ஹார்வி, ஐப்போல்டு ஸ்டோர்ஸ், லாக்ஸ்வார்டு லர்ரே, இங்கிலாந்து. | வலிமையான பிளாஸ்டிக் கூரைத் தகடுகளும் மற்றவையும். |

## இணைப்பு VII.

**1970-ல் உற்பத்தி தொடங்கப்பட்ட பெருந்தொழில் நிறுவனங்களின் பட்டியல்.**

(1970-ல் கொடுக்கப்பட்ட சி.ஓ.பி. உரிமங்கள் நீங்கலாக.)

| தொடர் எண். | தொழில் நிறுவனத்தின் பெயர். | உற்பத்திப் பொருள்களும் உற்பத்தித் திறனும். | இயந்திரம் நிறுவிய நாளும் உற்பத்தி தொடங்கப்பட்ட நாளும். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | இந்தியன் எண்ணெய்க் கழகம், உயவெண்ணெய் கலவைச்சாலை, எண்ணூர் நெடுஞ்சாலை, சென்னை-81. | ஆட்டோமோட்டிவ் அண்டு தொழிற்சாலை உயவெண்ணெய் 1,40,000 டன்கள் ஆண்டுக்கு. | 1970-ஆம் ஆண்டு எப்ரல் திங்கள். |
| 2 | தமிழ்நாடு சிமிட்டி, ஆலங்குளம் .. .. .. | சிமிட்டி நாள் ஒன்றுக்கு 1,200 டன்கள். | 1970-ஆம் ஆண்டு ஜூன் திங்கள். |



## இணைப்பு VIII.

**1970-ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட கனிப்பொருள்கள் ஆய்வு நிலநீர் ஆய்வுப் பணிகள் பட்டியல்.**

(1) இராமநாதபுரம் மாவட்டம் சிவகங்கைக்கு அருகில் காரீயப் படிவங்கள் குறித்து விரிவாக ஆய்தல்.

(2) மதுரை மாவட்டம், திருமங்கலம் வட்டத்தில் பொன்னமங்கலம், பொறுப்புமேட்டுப்பட்டி ஆகிய ஊர்களுக்கு அருகிலும் உசிலம்பட்டி வட்டத்தில் கல்லூத்து அருகிலும் காரீயப் படிவங்கள் குறித்து விரிவாக ஆய்தல்.

(3) திருநெல்வேலி மாவட்டம் திருச்செந்தூர் வட்டத்தில் உள்ள அரசூர் கிராமத்தில் திசையன்விளைக்கு அருகிலும் நாங்குநேரி வட்டத்தில் காரிக்கல் அருகிலும் கிளிஞ்சல் சுண்ணாம்புப் படிவங்கள் குறித்து விரிவாக ஆய்தல்.

(4) திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் வட்டம் களக்காடு பகுதிகளில் கனிவள ஆய்வு.

(5) தென் ஆர்க்காடு மாவட்டம், திருக்கோவிலூர் வட்டத்திலும் திருச்சி மாவட்டத்தில் உள்ள லால்குடியிலும் களிமண் இருப்பது பற்றிய ஆய்வு கள் நடத்துதல்.

(6) தர்மபுரி மாவட்டத்தில் பொன்னகரம், ஒகனேக்கல் சுற்றியுள்ள பகுதியில் கனிவள ஆய்வு நடத்துதல்.

(7) செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ள திருமழிசையில் இயந்திர செங்கற்சூளைக்குப். பயன்படும் களிமண் பற்றிய ஆய்வு நடத்துதல்.

(8) தென் ஆர்க்காடு மாவட்டத்தில், திண்டிவனம் வட்டத்தில் உள்ள மரக்காணம் பகுதியில் உப்பங்கழியில் கிளிஞ்சல் சுண்ணாம்பு குறித்து ஆய்வு செய்தல்.

(9) தென் ஆர்க்காடு மாவட்டம், விருத்தாசலம் வட்டத்தில் களிமண் இருப்பது பற்றியும் திருச்சி மாவட்டம், குளித்தலை பகுதியில் படிக "பெல்ட்ஸ்பார்" எனப்படும் கனிப்பொருள் பற்றியும் ஆய்வு செய்தல்.

(10) தூக்கநாயக்கன்பாளையம் அருகில் பட்ச்சயிட் (Fuchsite) படிக க்கல் பற்றிய தொடக்க ஆய்வு.

(11) அரியலூர் பகுதியில் சுண்ணாம்புக் கல் படிவங்கள் பற்றி வட்டார ஆய்வு செய்தல்.

### சிறு அளவு ஆய்வு.

(12) மகாபலிபுரத்தில் உள்ள அரசு சிலைவடிப்பு கலைப் பயிற்சி நிலையத்திற்காகவும், முதையூர் கற்சிலை பணியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்திற்காகவும் வட ஆர்க்காடு மாவட்டம், செங்கம் வட்டம், பூமாலை ரெவின்யூ பிர்க்காவில் உள்ள முடியனூர் அருகில் சவர்க்காரக் கல் இருப்பதுபற்றி ஆய்வு செய்தல்.

(13) தென் ஆர்க்காடு மாவட்டம், திண்டிவனம் வட்டத்தில் உள்ள உலக்கூர் கிராமத்தில் எண்ணெய் ஊற்றுக்கள் அறிவிக்கப்பட்டதன் பேரில் ஆய்வு செய்தல்.

(14) இராமநாதபுரம் மாவட்டம், விருதுநகர் அண்மையில் உள்ள சூலக்கரை அருகில் சிலிமெனைட் உள்ளதென அறிவிக்கப்பட்டதன் பேரில் ஆய்வு செய்தல்.

(15) திருச்சிராப்பள்ளி மாவட்டம், குளித்தலை வட்டத்தில் உள்ள கடவூரைச் சுற்றியுள்ள பகுதியில் அங்குமிங்கும் மைக்கா இருப்பதுபற்றி ஆய்வு செய்தல்.

(16) கன்னியாகுமரி மாவட்டம், குமரிமுனைக்கும் வள்ளக்கட்டைக்கும் இடைப்பட்ட பகுதியில் மோனசைட், படிகக் கல்லுக்குரிய மணல்கள்பற்றி ஆய்தல்.

(17) தென் ஆர்க்காடு மாவட்டம், நெல்லிக்குப்பம் அருகில் உள்ள காவமங்கலத்தில் எண்ணெய் ஊற்றுக்கள் இருக்கிறதென அறிவிக்கப் பட்டதன் பேரில் ஆய்வு செய்தல்.

(18) கோயம்புத்தூர் மாவட்டம், கோபிச்செட்டிப்பாளையம் வட்டத்தில் உள்ள பெரியகொடுவேரி கிராமத்தில் பலவிதமான பச்சைநிற படிகக் கற்கள் உள்ளதென அறிவிக்கப்பட்டதன் பேரில் ஆய்வு செய்தல்.

(19) இராமநாதபுரம் மாவட்டம், திருப்பத்தூர் நகரத்தில் விரிசல்கள் **(Furrows)** பற்றியும் வெடிப்புகள் பற்றியும் ஆய்தல்.

(20) திருச்சி மாவட்டம், மேட்டுப்பட்டி கிராமத்தில் ஓரளவு விலையுயர்ந்த கற்கள் இருப்பதாகவும், மதுரை மாவட்டம், அழகுபட்டி கிராமத்தில் மைக்கா இருப்பதாகவும் அறிவிக்கப்பட்டதன் பேரில் ஆய்வு செய்தல்.

(21) வட ஆர்க்காடு மாவட்டத்தில் வேலூர் அருகே தங்கம் இருப்பதாக அறிவிக்கப்பட்டதன் பேரில் ஆய்வு செய்தல்.

(22) தச்சன்குறிச்சியில் சுண்ணாம்புக் கல் பற்றிய சோதனை செய்யவும், திருச்சி பகுதியில் சுண்ணாம்புக்கல் இருப்பது பற்றிய ஆய்வு செய்யவும், மாநில வீட்டு வசதி வாரியத்திற்கு உதவிபுரிதல்.

(23) வட ஆர்க்காடு மாவட்டம், திருத்தணி வட்டம், சிவாடி கிராமத்தில் வெர்மிகியூலைட் **(Vermiculite)** அபிரகம் காணப்படுவதாக அறிவிக்கப் பட்டதன் பேரில் ஆய்வு செய்தல்.

(24) கன்னியாகுமரி, திருநெல்வேலி மாவட்டங்களில் உள்ள மேற்கு, கிழக்கு கடற்கரைகளில் உள்ள மணற் படிவங்கள் பற்றி ஆய்வு செய்தல்.

(25) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி வட்டத்தில் உள்ள நெட்டூர் கிராமத்தில் மைக்கா பற்றியும் சுண்ணாம்பு பாஸ்பேட் (அபடைட்) பற்றியும் ஆய்வு செய்தல்.

(26) திருச்சி மாவட்டம், திருமயம் வட்டத்தில் பனையப்பட்டி கிராமம் அருகே இரும்புக் கனியும் குரோம் கனியும் இருக்கிறதென அறிவிக்கப் பட்டதன் பேரில் ஆய்வு செய்தல்.

(27) கோயம்புத்தூர் மாவட்டம், கடலூர் கிராமத்தில் சல்பைடு **(Sulphide)** காணப்படுவது பற்றி ஆய்வு செய்தல்.

**நிலநீர் ஆய்வுப் பணிகள்.**

(28) வேளாண்மை மறு கடன் உதவிக் கழகம் மூலமாக அவனாசி, புளியம்பட்டி, நம்பியூர், சாரங்கம்பட்டி, காரமடை, அன்னூர், காங்கேயம், தாராபுரம் பகுதியில் நிலநீர் நிலைமைபற்றி ஆய்வு.

(29) திட்டமிட்டுள்ள பொட்டாசியம் குளோரைட் தொழிற்சாலைக்காக காக்களூரைச் சுற்றியுள்ள பகுதிகளில் நிலநீர் நிலைமைபற்றிய ஆய்வு.





(30) வேளாண்மை மறு கடன் உதவிக் கழகத்தின் வளர்ச்சித் திட்டம் தொடர்பாக இராமநாதபுரம் மாவட்டம் ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டத்தில் நிலநீர் நிலைமைபற்றியும் பூமியின் இயற்கை அமைப்பு பற்றியும் ஆய்வு செய்தல்.

(31) வேளாண்மை மறு கடன் உதவிக் கழகத்தின் உதவியுடன் மதுரை மாவட்டம், பெரியகுளம் வட்டம், மயிலாடும்பாறை கிராமத்தில் கங்கபணிகாத்தூர் பகுதிகளில் நிலநீர் நிலைமைபற்றிய ஆய்வு.

(32) இராமநாதபுரம் நகரப் பகுதிகளில் திட்டமிட்டுள்ள சோடா உப்பு தயாரிப்புச் சாலைக்கு நன்னீர் வேண்டியிருப்பதால் அதற்காக நிலநீர் ஆய்வு செய்தல்.

(33) கருவித் தொழிற்சாலைக்காகத் திட்டமிட்டுள்ள தொழிற்பேட்டைக்கு நீர் தேவையிருப்பதால் செங்கற்பட்டு மாவட்டம், கத்திவாக்கம் அருகில் நிலநீர் ஆய்வு செய்தல்.

## இணைப்பு IX.

**1951-ம் ஆண்டின் தொழில்கள் (வளர்ச்சி-முறைப்படுத்தல்) சட்டத்தின்கீழ், அதிகாரம் பெற்ற கட்டுப்பாட்டு அதிகாரியாக தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம் நிர்வாகத்தை மேற்கொண்ட நான்கு பஞ்சாலைகள் செயல்பட்ட விவரங்கள்.**

| ஆலையின் பெயர். | நிறுவப்பட்ட திறன் அளவு. | 1970-ம் ஆண்டில் ஒரு நாளைய மாற்று முறை பணி ஒன்றில் இயங்கிய கதிர்களின் சராசரி எண்ணிக்கை. | 1970-ம் ஆண்டில் பணி யாற்றிய நாட்களின் எண்ணிக்கை. | 1970-ம் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட மொத்த நூலின் அளவு. | 1970-ம் ஆண்டில் விற்பனை செய்த நூலின் அளவு. | 1970-ம் ஆண்டு விற்பனை செய்த நூலின் மதிப்பு. |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| | | | | (கி. கிராம்). | (கி. கிராம்) | (ரூபாய்) |
| 1. ஓம் பராசக்தி ஆலை நிறுவனம் .. .. | 15,048 | 11,697 | 348 | 378,353 | 367,468 | 44,39,785 |
| 2. கிருஷ்ணவேணி பஞ்சாலை நிறுவனம் .. | 14,658 | 9,810 | 287 | 386,251 | 402,860 | 44,48,090 |
| 3. கம்போடியா ஆலை நிறுவனம் .. .. | 39,292 | 21,343 | 308 | 897,167 | 780,424 | 75,81,619 |
| 4. ஸ்ரீரங்க விலாஸ் பருத்தி விதை எடுத்தல், நூற்றல், நெய்தல், ஆலை நிறுவனம். | 39,856 | 24,848 | 236 | 833,220 | 797,400 | 79,95,559 |
| மொத்தம் .. | 108,852 | 91,093 | .. | 2,494,991 | 2,348,150 | 2,44,65,053 |





## இணைப்பு X.

**தொழில்களுக்கு அரசு உதவிச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கடன்கள்.**

| ஆண்டு. | உதவியளிக்கப் பட்ட இனங் களின் எண்ணிக்கை. | வழங்கப்பட்ட மொத்தத் தொகை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | | ரூ. காசு. |
| இரண்டாவது திட்டக்கால அளவு— | | |
| 1956–57 .. .. .. .. | 201 | 11,27,865·00 |
| 1957–58 .. .. .. .. | 3,401 | 24,88,962·00 |
| 1958–59 .. .. .. .. | 4,057 | 24,56,687·00 |
| 1959–60 .. .. .. .. | 3,952 | 22,26,558·00 |
| 1960–61 .. .. .. .. | 4,148 | 26,31,976·20 |
| மொத்தம் .. | 15,759 | 1,09,32,048·10 |
| மூன்றாவது திட்டக்கால அளவு— | | |
| 1961–62 .. .. .. .. | 4,061 | 33,92,474·65 |
| 1962–63 .. .. .. .. | 4,811 | 28,82,813·19 |
| 1963–64 .. .. .. .. | 2,889 | 25,02,617·06 |
| 1964–65 .. .. .. .. | 2,082 | 30,00,289·00 |
| 1965–66 .. .. .. .. | 1,797 | 29,90,760·00 |
| மொத்தம் .. | 15,640 | 1,47,68,953·90 |
| ஆண்டுத் திட்டக்கால அளவு— | | |
| 1966–67 .. .. .. .. | 2,543 | 34,97,249·25 |
| 1967–68 .. .. .. .. | 2,884 | 29,70,564·00 |
| 1968–69 .. .. .. .. | 1,344 | 26,21,308·00 |
| மொத்தம் .. | 6,771 | 90,89,121·25 |
| நான்காவது திட்டக்கால அளவு— | | |
| 1969–70 .. .. .. .. | 1,473 | 24,90,350·00 |
| 1970–71 .. .. .. .. | 1,744 | 31,67,000·00 |

1970–71-ல் (1970-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31-ம் தேதி அன்று உள்ளபடி, கடன் தொகை வழங்கப்பட்ட தொழில்கள் பற்றிய விவரங்கள்.

| தொடரிலக்கமும் உதவி பெற்ற தொழிலின் பெயரும். | கடன் உதவிபெற்ற பிரிவுகளின் எண்ணிக்கை. | வழங்கப்பட்ட கடன் தொகை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | | ரூ. காசு. |
| 1 உணவுப் பொருள்கள் .. .. | 48 | 48,800·00 |
| 2 பலவகைத் துணிகள் .. .. | 9 | 15,000·00 |
| 3 மரக்கட்டை, மரப் பொருள்கள் .. | 115 | 1,78,550·00 |
| 4 தோல், தோல் பொருள்கள் .. | 58 | 47,350·00 |
| 5 ரப்பர், பெட்ரோலியம், நிலக்கரிப் பொருள்கள். | | |
| 6 இரசாயனம், இரசாயனப் பொருள்கள். | 10 | 16,250·00 |
| 7 உலோகம் சாராத பொருள்கள் (பெட்ரோலியம் அல்லாத இதர கனப் பொருள்கள் நீங்கலாக). | 9 | 20,150·00 |
| 8 மூல உலோகங்களும், ஏனைய பொருள்களும். | 76 | 1,42,900·00 |
| 9 போக்குவரத்துச் சாதனம் நீங்கலாக மற்றெல்லா இயந்திரங்கள். | 7 | 46,500·00 |
| 10 போக்குவரத்துச் சாதனங்கள் .. | 8 | 1,29,500·00 |
| 11 பலவகைத் தயாரிப்புத் தொழில்கள். | 660 | 7,61,952·00 |
| மொத்தம் .. | 1,000 | 14,06,952·00 |

குறிப்பு.—1970–71-ல் 1,744 நேர்வுகளில் ரூ. 31·67 லட்சம் வழங்கப்பட்டுள்ளது.

தமிழ் நாடு 1956-ம் ஆண்டு சிறு தொழில்களுக்கும், குடிசைத் தொழில்களுக்கும், கடன்களும், உதவித் தொகைகளும் வழங்குவது குறித்த விதிகளைச் சேர்ந்த 19-வது விதியின்கீழ், தொழிற் கூட்டுறவுச் சங்கங்களின் சேமநிதிக்கு வழங்கப்பட்ட உதவித் தொகைகளின் விவரங்கள் :—

| ஆண்டு. | தொழில் கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை. | அளிக்கப்பட்ட உதவித் தொகை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | | ரூ. காசு. |
| 1957–58 .. .. .. .. | 43 | 65,000 00 |
| 1958–59 .. .. .. .. | 178 | 1,91,770 00 |
| 1959–60 .. .. .. .. | 198 | 1,79,925 00 |
| 1960–61 .. .. .. .. | 80 | 1,18,059 00 |
| 1961–62 .. .. .. .. | 71 | 1,25,000 00 |
| 1962–63 .. .. .. .. | 111 | 1,49,980 00 |
| 1963–64 .. .. .. .. | 83 | 1,21,047 00 |
| 1964–65 .. .. .. .. | 79 | 1,20,980 00 |
| 1965–66 .. .. .. .. | 92 | 1,22,941 00 |
| 1966–67 .. .. .. .. | 70 | 1,20,980 00 |
| 1967–68 .. .. .. .. | 3 | 10,000 00 |
| 1968–69 .. .. .. .. | 1 | 3,000 00 |
| 1969–70 .. .. .. .. | 4 | 16,000 00 |
| 1970–71 (31–10–1970 வரை) .. | 2 | 7,000 00 |





## இணைப்பு XI

### திட்ட வேலைகளுக்குச் செய்த செலவைக் காட்டும் விவர அறிக்கை.

| வளர்ச்சித் திட்டத்தின் தலைப்பு. | நான்காவது திட்டத்தின் கீழ் முதலீடு. | 1969–70-ம் ஆண்டுச் செலவு. | 1970–71 செலவு (எதிர் பார்ப்பது). |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| I. தொழில்களுக்கு நிதி வழங்கல். | 275·00 | 25·14 | 36·67 |
| II. கிராமத் தொழில்களும் சிறு தொழில்களும்— | | | |
| (1) சிறு தொழில்கள் .. | 555·19 | 22·77 | 43·23 |
| (2) தொழிற் பேட்டைகள் .. | 474·00 | 17·26 | 31·32 |
| (3) சீர் செய்த மனைகள் .. | 400·00 | 24·82 | 22·51 |
| (4) கைப்பணிகள் .. .. | 54·99 | 1·04 | 0·62 |
| (5) பட்டுப் பூச்சி வளர்ப்பு .. | 76·11 | 10·44 | 8·46 |
| (6) கயிற்றுத் தொழில் .. | .. | .. | .. |
| (7) கிராமப் பணி நிலையங்கள் | 2·25 | 0·62 | 0·82 |
| மொத்தம் .. | 1,837·54 | 102·09 | 143·63 |
| மத்திய அரசுத் திட்டங்கள்— | | | |
| (8) கிராமத் தொழில் திட்டங்கள். | 290·00 | 20·96 | 25·0[illegible] |

குறிப்பு.—(1) தொழில் கூட்டுறவுத் திட்டங்கள் பற்றிய செலவுப் புள்ளிவிவரங்கள் XVI-வது இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன.

## இணைப்பு XII.

### தொழில் துறையின் சிறு தொழில் பிரிவுகளின் விவரங்கள்—மாவட்ட வாரியாக.

| தொடர் எண். | சிறு தொழில்கள். | திட்டச் செலவு. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | | (ரூபாய் இலட்சத்தில்.) |
| | **கன்னியாகுமரி மாவட்டம்,** | |
| 1 | தொழில் பண்ணை, மார்த்தாண்டம் .. .. .. | 2 92 |
| 2 | டான்சி பொறியியல் பட்டறை, நாகர்கோயில் .. .. | 5.49 |
| 3 | தொழில் பண்ணை, நாகர்கோயில் .. .. | 7·31 |
| 4 | " டான்சி " மரம் அறுக்கும் ஆலை, நாகர்கோயில் .. | 2·33 |

[1971 ஜூன் 30

| தொடர் எண். (1) | சிறு தொழில்கள். (2) | திட்டச் செலவு. (3) (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|

### திருநெல்வேலி மாவட்டம்.

| | | |
|---|---|---|
| 1 | " டான்சி " தச்சுப் பட்டறை, பத்தமடை .. .. .. | 0·77 |
| 2 | தச்சுப் பட்டறை, கருமான் பட்டறை, பேட்டை .. .. | 8·10 |
| 3 | தொழில் பண்ணை, பேட்டை .. .. .. .. | 6·16 |
| 4 | வார்ப்பட பட்டறை, பேட்டை .. .. .. .. | 8·20 |
| 5 | பொதுக் குத்தகைப் பட்டறை, பேட்டை .. .. .. | 5·62 |
| 6 | தொழிற் பேட்டை, கோவில் பட்டி .. .. .. .. | 6·69 |
| 7 | தொழில் நுட்பத் தகவல் பிரிவு, பேட்டை .. .. | 0·49 |
| 8 | " டான்சி " பொறியியல் பட்டறை, தூத்துக்குடி .. .. | 8·85 |
| 9 | அடிப்படைக் கிராமப் பணி நிலையங்கள் .. .. .. | 3·08 |
| 10 | மக்னீசியம் கார்பனேட் உற்பத்திப் பிரிவு, தூத்துக்குடி .. | 2·76 |
| 11 | கடல் தாவரங்களிலிருந்து பொட்டாசியம் குளோரைடு உற்பத்திப் பிரிவு, தூத்துக்குடி .. | 7·60 |
| 12 | பாரிஸ் உறை மாவு உற்பத்திப் பிரிவு, தூத்துக்குடி .. | 1·97 |

### இராமநாதபுரம் மாவட்டம்.

| | | |
|---|---|---|
| 1 | " டான்சி " பொறியியல் பட்டறை, ராஜபாளையம் .. .. | 4·50 |
| 2 | தொழிற் பேட்டை, விருதுநகர் .. .. .. .. | 28·49 |
| 3 | " டான்சி " கருவி பொறியியல் பட்டறை, விருதுநகர் .. | 5·78 |
| 4 | தொழிற் பேட்டை, காரைக்குடி .. .. .. .. | 9·69 |
| 5 | தொழிற் பேட்டை, சிவகங்கை .. .. .. .. | 8·08 |

### மதுரை மாவட்டம்.

| | | |
|---|---|---|
| 1 | மூலப்பொருள்கள் கிடங்கு, மதுரை .. .. .. | 2·16 |
| 2 | பொறியியல் பணிகள், மதுரை (Fabrication Unit) .. | 4·56 |
| 3 | " டான்சி " கட்டுமானப் பணிகள் பட்டறை, பழனி .. | 3·55 |
| 4 | " டான்சி " பொறியியல் பூட்டுத் தயாரிப்புப் பிரிவு, திண்டுக்கல். | 14·59 |
| 5 | தொழில் பண்ணை, மதுரை .. .. .. .. | 24·45 |
| 6 | தொழிற் பேட்டை, தேனி .. .. .. .. .. | 5·38 |
| 7 | பொதுக் குத்தகைப் பட்டறை, மதுரை .. .. .. | 7·52 |
| 8 | தொழிற் பேட்டை, திண்டுக்கல் .. .. .. .. | 15·91 |
| 9 | தொழில் நுட்பத் தகவல் பிரிவு, மதுரை .. .. | 0·49 |
| 10 | " டான்சி " கருவி-பொறியியல் பணிகள் பட்டறை, மதுரை. | 11·54 |



1971 ஜூன் 30]

| தொடர் எண். (1) | சிறு தொழில்கள். (2) | திட்டச் செலவு. (3) (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|

### மதுரை மாவட்டம்—தொடர்ச்சி.

| | | |
|---|---|---|
| 11 | சீர் செய்த மனைகள், மதுரை .. .. .. .. | 76·00 |
| 12 | மின் மருத்துவக் கருவிகள் பணி—செப்பனிடுவதற்கான துணை நிலையம், மதுரை (மதுரை மாவட்ட வரிசையில் 20-வது எண்ணில் உள்ளது). | |
| 13 | உணவு-பழ அடிப்படையில் அமைந்த தனித் தொழில் பேட்டை, வத்தலகுண்டு. | 15·43 |
| 14 | வட்டார சோதனை ஆய்வுக் கூடம், மதுரை .. .. | 15·00 |

### திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

| | | |
|---|---|---|
| 1 | " டான்சி " வேளாண்மை பண்ணைக் கருவிகள் பிரிவு, திருச்சிராப்பள்ளி. | 4·07 |
| 2 | தொழிற் பேட்டை, திருச்சிராப்பள்ளி .. .. .. | 11·86 |
| 3 | கருவி-பொறியியல் பணிகள் பட்டறை, திருச்சிராப்பள்ளி .. | 5·78 |
| 4 | தொழிற் பேட்டை, புதுக்கோட்டை .. .. | 9·69 |
| 5 | " டான்சி " பொறியியல் பட்டறை, கரூர் .. .. .. | 5·49 |
| 6 | பொதுக் குத்தகைப் பட்டறை, திருச்சிராப்பள்ளி .. .. | 5·62 |
| 7 | சீர் செய்த மனைகள், திருச்சிராப்பள்ளி .. .. .. | 16·68 |
| 8 | துணைத் தொழிற் பேட்டை, திருச்சிராப்பள்ளி .. .. | 39·65 |
| 9 | தொழிற் பேட்டை, கரூர் .. .. .. .. .. | 6·15 |

### தஞ்சாவூர் மாவட்டம்.

| | | |
|---|---|---|
| 1 | " டான்சி " பொறியியல்-மிதி வண்டி இணைப்புப் பிரிவு, தஞ்சாவூர் | 7·50 |
| 2 | தொழிற் பேட்டை, தஞ்சாவூர் .. .. .. .. | 6·61 |
| 3 | " டான்சி " எஃகு பித்தளைச் சாமான்கள் தயாரிப்புப் பணி நிலையம், கும்பகோணம். | 7·84 |
| 4 | " டான்சி " தச்சு-கருமார் பட்டறை, மன்னார்குடி .. | 4·80 |
| 5 | " டான்சி " வார்ப்படச் சாலை கருவி அறைப் பட்டறை, தஞ்சாவூர். | 8·93 |
| 6 | " டான்சி " பொறியியல் பட்டறை, மாயூரம் .. .. | 5·12 |
| 7 | தொழிற் பேட்டை, கும்பகோணம் .. .. .. | 8·59 |
| 8 | தொழிற் பேட்டை, நாகப்பட்டினம் .. .. .. | 3·26 |

### தென் ஆற்காடு மாவட்டம்.

| | | |
|---|---|---|
| 1 | " டான்சி " தச்சு-கருமார் வேலைப் பட்டறை, கடலூர் .. | 4·80 |
| 2 | " டான்சி " மட்பாண்டத் தயாரிப்பு நிலையம், விருத்தாசலம் | 34·83 |
| 3 | " டான்சி " மெருகிட்ட குழாய்த் தயாரிப்புச் சாலை, விருத்தாசலம். | 8·09 |
| 4 | மட்பாண்டத் தொழில் வேலைப்பாடமைந்த மட்பாண்டப் பயிற்சிப்பள்ளி, விருத்தாசலம். | 8·21 |
| 5 | தொழிற் பேட்டை, விருத்தாசலம் .. .. .. .. | 32·78 |

[1971 ஜுன் 30

| தொடர் எண். (1) | சிறு தொழில்கள். (2) | திட்டச் செலவு. (3) (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|
| | **தென் ஆற்காடு மாவட்டம்—தொடர்ச்சி** | |
| 6 | " டான்சி " பொறியியல் பட்டறை, விழுப்புரம் | 5·49 |
| 7 | நின்று எரியும் கரி தயாரிப்புப் பிரிவு, வடலூர் | 3·86 |
| 8 | துணைத் தொழிற் பேட்டை, வடலூர் | 3·84 |
| 9 | தொழிற் பேட்டை, கடலூர் | 6·01 |
| 10 | இரசாயன சுண்ணாம்புப் பிரிவு, மரக்காணம் | 1·50 |
| 11 | மட்பாண்டத் தொழில் பணி நிலையம், விருத்தாசலம் | 12·39 |
| | **செங்கற்பட்டு மாவட்டம்.** | |
| 1 | " டான்சி " தோல் பணிப் பிரிவு, பல்லாவரம் | 1·59 |
| 2 | தொழிற் பேட்டை, சீர் செய்த மனைகள், அம்பத்தூர் | 4,18·00 |
| 3 | " டான்சி " பொறியியல் பட்டறை, காஞ்சீபுரம் | 5·35 |
| 4 | " டான்சி " கட்டுமானப் பொருள்கள் பட்டறை, அம்பத்தூர் | 29·25 |
| 5 | பொதுக் குத்தகைப் பட்டறை, அம்பத்தூர் | 5·71 |
| 6 | " டான்சி " கருவி அறைப் பட்டறை, அம்பத்தூர் | 11·30 |
| 7 | தோல் பொருள் தயாரிப்புத் தொழிற் பேட்டை, மாதவரம் (விரிவுத் திட்டம் உட்பட). | 22·14 |
| 8 | " டான்சி " தோல் தொழில்கள் நிலையம், மாதவரம் | 3·21 |
| 9 | சீர் செய்த மனைகள், திருவள்ளூர் | 2,01·50 |
| 10 | தொழிற் பேட்டை, காஞ்சீபுரம் | 6·15 |
| 11 | மின்சாரக் கருவிகள் தனித் தொழிற்பேட்டை, திருவள்ளூர் | 23·17 |
| 12 | மருந்து, மருந்து கலவைத் தொழிற் பேட்டை | 15·18 |
| 13 | பொது மின் சோதனை ஆய்வுக்கூடம், காக்கலூர் | 11·14 |
| 14 | தொழில் நுட்பத் தகவல் பிரிவு, அம்பத்தூர் | 3·50 |
| | **வட ஆற்காடு மாவட்டம்.** | |
| 1 | " டான்சி " கட்டுமானப் பட்டறை, வேலூர் | 7·30 |
| 2 | " டான்சி " தோல் பதனிடும் பிரிவு, விண்ணமங்கலம் | 14·83 |
| 3 | " டான்சி " வார்ப்படச் சாலை, காட்பாடி | 2·45 |
| 4 | தொழிற் பேட்டை, காட்பாடி | 16·28 |
| 5 | தொழிற் பேட்டை, அரக்கோணம் | 13·69 |
| 6 | " டான்சி " பொறியியல் பட்டறை, திருவண்ணாமலை | 5·90 |
| 7 | தச்சு-கருமான் வேலைப் பிரிவு, அரக்கோணம் | 3·48 |
| 8 | சீர்செய்த மனைகள், இராணிப்பேட்டை | 35·43 |
| 9 | சோடியம் டை-குரோமேட் உற்பத்திப் பிரிவு, வாலாஜா பேட்டை. | 7·55 |
| 10 | தொழில் நுட்பத் தகவல் பிரிவு, காட்பாடி (செங்கல்பட்டு மாவட்ட வரிசையில் 14-வது எண்ணில் உள்ளது.) | |
| | **சேலம் மாவட்டம்.** | |
| 1 | " டான்சி " கட்டுமான மின் மூலாம் பூசும் பிரிவு, மேட்டூர் அணை. | 9·73 |
| 2 | " டான்சி " பொறியியல் தச்சுப் பணிகள் பிரிவு, சேலம் | 12·53 |
| 3 | " டான்சி " படிகக்கல் பொடி செய்யும் சாலை, சேலம் | 3·85 |



1971 ஜுன் 30]

| தொடர் எண். (1) | சிறு தொழில்கள். (2) | திட்டச் செலவு. (3) (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|
| | **சேலம் மாவட்டம்—தொடர்ச்சி.** | |
| 4 | தொழிற் பேட்டை, சேலம் | 8·59 |
| 5 | " டான்சி " பொறியியல் பட்டறை, நாமக்கல் | 5·49 |
| 6 | " டான்சி " பொறியியல் பட்டறை, ஓமலூர் | 5·35 |
| 7 | தொழிற் பேட்டை, மேட்டூர் | 6·15 |
| 8 | சீர் செய்த மனைகள், மேட்டூர் | 31·00 |
| 9 | தொழிற் பேட்டை, நாமக்கல் | 6·22 |
| | **தர்மபுரி மாவட்டம்.** | |
| 1 | " டான்சி " தச்சுப் பட்டறை, கிருஷ்ணகிரி | 0·77 |
| 2 | " டான்சி " பொறியியல் பட்டறை, கிருஷ்ணகிரி | 3·73 |
| 3 | தொழிற் பேட்டை, ஓசூர் | 6·01 |
| 4 | தொழிற் பேட்டை, கிருஷ்ணகிரி | 9·69 |
| | **கோயம்புத்தூர் மாவட்டம்.** | |
| 1 | " டான்சி " மரவேலைப் பிரிவு, பொள்ளாச்சி | 5·73 |
| 2 | " டான்சி " கருவி அறைப் பட்டறை, ஈரோடு | 5·36 |
| 3 | மரை ஆணிகள், திருகு மரைகள் தயாரிக்கும் பிரிவு, ஈரோடு. | 1·72 |
| 4 | தொழிற் பேட்டை, ஈரோடு | 11·25 |
| 5 | கருவி அறை உலையில் வைத்து சூடுறுத்தி அடித்து உரு வாக்கும் தொழிற் பட்டறை, கோயம்புத்தூர். | 17·07 |
| 6 | மூலப் பொருள்கள் கிடங்கு, கோயம்புத்தூர் | 2·16 |
| 7 | பொதுக் குத்தகைப் பட்டறை, கோயம்புத்தூர் | 7·52 |
| 8 | " டான்சி " பொறியியல் பட்டறை, திருப்பூர் | 5·49 |
| | **நீலகிரி மாவட்டம்** | |
| | துணைத்தொழிற் பேட்டை, உதகமண்டலம் | 8·73 |
| | **சென்னை மாவட்டம்.** | |
| 1 | " டான்சி " காலணிப் பிரிவு, பெரம்பூர் | 6·69 |
| 2 | " டான்சி " திருவல்லிக்கேணி காலணிப் பிரிவு, பெரம்பூர் | 1·17 |
| 3 | " டான்சி " பொறியியல் பட்டறை, சென்னை | 12·94 |
| 4 | " டான்சி " எனாமல் பூசப்பட்ட கம்பிகள் பிரிவு, கிண்டி | 17·71 |
| 5 | " டான்சி " மரவேலைப் பிரிவு, கிண்டி | 7·42 |
| 6 | " டான்சி " கருவி அறைப் பட்டறை, கிண்டி | 25·64 |
| 7 | " டான்சி " இயந்திரப் பட்டறை, கிண்டி | 2·68 |
| 8 | " டான்சி " உலையில் வைத்து சூடுறுத்தி அடித்து உருவாக் கும் தொழிற் பட்டறை, கிண்டி. | 11·61 |
| 9 | பணிக் கழகம், கிண்டி | 4·48 |

| தொடர் எண். (1) | சிறு தொழில்கள். (2) | திட்டச் செலவு. (3) (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|
| | **சென்னை மாவட்டம்**—தொடர்ச்சி. | |
| 10 | "டான்சி" அறிவியல் சம்பந்தப்பட்ட கண்ணாடி தொழிற் சாலை, கிண்டி. | 10·66 |
| 11 | "டான்சி" அமுக்க வகையில் சூடுறுத்தி, அச்சு வார்ப் படப் பிரிவு, கிண்டி. | 9·69 |
| 12 | "டான்சி" வார்ப்படச் சாலை, கிண்டி .. .. .. | 16·92 |
| 13 | தொழில் நுட்பத் தகவல் பிரிவு, கிண்டி .. .. .. | 3·51 |
| 14 | தொழிற் பேட்டை, கிண்டி .. .. .. .. .. | 133·66 |
| 15 | அச்சுக்கருவி வடிவு அமைப்புப் பிரிவு, கிண்டி .. .. | 7·39 |
| 16 | தொழில் நுட்பப் பயிற்சி நிலையம், கிண்டி .. .. | 20·50 |
| 17 | சீர்படுத்திய மனைகள், கிண்டி .. .. .. .. | 53·48 |
| 18 | "டான்சி" மின்சாரப் பொருள்கள் பிரிவு, கிண்டி .. | 7·89 |
| 19 | யந்திர-உலோக ஆய்வுக்கூடம் .. .. .. .. | 20·73 |
| 20 | மின் மருத்துவக் கருவிகள் பணிமனை—செப்பனிடும் மத்தியப் பிரிவு, கிண்டி. | 7·56 |
| 21 | மின் அணுத் தொழில்களுக்கான தொழிற் பேட்டை, அடையாறு. | 40·26 |
| 22 | கருவிகள் தயாரிப்புக்கான தொழிற் பேட்டை, அடையாறு | 16·18 |
| 23 | காடிப் பொருள் உற்பத்திப் பிரிவு, கிண்டி .. .. | 4·46 |
| 24 | எலுமிச்சைப் புல் எண்ணெயிலிருந்து மின் துகள்கள் தயாரிப்புப் பிரிவு, கிண்டி. | 0·27 |
| 25 | "டான்சி" அச்சகம், கிண்டி .. .. .. .. | 0·69 |
| 26 | "டான்சி" தகடு அழுத்தும் பிரிவு கிண்டி .. .. | 8·43 |
| 27 | அறிவியல் சம்பந்தப்பட்ட கண்ணாடிப் பொருள் தயாரிப்பு மத்தியப் பயிற்சிப் பிரிவு, கிண்டி. | 4·60 |

குறிப்பு.—டான்சி பிரிவுகள் சென்னையிலுள்ள தமிழ் நாடு சிறு தொழில்கள் கழகக் கட்டுப்பாட்டில் உள்ளன.

## இணைப்பு XIII.

### கைப்பணி நிலையங்களின் பட்டியல்.

| தொடர் எண். (1) | திட்டத்தின்/பிரிவின் பெயர். (2) | திட்டச் செலவு. (3) (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|
| | **சென்னை மாவட்டம்.** | |
| 1 | கலை-கைப்பணிக் கல்லூரி சென்னை .. .. .. | 4·73 |
| 2 | வடிவமைப்பு செய்முறை விளக்க நிலையம், எழும்பூர் .. | 4 00 |
| 3 | பளப்பளப்பான களிமண் பொம்மைகள் தயாரிப்பு நிலையம், பெரம்பூர். | 1 36 |



| தொடர் எண். (1) | சிறு தொழில்கள். (2) | திட்டச் செலவு. (3) (ரூபாய் இலட்சத்தில்). |
|---|---|---|
| | **சென்னை மாவட்டம்**—தொடர்ச்சி. | |
| 4 | விற்பனைப் பெரு நிலையம், சென்னை .. .. .. | 0·25 |
| 5 | கண்ணாடி விளையாட்டுச் சாமான்கள் தயாரிப்புப் பயிற்சி நிலையம், சென்னை. | 0 10 |
| 6 | கைப்பணிப் பொருள்கள் நிலையம் .. .. .. | 1·40 |
| | **செங்கற்பட்டு மாவட்டம்.** | |
| 1 | சிற்பப் பயிற்சி நிலையம், மாமல்லபுரம் .. .. .. | 0 63 |
| 2 | சித்திர வேலைப்பாடுகள் கொண்ட வெண்கலப் பொருட்கள் தயாரிப்புப் பயிற்சி நிலையம், காஞ்சிபுரம். | 0·69 |
| 3 | விற்பனைப் பெரு நிலையம், மாமல்லபுரம் .. .. | 1·56 |
| 4 | கைத்தொழில் காகிதப் பிரிவு, மாமண்டூர் .. .. | 0 61 |
| | **தென்ஆற்காடு மாவட்டம்.** | |
| | விற்பனை பெரு நிலையம், நெய்வேலி .. .. .. | 0·98 |
| | **தஞ்சாவூர் மாவட்டம்.** | |
| 1 | சித்திர வேலைப்பாடுகள் கொண்ட உலோகப் பொருட்கள் தயாரிப்பு நிலையம், சுவாமிமலை. | 0·37 |
| 2 | வெண்கல உலோகப் பொருட்கள் தயாரிப்புப் பயிற்சி பணி நிலையம், நாச்சியார்கோவில். | 0·49 |
| 3 | வெண்கல விக்கிரகங்கள் தயாரிப்பு நிலையம், சுவாமிமலை | 0·39 |
| 4 | விற்பனை கொள்முதல் கிடங்கு, தஞ்சாவூர் .. .. | 1·84 |
| 5 | கலை-கைப்பணிப் பள்ளி, கும்பகோணம் .. .. | 6·26 |
| | **திருச்சிராப்பள்ளி மாவட்டம்.** | |
| 1 | கம்பளங்கள், விரிப்புகள் தயாரிப்புப் பயிற்சி நிலையம் கோலக்குடி. | 0·41 |
| 2 | விற்பனை கொள்முதல் கிடங்கு, திருச்சிராப்பள்ளி .. | 1·01 |
| 3 | பனை ஓலை முதலிய பொருட்கள் தயாரிப்புப் பயிற்சி நிலையம் புதுக்கோட்டை. | 0·56 |
| | **மதுரை மாவட்டம்.** | |
| 1 | வேலைப்பாடமைந்த பித்தளைப் பொருள் தயாரிப்புப் பிரிவு நிலையம், மதுரை. | 0·87 |
| 2 | விற்பனை பெரு நிலையம், திண்டுக்கல் .. .. .. | 0·08 |
| 3 | கண்ணாடிப் பொருட்கள் தயாரிப்புப் பயிற்சி நிலையம், மதுரை. | 2·07 |
| 4 | வேலைப்பாடமைந்த கண்ணாடிப் பொருள்கள் தயாரிப்புப் பயிற்சி நிலையம், மதுரை. | 1·45 |

[1961 ஜூன் 1

| தொடர் எண். (1) | திட்டத்தின்/பிரிவின் பெயர். (2) | திட்டச் செலவு. (3) (ரூபாய் இலட்சத்தில்). |
|---|---|---|
| | **திருநெல்வேலி மாவட்டம்.** | |
| 1 | வெண்கலப் பொருட்கள் தயாரிப்பு நிலையம், வாகைக் குளம். | 1·85 |
| 2 | சணல் நாரைக்கொண்டு விரிப்புகள், இரட்டுகள் நெய்வதற்கான பயிற்சி நிலையம், கோபாலசமுத்திரம். | 1·40 |
| 3 | கற்றாழைநார் பொருள் தயாரிப்புப் பயிற்சி நிலையம், நெடுவயல். | 1·26 |
| 4 | அரக்குப் பூசிய பொம்மை தயாரிப்பு பயிற்சி நிலையம், சேரன்மாதேவி. | 0·28 |
| 5 | விற்பனை கொள்முதல் கிடங்கு, திருநெல்வேலி .. | 1·84 |
| 6 | சணல் நாரைக்கொண்டு விரிப்புகள், இரட்டுகள் நெய்வதற்கான பயிற்சி நிலையம், ஆயக்குடி. | 0·84 |
| | **கன்னியாகுமரி மாவட்டம்.** | |
| | கோயில் தேர்கள் (ரதங்கள்) செய்வதற்கான பயிற்சி நிலையம், நாகர்கோயில். | 0·48 |
| | **வட ஆற்காடு மாவட்டம்.** | |
| | கம்பளி உற்பத்தி நிலையம் விண்ணமங்கலம் .. .. | 13·10 |
| | **சேலம் மாவட்டம்.** | |
| 1 | சித்திர வேலைப்பாடுகள் கொண்ட உலோகப் பொருட்கள் தயாரிப்புப் பயிற்சி நிலையம், சேலம். | 0·56 |
| 2 | விற்பனை கொள்முதல் கிடங்கு. சேலம்.. .. | 1·01 |
| 3 | மட்பாண்டம் செய்வதற்காக மத்திய கிராமப் பணிகள் நிலையம். | 1·27 |
| | **தருமபுரி மாவட்டம்.** | |
| 1 | கருங்கல் மெருகிடு நிலையம், கிருஷ்ணகிரி .. .. | 0·56 |
| 2 | தருமபுரி மாவட்டத்தில் கம்பளிகள் தயாரிப்பதற்காகப் பயிற்சி—தயாப்பு நிலையம். | 0·72 |
| | **கோயம்புத்தூர் மாவட்டம்.** | |
| 1 | விற்பனை கொள்முதல் கிடங்கு, கோயம்புத்தூர் .. | 1·1 |
| 2 | அறிவியல் சம்பந்தப்பட்ட கண்ணாடி, உபகரணங்கள் தயாரிப்பு—பயிற்சி நிலையம், கோயம்புத்தூர். .. | 1·57 |
| | **இராமநாதபுரம் மாவட்டம்.** | |
| | பனை ஓலை உற்பத்திப் பொருள் பயிற்சி நிலையம், இராமேஸ்வரம். | 0·35 |



1970 ஜூன் 30]

# இணைப்பு XIV.

## பட்டுப் புழு வளர்ப்புத் திட்டத்தின் பட்டியல்.

| தொடர் எண். (1) | திட்டத்தின்/பிரிவின் பெயர். (2) | திட்டச் செலவு. (3) (ரூபாய் இலட்சத்தில்). |
|---|---|---|
| | **திருநெல்வேலி மாவட்டம்.** | |
| 1 | செய்முறை விளக்கப் பட்டுப் புழு வளர்ப்புப் பண்ணை, தென்காசி. | 1·47 |
| 2 | அரசு பட்டுப் புழு வளர்ப்புப் பண்ணை, செங்கோட்டை | 2·15 |
| | **தருமபுரி மாவட்டம்.** | |
| 3 | சௌக்கி பட்டுப் புழு வளர்ப்புப் பண்ணை, ஓசூர் .. | 0·82 |
| 4 | முசுக்கட்டை ஒட்டுச் செடி வளர்ப்புப் பண்ணை, ஓசூர் .. | 1·75 |
| 5 | பட்டுப் புழு வளர்ப்புப் பிரிவுகள், வேப்பனப்பள்ளி, ராயக்கோட்டை பிர்காக்கள். | 0·23 |
| 6 | பட்டு நூல் எடுக்கும் அரசு நிலையம், ஓசூர் .. .. | 3·06 |
| 7 | பட்டுப் புழு கலப்பின அரசுக் களஞ்சியம், பேரிகை | 2·15 |
| 8 | பட்டுப் புழு வளர்ப்போருக்கு ஓசூர், பாப்பாரப்பட்டி ஆகிய இடங்களில் பட்டுப் புழு விற்பனை வசதி. | 1·40 |
| 9 | தேன்கனிக்கோட்டையில் அடிப்படை பட்டுப் புழு வளர்ப்புப் பண்ணையும், களஞ்சியமும். | 0·58 |
| 10 | அரசு பட்டு வளர்ப்புப் பண்ணை, ஓசூர் .. .. | 4·74 |
| 11 | பட்டுப் பரிசோதனை ஆய்வுக்கூடம், ஓசூர் .. .. | 0·15 |
| 12 | பட்டு நூல் முறுக்கும் பிரிவு, ஓசூர் .. .. | 1·50 |
| 13 | பெரிய அளவிலான பட்டுப் பண்ணை, கோலட்டி .. | 2-47 |
| | **சேலம் மாவட்டம்.** | |
| 14 | அரசு பட்டு வளர்ப்புப் பண்ணை, ஏற்காடு .. .. | 0·80 |
| 15 | செய்முறை விளக்கப் பட்டுப் புழு வளர்ப்புப் பண்ணை, கொல்லிமலை. | 1·41 |
| | **கோயம்புத்தூர் மாவட்டம்.** | |
| 16 | சௌக்கி பட்டுப் புழு வளர்ப்புப் பிரிவு தாளவாடி | 0·27 |
| 17 | முசுக்கட்டை ஒட்டு வளர்ப்புப் பெரும் பண்ணை, தாளவாடி | 0·55 |
| 18 | பெரிய அளவிலான பட்டுப் புழு வளர்ப்புப் பண்ணை, மதஹள்ளி. | 1·77 |
| 19 | செய்முறை விளக்கப் பட்டுப் புழு வளர்ப்புப் பண்ணை, ஹாசனூர். | 0·20 |
| 20 | பொது பட்டுப் புழு வளர்ப்பு நிலையம், ஹாசனூர் .. | 0·20 |
| 21 | சௌக்கி பட்டுப் புழு வளர்ப்புப் பிரிவு ஜெர்மலம் .. | 0·47 |
| 22 | பட்டுப் புழு வளர்ப்புப் பண்ணையும் களஞ்சியமும், தாளவாடி. | 0·48 |
| | **நீலகிரி மாவட்டம்.** | |
| 23 | பிரச்சார நடவடிக்கைகள், மசினகுடி .. .. .. | 0·46 |
| 24 | அரசு கெட்டி நரம்பு தயாரிக்கும் பிரிவு குன்னூர் .. | 4·00 |
| 25 | செய்முறை விளக்கப் பட்டுப் புழு வளர்ப்புப் பண்ணை, மசினகுடி. | 2·33 |
| 26 | பெரிய அளவிலான பட்டு வளர்ப்புப் பண்ணை, மசினகுடி. | 0·40 |
| 27 | செய்முறை விளக்கப் பட்டுப் புழு வளர்ப்புப் பண்ணை, எருமேடு. | 0·20 |
| 28 | ஆராய்ச்சி வளர்ச்சி நிலையம், குன்னூர் .. .. | 0·79 |

# இணைப்பு XV.

## மாநிலத்திலுள்ள தொழில் கூட்டுறவுச் சங்கங்களின் மாவட்ட வாரியாகக் காட்டும் புள்ளி விவர அறிக்கை.

### சிறு தொழில்கள்.

| (1) | சென்னை. (2) | செங்கற்பட்டு. (3) | வட ஆற்காடு. (4) | தென் ஆற்காடு. (5) | தஞ்சாவூர். (6) | திருச்சிராப்பள்ளி. (7) | மதுரை. (8) | இராமநாதபுரம்: இராமநாதபுரம். (9) | இராமநாதபுரம்: சிவகங்கை. (10) | திருநெல்வேலி. (11) | கன்னியாகுமரி. (12) | கோயம்புத்தூர். (13) | நீலகிரி. (14) | சேலம். (15) | தர்மபுரி. (16) | மொத்தம். (17) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 மாநில சங்கம் .. | 1 | .. | .. | .. | .. | 1 | .. | 1 | .. | .. | .. | .. | .. | .. | .. | 3 |
| 2 தொழிற்பேட்டை | 1 | .. | .. | .. | .. | .. | .. | 1 | .. | 1 | .. | 1 | .. | 1 | .. | 5 |
| 3 முன்னாள் படையினர் சங்கம் | .. | 1 | 1 | .. | 1 | .. | .. | .. | .. | 1 | .. | .. | .. | .. | .. | 4 |
| 4 தீப்பெட்டித் தொழில் | .. | 1 | 1 | .. | 1 | .. | 1 | 5 | 2 | 4 | .. | .. | .. | .. | | 15 |
| 5 செங்கல், ஓடு .. | | 3 | .. | 1 | 1 | 2 | 2 | 1 | .. | 2 | .. | .. | . | .. | .. | 12 |
| 6 தோல் தொழில் | 1 | .. | 1 | .. | 1 | 1 | 1 | .. | .. | 1 | .. | 1 | 1 | 1 | | 9 |
| 7 உலோகத் தொழிலாளர் சங்கம் | .. | 1 | 1 | 2 | 2 | 2 | 4 | 2 | 3 | 3 | .. | 1 | .. | 3 | .. | 24 |
| 8 பஞ்சலோகம் | .. | .. | .. | .. | .. | 1 | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | 1 |
| 9 தச்சுத் தொழிலாளர் | .. | 3 | 1 | 3 | 3 | 4 | 2 | 2 | 2 | 1 | 1 | 4 | .. | 2 | .. | 28 |
| 10 கொல்லுப் பட்டறைத் தொழில் | .. | .. | 2 | 1 | .. | 2 | 1 | 3 | 1 | 1 | .. | 2 | .. | 4 | .. | 17 |
| 11 தேயிலை தொழிற்சாலைகள் | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | 11 | .. | .. | 11 |



# இணைப்பு XV—தொடர்ச்சி.

## மாநிலத்திலுள்ள தொழில் கூட்டுறவுச் சங்கங்களின் மாவட்ட வாரியாகக் காட்டும் புள்ளி விவர அறிக்கை—தொடர்ச்சி.

### சிறு தொழில்கள்—தொடர்ச்சி.

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) | (12) | (13) | (14) | (15) | (16) | (17) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 12 சிறப்புவகை சங்கங்கள் | 3 | 3 | .. | .. | 1 | 1 | 2 | 1 | 1 | .. | .. | 3 | 1 | . | .. | 16 |
| 13 பீடி .. .. .. | 1 | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | 1 | .. | .. | .. | 2 |
| 14 பெண்கள் .. .. | 17 | 6 | 1 | 3 | 1 | 2 | 1 | 1 | .. | 1 | 4 | 2 | 3 | 1 | .. | 43 |
| 15 தொழில் கூட்டுறவு வங்கி | 1 | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | 1 |
| கைப்பணிகள்— | | | | | | | | | | | | | | | | |
| 1 பாய் முடைவோர் சங்கம் | .. | 4 | 2 | 3 | 7 | 5 | 4 | 1 | .. | 12 | 3 | 5 | .. | 7 | 2 | 55 |
| 2 வெண்கலம் .. | .. | 1 | .. | 1 | .. | .. | .. | .. | 1 | 1 | — | .. | .. | .. | .. | 4 |
| 3 சரிகை, பூ வேலைப்பாடு | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | 1 | .. | .. | .. | .. | 1 |
| 4 பிரம்பு, மூங்கில் கூடை | .. | .. | 1 | 1 | 1 | 3 | 1 | .. | .. | 6 | 2 | 6 | 1 | 2 | .. | 24 |
| 5 விலை மதிப்புள்ள கற்கள் | .. | .. | .. | .. | .. | 2 | .. | .. | .. | .. | .. | 1 | .. | .. | .. | 3 |
| 6 இசைக் கருவிகள் | .. | .. | .. | .. | 1 | .. | .. | .. | .. | .. | .. | .. | 6 | .. | .. | 1 |
| 7 சிற்பம் செதுக்குதல் .. | .. | .. | 1 | .. | .. | 1 | .. | .. | .. | .. | 1 | .. | .. | 1 | .. | |
| 8 கம்பள நெசவு .. | .. | .. | .. | 1 | .. | 1 | .. | .. | .. | 1 | .. | 1 | .. | .. | .. | |
| 9 நார் .. .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| 10 மட்பாண்டத் தொழில் | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| 11 விளையாட்டுப் பொம்மைகள் | 1 | .. | .. | 1 | 1 | .. | .. | .. | .. | 1 | 1 | .. | .. | .. | .. | 5 |
| 12 நாடா, நூல் .. | .. | .. | .. | .. | 1 | .. | 1 | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | 2 |
| 13 பனை ஓலை .. .. | .. | 1 | 1 | .. | 1 | .. | .. | 4 | .. | 1 | .. | .. | .. | .. | .. | 8 |
| 14 மாநிலச் சங்கம் .. | 1 | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | 1 |
| 15 கயிற்றுத் தொழில் | .. | 1 | 1 | 1 | .. | .. | .. | 2 | .. | .. | 8 | 3 | .. | 8 | 1 | 25 |
| 16 பட்டுப் புழு வளர்ப்பு | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | 1 | .. | .. | .. | 1 |
| 17 பல்வகை .. .. | 1 | .. | 1 | .. | 2 | .. | 1 | 2 | 1 | .. | .. | .. | .. | 1 | .. | ) |
| மொத்தம் .. | 28 | 4 | 16 | 17 | 26 | 28 | 21 | 26 | 10 | 7 | 22 | 32 | 17 | 31 | 3 | 332 |

# இணைப்பு XVI

## ஐந்தாண்டு வேலைத் திட்டங்களின்கீழ் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களின் முன்னேற்றம்.

| தொடரிலக்கமும், திட்டத்தின் பெயரும். | நான்காவது திட்ட நிதி ஒதுக்கீடு. | 1969–70 கணக்குகள். | 1970–71 கணக்குகள். | நான்காவது திட்டத்தின் எய்தின சாதனை 1969–70 | 1970–71 |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| | | | (ரூபாய் லட்சத்தில்.) | | |
| 1 கூட்டுறவு-தனியார் தொழிற்பேட்டைகள் .. .. | 34·00 | .. | .. | .. | .. |
| 2 சிறு தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் .. .. | 78·38 | 2·36 | 16·37 | 5 | 5 |
| 3 கைப்பணி தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் .. .. | 12·06 | 0·49 | 2·69 | 1 | 7 |
| 4 கயிற்றுத் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் .. .. | 8·81 | 0·12 | 0·52 | 1 | 2 |
| 5 பட்டுப்புழு வளர்ப்புத் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் | .. | .. | .. | .. | .. |
| மொத்தம் .. | 133·25 | 2·97 | 19·58 | 7 | 14 |



# இணைப்பு XVII

## ன்னை-2, அண்ணா சாலையிலுள்ள தமிழ்நாட்டுச் சிறு தொழில் கூட்டுறவுக் கழகத்தின்கீழ் உள்ள பிரிவுகளின் உற்பத்தி அளவின் மதிப்பைக் காட்டும் விவர அறிக்கை.

| தொடர் எண்ணும் பிரிவின் பெயரும். | 1969–70-ல் உற்பத்தி. | செப்டம்பர் 1970 வரையில் உற்பத்தி. | எய்தக் கருதியுள்ள எஞ்சிய உற்பத்தி. | 1970–71-ல் எதிர்பார்க்கப்படும் மொத்த உற்பத்தி. | 1971–72 குறிக்கோள் அளவு. |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| | | | (ரூபாய் லட்சத்தில்.) | | |
| 1 டான்சி கட்டுமானப் பணி, ராஜபாளையம் .. | 6·96 | 2·69 | 7·31 | 10·00 | 10·00 |
| 2 டான்சி கட்டுமானப் பணி, வேலூர் .. .. | 17·42 | 8·33 | 13·67 | 22·00 | 20·00 |
| 3 டான்சி பொறியியல் பட்டறை, கரூர் .. .. .. | 4·38 | 2·95 | 4·05 | 7·00 | 7·00 |
| 4 டான்சி பொறியியல் பட்டறை, திருப்பூர் .. .. | 5·90 | 3·57 | 7·43 | 11·00 | 12·00 |
| 5 டான்சி பொறியியல் பட்டறை, நாமக்கல் .. .. | 14·95 | 6·44 | 10·56 | 17·00 | 18·00 |
| 6 டான்சி பொறியியல் பட்டறை, தூத்துக்குடி .. .. | 5·15 | 2·41 | 5·59 | 8·00 | 8·00 |
| 7 டான்சி பொறியியல் பட்டறை, மாயூரம் .. .. | 3·32 | 2·15 | 3·85 | 6·00 | 6·00 |
| 8 டான்சி பொறியியல் பட்டறை, விழுப்புரம் .. .. | 9·14 | 5·61 | 7·39 | 13·00 | 13·00 |
| 9 டான்சி பொறியியல் பட்டறை, திருவண்ணாமலை .. | 5·95 | 3·52 | 6·48 | 10·00 | 10·00 |
| 10 டான்சி பொறியியல் பட்டறை, நாகர்கோவில் .. | 3·75 | 1·31 | 3·69 | 5·00 | 5·00 |
| 11 டான்சி பொறியியல் பட்டறை, காஞ்சீபுரம் .. .. | 4·56 | 2·14 | 4·86 | 7·00 | 7·00 |
| 12 டான்சி பொறியியல் பட்டறை, ஓமலூர் .. .. | 8·41 | 3·03 | 5·97 | 9·00 | 8·00 |
| 13 டான்சி பொறியியல் பட்டறை, சென்னை .. .. | 7·45 | 3·07 | 4·93 | 8·00 | 8·00 |

| தொடர் எண்ணும் பிரிவின் பெயரும் (1) | 1969--70-ல் உற்பத்தி (2) | செப்டம்பர் 1970 வரையில் உற்பத்தி (3) | எய்தக் கருதியுள்ள எஞ்சிய உற்பத்தி (4) | 1970--71-ல் எதிர்பார்க்கப்படும் மொத்த உற்பத்தி (5) | 1971--72 குறிக்கோள் அளவு (6) |
|---|---|---|---|---|---|
| 14 டான்சி கட்டுமான [illegible], பழனி .. .. .. | 10·09 | 4·18 | 7·82 | 12·00 | 12·00 |
| 15 உலோகக் [illegible] அழுத்தப் பட்டறை, கிண்டி .. .. | 5·59 | 1·71 | 8·29 | 10·00 | 10·00 |
| 16 டான்சி கருவி அறைப் பட்டறை, கிண்டி .. .. | 4·09 | 2·60 | 5·40 | 8·00 | 8·00 |
| 17 டான்சி கருவி அறைப் பட்டறை, ஈரோடு .. .. | 10·52 | 4·17 | 9·85 | 14·00 | 14·00 |
| 18 டான்சி கருவி அறைப் பட்டறை, திருச்சிராப்பள்ளி .. | 3·90 | 2·87 | 4·63 | 7·50 | 7·50 |
| 19 டான்சி கருவி அறைப் பட்டறை, விருதுநகர் .. | 6·26 | 3·73 | 3·77 | 7·50 | 7·50 |
| 20 டான்சி கருவி பொறியியல் பட்டறை, மதுரை .. | 6·67 | 3·01 | 5·49 | 8·50 | 8·50 |
| 21 டான்சி கருவி அறை அச்சு வார்ப்புப் பட்டறை கோயம்புத்தூர். .. | 7·12 | 3·48 | 6·52 | 10·00 | 10·00 |
| 22 டான்சி கருவி அறைப் பட்டறை, அம்பத்தூர் .. | 2·22 | 1·30 | 3·70 | 5·00 | 5·00 |
| 23 டான்சி இயந்திரப் பட்டறை, கிண்டி .. .. | 5·62 | 4·38 | 5·62 | 10·00 | 10·00 |
| 24 டான்சி அச்சு வார்ப்புப் பிரிவு, கிண்டி .. .. | 5·40 | 1·96 | 4·64 | 6·60 | 6·60 |
| 25 டான்சி அழுத்த வார்ப்பு அச்சுப் பிரிவு, கிண்டி .. | 14·82 | 9·35 | 6·65 | 16·00 | 16·00 |
| 26 டான்சி பொறியியல் மிதிவண்டிப் பகுதிகளை இணைக்கும் பிரிவு, தஞ்சாவூர். | 4·98 | 2·80 | 5·20 | 8·00 | 8·00 |
| 27 டான்சி பொறியியல் பிரிவு, கிருஷ்ணகிரி .. .. | 4·42 | 1·51 | 4·49 | 6·00 | 6·00 |



| | | | | | |
|---|---|---|---|---|---|
| 28 டான்சி மர வேலைப் பிரிவு, கிண்டி .. .. .. | 13·32 | 5·96 | 14·04 | 20·00 | 20·00 |
| 29 டான்சி தச்சு-கொல்லுப் பட்டறை, கடலூர் .. .. | 7·44 | 3·77 | 6·23 | 6·23 | 10·00 |
| 30 டான்சி தச்சு-கொல்லுப் பட்டறை, மன்னார்குடி .. | 6·98 | 2·75 | 6·75 | 9·50 | 10·00 |
| 31 டான்சி தச்சு-கொல்லுப் பட்டறை, பேட்டை .. | 10·72 | 3·27 | 9·73 | 13·00 | 13·00 |
| 32 டான்சி தச்சு வேலைப் பட்டறை, பத்தமடை .. .. | 4·33 | 1·38 | 3·12 | 4·50 | 5·00 |
| 33 டான்சி தச்சு வேலைப் பட்டறை, கிருஷ்ணகிரி .. .. | 4·41 | 1·59 | 3·41 | 5·00 | 5·00 |
| 34 டான்சி மரவேலை-மரம் அறுக்கும் பிரிவு, பொள்ளாச்சி | 9·31 | 5·87 | 6·63 | 12·50 | 12·50 |
| 35 டான்சி மரம் அறுக்கும் பிரிவு, நாகர்கோயில் .. | 10·74 | 5·02 | 5·98 | 11·00 | 11·00 |
| 36 டான்சி தோல பொருள்கள் தயாரிப்புப் பிரிவு, பெரம்பூர் | 7·74 | 4·74 | 7·26 | 12·00 | 12·00 |
| 37 டான்சி தோல் பொருள்கள் தயாரிப்புப் பிரிவு, திருவல்லிக்கேணி. | 2·34 | 0·71 | 2·29 | 3·00 | 3·00 |
| 38 டான்சி தயாரிப்புப் பிரிவு, பல்லாவரம் .. .. | 3·39 | 0·62 | 3·38 | 4·00 | 4·00 |
| 39 டான்சி தோல் பொருள்கள் தயாரிப்புப் பிரிவு, மாதவரம். | 2·49 | 0·77 | 1·63 | 2·40 | 3·00 |
| 40 டான்சி தோல் பதனிடுதல், விண்ணமங்கலம் .. | 62·42 | 22·50 | 49·50 | 72·00 | 70·00 |
| 41 டான்சி அறிவியல் சம்பந்தப்பட்ட கண்ணாடிக் கருவிகள் தயாரிக்கும் தொழிற்சாலை, கிண்டி. | 8·58 | 2·77 | 7·23 | 10·00 | 10·00 |
| 42 படிக்கல் பொடி செய்யும் சாலை, சேலம் .. .. | 1·30 | 0·05 | 1·95 | 2·00 | 2·00 |
| 43 டான்சி மட்பாண்டத் தொழிற்சாலை, விருத்தாசலம் .. | 12·27 | 7·41 | 6·59 | 14·00 | 15·00 |
| 44 டான்சி மெருகிட்ட குழாய்த் தயாரிப்புத் தொழிற்சாலை, விருத்தாசலம். | 7·02 | 4·50 | 7·50 | 12·00 | 12·00 |
| 45 டான்சி கட்டுமானம்-மின்மூலாம் பூசும் பிரிவு, மேட்டூர் அணைக்கட்டு. | 101·58 | 30·71 | 69·29 | 100·00 | 100·00 |

## How to use the Index.

The index is arranged alphabetically. The Main Headings are printed from the margin and the sub-headings are indented from the main headings.

Under very Main Headings including various names, entries pertaining to proceedings other than Questions are indicated by printing immediately after the subject matter within brackets, e.g., (M) for Motion, (C. A.) for Calling Attention, (R) for Resolution, (St.) for Statement, etc. An entry without any such indication will mean that it pertains to a question, except in the case of Bills and Financial Business, the entry in which cases will be self-explanatory.

All the Bills are alphabetically arranged under the main heading 'Bill(s)'.

Various bodies like Committees, Councils, Boards, Corporations, etc., are consolidated under the said Main Headings. i.e., 'Committee(s)', 'Council(s)' 'Corporation(s)', etc.

Various Schools, Colleges, Conferences, Ports, Temples and similar other broad subjects are shown in alphabetical order under these very Main Headings.

All the Papers laid on the Table of the House are indexed only under the Main Heading "Papers Laid on the Table".

Rulings and Observations from the Chair are indexed under the Main Headings "Chair".

A list of abbreviations used in the Index is given below :--

| | |
|---|---|
| A.M./Ad. Motion ... | Adjournment Motion. |
| Ann. ... ... | Announcement. |
| B.O.H. ... ... | Business of the House. |
| C.A. ... ... | Calling Attention to a Matter of Urgent Public Importance. |
| C.A. St. ... ... | Calling Attention Statement. |
| Consid. ... ... | Consideration Stage of a Bill This stage includes;<br>(i) Motion to refer to Select/Joint Select Committee.<br>(ii) Amendment to refer to Select/Joint Select Committee.<br>(iii) Amendment to circulate. |

(iv) Motion to consider as reported by Select/Joint Select Committee.
(v) Amendment to recommit to Select/Joint Select Committee, etc.

| | |
|---|---|
| Consid. Cl. ... ... | Consideration of clauses of a Bill. |
| D.E.E. ... ... | Demands for Excess Expenditure. |
| Dis. S.D. ... | Discussion for Short Duration of an urgent matter of Administration. |
| D.S.G. ... ... | Demands for Supplementary Grants. |
| G.A. ... ... | Governor's Address. |
| G.D. | Governor's Address. |
| H.A.H. D.s/H.H.D. | Half-hour Discussion. |
| Int. ... ... | Introduction stage of a Bill. |
| L.A. ... ... | Legislative Assembly. |
| L.C. ... ... | Legislative Council. |
| M. ... ... | Motion. |
| P. M. ... ... | Privilege Motion. |
| R/Res. ... ... | Resolution. |
| St. ... ... | Statement. |

# INDEX TO TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY DEBATES.

**Second Session of the Fifth Legislative Assembly under the Constitution of India.**

*25th and 26th June* 1971 *and 28th June to 30th June* 1971.

VOLUME IV (Nos. 1 to 5).

## A


| | PAGES. |
|---|---|
| ABDUL JABBAR, THIRU V. M.— | |
| Budget (revised) 1971-72 ; G.D. ... ... | 124 |
| ALLOWANCES— | |
| House rent allowance, upgrading of Coimbatore belt areas as 'B' class City ... ... ... | 108 |
| ANANDANAYAKI, THIRUMATHI T. N.— | |
| Budget (revised) ,1971-72— | |
| G.D. ... ... ... ... ... ... | 129 |
| Voting: | |
| Industries ... ... ... ... ... | |
| Capital Outlay on Industrial Development ... | 421–425 |
| General Sales Tax (Second Amendment) Bill, 1971, consideration before a decision is taken on the additional taxation proposals in the Budget Speech (Point of Order) ... ... ... | 203, 205 |
| General Sales Tax (Second Amendment) Bill 1971 | 216–217 |
| Madurai City Municipal Corporation Bill, 1971 ... | 249,250, 251, 256, 257 |
| ANBAZHAGAN, THIRU K.— | |
| Budget (revised), 1971-72, G.D. ... ... | 66, 63, 74, 75 |
| Eye disease in Madras City and in some districts, prevalence in epidemic form (C.A. St.) ... ... | 29–30 |
| Insulin, non-availability and consequent hardship to diabetic patients (C.A. St.) ... ... ... | 31-32 |

| தொடர் எண்ணும் பிரிவின் பெயரும். (1) | 1969—70-ல் பகுதி. (2) | செப்டம்பர் 1970 வரையில் உற்பத்தி. (3) | எய்தக் கருதியுள்ள எஞ்சிய உற்பத்தி. (4) | 1970—71-ல் எதிர் பார்க்கப்படும் மொத்த உற்பத்தி. (5) | 1971—72 குறிக் கோள் அளவு. (6) |
|---|---|---|---|---|---|
| 46 டான்சி கட்டுமானப் பட்டறை, அம்பத்தூர் .. .. | 72·00 | 45·23 | 44·77 | 90·00 | 90·00 |
| 47 டான்சி பொறியியல் பட்டறை, மதுரை .. .. | 7·79 | 3·07 | 5·93 | 9·00 | 9·00 |
| 48 டான்சி பொறியியல்-தச்சு வேலைப்பிரிவு, சேலம் .. | 18·13 | 5·28 | 12·72 | 18·00 | 15·00 |
| 49 டான்சி பண்ணைக் கருவிகள் தயாரிப்புப் பிரிவு, திருச்சிராப்பள்ளி. | 14·50 | 7·11 | 7·89 | 15·00 | 15·00 |
| 50 டான்சி உருக்கு பித்தளைச் சாமான்கள் தயாரிக்கும் பிரிவு, கும்பகோணம். | 10·98 | 3·37 | 10·63 | 14·00 | 12·00 |
| 51 டான்சி பொறியியல்-பூட்டு தயாரிக்கும் பிரிவு, திண்டுக்கல் | 6·75 | 4·78 | 4·22 | 9·00 | 9·00 |
| 52 டான்சி எனாமல் பூசப்பட்ட கம்பிகள் தயாரிக்கும் நிலையம், கிண்டி. | 26·56 | 5·00 | 25·00 | 30·00 | 30·00 |
| 53 டான்சி மின்சாரப் பொருள்கள் தயாரிப்புப் பிரிவு, கிண்டி. | 3·04 | 1·73 | 3·27 | 5·00 | 5·00 |
| 54 டான்சி அச்சுப் பகுதி, கிண்டி .. .. .. .. | 1·98 | 1·24 | 0·76 | 2·00 | 2·00 |
| 55 டான்சி வார்ப்படச் சாலை, கிண்டி .. .. .. | 9·86 | 4·84 | 9·16 | 14·00 | 15·00 |
| 56 டான்சி வார்ப்படச் சாலை, காட்பாடி .. .. .. | 5·63 | 2·55 | 5·45 | 8·00 | 9.00 |
| 57 டான்சி வார்ப்படச் சாலை, தஞ்சாவூர் .. .. .. | 9·39 | 5·03 | 9·97 | 15·00 | 15·00 |
| 58 டான்சி வார்ப்படச் சாலை, பேட்டை .. .. .. | 7·40 | 4·18 | 10·82 | 15·00 | 15·00 |
| மொத்தம் .. | 659·41 | 292·07 | 530·93 | 883·00 | 820·00 |



## இணைப்பு XVIII

### தமிழ்நாட்டில் கிராமத் தொழிற் திட்டத்தின் கீழுள்ள தொழிற் பிரிவுகளின் பட்டியல்.

| தொடரிலக்கமும் திட்டத்தின் பெயரும். (1) | திட்டச் செலவு (தொடர் செலவும் தொடரா இனச் செலவும்). (2) |
|---|---|
| **செங்கற்பட்டு மாவட்டத்தில் ஸ்ரீபெரும்புதூர் திட்டம்.** | |
| 1 பொது நோக்குப் பொறியியல் பட்டறை, செம்பரம்பாக்கம். | 6,01,600 |
| 2 பொது நோக்குப் பொறியியல் பட்டறை, திருப்பாச்சூர் .. | 6,05,500 |
| 3 அஞ்சலுறை, காகிதப் பைகள் தயாரிக்கும் பிரிவு, ஊத்துக்கோட்டை. | 1,44,320 |
| காலணி தயாரிப்புப் பிரிவு, மேப்பேடு .. .. .. | 1,44,000 |
| 5 பொது வசதிகள் நிலையம், சுங்குவார்சத்திரம் .. .. | 67,150 |
| 6 பொது வசதிகள் நிலையம், ஈக்காடு .. .. .. | 59,700 |
| **சேலம் மாவட்டத்தில் ஓமலூர் திட்டம்.** | |
| 1 பளபளப்பான தரை ஓடுகள் தயாரிப்புப் பிரிவு, ஓமலூர் .. | 2,00,000 |
| 2 மரவேலைப் பிரிவு, ஓமலூர் .. .. .. .. | 1,16,000 |
| 3 பாலிதீன் குழாய் தயாரிக்கும் பிரிவு, ஓமலூர் .. .. | 2,87,000 |
| 4 பொது வசதிகள் நிலையம், ஜலகண்டபுரம் .. .. | 40,000 |
| 5 பொது வசதிகள் நிலையம், தாரமங்கலம் .. .. | 40,000 |
| 6 பொது வசதிகள் நிலையம், மேச்சேரி .. .. .. | 40,000 |
| 7 பொது வசதிகள் நிலையம், தீவட்டிப்பட்டி .. .. | 40,000 |
| **திருநெல்வேலி மாவட்டத்தில் நாங்குநேரி திட்டம்.** | |
| 1 பொது நோக்குப் பொறியியல் பட்டறை, வள்ளியூர் .. | 3,15,700 |
| 2 கரும்பலகைச் சாக்குகள் தயாரிக்கும் பிரிவு, வடக்கு விஜயநாராயணம். | 39,100 |
| 3 பொது வசதிகள் நிலையம், தளபதிசமுத்திரம் .. | 30,800 |
| 4 டி மீனவன்குளம் .. .. | 30,800 |
| 5 டி மூலைக்கரைப்பட்டி .. .. | 30,800 |
| 6 டி ஈத்தாமொழி .. .. | 37,200 |
| 7 டி பருத்திப்பாடு .. .. | 37,200 |
| 8 டி களக்காடு .. .. .. | 37,200 |
| 9 டி கோயிலம்மாள்புரம் .. | 37,200 |
| 10 டி தேவநல்லூர் .. .. | 37,200 |
| 11 டி கண்ணநல்லூர் .. .. | 37,200 |
| 12 டி திசயன்விளை .. .. | 37,200 |

A—*cont.*

PAGES

**ARUMUGAM, THIRU S.—**
Budget (revised), 1971–72, G.D. ... ... ... 59–62

B

**BALAKRISHNAN, THIRU K.—**
Budget (revised), 1971–72, G.D. ... ... ... 159

**BILL(S)—**
— General Sales Tax (Second Amendment) Bill, 1971 205–225
Consid. ... ... ... ... ... ... 225
Consid. Cl. Motion to pass. Passed... ... ...
Holdings (Stay of Execution Proceedings) (Tamil Nadu Amendment) Bill, 1971, Int. ... ... 308
Madras City Civil Court (Aemndment) Bill, 1971 Int. 308

*Madurai City Municipal Corporation Bill, 1971—*
Message from Governor ... ... ... ... 238
Consid. Cl. ... ... ... ... ... 268–273
Motion to pass ... ... ... ... ... 273
Consid. ... ... ... ... ... ... 238–268
Passed ... ... ... ... ... ... 273

*Occupants of Kudiyiruppu (Protection from Eviction) Amendment Bill, 1971—*
Message from Governor ... ... ... 225
Int. ... ... ... ... ... ... 34
Consid. ... ... ... ... ... ... 226–235
Consid. cl.
Motion to pass ... ... ... ... ... 235–238
Passed

**CALLING ATTENTION—**
Eye disease in Madras City and in some districts, prevalence in epidemic form ... ... ... 29–30
Insulin non-availability and consequent hardship to diabetic patients ... ... ... ... 31–32



PAGES

C—*cont.*

CALLING ATTENTION—*cont.*
Mills in Coimbatore, Closure and consequent hardship to workers ... ... ... ... ... 382–384
Senthamil College, Madurai, closure ... ... 306–308
Textile Mills in Coimbatore district, workers' proposed picketing to insist on the Government reopen closed mills ... ... ... ... ... 380–382

**CHAIR—**
*Announcements* :
Madras University Senate, election to ... ... 116
Madurai University Senate, election to ... 384
Business of the House ... ... ... ... 32–33
*Rulings and observations* :
*Adjournment Motions*—
Police firing in Vaniambadi—
Consent was withheld in the light of the Chief Minister's statement ... ... ... ... 201
Standard Motor Company Management's refusal to take back workers and consequent threat of direct action—
Consent was withheld as there was no need for the motion in the light of the statement made by the Minister for Labour ... ... ... ... 380
Allegations :
Should be specific and not general ... ... 113–114
Bills :
On 28th June 1971, just before the Tamil Nadu General Sales Tax (Second Amendment) Bill, 1971 was taken up for consideration, a Member rose on a point of order and stated that inasmuch as the Chief Minister's Budget speech contained proposals for the enhancement of rates of sales tax, inasmuch as the relevant Demand had not yet been voted, and inasmuch as the Chief Minister who held the portfolio of 'Finance' might announce certain concessions in that regard in the course of his reply to the general discussion on the Budget, it was premature to consider the Bill at that stage and it

PAGES

C—*cont.*


**CHAIR**—*cont.*

*Rulings and observations*—cont.

*Bills*—cont.

was likely to affect the prospects of any concession which the Chief Minister might otherwise announce. This was endorsed by two other Members. The Chief Minister observed that there could be no objection to the consideration of the Bill on the ground that it might affect the prospects of any concession that he might announce in the course of his reply later, as either himself or the Revenue Minister would announce such concessions, if they were convinced about the need for the same, even in the course of the discussion on the Bill.

The Chair held that in the light of the statement made by the Chief Minister, and because of the fact that the procedure followed in such cases in India was quite different from the one followed in England wher such Bills were considered in Committees, and in view of the fact that in India such Bills could be considered at any stage, it was quite in order for the House to take up the Bill for consideration just then.

*Debate* :

Interruption—

It was quite in order for a Minister to interrupt a Member then and there to clarify certain points ... 76

*Expressions used in the House* :

" என்ன யோக்கியதை இருக்கிறது " How are you competent to say that? " A Member's remark addressed to the Chief Minister—Held to be unparliamentary and withdrawn as directed by the Chair ... ... ... 360

தனக்கு விளம்பரம் தேட " (to gain self-publicity) " in the sentence .........The Member's criticism against high personages was intended only to gain self-publicity .........Deprecated ... 131

தெரியாமல் கை தட்டுகிறார்கள் (They clap hands ignorantly)—Remarks by a Member with reference to the " applause ' by some Members on a Minister's observations......... Deprecated. Withdrawn by the Member ... 74–75




PAGES

C—*cont.*


CHAIR—*cont.*

*Rulings and observations*—cont.

*Expressions used in the House*—cont.

பொறாமை "(Jealousy) in the sentence 'The Member's remark was due to jealousy that an ordinary person has come to the seat to power.' Held to be not unparliamentary ... ... 130

யோக்கியதை இல்லாதவர்கள் (Those who were not capable of) in the sentence ......" Those who were not capable of reducing even one tax..." Member was advised to substitute the expression by some other words ... ... ... ... 220

*Questions and Answers*—

*Supplementary Questions.*

*Relevancy.*

Supplementaries should relate to the main question ... ... ... ... 101

*Responsibility.*

Members should be responsible for the questions that they put and their questions should be categorical ... ... ... ... 115

Supplementaries should not be based on newspaper reports ... ... ... ... 874

*Quorum* :

On 26th June 1971 when a Member drew the attention of the Chair to the want of quorum in the House, the Chair ordered the Quorum Bell to be rung and after the required number of members were present, the proceedings of the House continued ... ... ... ... 177

*Point of Order* :

Members might be in order in raising points of order when *prima facie* there was a point of order. But under the pretext of 'point of order' if they rose to give vent to their views, it was out of order and would be construed as contempt of the House as well as violation of its conventions ... ... ... ... 130

PAGES

C—*cont.*

CINEMAS—
Cinema theatres, nationalisation ... ... 103–108

COLLEGE(S)—
Government Arts College for Women, Dindigul, shifting ... ... ... ... ... 284–286
Medical, selection of students ... ... ... 286–295
Medical (new), starting of ... ... ... ... 295–297
Senthamil College, Madurai, Closure (C.A.) ... 306–308

COMMITTEE(S)—
Panchayat Unions Revenue Enquiry Committee, Submission of report ... ... ... ... 277–281

CORRUPTION—
Corrupt practices of Special Commercial Tax Officer, Tirunelveli, petition ... ... ... 129

COURTS—
Mobile Courts for offences under Prevention of Cruelty to Animals Act, setting up in Madras City ... ... ... ... ... 24
Mobile Courts, particulars ... ... ... 22–24

D

DAM(S)—
Across Manimuktha river ... ... ... ... 369–370
Across South Pennar ... ... ... ... 370–372

DENNIS, THIRU N.—
Budget (revised), 1971–72, G.D. ... ... ... 80–83
Cancer, incidence in Kanyakumari district, survey. 17–20
Police Mobile Laboratory, setting up in Madras City 27–29
State Civil list, publication ... ... ... ... 26–27

DEVARAJAN, THIRU M.—
Budget (revised), 1971-72, Voting:
Industries—Capital Outlay on Industrial Development ... ... ... ... ... ... 423–429

DHARMALINGAM, THIRU N.—
**Budget** (revised), 1971–72, G.D. ... ... ... 179–180



PAGES

D—*cont.*

DISEASE(S)—
Cancer, Incidence in Kanyakumari district, survey 17–20
Eye disease, prevalence in epidemic form in Madras City and some districts (C.A.) ... ... 29–30

DRUGS—
Insulin, non-availability and consequent hardship to diabetic patients (C.A.) ... ... ... ... 31–32

DURAI MURUGAN, THIRU—
Budget (revised), 1971–72, G.D. ... ... ... 34–37
Eye disease in Madras City and some districts, prevalence in epidemic form (C.A.) ... ... 29–30
Madurai City Municipal Corporation Bill, 1971 ... 257–259

DURAISAMI, THIRU S.—
Agricultural Income-tax, number not paid on due date in Chingleput district ... ... ... 191–193
Cement Factory in Pollachi and Udumalpet Taluks, establishment ... ... ... ... ... ... 196–198
Sales Tax, revenue from raids against evasion ... 365–367
Wells and Pumpsets, commencement of work in Amaravathy Reservoir Project Area ... ... 99–101

E

EXPUNCTION—
Budget (revised), 1971–72, G.D. ... ... ... 35–39

F

FINANCIAL BUSINESS—
Budget (revised), 1971–72, G.D. ... ... ... 34–90
116–181
309–363
Budget (Revised) 1971–72, voting:

Voting:
Industries—Capital Outlay on Industrial Development ... ... ... ... ... ... 385–450

FISHERIES—
Research Station at Mantapam, shifting to another State ... ... ... ... ... ... 183–186

PAGES

G

GANAPATHY, THIRU T.—
Panchayats, formation of separate department for Development wing ... ... ... ... ... 93–98
GANESAN, THIRU S.—
Budget (revised), 1971–72, G.D. ... ... ... 159–162
GURUSAMI, THIRU N. V.—
Budget (revised), 1971–72, G.D. ... ... ... 163–164

H

HANDE, DR. H. V.—
Budget (revised), 1971–72, G.D. ... ... ... 62–76
Voting:
Industries ... ... ... ... ... ...
Capital Outlay on Industrial Development ... 385–386, 396–401, 458
Corrupt practices of Special Commercial Tax Officer, Tirunelveli, petition re. ... ... ... 192
General Sales Tax (Second Amendment) Bill 1971, consideration before decision is taken on the additional taxation proposals in the Budget speech—Point of Order ... ... ... 206–208
General Sales Tax (Second Amendment) Bill, 1971 ... ... ... ... ... ... 206–209
Insulin, non-availability and consequent hardship to diabetic patients (C.A.) ... ... ... 31
Madurai City Municipal Corporation Bill, 1971 241–245, 250–251, 256
Panchayat Development, change of designation of Personal Assistants to Collectors ... ... 98–99
Panchayat Unions Revenue Enquiry Committee, submission of report ... ... ... ... ... ... 272–281
HARIJANS—
Harijans (unemployed), establishment of co-operative tanneries for ... ... ... ... ... 190
HOSPITALS AND DISPENSARIES—
Primary Health Centre, at Kakkadesam, Thally Block, Dharmapuri district, starting ... ... 21–22



PAGES

I

ILANGOVAN, THIRU G.—
Budget (Revised), 1971–72, G.D. ... ... ... 177–179
INDUSTRIES—
Cement Factory in Pollachi and Udumalpet taluks, establishment ... ... ... ... 196–198
Industrial Estate, Hosur, starting ... ... ... 192–194
Mills in Coimbatore, closure and consequent hardship to workers (C.A.) ... ... ... ... 382–384
Paper Factory at Denkanikotta, starting ... 192–195
Textile Mills in Coimbatore district, workers' proposed picketing to insist on the Government to re-open closed mills (C.A.) ... ... ... 380–382
IRRIGATION—
Wells and Pumpsets, commencement of work in Amaravathy Reservoir Project area ... ... 99–101

J

JAMES, THIRU J.—
Budget (Revised), 1971–72, Voting:
Industries—Capital Outlay on Industrial Development ... ... ... ... 386
Refusal by Standard Motor Company to take back workers and consequent threat of direct action by workers (A.M.) ... ... ... ... 378
JABAMALAI, THIRU G.—
Budget (revised), 1971–72, G.D. ... ... ... 156–158
JAYARAMAN, THIRU K.—
Budget (Revised), 1971–72, Voting:
Industries—Capital Outlay on Industrial Development ... ... ... ... 390–394
JOTHI VENCATACHELLUM, THIRUMATHI—
Budget (Revised), 1971–72, G.D. ... ... 132–137

K

KALIMUTHU, THIRU K.—
Budget (Revised), 1971–72, G.D. ... ... 152–154
KANDAPPAN, THIRU S.—
Budget (Revised), 1971–72, Voting:
Industries—Capital Outlay on Industrial Development ... ... ... ... 401–408

PAGES

K—*cont.*


KANDASWAMI, THIRU M.—
Budget (Revised), 1971-72, G.D. ... ... 56-58

KARIVENGADAM, THIRU M. V.—
Budget (Revised), Voting :
Industries—Capital Outlay on Industrial Development ... ... ... ... ... ... 394-396

KARUNANIDHI, THIRU M.—
Budget (Revised), 1971-72, G.D. ... ... 67,69,70, 71,72,73, 74,76,121, 124,129-130,337-362,363
General Sales Tax (Second Amendment) Bill, 1971, consideration before decision is taken and the additional taxation proposals in the Budget Speech (Point of order) ... ... ... ... ... 203
Madurai City Municipal Corporation Bill, 1971 250
Police Firing in Vaniyambadi on 27-6-1971 (A.M.) ... ... ... ... ... 199-201

KARUNANIDHI, THIRU TAZHAI, M.—
Budget (Revised), 1971-72, G.D. ... ... ... 175-177

KAVERIMANIAM, THIRU C.—
Budget (Revised), 1971-72, G.D. ... ... ... 167-169

KITTAPPA, THIRU N.—
Cuddalore Port, implementation of Development Scheme. ... ... ... ... ... 101-103
Medical Colleges, Selection of students ... ... 286-295
Medical Colleges (New), starting of ... ... 295-297
Musicians, award of prizes ... ... ... ... 282-284
Prisoners, alteration in the term of life prisoners. 299-300
Private Schools, taking over by Government ... 6-15
Radio Sets free distribution to Harijan Colonies. 186-190

KRISHNAN, THIRU N.—
Budget (Revised), 1971-72, G.D. ... ... 173-175




PAGES

K—*cont.*


KUMARASAMI, THIRU K. N.—
Mills in Coimbatore, Closure and consequent hardship to workers (C.A.) ... ... ... ... 382-383, 384


L


LANDS —
Pasture lands in Kansapuram ... ... ... 375-377

LAW OFFICER(S)—
Government Pleader for Madras City, details *re.* appointment ... ... ... ... ... 192


M


MADHAVAN, THIRU S.—
Budget (Revised), 1971-72, Voting :
Industries, Capital Outlay on Industrial Development ... ... ... ... ... ... ... 385, 458
Madras City Civil Court (Amendment) Bill, 1971. 305
Madurai City Municipal Corporation Bill, 1971 ... 249-250, 257
Mills in Coimbatore, Closure and consequent hardship to workers (C.A. St.) ... ... ... 383-384
Occupants of Kudiyiruppu (Protection from Eviction) Amendment Bill, 1971 ... ... 237-238
Textile Mills in Coimbatore district, Workers' proposed picketing to insist on the Government to re-open closed mills (C.A. St.) ... ... ... 380-382

MALAICHAMY, THIRU P.—
Fisheries Research Station at Mantapam, shifting to another State ... ... ... ... 183-186
Senthamil College, Madurai, closure (C.A.) ... 306, 308

MANICKAVASAKAM, THIRU R.—
Budget (revised) 1971-72, G.D. ... ... ... 39-43

MANIYAN, THIRU P. S.—
Cinema theatres, nationalisation ... ... ... 103-108
Private schools, taking over by Government ... ... 6-15

PAGES

M—*cont.*

MARIMUTHU, THIRU A. R.—
Occupants of Kudiyiruppu (Protection from Eviction) Amendment Bill, 1971 ... ... ... 231–233

MARUDACHALAM, THIRU N.—
Budget (revised) 1971-72, G.D. ... ... 53–55
House rent allowance, upgrading of Coimbatore belt areas as 'B' class city ... ... ... 108
Prisoners, compulsory education ... ... 297–299

MOHIDEEN, THIRU TIRUPPUR A. M.—
Budget (Revised) 1971–72, G.D. ... ... ... 116–124

MOTION(S)—
*Adjournment Motions* :
Police Firing in Vaniyambadi on 27th June 1971 ... ... ... ... 198–201
Refusal by Stanadrd Motor Company to take back workers and consequent threat of direct action by workers ... ... ... ... ... 377–380

MUSICIANS—
Prizes, award of ... ... ... ... ... 282–284

MUTHUSAMY, THIRU P.—
Budget (revised), 1971–72, G.D. ... ... ... 83–86

N

NACHIAPPAN, THIRU A. M. T.—
Budget (revised) 1971–72, voting :
Industries, Capital Outlay on Industrial Development ... ... ... ... ... 416–418

NACHIAPPAN, THIRU N.—
Dam across Manimuktha river ... ... ... 369–370

NARAYANASWAMY, THIRU M. V.—
Budget (revised) 1971–72, voting :
Industries, Capital Outlay on Industrial Development ... ... ... ... ... 125–128

NATARAJAN, THIRU N. V.—
Refusal by Standard Motor Company to take back workers and consequent threat of direct action by workers (A.M.) ... ... ... ... 379–380



PAGES

N—*cont.*

NEDUNCHEZHIYAN, THIRU V. R.—
Madurai City Municipal Corporation Bill, 1971 ... 238–241
262–268
269–270
271,
272–273
Senthamil College, Madurai, closure (C.A. St.) ... 306–307
308

O

OBITUARY REFERENCE—
Ari Gowder, Thiru H. B. ... ... ... ... 277

P

PALANISAMY, THIRU M.—
Budget (revised) 1971–72, G. D .. .. 169–171

PALANISAMY, THIRU N. K.—
Buckingham Canal excavation scheme, present stage ... ... ... ... ... 25–26
Canals, steps taken for improvement ... ... 1–6
Mobile Courts, particulars ... ... ... ... 22–24
Ooty Hills, beautification ... ... ... ... 304–306
Panchayat Administration, reorganisation ... 93–98
Panchayat Unions Revenue Enquiry Committee, submission of report ... ... ... ... 277–281
Wild life sanctuary (new), starting of ... ... 109–111

PANCHAYATS—
Administration, reorganisation ... ... ... 93–98
Development, change of designation of Personal Assistants to Collectors ... ... ... 98–99
Development wing, formation of separate department ... ... ... ... ... ... 93–98

PANCHAYAT UNIONS—
Revenue Enquiry Committee, submission of report 277–281

PANNEERSELVAM, THIRU M.—
Budget (revised), 1971–72, G.D. ... ... ... 171–172

PAGES

P—*cont.*

PAPERS LAID ON THE TABLE—
Agricultural Produce Markets Act, 1959, Notifications ... ... ... ... ... ... 91, 363, 364, 460
Cinemas (Regulation) Act, 1955, Notification 182
District Municipalities Act, 1920, Notification ... 91
Government Gazette, erratum to Notification ... 92
Hindu Religious and Charitable Endowments Act, 1959, Notification ... ... ... ... 274
Industrial Development in Tamil Nadu for 1970–71, review ... ... ... ... ... 364
Madurai City Municipal Corporation Bill, 1971 ... 275
Madurai City Municipal Corporation Bill, 1971, Erratum ... ... ... ... ... 460
Minimum Wages (Tamil Nadu) Rules, 1953—Notification, *re* amendments ... ... ... 275
Motor Vehicles Act, 1939, Notification ... ... 459
Motor Vehicles Taxation Act, 1931, Notification ... 460
Occupants of Kudiyiruppu (Protection from Eviction) Bill, 1971 (with Annexure) ... ... 364
Panchayats Act, 1958, Notifications ... ... 91, 182 274, 275, 363, 364, 460
Payment of Salaries Act, 1951, Notification ... 274
Small Scale Industries and other Departmental Schemes, Pamphlet ... ... ... ... 460
Working of Minor Ports, review ... ... ... 460
Workmen's Compensation (Occupational Diseases) Rules, 1964, Notification *re* amendment ... 460

PARANDHAMAN, THIRU A.—
Budget (revised), 1971–72, G.D. ... ... ... 180–181

PERIASAMY, THIRU K.—
Budget (revised), 1971–72, G.D. ... ... ... 164–168

PERUMAL, THIRU A. R.—
Budget (revised), 1971–72, G.D. ... ... ... 145–149

PERUMAL, THIRU S.—
Budget (revised), 1971–72, G.D. ... ... ... 154–156



PAGES

P—*cont.*

PLANTATIONS—
Coffee, Denkanikota forest ... ... ... 372–375

POLICE—
Police mobile laboratory, setting up in Madras City ... ... ... ... ... ... 27–29

PONCHOKKALINGAM, THIRU P.—
Budget (revised), 1971–72, G.D. ... ... ... 50–53

PONNAPPA NADAR, THIRU R.—
Budget (revised), 1971–72, G. D. ... ... 323–337
Voting—
Industries, Capital Outlay on Industrial Development ... ... ... ... ... ... 385, 415–416 436–442, 458
General Sales Tax (Second Amendment) Bill, 1971. 217–219
Occupant of Kudiyiruppu (Protection from Eviction) Amendment Bill, 1971 ... ... ... 230–231
Police Firing in Vaniyambadi on 27th June 1971 (A.M.) ... ... ... ... ... 199

PORTS—
Cuddalore, implementation of Development Scheme 101–103

PRISONERS—
Compulsory education ... ... ... ... 297–299
Discharged Prisoners' Society, Government grant 297
Term of life prisoners, alteration ... ... 299–300

R

RADIO—
Harijan Colonies, free distribution to ... ... 186–190
Harijan hostels, provision to ... ... ... 187–190

RAJA, THIRU A.M.—
Budget (revised), 1971–72, G.D. ... ... ... 43–47

RAJA PILLAY, THIRU V. K.—
Budget (revised), 1971–72, Voting—
Industries—Capital Outlay on Industrial Development ... ... ... ... ... ... 414–416 438

PAGES

R—*cont.*

RAJANGAM, THIRU N.—
Budget (revised), 1971–72, G.D. ... ... 86–89

RAMASAMY, THIRU G.—
Budget (revised), 1971–72, G.D. ... ... 47–50

SAMPATH, THIRU T. V.—
Budget (revised), 1971–72, G.D. ... ... 165–167

S

SANGUMUTHU THEVAR, THIRU S.—
Elephant sanctuaries, improvement ... ... 111
Government Pleader for Madras City, details re appointment ... ... ... ... ... 132
Legal Adviser for State Transport Department, details re appointment ... ... ... ... 111–115
Mobile Courts for trying offences under Prevention of Cruelty to Animals Act, setting up in Madras City ... ... ... ... ... 24
Tourism Development Corporation, setting up of ... 301–303

SATHIAMOORTHY, THIRU M.—
Budget (revised), 1971–72, G.D. ... ... ... 89–90

SCHOOLS—
Private Schools, taking over by Government ... 6–15

SERVICES—
Legal Adviser for State Transport Department, details re appointment ... ... ... ... 111–115
State Civil List, publication ... ... ... ... 26–27

SHANMUGAM, THIRU P. U.—
Budget (revised), 1971–72, G.D. ... ... ... 66–67
Voting—
Industries—Capital outlay on Industrial Development ... ... ... ... ... ... 424
General Sales Tax (Second Amendment) Bill, 1971 (Point of order) ... ... ... ... 201–205
General Sales Tax (Second Amendment) Bill, 1971 205–206, 221–224
Holdings (Stay of Execution Proceedings) Tamil Nadu Amendment Bill, 1971 ... ... ... 308
Occupants of Kudiyiruppu (Protection from Eviction) Amendment Bill, 1971 ... ... ... 34, 226, 231–235, 236, 238



PAGES

S—*cont.*

SPORTS—
Games, steps taken for improvement ... ... 1–6

SUBBIAH, THIRU A. R.—
Budget (revised), 1971–72, G.D. ... ... ... 149–151
Voting:
Industries—Capital Outlay on Industrial Development ... ... ... ... ... ... ... 412–414

SUBRAMANIAM, THIRU A.—
Budget (Revised), 1971–72, Voting:
Industries ... ... ... ... ...
Capital Outlay on Industrial Development ... 386–459

SUBRAMANIAM, THIRU K. M.—
Budget (Revised), 1971–72, Voting:
Industries ... ... ... ... ... ...
Capital Outlay on Industrial Development ... 386,–390, 394
General Sales Tax (Second Amendment) Bill, 1971 213–214
Madurai City Municipal Corporation Bill, 1971 ... 259–262, 267, 269

SUNDARAM, THIRU O. N.—
Government Arts College for Women, Dindigul, shifting ... ... ... ... ... ... 284–286

SUPPU, THIRU K.—
Fisheries Research Station at Mandapam, shifting to another State ... ... ... ... ... 183–186
Pasture lands in Kansapuram ... ... ... 375–377
Teachers in private schools, security of service ... 15–17
Textile Mills in Coimbatore district, workers' proposed picketing to insist Government to re-open closed mills (C.A.) ... ... ... ... 380

SURENDRAN, THIRU M.—
Budget (revised), 1971–72, G.D. ... ... ... 141–145
Voting:
Industries ... ... ... ... ...
Capital Outlay on Industrial Development ... 385, 412,458
General Sales Tax (Second Amendment) Bill, 1971 ... 214–215

PAGES

S—*cont.*

SWAMIDHAS, THIRU A.—
Discharged Prisoners' Society, Government grant ... 297
State Civil list, publication ... ... ... ... 26–27

T

TAXES—
Agricultural Income tax, number not paid on due date in Chingleput District. ... ... ... ... 191–192
Revenue from raids against evasion ... ... 365–367
Sales tax, exemption to small traders ... ... 367–368

TEACHERS—
Teachers in private schools, security of service ... 15–17

THANGAMANI, THIRU K. T. K.—
Budget (Revised), 1971–72, G.D. ... ... ... 309–323
Voting:
Industries ... ... ... ... ...
Capital Outlay on Industrial Development ... 385, 386, 429–436, 458, 459
Fisheries Research Station at Mantapam, shifting to another State ... ... ... ... ... 183–186
General Sales Tax (Second Amendment) Bill, 1971 Consideration before decision is taken on the additional taxation proposals in the Budget speech—(Point of order) ... ... ... ... ... 201–202
General Sales Tax (Second Amendment) Bill, 1971 209–213
Madurai City Municipal Corporation Bill, 1971. ... 245–249, 269, 270–273
Occupants of Kudiyiruppu (Protection from Eviction) Amendment Bill, 1971 ... ... ... 227–230, 235–236, 237
Refusal by Standard Motor Company to take back workers and consequent threat of direct action by workers (A.M.) ... ... ... ... 378–379
Senthamil College, Madurai, Closure (C.A.) ... 306

THIAGARAJAN, THIRU E. S.—
Budget (revised), 1971–72, G.D. ... ... ... 309

TOURISM—
Ooty Hills, Beautification ... ... ... ... 304–306
Tourism Development Corporation, Setting up of ... 301–303



D
Y2N.31'N71
3|N71.452

PAGES

V

VEERASAMI, THIRU. N.—
Budget (revised), 1971–72, G.D. ... ... ... 125–129, 130, 131–132
General Sales Tax (Second Amendment) Bill, 1971. 219–221

VELAPPAN, THIRU C. V.—
Budget (revised), 1971–72, G.D. ... ... ... 77–80

VENKATASWAMY, THIRU B.—
Coffee plantations, Denkanikota forest ... ... 372–375
Dam across South Pennar ... ... ... 370–372
Industrial Estate, starting at Hosur ... ... 192–194
Paper Factory at Denkanikotta, starting ... ... 194–196
Primary Health Centre at Kakkadesam in Thally Block, Dharmapuri district, starting ... ... 21-22
Radio sets, Provision to Harijan Hostels ... ... 187-190

VEZHAVENDAN, THIRU K.—
Budget (revised), 1971–72, G.D. ... ... ... 137-141

W

WAHAB, THIRU K. A.—
Budget (Rvised) 1971–72, Voting—
Industries ... ... ... ... ...
Capital Outlay on Industrial Development ... 418–421
General Sales Tax (Second Amendment) Bill, 1971 215–216
Harijans (unemployed), establishment of Co-operative Tanneries for ... ... ... ... 190
Occupants of Kudiyiruppu (Protection from Eviction) Amendment Bill, 1971 ... ... ... 233–234
Sales tax, exemption to small traders ... ... 367–368

WATER WAYS—
Buckingham Canal excavation Scheme, Present stage. 25–26

WILD LIFE.
Elephant sanctuaries, improvement. ... ... 111
Sanctuary (new), starting of ... ... ... 109–111

61511